# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

SECOND SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

***13th, 14th, 15th, 16th, 18th and 19th* March 1963.**

**Volume X (Nos. 1 to 6).**

TABLE OF CONTENTS.

*Wednesday*, 13*th March* 1963.


| | PAGES |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 1-15 |
| II Calling attention to outbreak of plague epidemic in Krishnagiri town .. .. .. .. .. .. | 15-17 |
| III Voting on Demands for Grants for 1963-64—*cont.* | |
| (1) Demand No. XXIV—Labour including Factories .. | 17-44 |
| (2) Demand No. II—Motor Vehicles Acts—Administration .. .. .. .. .. .. .. .. | 44-67 |
| IV Discussion for short duration re: fall in price of paddy .. | 67-85 |
| V Papers laid on the Table of the House .. .. .. | 85-88 |


*Thursday*, 14*th March* 1963.


| | |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 89-100 |
| II Calling attention to the damage to the chilly plants in Ariyalur Constituency .. .. .. .. .. .. | 100-101 |
| III Request for expunction of certain matter .. .. .. | 101-102 |
| IV Government Motion re: Election to the House Committee .. | 102-103 |
| V Voting on Demands for Grants for 1963-64—*cont.* | |
| Demand No. XIII—Education .. .. .. .. | 103-170 |
| VI Papers laid on the Table of the House .. .. .. .. | 171 |


*Friday*, 15*th March* 1963.


| | |
|---|---|
| I Questions and Answers .. .. .. .. .. .. | 173-195<br>259-261 |
| II Calling attention to 'Late Blight' attack on Potato Crops in the Nilgiris district .. .. .. .. .. | 195-197 |

D
N211,31 N63
N63.10.
137882

*Friday, 15th March 1963*—cont.

III Voting on Demands for Grants for 1963-64—*cont.*

Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes .. .. .. .. 197-258

IV Papers laid on the Table of the House .. .. .. .. 258

*Saturday, 16th March* 1963.

I Questions and Answers .. .. .. .. .. 263-275

II Calling attention to a matter of urgent public importance .. 275

III Voting on Demands for Grants for 1963-64—cont.

(1) Demand No. XXII—Khadi .. .. .. .. .. } 275-373

(2) Demand No. XXIII—Community Development Projects, etc. .. .. .. .. .. .. .. .. } 275-373

IV Papers laid on the Table of the House .. .. .. .. 373-374

137882

*Monday, 18th March* 1963.

I Questions and Answers .. .. .. .. .. .. 375-501
501-507

II Adjournment Motion re. Police Firing in Urappanur near Tirumangalam .. .. .. .. .. .. 401

III Calling attention to difficulties experienced by electrical wiremen. 401-403

IV Voting on Demands for Grants for 1963-64—cont.

Demand No. XIV—Medical .. .. .. .. } 403-500
Demand No. XV—Public Health .. .. .. .. } 403-500
Demand No. XXXVIII—Capital Outlay on Public Health } 403-500

V Papers laid on the Table of the House .. .. .. .. 500

*Tuesday, 19th* [M]*arch* 1963.

I Questions and Answers .. .. .. .. .. 509-530

II Adjournment Motion re. Police Firing in Mela Urappanur .. 530-551

III Calling attention to the dismantling of houses of Harijans at Tuticorin .. .. .. .. .. .. .. .. .. 531-532

IV Government Motion re. change in the Order of Business .. 532

V Government Resolutions—

(1) *Constitution of Township for Valparai Panchayat area in* the Coimbatore district .. .. .. .. .. 532-538

(2) Approval of the Muthu Chippi Parkal Fishing Rules, 1963 .. .. .. .. .. .. .. .. 538

VI Announcements—The Madras General Sales Tax (Amendment) Bill, 1963 (L.A. Bill No. 5 of 1963) .. .. 533

VII Government Bill—The Madras General Sales Tax Bill, 1963 (L.A. Bill No. 5 of 1963) .. .. .. .. .. 534-545

VIII Voting on Demands for Grants for 1963-64—*cont.*

Demand No. V—Registration .. .. } 545-582
Demand No. XXXIV—Stationery and Printing .. .. } 545-582
Demand No. XXIX—Public Works - Grants-in-aid .. .. 582-625

IX Papers laid on the Table of the House .. .. .. .. 625

## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question. In the case of Bills and Financial Business, the entry will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)' 'Council(s)' Corporation (s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "**Papers Laid on the Table**".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

A.M./Ad. Motion .. .. Adjournment Motion.
Ann. .. .. .. .. Announcement.
B.O.H. .. .. .. .. Business of the House.
C.A. .. .. .. .. Calling attention to a Matter of Urgent Public Importance.
C.A St. .. .. .. .. Calling Attention Statement.
Consid. .. .. .. .. Consideration stage of a Bill.
This stage includes:
(i) Motion to refer to Select/Joint Select Committee.
(ii) Amendment to refer to Select/ Joint Select Committee.
(iii) Amendment to circulate.
(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.
(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc.
Consid. Cl. .. .. .. Consideration of clauses of a Bill.
D.E.E. .. .. .. .. Demands for Excess Expenditure.
Dis. S.D. .. .. .. Discussion for Short Duration on an urgent matter of Administration.
D.S.G. .. .. .. .. Demands for Supplementary Grants.
G.A. .. .. .. .. Governor's Address.
H.A.H. Dis./H.H.D. .. .. Half-hour Discussion.
Int. .. .. .. .. Introduction stage of a Bill.
L.A. .. .. .. .. Legislative Assembly.
L.C. .. .. .. .. Legislative Council.
M. .. .. .. .. Motion.
P.M. .. .. .. .. Privilege Motion.
R/Res. .. .. .. .. Resolution.
St. .. .. .. .. Statement.

137882

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, 13th March 1963.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

*New Veterinary and Agricultural Colleges (opening of)*

* 196 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any decision has been taken regarding the location of an additional Veterinary College and one more Agricultural College, contemplated under the Third Five-Year Plan; and

(*b*) if so, the details thereof?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) & (இ) : இரண்டாவது விவசாயக் கல்லூரியை மதுரைப் பக்கத்தில் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இரண்டாவது கால்நடை மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கும் விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

(*a*) & (*b*) It has been decided to start the second Agricultural College near Madurai. As regards the question of starting another Veterinary College, the matter is under consideration.

**திரு. எம். தண்டாயுதபாணி :** தலைவர் அவர்களே, விவசாயக் கல்லூரி, விவசாயம் அதிகமாக உள்ள தஞ்சை ஜில்லாவில் ஆரம்பிக்கப்படாமல் மதுரை ஜில்லாவில் ஆரம்பிக்கப்படுவதற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** தஞ்சை ஜில்லா மாதிரி அவ்வளவு இல்லை என்றாலும், மதுரையில் பெரியாறுப் பாசனம் இருக்கிறது. அதையெல்லாம் பார்த்துத்தான் எங்கு வைத்தால் நல்லது என்று யோசித்து முடிவு செய்திருக்கிறது.

**திரு. கே. மூக்கையா தேவர் :** ஸார், மதுரை ஜில்லாவில் விவசாயக் கல்லூரி வைக்கப்படும் என்ற முடிவு வரவேற்கத் தக்கது. அது எந்த இடத்தில் வைக்கப்படும் ? எப்போது ஆரம்பிக்கப்படும் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** மதுரை நகரத்திற்குப் பக்கத்தில் வைப்பதற்கு ஆலோசனை இருக்கிறது.

**திருமதி. சி. குருந்தையம்மாள் :** சபாநாயகர் அவர்களே, மதுரை ஜில்லாவிலே வைக்கப்படுகிற விவசாயக் கல்லூரியிலே, கோயம்புத்தூர் ஜில்லாவிலே வைக்கப்பட்டிருக்கிற விவசாயக் கல்லூரியில் இல்லாத புதிய ஆராய்ச்சிப் பகுதிகளோ அல்லது கருத்துக்களோ இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** விவசாயக் கல்லூரி வைக்க முடிவு செய்திருக்கிறது. மேலென்ன ஏற்பாடுகள் செய்யலாம், கோயம்புத்தூர் மாதிரியாகவே இருப்பதா, அல்லது ஏதாவது கூடுதலாக வைக்க முடியுமா என்பதெல்லாம் பின்னால்தான் பார்க்க வேண்டும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : May I know where the Government propose to start the Veterinary College in the State?

THE HON. SRI P. KAKKAN : I think I have previously stated that the question of starting another Veterinary College was under consideration. The site has not yet been decided.

**திரு. கே. மூக்கையா தேவர் :** ஸார், இரண்டு நாட்களுக்கு முன் கூட்டுறவு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது அந்தப் பகுதியில் கட்டுவதற்குப் பணம் கொடுக்க......

**கனம் சபாநாயகர் :** உசிலம்பட்டியைப் பற்றிச் சொன்னார்கள்.....

**திரு. கே. மூக்கையா தேவர் :** ஆம், உசிலம்பட்டியில்தான், சர்க்கார் புதிதாகக் கட்டவேண்டியிருப்பதால் அதை அங்கு வைக்கலாமா ?

**கனம் சபாநாயகர் :** இந்தக் காலேஜை அங்கே வைக்க கனம் அங்கத்தினர் சொல்லுகிறார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** விவசாயக் கல்லூரி வைக்க வேண்டு மென்றால், அதற்கு எல்லாவித வசதியும் வேண்டியிருக்கிறது. மதுரைப் பக்கத்தில் வைத்தால் அது மதுரைக்கு மட்டும் என்று அர்த்தமல்ல. மதுரை ஜில்லாவிலே உள்ளவர்களுக்கும், திருநெல்வேலி, கன்னியா குமரி போன்ற அந்தப் பகுதியிலே உள்ள எல்லோருக்கும் பயன் அளிக்கும்.

**திருமதி. டி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** தலைவர் அவர்களே, விவ சாயக் கல்லூரியை மதுரை நகரத்திற்கு அடுத்தாற்போல் உள்ள இடத்தில் வைக்க வேண்டும் என்று சொல்லுவதற்குக் காரணம் என்ன என்று கேட்டால், மதுரை மாமதுரையாக ஆகும்போது அதையும் அதனுள் சேர்த்துவிட சந்தர்ப்பம் இருக்க வேண்டும். அம்மாதிரியான இடத்தைத் தேர்ந்தெடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்த இடத்தைத் தேர்ந்தெடுக்கும்போது விவசாயக் கல்லூரிக்கு எந்தவிதமான இடம் தேவை என்று பார்த்து, வளம் பொருந்திய நல்ல இடங்களாகப் பார்த்து மதுரைப் பக்கத்திலேயே கிடைத்தாலும் அல்லது தள்ளிக் கிடைத்தாலும் எல்லாவற்றையும் பார்த் துத்தான் ஏற்பாடு செய்ய வேண்டும்.

**திரு. எம். தண்டாயுதபாணி :** பட்டுக்கோட்டையில் இருந்த அக்ரிகல்சரல் ரிஸர்ச் ஸ்டேஷன்—விவசாய ஆராய்ச்சிப் பண்ணை—சென்ற ஆண்டு எடுக் கப்பட்டுவிட்டது. அதைத் திரும்பவும் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட் டிருக்கிறோம். அதையாவது அந்த இடத்தில் ஆரம்பிக்க ஆவன செய் வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கேள்வி விவசாயக் கல்லூரி பற்றியது. கனம் அங்கத்தினர் வேறு ஒரு ரிஸர்ச் ஸ்டேஷன் பற்றிக் கேட்கிறார். அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திருமதி. சி. குழந்தையம்மாள் :** மேல் நாடுகளுக்கு விவசாயத்துறை யில் ஆராய்ச்சிக்காகச் செல்லுகிறவர்களுக்கு ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் கிடைப்ப தில் கஷ்டம் இருக்கிறது. மதுரை விவசாயக் கல்லூரியில் அம்மாதிரி யான படிப்புக்களுக்கு ஏற்பாடுகளை அரசாங்கம் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** எவ்வாறு செய்யப்படும் என்பதை முன்ன தாகவே சொல்லிவிட முடியாது. பின்னால்தான் அதைப் பற்றிய விவரங் களைச் சொல்ல முடியும்.





**திரு. கே. மூக்கையா தேவர் :** மதுரையில் தனியார் துறையில் அம்மாதிரி ஒரு விவசாயக் கல்லூரி ஆரம்பிக்க முடியும் என்று ஏற்கனவே மனுக்கள் செய்யப்பட்டன. அம்மாதிரி மனுக்கள் செய்திருப்பவர் திரு தியாகராஜ செட்டியார் ஆகும். அது என்ன ஆயிற்று ?

**கனம் திரு. பூ. கக்கன் :** தனிப்பட்டவர்கள் வைப்பதைக்காட்டிலும் அரசாங்கத்தில் வைப்பது சிறந்தது. ஆகையால்தான் அரசாங்கம் இந்த முடிவுக்கு வந்திருக்கிறது.

**புலவர் கா. கோவிந்தன் :** தஞ்சைக்கு அடுத்து நெல் விளைச்சல் அதிக மாகத் தருகிற மாவட்டம் வட ஆற்காடு மாவட்டம். இந்த வட ஆற்காடு மாவட்டம் பல துறைகளில் பின்தங்கியிருக்கிறது. அதை எண்ணியாவது இந்த விவசாயக் கல்லூரியை வட ஆற்காடு மாவட்டத்தில் வைக்க அமைச் சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்போது இருக்கிற நிலைமையில் ஒரு விவசாயக் கல்லூரி போதாது என்று இன்னொரு விவசாயக் கல்லூரி வைக்க ஏற்பாடு செய்து அதைத்தான் மதுரை நகரத்தின் பக்கத்தில் வைப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** அதையே மாற்றச் சொல்லுகிறார்களா அல்லது வேறு ஒன்று கேட்கிறார்களா ?

**புலவர் கா. கோவிந்தன் :** இந்தக் கல்லூரியே வந்தால் வரவேற் கிறேன். இல்லையென்றால் அடுத்த கல்லூரியையாவது அங்கு வைக்க ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதற்குள் எப்படி நான் வாக்குறுதி கொடுக்க முடியும் ?

**திரு. ஜே. மாதா கவுடர் :** விவசாயக் கல்லூரியை ப்ளெயின்ஸிலே வைப்பது என்றால் மதுரை மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம், திரு நெல்வேலி மாவட்டம் என்று சூடு பிடிக்கப் பேசுகிறார்கள். அதைவிட்டு அதைக் குளிர்ச்சியான இடத்தில் வைப்பதால் சூடு பிடிக்காது. ஆகையால் நீலகிரி மாவட்டத்தில் வைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** விவசாயக் கல்லூரியை நீலகிரியில் வைக்க இடமே கிடையாது.

### பிற மாநிலப் பல்கலைக் கழகங்களில் தமிழ்

*208. கேள்வி—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பிற மாநிலப் பல்கலைக் கழகங்களில், தமிழ் மொழி வளர்ச்சிக்காக, தமிழ் நாட்டு அரசு மேற்கொண்டிருக்கும் திட்டங்கள் யாவை ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** விவரப் பட்டியல்a ஒன்று மேசை மீது வைக்கப்பட்டுள்ளது.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, ஐந்து பல்கலைக் கழகங்களுக்கு மானியம் அளிப்பதாக அமைச்சர் அறிவித்தார்கள். மானி யம் பெறுகிற பல்கலைக்கழகங்களில் என்ன என்ன தமிழ்ப் பணிகள் நடைபெறுகின்றன என்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப் பற்றி மேலும் விவரங் கள் வேண்டுமென்றால் தனிக் கேள்வி வேண்டும்.

SRI M. S. SELVARAJAN : Sir, apart from the grants given to Universities in other States for the popularization of Tamil, will the Government think of the possibility of awarding merit scholarships and even prizes for Tamil experts from other States?

a Printed as Appendix I on page 88

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think we are awarding merit scholarships for students or scholars of other States.

**புலவர் கா. கோவிந்தன் :** நமது இந்திய நாட்டிலிருக்கிற பல்கலைக் கழகங்களில் தமிழ்ப் பணி புரிய நமது அரசாங்கம் செய்திருக்கிற திட்டங் களை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்திய நாட்டிற்கு அப்பா இுள்ள வெளி நாடுகளில் இருக்கும் பல்கலைக் கழகங்களில் தமிழ்ப் பணி புரிய அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப் பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

### தொழிற்கல்வி ஆசிரியர்கள்

* 209. கேள்வி—திரு. எஸ். ஜே. ராமசாமி (திரு. வை. கிருஷ்ணமூர்த்தி சார்பாக) : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963–64 கல்வியாண்டிலிருந்து உயர்துவக்கப் பள்ளிகளில் தொழிற்கல்வி போதிக்கபகுதி நேர ஆசிரியர்கள் இருந்தால் போதுமென அரசாங்கம் கருதுகிறதா ?

(இ) ஆம் எனில், இப்போதுள்ள முழுநேர தொழிற்கல்வி போதிப்ப வர்களின் நிலையென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The matter is under consideration.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** ராஜ்யம் முழுவதிலும் பணியாற்றக் கூடிய கைத்தொழில் ஆசிரியர்களின் எண்ணிக்கையைச் சொல்ல முடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்த எண்ணிக்கையைப் பற்றி என்னிடம் விவரம் இல்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** எட்டாம் வகுப்பு எடுக்கப்பட்ட பிறகு அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட 18 பீரியட் குறைவதன் காரணமாக அவர் களை பார்ட் டைமாக வைக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது என்று சொல்லப்படுகிறது. அப்படியிருந்தால் ஐந்தாம் வகுப்பிலிருந்தே அவர்கள் சொல்லிக்கொடுத்தால் 18 பீரியட் வந்துவிடுமே ? அதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எடுபட்ட 8-ம் வகுப்பை மீண்டும் வைத்துவிடலாம் என்று யோசனை இப்பொழுது அரசாங்கத்தினிடம் இருக் கிறது. அந்த வகையிலே முடிவு ஏற்பட்டுவிட்டால் இந்த பிரச்னை எழாது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** இப்பொழுது பணியாற்றி வருகிற கைத்தொழில் ஆசிரியர்கள் முழுநேர ஊழியர்களாகக் கருதப்படுவார்கள் என்று அரசாங்கம் ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறது. அவர்களில் யாராவது ரிடையர் ஆனால், அல்லது லீவ் வேகன்ஸி ஏற்பட்டால், அந்த நேரத்தில் நியமிக்கப்படுகிறவர் முழு நேர ஆசிரியர்களாகக் கருதப்படு வார்களா, அல்லது பகுதி நேர ஆசிரியர்களாகக் கருதப்படுவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஏழு, எட்டு வகுப்புகளுக்கு என்ன நிலை எதிர்காலத்தில் என்பது சீக்கிரம் முடிவு செய்யப்பட வேண்டியிருக்கிறது. அவ்வாறு முடிவு செய்கின்ற வரையிலே இந்த ஏப்ரல் மாதம் வரையில் அவர்கள் முழுநேர ஆசிரியர்களாகக் கருதப்படுவார்கள், பகுதிநேர ஆசிரியர்களாகக் கருதப்படமாட்டார்கள் என்று உத்தரவு போடப்பட்டிருக் கிறது. இந்த விஷயத்தில் முடிவு எடுக்கப்பட்ட உடனே என்ன தேவைப் படுகிறதோ அதற்கேற்றவாறு உத்தரவு பிறப்பிக்கப்படும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** எட்டாம் வகுப்பை பள்ளிகளிலே வைக்க வேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி இந்தக் கல்வி ஆண்டுக்கு முன்பாக சர்க்கார் முடிவு செய்யுமா ?





**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஏப்ரல் மாதம் முதல் தேதியன்று கல்விக் கொள்கையைப் பற்றி இந்த மன்றத்தில் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கிறேன். அப்பொழுது இந்த விவரங்களை நான் குறிப்பிடு கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** இப்பொழுது தொழிற் பயிற்சி ஆசிரியர் களுடைய நிலை தேவைக்கு மேல் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறுகிற நிகழ்ச்சிகளிலிருந்து தெரியவருகிறது. அப்படியானால், அந்த ஆசிரியர் களுக்குப் பயிற்சி அளிக்கப்படும் திட்டம் மேலும் கைக்கொள்ளப்படுமா அல்லது கைவிடப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுதிருக்கும் நிலையில் தேவைக்கு மேல் இருக்கிறது என்று சொல்லுவதற்கில்லை. ஒரு வகுப் பைக் குறைத்துவிட்டால் தேவைக்கு மேல் இருப்பதாகக் கருதப்படும். அப்படிக் குறைப்பதா, இல்லையா என்பது சீக்கிரமே முடிவு செய்ய வேண்டிய விஷயம். அனேகமாகக் குறைக்கப் போவதில்லை என்று சொல்லலாம்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் இவர்கள் முழுநேர ஆசிரியர்களாகக் கருதப்பட வேண்டுமென்று குறிப் பிட்டார்கள். ஆனால், சில பள்ளிகளில் இவர்கள் முழுநேர ஆசிரியர் களாகக் கருதப்படுகிறார்களே ஒழிய, முழுநேர ஆசிரியர்களுக்கேற்ற சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கிறார்கள். முழுநேர ஆசிரியர்களுக் கான சம்பளம் கொடுப்பதற்கேற்ற ஒரு சட்டம் சர்க்கார் பிறப்பித்த உத்தரவில் இருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது இருக்கிற கிராப்ட் ஆசிரியர்கள் முழுநேர ஆசிரியர்களாகத்தான் கருதப்படுகிறார்கள். முழு நேர ஆசிரியர்களாகக் கொள்ளப்பட்டு, குறைந்த சம்பளம் கொடுக்கப்பட் டால், அந்த விவரங்களை அரசாங்கத்திற்கு எழுதி அனுப்ப வேண்டும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** எட்டாம் வகுப்பு வரையிலே உள்ள பள்ளி களில் இதுபோன்ற ஆசிரியர்களை நியமிப்பதனால், 5-ம் வகுப்பு முடிந்து, ஆரம்ப உயர்நிலைப்பள்ளிகளில் 6-வது வகுப்பு ஆரம்பத்திலிருந்தே மாணவர்களுக்கு இதுபோன்ற பயிற்சி அளிப்பது நல்லது அல்லவா? அப்படியிருந்தால், இது மாதிரி ஆசிரியர்களுக்கு பீரியட் கணக்குப் போடா மல் இருக்கக்கூடிய நிலை ஏற்படும் அல்லவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** 6-வது வகுப்பிலிருந்து பயிற்சி தொடங்கி, 6, 7, 8 என்று மூன்று வகுப்புகளாக இருப்பதை இரண்டாகக் குறைத்தால், முழு நேர ஆசிரியர்கள் இவ்வளவு பேர்களுக்கு அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது.

### *Administrative Expenditure (economy)*

* 210 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the various steps taken and the proposals to observe strict economy in all Government Departments and local bodies in the State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement * is placed on the Table of the House.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, May I know whether there is any proposal under the consideration of the Government to withdraw one jeep from each Block and allot one jeep for two Blocks?

* Printed as Appendix II on pages [illegible]

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இங்கே நிலக்கரி கிடைக்கிறதா என்பது பரிசீலனையில் இருக்கிறது. அங்கே இரும்பு இருக்கிறதா என்பதைப் பற்றி பரிசீலனை கூட ஆரம்பிக்கவில்லை. இதை எல்லாம் வைத்துக் கொண்டு வெளி நாட்டிற்கு அனுப்பிப் பரிசீலனை செய்தால் என்ன பலன் கிடைக்கும் ?

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள நிலக்கரிப் படிவங்களை ஆராய்ச்சி செய்திருக்கிற ஆராய்ச்சியாளர்கள், இதுவரை அரசாங்கத்திற்கு ஏதாவது அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்களா ? அப்படியானால், அது சபை முன் வைக்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** முன்பு எல்லாம் ஒரு நியதி உண்டு. ஜியாலாஜிகல் சர்வே ஒரு இடத்தில் கனிப் பொருள் இருக்கிறது என்று கண்டுபிடித்தால், அதை வெளியிலே சொல்லக்கூடாது. ஜியலாஜிகல் சர்வே ஆப் இந்தியாவுக்கு எழுதி அனுப்ப வேண்டும். அவர்கள் பரிசீலனை செய்து, கருப்பாக இருப்பதெல்லாம் நிலக்கரிதானா என்று கண்டுபிடிக்க வேண்டும். அதனுடைய காலோரிபிக் வேல்யூ என்ன என்று கண்டு பிடிக்க வேண்டும். கோக்கிங் தன்மை எப்படியிருக்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் நிலக்கரி இருக்கிறதா என்று சொல்ல வேண்டும். ஆனால் நம் நாட்டிலே கருப்பாக இருப்பதெல்லாம் இரும்பு என்றும், வெள்ளையாக இருப்பதெல்லாம் வைடக்கா என்றும் நினைக்கக்கூடிய சம்பிரதாயம் இருந்துவருகிறது. இப்பொழுது திட்டமாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை. பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** காஞ்சீபுரத்திற்குப் பக்கத்திலே நிலக்கரி இருப்பதாக அண்மையில் ஒரு செய்தியைப் பார்த்தோம். அது எந்த நிலையில் உள்ளது ? நிலக்கரிப் படிவங்கள் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பரிசீலனை முடிந்த பிறகுதான் எந்த விவரமும் கொடுக்க முடியும்.

### *English Language Teaching Campaign*

*215 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government have started an English Language Teaching Campaign in the State; and

(b) if so, whether there is any proposal to include this in the Training Schools?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) Yes.

(b) A number of training school teachers have already been trained under the Madras English Language Teaching Campaign. There is a proposal under consideration to train the remaining Training School teachers in the up-to-date methods of English teaching.

### *English in Elementary Schools*

*216 Q.—Sri R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to introduce English in the III Standard in Elementary schools from the next School year; and





(b) if so, the grade of teachers who will have to handle such classes?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (a) Yes, the matter is under consideration.

(b) Secondary grade teachers will normally handle English classes.

### அமைச்சரின் சுற்றுப்பயணம்

*217. *கேள்வி*—**திரு. எஸ். முருகையன் :** *(திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி சார்பாக) கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

*கனம் செய்தித் துறை அமைச்சர் 1962 டிசம்பர் மாதத்தில் பிரயாணம் செய்த மைல்கள் எவ்வளவு ? அது சம்பந்தமாக அவர் வாங்கிய அலவன்ஸ் எவ்வளவு ?*

The Hon. Sri M. BHAKTAVATSALAM: During the period the Minister travelled 2,890 miles and drew a sum of Rs. 1,585.40 nP. towards travelling allowance and daily allowance.

### *Teachers (transfer)*

*218 Q.—Sri S. MADHAVAN: Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any Government Order directing that husband and wife serving as teachers in a village should not be separated?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: Yes, the husband and wife should generally be posted in the same station. However, this is not to be construed as fettering the discretion of the authorities to transfer either the husband or the wife to another station for administrative reasons.

**திரு. எஸ். மாதவன் :** பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களை, பனிஷ்மெண்ட் கொடுப்பதற்காக, கணவன் மனைவியைப் பிரித்து வைப்பதாக ஒரு பாலிஸி இருக்கிறது. இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? அப்படி செய்யக்கூடாது என்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கணவன், மனைவியைப் பிரித்துத்தான் பனிஷ்மெண்ட் கொடுக்கவேண்டும் என்பதில்லை. பனிஷ்மெண்ட் கொடுக்கும்பொழுது, சில சமயங்களில், கணவன் மனைவியைப் பிரித்து வைப்பது தவிர்க்க முடியாததாகப் போகிறது.

**திரு. ஆ. துரையரசன் :** அதிகாரிகளின் சொந்த விருப்பு வெறுப்பின் காரணமாக இதைப் போல் மாற்றப்படுவது பற்றி அரசினருக்குப் புகார்கள் வந்திருக்கின்றனவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு புகார்கள் வரவில்லை.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை அமுல் நடத்துவதற்காக இந்த மாதிரி தம்பதிகளைப் பிரித்து வைக்கிறார்கள் என்று சொல்லுகிறார்களே, அது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** குடும்பக் கட்டுப்பாடு வேறு விஷயம். அதற்காகத் தம்பதிகளைப் பிரிப்பது பெரிய பாவம் என்று தான் சொல்[illegible] [illegible]வேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I would like to have notice.

* 211 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government have taken steps to reduce the administrative expenditure; and

(b) if so, whether those steps will affect the efficiency in the administration?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Attention is invited to the statement placed on the table of the house with reference to Legislative Assembly Question No. 210 (Starred).

(b) No, Sir.

**திரு. எஸ். மாதவன் :** பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்களைக் குறைக்க வேண்டுமென்று அரசாங்கம் எதாவது உத்தரவு அனுப்பி யிருக்கிறதா ? அதை மீண்டும் பரிசீலனை செய்ய அரசாங்கத்திற்கு உத்தே சம் இருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுதிருக்கிற ஆசிரியர்களை எடுத்துவிட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு ஒன்றும் போடவில்லை. ஆனால், ஆசிரியர்கள், மாணவர்கள் எண்ணிக்கை விகிதாசாரம் நிர்ண யிக்கப்பட்டு, அது அனுசரிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கம் தெரிவித் திருக்கிறது. ஆனால், அதற்காக இருக்கிற ஆசிரியர்களை வேலையிலிருந்து எடுத்து அனுப்பிவிட வேண்டுமென்ற யோசனையும் இல்லை.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** இப்பொழுது பழைய ஸ்லாப் முறை மாறி ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்கள் என்ற ரேஷியோ வந்த பிறகு பல ஆசிரியர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது பற்றி அரசாங்கத் தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் சற்று முன்புதான் சொன் னேன். இப்பொழுதிருக்கிற ஆசிரியர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** எவ்வளவு சிக்கனத்தைக் கடைப் பிடிக்கலாம் என்பதை ஆராய்ந்து அறிய தனிக் குழு ஒன்றை நியமிக்க அரசாங்கம் முன்வருவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு அதற்கென்று ஒரு தனிக் குழு அவசியம் இல்லை என்றுதான் அரசாங்கம் கருதுகிறது.

**மருத்துவக் கல்லூரியில் அனுமதிப்பதற்கான வயது.**

*213. கேள்வி—**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பி.யு.ஸி. (P.U.C.) வகுப்பில் தேர்வுக்கான தற்போதுள்ள குறைந்த பட்ச வயதிற்கும், மருத்துவக் கல்லூரியில் அனுமதிப்பதற்கான குறைந்தபட்ச வயதிற்கும் ஏதேனும் வித்தியாசமிருக்கிறதா ?

(இ) ஆம் என்றால், அதைப் போக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Yes. (b) The matter is under examination.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் :** பதினைந்து வயது ஆறு மாதம் முடிந்திருந்தால் காலேஜில் சேரலாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி பி.யு.ஸி. வகுப்பு முடிக்கும்பொழுது 15 வயது 4 மாதம் முடிந் திருக்கும். அப்படியிருக்கும்பொழுது மெடிகல் காலேஜில் சேருவதற்கு மட்டும் 16 வயது என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதனால் 3 மாதம் அதிகப்





படி ஆவதால் பாஸ் செய்த மாணவர்கள் மருத்துவக் கல்லூரிக்குப் போவதற்கு வாய்ப்பு இல்லாமல் போகிறதே ? ஆகவே இந்த 3 மாதத் தைக் குறைத்து வயதை நிர்ணயிப்பது பற்றி அமைச்சர் அவர்கள் ஆலோசிப்பார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** 14 வயது 6 மாதம் at the time of admission into the Pre-University Course. அவர்கள் அதை முடிப்பதற்கு 15 வயது 9 மாதம் ஆகும். சரியான முறையிலே ஒரு ஆண்டிலே தேர்ச்சி பெறுவார்களேயானால், தேர்ச்சி பெற்ற பிறகு, ஜூலையில் அட்மிஷன் ஆகிற காரணத்தினால், அக்டோபரில் அவர்களுக்கு 16 வயது பூர்த்தியாகவேண்டும் என்று இண்டியன் மெடிகல் கவுன்சில் ஒரு கொள்கை வகுத்திருக்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** மருத்துவக் கல்லூரியில் சேருவதற் கான அதிகபட்ச வயது எவ்வளவு என்று இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது ? அதில் மாற்றம் ஏதேனும் செய்ய எண்ணம் உண்டா?

**கனம் சபாநாயகர் :** மாக்ஸிமம் எஜ் எவ்வளவு என்று கேட்கிறார்கள். 25 வயது, 30 வயது மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா என்று கேட்கிறார்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** மருத்துவக் கல்லூரியில் சேருவதற் கான அதிகப்படியான வயது எவ்வளவு என்று இப்பொழுது நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது ? அதில் ஏதேனும் மாற்றம் காண எண்ணம் உண்டா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** மாக்ஸிமம் வயது ஒன்றும் குறிப்பிடவில்லை. ஏற்கனவே வயது குறைவாக உள்ளவர்கள் அட்மிஷன் கேட்கிறார்கள்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** இருபத்தைந்து வயது, முப்பது வயது வந்தவர்கள் மருத்துவக் கல்லூரியில் சேர விரும்பினால், அவர்கள் அனு மதிக்கப்படுவார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தனிப்பட்ட கேள்வி போட வேண்டும்.

*Coal (Chingleput district)*

* 214 Q.—SRI V. SANKARAN :
PULAVAR K. GOVINDAN :
SRI S. MADHAVAN :
SRI RAMA ARANGANNAL : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that a large deposit of coal was discovered recently in Chingleput district; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The Government have received reports of occurrence of coal in Chingleput district, but it would be very premature to say that deposits which can be worked economically have been located. The Director-General, Geological Survey of India, has been asked to send a detailed report in the matter and his reply is awaited.

**புலவர் கா. கோவிந்தன் :** இங்கே கிடைக்கிற நிலக்கரியையும், திருச் [illegible] கிடைக்கிற இரும்பையும் வைத்துக்கொண்டு ஒரு உருக்கு ஆலையை அமைக்கவும், அதை வெளிநாட்டுக்கு அனுப்பி பரிசீலனை செய்வ [illegible] மகாபலிபுரத்தை ஒரு நல்ல துறைமுகமாக முன்கூட்டியே அமைக்க [illegible] முயற்சி எடுக்கப்படுமோ ?

புலவர் கா. கோவிந்தன் : இப்பொழுது பஞ்சாயத்து அளவிலே பள்ளிகள் இருப்பதால், பஞ்சாயத்துத் தலைவர்கள் விருப்பப்படி ஆசிரியர்களை மாற்றுவது என்ற நிகழ்ச்சி பரவலாக நடைபெறுகிறது. காரணம் இல்லாமல் மூன்று ஆண்டுகளுக்குள்ளாக ஆசிரியர்களை மாற்றக் கூடாது என்ற விதியை அரசாங்கம் அமுல் நடத்த முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புதிதாக அமுல் நடத்த வேண்டியதில்லை. காரணம் இல்லாமல் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஆசிரியர்களை மாற்றக் கூடாது என்ற விதி இப்பொழுதும் இருக்கிறது. தகுந்த காரணங்கள் இருந்தால் மாற்றுவது தவிர்க்க முடியாத விஷயம்.

திரு. கி. இரா. சம்பந்தம் : எப்பொழுதுமே ஆண்டின் நடுவில் மாற்றுவது கிடையாது. இப்பொழுதெல்லாம் ஆண்டின் நடுவிலே மாற்றுவதினாலே, ஆசிரியர்கள் அவர்கள் குழந்தைகளைப் படிக்க வைப்பதற்குக் கஷ்டப்படுகிறார்கள். குடும்பத்தையும் மாற்ற வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். வழக்கம்போல், ஆண்டு முடிவில் மாற்றக் கூடிய விதியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று எல்லாப பஞ்சாயத்து யூனியன்களுக்கும் சர்க்கார் அறிவிப்புக் கொடுப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த விதி அனுசரிக்கப்பட்டு வருகிறது. ஆனால் வேறு காரணங்களினால் ஆண்டு நடுவிலே மாற்ற வேண்டியிருக்கிறது. அதற்கு ஆசிரியர்களே காரணமாக இருக்கலாம். அல்லது பஞ்சாயத்து யூனியன்கள் காரணமாக இருக்கலாம். எத்தனையோ காரணங்கள் இருக்கலாம்.

திரு. ஆர். ரங்கசாமி : ஆசிரியர்களிடையே கணவன் மனைவி தகராறு ஏற்பட்டு, ஊரிலே இருப்பவர்கள் அதைப் பார்த்து நடக்காமல் இருப்பதற்கு அவர்களை வேறு இடங்களுக்கு மாற்ற சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படிக்கூட எனக்குப் புகார் வருவது உண்டு. (சிரிப்பு). அவர்களிடையே மனஸ்தாபம் இருப்பதன் காரணமாக, அவர்கள் பள்ளிக்கூடம் வந்தால் பாடம் சொல்லிக்கொடுப்பதில்லை என்றும், இந்த சண்டையேதான் நடந்துகொண்டிருக்கிறது என்றும் புகார்கள் வந்திருக்கின்றன.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Will any orders be issued to the Panchayat Union Councils asking them to consult the Education Department, i.e., the Deputy Inspectors of Schools, in the matter of transfers, as was being done in the erstwhile District Boards and Local Bodies?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir; such an order had been in force. But it was not always observed.

திரு. அ. ராகவ ரெட்டி : அம்மாதிரி கல்வி இலாகாவை முன்கூட்டி யோசிக்காமல் மாறுதல் செய்வதற்கு அவர்களுக்கு அதிகாரம் கொடுத்திருப்பதால், ஏராளமான மாறுதல்களை அவர்களாகவே அரசியல் காரணங்களுக்காகவும், மற்ற காரணங்களுக்காகவும் செய்கிறார்கள். அதைத் தடுக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்து ஆலோசனைக் குழுவிலே இந்தப் பிரச்னையைப் பற்றிக் குறிப்பிட்டால், எல்லா பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும் கலந்து, என்ன மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று ஆலோசிக்கலாம்.

### *Southern Zonal Council*

* 219 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state the decisions arrived at by the Southern Zonal Council at its meeting at Kanyakumari in December 1962?



THE HON. SRI M. BHAKTAVATSALAM : The finalised proceedings of the meeting of the Southern Zonal Council held at Kanyakumari on the 30th December 1962, have not yet been received. Copies of the proceedings of the meeting will be placed in due course in the Parliament Library and also in the Library of the State Legislative Assembly. Till then, the proceedings of the meeting are not disclosed, following the Southern Zonal Council Rules of Procedure.

### *Panchayat Development (Separate department)*

* 220 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to form a separate department, viz., Panchayat Development Department for the effective administration of the Panchayat; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) Yes.

The matter is still under the consideration of the Government.

### *Plan Projects (Central Aid)*

* 221 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether it is a fact that the Central Government aid to the State Projects has been reduced in view of the present emergency; and

(b) if so, how far it will affect the State Plan?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) During the current year there will be no reduction in Central Assistance for Plan Projects. In 1963-64, however, there will be a cut of about Rs. 4 crores in the Central Assistance for our Plan schemes.

(b) In spite of the reduction in Central assistance, we have sought to provide in full for all the essential Plan programmes in 1963-64 by effecting suitable economies under schemes of lower priority and in particular under building schemes.

திரு. எஸ். மாதவன் : இந்த நிதி குறைந்த காரணத்தால், கட்டட வேலைகள் நிறுத்தப்படும் என்ற தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பிரைமரி ஹெல்த் ஸெண்டர் கட்டுவதை நிறுத்தக் கூடாதென்று நமது சர்க்காருக்கு மத்திய சர்க்கார் ஆலோசனை கூறியுள்ளதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த நிதி குறைந்ததினால் கட்டட வேலைகளை நிறுத்த வேண்டுமென்பதல்ல. பொதுவாக இப்பொழுதுள்ள நெருக்கடி நிலையின் காரணமாக கட்டட வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது. மேலும், கட்டட சாதனங்கள் கிடைப்பதும் கஷ்டமாக இருக்கிறது. பிரைமரி ஹெல்த் ஸெண்டர்களைப் பொறுத்தவரையில் அவ்வப்பொழுது யோசித்து எந்த அளவுக்குக் கட்டடங்கள் கட்டுவது என்று முடிவு எடுக்கப்படும். மத்திய சர்க்கார் ஒன்றும் உத்தரவு போடவில்லை. அப்படிப் போடவேண்டிய நிமித்தமும் இல்லை.

[திரு. ம. கமலநாதன்] [13th March 1963

நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தவறியதும் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் சுகாதார அமைச்சர் அவர் களின் கவனத்திற்குத் கொண்டுவருகின்றேன். கிருஷ்ணகிரி நகரத்தில் சென்ற மாதம் பிளேக் நோய் பரவியிருந்ததின் காரணமாகவும், அரசினர் அவசியமான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியதன் காரண மாகவும் ஓரிரு இறப்புகள் ஏற்பட்டன என்பதையும் அமைச்சர் அவர்க ளுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

THE HON. SRIMATHI JOTHI VENKATACHELLUM. Mr. Speaker, during September 1962, positive rat-falls were reported in Krishnagiri Town. Immediately on receipt of information, necessary staff were diverted to the area from Hosur taluk, for carrying out intensive anti-plague measures in the town. As a preventive measure, intensive anticipatory inoculation of the entire population of the town, treatment of all houses with cyanogas and gammaxane and wholesale fumigation of all shops and godowns were carried out. Twelve Health Inspectors and 24 Fumigation Units (each unit consisting of one maistry and three mazdoors) were engaged in intensive plague control operations in Krishnagiri town.

In addition to the above staff, one Selection Grade Health Inspector was posted for the overall supervision of the control measures adopted in the town. The Epidemiologist of the office of the Director of Public Health was also constantly camping at Krishnagiri for personal supervision of the measures carried out by the staff.

Seventeen thousand four hundred and thirty-four anti-plague inoculations out of a population of 24,917 in Krishnagiri town were conducted. All the 4,562 houses were treated with cyanogas and gammaxane. A second round of treatment of the houses with cyanogas and BHC products was also done.

Similar anti-plague measures were extended to the villages surrounding the Krishnagiri town within a radius of 5 miles. Eleven thousand and twenty-two anti-plague inoculations out of a population of 16,890 were carried out and all the huouses in these villages were treated with cyanogas and gammaxane.

Since no human case or further rat-falls were reported for four months, the staff at Krishnagiri were withdrawn during the first week of February 1963.

Now, three attacks and two deaths from plague were reported from a village Ramagamkottai, hamlet of Bogavapalli in Krishnagiri Panchayat Union in Salem district. This village consists of only three field huts on the outskirts of Krishnagiri town with a population of 25. The date of first attack was 9th February 1963. But, the information about the occurrence of human cases for the first time, reached the Health authorities, only on 15th February 1963, after two deaths had occurred among three attacks.



13th March 1963] [Srimathi Jothi Venkatachellum]

Immediately on receipt of information, necessary control measures were instituted on the same day. Adequate staff have been posted to the area for intensification of control measures in the infected and surrounding villages. One thousand six hundred and ten anti-plague inoculations have been carried out up to 27th February 1963 in the infected and surrounding villages. Four hundred and thirty-four houses have also been treated with cyanogas and gammaxane during the said period. The work is still in progress.

One of the Assistant Directors of Public Health, Madras, has also visited the infected village. Necessary instructions were issued to the District Health Officer, Salem, for intensifying the anti-plague measures with a view to arrest the infection and to take up Krishnagiri Panchayat for cyanogas and gammaxane treatment.

Frequent instructions are being issued to the District Health Officer, Salem, by the Director of Public Health in regard to the control measures to be adopted by him and to keep a vigilant watch over the situation.

## III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1963-64—*cont.*

*கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, "லேபர் இன்க்ளுடிங் ஃபாக்டரீஸ்," என்கிற இந்த மானியக் கோரிக்கைக்கு இரண்டு மணி நேரமும், "மோட்டார் வெஹிக்ள்ஸ் ஆக்ட்ஸ் அட்மினிஸ்ட் ரேஷன்" என்கிற மானியக் கோரிக்கைக்கு இரண்டு மணி நேரமும் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனல், நேற்று முடிவு செய்யப்பட்டபடி கனம் அங்கத்தினர் திரு. மூக்கையா தேவர் அவர்களுடைய "சிறிது நேர விவாதத் தை" இன்று 12-30 மணிக்கு எடுத்துக்கொள்ளலாம். இந்த ஒரு மணி நேரத்தை மற்ற இரண்டு மானியங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் நான்கு மணி நேரத்தில் குறைத்துக்கொள்ள வேண்டியிருப்பதால், "லேபர்" மானியக் கோரிக்கைக்கு ஒன்றரை மணி நேரமும், "மோட்டார் வெஹிகிள்ஸ் ஆக்ட்ஸ் அட்மினிஸ்ட்ரேஷன்" மானியத்திற்கு ஒன்றரை மணி நேரமும் பகிர்ந்துகொள்ளலாம். இதற்கு எதிர்க் கட்சியின் தலைவர்களும் ஒப்புக்கொள்ளுகிருர்கள். அதே வகையில் ஒவ்வொன்ருக எடுத்துக் கொள்ளலாம் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Sir, I move—

"That the time for each of the Demands Nos. XXIV—Labour including Factories and II—Motor Vehicles Acts—Administration included in the agenda for the day be reduced to one and a half hours."

The motion was put and carried.

### (1) DEMAND NO. XXIV—LABOUR INCLUDING FACTORIES.

*THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 35,25,300 under Demand No. XXIV—Labour including Factories."

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் தலைவர் அவர்களே, சில இடங்களில் 9-00 a.m. ஹெல்த் சென்டர்கள் கட்டுவதற்காக முன்பு சாங்ஷன் செய்யப்பட்டிருந்தும் அவைகள் எல்லாம் இப்பொழுது நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளையெல் லாம் இப்பொழுது எடுத்துக்கொண்டு முடிப்பதற்கு முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்..

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது டாக்டர்கள் பற்றுக்குறை இருக்கிறது. ஆனால் கட்டிடங்களைக் கட்ட வேண்டுமென்றால் அந்தக் கட்டி டங்களுக்கு வேண்டிய சாமான்கள் கிடைக்கவில்லை. ஆகையால் ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு என்று கட்டப்பட வேண்டிய கட்டிடங்கள் கட்டப் படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. எஸ். முருகையன் :** டாக்டர்கள் இருந்தும் சில இடங்களில் ஆஸ்பத்திரிகளுக்குக் கட்டிடங்கள் இல்லாமல் வாடகைக் கட்டிடங்களில் இருந்து வருகிறது. அது போன்ற இடங்களில் கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவசரமாகக் கட்டிடங்கள் கட்ட வேண்டு மென்றாலும் அதற்கு வேண்டிய வசதிகள் இருந்தாலும் அவைகள் நிறுத்தப்படாமல் கட்டப்பட்டு வருகின்றன. ஆனால் பெரிய கட்டிடங்களாக இருந்தால்தான் சாதாரணமாக நிறுத்தி வைக்கப்படுகிறது.

**திரு. இரா. பொன்னப்ப நாடார் :** ஸார், பள்ளிக்கூடங்களுக்குக் கட்டப்பட வேண்டிய கட்டிடங்களைக் கட்டுவதற்கு எதாவது விதி விலக்கு அளிக்க முடியுமா என்பதை அறிய வுரும்புகிறேன்,

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சிறிய கட்டிடங்கள் கட்டப்பட வேண்டிய தாக இருந்தால் அவைகள் நிறுத்தப்படாமல் கட்டப்படுகின்றன. அதைப் பற்றி அவ்வப்போது அதில் கவனம் செலுத்தப்பட்டுத்தான் வருகிறது.

**திருமதி. சி. குழந்தையம்மாள் :** கனம் தலைவர் அவர்களே, சென்ட்ரல் சோஷல் வெல்பேர் போர்டுக்குக் கொடுத்திருந்த மானியம் நிறுத்தப்பட்டிருக்கிற காரணத்தால் கிராமங்களிலுள்ள தாய் சேய் விடுதிகள் கட்டப்படாமல் நிறுத்தப்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்தினிடம் பணம் இருந்தால் அதை வாங்கிக் கட்டலாம் என்ற யோசனை இருந்து வருகிறது. மத்திய அரசாங்கம் மானியம் இல்லா விட்டாலும் கூட பஞ்சாயத்துகளிடம் பணம் வாங்கிக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப்பற்றி தனிக் கேள்வி போட வேண்டும். பஞ்சாயத்துக்கள் பணம் கொடுப்பதாக இருந்தால் அதற்குத் தடை இருக்காது.

*Higher Grade Training Schools (Abolition)*

* 222 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state whether it is proposed to abolish the Higher Grade Training Schools from next year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The question of the gradual elimination of higher grade training schools is under consideration.

**சேரி அபிவிருத்தி டிரஸ்ட்**

*212 கேள்வி—**திரு. இராம அரங்கண்ணல் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னையிலும் மற்றும் எல்லா நகரங்களிலுமுள்ள குடிசை வாழ் பகுதிகளைப் புனரமைப்பதற்காக (Slum Improvement Trust) என்ற தனியான நிறுவனம் ஒன்றை அமைக்க உத்தேசமுண்டா ?



**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இல்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஸார், குடிசை வாழ் மக்களுடைய பிரச்னை நகரத்தைப் பொறுத்தவரையில் பெரிய பிரச்னையாக இருக்கிறது. அதனால் ஹௌசிங் போர்டின் கீழ் தனியாக ஒரு நிறுவனத்தை அமைத்து அதன் மூலம் அதன் நிர்வாகத்தைக் கவனிக்கும்படி செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஹௌசிங் போர்ட் இதை சரியாக கவனித்துக்கொண்டுதான் வருகிறது. அதற்கு நிறுவனம் தேவை இல்லை என்று நினைக்கிறேன்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** ஸார், அப்படியென்றால் அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய நகர எம்.எல்.ஏ.க்களுடைய ஆலோசனையைக் கேட்டு ஹௌசிங் போர்டு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர்கள் தங்க ளுடைய யோசனைகளை விவரமாக தனிப்பட்ட முறையில் எழுதி அனுப்பலாம். அதை வைத்துக்கொண்டும் பரிசீலனை செய்யலாம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது புறம்போக்கு நிலங்களில் இருக்கக்கூடிய குடிசை வாழ் மக்களை வேறு இடங்களுக்கு ஒதுக்க வேண்டும் அல்லது அப்புறப்படுத்த வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறார்களா, அப்படியானால் அதைப்பற்றி சர்வே செய்து அவர்களை நல்ல இடத்திற்கு அனுப்பி வைக்க இந்த அரசாங்கம் கவனிக் குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** புறம்போக்கு நிலங்கள் எல்லாம் பொது மக்களுடைய நிலங்கள். பொது இடங்களில் யார் வேண்டுமானாலும் குடிசைகளைக் கட்டிக்கொள்ளலாம் என்று நினைப்பது சரியல்ல. சில சம யங்களில் அவர்களை அகற்றியே தீர வேண்டியதாக இருக்கிறது. அவர்களை அந்த இடத்தை விட்டு அகற்றிவிட்டு வேறு இடங்களில் கட்டிக்கொள்ளச் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. அப்படி வேறு இடத்தில் கட்டிக் கொள்வதாக இருந்தாலும் கூட ரெவினியூ அதிகாரிகளையோ அல்லது சர்க்காரையோ அனுமதி கேட்டுத்தான் கட்டிக்கொள்ள வேண்டும். இந்த முறையில்தான் விதி இருக்கிறது. ஆகவே பொது இடங்களில் அவர்க ளாகவே வீடுகளைக் கட்டிக்கொள்வது என்பது சரியல்ல. சில சமயங்களில் பொது சௌகர்யத்தை முன்னிட்டு அவர்கள் கட்டாயமாக அகற்றப்பட வேண்டியதாக இருக்கிறது.

**திரு. எஸ். மணி :** கனம் தலைவர் அவர்களே, குடிசை வாழ் மக்கள் அவர்கள் இருக்கக்கூடிய இடங்களில் சுமார் இருபது அல்லது முப்பது ஆண்டுகளாகவே குடிசையைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி வாழ்ந்து வருவதால் அவர்களுடைய பிரச்னையைத் தீர்க்க அவர் களுக்குப் பணம் ஒதுக்கி அபிவிருத்தி செய்து கொடுக்க ஏதாவது உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** குடிசைவாழ் மக்களை யாரைக் கேட்டாலும் இவர்கள் இருபது முப்பது வருடமாகவேதான் அப்படிக் கட்டிக் கொண்டிருப்பதாகச் சொல்லுவார்கள். ஒருவராவது சமீபத்தில் கட்டியதாகச் சொல்லமாட்டார்கள். அதனால் தான் இந்த குடிசைப் பிரச்னையைத் தீர்க்க நிலம் ஒதுக்கி இருக்கிறோம். அந்த இடத்திற்கு அவர்களை அப்புறப்படுத்தி அங்கு எவ்வளவு வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடியுமோ அதைக் கட்டிக்கொடுத்து விட்டு வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** சென்னை நகரத்தில் குடிசைவாழ் மக்களை அப்புறப்படுத்துவதற்கு அரசினர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதைப்பற்றிய ஸ்டேட்மெண்ட் ஒன்று பட்ஜெட்டின்போது விரிவாகக் கொடுக்கப்படும்.

**திரு. மு. சண்முகம் :** சில நகரங்களில் பொதுவாக ஹைவேஸுக்கு சம்பந்தப்பட்ட ரோடுகளில் இப்படிப்பட்ட குடிசைகள் அதிகமாகக் கட்டப்பட் டிருக்கின்றன. அவற்றை அப்புறப்படுத்துவதற்கு நகராட்சிக்கு அதிகாரம் இல்லை. ஹைவேசும் தக்க நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஹைவேசும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் இருப்பதால் அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டுதானிருக்கிறார்கள். அதை அமுல் நடத்து வதுதான் கஷ்டமாக இருக்கிறது. அந்த இடங்கள் பொது இடங்களாக இருப்பதால் அவற்றிலிருந்து அவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று நடவடிக்கை எடுத்துக்கொண்டால் பக்கத்திலுள்ளவர்கள் வந்து பாவம் ஏழை என்று பலவிதமாகச் சொல்லி அவர்கள் மீது கருணை காட்டுகிறார் கள். அதன் காரணமாக சில இடங்களில் அவர்களை அப்புறப்படுத்துவதில் கால தாமதம் ஏற்படுகிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் தலைவர் அவர்களே, இப்படி குடிசையில் வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுடைய வாக்குகளை அரசாங்கத்துக்கு அளிக்கவில்லை என்பதால்தான் அவர்களை அப்புறப் படுத்துகிறார்கள். அதைத்தடுக்க சட்டம் இல்லையா? அப்படி சட்டம் இல்லையென்றால் அப்படிப்பட்ட சட்டத்தை இயற்ற அரசாங்கம் முன் வருவதற்கு சந்தேகம் என்ன இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அவர்கள்மீது கருணை காட்டவேண்டும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர். அதனால்தான் அவருக்கு இப்படிப்பட்ட சந்தேகம் எல்லாம் வருகிறது. அவர் கட்சி ஆட்சியில் இருந்தால் ஒருக்கால் அப்படிப்பட்ட எண்ணம் கொண்டிருப்பாரோ என்னமோ. அதனால்தான் அவருக்கு இந்த விதமான சந்தேகம் ஏற்படுகிறது என்று நினைக்கிறேன்.

**திரு. காந்தி மணிமொழியார் :** சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் குடிசைகள் மேலும் மேலும் வளர்ந்துகொண்டே வருகின்றன. அதுவும் நல்ல பாதைகளிலும் ரோடுகளிலும் பல இடங்களில் குடிசைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே உள்ள குடிசைகளை எடுக்காமல் சீர் திருத்தம் செய்வதோடு மேலும் குடிசைகள் வளராமல் இருப்பதற்கு ஒரு திட்டம் வகுப்பதற்காக குடிசைகளின் சர்வே எடுக்க வழி செய்யப் டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பொது மக்களுடைய ஒத்துழைப் பும் சட்டசபை அங்கத்தினர்களுடைய ஒத்துழைப்பும் இருந்தால் புதுப் புது குடிசைகள் வளராமல் வெகு சீக்கிரத்தில் தடுத்து விடலாம். ஆனால் குடிசைகளை அகற்றும் விஷயத்தில் சாதாரணமாக பொது மக்களுடைய அபிப்பிராயம் அதற்கு அவ்வளவு பலமாக இல்லை. அதாவது ஒரு குடிசையை அகற்ற வேண்டும் என்றால் சட்டசபை அங்கத்தினர்களும் எல்லாக்கட்சி அங்கத்தினர்களும் வந்து அவர்களுக்கு ஏதாவது சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்துவதன் காரணத்தால் குடிசைவாழ் மக்களை அப்புறப்படுத்த முடியாமல் இருக்கிறது.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** அவர்களை அப்புறப்படுத்துவதாக இருந்தால் அவசரப்பட்டுக்கொண்டு அப்புறப்படுத்தக் கூடாது. அதை அமைதியாகச் செய்ய வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய் வார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கொள்கை அளவில் இதை யாரும் மறுக்க மாட்டார்கள். வசதி இல்லை என்பதற்காக குடிசைகளை செக்ரடேரி யட்டில் கூட கட்டி விட்டால் என்ன செய்வது? அந்த மாதிரியான





இடங்களில் குடிசைகளைக் கட்டிவிட்டால் என்ன செய்வது? சாதாரணமாக அங்கத்தினர்களுக்குத் தெரியும் இப்பொழுது பொது இடங்களிலும் நல்ல இடங்களிலும் அநேகம் குடிசைகள் திடீர் திடீர் என்று வருகின்றன. பொது நன்மைக்காக இருக்கிற இடங்களிலும் இவை தோன்றுகின்றன. அப்படிப்பட்ட இடங்களில் வருவதைத் தடுக்க வேண்டியதாக இருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி :** அவர்களுடைய குடிசைகள் அகற்றப்படாமல் இருப்பதற்காக சில இடங்களில் அவர்கள் குடிசைகளைக் கட்டிக்கொண் டிருக்கக் கூடிய இடங்களுக்கு "காமராஜ் நகர்" என்ற பெயரை வைத்துக்கொள்ளுகிறார்கள் என்பது தெரியுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதிகப்படியான பாதுகாப்பு வேண்டும் என்பதற்காக சில இடங்களுக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்க ளுடைய பெயரைக்கூட வைத்துக்கொள்ளுகிறார்கள் என்பதும் தெரியும்.

**திரு. எஸ். மணி :** கனம் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் அதிகாரிகளை பயன்படுத்திக்கொண்டு பல நிலைமைகள் ஏற்படுகின்றன. அதைத் தவிர்க்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர் :** கேள்வி என்ன ?

**திரு. எஸ். மணி :** கிராமப் புறங்களில் குடிசைகள் போடுவது சம்பந்த மாக பல தொந்தரவுகள் ஏற்படுகின்றன. அதைத் தடுக்க ஏதாவது நட வடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கிராமப்புறத்திலும் விண்ணப்பம் செய்து சர்க்காரிடம் அனுமதி பெற்றுத்தான் பொது நிலங்களில் குடிசை களைப் போட்டுக்கொள்ளலாம். கட்டாயம் அனுமதி வாங்கித்தான் ஆக வேண்டும். அப்படி வாங்காவிட்டால் இந்தப் பிரச்னை தீராது.

**திரு. ஆர். ரங்கசாமி :** ஸார், பொது இடங்களில் குடிசை போடும்போது முதலில் மந்திரிகளுடைய பெயரை வைத்து விடுகிறார்கள். முதலில் சுப்ரமணியபுரம் என்று போடுகிறார்கள். பின்னர் அந்தப் பெயரை ஸ்தல கம்யூனிஸ்ட் தலைவர் பெயரில் பாலசுப்ரமணியபுரம் என்று மாற்றி அமைக்கிறார்கள். தனிப்பட்டவர்களுடைய இடங்களில் ஆக்கிரமிப்பதைத் தடுப்பதுபோல அரசாங்கம் கிரிமினல் சட்டப் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்தக் குடிசைகளை அகற்ற வேண்டும் என்ற அவசியம் இருக்கும்போது எந்தப் பெயரைப் போட்டிருந் தாலும் அதைப் பார்ப்பது இல்லை. அது காமராஜ் நகர் என்று இருந்தா லும் சரி, அல்லது நெடுஞ்செழியன் நகர் என்று இருந்தாலும் சரி அதைப் பார்ப்பது இல்லை. அகற்றப்படவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டு விட்டால் அதன் பெயரைப் பார்ப்பது இல்லை. பொதுவாக பொது மக்கள் தான் இதற்கு ஒத்துழைக்க வேண்டும். பொது ஜனங்களுடைய நன்மைக் காகத்தான் அவர்களை அப்புறப்படுத்துகிறோம். அதனால் எந்தப் பெயராக இருந்தாலும் அதைக் கவனிப்பது இல்லை.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

**Note.—An asterisk (*) at the Commencement of a speech indicates revision by the Member.**

## II.—CALLING ATTENTION TO OUTBREAK OF PLAGUE EPIDEMIC IN KRISHNAGIRI TOWN.

***திரு. ம. கமலநாதன் :** கனம் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி நகரத்தில் "பிளேக்" கொள்ளை நோய் பரவியிருப்பதும், அவ்வாறு [illegible] நோய் பரவுவதைத் தடுக்க அரசினர் அவசியமான [illegible]

கனம் சபாநாயகர் அவர்களே, ஆலைகளைப்பற்றியும், ஆலைகளில் வேலை
செய்கின்ற தொழிலாளர்களுடைய நலன், தொழிலாளர்களுடைய பாது
காப்பு ஆகியவைகளைப் பற்றியெல்லாம் கவனிப்பதற்காக ஒரு இயந்திரம்
வேண்டியிருக்கிறது. அந்த வகையில் ஒரு இயந்திரம் அமைக்கப்பட்டிருக்
கிறது. அதற்கு ஆகும் செலவும், அதிலே கவனம் செலுத்தி வருகிற
உத்தியோகஸ்தர்களுடைய சம்பளமும்தான் பெரும்பாலும் இந்த மானியக்
கோரிக்கையில் அடங்கியிருக்கின்றன.

தொழிலாளர்களின் நலன் பாதுகாக்கப்படுவதோடு, வேலையில்லாதவர்
களுக்கு வேலை தேடிக் கொடுக்கும் பொறுப்பையும் இந்த இலாக்கா
ஏற்றுக்கொண்டிருக்கிறது. எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் பற்றிய ஒன்
றிரண்டு விவரங்களைப் பின்னால் சொல்லுகிறேன்.

தொழிலாளர் கல்வித் திட்டம் என்ற ஒன்று இருக்கிறது. அதுவும்
இப்பொழுது நிறைவேற்றப்பட்டு வருகிறது.

முக்கியமாக நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். நாட்டில் நெருக்கடி
நிலை ஏற்பட்டவுடனேயே தொழிலாளர்களும், தொழிலதிபர்களும் மிகுந்த
உற்சாகத்தோடு, உணர்ச்சியோடு உற்பத்தியைப் பெருக்குவதிலே எந்த எந்த
வகையில் ஒத்துழைக்க வேண்டுமோ, தொடர்ந்து பாடுபடவேண்டுமோ,
அவ்வாறெல்லாம் பாடுபடுவோம் என்று உறுதி கூறியது மாத்திரமல்லாமல்
அதே வகையில் நடந்துகொண்டும் வருகிறார்கள் என்று நான் கூற
விரும்புகிறேன்.

இந்த நெருக்கடி நிலை ஆரம்பித்தவுடனேயே, 1962–ஆம் ஆண்டு
நவம்பர் மாதம் 14–ந் தேதி மத்திய அரசாங்கத் தொழிலமைச்சர் அவர்
கள் ஒரு மகாநாடு நடத்தினார்கள். அதில், தொழிலதிபர்கள், தொழி
லாளர் பிரதிநிதிகள், மாநில ஆட்சிப் பிரதிநிதிகள் எல்லோரும் வந்திருந்
தார்கள். அதிலே எல்லோரும் ஏகோபித்து, நல்லுறவோடு உற்பத்தியைப்
பெருக்குவதிலே ஈடுபடவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அடிஷனல்
ஷிஃப்ட் வேண்டுமென்றால், அடிஷனல் ஷிஃப்ட் வேலை செய்ய வேண்டும்;
விரயம் (வேஸ்ட்) கூடாது; தகராறுகளையெல்லாம் சுமுகமான முறை
யில் தீர்த்துக்கொள்ளவேண்டும்; தனிப்பட்ட தொழிலாளர்களைப்
பொறுத்த வரையில், டிஸ்மிஸல், டிஸ்சார்ஜ், ரிட்ரென்ச்மெண்ட் எதுவாக
இருந்தாலும், சாதாரணமாக கோர்ட் மூலமாகப் போகாமல், லேபர்
கமிஷனரிடம் அறிவித்து, அவர் என்ன முடிவு சொல்கிறாரோ அதை
ஏற்றுக்கொள்ளுவது என்று முடிவு செய்யப்பட்டது.

அதையொட்டியே நம்முடைய மாநிலத்திலும் தொழில் அதிபர்களையும்
தொழிலாளர் பிரதிநிதிகளையும் சேர்த்து வைத்து, அம்மாதிரியே செய்
வோம் என்று முடிவு செய்யப்பட்டது. தமிழ் நாட்டுத் தொழிலாளர்கள்,
தொழிலதிபர்கள் நல்லுறவுடனே இருந்து வருகிறார்கள். வேலை நிறுத்
தங்கள், தகராறுகளெல்லாம் அதிகமாக இல்லை. அப்படி ஏதாவது
ஏற்பட்டாலும், தகராறுகளை இரு சாராரும் சேர்ந்து பேசியே தீர்த்துக்
கொள்ளக்கூடிய வகை ஏற்பட்டிருக்கிறது. அந்த வகையில் நல்லதொரு
சூழ்நிலையில் தொழிலுற்பத்தி ஏற்பட்டுக்கொண்டு வருகிறது என்று நான்
மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இந்த வகையில் ஒத்துழைக்
கும் தொழிலாளர்கள், தொழிலதிபர்கள் எல்லோருக்கும் என்னுடைய
பாராட்டுதலை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

எமர்ஜன்ஸி ப்ரொவிஷன் கமிட்டி என்று ஒன்று அமைக்கப்பட்டிருக்
கிறது. அந்தக் கமிட்டி அப்போதைக்கப்போது உற்பத்தியைப் பெருக்கு
வதில் என்ன என்ன வகையில் கவனம் செலுத்துவது, அதிலே என்ன
வகையிலே ஈடுபடுவது என்று கண்காணிக்கும். அந்தக் கமிட்டியும் இப்
பொழுது பணியாற்ற முற்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கு மிச்சப்படும்
பணத்தை நாட்டின் பாதுகாப்பு நிதிக்குக் காணிக்கையாகச் செலுத்துகிறார்
கள். "அதிக வேலை செய்கிறோம்" என்று அவர்களே முன் வந்திருக்
கிறார்கள். அப்படி வேலை செய்வதில் கிடைக்கக்கூடிய ஊதியத்தை





நாட்டின் பாதுகாப்புக்காகக் கொடுக்கிறோம்" என்றும் ஒப்புக்கொண்டிருக்
கிறார்கள். அதற்கு ஃபாக்டரி சட்டம் குறுக்கே நின்றாலுங்கூட, அந்தச்
சட்டத்தையும் மாற்ற வேண்டும் என்று தொழிலாளர்கள் அபிப்பிராயப்
படுகிறார்கள். அந்த முறையில் கூடியவரையில் சுமுகமாகவே தகராறு
களைத் தீர்த்துக்கொள்வது என்ற முறை இருக்கிறது. கடைசிபட்சம்
தான் அட்ஜுடிகேஷன். அட்ஜுடிகேஷன் போட்டால் நீண்ட
காலம் ஆகிறது. அதில் ஒரு கசப்பு ஏற்படுகிறது. ஆகவே அட்ஜுடிகேஷன்
என்பதைக் கடைசிபட்சமாக வைத்துக்கொள்ளவேண்டும் என்ற கொள்
கையை தொழிலாளர்கள் கூட ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை மறுப்
பதற்கில்லை.

மற்றொன்று. "கோட் ஆப் டிஸிப்ளின் இன் இண்டஸ்டிரி" என்ப
தாக எல்லோருக்கும் ஒரு கட்டுபாடு வேண்டும். ஒரு ஒழுங்குமுறைவேண்
டும் என்ற அடிப்படையில் தொழிலாளர்களும் சரி, தொழிலதிபர்களும்
சரி சிற்சில கட்டுப்பாடுகள், ஒழுங்குகள் இவற்றுக்கு உட்பட்டு தாங்களே
நடந்துகொள்ளும் ஒரு மனப்பான்மையை வளர்க்கத் தக்க நடவடிக்கை
எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டுப்பாடு, ஒழுங்குமுறைகளை
இரண்டு சாரார்களும் ஏற்று நடத்துவதற்கு பலர் ஒப்புக்கொண்டிருக்கிறார்
கள். ஆகவே வேலை நிறுத்தம் செய்து, வேலை நாட்கள் விரயமாகப்
போய்விட்டது என்று சொல்வதற்கில்லை. இதே சூழ்நிலை நீடிக்கும்.
நாட்டுக்கு இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க இந்தச் சூழ்
நிலையே நீடிக்க தொழிலாளர்களும் சரி, தொழிலதிபர்களும் சரி—ஆக
இரண்டு சாராரும் மிக்க உற்சாகத்துடன் ஒத்துழைப்பார்கள் என்று நான்
நம்புகிறேன்.

அடுத்து தேயிலை, காப்பித் தோட்டத்திலே வேலை செய்கின்றவர்களுக்குப்
போனஸ் கொடுப்பது பற்றித் தகராறு வந்தது. தகராறு வளர்ந்துவிடக்
கூடாது என்பதற்காக நானே அவர்களோடு கலந்து பேசி ஒரு சுமுகமான
ஒப்பந்தம் அவர்களிடையே வர முயற்சி எடுத்துக்கொண்டேன். அந்த
முயற்சியும் ஓரளவு வெற்றியை அளித்தது. அதன்காரணமாக 1961–ஆம்
ஆண்டு போனஸ் தகராறு விஷயமாக தேயிலைத் தோட்ட முதலாளிகள்
1962, ஜூன் 19ம் தேதி ஒரு ஒப்பந்தத்துக்கு இசைந்தார்கள். இந்த
ஒப்பந்தத்தின் விளைவாக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் 11 சத வீதம்
போனஸ் பெறுவார்கள். காப்பித் தோட்டத் தொழிலாளர்கள் 5 சத வீதம்
போனஸ் பெறுவார்கள். காப்பி, தேயிலை இரண்டும் சேர்ந்து பயிரிடக்
கூடிய தோட்டங்களில் தேயிலை அதிகமாக இருந்தால் தேயிலைத் தோட்டத்
தொழிலாளர்களைப் போலவே 11 சத வீதம் போனஸ் பெறுவார்கள்
இம்மாதிரி இரண்டும் கலந்திருக்கிற தோட்டங்களைப் பொறுத்த வரையில் சரா
சரி 25 சத வீதம் வரை போனஸ்வழங்குவதற்கு முதலாளிகள் ஒப்புக்கொண்
டார்கள். இப்படி ஒரு சுமுகமான நிலைமை இவர்களிடையே உண்டாக்கப்
பட்டிருக்கிறது. இந்தத் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில்
மற்றொரு ஒப்பந்தங்கூட இவ்வாண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதி ஏற்
பட்டிருக்கிறது. 1947–ஆம் வருஷ இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட் செக்
ஷன் 12(3) சம்பந்தப்பட்டவரை தேயிலை, காப்பித்தோட்டத் தொழிலாளர்
களுக்கு அளிக்கப்படும் க்ராஜுடி திருத்தம் சம்பந்தமாக தோட்ட முதலாளி
களுடைய சங்கத்திற்கும், தோட்டத் தொழிலாளர்களுடைய சங்கங்களுக்கு
மிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

இதேமாதிரி ஆலைகள் சம்பந்தப்பட்ட மட்டில் சீர் அமைப்புத் திட்டம்
என்று ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக உற்பத்தியைப் பெரு
க்கவேண்டும், தொழிலாளர்களுக்கு வேலையும் குறையவேண்டும், வேலையும்
போகக் கூடாது என்பதைப் பற்றியது இந்தப் பிரச்னை. இது ரொம்ப
நாட்களாக நீடித்துக்கொண்டிருந்தது. இதைப்பற்றியெல்லாம் கோயம்
புத்தூர் பிராந்தியத்தைச்சேர்ந்த மில் அதிபர்களுடனும் தொழிலாளர் சங்கங்
களின் பிரதிநிதிகளுடனும் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வந்தாகிவிட்டது.
இரண்டு சாராரும் இத்திட்டத்தை நிறைவேற்ற ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.
இது மிகவும் வரவேற்கத்தக்க ஒரு அம்சமாகும்.

[திரு. எம். பக்தவத்சலம்] [13th March 1963

இன்னும் விபத்துக்களைத் தவிர்ப்பதற்கும் தக்க நடவடிக்கை எடுக்கப்
பட்டு வருகிறது. நம்முடைய மாநிலத்தில் நிறைய பாக்டரிகள் ஏற்படுத்தப்
பட்டிருக்கின்றன. அங்கெல்லாம் சென்று விபத்துக்கள் ஏற்படாதவாறு
அடிக்கடி கண்காணிக்க வேண்டுமென்றால் நிறைய பாக்டரி இன்ஸ்பெக்டர்
கள் வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக பாக்டரி இன்ஸ்பெக்டர்
களுடைய எண்ணிக்கையும் பெருகியிருக்கின்றது.

இன்னும் குறைந்த பட்ச ஊதியம் கொடுப்பது பற்றி சட்டம் இருக்கிறது.
அப்போதைக்கப்போது எந்த எந்தத் தொழிலுக்குக் குறைந்தபட்ச கூலி
விகிதம் நிர்ணயிக்கப்படுவது அவசியம் என்று அரசாங்கம் கருது
கிறதோ அவற்றுக்கு எல்லாம் குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிக்கத்
தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்தந்தத் தொழில்களுக்குத்
தக்கபடி அட்வைசரி கமிட்டி நியமிக்கிறோம். டானரி, க்வாரி போன்ற
தொழில்களுக்கு அட்வைசரி கமிட்டி நியமிக்கப்பட்டிருக்கிறது. அவர்களு
டைய முடிவையும் செயலாற்றுகிறோம். மைகா மைன்ஸ் சம்பந்தப்பட்ட
தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்க நடவடிக்கை
எடுக்கப்பட்டு வருகிறது.

அதேமாதிரி விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்குக் கூட
குறைந்த பட்ச கூலி விகிதம் நிர்ணயிக்க சட்டம் கொண்டுவரப்பட்டிருக்
கிறது. அந்தச் சட்டம் இரண்டு மாவட்டங்களைத்தவிர மற்ற எல்லாவற்றி
லும் அமுலில் இருக்கிறது. அதன்படி விவசாயிகள் கூலி கொடுக்கப்பட்டு
வருகிறார்களா என்பதைக் கண்காணிக்கவும் அதிகாரிகள் இருக்கிறார்கள்.
குறிப்பாக இந்தச் சட்டம் தஞ்சாவூர், திருச்சி ஆகிய இரண்டு மாவட்டங்களி
லும் தான் இல்லை என்றால் அதற்குக் காரணம் அந்த மாவட்டங்களில்
பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. குறைந்தபட்ச கூலி விகிதச்
சட்டத்தைவிட அது அங்குள்ள விவசாயிகளுக்கு அதிக அனுகூலமானது
என்றதனால் இந்தச் சட்டத்தினால் அவர்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்
காக அந்த இரண்டு மாவட்டங்களுக்கு மட்டும் இதிலிருந்து விலக்கு
அளிக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் ஹோட்டல் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள் ஆகிய
வர்களுடைய நலனை உத்தேசித்து, தகராறு இல்லாமல் இருக்க, அப்பலேட்
கோர்ட் அமைத்து, லேபர் ஆபீசரை அபலேட் அதிகாரியாகவும் ஏற்படுத்தி
இருக்கிறோம்.

இன்னும் விடுமுறை அளிப்பது பற்றிய சட்டத்தில் ஒரு திருத்தம்
கொண்டு வந்ததைக் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். அதில் முன்பு
ஏழு நாள் விடுமுறை என்று இருந்ததை அதாவது வருடத்தில் இரண்டு
தேசிய தினங்கள், ஐந்து பண்டிகை தினங்கள் சம்பளத்தோடு விடுமுறை
அளிக்க வேண்டும் என்று இருந்ததில் காந்தி ஜயந்திக்கும் விடுமுறை
அளிக்க வசதியாக மூன்று தேசிய தினங்கள் என்றும் ஐந்து, பண்டிகை
தினங்கள் என்றும் எட்டு நாட்கள் விடுமுறை அளிக்க வசதி செய்யப்பட்டி
ருக்கிறது. இந்தச் சட்டமும் இப்போது அமுலில் இருக்கிறது.

அதுமாத்திரம் அல்ல. சர்க்கார் நடத்துகிற ஸ்தாபனங்களில் உள்ள
தொழிலாளர்களுக்கும் இந்தச் சலுகைகள் கிடைக்கும்படி செய்வதுதான்
நியாயம் என்று பலரும் கருதினார்கள். அதை ஏற்றுக்கொண்டு பப்ளிக்
செக்டாரில் இருக்கும் தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாப்பதற்கும்
தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்னும் வீடுகள் கட்டுகிற திட்டம் ஓரளவு நல்ல முறையில் நிறை
வேற்றப்பட்டு வருகிறது. நெருக்கடி நிலைமையை உத்தேசித்து முன்போல
அவ்வளவு வேகமாக வீடுகள் கட்டப்படுகிற திட்டத்தை மேற்கொள்ள
முடியாவிட்டாலும் இத் துறையில் சரியான கவனம் செலுத்தப்பட்டு வருகின்
றது. இரண்டாவது திட்ட காலத்தில் சர்க்கார் 69.94 லட்சம் ரூபாய்க்கு
23 திட்டங்களை அங்கீகரித்தார்கள். இதன்படி 1,700 வீடுகள் கட்டித்தர
ஏற்பாடு செய்யப்பட்டது. இண்டஸ்டிரியல் எஸ்டேட்டில் வேலை செய்கின்ற
தொழிலாளர்களுக்கு என்று 14 திட்டங்களும், தனியார் தொழில் ஸ்தாப
னங்களில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு என்று தனியாக



18th March 1963] [திரு எம். பக்தவத்சலம்]

திட்டங்களும் உருவாக்கப்பட்டன. மொத்தம் 1,700 வீடுகளில் 1,396 வீடு
கள் கட்டப்பட்டு பூர்த்தியாகிவிட்டன. பாக்கியும் முடியும் தருவாயில் இருக்
கின்றன. மத்திய அரசாங்கமும் இண்டஸ்டிரியல் வொர்க்கர்ஸ்களுக்காக வீடு
கட்டும் திட்டத்திற்கு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 125 லட்சம்
ஒதுக்கினார்கள். 1961-62ஆம் ஆண்டுக்கு 698 வீடுகள் கட்டுவது என்ற
லட்சிய அளவு நிர்ணயிக்கப்பட்டது. இதில் 218 வீடுகள் பூர்த்தியாகி
விட்டன. 170 வீடுகள் முடியும் கட்டத்தில் பல்வேறு நிலைகளில் இருக்கின்
றன. 1962-63ஆம் ஆண்டில் 470 வீடுகள் கட்டுவது என்ற லட்சிய
அளவில் 100 வீடுகள் கட்டப்பட்டுவிட்டன. பாக்கியெல்லாம் முடியும் தரு
வாயில் இருக்கின்றன. தனியார்த் துறை தொழிலாளர்களுக்கு வீடு கட்டும்
திட்டப்படி 1961-62-ல் ரூ. 1,85,363 கொடுக்கப்பட்டிருக்கின்றது. 1962-63
ஆம் வருஷத்திற்கு ஐந்து லட்சம் ரூபாய் கொடுப்பது என்று ஒதுக்கப்பட்டுள்
ளது. இதில் மதுரை விசாலாட்சி மில்லுக்காக ரூ. 0.38 லட்சம் சாங்ஷன்
செய்யப்பட்டிருக்கிறது. இப்படி தொழிலாளர்களுக்கு வீடு கட்டித்தர வேண்
டும் என்ற லட்சியத்தை இந்தச் சர்க்கார் நல்லமுறையில் நிறைவேற்றிக்
கொண்டிருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் வேலையில்லாதவர்களுக்கு வேலை தேடித்தருவது சம்பந்த
மாகவும் வேலை தேடித்தரும் ஸ்தாபனமும் நல்லமுறையில் பொறுப்
பேற்று செயலாற்றிக்கொண்டிருக்கிறது. பிஸிகலி ஹாண்டிகாப்டு
களுக்குத் தக்க வேலையைத் தேடித் தருவதற்கு முயற்சி மேற்கொள்ளப்
பட்டிருக்கிறது. அதோடு உயர்ந்த கல்வி பெற்றவர்கள், தொழில் அறிவு
பெற்றவர்கள் இவர்களுக்கும் எங்கே வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்ற
விவரங்கள் தருவதோடு வேலைதேடித்தரவும் பிரத்யேகக் கவனம் செலுத்
தப்பட்டு வருகிறது. வேலை வாய்ப்பு எவ்வளவு பெருகியிருக்கிறது என்கிற
விவரத்தைத் தெரிந்து கொள்வதும் அவசியம். 1961 பிப்ரவரியில் இருந்து
பார்த்தால் 1962 செப்டம்பர் மாதம் வரைக்கும், 17 ஆயிரம் உத்தியோகங்
கள் புதிதாக ஏற்பட்டிருக்கின்றன. 1961-62-ல் 46,322 ஸ்தானங்கள்
அறிவிக்கப்பட்டன என்றால் வேலை தேடித்தரும் ஸ்தாபனம் மூலம் 34,040
ஸ்தானங்களுக்கு தகுந்தவர்கள் அனுப்பப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.
1962-ல் 2,766 ஸ்தானங்கள் அறிவிக்கப்பட்டன என்றால் 475 பேர்கள்
நியமிக்கப்பட்டுவிட்டார்கள். இன்னும் 351 பேர்கள் நியமிக்கப்பட
இருக்கிறார்கள்.

அடுத்தபடியாக எம்ப்ளாயீஸ் ஸ்டேட் இன்ஷுரன்ஸ் ஸ்கீம் 1963 ஏப்ரல்
1-ம் தேதி முதல் அமுலில் இருப்பதை கனம் அங்கத்தினர்கள் அறி
வார்கள். 1962-63-ல் இத்திட்டம் புதுக்கோட்டை, நமணசமுத்திரம்,
ஈரோடு, பொள்ளாச்சி, திருப்பூரைச் சுற்றியுள்ள இடங்கள், ஆவடி,
பட்டாபிராம், பாடி, வீரராகவபுரம், ரெட்ஹில்ஸ்-திருவான்மியூர், வாணி
யம்பாடி போன்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு இப்போது அமுல்
செய்யப்படுகிறது. இதனால் புதிதாக 10 ஆயிரம் பேர்களுடைய குடும்பங்கள்
பலனை அடைந்திருக்கிறார்கள். இத்திட்டத்தை மேலும், குடியாத்தம், விருது
நகர் ஆகிய இடங்களுக்கும் விஸ்தரிக்கும் யோசனை இருக்கின்றது. அதோடு
1963-64-ம் ஆண்டு செங்கோட்டை, நாகர்கோயில், பழனி, வேலூர்
நாகப்பட்டினம், சமயநல்லூர், உசிலம்பட்டி, மேட்டுபாளையம், கோவில்பட்டி
ஆகிய இடங்களுக்கும் விஸ்தரிக்கும் யோசனை இருக்கிறது. இந்த இடங்
களுக்கெல்லாம் விஸ்தரிக்கப்பட்டவுடன் இத்திட்டத்தை தொழிலாளர்களு
டைய குடும்பங்களுக்கும் விஸ்தரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
குறிப்பாக முதலில் சென்னை, கோயம்புத்தூர், மேட்டூர் ஆகிய இடங்களில்
உள்ள தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும், சென்னை நகரத்தில் உள்ள
கமர்ஷியல் எஸ்டாபிளிஷ்மெண்டுகளுக்கும் விஸ்தரிக்கும் யோசனை இருக்
கிறது. 9.30 a.m.

அங்கே 188 "பெட்"கள் அமைப்பதற்காகக் கட்டடம் விஸ்தரிக்கப்
பட்டு வருகிறது. மொத்த "பெட்"கள் 270 ஆகும். அங்கு ஹாஸ்பிடல்
46 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகிறது. மதுரையில் "இன்பெக்
ஷியஸ் டிசீசஸ்" ஹாஸ்பிடல் இருக்கிறது. அதை விரிவுபடுத்துவதற்
கான நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. கோயம்
புத்தூரில் எம்ப்ளாயீஸ் ஸ்டேட் இன்ஷுரன்ஸ் திட்டத்தின் கீழ் [illegible]

ஹாஸ்பிடல் அமைக்கப்பட இருக்கிறது. அதுவுமல்லாமல் 17 டிஸ்பென்சரி களும், அதோடு கூட டாக்டர்களும், மற்றவர்களும் தங்குவதற்கான குவார் ட்டர்ஸ்களும் கட்ட முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக 75 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்னை, கோயம்புத்தூர், மதுரை போன்ற நகரங் களில் தனியாக ஹாஸ்பிடல்கள் கட்டப்படுவதோடு, வைத்திய நிலையங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

எம்ப்ளாயிஸ் பிராவிடண்ட் பண்ட் என்று மற்றொரு திட்டம் இருக்கிறது. பல தொழிலாளர்களுக்கு இந்தத் திட்டத்தினால் பலன் ஏற்பட்டு வருகிறது. இந்த ஆண்டு ஒன்பது புதிய தொழில்களுக்கு இந்தத் திட்டம் அமலுக்குக் கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதையும் சேர்த்து 70 தொழில்களுக்கு எம்ப்ளாயிஸ் பிராவிடண்ட் பண்ட் அமலில் இருக்கும். மத்திய அரசாங்கம் இதற்காக இதுவரை 6¼ சத வீதம் காண்டிரிபியூஷன் கொடுத்து வந்ததை எட்டு சத வீதமாக உயர்த்தியிருக்கிறார்கள். Cigerattes), Electrical, Mechanical and General Engineering Products, Iron and Steel, Paper other than handmade paper, ஆகியவற்றிலும் இந்தத் திட்டம் நடைபெற்று வருகிறது.

முன்பு கூறியது போல், நர்க்கர்சுக்கு எஜுகேஷன் கொடுக்கிறோம். தொழிலாளர்களை அதிகமாக உருவாக்க, தொழிலாளர்களுக்கே ஒரு பயிற்சி கொடுக்கப்படுகிறது. அப்படிப் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் மூலம் மற்ற தொழிலாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. சிலர் பயிற்சி பெறுவதற் காக வெளிநாடுகளுக்குக் கூட அனுப்பப்பட்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் மிகுந்த உற்சாகத்துடன் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். தொழிலதிபர் களும் மிகுந்த ஒத்துழைப்பைத் தருகிறார்கள். 1963–64-ல் பத்தாயிரம் தொழிலாளர்களுக்கு இந்தப் பயிற்சியை அளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அவர்கள் மற்றத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

இந்த இலாகா சீரிய வகையில் உற்பத்தியைப் பெருக்கவும், தொழி லாளர் நலன்களை மேலும் மேலும் பாதுகாக்கவும், வாழ்க்கைத் தரம் உயரவும் கவனம் செலுத்தி வருகிறது. இந்த இலாகாவினுடைய பணிகளைக் கவனித்து வருகிற உத்தியோகஸ்தர்கள் மற்றுமுள்ளவர்களுக்கு வேண்டிய சம்பளங்கள், மற்ற வசதிகளுக்காகத்தான் இந்தத் தொகை கோரப்படு கிறது. இதை கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் மனமுவந்து ஏற்றுக்கொள் வார்கள் என்று நம்பிக்கையுடன் என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

SRI M. S. MANI: Mr. Speaker, Sir, I move—

"That the allotment of Rs. 35,25,300 under Demand No. XXIV—Labour including Factories be reduced by Rs. 100."

MR. SPEAKER: The Demand and the cut motion are before the House for discussion.

**திரு. எம். எஸ். மணி:** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம், தொழிலாளர். தொழிற்சாலை, வேலைத் தேடி தரும்நிறுவனம் ஆகிய மூன்றையும் உள்ளடக்கி இந்த மானியத்தினை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கையிலே முதல் முதலாக "மினி மம் வேஜஸ்" குறைந்த பட்ச சம்பளத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கி றார்கள். நாம் இன்றைய தினம் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தின் இரண்டாவது கட்டத்திலே முன்னுக்குப் போய்க்கொண்டிருக்கிறோம் என்று கூறப்படுகிறது. இந்த நேரத்திலும் நாம் குறைந்த பட்ச சம்பளத்தைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறோமே தவிர, "ஃபேர் வேஜஸ்" என்ற முறையிலே ஊதியம் கொடுக்கும் அளவுக்கு நிலைமை வளரவில்லை.

அதுமட்டுமல்லாது, குறைந்தபட்ச சம்பளத்தை நிர்ணயிக்கிறபோது, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை நிர்ணயிக்கிறோம். அது நிர்ணயிக்கப் பட்டு, இரண்டு ஆண்டுகள் கழித்து விலைவாசிகள் ஏறுகின்றன. ஆகவே, முதல் ஆண்டில் நிர்ணயித்த குறைந்தபட்ச சம்பளத்தைத்தான் மூன்றாவது



ஆண்டிலும் தொழிலாளர்கள் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே முதலிலே நிர்ணயிக்கும்போதே 20 சத விகிதம் கூடுதலாக நிர்ணயித்தால் மூன்றாவது ஆண்டிலே சமாளித்துக்கொள்ளலாம் என்ற யோசனையை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, எதிர்காலத்திலாவது "ஃபேர் வேஜஸ்" நியாயச் சம்பளம் கிடைக்கிற அளவுக்கு நாம் ஒரு நல்ல சட்டத்தை உருவாக்கவேண்டுமென்ப தையும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

தொழிலாளர்களுக்காக இன்றையதினம் நம்முடைய நாட்டிலே வேலை தேடித் தரும் அலுவலகம் இருக்கிறது. வேலை தேடித் தரும் அலுவலகத்திற்காக நாம் ஏராளமான பணத்தைச் செலவு செய்கிறோம்.

வேலைத் தேடித் தரும் அலுவலகத்தில் சென்ற ஆண்டு பதிவு செய்த வர்கள் எண்ணிக்கை 2,27,169 என்று அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கி றது. அந்த அலுவலகம் அவர்களிலே எத்தனை பேருக்கு வேலை வாங்கிக் கொடுத்திருக்கிறது என்ற எண்ணிக்கையைப் பார்த்தால் அது 38,985 அளவுக்குத்தான் இருக்கிறது. இந்த ஆண்டு பதிவேட்டிலிருப்பவர்களுடைய எண்ணிக்கையாகக் குறிப்பிடப்பட்டிருப்பது 1,64,075. சென்ற ஆண்டில் 38,985 அளவுக்குத்தான் வேலை தேடித்தர முடிந்தது என்றால், அந்த ஆண்டில் பதிவு செய்து கொண்டவர்களில் மீதி இருக்க வேண்டிய வர்கள் எண்ணிக்கையினர் என்ன ஆனார்கள், எங்கே போனார்கள் என்று கணக்கிலே சொல்லப்படவில்லை. எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ச் மூலம் வேலை கிடைக்குமென்ற நம்பிக்கையை இழந்து போய்விட்டார்களா? அல்லது வேறு எங்காவது வேலை கிடைத்துப் போய்விட்டார்களா?

மேலும் தனியார் பாக்டரிகளில் வேலை காலியாக இருந்தாலும், எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலமாகத்தான் அவர்கள் ஆட்களை வேலைக்கு அமர்த்தவேண்டும் என்ற நியதி இருந்தால் சில குறைபாடுகளை ஓரளவிற்கு போக்க முடியும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, தொழிற்சாலைகளில் ஏற்படுகின்ற விபத்துகளைப் பற்றி நம்மு டைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1961-ம் ஆண்டு நடந்த விபத்துகளின் எண்ணிக்கை 17,828 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், 1962-ல் அந்த எண்ணிக்கை 18,224 என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. ஒரு ஆண்டிலே ஏறத்தாழ 400 விபத்துக்கள் கூடுதலாகக் கணக்கு காட்டப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகள் பெருகியிருப்பதன் காரணமாக கூடுதலான விபத்து க்கள் ஏற்படுகின்றன என்பது உண்மையாக இருப்பினும் கூட, ஏன் இந்த மாதிரி விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதை அரசினர் ஆராயவேண்டும்.

தொழிலாளர்களுக்கு தொழிற்சாலைகளில் போதுமான பாதுகாப்பு கொடுப்பதில்லை. தொழிற்சாலைச் சட்டப்படி அங்கே வைக்கப்பட வேண்டிய பாதுகாப்பு வசதிகள் தொழிற்சாலைகளில் இருப்பதில்லை. அதைக் கண் காணிக்கும் பொறுப்பு பாக்டரி இன்ஸ்பெக்டரிடம் விடப்பட்டிருக்கிறது. ஒரு பாக்டரி இன்ஸ்பெக்டர் ஒரு மாவட்டம் பூராவும் உள்ள தொழிற்சாலை களைச் சுற்றிவர பாக்டரி இன்ஸ்பெக்டர்களோடு அசிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் களையும் போட்டு விரிவுபடுத்தி தொழிற்சாலைகளில் விபத்து ஏற்படாமல் தடுக்க நாம் முயல வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் தகராறுகளைப் பொறுத்தவரை, மற்ற நாடுகளை விட, நம்மு டைய நாட்டிலே குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். நிர்வாகி களும் தொழிலாளிகளும் நல்ல முறையிலே ஒத்துப் போகிறார்கள். கடந்த ஆண்டிலே 7,662 புகார்கள் விசாரிக்கப்பட்டிருக்கின்றன. நமது அதிகாரி களால் சமரசம் செய்து வைக்கப்பட்டவை 1,051; அட்ஜூடிகேஷனுக்கு அனுப்பப்பட்டவை 221; ஆர்பிட்ரேஷனுக்கு அனுப்பப்பட்டவை [illegible] மொத்தம் 1,275 வழக்குகள் பைசல் செய்யப்பட்டுள்ளன. [illegible]

மார்க்கம் இருக்கிறது ? திரும்ப ஸ்ட்ரைக் செய்யவேண்டும் அல்லது உண்ணுவிரதம் இருக்கவேண்டும்; அல்லது மறியல் செய்யவேண்டும். இதில் எதாவது செய்தால்தான் எங்கள் கோரிக்கைகளைப் பெற முடியும்.

எக்காரணம் கொண்டும் இந்த நெருக்கடி நேரத்தில் நாங்கள் வேலை நிறுத்தம் செய்வதில்லை என்ற உத்தரவாதத்தைக் கொடுத்திருக்கிறோம். அப்படி வேலைநிறுத்தம் செய்வதில்லை என்று நாங்கள் உத்தரவாதம் கொடுத்திருப்பதுபோல், நிர்வாகிகளும் எக்காரணத்தைக்கொண்டும் லேபர் அதிகாரியின் உத்தரவு பெருமல் யாரையும் டிஸ்மிஸ் செய்வதில்லை என்ற உத்தரவாதத்தை அரசாங்கத்தினிடம் அவர்கள் கொடுக்கவேண்டும். அப்படி கொடுத்தால்தான் தொழில் தகராறு ஏற்படாது.

ஆகவே அவர்கள், கோர்ட் அல்லது லேபர் அதிகாரிகளின் தீர்ப்பை அமுல் நடத்தாதிருக்கிறார்கள். லேபர் அதிகாரிகள் ப்ராசிக்யூஷன் செய் வதைத் தவிர வேறு வழியின்றி இருக்கிறார்கள். ஆகவே, இதில் அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

கடைசியாக, 1952ல் வேலையை விட்டு ஒருவர் ஒரு கம்பெனியிலிருந்து நீக்கப்பட்டார். நம் முதல் அமைச்சர் அவர்களுக்கும் அது தெரியும்.

எம். எஸ். என். எஸ். கம்பெனியிலிருந்து ஒரு தொழிலாளி நீக்கப்பட்டார். அதற்காக வழக்கு நடைபெற்றது. 1954ல் கோர்ட் தீர்ப்பு கொடுக்கப்பட்டது. அந்தத் தொழிலாளியை திரும்பவும் வேலைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்—அவருக்குள்ள சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு கொடுக்கப்பட்டது. ஆனால், இதுவரையில் அவரை வேலைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. வருடங்கள் எவ்வளவு ஆகின்றன? அவருக்குள்ள சம்பளத்தை ரிக்கவர் செய்யவேண்டும் என்பதற்காக இன்றைய தினம் அரசாங்கத்தினிடம் சர்டிபிகேட் வாங்கவேண்டியிருக்கிறது; அதை வாங்கி திருச்சி கலக்டருக்கு அனுப்பவேண்டும். அவர் அதை ஆர். டீ. ஓ. க்கு அனுப்புகிறார் ; ஆர். டீ. ஓ. அதை தாசில்தாருக்கு அனுப்புகிறார் ; தாசில்தார் அதை ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு அனுப்பு கிறார் ; அதை ரெவின்யூ இன்ஸ்பெக்டர் முதலாளியிடம் கொண்டு சென்று எப்படி ரிக்கவரி செய்யமுடியும் ? எனவே, இரண்டு மூன்று மாதங்கள் பொறுத்துக்கொள் என்று சமாதானம் சொல்கிறார்கள்.

இப்படி ஒரு ஆண்டு பொறுத்துக்கொண்டோம். பின்னர் பொறுக்க முடியாமல் அந்தத் தொழிலாளி கஷ்டப்பட்டான். இதை நான் அமைச்சர் அவர்களிடம் சொன்ன பிறகு அது முதலாளிக்குத் தெரிந்து, உடன் தாசில்தார் அலுவலகத்தில் அவர்கள் பணம் கட்டிவிட்டார்கள். ஒரு பெரிய தொழிற்சங்கமே இப்படிக் கஷ்டப்படுகிறது.

**கனம் சபாநாயகர் :** மொத்தத்தில் $1\frac{1}{2}$ மணி நேரம்தான் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஒருவரைக் குறைத்துக்கொள்ளலாம்.

**திரு. எம். எஸ். மணி :** இன்ன தேதியில் நீங்கள் வந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று தாசில்தார் சொன்னார்கள். இடையில் ஆர். டீ. ஓ. விடம் அந்த முதலாளி ஒரு பெட்டிஷன் கொடுத்து ஒரு மாதத் தவணை வாங்கியிருக்கிறார். தாசில்தாரிடம் குறிப்பிட்ட தேதியில் சென்று பணம் கேட்டபோது அவர்கள் கொடுக்கவில்லை. பணம் கொடுக்கிறேன் என்றீர்களே, ஏன் கொடுக்கவில்லை என்று கேட்டால், ஆர். டீ. ஓ. விடம் ஸ்டே வாங்கியிருக்கிறார் ஒரு மாதத்திற்கு என்று அவர் சொன்னார். உடனே ஆர். டீ. ஓ-யிடம் போய்க் கேட்டால், எனக்கு அதிகாரம் இருக்கிறது ; கொடுத்தேன், நீ என்ன வேண்டுமானாலும் செய்துகொள் என்று சொல்கிறார். டீ. ஆர். ஓ.-யிடம் சென்றோம் ; அவர், ஆர். டீ. ஓ.- வைக் கேட்டார் ஏன் ஸ்டே கொடுத்தீர்கள் என்று. அதற்கு ஒரு மாதம் பதில் வரவில்லை. இந்நிலையில், கலெக்டருக்கு ஒரு பெட்டிஷன் போட்டோம்; பின்னும் பணம் கிடைக்கவில்லை. ஆகவே, " பணத்தை ரிக்கவரி செய்து கொடுக்காவிட்டால், உங்கள் வாயிற்படியில் உண்ணுவிரதம் இருப்பதைத்



தவிர வேறு வழியில்லை " என்று சொன்ன பின்னர், கலெக்டர் முயன்று, இப்போது பணம் கிடைத்திருக்கிறது. இன்னும் இரண்டு ஆண்டு பாக்கி யிருக்கிறது. அந்த இரண்டு ஆண்டு பாக்கிக்கு இப்போது பெட்டிஷன் போட்டால் இன்னும் இரண்டு ஆண்டுகள் கழித்தாவது வாங்கக்கூடிய வழி ஏற்படும். ஆகையால், இதில் கவனம் செலுத்தி, எப்படித் தொழிலாளர்களை, அவர்களுடைய நிலைமைகளைப் புரிந்து, அடக்கி ஆளுகிறோமோ, அதேபோல முதலாளிகளையும் நாம் கண்டிக்க வேண்டும். யுத்த நெருக்கடி இருக்கும் வரையில் யாராவது அநாவசியமாக எந்தத் தொழிலாளியையாவது வேலையிலிருந்து நீக்கினால், அவர்களுடைய பர்மிட் ரத்து செய்யப்படும், அவர்களுக்குப் போலீஸ் பந்தோபஸ்து கொடுக்கப்பட மாட்டாது என்ற முறைகளில் அவர்களுக்கு அரசாங்கம் எச்சரிக்கை விட்டால் எந்த முதலாளியும் யாரை யும் வேலையிலிருந்து நீக்க மாட்டார்கள். அப்படி நீக்கினாலும், தொழில் அதிகாரிகள் அனுமதி பெற்றுத்தான் நீக்குவார்கள். இந்த சந்தர்ப் பத்தில் கேட்டுக்கொள்கிறேன், இது நெருக்கடியான நேரம், உற்பத்தி பெருகவேண்டுமென்று சொல்லுகிறார்கள், நாங்களும் அக்கறை செலுத்து கிறோம், உற்பத்தியைப் பெருக்குவதிலே முழு மூச்சோடு பணியாற்றுகிறோம் என்று கூறிக்கொண்டு, இப்படிப்பட்ட குறைகளைப்போக்கி, தொழில் அதி காரிகளுக்கு இன்னும் கூடுதலான அதிகாரத்தைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டு எனது வெட்டுப் பிரேரணையை ஆதரித்து எனது உரையை முடிக் கின்றேன்.

**திரு. ஆர். செங்காலியப்பன் :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்று தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்பு கிறேன்.

நமது நாட்டிலே சுதந்திரம் பெற்று 15 ஆண்டுகளுக்குள்ளாக, தொழில் துறையிலே, தொழிலாளர் நலனிலே, நமது அரசாங்கம் அக்கரை காட்டி நல்ல முறையிலே தொழிலாளர்களுக்கு நன்மைகள் செய்திருக்கின்றன என்பதைப் பற்றி யாரும் குறை சொல்ல முடியாது. ஆனால், இன்று நமது நாட்டிலே ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த நெருக்கடியான நேரத்திலே, தொழிலாளருடைய கடமையும், பொறுப்பும் அதிகம் என்று உணர்ந்து இன்று நாட்டிலே இருக்கக் கூடிய தொழிலாளர்கள் ஒருமுகத்தோடு ஒற்றுமையோடு தீவிரப்பட்டு இருக்கிறார்கள் உற்பத்தியைப் பெருக்குவதிலே. இந்த நேரத்திலே இங்கே உள்ள சில குறைபாடுகளில், தொழிலாளர்கள் எவ்வளவு தீவிரமாக அக்கரை காட்டுகிறார்களோ அதே போல இன்று ஆலைக்குச் சொந்தக்காரர்களாக இருப்பவர்கள், முதலாளிகள், தொழிலா ளர்களுக்கு தீங்கு இழைத்துக்கொண்டிருக்கிறார்கள் சில இடங்களில். தொழிலில் அமைதி நிலவவேண்டுமென்று நமது அரசாங்கம் கூறு கிறது. எல்லோரும் சமாதான வழிகளில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்று நமது அரசாங்கம் கூறுகிறது. இந்த நேரத்திலே தொழிலாளர்கள் அதை முழு மனதோடு ஏற்றுக்கொண்டு, எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் வந்த போதிலும் கூட, இன்று நாட்டினுடைய பிரச்னை தான் ஒரே பிரச்னை என்று கருதி, தீவிரமாக உற்பத்தியைப் பெருக்குவதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த நேரத்திலே கோயம்புத்தூரைப் பொறுத்த மட்டில், பல இடங்களில், பல ஆலைகளில், பல என்ஜினீயரிங் வொர்க் ஷாப்புகளில், பல பாக்டரிகளில் தொழிலாளர்கள் ஸஸ்பெண்ட் செய்யப் பட்டிருக்கிறார்கள். பல தொழிலாளர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார் கள். அதைப் பற்றி அரசாங்கம் தீவிரமான கவனம் செலுத்தவேண்டிய கட்டத்திலே இருக்கிறது. இன்று இருக்கக்கூடிய சட்டம் தொழிலாளர் களுக்கு நல்ல முறையில் பாதுகாப்பு கொடுக்கக்கூடிய சட்டமாக இருந்த போதிலும், அந்தச் சட்டத்திலே சில குறைபாடுகள் இருக்கின்றன. நான் ஒரு தொழிற்சங்கத் தலைவன் என்ற முறையில் அந்தக் குறைபாடுகளை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று கோயம்புத்தூரிலே பல ஆலைகளில்நிறுத்தப்பட்டிருக்கிற தொழிலாளர்கள் ஏதோ முதலாளி களுக்கு வேண்டாதவர்கள் என்ற காரணத்தினால், அந்தந்த ஆலைகளில் இருக்கக் கூடிய தொழிற்சங்கத்தில் முக்கிய ஊழியர்களாக [illegible]

வழக்குகள் என்ன ஆயிற்று ? மொத்தத்திலே 16 சத விகிதம் வழக்குகளு க்குத்தான் தீர்வு காணப்பட்டிருக்கிறது. பாக்கி 84 சத விகிதம் தீர்வு காணுமல் விடப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன வழி சொல்லியிருக்கிருர் கள் என்பதைப் பார்க்கும்போது, தொழிலாளர்களுக்கு ஒரு நல்ல நிலைமை இந்த நாட்டிலே இன்னும் ஏற்படவில்லை என்பதைத்தான் அது காட்டுகிறது.

பல வழக்குகள் இன்றையதினம் தொழிலாளர்களால் நடத்தப்பட முடியாத அளவுக்குப் போய் விடுகின்றன. முதலாளிகள் வழக்குகளை எடுத் துக்கொண்டு உயர்நீதிமன்றம் வரை செல்லும் நிலைமை இருந்தால் சாதாரணத் தொழிலாளர்களால் எப்படி அவர்களைத் தொடர்ந்து கொண்டு உயர்நீதிமன்றம் வரை போகமுடியும் என்பதைத்தான் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். எனவே, இவற்றையும் நாம் மாற்றியமைக்கவேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் இருக்கிற சட்ட நிலையை நாம் பார்க்க வேண்டும். மோட்டார் போக்குவரத்து தொழிலாளர் சட்டம் என்ற ஒரு சட்டம் 1962-ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதி அமுலுக்கு வருவ தாக கெசட்டில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. சென்ற ஆண்டு நிதிநிலைக் கூட்டத்தில் நான் இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தேன். சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது இதற்கு ஏன் விதிகள் தயார் செய்யவில்லை என்று கேட்டபோது, "விரைவில் வரும்" என்று அதிலுள்ள கஷ்டங்களையும் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னுர்கள்.

சென்ற நிதிநிலைக் கூட்டத்தில் பேசிய பிறகு இன்றைய தினம் பார்த் தால் உள்ளபடியே அது அமுலுக்கு வராமல் இருக்கிறது. விதிகள் தயார் செய்யப்படாமல் இருக்கிறது. ஆனுல்,அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிருர்கள், இது விரைவிலே பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு பொது மக்களால் பரிசீலிக்கப்பட்டு, அதற்குப் பிறகு சட்டசபை அங்கீகாரம் பெற்று அமுலுக்கு வரும் என்று.

ஏன் இதைக் கூறுகின்றேன் என்ருல், எப்போது இது அமுலுக்கு வரும் என்று காலத்தை நிர்ணயித்துச் சொல்லுங்கள். அந்தச் சட்டம் மூலம் அரசாங்கத்திற்கு வருமானம் வர இருக்கிறது. ஆனுல் அரசாங் கம் இதில் தாமதம் காட்டுவதற்கு காரணம் என்னவென்று புரியவில்லை. முதலாளிகள் இன்றைய தினம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டாமென்று அரசாங்கத்தைத் தடுக்கிருர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன். எனவே, விதிகளை உடனடியாக தயார் செய்து ஒரு குறித்த காலத்தில் கொண்டு வந்தால் மிக நன்ருக இருக்கும் என்று அமைச்சர் அவர்களை நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

இன்றையதினம் பல வழக்குகள் தொழில் கோர்ட்டுகளுக்குச் செல் இறது. தொழில் கோர்ட்டுகளுக்குச் சென்று அங்கு சமரசம் செய்யப்பட்டு அல்லது உத்தரவு கொடுக்கப்பட்டு அதன் காரணமாக அதை அமுல் செய்யும் நிலையில் இன்று நிர்வாகிகள் அல்லது முதலாளிகள் இல்லை என்ப பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும் புகிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானுல் சமரச ஒப்பந்தங்களை "கோர்ட் அவார்ட்"களை அமுல் படுத்தாததாலும் ஆள் குறைப்புத் திட்டத்தின் கீழ் தொழிலாளர்கள் விலக்கப்படும்போது கொடுபட வேண்டிய நஷ்டத்தை கொடுக்காததாலும், தொழில் தகராறு சட்டம் 33(5) 1ன் கீழ் இன்றையத்தினம் 65 வழக்குகள் "ரெக்கவரி" ஆக்கப்பட்டிருக்கிறது ; அப்படி "ரெக்கவர்" செய்ய உத்தரவு அளிக்கப்பட்டிருக்கிறது. 65 வழக்குகளில் இன்றையதினம் கோர்ட்டார் தீர்ப்பு கொடுக்கப்பட்டு அவற்றை நிர்வாகிகள் அல்லது அந்த முதலாளிகள் அமுல்படுத்தாமல் இருந்தால், அவர்கள்மேல் நாம் என்ன நடவடிக்கை எடுக்கமுடியும் ? வேண்டுமானுல், அவர்களை "ப்ராசிக்யூஷன்" செய்யலாம். அப்படி செய்து 50 அல்லது 100 ரூபாய் அபராதம் போட்டா ... கட்டிவிட்டு வந்து



விடுகிருர்கள். அப்படி அபராதம் கட்டுகிற காரணத்தினுல் தொழிலாளர் களுக்கு ஏதாவது நன்மை கிடைக்கிறதா ? எனவே, அரசாங்கம் கொடுக் கிற தீர்ப்பை அமுல் செய்யாவிட்டால், அந்தத் தீர்ப்பை முதலாளிகள் அல்லது நிர்வாகிகள் நிறைவேற்ருவிட்டால் அவர்களது லைசென்ஸ்களை ரத்து செய்யும் அளவிற்கு தொழில் அதிகாரிகளுக்கு அதிகாரம் இருந்தால், தொழில் அதிகாரிகளின் சமரச ஒப்பந்தத்திற்கு அவர்கள் உள்ளபடியே இணங்குவார்கள். அத்தகைய ஒரு புது உத்தரவை இந்த மன்றத்தில் கொண்டு வந்தால் நலமாக இருக்கும் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக பேச்சுவார்த்தைகள் மூலம் தொழில் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது. அரசாங்கக் கொள்கை கூட அதுதான். குறிப்பாக தொழில் அதிகாரியிடம் செல்கிறபோது, அவர் கள் முதலாளிக்கு நோட்டீஸ் அனுப்பினுல் 'இந்த தொழில் அதிகாரிக்கு என்ன அதிகாரம் இருக்கிறது ? எனவே, அவரிடம் நாங்கள் வரத் தேவையில்லை' என்று பலர் கூறிவிடுகிருர்கள். அப்படி வராத முதலாளி களை வரவழைக்கும் அதிகாரம் கூட தொழில் அதிகாரிகளுக்குக் கொடுக்கப் படவில்லை. அந்த அதிகாரம் இருந்தால்தான் முதலாளிகளும் பயப் படுவார்கள் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அறுபத்தைந்து வழக்குகளில் கோர்ட்டு தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தத்தீர்ப்பை அமுல் நடத்தாத காரணத்தினுல் 5 பேர்கள் மீது "ப்ராஸி க்யூஷன்" செய்யப்பட்டு அபராதம் போடப்பட்டிருக்கிறது. பாக்கி 60 பேர்கள் மீது ஏன் பிராசிக்யூஷன் செய்யப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

தொழிலாளர்கள் தவறு செய்து விட்டால் திடீரென்று அவர்களை "டிஸ்மிஸ்" செய்து விடுகிருர்கள். அதேபோல் முதலாளிகள் தவறு செய்தாலும் அதற்கு ஏதாவது பரிகாரம் காண சில மார்க்கங்கள் இருந்தால்தான் அவர்களும் பயப்படுவார்கள் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல ; தொழில் கோர்ட் தீர்ப்பை அமுல் நடத்தாவிட்டால் அவர்களது லைசென்ஸ் அல்லது பெர்மிட்களைப் பறிமுதல் செய்வோம் என்ற பயமுறுத்தல் இருக்கிற நிலையில் அரசாங்கத்திற்கு சில அதிகாரங் கள் இருந்தால் அவர்கள் பயப்படுவார்கள்.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானுல், ஒரு பஸ் முதலாளி, தன் தகரா றில் சமரச ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு அதற்கு பிறகு அதை அமுல் நடத்தவில்லை, அப்படி அதை அமுல் செய்யாத முதலாளி மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடிவதில்லை. அப்படி நடவடிக் கைகள் எடுக்க முயற்சி செய்தாலும் ஆண்டுகள் ஓடி விடுகின்றன.

இதற்கிடையில் தொழிலாளர்கள் நிலை என்ன ? "இதை நீ அமுல் படுத்தவில்லை, ஆகவே, உன் பெர்மிட்டை ரத்து செய்துவிடுகிறேன்" என்று சொல்லக்கூடிய அதிகாரம் அரசாங்கத்தின் கையில் இருந்தால்தான் இத்தகைய நிலைகள் ஏற்படாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

குறிப்பாக இன்றையதினம் திருச்சியில் ஒரு பெரிய கம்பனி இருக் கிறது. டி. எஸ். டி. பஸ் கம்பனி ; அதில் ஐந்து தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். குறிப்பாக அந்தத் தொழிற்சங்கச் செயலாளர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். தொழிற்சங்கச் செயலாளர் என்று சொல்லும்போது அவர்கள் பாதுகாக்கப்படவேண்டிய தொழி லாளர்கள். அப்படி அவரையும் நீக்கிவிட்டு, பல நாட்கள் தொழில் சமரச அதிகாரியிடம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு அவர்கள் ஆலோசனையையும் தொழிற்சங்கம் ஏற்றுக்கொண்டது. ஆனுல் நிர்வாகி அதை ஏற்றுக்கொள்ளவில்லை. பிறகு லேபர் கமிஷணரிடம் விசாரணைக்கு வந்தது ; லேபர் கமிஷணர் விசாரித்து ஒரு ஒப்பந்தம் செய்து வைத்தார்கள். அந்த ஒப்பந்தம் இன்றுவரை அந்த முதலாளிகளால் அமுல் நடத்தப்படவில்லை. தொழிற்சங்கம் என்ன செய்யும் ? எங்களுக்கு என்ன

கூடிய காரணத்தினுல், இந்த நெருக்கடியான நேரத்தில் தொழிற்
சங்கத்திலிருந்து எந்தவித நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது என்று
சொல்லும் நேரத்திலே, முதலாளிகள் தொழிலாளர்களைப் பழி வாங்கும்
நிலையில் இருக்கிருர்கள். இந்த நிலையிலே அப்படிப்பட்ட சட்டங்களில்,
பாதுகாப்புச் சட்டங்களில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டிய
கடமை, பொறுப்பு எல்லாம் அரசாங்கத்தைச் சார்ந்தது. என் திடீரென்று
நிறுத்தியிருக்கிறீர்கள் என்று தொழில் அதிகாரிகளோ அல்லது மற்றவர்
களோ கேட்கும்போது ஏதோ சிறிய தவறு செய்ததற்காக நிறுத்தியதாக
வும், முதலாளிகள் இஷ்டம் போல் நிறுத்திக் கொள்வதற்கு அரசாங்கமே
சட்டத்தில் விதி விலக்கு கொடுத்திருக்கிறது என்றும் கூறுகிருர்கள். இப்
படிப்பட்ட சட்டங்களிலுள்ள குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்து தொழி
லாளர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்க வேண்டும் என்ற முறையில் சட்டங்
களைத் திருத்த வேண்டும்.

இன்று ஆலையில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்கள் 3-4 மைல்
தூரத்திலிருந்து ஆலைக்குச் செல்லக் கூடியவர்களாக இருக்கிருர்கள்.
ஏதோ அசம்பாவிதம் ஏற்பட்டுவிட்டாலோ, வீட்டில் யாராவது இறந்து
விட்டாலோ அல்லது வேறு ஏதாவது விசேஷம் ஏற்பட்டு விட்டாலோ,
3-4 மைல் நடந்து ஆலைக்குச் சென்று லீவு எழுதி எடுத்துக்கொள்ள முடி
யாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இப்படி மாதத்தில் ஒரு நாள்
ஆப்ஸெண்ட் ஆனுலும் ஒரு வருஷத்தில் 12 நாள் ஆகி விடுகிறது. ஏதோ
ஒரு சட்டம் இருக்கிறது என்று கூறுகிருர்கள். வருஷத்தில் 7 நாட்
களுக்கு மேல் ஆப்ஸெண்ட்டானுல் அவர்களை டிஸ்மிஸ் செய்து கொள்ள
லாம் என்று இருக்கிறது. இந்த முறையில் இன்று கோவையிலே நிறைய
தொழிலாளர்கள், ஒரு மில்லுக்கு 30, 40, 50 என்று டிஸ்மிஸ் செய்யப்
பட்டிருக்கிருர்கள். இது வரையில் அதன் மீது எந்தவிதமான நட
வடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இப்போது கோவையிலே சிக்கனச் சீரமைப்பு வந்திருக்கிறது. அதன்
காரணமாக தொழிலாளர்களுக்கு அதிக வேலைப் பளு ஏற்பட்டிருக்கிறது.
அதன் காரணமாக அந்த ஒப்பந்தத்திலே எந்த ஆளையும் குறைக்கக்
கூடாது என்றும் சாதகமான ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த
ஷரத்து தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருக்கிற காரணத்தினுல்,
அதன் காரணமாக எந்தத் தொழிலாளியையும் நிறுத்த முடியாது என்ற
காரணத்தினுல், ஏதோ சில குற்றங்களைக் கண்டுபிடித்து நிறையத் தொழி
லாளர்கள் தள்ளப்பட்டிருக்கிருர்கள். லேபர் கமிஷனர் அவர்கள்
கோவைக்கு வந்தபோது கூட இதைப் பற்றி எடுத்துக் கூறினேம். இன்று
நமது அரசாங்கத்தின் சட்டப் பிரகாரம் ஆலையில் வேலை செய்யக் கூடிய
தொழிலாளர்களுக்கு வயது 58 ஆகி விட்டால் அவர்களை நிறுத்திக்
கொள்ளலாம் என்று இருக்கிறது. இந்தச் சிக்கனச் சீரமைப்பு ஏற்பாடு
காரணமாக இன்று கோயம்புத்தூரிலே நிறையத் தொழிலாளர்களுக்கு 58
வயது ஆகி விட்டது என்று சொன்னுல் நிறுத்தி விடுவதை ஒப்புக்
கொள்கிறேம். 58 வயது ஆகாதவர்களைக்கூட, தொழிலாளர்களைக்
குறைக்கவேண்டும் என்ற காரணத்திற்காக, கோயம்புத்தூர் ஜில்லா
மருத்துவத் தலைமை அதிகாரியிடம் அனுப்பி, பீஸ் கட்டி, ஒவ்வொரு
தொழிலாளிக்கும் 40, 42 வயது தான் ஆகியிருந்தாலும் 58 வயது ஆகி
விட்டது என்று அவர்களிடம் சர்ட்டிபிகேட் வாங்கி நிறுத்திவிடும் முறை
யில் ஆலை முதலாளிகள் தீவிர நடவடிக்கையில் இறங்கியிருக்கிருர்கள்.
இதனுல் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள்.
இன்று அரசாங்கச் சட்டப் பிரகாரம் 58 வயது ஆனவர்களை நிறுத்திக்
கொள்ளலாம் என்று இருக்கிறது. ஒன்று 58 வயது ஆனுலும் நிறுத்தக்
கூடாது என்று சட்டம் இருக்கவேண்டும், இல்லையென்றுல் மருத்துவ
அதிகாரியிடம் அனுப்பி சர்ட்டிபிகேட் பெற்றுத் தான் வேலையிலிருந்து
நீக்கவேண்டும் என்று இருக்கவேண்டும். முதலாளிகள் எந்தக் கொள்கை
சாதகமாக இருக்கிறதோ அதைப் பயன்படுத்திக் கொண்டு நிறையத்
தொழிலாளர்களை நீக்குகிருர்கள். இந்த நேரத்தில் தொழிலாளர்கள்
ரொம்பவும் பொறுப்புத்தன்மையோடு, சகிப்புத் தன்மையோடு, நாட்டு





நிலைமையை உத்தேசித்து இருந்து கொண்டிருக்கிருர்கள். அரசாங்கம்
இதையெல்லாம் கவனித்து முதலாளிகள் இந்த மாதிரி நடவடிக்கைகளை
எடுத்துக் கொள்வதற்கு இடம் கொடுக்காதவாறு கவனம் செலுத்த
வேண்டுமென்று தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்போது நமது நாட்டிலே தொழிலாளர்களுக்கு வீடு
கட்டும் திட்டத்திலே, கூட்டுறவு முறையில் நல்ல முறையில் அரசாங்கத்தின்
உதவி பெற்று, கோயம்புத்தூர் ஜில்லாவிலே, எங்கள் தொழிற் சங்கத்தைப்
பொறுத்தமட்டில் கூட 500-600 வீடுகள் கட்டியாகியிருக்கிறது. அரசாங்
கத்தில் உதவி கொடுப்பது குறித்து அதை வரவேற்கிறேம், பாராட்டு
கிறேம். ஆனுல், இப்போது எமர்ஜென்ஸியில் தாற்காலிகமாக நிறுத்தி
வைக்கலாம் என்ற யோசனை இருப்பதாகத் தெரிகிறது. மீண்டும் தொழி
லாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க இந்தத் திட்டத்தை நிறுத்தாமல்
அரசாங்கம் மேற்கொண்டும் முயற்சி செய்து தொழிலாளர்களுக்கு வீடுகள்
கட்டிக் கொடுக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் தொழில்
அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கோயம்புத்தூர் ஜில்லா இன்று ஒரு பெரிய தொழில் பிரதேசம்.
அதிலே ஆஸ்பத்திரி நெருக்கடி இருக்கிற காரணத்தினுல் இப்போது
அரசாங்க தொழிலாளர் இன்ஷ்யூரன்ஸ் ஆஸ்பத்திரி ஒன்றை அந்தப்
பகுதியிலே 46 லட்சம் ரூபாய் செலவில் கட்டுவதாகத் திட்டம் போடப்
பட்டிருக்கிறது. இன்று, 20-30 ஆண்டுகாலம் ஆலையில் வேலை
செய்யக் கூடிய தொழிலாளர்கள் டி. பி. வியாதி காரணமாக
மிகவும் பாதிக்கப்படுகிருர்கள். இன்று ஆலையிலிருந்து 6 மாதம் லீவ் 10-00 a.m.
கொடுக்கப்படுகிறது. ஆறு மாதம் அவர்களுடைய சந்தாத் தொகையை
அவர்கள் கொடுக்கிருர்கள். ஆறு மாதத்திற்கு மேல் அவர்கள் வேலைக்கு
செல்லாவிட்டால் அந்தச் சந்தாத் தொகையை முதலாளிகள் செலுத்துவ
தில்லை. அதன் காரணமாக இன்ஷ்யூரன்ஸ் திட்டத்திலிருந்து அந்தத்
தொழிலாளியை நீக்கிவிடுகிருர்கள். அவர்களுக்குப் பின்னுல் வைத்திய
வசதி செய்து கொடுப்பதில்லை, லீவும் கொடுப்பதில்லை. இம்மாதிரி சங்கடமான
சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதைத் திருத்தி டி. பி. போன்ற
கொடிய வியாதியினுல் பீடிக்கப்பட்டவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு
வேலைக்கு போக முடியவில்லையென்றுல், அரசாங்கத் திட்டத்தின் கீழ்
அவர்களுக்கு வைத்திய வசதி செய்துகொடுப்பதற்கும், அவர்களுக்கு லீவு
கொடுப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகளை இன்ஷூரன்ஸ் திட்டத்தின் மூலம்
செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கே. பொன்னையா :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர்
அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு
சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். தொழிலாளர்களில், மில்
தொழிலாளர்கள், மோட்டார் தொழிலாளர்கள், சிமெண்டு தொழிற்
சாலை தொழிலாளர்கள் இவர்கள் வாழ்க்கையுடன் தோட்டத் தொழி
லாளர்களுடைய வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்த்தால், அவர்களுடைய
வாழ்க்கைநிலை மிகமிக குறைந்துதான் இருக்கிறது என்று சொல்ல
வேண்டும். உயரமான மலைகளின் உச்சியின் சரிவிலே அவர்கள் தினமும்
வாழ்க்கை நடத்துவதைப் பார்த்தால், அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய
ஊதியம் மிகக் குறைவு என்றுதான் சொல்லவேண்டும். இவ்வளவு குறை
வான ஊதியத்தை அவர்கள் பெற்றும், நாட்டிற்கு ஆபத்து என்ற காலத்தில்
தாராளமாக தங்களாலான உதவியை செய்து வருவது என்பது மிகவும்
போற்றத்தக்கதாகும். அவர்கள் கூலி வசதி பற்றி வேஜ் போர்டினுடைய
முடிவை எதிர்பார்த்துக்கொண்டிருப்பது, இலவு காத்த கிளி போல
ஆகாமல் இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுக்கு வீட்டு வசதி செய்வது பற்றி நான் ஏற்கனவே இந்த
மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். ஒரு அறையில் ஒரு குடும்பம்தான்
இருக்க வேண்டும். ஆனுல் மலைப்பிராந்தியத்தில் தோட்டத் தொழிலாளர்
களுடைய வீட்டு நிலைமையைப் பற்றி சொல்வதற்கே அச்சமாக இருக்கிறது.
ஒரு அறையில் 2 குடும்பங்கள் போட்டு வைத்திருக்கிருர்கள்.

[திரு. கே. பொன்னேயா] [13th March 1963

அவசியம் கவனிக்க வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் தண்ணீர் வசதி, அவர்களுக்கு வேண்டிய கம்பளி வசதி, வைத்திய வசதி இவற்றைப்பற்றியெல்லாம் நாம் சொல்லிக்கொண்டு போகிறோமே ஒழிய, அந்த வசதிகள் அமுலுக்கு வரும்போது மிக மிகக் குறைவாகத்தான் வருகிறது.

அடுத்தபடியாக ரிஜிஸ்டிரேஷன் லேபர், டெம்பரரி லேபர் என்று இரு வகையாக எல்லா எஸ்டேட்களிலும் வைத்திருக்கிறார்கள். ரிஜிஸ்டர்டு லேபருக்கு சாதாரணமாக ரைஸ் ரேஷன் போன்ற என்னென்ன வசதிகள் சட்ட பூர்வமாகக் கொடுக்கவேண்டுமோ அத்தனையும் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். தேயிலை ஒரு ஸீஸனல் கிராப். ஆகவே, டெம்பரரி லேபரையும் உபயோகப்படுத்துகிறார்கள். அவர்களுக்கு ரிஜிஸ்டர்டு தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகள் கொடுப்பதில்லை. டெம்பரரி தொழிலாளர்களுக்கு ரைஸ் ரேஷன், மெடிகல் பெஸிலிடி, எஜுகேஷன் பெஸிலிடி, கம்பளி வசதி, போக்குவரத்துச் செலவு கொடுப்பது ஆகிய வசதிகள் கொடுக்கப்படுவதில்லை. இதை அவசியம் சர்க்கார் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எஸ்டேட் தொழிலாளர்கள் என்றால் நியாயமாக புருஷனும், மனைவியும் சேர்ந்து பதிவு செய்யப்படவேண்டும். ஆனால் மனைவியை மட்டும் பதிவு செய்து கொள்கிறார்கள். புருஷனை பதிவு செய்து கொள்வதில்லை. இதனால் புருஷன் மனைவி சேர்ந்து வாழ்வதிலே இடைஞ்சல் ஏற்படுகிறது. ஆகவே பதிவு செய்யும்போது, புருஷன், மனைவி இரண்டு பேர்களையும் ஜோடியாக பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு வசதி சம்பந்தப்பட்ட வரையில், ஏற்கனவே வருஷத்திற்கு 100-க்கு 8 பேர்களுக்கு முதலாளிகள் வீடு கட்டிக் கொடுக்கவேண்டும் என்று எக்ரிமெண்டு இருக்கிறது. அந்த எக்ரிமெண்டுபடி வீடுகளின் எண்ணிக்கையை கொஞ்சம் உயர்த்தினால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சிறு சேமிப்புத் திட்டம் சம்பந்தமாக சமீபத்தில் வைஸ் சேர்மென் அவர்கள் வால்பாறைக்கு வந்திருந்தார்கள். 7, 8 கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கூட்டங்களில் நல்ல வரவேற்பு இருந்தது. சிறு சேமிப்புத் திட்டத்தின்கீழ் தொழிலாளர்கள் நல்ல முறையில் சேர்த்து வைப்பதற்கு வாய்ப்பு அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்தால், சிறு சேமிப்புத் திட்டத்திற்கு அந்தப் பிராந்தியத்தில் நல்ல வாய்ப்பு இருக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, 3, 4 வருஷங்களுக்கு முன்பே தொழிலாளர்களுக்கும், மானேஜர்களுக்கும் மத்தியில் ஒரு கங்காணி ஸிஸ்டம் இருந்தது. அதை ஒழித்துவிட்டு, இப்போது அவர்களை சூபர்வைஸர்களாகப் போட்டிருக்கிறோம். முழுக்க, முழுக்க அவர்கள் முதலாளிகள் தயவிலேதான் இருக்க வேண்டும். அவர்களுக்கு வருஷத்திற்கு 10 பைசா, 15 பைசா சம்பள உயர்வு கொடுக்கிறார்கள். இந்த மோசமான உயர்வானது அந்த ஏரியாவில் இருக்கும் எல்லா சூபர்வைசர்களுக்கும் ஒரே யூனிபாரமாகக் கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால் மிகவும் நலமாக இருக்கும். மானேஜர்களுக்குப் பதிலாகத்தான் சூபர்வைசர்கள் தொழிலாளர்களிடம் வேலை வாங்குகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு மாதச் சம்பளமாகக் கொடுக்கலாம். அப்படியில்லாமல் தினக்கூலி கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அவசியம் மாதச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பிராந்தியங்களில் வருஷத்தில் 7 மாதங்களில் மழை பெய்கிறது. சூபர்வைசர்கள் தொழிலாளர்களிடம் வேலை வாங்கவேண்டுமென்றால், காலையில் 8, 9 மணியிலிருந்து மாலை 4, 5, மணி வரையில் அவர்கள் அங்கே இருக்க வேண்டியிருக்கிறது. அவர்கள் விறகு சேகரிப்பது என்பது மிகவும் கஷ்டமான காரியம். மானேஜ்மெண்டார் அவர்களுக்கு இலவசமாக விறகு



13th March 1963] [திரு. கே. பொன்னேயா]

கொடுக்க வேண்டும். அவர்களுக்கு ஓவர்கோட், கொடை முதலியவைகள் கொடுக்க வேண்டும். கனம் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். வருஷத்தில் 7 மாதங்களுக்கு மழை பெய்யக் கூடிய ஏரியா அது. அந்தப் பிராந்தியத்தில் தேயிலைத் தொழிலாளர்களும், சூபர்வைசர்களும் மழையில்தான் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு மற்ற தொழிலாளர்களைப்போல் வேறு ஒன்றும் வாய்ப்பு கிடையாது. ஏற்கனவே நான் சொன்ன பிரகாரம் அவர்கள் வேஜ் போர்டின் முடிவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இலவு காத்த கிளி மாதிரி அவர்களுடைய நிலை ஆகிவிடக்கூடாது. அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்தபடியாக, போன தடவை கூட கம்பளியைப் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். மலைப்பிராந்தியத்தில் சூடு கொடுக்கக்கூடிய துணி வேண்டும். அவர்களுக்கு தரமான கம்பளி கொடுக்கப்படவேண்டும். அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய கம்பளிகளை ஆற்றில் கொண்டுபோய் கசக்கினால், அப்படியே ஆற்றோடு போய்விடுகிற நிலையில் இருக்கிறது. தொழிலாளர்களுக்கு தரமான கம்பளி கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரைஸ் ரேஷன் இப்போது எல்லா முதலாளிகளும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஓப்பன் மார்க்கெட்டில் இப்பொழுது ரைஸ் கிடைக்கக் கூடிய விலையை விட முதலாளிகள் கொடுக்கக்கூடிய ரைஸ் 4, 5 பைசா அதிகமான விலையாக இருக்கிறது. ஓப்பன் மார்க்கெட்டிலிருந்து முதலாளிகள் அரிசியைப் பிடித்து வைத்து வாரா வாரம் ரேஷன் கொடுப்பதற்குப் பதிலாக, மாதாமாதம் கொடுக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். இல்லாவிட்டால், தாங்கள் தனியாக ஓப்பன் மார்க்கட்டில் வாங்கிக்கொள்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, மாதத்திற்கு ஒரு தடவையாக ரேஷன் இஷ்யூ பண்ண வேண்டும். வாராவாரம் இஷ்யூ பண்ண வேண்டாம் என்பது தொழிலாளர்களுடைய அபிப்பிராயம். அதையும் கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

வீட்டு சமாசாரம் பற்றி ஏற்கனவே சொல்லிவிட்டேன். அதை அவசியம் கவனிக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது).

*திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய தொழிலாளர்கள், தொழிற்சாலைத் துறை மான்யங்களை வரவேற்கிறேன். இந்த அவசர நிலைமை ஏற்படுவதற்கு முன்பே கூட நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்த வரையில் தொழில் துறையிலே நல்ல அமைதி நிலவி வந்திருக்கிறது. எல்லாத் தரப்பினரின் காரணமாக, தொழிலாளர்கள், அரசாங்கம், அதிகாரிகள், முதலாளிகள் உள்பட எல்லோருமே முறையாக நடந்து வந்திருக்கிறார்கள் என்பதை அது எடுத்துக்காட்டுகிறது. அந்த நிலை பாராட்டத்தக்கது. பல்வேறு நல்ல சட்டங்களை தொழிலாளர்கள் நலம் கருதி நாம் இயற்றியிருக்கிறோம். இந்தச் சட்டங்கள் முறையாக அமுல் நடத்தப்பட்டிருக்கின்றனவா என்பதை முதலில் கவனிப்பது அவசியமான வேலை என்று நான் கருதுகிறேன். நான் அறிந்த மட்டில் நான்-பவர் பாக்டரி ஆக்ட் என்று வெகு காலமாக ஒரு சட்டம் இருந்தது. அந்தச் சட்டம் என்ன ஆயிற்று ? அல்லது, அதனுடைய பலன் இப்பொழுது அனுபவிக்கப்படுகிறதா, அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை ஜாக்கிரதையாக பரிசீலிக்க வேண்டும். அதுபோலத்தான் பீடித் தொழிலாளர்கள் சட்டம், ஷாப் தொழிலாளர்கள் சட்டம் இவைகளெல்லாம் முறையாக அமுல் நடத்தப்படவில்லை. ஏதோ பெயர் அளவுக்கு இங்கே, அங்கே இருக்கிறதே தவிர, முறையாக அமுல் நடத்தப்படவில்லை. எங்கேயோ ஏதோ கோளாறுகள் இருக்கின்றன. அதை ஜாக்கிரதையாகக் கவனித்துப் பார்க்க வேண்டும்.

ஹோட்டல் தொழிலாளர்களுக்கு எத்தனையோ வசதிகளைச் செய்து கொடுக்க சட்டம் செய்திருக்கிறோம். ஆனால் அவர்கள் விரும்புவது என்ன [illegible] வென்றால், ஹோட்டலை அடுத்து அல்லது ஹோட்டலிலேயே [illegible] பகுதியிலே இரவிலே முறையாகத் தூங்கி எழவேண்டும், அதற்கு [illegible]

சுகாதார வசதிகளுடன் தங்கும் இடம் ஒன்று வேண்டும், அது ஹோட்ட லிலேயே இருக்கவேண்டும், அல்லது பக்கத்தில் இருக்கவேண்டும் என்ப தாகும் அதுதான் அவர்களுடைய குறைந்தபட்ச கோரிக்கை. அது அவசியம் நிறைவேற்றப்படவேண்டும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, தொழிற்சாலை நிறுவக்கூடிய இடங்கள் அமைப்பைப் பற்றி ஹெல்த் டிபார்ட்மெண்ட் கவனித்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால், அதன் பின் விளைவு என்ன, கழிவு நீரினால் என்ன விளைவு ஏற்படும், புகையினால் ஏற்படும்படியான கெடுதல்கள் யாவை என்பதுபற்றியெல் லாம் ஜாக்கிரதையாகக் கண்காணிக்க வேண்டும். எங்கள் பகுதியில் இருக்கும் தரங்கதாரா தொழிற்சாலையில் சமீபத்தில் கூட மின்சார இணைப்பு லாசாக இருந்ததினால் சில விபத்துக்கள் ஏற்பட்டன. அதில் உயிர் இழந்தவர்களும் உண்டு. இன்னும் அங்கே அரைகுறை விபத்துக்கள் அடிக்கடி நடந்துகொண்டே இருக்கின்றன. இதிலே எந்த அளவுக்கு கோளாறு இருக்கிறது, fix-பண்ணுவதிலே என்ன கஷ்டம் இருக்கிறது என்பதை ஜாக்கிரதையாகப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். மேலும், அந்தப் பகுதியிலுள்ள கழிவு நீரால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை, சுற்றுப்புறத்திலே சுமார் 5 மைல்களுக்கு விஷப்புகையால் ஏற்படக்கூடிய தீமைகளை எப்படிக் களைவது என்பதையும் பார்க்க வேண் டும்.

தொழிலாளர்களுக்கு வொர்க்மென்ஸ் காம்பென்ஸேஷன் சட்டத்தின் படி காம்பென்ஸேஷன் கொடுக்கிறபொழுது தவணைகளிலே கொடுக்க லாம் என்ற முறை இருக்கிறது. கூடுமான வரையில் எவ்வளவு அதிகமான கேஸ்களில் மொத்தமாகக் கொடுத்து, அவர்களின் வாழ்க் கைக்கு வசதியாக இருக்கும்படிச் செய்யலாம் என்பதையும் பரிசீலனை செய்ய வேண்டும். இந்த ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் உப்புத் தொழிலிலே 50,000-க்கு மேல் ஒரு லட்சம் பேர் வரை ஈடுபட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 8 மாதங்களுக்குத்தான் அவர்களுக்கு வேலை கிடைக்கிறது. இந்த உப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு எந்த விதமான சட்டத்தையும் நாம் அமைக்கவில்லை. குறிப்பாக, அவர்களுக்கு மழை காலங்களில் முந்திய மாதங்களின் சராசரி வருமானத்தில் குறை ந்த பட்சமாக எவ்வளவு கொடுத்து அவர்களுக்கு உதவி செய்ய முடியுமோ, அதைக் கொடுக்க சட்ட பூர்வமாக வசதி செய்து கொடுத்தால் நல்லது. இதை பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்திலே மத்திய சர்க்கார் பரிசீலனை செய்ததில், தொழிற்சாலை களில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் சிக்கனமாக இருப்ப தில்லை என்ற புகாருக்கு ஆளாகியுள்ளார்கள். ஆகவே, எந்த விதத்திலே அவர்களுக்கு ஒரு கட்டாய சேமிப்புத் திட்டத்தைக் கொண்டு வந்து நிறை வேற்ற முடியும் என்பதைப் பரிசீலனை செய்து பார்ப்பது நல்லது.

உப்புத் தொழிலாளர்களுக்கு ஒரு எம்ப்ளாயீஸ் இன்ஷூரன்ஸ் திட் டத்தை நிறைவேற்றலாம். ஆறுமுகநேரி உப்பு தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் இந்த இன்ஷூரன்ஸ் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு, நெசவாளர் கூட்டுறவு சொஸைடிகளிலே உள்ள தொழிலாளர்களுக்கு அரசாங்கம் மான்யம், கடன் கொடுத்து உதவுவது போல, அதே மாதிரி ஒரு திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முடியுமா என்பதை பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய உப்பு செஸ் நிதி கோடிக்கணக்கில் இருக்கிறது. அதிலிருந்து இந்த உப்புத் தொழி லாளருக்கு உதவி செய்ய இந்த அரசாங்கம் கலந்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு வைத்திய வசதி செய்து கொடுப்பதற்கு பணம் ஒதுக்க தயாராக இருக்கிறார்கள். ஆனால் அதை எப்படி அமல் நடத்துவது என்பது தெரியவில்லை. தூத்துக்குடி, வேதாரண்யம், ஆறுமுகநேரி, திருச்செந்தூர், குலசேகரப்பட்டிணம் போன்ற இடங்களில் உள்ள சிறிய ஆஸ்பத்திரிகள், பெரிய ஆஸ்பத்திரிகள், இவற்றைக் கொண்டு எந்த அளவுக்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கலாம் என்பதையும் கவனித்துப் பார்க்க வேண்டும். இந்த உப்புத் தொழிலாளர்



கள் கண்களை இழந்து போவது சகஜமாக இருக்கிறது. ஆகவே, கண் சிகிச்சை செய்யக்கூடிய டாக்டர்களைக் கொண்டு அவர்களுக்கு இலவசமாக சிகிச்சை செய்வதற்கு ஒரு ஏற்பாடு செய்யலாம். பெரிய ஆஸ்பத்திரியில் அவர்களுக் கென்று தனியாக ஒரு விங் ஒதுக்கி, அவர்கள் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்து, அதற்கான செலவை செஸ் நிதியிலிருந்து கொடுக்கலாம். மத்திய சர்க் காரிடமிருந்து செஸ் நிதியைப் பெற்று தூத்துக்குடி போன்ற பெரிய டவுன்களிலே பரீட்சார்த்தமாக இந்த உப்புத் தொழிலாளருக்கு. ஆஸ்பத்திரி யிலேயே ஒரு விங் அமைத்துக்கொடுக்கலாம். இப்பொழுது நம்முடைய நாட் டில் ஏற்பட்டு வருகிற தொழில் வளர்ச்சியை மனதில் கொண்டு, இதுவரை நாம் அமைத்திருக்கக்கூடிய பெரிய தொழிற்சாலைகளையும், அவற்றினால் ஏற்பட்டிருக்கிற பின் விளைவுகளையும் ஜாக்கிரதையாக பரிசீலனை செய்து, இனிமேல் புதிதாக ஏற்படுத்தக் கூடிய தொழிற்சாலைகளில் அம்மாதிரிக் கஷ்டங்கள் வராமல் இருப்பதற்கு வழிவகை செய்து, வேண்டிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்திலே இந்த எம்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சுகளில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இன்று ரிஜிஸ்டர் செய்யப் போகிற வர்கள் நாளை வரையிலும் காத்திருக்க வேண்டிய கஷ்டம் ஏற்கெனவே இருந்தது. இப்போழுது வருகிறவர்களை எப்படியாவது ரிஜிஸ்டர் செய்து அனுப்ப வேண்டும் என்ற கொள்கையை அவர்கள் பின்பற்றி வருகிறார் கள். இது ஒரு நல்ல மாற்றம்.

மத்திய சர்க்கார் சென்னையிலே சைதாப்பேட்டையில் கண் இழந்தவர் கள், சக்தி இழந்தவர்கள், மற்றும் அங்கஹீனர்களுக்கு தனியாக ஒரு நிலையத்தை அமைத்து அவர்களுக்கு தொழில் தேடித் தரக் கூடிய வசதியை ஏற்படுத்தியுள்ளார்கள். தனியார் துறையில் உள்ளவர்களி டத்திலே இந்த எம்ப்பிளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சுகள் தொடர்பு வைத் துக்கொண்டு வேலை வாய்ப்பு தேடி வருகிறார்கள். அது சந்தோஷத்தைத் தருகிறது. எல்லோருக்கும் காருண்ய எண்ணம் இருக்கிறது. கவர்ன் மெண்ட் பிரஸ், ஸ்டேஷனரி ஆபீஸ், மற்றும் சில இலாக்காக்களிலே கூட ஒட்டுதல், வெட்டுதல் போன்ற வேலைகளுக்கு இவர்களை எடுத்துக்கொள் ளும் வகையில் ஏதாவது முயற்சி செய்து கொடுக்கலாமா என்பதையும் துறையை மேலும் விஸ்தரிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். பார்க்கலாம்.

இப்பொழுது மொபைல் ரிஜிஸ்டிரேஷன் முறை இருக்கிறது. இலங்கை யிலிருந்து வந்தவர்களுக்கும் இந்த மொபைல் ரிஜிஸ்டிரேஷன் மேற் கொள்ளப்பட்டிருக்கிறது. இப்பொழுது வேலையற்று இருக்கிற பொற்கொல் லர்களையும், மற்ற தரப்பினர்களையும் தாலுகா தலைநகர்களிலாவது வாரத்தில் குறிப்பிட்ட நாட்களில் அல்லது மாதத்தில் சில நாட்களிலே, குறிப்பிட்ட பகுதிகளுக்குச் சென்று மொபைல் ரிஜிஸ்டிரேஷன் செய்வதன் மூலம் அவர்களுடைய கஷ்டத்தை ஓரளவு போக்க முடியும். இதிலே தகுந்த கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னு டைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. எஸ். மாதவன்** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த தொழிலாளர் பிரச்னையைப் பற்றி பேசும்பொழுது, அமைச்சர் அவர்கள் தொழில் அதி பர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே நல்ல சுமுகமான உறவு ஏற்படுவதற்கு சட்டங்கள் செய்ய முன் வந்திருக்கிறோமென்று எடுத்துக் கூறினார்கள். இந்த சமயத்தில் நான் கூறிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், அப்படி இயற்றப்பட்ட சட்டங்களினால் தொழிலாளர்கள் பயன் அடைகிறார்களா, தொழில் அதிபர்கள் அந்த சட்டங்களிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு இடம் இருக்கிறதா என்பதை கண்காணித்து அரசாங்கம் நல்ல முறையில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உதாரணமாக, இப்பொழுது தொழில் தகராறுகளைப் பற்றி சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின் கீழ் நீதி மன்றத்திற்கோ அல்லது லேபர் கோட்டிற்கோ போய் ஏதாவது தீர்ப்பு கிடைத்தால், அந்த தீர்ப்பை கண்டிப்பாக தொழிலதிபர்கள் நிறைவேற்ற வேண்டுமென்று நிபந்தனை சட்டத்திலே இல்லாத காரணத்தால் பல தொல்லைகள்

என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏதாவது தொழில் சம்பந்தப்
பட்ட மட்டில் சட்டம் கொண்டு வந்தால் அதனால் அந்தத் தொழில்
நசித்துவிடும் என்று சிலர் சொல்லி அப்படிச் சட்டம் கொண்டு வரக்
கூடாது என்று சொல்வார்கள். அப்படி இல்லை. சட்டம் கொண்டு வந்
தால்தான் அந்தத் தொழில் நல்ல முறையில் நடைபெறும். அவர்கள்
அப்படிச் சொல்வது உண்மைக்குப் புறம்பானது. நாம் ஹோட்டல் தொழி
லாளர் சட்டத்தைக்கொண்டு வந்தோம். அதனால் ஹோட்டல் தொழில்
என்ன நசித்துப் போய் விட்டதா? ஆண்டு தோறும் ஆயிரக்கணக்கான
ஹோட்டல்கள் அதிகமாகிக்கொண்டுதான் வருகின்றன. ஆகவே சட்டம்
கொண்டு வந்தால் அந்தத் தொழில் நசித்து விடும் என்று சொல்வது
சரியல்ல. சினிமா தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற பல பெரிய நடிகர்கள்
எல்லோரும் பெரிய மாட மாளிகைகளில் இருக்கிறார்கள். அவர்களைப்
பற்றிக் கவலை இல்லை. ஆனால் சிறிய உப நடிகர்களுடைய நிலை எப்படி
இருக்கிறது என்று பார்க்க வேண்டியதாக இருக்கிறது. அவர்களுக்கு
எந்த விதமான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய
தொழிலுக்கு அரசாங்கம் இது வரையிலும் எந்தவிதமான பாதுகாப்பும்
கொடுக்கவில்லை. பரிதாபகரமான நிலையில் அவர்கள் போய்க்கொண்டி
ருக்கிறார்கள். அப்படி அவர்களை விடுவது நல்லது அல்ல என்பதையும்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வேறு துறையில் சீசனல் எம்ப்
ளாய்மெண்டாக இருப்பவர்களுக்கு நாம் பாதுகாப்பு கொடுத்திருக்கி
றோம். அதாவது சர்க்கரை ஆலையில் வேலை செய்கிறவர்களுக்குக் கொடுத்
திருக்கிறோம். அதைப் போலவே இவர்களையும் சீசனல் எம்ப்ளாய்
மெண்ட் என்று கருதி அவர்களுக்கு வருடம் பூராவுக்கும் பாதுகாப்பு
கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்கள் இந்த
அரசாங்கத்தை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு நாளைக்கு
5, 10, 20 ரூபாய் என்றுதான் பணம் வாங்கி வருகிறார்கள்.
ஆகவே இவர்களையும் சீசனல் எம்ப்ளாய்மெண்ட் என்று கருதி சர்க்கரை
ஆலையில் வேலை செய்கின்றவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்திருப்பதைப்
போன்று இவர்களுக்கும் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.
இந்த மாகாண சர்க்காரை அவர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.
அவர்களுக்கு இந்தச் சர்க்கார் இது வரையிலும் எந்த விதமான பாதுகாப்பும்
கொடுக்காமல் இருக்கிறது. இந்த நிலையை ஏற்படுத்தக்கூடாது என்
பதை தாழ்மையுடன் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஹாலிவுட்,
பம்பாய் முதலிய இடங்களில் அவர்களுக்கு பாதுகாப்பு செய்து கொடுத்
திருப்பதாகத் தெரிய வருகிறது. அங்கேயெல்லாம் எப்படி செய்து கொடுக்
கப்பட்டிருக்கிறது என்பதை தெரிந்து கொண்டு அந்த முறையில் இங்கும்
செய்து கொடுக்கும்படியாகச் கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றைக்கு அவர்
களுடைய நிலை சென்னை நகரத்தில் பார்த்தால் ரொம்பவும் மோசமாக
இருக்கிறது. அவர்கள் குடிசையில் குடியிருந்து வருகிறார்கள். சென்னைக்
குப் பக்கத்தில் சாலிக்கிராமம் என்ற இடம் இருக்கிறது. அங்கு அவர்
களுக்கு ரிவினியூ புறம்போக்கு நிலங்களை விட்டுக்கொடுக்கும்படியாகக்
கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிக் கொடுக்க வேண்டும் என்று விண்ணப்
பித்துக்கொண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. அதை கனம் ரிவினியூ
அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அவர்களுக்கு அந்த இடத்தைக்
கொடுத்து பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகி
றேன். அவர்கள் ஒழுங்கான முறையில் தங்களுடைய ஜீவனத்தை நடத்
திக்கொள்வதற்கு வேண்டிய சட்டத்தைச் செய்து கொடுக்கவேண்டும் என்
றும் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிப்பட்டவர்களுக்கு சரியானபடி பாது
காப்பு இல்லாத காரணத்தால் அவர்கள் தவறான வழிகளில் செல்ல
வேண்டியதாக நேரிடுகிறது. அதற்கு இடம் கொடுக்காமல் அவர்களுக்கு
வேண்டிய பாதுகாப்பு செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகி
றேன். அவர்களுடைய தொழிற்சங்கத்தை ரிஜிஸ்தர் செய்து கொண்டும்
கூட அவர்களுக்கு இன்னும் சட்டம் செய்யாமல் இருப்பது நியாயம்
அல்ல என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். லட்சக் கணக்
கில் செலவு செய்து பெரிய படங்களை எடுக்கிறார்கள். இருந்தாலும் இவர்
களுக்கு 25 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு மற்றும்
"டெயிலி வேஜாக 5, 2, 10 என்றுதான் கொடுக்கிறார்கள். வருடம்



பூராவிலும் படம் பிடித்தாலும் கூட அவர்களுக்கு சில நாட்களுக்குத்தான் வேலை கிடைக்கிறது. அவர்களுக்கு வேலை கிடைத்தாலும் எந்த விதமான பாதுகாப்பும் இல்லாமல்தான் இருக்கிறார்கள். மிகவும் கஷ்டமான நிலைமையில் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய குறைந்த சம்பளத்தை வைத்துத் தங்களுடைய ஜீவனத்தைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஆகவே ஒரு சட்டத்தைச் செய்து பாதுகாப்பு கொடுக்கிறோம் என்று தைரியம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. பாதுகாப்பு கொடுத்தால் அவர்களுடைய தொழில் நல்ல முறையில் வளர்ந்து வரும். இப்பொழுது நாட்டில் ஏதாவது ஒரு தொழில் வளர்ச்சி அடைந்து வருகிறது என்று சொன்னால் அது இந்த சினிமா தொழில்தான். இந்த சினிமா தொழில்தான் வளர்ச்சி அடைந்து கொண்டே வருகிறது. அதிகமாக வரும்படி வருவதும் இந்த சினிமா தொழிலிலிருந்து தான். அதனால்தான் அரசாங்கத்திற்கும் வருமானம் வருகிறது. ஆகவே உதவி நடிகர்களுக்கு எந்த விதமான பாதுகாப்பும் இல்லாத காரணத்தால் அவர்களுக்குச் சட்டத்தைக் கொண்டு வந்து அதை நிறைவேற்றி பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

* **திரு. கே. பி. பழனிசாமி:** கனம் மன்றத் தலைவர் அவர்களே, 10-30 a.m.
நம்முடைய தொழிலாளர்கள் முன்னேற்றமான நிலைக்கு வந்திருந்தாலும் கூட தொழிலாளர்களுக்கு பல குறைகளும் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக, கோவை ஜில்லாவில் 65, 70 நூற்பாலைகளும் இன்னும் பல தொழிற்சாலைகளும் இருக்கின்றன. அது ஒரு தொழிற் பிராந்தியமாக இருக்கிறது. அந்த தொழிற்சாலைகளில் ஏராளமான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுடைய நலன்களுக்கான சட்டங்கள் இருந்தாலும்கூட, திடீரென்று சில தொழிலாளர்களை வேலையிலிருந்து நிறுத்திவிடுகிறார்கள். அதற்குப் பாதுகாப்புச் சட்டத்தில் இடம் இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, இதை நல்ல முறையில் கவனித்து அதிகாரிகளும் அரசாங்கமும் உதவியாக இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒரு ஆலைத் தொழிலாளி திடீரென்று ஒரு நாள், ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் "ஆப்ஸெண்ட்" ஆகிவிட்டால், அவன் பல "எக்ஸ்ப்ளனேஷன்கள்" எழுதிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இதெல்லாம் இருக்கவேண்டியதுதான் என்றாலும், அவன் "ஆப்ஸெண்ட்" ஆனதற்குத் தக்க காரணம் காட்டினால், உண்மையான காரணத்திற்காக வேலைக்கு வரமுடியவில்லை என்று தெரிந்தால், "ஆப்ஸெண்ட்" என்று போட்டதை "லீவ்" ஆகக் கருதிக்கொள்ளக்கூடிய வகையில் சட்டத்திலே இடமளிக்க வேண்டும். ஒரு சிலர் வேண்டுமென்றே கூட "ஆப்ஸ்ண்ட்" ஆகக்கூடும். அப்படிப்பட்டவைகளைப் பரிசீலனை செய்வதற்குத் தகுந்த ஒரு ஆபீசரையோ, அல்லது லீ. ஐ. டீ-யையோ வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். அப்படிச் செய்தால் நலமாக இருக்கும். ஒரு தொழிலாளர் வருஷத்தில் 12 நாட்கள் ஆப்செண்ட் ஆயிவிட்டால், "லீவ் வித் வேஜஸ்" கிடையாது என்று சொல்லுகிறார்கள். குறைந்தபட்சம் 90 நாட்கள் வேலைக்கு வரா விட்டால் "லீவ் வித் வேஜஸ்" கிடைக்காது என்று இருக்கிறது. 90 நாட்களுக்குப் பதிலாக, 100 நாட்களாக இருந்தால் நலமாக இருக்க முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

விவசாயக் கூலிகளுக்கு அகில இந்திய ரீதியில் கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. சில இடங்களில் கூலி அதிகமாகவும் இருக்கிறது. பட்டணங்களை அடுத்த கிராமங்களில்தான் இப்படி ஓரளவுக்கு அதிகக் கூலி கிடைக்கிறது. ஆனால், நகரப் புறங்களைவிட்டுப் பல மைல் தூரம் தள்ளியிருக்கும் கிராமங்களில் அடிப்படைக் கூலியையும் விடக் குறைவாகத்தான் கிடைக்கிறது. அதுவும் நிரந்தரமாகக் கிடைப்பதில்லை. ஒரு வாரத்தில் இரண்டு, மூன்று நாட்களுக்குத்தான் வேலை கிடைக்கிறது. அகில இந்திய ரீதியில் விவசாயிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலி விகிதம் கட்டாயமாக எல்லோருக்கும் கிடைக்கும்படி சட்டத்தை அமுல் நடத்தவேண்டும் என்று நான்

ஏற்படுகின்றன. ஒரு தொழிலாளி சட்டத்திற்குப் புறம்பாக வேலையிலிருந்து நீக்கப்பட்டால், பல ஆண்டுகள் தொழில் கோர்ட், உயர் நீதி மன்றம் இவற்றில் போராடி, அப்படியே வேலையிலிருந்து நீக்கியது தப்பு என்று கோர்ட் தீர்ப்பு அளித்தற்குப் பின்னர் கூட, அந்தத் தீர்ப்பின் பயனை அனுபவிக்க முடியாத சூழ்நிலை இன்றைக்கு இருக்கிறது. இந்த தொழில் தகராறுச் சட்டம் மத்திய சர்க்கார் ஏற்படுத்திய சட்டம். அதன் கீழ் மாநில சர்க்கார் ஏற்படுத்துகிற விதிகளிலாவது, அவ்வாறு தீர்ப்புக் கொடுத்த பிறகு, அந்தத் தீர்ப்பை தொழில் அதிபர்கள் மீறக் கூடாது என்ற ஒரு சூழ்நிலையை உண்டாக்குவதற்கு முன் வர வேண்டும். அந்த முறையில் தொழில் தகராறுகளைத் தீர்த்து வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

உதாரணமாக, இப்பொழுது ஷாப்ஸ் அண்டு எஸ்டாபிளிஷ்மெண்ட்ஸ் சட்டம் இருக்கிறது. இது 1947-ல் ஏற்பட்ட ஒரு சட்டம். அந்தச் சட்டத் திலே 41-வது பிரிவில் வேலையிலிருந்து நீக்கியது தவறு என்று உத்தரவு போட நீதி மன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த வேலை நீக்கம் தவறு என்று நீதிமன்றம் சொல்லிய பிறகு, அதன் விளைவு என்ன என்பதைப் பற்றி அதிலே விளக்கம் இல்லை. 45-வது பிரிவிலே அந்த அவார்டை தொழில் அதிபர்கள் நிறைவேற்றாவிட்டால் தண்டனை கொடுக்கலாமென்று இருக்கிறது. அந்த தண்டனை கொடுக்கும் பிரிவை ஒரு தொழிலாளி பயன்படுத்தினால், அவ்வாறு பயன்படுத்திய காரணத் தால், அவருக்குச் சேர வேண்டிய சம்பளத் தொகையைப் பெற முடியாது என்று ஒரு தீர்ப்பு இருக்கிறது. அது போல் இருந்தால், 41-வது பிரிவின் படி கொடுக்கப்பட்ட தீர்ப்புக்கும் பயன் கிடைப்பதில்லை. அவ்வாறு பயன் கிடைக்கவில்லையே என்று ஆத்திரப்பட்டு 45-வது பிரிவை பயன்படுத்தினால் ஏற்கனவே கொடுத்த தீர்ப்பின்படி சம்பளத் தொகை பெற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இதை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த தொழில் சட்டங்களிலிருந்து தொழில் அதிபர்கள் தப்பித்துக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. தொழிற்சாலைகள் சட்டத்தின் 59-வது பிரிவிலே அதிக நேரம் வேலை செய்தால் அதிகக் கூலி கொடுக்க வேண்டு மென்று இருக்கிறது. ஆனால் நடைமுறையில் பார்க்கும்பொழுது அந்த வாய்ப்பு நிறைவேறாத சூழ்நிலைதான் இருக்கிறது. 59-வது பிரிவு "when a worker works in a Factory" என்று ஆரம்பிக்கிறது. தொழிற் சாலையில் அதிக நேரம் வேலை செய்தால்தான் அந்த அதிகச் சம்பளம் பெறக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. இந்தப் பிரிவை பயன்படுத்திக் கொண்டு தொழில் அதிபர்கள் ஒரு தொழிலாளியை குறிப்பிட்ட நேரங் களில் தொழிற்சாலைக்குள்ளே வேலை செய்யவும், அதற்கு மேல் சில மணி நேரங்கள் தொழிற்சாலைக்கு வெளியே வேலை செய்யவும் பயன் படுத்துகிறார்கள். இதனால் அவர்கள், அதிகச் சம்பளம் கொடுக்காமல், தப்பித்துவிடக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஒரு தொழிலாளி குறிப் பிட்ட நேரத்திற்குமேல் அதிக நேரம் வேலை செய்தாலும், இந்தப் பிரிவின் கீழ் அதிக நேரத்திற்கான ஊதியத்தைப் பெற முடியாத சூழ் நிலை இருக்கிறது. தொழிலதிபர்கள் இந்தப் பிரிவைப் பயன்படுத்தி, தப்பித்துக்கொள்ள முயல்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். ஆகவே இந்த 59-வது பிரிவின்படி தொழிற்சாலையில் வேலை பார்த்தாலும் சரி அல்லது தொழிற்சாலை சம்பந்தப்பட்ட இடத்தில் வேலை பார்த்தாலும் சரி அதிக நேரம் வேலை பார்த்தால் அதிக ஊதியம் கிடைக்கக் கூடிய அளவில் இப்பொழுதுள்ள சட்டத்தை திருத்தி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக பஸ் பர்மிட்டுகளை அதிகப்படியாகக் கொடுத்துக்கொண்டு வருவதால் நாம் சிறு சிறு ஆபரேட்டர்களை அதிகப்படுத்திக்கொண்டு வரு கிறோம். அதிகப்படியாக பர்மிட்டுகள் கொடுக்கப்படுவதை பயன்படுத்திக் கொண்டு சிறு சிறு ஆபரேட்டர்கள் பெருகி விட்டார்கள். ஆகையால் தொழிலாளர்களுடைய நிலை அவர்களுடைய வேலை திட்டம் அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய ஊதியம் முதலியவைகளை கட்டுப்படுத்தக் கூடிய



சட்டம் அதாவது மோட்டார் ட்ரான்ஸ்போர்ட் சட்டத்தை எவ்வளவு விரை வில் அரசாங்கம் கொண்டு வரவேண்டுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கொண்டு வந்து அவர்கள் பயனடையும்படியாகச் செய்ய வேண்டும் என் பதைச் சொல்லிக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளு கிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தொழிலாளர் மானிய கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது தொழிலாளர்களுடைய நலனைக் கருதி அவர்களுக்கு வேண் டிய சட்டங்களை இயற்றி அவர்களுக்கு நல்ல முறையில் பாதுகாப்பு கொடுத்திருக்கிறோம். அந்தப் பெருமை இந்தத் தமிழ் நாட்டைச் சார்ந் தது. குறிப்பாக ஒவ்வொரு மாகாணத்திலும் கூட தொழிலாளர்களுக்கு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று நினைத்தால் தமிழ் நாட்டில் அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்பதைப் பார்த்து அந்த அடிப் படையில் தான் அங்கும் சட்டங்களை கொண்டு வரப்படுகின்றன. நம் தமிழ் நாட்டில் எப்படிச் சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என் பதைப் பார்த்துத்தான் அந்த முறையில் அங்கும் கொண்டு வருகிறார்கள். சென்ற ஆண்டில் கூட தொழிலாளர்களைப்பற்றிய பல சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். பீடி தொழிலாளர்கள் சட்டம், ஹோட்டல் தொழி லாளர்கள் சட்டம்போன்ற பல சட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்றி யிருக்கிறோம். இப்படி பல முறையில் பல சட்டங்களைக் கொண்டு வந்து தொழிலாளர்களுக்கு நல்ல பாதுகாப்பு கொடுத்துக்கொண்டு வருகிறோம். அதனால் தொழிலாளர்கள் நல்ல முன்னேற்றமடைந்திருக்கிறார்கள் என் பதும் நன்றாகத் தெரியும். அவர்கள் பல துறையில் முன்னேற்றம் அடைந்திருப்பது இந்த தமிழ் நாட்டு அரசாங்கத்தின் சாதனை. இதை நாம் பெருமையாகச் சொல்லிக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் நல்ல முன் னேற்றமடைந்திருக்கிறார்கள். அவர்களுடைய நிலை இன்றைக்கு எவ்வ ளவு தூரம் உயர வேண்டுமோ அவ்வளவு தூரம் உயரா விட்டாலும் கூட ஓரளவு அவர்களுடைய நிலை உயர்ந்திருக்கிறது என்றே சொல்லலாம். அவர்கள் நல்ல நிலைக்கு உயர்ந்திருக்கிறார்கள் என்றே சொல்லலாம் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தோட்டத் தொழிலாளர்கள் சம்பந்தமாக நல்ல மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இன் னும் ஏற்பட வேண்டியதாக இருக்கிறது. இந்தத் தோட்டத் தொழிலாளர் களைப் பொறுத்த வரைக்கும் முழு அளவிலும் மாற்றம் அடையவில்லை. ஆகவே அதைப்பற்றி பரிசீலனை செய்து ஒரு முடிவு காண்பதற்கு ஒரு கமிட்டியை அமைத்து அவர்களுடைய நிலைமையைப்பற்றி பரிசீலனை செய்து அவர்களுக்கு இன்னும் அதிகப்படியான அளவில் பலனளிக்கும் அளவில் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சிற்சில தாவாக்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகின்றன. அவைகளுக் குத் தீர்ப்பு கிடைக்க கால தாமதம் ஏற்படுகின்றன. உதாரணமாக இந்தி யன் எக்ஸ்ப்ரஸ் கேஸ். இது சுமார் மூன்று ஆண்டு காலமாக நடை பெற்று வருகிறது. பெரிய அளவில் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது. சட்டத்தில் ஏதாவது கோளாறு இருந்தால் அதற்காக சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி ஏற்பாடு செய்தால் நலமாக இருக்கும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். ஆகவே கால தாமதத்தை நிவர்த்திக்க உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதைப்போலவே இந்த மாகாணத்தில் இன்னொரு தொழிலில் ஈடுபட்ட வர்கள்; அவர்களுக்கு தொழிற் சங்கம் இருந்தும் கூட எந்தவிதமான பாதுகாப்புச் சட்டமும் இல்லாத காரணத்தால் கஷ்டப்பட்டுக்கொண்டிருக் கிறார்கள்; அதாவது இன்றைக்கு சினிமா தொழிலில் இருக்கக்கூடியவர் வர்கள்; சினிமா தொழிலில் ஈடுபட்ட உதவி நடிகர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். அதனால் ஸ்பெஷல் ஆபீசரையாவது நியமித்து அவர்களுடைய நிலை என்ன என்பதை கவனித்து அவர்களுக்குச் சட்டம் கொண்டு வரவேண்டும்

கேட்டுக்கொள்ளுகிறேன். தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில், தொழிலாளர்கள் ஒரே இடத்தில் கும்பலாக இருப்பதால், சட்டத்தை அமுல் நடத்த சாதகமாக இருக்கிறது. ஆனால், விவசாயிகள் பரவலாகப் பல ஊர்களில் இருப்பதால், அவர்களுக்குரிய கூலியைப் பெறுவதில் சில கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே, இதைத் தக்க முறையில் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டியை நியமித்து நல்ல ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தொழிற்சாலைகளில் விபத்துக்கள் ஏற்படுவதைப் போலவே, விவசாயத்திலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. கதிர் அடிக்கக்கூடிய மெஷினில் வேலை செய்யக் கூடிய, தினம் ஒன்றரை ரூபாய் கூலி பெறும் டெம்பரரி கூலி ஒருவன் தப்பித் தவறி கை வைத்துவிட்டால், அவன் நஷ்ட ஈடு பெறும் வகையில் அவனுக்கு கோர்ட்டில் சென்று வாதாடுவதற்கு அட்வகேட்டின் உதவியோ, பப்ளிக் ப்ராஸிக்யூடரின் உதவியோ அளிக்கப்பட வேண்டும். ஏழைகளாக இருப்பதால் அப்படிப்பட்டவர்கள் நஷ்ட ஈட்டைப் பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பல சௌகரியங்களைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

**திரு. முனு ஆதி:** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர் அவர்களே, உள் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற, "தொழிலாளர், வேலை தேடித்தரும் நிலையம்" "தொழிற்சாலை, ஆகியவற்றுக்கான மானியத்தின் மீது கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் விழைகிறேன்.

குறிப்பாக, தொழிலாளர்களுக்கு இந்த நாட்டில் நிரந்தரமாக்கப்படுகிற உரிமை நீண்ட நாளாகவே இல்லாமலிருக்கிறது. தொழில் தகராறு சட்டத்தில், "240 நாட்களுக்கு மேல் அவர்கள் வேலைசெய்தார்களானல் நிரந்தரமாக்கப்படவேண்டும்" என்று தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. ஆனல், அதிகமான தொழிலாளிகள், அவர்கள் தனியார் துறைத் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளிகளாக இருந்தாலும், வேறு பல தொழிற்சாலைகளில் வேலை செய்கின்ற தொழிலாளியாக இருந்தாலும், 240 நாட்கள் அல்லது ஆயிரம் நாட்கள் வேலை செய்தாலும், நிரந்தரமாக்கப்படாமல், "டெம்பரரி" என்ற முறையில் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் "டெம்பரரி" என்கிற முறையில் பணியாற்றுகின்ற காரணத்தால், பிராவிடெண்ட் ஃபண்டு, இன்ஷூரன்ஸ் உரிமைகளும் அவர்கள் சீக்கிரமாகப் பெற முடியாமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே, முதன் முதலாகத் தொழில் தகராறு சட்டத்தில் தெளிவாகக் கூறியிருப்பதை தொழிலாளிகள் நிரந்தரமாக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டிருப்பதைக் கட்டாயமாக அமுலாக்குகிற அளவுக்குப் பயன்படுத்தச் செய்யவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொழிலாளிகள் "ரிடையர்" ஆவதற்குப் பின்னல் அவர்களுக்குரிய பிராவிடெண்ட் ஃபண்டு, மற்றும் இதர உரிமைகள் கொடுக்கப்படுவதில், காலதாமதம் இருக்கிறது. ஏறக்குறைய ஓராண்டுக் காலம் வரையில்கூட அவைகளைப் பெற முடியாதிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் ஓய்வு பெற்றவுடனே அத்தகைய பணத்தைப் பெறுவதற்கு அத்தியாவசியமான ஏற்பாட்டைச் செய்தால்தான் தொழிலாளிகள் ஓய்வு பெற்றதற்குப் பின்னல் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்குப் பணத்தைப் பெறுவதால் லாபம் அடைய முடியும் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

தொழிலாளர்களை நம்முடைய சர்க்கார் நான்கைந்து தரங்களாகப் பிரித்திருக்கிறார்கள். ஸ்தல ஸ்தாபனத் தொழிலாளிகள் சிலரை 'நான்காந்தரச் சிப்பந்திகள்' என்ற ஒரே தலைப்பில் வைத்திருக்கிறார்கள். ஸ்தல ஸ்தாபனங்களில் பலதரப்பட்ட தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள். மலேரியாத்தடுப்புத் தொழிலாளர்கள், தோட்டக்காரர்கள், கக்கூசு எடுப்பவர்கள், காவற்காரர்கள் என்று பலதரப்பட்ட தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.



ஆனலும், எல்லோருமே யாத்திரம் 'நான்காந்தரச் சிப்பந்தி' என்று இருக்கிறது. அதிலே கொடுக்கப்படும் சம்பளத்திலும் வேறுபாடு இருக்கிறது. ஒரு ஸ்வீப்பருக்குச் சம்பளம் 75 ரூபாய் இருக்க, கார்டனருக்குச் சம்பளம் 55 ரூபாயாக இருக்கிறது. அதேபோன்று, மலேரியாத் தடுப்புத் தொழிலாளருக்குச் சம்பளம் 50 ரூபாயாக இருக்கிறது. ஆகவே, நான்காந்தரச் சிப்பந்திகளிலேயே இவ்வளவு வேறுபாடான சம்பளம் இருப்பதால் தொழிலாளர்களுக்கு உற்சாகம் இல்லாமல், நல்ல உரிமை பெறுகிறவர்களாக இல்லாமல் வேதனைப்படுவதை அமைச்சர் அவர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

பாக்டரிகளிலே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, பாக்டரி இன்ஸ்பெக்டர் வரும் நேரம் தெரியவில்லை. என்ன குறைபாட்டை விசாரிக்கிறார் என்று தெரியாது. முதலாளியின் அலுவலகத்திலேயே இருந்துகொண்டு, 'தொழிற்சாலைக்குள்ளே போய்ப் பரிசோதனை செய்துவிட்டேன்' என்ற முறையில் கையொப்பம் இட்டுவிட்டுத் திரும்புகிற நிலையைப் பரவலாக எல்லாத் தொழிற்சாலைகளிலும் நாம் பார்க்கமுடியும். மேலோட்டமாக நான் பேசவில்லை. நான்கைந்து தொழிற்சாலைகள் என்னுடைய தொகுதியில் இருக்கின்றன. அங்கு நடந்த அனுபவத்தைப் பின்னல் சொல்லத் தயாராக இருக்கிறேன். பாக்டரி இன்ஸ்பெக்டரை எதற்காக வைத்திருக்கிறோம்? நல்ல எண்ணத்தில் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைக் கவனிப்பதற்காக வைத்திருக்கிறோம். தொழிற்சாலை முறையாக அமைக்கப்பட்டிருக்கிறதா, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பாக தொழிற்சாலை கட்டப்பட்டிருக்கிறதா, என்று பார்ப்பதற்காக பாக்டரி இன்ஸ்பெக்டர்களை நாம் வைத்திருக்கிறோம். ஆனல், தொழிலாளர்களுடைய குறைகளைக் கண்டறியும்பொருட்டு, தொழிற்சாலையைச் சுற்றிப்பார்த்து, அங்குள்ள தொழிலாளர்களை விசாரிக்க வேண்டியிருக்க, அதையொன்றும் செய்யாமல் தொழிற்சாலைக்குள்ளேயே செல்லாமல் முதலாளியின் அலுவலகத்தில் உட்கார்ந்துகொண்டிருந்துவிட்டு, கையொப்பமிட்டுவிட்டு அப்படியே வீடு திரும்புகிறார்கள். ஆக, தொழிற்சாலைக்குச் செல்லும்போது, அங்கு உள்ள பெரிய தொழிற்சங்கத்தின் தலைவரைப் பார்த்து, இங்கே நான் தொழிற்சாலையைப் பார்க்க வந்திருக்கிறேன், என்ன உங்களுக்கு ஆபத்து இருக்கிறது? கட்டடம் நீண்ட காலம் இருக்கும் என்று நினைக்கிறீர்களா? பயந்துக்கொண்டிருக்கிறீர்களா? குறைகள் என்னென்ன இருக்கின்றன?" என்று பாக்டரி இன்ஸ்பெக்டர் கேட்பதற்கு வாய்ப்புகள் இருக்கும்படி கட்டாயப்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பாக்டரிகளில் அதிகமாகக் கூலி கொடுக்கவேண்டியிருப்பதால், அதைத் தவிர்ப்பதற்காக வேண்டி சிறு சிறு பையன்களை, 10,12, 15 வயதுப் பையன்களை வைத்துக்கொண்டு, கணக்கிலே வைத்துக்கொள்ளாமல், தனிக் கணக்கை வைத்து, வேலை வாங்குவதால் பெரிய தொழிலாளர்களுக்கு இடமில்லாமல் இருக்கிறது. நிறைய லாபம் சம்பாதிக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு சின்னஞ்சிறு பையன்களை வேலைக்கு வைத்துகொள்ளுகிறார்கள். அதையும் அரசாங்கம் கவனித்து, முறைப்படுத்த வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் எத்தனையோ லட்சம் பேர்கள் பதிவுசெய்திருக்கிறார்கள் என்றாலும், ப்ரையாரிடி சிஸ்டத்தையும் சீனியாரிடி சிஸ்டத்தையும் அனுசரிக்காததால் முன்னல் பதிவு செய்துகொண்டவர்களுக்கு வேலை கிடைக்காத நிலை இருந்துகொண்டிருக்கிறது. ஐந்தாண்டுகளுக்கு முன்னல் ஒரு தொழிலாளி பதிவு செய்துகொண்டிருந்தாலும் வேலை கிடைக்காமல் அவதிபடக்கூடிய நிலையும், ஆறு மாதங்களுக்கு முன் பதிவு செய்திருப்பவர்களுக்குத் திடீரென்று எக்ஸ்சேஞ் மூலமாக வேலை கிடைப்பதையும் நான் பல ஆதாரங்களுடன் காட்ட முடியும். எக்ஸ்சேஞ் மூலமாக யார் யாருக்கு வேலை கிடைக்கிறது என்பதைக் கவனிக்கவேண்டும். முறையாக ஏற்கனவே பல ஆண்டுகளுக்கு முன்னல் பதிவு செய்துகொண்டு, வேலைக்காகக் காத்திருப்பவர்களுக்கு வேலை கிடைக்காமலிருக்க, நேற்று பதிவு

செய்துகொண்டவருக்கு வேலை கொடுப்பதைப்பற்றி கவனித்து, ப்ரையாரிடி சிஸ்டத்தை அனுசரித்து, வேலை கொடுக்கச் செய்தால் நலமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தொழிலாளர்களுக்கான உரிமைகள் அதிகமாக நம்முடைய அரசாங்கத்தில் தரப்படுகின்றன என்பதை நாங்கள் ஒப்புக்கொண்டாலும், தொழிலாளர்களுடைய உரிமைகள் எந்தமுறையில் அமுக்கப்படுகின்றன, நசுக்கப்படுகின்றன என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. ஒரு தொழிற்சாலையில் திறமை பெற்ற தொழிலாளர் ஒருவரை அங்குள்ள தொழிலாளர் சங்கத்திற்குத் தலைவராக வைத்துவிட்டால் அங்குள்ள முதலாளிகள், நம்மிடமுள்ள ஒரு தொழிலாளி தலைமை தாங்குவதா என்று உடனே ஆத்திரப்பட்டு, அந்தத் தொழிலாளியைப் பழிவாங்க எப்பொழுது சந்தர்ப்பம் கிடைக்கும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்களிலேயே ஒருவரை தொழிற்சங்கத் தலைவராகப் போடுவதை விட்டு வெளியிலே உள்ளவரைத் தொழிற் சங்கத் தலைவராக வைத்துவிட்டால், " இந்த கட்சி தொல்லை கொடுப்பதற்கு வந்திருக்கிறது "என்ற காரணத்தைக் காட்டி, தொழிலாளர்களுடைய உரிமையை மறுக்க முதலாளிகள் முயற்சி செய்கிறார்கள்.

அதேபோன்று, ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனியில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள், அதிகமான எண்ணிக்கையைக் கொண்ட தொழிலாளர்கள் சேர்ந்து ஒரு சங்கத்தை வைத்துக்கொண்டு, உரிமை கேட்டதற்கு, முதலாளிகள் " முடியாது " என்று இறுமாப்போடு சொல்லி விட்டார்கள். தொழிலதிகாரி கேட்டால் நிராகரித்துவிட்டு, " வர முடியாது " என்று சொல்லியிருக்கிறார்கள். ஏன் இப்படிச் சொல்கிறார்கள் என்று பார்க்கும்போது, " எங்களுக்குத் தொழிலமைச்சர் ஆலோசனை கூறுகிற போது இவர்கள் என்ன செய்ய முடியும் ?" என்று பகிரங்கமாக உதாசீனப்படுத்திவிட்டார்கள். கடைசியில், சர்க்கார் அளித்திருக்கும் உரிமை யாகிய வேலை நிறுத்தத்தைச் செய்தபோது தடியால் அடித்தது மட்டுமல்லாமல் இரத்தம் சிந்தும் அளவுக்கு அடித்து, சங்கம் மேலும் தொடராத அளவுக்குப் பயமுறுத்தி அடக்கிவிட்டார்கள்.

அதேபோன்று, இந்திரா காட்டன் மில்ஸ் குரோம்பேட்டையில் இருக் கிறது. அங்கிருக்கும் தொழிலாளிகள் ஓராண்டுக் காலமாக நிரந்தர மாக்கப்படவில்லை. கூலி நிர்ணயம் செய்து தரப்படவில்லை. போதிய சலுகை தரப்படவில்லை. தொழிற் சங்கம் வைத்து உரிமைகளைக் கேட்டும், சமரசம் ஏற்படாத நிலையில், 48 நாட்கள் வேலை நிறுத்தம் செய்து உரிமைக் காகப் போராடவேண்டி ஏற்பட்டும், கடைசியில் தொழிலாளர்களுக்கு உரி மைகள் கிடைக்கவில்லை. தொழிலாளர்களைப் பயமுறுத்தி " சங்கத்தில் சேருவதில்லை " என்று கையெழுத்து வாங்கி, அச்சுறுத்தியதின் பேரில் சங்கம் இல்லாமலேயே இந்திரா காட்டன் மில் தொழிலாளர்கள் அவதிப் படுவதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்றைக்கு தொழில் அமைச்சர் அவர்களே ஒத்துக் கொள்வார்கள். சங்கத்தின்மூலமாக நோட்டீஸ் கொடுக்கிறோம். தொழி லதிபர்கள் ஒத்துக்கொள்ளாவிட்டால் லேபர் கமிஷனுக்குப் போகிறோம். அங்கும் இல்லாவிட்டால் லேபர் கோர்ட்டுக்குச் செல்கிறோம். லேபர் கோர்ட் கொடுத்த முடிவையும் தொழிலதிபர்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால் தான் வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுக்கப்படுகிறது. அதற்காக தொழிலதி பர்கள் தொழில் ஸ்தாபனத்தையே மூடுவதும் தொழிலாளிகளைப் பலி வாங்குவதும் சரியான செயலாகாது. குறிப்பாகச் சொல்வேன். என்னு டைய தொகுதியில் ஒரு மோட்டார் கம்பெனி இப்படி வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுத்தார்கள் என்பதற்காக 150 பேர்கள் வேலை செய்து வந்த ஸ்தாபனத்தை மூடிற்று. இதனால் தொழிலாளர்கள் நடுத் தெரு வில் நிற்கிறார்கள். ஆனால் தொழிலதிபர்கள் தங்கள் பாக்டரியை மூடி னார்களே தவிர தங்களுக்கு வேண்டிய சாமான்களை வேறு தொழிற்சாலை யின் மூலம் பெற்றும் அங்கே இவர்களுடைய சாமான்களைக் கொண்டு



உற்பத்தி செய்தும் வருகிறார்கள். இவ்வாறு தொழிலாளர்கள் பாதிக்கப் படக்கூடிய நிலைமையை அறவே அகற்றவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து தஞ்சாவூர் மாவட்டத்தில் வடபாதிமங்கலம் சர்க்கரை ஆலையில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் நீண்டகாலமாகவே " நாங்கள் உடல்நலம் இல்லாது போனால் எங்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க இங்கே ஒரு டாக்டர் நியமிக்கப்பட வேண்டும்" என்று கோரிக்கொண்டிருக்கிறார்கள். தொழிற்சங்கத்தின் மூலமும் இப்பிரச்சினை வற்புறுத்தப்பட்டது. இதுவரை டாக்டர் நியமிக்கப்படவில்லை. உடனடியாக அங்கே டாக்டர் நியமித்துக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

F அடுத்து திருச்சி மாவட்டத்தில் லால்குடி சிமெண்டு தொழிற்சாலையில் ஐந்தாயிரம், ஆறாயிரம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அங்கே உள்ள ஆஸ்பத்திரியில் போதுமான மருந்து இல்லை. வெளியில் மருந்து வாங்கிக் கொள்ள அவர்களிடம் பணமும் இல்லை. ஆகவே தேவையான மருந்துகளை அந்த ஆஸ்பத்திரியில் வைத்துக்கொள்வதற்குத் தக்க வழிவகை செய்யவேண்டும்.

மற்றொன்று, இன்றைய தினம் முதலாளிகள் சர்வசாதாரணமாக கண்டிராக்ட் லேபர் என்ற நிலைமையில் பெருவாரியான தொழிலாளர்களை வைத்துக்கொண்டு வேலை வாங்கிக்கொண்டுவிடுகிறார்கள். இந்தச் சட்டத்தை ஏமாற்றி, அரசாங்கத்தையும் ஏமாற்றிவிடுகிறார்கள். இப்படி முதலாளிகள் ஏமாற்றவும், மேஸ்திரிகளைப் போட்டுக்கொண்டு வேலை வாங்கிக்கொள்ளவும், இடமில்லாதபடி கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். லேபர் அண்டு காண்டிராக்ட் என்ற முறையில் ஒரு தொழிலாளி 240 நாட்கள் தொடர்ந்து வேலை செய்தான் என்றால் கண்டிப்பாக ரெகுலர் தொழிலாளர்களைப் போலவே அவன் சகல வசதிகளும் பெற அரசாங்கம் கடுமையான உத்தரவு போட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் சினிமாத் தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். சினிமாத் தொழிலாளர்களில் பெரிய தொழிலாளி சின்னத் தொழிலாளி என்று பாகுபடுத்த வேண்டாம். தோட்டங்களில் வேலை செய்யக்கூடிய சிறிய தொழிலாளிகளும் இருக்கிறார்கள், பெரிய தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அவரவர்களுடைய உழைப்புக்கேற்ற ஊதியம் பெறக்கூடிய ஒரு நிலைமை உருவாக்கினாலேயே மிகவும் வரவேற்கத்தக்கதாக இருக்கும். அவரவர்களுடைய உழைப்புக் கேற்ற ஊதியத்தைப் பெற மினிமம் வேஜஸ் ஆக்ட் என்பதைவிட .·.பேர் வேஜஸ் ஆக்ட் என்று வைத்து அமல் நடத்தினால் மிகவும் அனுகூலமாக இருக்கும். ஆகவே உழைப்புக்கேற்ற ஊதியம் பெறத்தக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள் கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தின் மீது நடைபெற்ற விவாதத்தில் கனம் அங்கத்தினர்கள் தங்களுடைய அனுபவத்தை, தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். தொழிலாளர்கள் விஷயத்தில் இவ்வளவு தூரம் எல்லோரும் அக்கறை எடுத்துக்கொண்டிருப்பதற்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட இரண்டொன்றைப் பற்றி நான் இப்போது பதிலளிக்காவிட்டாலும் அதைக் கவனிக்கவில்லை என்று எடுத்துக்கொள்ளக் கூடாது. அவ்விஷயங்கள் எல்லாவற்றிலும் அரசாங்கம் கவனம் செலுத்தும் என்று நான் சொல்லிவிடுகிறேன்.

கடைசியாக பேசிய கனம் அங்கத்தினர் ரொம்பத் தொழிலாளர்கள் தற்காலிகத் தொழிலாளர்களாகவே இருக்கிறார்கள் என்று குறிப்பிட்டார் கள். தற்காலிகத் தொழிலாளர்களாக இருந்தாலும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய வசதிகள், சலுகைகள் பொறுத்தமட்டில் அதிகமாக வேறும் வித்தியாசம் இல்லை. ஒரு தொழிலாளர் பர்மெனண்டு செய்யப்

[திரு. எம். பக்தவத்சலம்] [13th March 1963

விபத்துக்களைப் பற்றிக் கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். புதிது புதிதாகப் பாக்டரிகள் ஏற்படும்போது விபத்துக்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கலாம். பாக்டரிகளின் எண்ணிக்கை பழைய அளவிலேயே இருக்கு மானால் விபத்துக்களின் எண்ணிக்கை ஓரளவு குறைய முடியும். விபத்துக் கள் ஏற்படாதவாறு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுத்தான் வருகின்றன. விபத்துக்களை அடியோடு தவிர்க்க வேண்டுமென்ற முறையில்தான் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. பணி புரியும் தொழிலாளருக்குப் பந்தோபஸ்தும், பாதுகாப்பும் இருக்க வேண்டும் என்ற வகையில் மேலும் மேலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஒரு சீப் இன்ஸ்பெக்டர் ஆப் பாக்டரிஸ் மட்டுமல்லாது எத் தனையோ துணை அதிகாரிகள் எல்லாம் நியமிக்கப்பட்டு வருகிறார்கள். அனுபவம் உள்ளவர்கள் இந்தத் துறையிலே கவனம் செலுத்தி வரு கிறார்கள். விபத்துக்கள் நடைபெறவொட்டாமல் தடுக்கவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதுமட்டுமல்லாது, பல வெளியீடு களைக் கூட வெளியிட்டிருக்கிறோம். தொழிலாளர்களும் கவனித்து ஜாக் கிரதையாக இருக்க வேண்டும். இதைப் பற்றியெல்லாம் பிரசாரம் செய்யப் பட்டிருக்கிறது. எல்லா வகையிலும் போதிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்று கூறி, கனம் அங்கத்தினர்கள் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த் தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. முனு ஆதி :** ஸ்தல ஸ்தாபனத்தில் பணியாற்றுகின்ற நான் காம் தர சிப்பந்திகளுக்குள்ளேயே சம்பள விகிதம் ஒருமுகப்படுத்தப்பட வில்லை. அதைப்பற்றி அமைச்சர் அவர்களுடைய கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :**—அதைப்பற்றி ஸ்தல ஸ்தாபன இலாகாதான் முதலில் கவனம் செலுத்தவேண்டும். முதலிலேயே தொழில் துறையில் எடுத்துக் கொள்ள முடியாது.

MR. SPEAKER : The question is—

"That the allotment of Rs. 35,2500 under Demand No. XXIV—Labour including Factories be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 35,25,300 under Demand No. XXIV—Labour including Factories."

The Demand was put and carried and the Grant was made.

## (2) DEMAND NO. II—MOTOR VEHICLES ACTS—ADMINISTRATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 13,35,600 under Demand No. II—Motor Vehicles Acts—Administration".



13th March 1963]

SRI T. P. ALAGAMUTHU : Sir, I move—

"That the allotment of Rs. 13,35,600 under Demand No. II—Motor Vehicles Act—Administration be reduced by Rs. 100."

MR. SPEAKER : The Demand and the Cut Motion are before the House for discussion.

***திரு. து. ப. அழகமுத்து :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, மோட்டார் வண்டிகள் சட்டம், நிர்வாகம் ஆகியவற்றுக்கான மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய வெட்டுப் பிரேரணையை யொட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த நிர்வாகமானது வருகிற ஆண் டிலே எந்த முறையிலே நடைபெறும் என்பதைப் பற்றிக் கவர்னர் அவர் கள் தம்முடைய உரையிலே சூசகமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். "புதிய பஸ் மார்க்கங்கள் அளிப்பது, ஏற்கெனவே உள்ள மார்க்கங்களில் அதிக பஸ்களை விடுவது, அதிகப்படியான எண்ணெய்ச் செலவு ஏற்படுத்தக் கூடிய விஸ்தரிப்புகள், மாற்றுப் பாதைகள் அளிப்பது ஆகிய விஷயங்களில் அரசாங்கம் தனது கொள்கையைப் புனராலோசனை செய்து வருகிறது" என்று கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதுபற்றி கனம் அமைச்சர் அவர்கள் ஒன்றும் குறிப்பிடவில்லை. 11-A
இருந்தாலும் இந்த மான்யத்திற்காக கோரப்படும் தொகை ரூ. 13,35,600 ஆகும். இது சென்ற ஆண்டைவிட ரூ. 9,800 அதிகமாக இருக்கிறது. கவர்னர் அவர்கள் உரையை ஒட்டிப் பார்க்கும்போது இந்த இனத்திற்கான செலவு குறையும் என்ற கருத்து தென்பட்டது. ஆனால் கூடியிருக்கிறது. இதில் மாவட்டங்களில் வரி வசூலிக்கிற சிப்பந்திகள் இனத்தில் சென்ற ஆண்டு செலவுத் தொகையில் இந்த ஆண்டு 19,000 ரூபாயைக் குறைத்து விட்டு மாவட்டங்களில் உள்ள ஆர். டீ. ஏ. சிப்பந்திகளின் செலவில் ரூபாய் 25,000 கூட்டியிருக்கிறார்கள். இப்படி ஒன்றில் *குறைத்து ஒன்றில் கூட்டக் காரணம் என்னவென்று விளங்கவில்லை. பொதுவாக இந்த இனத்தில் செலவு அதிகமாகியிருக்கிறது. அதை உறுதிப்படுத்துவதற்குப் பல மாவட்டங்களில் ஜாயின்ட் ஆர். டீ. ஓக்கள், ஏ. சூப்பரின்டென்ட் டென்ட், பி. சூப்பரின்டென்டென்ட், ப்ரேக் இன்ஸ்பெக்டர்கள், கிளார்க்குகள் இவர்கள் எல்லாம் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இப்படி இந்த நிர்வாகத் துறை விஸ்தரிக்கப்பட்டிருந்தாலும் நிர்வாகத்தில் ஏற்படும் காலதாமதம் அதிகமாகிக் கொண்டுதான் இருக்கின்றன. ட்ரைவர்கள், கண்டக்டர்கள், லைசென்ஸ்கள் ரென்யூவலுக்கு அனுப்பப்பட்டால் அவை உடனடியாக வந்து சேருவதில்லை. எங்கெங்கோ காலதாமதமாகிய பின் னர்தான் அவை வருகின்றன. அதேபோல் வேரியேஷன் ப்ரப்போஸல்கள் அனுப்பப்பட்டு அவை முடிவடைய நீண்ட காலதாமதமாகிறது. இப்படி இந்த நிர்வாகத் துறை மிக மிக மந்தமாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இத் துறையால் புது பஸ் ரூட்கள் கொடுக்கப்படுகின்றன. புது பஸ் ரூட்கள் கொடுக்கும் அதிகாரம் ஆர். டி. ஏ. யிடம் இருக்கிறது. ஆர். டி. ஏ. யால் கொடுக்கப்படுகிற பெர்மிட்கள் ட்ரிப்யூனலில் ஸெட் எஸைடாகி விடுகிறது. கிட்டத்தட்ட 70 பெர்சன்ட் ஸெட் எஸைட் ஆகி விடுகிறது. அப்படி ஸெட் எஸைட் ஆகக் காரணம் என்னவென்று எனக்கு விளங்கவில்லை. ஆர். டி. ஏ. கவர்ன்மெண்ட் ஜீ. ஓ.-வை வைத்துக் கொண்டு அதை அனுசரித்துத்தான் பெர்மிட் வழங்குகிறார். அப்படி வழங்கும் பெர்மிட்கள் ஸெட் எஸைட் ஆகக் காரணம் என்னவென்று பார்த்தால் இரண்டு வகையாகத்தான் இருக்கமுடியும். அதிகாரி கள் இந்த ஜீ. ஓ.-வை சரியான முறையில் கையாளவில்லை என்பது ஒன்று. அல்லது ஜீ. ஓ.-வை அனுசரிக்க முடியாமல் பின் பக்கத்தில் வேறு ஏதாவது ப்ரஷர் கொடுப்பது இரண்டு. ஆகிய இந்த இரண்டு காரணங்கள்தான் இருக்க முடியும். இந்த நிலை இன்று ஏற்படுவதற்கு காரணம் ஆளும் கட்சிக்குச் சாதகமாக அதிகாரிகள் பயன்படுத்தப்படுகிறார் களோ என்ற ஐயம் ஏற்படுகிறது. ஆகவே இந் நிலையைப் போக்க ரீஜினல் டிரான்ஸ்போர்ட் அத்தாரிடியிடம் இருக்கும் பர்மிட் கொடுக்கும் அதிகா ரத்தை மாற்றி ஜுடிஷியல் அதாரிட்டியிடம் ஒப்படைப்பதுதான் நல்லது

என்ற அபிப்பிராயத்தை நான் இங்கு வலியுறுத்துகிறேன். ஆர்.டீ. ஏ.க்கள் பெரும்பாலும் பஸ்காரர்களிடத்தில் குறை காண்பதில்லை. லாரி சொந்தக் காரர்களைத்தான் இவர்கள் அதிகமாகக் கவனிக்கிறார்கள். காரணம் பஸ் முதலாளிகளிடம் இவர்கள் பயப்படுகிறார்கள். ஆகவேதான் இவர்களுக்கு பஸ் முதலாளிகள் மேல் அதிகமாக குற்றம் கண்டு பிடிக்க முடிவதில்லை. அமைச்சர் அவர்கள் தப்பாக கருதிக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். பஸ் முதலாளிகள் பெரும்பாலும் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்கிற காரணத்தினாலும் அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் வருகிற போது அந்த பஸ் முதலாளிகளின் கார்களில் பிரயாணம் செய்வதாலும் அவர்களும் மந்திரிகள் கூடவே இருக்கிற காரணத்தினாலும் பஸ் முத லாளிகளை அணுகுவதற்குப் போலீஸ்காரர்களும் ஆர். டீ. ஓ. அதிகாரி களும் அஞ்சுகிறார்கள். ஆகவே பஸ் முதலாளிகளை இந்தத் துறையினர் அதிகமாகக் கவனிப்பதற்கு முடியாத நிலை ஏற்படுகிறது. இவைகள் தவிர்க்கப்படுமென்று நான் நம்புகிறேன். டைமிங் கொடுப்பதில் கூட சிலருக்குச் சலுகைகள் காட்டப்படுகின்றன. மற்றவர்களுக்கு அந்தச் சலு கைக் கிடைப்பதில்லை. சென்ற தடவை நான் குறிப்பிட்டதுபோல் கவர்ன் மெண்டால் ப்ரப்போஸல் செய்யப்பட்டு அப்ளிகேஷன் வாங்கப்பட்ட ரூட்கள் இன்னும் கவர்ன்மெண்டால் கொடுக்கப்பட்ட ஸ்டேயிலேயே இருக்கின்றன. பெரும் ஸ்தாபனமாகிய டி.வி.எஸ். இந்த ஸ்டேயை கேட்டு அது சர்க்காரால் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. உதாரணமாக திருச்சி-அகூர், திருச்சி-இடமலைப்பட்டிபுதூர், திருச்சி-பாக்குடி ரூட்கள் இரண்டு ஆண்டு களுக்கு மேல் இன்னும் ஸ்டேயிலேயே இருந்து கொண்டிருக்கின்றன. இதற்குக் கராணம் என்னவென்று சென்ற தடவை கேட்டேன். அதற்குப் பரிகாரம் இதுவரை செய்யப்படவில்லை. அடுத்தாற்போல் இந்தச் சர்க்கார் விஸ்தரிக்க வேண்டிய இடங்களில் பஸ் ரூட்களை விஸ்தரிக்கவில்லை என்பதை சென்ற கூட்டத்தில் நான் குறிப்பிட்டேன். திருச்சி-மதுரை, திருச்சி-தஞ்சாவூர், திருச்சி-கரூர், திருச்சி-அரியலூர் போன்ற வழிகளில் ஜன நெருக்கம் அதிகமாக இருக்கிறது. பஸ்களின் தேவையும் அதிகமாக இருக்கிறது. ஆனால் அவ்விடங்களில் பஸ் விட எந்தவிதமான முயற்சியும் செய்யவில்லை. இவைகளைப் பார்க்கும் போது, ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் அந்த ரூட்களில் பஸ் தொழிலை நடத்துவதால் அதிக பஸ் ரூட் வசதிகள் நமக்குக் கிடைக்கவில்லை என்று பொது மக்கள் பேசிக் கொள்கிறார்கள். அப்படிப் பட்ட ஒரு சூழ்நிலைக்கு இடம் கொடுக்க வேண்டாமென்று கேட்டுக் கொள் கிறேன். அடுத்தாற்போல் லாரி சொந்தக்காரர்கள் நம் முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லா ஜில்லாக்களுக்கும் போகக் கூடிய பெர்மிட் டெம்பரரியாகக் கொடுக்கப்படுகிறது. அதனால் பல கஷ்டங்கள் ஏற்படுவதால் அதை பக்கா பெர்மிட்டாகக் கொடுக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத் திருக்கிறார்கள். அதோடு வரி கட்டுவதற்குள்ள காலத்தை 7-ம் தேதியில் இருந்து 15-ம் தேதி வரை நீட்டிக் கொடுக்க வேண்டுமென்றும் கேட்டிருக் கிறார்கள். அவர்கள் குறையைத் தீர்த்து வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. சி. கோதண்டராம பாகவதர்** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் போக்கு வரத்து மான்யக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். தமிழ் நாட்டில் சுமார் 4,500 பஸ்கள் 11,000 லாரிகள், 24,000 டாக்ஸிகள், 52,000 கார்கள் இன்று ஓடுகின்றன. அவற்றின் மூலம் பல கோடி ரூபாய் வருமானம் அரசாங்கத்திற்குக் கிடைக்கிறது. முக்கியமாக இந்த வரிப் பணத்தைக் கொண்டு நல்ல ரோடுகள் போட வேண்டும் அவைகளைச் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்பதற்காகத்தான் இப் பணம் வசூலிக்கப்படுகிறது. வட ஆற்காடு ஜில்லா வில் பல ரோடுகளைச் சீர் செய்ய வேண்டும். ஆரணி-தேவிகாபுரம் ரோடு மோசமான நிலையில் இருக்கிறது. ஒரு ஆண்டில் நான்கு மாதங்கள் வெள்ளத்தால் பஸ் போவது கிடையாது. அதைத் "தார் ரோடாக" மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆரணி-படவேடு ரோடு மோசமாக இருக்கிறது. அதற்கும் தார் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு போக்குவரத்து





அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். சில ஜில்லாக்களில் துணைப் போக்கு வரத்து அதிகாரிகள் இருக்கிறார்கள். திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் துணைப் போக்குவரத்து அதிகாரிகள் நியமிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையில் டெப்டி கமிஷனர் ஆப் போலீஸ் இருக்கிறார். அதற்குப் பதிலாக ஒரு போக்குவரத்து அதிகாரியை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போக்குவரத்து தொழி லுக்கு பெர்மிட் வழங்கும்போது ஜீ.ஓ. 2265 என்ற ஜீ.ஓ. இப்போது அனுஷ்டானத்தில் இருக்கிறது. அதில் கம்பெனிகளுக்கு ஒரு மார்க் அளிக் கிறார்கள். அதை ரத்து செய்ய வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன். உயர்நீதி மன்றத் தீர்ப்பில், 977, 978/59-ல் உள்ள தீர்ப்பில் லிமிடெட் கம்பனிக்கு மார்க் கொடுக்க வேண்டிய அவசியமில்லை ன்று தீர்ப்பளித் திருக்கிறார்கள். மீடியம் ரூட்டை 16 மைலிலிருந்து 40 மைலாகவும் 40 மைலுக்கு மேல் இருக்கும் ரூட்களை ப்ளீட் ஓனர்களுக்கும் கொடுக்க வேண்டும். மோட்டார் வெகிக்கிள்ஸ் ஆக்ட் 47 (1) எஃப்-ல் ரூட் கொடுப் பதில் கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு ப்ரிபரன்ஸ் கொடுக்கலாம் என்றிருக் கிறது. ஆகவே, லிமிடெட் கம்பனிக்கு ஒரு மார்க் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதியில் பஸ் லாரி, டாக்ஸிகளுக்கு சார்ஜ் எல்லாம் உயர்த்தப்பட்டிருக்கிறது. 1963-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 1-ம் தேதி முதல் டீஸல் ஆயில், ஸ்பேர் பார்ட்ஸ் டயர்ஸ், புது பஸ்கள் இவற்றின் விலைகள் ஏறியிருக்கின்றன. ஆகவே கட்டணத்தை தயவுசெய்து கூட்டுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

ட்ரான்ஸ்ஃபர் ஆஃப் பர்மிட்ஸ் விஷயமாக போக்குவரத்து அதிகாரி கள் தாராளமாகச் சிபாரிசு செய்து அனுப்புகிறார்கள். அவைகளை ட்ரான்ஸ் போர்ட் கமிஷனர் அங்கீகரிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். புதிய ரூட்கள் கொடுப்பதை இரண்டு ஆண்டுகாலம் நிறுத்தி வைத்து கொடுக்காமல் இருக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அப் படி புதிய ரூட்கள் கொடுப்பது என்றால் அந்தப் பாதையில் 50 சத வீதமாவது பஸ் இல்லாமல் இருக்கும் இடமாக இருந்தால் கொடுக்க லாம். அதோடு புதிய ரூட்களைக் கொடுப்பதற்கு முன்பு தற்சமயம் ஓடக் கூடிய பஸ்கள் 200 மைல்கள் ஓடுகின்றனவா என்று பார்க்க வேண்டும். இல்லையென்றால் அவர்களுக்கு வேரியேஷன்ஸ் அல்லது அடிஷனல் ரூட் கொடுத்து பிறகு புதிய ரூட்கள் கொடுக்கவேண்டும்.

போக்குவரத்து அதிகாரிகள் க்ளார்க்குகளையெல்லாம் ரெகுலரைஸ் செய்து எல்லோரையும் கன்ஃபர்ம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போக்குவரத்து அதிகாரிகள், மோட்டார் இன்ஸ்பெக்டர்கள் ஆகியவர்களுக்கு கார் வாங்க சர்க்கார் கடன் வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்—வணக்கம்.

* **திரு. ஆ. தங்கவேலு** : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, எதிர் கட்சி அங்கத்தினர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகள்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

பொதுவாக, போக்குவரத்து இனத்தில், இப்போது லாரிப் போக்கு வரத்தில் அதிகமான விபத்துக்கள் ஏற்படுவது அரசாங்கத்திற்குத் தெரி யும். லாரிப் போக்குவரத்து, கார் போக்குவரத்து முதலியன இரவு நேரங்களிலே நடப்பதால் இரவு நேரங்களிலே அதிகமான விபத்துக்கள் ஏற்பட்டு அதனால் பல உயிர்ச்சேதங்கள் ஏற்படுவதும் சர்க்காருக்குத் தெரியும். கனம் அமைச்சர் அவர்கள் இரவு நேரங்களில் சுற்றுப்பிரயா ணம் செய்யும் நேரத்தில்கூடக் கவனித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். இந்த விபத்துக்களுக்கு முக்கிய காரணம் லாரிகளை ஓட்டுகிறவர்கள் 4-5 நாட்கள் இரவு பகலாக ஓட்டுகிற காரணத்தினால், லாரியும் எதிரே வரக் கூடிய காரோ அல்லது லாரியோ ஒன்றையொன்று கடக்கும்போது விபத்து ஏற்படுகிறது. குறிப்பாக இந்த விபத்து ஏற்படுவது இரவு 12 மணியி லிருந்து விடியற்காலம் 5-மணிக்குள்ளாகத்தான். அந்த நேரம் எல்லோ ரும் கண் மூடக் கூடிய நேரம். தொடர்ந்து 4-5 நாட்கள் இரவு பகலாக [illegible] காரணத்தினால், [illegible] நிலை ஏற்பட்டு, இப்படி [illegible]

படுவதற்கு முன்னால் ப்ரொபேஷன் இருக்கவேண்டும். அதற்குப் பிறகு ஸ்டாண்டிங் ஆர்டர் சட்டப்படி அவர் நிரந்தரமாக்கப்படுவார். இந்த ஸ்டாண்டிங் ஆர்டர் சட்டத்தை ஒவ்வொரு மில்லுக்காக விஸ்தரித்துக்கொண்டு வருகிறோம். இப்போது நானூறு, ஐநூறு ஆலைகளுக்கு இந்தச் சட்டத்தை விஸ்தரிக்க வேண்டியிருக்கிறது. இன்னும் பாக்டரி சட்டம் 41-வது செக்ஷனைப்பற்றி குறிப்பிட்டார்கள். வேலையில் இருந்து ஒருவர் நீக்கப்பட்டால் உடனே மேலே அப்பீல் செய்யலாம். அப்பீலில் அனுகூலமாகவில்லையென்றாலும் மேலே அப்பீல் செய்ய வழியிருக்கிறது. அதற்கு முன்னே இருந்து சம்பள பாக்கிகள் கொடுக்க உத்தரவு போட இடம் இல்லை என்று சொன்னார்கள்.

ஹோட்டல் ஆக்ட் இருக்கிறது. வேஜஸ் ஆப் வொர்க்கர்ஸ் போட இடம் இருக்கிறது. அதேமாதிரி இந்தச் சட்டத்தை மாற்றி அமைத்துவிடலாம். காம்பென்சேஷன் சம்பந்தமாகவும் இந்த அரசாங்கம் கவனித்து வருகிறது.

கடைசியாகப் பேசிய கனம் அங்கத்தினர் சொன்ன ஒரு விஷயம் எனக்குப் புரியவில்லை. குறைந்த பட்ச ஊதியமே வேண்டாம், ∴பேர் வேஜஸ் நிர்ணயம் செய்துவிட்டால் போதும் என்றால் அவரே அந்த விஷயத்தைப் புரிந்துகொள்ளாது சொல்கிறார் என்றே நினைக்கிறேன். அதிகப் பட்ச ஊதிய சட்டமே வைத்துக்கொண்டுவிடலாம். எதற்காகக் குறைந்தபட்ச ஊதிய சட்டம்? குறைந்த பட்ச கூலி விகிதம் என்றால்....

**திரு. முனு ஆதி** :—தலைவர் அவர்களே, குறைந்தபட்ச கூலி விகிதம் என்பதைவிட ∴பேர் வேஜஸ் என்று நிர்ணயித்தால் நலம் என்று தான் தெரிவித்தேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அதைத்தான் சொல்ல வருகிறேன். குறைந்த பட்சம் கூலிவேறு. ∴பேர் வேஜஸ் வேறு. குறிப்பாக ஒரு தொழில் நஷ்டத்தில் நடக்கலாம். அதற்காகத் தொழிலாளர்களுடைய கூலியை முதலாளி குறைக்கக்கூடாது. நஷ்டத்தில் தொழில் நடந்தாலும் அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் குறைந்தபட்சம் இவ்வளவு கூலி கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்பது இந்தச் சட்டம். இதை எடுத்துவிட்டு ∴பேர் வேஜஸ் என்று கொண்டுவந்துவிட்டால் அதற்கு எப்படி வேண்டுமானாலும் வியாக்கியானம் செய்யலாம். "நியாயமான கூலிதானே கொடுக்கவேண்டும். இப்போது தொழிலில் லாபமே இல்லை. ஆகவே எங்களுக்கு இவ்வளவுதான் நியாயமாகக் கூலி கொடுக்க முடியும்" என்று முதலாளிகள் சொல்லலாம். இந்தக் கூலி குறைந்தபட்சத்தைவிடக் குறைவாக இருக்கலாம். ஆகவே ∴பேர் வேஜஸ் என்றுமட்டும் நிர்ணயிப்பது சரியல்ல. குறைந்தப் பட்சக் கூலி என்று நாம் விதித்தாலும் அதிகச் சம்பளம் கொடுக்கக்கூடிய நிலைமையும் இருக்கிறது. இன்னும் தொழிலில் லாபம் வந்தால் உடனே அந்த லாபத்திற்கு ஏற்றபடி போனஸ் கொடுக்கிறார்கள். அலவன்ஸ், பஞ்சப்படி எல்லாம் கொடுக்கிறார்கள். ஆகவே குறைந்த பட்சம் இவ்வளவு கொடுக்க வேண்டும் என்று கூலி நிர்ணயம் செய்வதே சரியானது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அடிப்படையே சரியான அடிப்படை என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தொழில் கமிட்டி போடுகிறோம். அதிலே தொழிலாளர் பிரதிநிதிகளும், தொழிலதிபர்கள் பிரதிநிதிகளும் இருக்கிறார்கள். ஒவ்வொரு தொழிலையும் தனித் தனியாக எடுத்துக்கொண்டு குறைந்த பட்ச ஊதியம் எவ்வளவு இருக்கவேண்டுமென்ற முறையில் பரிசீலனை செய்யப்பட்டு முடிவு எடுக்கப்படுகிறது. இவ்வாறு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற ஊதியத்தைக் கொடுப்பதில் தகராறுகள் ஏற்பட்டால் அதைத் தகராறு இல்லாத வகையில் உடன்பாடு காண்பதற்கு லேபர் ஆபீசர்கள் முயற்சி செய்கிறார்கள். லேபர் ஆபீசர்கள் ஜட்ஜுகள் அல்ல. அவர்கள் செய்வது "கன்சிலியேஷன்" தான். மத்திஸ்தம் பண்ணிப் பார்ப்போம், ஒப்பந்தம் பண்ணி உடன்பாடு ஏற்படச் செய்வோம் என்ற முறையில் முயற்சி செய்வது லேபர் ஆபீசர்கள் வேலை. அவர்கள் தீர்ப்புக் கொடுப்பதில்லை. உடன்பாடு வெற்றிபெறவில்லையென்று சொன்னால், அவர்கள் தங்களுடைய சிபாரிசை





மேலதிகாரிகளுக்கு அனுப்புகிறார்கள். அதற்குமேல் கோர்ட்டுக்கு விடுவது, அட்ஜூடிகேஷனுக்கு விடுவது எல்லாம் கவனிக்கப்படுகிறது. இதிலே தீர்வு ஏற்பட்டிருக்கின்ற புள்ளி விவரங்களைச் சுட்டிக்காட்டி, இத்தனை கேஸ்கள் தீர்வு காணாமலே விடப்பட்டிருக்கின்றனவே என்று அங்கத்தினர்கள் எடுத்துக்கூறினார்கள். சமரசமாகப் போவது நல்லது என்ற காரணத்தினால், இருவர் நலனுக்கும் உகந்தது என்ற காரணத்தினால் அந்த வகையிலேயே அதிகக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

பீடி சட்டத்தையும், ஷாப் சட்டத்தையும் பற்றிச் சொன்னார்கள். அவை கூடியவரையில் நல்ல முறையிலே அமல் நடத்தப்பட்டு வருகின்றன. அமல் நடத்தப்படுவதிலுள்ள குறைகள் அனுபவத்தின் மூலம் தெரிந்தால், அவற்றை ஏற்று அப்போதைக்கப்போது சட்டத்தை மாற்றிக்கொண்டு வருகிறோம்.

மோட்டார் தொழிலாளர் சட்டத்தை அமலாக்குவது பற்றிக் குறிப்பிட்டார்கள். அது பரிசீலனை செய்யப்பட்டு, விதிகள் அமைப்பதில் தற்போது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. நல்ல முறையில் விதிகள் அமைக்கப்பட வேண்டும். விதிகள் எல்லாம் அமைக்கப்பட்ட பிறகு அதை அமல் செய்வது பற்றி எடுத்துக்கொள்ளலாம்.

எம்ப்ளாய்மெண்டிற்கு ரிஜிஸ்டர் செய்து கொள்கிறவர்களில் ஒரு சிலருக்குத்தான் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கனம் அங்கத்தினர்கள் கூறினார்கள். ஒவ்வொருவரும் எந்த வேலைக்குத் தகுதியோ அந்த வேலை கிடைக்கும்போது அவர்கள் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். ரிஜிஸ்டர் செய்து விட்டதன் காரணமாகவே, வேலைக்கு உத்தரவாதம் செய்வதில்லை. வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுக்க வழிவகைகளை வகுப்பதுதான் எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சின் நோக்கம். அந்த முறையில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. சேங்காலியப்பன் அவர்கள், டி.பி.-யால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கூட 56 நாட்கள்தான் லீவ் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். எம்ப்ளாயீஸ் ஸ்டேட் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின்படி 56 நாட்கள் லீவ் கொடுக்கிறார்கள். அதற்கு மேல் லீவ் கொடுக்க வேண்டுமானால் "எக்ஸ்டெண்டட் சிக்னஸ் பெனிபிட்" என்ற பிரிவின்படி, 56 நாட்களுக்கு மேல், 309 நாட்கள் வரை மேலும் அதிகமாக லீவ் கொடுக்க வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் சட்டத்திலே இடம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சினிமாத் தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றிப் பரிசீலனை செய்ய ஸ்பெஷல் ஆபீசர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர், அந்தத் தொழிலாளர்களுடைய நிலைமையைப் பற்றி ஆராய்ந்து முடிவு சொன்னவுடன் அதற்குரிய சட்டம் தயாரிக்கப்படும். சினிமாத் தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதை அரசாங்கமும் உணருகிறது. அந்த வகையில் கவனம் செலுத்தி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் செல்வராஜ் அவர்கள் உப்பளங்களில் வேலைசெய்து வருகிற தொழிலாளர்களைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசாங்கத்தினுடைய யோசனையை மத்திய அரசாங்கத்துக்குத் தெரிவித்திருக்கிறோம். மத்திய அரசாங்க அதிகாரிகளும், சால்ட் கமிஷனரும் இதிலே கவனம் செலுத்தி வருகிறார்கள். இதிலே உள்ள ஒரு கஷ்டம் என்னவென்றால், இந்தத் தொழிலாளிகள் ஒரே இடத்தில் வேலை செய்வதில்லை. பல இடங்களுக்குச் செல்கிறார்கள். இதையெல்லாம் நன்றாக ஆராய்ந்து ஏதாவது சட்டம் செய்ய முடியுமா என்று பார்ப்போம்.

நான் முன்பே குறிப்பிட்டது போன்று இந்த இலாகா சம்பந்தப்பட்ட அதிகாரிகள், தொழிலாளர்கள் நலனை முதல் கவனமாக வைத்து, பல துறைகளில் ஈடுபட்டு, சட்டங்கள் மூலமாகவும், மற்ற வகையிலும் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். பல சட்டங்களை தொழிலாளர் நலனுக்காக நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம்.

கள் பெருகிக்கொண்டிருக்கின்றன. அந்த முறையிலே, ஏற்கெனவே இந்த லாரிகளை ஓட்டுகிறவர்கள் இரவில் 12 மணியிலிருந்து 5 மணி வரையில் லாரிகளை நிறுத்தி விட வேண்டுமென்று ஒரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டு, சில நாட்கள் அமலில் இருந்து, மீண்டும் அந்த உத்திரவு நிவர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. அதனால் விபத்துக்கள் மீண்டும் ஏராளமாக ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏன் அந்த உத்திரவை நீக்கி விட்டார்கள் என்று கேட்டால் அந்த நேரத்திலே தான் போக்குவரத்து அதிகமாகத் தேவை படுகிறது, கொத்தவால்சாவடி போன்ற இடங்களுக்கு சாமான்களைக்கொண்டு சேர்ப்பதற்கு இரவு நேரங்களில் ஓட்டிச் சென்றால்தான் முடியும் என்ற நிலையில் தொடர்ந்து இரவு நேரங்களில் லாரிகளை ஓட்டுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. ஆனால் அதே நேரத்தில் ஒரு தொழிலாளி ஒரு லாரியை ஒரு பகல், ஒரு இரவு, ஆக ஒருநாள்தான் ஓட்டலாம், அதற்கு மேல் கூடாது என்ற விதியை ஏற்படுத்தி அதைக் கண்டிப்பாக அமல் நடத்தவேண்டும்.

(திரு. ந. சண்முகசுந்தரம் தலைமை)

லாரி ஓட்டக் கூடிய ட்ரைவருக்கு ட்ரிப் ஷீட் இருக்கிறது. அதை செக் செய்ய வேண்டும். ஒரு பகல், ஒரு இரவுக்கு மேல் ஓட்டக் கூடாது என்ற விதியை அமல் படுத்தவேண்டும். அதை செக் செய்யும் முறையில் ஏற்படுத்திக் கொடுத்தால், ஒரு நாளைக்கு மேல் ஓட்டக் கூடிய நிலைமை வராது. அதனால் விபத்துக்கள் தவிர்க்கப்படும் நிலைமை ஏற்படலாம். அல்லது, டி.வி.எஸ். கம்பெனியில் வைத்திருப்பது மாதிரி 100 மைலுக்கு ஒரு ட்ரைவர் என்று வைத்து விடலாம். அப்படி வைத்தால் கட்டுப்படியாகாது, அதனால் தொல்லை அதிகமாக இருக்கும் என்று கருதினால் ஒரு நாளைக்கு மேல் ஒரு இரவு ஒரு பகலுக்கு மேல் ஓட்டக் கூடாது என்ற நிலையை அமல் நடத்தவேண்டுமென்று நான் வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இரவு நேரத்தில் விபத்துக்கள் அதிகமாக ஏற்படக் காரணம் விளக்கு வெளிச்சம். லாரிகளிலிருந்தும், கார்களிலிருந்தும் வருகிற வெளிச்சம் அதிகமாக இருப்பதை எல்லோரும் அறிவார்கள். இதற்கு முன்னால் அந்த விளக்குகளில் பல்ப் ஸிஸ்டம் இருந்தது. அதாவது ஹெட் லைட்டு களில் பல்ப் ஸிஸ்டம் வைத்திருந்தார்கள், பெட்ரோல் வண்டி களாக இருந்த காலத்தில். அதனால் எதிரே வரக்கூடியவர்களுக்குத் தொந்தரவு இல்லாத நிலைமை இருந்தது. இப்போது மெர்க்குரி விளக்கு இருக்கிறது. முன்பு 6 வோல்ட் பாட்டரி இருந்தது. இப்போது 12 வோல்ட் பாட்டரி மெர்குரி விளக்கு போட்டிருக்கிற காரணத்தினால் கண்களைக் கூசுகிற அளவுக்கு வெளிச்சத்தை உண்டாக்கி, ஒன்றையொன்று கடக்கும் போது லைட் டிம் செய்யாததால் கஷ்டம் ஏற்பட்டு விபத்துக்கள் ஏற்படக் காரணமாக இருக்கிறது. ஆகையால் நான் இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்லிக் கொள்வது, மெர்க்குரி விளக்குகளை தயவு செய்து நீக்கி விடவேண்டு மென்பதுதான். மெர்க்குரி விளக்கு தேவையில்லை ; மெர்க்குரி விளக்கு அதிகமான வெளிச்சத்தை உண்டாக்கி அதன் மூலம் விபத்துக்கள் ஏற்படு கின்றன. ஆகையால் ஆர்.டீ.ஓ.-க்களுக்கும், மோட்டார் இன்ஸ்பெக்டர் களுக்கும் உத்திரவு போட்டு, மெர்க்குரி விளக்கு பொருத்தப்பட்ட கார், பஸ், லாரிகளுக்கு ப்ரேக் சர்டிபிகேட் கொடுக்கக் கூடாது என்று ஏற்பாடு செய்ய வேண்டும். முன்பு இருந்த மாதிரி பல்ப் ஸிஸ்டம் இருந்தால் இந்த விபத்துக்கள் குறையும் என்பது தான் எனது முக்கியமான நோக்கம் ஹார்ன் வைப்பதிலே கூட ஸிட்டியில் பாஷ் ஹார்ன் இருக்கக் கூடாது என்று சட்டம் இருக்கிறது, அதனால் தொல்லை இருக்கிறது என்று. அந்த முறையிலே மெர்க்குரி விளக்குகளை நீக்கிவிட்டு, பல்ப் ஸிஸ்டம் இருக்க வேண்டும் என்ற முறையில் இருந்தால் விபத்துக்களைத் தடுக்க அது வழி யாக இருக்கும் என்று நான் வலியுறுத்திக் கூறிக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

இந்த லாரி போக்குவரத்தில், இப்போது மதுரையிலிருந்து கிளம்பி சென்னைக்கு வருவதானாலும், சென்னையிலிருந்து திருச்சி போனாலும், புறப்படுகிற இடத்தில் கையெழுத்துப் போட்டு, முடிகிற இடத்தில் போடுகிற நிலைமை இருக்கிறது. வழியில் என்னென்ன விபத்துக்கள் ஏற்பட்டிருக் கின்றன, என்னென்ன தொல்லைகள் நடந்திருக்கின்றன என்று அறியக் கூடிய நிலைமை இல்லாமல் போய் விடுகிறது. வழியிலே ஒரு ஆள் மீது ஏற்றி விட்டுப் போய் விடுகிறார் என்று வைத்துக்கொண்டால் அது கூடத் தெரிய முடியாத நிலைமை இருக்கிறது. அடிக்கடி கையெழுத்து போடாவிட்டாலும் 50 மைல்களுக்கு ஒரு இடத்திலாவது கையெழுத்து போட்டால் இந்த நேரத்தில் இந்த லாரி இன்ன இடத்திலே இருந்தது என்று தெரிந்து கொள்ள வசதியாக இருக்கும். அதனால் அவர்கள் 50 மைல் அளவுக்கு ஒரு இடத்தில் கையெழுத்து போடுகிற நிலைமையை உண்டாக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது வேரியேஷன் கொடுக்கிற முறையிலே, அடிஷனல் ட்ரிப் கொடுக்கும் முறையிலே ஏற்கெனவே இருக்கிற பஸ் உரிமையாளர்களை ஊக்குவிக்கச் செய்கிறார்களே தவிர, வேரியேஷன் கொடுப்பதைக் குறைத்து அந்தஅளவு புது பஸ் ரூட்டுகளாக ஆரம்பித்தால் சர்க்காருக்கும் அதிக வரு மானம் வரும், இன்னும் அதிகமான தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்புக் கிடைக்கும். 200 மைல் எக்ஸ்பிரஸ் ரூட் சர்வீஸ் இருக்கிறது என்றால் 300-ஆக நீட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிற காரணத்தினால் தனிப்பட்ட முதலாளி பயன் அடைய முடிகிறது என்று சொல்லிக்கொண்டு வேரியேஷன் கொடுப்பதை குறைத்து அதிகமாக தனி பஸ் ரூட் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. கி. இரா. சம்பந்தம் :** தலைவர் அவர்களே, இந்த மோட்டார் வெகிக்கிள் மானியத்தில் நான் ஒரு சில வார்த்தைகளைப் பேச விரும்பு கிறேன். இப்போது புதிய ரூட்டுகள் போடுகிறபோது அநேகமாக எல்லாம் புதிதாகப் போடுகிற கம்பெனிக்காரர்களுக்குக் கிடைப்பதில்லை. அதற்கு முக்கிய காரணம் என்ன என்று கேட்டால், ரூட் ஆரம்பிக்கும்போது அதற்காக எல்லோரும் மனு போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தச் சம யத்தில் உடனே ஏற்கெனவே உள்ளவர் எக்ஸ்டென்ஷன் கேட்டு விடுகிறார். அவர்களுக்கு உடனடியாக எக்ஸ்டென்ஷன் கிடைத்து விடுகிறது. ஆகை யால் புது கம்பெனிகளுக்கு இடம் கிடைக்காது. மொனாப்பலி ஸிஸ்டம் மாதிரி இருப்பதாகத் தெரிகிறது. அதைத் தவிர்த்து ஏற்கெனவே கள்ளுக் கடைகளை ஏலம் போட்ட மாதிரி, இப்போது ரூட்டையெல்லாம் ஏலம் போட்டு விட்டால் நமக்கும் பணம் வரும், அப்பீல் என்று சுப்ரீம் கோர்ட்டுக் கெல்லாம் போக முடியாது. இப்போது இந்த மாதிரி நிலையில் புது ரூட்டுக்காரருக்குக் கொடுத்தாலும் முதலில் ரூட்டை வைத்திருந்தவர் ஸ்டே வாங்கி விடுகிறார். அதனால் என்ன ஆகிறது என்றால் அந்தப் பக்கத்தில் இருக்கக் கூடிய ஜனங்களுக்கு பஸ் போக்குவரத்து தடைப்பட்டு, அப்பீலில் சுப்ரீம் கோர்ட் வரை போய் முடிவாகிறவரை மக்கள் பயன் அடைய முடியாத நிலை இருக்கிறது. எந்த விதத்திலாவது நல்ல யோசனை செய்து முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்பொழுது கொடுக்கக்கூடிய லாங் ரூட் அல்லது புது ரூட்களை சர்க்காரே ஏற்று நடத்தினால் நல்லது என்று நினைக்கிறேன். பஸ் போக்குவரத்து நடத்துவதினால் தற்சமயம் இருக்கக்கூடிய வரியினால், நஷ்டம் என்று சொல்லிக் கொண்டு, ஏன் புதுக் கம்பெனிகள் அதிகாரி களிடம் வந்து மோதிக்கொள்கிறார்கள். ஆகவே, இதைத் தவிர்ப்பதற்கு எல்லாவற்றையுமே சர்க்காரே ஏற்று நடத்தக்கூடிய நிலைமை ஏற்பட்டால், அந்த லாபம் அத்தனையும் சர்க்காருக்கு வரும். நமக்கு பற்றாக் குறை யினால் நெருக்கடி காலத்தில் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அதைத் தவிர்ப்பதற்கு இது ஒரு நல்ல யோசனையாகக் கருதப்படும் என்று நான் நினைக்கிறேன்.

எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடப்படுகின்ற இடங்களிலெல்லாம் பஸ் ஸ்டாண்டு களில் சரியான வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை. பொதுவாக, தாய் மார்களுக்கு 50, 60 மைல் பஸ்ஸில் பிரயாணம் செய்துவிட்டு, பஸ் ஸ்டாண் டில் பஸ் நிற்கும் பொழுது பாத் ரூம் பெஸிலிடீஸ் வேண்டுமென்றால் கிடை யாது. எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடப்படுகிற லாங் ரூட்களில் இந்த வசதி செய்யப்படவில்லை, அதனால், மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். சென்

காலிலிருந்து பாண்டிச்சேரி வருவதற்கு நெடுங்காடு வழியாக ஒரு பஸ் விட்டால் பொது மக்கள் பாண்டிச்சேரி வருவதற்கு சௌகரியமாக இருக்கும். தனியாருக்கு பஸ் பெர்மிட் கொடுப்பது தஞ்சை ஜில்லாவில் நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அரசாங்கம் சிறிய அளவில் பஸ் போக்கு வரத்து நடத்துகிறவர்களுக்கு வாய்ப்பு கொடுத்து, அவர்களுக்கு வேண்டிய வசதியை செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

11-30 a.m. *திரு. வி. எஸ். எஸ். மணி: சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது கொண்டு வரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, ஆளும் கட்சியினர் தங்களது சாதனைகளைப் பிரமாதமாகச் சொல்லுகிறார்கள். பட்டிதொட்டிகளில் எல்லாம் மின்சாரம் கொண்டு வந்து விட்டோம் என்று சொல்லுகிறார்கள். கிராமப் புறங்களிலே, ரோடு வசதி உள்ள எல்லாக் இடங்களிலும் பஸ் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்து, எல்லாக் கிராமங்களும் பஸ் வசதி அடையக் கூடிய நிலையில் பஸ் ரூட்டுகளை ஏற்படுத்தி விட்டால் இதுவும் சாதனைகளில் ஒன்றாகும்.

இந்த மோட்டார் வாகனச் சட்டத்தைப் பார்த்தால், பெரும்பாலான பிரிவுகள் பஸ் அதிபர்களின் வசதிக்காக இருப்பதுபோல்தான் தோன்றுகிறது. என்னுடைய, மதுரை மாவட்டத்திலே இருக்கக்கூடிய பெரிய பஸ் அதிபர்கள், பஸ்ஸின் பாடியைக் கட்டுவதிலும், அதிலே (Seating) சீட்டிங் ஏற்பாடுகள் செய்து கொடுப்பதிலும், அவர்களுடைய லாப வசதிக்காக ஏற்பாடுகளைச் செய்கிறார்களே தவிர, பிரயாணிகளின் வசதிக்காகச் செய்வதில்லை. அவ்விதம் செய்வதால் ஒவ்வொரு பஸ்ஸிலும் இரண்டு அல்லது மூன்று ஸீட்டுகள் அதிகமாகக் கிடைக்கிறது. ஒவ்வொரு பஸ்ஸையும் மற்ற மாவட்டங்களில் இல்லாத, ஒரு புது முறையில் கட்டுகிறார்கள். அந்த பஸ்களிலே எல்லா ஸீட்டுகளும் முன் நோக்கி ( facing forward ) இல்லாமல், முன் நோக்கி ஒரு சீட்டும், பின் நோக்கி ஒரு ஸீட்டும் அமைகிற முறையிலே அந்த ஸீட்டுகளை அமைத்திருக்கிறார்கள். இந்த விதமான ஸீட்டிங் ஏற்பாடு இருப்பதால், பெண்கள் ஒரு வரிசையிலும், ஆண்கள் அவர்களுக்கு எதிராக உள்ள ஸீட்டுகளிலும் அமர்ந்திருந்தால், பஸ்ஸை நிறுத்துவதற்காக திடீரென்று பிரேக்கைப் போட்டால், ஆண்களும், பெண்களும் மோதிக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. என்னுடைய மாவட்டத்திலிருந்து வந்திருக்கும் மற்ற அங்கத்தினருக்கும் இது நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். பெரும்பாலும் (muffasal) ல் ஓடுகிற பஸ்களை அந்த முறையில்தான் கட்டியிருக்கிறார்கள். இதைப் பற்றி R.T.A. அதிகாரியை நாங்கள் கேட்டால், மோட்டார் வாகனச் சட்டத்தைத் திருத்தினால்தான் முடியும், எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லுகிறார்கள். ஆகவே இந்த சட்டத்தை திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அதைத் திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய மாவட்டத்திலே ஓடுகிற ஒவ்வொரு பஸ்ஸிலும் ஒரு கண்டக்டர், ஒரு டிரைவர் இருக்கிறார்கள். கண்டக்டருடைய வேலை டிக்கெட் கொடுப்பது. ஆனால் டிரைவருடைய வேலை, வண்டியை ஓட்டுவது மட்டுமல்ல. அவரிடம் ஒரு இன்வாய்ஸ் என்ற பாரமும், ஒரு பேனாவும் கொடுக்கப்படுகிறது. ஒரு இடத்திலே பிரயாணிகள் ஏறினால், உடனே அந்தக் கண்டெக்டர் டிரைவரிடம் சொல்ல வேண்டும். டிரைவர் டிக்கெட் நம்பர், போய்ச் சேர வேண்டிய இடம், பஸ் கட்டணம் இவற்றையெல்லாம் அதிலே குறித்துக் கொள்ள வேண்டும். இந்த விதமாக டிரைவருக்கு இரண்டு பணிகள் கொடுத்திருக்கிறார்கள், அந்த மாவட்டத்திலே உள்ள பஸ் அதிபர்கள். இதனால் அந்த டிரைவர் சாலையைப் பார்த்து பஸ்ஸை ஓட்டிக் கொண்டு போகும்பொழுது, எழுத்து வேலையையும் செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு சமயம் நான் பஸ் பிரயாணம் செய்யும்பொழுது, ஒரு கிராமப்புறத்து அம்மையாரும் பிரயாணம் செய்தார். அவர் பக்கத்திலே உட்கார்ந்திருந்த இன்னொரு அம்மையாரிடம் ஆச்சரியம்



அளிக்கத் தக்க விதத்தில் கொச்சை மொழியில் உரையாடிக் கொண்டிருந்தார். " இந்த டிரைவர் ! சூச்சியத்தைதான் ஓட்டுவாரா ! சுக்கானைத்தான் பிடிப்பாரா ! ஆளைத்தான் பார்ப்பாரா ! ஆரனைத்தான் அடிப்பாரா/ அதோடு கணக்கன் வேலையும் செய்வாரா ! அடி ஆத்தே " என்று டிரைவரின் திறமையைப்பற்றி உரையாடிக் கொண்டு வந்தார்கள். இது போன்று டிரைவர்களுக்குக் கார் ஓட்டும் பொழுது பலவித வேலைகளைக் கொடுத்தால் எப்படி நல்ல முறையிலே அவருடைய பணியை செய்ய முடியும் என்பதை நாம் பார்க்க வேண்டும். இதைக் கண்டிக்கும் முறையிலே அரசாங்கம் அந்த பஸ் அதிபர்களுக்கு நாக்கீது அனுப்ப வேண்டும். அதற்கு இடம் இல்லை என்றால் இந்த மோட்டார் வாகனச் சட்டத்தைத் திருத்தி, பிரயாணிகளுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: கனம் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மானியத்தை, ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இப்பொழுது ஒவ்வொரு கிராமத்திலும், பட்டிதொட்டிகளிலும் கூட கிராம மக்கள் பஸ் வேண்டும் என்று கேட்கக் கூடிய நிலைமையிலே இருக்கிறார்கள். இப்பொழுது பஸ் பர்மிட் கொடுப்பதற்கான அதிகாரம் ஆர்.டி.ஏ.-ன் கையில் இருப்பதன் காரணமாக, ஒரு இடத்திற்கு பஸ் வேண்டுமா என்பதை சீக்கிரமாகப் பரிசீலனை செய்து பர்மிட் கொடுத்து விடுகிறார்கள். அப்படி இருப்பதை விட்டு விட்டு, ஆர்.டி.ஏ. கையில் இருக்கும் இந்த அதிகாரத்தைப் பிடுங்கி, ஜுடிஷியரிக்கு கொடுக்க வேண்டுமென்று ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார். அப்படி செய்வதினால் மக்களுக்கு நாம் ஒரு நல்ல காரியத்தைச் செய்து கொடுத்தவர்கள் ஆக மாட்டோம் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இப்பொழுது பஸ்களுக்கு பெர்மிட் கொடுக்கப்படுகிறது. அப்படிப் பெர்மிட் கொடுக்கும்பொழுது, ஏற்கெனவே பஸ் வைத்திருப்பவர்களுக்கு சீக்கிரமாக பெர்மிட் கிடைத்து விடுகிறது. ஆனால் ஒரு பஸ் வைத்திருப்பவர், இரண்டு அல்லது மூன்று பஸ்கள் வைத்திருப்பவர், புதிதாக பஸ் விடவேண்டுமென்று கோருகிறவர், இவர்களுக்கு பெர்மிட் கொடுப்பதிலே கொஞ்சம் சிரமம் இருக்கிறது. இதைத் தவிர்க்க வேண்டும். இந்த நேரத்தில் நான் கனம் அமைச்சர் அவர்களிடம் பணிவோடு ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது ஹரிஜன மக்களுக்காக அரசாங்கம் பணத்தை வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கிறது. அப்படியிருந்தும் பல இடங்களிலே பொருளாதாரத் துறையிலே அவர்கள் முன்னேற்றம் அடையாமல் இருக்கிறார்கள். அப்படி யாராவது பஸ் ரூட் கேட்டால் அதிலே சிரமம் இருக்கிறது, காலதாமதம் ஏற்படுகிறது. நமது மாகாணத்திலே ஆறுமுகம் என்ற ஒருவர்தான் பஸ் வைத்திருக்கிறார்.

திரு. து. ப. அழகமுத்து: ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன், ஸார். வேறொரு ஹரிஜன் மெம்பர் கூட பஸ் வைத்திருக்கிறார். அவருடைய பெயர் பழனிமுத்து, எக்ஸ். எம்.எல்.ஏ.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: ஒரு பஸ் வைத்திருப்பவருக்கு மேற்கொண்டு பஸ்கள் கொடுக்கமாட்டேன் என்கின்ற நிலை இருக்கின்றது. அப்படிப்பட்டவர்கள் அதிகமாக பஸ் கேட்டால், விதிகளை ரிலாக்ஸ் செய்து, ஹரிஜன மக்களை ஊக்குவிக்கும் வகையில், பொருளாதாரத் துறையில் அவர்கள் முன்னேற்றம் காணும் வகையில், அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், இப்பொழுது உதாரணமாக மதுரையிலிருந்து பழனிக்கு நேரடி ரூட் வேண்டுமென்று சொல்லுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள் நிலக்கோட்டையைச் சுற்றிப் போகவேண்டுமென்றால் மற்ற பிரயாணிகளுக்குத் தொந்தரவாக இருக்கிறது. ஆகவே, நிலக்கோட்டை செல்லாமல் நேராகப் பழனிக்குப் போக வேண்டுமென்று ஆர்.டி.ஓ.-வும், கலெக்டரும் சிபார்சு செய்து, அரசாங்கத்திற்கு அனுப்பி

னையிலிருந்து, சேலம், மதுரை, தஞ்சாவூர் போகக்கூடியவர்கள், காலையிலே உட்கார்ந்தவர்கள் மாலை நேரம் வரையில், ஊர் போய்ச் சேரும் வரையில் நெருக்கடியான நிலைமையில் கஷ்டப்படுகிறார்கள். ஆண்களுக்குப் பரவாயில்லை. எங்கு வேண்டுமானாலும் போய் வந்துவிடுகிறார்கள். ஆனால், தாய்மார்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இதை உடனடியாகக் கவனித்து, இதற்குத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடுகூட எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கு முன்கூட்டியே அட்வான்ஸ் புகிங் கொடுத்து விடலாம். அவர்கள் காலையிலிருந்து தங்களுடைய சாமான்களை வைத்துக் கொண்டு கியூ வரிசையில் நின்றுகொண்டு டிக்கெட் வாங்குவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, முன்கூட்டியே அவர்களுக்கு 'பர்ஸ்டு கிளாஸ் புகிங்' ரிசர்வேஷன் மாதிரி டிக்கெட் கொடுத்துவிட்டால் வருகிறவர்கள் அந்த சமயத்திற்கு வந்து ஏறிக்கொள்வார்கள். அவர்கள் வந்து ஏறிவிட்டால், அந்த டிக்கெட் கட்டணத்தை இழக்கவேண்டிய நிலைமை இருப்பதினால், அவர்கள் எப்படியாவது பஸ்ஸில் ஏறிக்கொள்வதற்கு வந்து விடுவார்கள்.

அடுத்தபடியாக, டைவெர்ஷன் முக்கியமாக வேண்டியிருக்கிறது. ரோடுகளில் பஸ் போய் வருவதற்கு தக்க வசதி இல்லாத அளவில் ரோடுகள் இருக்கின்றன. இரண்டு பக்கங்களிலும் கடைகளும், வீடுகளும் இருக்கின்றன. அவைகளை இப்பொழுது இடிக்கவும் முடியாது. அம்மாதிரி ரோடுகளில் எக்ஸ்பிரஸ் பஸ் போவது கஷ்டமாக இருக்கிறது. அதற்காக டைவர்ஷன் கொடுக்கவேண்டும். குறிப்பாக கும்பகோணம்—தஞ்சாவூர் ரூட்டிலே பாபநாசத்தில் டைவர்ஷன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அம்மாதிரி டைவர்ஷன் கொடுத்து மெயின் ரோடுகளில் வந்து சேரக்கூடிய வசதியைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நல்லடை—மாயூரம் ரூட் இருக்கிறது, கீழையூர்—மாயூரம் ரூட் இருக்கிறது. இந்த ரூட்களையெல்லாம் தனிப்பட்ட முதலாளிகள் கேட்டிருக்கிறார்கள். ஒருவருக்குக் கொடுக்கப்பட்டு, பிறகு ஸ்டே ஆர்டர் வாங்கப்பட்டிருக்கிறது. அதனால் நல்லடை வாசிகள் பஸ் போக்குவரத்து வசதி பெறமுடியாத நிலையில் இருந்து வருகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் நாம் வைத்திருக்கக்கூடிய ஸிஸ்டம் தான். எனக்கு முன்பு பேசிய நண்பர், இந்த விவாதத்தைத் துவக்கிவைத்த அழகுமுத்து அவர்கள் இந்த அதிகாரத்தை அதிகாரிகளிடம் கொடுத்தால்தான் அம்மாதிரி ஏற்படுகிறது என்று சொல்லிவிட்டு, அமைச்சர் அவர்களினால் தொந்தரவு ஏற்படுகிறது என்றும் சொன்னார்கள். ஏற்கனவே இந்த அதிகாரம் அமைச்சர் அவர்களிடம் தான் இருந்தது. இந்தமாதிரி பல காரணங்களைச் சொல்லி வீணாக மோடிவ் கிரியேட் பண்ணுவதன் காரணமாக, நியாயம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக அதிகாரிகள் வசம் இது ஒப்படைக்கப்பட்டது. கலெக்டர், ஆர்.டி.ஓ. அவர்கள் இரண்டு பேர்களும் சேர்ந்து அதைத் தீர்மானிக்கிறார்கள். இப்பொழுது அதிகாரிகள் வசம் ஒப்படைத்த பிறகு, யாரும் போய் இவருக்குச் செய்யவேண்டும், அவருக்குச் செய்ய வேண்டும் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்படக் காரணம் இல்லை. ஆகையினால் கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னதில் கொஞ்சம் கூட அர்த்தம் இல்லை என்று நினைக்கிறேன்.

இரயில்போகாத சில இடங்களில் பஸ்களில் போஸ்டு பாக்ஸ்கள் எடுத்துக் கொண்டு போகப்படுகின்றன. 'மெயில் வான்' என்று சொல்வார்கள். 3, 4 வருஷங்களாக அவர்களுக்கு இதற்காக போய்ச்சேர வேண்டிய கட்டணம் இன்னும் பட்டுவாடா ஆகாமல் இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. உதாரணமாக, கும்பகோணத்தில் இருக்கிற ராம விலாஸ் சர்வீஸ் பஸ்ஸில் போஸ்ட் பாக்ஸ் எடுத்துக்கொண்டு போகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய பணம் இன்னும் கொடுக்கப்படவில்லை. இது மத்திய சர்க்காரிடமிருந்து வரவேண்டிய பணமாக இருந்தாலும்கூட, நமது சர்க்கார் இதைச் சற்று துரிதப்படுத்த வேண்டும். ஏனென்றால் இந்த பஸ் சர்வீஸ்காரர்கள் போஸ்டு பாக்ஸை எடுத்துக்கொண்டு போக முடியாது என்று சொல்லிவிட்டால், தபால் போக முடியாத நிலைமை



ஏற்பட்டுவிடும். ஆகவே, அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டிய பணத்தை பட்டுவாடா செய்வதில் நம்முடைய சர்க்கார் முக்கிய கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறிக்கொண்டு, இந்த மான்யத்தை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. பி. ஜயராஜ் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மோட்டார் வாகன மான்யத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். பஸ் போக்குவரத்தில் பொது மக்களுக்கு எந்த அளவுக்கு சௌகரியம் செய்ய வேண்டும் என்று எண்ணுகிறோமோ அந்த அளவுக்கு சௌகரியம் செய்ய முடியாதவாறு சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. என்னுடைய தொகுதியில் மாயவரத்திலிருந்து தேரழந்தூருக்குப் போகிற பஸ்ஸை கோமல் வரையிலும் விஸ்தரிக்க வேண்டுமென்று சுமார் 2, 3 ஆண்டு காலமாக மனுக்கள் கொடுத்தும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மகஜர்கள் அனுப்பப்பட்டும், இதுவரையிலும் ஒன்றும் செய்யப்படவில்லை. டிவிஷனல் எஞ்ஜினியரும் ரோடு நல்ல விதமாக இருக்கிறது, பஸ் விடலாம் என்று சர்டிபிகேட் கொடுத்து விட்டார். டெவெலப்மெண்டு கவுன்சிலிலும் இதுபற்றி தீர்மானம் போட்டு சிபார்சு செய்யப்பட்டு வருஷங்கள் பல ஆகின்றன. இன்னும் வேரியேஷன் செய்வது நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கோமல் செல்லுவதற்கும் அதிக ஐந்து அணாதான். இதைத் துரிதமாகக் கவனித்து பொது மக்கள் சௌகரியத்தை உத்தேசித்து வேரியேஷன் சீக்கிரமாகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாயவரம்—திருத்துறைப்பூண்டி ரூட். கவர்ன்மெண்டு ஜி.ஓ.-படி 200 மைல் போகவேண்டும். கிட்டத்தட்ட 75 மைல் இருக்கிறது. அந்த பஸ் திரும்பி மாயவரம் வந்து பிறகு பேரளம் வரையில் செல்லுவதற்கு, லோகல் பஸ் விடவேண்டுமென்று டெவலப்மெண்டு கவுன்சிலில் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. அந்த பஸ்ஸையும் பொது மக்கள் சௌகரியத்தை உத்தேசித்து உடனடியாக விடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகப்பட்டினம் செல்லுவதற்கு பல தரப்பிலிருந்தும் பஸ்கள் இருக்கின்றன. மாயவரத்திலிருந்து நாகப்பட்டினத்திற்கு நேரடியாக பஸ் போவதில்லை. மாயவரத்திலிருந்து, பேரளம், சென்னாவூர் வழியாக நாகூர் நாகப்பட்டினம் செல்லுவதற்கு பஸ் போக்குவரத்து இருந்தால், பொது மக்களுக்கு நாகப்பட்டினம் செல்லுவதற்கு வசதியாக இருக்கும்.

பஸ் பெர்மிட் கொடுப்பதிலே, குறைந்த அளவில் பஸ்கள் வைத்திருப்பவர்களுக்கும் புதியதாக இருப்பவர்களுக்கும் தாராளமாக பெர்மிட்கள் வழங்கினால், பஸ் போக்குவரத்தை நடத்தும் வாய்ப்பு எல்லோருக்கும் சமத்துவமாகக் கிடைக்கும். 4,600 பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தாலும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. அரசாங்கம் இப்பொழுது எப்படி 16 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கிறார்களோ, அப்படி தனியார் துறையில் பஸ்போக்குவரத்து நடத்துகிறவர்கள் ஹரிஜனங்களில் டிரைவர், கண்டக்டராக தேர்ச்சி பெற்றவர்கள் இருந்தால்கூட, அவர்களுக்கு வேலை கொடுப்பதில்லை. அரசாங்கம் கொடுப்பதுமாதிரி, தனியார் துறையிலும் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படவேண்டும். அவர்கள் முன்பு ராணுவத்தில் சேர்ந்து பஸ் ஓட்டுகிற, கார் ஓட்டுகிற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. கண்டக்டர் சர்டிபிகேட் அவர்கள் வைத்திருந்தாலும், தனியார் துறையிலே அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க முன்வருவதில்லை. அரசாங்கம் எத்தனை சதவிகிதம் ஹரிஜனமக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறார்களோ, அதே மாதிரி தனியார் துறையிலும் செய்யவேண்டுமென்று அறிவித்துவிட்டால், ஏழை ஹரிஜன மக்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

அடுத்தபடியாக, பாண்டிச்சேரி, காரைக்கால் பஸ் ரூட்டை எடுத்துக் கொண்டால், ஒரு பஸ் மாயவரம், கொல்லுமாங்குடி வழியாகப் போகிறது. அங்கிருந்து வருவதில்லை. இந்த பஸ் தான் திரும்பி வருகிறது. காரைக்

வைத்தால் இம்மாதிரியான நெருக்கடியும் காலதாமதமும் ஏற்படாதவாறு நேர் ரூட்டுக்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது, தனியார்துறையிலே பல கண்டெக்டர்களும், டிரைவர் களும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். மதுரை ஜில்லாவை பொறுத்தவரையில் நல்ல முறையிலே பஸ்களை வைத்திருக்கிறார்கள். சகலவிதமான வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்றும் சில பஸ் முதலாளிகள், கண்டெக்டர்களுக்கும், டிரைவர்களுக்கும் டெயிலி வேஜஸ் அடிப்படையில் கொடுக்கிறார்கள். அவர்களிடம் வேலை செய்கின்ற டிரைவர்களும், கண்டெக்டர்களும், பயந்து கொண்டு வெளியிலே சொல்ல லால் எங்கேயாவது தங்களுடைய வேலை போய்விடுமோ என்று அஞ்சு இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்கும் வகை யிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதிதாக பஸ்கள் போய்க்கொண்டிருக்கிற வழிகளிலே பல இடங் களிலே ரோடுகளில் நெருக்கமாக இருக்கிறது. நிலம் படைத்த முதலாளி களும், சிறிய விவசாயிகளும் அந்த நிலத்தைக் குறுக்கி விடுகிறார்கள். ஆகவே, பஸ் செல்வதற்கு வழி இல்லாமல் இருக்கிறது. இங்கே இருக்கிற மூன்று அமைச்சர்களுக்கு இது நன்றாகத் தெரியுமென்று நினைக்கிறேன். அணைப்பட்டியிலிருந்து சோழவந்தானுக்குச் செல்லக் கூடிய ரோடு வளைந்து வளைந்து போய்க் கொண்டிருக்கிறது. முன்னாள் மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு நல்ல ரோடு போட்டுக் கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். அந்த ரோடு நாளுக்கு நாள் குறுகிக்கொண்டே போகிறது. இப்பொழுதுள்ள மராமத்துத் துறை அமைச்சர் அவர்கள் பார்த்த உடனேயே செய்து தரக்கூடிய வல்லமை படைத்தவர்கள்.

**கனம் திரு. பூ. கக்கன்:** நான் கனம் அங்கத்தினருடைய தொகுதிக் குப் போனேன். அந்த இடத்தைப் பார்த்தேன், அங்கே இருக்கிற விவ சாயிகள் இடம் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். ரோடு வேண்டும், ரோடு வேண்டும் என்று சொல்லுகிறார்களே ஒழிய, அதற்கு வேண்டிய இடத்தைக் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். கனம் அங்கத்தினர் அந்த வட்டாரத்தில் சொல்லி ஏற்பாடு செய்து இடத்தை வாங்கிக் கொடுக்கும் படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. எவ்வளவு நிலம் தேவையோ அதை சர்க்காரே எடுத்துக்கொள்ளலாம். பட்டா கொடுக்கும் போது அப்படி எடுத்துக் கொள்ளும்படியான விதி இருக்கிறது. அந்த விதியின்படி சர்க்காரே தேவையான நிலத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. சர்க்காருக்கு பயன்படும்படியாக இருந்தால் எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. அந்த முறையில் வேண்டிய நிலத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக இப்பொழுது சென்னையில் கவர்ன்மெண்ட் பஸ் ஓடுவதாக இருந்தாலும் அது பெண்களுக்கு சௌகர்யமாக இல்லை இந்தியாவிலேயே, அதிலும் இந்த மாகாணத்தில் பெண்கள் தான் அதிக மாக இருக்கிறார்கள். ஆண்களை விட பெண்கள் தான் அதிக தாக கணக்கிடப்பட்டிருக்கிறது. இப்படிப் பெண்கள் அதிகமாக இருப்ப போது 59 சீட்டுகள் இருக்கக்கூடிய பஸ்ஸிலே பெண்களுக்கு என்று 12 சீட்டுகளைத்தான் ஒதுக்கி இருக்கிறார்கள். இது ரொம்பவும் பரிதாபகரமாக இருக்கிறது. பெண்கள் இரண்டு மூன்று குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு தலையில் கூடையை வைத்துக்கொண்டு வந்தாலும் அவர்களுக்கு ஆண்கள் இடம் கொடுப்பது இல்லை. மதுரையில் இடம் கொடுப்பது போன்று இங்கு கொடுப்பது இல்லை. ஆண்கள் எழுந்து பெண்களுக்கு இடம் கொடுப்ப தில்லை. அதனால் பெண்களுக்கு சரிபாதி இடம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஜனத்தொகையில் பாதிக்கு மேல் பெண்கள் இருப்பதால் அவர்களுக்கு குறைந்த பட்சம் பாதி சீட்டுகளையாவது ஒதுக்கி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஏற்கெனவே இதைப்பற்றி நான் குறிப்பிட்டிருக்கிறேன். குறைந்த பட்சம் என்றால் அதிகப்படி என்ற அர்த்தம் இல்லை. பெண்களுக்கு என்று சீட்டுகள் ஒதுக்கியிருந்தாலும் மற்ற இடங்களிலும் அவர்கள் உட்கார்ந்து கொள்ளலாம். உட்காரக் கூடாது என்பது அல்ல.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** குறைந்த பட்சம் பெண்களுக்கு என்று பாதி சீட்டுகளையாவது ஒதுக்கி வைக்க வேண்டும் என்று பணிவன புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றைக்கு புதிய பஸ்கள் வேண்டும் என்றும் புதிய ரூட்டுகள் வேண்டும் என்றும் பொது மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அவைகளைக் கொடுப் பதில் காலதாமதமும் ஏற்படுகிறது. அப்படிக் கால தாமதம் செய்யாமல் உடனடியாக ரூட்டுகளைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன். ஒரே ஒரு விஷயத்தை மட்டும் கூறிக்கொண்டு முடித்துக்கொள்ளு கிறேன். பாலமேடு—முடுவார்பட்டிக்கு பஸ் வேண்டும் என்று மக்கள் கேட்டு, அது சாங்ஷன் ஆகி ஒரு ஆண்டிற்கு மேலாகியும் இன்னும் பஸ் விட்ட பாடில்லை. அங்கு போனால் தேர்தல் சமயம் பஸ் வந்து விடும் என்று சொன்னீர்களே இன்னும் ஏன் பஸ் வரவில்லை என்று கேட்கிறார்கள். இப்படிக் காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்னவென்பது தெரிய வில்லை. ஆகவே பஸ் ரூட்டுகள் கேட்டால் அவைகளை மூன்று அல்லது ஆறு மாதங்களுக்குள்ளாக கிடைக்கும்படியாக வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

*** திரு. ம. கமலநாதன் :** கனம் தலைவர் அவர்களே, இப்பொழுது கோரப்பட்டுள்ள மானியத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுப் பிரே ரேபணையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பொதுவாக புதிய ரூட்டுகளோ அல்லது வேரியேஷன்ஸ் கொடுப்பதாக இருந்தால் ஆர்.டி.ஏ.,வில் அல்லது எஸ்.டி.ஏ. வில் முடிவு செய்ய வேண் டியதாக இருக்கிறது. முடிவுகள் உடனடியாக சொல்லப்படுவதில்லை. ஒரு சில இரண்டு நாட்களில் சொல்லப்படுகின்றன. மற்றவை 4 மாதம், 6 மாதம் என்று ஆகிறது. தாமதத்திற்கு காரணம் என்ன. மேலே உள்ளவர்கள் கொடுக்கும் தொந்தரவின் காரணமாக யாருக்குக் கொடுப் பது என்ற திண்டாட்டம் அதிகாரிகளுக்கு வந்து விடுகிறது. இப்படிக் கொடுப்பதில் பல தவறுகள் ஏற்படுகின்றன. உடனடியாகக் கிடைப்பதாக இல்லை. ஒரு தடவை ஒருவருக்குக் கொடுத்து விட்டு மறுபடியும் மாற்று வதாக இருக்கிறது. யாருக்குக் கொடுப்பது என்ற தூண்டுதல் இருக்கி றதோ அதைப் பார்த்துத்தான் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த முறையில்தான் கொடுத்து வருகிறார்கள். ஆகவே இதைக் கொடுப் பதில் காலதாமதம் ஏற்படாமல் முப்பது நாட்களுக்குள் ஒரு முடிவுக்கு வரக்கூடிய அளவில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். புதிய ரூட்டுகள் கிடைப்பதோ அல்லது வேரியேஷன்ஸ் கிடைப்பதோ முப்பது நாட் களுக்குள் கிடைக்கும்படியாக இருக்க வேண்டும். தகராறு பல சமயங் களில் அப்பீலுக்காக ஹைக்கோர்ட், புல் பெஞ்சு முதலியவைகளுக்கு போய் விட்டு வரவேண்டியதாக இருக்கிறது. அதனாலும் கால தாமதம் ஏற்படுகிறது. குறைந்தது ஐந்தாறு வருடங்கள் கூட ஆகிறது. உதாரண மாகக் குடியாத்தத்தில் கனம் முதல் அமைச்சர் அவர்கள் போட்டியிட்ட நேரத்தில் குடியாத்தத்தைச் சேர்ந்த பஸ் முதலாளி ஒருவருக்கு கிருஷ்ண கிரி—சென்னை எக்ஸ்பிரஸ் பெர்மிட் கொடுக்கப்பட்டு அப்பீலில் தள்ளுபடி செய்யப்பட்டும் இன்னும் stay-யில் தான் ஓடிக்கொண்டிருக்கிறது. குடி யாத்தத்திலிருந்து கிருஷ்ணகிரி-சென்னைக்கு எக்ஸ்பிரஸ் பஸ் விட வேண்டு மென்ற கோரிக்கை இருந்தது. அது ஏற்படுவதற்கு அதிகப்படியான கால தாமதம் ஏற்பட்டது. ஆகவே இப்படி காலதாமதம் ஏற்படாத வகையில் இவைகளைப்பற்றி விசாரிக்க ஒரு சப்-ஜட்ஜைப் போடலாம் என்ற யோசனையைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் இப்பொழு துள்ள நெருக்கடி நேரத்தில் இரண்டு ஜட்ஜுகள் இருக்கக்கூடிய இடத்தில் ஒரு ஜட்ஜை போடலாம் என்று சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில் எப்படி இதற்கு என்று ஒரு சப்-ஜட்ஜை போடலாம் என்று

கஷ்டம். பிரயாணிகளுக்கும் கஷ்டம். முன்பிருந்த மாதிரி வேண்டிய வழிவகைகளைச் செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்னொரு முக்கியமான விஷயம். மோட்டார் வெகிக்கிள்ஸ் ஆக்ட், ரூல்ஸ், மான்யுவல் இன்னும் புதுப்பிக்கப்படாமல் இருப்பதால், அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு என்ன சட்டங்கள் இருக்கின்றன, எந்த ரூல்ஸைப் பார்க்கவேண்டும் என்பதற்கு மிகவும் இக்கட்டான நிலை இருக்கிறது. இங்கே பேசும்போது, ஜீ.ஓ.-வைப்பற்றியும் மார்க் வழங்குவதைப் பற்றியும் பலர் எடுத்துக் கூறினார்கள். இந்த ஜீ.ஓ.-க்களையும், ரூல்ஸ் களையும் எங்கே பார்ப்பது என்று இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர் களும், குறிப்பாக வழக்கறிஞர்களும் இதிலே கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் நிலைமைதான் இருக்கிறது. ஆகவே, சென்ட்ரல் ஆக்ட்ஸ், மெட்ராஸ் ரூல்ஸ், அதையொட்டிய ஜீ.ஓ., எல்லாவற்றையும் சேர்த்துத் தனியாக ஒரு புத்தக மாக அமைத்து எல்லோருக்கும் கிடைக்கவேண்டிய வழிவகைகளை செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

* **திரு. எம். எஸ். மணி :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மோட்டார் வாகனச் சட்டத்தைப்பற்றிப் பலரும் இங்கே பேசியதைக் கேட்டோம். குறிப்பாக, எங்களுடைய நோக்கத்தை நான் சுருக்கமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த மாநிலத்தில் ஓடும் அத்தனை பஸ்களை யும் தேசியமயமாக்க வேண்டும். அது மட்டு மல்ல. இன்றைய தினம் கஷ்டமாக இருந்தாலும் சிறுகச் சிறுக அந்தக் காரியத்திலே ஈடுபடவேண் டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். அப்படிப்பட்ட ஒரு சர்க்காரைத் தான் சோஷலிச சர்க்கார் என்று இன்றைய தினம் குறிப்பிடுகிறார்கள்.

குறிப்பாக, தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியால் வெளியிடப்பட்ட அறிக்கை யில் "சோஷலிசம் என்றால் என்ன ?" என்ற கேள்வியைக் கேட்டு, அதற்குப் பதில் கொடுக்கும் முகத்தான், "தேசத்தின் தொழில் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமான உருக்கு, மின்சாரம், இரசாயனப் பொருள்கள், நிலக்கரி, இயந்திர சாதனங்கள், நில எண்ணெய் போன்றவைகளை உற்பத்தி செய்யக் கூடிய தொழில்கள் அரசினர் வசம் இருப்பதுதான் நாட்டுக்கு நல்லது" என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, அந்த முறையில் பஸ்கள் எல்லாவற்றையும் தேசிய மயமாக்குவதிலே மிகவும் அக்கறை செலுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எக்ஸ்ப்ரஸ் பஸ் ரூட்டுகளுக்கு வேறு யாருக்கும் அனுமதி கொடுக்கா மல் அரசாங்கமே எல்லா ரூட்டுகளிலும் எக்ஸ்ப்ரஸ் பஸ் விடவேண்டும். தேசியமயமாக்கும் வரையில் ஒருவர் எத்தனை பஸ்கள் வைத்துக்கொள்ள லாம் என்பதற்கு ஒரு உச்ச வரம்பு (ஸீலிங்) இருக்கவேண்டும். உயர்ந்த பட்சமாக ஐந்து பஸ்கள்தான் ஒருவர் வைத்திருக்க வேண்டும். அதற்கு மேல் பர்மிட் கேட்கக்கூடாது என்ற முறை இருக்கவேண்டும்.

புதிய வரிகள் மூலமாக பஸ் கட்டணம் உயராமல் அரசாங்கம் தடுக்க ஆவன செய்ய வேண்டும். கோவை, திருச்சி, திருநெல்வேலி போன்ற ஊர்களில் லாரி பர்மிட் வழங்கப்படுவதில்லை. மாநிலம் பூராவும் லாரி பர்மிட்கள் கொடுப்பதற்கான நிலைமையை உருவாக்க வேண்டும்.

சென்னையில் டூரிஸ்ட் பஸ் இருப்பதைப்போல, திருச்சியிலும் மதுரை யிலும் கன்யாகுமரியிலும் ஒவ்வொரு டூரிஸ்ட் பஸ் வைத்திருக்க வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பர்மிட் கொடுக்கும் அதிகாரம் கலெக்டரிடம் இருக்கிறது. கடந்த காலத் தில் இருந்தது போல அட்வைசரி கமிட்டி அமைத்து அதிலே டி.எஸ்.பி., ஆர்.டி.ஓ., மற்றும் லேபர் ஆபீஸர், எம்.எல்.ஏ., எம்.எல்.சி. ஆகியவர் களை உறுப்பினர்களாக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.



மோட்டார் வெகிக்கிள்ஸ் ஆக்ட்டானது தனியார்த் துறையில் ஓடும் அத்தனை பஸ்களையும் கட்டுப்படுத்துகிறது. ஆனால், அரசாங்க பஸ்களைப் பொறுத்த வரையில் "அப்ளை" ஆகவில்லையா என்று தெரியவில்லை. ஓவர்லோடு, ப்ரேக் டௌன் இப்பொழுதெல்லாம் அதிகமாக இருக்கிறது. இவற்றையெல் லாம் ஏன் தடுக்கவில்லை என்பதையும் நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

ரோட் ட்ராபிக் போர்டில் அந்தந்த ஊர்களில் உள்ள லேபர் ஆபீ சரையும் தொழிலாளர் பிரதிநிதிகளையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஒரு ரூட்டை ஒருவர் வாங்கிய பிறகு அந்த ரூட்டை மற்றவர்களுக்கு விற்கக்கூடாது என்ற முறையை ஏற்படுத்த வேண்டும். ஒருவர் ஒரு பஸ்ஸை 75 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கினார் என்றால், வாங்கிய இரண்டு வருஷங்களில் அந்தத் தொகையை சம்பாதித்துவிடுகிறார். அதற்குப் பிறகு ஒரு லட்சம் ரூபாய்க்கோ ஒன்றரை லட்சம் ரூபாய்க்கோ விற்கும் நிலைமையைப் பார்க்கிறோம். ரூட்டை மற்றவர் பெயரில் மாற்றுவதன் மூலமும் லட்சக்கணக்கான ரூபாய் சம்பாதிக்கும் நிலைமையும் இருக்கிறது. ரூட் தேவை இல்லையென்றால், அரசாங்கத்திடம் அதை ஸரண்டர் செய்யவேண்டும் என்ற முறையை வைத்து, பிறகு ரூட் மாற்றப்படவேண்டு மென்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

திருச்சி நகரம் பெரியதொரு நகரம் என்பது எல்லோருக்கும் தெரிந் ததே. திருச்சியில் பொது பஸ் ஸ்டாண்டு இல்லை. அங்கு ஐந்து இடங் களில் பஸ் ஸ்டாண்டுகள் இருக்கின்றன. அந்த ஐந்தையும் ஒன்றாக்கும் நிலைமையில், திருச்சி ஜங்ஷனுக்குப் பக்கத்தில், கவர்ன்மெண்ட் ட்ரான்ஸ் போர்ட் கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறதே அந்த இடத்திற்குப் பக்கத்தில் பொது பஸ் ஸ்டாண்டு ஒன்றைப் பெரியதாகக் கட்ட வேண்டும். நகராட்சி மன்றத்தில் இதைப்பற்றி அவர்கள் ஒரு திருப்திகரமான முடிவுக்கு வர வில்லை. பல இடங்களில் கட்டவேண்டுமென்ற அபிப்பிராய பேதம் இருந்த தால், அரசாங்க அளவில் ஒரு கமிட்டியை அமைத்து, திருச்சியில் ஒரு பொது பஸ் ஸ்டாண்டைக் கட்டிக்கொடுக்க அரசாங்கம் நல்ல ஆலோசனையைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு, இந்த அளவோடு என் உரையை முடிக்கின்றேன்.

**திரு. வை. சங்கரன் :** தலைவர் அவர்களே, நம் ராஜ்யத்தில் பஸ் போக்குவரத்து நல்ல முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மற்ற ராஜ்யங்களோடு நம் ராஜ்யத்தைப் போக்குவரத்துத் துறை சம்பந்தமாக ஒப்பிட்டுப் பார்த்தால் உண்மையிலேயே நம் ராஜ்யம் முன்னணியில் இருக்கிறது என்பதைக் குறித்து நாம் பெருமைப்படவேண்டும்.

பஸ் ட்ரான்ஸ்போர்ட்டைப் பொறுத்த வரையில் அதிகமாகக் குறைகள் இல்லையென்றாலும், லாரிகள் சம்பந்தமாக உள்ள சில குறைபாடுகளை இங்கே நான் குறிப்பிடவேண்டியிருக்கிறது. எந்த ரோடு விபத்தை எடுத்துக் கொண்டாலும், அதில் ஒரு லாரி சம்பந்தப்பட்டிருக்கும். விபத்துக்குக் காரணம் இரண்டு பக்கங்கள் இருக்கும்போது, அதில் ஒன்று நிச்சயமாக லாரி சம்பந்தப்பட்டிருக்கும் என்பதை நாம் பார்க்கிறோம். லாரிகளினால் ஏற்படும் விபத்தைச் சர்க்கார் கவனித்து, அதற்குப் பரிகாரம் கண்டுபிடிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று நான் தெரிவித்துக்கொள்ளு கின்றேன். டி.வி.எஸ். கம்பெனியார் போன்ற பஸ் ஆபரேட்டர்கள் வேகத் தைக் கட்டுப்படுத்துவதற்கு, ஒரு மெகானிகல் டிவைஸ் வைத்திருக்கிறார் கள். ஒரு குறிப்பிட்ட வேகத்திற்குமேல் லாரிகள் செல்ல முடியாத அள வுக்கு மெகானிகல் டிவைஸ் லாரிகளில் பொருத்த ஏற்பாடு செய்வது நலம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இப்படிச் செய்ய வேண்டாமென்றால், வேகத்தை ரிகார்டு செய்யக்கூடிய சாதனத்தையாவது வைக்க வேண்டும். இப்படிச் செய்து, "ஓவர்ஸ்பீட்"-ஐக் குறைத்து, விபத் துக்களைத் தவிர்க்க ஆவன செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகின்றேன். லாரிகள் நல்ல முறையில் மெயின்டைன் செய்யப் பட்டிருக்கவேண்டும். லாரிகளை நல்ல முறையில் ஓட்டத் தெரிந்தவர்களாகப் பார்த்து டிரைவர்களாகப் போடவேண்டும். லாரிகளை ஓட்டுகிற டிரைவர்

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுவும் சென்னை நகரத்தைப் பொறுத்த அளவுக்கு நிர்வாகத் துறையிடமிருந்து எடுத்து போலீஸ் துறையிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். இதுமாதிரி எந்த மாகாணத்திலும் இல்லை என்று கருதுகிறேன். இதனால் எத்தனையோ இடையூறுகள் ஏற்படுகின்றன. உதாரணமாக ஒரு போலீஸ் அதிகாரி ப்ரேக் இன்ஸ்பெக்டரிடம் வந்து ஊர் சுற்றிப் பார்க்க ஒரு காருக்கு ஏற்பாடு செய் என்பார். இவர் கார் வசதி பண்ணித்தரவேண்டும். அதே சமயம் போலீஸ் ஸி.ஐ.டி. ஒருவர் இவர் லஞ்சம் வாங்குகிறாரா என்று ரகசியமாக விசாரணை செய்வார்கள்.

இந்த இரண்டு துறைகளும் போலீஸ் துறையிடம் கொடுத்திருக்கும் காரணத்தினால் லஞ்சம் வாங்குகின்றார்களா என ஒரு பக்கம் கண்காணிப்பு. இன்னொரு பக்கம் தங்களுக்குக் கார் வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுக்குக் கார் கொடுக்க வேண்டுமென்றால் நிச்சயமாகப் பிரேக் இன்ஸ்பெக்டர் ஏதாவது ஒரு முறையைப் பின்பற்றித்தான் கொடுக்கவேண்டும். போலீஸ் துறையிடம் அந்த அதிகாரம் கொடுக்கப்படாமல் நீதித் துறையில் இருப்பவர்களிடம் அந்த அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பிரேக் இன்ஸ்பெக்டர்களுக்குத் தற்போது ஏராளமான அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆர்.டி.ஓ-க்களுக்கு வழங்கப்பட்டிருக்கக் கூடிய அதிகாரத்தைவிட பிரேக் இன்ஸ்பெக்டர்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் மதிப்பிலே, கவுரவத்திலே, சம்பளத்திலே குறைந்தவர்களாகத்தான் இருக்கிறார்கள். அதன் காரணமாக, ஊழல்கள் ஏற்பட்டு வருவதை அனுபவத்தில் காண்கிறோம். ஒன்று, பிரேக் இன்ஸ்பெக்டர்களுடைய அதிகாரத்தைக் குறைக்க வேண்டும், அல்லது அவர்களுடைய தகுதியை உயர்த்த வேண்டும். அவர்களை "கெஜட்டெட் ஆபீசர்"களாக மாற்றிவிட்டாலும் கூடப் பரவாயில்லை.

நிர்வாகத் துறையைப் பொறுத்தவரை டிரான்ஸ்போர்ட் நிர்வாகத் துறை மேலும் மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் தனியாக ஒரு டிரான்ஸ்போர்ட் கமிஷனரை நியமிப்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது போர்டு மெம்பர் ஒருவர் டிரான்ஸ்போர்ட் கமிஷனராக இருக்கிறார். இப்போது உள்ள கமிஷனர் அவருக்கு இருக்கும் பல அதிகாரங்களோடு இந்த அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார். இந்த நிலை மாறி இந்தத் துறை நல்லபடி செயல்பட வேண்டுமானால், தனிக் கமிஷனரை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பிளானிங் அண்டு டெவலப்மெண்ட் என்று சொல்லி, ஆர்.டி.ஓ. தகுதியுடன் ஒரு அதிகாரியைப் போட்டிருக்கிறார்கள். மாவட்ட ஆர்.டி.ஓ.-க்கு சமமாக பிளானிங் அண்டு டெவலப்மெண்ட் அதிகாரி அந்த அதிகாரத்தைப் பெற்றிருக்கும் காரணத்தால் இந்தத் துறை சரியானபடி செயல்படவில்லை என்று தெரிகிறது. அதையும் மாற்ற முயல வேண்டும்.

"ஸ்டேட் வைடு பர்மிட்ஸ்" என்று சொல்லும் வகையில், லாரி உரிமையாளர்களைப் பொறுத்த வரை இந்த மாநிலம் முழுவதும் ஓட்டக் கூடிய அளவிற்கு லைசன்ஸ் வழங்கும் முறையை இந்த அரசாங்கம் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஸ் பிரயாணக் கட்டணத்தை ஒவ்வொரு உரிமையாளரும் ஒவ்வொரு விதமாக நிர்ணயிக்கிறார்கள். இதற்குக் கட்டு திட்டமே இல்லை. இந்த அளவுக்கு மேல் கட்டணம் இருக்கக் கூடாது என்றுதான் இருக்கிறதே தவிர, ஒவ்வொரு பகுதியிலும் பஸ்ஸுக்கு பஸ் கட்டணங்கள் வேறுபடுகின்றன. இதைக் கண்டிப்பாகத் திருத்த வேண்டும். பழைய காலத்தைப் போல், மக்கள் பஸ்ஸிலே ஏறவேண்டுமென்பதற்காகக் கட்டணத்தைக் குறைக்கவேண்டுமென்ற நிலை மாறிவிட்டது. மக்கள் இப்போது எப்படியும் பஸ்ஸிலே ஏறித்தான் தீரவேண்டுமென்ற சூழ்நிலை இருக்கும்



காரணத்தால், ஒரே ரூட்டில் ஓடுகின்ற பஸ்களில் கட்டண விகிதங்கள் வேறுபாடான நிலையில் இருப்பதை மாற்றியமைப்பதில் அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் பஸ் ரூட்டுகளுக்குக் கொடுக்கக் கூடிய பஸ் பர்மிட்டுகளை விற்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதையும் மாற்றியமைக்க வேண்டும். சிறிய பஸ் முதலாளிகளுக்குப் பஸ் ரூட் கொடுப்பதில் காண்பிக்கக் கூடிய சலுகையைக் கொண்டு அவர்கள் பஸ் ரூட்டுக்குப் பர்மிட் வாங்கிக் கொண்டு இரண்டு ஆண்டுகள் கழித்து விற்று விடுகிறார்கள். அவர்கள் பஸ்ஸை விற்றாலும், பஸ் ரூட் பர்மிட்டை விற்க முடியாத நிலைமையில் மாற்றம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதிய வரிகளைச் செயல்படுத்துவதற்காகவும், ஏற்கனவே உள்ள வரிகள் செலுத்தப்படாமல் இருந்தால் அதை வசூலிப்பதற்காகவும் இந்தத் துறையிலே புதிய உத்தியோகங்களை அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. புதிய உத்தியோகம் கொடுக்கப்பட்டவர்களுக்காக ஏற்படக் கூடிய செலவைக் கணக்கிட்டுப் பார்த்தால், அதற்கும் புதிய வரியின் மூலம் கிடைக்கும் வரிப் பணத்திற்கும் சம்பந்தமே இல்லாத அளவுக்குச் செலவு அதிகமாகியிருக்கிறது.

குறைந்த எண்ணிக்கையுள்ள பஸ்களை வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்ற காரணத்தினால், அந்த பஸ் முதலாளிகள் நல்ல முறையிலே பஸ்களை நடத்தக் கூடிய சூழ்நிலை இல்லை. அவர்களுக்கு வாய்ப்புக் கொடுத்தாலும் நல்ல முறையிலே பஸ்களை ஓட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

***கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில், இந்த இலாகாவை நிர்வகிப்பதற்காக, ஓடுகின்ற பஸ்களைக் கண்காணிப்பதற்காக ஏற்படுகின்ற செலவு தான் கோரப்பட்டிருக்கிறது. அதற்காக உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் மற்றச் செலவுகளுக்காகத்தான் இந்தக் கோரிக்கை இந்தச் சபைமுன் வைக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டிலே ஒதுக்கப்பட்ட தொகையைக் காட்டிலும் இந்த ஆண்டிலே ஏன் அதிகமான தொகை கோரப்பட்டிருக்கிறது என்று முதல் முதலிலே விவாதத்தைத் துவக்கி வைத்த கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்டார்கள். அதற்கு முக்கியமான காரணம், தற்போது வரிகள் அதிகரித்திருக்கிறது. வரிகளைச் சரியாக வசூலிக்கக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும் போக்குவரத்தில் விபத்துக்கள் இல்லாமல் கவனிப்பதற்காகவும் செலவினங்கள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

தற்போது ரூட்டுகள் கொடுப்பது பற்றிக் கவனிக்கத் தனியாக ஒரு இலாகா இருக்கிறது. மாநில வகையிலே இலாகா இருக்கிறது; மாவட்ட வகையிலும் இலாகா தனியாக இருக்கிறது. ரீஜனல் டிரான்ஸ்போர்ட் ஆபீசர் என்று ஜில்லா அதிகாரி இருக்கிறார். சில இடங்களில் உதவி அதிகாரிகளும் போடப்பட்டிருக்கிறார்கள். இப்போது ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அத்தாரிடி என்பது கலெக்டர் ஒருவரேதான். ரீஜனல் டிரான்ஸ்போர்ட் ஆபீசர் இப்போது காரியதரிசியாக இருக்கிறார். முன்பு இதற்காக ஒரு கமிட்டி இருந்தது. அதிலே போலீஸ் சூப்பிரண்டண்ட் இருந்தார். உத்தியோகப் பற்றல்லாதவர்களும் இருந்தார்கள். அந்த முறையில் நடப்பதில் சில சிக்கல்கள் இருப்பதை அனுபவத்தில் கண்டு, இப்போது கலெக்டரிடமே அந்தப் பொறுப்பு இருக்கட்டும் என்று அமைக்கப்பட்டிருக்கிறது. "ஏன் நிர்வாக அதிகாரியை இதிலே போட வேண்டும்? மாவட்ட ரீதியிலே ஒரு நீதிபதியைப் போடலாமே!" என்று சொன்னார்கள். ஒரு பஸ் ரூட் கொடுப்பது, விஸ்தரிப்பது, "வேரியேஷன்" கொடுப்பது போன்றவற்றுக்கெல்லாம் பல விஷயங்களைத் தெரிந்திருக்க வேண்டும். மாவட்டத்தின் தேவை மக்கள் கோருகின்ற கோரிக்கை, தனிப்பட்டவர்கள் கோரிக்கை—தனிப்பட்டவர்கள் விருப்பமல்ல—பொதுவாக மக்கள் என்ன வேண்டுகிறார்கள் என்பதையெல்லாம் நன்றாகக் கவனித்து முடிவு எடுக்கவேண்டும். நீதிபதி என்ற ஹோதாவில் பேப்பரைப் பார்த்து விட்டு முடிவு எடுத்துவிட

கேட்கலாம். அசிஸ்டெண்ட் டெவலப்மெண்ட் கமிஷனர் என்ற ஒரு புதிய
உத்யோகத்தை இப்பொழுது உண்டாக்கி இருக்கிறார்கள். அப்படியே இதை
யும் செய்யலாம் என்பதை எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன்.

1961-62-ல் இந்த மானியத்தின்மீது பெரிய ஒரு காங்கிரஸ் கட்சி
உறுப்பினர் இதைப்பற்றி வெகு அழகாக எடுத்துச்சொல்லி இருக்கிறார்.
அதாவது எந்த விதமான அடிப்படையில் எந்தவிதமான "பிரின்சி
பிள்ஸ்" பேரில் பர்மிட் வழங்கப்பட வேண்டும் என்று சட்டம் இருக்கிறது.
அந்த அடிப்படையிலேதான் ஆர்.டி.ஏ. பர்மிட் வழங்க வேண்டுமே தவிர,
மற்றபடி உடனடியாக அமைச்சர் கூப்பிட்டுச் சொல்லிவிட்டால் உடனே
கொடுக்கவே முடியாது. பர்மிட் கொடுப்பதற்கு "மார்க்ஸ் லிஸ்டம் வைத்
திருக்கிறார்கள். புதியதாக பர்மிட்டுகள் எந்த அடிப்படையில் கொடுக்க
வேண்டும் என்பதற்கு மார்க்குகள் எந்த அளவுக்குக் கொடுக்க வேண்டு
மென்பது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. வொர்க்ஷாப் இருக்கவேண்டும்,
லிமிடெட் கம்பெனியாக இருக்கவேண்டும், அனுபவம் இருக்கவேண்டும்
இம்மாதிரி ஒவ்வொரு தொகுதிக்கும் மார்க்குகள் நிர்ணயிக்கப்பட்டிருக்
கிறது." சாதாரணமாக பர்மிட் நியூ என்ட்ரண்டுக்கு கொடுப்பதாக இருந்
தால் பதினைந்து மைலுக்குக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது.
ஆனால் கிருஷ்ணகிரி பகுதியில் ஒருவருக்கு முப்பது மைல் அளவிற்குக்
கொடுக்கப்பட்டிருக்கிறது. அது யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று
சொன்னால் இப்படிப் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் தந்தைக்கு டி விதி
களை மீறிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் மேலும் இந்த அமைச்சரவை
யில் பத்து ஆண்டு காலத்திற்கு அமைச்சராக இருந்தவருடைய சம்மந்திக்கு
கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த சமயத்தில் சொல்லிக்கொள்ள
ஆசைப்படுகிறேன். அந்த பஸ் முதலாளி ஐந்து பர்மிட்டுகள் வாங்கிய
பிறகு என்னால் இந்த பஸ் சர்வீஸை நடத்த முடியாது உடல், நலம்
சரியாக இல்லை என்று சொன்னதன் பேரில் அவருடைய பஸ் சர்வீசை
பாகப் பிரிவினை செய்து கொடுக்கப்பட்டது. தன் மகனுடன் பாகப்பிரிவினை
செய்து கொண்டிருக்கிறார். அந்த முறையில் தன்னுடைய மகனுக்கு
பர்மிட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதை சர்க்கார் அனுமதித்திருக்
கிறது. பாகப் பிரிவினை செய்து கொடுத்த பிறகு மறுபடியும் உடல் நலம்
சரியாக இருக்கிறது என்று சொல்லி பஸ் பர்மிட் வாங்கிக்கொண்டிருக்கிறார்.
இந்த வாய்ப்புகளை வசதிகளை அரசாங்கம் ஏன் செய்து கொடுக்க வேண்டும்
என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக 1952 முதற்கொண்டு 1962 வரையில் கொடுக்கப்பட்ட
வேரியேஷன்களைப்பற்றி சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த அர
சாங்கம் அதற்கு டைரெக்ஷன் கொடுத்திருக்கிறது. 1962 தேர்தலுக்கு
முன்னதாக 1961 நவம்பரிலிருந்து 1962 ஜனவரி வரை சுமார் 200 வேரி
யேஷன்கள் கொடுக்க வேண்டும் என்று டைரெக்ஷன் கொடுக்கப்பட்டிருக்
கிறது. சாதாரணமாக 15 மைலுக்குள்ளதாக இருந்தால் வேரியேஷன்
கொடுக்கலாம் என்று இருக்கிறது. அப்படியிருந்தும் கூட 40 அல்லது
50 மைல்களுக்குக்கூட வேரியேஷன்கள் கொடுக்க டைரெக்ஷன் கொடுக்கப்
பட்டிருக்கிறது. இந்த எண்ணிக்கை 200 என்று வைத்துக்கொண்டாலும்
வேரியேஷன்கள் கொடுக்கப்பட்ட தூரத்திற்கு புதிய பஸ்கள் ஓடினால்
ஒரு சீட்டுக்கு ரூ. 45 வீதம் 45 சீட்டுள்ள வண்டி ஒன்றுக்கு 2,000 ரூபாய்
வரி மூலமாக வரும். அப்படிப் பார்த்தால் அரசாங்கம் கொடுத்த வேரி
யேஷன்களில் சுமார் இருபது லட்சம் ரூபாய் வரியாக வருமானம் மூலமாக
வந்திருக்கும். அந்த நஷ்டம் இப்பொழுது அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்
கிறது. இப்படி நஷ்டம் ஏற்படுவதால் வேரியேஷன்களுக்கு
டைரக்ஷன் கொடுக்கக்கூடாது. புது பஸ்கள் விட்டால் நமக்கு வரி
மூலமாக அதிகமாக வருமானமும் வரும். பல தொழிலாளர்களுக்கும்
வேலை கிடைக்கும். ஆகவே வேரியேஷன்கள் கொடுப்பதில் கொஞ்சம்
நிதானமாக இருக்கவேண்டும் என்பதைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளு
கிறேன்.

அடுத்தபடியாக மோட்டார் தொழிலாளர்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல
வேண்டியதாக இருக்கிறது. மோட்டார் தொழிலாளர்களுக்கு அடிக்கடி
விபத்துக்கள் ஏற்படுகின்றன. அந்தக் காலங்களில் மோட்டார் முதலாளி



கள் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாக இல்லை. அவர்கள்மீது கேஸ்கள்
ஏற்பட்டவுடன் அந்தக் கேஸ்களை அவர்கள் தாங்களாகவே நடத்திக்கொள்ள
வேண்டியதாக இருக்கிறது. அப்படி ட்ரைவர்களும் கண்டக்டர்களும்
நடத்திக்கொள்ளக் கூடிய வசதிகள் இல்லாமல் இருக்கிறார்கள். அப்
பொழுது முதலாளிகள் அந்தக் கேஸ்களை நடத்தக்கூடிய அளவில் இருக்க
வேண்டும். அந்த முறையில் முதலாளிகள் தொழிலாளர்களுக்கு வசதி
செய்து கொடுக்கக் கூடிய அளவில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்
டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளு
கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஸார், இந்த மானியக் கோரிக்கையை
ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைப் பேசுவதற்கு முன்வருகிறேன். முதன்
முதலாக எனது கன்யாகுமரி ஜில்லாவில் இருக்கிற சில கஷ்டங்களைப்பற்றி
நமது அமைச்சரவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று நான் கூறுகிறேன்.
ட்ரான்ஸ்போர்ட் பஸ் விட வேண்டும் என்று ஒரு சில இடங்களில் அரசாங்கத்
தின் உத்தரவு பிறப்பித்து அவைகள் இயங்கி வருகின்றன. சில தனியார்
களுக்கு சில இடங்களில் பர்மிட் வாங்க பல விதமான கஷ்டங்கள் ஏற்படு
கின்றன என்பதை முதலில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எனது தொகுதியில் குறிப்பாக நாகர்கோயிலிலிருந்து விரிவளை என்கிற
ஊருக்கு செல்ல அரசாங்க பஸ் விடுவதாக எல்லா நோடிபிகேஷன்கள்
அனுப்பித்தும் இதுவரையில் அங்கு விடுவதற்கு அரசாங்கத்திற்கு வழி
இல்லாமலிருக்கிறது. இதற்குப் பின்னால் தனியார்த் துறையில் இயங்கும்
பல கம்பெனிக்காரர்கள் இருக்கிறார்கள் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்
தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த ரூட்டில் துரிதமாக
அரசாங்க பஸ் விட ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளு
கின்றேன். அந்த ஜில்லாவைப் பொறுத்த வரையில், பஸ் ட்ரான்ஸ்போர்ட்
தேசியமயமாக்கப்படவேண்டுமென்று அங்கே பலர் எடுத்துக் கூறியிருக்கிறார்
கள். அரசாங்கத்தின் கொள்கையும் ஒருவாறு அப்படித்தான் இருந்து
கொண்டிருக்கிறது. ஆதலால், அதைத் துரிதப்படுத்தவேண்டும் என்பதை
யும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கண்டக்டர்கள் லைசென்ஸ் வழங்கப்படுவதை இப்பொழுது அந்த ஜில்லா
வில் நிறுத்தல் செய்து வைத்திருக்கிறார்கள். அங்கே கூடுதலான வாலி
பர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்படவேண்டிய
ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இன்னொரு முக்கியமான விஷயத்தை நான் இங்கே குறிப்பிட விரும்பு
கின்றேன். இன்டர்-ஸ்டேட் ரூட்ஸ் அந்தப் பகுதியில் அதிகமாக இருக்கின்
றன. கேரளப் பகுதியோடு தொட்டுக் கிடக்கும் ஜில்லாவாக எங்கள்
ஜில்லா இருப்பதால் ஒரு சில இடங்களில் தனியார்த் துறை பஸ்கள் ஆனா
லும் சரி, லாரிகளானாலும் சரி, போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுக்
கொண்டிருக்கிறது. இம்மாதிரி இன்டர்-ஸ்டேட் ரூட்ஸ் ஆக இருப்பதால்,
இரண்டு ஸ்டேட்களிலும் அவர்கள் வரி செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம்
இருக்கிறது. இரண்டு ஸ்டேட்டுகளிலும் ஓடக்கூடிய பஸ்களுக்கும்
டாக்ஸிகளுக்கும் ஏதாவது விதி விலக்கு அளிக்க முடியுமா என்பதையும்
அரசாங்கம் ஆழ்ந்து கவனிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்ளுகின்றேன். லாரி ட்ரான்ஸ்போர்ட் விஷயமாகத்தான் இது மிகவும்
கஷ்டமாக இருக்கிறது. நாகர்கோயிலிலிருந்து திருவனந்தபுரத்திற்கு அடிக்
கடி லாரி செல்லவேண்டியிருக்கிற காரணத்தால் பலர் இன்று அதனால்
கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அதற்கு ஒரு பரிகாரம்
[illegible]வேண்டும் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அங்கிருக்கும் டாக்ஸிகளில் அதிகமாக உள்ள ஸீட்களைக் குறைக்க
வேண்டும் என்று ஆர்.டி.ஓ. உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள் என்று
நான் கேள்விப்படுகிறேன். ஏற்கனவே நான்கு ஸீட்கள் அனுமதித்திருக்
கிறார்கள். இதை மூன்று ஸீட்களாகக் குறைக்கவேண்டுமென்று ஆர்.டி.ஓ.
உத்தரவு பிறப்பித்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அம்மாதிரி மொஃபஸல்
[illegible] ஸீட்களைக் கட்டுப்படுத்துவதனால் டாக்ஸிக்காரர்களுக்கும்

களுக்கு உடனடியாக லைசென்ஸ் கொடுக்காமல், நன்ருகத் சோதித்துப் பார்த்து, நல்ல அனுபவம் பெற்றவர்களுக்கே கொடுக்கப்படவேண்டும். இதுமட்டுமல்லாமல், நான் ஏற்கனவே பல முறை இந்த மன்றத்தில் சொன்னதுபோல, 100 மைல்களுக்குத்தான் ஒரு ட்ரைவர் லாரி ஓட்ட வேண்டும், அதற்குப் பிறகு வேறு டிரைவர் மாற்றப்படவேண்டும். இப்படி செய்தால் லாரிகளினுல் ஏற்படும் விபத்துக்களைக் கூடுமான வரையில் தடுக்க முடியும் என்று சொல்லி, அதற்கான வழிவகைகளை அரசாங்கம் செய்ய வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

12-00 noon. அடுத்தபடியாக எங்களுடைய ஊரிலே புதிதாக வைகையின்மேல் பாலம் திறக்கப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேம். ஆனுல் எக்ஸ் பிரஸ் பஸ்களைத் தவிர மற்ற பஸ்களை அதில் விடுவதில்லை. மதுரையில் நூற்றுக்கணக்கான பஸ்கள் அந்த வழியாகப் போவதற்குப் பதில் சுற்றிக் கொண்டு போவதால் மக்களுடைய நலனை உத்தேசித்து எல்லா பஸ்களையும் அவ்வழியே விட, தக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

இன்னும் பஸ் டிக்கட் முன்கூட்டியே வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ரெயில்வே டைம் டேபிளைப்போல பஸ் டைம்டேபிள் தயாரிக்கப் படவேண்டும். இன்னும் பஸ் ஸ்டாண்டுகளில் பொதுமக்களுக்கு வேண்டிய அமினிடீஸ் பெருகவேண்டும். மேலும் ஹரிஜனங்களுடைய பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்காக புது ரூட்டுகள் வழங்கப்படுவது என்ருல் அதை ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்தவருக்கே கொடுக்க கூடுமானவரை சலுகை காட்டவேண்டும். அப்போதுதான் அந்தச் சமூகம் பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் பெற வழியேற்படும் என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திருமதி டி. என். அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, மோட்டார் வாகன இலாகா மானியக் கோரிக்கையின்மீது காலம் இல்லாததனுல் சில யோசனைகளை மட்டும் கூறி முடிக்கிறேன். முதலாவதாக இன்றைக்கு வரிப் பணத்தை அவர்கள் டிரஷரியில் கொண்டுபோய்க் கட்ட வேண்டி யிருக்கிறது. அதனுல் காலதாமதம் ஆகிறது. இனி அந்த அந்த ஆர்.டி. ஓ. ஆபீஸ்களிலேயே வரிப் பணத்தை வசூல் செய்ய வசதி செய்தால் நன்ருக இருக்கும். டிரஷரியில் இருக்கக்கூடியவர்களும் இன்றைக்கு வேலைப் பளு வினுல் இல்லாத வேலையையெல்லாம் எங்களிடம் ஒப்படைக்கிருர்கள் என்று குறைபட இடமிருக்கிறது. அது இல்லாமலும் போகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைக்கு மோட்டார் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக் கிறவர்களில் பெரிய ப்ளீட் ஓனர்களைத்தவிர மற்றச் சிறியவர்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிருர்கள். போன தடவை நாம் வரி போட்டோம். இந்தத் தடவை பெட்ரோல் விலை, ஸ்பேர் பார்ட்ஸ் விலை உயர்ந்திருக்கிறது. அதனுல் எடுத்த ரூட்டுக்களைக்கூட நடத்த முடியாமல் சரண்டர் செய்யும் நிலை வந்திருக்கிறது. குறிப்பாக ஒன்றிரண்டு ரூட்டு மிகவும் லாபகரமாக இருக்கும். சில ரூட் நஷ்டத்தில் ஓடும். இருந்தும் ஒன்றிலிருந்து வரும் லாபம், இன்னொன்றின் நஷ்டத்தை ஈடுகட்டிக் கொண்டுபோகும். இப்போது அதிக வரி போட்டு, செலவினங்களும் அதி கரித்துக்கொண்டு வருவதனுல் லாபமில்லாத ரூட்டுகளை சரண்டர் பண்ண முன்வருகிருர்கள். நீலகிரி மாவட்டத்தில் இப்போது 2 ரூட் சரண்டர் பண்ணப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதனுல் அந்த இடங்களில் உள்ள மக்கள்தான் பாதிக்கப்படுகிருர்கள். ஆகவே கனம் அமைச்சர் அவர்கள் வருமானம் இல்லாத ரூட்டுகளிலாவது பஸ் முதலாளிகளுக்கு என்ன என்ன சலுகை அளிக்கலாம், அவர்களுடைய கஷ்டத்தை எந்த எந்த வகை யில் குறைக்கலாம் என்று பரிசீலனை செய்ய வேண்டும்.

அதேபோல இன்றைய தினம் லாரி சொந்தக்காரர்கள் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிருர்கள். லாரியை சாதாரணமாக நடத்துகிறவர்கள் இன்றைய தினம் பல தொல்லைகளுக்கே உட்பட்டு அதை நடத்துகிருர்கள். பஸ்ஸைக்



காட்டிலும் லாரிக்கு அதிகமான வரி போடப்பட்டிருக்கிறது. ஆகவே மாகா ணம் பூராவும் ஓடக்கூடிய ஒரு சலுகையையாவது அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் அதிக வருமானம் தேடித்தரக்கூடிய இலாகா அது. ஆனுல் மிகக் குறைந்த செலவே நமக்கு ஆகக்கூடிய இலாகா. நான் முன்பே சொல்லியிருக்கிறேன், ஆர்.டி.ஓ. ஆபீஸ்களுக்குப் போனுல் உட்காரக் கூட நாற்காலி போன்ற வசதிகள் இல்லை. ஆகவே அங்கே மிக நல்ல வசதிகள் செய்துகொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் லிமிடெட் கம்பெனி சம்பந்தமாக மார்க் கொடுப்பது திருத்தி அமைக்கப்படவேண்டும். அதுபற்றி ஒரு வழக்கு எழுந்தது.

SRI K. A. MATHIALAGAN rose . . .

SRIMATHI T. N. ANANDANAYAKI : I know the matter is *sub judice*. I know it much better than the hon. Gentleman Sri K. A. Mathialagan. Let him not arrogate it to himself.

ஆகவே இதுபற்றியும் கவனம் செலுத்த வேண்டும். மேலும் புது ரூட் வழங்குவது 15 மைலில் இருந்து 20 மைல் ஆக்கவேண்டுமென்று கேட்கிறேம். 15 மைல்களுக்குள் என்ருல் டவுன் ரூட்டுகளுக்குத்தான் வரும். டவுன் ரூட்டுகள் நியூ என்ட்ரென்டுக்குக் கிடைக்காது. ஆகவே புதிதாகக் கொடுக்கக் கூடிய ரூட்டுகள் 20 மைல்வரை கொடுக்கவேண்டும். காரணம் சென்னை மாகாணத்தைப் பொருத்தவரையில் தனிப்பட்டவர்கள் நம் மாநிலத்திற்கு பெருமை தரக்கூடிய வகையில் நல்ல பஸ்களை ஓட்டி வருகிருர்கள். அவர் களுக்கு மேலும் பல வசதிகளைச் செய்து தருவதும், அதனுல் நம் மாநில மக்கள் நன்மை அடையும்படி செய்வதும் அரசாங்கத்தின் கடமையாகும்.

இன்னும் சில அட்மினிஸ்ட்ரேடிவ் சிக்கல்கள்கூட நீக்கப்படவேண்டு மென்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். புது ரூட் திறப்பது என்ருல் ஆர்.டி.ஓ. தான் அதைப் பரிசீலனை செய்து, அதன் நன்மை தீமைகளை ஆராய்ந்து இந்த ரூட் திறக்கப்படலாம் என்று சிபார்சு செய்கிருர். ஆனுல் அது இங்கே சென்னை ட்ரான்ஸ்போர்ட் கமிஷனர் ஆபீஸ் வந்து அவர் உத்தரவு போடவேண்டுமென்று இருக்கிறது. இதனுல் காலதாமதமாகிறது. ஆகவே, ஆர்.டி.ஓ. பார்த்து ஒரு புது ரூட் திறப்பதற்கு அவசியம் என்று கருதினுல் உத்தரவு கொடுக்கலாம் என்றே செய்யலாம். வேண்டுமானுல் அவர் உத்தரவுக்குமேல் அப்பீல் செய்துகொள்ள இங்கே வரும்படி செய் தால் போதும். இதையும் ஆலோசித்து முடிவு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. எஸ். மாதவன் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது பேசும்போது சில கனம் அங்கத்தினர்கள் பர்மிட் கொடுக் கும் முறையில் நிர்வாக அதிகாரியைக் கலெக்டராக வைப்பதா, வேண்டாமா என்பதைப் பற்றிச் சுட்டிக்காட்டினுர்கள். இது 1957-ம் ஆண்டு விவா திக்கப்பட்டதாகும். எங்களுடைய கொள்கை என்னவென்ருல் மத்திய சர்க்காருடைய சட்டப்படி இதற்கென்று தனியாக ஒரு ஸ்தாபனத்தை அமைத்து அதற்கு சார்மென் என்று நியமித்து—அந்த சார்மெனுக்கு நீதிபதியின் அனுபவம் இருக்க வேண்டும்—அவருக்கு உதவியாக இன்னும் சில பேர்களை நியமிக்க வசதியிருக்கும்படி நமது மாநிலத்திலும் மாற்றி யமைக்கப்படவேண்டும் என்று கருதுகிறேம். ஆனுல் அரசாங்கம் கலெக் டரிடமே அப்பொறுப்பை ஒப்படைத்த காரணத்தினுல் அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவம் என்னவென்று தெரியவேண்டும். கலெக்டர் ஏற்கனவே பல பொறுப்புடையவராக இருக்கிருர். ஐந்தாண்டுத் திட்டங்களினுல் அவருடைய வேலை நிறைய ஆகியிருக்கிறது. இந்த அதிகாரத்தையும் அவரிடமே ஒப்படைப்பதற்குப் பதிலாக நல்ல முறையில் அவ்விலாகா இயங்க, அத னுல் மக்களுக்கு நன்மை ஏற்படக்கூடிய வகையில் அதைத் தனியாகவே ஒரு ஸ்தாபனமாக அமைக்கவேண்டும் என்று குறிப்பிட்டோம். அப்படிச் செய்தால் மற்ற மாநிலங்களைப் போல இந்த மாநிலத்திலும் செயல்பட ஒரு வாய்ப்பு இருக்குமா என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க

[திரு. எம். பக்தவத்சலம்] [13th March 1963

கிறார்கள். பஸ்களை நாஷனலைஸ் செய்தால்தான் சோஷயலிஸம் என்று இல்லை. பப்ளிக் செக்டார், ப்ரைவேட் செக்டார் இரண்டும் இருக்கின்றன. வரிகளாக எவ்வளவு வாங்க முடியுமோ அதை வாங்குகிறோம். மேலும் அரசாங்கம் எல்லாவற்றையும் தன் தலையில் போட்டுக் கொள்ளவேண்டிய அவசியமில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த மன்றத்தில் நகரசபைகள், முனிசிபாலிட்டிகள் பஸ் சர்வீஸ் நடத்த வேண்டுமென்பதைப் பற்றியும், மீடியம் ரூட்ஸ், ஷார்ட் ரூட்ஸ் இவைகளை இப்போது ஏற்பட்டிருக்கிற பஞ்சாயத்து யூனியன்களுக்காக கொடுக்கலாம் என்ற யோசனையை எதிர்கட்சி சார்பில் பல முறைகள் நாங்கள் சொன்னோம். இதைக் கொள்கை வழிகூடாது என்று சர்க்கார் நினைக்கிறதா ? அல்லது அதில் என்ன இடைஞ்சல்கள் இருக்கின்றன. சோஷியலிஸம் என்பதைப் பற்றி சொல்லாமல் அதைப்பற்றிச் சொன்னால் மிகவும் நலமாக இருக்கும்.

12 30 p.m. ***கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது சோஷலிஸம் இல்லை. இங்கே கனம் அங்கத்தினர்—வேறு ஒரு அங்கத்தினர்—சொன்ன சோஷலிஸத்தைப் பற்றி, நாங்களும் படித்திருக்கிறோம் என்று தான் சொன்னேன். நகர சபைகள், பஞ்சாயத்துக்கள் பஸ் சர்வீஸ் நடத்துவதைப் பொருத்த வரையில், இதெல்லாம் நன்றாக ஆராயப்பட்டிருக்கிறது. அவர்களே கடன் வாங்கி வேலைகளை நடத்துகிறார்கள். அவர்கள் கடன் வாங்குவதும் அரசாங்கத்திடம்தான். அவர்கள் இந்த பஸ் சர்வீஸை ஏற்றுக் கொள்வது நல்லதல்ல. பொதுத் துறையில் இருக்க வேண்டும் என்று சொன்னால் அரசாங்கம் தான் நடத்த வேண்டும். பஞ்சாயத்துக்களுக்கு வேலைகளை நடத்துவதற்குப் பணம் வேண்டுமென்று சொன்னால் அரசாங்கம் மான்யம் கொடுக்கும், அது போலவே மெட்ராஸ் கார்ப்பொரேஷனுக்கும் அரசாங்கம் கொடுக்கும். இந்த பொறுப்பை அவர்களிடம் கொடுக்க வேண்டியதில்லை. இப்போது அரசாங்கம் எடுத்து நடத்துவதில் எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவு செய்து கொண்டிருக்கிறோம். நீண்ட தூர ரூட்டுகளை நாஷனலைஸ் செய்திருக்கிறோம் ; இன்னும் செய்து கொண்டிருக்கிறோம் . . . . . .

**திரு. ம. கமலநாதன் :** பஞ்சாயத்து யூனியனுக்குப் பண வசதி இருந்து கடன் கேட்காத நிலையில் இருந்தால் அப்படிப்பட்ட பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்படிப்பட்ட பஞ்சாயத்து யூனியனுக்குக் கூட கொடுக்க முடியாது. பண வசதி இருந்தால், வேறு திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. பஸ் என்பது "அட்ராக்டிவ்" ஆக இருக்கிறது என்று ஓட்ட ஆரம்பிக்கிறேன் என்றால் அதற்கு அனுமதி கொடுக்க முடியாது. அதுதான் அரசாங்கத்தின் கொள்கையும்.

ஆகையால், நீண்ட தூர ரூட்டுகளை படிப்படியாக நாஷனலைஸ் செய்து கொண்டு வருகிறோம் என்று தொழில் அமைச்சர் அவர்கள் எத்தனையோ முறை தெரிவித்திருக்கிறார்கள்—

இதற்கு ஒரு உச்ச வரம்பு வேண்டுமென்று கேட்கிறார்கள். நான் முறுபடியும் சொல்லுகிறேன், ஒன்றை வைத்துக் கொண்டு ஒன்றைச் சொல்லுவதில் பயன் இல்லை. மக்களுக்குப் போதிய வசதிகள் இருக்க வேண்டும். எல்லோரும் பஸ்ஸில் போகவேண்டும் என்று விரும்புகிறார்கள். இப்போது மக்கள் ஒரு ஃபர்லாங் கூட நடக்க விரும்புவதில்லை. மக்களுக்கு வசதியாக திறமையான ட்ரான்ஸ்போர்ட் சர்வீஸ் வேண்டும். எந்த முறையில் நடத்தினாலும்—அரசாங்கம் நடத்தினாலும், அல்லது மற்றவர்கள் நடத்தினாலும்—மக்களுக்கு வசதி ஏற்பட வேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் கருத்து. அந்த லட்சியத்தை மனதில் வைத்துக் கொண்டு தான் இதைக் கவனித்துக்கொண்டு வருகிறார்கள், கொள்கைகளை நிர்ணயித்து வருகிறார்கள், அவசியமானால் அதை மாற்றிக் கொண்டும் வருகிறார்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.



13th March 1963] [திரு. எம். பக்தவத்சலம்]

சில அங்கத்தினர்கள் ப்ரைவேட் ட்ரான்ஸ்போர்ட்டில் நியமிக்கப்படுகிற ட்ரைவர்கள் கண்டக்டர்கள் வேலைகளுக்கு ஹரிஜனங்களை வைத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி ஒரு உத்திரவை அரசாங்கம் போட முடியாது. நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்— நானும் விரும்புகிறேன். ஹரிஜனங்கள் தகுதியுடையவர்களாக இருந்தால், அவர்களுக்கு முதல் சலுகை கொடுத்துக்கூட அவர்களை நியமித்துக் கொண்டால், ஹரிஜனங்கள் பஸ்ஸில் ஏறிச் சென்று வருவது அதிகப்படியாக ஆகும் என்று அவர்களுடைய சுய நலத்தைக் கருதிக்கூட அவர்கள் வைத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை)

அடுத்தபடியாக கனம் அங்கத்தினர் பொன்னம்மாள் அவர்கள் ஹரிஜனங்களுக்கு ரூட் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ரூட் கொடுப்பதற்கென்று ஓர் உத்தரவு போட முடியாது. ரூட் கொடுக்க வேண்டும் என்றால் அவர்களுக்குத் தகுதி இருக்க வேண்டும். அவர்கள் நல்ல முறையில் ஓட்ட வேண்டும். நாமும் ஒரு பஸ் ஓட்டலாம் என்று அவசரப்பட்டு பாதகம் அடையக் கூடாது. சிலர் அந்த மாதிரி இந்தத் துறையில் ஈடுபட்டு பாதகம் அடைகிறார்கள், கடன் அடைகிறார்கள். ஹரிஜனங்களுக்குச் சலுகை கொடுக்க வேண்டும் என்றால், சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கோரிக்கைகளை கவனித்து அவர்கள் தங்களால் இயன்றதைச் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

இதிலே, முக்கியமாக இந்த மான்ய விவாதத்திலே மேற்கொண்டு இந்த ஆண்டிலே புதிய முறையில் அப்படி ஒன்றும் பிரமாதக் குற்றங்கள் இல்லை. கொள்கை பற்றியோ அல்லது நடை முறைகளைப் பற்றியோ, நிர்வாகத்தைப்பற்றியோ ஒன்றும் இல்லை. நிர்வாகம் கூடிய வரையில் நல்ல முறையில் நடக்கிறது. நல்ல முறையில் நடக்கிறது என்று சொன்னால், குறைப்பாடுகள் இல்லை என்று சொல்ல மாட்டேன். இதை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது. இந்த அடிப்படையில் கவனத்தோடு நல்ல முறையில் மக்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்கு மேலும் மேலும் கவனம் செலுத்துவோம் என்று சொல்லி எனது வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the allotment of Rs. 13,35,600 under Demand No. II—Motor Vehicles Acts—Administration be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 13,35,600 under Demand No. II—Motor Vehicles Acts—Administration."

The Demand was put and carried and the Grant was made.

## IV.—DISCUSSION FOR SHORT DURATION re FALL IN PRICE OF PADDY.

MR. SPEAKER : We have already discussed this matter for a number of days in the past. So the hon. Member Sri Mookiah Thevar may now suggest some very salient and forcible points in a very short speech.

**திரு. கே. மூக்கையா தேவர் :** தலைவர் அவர்களே, தாங்கள் குறிப்பிட்டபடி இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கக் கூடிய விலைவாசிகள் குறைவு அல்லது விலைவாசி வீழ்ச்சி எல்லாப் பொருள்களுக்கும் இருக்குமானால் சபையில் உள்ள அத்தனை பேரும் அதை வரவேற்று இருப்பார்கள். சகலமான பொருள்களின் விலையும் குறைய வேண்டும் என்பதுதான் எல்லாக் கட்சியுடைய, எல்லா மக்களுடைய விருப்பம். தற்போது நேர் மாறாக, திடீரென்று மிகவும் பாதிக்கக் கூடிய அளவில் நெல் விலை வீழ்ந்த காரணத்தினால் தான், இந்த விலை வீழ்ச்சிக்குக் காரணம் என்ன, அதற்கு அரசாங்கம் எவ்வளவு பொறுப்பு என்று இவைகளை விவாதிக்கத்தான் இது கொடுக்கப்பட்டது. தாங்கள் கூறியபடி ஏற்கெனவே பல முறை பலர் இதைப் பற்றி வற்புறுத்தியிருக்கிறார்கள் பேசியிருக்கிறார்கள் அப்படிப் பேசியிருந்தும், வற்புறுத்தியிருந்தும் இன்னும் விடாமல் வற்புறுத்த வேண்டிய நிலை வந்தாலும் வரும், இப்படி இருக்கின்றதன் காரணமாக நாட்டிலே இருக்கும் முக்கிய பிரச்னை என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத் தான் இது கொடுக்கப்பட்டது என்று நான் முதலிலேயே குறிப்பிட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று விலை வீழ்ச்சிக்குக் காரணமாகப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அதையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது உண்மையான காரணம் என்ன என்று திட்டவட்டமாக அரசாங்கமே குறிப்பிட வில்லை. பல காரணங்களைக் கூறுகிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு கேள்வி நேரத்தின் குறிப்பிடும் போது, சீக்கிரத்தில் விலைகள் ஏறிவிடும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர் எந்த அடிப்படையில் அம் மாதிரி குறிப்பிட்டார் என்று தெரியவில்லை. பொதுவாகச் சொல்லுகிற காரணங்களில் முக்கியமானது, இந்திய சர்க்காரனது இந்த உணவுப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டுமேயல்லாது நம் செய்ய முடியாது; செய்ய வேண்டிய அதிகாரம் அவர்களிடம் இருக்கிற காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அது உண்மை தான். ஏற்கனவே இந்திய சர்க்கார் இந்த உணவு உற்பத்தியில் எவ்வளவு அக்கரை காட்டி வந்ததோ அந்த அளவுக்கு விலை விஷயத்திலும் காட்ட வேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே 300 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத் திலே 665 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே 1,250 கோடி ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டுச் செல வழித்துக் கொண்டிருக்கிறோம். இவ்வளவும் செலவு செய்த பிறகு உற் பத்தி பெருகியிருக்கிறதா என்றால் இல்லை. அதே போல வெளி நாடு களிலிருந்து ஒரு வருஷத்துக்கு 100 கோடிக்கு மேல் தானியங்கள் இறக்குமதி செய்யப்படுகிறது. இந்த ஆண்டில் பர்மாவிலிருந்து மீண்டும் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவு செய்யும் போது பெரிய நிபுணர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், இந்தியாவைப் பிடித்த பெரும் சோதனை விவசாய மக்களைப் பொருத்தது, விவசாய மக்கள் எவ்வளவு உற்பத்தி செய்கிறார்களோ அதைப் பொருத்து இந்த நாட்டு நிலைமை இருக்கிறது, மற்ற தொழில் முன்னேற்றங்களைக் கண்டாலும் கூட, பெரும்பகுதி மக்கள் விவசாயிகள் ஏழைகளாக இருக்கிறார்கள் அவர்களுடைய முன்னேற்றம் ஏற்பட்டு, அவர்களுக்கு, அதிகப்படி வருமானம் வந்து அவர்கள் நல்ல வாழ்க்கை நடத்துவது தான் முக்கியத்துவம் வாய்ந்தது என்று சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர் கள்கூட இங்கே சொல்லுகிறபோது, பட்ஜெட்டிலே சொல்லுகிறபோது நமது மாகாணத்தின் வருமானத்தில் பாதிக்கு மேல் விவசாயிகள் மூலமாகத்தான் வருமானம் கிடைத்திருக்கிறது என்று சொல்லியிருக் கிறார்கள். அவ்வளவு முக்கியத்துவம் இருக்கிறது. அதே போல திரு டாக்டர் நடராஜன் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது மாகாணத் தில் தொழில் முன்னேற்றம் இருந்தாலும் கூட, விவசாய முன்னேற்றம் அவசியம், விவசாயம் முன்னேறினால்தான் நாடு முன்னேற முடியும் என்றும், ஏனென்றால் விவசாயத்தைக் கொண்டு தான் தானியங்கள் வர வேண்டும், விவசாயம் இல்லை என்றால் வாழ்வில்லை என்றும் குறிப் பிட்டிருக்கிறார். அந்த நிலையில் விவசாய உற்பத்தியில் நமது விவசாயிகள்



மற்ற மாகாணங்களைக் காட்டிலும் முதன்மையானவர்களாக அமைந்திருக் கிறார்கள். மற்ற மாநிலங்களில் இல்லாத அளவுக்கு உற்பத்தி பெருக்கம் ஏற்பட்டிருந்தும் நமது மக்கள் அதிகமாக விவசாயத்தை நம்பி இருக்க வேண்டியிருக்கிறது. அதன் காரணமாக இதை வற்புறுத்த வேண்டியிருக்கிறது. தற்போது ஏற்பட்டிருக்கிற நெருக்கடியின் காரண மாக, சீனாவினால் ஏற்பட்டிருக்கிற ஆபத்து காரணமாக, விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்கச் செய்வது மிகவும் அவசியமாக இருக்கிறது. அதற்கு மேல் நம் ஜனங்கள் அதை நம்பி வாழ வேண்டியிருக்கிறது. அப்படி பெருக்கிக் கொண்ட ஜனத் தொகை அடிப்படையில் பார்த்தாலும் சரி ஜனநாயக அடிப்படையில் பார்த்தாலும், வாங்கி வந்த ஓட்டு அடிப்ப படையில் பார்த்தாலும், ஏழ்மை—தாழ்மை என்ற அடிப்படையில் பார்த் தாலும், சர்வ சாதாரணமாக இந்த நாட்டில் இருக்கிற விவகாரம் என்று பார்த்தாலும், விவசாயம் தவிர வேறு இல்லை. அதையே நம்பி வாழ வேண்டும் என்று இருக்கிறது. அப்பேர்ப்பட்ட பிரச்னைக்கு ஒரு முக்கியத் தீர்ப்பு காண வேண்டும், அந்தத் தீர்வு காண்பதற்காகத் தான் இது கொண்டுவரப்பட்டது.

பல காரணங்கள் சொல்லப்பட்டதில் இந்த ஒரு காரணம் இந்த ஆண்டு உணவு உற்பத்தி பெருகி இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. பிறகு இது உண்மைதானா என்று பார்க்கும்போது திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் இக்கனமிக் சர்வே ரிப்போர்ட்டைக் கொடுக்கும்போது மத்திய பார்லிமெண்டில் குறிப்பிட்டார்கள். "சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டில் 1.1 மிலியன் டன் உற்பத்தி குறைந்திருக்கிறது என்று." அப்படியிருக்கும்பொழுது, நமது மாகாணத்தில் மட்டும் ஸ்பெஷலாக எப்படி உற்பத்தி அதிகமாகப் பெருகியிருக்கின்றது என்று தெரியவில்லை. உண் மையில் அப்படியிருந்தால் அதை வரவேற்கிறோம். எந்த புள்ளி விபர அடிப்படையில் சொல்லுகிறார்கள் என்று தெரியவில்லை. ஏற்கனவே நஷ்டம் ஆகியிருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் பெரிய நஷ்டங்கள், சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. உற்பத்தியே குறைந்திருக்கிறது. பல இடங்களில் சரியான மழை பருவ மழை பெய்யவில்லை. அறுவடை நேரத்தில் Non-seasonal heavy rains காரணமாக பெரும் சேதம் ஏற்பட்டது. அந்த நிலைமையில் அந்தக் கணக்கைப் பார்க்கவேண்டும். அடுத்தபடியாக, மலையாளத்திற்குப் போகக்கூடிய அளவிற்கு நமது மாகா ணத்தில் சர்ப்ளஸ் இருந்தது. இங்கிருந்து அண்டை மாகாணத்திற்குப் போய்க்கொண்டிருந்தது. 1½ லட்சம் டன் அளவுள்ள தானியம் போய்க் கொண்டிருந்தது. அதனால் நமக்கு விலைவாசி உயர்ந்து கொண்டிருந்தது. விலை நிர்ணயமாக இருந்தது என்று சொல்லப்பட்டது. இப்பொழுது அம் மாதிரி போவதற்கு வழியில்லை என்று சொல்லுகிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று தெரிந்தாக வேண்டும். இதுவரையில் நமது மாகா ணத்திற்கு ஆந்திரா அரிசி வந்து, அந்த அரிசியுடன் நமது மாகாண அரிசி யும் சேர்ந்து கேரள மாகாணத்திற்குப் போய்க்கொண்டிருந்தது, இப் பொழுது போவதற்கு வாய்ப்பு இல்லை. அந்த மார்க்கெட்டை நாம் ஏன் இழந்தோம்? அதுதான் விலைவீழ்ச்சிக்குக் காரணமா என்று பார்க்கவேண்டியிருக்கிறது.

அதுபோல, அகில இந்திய ரீதியில் 'டைனிங் தி கிரெடிட்' என்ற அடிப்படையில் பாங்குகள் மூலம் நெல்லை வைத்துக்கொண்டு கடன் கொடுப்பது நிறுத்தப்பட்டுவிட்டது. உற்பத்தி காலத்தில் பாங்கு மூலம் கடன் பெற்று நெல்லை வாங்கி ஸ்டாக் செய்து, பின்னால் மற்றவர்களுக்கு விற்பதற்கு வாய்ப்பு இருந்தது. அதனால் 'காம்பெடெடிவ் மார்க்கெட்' இருந்தது. 'காம்பெடெடிவ் மார்க்கெட்டுக்கு' சந்தர்ப்பம் இல்லாத அள வுக்கு பாங்குகளின் மூலம் பினான்ஸ் செய்யும் வசதி நிறுத்தப்பட்டுவிட்டது. இது விலை வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருக்கலாம். சமீபத்தில் இது பற்றி கேட்ட பொழுது இது தான் முக்கிய காரணம் என்று சொல்லு கிறார்கள். அகில இந்திய ரீதியில் கிரெடிட் கண்ட்ரோல் செய்ததால், அது நெல் விலை சம்பந்தமாக பெரிய பாதிப்பை ஏற்படுத்திவிட்டது என்று அவர்களே குறிப்பிடுகிறார்கள். ஆகவே, பல இடங்களிலும் தானியங்களை வாங்கி மில் முதலாளிகள் ஸ்டாக் பண்ணாமல் இருக்கிறார்கள். ஒரு மில்

[13th March 1963

திரு. கே. மூக்கையா தேவர் : இன்னும் முடிக்கவில்லை அதற்குள் மந்திரி அவர்கள் பேசிவிட்டார்கள்...........

கனம் சபாநாயகர் : கனம் அங்கத்தினர் அவர்கள் "ஸைடு டிராக்" பண்ணக்கூடாது, பாயிண்ட்டாக விஷயங்களைச் சொல்லவேண்டுமென்ப தற்காக மந்திரி அவர்கள் அவ்வப்பொழுது குறுக்கிட்டுப் பேசியிருக்கிறார்கள்.

திரு. கே. மூக்கையா தேவர் : விவசாயிகளுக்கு ஆகிற உற்பத்திச் செலவை கணக்கிட்டுப் பார்த்து, அந்த அடிப்படையிலே விலையை நிர்ணயம் செய்யவேண்டும். அமெரிக்காவில் விவசாயிகள் பாதிக்கப்படாத வண்ணம், "பாரிடி ஆப் பிரைஸஸ்" என்ற முறையில் விலைவாசி இருக்கிறது. அவர்கள் நல்ல முறையில் பண்ணை வைத்து நடத்தி நமக்கெல்லாம் கொடுக்கிறார்கள்...........

கனம் சபாநாயகர் : அங்கத்தினர் அவர்களுடைய பாயிண்டு மில் முதலாளிகளிடமிருந்து வாங்குவதால் விலை குறைந்துபோய்விட்டது என்பது அடுத்த பாயிண்டு ஏதாவது இருந்தால் அதைச் சொல்லுங்கள்....

திரு. கே. மூக்கையா தேவர் : அடுத்தபடியாக, கேரளா போன்ற மாகாணங்களுக்கு நமது மாகாணத்திலிருந்து அரிசி போகவில்லை. அந்த மார்க்கெட் இல்லை. அதன் காரணமாக விலை குறைந்துவிட்டது....

கனம் சபாநாயகர் : இதை கனம் அங்கத்தினர் முன்னமேயே சொல்லி விட்டார். அப்புறம் புதிதாக ஏதாவது பாயிண்டு இருந்தால் சொல் லுங்கள் . . .

திரு. கே. மூக்கையா தேவர் : அதோடு, மத்திய சர்க்கார் விலை நிர்ணயம் செய்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அந்த முறையில் நாம் இதை கழித்துக்கட்டக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன். முக்கியமாக தங்கக் கட்டுப்பாடு வந்ததன் காரணமாக, "டிஸ் டிரஸ் ஸெல்லிங்" என்கிற முறையில், நெல்லை விற்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கொஞ்ச நாட்கள் வைத்து விற்பதற்கு அவர்களுக்கு வாய்ப்புக் கிடையாது. கோடவுன் வசதிகள், விவசாய பாங்கு வசதிகள், இவைகள் கிடையாது. சமீபத்தில் தங்கக் கட்டுப்பாடு வந்ததன் காரணமாக, அவர்கள் அடமானமாக வைத்திருக்கும் நகைகளை மீட்க வேண்டும் என்று நோட்டீஸ் வந்து, வற்புறுத்தலின் பேரில் நெல்லை விற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. கிடைத்த விலைக்கு நெல்லை விற்றிருக்கிறார்கள். குறிப்பாக, நமது மாகாணத்திலே, இந்த சமயத்தில்தான் வரிகளையும் சர்க்காரிடமிருந்து வாங்கியிருக்கும் கடன்களையும் கொடுக்க வேண்டியிருக் கிறது. Collection season இந்த சந்தர்ப்பத்தில் கடன்களை யாவது தவணைகளில் திருப்பிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். நமது நாட்டின் முதுகெலும்பு போன்ற விவசாயிகளுக்கு வரியைக் குறைத்தால் கூட அது ஒரு பெரிய புண்ணிய மாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது அரசாங்கத்தில் இன்னொரு எண்ணம் இருந்தது. New Economic Policy அதாவது விவசாயப் பொருளின் விலை குறைந்தால், மற்ற பொருள்களின் விலை குறையுமென்ற எண்ணம் இருந்தது. ஆனால் நெல் விலை குறைந்தும், மற்ற பொருள்களின் விலை குறையவில்லை. ஏறக்குறைய நான்கு மாதங்கள் இதே நிலை நீடிக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. பொதுப்படையாகச் சொல்லும்பொழுது, அகில இந்திய ரீதியாக இருக்கலாம் என்று சொல்லப் படுகிறது. உற்பத்தி பெருகவில்லை. நமது மாகாணத்தில் நெல் விலை குறைந்திருக்கிற அளவுக்கு வேறு மாகாணங்களில் குறையவில்லை. அரிசி விலை கூட குறையவில்லை. ஆகவே இந்த ஃப்ளோர் பிரைஸை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விலை ஏற்றத்தைத் தடுக்க எப்படி சர்க்காரே நியாய விலைக் கடைகளை வைத்து நடத்துகிறதோ, எப்படி பம்பாயில் தங்கத்தை சர்க்காரே வாங்கி விற்றதோ, அதே போல் நெல் விலை வீழ்ச்சியை தடுக்க மத்திய சர்க்காருக்கு



13th March 1963] [திரு. கே. மூக்கையா தேவர் ]

நெல் வேண்டுமென்றால் மத்திய சர்க்காரே ஸர்ப்ளஸ் ஸ்டாக்கை வாங்கி வைத்தால், நெல் விலை ஏற வழிவகுக்க வாய்ப்பு ஏற்படும். விலைவாசி இதுபோல பொருள்களுக்கு வரவேண்டும். விவசாயிகளுடைய வருமானத் தைப் பாதிக்காத வகையிலே, அவர்களுடைய வருமானத்தை உறுதிப்படுத்தும் அளவிலே, விலைவாசி இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The hon. Member must initiate the discussion on the subject and give room for other hon. Members also to take part in the discussion and support him.

நீங்களும், அமைச்சரும் மட்டும் பேசி முடித்தால் அது டிஸ்கஷன் ஆகாது.

* திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : தலைவர் அவர்களே, விலைவாசி இறங்கியிருக்கிறது என்பது ஓரளவு உண்மை தான். விலைவாசி இறங்க வேண்டுமென்று விவசாயிகளும் நாங்களும் சொல்லுகிறோம். ஆனால் அப்படி விலை இறங்குவதில் ஒரு அளவு இருக்க வேண்டும். அக்ரிகல்சுரல் புரொடக்ஷன் கமிட்டி ரிப்போர்ட்டில், விலைவாசியைப் பற்றிச் சொல்லும்பொழுது, கீழ்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"The greatest incentive to the agriculturists to go all out and increase the yields in their lands to the utmost extent is to assure them of a reasonable price for their produce. At present this may not be an urgent problem because the prices now ruling for agricultural produce are not unattractive. But, there have been occasions in the past when a downward trend in the prices of agricultural produce had a depressing effect on agricultural production and such occasions may well arise again in the future."

இதற்கு அசோக்மேதா தலைமையில் அமைக்கப்பட்ட ஃபுட் க்ரெயின்ஸ் விசாரணைக் கமிட்டியில் அதற்குப் பரிகாரம் சொல்லியிருக்கிறது:

"The Committee considered that the Price Stabilization Board should examine not only food prices as such but also the prices of all consumer and producer goods, for example, cloth, oil-cakes, fertilizers, iron and steel, etc., study the various margins charged at different stages before sale to the cultivator and make appropriate suggestions. These recommendations of the Food-grains Enquiry Committee have not yet been implemented by the Government of India."

அந்த முறையில்தான் ஒரு பிரைஸ் ஸப்போர்ட் பாலிஸி வேண்டு மென்று கீழ்கண்டவாறு சொல்லியிருக்கிறார்கள்:

"Hence, in the interests of stepping up agricultural production, there can be no two opinion regarding the desirability of Government adopting a price support policy and guaranteeing a minimum price to the agriculturist for his produce."

அதாவது ஒரு மினிமம் பிரைஸ் வேண்டும். இப்பொழுது ஃப்ளோர் பிரைஸ் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் காஸ்ட் ஆப் புரொ டக்ஷன் என்னவென்று பார்க்கவில்லை. மாகாண விவசாய அட்வைசரி போர்டில் ஒரு கமிட்டி போட்டு, காஸ்ட் ஆப் புரொடக்ஷன் என்ன ஆகிறது என்று கவனிக்க கோரப்பட்டது. ஆனால் இன்று வரையிலும் எந்தவித மான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அப்பொருள்தான் விலைகூடியிருக் கிறது, அல்லது குறைவாக இருக்கிறது என்று திட்டவட்டமாக சொல்ல முடியவில்லை. எல்லா மாகாணங்களிலும் இந்த மாதிரி ஒரு என்குயர்ரி நடத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

"This fact has been repeatedly brought home by the Madras State Food Advisory Committee who have desired that the Govern-

முடியாது. அந்த நிலைமையில் பார்க்கும் போது கலெக்டரை விட சிறந்த அதிகாரி வேறு யாரும் இருக்க முடியாது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் ஒப்புக் கொள்வார்கள். பஸ்கள் ஓடுகின்றன என்றால், மக்களுடைய வசதிகள் கவனிக்கப்படுகின்றனவா, விபத்துக்கள் தவிர்க்கப்பட்டு வருகின்றனவா, போன்றவற்றையெல்லாம்கூடக் கவனித்து முடிவு செய்ய வேண்டியிருப்பதால் அந்தப் பொறுப்பு கலெக்டர் அவர்களிடத்தில் இருப்பதுதான் நல்லது என்பது இந்த அரசாங்கத்தின் கருத்து. கலெக்டர் அவர்களின் முன்பு வழக்கறிஞர்கள் வந்து வாதாடுகிறார்கள். நீதிபதிகளாக நியமிக்கப்படுகின்றவர்களுக்கும், வழக்கறிஞர்களாக வாதாடுகிறவர்களுக்கு மட்டுந்தான் இன்றைய தினம் சட்டம் தெரியும் என்ற நிலை இல்லை.

கலெக்டர்களும், மற்ற அதிகாரிகளும் எவ்வளவோ சட்டங்களைக் கற்றுணர்ந்து அதன்படி நடந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எவ்வளவோ தீர்ப்புக்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது. சென்னை நகரில் கௌரவ மாஜிஸ்ட்ரேட்ஸ் என்று எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள், மாவட்டங்களிலும் இருக்கிறார்கள். அவர்கள் சீரிய வகையில் நீதி செலுத்தி வருகிறார்கள் என்பது அங்கத்தினர்கள் அறிந்ததே. ஆகவே கலெக்டர் ஆர். டி. ஏ.-ஆக இருப்பதை மாற்றுவதற்கில்லை என்று சொல்ல விரும்புகிறேன். சென்னை நகரைப் பொறுத்தவரை கலெக்டர்கூட இல்லை. போலீஸிடம்தான் இது ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார்கள். சென்னை நகரம் பொறுத்தமட்டில் இங்கு முற்றிலும் தேசிய மயமாக்கப்பட்டிருக்கிறது. பஸ் ரூட்டைப் பொறுத்த மட்டில். வெளி ஊர்களிலிருந்து வருகிற பஸ்கள் தான் இங்கு வருகின்றன. இவைகள் ரெஜிஸ்தர் செய்யப்பட வேண்டியது வெளி ஊர்களில். சென்னை நகரம் சம்பந்தப்பட்ட வரை ரூட் கொடுக்கும் பிரச்னை இல்லை. சென்னை நகரில் பஸ் சர்வீஸை சர்க்கார் நடத்துகிறது. இங்கு வேறு பல காரியங்கள் கவனிக்கப்பட வேண்டும். முக்கியமாக டிராபிக். டிராபிக் என்று தனி இலாகாவே போலீஸில் இருக்கிறது. அதை விரிவு படுத்தவேண்டுமென்றுகூட கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். போலீஸாரே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்த ஏற்பாடு செய்யப்பட்டு நடைமுறையில் இருக்கிறது. இதையும் மாற்ற வேண்டிய அவசியம் இல்லை. இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போதாது அல்லது இதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று குறிப்பிடப்பட்டது. அது அப்போதைக்கப்போது கவனிக்கப்பட்டு வருகிறது. பஸ் கட்டணங்கள் பற்றி குறிப்பிடப்பட்டது. கட்டணம், அதிகபட்சம் இவ்வளவுக்கு மேல் போகக் கூடாது என்று வைத்திருக்கிறோம். ஒரே ரேட்டாக வைக்க வேண்டுமென்றால் வெவ்வேறு மைல், வெவ்வேறு வகையில் ஓட்டுவது இப்படி பல வகைகள் இருக்கின்றன. அதிக பட்சம் இவ்வளவிற்கு கூடுதலாக இருக்கக் கூடாது என்று சட்டம் செய்வது முறையே தவிர இந்தக் கட்டணம்தான் போட வேண்டுமென்றால், சட்டத்தில் குறிப்பாக இன்னின்ன வகையில் என்று விவரிக்கக்கூட முடியாது போய்விடும். பலவிதமான பஸ்கள் பலவிதமான ரூட்களில் ஓடுகின்றன. அதிக பட்சம் இவ்வளவு என்று போடப்பட்டிருக்கிறது. போட்டி காரணமாக கட்டணத்தைக் குறைத்தால் ஏறுகிறவர்களுக்கு லாபம். சில சமயம் குறைக்கிறார்கள். சில சமயங்களில் அதிகப்படுத்துகிறார்கள். அதிகப்படுத்த வேண்டிய நிமித்தம் இருந்தால் அதிகப்படுத்துகிறார்கள். போட்டி காரணமாக அவர்கள் அவசியம் இல்லாமல் அதிகப்படுத்த மாட்டார்கள். ஆனால் இந்த வரம்பிற்குள்தான் அதிகப்படுத்தலாம். இப்போது மத்திய அரசாங்க வரிகள் காரணமாக டீஸல், பெட்ரோல், மோட்டார் ஸ்பேர் பார்ட்ஸ் இதற்கெல்லாம் இப்போது கொஞ்சம் செலவு அதிகமாகிறது என்று சொன்னார்கள். அது வேறு விஷயம். அது இந்த விவாதத்தில் கவனிக்கக்கூடிய விஷயம் அல்ல. ரூட்கள் கொடுப்பது கலெக்டர் ஆர்.டி.ஏ.-யாகக் கொடுக்கிறார் என்றால் அதற்கு மேல் அப்பீல் இருக்கிறது. டிரான்ஸ்போர்ட் ட்ரிப்யூனல் ஒரு ஜில்லா நீதிபதிதான். ஆர்.டி.ஏ. கொடுக்கும் பெர்மிட் அல்லது லைசென்ஸ் மாற்றப்படுகிறது என்று சொன்னார்கள். உயர் நீதி மன்றத்தில்கூட ஒரு நீதிபதி கொடுத்த தீர்ப்பை இன்னொரு நீதிபதி மாற்றுகிறார். அவரவர்களுக்கு நியாயம் என்று தோன்றுவதைச் செய்கிறார்கள். ஒரு நீதிபதி ஒரு தீர்ப்பு கொடுத்து



அதே அந்தஸ்தில் உள்ள வேறு ஒரு நீதிபதி அப்பீலில் உட்கார்ந்து அத்தீர்ப்பை மாற்றுகிறார்கள் என்றால் அவர் முன்பு கொடுத்த தீர்ப்பு தவறு என்றோ அல்லது அவர்கள் வேண்டுமென்று தவறான தீர்ப்பு கொடுத்தார்கள் என்றோ எப்படிச் சொல்ல முடியும்? இரண்டாவது நீதிபதி அதை மாற்றியிருக்கலாம். அதற்கு மேலும் அதை உயர் நீதி மன்றம் மாற்றலாம். ஆக அவரவர்களுக்கு தோன்றுகிறபடி, அவர்களுக்கு சரியானது என்று தோன்றியபடி நீதி செலுத்துகிறார்கள். வேண்டுமென்றே தவறுகள் செய்கிறார்கள் என்றால் அது கவனிக்கப்பட வேண்டிய விஷயம். ரூட்கள் கொடுப்பதில் தாட்சண்யப்படுகிறார்கள் அல்லது வெளியிலிருந்து செல்வாக்கை உபயோகப்படுத்துகிறார்கள் என்றெல்லாம் வழக்கம் போல் சொல்வது ஒரு வகையிலும் சரி அல்ல. நியாயமல்ல, அது ஒரு பிரமையே. தங்களுக்கு கிடைக்காவிட்டால் எவ்வளவோ எல்லாம் சொல்கிறார்கள். நான் இதைப் பற்றிச் சொல்லவில்லை. தங்களுக்கு கிடைக்காவிட்டால் பலர் அபாண்டம் சொல்லத் தயாராயிருக்கிறார்கள் என்பதை நான் அன்றாடம் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அவர்களுக்கு கிடைக்கவில்லை, இன்னொருவருக்கு கிடைத்து விட்டதே என்ற பொறாமை. ஆகவே தாட்சண்யப்படுகிறார்கள், செல்வாக்கு உபயோகப்படுத்துவதினால் கொடுக்கிறார்கள் என்றெல்லாம் சொல்வது தவறு. பின்னர் ஸ்டே ஆர்டர் பற்றி சொல்லப்பட்டது. இந்த அரசாங்கம் இப்போது சாதாரணமாகக் கொடுப்பதில்லை. முன்பு அந்த அதிகாரம் இருந்தது. அதையொட்டி சில புகார்கள் வந்தன, சில ரெப்ரசென்டேஷன்ஸ் வந்தன, அதைப் பார்த்து சில உத்தரவுகள் போட்டோம். ஆனால் அதற்கு மேல் இந்த அரசாங்கம் தலையிட வேண்டாம் என்ற கொள்கையை இப்போது அரசாங்கம் அனுசரித்து வருகிறது. எல்லாம் ட்ரிப்யூனல் முடிவு செய்யட்டும்; கோர்ட்டாரே முடிவு செய்யட்டும் என்று இருக்கிறது. முன்பு போடப்பட்ட உத்தரவுகளை ஒவ்வொன்றாக வெக்கேட் செய்ய கோர்ட்டாரே முடிவு செய்யட்டும் என்று விடப்பட்டு வருகிறது. வெக்கேட் செய்வதில் ஒன்றிரண்டை முடிவு செய்யாமல் இருக்கலாம். உத்தரவு போடப்பட்டிருக்கிறதென்றால் அந்த இஷ்டம் போல் மாற்றுவதில்லை. அவற்றை மேலும் நன்கு பரிசீலித்து மாற்றுவது பற்றி முடிவு செய்யலாம் என்றுதான் இப்போது கவனிக்கப்பட்டு வருகிறது. லாரிகளை இரவு நேரங்களில் ஓட்டுவதைத் தடை செய்வது பற்றி குறிப்பிடப்பட்டது. இதில் பல இடைஞ்சல்கள் இருக்கின்றன. பங்களூர் போன்ற தூர இடங்களிலிருந்து நமக்கு இரவில் பல பொருள்கள் வரவேண்டியிருக்கின்றன. பழம் போன்ற அழுகும் பொருள்கள் இரவில் வந்தால்தான் அவை பயன்படும். லாரிகள் இரவில் ஓடுவதால் விபத்துக்கள் ஏற்படுகின்றன என்று சொல்லப்பட்டது. பகலில் ஓடினால் பகலில் விபத்துக்கள் ஏற்படும். ஸ்பீடைக் குறைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதில் அரசாங்கத்திற்கும் அக்கறை இருக்கிறது. அது சுலபமாக குறைக்கக் கூடியதல்ல. அதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. 50 மைல்களுக்கு ஒரு இடத்தில் கண்காணிக்கவேண்டுமென்று சொன்னார்கள். 25 மைலில் கூட கண்காணிக்கப்பட்டு வருகிறது. லாரி ஓட்டுபவர்கள் மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு நமக்கும் இருக்கிறது என்று உணர வேண்டும். விளக்குகள் பற்றிச் சொன்னார்கள். மெர்க்குரி விளக்குகள் வேண்டாமென்று சொன்னார்கள். லாரிகளை வேகமாக ஓட்டுகிறார்கள், 'ராஷாக' ஓட்டுகிறார்கள், விளக்குகளை டிம் செய்வதில்லை என்று சொன்னார்கள். இரவு லாரிகளில் வெளிச்சம் இருந்தால் எதிரிலே வருகிறவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். வெளிச்சம் குறைவாக இருந்தால் ஓட்டுகிறவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். சில சமயங்களில் விளக்கு மங்கி விட்டால் ட்ரைவர்கள் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. டிரைவர்கள் ஓட்டுவதில் கவனமாக இருக்க வேண்டும். பிரயாணிகளும் இவர்களுடன் பேசக் கூடாது. கண்டக்டர் மட்டுமல்ல. மற்றவர்களும் டிரைவருடன் பேசக் கூடாது. இவையெல்லாம் கவனிக்கப்பட்டுவருகிறது. வேரியேஷன் பற்றிச் சொன்னார்கள். இதை ஒரு விதியாக வைத்துக் கொள்ள முடியாது. மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு சொல்லக்கூடாது. மக்களுக்கு எவ்வளவு சிறந்த சேவை புரியப்படுகிறது என்ற அடிப்படையில் ஆராய்ந்து முடிவு செய்யப்படுகிறது. பின்னர் பஸ்களை நாஷனலைஸ் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நான் முன்பே கூறியிருக்கிறேன். நாங்களும் சோஷியலிஸம் படித்திருக்கிறோம். இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் படித்திருக்[illegible]

ment should undertake an enquiry by experts on the cost of production in the different districts. We feel that such a limited enquiry confined to one State alone may not be adequate."

மேலே கூறியபடி, மாகாண ரீதியில் அல்லாமல் அகில இந்திய ரீதியில் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஜில்லா ரீதியாகவோ, மாகாண ரீதியாகவோ, காஸ்ட் ஆப் புரொடக்ஷன் என்ன வென்று தெரிந்தால்தான், விலைவாசி கூடியிருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா என்பதைப்பற்றிச் சொல்ல முடியும். அதற்கு வழி செய்யவில்லை. ஃப்ளோர் பிரைஸ் நிர்ணயம் பண்ணும்பொழுது தங்கக் கட்டுப்பாடு வரவில்லை. கிராமப் புறங்களிலே உள்ளவர்கள் நகைகளை அடகு வைத்து, அசன்பேரில் 5 கோடி அல்லது 10 கோடி வாங்கிக்கொண்டிருந்தார்கள். சாதாரணமாக இப்பொழுது நாம் பாங்குகளில் நகைகளை வைத்து கடன் வாங்க முடியாது. கட்டுப்பாடு இருந்துகொண்டிருக்கிறது. நெல்லை அடகு வைத்து, 10 சதவீதத்திற்குமேல் பணம் வாங்க முடியாது. முன்பெல்லாம் சாதாரண வியாபாரிகள், நகைகளை அடகு வைத்து வாங்கவோ, கொடுக்கவோ செய்து கொண்டிருந்தார்கள். இப்பொழுது வாங்கவும் முடியவில்லை, கொடுக்கவும் முடியவில்லை. வியாபாரம் படுத்துவிட்டது என்று சொல்கிறார்கள். சினிமாக் கொட்டகைகளில் கூட வருமானம் குறைந்துவிட்டது என்று சொல்லுகிறார்கள், முதலாளிகள் பேப்பர்களில் படிக்கிறார்கள். சாதாரணமாக மாத வருவாய் உள்ளவர்கள் 10-ந் தேதி வரை தங்கள் வருவாயிலிருந்து செலவு செய்து கொண்டு வந்தார்கள். 10-ந் தேதிக்கு மேல் தங்களுடைய மனைவியின் நகைகளை அடகுவைத்து அவசரக் காரியங்களுக்காக கடன் வாங்கி செலவழிக்கக் கூடிய நிலைமை இருந்தது. ஒரு மெடிகல் ஸ்டோர்காரரைக் கேட்டால் கூட விற்பனை குறைந்து விட்டது, விற்பனை இல்லை என்று சொல்லுகிறார்கள். எங்கே போனாலும் பணம் கிடைக்க வில்லை, பணமுடை ஏற்பட்டிருக்கிறது. வில்லேஜ் இந்த பாங்கிங் வசதிகளை ஏற்பட்டதால் விலை இறங்கிவிட்டது. ஃப்ளோர் பிரைஸ் நிர்ணயம் செய்யும்பொழுது தங்கக் கட்டுப்பாடு இல்லை. ஆகவே, இப்பொழுது அதை மாற்ற வேண்டிய நிலையில் இருக்கிறோம். என்ன உற்பத்திச் செலவு ஆகிறது, என்ன மிச்சமாகும் என்பதைப் பார்க்க வேண்டும். சாதாரணமாக, இருபோகம் உள்ள நிலத்தில் செலவு போக ரூ. 180 கிடைக்குமென்று கணக்குப் போட்டிருக்கிறது. அதாவது, 1958-59-ல் இந்த விலையை வைத்து கணக்குப் போடப்பட்டிருக்கிறது. இப்பொழுது இருக்கும் விலையை (ரூ. 35 ஆக இருக்கிறது) வைத்துக் கொண்டு பார்த்தால் ரூ. 100 தான் கிடைக்கும். நான்-டெல்டா ஏரியாவில் அவ்வளவு இன்கம் கிடையாது. இந்த தங்கக் கட்டுப்பாடு வந்ததினால் ஃப்ளோர் பிரைஸைக் கூட்ட வேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான கோரிக்கை. மில்லர்கள் 10 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்று கேட்கப்படுகிறது. தஞ்சை ஜில்லாவில் எப்படி நடக்கிறதென்று எனக்குத் தெரியாது. ஆனால் பற்றாக்குறை ஜில்லாக்களிலே இது கம்பல்ஸரியாக இருக்கிறது. மில்காரர்களை பார்த்து "நீ 10 சதவிகிதம் கொடுத்துத்தான் தீர வேண்டும் என்று சொல்லக் கூடிய நிலைமை இருக்கிறது. தஞ்சையைப் பொறுத்தவரையில் கொள்கை வரவேற்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால் பற்றாக்குறை ஜில்லாக்களில் மிராசுதார்கள் பயப்படுகிறார்கள். 10 கோட்டை நெல் பிடித்தால், 10 சதவிகிதம் கொடுக்கக்கூடிய நிலைமை வந்தால் மிச்சம் இருக்காது என்று பயப்படுகிறார்கள். "கம்பல்ஸரி" என்று எழுதது மூலம் இல்லாவிட்டாலும், மறைமுகமாக இருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மதுரையில் தஞ்சை ஜில்லாவைப்

1-00 p.m. போன்று மதுரை மில்காரர்கள் பத்து பர்செண்ட் கொடுக்கிறேன் என்று சொல்லுகிறார்கள். இந்த மாற்றத்தையும் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** மதுரை சம்பந்தப்பட்ட மட்டிலும் திருநெல்வேலி டெல்டா ஏரியாவிலும் இப்படி இருக்கலாம். டெல்டா ஏரியாவில் நிச்சயமாக, இரண்டு போகம் விளையக் கூடிய இடங்களில கொடுக்க முன் வரலாம். அங்கேயெல்லாம் நெல் இன்றுக்குறைந்து



விடுமோ என்று பயப்படுகிறார்கள். விலை குறைந்து கொண்டு இருப்பதால்
பத்து பர்செண்டு வாங்குவதை தஞ்சை ஜில்லாவில மட்டும் வைத்துக்
கொண்டு பாக்கி இடங்களை விட்டுவிடலாம். தஞ்சை ஜில்லாவில்
ஜாஸ்தியாககூடக் கொடுக்க தயாராக இருக்கலாம். அதனால் மற்ற இடங்
களில் கொந்தரவு பண்ண வேண்டாம் என்பது என்னுடைய தாழ்மை
யான அபிப்பிராயம். 1957-ல் ப்ரைஸ் பிக்ஸ் பண்ணியது போல் வைத்
துக்கொள்ளலாம். ஸ்டேட் ட்ரேடிங் வைத்துக்கொள்ளலாம். இப்பொழுது
கனடா தேசத்திலும் இத்தாலி தேசத்திலும் வைத்திருப்பதாக தெரிய
வருகிறது.

" For instance, in Canada there is little free trade in wheat. Privately-owned elevator companies and producer organisations act as agents of the Board for the purpose. . ."

" In Japan, rice which is the principal foodgrain consumed, is purchased on a monopoly basis by the Food Agency of the Government. . ."

அந்த மாதிரி இங்கேயும் செய்யலாம். இடாலியில் செய்திருக்
கிறார்கள். ஜப்பானில் செய்திருக்கிறார்கள். விலைவாசி இறங்கும்
நிலைமையில் இருப்பதால் இதைச் செய்யலாம். பம்பர் க்ராப்ஸ் இருக்கும்
இடத்திலும் இதை வைத்துக்கொள்ளலாம். அந்த இடங்களில் ஸ்டேட்
ட்ரேடிங் நடத்தலாம். விலைவாசி இறங்குவதற்கு காரணம் என்ன, ஏன்
திடீரென்று குறைகிறது முதலியவைகளைக் கண்டு பிடிக்க ஸ்டேட் ட்ரேடிங்
கமிட்டி ஒன்று போட்டு விசாரணை செய்து ஒரு முடிவு செய்ய வேண்டும்
என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை இத்துடன் முடித்துக்கொள்
ளுகிறேன்.

* **திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் தலைவர்
அவர்களே, பொதுவாக விவசாய வரியைப்பற்றி பேசுகிற நேரத்
திலும் சரி விவசாயிகளுக்கு நன்மையைச் செய்ய வேண்டும் என்று
பேசுகிற நேரத்திலும் சரி விவசாய மானிய கோரிக்கையைப் பற்றி பேசு
கிற நேரத்திலும் நெருக்கடியான நிலைமையில் அவசர அவசரமாக பேச
வேண்டியதாக இருக்கிறது. பசி நேரத்தில் தான் அவைகள் வருகின்றன.
அவசர அவசரமாக பேசி விட்டு திடீரென்று முடிக்க வேண்டிய நிலைமை
ஏற்படுகிறது. அதனால் பேச வேண்டியது எல்லாவற்றையுமே பேச முடி
யாமல் இருக்கிறது. சொல்ல வேண்டியவைகளையெல்லாம் சொல்ல
முடியாமல் இருக்கிறது. அதன் காரணமாக இன்று அதிகப்படியான
நேரத்தை ஒதுக்கிக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். மற்றவை
களைப்பற்றி பேசும்போது அதிகப்படியான நேரம் கொடுப்பது போன்று
விவசாயிகளைப்பற்றி பேசும்போதும் அதிகப்படியான நேரத்தை ஒதுக்கும்
படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி ஒதுக்கினால் தான் நலமாக
இருக்கும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : The time allotted for the discussion of this
subject is one hour. According to the rules, this time-limit cannot
be extended. If the hon. Member wants, he can sit in the Rules
Committee and persuade the Committee to change the rule and
prescribe even three hours for the discussion of such subjects. I
have absolutely no objection to it. But, as per the rule in force
just now, the time allotted cannot be extended. Moreover, I wish
to point out that during the discussion on the Agriculture Demand
and also the Additional Assessment and Additional Water Cess
Bill, 1963, one hon. Member after another have spoken on the same
points. So, I would like the hon. Member to refer to some new
points, if he has any, instead of repeating the same points referred
to already, over and over again. Just like the hon. Member

Sri Subbiah Mudaliyar who said that the Government may purchase the entire requirements from Thanjavur and leave the other districts, the hon. Member may also refer to some new points.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அவசிய கட்டமாக இருப்பதால் அதிகப் படியான நேரம் ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The hon. Member is dilating upon the same points. Let him give some fresh suggestions.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** நெல் விலை குறைந்திருக்கிறது என்று நாங்கள் சொல்லும்போது ரூபாய்க்கு 3 படி அரிசி கொடுக்கின்றோம் என்று சொன்னவர்கள் இப்போது இப்படிப் பேசுகிறார்களே என்று பலர் சொல்லக்கூடும். நெல் விலை குறைந்திருக்கிறது. என்றாலும் அரிசி விலை குறையவில்லை. உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்றும் சொல்லும்போது அரிசி விலை, இன்னும் குறையவில்லை. உற்பத்தி அதிகமாகக் இருக்கிறது என்று சொல்லப்படும் இந்த நேரத்தில் நெல் விலை குறைவாகத்தான் இருக்க வேண்டும். மூன்று படி அரிசி ஒரு ரூபாய் என்று விற்கப்பட்ட காலத்தில் மண் வெட்டியினுடைய விலை மூன்று பணமாக இருந்தது. அதே மண் வெட்டி இன்றைக்கு ஆறு ரூபாய்க்கு விற்கப்படுகிறது அப்படிக் கொடுத்து வாங்கினாலும் மூன்று பணத்திற்கு வாங்கிய மண் வெட்டியின் தரம் உள்ளதாக இல்லை ஆறு ரூபாய்க்கு வாங்கிய மண் வெட்டி. இதுபோல் உற்பத்தி பொருள்களின் செலவு அதிகமாகி இருக்கிறது. அந்த செலவு இன்னும் குறையவில்லை. உற்பத்தி பொருள்களின் விலையை குறைக்க வேண்டும். அதன் விலைகள் இன்றைக்கு ஏறிக்கொண்டே போகின்றன. விவசாயம் கழிந்து அறுவடை ஆகக்கூடிய காலத்தில் விலை குறைவாக இருப்பது வழக்கம் தான் என்று கனம் அமைச்சர் குறிப்பிட்டார். ஏன் ? விவசாயிகள் அறுவடைக்கு முன் பட்ட கடன்களுக்கு நெல்லை விற்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அறுவடைக்கு முன்னதாக குறுணி, பதக்கு வட்டிக்கும் பணம் வாங்க வேண்டியதாக இருக்கிறது. அப்பொழுது அறுவடையானவுடன் கொடுத்துவிடுகிறேன் என்று சொல்லித்தான் வாங்க வேண்டியிருக்கிறது. அரசாங்கம் விவசாயிகளுக்கு கடன் கொடுத்து உதவி செய்ய வேண்டும் என்று பல விதமாக கடன் வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள். அதனால் விவசாயிகள் கடன் வாங்குகிறார்கள். ஆனால் அவர்களும் அறுவடை சமயத்தில் நெருக்குகிறார்கள். சில சமயம் மகஜரோடு ஜப்தியும் செய்கிறார்கள். அதனால் விவசாயி கண்டு முதல் நெல்லை வீட்டிற்குக் கொண்டு வந்து கூட பார்க்க முடியாமல் களத்திலேயே அளந்துவிட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. சமீப காலத்தில் என்ன சொல்லுகிறார்கள் என்றால் கடன் வாங்கி விட்டு அதை திரும்பி கொடுக்கும் போது கடனை உதவி செய்வதற்காகக் கொடுக்கவில்லை உபத்திரவத்திற்குத்தான் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். கடனைத் திருப்பிக் கொடுக்க விவசாயிகளிடத்தில் பணம் கிடையாது. அதனால் அவர்கள் நெல்லை விற்றுத்தான் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அப்பொழுது கேட்கிற விலைக்குக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படிக் கொடுத்தாலும் அந்த சமயத்தில் நெல்லை வாங்குவதற்கு யாரும் முன் வருவதில்லை. மற்றும் தமிழ் நாட்டில் அறுவடை காலத்தில் தான் தேர் திருவிழாக்கள் எல்லாம் வருகிறது. புரட்டாசி மாதம் கார் அறுவடை ஆனவுடன்தான் தீபாவளி வருகிறது. பக்கத்து வீட்டில் குழந்தைகளுக்கு துணிமணி வாங்குவதுபோல் விவசாயிகளும் தங்களுடைய குழந்தைகளுக்கு துணிமணி தீபாவளிக்காக வாங்க வேண்டியதாக இருக்கிறது. தை மாதத்தில் சம்பா அறுவடையின் போது தான் மாசி மகம், பங்குனி உத்தரம், சித்திரை திருவிழாக்கள் வருகின்றன. அறுவடைக்குப் பின்தான் பொங்கல் வருகிறது. அறுவடைக்கு முன் அது வந்தாலும் பிற்பட்டு வந்தாலும் மற்ற திருவிழாக்கள் இருக்கின்றன. அவைகளுக்கு விவசாயி செலவு செய்ய வேண்டியதாக இருக்கிறது. இப்படி பல செலவுகள் அறுவடைக்



காலங்களில் விவசாயிகளுக்கு வருகின்றன. அதற்கு தனியாக பணம் வைத்துக்கொள்ள முடியவில்லை. அதனால் நெல்லை விற்றுத்தான் தீர வேண்டியதாக இருக்கிறது. இந்தச் செலவு சமயங்கள் எல்லாம் வியாபாரிகளுக்கு நன்றாகத் தெரியும். அந்த சமயத்தில் வியாபாரிகள் எந்த விலை கொடுத்தாலும், அதை வாங்கிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்கள். நெருக்கடி காரணத்தால் வியாபாரிகள் கொடுத்த விலையிலேயே வாங்கிக்கொள்ளுகிறார்கள். விவசாயிகள் சமீபகாலத்தில் நகைகள் கொடுத்தாலும் கடன் வாங்க முடியவில்லை. கூட்டுறவுச் சங்கங்களிலும் நெல்லை ஈடு வைத்துக் கொண்டு பணம் கொடுக்க மறுக்கிறார்கள். இந்த நிலைமை இப்பொழுது எங்கள் ஜில்லாவில் ஏற்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடியில் சர்க்கார் மில்காரர்களுடன் பத்து பர்சென்ட் தர வேண்டும் என்று ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அதன் படி பார்த்தால் அதன் விலை மணங்கு 15 முதல் 17 ஆகிறது. மில்காரர்கள் பத்து பர்செண்டு சர்க்காருக்குக் கொடுத்து விட்டு மீதியுள்ள 90 பர்சென்டை அவர்கள் தாங்களே விற்றுக் கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். அதனால் எல்லா நெல்லையும் சர்க்காருடைய விலைப்படி வாங்கி விட்டு சர்க்காருக்கு பத்து பர் செண்டு கொடுத்தது போக மீதமுள்ள 90 பர்செண்டை அதிக விலை வைத்து விற்கிறார்கள். ஒரு விவசாயி தன்னுடைய நெல்லை எந்த வியாபாரியிடம் கொடுத்தானோ அதே வியாபாரியிடம் சென்று அதிக விலை கொடுத்துத்தான் வாங்க வேண்டியதாக இருக்கிறது. நெல்லை கொடுத்த பிறகு இரண்டு மாதங்கள் கழித்து அரிசி வாங்கும் போது அதிகப்படியான விலை கொடுத்து வாங்க வேண்டியதாக இருக்கிறது. நெல் விலை குறைந்தாலும் அரிசி விலை குறையவில்லை. அந்த அளவில் இப்பொழுது அரிசி 125 அல்லது 130 காசுக்கு விற்கப்படுகிறது. இது எங்கு கொண்டு போய் விடும் என்பதைப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட காரணத்தால் இந்த நேரத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கம் மில்காரர்களிடமிருந்து பத்து பெர் சென்ட் வாங்குவதைவிட அரசாங்கம் நேரடியாகவே விவசாயிகளிடமிருந்து வாங்க வேண்டும். அத்துடன் கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு கடன் கொடுக்க முன் வர வேண்டும். இப்பொழுது கொடுக்கப்படுகிறது என்று கனம் அமைச்சர் சொல்லுகிறார். அப்படி கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறேன். இன்று எங்கள் ஊரிலிருந்து வந்திருப்பவர் சொல்கிறார். இருபது மூட்டை ஈடு வைத்தால் 100 ரூபாய் கூட கொடுக்க மறுக்கிறார்களாம். விவசாயிகளுக்கு ஒரு உதவி தொகை (Subsidy) அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். (பேச்சு சிறிது நேரம் நிறுத்தப்பட்டது).

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது கொஞ்சம் அவகாசம் கிடைத்தால் ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகள் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று சொன்னாலும் அதை பணம் கொடுத்து வாங்க அரசாங்கம் தயாராக இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** என்ன விலை அரசாங்கம் கொடுக்கிறது என்று கேட்கிறேன். அரசாங்கமே விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள் முதல் செய்ய வேண்டும். ஆனால் அது வியாபார நோக்கமாக இருக்கக் கூடாது. அக விலை உயர்வால் அக விலை உயர்வை அனுசரித்து அதிக பட்சம் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். என்ன விலை அரசாங்கம் கொடுக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர் :** பேசுகிறீர்களா அல்லது கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறீர்களா ? கேள்வி கேட்பதாக இருந்தால் உட்காருங்கள். அங்கத்தினர்கள் இரண்டு பேரும் நேரடியாகப் பேசக் கூடாது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கனம் அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு பதில் அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன். அதிகமாக விலை விற்பதாக யாரோ தங்களிடம் சொன்னதாக அமைச்சர் சொல்லுகிறார்கள். நிச்சயமாக விவசாயிகள் யாரும் சொல்லி இருக்க முடியாது.

முதலாளியை வாங்கி வைக்கப் பணம் இல்லையா என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்னார். 'எங்களுக்கு பணம் இருக்கத்தான் செய் கிறது. பாங்கிலிருந்து கடன் வாங்கி இந்த ஸீஸனில் நெல் வாங்கி ஸ்டாக் வைப்பது வழக்கம். நாங்கள் இம்மாதிரி தஞ்சாவூரில் வாங்கி ஸ்டாக் செய்கிற பொழுது அதே நேரத்தில் சோளாவந்தான், கோவை, திருப்பூரி லிருந்து வியாபாரிகளும் வந்து அங்கு வாங்கிக்கொண்டிருப்பார்கள். அதனால் மார்கெட்டில் போட்டி இருக்கும். அந்தப் போட்டி இப்பொழு தில்லை. காரணம், எங்களுக்கு பாங்கிலிருந்து கடன் வசதி கிடைப்பதில்லை. ஆகையினால் நாங்கள் அதிக அளவு வாங்கி ஸ்டாக் பண்ணக்கூடிய நிலை மையில் இல்லை. அதனால் தான் வாங்குவதற்கு தயங்குகிறோம். அது தான் முக்கிய காரணம்" என்று சொல்லுகிறார்கள்.

அதற்கு மேலாக, அவர்களுக்கு வாங்குவதற்கு ஓரளவுக்கு பண வசதி இருந்தாலும், அவர்கள் வாங்கி ஸ்டாக் பண்ணுவதற்குக் காரணம் சர்க்கார் தற்காலம் அனுஷ்டிக்கிற விலை நிர்ணயக் கொள்கை தான். எந்த அடி படையில் அந்த விலையை நிர்ணயித்தார்கள் என்று தெரியவில்லை. அதற்கு என்ன பெயர் என்று தெரியவில்லை. "ப்ளோர் பிரைஸா", 'ஸீலிங் பிரைஸா', 'கவர்ன்மெண்டு ப்ரொக்யூர்மெண்டு பாலிஸி பிரைஸா', என்னவென்று தெரியவில்லை. விலை ரூ. 17.10 என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அவர்கள் அதற்கு சொல்லுகிற காரணம் என்ன வென்று பார்த்தால், 'நெல் விலை இதற்கு மேல் கூடாது. கடைசி மட்டத் திற்கு வந்துவிடக்கூடாது. ஆகவே குறைந்த விலையை நிர்ணயித்திருக் கிறோம்" என்று சொன்னார்கள். மத்திய சர்க்காருக்கு நாஷனல் ஸ்டாக் வேண்டியிருக்கிறது அவசர நிலைமையை ஒட்டி. அதற்காக வாங்கவேண்டி யிருக்கிறது. அப்படி வாங்கும்பொழுது இந்த நிலையிலே ரூ. 17 விலை நிர்ணயம் செய்யப்பட்டது. நேரடியாகப் போய் விவசாயிகளிடமிருந்து வலி யுறுத்தி ப்ரொக்யூர்மெண்டு பண்ணாமல், மறைமுகமாக மில் முதலாளிக ளிடமிருந்து இவர்கள் இந்த விலைக்கு வாங்குகிற காரணத்தினால், மில் முதலாளிகள் இதற்கும் குறைந்த விலையில் வாங்குவதற்குத் தான் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் ரூ. 16 தான் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அவர்கள் அரசினருக்கு 10 சதவிகிதம் கொடுத்து விட வேண்டுமென்று கேட்கிறார்கள். என்ன விலையில் என்றால், ரூ. 17.10 மில் முதலாளிகள் அதிகமாக ஸ்டாக் வைப்பதற்கு அஞ்சுகிறார்கள். பின்னால் என்ன நிலைமை ஏற்படுமோ என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஏற்கனவே 50 சதவீதம் வரையில் அரசாங்கம் ப்ரொக்யூர் செய்துகொண் டிருந்தார்கள். மில் முதலாளிகள் காம்பெடிஷனில் அதிகமாக விலை கொடுத்து வாங்கி ஸ்டாக் செய்தால், நினைத்த நேரத்தில் சர்க்கார் அவர்கள் குறிப்பிட்ட விலைக்கு அவர்களிடம் மேலும் உள்ள ஸ்டாக்கை கொடுத்து விடவேண்டுமென்று சொல்லிவிடலாம். அதன் மூலம் அவர்களுக்கு நஷ்டம் வரக்கூடிய ஆபத்து இருக்கிறது என்று அவர்கள் அதிகமாக வாங்கி ஸ்டாக் செய்வதற்கு அஞ்சுகிறார்கள். அதிகமாக வாங்கி ஸ்டாக் செய்து வைத்திருந்தால், திடீரென்று தங்கள் தலையில் நஷ்டத்தை வைத்துவிட்டு, சர்க்கார் மேலும் உள்ள ஸ்டாக்கை அதே விலையில் தங்க ளுக்குக் கொடுத்துவிடவேண்டுமென்று சொல்லி விட்டால் என்ன செய்வது என்று அஞ்சி, அவர்கள் அதிகமாக ஸ்டாக் வைக்காமல் இருக்கிறார்கள் . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் ஒன்று கூற விரும்புகிறேன். நாங்கள் விலை ஒன்றும் நிர்ணயம் செய்யவில்லை. 100-க்கு 10 பங்கு அரசாங்கத்திற்கு நீங்களாகக் கொடுங்கள் என்று தான் சொன்னோம். ஒரு வற்புறுத்தலும் இல்லாமல், ஒரு விலையைக் குறிப்பிட்டு, அந்த விலைக்குக் கொடுங்கள் என்று சொன்னோம். விலை ஒன்றும் நிர்ணயம் செய்யவில்லை.

நான் இன்னொன்றும் கூற விரும்புகிறேன். நான் சில நாட்களுக்கு முன் தஞ்சாவூரில் விசாரித்தேன். இப்பொழுது நாங்கள் எந்த விலைக்கு வாங்குகிறோமோ, அதைவிட ரூ. 2, 3 அதிகமாக இருக்கிறது மார்கெட் விலை. மேலும், மற்றொன்றும் எனக்குச் சொன்னார்கள். இப்பொழுது தஞ்சையிலே மில்காரர்கள் சொல்லுகிறார்கள் "இப்பொழுது இந்த 10 சத வீதம் அல்ல. மேலும் வேண்டுமானாலும் நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள்.



பின்னால் விலை ஏறப்போகிறது. அப்படி ஏறும்பொழுது உங்களுக்குக் கொஞ் சம் கொடுக்கவேண்டியிருந்தால் அப்பொழுது எங்களுக்கு நஷ்டம் ஆகும். இப்பொழுதே நீங்கள் அதிகமாக வாங்கிக்கொள்ளுங்கள்" என்று கூறு கிறார்கள். அப்படி அவர்கள் கொடுப்பதாயிருந்தால் அதையும் வாங்கிக் கொள்ளலாம் என்று நம்முடைய அதிகாரிகளுக்கு நான் சொல்லியிருக் கிறேன்.

**திரு. கே. மூக்கையா தேவர் :** அவர்கள் இஷ்டம் போல தான் கொடுக்கிறார்கள் அவர்கள் வற்புறுத்தப்படவில்லை என்று சொன்னார்கள், உண்மைதான். போட்டிருக்கிற சட்டம் மில்முதலாளிகளுக்கு சாதகமாக இருக்கவேண்டுமென்ற எண்ணத்தில் தானே ஒழிய, விவசாயிகளுக்கு அனுகூலமாக இருக்கவேண்டுமென்ற எண்ணத்தில் இல்லை. மறைமுக மாக இப்படிச் செய்த ஒரு வேலை தான் இந்த அளவுக்கு விலை குறைவ தற்குக் காரணம். மறைமுகமாக......நெல் விலையை (Discourage) செய்கிறார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மறுபடியும் நான் உறுதியாகச் சொல்லுகிறேன். நாங்கள் கொள்முதல் செய்துகொண்டு வருவது விலை குறைந்ததற்குக் கொஞ்சம் கூட காரணம் இல்லை என்பதை நான் நிச்சயமாகக் கூறுகிறேன்.

**திரு. கே. மூக்கையா தேவர் :** வேறு என்ன காரணம் ? எப்படி யாவது விலைவாசி உயரவேண்டும், விவசாயி சௌக்கியமாக இருக்க வேண்டும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** விவசாயி லாபம் சம்பாதிப்பது பற்றி குறை கூற மாட்டேன். அதை நான் வரவேற்கிறேன். சென்ற ஆண்டு வரையில் விலை ஏறிக்கொண்டே இருந்தது. எல்லோரும் அதுபற்றி கவ லைப்பட்டார்கள். இந்த மன்றத்தில் பேசினார்கள், கவலையைத் தெரிவித் தார்கள். இதுவரையிலே அதிகமாக ஏறிக்கொண்டு போனது கொஞ்சம் கூட குறையக் கூடாது என்று கனம் அங்கத்தினர் அவர்கள் கருதுகிறார்களா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. மூக்கையா தேவர் :** நெல் விலை குறைய வேண்டும். ரூபாய்க்கு 8 படி அளவுக்கு வந்தால் கூட நான் தயாராக இருக்கிறேன். ஆனால் விவசாய அன்பன் என்று ஒருவன் இருக்கிறான். அவனை நாடு நம்பியிருக்கிறது. "உண்டி கொடுத்தோரே உயிர் கொடுத்தவர்" என்று சொல்லுவார்கள். எல்லா விவரங்களும் நமது தலைவர் அவர்களுக்குத் தெரியும். விவசாயிக்கு உழைப்புக்குத் தகுந்தபடி ஊதியம் கிடைக்காமல் எந்த அளவுக்கு கஷ்டப்படுகிறான், அவனுக்கு பரம்பரைக் கடன் எவ்வ ளவு இருக்கிறது. அவன் எப்படி அந்தக் கடனை யெல்லாம் திருப்பிக் கொடுப்பான் ? அவன் தியாகம் பண்ண வேண்டுமென்றால் அவனிடம் வேறு ஒன்றும் இல்லை. தன் தலையை வெட்டி தட்டில் வைத்துத்தான் கொடுக்க வேண்டும். எல்லாப் பொருள்களின் விலையும் குறையவேண்டும், விலை குறைவது வேறு, விலை வீழ்வது வேறு. சென்ற ஆண்டுகளில் விற்ற விலையால் 5, 10 இறங்குமேயானால் இந்த குறைவை வரவேற்க லாம். அது 1/3 பங்கு வீழ்ந்தால் என்ன ஆவது. அன்று பொதி நெல் ரூ. 60 விற்றது ; இன்று ரூ. 35 விற்கிறது. நெல் விலை வீழ்ந்திருக்கிறது. அதற்குக் காரணம் தெரியவில்லை. மேலும் ஒரு முக்கியமான விஷயத் தைக் குறிப்பிட விரும்புகிறேன். காஸ்டு ஆப் ப்ரொடெக்ஷன், காஸ்டு ஆப் லிவிங், ஸ்டாண்டர்டு ஆப் லிவிங் இவையெல்லாம் இருக்கிறது. நமது சர்க்காரே நிர்ணயித்திருக்கிறார்கள். இத்தனை ரூபாய் இருந்தால் ஒரு விவசாயி மனிதனாக வாழ முடியும் என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக் கிறது. இதற்காக ஒரு கமிட்டி நியமித்து இந்தக் கணக்குகளை யெல்லாம் பார்த்து ஒரு முடிவு செய்தால் அதை நான் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறேன். அதேபோல.........

**கனம் சபாநாயகர் :** நீங்கள் "பினிஷ்" செய்துவிட்டீர் ?

வழிவகை கிடையாது. ரூ. 17·10 விலை வீதம் ஒரு லட்சம் டன் அரிசியை நிச்சயமாக எங்கள் ஜில்லாவில் விவசாயிகள் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். விலையை ஏற்றத் தேவையில்லை. ஆனால், ஏக்கர் ஒன்றுக்கு இரண்டு மூட்டை வீதம் வாங்கிக்கொண்டு, பாக்கி நெல்லை, மார்க்கெட்டில் நல்ல விலைக்கு விற்க வசதி ஏற்படுத்தினால் நல்ல முறையில் அமையும். அதற்கு மாறாக எல்லா நெல்லையும் கொள்முதல் செய்வதால் தஞ்சை ஜில்லா மாத்திரம் இது கடுமையாகப் பாதிக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள், "இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் அதிகமாக இருக்கிறது" என்று கூறுகிறார்கள். குறிப்பாக எங்கள் ஜில்லாவில் 18 ரூபாய்க்குமேல் நெல் விற்பதே இல்லை. இன்று அந்த நிலை இருப்பதை கனம் அங்கத்தினர்கள் அனைவரும் பார்க்கலாம். 18 ரூபாய்க்கு மில்லிலே கொள்முதல் செய்யப்படும் நெல் 59 கிலோகிராம் எடை கொண்டது. சர்க்காரிலே நிர்ணயித்திருக்கும் அளவு 57 கிலோகிராம். மில்லில் 59 கிலோகிராம் நெல் 18 ரூபாய்க்கு வாங்கப்படுகிறது. இரண்டு கிலோகிராம் வித்தியாசத்திலேதான் இந்த விலை சற்று அதிகமாக—ரூ. 17·10க்கும் ரூ. 18க்கும் உள்ள வேறுபாடாக—இருக்கிறது தவிர, மில்காரர்கள் நிச்சயமாக அதிகமாக லாபம் சம்பாதிக்கிறார்களே தவிர நிச்சயமாக நஷ்டம் அடையப் போவதில்லை.

அது மட்டுமல்ல மில்காரர்களுக்கு கொடுக்கப்படுவதாகச் சொல்லும் சலுகையை விவசாயிக்குக் கொடுத்தால் மிகவும் நலமாக இருக்கும். மத்திய சர்க்காரிடத்திலிருந்து கேட்டுக்கொடுக்கப்படும் என்று முன்பு அமைச்சர் அவர்கள் கூறியிருப்பது எனக்கு ஆச்சரியம் இருக்கிறது. அதையாவது விவசாயிக்குக் கொடுத்தால் மிக நலமாக இருக்கும். நிர்ணயம் செய்யப்பட்ட இந்த விலைக்கு நெல் விலை இறங்கிவிட்டதனால், சாதாரண ஏழை எளிய விவசாயிகள் தான் பாதிக்கப்படுகிறார்கள். காரணம், அவர்களிடமிருந்து நெல்லை ரூ. 1·10க்கு விற்றுவிட்டதனால், இனி விலை ஏறினாலும் அவர்கள் பயன் அடையப் போவதில்லை. அவர்கள் அறுவடை செய்த நெல்லைக் கொடுத்துவிட்டார்கள். பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள்தான் பயன் அடையக் கூடும். இனியாவது இதுபோன்ற நிலைமை ஏற்படுத்தாத நல்ல முறையைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** கனம் சபாநாயகர் அவர்களே, சண்டை வந்தால் நியாயம் பிறக்கும் என்கிற பழமொழி ஒன்றுண்டு....

**கனம் சபாநாயகர் :** அதிலே ரொம்ப அக்கறை உடையவரா நீங்கள்?

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** சண்டை பிறந்தால் நியாயம் பிறக்கும் என்பார்கள். "லெவி" முறையில், நேரடியாக விவசாயிகளிடம் சென்று ஏக்கருக்கு இரண்டு மூட்டை என்று வாங்கிய ஒரு முறை ஏற்கனவே இருந்தது. அந்த முறையை மாற்றி, மில்காரர்களிடமிருந்து நெல் வாங்குவது என்கிற முறையினால்தான் தகராறு ஏற்பட்டிருக்கிறது என்று நான் நிச்சயமாக சொல்ல முடியும். சென்ற தேர்தல் நடந்த காலத்தில் மில் முதலாளிகள் அரசாங்கத்திற்கு பணம் தந்து, சதி ஏற்பட்டு இம்மாதிரி நெருக்கடி நிலை வந்திருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் எப்பொழுதும் "சதி" "மோசம்" போன்ற குற்றச்சாட்டுகளில் மிதந்துகொண்டிருக்கிறார். இந்த ஆட்சிக்கும் மில்காரர்களுக்கும் சம்பந்தம் என்று சொல்வது முறையற்றது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** நான் முறையற்றதாகச் சொல்லவில்லை. ஏற்கனவே நடந்த நடவடிக்கையில் தவறுதல், தப்பு ஏற்பட்டது. ஏற்கனவே இருந்த முறையை மாற்றியதனால் தவறு ஏற்பட்டது. மில்காரர்கள் மூலமாக கொள்முதல் செய்வதால் இவ்வளவு கஷ்டம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. நேரடியாக விவசாயிகளிடமிருந்து ஏக்கருக்கு



இரண்டு மூட்டை வீதம் கொள்முதல் செய்துகொண்டு, பாக்கியை அவர்களே விற்றுக்கொள்ளலாம் என்று விட்டிருந்தால் நிச்சயமாக விலை இறங்கியிருக்காது. தனிப்பட்ட முறையில் நான் ஒன்றும் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. நாளைக்கே இந்த முறையை மாற்றிவிடட்டும். மிச்சமுள்ள நெல்லை நேரடியாக விவசாயிகளிடமிருந்து வாங்குவது என்ற முறையைக் கொண்டுவந்து, மில்காரர்களிடமிருந்து வாங்குவது என்ற முறையை வாபஸ் வாங்கட்டும். நிச்சயமாக விலை இறங்காது. ஆகவே, தயவு செய்து, ஒன்று ஸ்டேட்மெண்ட் பண்ணுங்கள். இல்லையானால், அரசாங்கம் மில்களிடமிருந்து வாங்கும் முறையாவது வாபஸ் வாங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடிக்கிறேன்.

***திரு. சா. கணேசன் :** கனம் தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசியவர்கள் மிக விளக்கமாகப் பேசியிருக்கிறார்கள். நானும் அவர்கள் பேசியதையே நீளப் பேசி நேரத்தைபோக்க விரும்பவில்லை. ஒன்றை நாம் மனதில் கொண்டாகவேண்டும். விவசாயிகளுக்கு ஆறுதல் தரவேண்டியது மிகவும் இன்றியமையாதது ஒன்று. தனக்குத்தானே எஜமானாக இருந்து கொண்டு, தன்னைத்தானே வேலை வாங்குகிற ஓர் அற்புதமான சமூகத்தினர் விவசாயிகள். அந்தக் கருத்தை மனதில் கொண்டு இந்தப் பிரச்சனையை அணுகவேண்டும். முதலில் நெல் விலை இறங்கவேபடாது. அது எனது தாழ்மையான வேண்டுகோள். நெல் விலை ரூபாய்க்கு பத்துப்படி, எட்டுப்படி என்று ஆனாலும் பாதகமில்லை என்றால் எப்போது? மண்வெட்டி விலை எட்டணா, மாடு விலை 50 ரூபாய் என்று வரட்டும், அப்போது நெல் விலை குறைவதுபற்றி ஆட்சேபிக்கவில்லை. அப்படியின்றி நெல் விலை மூட்டை 17 ரூபாய் என்று, 15 ரூபாய் என்று குறைகிறபோது இன்றைக்கு மிளகாய், பருப்பு, புளி, உப்பு போன்ற இன்றியமையாத உணவுப் பண்டங்களின் விலையும், கலப்பை, மண்வெட்டி, மாடு போன்ற சாதனங்களின் விலையும் இந்த நெல் விலை குறைவுக்கு ஏற்றபடி குறைந்திருக்கிறதா? நெல் விலை குறைந்தால் பாதகமில்லை. மற்றவற்றின் விலையையும் இந்த விலை அடிப்படையில் குறையுங்கள். அப்படி உங்களால் குறைக்க முடியாவிட்டால் நெல் விலையில் போய் கை வைப்பது பாபம்.

மலையாளத்தில் இருந்து நெல் வாங்க இவ்வாண்டு வியாபாரிகள் வரவில்லை, அதனால் நெல் விலை குறைந்தது என்று கனம் விவசாய அமைச்சர் சொல்கிறார்கள். இன்றைக்கு மலையாளத்தில் இருந்து நெல் வாங்க வியாபாரிகள் வந்தாலும் இங்குள்ள விவசாயிகளிடத்தில் ஒரு மணி கூட நெல் இல்லை. நடுத்தரத்தில் உள்ள மில் முதலாளிகள், நெல் வியாபாரிகள் போன்றவர்களிடம்தான் நெல் இருக்கும். அவர்கள் இந்த நிலையைப் பயன்படுத்தி கொள்முதல் செய்து பின்னர் விலையைக் கூடுதலாக்கவே போகிறார்கள். அப்படி ஒரு சூழ்நிலையை உண்டாக்க விடுவது நியாயமாகுமா, உகந்ததாகுமா என்று அரசாங்கம் சிந்திக்க வேண்டும்.

அடுத்தபடியாக கனம் திரு. பக்தவத்சலம் அவர்களே சொன்னார்கள் "இப்பொழுதே எங்களிடத்தில் இருந்து நீங்கள் எவ்வளவு வாங்குவதாகக் குறித்திருக்கிறீர்களோ அதை வாங்கிக்கொண்டு விடுங்கள். பின்னர் ஏறிப் போய்விடலாம்" என்று மில்காரர்கள் சொல்கிறார்கள் என்று. இதிலிருந்தே கனம் அமைச்சர் அவர்களுக்கும், மற்ற அங்கத்தினர்களுக்கும் உண்மை புலப்படவில்லையா? இப்போதே அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்துவிட்டால், பின்னர் அவர்கள் தொல்லையின்றி தம் இஷ்டப்படி மூட்டை 25 ரூபாய், 30 ரூபாய் என்று உயர்த்திக் கொள்ளலாம் என்கிற அவர்களுடைய உள்ளம், உள் அந்தரங்கம் சூசகமாக அவர்களுடைய வார்த்தைகளில் புதைந்திருக்கவில்லையா? நமக்குப் புரியவில்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

அதற்கு மேலே சர்க்காருடைய நோக்கம் நெல் விலை குறையவேண்டும் என்பது தான், நெல் விலை குறைந்து போவதற்கான அனுகூலமான நெறியிலே செல்கிறது என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

இறுதியாக நான் சொல்ல விரும்புவது அநேகமாக கிட்டதட்ட இங்குள்ள அங்கத்தினர்கள் எல்லோருடைய எண்ணமும் ஒன்றாகவே இருக்கிறது. ஆகவே என்னுடைய வேண்டுகோள்—அமைச்சர் அவைக்கு நான் விடுக்கும் வேண்டுகோள்-இரண்டே இரண்டுதான். இப்பொழுது இருக்கிற நிலைமைப் படி நெல் விலை மூட்டை 20 ரூபாய்க்குக் குறைய கட்டாயமாக விடக் கூடாது. இரண்டாவது இந்தமாதிரி விலை நியாயமான அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுவதற்கு மாநில ஆட்சி மத்திய ஆட்சிக்கு வற்புறுத்த வேண்டும். நெல் விலை இப்படிக் குறைவதனால் ஏற்படக்கூடிய துன்பங்களை எடுத்துச் சொல்லி அதனால் மக்களுக்கு ஏற்படுகிற இடையூறுகளையும் எடுத்துச் சொல்லி நெல் விலை குறையாதிருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். முடியாவிட்டால் மற்ற உணவுப் பண்டங்களை, விவசாய சாதனப் பொருள்கள் ஆகியவற்றின் விலையைக் கட்டுப்பாடு செய்யவேண்டும். இது தான் என்னுடைய வேண்டுகோள்.

***கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய பல அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் நான் தனித்தனியாகப் பதில் உரைப்பது என்றால் நேரம் போதாது. நேரம் இல்லாத காரணத்தால் அவர்களுடைய கருத்துக்களுக்கு என்னுடைய பதிலை முதலில் பொதுப் படையாகக் கூற விரும்புகிறேன்.

வேளாண்மை நான்கு காரணங்களால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிறார். முதலாவதாக, பருவம் தவறி பெய்த மழை பெய்ததனால், விளைந்துவரும் பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறதென்றும் அவர்கள் குறிப்பிடுகிறார். நம் மாநிலத்தில் சில பகுதிகளில் பருவம் தவறி மழை பெய்திருக்கிறதென்பது உண்மைதான். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் லால்குடியிலும், குளித்தலை பகுதிகளிலும், தஞ்சாவூர் மாவட்டத்திலும் பாபநாசம், நன்னிலம், சீர்காழி தாலூகாக்களின் பகுதிகளிலும் அக்டோபர் மாதம் பலத்த மழை பெய்தது. 1962 டிசம்பர் மாதம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஈரோடு தாலூகாவில் பலத்த மழை பெய்தது. 1963 ஜனவரியில் வட ஆர்க்காடு, தஞ்சாவூர் மாவட்டங்களில் வழக்கத்திற்கு மாறாக மழை பெய்ததாகத் தெரிவிக்கப் பட்டது. இவ்வாறு வழக்கத்திற்கு மாறாக மழை பெய்ததால், வேளாண்மைக்கு ஓரளவு தீங்கு ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலே லால்குடி தாலூகாவில் சில பகுதிகளில் குறுவைப் பயிரை வெள்ளம் அடித்தது. இன்னும் சில பகுதிகளில் நட்ட நெற் பயிர் நாற்றுக்கள் எல்லாம் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போய் விட்டன. தஞ்சாவூர் மாவட்டத்திலே ஜனவரி மாதம் பெய்த மழையினால் அறுவடை தாமதப்பட்டது. என்றாலும், பருவம் தவறி பெய்த மழையின் காரணமாக ஏற்பட்ட சேதம் அதிகமில்லையென்பது தெரிகிறது. அரிசி உற்பத்தியைப் பொறுத்தவரையில், 1961-62ல் கண்டுமுதலான மகசூலைக் காட்டிலும் 1962-63ல் 1.4 சதவிகிதம் உயர்ந்து இருப்பதாக மதிப்பிடப் பட்டிருக்கிறது.

எலிகளால் ஏற்படும் தொந்தரவு நமது மாநிலத்திற்குப் புதிதல்ல. எலிப்பொறிகளை வைத்து எலிகளைப் பிடித்தல், துத்துநாக பாஷாணம் வைத்து எலிகளைப் பிடித்தல் போன்ற முறைகளைக் கையாண்டு எலிகளை ஒழிக்க ஓரளவுக்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டாலும், இந்தப் பிரச்னையை முற்றிலும் தீர்க்கப் முடியவில்லை. காட்டு எலிகளின் ஆயுள் சக்கரம் சம்பந்தமான ஆராய்ச்சித் திட்டம் இப்போது ஆடுதுறையில் அமலில் உள்ளது. எலிகளின் உற்பத்தியைத் குறைப்பதற்கான மிகப் பயன்தரும் முறையைக் கண்டு பிடிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். காட்டு எலிகளை அழிப்பதற்கான விசேஷ இயக்கம் ஒன்றையும் வருகிற கோடை மாதங்களில் ஏற்படுத்த விவசாயத் துறையினர் முயற்சிகள் எடுத்து வருகிறார்கள். வலை போட்டுப் பிடிப்பதன் மூலமாகவும், எலி வளைகளைத்தோண்டி எடுப்பதன் மூலமாகவும் எலிகளை அழிப்பதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும்.



இரண்டாவதாகச் சொல்லியிருக்கிற காரணம் நெல் விலையை நிச்சயிப்பதில் அரசாங்கம் பின்பற்றியுள்ள கொள்கையைப் பொறுத்த தாகும். இதனால் நெல் விலை பொதுவாக இறங்கிவிட்டது என்று அவர் சொல்கிறார்.

1963 ஜனவரியில் நெல் விலைகள் கொஞ்சம் இறங்குமுகமாக இருந்தது அனைவருக்கும் தெரியும். அறுவடைக் காலத்தில் சாதாரணமாக விலை வாசிகள் இறங்குமுகமாக இருப்பது இந்த விலை இறக்கத்திற்கு ஒரு காரணமாகும். மற்றும், கேரள மாநிலம் தனது அரிசி தேவைகளுக்கு ஆந்திர மார்க்கெட்டை ஓரளவுக்கு நாடியிருப்பதாகத் தெரிகிறது. என்றாலும், அறுவடை முடிந்தபிறகு, பின்வரும் மாதங்களில் இந்த விலைகள் உயரும் என்பது நிச்சயம்.

இந்திய அசராங்கத்தின் சார்பில் இம் மாநிலத்தில் ஒரு லட்சம் டன் அரிசியை நாம் கொள்முதல் செய்து வருகிறோம். கொள்முதல் விலையை அகில இந்திய அடிப்படையில் நிச்சத்திருக்கிறார்கள். இந்த விலைவாசிகளின் நிலையை அரசாங்கம் கவனமாய் பரிசீலித்து வருகிறது. விலைவாசிகள் கொள்முதல் விலைக்கு குறைவாக இறங்கும் என்று தெரிந்தால், கொள் முதல் விலைகளுக்கு நெல் வாங்கும் பிரச்னையை அரசாங்கம் யோசிக்கும்.

கனம் அங்கத்தினர் சொல்லியிருக்கிற மூன்றாவது பிரச்னை விவ சாயிகளுக்குத் தேவைப்படும் பொருள்களின் விலையேற்றத்தை பொருத்த தாகும்.

விவசாயிகளுக்குத் தேவைப்படும் பொருள்கள் இரண்டு வகைப்படும். அவையாவன, அவர்களுக்கு வேண்டிய வீட்டுத் தேவைப் பொருள்கள், அவர்களுடைய சாகுப்படிக்குத் தேவைப்படும் பொருள்கள். இந்த இரண்டு வகைப் பொருள்களின் விலைகளும் ஓரளவுக்கு ஏறியிருப்பது உண்மைதான். விலைவாசிகளின் ஏற்றத்தை மட்டுப்படுத்துவதற்குச் சாத்தியமான ஒரே வழி உற்பத்தியை அதிகரிப்பதுதான்.

கனம் அங்கத்தினர் சொல்லியிருக்கும் நான்காவது பிரச்னை தங்கக் கட்டுப்பாட்டு விதிகள் அமல் செய்திருப்பதன் விளைவாகக் கடன் வசதிகள் குறைந்துவிட்டன என்பதாகும்.

இந்தக் கட்டுப்பாடு அமல் செய்யப்பட்டிருப்பதனால் குடியானவர்களுக்குச் சுலபமாக கடன் வசதிகள் விரைவில் கிடைப்பது ஓரளவுக்குத் தடைப் பட்டிருக்கலாம். ஆனால், கடன் வசதி எந்த அளவுக்குக் குறைந்து போய் இருக்கிறதென்பதைக் குறித்துக் தகவல் எதுவும் இல்லை. வேளாண்மைக் காக விவசாயிகளுக்கு அரசாங்கமும் கூட்டுறவுச் சங்கங்களும் பலவகையான கடன்களைக் கொடுத்து வருகின்றன. அவைகளில் சில உர வகைகளை வாங்குவதற்கு, கிணறு வெட்டுவதற்கு, ஆயில் என்ஜின்கள், மின்சார மோட்டார்கள் முதலியவற்றை வாங்குவதற்காகக் கொடுக்கப்படும் கடன்கள். கூட்டுறவுச் சங்கத்தில் இன்னும் தாராளமாகக் கடன் வழங்குவதற்கான வாய்ப்புக்களை விரிவுப்படுத்தும் பிரச்னையை இனிமேல் ஆராயவேண்டும்.

விலைவாசிப் போக்குகளையும், விவசாயிகளின் கடன் தேவைகளையும் அரசாங்கம் மிகவும் ஊன்றிக் கவனித்து வருகிறது. உற்பத்தியைப் பெருக்க வதில் விவசாயிகளுக்குப் போதிய தூண்டுகோல் கொடுக்க அரசாங்கம் எல்லாவித முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளும்.

அடுத்து மதிப்பிற்குறிய திரு. மூக்கையா தேவர் அவர்கள் விவசாயி களுக்கு அதிக இடையூறு ஏற்படுகிறது என்றும், இனிமேல் விவசாயிகள் தலையை வெட்டித் தட்டில்தான் வைக்கவேண்டும் என்று சொன்னார்கள். அது ஒத்துக்கொள்ளக்கூடிய வார்த்தையல்ல. விவசாய மக்களுக்குடைய நன்மைக்காகவே இந்தச் சர்க்கார் பல நன்மைகளைச் செய்து வருகிறார்கள். அப்படியிருக்கிறபோது அவர் பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள்.

## APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 208 on page 3.]

There are no special schemes initiated by this Government for the popularisation of Tamil in Universities of other States. However, this Government are giving grants liberally to Universities which institute chairs in Tamil. Details of the same are given below :—

| | RS. (*per annum.*) | *Period of grant.* |
|---|---|---|
| 1 Grant to the University of Allahabad for Lecturership in Tamil. | Rs. 4,000 from 1960-61 and Rs. 4,800 from 1962-63 to 1964-65. | |
| 2 Grant to the University of Delhi for strengthening the Tamil section. | 10,000 | For a period of five years from 1959-60. |
| 3 Grant to the University of Kerala for starting M.A. course in Tamil. | 4,000 | For a period of five years from 196 -62. |
| 4 Grant to Oosmania University, Hyderabad. | 10,000 | For a period of five years from 1960-61. |
| 5 Grants to Agra University. | 6,500 | For a period of five years from 1962-63. |

## APPENDIX II.

[*Vide* answer to Starred Question No. 210 on page 5.]

In view of the National Emergency, the Government have made a review of their resources and commitments and have decided to exercise utmost economy in expenditure in Government departments. Detailed instructions to the Heads of Department concerned and other Subordinate officers have been issued for enforcing economies in the employment of additional staff, contingencies, stationery, Travelling Allowance, etc. The following are the main points in the instructions that have been issued to the various Government Departments and offices :—

1. *Additional staff.*—Proposals for appointment of additional staff which are not connected with defence efforts or Plan schemes are *not to* be entertained for a period of six months.



2. *Contingencies.*—(1) The Government motor vehicles should be used only for essential purposes so as to conserve patrol for defence purposes.

(2) Telegrams and trunkcalls should not be ordinarily resorted to and even when trunk calls are necessary, urgent calls should not be booked unless they relate to an urgent matter such as Law and Order.

(3) Local delivery system should be resorted to in an increasing measure and the use of Service Postage for local tapals should be eliminated.

3. *Papers, Printing and Stationery.*—(1) Costly papers to be used sparingly; unbleached and hand-made papers should be used.

(2) Reports should be brief and self-contained.

(3) Both sides of the paper to be used.

(4) Size of administration reports of departments to be restricted.

(5) New typewriters and duplicators should be supplied when they are absolutely essential.

(6) Supply of punch-players and pen-knives is discontinued.

(7) A 10-per cent reduction has been imposed on the requirements of stationery.

4. *Official tours.*—(1) Tours should be planned better and rapid marches cut out.

(2) Officers should avoid taking peons on camps involving long journeys by train.

(3) Conferences, seminars and meetings should be kept down to the barest minimum.

5. *State functions.*—All unnecessary parties, functions and State entertainments to be cut out altogether and all waste of food materials to be avoided.

6. *Buildings.*—Proposals for administrative buildings and staff quarters have been deferred. Even in regard to buildings connected with plan programmes, a review has been made and those buildings which could be deferred have been ordered to be deferred.

7. *Transfers.*—All transfers not necessary in the Defence interest or on medical grounds or necessitated by the completion of tenure periods in particular posts to be avoided.

8 *Hours of work.*—The hours of work in Government offices have also been extended by half an hour.

9. *Small savings.*—Action for intensifying collections under small savings, particularly in rural areas has been taken. The responsibility of Panchayat Development Organisation for mobilising Small Savings has been stressed and special staff sanctioned for attending exclusively to the work.

10. *Plan schemes.*—The Plan schemes have been reoriented so as to lay emphasis on schemes intended to aid agricultural, industrial and power production. Among productive schemes, those yielding quick results like Minor Irrigation schemes are to be given priority. Schemes for training of skilled craftsmen and other technical personnel in short supply have been accelerated.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

## Thursday, 14th March 1963.

---

The House met in the Assembly Chamber, *Fort St. George*, Madras, at half-past eight of the Clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

### I—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

*Floods (Cauvery)*

*200 Q.—SRI S. MURUGAIYAN (on behalf of SRI K. MATHIALAGAN): Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the immediate and the long-term measures that are being considered for the control of floods in the Cauvery basin; and

(*b*) the important recommendations of the Superintending Engineer specially deputed for the purpose?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) The Report of the Special Officer who was appointed to investigate "long term measures to mitigate future floods in the Cauvery" is being examined by the Chief Engineer (Irrigation). The Flood Control Schemes to be undertaken will be decided by the Government after the recommendations of the Chief Engineer (Irrigation) are received and considered by the Government.

(*b*) The important recommendations made by the Special Officer will be made known in due course.

**திரு. எஸ். மாதவன் :** இந்த வெள்ளத்தடுப்பு திட்டத்தில் காவேரித் தண்ணீரை ராமநாதபுரம் மாவட்டப் பகுதிக்குத் திருப்பி விடுவதாக பொன் அமராவதிக் கூட்டத்தில் அமைச்சர் அவர்கள் பேசியது உண்மை யானால், அதுபோன்ற திட்டம் ஏதாவது இருக்கிறதா?

**கனம் திரு. வெ. ராமையா :** பொன் அமராவதிக் கூட்டத்தில் நான் அதுபோல் பேசியிருக்க முடியாது. கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதோ கற்பனை செய்துகொண்டு நான் அதுமாதிரி பேசினேன் என்று நினைத்திருந்தால் அதை இந்த நேரத்தில் விட்டு விட வேண்டும். காவேரித் தண்ணீரை புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருப்பத்தூர் பகுதிகளுக்கு வேண்டுமென்று அடிக்கடி கோரிக்கைகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அது எப்படி முடியும் என்பதையெல்லாம் பல முறை அரசாங்கம் பரிசீலனை செய்திருக்கிறது. அதற்கும் இந்த வெள்ளத் தடுப்பு வேலைக்கும் எந்தவிதமான இணைப்பும் இல்லை. வெள்ளத்தை தடுக்க எவ்வளவோ முயற்சிகள் எடுக்கவேண்டும். அந்த முறையில் பல ஆலோசனைகளை ஸ்பெஷல் ஆபீஸர் கூறியிருப்பதாக பிரதம என்ஜினியரிடம் இருந்து தகவல் வந்திருக்கிறது. பூர்வாங்க பரிசீலனை செய்ததற்குப் பிறகுதான் முடிவு எடுக்க முடியும். அதுவரை எதுவும் சொல்வதற்கில்லை.

களுக்கும் கொஞ்சம் தங்கள் கடமையைச் செய்யவேண்டுமே தவிர இப்படி சொல்வது சரியாகாது. அரசாங்கம் விவசாயிகளுக்கு எவ்விதக் கஷ்டத்தையும் கொடுக்க விரும்பவில்லை, கொடுக்கவும் இல்லையென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

1-30 p.m. கனம் சுப்பையா முதலியார் அவர்கள் ஒரு கமிட்டி தேவை என்று சொன்னார்கள். ஏற்கனவே அரசாங்கம் இது பற்றிப் பரிசீலனை செய்திருக்கிறது. மத்திய சர்க்காருக்கு, மாகாண சர்க்காருக்கும் விவசாய மக்களின் நன்மைக்காக பல வழிகளைக் கையாண்டு வருவது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். இப்போது, விவசாயிகளின் சாகுபடிச் செலவைப் பற்றிப் பரிசீலிக்க ஒரு கமிட்டி தேவை இல்லை என்பது அரசாங்கத்தின் கருத்து. இதற்கு ஒரு கமிட்டி வைத்து அவர்களுக்குப் படி போன்ற செலவுகளையெல்லாம் செய்தது, "சுண்டைக்காய் கால் பணம், சுமைக் கூலி முக்கால் பணம்" என்பது போலாகிவிடும்.

திரு. தர்மலிங்கம் அவர்கள், அறுவடையானவுடன் விவசாயிகள் நெல்லை விற்பதற்கு, உற்பத்தியாளர்களிடமிருந்து நெல்லைச் சர்க்கார் நேரடியாகக் கொள்முதல் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரையில் சொல்லுகிறேன்—ஏழை விவசாயிகள் அன்றாடம் கூலி வேலை செய்கிறவர்கள். அவர்கள் அறுவடையானவுடன் தங்களிடம் இருக்கும் நெல் பூராவையும் விற்றுவிட்டுப் பின்னால் சங்கடப்படுகிறார்கள். ஆகவே கொஞ்சம் நெல் விற்கப்படாமல் இருந்தால் அவர்களுக்குப் பின்னர் சாப்பாட்டுக்குப் பிரயோசனமாக இருக்கும். (திரு. தர்மலிங்கம் எழுந்தார்)—

**கனம் சபாநாயகர் :** இந்த விவாதத்திற்கு இன்னும் ஒரு நிமிஷம் தான் நேரம் இருக்கிறது. ஆகவே கனம் அங்கத்தினர் தயவுசெய்து உட்காரவேண்டும்.

**கனம் திரு. பூ. கக்கன் :** விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவேண்டும். உழைப்புக்குத் தகுந்த ஊதியம் அவர்களுக்கு கிடைக்கவேண்டும். மார்க்கட்டில் கமிட்டிகள் தானியக் கிடங்குகள் கட்டி, நெல்லைச் சேமித்து வைத்து நல்ல விலை கிடைக்கும்போது அந்த நெல்லை விற்றுவிடலாம் என்ற முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

மில் சொந்தக்காரர்களிடமிருந்து வாங்கும்போது 100-க்குப் 10 சதவிகிதம் என்ற முறையில் வாங்குகிறோம். நூறு மூட்டை அரைத்தால், 10 மூட்டை கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். தொண்ணூறு மூட்டையை வாங்கிக் கொண்டு அவர்களுக்கு ஆதாயம் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறோம் ?

மதிப்புக்குரிய சசிவர்ணத்தேவர் அவர்கள், நிதியமைச்சர் அவர்கள் சொன்னபடி, எப்பொழுது பேசினாலும் நெஞ்சும் உபயோகிக்கத்தகாத வார்த்தைகளையே உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ எலக்ஷனிலே நாங்களும் அவர்களும் போரம் பண்ணிக் கொண்டிருக்கிறோம், அதற்காகத்தான் இந்த ஏற்பாட்டை பண்ணிக் கொண்டிருப்பதாக அவர்கள் கூறினார்கள். இதற்கெல்லாம் அந்த மாவட்ட மக்கள்தான் அவர்களுக்குப் பதில் சொல்லவேண்டும். விவசாயிகளுக்காகப் பாடுபடுகிற அரசாங்கம் இது ஒன்றுதான் இந்த அரசாங்கத்தை தவிர வேறு . . . . . . .

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இந்த ஆளும் கட்சியைக் காட்டிலும் . . . . . .

**கனம் சபாநாயகர் :** உங்களுக்குப் பேசச் சந்தர்ப்பம் வரும்போது "எங்கள் கட்சியைக் காட்டிலும் விவசாயிகளுக்காகப் பாடுபடுகிற கட்சி வேறு இல்லை" என்று சொல்லிக் கொள்ளுங்கள்.

**திரு. மு. கருணாநிதி :** கனம் சசிவர்ணத் தேவர் அவர்கள் இந்த மன்றத்தில் உபயோகிக்கக் கூடாத வார்த்தைகளை உபயோகித்ததாக அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அப்படி உபயோகிக்கப்படாத வார்த்தைகளை உபயோகித்திருந்தால் ஒழுங்குப் பிரச்னைகள் வந்திருக்கும். அந்த வார்த்தைகள் உபயோகிக்கக் கூடாத வார்த்தைகளா என்பதைக் கனம் சபாநாயகர் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.





**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒழுங்குப் பிரச்னை வேறு, உபயோகிக்கத் தகாத வார்த்தைகள் வேறு.

**கனம் சபாநாயகர் :** ஒழுங்குப் பிரச்னை எல்லாவற்றுக்கும் வராது. உபயோகிக்கத் தகாத வார்த்தைகள் அவ்வளவும் ஒழுங்குப் பிரச்னையின் கீழ் வராது. அது ஒரு பெரிய சங்கடந்தான். 'கண்மூடித்தனம்' என்று சொன்னார்கள். அந்த வார்த்தை ஒழுங்குப் பிரச்னையின்கீழ் வராவிட்டாலும், அந்தமாதிரி வார்த்தைகளை உபயோகிக்காமல் இருப்பது நல்லது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்கள் உபயோகிக்கத் தகாத வார்த்தைகள் என்று சொல்லியும், இன்றையதினம் பெரும்பாலான பத்திரிகைகளில் தங்களது தீர்ப்பு சரியாக வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**கனம் சபாநாயகர் :** அது வேறு பாயிண்டு. பத்திரிகைகளை "கான்பிசிகேட்" பண்ணுவதற்கு ஒரு அதிகாரத்தை ஸ்பீக்கருக்கு கொடுங்கள்..

The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow. 1-35 p.m.

The House then adjourned.

### V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

#### A. Statutory Rules and Orders.

*Nil.*

#### B. Reports, Notifications and other papers.

59. *Statement showing the number of persons retained in service after retirement arising out of Assurance No. 165/62 with reference to the answer to Legislative Assembly Starred Question No. 619, put by Sri K. A. Mathialagan,* M.L.A., *on 26th July 1962.*

*60. *Labour in Madras State for 1962-63.*

---

* Circulated to Members on 12th March 1963.

மந்திரிகளிடம் ஏதாவது பேசவேண்டுமென்பதற்காக சிலர் மூட்டைக்கு 2 ரூபாய் ஏறிவிட்டதென்று சொல்லியிருக்கக்கூடும். அதைச் சொல்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

**கனம் சபாநாயகர் :** எவ்வளவு ரூபாய்க்குக் கொடுக்கிறோம் என்று நீங்கள் சொல்லுங்களேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** மற்ற பொருள்களின் விலை உயர்ந்திருக்கும் அளவுக்கு இருந்தால் போதும்.

கண்ட்ரோல் இருந்த காலத்தில் நெல்லுக்கு ஒரு போனஸ் கொடுத்தார்கள். அதே போல், விவசாயிகளுக்குக் கூப்பன் சிஸ்டம் வைத்து போனஸ் கொடுத்தால் உதவியாக இருக்கும் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*** திருமதி சி. குழந்தையம்மாள் :** கனம் சபாநாயகர் அவர்களே, நெல் விலை மிகவும் குறைந்திருக்கிறது என்பதை நாம் நன்றாக உணர்கின்றோம். அந்த நெல்லை உற்பத்தி செய்யக் கூடிய விவசாயிகளுக்கு மிகவும் இன்றியமையாத பொருள்களாக, விவசாயத்திற்கு உபயோகப்படுகிற பொருள்களாக உப்பு, பிண்ணாக்கு போன்ற பொருள்கள் இருக்கின்றன. அந்தப் பொருள்கள் விவசாயிகளுக்குக் கிடைப்பதில் சாதாரணமாகக் கஷ்டம் இருக்கிறது. அந்தப் பொருள்களின் விலையும் அதிகமாகத்தான் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

நிலத் தீர்வை, தண்ணீர்த் தீர்வை இவற்றை இன்றைக்கு நாம் போட்டிருக்கும் நிலைமையில், நெல்லை இப்பொழுது விற்கக் கூடிய விலைக்கு விற்றுத் தீர்வையை அவர்கள் கட்ட முடியுமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். கண்டிப்பாக அதைக் கட்ட முடியாது என்பதை இந்தச் சபை முன்பு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

விவசாயிகளுக்குக் கால்நடைகள் மிகவும் அவசியமாக இருக்கின்றன. ஒரு ஜோடி நல்ல மாடு வாங்க வேண்டுமானால், ரூ. 1,000, ரூ. 1,250க்கு குறைவான விலைக்கு வாங்க முடியாது. மாடு இல்லையென்றால் பண்ணையைச் சரியாக நடத்த முடியாது. மாட்டுக்குத் தீவனமான தட்டு பத்து ரூபாய், பத்தரை ரூபாய்க்கு விற்கிறது. பருத்திக் கொட்டை ஒரு மணு நாலரை ரூபாய்க்கு விற்கிறது.

**கனம் சபாநாயகர் :** மண் வெட்டியின் விலை குறையவில்லை என்று ஒரு கனம் அங்கத்தினர் சொன்னார்கள். நீங்கள் மாட்டின் விலை குறையவில்லை என்று சொல்கிறீர்கள். ஆகவே, என்ன செய்ய வேண்டும் ? அதைச் சொல்லுங்கள்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** இன்றைக்கிருக்கும் நிலைமையில் விவசாயிகள் உபயோகிக்கக் கூடிய பொருள்களின் விலையெல்லாம் இறங்காமல் இருக்கிற இந்த நேரத்தில், விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லின் விலை மிகவும் சரிந்திருப்பது வருந்தத் தக்கதாகும். அதே நேரத்தில், விவசாயிகளுக்கு நன்மை செய்கிறோம் என்று சொல்லி நல்ல பிரசாரம் செய்யும்போது, இன்றைக்கிருக்கும் விவசாயிகள் உற்பத்திச் செலவு செய்ததைக்கூட எடுக்க முடியாமல், வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். கூட்டுறவு சொஸைட்டிகளில் நெல்லை வைத்துக்கொண்டு கடன் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால், கடன் கேட்கப் போனால், மிகவும் குறைவாகத்தான் கடன் கிடைக்கிறது. "கோடௌன்" வசதிகள் குறைவாக இருப்பதால், "நான் முந்தி நீ முந்தி" என்று வருகிறார்களே தவிர, அங்கே யாராவது டெபாஸிட் பண்ணுகிறார்களா என்று பார்த்தால் ரொம்பக் குறைவு. அடுத்த மாதம் நெல் விலை ஏறும் என்று சொன்னாலும், அதுவரை விவசாயிகள் செலவுக்கு என்ன செய்வது ? அடுத்த போகத்திற்கு இப்போதே நடவு நட வேண்டும். நாளொன்றுக்கு இரண்டு ரூபாய் கூலி கொடுத்தாலும் ஆட்கள் வருவதில்லை. இரண்டு ரூபாய்





கூலி கொடுத்தாலும், ஆறு மணி நேரம் தான் வேலை வாங்கவேண்டும். அதுவும் பக்கத்தில் நின்று வாங்கினால், அடுத்த நாள் வேறு இடத்திற்குப் போய்விடுவார்கள். பக்கத்தில் நின்று வேலை வாங்காமல், ஆறு மணி நேரம் வேலையை, இரண்டு ரூபாய் கூலி கொடுத்து விவசாயம் செய்யவேண்டியிருக்கிறதென்றால், விவசாய உற்பத்தியை எந்த அளவுக்குப் பெருக்க முடியும் என்பதை இந்தச் சபை சிந்தனை செய்து பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : The Hon. member is expressing only difficulties and not solutions.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** இந்தக் கஷ்டங்களை நீக்குவதற்காக வேண்டி, விவசாயிகளுக்கு மிக அத்தியாவசியமான பொருள்கள் குறைந்த விலையில் கிடைப்பதற்கு வேண்டிய எல்லாவிதமான சௌகரியங்களையும் செய்ய வேண்டும் என்பதை இந்த இடத்தில் நான் ஞாபகப்படுத்துகிறேன். நெல்லின் விலை ஒரு பொதி 70 ரூபாய்க்கு விற்கிறது.

**கனம் சபாநாயகர் :** விவசாயிக்குக் கட்டுப்படியான விலை என்ன என்பதை வேண்டுமானால் சொல்லுங்கள்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** ஒரு பொதி நெல் 90 ரூபாய் விலைக்குக் கேட்டால் எத்தனை பொதி வேண்டுமானாலும் கொடுக்கிறோம். எவ்வளவு வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம். சென்ற ஆண்டில் பொதி 100 ரூபாய், 105 ரூபாய்க்கும் கூட விற்றது. பொதி 90 ரூபாய் விலை என்றால், சர்க்காருக்கும் பத்து ரூபாய் லாபம்; விவசாயிக்கும் இருபது ரூபாய் லாபம். ஆக, ஒரு பொதி நெல் 90 ரூபாய் விலைக்கு வாங்கிக்கொண்டால், எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்க முடியும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*** திரு எம். தண்டாயுதபாணி :** கனம் சபாநாயகர் அவர்களே, நெல் விலை வீழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிடும்போது, "தஞ்சை ஜில்லாவில் மட்டும் வாங்கிக்கொள்ளலாம், மற்ற ஜில்லாக்களில் கொள்முதல் செய்யவேண்டிய அவசியம் இல்லை" என்று இங்கே கூறப்பட்டது. நானும் அந்தக் கருத்தைத்தான் இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகிறேன். சர்க்கார் நிர்ணயித்திருக்கும் ரூ. 17.10 விலையில் ஏக்கர் ஒன்றுக்கு இரண்டு மூட்டைகள் வீதம் ஒரு லட்சம் டன் அரிசிதான் சர்க்காரிலே கொள்முதல் செய்யப்போவதாகக் கூறுகிறார்கள். அந்தப் அடிப்படையில், எங்கள் ஜில்லாவில் மட்டும் கொள்முதல் செய்தால் நிச்சயமாக முப்பது லட்சம் மூட்டைகளையும், ரூ. 17.10 விலைக்கு, விவசாயிகள் நிச்சயமாக கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், மில்காரர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் காரணத்தால், விவசாயி உற்பத்தி செய்யும் அவ்வளவு நெல்லும் ரூ. 17.10க்கே கொள்முதல் செய்யப்படுகிறது தஞ்சை ஜில்லாவில். இப்படி விவசாயிகள் நஷ்டம் அடைகிறார்கள், அவர்களைப் பாதிக்கும் என்று சர்க்கார் நினைத்திருந்தால், நிச்சயமாக அறுவடை செய்யும் இந்த நேரத்தில் விலையை வெளியிடாமல் 2 மாதங்கள் கழித்து, மில்காரர்கள் கொள்முதல் செய்த பிறகு, அவர்கள் இரண்டு ரூபாய் நஷ்டம் அடைந்தாலும் பரவாயில்லை, அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளலாம் என்று அரசாங்கம் எண்ணியிருந்தால் இரண்டு மாதங்கள் கழித்து இந்த விலையை வெளியிட்டிருக்கலாம். ஆரம்பத்திலேயே, ரூ. 17.10 விலைக்கு நிச்சயமாகப் பத்து சத விகிதம் கொடுக்கவேண்டும் என்று மில்காரர்களிடத்தில் சொல்லிவிட்ட காரணத்தால், விவசாயிகளிடமிருந்து இப்பொழுது எவ்வளவு நெல் வந்தாலும், ரூ. 17.10 விலையைத்தான் மில்காரர்கள் கொடுக்கிறார்கள். இதைப்பற்றி நான் பல முறை கூறியிருக்கிறேன். தஞ்சை ஜில்லாவில் மட்டும் கொள்முதல் செய்யப்படுமேயானால், மற்ற ஜில்லாக்களிலிருந்து வரும் வியாபாரிகளாவது சற்று அதிகமான விலை கொடுத்து வாங்க வசதியிருக்கும். அதற்கு நேர்மாறாக, சென்னை மாநிலம் பூராவும் கொள்முதல் செய்யப்படுகிற காரணத்தால், தஞ்சை ஜில்லாவில் நெல் விலை ஏறுவதற்கு

## மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கான கட்டிடங்கள் (மாயூரம்)

*கேள்வி 229.—**திரு. எஸ். முருகையன்** (திரு. கோ. சி. மணி சார்பாக): கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மாயூரம் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் வசதி இல்லாத வாடகைக் கட்டிடத்தில் நடைபெற்று வருவதை மாற்றி அரசாங்கமே சொந்தக் கட்டிடம் கட்ட உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The proposal has been deferred in view of the National Emergency.

## *Drug Control Administration*

* 230 Q.—SRI V. R. NEDUNCHEZHIAN (on behalf of SRI K. A. MATHIALAGAN): Will the Hon. the Minister for Public Health be pleased to state the measures taken to tighten the drug control administration with a view to prevent the sale of spurious and sub-standard drugs in the market?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: A separate Assistant State Drugs Controller has been appointed to attend to drug control work in the State. The Drugs Inspectors have been instructed to be more alert and inspect the sales and manufacturing concerns in their area more frequently. Random samples of drugs are taken and sent for analysis to check up their quality. Manufacturers are allowed to release the drugs only after the records of manufacture and testing are scrutinised by the Inspector. All the records about the manufacture, sale, etc., are scrutinised by Drug Inspectors during their inspection of the concerns. The Government Analyst in charge of drugs has been instructed to deal with analysis of drugs samples sent to him without avoidable delay. The senior Drugs Inspectors have been sent to Bombay and Baroda to study the working of drug control administration in those States so as to reorganise the set up in this State on those lines. An Anti-Spurious Drugs Committee has been constituted and is functioning in this State for the past few years to advise Government on matters connected with the prevention of the manufacture and sale of spurious and sub-standard drugs and wherever possible their recommendations are accepted and implemented. To give an incentive to the Drugs Inspectors to discharge their duties efficiently, their scale of pay has been increased, special posts have been created and conveyance advances for the purchase of motor cycles, scooters etc., have been allowed.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, போலி மருந்துகளைத் தயாரித்து தொழிற்சாலைகள் தமிழக மாநிலத்தில் ஏதாவது வலுக்கட்டாயமாக மூடப்பட்டிருக்கின்றதா?

**கனம் திருமதி. ஜோதி வெங்கடாசலம்:** தமிழ் மாகாணத்தில் இல்லை. நம் மாகாணத்தை விட்டு மற்ற மாகாணங்களிலிருந்துதான் வருகின்றன



**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** போலி சாமான்கள் செய்கிறவர்களை கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை கொடுக்க இப்போது இருக்கிற சட்டம் இடம் கொடுக்கிறதா ?

**கனம் திருமதி. ஜோதி வெங்கடாசலம்:** சட்டத்திலே தண்டிப்பதற்கு விதி இருக்கிறது. ஆனால் குற்றம் செய்கிறவர்களைக் கண்டுபிடித்து, தீர விசாரித்து ஆலோசனை செய்த பிறகுதான் இம்ப்ளிமெண்ட் செய்ய முடியும்.

**திரு. முனு ஆதி:** தலைவர் அவர்களே, இந்த மருந்துகளில் கால்சியம் மருந்தாக விற்கக் கூடியதில் இரண்டு வகையாக இருக்கின்றன. ஒன்று, திருவொற்றியூரிலிருந்து தயாரித்து விற்கப்படும் கால்சியத்தை ஊசியில் ஏற்றி உடலில் செலுத்தும்போது உடம்பெல்லாம் கொதிப்பு ஏற்பட்டு ஹார்ட்டையே பாதிக்கக் கூடிய நிலை இருக்கிறது. அதே நேரத்தில் கல்கத்தாவிலிருந்து தயாரிக்கப்பட்டு வருகிற கால்சியம் நன்றாக இருக்கிறது. ஏன் இப்படி வித்தியாசமான மருந்துகளை உபயோகிக்க வேண்டிய நிலைமை இருக்கின்றது?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** கால்சியத்தை ப்ரோட்யூஸ் பண்ணுகிற மானுஃபாக்சரர்ஸ்களில்தான் வித்தியாசமே தவிர, வரக்கூடிய கால்சியத்தில் வித்தியாசமில்லை. கால்சியம் இன்ஜெக்ஷன் கொடுத்தால் ரீ-ஆக்ஷன் இருக்கத்தான் செய்யும். அந்த ரீ-ஆக்ஷனில் கொஞ்சம் அனல் தான் காட்டும்.

## போக்குவரத்து விபத்துக்கள்

*கேள்வி 231.—**திரு. முனு ஆதி:** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தனிப்பட்டவர்களின் கார்களில் பொருத்தப்பட்டிருக்கும் வானொலி பெட்டிகளினால், போக்குவரத்து விபத்துகள் அதிகமாக ஏற்படுகின்றன என்பதை அரசாங்கம் அறியுமா ?

(ஆ) ஆம், என்றால் அதைத் தடை செய்ய உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

**திரு. முனு ஆதி:** ஸார், இப்போது பஸ்களிலே அப்படிப்பட்ட ஆக்ஸிடெண்டுகள் ஏற்படுகின்றன என்று உணர்ந்து அதைத் தடை செய்திருக்கிறார்கள். அதே போன்று இதையும் தடை செய்தால் அதிகமான ஆக்ஸிடெண்டுகள் குறைக்கப்படும். அதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பஸ்ஸிலே இவ்வாறு போடக்கூடாது என்று ஆலோசனைக் குழுவில்கூட சிபாரிசு செய்யப்பட்டது. பஸ்ஸிலே போடுவது வேறு விஷயம். தனிப்பட்டவர்கள் ஏதோ ஒரு சில கார்களில் வைத்திருக்கிறார்கள். அதனால் விபத்து ஏதும் ஏற்படுவதாகத் தெரியவில்லை. ஆகையால் அதைத் தடுக்க உத்தேசம் இல்லை.

**திரு. ம. கமலநாதன்:** பஸ்களிலே இந்த ரேடியோ வைப்பதால் ட்ரைவருடைய கவனம் கவரப்பட்டு ஆக்ஸிடெண்ட் ஆகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் பஸ் போகும்போது ரோடுகளில் இருக்கிற ஹோட்டல்களிலே இந்த ரேடியோவை வைத்திருப்பதினால் இந்த ட்ரைவருடைய கவனம் கவரப்பட்டு, அதன்காரணமாக ஆக்ஸிடெண்ட் வராதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** பஸ் போகிறது என்றால் அதற்காக இவைகளையெல்லாம் கட்டுப்படுத்த முடியாது. பஸ் ஓட்டுகிறவர்கள் ஜாக்கிரதையாகத்தான் ஓட்டவேண்டும்.

## Dam across Vaniar

* 205 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR. Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Central Government have sanctioned a sum of Rs. 48 lakhs during the year 1955 for the construction of a Dam across Vaniar near Mullikatu in Pappireddipatty block; and

(*b*) if so, the reason for not taking up the scheme till now?

The Hon. Sri V. RAMAIAH: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** அந்தத் திட்டத்தினுல் பல ஆயிரம் ஏக்கர்கள் நன்மை பெறும் என்று சொல்வதால் அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்து அத்திட்டத்தை ஆரம்பிக்க முடியுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** அத்திட்டமே உருவாகவில்லையே !

## கிராமத் தொண்டர் படை.

* கேள்வி 223.—**திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கிராமத் தொண்டர் படையில் சேர்ந்தவர்களுக்கு யூனிபாரம், துப்பாக்கிப் பயிற்சி முதலியன கொடுக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கிராமத் தொண்டர் படையில் சேர்ந்தவர்களுக்கு யூனிபாரம் கொடுக்கவோ, துப்பாக்கிப் பயிற்சி அளிக்கவோ உத்தேசமில்லை. எனினும், கிராமத் தொண்டர் படையினர் அனைவருக்கும் பொதுச் சின்னம் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. கிராமப் பாதுகாப்புக்காக அவர்களுக்கு உடற்பயிற்சி, டிரில் முதலிய பயிற்சிகளை அளிக்க ஏற்பாடு செய்யும் உத்தேசம் உண்டு.

There is no proposal to prescribe uniform to the volunteers of the Village Volunteer Force or to give them rifle training. A common insignia has however been prescribed for all the volunteers. It is proposed to arrange for physical training and mass drill for the members of the unit for Village Defence.

**திரு. ஜே. மாதா கவுடர்:**—உடற்பயிற்சி, டிரில் போன்றவைப் போலீஸ் இலாகாவால் கொடுக்கப்படுகிறதா ? அல்லது வேறு யார் கொடுக்கிறார்கள்?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** போலீஸ் இலாக்காவிடம் பொறுப்பு கொடுக்கப்படவில்லை. கிராமங்களில் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இதற்கு உதவி அளிப்பார்கள்.

**திரு. ம. கமலநாதன்:** ஜனவரி 26-ம் தேதி அமைக்கப்பட்ட கிராமத் தொண்டர் படை இப்போது எந்த நிலையில் இருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஜனவரி 26-ம் தேதி அமைக்கபட்டிருப்பதால் அதே நிலையில் தான் இருக்கிறது ?

**திரு. இரா. நாராயணன் :** தொண்டர் படைக்கு பயிற்சி கொடுக்கும் போது அவர்கள் சொந்த வேலையைப் பாதிக்காமல் எந்த நேரத்தில் கொடுக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கூடியவரை சொந்த வேலைகள் பாதிக்கப்படாமல்தான் அளிக்கப்படும். யாராவது சொந்த வேலை பாதிக்கப்படுகிறது என்று கருதுவார்களேயானால் அவர்கள் அந்தப் படையிலிருந்து விலகி விடலாம்.

**திரு. கே. பொன்னையா :** தொண்டர் படைக்கு கொடுக்கும் பொதுச் சின்னம் ஒரு நாள் பயிற்சி பெற்ற பிறபாடு கசங்கிப்போய்விடுகிறது. அதை மாற்றி தகட்டிலாவது கொடுக்க உத்தேசமுண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது மாற்றுவது பற்றி உத்தேசம் இல்லை.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கிராமத் தொண்டர் படை மாதத்திற்கு அல்லது வாரத்திற்கு ஒரு நாள் கிராமங்களில் பொது வேலை செய்ய இத்திட்டம் போடப்பட்டிருக்கிறது. அதற்கு பஞ்சாயத்து போர்டு இசைந்தால் அவர்களுக்கு தவிர்க்க முடியாத செலவு ஏற்பட்டால் பஞ்சாயத்து செலவு செய்ய அனுமதிக்கப்படுமா ?

**கனம் திரு. எம் : பக்தவத்சலம் :** கிராமத் தொண்டர் படை உருப்படியான பணி புரிவதென்றால் பஞ்சாயத்து போர்ட்டார் ஒத்துழைப்பின் பேரில் அவர்களுடன் கலந்து ஆலோசித்து பணிபுரிவதுதான் நல்லது. ஆகவே செலவைச் சமாளிப்பது பற்றிக் கலந்துபேசி முடிவு செய்துகொள்ளலாம்.

**திரு. முனு ஆதி :** தேசிய நெருக்கடியை முன்னிட்டு ஊர்க்காவல் படை ஆரம்பிப்பதால் அவர்களுக்கு துப்பாக்கிப் பயிற்சி கொடுத்தால் என்ன? நெருக்கடி அதிகமாகும்போது அது பயன்படாதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது கிராமத் தொண்டர் படையைப் பற்றியது. ஊர்க்காவல் படையைப் பற்றியதல்ல. கிராமத் தொண்டர் படை இன்னின்னதை கவனிக்க வேண்டுமென்று இருக்கிறது. அவர்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சி வேண்டியதில்லை. ஹோம் கார்ட்ஸ், அகப்படை இருக்கிறது. அவர்களுக்குத் துப்பாக்கி பயிற்சி அளிக்கப்படுகிறது.

## நீர்ப்பாசன வசதி (கள்ளக்குறிச்சி வட்டம்).

*கேள்வி 224.—**திரு. எல். ஆனந்தன் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வெள்ளாற்றிலிருந்து கால்வாய் வெட்டி கள்ளக்குறிச்சி தாலுக்கா சின்ன சேலம் பகுதியில் உள்ள கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தரும் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

**கனம் திரு. வெ. ராமையா :** வெள்ளாற்றிலிருந்து கால்வாய்வெட்டி கள்ளக்குறிச்சி, சின்ன சேலம் பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதி அளிக்கக் கூடிய திட்டம் ஒன்றும் இல்லை.

## *M.P.S.C.*

* 225 *Q.*—Sri A. ARUMUGAM: Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to appoint a harijan as a member of the Madras Public Service Commission?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: The question of filling up a vacancy, which is to arise a few months later has not yet been taken up.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சென்னையில் உள்ள பப்ளிக் சர்விஸ் கமிஷன் மெம்பர்கள் நியமனங்களில் அரசியல் கட்சிகளில் இருந்துதான் நியமனம் செய்யப்பட்டது என்பது உண்மையா ? பெரிய உத்தியோகங்களுக்

கெல்லாம் நபர்களை அமர்த்துகிற பொறுப்பில் உள்ள சர்வீஸ் கமிஷன் மெம்பர் பதவிக்கு ரிடையர்டு நீதிபதி போன்றவர்களை நியமிக்க அரசாங்கம் சிபார்சு செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தகுதி உடையவர்கள் யாரோ அவர்கள் நியமிக்கப்படுவார்கள்.

**கனம் சபாநாயகர் :** ரிட்டயர்ட் ஜட்ஜுகள் எல்லாம்கூட இப்போது அரசியலில் இருக்கிறார்கள்போல் இருக்கிறது.

**மத்திய சிறை (வேலூர்).**

* கேள்வி 226.—**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் மத்திய சிறையில் குற்றவாளிகள் சாப்பிடுவதற்கு இடமில்லாமல் அவதிப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) அதற்காக எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No

(b) Does not arise.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து மத்திய சிறையில் வேதனைப்படும் குற்றவாளிகளுக்கு சாப்பாடு வசதி செய்து கொடுக்கமாட்டார்கள் என்று தெரிகிறது. இதுவரை செய்யாவிட்டாலும் இனிமேலாவது அவர்கள் செய்து கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சாப்பிடுவதற்கு இடமில்லாமல் இருப்பது தெரியுமா என்பது கேள்வி. அதற்கு 'இல்லை' என்று விடையளித்தேன். இடம் இல்லாமல் கஷ்டப்படுகின்ற நிலை இல்லை. ஆனால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கட்டடத்தில் சாப்பிடாமல் வெளியில் சாப்பிடலாம். நாங்கள் எல்லாம் கூட அப்படித்தான் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். வெளியிடங்களில்தான் சாப்பிடுவது. சிறையில் அதிக எண்ணிக்கை இருந்தால் வெளியே சாப்பிடும் பழக்கம் உண்டு.

**திரு. முனு ஆதி :** உணவை இரும்புப் பாத்திரங்களில் தயாரிப்பதை விட்டு அலுமினியப் பாத்திரங்களில் தயாரிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இரும்புப் பாத்திரங்களில் தயாரிப்பது அலுமினியப் பாத்திரத்தில் தயாரிப்பதை விட ஆரோக்கியமானது என்று சொல்ல விரும்புகிறேன்.

**திரு. எஸ். முருகையன் :** வேலூர் மத்திய சிறையில் அவர்கள் வெயில் காலத்தில் வெளியில் உட்கார்ந்து வெய்யிலில் சாப்பிடவேண்டியிருக்கிறது. மழைக் காலங்களில் மழையில் நனைந்துகொண்டு சாப்பிட வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே மூன்று நான்கு ப்ளாக்குகள் சேர்ந்தாற்போல் சாப்பிடுவதற்கு தனியாக ஒரு கட்டடம் அமைக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மழை காலங்களில் ஒண்டிக் கொள்ளலாம். எண்ணிக்கை அதிகமாகும்போது அதற்கென்று இனி சட்டடம் கட்டவேண்டுமென்றால், இப்போது கட்டுவதாக உத்தேசம் இல்லை. அதிக எண்ணிக்கை இருக்கும்போது வெளியில் சாப்பிடுவதில் அதிகக் கஷ்டம் இருப்பதாக நான் உணரவில்லை.



*Police Research Centre*

* 227 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) when did the Police Research Centre at Madras commence functioning;

(*b*) the expenditure incurred in respect of this Centre each year since its inception;

(*c*) the details of the subjects on which the Centre has conducted survey so far; and

(*d*) the findings in respect of each survey?

THE HON. SRI M. BHAKTAVATSALAM . (*a*) Sixth May 1960.

(*b*) The expenditure incurred each year since its inception is as follows :—

| | | Rs. | nP. |
|---|---|---|---|
| 6th May to 31st December 1960 | .. | 15,883 | 28 |
| 1961 — .. .. .. .. | .. | 28,304 | 00 |
| 1962 — .. .. .. .. | .. | 29,116 | 55 |
| Expenditure under Contingencies (1960-61) | | 1,573 | 00 |
| Total | .. | 74,876 | 83 |

(*c*) The Research Centre has completed surveys on "prevention of criminality" and also on "corruption in public sector".

(*d*) It is not in public interest to disclose the findings.

**கடற்கரைச்சாலை (நாகர்கோயில்).**

***கேள்வி 228.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நாகர்கோயில் (சங்கு துறை)கடற்கரை ரோடு போடும் வேலை தடைப்பட்டு நிற்கின்றதா ?

(இ) ஆம் எனின், அதற்கான காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : The work has hed up for sometime due to non-settlement of land acquisition proceedings. Necessary lands have since been acquired and the work is in gress.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** ஸார். இந்த சங்கு துறை ரோடு போடும்போது யாராகிலும் அங்கே இடையில் வந்து கோவிலைக் கட்டியதன் காரணமாக வேலைகள் நின்று விட்டதா ? அப்படிக் கட்டியிருந்தால் அதனை அகற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** நான் இப்போது படித்த விடையில் வேலை நடந்து கொண்டிருக்கிறது என்றுதான் சொன்னேன்.

weir to Thimmapuram tank. The water flows over the dip only when the tank is full during heavy rains and which occurs only once in a year for a duration of about a month. But there is no interruption to traffic at any time, though inconvenience is caused to fast moving traffic at this dip.

(b) It is proposed to provide a concrete paved pavement. The work will be executed soon.

### *Anicuts (construction)*

* 236 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Works be pleased to state—

Whether there is any proposal to stop the construction of anicuts already sanctioned incurring expenditure in view of the present emergency?

**கனம் திரு. வெ. ராமையா :** இல்லை.

### *Medicines (supply to dispensaries)*

* 237 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state the steps taken to avoid delay in the supply of medicines to dispensaries under the control of Panchayat Union Councils by the Medical Stores Depot?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: The matter is under consideration.

SRI C. CHIRANJEEVULU NAIDU: Sir, has any time been specified by the Government for the supply of medicines to the Panchayat Union dispensaries and other dispensaries by the Medicceal Stores after the indent is made by the respective dispensaries ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: There is no time specified excepting the fact that when indents are sent to the Government Medical Stores, the Government Medical Stores insist upon paying the whole value of the medicines indented for and also the arrears that are due by the Panchayat Union Councils.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** மெடிகல் ஸ்டோர்ஸிலிருந்து மருந்து வருவதற்கு ஆறு மாதங்களுக்குக் குறையாமல் தாமதம் ஆகிறது. ஆகையினால் 50 சதவிகிதம் மருந்துகள் வெளியே வாங்குவதற்கு பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகாரம் வழங்கப்படுமா ? அது பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** எனக்குக் கிடைத்த தகவலிலிருந்து, ஏற்கனவே பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் மெடிகல் ஸ்டோர்ஸுக்குக் கொடுக்கவேண்டிய பணம் நிறைய இருக்கிறது. ஆகையினாலே அவர்கள் மருந்து கொடுப்பதற்குத் தயங்குகிறார்கள்.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** மாநிலத்தில் ஒரே ஒரு மெடிகல் ஸ்டோர்ஸ் இருப்பதினால்தான் இந்தத் தாமதம் ஏற்படுகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ஆகவே, பிராந்திய வாரியாக மெடிகல் ஸ்டோர்ஸுகள் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** நான் முன்பு கூறியது போல மெடிகல் ஸ்டோர்ஸின் மீது ஒன்றும் குற்றம் கிடையாது. அவர்களிடத்தில் மருந்துகள் இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்கனவே



வாங்கிய மருந்துகளுக்கு பணம் கொடுக்காத காரணத்தினால்தான் தாமதம் ஆகிறது. ஆகவே, மருந்துகளுக்காக இண்டெண்டுகள் போடும் பொழுது, குறிப்பாக பணத்தை அட்வான்ஸாகக் கொடுக்க வேண்டும் என்று மெடிகல் ஸ்டோர்ஸைச் சேர்ந்தவர்கள் இன்சிஸ்டு செய்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்கள் அம்மாதிரி பணம் அனுப்பாததினால்தான் தாமதம் ஏற்படுகிறதே ஒழிய, மெடிகல் ஸ்டோர்ஸினால் ஒன்றும் தாமதம் ஏற்படுவதில்லை.

**திரு. முனு. ஆதி :** மெடிகல் ஸ்டோர்ஸில் வாங்குவதால் பணம் கொடுக்காமல் இருக்கிறார்கள். வெளியில் வாங்குவதற்கு அனுமதி கொடுத்துவிட்டால் பணம் கொடுத்துத்தான் வாங்க வேண்டி வரும். ஆகவே, உடனடியாக வேண்டுமானால் மருந்துகளை வெளியே வாங்குவதற்கு அனுமதி கொடுக்கப்படுமா ?

**கனம் சபாநாயகர் :** வெளியே மருந்து வாங்கினால் மட்டும் சும்மா தந்து விடுவார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பஞ்சாயத்து யூனியன்கள் வெளியிலே பணம் கொடுத்து மருந்துகள் வாங்குவதாயிருந்தால், அந்தப் பணத்தை மெடிகல் ஸ்டோர்ஸிடம் கொடுத்து வாங்கிக் கொள்ளலாமே ?

**திரு. ஜே. மாதா கவுடர் :** பஞ்சாயத்து யூனியன்கள் வாங்கிய மருந்துகளுக்குப் பணம் கொடுக்கப்படவில்லை என்ற காரணத்தினால், முக்கியமான மருந்துகள் கொடுபடாமல் இருந்தால், அதனால் வியாதியஸ்தர்கள் தான் பாதிக்கப்படுவார்கள் அல்லவா ? பஞ்சாயத்து யூனியன்களின் பொறுப்பு என்று சொல்லி மருந்து அனுப்பாமல் இருப்பது சரியா ? அதற்கு வேறு மாற்று முறைகளை சர்க்கார் கண்டு பிடிக்க முன்வருமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** எபிடெமிக் வியாதிகளைப்பொறுத்த மட்டில், இந்த ரூல்ஸ், ரெகுலேஷன்களெல்லாம் மெடிகல் ஸ்டோர்ஸ் அப்சர்வ் செய்வதில்லை. உடனடியாக எங்கே மருந்து தேவையாக இருக்கிறதோ அதைக் கொடுத்து விடுகிறார்கள். இண்டெண்டு இல்லாமலே கொடுத்துவிடுகிறார்கள். பணமும் கேட்பதில்லை. இருந்தாலும் இதற்குத் தக்க வழி செய்ய வேண்டும். பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரிகளுக்கு மருந்துகள் சப்ளை செய்வதற்கு டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீஸஸ் தக்க நடவடிக்கைகள் எடுக்கிறார்கள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மருந்துகள் வாங்குவதற்கு பஞ்சாயத்து யூனியன்களிடத்தில் நிறைய பணம் இருக்கிறது. சில சமயங்களில் இண்டெண்டுகள் போட்டு அனுப்பியும் 6 மாதம், ஒரு வருஷத்திற்கு மருந்துகள் வருவதில்லை. ஆகவே, கனம் சுப்பைய்யா முதலியார் சொன்னதுபோல, பஞ்சாயத்து யூனியன்கள் உடனடியாகத் தேவையான மருந்துகளை 50 சதவிகிதம் வெளியே வாங்கிக் கொள்ளலாம் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பஞ்சாயத்து யூனியன்கள் பணத்தைக் கொடுத்து மருந்துகளை வெளியே வாங்குவதாயிருந்தால், அந்தப் பணத்தை இண்டெண்டுகளோடு சேர்த்து அனுப்பினால் உடனே மெடிகல் ஸ்டோர்ஸிலிருந்து மருந்துகளைப் பெறலாம்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** சர்க்கார் ஆஸ்பத்திரிகளிலே மருந்துகள் வருவதற்கு தாமதம் ஏற்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ?

**கனம் சபாநாயகர் :** பணம் அனுப்பவில்லை என்று மந்திரி அவர்கள் சொல்லுகிறார்கள்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** சர்க்கார் ஆஸ்பத்திரிகள் பணம் அனுப்பவேண்டிய அவசியம் இல்லை. சில சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் "மெடிகல் டெபோவிலிருந்து மருந்து வருவதற்கு டிலே ஆகிறது. எங்களிடம் மருந்து இல்லை" என்ற ஆவலாதிகள் இருந்து கொண்டிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சர்க்கார் ஆஸ்பத்திரிகள் சம்பந் தப்பட்டவரையில் மெடிகல் டெபோவிலிருந்து மருந்துகள் சப்ளை செய்வதில் தாமதம் கிடையாது. ஏதாவது ஒரு ஸ்பெஸிபிக் இன்ஸ்டன்ஸ் இருந்தால் அதுபற்றி கனம் அங்கத்தினர் சொன்னால், தக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** மக்கள் நலனைக் கருதி பஞ்சாயத்து யூனியன்களுக்கு மெடிகல் ஸ்டோர்சிலிருந்து மருந்துகளைக் கொடுக்க அரசாங்கம் உத்தரவு இடுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இப்பொழுது மெடிகல் ஸ்டோர் சிலிருந்து மருந்து கொடுப்பதில் எதுவும் தடையில்லை. பணம் கொடுத் தால் உடனே மருந்துகள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆடிட் அப்ஜெக்ஷன் இருக்கிற காரணத்தினால்தான் கொடுக்க முடியவில்லை. குறிப்பாகச் சொல்லப்போனால், மெடிகல் ஸ்டோர் ஸுக்கு பஞ்சாயத்து யூனியன்களிடமிருந்து வரத்தாழ ரூ. 10 லட்சம் வர வேண்டியிருக்கிறது.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** மருந்து கைக்கு வந்தால்தான் பணம் கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. மருந்து முதலில் வாங்குவதா அல்லது பணத்தை முதலில் கொடுத்து பிறகு மருந்து வாங்கு வதா என்ற பிரச்னை வேறு இருக்கிறது. அதை முதலில் தீர்க்கவேண்டும். ஜில்லா போர்டுகள் இருந்த காலத்திலேயே இந்த மாதிரி பிரச்னை இருந்தது. பஞ்சாயத்து யூனியன்கள் வந்த பிறகும் இந்தப் பிரச்னையை மேலும் வளர விடாமல் தடுப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டி ருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஏற்கனவே பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று இன்ஸிஸ்டு பண்ணாமல் இண்டெண்டுகள் பேரில் சப்ளை செய்த கடன் தொகைதான் ரூ. 10 லட்சம் பஞ்சாயத்து யூனியன் களிலிருந்து மெடிகல் ஸ்டோர்ஸுக்கு வரவேண்டியிருக்கிறது. கனம் அங் கத்தினர்களெல்லாம் பஞ்சாயத்து யூனியன்களிடம் சொல்லி இண்டெண்டு களுடன் பணத்தையும் அனுப்பச் சொன்னால், இந்தத் தகராறு ஏற்படாது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** இம்மாதிரியெல்லாம் பிரைமரி ஹெல்த் செண்டர்கள் போன்ற ஆஸ்பத்திரிகளில் எல்லாம் நெருக்கடி இருப்பதன் காரணமாக எல்லா ஆஸ்பத்திரிகளையும் சர்க்காரே எடுத்து நடத்தக்கூடிய நிலைமையை ஏற்படுத்த சர்க்கார் முன்வருவார்களா? சுகாதாரம் மிக முக்கிய மானதாக இருப்பதினால், நோயைத் தடுப்பதற்கும், வந்த நோய் வராமல் இருப்பதற்கும் ஆஸ்பத்திரிகள் அவசியமாக இருப்பதின் காரணத்தினால் எல்லா ஆஸ்பத்திரிகளையும் சர்க்காரே ஏற்று நடத்துவார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** எல்லாவற்றையுமே சர்க்கார் எடுத்துக் கொண்டு விட்டால், மக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் என்ன பொறுப்பு இருக்கிறது ?

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates division by the Member.]**

## II.—CALLING ATTENTION TO THE DAMAGE TO CHILLY PLANTS IN ARIYALUR CONSTITUENCY.

**திரு. இரா. நாராயணன் :** அரியலூர் தொகுதியிலுள்ள பொய்யூர், கருப்பூர், இடையாத்தாங்குடி ஆகிய இடங்களிலும் மற்ற சுற்று வட்டாரப் பகுதிகளிலும் இந்த ஆண்டு பெய்த பெருமழையின் காரணமாக மிள காய்ச் செடிகளுக்கு ஏற்பட்ட சேதமும் அதனால் விவசாயிகள் அனுபவிக்கும்



இடர்ப்பாடும் பற்றிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை கனம் விவசாய அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரு கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, there was good rain about 320 m.m. in October last and this was favourable for both dry and irrigated chillies. But, there was unprecedented heavy rains of about 93·6 m.m. between 8th and 12th January of this year immediately after hoeing and weeding operations. This rain affected the physical conditions of the soil, flowering and setting of fruits. The growth was also retarded due to heavy incidence of die-back diseases. Effective control measures are being taken by the Agriculture Department.

## III.—REQUEST FOR EXPUNCTION OF CERTAIN MATTER.

SRI T. L. SASIVARNA THEVAR rose.

MR. SPEAKER : The hon. Member must first tell what matter he is going to raise.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** சொல்லுகிறேன். அங்கு வந்து சொல்ல வேண்டுமா ?

**கனம் சபாநாயகர் :** இங்கு வந்து சொல்லக்கூடாது. அங்கிருந்து தான் சொல்லவேண்டும். 'சொல்லுகிறேன்' என்று சொல்லிவிட்டு அப்படியே பேசிக் கொண்டு போகக் கூடாது.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** நான் சொல்லுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, whenever an hon. Member raises anything which is not in the Agenda, the usual practice is for the hon. Member to meet the Hon. Speaker in his Chamber and take his permission to do so. That must be followed in all cases and it will help in maintaining the dignity of the House.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபடி தங்களோடு முன்கூட்டி கலந்துகொண்டு பிறகு விஷயத்தை நான் இங்கு குறிப்பிடுவதற்குத் தயாராக இருக்கிறேன். இன்றுமட்டும் அப்படிச் செய்யாததற்கு வருத்தம் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

**கனம் சபாநாயகர் :** அதற்கு ஒரு டிஸ்கஷன் வேண்டாம். நீங்கள் சங்கதியைச் சொல்லுங்கள். 9-00 a.m.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** நேற்று கடைசியில் நடந்த விவாதத்தின்போது கனம் அமைச்சர் அவர்கள் நான் ஏதோ தவறுத லாக சில வார்த்தைகளை சொல்லியதாக இங்கு குறிப்பிட்டிருக்கிறார்கள். கனம் நிதி அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார். கனம் விவ சாய அமைச்சர் அவர்களும் குறிப்பிட்டிருக்கிறார். என்ன தவறுதலான வார்த்தைகளை நான் உபயோகப்படுத்தினேன் என்று எனக்குத் தெரிவிக் கப்படவில்லை. நேற்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் பேசும்போது சொல்லத் தகாத சில வார்த்தைகளைக் கூறியிருக்கிறார். அது பத்திரிகை யில் வந்திருக்கிறது. அதை கனம் சபாநாயகர் அவர்களுடைய கவனத் திற்குக் கொண்டு வருகிறேன். அதை நடவடிக்கையிலிருந்து எக்ஸ்பஞ்சு பண்ண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER: Is the hon. Member raising a privilege question? Let the hon. Member state under what category he is raising his point? The point the hon. Member wants to raise must come under one rule or the other of the Madras Assembly Rules.

SRI T. L. SASIVARNA THEVAR: I want to expunge some portion.

MR. SPEAKER: Then the hon. Member may put it in writing. I shall consider whether the hon. Member has a right to raise his point or whether there is any remedy for that.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நேற்று நான் பேசியபோதோ அல்லது கனம் விவசாய அமைச்சர் அவர்கள் பேசியபோதோ ஏதாவது தவறுகள் இருந்திருந்தால் அதை அப்பொழுது எடுத்துகாட்டியிருக்க வேண்டும். பத்திரிகைகளைப் பார்த்துவிட்டு சொல்ல முடியாது. பத்திரிகைகளில் வந்திருப்பதை வைத்துக் கொண்டு விவரம் கேட்பது என்பது ஒழுங்கு அல்ல. அந்தப் பிரச்னையைப் பற்றி இங்கே இப்பொழுது கிளப்புவது முறை அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

MR. SPEAKER: What I say is, if the Hon. Minister has said that an hon. Member was telling something wrongly or in a way which was not conducive to the occasion, then it does not give any right for the hon. Member concerned to raise any point on that. That is a fair criticism. If the hon. Member's view is described as wrong, then nothing arises out of that.

If the hon. Member wants anything more, then he can put it in writing explaining under what category the matter he wants to raise could come before this House.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** நான் வாசிக்கக் கூடிய பகுதியை இந்தச் சட்டமன்றத்தில் வாசிக்கிறேன்.

**MR. SPEAKER :** வாசிப்பதற்கு முன்னதாக என்ன சொல்லுகிறீர்கள் ? **Before writing, the hon. Member must know under what rule he wants to raise the matter before the House.**

SRI T. L. SASIVARNA THEVAR: I want to request the Hon. Speaker to expunge some portion.

MR. SPEAKER: The hon. Member may put it in writing and then we shall take it up.

## IV.—GOVERNMENT MOTION *RE* ELECTION TO THE HOUSE COMMITTEE.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I move—

"That with reference to Rule 221 (1) of the Madras Legislative Assembly Rules, this Assembly do proceed on a date to be fixed by the Hon. the Speaker to elect eleven members to be members of the House Committee for the financial year 1963–64."





MR. SPEAKER: The question is—

"That with reference to Rule 221 (1) of the Madras Legislative Assembly Rules, this Assembly do proceed on a date to be fixed by the Hon. the Speaker to elect eleven members to be members of the House Committee for the financial year 1963–64."

The motion was put and carried.

MR. SPEAKER: In accordance with regulations framed by me for holding of elections according to the principle of proportional representation by means of single transferable vote, I fix 11 a.m. on 16th March 1963 as the time within which nomination papers of candidates for election to the House Committee should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary. Nomination papers will be taken up for scrutiny at 3 p.m. on 16—3—1963. I also fix 2 p.m. on 18th March 1963 as the last hour and date for withdrawal of candidature. If the number of candidates nominated exceeds the number of seats to be filled, a poll will be taken on 20th March 1963 between the hours 9 a.m. and 1 p.m.

## V.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1963–64—*cont.*

### DEMAND NO. XIII—EDUCATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 29,25,02,400 under Demand No. XIII—Education."

**திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, எனது வெட்டுப் பிரேரேபணையை நான் பிரேரேபிக்கிறேன்—

"That the allotment of Rs. 29,25,02,400 under Demand No. XIII—Education be reduced by Rs. 100."

MR. SPEAKER: The Demand and the cut motion are before the House for discussion.

***புலவர் கா. கோவிந்தன் :** கனம் தலைவர் அவர்களே, நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் இப்பொழுது நம்முடைய சபை முன் கொண்டு வந்திருக்கிற கல்வி மானியக் கோரிக்கையையொட்டி பெரும் தொகையை ஒதுக்கி நம்முடைய மாகாணத்தினுடைய கல்வித் தரத்தை உயர்த்தத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். அதன் காரணமாக 29 ஆயிரம் ஆரம்பப் பள்ளிகளில் 42 லட்சம் ஆரம்பப் பள்ளி மாணவர்கள் படிப்பதற்கு வசதியும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு திட்டமாகும் இது. உயர் நிலைப் பள்ளிகளும் கணிசமான அளவில் உயர்ந்திருக்கின்றன. இப்படி இந்த மாகாணத்திலுள்ள கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு நமது கனம் நிதி அமைச்சர் அவர்கள் வேண்டிய வசதிகளையும் செய்து வருகிறார்கள். அவருடைய பொறுப்பைக் கண்டு நான் அவரைப் பாராட்டுகிறேன். "உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே" என்றபடி நமது கனம் அமைச்சர் அவர்கள் கல்விக்கு வேண்டிய

**திரு. முனு. ஆதி :** ரேடியோ போடாமல் வருகிற பஸ்ஸுக்கு எதிரே ரேடியோ போட்டுக்கொண்டு கார் வருவதன் காரணமாக இந்த மாதிரி ஆக்ஸிடெண்டுகள் ஏற்படலாம் என்ற காரணத்தினுல் இத்தகைய ஒரு நிலையைத் தடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அப்படி வானொலி போட்ட மோட்டார் கார்களில், காரில் இருக்கிறவர்கள் அனுபவிக்கலாமே தவிர, அதிக சப்தம் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

**திரு. ம. கமலநாதன் :** பஸ்களில் ரேடியோ போடக்கூடாது என்று ஏற்படுத்துவதற்குமுன் ரேடியோ வைத்ததால் ஆக்சிடெண்ட் உண்டாயிற்று என்பதற்கு ஏதாவது அரசாங்கத்திடம் தகவல் உண்டா ? அப்படியாளுல் அதன் காரணமாக எவ்வளவு ஆக்ஸிடெண்டுகள் ஏற்பட்டன.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு ஒன்றுமில்லை. அவ்வாறு ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம், விபத்து ஏற்பட இடம் ஏற்படலாம் என்று யோசனை செய்து வேண்டாமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் சில நாட்களுக்குமுன் கனம் அங்கத்தினர் அவர்கள் இசையிலே பயிரே விளைகிறது என்று சொன்னார்கள். ஆகையால் இதைப் பற்றி ரொம்பவும் பேசவேண்டியதில்லை.

**திரு. சா. கணேசன் :** சில தனிப்பட்ட நபர்கள் இரவுப் பிரயாணம் செய்யும்போது, ரேடியோ இல்லாவிட்டால் தூக்கம் வந்துவிடுகிறது என்று சொல்லி, ரேடியோ இணைக்கப்படாத காராக இருந்தாலும், ட்ரான்ஸிஸ்டரைத் தூக்கிக்கொண்டு போகிறார்கள். அதனால் பலன் இருக்கிறது, தீமை இல்லை என்பதை ஏற்றுக்கொள்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒரு முடிவை இதிலிருந்து ஏற்படுத்திக்கொள்ள முடியாது. கனம் அங்கத்தினர் சொல்லுவதை நான் ஆட்சேபிக்கவில்லை. சில சமயங்களில் அனுகூலம்கூட இருக்கும் என்று நான் எண்ணுகிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** வியாபாரிகள் வீட்டில் இருந்தால் ரேடியோவிலிருந்து உலக விவகாரங்களைத் தெரிந்துகொள்ள முடியும். ஆனல் அவர்களுக்கு சதா பிரயாணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது. அவர்கள் அப்படிப் பிரயாணம் செய்யும் போது நாட்டுச் செய்திகளைத் தெரிந்துகொள்ள பஸ்களில் ரேடியோவைப் பொருத்த அரசாங்கம் உத்திரவு இடுவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வியாபாரிகள் தெரிந்துகொள்ளலாம். அது நலமாகவும் இருக்கலாம் அல்லது தீமையாகவும் இருக்கலாம். இப்போது கனம் சுதந்திரா கட்சித் தலைவர்கூறிய மாதிரி தூக்கம் வராமல் இருக்கவும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இசை தூக்கத்தையும் அளிக்கும். எப்படியும் பஸ்ஸில் வேண்டாமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. எஸ். முருகையன் :** இதுபோன்ற வானொலிப் பெட்டிகள் அமைச்சர் கார்களில் பொருத்தப்பட்டிருக்கின்றனவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எனக்குத் தெரிந்த வரையில் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

**கனம் சபாநாயகர் :** கொடுக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறார்களா ?

### போலீஸ் அவுட் போஸ்ட் (மாத்தூர்).

* 232.கேள்வி—**திரு. இரா. நாராயணன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், மாத்தூரில் ஒரு அவுட் போலீஸ் நிலையம் ஏற்படுத்த உத்தேசமுண்டா ?





THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

**திரு. இரா. நாராயணன் :** மாத்தூர் பகுதியில் முந்திரிக் காடுகள் அதிகமாக இருப்பதாலும், திருட்டுக் குற்றங்களும், கள்ளச் சாராயம் தயாரிப்பதும் அதிகமாக இருப்பதாலும், அங்கே ஒரு அவுட்-போஸ்ட் வேண்டுமென்று அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்திருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இம்மாதிரி பல கோரிக்கைகள் வருகின்றன. அதையெல்லாம் ஆராய்ந்து, அவசியமானல்தான் அவுட் போஸ்ட் புதிதாக அமைக்கப்படுகிறது. இந்த இடத்திலே அவசியம் இல்லை என்று கருதி இது மறுக்கப்பட்டது.

### வெள்ளாற்றுப் பாலம் (புவனகிரி)

* கேள்வி 233.—**திரு. ஏ. ராமச்சந்திர ராயர் :** கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) புவனகிரி வெள்ளாற்றுப் பாலத்தின் (**Pobley Bridge**) இரு பக்கத்திலும் நடைபாதை பாலம் இணைக்க உத்தேசமுண்டா ?

(இ) அப்படி எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

**கனம் திரு. வெ. ராமையா :** (அ) உண்டு.

(இ) மாற்றுப் பாதைக்கான வேலை முடிந்தவுடன் வேலை ஆரம்பிக்கப்படும்.

### *Whitley Council for Labourers*

MR. SPEAKER (seeing Sri V. Sankaran putting question No. 234 from a seat other than the one allotted to him) : The hon. Member should be in his allotted seat.

* 234 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to constitute Whitley Councils for labourers in our State ; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

### *Banares-Cape Comorin road (Salem)*

* 235 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the difficulties of the public in crossing the dip between 163/6 and 163/7 in the Banares-Cape Comorin Road, since there is much stagnation of water in the dip ; and

(*b*) if so, the arrangements made to get over the difficulty?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) There is a dip at M. 163/8 of Varanashi-Cape Comorin Road (Salem-Krishnagiri Section) and not between M. 163/6 and 163/7. This Dip functions as a surplus

கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகவே வருமான வரம்பை ரூ. 2,000 ஆக சீக்கிரத்தில் உயர்த்தினால் மிகவும் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

காலேஜ் படிப்பில், 92 எம்.இ.ஆர். விதியினால் சில பார்வேட் வகுப்பைச் சேர்ந்த ஏழை மாணவர்களுக்கு உண்மையில் திறமையுள்ளவர்களாக இருந்தும், கன்ஸெஷன் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. பார்வேட் கம்யூனிட்டியை சேர்ந்த திறமையுள்ள ஏழைகள் இருப்பார்கள். அவர்களுக்கும் இந்த வசதி அளிக்கப்பட வேண்டும். உதாரணமாக ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்தவர்களில் ஒரு சிலர் சிப் என்ஜினீயர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ரிடையர் ஆன பிறகும்கூட அவர்களுடைய சேவையும் நாட்டிற்குத் தேவை என்று அவர்களை பல ராஜ்யங்களில் முதன்மை அதிகாரியாக நாம் வேலையில் வைத்துக்கொண்டு இருக்கிறோம். இப்படி வருங்காலத்தில் மிகத் திறமை உடையவர்களாக வரக்கூடியவர்கள் இந்த சமூகத்தில் ஏழைகளாகப் பிறந்திருக்கக் கூடும். இவர்களும் கல்வியைக் கவனித்து சலுகையை அளிக்காவிடில், பிற்காலத்தில் ராஜ்யத்திற்கும், நாட்டிற்கும் நஷ்டம். ஆகவே உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஏழை மாணவர்கள் விஷயத்தில் இந்தக் கன்ஸெஷன் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

மேலும், டெக்னிக்கல் எஜுகேஷன் சம்பந்தப்பட்ட வரையில், மாணவர்களைப் பொறுக்குவதில் திறமைக்கென்று 10 சத விகிதம் ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்வாறு திறமை உள்ளவர்கள் பயிற்சி பெறுவது நம் ராஜ்யத்திற்கேதான் பின்னால் மிகவும் அனுகூலமாகவும் பலனளிப்பதாகவும் இருக்கும். ஆகவே மொத்த மாணவர்கள் எண்ணிக்கையில் 10 சத விகிதம் திறமைக்கென்று ஒதுக்கிவிட்டுத்தான் பாக்கியை ஜில்லாவாரியாகவும், கம்யூனிடி வாரியாகவும், உசிதம் போல் ஒதுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஓல்ட் ஏஜ் பென்ஷன் ஸ்கீம், லிபரலைஸ்டு பென்ஷன் ஸ்கீம் விஸ்தரிக்கப்பட்டு இருக்கிறது. அது சம்பந்தமான ரூல்ஸ் அண்டு ரெகுலேஷன்கள் இன்னும் வரவில்லை என்று சொல்லப்படுகிறது. அது வரும்பொழுது பார்டர் கேஸ் சம்பந்தப்பட்டவர்களுடைய நிலைமையை அனுதாபத்தோடு கவனிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக ஆசிரியர்களுக்கு பென்ஷன் அளிக்கும்பொழுது 1960–ல் 58–வயது இருந்தால் அவர்களுக்கு 60 ரூபாய் பென்ஷன் வீதம் என்று நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் பல ஸ்தாபனங்களில் ஆசிரியர்கள் 58 வயது முதல் 60 வயது வரையில்கூட வேலை செய்துகொண்டு இருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. 1960–ம் வருஷம் வேலை செய்துகொண்டு இருக்கக்கூடிய ஆசிரியர் ஒருவர் அதற்கு முன்பே 58 வயதை அடைந்து இருந்தாலும், அவருக்கு இந்தப் புது பென்ஷன் திட்டப்படி அனுகூலம் ஏற்படுமாறு செய்ய வேண்டும். குறிப்பாக என்னுடைய தொகுதியில் ஒரு ஹெட்மாஸ்டருக்கு 35 வருட சர்வீஸுக்குப் பிறகு பழைய முறைப்படி 30 ரூபாய் டென்ஷன் பெறக்கூடிய நிலை இருக்கிறது. ஆனால் அவருக்கு கீழ் இருந்து வேலை செய்யக்கூடிய ஆசிரியர் 60 ரூபாய் பென்ஷன் பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இப்படி பார்டர் நிலைமையில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுடைய விஷயத்தில் கொஞ்சம் அனுதாபத்தோடு கவனித்து 60–க்கு முன்பே, 55 வயதை அடைந்து இருந்தாலும், 60–ல் ஸர்வீஸில் இருந்தவர்களுக்கும் இந்தப் புது பென்ஷன் விகிதம் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்போது புதிதாக டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களைப் போடுவதாகக் கூறி இருக்கிறார்கள். இது வரவேற்கத் தக்கது. இன்றையதினம் காய் கறி விற்கக்கூடியவர்கள் கூட போன் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் டிவிஷனல் இன்ஸ்பெக்டர் அவர்களுக்கு போன் கிடையாது. அவர் அலுவலகத்தில் இருக்கிறாரா, இல்லையா என்று முதலில் போய் பார்த்த பிறகுதான் பின்னால் அங்கு போக வேண்டியிருக்கிறது. ஆகவே இந்தச் சங்கடத்தை நீக்க டிவிஷனல் இன்ஸ்பெக்டர்களுக்கு எல்லாம் போன் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.



லோகல் லைப்ரரி அதாரிடி சம்பந்தமாக, உறுப்பினர் பதவிக்காக ஏதோ அந்தப் பதவிகளை மற்ற கௌரவப் பதவிகள் விநியோகம் செய்வதைப்போல செய்கிறார்கள். அப்படியின்றி இனி அத்துறையில் கல்வித் தேர்ச்சியுற்ற திறம்படப் பணியாற்றக்கூடியவர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

டெக்ஸ்டைல் சம்பந்தமாக, நம் ராஜ்யத்தில் 35 லட்சம் ஸ்பிண்டில்கள் இருக்கின்றன. ஆனால் தனியாக டெக்ஸ்டைல் என்ஜினீரிங் கல்லூரி என்று நம் மாநிலத்தில் கிடையாது. இதில் நான்கில் ஒரு பங்கு இல்லாத வேறு சில மாகாணங்களில் இருக்கிறது. அதைப் போல் இங்கும் ஒரு கல்லூரியை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒரு வகுப்பில் இருக்கக்கூடிய மாணவர்களின் விகிதாசாரப்படி ஆசிரியர் நியமிக்கப்பட வேண்டுமென்று இருக்கிறது. அதன்படி 36–ல் இருந்து 69 வரையில் ஒரு வகுப்பில் மாணவர்கள் இருந்தால் அதற்கு ஒரே ஆசிரியர்தான். 69–க்கு மேல் ஒரு மாணவன் கூடுதலாக இருந்தால்தான் இன்னொரு ஆசிரியர் நியமிக்கலாம் என்று இருக்கிறது. இவ்வாறு இருப்பதினால், வகுப்பில் சொல்லிக்கொடுக்கும் திறனும், ஒவ்வொரு மாணவனைப் பற்றியும் பிரத்தியேகமாக ஆசிரியர் கவனம் செலுத்தும் திறனும் குறைகிறது. ஆகவே, ஒரு வகுப்பில் 35, 37 மாணவர்களுக்கு மேற்பட்டு இருந்தாலே, இரண்டு செக்ஷன்களாகப் பிரித்து இன்னொரு ஆசிரியரையும் நியமிக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நகரங்களில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கு ஹவுஸ் ரெண்ட் அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டும். இவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்

அடுத்து இவ்வாண்டு புதிதாகப் பாட திட்டங்கள் வரையறுக்கப்படுவதால், சீக்கிரத்தில் 'சிலபஸ்' தயார் செய்யப்பட்டு, அறிவித்து இனி அடுத்த வருஷம் முதல் திட்டவட்டமாக ஜூன், ஜூலைக்குள்ளேயே எல்லாப் புத்தகங்களும் வெளிவந்துவிட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதோடு தேசப்பற்றை வளர்க்கும் புஸ்தகங்களை அதிகமாகப் பாட புஸ்தகங்களாக வைக்க வேண்டும்.

இன்னும் நான்—டீச்சிங் ஸ்டாப்புக்கு மேல் உத்தியோக உயர்வு இல்லாததால் 5 பேர்களுக்கு ஒரு யு.டி.ஸி. நியமிக்க வேண்டும். இன்னும் அதிகமாக பி.யு.ஸி. வகுப்புகள் திறக்கப்பட வேண்டும். ஸெலக்ஷன் இல்லாததால், அடுத்த வருஷத்தில் அதிகமான மாணவர்கள் அவ்வகுப்புக்கு வரக்கூடுமாதலால், பி.யு.ஸி. வகுப்பை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* SRIMATHI A. SUARES : Mr. Speaker, Sir, while, supporting the Demand for Rs. 29.25 crores under Education, I wish to congratulate the Hon. Minister for Education and Finance for having provided as large a sum as Rs. 29 crores for Education in-spite of the heavy demands made by the National Emergency. Government is rightly of the view that the present tempo of development in respect of schemes relating to Education should be maintained.

Compulsory primary education has now been extended to cover all areas in the State and about 7 lakhs of pupils would have been benefited by the scheme by the end of the ensuing school year. There is now a general awareness of the value of education even in rural areas. The provision of midday meals to pupils in elementary schools has helped to a great extent the rapid spread

of scheme of compulsory primary education. Provision of the free school uniforms has also made schooling attractive. The major responsibility for the implementation of the compulsory education scheme now vests in the Panchayat Union. So unless these Panchayats are made aware of the factors relating to the scheme, they will not be able to cope with it. The aim of compulsory primary education is to attain permanent literacy within a period of five years. This might appear to be a simple problem but it is really a complete problem. There are two great evils that have to be guarded against. One is stagnation and the other is wastage. By stagnation is meant detention of a pupil for more than two years in the same class. A pupil may fail once, that may be allowed, but failure for the second time in the same class is serious. The pupil stagnates and consequently cannot gain permanent literacy within five or six years. The other evil is wastage. In this case, the pupil does not reach Standard V at all but falls away in one of the earlier standards. This is called wastage because not only does the pupil fail to secure literacy, but it is a waste of public money spent on the maintenance of the school, which produced no results. The main responsibility for the standards of education in the Elementary School rests with the teachers, who are directly responsible for the educational standards, but the co-operation of the parents and the surveillance of the inspecting agency are absolutely necessary. So let us not aim merely at quantitative expansion but also qualitative standards of education. Our Government have taken a number of measures to provide qualitative standard of education.

At the last Budget Session the question of the pattern of secondary education was discussed. The new 10-year pattern had been tried out and S.S.L.C. candidates of the X Standard appeared for the Government examinations in March 1962. The pupils of Anglo-Indian Schools also appeared for the new scheme examination in November 1962. Government is rightly recon-

9-30 a.m. sidering whether the Secondary Course should not go back to the 11 years pattern. In the case of Anglo-Indian schools a decision has been taken already. This year the X Standard pupils will not take a public examination in November this year but will go on to the XI Standard with the same new syllabus and take the examination next year, i.e., November 1964. This seems to be the right course and will probably be applied to the S.S.L.C. system also in the coming academic year.

We learn that the future educational policy of the State is being discussed by a Special Committee and when its decisions are placed before this House by the end of this session, we hope that firm policies would be taken with regard to secondary as well as university education so that frequent changes may be avoided.

When the new Constitution came into force in 1950, a respite was given to Anglo-Indian Education for a period of ten years and the same grants allotted in previous years were allowed with a small reduction, at certain intervals. This reduction, I am pleased



to say, the Madras Government did not enforce. In 1960 there was no reduction in grants though the protection period has ended. In 1961 the Madras Government was pleased to extend the period by another three years, that is, up to the end of 1963.

In the meantime, the Madras Pay Commission's scales of pay came into force in the S.S.L.C. Schools. The scales of pay for secondary grade teachers and graduate assistants were increased considerably. In fact, in some cases the scales were higher than the scales in force in the Anglo-Indian Schools. For example, the secondary grade teacher in the S.S.L.C. schools now gets a basic pay of Rs. 90 while the Anglo-Indian teacher gets Rs. 80. The Graduate-assistant in the S.S.L.C. school starts on Rs. 140 while the Anglo-Indian Graduate-assistant starts on Rs. 150. Thus we see that the difference in salaries is negligible after the Pay Commission's scales of pay came into operation in the S.S.L.C. schools.

The rate of fees in the Anglo-Indian schools is very much higher than that in the S.S.L.C. schools. For example, a Tenth Standard pupil in an Anglo-Indian school pays from Rs. 10 to Rs. 15 per month while a Tenth Standard S.S.L.C. pupil pays only Rs. 5–25. With an increased fee collection, the net cost of the school comes down and consequently the teaching grant is lower. The teaching grant in the S.S.L.C. schools is now 66 and 2/3rd per cent of the net costs while in the Anglo-Indian schools, it can be anything above 50 per cent according to the merits of the case.

When the position is reviewed before the next Budget is prepared, I request that the Government may be pleased to consider Anglo-Indian Education as a part of the general pattern of education in the State and allot the same grants as has been paid in previous years but without fixing a time-limit. This year's Budget provides for an allotment of about Rs. 9,99,000 for Anglo-Indian education while last year's revised estimate showed a sum of about Rs. 10,07,000. A sum of Rs. 10 lakhs out of the total expenditure of about Rs. 20 crores works out to a percentage of 0·34 which, I consider, is comparatively a small sum of money.

In making this request, I would like to recall a few statements made in the past. On the 7th August 1959, the Prime Minister was pleased to state on the floor of the Lok Sabha that facilities for Anglo-Indian schools should be maintained and, if necessary, added to. This was during the debate on the Resolution to include English in the Eighth Schedule of the Constitution. In March 1960 the Chief Ministers of the country met. This was soon after the protection period had ended. They were of the opinion that facilities for Anglo-Indian schools should be continued though the Constitution was not amended. In November 1961, the then Education Minister of the Madras Government gave an assurance to the Heads of Anglo-Indian schools that the Madras Government considered Anglo-Indian education as their own problem and not as a separate problem. He added that the standards of this type of education would be maintained and also improved.

நிதியை அளித்து வருகிறார். நம்முடைய தமிழகத்தில் இந்தக் கல்வி முறை முன்னேற்றமடைய வேண்டும் என்பதற்காக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதிலிருந்தே முயற்சி எடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த அரசர்கள் இதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கத்தின் கடமை என்ன என்பதையும் அவர்கள் வலியுறுத்திச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். முந்திய காலத்தில் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் இருந்த காலத்தில் கல்வியை முதல் தரமாகக் கொண்டு வருவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் சொல்லி இருக்கிறார். அதை அடிப்படையாகக் கொண்டு பெரிய தொகைகளை கல்விக்காக ஒதுக்கி இருக்கிறார்கள். அதைக் கண்டு பாராட்ட வேண்டியதுதான். இவ்வளவு பெரிய தொகையை கல்வியைப் பரப்புவதற்கு ஒதுக்கியதற்கு கனம் நிதி அமைச்சர் அவர்களையும் பாராட்ட வேண்டியதுதான். ஆனால் அதனால் ஏற்பட்டிருக்கிற பலனை பார்க்கிறபோது நிச்சயமாக நாட்டில் எந்த அளவுக்குக் கல்வித் தரம் உயர்ந்திருக்க வேண்டுமோ அந்த அளவில் உயரவில்லை. இதை கல்வி நிபுணர்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஈண்டு, ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல பிரிவுகளில் மாணவர்களைத் தேர்ச்சிக்கு அனுப்பி இருக்கிறார்கள். எவ்வளவு பேர்கள் அப்படி அனுப்பப்பட்டார்கள், எவ்வளவு பேர்கள் தேர்வு அடைந்தார்கள் என்ற புள்ளி விவரத்தை அரசாங்கத்தைக் கேட்க அவர்களும் சில புள்ளி விவரங்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புள்ளி விவரத்தின்படி 1962 மார்ச்சில் நடைபெற்ற எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தேர்வு பெற்ற மாணவர்களின் சதவிகிதம் 55 ஆக இருக்கிறது. ஆனால் நம்முடைய அரசாங்கம் நடத்துகிற பள்ளியிலிருந்து சென்ற மாணவர்களில் வெற்றி பெற்றவர்களுடைய சதவிகிதம் 37. ஆகவே சத விகிதம் குறைந்திருக்கிறது. அதே நிலையில் பி.யு.சி. போன்ற துறையில் போனவர்களுடைய சதவிகிதம் என்ன என்ற புள்ளி விவரத்தைக் கேட்டதற்கு அது இன்னும் அளிக்கப்படவில்லை. காரணம் என்ன என்பது தெரியவில்லை. ஆனால் மொத்தத்தில் நமது கல்வித் தரம் குறைந்திருக்கிறது என்றே சொல்லலாம். இந்தக் குறைவுக்குக் காரணம் என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நமது கல்வித் துறை இயக்குநர் அவர்கள் நம் மாகாண மக்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு எல்லாத் துறையிலும் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார். அதன்படி பணி பல புரிந்து கொண்டும் வருகின்றார். மதிய உணவு கொடுப்பது போன்றும் சீரான உடை மாணவர்களுக்குக் கொடுப்பது போன்றும் செய்து வருகிறார். அந்த முறையில் பல சீரிய காரியங்களைச் செய்து கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும் என்று நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார். இப்படிச் செய்தும் கல்வியின் தரம் உயர்ந்ததாகவே இல்லை, குறைந்து தான் இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். "ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே, சான்றோன் ஆக்குதல் தந்தைக்கு கடனே". நடைமுறையில் இருக்க வேண்டிய முறை இது. இந்த முறையில் தாயினுடைய கடமை என்ன, தந்தையினுடைய கடமை என்ன என்று சொல்லப்பட்டிருக்கிறது. தாயின் கடமை என்ன வென்றால் குழந்தைகளைக் குளிப்பாட்டி நல்ல உடை அளித்து, நல்ல உணவு கொடுத்து பள்ளிக்கு அனுப்ப வேண்டியது. தந்தையின் கடமை என்னவென்றால் பிள்ளையை பக்கத்தில் வைத்துக் கொண்டு கணக்குச் செய்தாயா, ஆங்கிலம் படித்தாயா, தமிழிற்கு உரை கண்டாயா என்பதையெல்லாம் கேட்டு பிள்ளைகளுக்கு பாடங்களைக் காலையிலும், மாலையிலும் சொல்லிக் கொடுக்க வேண்டும். அந்த முறையில் செய்து வந்தால் பிள்ளைகளின் கல்வித் தரம் உயரும். ஆனால் இப்பொழுது அந்த முறை மாறிப்போய் தாய் செய்ய வேண்டிய காரியங்களை தந்தை செய்வதும், தந்தை செய்ய வேண்டிய காரியத்தைத் தாய் செய்வதும் ஆகிய முறைகளையே நம் கல்வி இயக்குநர் செய்து வருகிறார். அதனால்தான் நாட்டில் கல்வித் தரக் குறைவு ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்க வேண்டியதாக இருக்கிறது.

இப்படி நம்முடைய கல்வி இயக்குநர் இந்தத் துறையில் சென்றதுமட்டுமல்லாமல், இன்னொரு பணியை இப்பொழுது புரிந்து வருகிறார்கள். நம்முடைய நாட்டில் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் தேசிய நெருக்கடியை



யொட்டி, தேசியப் பாதுகாப்புக்கு நிதி வழங்குகிற திட்டம் இப்பொழுது நாட்டில் இருக்கிறது. தேசியப் பாதுகாப்பு நிதிக்கு நிறைய வழங்குவது நாட்டு மக்களுடைய கடமை என்பதை நாங்கள் மனதார ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால், அந்த நிதி வசூலில் கட்டாயம் இருக்கக் கூடாது, கண்டிப்பு இருக்கக் கூடாது, அரசாங்கத்தில் பணிபுரியக்கூடியவர்கள் பாதுகாப்பு நிதிக்கு வசூல் செய்யக்கூடாது என்ற விதி இருக்கிறது என்றாலும், நம்முடைய மாநிலக் கல்வி இயக்குநர் மாத்திரம் அதிலே பொறுப்பைக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாநிலத்தில் வருகின்ற நிகழ்ச்சியைப் பார்க்கின்றபோது, இந்த மாநிலத்தில் மந்திரிமார்கள் ஒன்பது பேர்கள் இருக்கிறார்களா, பத்து பேர்கள் இருக்கிறார்களா என்று நினைக்கக் கூடிய அளவு தேசியப் பாதுகாப்பு நிதி திரட்டும் நிகழ்ச்சியில் அவர் பங்கு கொண்டு வருகிறார். அதனால் என்ன விளைகிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு விவாதத்தில் ஓர் இடத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். "போலீஸ்காரர்களைக் காக்காய் பிடிக்கின்ற முறையில் நம்முடைய கனம் உறுப்பினர் திரு. கருணாநிதி அவர்களுடைய பேச்சு இருந்த காரணத்தால் அந்தப் பாட்டு நீக்கப்பட்டது" என்று கூறினார்கள். இப்பொழுது கல்வித் துறையிலே அந்த நிலை நிச்சயமாக இருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. காரணம், நம்முடைய கல்வி இயக்குநர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வருகிறார், தேசியப் பாதுகாப்பு நிதி திரட்ட என்ற செய்தி வந்தவுடனே, அந்தத் தாக்கீது ஆங்காங்கு இருக்கிற மாவட்டக் கல்வி அதிகாரிக்குச் செல்கிறது. மாவட்டக் கல்வி அதிகாரி, தம் கீழ்ப் பணி புரியும் டெபுடி இன்ஸ்பெக்டருக்கு "உன்னுடைய ரேஞ்சுக்கு டைரக்டர் அவர்கள் வருகிறார்கள், அவர் வரும்போது நிதிக்கு இவ்வளவு பணம் தரவேண்டும், இந்த இந்த வட்டாரத்திலிருந்து மாலைகள் வரவேண்டும், இந்த இந்த வட்டாரத்திலிருந்து ஆடைகள் வரவேண்டும்" என்கிற தாக்கீது பிறக்கிறது. டெபுடி இன்ஸ்பெக்டர் ஆசிரியருக்குச் சொல்கிறார். ஆசிரியர் மாணவர்களுக்குக் கட்டளையிடுகிறார். மாணவர்கள் பெற்றோர்களிடம் வந்து குறைப்படுகிறார்கள். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, "மாணவர்கள் கட்டாயப்படுத்தப்படுவதில்லை. அவர்களே விரும்பிக் கொடுக்கிறார்கள். எங்களுக்குத் தின்பண்டங்கள் வாங்கிக் கொள்வதற்காகக் கொடுத்த பணத்தைத் தருகிறோம், எங்களுக்குப் புத்தகம் வாங்குவதற்காகக் கொடுத்த பணத்தைத் தருகிறோம், சினிமா பார்ப்பதற்காக கொடுத்த பணத்தைத் தருகிறோம்" என்று குறிப்பிட்டதாகச் சொன்னார்கள். அது ஒரு நிலை. மேலும் மேலும் வற்புறுத்தும் நிலை இருக்கிறது என்பதை நிதி அமைச்சர் அவர்கள் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட நிலையில், ஆயிரம் ரூபாய் தேசியப் பாதுகாப்பு நிதிக்கு வழங்குகிறார்கள் என்றால், விழாவுக்குச் செலவழிக்கும் பணம் ஆயிரமாக இருக்கிறது. அவ்விழாவில், மாவட்டக் கல்வி அதிகாரி, இயக்குநருடைய கழுத்திலே போடப்பட்ட மாலையை ஏலத்திற்கு விடுகிறார். ஏலத்திற்கு விட்டவுடனே அங்கிருக்கும் ஆசிரியர்கள், ஐந்து, பத்து, நூறு ரூபாய் என்று இப்படியாக ஏலத்திற்கு எடுக்கிறார். இப்படிப்பட்ட நிலை இன்றைக்கு ஏற்பட்டு விட்ட பிறகு அந்த ஆசிரியரோ, அவருக்கு மேல் பணி புரிகிற டெபுடி இன்ஸ்பெக்டரோ, அவருக்கு மேல் இருக்கிற மாவட்டக் கல்வி அதிகாரியோ, குற்றம் செய்ய, மேல் அதிகாரிக்கு அந்தக் குற்றம் எடுத்துச் சொல்லப்படுகிற நேரத்தில், டி.ஈ.ஓ. அவர்களுடைய குற்றம் டெபுடி டைரக்டருடைய மேஜை மீது இருக்கும்போது, அந்தக் குற்றத்தைப் படிக்கும் நேரத்தில், அவருடைய கண் முன், அன்று அவர் நடத்திய தேசியப் பாதுகாப்பு நிதி திரட்டும் விழாவுக்குச் சென்றது, அந்த விழாவில் அவருக்கு போட்ட மாலை, அந்த மாலையை அவர் ஏலம் போட்ட விதம், அந்த ஏலத்தில் 100 ரூபாய்க்குப் போன காட்சி, இவ்வளவும் மனத்தின் முன் வரும் நேரத்தில், அவர்கள் எந்த அளவு அந்தக் குற்றத்தை நல்ல கண்கொண்டு பார்க்க முடியும் என்று அமைச்சர் அவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். இப்படிப்பட்ட நிலை கல்வித் துறையில் இருக்கக்கூடாது.

இன்னொரு நிகழ்ச்சி. சென்ற ஆண்டிலும் நான் கூறினேன். மாநிலக் கல்லூரியில் முதல் தமிழ்ப் பேராசிரியர் பதவி காலியாக இருந்த.

The Anglo-Indian schools represent a system of education that is unequalled in its service to the country and to education generally. These schools represent the only uniform system of education throughout the country. They are a boon to all Central Government servants of all communities. The Government servants who are liable to be transferred from one end of India to another, look upon these schools as the only guarantee for the continuance of the education of their children. These schools pay special attention to character-building and inculcation of qualities like leadership, discipline and civic stability.

Expenditure on Anglo-Indian education has been reduced from Rs. 13½ lakhs in 1946 to Rs. 10 lakhs in the present day. No new school has been opened for the last 17 years and more but a few middle schools have been upgraded after the abolition of the middle school government examination. The expenditure on Secondary Education in the whole country has risen by about 700 per cent and the expenditure on Anglo-Indian education in this State has fallen by Rs. 3½ lakhs. There is need for expansion of our schools, for our schools are crowded and their strength has been doubled or even trebled in some cases.

I plead once again that aid may be given to Anglo-Indian schools according to their needs without fixing any time-limit. Anglo-Indian schools are educating not only Anglo-Indians but also thousands of non-Anglo-Indian children. The clamour for admission in the Anglo-Indian schools each year, is a sign of the high standard and the popularity of the schools. Anglo-Indians form an integral part of the Indian Nation. They have sacrificed their lives side by side with their non-Anglo-Indian brethren in the present Chinese war. They will offer their services as Home Guards to protect their country in this time of crisis.

Sir, this question of Anglo-Indian education will have to be reviewed in a few more months and once again I request the Government to consider it on its merits and to allow these schools to expand normally to provide for the education of the school-going population. Thank you, Sir.

***திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சி அங்கத்தினர் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து கல்வி சம்பந்தமான என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாணவர்களுடைய கல்வித் தாமானது குறைந்து வருவதாக மேல் நிலையில் உள்ளவர்கள் எல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் நம்முடைய மாநில கல்விக் கொள்கைக்கு ஏற்பட்ட நோய்தான். நம்முடைய மாநிலக் கல்வித் திட்டத்தைப் பற்றிக்கொண்ட அந்த நோயானது 1952-ம் வருஷத்திலிருந்து நாளது வரையில் வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது. இன்றைக்கு ஒரு கொள்கை, நாளைக்கு ஒரு கொள்கை, இன்றைக்கு ஒரு பாட திட்டம், நாளைக்கு அதுவே வேறு விதமாக மாற்றப்படும் நிலை, பள்ளிக்கூடத்தில் எப்படிச் சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும், எப்படி பாட திட்டங்கள் இருக்க வேண்டும் என்பதைப் பரீட்சை செய்வதிலேயே கடந்த பத்தாண்டு காலத்தையும் கழித்து வந்திருக்கிறோம். இப்படி நம்முடைய கல்விக் கொள்கையிலே ஒரு சரியான, உறுதியான முடிவு இல்லாத காரணத்தினால், இத்தகைய





ஒரு தரக் குறைவு ஏற்பட்டிருக்கிறதோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது.

இரண்டு தினங்களுக்கு முன்பு நான் கடலூருக்குச் சென்றிருந்தேன். பகல் இரண்டு மணி அளவில் ரோட்டில் ஆயிரக்கணக்கான சின்னஞ்சிறு குழந்தைகளும், வயதானவர்களும் நிறுத்தப்பட்டிருந்தார்கள். ரோட்டில் இரண்டு வரிசையிலும், ஆயிரக்கணக்கான மாணவர்கள் மார்ச் மாத வெயிலிலே நிறுத்திவைக்கப்பட்டிருந்த காட்சியைக் கண்டு, அதற்குக் காரணம் என்ன என்று அங்கிருந்த ஆசிரியரைக் கேட்டேன். அவர் சொன்னார் "வருகிற வாரத்தில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இங்கே வர இருக்கிறார்கள். அவர்கள் வரும்போது வரவேற்பு கொடுப்பதற்காக மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கிறோம்" என்று சொன்னார். அதைக் கேட்டவுடன் எனக்கு ஆச்சர்யம் ஏற்பட்டுவிட்டது. முதலமைச்சருக்கு வரவேற்புக் கொடுக்க வேண்டியதுதான். அதற்காக 17-ம் தேதி வரவேண்டிய முதலமைச்சருக்காக, 12-ம் தேதியிலிருந்தே பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களை, அதுவும் பரீட்சைக்காக விழுந்துவிழுந்து படித்துக்கொண்டிருக்கும் மாணவர்களை, வேகாத வெயிலில் நிறுத்தி வைத்துத்தான் முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுக் கொடுக்க வேண்டுமா ? என்று நான் அந்த ஆசிரியர்களைக் கேட்டுவிட்டுத்தான் வந்தேன். ரஷ்யா, சீனா போன்ற வெளிநாடுகளில், தலைவர்களுக்கு எப்படி எப்படி உபசாரம் கொடுப்பது, அவர்கள் வருகின்றபோது எப்படி எப்படி கொடி காட்டுவது போன்ற அரசியல் கருத்துக்கள் எல்லாம் சிறு சிறு பிஞ்சு உள்ளங்களிலே புகுத்துவதற்குத் திட்டம் இருக்கிறது. நம்முடைய நாடு ஜனநாயக நாடு. இங்கே அதற்கு அவசியமென்ன ? நம்முடைய முதலமைச்சருக்கு, நல்ல வரவேற்புக் கொடுக்க வேண்டியது அவசியந்தான். கடலூருக்கு கல்லூரி ஏற்படுத்திய காரணத்தாலும், தென்னாற்காடு ஜில்லாவில் இஞ்சினீயரிங் கல்லூரி, மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்திவிட்ட காரணத்தாலும், மாணவர்கள் உற்சாகத்துடன் ஓடிவந்து முதலமைச்சர் அவர்களுக்கு வரவேற்புக் கொடுக்கிறார்கள் என்றால், நாங்கள் உள்ளபடியே சந்தோஷப்பட முடியும். இப்போது கொடுக்கப்படுகிற வரவேற்பு என்ன வரவேற்பு ? "மேக் அப்" வரவேற்பா ? சின்னஞ்சிறு பிஞ்சுக் குழந்தைகளின் உள்ளத்திலே ஞானப்பாலை ஊட்டுகின்றீர்களா ? முதலமைச்சர் அவர்களுக்கு இந்த வரவேற்பு திருப்தியளிக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன். இப்படிப் பள்ளிக்கூடங்களில் படிக்கின்ற பிள்ளைகளை அழைத்துக் கோஷங்கள் போடச் சொல்வார்களானால் கல்வியின் தரம் குறையாமல், தரம் உயருமா என்று கேட்கின்றேன்.

இரண்டாவதாக, மதிய உணவு வழங்குவது, சீருடை அளிப்பது என்ற திட்டத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. திரு. காமராஜர் ஆட்சிக்கு வந்த பிறகு அரசாங்கத்திலிருந்து பணம் கொடுத்து ஆடைகளை வாங்கி, பிள்ளைகளுக்குக் கொடுக்கிறார்கள் என்று வெளியிலே நினைத்துக்கொள்கிறார்கள். அதன் நடைமுறையைப் பார்ப்போமானால், அவரவர்கள் பிள்ளைகளுக்கு, அவர்களுடைய பெற்றோர்கள் தைத்துக் கொடுக்கக்கூடிய உடைகளை அவர்கள் வாங்கிக் கொடுக்கிறார்கள். இதுதான் சீருடை வழங்கும் திட்டமா ? அதே போன்று, 'மிட் டே மீல்' அளிக்கும் திட்டமும் முதலில் ஓரளவு வெற்றிகரமாக நடைபெற்று வந்திருந்தாலும்கூட வர வர அதன் தரமும் குறைந்துவிட்டது. சின்னஞ்சிறு பிள்ளைகளை காலையில் பள்ளிக்கூடத்துக்குப் போன உடன் முதலாவதாகச் செய்ய வேண்டிய வேலை கிராமப் புறங்களில் விறகு பொறுக்கச் சொல்வது ; பிறகு 10 பிள்ளைகள் சென்று தண்ணீர் எடுத்துவர வேண்டும். பிறகு நான்கு பிள்ளைகள் சோறு பொங்க வேண்டும். அவர்கள் படிப்பது எந்த நேரத்தில் என்று தெரியவில்லை. இதன் காரணமாக கல்வியின் தரம் குறைந்து விடுகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதிலே இருக்கக் கூடிய குறைபாடுகளைக் களைய வேண்டியது நம்முடைய கடமை.

நம்முடைய நாட்டில் கம்யூனிசமும், வேற்றுமையும் வளருகிறது என்று சொன்னால், அதற்குக் காரணம் நமது பள்ளிக்கூடங்களில் படிக்கும் பள்ளிக்கூட மாணவர்களிடையே உடையில், பணக்கார மாணவர்கள், ஏழை

காலியாக இருந்ததற்குக் காரணம், அப்பொழுது கல்வியமைச்சராக இருந்தவருக்கு அந்தப் பதவியைத் தமக்கு வேண்டிய ஒருவருக்குக் கொடுக்க வேண்டும் என்பது. ஆனால், அந்தப் பதவியை யாருக்குக் கொடுக்கவேண்டும் என்று விரும்பினாரோ அவருக்கு அந்த இடத்திற்கு வரக்கூடிய பட்டம் இல்லை. அவர் அப் பட்டம் பெறும் வரையில் அந்த இடத்தை யாருக்கும் கொடுக்காது நிறுத்தி வைக்கவேண்டுமென்ற நிலையில் நிறுத்திவைக்கப்பட்டது என்ற கருத்தை நான் சொன்னேன். ஆனால், "அந்தப் பதவி நிரப்பப்பட்டுவிட்டது" என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்று வரையிலும் அந்தப் பதவி நிரப்பப்படவில்லை. மற்றொன்று. அந்தக் கல்லூரியின் முதல்வர் வெளியிடங்களுக்குச் செல்வதாக ஒரு ஏற்பாடு இருந்தது. அவர் சென்றவுடனே அந்த இடத்தை நிரப்ப வேண்டும் என்ற காரணத்திற்காக, ஆறு மாதங்களுக்கு முன்பே அவருடைய இராஜீனமாவை வாங்கி வைத்தார்கள். சென்று இரண்டு, மூன்று மாதங்கள் ஆகியும் அந்த இடம் நிரப்பப்படவில்லை.

கள்ள மார்க்கெட், கள்ள நோட் அச்சடிப்பது என்றெல்லாம் கேள்விப்படும் நிலை இருந்தது. இப்பொழுது அதைவிடப் பயங்கர சூழ்நிலை உருவாகியிருக்கிறது. பள்ளிகளில் பயிற்சி பெற்று, ஓராண்டுக்காலம் படித்துக் கடைசியில் தேர்வு எழுதி வெற்றி பெறும் மாணவர்கள் ஒரு பக்கம் இருக்க, எதுவும் செய்யாமல், பணத்தைக் கொடுத்தோ, மற்ற வேறு வகைகளிலோ, கள்ள சர்ட்டிபிகேட் வாங்கக்கூடிய முறை நாட்டிலே இருந்து வருகிறது. கள்ள சர்ட்டிபிகேட் வழங்கப்பட்டு, ஆங்காங்கு இப்பொழுது விசாரிக்கும் நிலையும் இருந்து வருகிற நிலை நம் நாட்டில் இருப்பது நல்லதல்ல என்பதையும் நான் இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்களுக்கு இன்னொரு நிகழ்ச்சியைக் கூற விரும்புகிறேன். நம்முடைய நாட்டில் ஒரே கட்சி பல ஆண்டுக் காலமாக ஆட்சி புரிந்து வருகிறது. இருந்தாலும், கல்வித் தரத்தை அப்போதைக்கப்போது மாற்றுகிற நிலையை ஏற்படுத்திக்கொண்டு வருகிறார்கள். இது ஏன்? ஆங்கிலத்தைப் போதனமொழியாக மூன்றும் வகுப்பில் தொடங்குவதா? ஐந்தாம் வகுப்பில் தொடங்குவதா? ஆதாரக் கல்வியை வைத்துக்கொள்ளலாமா? விட்டு விடலாமா? பள்ளிகளில் தொழில் பயிற்சிக்காக எத்தனை பீரியட்கள் ஒதுக்குவது? பயிற்சி மொழி தமிழாக இருக்கலாமா? ஆங்கிலமாக இருக்கலாமா? மும்மொழியாக இருக்கலாமா? ஏதாவதொரு மொழியை விட்டுவிடலாமா? எந்த மொழியில் பரீட்சை வைத்துக்கொள்ளலாம்? எதற்குப் பரீட்சை தேவையில்லை? பி.யூ.ஸி. உண்டா? இல்லையா? பாடத் திட்டங்களில் சோஷல் ஸ்டடீஸ் இருப்பதா? ஜியாக்ரஃபி, ஹிஸ்டரி வைப்பதா? ஃபிஸிக்ஸ், கெமிஸ்ட்ரி வைப்பதா? பள்ளிகளின் நிர்வாகத்தை முன்பிருந்த மாவட்டக் கழகங்களில் ஒப்படைப்பதா? செகண்டரி எஜுகேஷன் போர்டு என்ற தனி போர்டு வைத்து, அதனிடம் ஒப்படைப்பதா? டி.ஈ.ஓ. விடம் ஒப்படைப்பதா? என்று இப்படிப்பட்ட நிலைகளில் தடுமாற்றங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. இந்தத் தடுமாற்றம் கல்வி வளர்ச்சியை எந்த அளவுக்குக் குறைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் சிந்திக்கவேண்டும்.

நம் மாநிலத்தின் கல்விக் கொள்கையை இந்த மன்றத்தின் முன் வைப்பதாக இருக்கிறார்கள். அதற்கு முன்னால், இந்தக் கல்வித் திட்டத்தை அமைப்பதற்கு முன் எந்த எந்தக் கல்வி நிபுணர்களோடு நம்முடைய அமைச்சர் அவர்கள் கலந்து பேசினார்கள்? அந்தக் கல்வி நிபுணர்கள் என்ன என்னக் கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள் என்ற கருத்தையெல்லாம் மன்றத்திலே இருக்கும் உறுப்பினர்கள் அந்த விவாதத்திலே கலந்துகொள்ளுவதற்கு முன் நன்கு பரிசோதித்து, ஆலோசனை செய்து, முடிவு எடுக்கும் வாய்ப்பு அளிக்கும் வகையில் முன்கூட்டியே வைக்கப்படவேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த முறையில் நாட்டுக்குக் கல்வி வளர்ச்சிக்காக பெரும் தொகையைச் செலவிடுகிற அரசு அதற்காக ஒதுக்கிய தொகை நல்ல முறையில் செலவிடப்படுகிறதா என்பதை நன்கு ஆராய முன்வரவேண்டும்.



"நாடோறு நாடுக மன்னன், வினைசெய்வான்
கோடாமை கோடாது உலகு".

என்ற குறள் இருக்கிறது. அந்த நிர்வாகத்தை நடத்துகிறவர்கள் ஒரு சிறிது தவறிவிடுவார்களானால், அந்தத் தவற்றின் காரணமாக அரசு எடுத்துக்கொண்டிருக்கும் அவ்வளவு பணியும் வீணாகும். ஆகவே நாள் தோறும் சென்று ஆராயவேண்டும். அந்த ஆராய்கிற நிகழ்ச்சியை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். டெபுடி இன்ஸ்பெக்டரோ, டி.ஈ.ஓ.-வோ தவறி விடுவார்கள் என்று குற்றஞ்சாட்டினேன். அந்தக் குற்றச்சாட்டுக்கு ஒரே ஒரு உதாரணம் சொல்கிறேன். எங்களுடைய மாவட்டத்தில் ஆதாரப் பயிற்சிக்கான தேர்வு நேரத்தில் அங்கே, 100, 200, 300, என ரூபாய்க் கணக்கிலே பேசப்படுகிற நிலை இருக்கிறது. இதைச் சொன்னால், அமைச்சர் அவர்கள், "குறிப்பிட்டுக் கூறினால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுகிறோம்" என்று கூறுவார்கள். அப்படிக் கண்டு பிடிக்கும் வாய்ப்பு இப்படி இருக்கும் என்னைப் போன்றவர்களுக்கு இல்லை. அமைச்சர் அப்படிப்பட்ட நிலை ஏற்படும் நேரத்தில், தான் ஒரு மகனுக்குத் தந்தை என்ற முறையில் அங்கே சென்று பார்க்கட்டும். அங்கு கூடியிருக்கும் பல்லாயிரம் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களோடு கலந்து பழகட்டும். அப்போழுது தெரியும் எந்த அளவுக்கு நான் கூறும் குற்றச்சாட்டு உண்மை என்பது. அந்த நிலை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் கண்விழித்து நோக்கி இந்தத் துறையில் இருக்கும் களங்கத்தைப் போக்கவேண்டும். அப்படிப்பட்ட நிலை இருந்தாலொழிய நாம் கோடி கோடியாக நம்முடைய வருவாயில் கால் பகுதித் தொகையைச் செலவிடுவதன் பலனைப் பெற முடியாது என்கிற என் கருத்தைக் கூறி என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

* **திரு. வை. சங்கரன்:** கனம் சபாநாயகர் அவர்களே, கல்வி மானியத்தை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற முற்படுகின்றேன். உண்மையிலேயே நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் பாராட்டுக்கு உரியவர் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், அவர் நல்ல ஒரு ப்ராக்டிகல் மேன் என்ற முறையில், ஐடியலிஸம் என்று வைத்துக்கொண்டிராமல்—காரியங்களைச் செய்துவருகிறார்கள். சாத்தியமில்லாத ஒன்றை ஆரம்பித்துவிட்டு, பின்னால் அதையே விடாமல் பிடித்துக்கொண்டிருக்க வேண்டும் என்று நினைக்காமல், ஒரு சில தவறுகள் ஏற்பட்டாலும், அதை உடனே திருத்திக்கொண்டு, மாற்று வழி கண்டுபிடிப்பதற்கு நல்ல பல துணிச்சலான காரியங்களைச் செய்து இருக்கிறார்கள் என்பதைப் பல வகையிலே நாம் பார்க்கலாம். ஒவ்வொரு துறையிலும், ஒவ்வொரு வகையிலும், நடைமுறைக்கு ஏற்றவாறு நல்ல பல புது மாற்றங்களைச் செய்திருப்பதற்காக அவரை நான் உண்மையிலேயே பாராட்டுகின்றேன். குறிப்பாக, ஆதாரக் கல்வி சம்பந்தமாக, ஓரளவு நிறுத்தி மறு பரிசீலனை செய்து, வெற்றிகரமாக இருந்தால் அதற்கு மேலே நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

பகல் உணவு சம்பந்தமாக ஒரு சில இடங்களில் தவறுகள் நடக்கின்றன. ஓரளவு மிட்டே மீல்ஸ் சம்பந்தமாகப் பரிசீலனை செய்தால் நன்றாக இருக்கும். நல்லமுறையில் அதைப் பரிசீலனை செய்து, நடந்துவரும் தவறுகளைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆங்கிலத்தை நல்ல முறையில் கற்றுக்கொடுக்க நல்ல பல திட்டங்கள் வகுக்கப்பட்டு இருக்கின்றன.

ஆசிரியர்களைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மற்ற பள்ளிகளில் இருப்பதைப் போல, சில லோகல் பண்டு ஸ்கூல்களிலும் ஹெட்மாஸ்டர்களை பி.டி.க்களாக வைத்துக்கொள்ள அனுமதித்தால் நன்றாக இருக்கும்,

ஸ்காலர்ஷிப் சம்பந்தமாக, இப்பொழுது வருமானம் ரூ. 1,500 வரை உள்ளவர்களின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வியளிக்க விதி இருக்கிறது. ஆனால் இன்றைக்கு ஒரு தொழிற்சாலையில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுடைய வருமானம் கூட ரூ. 1,500-க்கு வருகிறது. அதனால் அவர்களுடைய குழந்தைகளுக்கு அந்தச் [illegible]

நாட்டு சுதந்திரத்திற்காக அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் எவ்வளவு தியாகங்கள் செய்திருக்கிறார்கள். அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் எவ்வளவு தியாகங்கள் செய்திருக்கிறார்கள். அவர்கள் வக்கில் தொழிலை மறந்து அதை விட்டுவிட்டு எவ்வளவு ஆண்டுகள் சிறையில் இருந்திருக்கிறார்கள், அமைச்சர் கக்கன் அவர்கள் எவ்வளவு தியாகங்கள் புரிந்திருக்கிறார்கள், அவர்கள் எவ்வளவு அடிபட்டிருக்கிறார்கள், அவர்கள் முதுகில் எவ்வளவு சவுக்கடி பட்டது, ஆக இப்படி எவ்வளவோ பேர்கள் புரிந்த தியாகத்தினால்தான் நாடு சுதந்திரம் பெற்றது என்பதை இன்றையதினம் குழந்தைகள் அறிவார்களா ? எல்லா தேசங்களிலும் அங்கு நடந்த சுதந்திரப் போராட்டத்தைப்பற்றி அந்தந்த ஊர்களில் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்காமல் இருக்கிறார்களா ?. ஆங்காங்கு சிலைகள் வைத்திருக்கிறார்கள். அவற்றிற்கு அன்றாடம் அஞ்சலியும் செலுத்துகிறார்கள். சுதந்திரம் வாங்கிய மகிமை குறித்து குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். அதற்கு மாறாக இங்கு நாட்டில் பிரிவினையைப் புகுத்தும் பாடப் புத்தகங்கள், தேசத்தைத் துண்டுபோடும் தீய சக்திகள் தான் இன்று நாட்டில் வளர்ந்துகொண்டிருக்கிறது. பக்தவத்சலம் அவர்கள்போன்ற தேசபக்தர் இந்த போர்ட்போலியோவை எடுத்துக்கொண்ட பின்னராவது இதை நிவர்த்திக்க முயற்சி எடுக்கக் கூடாதா ? அவர்கள் சில முயற்சிகள் செய்கிறார்கள். ஆனால் அம்முயற்சி திருவினையாக்கப் படவில்லை. தேச சுதந்திரம் பற்றி ஒரு தனி புத்தகம் போட்டு லைப்ரரியில் வைக்கப்போகிறார்களாம். ஒரு அதிகாரி சொன்னார், நாங்கள் ஒரு பையனிடம் ஒரு கேள்வி கேட்டோம், திருவாடானையில் என்ன விசேஷம் என்று கேட்டதற்கு எங்கள் ஊரில் சப்கோர்ட் இருக்கிறது, முன்சிப் கோர்ட் இருக்கிறது, தாலூகா ஆபீஸ் இருக்கிறது என்று சொன்னானும். சுதந்திரப் போராட்ட காலத்தில் இங்கு ஒரு பெரிய ரகளை நடந்ததே தெரியாதா என்று கேட்டேன். அதற்கு அப் பையன், நான் அப்போதுதான் பிறந்திருந்தேன், எவ்வளவோ பேர்கள் அடிபட்டார்கள், எவ்வளவோ பேர்கள் கற்பழிக்கப்பட்டார்கள், எவ்வளவோ வீடுகள் சூறையாடப் பட்டன என்று கேள்விப்பட்டிருக்கிறேன், அப்போது நான் குழந்தை அதுபற்றி அதிகம் தெரியாது என்றான். இது பக்தவத்சலம் அவர்களின் தவறு, என் தவறு, காங்கிரஸ்காரர்களின் தவறு என்பதை நாம் பரிபூர்ணமாக ஒப்புக்கொள்ள வேண்டும். அப்படி ஒப்புக்கொண்டு அதைத் திருத்த முயற்சிக்க வேண்டும். எதிர்க்கட்சி அங்கத்தினர் பேசும்போது சொன்னார், முதல் அமைச்சர் அவர்கள் வரும்போது குழந்தைகளை வெயிலில் நிற்க வைக்கிறார்கள் என்று. நான் பல ஊர்களில் பார்த்திருக்கிறேன். கேள்விப்பட்டும் இருக்கிறேன். ஆனால் அப்படி முதல் அமைச்சரின் வருகைக்காக நடப்பதாக கேள்விப்படவில்லை. நான் பார்த்தது வேறு. புதூர் பக்கத்தில் பட்டப்பகல் 1½ மணிக்கு வெயிலில் குழந்தைகளை நிற்க வைத்திருந்தார்கள், என் குழந்தைகளை வெயிலில் நிற்க வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு எங்கள் டைரக்டர் வருகிறார் என்று சொல்கிறார்கள். இப்படி பட்டப்பகல் வெயிலில் 1½ மணிக்கு குழந்தைகளை நிறுத்தி வைத்து 'கல்வி இயக்குனரே வருக வருக' என்று போர்டும் போடப்பட்டிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் ஒரு நாள் அருப்புக்கோட்டைக்குப் போகிறார். அங்கு வெயிலில் குழந்தைகள் ஒரு பக்கத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். ஏன் என்று கேட்டதற்கு டைரக்டர் வருகிறார் அதற்காக ஆயிரக்கணக்கானவர்கள் நிற்கிறோம் என்று சொல்லுகிறார்கள். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்ன மாதிரி முதல் அமைச்சர் அவர்களுக்காக எங்கேயும் அப்படிப் போட்டிருந்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் வருகைக்காகவோ அல்லது கல்வி அமைச்சர் அவர்கள் வருகைக்காகவோ இப்படி குழந்தைகளை கொண்டு நிறுத்துவதை நான் பார்த்ததே கிடையாது அது சாட்சாத் ஒருவருக்குத்தான் உண்டு, அது டைரக்டருக்குத்தான் உண்டு. எந்த நாட்டிலும் இதைப் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள், பொறுத்துக்கொள்ள முடியாத தவறு இது. பச்சைக் குழந்தைகளை பட்டப்பகல் 12, 1½ மணிக்கு வெயிலில் நிறுத்தி வைத்துக் 'கல்வி இயக்குனரே வருக வருக' என்று சொல்வது என்றால். . . .

**கனம் சபாநாயகர் :** அது இயக்குனர் குற்றமா அல்லது நிறுத்துபவர்கள் குற்றமா ? The hon. Member should not attack the Director.





SRI K. T. KOSALRAM : I am attacking the Government. I say that Government should not allow these things.

MR. SPEAKER : The hon. Member can address the Government.

SRI K. T. KOSALRAM : I am addressing the Government through you, Sir.

MR. SPEAKER : Is there any order or any instruction of the Director that the pupils should stand like that? If there is an order like that, the hon. Member can point out that. But he should not insinuate unnecessarily individual persons.

**திரு. கே. டி. கோசல்ராம் :** ஒரு டெபுடி இன்ஸ்பெக்டர் நின்று கொண்டிருந்தார். குழந்தைகளை இப்படி நிறுத்தி வைக்க நீங்கள் சம்மதித்தீர்களா என்று கேட்டேன். இது மேல் அதிகாரிகள் உத்தரவு ஸார். மேல் அதிகாரிகள் உத்தரவிற்கு நாங்கள் கீழ்ப்படிய வேண்டியிருக்கிறது என்று சொன்னார். ஆக சர்க்கார் உத்தரவாகத்தான் இருக்கிறது இது. ஆகவே சர்க்காரைப் பார்த்துக் கேட்கிறேன். 'உங்கள் குழந்தைகளை இப்படி நிறுத்தி வைக்க நீங்கள் அனுமதிப்பீர்களா.' யார் குழந்தைகளையோ இப்படி நிறுத்தி வைக்க நமக்கு என்ன உரிமை இருக்கிறது. அப்படி உத்தரவு போட நமக்கு என்ன உரிமை இருக்கிறது, என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். அடுத்தபடியாக, சர்க்கார் அதிகாரிகள் எந்தவிதமான பப்ளிக் பங்க்ஷனிலும் பேசுவது கூடாது, பிரசங்கம் செய்வது கூடாது என்று ஒரு உத்தரவு, ஜீ.ஓ., போடப்பட்டது. அந்த ஜீ.ஓ. போட்டு இரண்டு மாதங்களுக்குள்ளாக ஒரு குறிப்பிட்ட அதிகாரி மட்டும் இம்மாதிரி செய்யலாம், மற்றவர்கள் அப்படிச் செய்யக்கூடாது என்று சொல்லப்பட்டது. மற்ற அதிகாரிகள் என்ன பாவம் செய்தார்கள், கல்வி இலாகாவில் உள்ளவர்கள் என்ன புண்ணியம் செய்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த அதிகாரிக்காக மட்டும் ஒரு ஜீ.ஓ.,வா. இப்படி எதற்காகப் போட்டார்கள் என்று தெரியவில்லை. இப்படிப்பட்ட டிஸ்கிரிமினேஷன்ஸ் செய்ய வேண்டாம். காங்கிரஸ் சர்க்கார் நடக்கிறது, எல்லா அதிகாரிகளும் பிரசங்கம் செய்யட்டும் என்று விட்டுவிடுங்களேன். அவர்கள் அப்படி செய்துவிட்டு போகட்டும். ஒருவருக்கு மட்டும் மனுப்பலி இருக்கவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதார்ரக் கல்வியைப்பற்றிப் பார்க்கும்போது, இதை மகாத்மா காந்தி 10-00
யடிகள் தங்களுடைய வாழ்க்கையின் லட்சியமாகக் கொண்டிருந்தார். a.m.
அந்த முறையில் இது ஆரம்பிக்கப்பட்டது. அந்த ஆதாரக் கல்வி எங்கெல்லாம் இருக்கிறதோ அங்கெல்லாம் பிரிவினை இயக்கம் தாராளமாக ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் மறுக்க முடியாது. எல்லா இடத்திலும் இருக்க முடியாது—ஆனால் ஒரு சில இடங்களில் நிச்சயமாக இருக்கிறது. இதற்கு என்ன காரணம் ? ட்ரெயினிங் ஸ்கூல்களுக்கு பிள்ளைகளைச் சேர்க்கும்போது முன்பெல்லாம் ஒரு நான் அபிஷியல் கமிட்டி போட்டிருந்தார்கள். ஆங்காங்கு உள்ளவர்களாகப் பார்த்து, தேச பக்தி உள்ளவர்களாகப் பார்த்து, அவர்களோடு ஒரு அதிகாரியையும் சேர்த்து கமிட்டி போட்டிருந்தார்கள். அதன் மூலமாக நல்ல முறையில் பள்ளிகளுக்குக் குழந்தைகள் சேர்க்கப்பட்டார்கள். இப்போது ஒரு அதிகாரி; அவர் சர்வாதிகாரி. நான் சாட்சி சொல்லத் தயாராக இருக்கிறேன், 100 ரூபாய் , 200 ரூபாய்க்குக் குறையாமல் கொடுக்கிறவர்களுக்குத்தான் அட்மிஷன். அது மாத்திரமல்லாமல் எதிர் கட்சித் தலைவரிடத்திலிருந்து கடிதம் வாங்கி வரவேண்டும் . . . . . .

**கனம் சபாநாயகர் :** எதிர் கட்சித் தலைவரையும் கனம் அங்கத்தினர் தாக்க ஆரம்பித்துவிட்டார்களா ? . . . . . . . . . [illegible]

மாணவர்களுக்கிடையே வேறுபாடு இருக்கிறது ; " ஏழை வீட்டுப் பிள்ளை கந்தைத் துணி அணிந்துகொண்டு வருகிருன் ; பணக்கார வீட்டுப் பிள்ளை சில்க் சட்டை அணிந்துகொண்டு வருகிருன் ; இதைப் பார்க்கின்ற ஏழை வீட்டுப் பிள்ளையின் உள்ளத்திலே வித்தியாசம் தோன்றிவிடுகிறது," என்று நம்முடைய பிரதமர் அவர்கள் ஒரு சமயத்தில் கூறியிருக்கிருர் " ஆகவே, ஏழைப் பிள்ளைகளுடைய மனத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளையும், ஜாதி வேற்றுமைகளையும் களைய வேண்டுமானல், உணவையும், உடையையும் கொடுக்கும் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக் கொடுக்க வேண்டும்" என்றும் நம்முடைய பிரதமர் அவர்கள் ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சொன்னதாக நான் படித்திருக்கிறேன். அந்தத் திட்டத்தை நாம் கைக்கொள்ளாததினுல்தான் இந்த வேற்றுமைகள் வளர்ந்துகொண்டிருக்கின்றன. பள்ளிக்கூடங்களின் நடைமுறையில் இருக்கும் குறைபாடுகள் காரணமாக, குழந்தைகளுக்கு அடிக்கடி தொல்லை கொடுப்பதன் காரணமாக, பாடத் திட்டங்களை அடிக்கடி மாற்றுவதன் காரணமாக கல்வியின் தரம் குறைந்து வருகிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஹைஸ்கூல்கள் முன்பு ஜில்லா போர்டு நிர்வாகத்தில் இருந்த சமயத்தில் நிர்வாகம் எவ்வாறு இருந்ததோ அதே முறையில்தான் இன்று கலெக்டர் நிர்வாகத்திலேயும் இருந்துகொண்டிருக்கின்றன. முன்பு ஜில்லா போர்டு-பிரசிடெண்ட் ஒரு ஆசிரியரை மாற்ற வேண்டுமென்று சொல்லுவார் டி.இ.ஓ. அவரை மாற்றக் கூடாது என்று சொல்லுவார். அந்த முறையிலே இன்றும் தகராறுகள் தொடர்ந்து நீடித்து வருகிறது. இப்போதும் ரெவின்யூ இலாகாவிலே பர்சனல் அஸிஸ்டெண்ட் நியமிக்கப்பட்டு ஹைஸ்கூல்களை மேற்பார்வை பார்க்க வேண்டிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, மீண்டும் பழைய இடர்பாடுகள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. ஜில்லா கல்வி அதிகாரிகளாகத் தரமான அதிகாரிகளை நியமித்து ஹைஸ்கூல்களை அவர்களுடைய நேரடியான மேற்பார்வையில், நிர்வாகத்தில் விட வேண்டும். டிஸ்ட்ரிக்ட் எஜுகேஷனல் ஆபீஸரை, கலெக்டருடைய பர்சனல் அஸிஸ்டெண்டாக மாற்றுவது மூலம் நிர்வாகச் சீரழிவைத் தடுத்து அபிவிருத்தி செய்வதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்து, கல்லூரித் திட்டத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கல்விக்காகச் செலவழிக்கப்படுகிற தொகையிலே, ஏறக்குறைய **4.4** சதவிகிதம்தான் இப்போது கல்லூரிக் கல்விக்காகச் செலவழிக்கப்படுவதாகக் கணக்குக் காட்டப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டுகூட **5** சத விகிதம்தான் கல்லூரி மட்டத்திலே கல்விக்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அடிப்படைக் கல்விக்கும், நடுத்தரக் கல்விக்கும் மட்டும் ஒதுக்கப்பட்ட பணத்தின் பெரும் பகுதியைச் செலவிட்டுவிட்டு, கல்லூரி மட்டத்திலே குறைவாகச் செலவிடுவதன் . காரணமாக, மாணவர்களுக்கு எதிர்காலத்தில் இருக்கும் நம்பிக்கைக்கு உத்தரவாதம் இல்லாத நிலைமை இருக்கிறது என்று கூற விரும்புகிறேன். அதன் காரணமாகப் படிக்கின்றவர்கள் ஏதாவது வேலை கிடைக்குமா என்று வேலைக்காகப் படிப்பதை வைத்துக்கொண்டிருக்கிருர்களே தவிர, படித்து முடித்தவுடன், விஞ்ஞானத்தைப் படித்துவிட்டு வந்து ரிசர்வ் செய்து தாங்களாகக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற எண்ணத்தை, சக்தியை மறந்துவிட்டு, எங்காவது அப்பர் டிவிஷன் கிளார்க் வேலை கிடைக்குமா என்றுதான் பார்த்துக்கொண்டிருக்கிருர்கள். விஞ்ஞானத் துறையில் நம்முடைய கல்வி முறையை அபிவிருத்தி செய்ய வேண்டும். அதற்காக நாம் செலவிடுகிற பணத்தை அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ப்ரி–ப்ரொபஷனல் காலேஜ் அட்மிஷன் பற்றி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எல்லாக் கல்லூரிகளைப் பொறுத்த வரையிலும், எஞ்சினீயரிங் கல்லூரி, மருத்துவக் கல்லூரி ஆகியவற்றுக்காக அட்மிஷன்களை அரசாங்கம் கண்காணித்து வருகிறது. ஆனால் அண்ணாமலை யூனிவர்சிடிக்கு மட்டும் ஏன் விதி விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை. நம்முடைய பட்ஜெட்டிலிருந்து அண்ணாமலை யுனிவர்சிடி கல்விக்காகப் பணம் கொடுக்கவில்லையா ? அண்ணாமலை யூனிவர்சிடி எஞ்சி



னீயரிங் பிரிவு அட்மிஷனைப் பொறுத்தவரை நம்முடைய அரசாங்கத்திற்கு ஏன் பிடிப்பு இல்லாமல் இருக்க வேண்டும். காரைக்குடியில் இருக்கும் அழகப்பா எஞ்சினீயரிங் கல்லூரியில் அட்மிஷன் அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டு இருக்கிறது. அண்ணாமலை யூனிவர்சிடியைப் பொறுத்தமட்டில் அது ஏன் தனியாக விடப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

தற்போது தனிப்பட்டவர்கள் யூனிவர்சிடி பரீட்சை எழுத வேண்டுமென்ருல், முடிவதில்லை. யூனிவர்சிடி ஆக்டை திருத்தியாவது, வெளியிலே வேலை செய்கிறவர்கள், பி.ஏ., எம்.ஏ., போன்ற பட்டங்களைப் பெற ஓய்வு நேரங்களில் படித்து பாஸ் செய்ய இந்த அரசாங்கம் வழி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த முறை நம்முடைய மாநிலத்தில் இல்லாத காரணத்தினுல், தகுதி, திறமை இருந்தாலும், கல்லூரியில் படிக்க முடியாமல் வேலைக்குச் சேர்ந்துவிடுகிறவர்கள் மேலே படிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே அவர்களுக்கு யூ.பி.எஸ்.ஸி. நியமனங்கள் கிடைக்க வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்று சுட்டிக்காட்டி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கோசல்ராம் :** கனம் சபா நாயகர் அவர்களே, கல்வித் துறை மான்யத்தை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கல்வி அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் ஆங்கிலம் பற்றி, போதன மொழி பற்றி அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகளை, அவர்கள் நினைக்கின்றவற்றை நான் பாராட்டுகிறேன். அப்படி பாராட்டுவதோடு கூட, அவர் திடமாக எதை நினைக்கிருர்களோ அதை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்பதுதான் என் ஆசை. ஒரு நாள் நன்ருக அவர் மனதில் இருப்பதைப் பேசுகிருர். தமிழ் போதன மொழியாக இருப்பதினுல் இந்த நாட்டிற்கு எத்தகைய நிலை ஏற்படும் என்பதை ஒருபுறம் பார்க்கிருேம். ஒருபுறத்தில் யாரையோ திருப்தி செய்வதற்காக, அதற்கு நேர்மாருகப் பேசுவதைப் பார்க்கிறேன். எனக்கு நிச்சயமாகத் தெரியும். கல்வி இலாகா போர்ட்போலியோ அவர் கையில் இல்லாமலிருந்த சந்தர்ப்பத்தில்கூட கல்வித் தரம் எந்தளவு குறைந்திருக்கிறது, எந்தளவு குறைக்கப்பட்டிருக்கிறது, ஆங்கிலம் போதன மொழியாக இல்லாவிட்டால் ஒரே தேசம் என்ற நிலை எவ்விதம் வரும், தமிழ் நாட்டிலுள்ள மாணவர்கள் ஆங்கிலம் படிக்காமல் தமிழ் படிப்பார்களேயானுல் கிணற்றுத் தவளைகள் போல் ஆகிவிடுகிருர்கள் என்ற கருத்தைக் கொண்டிருந்தார்கள். தமிழ்நாட்டில் உள்ளவர்கள் அஸ்ஸாம் போன்ற மாநிலங்களில் எஞ்சினியர்களாகவும் கலக்டர்களாகவும் இருப்பதைப் பார்க்கிருேம். ஆகவே ஆங்கிலம்தான் போதன மொழியாக இருக்க வேண்டும் என்று திட்டவட்டமாக சொல்லியிருந்து இன்று அதை அமல் நடத்த அரசாங்கம் திட்டமான கொள்கையை வைத்துக்கொள்ள வேண்டும். தமிழில் பீ.ஏ., பட்டம் பெற்று வருகிறவர்களுக்கு அரசாங்கத்திலோ அல்லது தொழில் துறையிலோ வேலை யாராவது கொடுக்கிருர்களா ? இந்த நாட்டில் வசதி உள்ளவர்கள் ஆங்கிலம் படிக்கிருர்கள். வசதியற்றவர்களுக்கு **30** ரூபாய் ஸ்டைபெண்ட் கொடுத்து வேண்டுமானுல் படித்து வா என்று சொல்லி அவர்களை நடுத்தெருவில் நிற்க வைக்கத்தான் இந்த முறையில் நடத்துகிருர்கள். ஒன்றில் தமிழை அத்தனை பேர்களுக்கும் வைத்து விடுங்கள். அதை பாராட்டுகிறேன். சமுதாயத்தில் சிலருக்கு தமிழ் படிக்க என்று **30** ரூபாய் பிச்சைக் காசு கொடுத்து அவர்கள் நாசமாகப் போகும்படி வைக்க வேண்டும், ஒரு சாரார் ஆங்கிலம் படித்து உத்தியோகம் பெறவேண்டும், இதுதான் முறையா ? ஆக இப்படி இரண்டு ஜாதியை உண்டுபண்ணுகிறீர்கள். அப்படி உண்டுபண்ண வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் உள்பட, அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் உள்பட, காங்கிரஸ்காரர்கள் அத்தனை பேர்களும் ஒரு தவறு செய்துவிட்டோம். அதை இன்றுகூட நிவர்த்திக்க வசதி இருக்கிறது என்று பல முறை சொல்லியிருக்கிறேன். இந்த நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்திருக்கிறது. அதற்கு நாம் எவ்வளவு தியாகங்கள் புரிந்திருக்கிருேம். ஆனால் எள்ளைப் பிள்ளை கையில் கொடுத்திருப்பதுபோல் குழந்தைகள் நினைக்கிருர்கள். இந்த

திரு. இரா. நெடுஞ்செழியன் எழுந்தார்.

**திரு. கே. டி. கோசல்ராம் :** எதிர் கட்சித் தலைவர் என்று சொல்லும் போது எல்லா எதிர்க் கட்சிகளையும்தான் சொல்லுகிறேன்.

(மணியடிக்கப்பட்டது).

*** திரு. என். ராமசாமி உடையார் :** கனம் தலைவர் அவர்களே . . .

**கனம் சபாநாயகர் :** தாங்கள் இப்போது பேசுவதற்குத் தயாராக இல்லையா ?

**திரு. என். ராமசாமி உடையார் :** இந்தக் கதையிலே கொஞ்ச நேரம் மூழ்கி இருந்து விட்டேன் . . . (சிரிப்பு).

இந்த 1963-64-ம் ஆண்டுக்கான கல்வி மான்யத்தை நமது நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார். இந்த மான்யத்தை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது நான் முன்னே குறிப்பிட்டது போல நமது வருமானத்தில் பெரும் பகுதியைக் கல்விக்காகச் செலவழிக்கிறோம். மற்ற மாகாணங்களிலே கூட, எங்கேயும் இல்லாத அளவுக்கு, கல்வியின் அடிப்படைத் தத்துவத்தை உணர்ந்து நாம் இந்த முறையில் செலவழிக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை வரவேற்கிறோம். அதே சமயத்திலே பல்வேறு முன்னேற்றங்கள் இந்தக் கல்வியிலே, நாம் சுதந்திரம் அடைந்த பிறகு ஏற்பட்டிருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. உதாரணமாக ஒரு ஜில்லாவிலே, ஒரு தாலூகாவுக்கு ஒரு ஹைஸ்கூல் தான் முன்பெல்லாம் இருந்தது. இப்போது 20-30 ஹைஸ்கூல்கள் ஏற்பட்டுவிட்டன. இவைகளெல்லாம் நமது முன்னேற்றத்தைக் குறிக்கின்றன. அதே சமயத்தில் ஏராளமாகச் செலவழிக்கும்போது, எல்லாம் நல்ல முறையில் நடக்க, நல்ல முறையில் கண்காணிப்பு நடத்த வேண்டியது அவசியம் என்று சில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

மதிய உணவு போன்ற திட்டங்களையும், ஆடைச் சீரமைப்பு போன்ற அரிய-பெரிய திட்டங்களையும், எல்லா மாகாணத்திற்கும் முன்னோடியாக நின்று நாம் நடத்திக் காட்டுகிறோம். இதற்காக நமது இந்தியாவில் மட்டுமல்லாமல் வெளி நாடுகளிலெல்லாம் போய்ப் பார்த்து வரும்படி நமது டைரக்டரையும் மற்றவர்களையும் அனுப்பி நமது முன்னேற்றத்திற்காக அரும்பெரும் பாடு பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதற்காக அவர்களையும்—பெயரைக் குறிப்பிடக் கூடாது என்று சொன்னார்கள்—இந்த விஷயத்திலே அவசியம் பாராட்டத்தான் கடமை பட்டிருக்கிறோம். நல்ல முறையில் . . . . .

**கனம் சபாநாயகர் :** ஒருவர் பாராட்டுவது, ஒருவர் சீராட்டுவது என்று வருகிறது. அப்படி இல்லாமல் டிபார்ட்மெண்டைப் புகழ்ந்து பேசிக் கொண்டு போகலாம்.

**திரு. என். ராமசாமி உடையார் :** இப்படிபல்வேறு இடங்களில் நடந்து கொண்டிருக்கும்போது இதையெல்லாம் கவனிப்பதற்கு ஒரு கமிட்டி அமைக்க வேண்டுமென்பது தான் எனது கோரிக்கை. உதாரணமாக இந்த மதிய உணவுத் திட்டம் ஏழைப் பிள்ளைகள் படிப்பதற்கு முக்கியத்துவம் வாய்ந்தது. ஏழைப் பிள்ளைகள் நல்ல முறையில் படித்து முன்னேறவேண்டும் என்று மனதில் வைத்து நல்ல முறையில் நடந்தால் தான் அநேக ஏழைப் பிள்ளைகள் படிக்க வசதி இருக்கும்.

சீருடை என்பது நல்ல அடிப்படையான கருத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. பள்ளியில் படிக்கும்போது எல்லாப் பிள்ளைகளும் சரிசமமாகப் பழகவேண்டும் என்ற அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சீருடைகளும் மேலும் மேலும் அதிகமாகக் கொடுத்து நல்ல முறையில் நடப்பதற்கு ஒரு கமிட்டி, மதிய உணவு சம்பந்தப்பட்ட மட்டில்



மதிய உணவு என்க்வயரி கமிட்டி என்று மாகாண ரீதியில்தான் இருக்கிறது, அதைப்போல ஜில்லா லெவலில் அஃபிஷயல்ஸ், நான்அஃபிஷியல்ஸ் சேர்ந்த ஒரு கமிட்டி ஏற்படுத்திப் பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக எலிமெண்டரி எஜுகேஷன். சாதாரணமாக இந்தத் தொகையிலே பாதிப்பங்கு, 53 சதவிகிதம் வரையில், எலிமெண்டரி எஜுகேஷனுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அது ஒரு பெரும் தொகை. நல்ல முறையில் ஆயிரக் கணக்கான பள்ளிகள் அமையப் பெற்று நடந்துகொண்டிருக்கின்றன. அதிலே குறிப்பாக, நண்பர்கள் குறிப்பிட்டார்கள், சிறு பிள்ளைகளை எப்படியெல்லாம் நடத்துகிறார்கள், பிள்ளைகள் எப்படி நடக்க வேண்டுமென்று போதிக்க வேண்டு மென்பதைப்பற்றி. அவைகள் யாவும் அதிகமாகக் கருதப்படவேண்டியவைகள். ஆனாலும் கூட எலிமெண்டரி பள்ளிகளில் நடைமுறைகளைப் பார்க்கும்போது பல சங்கடங்கள் கூட இருக்கின்றன. அவைகளைக் கண்காணிக்க ஒரு கமிட்டி வேண்டுமென்று சொல்ல ஆசைப்படுகிறேன். உதாரணமாக சிறு பையன்கள் பள்ளிக்கு வந்து ஆஜர் குறிப்பிடும்போது, " அண்ணா, வணக்கம் " என்று சொல்லும்படி வற்புறுத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட சில பள்ளிகளைப் பற்றிய செய்திகள் என்னிடம் கூட வந்தது. பள்ளிக்கு வந்தவுடன் " அண்ணா, வணக்கம் " என்று சொல்லவேண்டுமென்று பையன்களை வற்புறுத்துகிறார்கள் அங்கே உள்ள ஆசிரியர்கள். சிறு வயதில் இருக்கக்கூடிய பையன்கள் மனதில் இம்மாதிரி எண்ணங்களை ஏற்படுத்தும்படி ஆசிரியப் பெருமக்கள் நடந்து கொள்ள வேண்டாம். தங்கள் விருப்பு-வெறுப்புகளைச் சிறு பிஞ்சு உள்ளங்களில் பதிய வைக்கும்படியான முறையில் நடந்துகொள்ள வேண்டாம். எனக்கு முன்னால் பேசிய திரு. கோசல்ராம் அவர்கள் குறிப்பிட்டார். பல விஷயங்களைப் பையன்களுக்கு, சிறு குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கத் தவறிவிட்டோம், தேச சரித்திரத்தைப் பற்றியும், சுதந்திரம் எப்படி அடைந்தோம் என்பது பற்றியும் சொல்லிக் கொடுக்கத் தவறிவிட்டோம் என்று சொன்னார். அதற்கு மாறாக இன்றைக்கு கேள்விப் பேப்பரில்கூட, திராவிட நாடு என்றால் என்ன ? அதன் நன்மைகள் என்ன ? " என்று கூடக் கேட்கப் படுகிறது. இப்படியெல்லாம் கேட்கும்போது அரசாங்கத்தில் இதை நல்ல முறையில் கவனிப்பதற்காக வேண்டி இந்த எலிமெண்டரி எஜுகேஷனுக்குக் கூட ஒரு கமிட்டி ஏற்படுத்திக் கண்காணிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதைப்போலவே செகண்டரி எஜுகேஷன். அதற்கும் 4-ல் ஒரு பங்கு, 23 சதவிகிதம் செலவு செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம். அதிலும் கூட நான் முன்னே குறிப்பிட்டதுபோல ஹைஸ்கூல்கள் ஏராளமாக ஏற்பட்டிருக்கின்றன. ப்ளாக்கிலே எலிமெண்டரி எஜுகேஷனைத் தான் ப்ளாக் சம்பந்தப்பட்டவர்கள் கண்காணிக்கிறார்கள் ஓரளவுக்கு. ஹைஸ்கூல் சம்பந்தப்பட்ட வரையில் எஜுகேஷன் ஆஃபீசர் ஒருவர்தான் கவனித்துக்கொண்டு வருகிறார். இப்போது அநேக பள்ளிகளில் உபாத்தியாயர்கள் சண்டை அதிகமாகப் போய்விட்டது. அதனால் அது படிப்பின் தரத்தைக்கூட பாதிக்கிறது என்று சொன்னால் அது மிகை ஆகாது. இப்படிப்பட்ட விஷயங்களை கவனிக்க உயர்ந்த முறையில் ஒரு கமிட்டி ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆசிரியப் பெருமக்களையும் உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன், தங்களுடைய விருப்பு-வெறுப்புகளை, பள்ளிகளில் படிக்கக்கூடிய இளம் பிஞ்சு உள்ளங்களில் பதிய வைக்க வேண்டாம், தாய்க்கும் தந்தைக்கும் அடுத்தபடியாக உள்ளவர்கள் ஆசிரியர்கள் என்பதை மறந்துவிட வேண்டாம் என்று அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹைஸ்கூல்கள் இராமங்களில் ஏராளமாக ஏற்பட்டுவிட்டன. அவைகளுக்கு கட்டிடங்கள் கட்ட முன்னால் பாதிப் பணம் சர்க்கார் கொடுத்துக்கொண்டு வந்தார்கள். இப்போது ப்ளாக் டெவலப்மெண்ட் ஏற்பட்ட பிறகு எலிமெண்ட்டரி பள்ளிகள் கட்ட அவர்கள் பணம்

நாடு. வெள்ளையர் ஆட்சிக்குப் பிறகு நாம் சுதந்திரம் அடைந்த பிற்பாடு புனருத்தாரணம் செய்கின்ற முறையிலே இதிலே அதிகமான அக்கரை காட்டுகிறோம் என்பது மட்டுமல்ல. கல்வியைப் பொறுத்த மட்டில் நமது நாட்டில் நல்லதொரு பாரம்பரியம் இருக்கிறது. கல்வியில் சிறந்த தமிழ் நாடு என்றெல்லாம் புகழப்பட்ட நமது நாட்டில் கல்விக்காக இப்பொழுது கனம் நிதிஅமைச்சர் அவர்கள் அதிகமாகத்தொகையை ஒதுக்கியிருப்பது உண்மையிலேயே பாராட்டத் தக்கது. அதுவும் தேசிய நெருக்கடி நேரத்தில் கூட கல்விக்காக இவ்வளவு தொகை ஒதுக்கப்படுமா என்று ஐயப்பட்டோம். கல்வி சமுதாயத்தின் வளர்ச்சிக்கு ஒரு நல்ல மூலதனம் என்ற ஒரு நல்ல நோக்கத்தில் கல்விக்காக ஒரு பெரிய தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள். சமுதாயத்தில் ஒரு பெரிய புரட்சியை உண்டுபண்ண வேண்டும், நல்ல சீர்திருத்தம் உண்டுபண்ண வேண்டும் என்பதுதான் நோக்கம். அந்த நோக்கத்தோடு கல்விக்காக பெரிய தொகையை ஒதுக்கியதை உண்மையிலேயே நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம். அந்தக் காலத்தில்

" உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே "

என்ற கருத்தில் படிப்பு அமைந்திருந்தது. அந்த நிலை இப்பொழுது கொஞ்சம் மாற்றப்பட்டிருக்கிறது. பழைய காலத்தில் மாணவர்கள் கொடுத்து கல்வி பெறவேண்டும். உறுபொருள் கொடுக்க வேண்டும், பிற்றை நிலை முனியாது கற்கவேண்டும். இன்றைக்கு அதற்கு மாறாக சீருடை, சீருணவு, சீரமைப்பு என்ற முறையில் கல்வி கற்றுக் கொடுக்கப் படுகிறது. அந்த முறையெல்லாம் கொஞ்சம் புதிதாக இருக்கிற காரணத்தினால், அதுவும் குறிப்பாக வெள்ளையர் காலத்தில் அதிகமாக கல்வியிலே அக்கரை காட்டாத நேரத்திலே பாமரத் தன்மை அதிகமாக நமது நாட்டிலே இருந்த காரணத்தினால், இருள் படர்ந்த காரணத்தினால் நமது நாட்டில் புதிய சீர்திருத்தம் உண்டுபண்ண வேண்டுமென்ற காரணத்தினால் குறைபாடுகள் சில இருக்கத்தான் செய்யும். அதற்காகக் குறைகளை மிகைப்படுத்தி அங்கலாய்த்துக்கொள்ளுகிற எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். ஏதோ ஆங்காங்கு சில குறைகள் இருந்தாலும், பொதுவாக வளர்ந்துகொண்டு வருகிற நிலையைப் பார்த்து நாம் பெருமைப்பட வேண்டும். அப்படியில்லாமல் குறைகளை அதிகப்படுத்திச் சொல்லிக்கொண்டிருப்போமானால், நமது கல்வி முறை இவ்வளவு கேவலமான நிலையில் இருக்கிறதா என்று வெளியில் இருப்பவர்கள் நினைக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடும். வளர்ந்துவருகிற நிலையில் நாம் அதைப்பற்றி பெருமையாகப் பேசி மேலும் அதை வளர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுதிருக்கும் பெரிய ஆபத்தான சூழ்நிலையிலே சீன ஆக்ரமிப்பு ஏற்பட்டிருக்கிற நேரத்தில், நாம் மாணவர்களுக்கு அதிகமாக வீர உணர்ச்சியை ஊட்டவேண்டும், அவர்களுக்கு நாட்டுப்பற்றை ஏற்படுத்தவேண்டும். இப்பொழுது நாட்டிலுள்ள மாணவர்களுக்கு அதிகப்படியான வீர உணர்ச்சி ஏற்படவில்லை என்றே சொல்லலாம். உண்மையில் பார்த்தால் குறைந்துகொண்டேதான்வருகிறது. அதை அதிகப்படுத்த எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. அதாவது நமது நாட்டில் மாணவர்களுக்கு வீர உணர்ச்சி வருவதற்கு கட்டாயம் பாரதியார் பாடல்களை பள்ளிக்கூடங்களில் அவர்களுக்குப் பாடமாக வைக்கவேண்டும். கட்டாயமாக மாணவர்களுடைய பாடத்தில் சிலபஸில் இந்தப் பாரதியார் புத்தகத்தையும் சேர்க்கவேண்டும். அப்படி வைத்தால் மாணவர்களுக்கு அதைப் படித்து வீர உணர்ச்சி ஏற்படும். வீர உணர்ச்சி ஏற்படுவதோடு பிரிவினை உணர்ச்சியும் போய்விடும். " நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம். இது நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம் " போன்ற பாடல்களைப் பாடினால் மாணவர்களுக்கு வீர உணர்ச்சி வருவதோடு பிரிவினை உணர்ச்சியும் போய்விடும். நாம் இருக்கக்கூடிய நாடு நமது என்றே தான் அவர்கள் நினைப்பார்கள். நமது நாடு ஒரே நாடு என்ற ஒரே உணர்ச்சியும் ஏற்படும். நமது நாடு நமக்கே என்று தோன்றக்கூடும். இப்படிப்பட்ட பாடல்களைப் பாடுவதற்கு மாணவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். யாரும் அடிமை இல்லை என்ற உணர்ச்சி ஏற்படும். இதை



யொட்டி மற்றொரு பாரதி பாடலும் இருக்கிறது. அதாவது "மன்னும் இமயமலை எங்கள் மலையே, மாநில மீதினில் போர் பிறிதிலையே" என்ற பாடலும் இருக்கிறது. அவற்றையெல்லாம் மாணவர்களைப் பாடச் சொன்னால் அவர்களுக்கு வீர உணர்ச்சி ஏற்படும். அப்படிப் பாடும்போது இசையுடன் பாடும்படியாகவும் ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்கு முன்னால் கூட மதத்தைக் கூட இசை மூலமாகவும் பரப்பியதாகத் தெரியவருகிறது. பல கொள்கைகளைக் கூட இசை மூலமாகப் பரப்பியதாகத் தெரியவருகிறது. ஆகவே பாரதியார் பாடல்களை இசை மூலமாக பரப்புவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரைக்கும் இதற்குக் கணிசமான அளவில் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பக் கல்வியில் **'decentralisation'** இருக்கவேண்டும் என்பதற்காக பஞ்சாயத்து யூனியனிடம் ஆரம்பக் கல்வியைக் கொடுத்திருக்கிறார்கள். அதை மிகவும் கண்காணிக்க வேண்டியதாக இருக்கிறது. எந்த அளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதோ, அந்த அளவு முன்னேற்றமடையவில்லை. கிராமப்புறங்களில் உயர்நிலைப் பள்ளிக்கூடங்களை ஆரம்பிக்கவேண்டும் என்று சொன்னாலும் பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்கு கட்டிடங்களை கட்டுவதில் அக்கரை காட்டுவதாக இல்லை. (மணி அடிக்கப்பட்டு பேச்சு நிறுத்தப் பட்டது.)

(கனம் உதவி சபாநாயகர் தலைமை).

* SRI A. KUNJAN NADAR : Sir, before speaking on the general condition of education in the State, I wish to deal with the pitiable condition of the allotted teachers in Kanyakumari district.

Sir, when I spoke about the allotted teachers a year back, I got a reply from the Chief Minister that he would see that I do not come to this Assembly again. Whether I come or not, it is of no consequence to this Assembly or even to myself. Even if I or anybody do not come from Kanyakumari district, this Government has got a duty to do justice to the allotted teachers of Kanyakumari district. It is now more than six years since that area was merged with Madras. Till now there is no integration, there is no promotion, no increment in salary and not even pension to the teachers and other allotted personnel of that area. Sir, I ask is integration so difficult a matter? It is not. Integration is not only in Madras, but also in Kerala, in Mysore, in Maharashtra and even in Central Government. There are certain accepted basic principles on which integration has been done everywhere. The integration is not done here till now. It is either due to utter inefficiency of the Ministers and the Ministry or due to their callous and criminal indifference. Allotted teachers numbering about 2,000 persons in different ranks of the Department like Primary School teachers, Private School teachers, V.S.L.C. teachers and V.H. holders and trained Pandits, Vidwans, special teachers are suffering. Even Graduate teachers are not given fair treatment. Now the trend is that in primary schools, the headmasters who had served for the last 20 or 25 years as headmasters are now reverted as Assistants to work under small boys who came as teachers yesterday. We speak so much of efficiency and all that. I ask the Director of Public Instruction one question. If he is to be

[Sri A. Kunjan Nadar] [14th March 1963

reverted as a Divisional Inspector would his efficiency increase or decrease? People who were working as Headmasters for the past 20 or 25 years are now reverted. T.C. qualifications are not recognised. The fundamental principle in integration is that this Government is the successor Government of the erstwhile T.C. State Government. It is bound to honour all the commitments of the prior Government. Teachers who are accepted as qualified by the T.C. Government must be accepted as qualified persons here also. This Government, and the Department of Education have denied that principle to us. I would say it is purposely denied. I do not want to pass any remarks on any departmental head or Minister. Shall I ask one question? Could it not be done in one hour, if the education Minister or the Chief Minister has the will to do? Make me a Minister. I will solve the problem in one hour. We know how the Ministers and Ministries are functioning. When questions of their personal interest, their communal interest or parochial cases are dealt with, files fly through the back door in lighting speed. It is done in one hour. We want no favour from anybody. We want justice, basic justice for the people who are suffering for the past six and a half years. Teachers who were told that they need not sit for tests are now told that unless they pass tests they will not get their first grade and that Juniors will not be promoted. I hear so many things about the head of the Department. It seems he has openly expressed that he does not like Kanyakumari district. Any departmental head or any Minister should not think that the Madras State is his parental property. I would like to say that we are determined to get justice. We have fought a stronger Government for 15 years for justice. We have come here for justice. We are determined to get even if it requires another 15 years struggle. We have given petitions, memoranda and waited on deputations. We, all the M.L.As. of Kanyakumari district, and one M.L.C. got together and drafted a memorandum and waited on deputations on the Chief Minister and the Education Minister. We got the usual ever-ready diplomatic reply 'பார்க்கலாம்' When? Is it after a century?

10-30 a.m. Sir, we are tired of memoranda. I say one thing. People will forget ignorance, forgive mistakes, and any number of mistakes. But if injustice is wilfully done, people will neither forget nor forgive. I want to say one thing. It is not a challenge. If we want to know the minds of the people of the Kanyakumari district there is only one way, democratic way. I am prepared to resign my seat and contest in any seat in Kanyakumari district on this issue against any Congressman including any Minister.

Sir, generally about education I want to say one word.

Mr. DEPUTY SPEAKER: The hon. Member has already exceeded his time-limit.

Sri A. KUNJAN NADAR: Sir, I must be given some more time. I am representing a whole district in this Assembly and I cannot speak elsewhere.



14th March 1963] [Sri A. Kunjan Nadar]

Sir, during pre-Independence days, we were clamouring for national education. It is now 15 years and what is the lot of our education now? Is the standard of our students raised? Is the national feeling of our students raised? No. It has fallen far below. It has come down. We do not have any proper grasp of things. We do not have any settled idea about education. Every day there is something done in the Mohamed Tukhlak way and when it is half-way, there is another reform next year and so on and so forth we are experimenting with little children and tender minds. I do not blame politicians. They are bound to resort to vote-catching ways and their thoughts will go adrift as time goes on. But what was the educational head doing all these years? He is not a politician. He is there to do something for the children. In this connection, I am reminded of the story of the blind man searching for the black cat in a dark room where there is no cat. All these years our educational head has been searching for the black cat in a place where there is no cat. The Hon. Member Sri Kosalram, referred to the instance of the vanity and personal cult indulged in the Department. This crow-catching business is cultivated in this Department as an art and as a science. Teachers are trained to crow-catch the District Educational Officers. The District Educational Officers are very anxious to crow-catch their superior educational officers. A sort of personality cult is cultivated. Sir, we have even seen what has happened to the personality cult of Stalin and to-day the photos of Stalin are in the dust-bins of Russia. Our Educational Director wants his photo to be adorned and worshipped in all the class rooms. Is it to be worshipped and what for? What do the teachers say? They say that he is a super human being who brought forward midday meals. This midday meal scheme is not a new scheme. Wherever there is compulsory primary education, this midday meal scheme should come. When we compel the poor man's children to study, we must provide midday meals to them. Since twenty years in the Kanyakumari district we have this midday meal scheme. In every country in the world where there is compulsory education introduced, there is midday meal. It is part of a compulsory education scheme itself. Sir, if one sells away his property and gives the sale proceeds to the midday meal scheme for the poor students, certainly his photo is to be worshipped and I can understand it. But is it so? This photo worship is a shameful affair and I do not want this thing to happen. It is something humiliating. The Government should not create such slavish mentality among the students. The photos will one day adorn the compost pits. I feel that unless a proper educational head is there, we are not going to make any headway in education.

I congratulate the present Education Minister for his 'new trends' to introduce English in the early stage of primary education. I have got a son studying in Form I with English medium. It is a very, very good system to have English medium. I request him, without fear or favour and without vote-catching mentality,

கொடுக்கிறார்கள். ஹைஸ்கூலுக்குக் கொடுப்பதில்லை. அரசாங்கமே நேரடியாக இந்தப் பயிற்சி முறையில்லாமல் அல்லது எந்த வித ஏற்பாடோ செய்து ஹைஸ்கூல்களுக்குக் கட்டிடம் கட்டுவதற்கு உரிய பணத்தைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் தான் பள்ளிகள் இன்னும் வளமையாக வரும். ஹைஸ்கூல்களுக்குக் கட்டிடம் இல்லாமல் போகாமல் இருக்க வேண்டிய ஏற்பாடுகளை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆகையால், இப்படியெல்லாம் பணத்தைச் செலவழிக்கும்பொழுது செலவுகளை நல்ல முறையில் கண்காணிக்க கமிட்டிகளெல்லாம் ஏற்படுத்தி அவைகளைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு பெரும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கும் இந்த அரசாங்கத்தையும், குறிப்பாக நிதி அமைச்சர் அவர்களையும் பாராட்டி, கல்வித் துறையில் இன்னும் ஏராளமாகச் செலவழிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நல்ல முறையில் பரிசீலனை செய்து இன்னா ரீதியில் பரிசீலனை செய்து, நிர்வாகத்திலே நடக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, கொண்டுவந்திருக்கும் மான்யத்தை ஆதரித்து எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** மதிப்பிற்குரிய கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் கல்வி மான்யத்தின்மீது கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரேபணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது நாட்டில் கல்விக்காக பெரும்பகுதி பணம் செலவிட்டுவருவதாகச் சொல்லுகிறார்கள். இவ்வளவு பெரிய தொகை கல்விக்காக செலவிட்டாலும்கூட, இன்னும் கிராமப் புறங்களில் உயர்தரக் கல்வி பயில ஹைஸ்கூல் இல்லாமல் இருக்கிறது. குறிப்பாக எனது தாலுகாவை எடுத்துக்கொண்டால், கிராமப் புறங்களில் ஹைஸ்கூல் சுத்தமாக ஏற்படவில்லை என்றுதான் கூறமுடியும். இப்பொழுது இருக்கிற முறைப்படி சென்டரான கிராமங்களில் உயர்தரப் பள்ளி ஏற்படுத்த வேண்டுமென்றால் ஏராளமான பணத்தைச் சர்க்காருக்குக் கட்டவேண்டும். இடம் இலவசமாகக் கொடுக்க வேண்டும். இன்னும் பள்ளிக்கூட தளவாடங்களுக்கும் பணமும் கொடுக்கவேண்டும். இந்த நிலையிலே கிராமப்புறங்களில் இருக்கிற ஏழைகள் பணம் கட்டமுடியாத காரணத்தினால், உயர்தரப் பள்ளிகள் ஏற்படாமல் கிராமப்புறங்களிலுள்ள மாணவர்கள் படிப்பதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. பணம் கொடுத்தால் தான் ஹைஸ்கூல் கட்டுவோம் என்ற விதி இருப்பது பணக்காரர்களுக்கு ஆதரவாக இருக்கிறதே தவிர ஏழைகளுக்கு உயர்தரக் கல்வி அளிப்பதற்கு பயனுள்ளதாக இல்லை. உதாரணமாகப் பார்த்தால்கூட பல ஊர்களில் உயர்தரப் பள்ளிகள் ஏற்படுத்த வேண்டுமென்று கல்வி அதிகாரிகள் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. 4, 5 வருடங்கள் ஆகியும்கூட, அதற்கு வேண்டிய பணம் கட்ட முடியாமல் இருப்பதினால், ஹைஸ்கூல்கள் ஏற்படாமல் இருப்பதை நாம் பார்க்கலாம். முன்பெல்லாம் மாணவர்களை உயர் நிலைப் பள்ளிகளில் டவுன்களில் சேர்ப்பதற்கு கஷ்டப்படுகிற நேரத்திலே நகைகளையாவது அடகு வைத்து பள்ளிகளிலே மாணவர்களைச் சேர்க்கிற வாய்ப்பு இருந்தது. தங்கக் கட்டுப்பாட்டின் மூலமாக திடீரென்று நகைகளை அடகு வைத்து மாணவர்களைப் பள்ளியில் சேர்ப்பதற்கு முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இந்த நாட்டில் உயர்தரக் கல்வி நல்ல முறையிலே வளரவேண்டுமென்றால் ஹைஸ்கூல் ஏற்படுத்துவதற்கு பணம் கேட்காமல் 1,000 ஜனத்தொகை இருக்கிற கிராமப் புறங்களை சென்டராக எடுத்துக்கொண்டு, அங்கெல்லாம் ஒரு ஹைஸ்கூல் வைத்துக்கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஒரே வருடத்தில் கொடுக்க முடியவில்லை என்றாலும் கூட, ஒவ்வொரு வருஷமும் கொஞ்சம் கொஞ்சமாக 10,000 ஜனத்தொகை இருக்கிற இடங்களில் எல்லாம் ஹைஸ்கூல் நிறுவுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இன்னும் பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கிற கிராமங்களிலேகூட ஹைஸ்கூல் ஏற்படாமல் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் மத்திமமான இடத்தில்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதை வைத்துத்தான் பக்கத்தில் இருக்கிற கிராமங்களை அபிவிருத்தி செய்வதாக இருக்கிறது. அப்படிப்பட்ட பஞ்சாயத்து யூனியன்கள்





இருக்கிற கிராமங்களிலாவது குறைந்த பட்சம் இந்த வருஷத்தில் உடனடியாக ஹைஸ்கூல்கள் ஏற்படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு தொகுதியில் 20, 30 ஹைஸ்கூல்கள் இருப்பதாக எனக்கு முன்பு பேசியவர்கள் பேசினார்கள். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரைக்கும், இன்னும் டவுன்களில் 4, 5 ஹைஸ்கூல்கள் தவிர மற்றைய கிராமங்களில் ஹைஸ்கூல்கள் ஏற்படவில்லை. எனது தொகுதியில் பல சென்டர்களில் உடனடியாக ஹைஸ்கூல் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதிய உணவைப்பற்றிப் பேசினார்கள். மதிய உணவுத் திட்டத்தில் பல குறைபாடுகள் இருக்கின்றன. பெரும் பகுதி இடங்களில் மதிய உணவுத் திட்டத்தை நடத்தாமலேயே பில் போட்டு பணம் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். பல இடங்களில் இம்மாதிரியான குறைபாடுகளை நாம் பார்க்கிறோம். மதிய உணவு தயார் பண்ணுவதற்காக சில பகுதிகளில் சுமார் 2 மணி நேரம் பையன்களை பயன்படுத்துகிறார்கள். அப்படிப் பயன்படுத்தினாலும், அது நல்ல முறையில் நடப்பதில்லை. நல்ல முறையில் மதிய உணவுத் திட்டத்தை நடத்த வேண்டும். இல்லையென்றால், அந்தத் திட்டத்தை நிறுத்தி விடவேண்டும், அந்தப் பணம் அரசாங்கத்துக்கு மிச்சமாக இருக்கு மென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் இருக்கிற வாத்தியார்களுக்கு வீட்டு வசதி கிடையாது. அவர்கள் வீட்டுவசதி இல்லாமல் நலிகிறார்கள். 4, 5 மைல் தூரத்திற்கு அப்பாலிலிருந்து போய் பள்ளிகளை திறக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. கல்விக்காக இத்தனை அதிகப் பணம் செலவு செய்துகொண்டிருக்கிற இந்த அரசாங்கம் ஆங்காங்கு இருக்கிற கிராமப்புற வாத்தியார்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு உடனடியாக இந்த வருஷத்தில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வாத்தியார்களுக்கு சம்பளம் மிகமிகக் குறைவாகக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் கிராமப்புறங்களிலே இருந்துகொண்டு, எங்கேயாவது போய் ஒரு இடத்திலே சமையல் செய்து சாப்பிடுவதென்றால், அதிகமாகச் செலவு ஆகிறது. அவர்களுடைய சம்பளத்தையெல்லாம் உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பெரும்பகுதி வாத்தியார்களெல்லாம் அரசியலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஒரு சில வாத்தியார்களைத் தவிர, மற்றவர்களெல்லாம் அரசியலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதைத் தடை செய்ய வேண்டும். வாத்தியார்கள் அரசியலில் ஈடுபடுவதால் கிராமங்களிலே அதனால் பல கட்சிப் பூசல்கள் ஏற்படுகின்றன. அதைத் தடுப்பதற்கு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் எந்தக் கட்சி சார்பாக இருக்கிறார்கள் என்று சொல்லவில்லை. எந்தக் கட்சிக்கு ஆதரவாக வாத்தியார்கள் இருந்தாலும், அதைத் தடை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நல்ல முறையிலே அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது திருவாடானைத் தாலுகாவைப் பொறுத்தவரையிலும் ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளியே கிடையாது. ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளி இல்லாத காரணத்தினால், ஆசிரியர்கள் பயிற்சிக்குச் செல்லுகிறவர்கள் பல கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள். எனக்கு முன்பு பேசியவர் சொன்னது போல ஆசிரியர் பயிற்சி பள்ளியில் சேருவதற்கு லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே பிற்பட்ட நிலையில் இருக்கும் எனது தாலுகாவில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு இந்த சந்தர்ப்பத்தை அளித்ததற்கு நன்றி தெரிவித்து எனது உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*** திரு. சி. ராமலிங்கம் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் கல்வி மான்யத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேசுவதற்கு அனுமதிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். நமது நாடானது கல்வியிலே ஒரு பெரிய பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது

to do what is good for the people. I also requested him to do something for the suffering teachers of Kanyakumari. It can be done in one hour, and not more than that. Accept T.C. qualifications. Accept Pay Commission Report. Accept your own G.O. No. 710. Please do it for Heaven's sake.

**கனம் உதவி சபாநாயகர் :** இங்கே அதிகப்படியான கனம் அங்கத்தினர்கள் விவாதத்தில் கலந்துகொள்ள வேண்டுமென்று விரும்புவதால் ஒவ்வொருவரும் 6 அல்லது 7 நிமிடங்களுக்கு மேல் எடுத்துக்கொள்ளாமல் உரைகளை முடித்துக்கொள்ளும்படியாக எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

**திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் :** கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, . . . . .

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் துணைத் தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், இந்தக் கல்வி மானியத்தில் மூன்று மணி நேரத்தில் ஏறக்குறைய முப்பது கோடி ரூபாய் மானியமாக வழங்க இருக்கிறோம். இந்தப் பெரிய மானியக் கோரிக்கையில் எதிர்க் கட்சி உறுப்பினர்களில் ஏராளமானவர்கள் பல முக்கிய பிரச்னைகளைக் குறித்துப் பேச விரும்புகிறார்கள். ஆகவே, இந்த மானியத்தின் மீதுள்ள விவாதத்தை இன்று மாலையும், தேவையானால் இரவில் கூட வைத்துக் கொள்ளலாம். இதற்கான நேரத்தைக் கூட்ட வேண்டுமென்று கனம் துணைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. DEPUTY SPEAKER : There is no point of order. The hon. Member Sri Dhakshinamoorthy Gounder may now speak.

* **திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் :** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்று அறிவுப் பணிக்காகக் கொண்டுவரப்பட்டுள்ள மானியக் கோரிக்கையை நிறைவு உணர்ச்சியோடு நான் வரவேற்கின்றேன். இந்த மானியக் கோரிக்கையில் கல்விக்காக இந்த ஆண்டில் 27 கோடியே 26 லட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டும் எனக் கோரப்பட்டிருக்கிறது. அதிலே சரி பாதிக்கு மேல், அதாவது 14 கோடியே 48 லட்சம் ரூபாய் ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கவேண்டுமெனக் கோரப்பட்டிருக்கிறது. இந்த ஆரம்பக் கல்வி என்று சொல்லும்போது, அது பூராவும் கிராமப் பகுதிகளுக்கே தான் சார்ந்தது என்று நான் நினைக்கிறேன். காரணம், நகரப் பகுதிகளில் இருக்கும் சிறுவர்களும், சிறுமியர்களும் ஆரம்பக் கல்வி என்ற நிலையை அவர்கள் வீட்டிலேயே தாய் தகப்பனார்களினாலேயே சொல்லிக்கொடுக்கப்பட்டு அவர்கள் தெரிந்துக்கொள்ளும் நிலையில் இருக்கிறார்கள். ஆனால் கிராமப் பகுதிகளில் தாய் தகப்பன்மார்களுக்கே 100-க்கு 90 பேர்களுக்குக் கல்வி இல்லாமையினால் ஆரம்பக் கல்விக்காகச் செலவிடப்படும் பணம் முழுதும் அனேகமாக கிராமப் பகுதிகளில் வாழும் சிறுவர் சிறுமியர்களுக்காகவே தான் பயன்படும் என்கிற நிலைமையை ஒட்டி நான் இதை முழு மனதுடன் வரவேற்கின்றேன்.

அது மாத்திரமல்லாமல், சென்ற 1962–63-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் ஆரம்பக் கல்விக்காக உள்ள பள்ளிகள் 29,010-ஆகவும், அவற்றிலே பயில்கின்ற, சிறுவர், சிறுமியர்களின் எண்ணிக்கை 41·8 லட்சமாகவும் உயர்ந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது மனம் மிகவும் ஆனந்தக் கடலிலே திளைக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

" தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள்வது "

என்ற குறளை நாம் படித்திருக்கிறோம். அதாவது தவம் செய்வதற்குக் கூட ஒரு தவம் வேண்டும். இல்லையென்றால், எல்லோருக்குமே அது பொருந்தாது என்பது அதனுடைய கருத்தாகும். அதனை ஒத்துத்தான் தமிழ்நாடு சர்க்காரும், அந்தச் சர்க்காரினுடைய கல்வி அமைச்சராக இருக்கும் கனம் திரு. பக்தவத்சலம் அவர்களும், கல்வி இயக்குனரும்,



கல்வி இலாகாவினரும் பெரிய தவம் செய்திருக்க வேண்டும். இந்த அறிவுப் பணியைச் செய்யக்கூடிய ஒரு வாய்ப்பு அவர்களுக்குக் கிடைத்ததைப் பற்றி நான் முழு மனதோடு பாராட்டுகின்றேன்.

தவம் மட்டுமல்ல. சேக்கிழார் சொல்வார்—

" கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ "

என்று சொல்லி " சிவன் அருளோ " என்றும் கூடச் சொல்வார். (ஒரு கனம் அங்கத்தினர் குறுக்கீடு) பூராப் பாட்டும் வேண்டாமென்று விட்டுவிட்டேன்.

" பொறுப்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ
சிவன் அருளோ "

என்று கூறுவார். அதைப் போல இந்த வாய்ப்புப் பெற்றுள்ள சர்க்காரும், கல்வி அமைச்சர் அவர்களும், இலாகாவினரும் புண்ணியம் தான் செய்திருக்கவேண்டும். காரணம் என்னவென்றால் 90 சத விகிதத்தினர் கல்வி அறிவில்லாதிருந்த நிலைமையில் தான் நம் நாடு சுதந்திரம் அடைந்தது என்பது யாவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு நிலைமையாகும்.

அந்த நிலைமையில் சாதாரணமாக ஒருவனுக்கு உணவு அறுசுவை உண்டி கிடைக்கலாம்.

" அறுசுவை உண்டி அமர்ந்து இல்லாள் ஊட்ட " என்ற வளமுடையவனாக இருக்கலாம். அப்படியே கம்பர் சொல்வது போல,

" திங்களும் கரிது என்ற வெண்மை தீற்றிய
சங்க வெண் சுதையுடைத் தவள மாளிகை "

கட்டிக் கொண்டிருக்கலாம். உடுப்பதற்கு நல்ல வெண்பட்டுத் துகில்பல உடையவராக இருக்கலாம்.

இப்படி ஒரு மனிதன் தன் வாழ்நாளில் பெறுகிற ஆடை, அணி, இல்லம், இல்லாள், அறுசுவை உண்டி ஆகிய எல்லாம் நிரம்பப் பெற்றிருந்தாலும் அவை மட்டும் அவன் வாழ்க்கையில் நிறைவை உண்டு பண்ண முடியாது. வாழ்க்கை என்றால் ஒரு குறிக்கோள், ஒரு லட்சியம் வேண்டும். அறிவைப் பெறுவதே அந்த லட்சியமாகும். இதைத்தான் குமரகுருபரர்

" அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை "

என்று சொன்னார். அதற்கொப்ப இந் நாட்டு மக்களுக்கு அறிவைக் கொளுத்தும் புண்ணிய காரியத்தை மேற்கொண்டிருக்கின்ற நம் அரசாங்கத்தின் லட்சியத்தையும் உறுதியையும் கண்டு நாம் பெருமைப்படலாம். கனம் கல்வி அமைச்சர் அவர்களும், கல்வி இலாகா அதிகாரிகளும், கல்வி இலாகா இயக்குனர் அவர்களும் பெருமைப்படலாம்.

அடுத்த கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டத்தைக் கொண்டுவந்து ஆறு வயது முதல் 11 வயது வரை உள்ள மாணவர்கள் அத்தனை பேர்களுக்கும் ஆரம்பக் கல்வி கொடுப்பது என்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருப்பது இந்த அரசாங்கத்தின் மகத்தான பணியாகும். நம்முடைய அடுத்த தலைக்கட்டு—எங்கள் பக்கத்தில் அடுத்த ஜெனரேஷன் என்பதற்குத் தலைக்கட்டு என்பார்கள்—நிச்சயமாக நம்மிடையே 50 அல்லது 60 சத விகிதம் படித்தவர்கள் இருக்கிறார்கள் என்று பெருமைப்படுவதற்கு இது வழிகோலுவதாகும். இத்தகைய அறிவு வளர்ச்சிப் பணியைத் தவிர மேலான வேறு நல்ல பணியே கிடையாது. இந்தச் சீரிய பணியை மேற்கொண்டு திறம்படப் பணியாற்றி வருகிற தமிழ்நாட்டு சர்க்காரை நான் பாராட்டி இந்தச் சந்தர்ப்பத்தில் இதோடு அமைகிறேன். மேற்கொண்டு கல்விக் கொள்கையைப் பற்றிய விவாதம் இந்தச் சபையில் வரும்போது பேசலாம் என்று என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

நானும் அதைப்பற்றி இந்த அரசாங்கத்தைக் கொஞ்சம் யோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்திற்கு அதில் உறுதியான ஒருகொள்கை கிடையாதா என்று கேள்வியாகவே கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு வட்டார மொழிகள் கல்லூரிகளில் போதனு மொழியாக ஆக்கப்படவேண்டும் என்பது முடிவாகிவிட்ட ஒரு விஷயம். அதிலே விவாதமே இல்லை. ஆட்சி மொழிக் கமிஷன் சரி இன்னும் யூனிவர்ஸிடி கிராண்டு கமிஷனும்சரி விவாதத்திற்கு இடமில்லாதபடி அந்தக் கொள்கையை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். மத்தியக் கல்வி அமைச்சர் ஸ்ரீமாலி அவர்களும் இந்த அரசாங்கத்தின் முன்னாள் கல்வி அமைச்சராக இருந்த திரு. சுப்பிரமணியம் அவர்களும் இந்நாள் கல்வி அமைச்சர்கள் அவர்களும் ஒத்துக்கொண்டுள்ளார்கள். தமிழிலேயே பாடபோதனை அளிக்கப்படவேண்டும் என்கிற கொள்கையை இந்த மன்றம் 1946-ம் வருஷத்திலேயே முடிவு செய்திருக்கிறது. திரு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் அப்போது கல்வி மந்திரியாக இருந்தார். அத்திட்டப்படி கோவை முதலிய மூன்று கல்லூரிகளில் தமிழிலேயே பாடபோதனைப் அளிக்கும் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

அதற்கு பிறகு திரு. கனம் சுப்பிரமணியம் அவர்கள் இந்த அரசாங்கத்தின் கல்வி மந்திரியாக இருந்தபோது கல்லூரிகளில் போதனு மொழியாகத் தமிழை ஆக்குவதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த மாமன்றத்தின் ஒப்புதலைப் பெறுவதற்கு இந்த அரசாங்கத்தாலேயே தயாரிக்கப்பட்ட ஒரு வெள்ளை அறிக்கையின் மீது இந்த மன்றம் விவாதித்திருக்கிறது. அந்த வெள்ளை அறிக்கையில் அப்போதே திட்டவட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

"The order issued by Government in April 1959 and now under implementation marks the beginning of a change-over, the necessity for which has been accepted by all academic authorities of India for over two decades. The actual terms of the order were settled, not only after detailed consultation with the Vice-Chancellors of the two Universities in this State but also with their assent. The Government hope that this memorandum will set at rest the doubts that have been expressed about the wisdom of their policy and that the whole-hearted co-operation of the Universities and aided colleges will be vouch safed to them in its implementation."

என்று சொல்லப்பட்டிருக்கும் விஷயத்தோடு இன்னொரு இடத்தில் சொல்லப்பட்டிருக்கிற வாசகங்களை கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

1959-ம் ஆண்டு போதனுமொழி பற்றிய சர்க்கார் உத்தரவில்

"For the order to commence effectively during the year 1963–64 all necessary preparations will have to be completed before the year 1962–63."

என்றும் இருக்கிறது. நான் ஒன்றே ஒன்றை அமைச்சர் அவர்களிடம் கேட்கிறேன். அன்றைக்கு ஆளும் கட்சியாக இருந்தது தானே இன்றைக்கும் ஆளும் கட்சியாக இருக்கிறது? அமைச்சர் அவை மாறலாம். கல்வி அமைச்சர் வேறாக இருக்கலாம். ஆயினும் அன்றைக்கு எந்தக் கட்சி நிர்வாகத்தில் இருந்ததோ, அதே காங்கிரஸ் கட்சி தானே இன்றைக்கும் நிர்வாகத்தில் இருக்கிறது? அன்றைக்கு எந்தக் கட்சி அமைச்சர் கல்வி இலாகா பொறுப்பை வகித்து வந்ததோ, அதே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவர் தானே இன்றைக்கும் கல்வி இலாகா அமைச்சராகப் பணியாற்றி வருகிறார்? அப்படியிருக்க இந்த மாமன்றம் முடிவு செய்து சம்மதம் தெரிவித்த விவகாரத்தை மாற்ற உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது? கோவை கல்லூரியிலே தமிழ் போதனு மொழியாக அன்றைக்கு ஏற்படுத்தப்பட்டபோது யாரும் அது ஒரு பரிட்சார்த்த திட்டம் தான் அதன் முடிவைப் பொறுத்துதான் இதர கல்லூரிகளில் தமிழ்





போதனுமொழியாக்கப் படுகிற கருத்து பரிசீலனை செய்யப்படும் என்று சொல்லவில்லை. அன்றைக்குத் திட்டவட்டமாக கோவைக் கல்லூரியில் தமிழை போதனு மொழியாக ஆக்கியபோது இதே அடிப்படையில் நம் மாநிலத்தில் உள்ள கல்லூரிகள் யாவும் 1963-ஆம் ஆண்டு தமிழில் போதனை அளிக்கும் கல்லூரிகளாக மாற்றப்படும் என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டது. அந்த வெள்ளை அறிக்கையிலேயே

"It is essential to treat the course in the Pilot College as the model of a definite pattern which is proposed to be followed throughout the State within a specified period of time and not as an experimental course, which may or may not lead to State-wide change-over in the foreseable future."

என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி முடிந்து போன ஒரு விவகாரத்தை இன்றைக்குப் பல்லாயிரக் கணக்கான மாணவர்களும் இந்த நாட்டின் எதிர்கால வாழ்வும் பாதிக்கப்படுகிற அளவுக்குக் கோவைக் கல்லூரியில் பரீட்சார்த்தமாகத்தான் மேற்கொண்டோம் என்றும் இத் திட்டம் எல்லா கல்லூரிகளிலும் அமுலாக்கப்படாது என்றும் சொல்லக் காரணம் என்ன?

தாய் மொழியிலேயே போதிக்க முடியாது என்று ஒரேயடியாகத் தாய் மொழியை வெறுக்கிறவர்களைப் பற்றிக் கவலை இல்லை. அவர்கள் கருத்து எனக்கு மாறாக இருந்தாலும் கொள்கை நேர்மைக்காக நான் பாராட்டுகிறேன். அவர்களால் நம்முடைய தாய்மொழிக்குப் பெரும் தீங்கு ஒன்றும் ஏற்பட்டுவிடாது. ஆனால் "என்னைவிடத் தமிழில் பற்றுள்ளவர்கள் இருக்க முடியாது," என்று சொல்லிக் கொண்டு, மிக்கத் தமிழ் மொழி பற்றுள்ளவர்களைப்போல தமிழ் மொழிக்கே தீங்கு விளைக்கின்ற பாவனை செய்பவர்கள்தான், தமிழ் மொழிக்கு மிக்க ஆபத்தானவர்கள், தமிழ் மொழியின் பகைவர்கள், வைரிகள், எதிரிகள் என்று வலியுறுத்திச் சொல்கிறேன்.

தமிழ் மொழியிலேயே போதனை நடக்கும்படி செய்வது என்றால் பாடப் புத்தகங்கள் கிடையாது என்று வாதம் செல்வார்கள். 1946-ம் வருஷத்தில் கல்லூரிகளில் தமிழ் மொழியிலேயே போதனை நடைபெறவேண்டுமென்ற திட்டத்தைக் கொண்டுவந்தபோது புத்தகங்கள் இருந்தனவா? அப்புறம் புத்தகங்களே அத்துறையில் உண்டாகவில்லையா? இவை எல்லாம் எங்களுக்குத் தெரியாதா? இன்னமும் சொல்லப் போனால் கல்லூரி பாட புத்தகங்களைத் தமிழில் கொண்டு வருவதற்கான ஒரு திட்டத்தை வகுத்துக்கொண்டு பல புத்தகங்களை நீங்களே கொண்டு வந்திருக்கிறீர்களே? அந்தப் புத்தகங்கள் ஒன்றும் பயன்படாவா? அவை பயன்படாது என்றால் பயன்படக் கூடிய புத்தகங்களை ஏன் வெளியிட தக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படவில்லை? அதற்கு யார் பொறுப்பாளி? இவ்வளவு நாளும் மக்களின் கோடிக் கணக்கான வரிப் பணத்தையும் இளைஞர்களின் அறிவு முன்னேற்றத்தையும் உங்கள் பொழுது போக்கு விளையாட்டுக் கருவியாக விரயமாக்கியுள்ளீர்கள் என்றுதானே பொருள்?

இன்றைய தினம் உயர்நிலைப் பள்ளியில் தமிழ் இருக்கிறது, கல்லூரி பி.ஏ. வகுப்புகளில் தமிழ் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால், பி.யு.ஸி. யில் ஆங்கிலம் என்று ஏற்படுத்துவது ஒன்றுக்கொன்று தொடர்பற்றதாக முரண்பட்டதாக இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

உயர்நிலைப் பள்ளியில் தமிழில் பாட போதனை வெற்றிகரமாக நடைபெறும்போது, கல்லூரிக் கட்டத்தில் அதை அமுலாக்க முடியாது என்று சொன்னால் என்ன பொருள்? அன்றைக்கு உங்களுடைய கட்சியைச் சேர்ந்த அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் திட்டவட்டமாக, உறுதியாக 1963 முதல் தமிழில் தான் எல்லா கல்லூரிகளிலும் பாடபோதனை

மணிகளுக்குப் பலவிதமான பொறுப்புகள் உண்டு. அவர்களுக்கு வீட்டு பொறுப்பு மிகவும் அதிகமாக இருக்கிறது. எல்லாரையும் பெண்மணிகளாக நியமிக்க வேண்டுமென்பதை நான் அதிகமாக ஆதரிக்க முடியாது. அதனால் கல்வித் தரம் நிச்சயமாகக் குன்ற இடம் ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

குமரி மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் ஆசிரியர்களுடைய நிலைமை மோசமாகத்தான் இருக்கிறது. புதுத் திட்டப்படி ஆசிரியர்கள் இரண்டு வருஷம் பயிற்சி பெற வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அங்கு இருக்கிற ஆசிரியர்கள் அவ்வளவு பேரும் பப்ளிக் சர்வீஸ் கமிஷனால் ரெக்ரூட் செய்யப்பட்டவர்கள்தான். அவர்களுக்கு இரண்டு வருஷப் பயிற்சி வேண்டியதில்லை. ஒரு வருடப் பயிற்சி காலத்தில் இரண்டு வருடப் பயிற்சியிலுள்ள சிலபஸ் (Sylabus) முழுவதும் கற்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, சம்பள விஷயத்தில் வேற்றுமையிருக்கக் கூடாதென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் உதவி சபாநாயகர் :** தலைவர் நிற்கும்போது கனம் அங்கத்தினர் அவர்கள் உட்கார்ந்து விட வேண்டும். கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது, விவாதத்தில் பேசிய அங்கத்தினர்களைப் பற்றி 'நபர்கள்' என்று குறிப்பிட்டார்கள். 'நபர்' என்று குறிப்பிடுவது அவ்வளவு நல்லதல்ல. பார்லிமெண்டரி சம்பிரதாயத்தை யொட்டித் தங்களுடைய கட்சி அங்கத்தினர்களைக் குறிப்பிடும்போது 'கனம் தோழர்' என்று சொல்வார்கள். எதிர்க்கட்சி அங்கத்தினர்களைத்; 'கனம் அங்கத்தினர்கள்' என்று சொல்வது நல்லது. (குறுக்கீடு—எதிர்க்கட்சித் தோழர்கள் என்று சொல்லலாம்.) எதிர்க்கட்சித் தோழர்கள் என்று சொன்னால் மிகவும் நல்லது. அதனால் சுமுகமான நிலைமை இருக்கும். இந்த முறையை கனம் அங்கத்தினர்கள் கையாளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் கல்வி மானியத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். எனக்கு முன் பேசிய கனம் காங்கிரஸ் அங்கத்தினர் அவர்கள் 'பெண்களைப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களாகப் போட்டால் கல்வியின் தரம் குறைந்துவிடும்' என்று சொன்னார்கள். அதை நான் மிகவும் வன்மையாக எதிர்க்கிறேன். ஒரு குழந்தை நல்ல அறிவு பெற்று முன்னணியிலே நிற்க வேண்டுமென்றால், அந்தப் பொறுப்பு தாயின் கையிலே—தாய்மார்களின் கையிலேதான் இருக்கவேண்டுமென்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் உணர்ந்து பேசவேண்டும்.

எதிர்க்கட்சி அங்கத்தினர், உழவர்களுடைய குழந்தைகளுக்குத் துரோகம் இழைக்கும் வகையில் பேசினார்கள். உழவர்களுடைய குழந்தைகள் அந்த அங்கத்தினருக்கு என்ன கெடுதல் செய்தார்கள் என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. உழவர்களுடைய குழந்தைகள் மாத்திரந்தான் தமிழ் படிக்க வேண்டுமா? அவர்கள் கல்வியறிவு பெறவேண்டாமா? எதிர்காலச் சந்ததியினர் உலக அறிவு பெறவேண்டுமென்று சொன்னால், அவர்கள் மூன்றாவது வகுப்பிலிருந்தே ஆங்கிலத்தைப் படிக்கத்தான் வேண்டும். அதனால் தமிழை முழுக்க ஒழித்து விட வேண்டுமென்ற நோக்கத்துடன் நான் சொல்லவில்லை.

ஆங்காங்கு அரசாங்க அலுவல்கள் எல்லாம் தமிழிலே நடந்து கொண்டிருக்கின்றன. சட்டசபை அலுவல்கள் அத்தனையும் தமிழில் நடந்து கொண்டிருக்கிறது. தமிழில் நல்ல நல்ல புத்தகங்கள் வெளியிடப்பட்டு கல்லூரிகளில் யார்யார் தமிழில் படிக்க விரும்புகிறார்களோ அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் அளித்திருக்கும்போது தமிழுக்கு துரோகம் செய்து விட்டோம் என்ற அடிப்படையில் பேசுவது இந்த



நாட்டுக்கும், உலக அறிவு பெறுவதற்கும் நல்லதல்ல. அதற்கு முன்பு பேசிய அங்கத்தினர் கூடச் சொன்னார், தேசிய பாதுகாப்பு நிதிக்காக டயரக்டர், அமைச்சர்கள் எல்லாம் செல்லும்போது குழந்தைகளிடம் கட்டாயப்படுத்தி பணம் வசூல் செய்கிறார்கள் என்ற பெரிய குற்றச்சாட்டைச் சாட்டினார்கள். அமைச்சர்கள் செல்லும்போது குழந்தைகளை வரிசையாக நிறுத்தி விழாபோல் கொண்டாடக் கூடாது, குழந்தைகளை ஏன் வெளியில் நிறுத்தி வைக்கவேண்டும்? அவர்கள் ஏன் வரவேற்பில் கலந்து கொள்ள வேண்டும்? பள்ளியிலேயே அவர்கள் இருக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னார்கள். ஜனநாயகத்தில் அமைச்சர்களை குழந்தைகள் அடையாளம் தெரிந்துகொள்ள வேண்டும். இத்தகைய அறிமுகம் ஏற்படுவதால் குழந்தைகள் எதிர்காலத்தில் நாமும் பொதுவாழ்வில் ஈடுபட வேண்டும், நாமும் நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற உணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் இந்த அறிமுகம் இருக்கிறதே தவிர காங்கிரஸ் கட்சியை வளர்க்கும் அளவில் இல்லை. இன்னொரு அங்கத்தினர், ஜாதி மத பாகுபாடு இல்லாமல் இருக்கச் சீருடை வழங்க வேண்டுமென்று கூறினார். பெற்றோர்கள் சீருடை வழங்கி ஆடம்பரம் செய்யச் சொல்கிறீர்களே இது யார் பணம் என்று கேட்டார்கள். இங்கு நாம் இருக்கிறோம், அரசாங்க அலுவல்களைக் கவனிக்கிறோம். பல திட்டங்கள் போடுகிறோம். அது யார் பணம்? எதிர்க்கட்சியின் பணமோ அல்லது ஆளும் கட்சியின் பணமோ அல்ல. எல்லாம் பொது மக்கள் பணம்தான். சிலர் வாங்கிக் கொடுக்கிறார்கள், ஏழைகளாக இருப்பவர்கள் வாங்கிக் கொடுக்க முடிவதில்லை. அவர்களுக்கெல்லாம் ஆங்காங்குள்ள அங்கத்தினர்கள், பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர்கள் பெரியோர்களை அணுகி அந்தக் குழந்தைகளுக்கு உடை தைத்துக் கொடுங்கள் என்று சொல்லி வாங்கிக் கொடுக்கிறார்கள். நானும் வாங்கிக் கொடுத்திருக்கிறேன். ஆகவே கட்டாயப்படுத்துகிறார்கள் என்று சொல்வது நாட்டிற்கும், எதிர்காலச் சந்ததியினருக்கும் நல்லதல்ல என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். சிலர் மதிய உணவுத் திட்டத்தையே எடுத்து விடலாம் என்றார்கள். பட்டிக்காட்டில் ஒரு பழமொழி சொல்வார்கள். உள்ளதும் போச்சு நொள்ளக் கண்ணா, அதுவும் போச்சு அரோகரா என்று. இன்று 41·8 லட்சம் குழந்தைகள் படிக்கிறார்கள். அதற்கு மூலகாரணம் இந்த மதிய உணவுத் திட்டம்தான். அதில் சில குறைபாடுகள் இருக்கலாம். அக் குறைபாடுகளை எப்படி நிவர்த்திப்பது என்று ஆலோசனை கூறினால் நன்றாகயிருக்கும். ஏழைகளின் வயிற்றில், மண்ணை அடிக்க இத் திட்டத்தையே எடுத்து விடுங்கள் என்று கூறுவது ஏழைகளுக்குச் செய்ய கூடிய நல்ல காரியம் அல்ல. இன்று கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையைப் பார்த்தால் உள்ளமெல்லாம் பூரிப்படைகிறது. இன்னும் சில ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்படுமானால் இந்த நாட்டில் எதிர்காலச் சந்ததியினரில் படிக்காதவர்களே இல்லை என்ற நிலையை ஏற்படுத்தலாம். அப்படிக் கல்வி அறிவைப் பரப்ப அரசாங்கம் கோடி கணக்கில் பணத்தை அள்ளி அள்ளி வழங்கி வருகிறது, அதற்காக அமைச்சரவையையும் இது சம்பந்தப்பட்ட இலாகாவினரையும் பாராட்டாமல் இருக்க முடியாது. பின்னர் ஹரிஜன நல இலாகாவால் ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. மாணவர்கள் அதற்கு கையெழுத்து வாங்கும் பரிதாப நிலையை மாற்ற வேண்டும். யாரிடத்திலுமே பணம் வாங்காது எல்லோரும் இலவசமாக படிக்கலாம் என்ற நிலை ஏற்படுத்துவதோடு பணக்காரத் தாய் தந்தையருக்குக் கல்வி வரி என்று போட்டு வாங்கலாமே தவிர இந்தக் கையெழுத்து வாங்கும் முறையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. காஞ்சி மணிமொழியார் :** மாமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கல்வி இலாகா மான்யத்தின்மீது எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கல்விப் பணி மிகச் சிறந்தது. ஈடு இணையற்றது. அதன் சிறப்புக்களைப்பற்றி யெல்லாம் எனக்கு முன்னால் பேசிய ஈரோடு உறுப்பினர் அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். ஒரு நாட்டின் முன்னேற்றமும் வளர்ச்சியும் கல்வியின் தரமான முன்னேற்றத்தில்தான் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

more and more technical schools. I would request the Hon. the Minister and the authorities to see that after the VIII Standard the pupils should be allowed to take their own courses in any technological study which they desire. No doubt, we have tremendously improved in this direction and already there are a good number of technological institution at Adyar with West German colloboration and in other places. I desire that we should open more and more technological institutions even in Taluk Headquarters and even in villages so that it would enable the children after studying VIII Standard to take up further studies in the technical line.

Sir, in general, I should also say that the pay given to the teaching staff particularly in the Secondary and Primary Schools compared with other States is very low. I had occasion to compare their pay with the other States. I feel that the pay is little less. No doubt, the Government are spending very heavy sum for Education. At the same time, I request them to reconsider the pay scales of the schoolmasters and raise them suitably. Thank you, Sir.

* SRI C. CHIRANJEEVULU NAIDU : Mr. Deputy Speaker, Sir, under the Education Demand a very large sum has been provided and during Third Five-Year Plan compulsory primary education will go a long way in reducing the illiteracy and there may not be any necessity for adult education centres. We hope fervently that illiteracy among our children of the age-group 6 to 11 in the Third Five-Year Plan will not be there when they are adults.

Regarding the aided elementary schools, with due regards to those who are running them properly, mostly the aided elementary schools are not working satisfactorily. I suggest that they should be taken out of their hands and entrusted to the Panchayat Union Councils excepting the Missionaries which are running smoothly. This would pave the way for better administration and there would be improvement in the level of education.

Regarding the Local Library Authority, cess is being collected by the Panchayats and is handed over to the Local Library Authority. Some libraries are opened in certain towns by the Local Library Authority with a population of 5,000 and that fund goes to certain classes of libraries and does not reach the rural parts. I would suggest that the grant may be made to the Panchayats which are running libraries and see that the libraries are run effectively. I also suggest that some fund should be allotted to the Information centres run by the Panchayat Union Councils. Steps also should be taken to see that the libraries are properly maintained and grants should be sanctioned to the Panchayats. Now, there are certain defects in making grants. This may kindly be looked into.

Regarding the Deputy Inspector of Schools working in the taluk level, I see there is no co-ordination between the Extension Officer, Education and the Deputy Inspector of Schools. Deputy



Inspector feels that he alone knows about the education and its activities. This opinion should be changed as it is bad. Several people feel that there is no proper co-ordination and co operation, at that level. The Deputy Inspector of Schools should be put under the control of Panchayat Union Councils and should be asked to work under it. In the matter of transfers and other appointments of the Panchayat Union Council teachers, the Deputy Inspector of Schools must be consulted. The whole procedure should be changed as it is not properly working.

Regarding Secondary education, I would like to say that these may kindly be brought under the District Development Council under the overall control of the Collector. The District Educational Officer may be made the Personal Assistant to supervise the work.

Regarding the instruction in High Schools the Government may revert to the old system of classes and forms. In Colleges also the old system of Intermediate may be introduced.

Regarding the syllabus and other things, this may be supplied to the respective schools, sufficiently in advance. These syllabuses should be properly communicated and there should be no quarrel in the social studies and this may be split into Geography and History.

Regarding the text-books, I would request the Government to supply to the Panchayat Union Councils and see that it is not given to private agencies for sale. I also suggest that the cost of such books may be adjusted against the grants.

With regard to the transferred teachers, I desire to say one word. First of all, they are grateful to the Hon. the Minister for Finance and Education for having integrated their service and granted them the revised pay scales of Madras. In fixing the scales, the Commissioners do not follow a uniform policy and do not implement the Government Order in its spirit. They are fixing the pay in different ways and no service weightage considerations is given and increments due to them are not given. The teachers interests should be safeguarded and I request the Government to issue specific instructions with regard to weightage, increment and seniority in fixing their pay scales.

The other day, the Hon. Minister for Finance made a statement on a 'call attention notice' that the secondary grade teachers who have put in one year's training in Andhra Pradesh and who have been transferred to this State would be eligible for secondary grade status and that their service would be taken into consideration when they complete seven years service. If it is that they would be eligible only after they complete seven years of service, this would rather hit hard on them. In the Alterations of Boundaries Act there is a clear provision that nothing should be done which is disadvantageous to the transferred personnel and their service. This is a matter which is very, very seriously affecting most of the teachers. For no fault of theirs, the Government cannot reduce their ranks or pay. Now, when a person who has passed the

தானது ஹிந்தி படிக்கிற மாணவர்களை ஒரு விதத்திலும் உற்சாகப்படுத்தாது என்று இந்த இடத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஹிந்தி பரீட்சை எழுதும்படி இல்லாவிட்டால், ஹிந்தி சொல்லிக் கொடுக்கிற ஆசிரியருக்கு மதிப்பு உண்டா, ஹிந்திக்குத்தான் எதாவது மதிப்பு உண்டா, அல்லது ஹிந்தி சொல்லிக் கொடுக்கிற பள்ளிக்குத்தான் எதாவது மதிப்பு உண்டா? ஆகவே, ஹிந்திப் பரீட்சையை எடுத்துவிடுவது வரும் காலத்துக்கு நன்மை பயக்காது என்று இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பரீட்சை யில்லாத காரணத்தால் மாணவர்கள் ஹிந்தி படிக்காமலேயே இருந்து விடுகிறார்கள்.

அடுத்த ஜூனிலிருந்து 3-ம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் போதிக்கப்படும் என்ற சூழ்நிலையை சமீபம் அமைச்சர் அவர்கள் உருவாக்கியதற்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு நிற்காமல், கிரமமாக அடுத்த வருஷத்தில் 2-வது வகுப்பிலிருந்து கற்றுக் கொடுக்கப் படும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டும். அதற்கு அடுத்த வருஷத்தில் முதல் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிக்க உத்திரவு பிறப் பிக்க வேண்டும் என்று மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள ஆசைப்படு கிறேன்.

தனியார் துறையில் நடத்துகிற ஆரம்பப் பள்ளிகளுக்கு நிர்வாகச் செலவு மானியம் மிகக் குறைவாகக் கொடுக்கப்படுகிறது. பதினைந்து சத வீதம் தான் கொடுக்கப்படுகிறது. அது போதாமல் இருக்கிறது. ஆகை யால் குறைந்த பட்சம் 25 சத விகிதமாவது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இல்லை என்று சொன்னால் ஆரம்பப் பள்ளி களில் ஒரு ப்யூன் அல்லது ஒரு அட்டெண்டரையாவது நியமித்துக் கொள்ள ஒரு தனிச் சலுகை கொடுத்து அதற்கு மானியமும் கொடுக்க வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு ப்ராவிடெண்ட் ஃபண்ட் என்று நாம் ஏற்படுத்தியிருக் கிறோம். ஆனால் தனியார் துறையில் இருக்கிற சில ஆசிரியர்களுக்கு மானேஜ்மெண்டாக இருந்தால் பாதித் தொகையை அவர்கள் போட்டு விடுகிறார்கள். அப்படி இல்லாத இடத்தில் அங்கு பணியாற்றுகிற ஆசிரியர் களுக்கு ப்ராவிடெண்ட் ஃபண்டில் சேர்த்துக் கொள்ளப்படாத நிலை இருக் கிறது. ஆசிரியர்கள் பாதித் தொகை கொடுக்க முன் வந்தால் ப்ராவி டெண்ட் ஃபண்டில் அவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கல்லூரிகளிலே இந்த வருஷத்திலே எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சை எழுத எல்லோரையும் அனுமதிக்க உத்தரவு போட்டோ அல்லது அவர்கள் [illegible] பட்டோ ஏற்பாடு செய்திருக்கிறார்கள் சர்க்கார். அவர்கள் எல்லோரும் எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்து வந்து விட்டால் படிப்பதற்கு பி.யு.ஸி. வகுப்பு எங்கெங்கு இருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண் டும். அவர்களுக்கு வேண்டிய இடங்கள் இல்லாமல் இருக்கிறது என்பதை யும் நாம் நினைவு படுத்திக் கொள்ள வேண்டும். ஆகவே, தனிப்பட்டவர் கள் பி.யூ.ஸி. வகுப்பு நடத்த முன் வந்தால் அவர்களுக்கும் அனுமதி கொடுத்து, வருகின்ற மாணவர்களுக்கெல்லாம் பி.யூ.ஸி. படிப்பதற்கு ஏற்ற சூழ்நிலையை உண்டாக்கித் தரவேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

எஸ்.எஸ்.எல்.ஸி. வரையில் தமிழ் மூலமாகப் படித்து பி.யூ.ஸி. வந்தால் ஒரேயடியாக ஆங்கிலத்தில் படிக்க அவர்களால் முடியவில்லை. ஆகவே, சம்மர் வெகேஷன் கோர்ஸ் என்று சொல்லி, ஆறு வார கோர்ஸில் பயிற்சி கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதை யும் எல்லா இடங்களிலும் ஏற்பாடு செய்து மாணவர்கள் அனைவரும் ஆங்கில மொழியிலே நன்றாகப் பயிற்சி பெற்று பி.யூ.ஸி. சென்றால் நல்ல முறையில் அவர்கள் ஆங்கிலம் மூலமாகப் படிப்பதற்கு வேண்டிய வசதிகளைப் பெறுவதற்கு மிகவும் திட்டவட்டமான முறையில் அதைக் கொண்டு வந்து மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மெடிக்கல் காலேஜ், என்ஜினீயரிங் காலேஜ் ஆகியவைகளில் எவ்வளவு கஷ்டம் இருக்கிறதோ, அதே போல எம்.ஏ., எம்.எஸ்.ஸி. படிப்புக்கு இடம் கிடைப்பதிலும் கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே அம்மாதிரியான 11-30 a.m. போஸ்ட் ஃக்ராஜுவேட் கோர்ஸுகளில் அதிக ஸீட்டுகள் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்போது தேசீய கீதம் பள்ளிகளில் பாடப்படுகிறது. அதில் இரண்டு வரியை மட்டும் பாடினால் போதும் என்று உத்திரவு அனுப்பியிருப்பதாக ஒரு சிலர் என்னிடம் கூறினார்கள். அது அவ்வளவு நல்லதா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். தேசீய கீதம் பாடுவதற்கு 2 நிமிஷம் 3 நிமிஷம் அதிகமாக ஆனாலும் தேசத்திற்கு மதிப்பு கொடுக் கும் வகையில் முழு கீதத்தையும் பாடவேண்டுமென்று ஒரு உத்திரவைப் போடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடிக்கடி பாடதிட்டத்தை மாற்றுவதால் கல்வித் துறையில் மிகவும் பாதகங்கள் ஏற்படுகின்றன. அதை உணர்ந்து அமைச்சர் அவர்கள் ஒரு திட்டவட்டமான ஸிலபஸை ஏற்படுத்தி, அடிக்கடி மாற்றாமல் இருக்கும் சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* SRI K. S. G. HAJA SHERIFF : Mr. Deputy Speaker, Sir, I rise to welcome the Demand moved by the Hon. the Minister for Education. Let me first congratulate heartily the Hon. the Minister and the officers of this department for the excellent record of work and also the good services which they are rendering to the State. But for the farsighted and very intensive work, I do not think the number of 29,000 Aided Elementary Schools would have been opened thus enabling a little more than 41 million children to study. At the same time, Sir, I should say that the number of Secondary Schools opened so far is 1,700 and odd. It seems to be little less. I would request the Government that more number of high schools should be opened wherever there are a number of small villages all within a radius of about three or four miles, one high school should be opened.

Sir, we are in a developing economy. We want to raise our *per capita* income. We want to raise our national production. At the same time we also want to get into touch with other parts of the world commercially, industrially and in all manner and for this purpose if at all there is any one common language which is spoken throughout the world it is English. But I am extremely sorry to find that some hon. Members in the Opposition are decrying that language. There is no doubt that we should give the topmost priority for our national language or our regional language. At the same time when we have decided to get into touch with other parts of the world, it is but right that we should see that this particular language with which we are intimately connected for the last about 200 years should also be taught well. So, I congratulate the Hon. the Minister for making a statement that from this year English will be taught from the III Standard itself. request the Government to take effective steps so that our children may have intimate knowledge in this language. I find that very small number of diversified courses of studies are being opened. Particularly when we are industrially forging ahead, we require

S.S.L.C. examination gets the secondary grade pay as untrained assistant, there is no justification whatsoever to reduce the pay of those teachers who have put in one year's training. Therefore, I request the Hon. Minister to see that at least in the case of teachers who were appointed on the strength of the certificates prior to 1st April 1960, their service may be kept on a par with the secondary grade teachers. With these words, I conclude my speech. Thank you, Sir.

*** திருமதி. சி. குழந்தையம்மாள் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய கல்வி நிதி அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நாடு முழுவதும் எஸ்.எஸ்.எல்.சி. வகுப்பில் படிக்கிற மாணவர்களுக்கு செலெக்‌ஷன் பரீட்சையானது வேண்டாம் என்று இருப்பதை மாகாணம் முழுவதும் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதை இந்த இடத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, பி.யு.சி., வகுப்பில் இன்றைக்கு இருக்கக் கூடிய பாடத் திட்டமானது அதாவது, இங்கிலிஷ், பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, சயன்சு போன்ற பாடங்கள் மிகவும் அதிகமாக இருக்கிறது. குறித்த காலத்தில் அந்தப் பாடங்களை கற்பிக்க ஆசிரியர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அந்த சிலபஸை மாற்றி அமைத்தோ அல்லது குறைந்த பாடங்களை வைக்கவோ வேண்டிய ஏற்பாடுகளை இந்த அமைச்சரவை செய்ய வேண்டுமென்று இந்த இடத்தில் வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு எஸ்.எஸ்.எல்.சி. வரைக்கும் தமிழ் மொழியில் பாடங்களை படித்து வருகிறார்கள். கல்லூரி வகுப்பு வந்தவுடன் ஆங்கிலம் போதனா மொழியாக இருக்கிறது. உடனடியாக தமிழ் மொழியை போதனா மொழியாக ஆக்க வேண்டும். அதிலும், வருகிற ஜூன் மாதம் முதற்கொண்டு தமிழ் போதனா மொழியாக ஆகாத கல்லூரிகளுக்கு மானியம் இல்லை என்று சொல்ல வேண்டும் என்றெல்லாம் எதிர் கட்சி அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அது இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையில் பல கல்லூரிகளில் வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களுக்குப் பாதகமாக இருக்கும் என்பதைச் சுட்டிக்காட்டுவதுடன், நம்முடைய பாரதியார் குறிப்பிட்டிருக்கிறார்—

“ பிற நாட்டு நல்லறிஞர்
சாத்திரங்கள் தமிழ்மொழியிற்
பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய
புது நூல்கள் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும் ”

என்றெல்லாம் சொல்லியிருக்கிறார். அவ்வாறு சாத்திரங்கள் எல்லாம் தமிழ் மொழியில் இருக்க வேண்டும். அந்த அளவுக்கு தமிழ் மொழியில் பயிற்சி அளிக்க வேண்டும். அறிவு வளர்ச்சி ஏற்பட வேண்டும். எந்த அளவில் தமிழில் பயிற்சி பெற வேண்டுமோ அந்த அளவு ஆங்கிலத்திலும் பயிற்சி பெறவேண்டும். தமிழில் மட்டும் பயிற்சி இருந்து விட்டால் போதாது. உலக நாடுகளுடன் ஒத்து வாழ்வதற்கு உலக மொழியாகிய ஆங்கிலத்தையும் கற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. தாய் மொழியாகிய தமிழ் மொழிக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறோமோ அந்த அளவு ஆங்கிலத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை இந்த இடத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். அதற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன். அப்படி தமிழை போதனா மொழியாக ஆக்காவிட்டால் அமைச்சர் தமிழ் துரோகியாக ஆவார் என்றும் குறிப்பிட்டார்கள். தமிழை போதனா மொழியாக வைத்துவிட்டு ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காவிட்டால் அவர்களும் தமிழ் துரோகியாக ஆவார் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வருங்காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் தான் இதற்குக்



காரணம் என்று சொல்லக்கூடிய அளவில் நிலைமை ஏற்படும். தமிழ் மொழிக்கு மட்டும் முக்கியத்தும் கொடுத்துவிட்டு ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காவிட்டால் வருங்காலத்தில் ஏழை விவசாயிகளுடைய குழந்தைகளும் ஆசிரியர்களுடைய குழந்தைகளும் போலீஸ்காரர்களுடைய குழந்தைகளும் களார்க்குகளுடைய குழந்தைகளும் ஹரிஜனக் குழந்தைகளும் ஆங்கிலம் கற்றுக்கொள்வதற்கு வழி இல்லாமல் தமிழை மட்டும் கற்றுக்கொண்டு விட்டு இந்த மாகாணத்தை விட்டு வெளி இடங்களுக்குச் சென்று முன்னேற்றமடையக்கூடிய நிலை ஏற்படாமல் போய் விடும். அவர்களுடைய குழந்தைகள் எல்லாம் இங்கேயே இருக்க வேண்டிய நிலைதான் ஏற்படும். மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளக்கூடிய நிலை அவர்களுக்கு ஏற்படாது போய் விடும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆன் எ பாயின்ட் ஆப் இன்பர்மேஷன், கனம் உப தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் முடிவான கருத்துக்களை கனம் உறுப்பினர் மதியழகன் அவர்கள் தெரிவிக்கவில்லை. அவர், தமிழ் மொழியை பாட மொழியாக ஆக்கப்பட வேண்டும் என்ற ஆர்வத்தில் இத்தகைய தமிழை பாட மொழியாக எல்லா கல்லூரிகளிலும் வைத்தே தீரவேண்டும், அதற்கு முயற்சி எடுக்கப்பட்டது, அப்படி விரைவாக எடுக்கப்பட்ட முயற்சிகள் நிறைவேற்றப்படாததால் அது நிறைவேற்றப்படுவதற்காக மேற்கொண்டு பணிகளை விரைவில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் குறிப்பிட்டாரே தவிர வேறு எந்த மொழியிலும் பயிலக் கூடாது, அதற்கு வாய்ப்பு அளிக்கக் கூடாது என்ற அந்த நிலையைத் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார். திராவிட முன்னேற்ற கழகம் அப்படிப்பட்ட எந்த முடிவையும் எடுக்க வில்லை என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**திருமதி. சி. குழந்தையம்மாள் :** வரும் ஜூன் மாதம் முதற்கொண்டு தமிழ் மொழியைக் கல்லூரிகளில் போதனா மொழியாக வைக்காவிட்டால் மானியம் இல்லை என்று சொல்ல வேண்டும் என்று சொல்லி இருக்கிறார். ஆங்கிலம் உலக மொழியாக போற்றப்படுகிறது. ஆங்கிலத்திற்குச் சமமான பங்கு இருக்க வேண்டும். அதனால் தாய் மொழியை மறக்கக்கூடாது. தமிழ் மொழியில் பயிற்சி கொடுப்பது குறையக்கூடாது. இன்றைக்கு உள்ள நிலைமையைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். கிராமங்களிலும் மாவட்டங்களிலும் இருக்கின்ற கான்வென்ட்களில் போய் பார்க்க வேண்டும். ஆங்கிலத்தில் எவ்வளவு சிலபஸ் வைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அங்கு யாருடைய குழந்தைகள் படிக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். தமிழ் மொழிக்காக வாதாடுகிறார்களே அவர்களுடைய குழந்தைகள் தான் அந்தக் கான்வென்டுகளில் படிக்கின்றனர். பெரிய கான்வென்ட்களில் மாதம் 100 ரூபாய்ச் செலவு செய்து படிக்க வைக்கிறார்கள். அப்படி படிக்க வைக்கக்கூடிய குழந்தைகள் யார் என்றால் ஆசிரியர்களுடைய குழந்தைகள் அல்ல, க்ளார்க்குகளுடைய குழந்தைகள் அல்ல, போலீஸ்காரர்களுடைய குழந்தைகள் அல்ல. தமிழில் ஆர்வம் பெற்றவர்களுடைய குழந்தைகள் தான் அவற்றில் படிக்கின்றனர். குழந்தைகளுடைய அறிவு ஆற்றல் வளர வேண்டும் என்றும், உலக நாடுகளுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அவர்களுடைய குழந்தைகளை கான்வென்டுகளில் படிக்க வைக்கிறார்கள். மற்றவர்களுடன் சம அந்தஸ்து பெறுவதற்குத் தான் அப்படி படிக்க வைக்கிறார்கள். மற்றவர்களுடன் சம பங்கு பெற வேண்டும் என்பதற்காகத்தான் அப்படி படிக்க வைக்கிறார்கள். அதனால் குழந்தைகளுக்கு இரண்டு மூன்று மொழிகளில் பயிற்சி கொடுப்பதில் ஆட்சேபனை இருக்க முடியாது. அதற்கு நமது அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு நம்முடைய சர்க்கார் டி.ஈ.ஓ-க்களை நியமனம் செய்கிறார்கள். அவர்களில் ஒருவராவது பெண்ணாக இல்லை. ஆகவே பெண்களையும் நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நம்முடைய நாட்டின் ஜனத்தொகையில் 100-க்கு 52 பேர்கள் பெண்களாகத் தான் இருக்கிறார்கள். அந்த அளவில் பெண் ஜனத்தொகை உயர்ந்திருக்கிறது.

அத்தகைய கல்வி வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்கிற ஆரம்பக் கல்வி எப்படியிருக்கிறது என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆரம்ப ஆசிரியர்கள் உள்ளத்தில் துயரக்கோடு படாமல், துன்பச் சாயல் படியாமல் இருந்தால்தான் ஆரம்பக் கல்வி பெறுகிற மாணவர்களின் பிஞ்சு உள்ளத்தில் சிறந்த லட்சியமும், உயர்ந்த நோக்கமும், நல்ல அறிவும் பேண்பா பண்பாடும், தன்னம்பிக்கையும் வளர முடியும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வர். ஆனால் இன்றையதினம் இவையும் வளர்ச்சியும் அவர்களிடம் காணப்படுகிறதா? அடிக்கடி ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஏற்படுகிற தொல்லைகள், அவர்களுக்கு அடிக்கடி இடப்படுகிற ஆணைகளைப் பார்த்தால் இல்லை என்றே கூறலாம். இதனால், நிச்சயமாக ஆரம்பக் கல்வியின் தரம் குறைந்து வருகிறது என்று எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் எல் ணத்தை ஒப்புக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் எப்படி எப்படிக் கஷ்ட நிலைக்கு ஆளாகிறார்கள் என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். இப்போது எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கிற தொல்லை ஆசிரியர்களுக்கும் இருக்கிறது. நாளுக்குநாள் விலைவாசி ஏறிக்கொண்டே போவதால் குறைந்த வருமானத்தில் அவர்கள் வாழ்க்கையைச் சீராகவும் சிறப்பாகவும் நடத்த முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். காட்டு மிருகங்களிடம் இருந்து தப்பி ஓடுகிறவன் காலில் கல்லும் முள்ளும் குத்தினால் எப்படியோ அதே போல் விலைவாசி உயர்வால் துன்பப்படும் ஆசிரியர்கள் அதிகாரிகளால் அடிக்கடி அனுப்பப்படும் பல ஆணைகளினால் தொல்லைகளுக்கும் துயரத்திற்கும் ஆளாகிறார்கள். பொதுக் கல்விக்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 18 கோடி ரூபாய் ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு செலவு செய்தும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு நிம்மதி இல்லை. மேலும் மேலும் தொல்லைகள் அவர்களுக்கு ஏற்படுவதால் ஆரம்பக் கல்வியினால் என்ன பலன் ஏற்படவேண்டும் என்று எதிர் பார்க்கிறோமோ அப்பலன் மாணவர்களுக்குக் கிடைக்காது. முதலாவதாக தொழில் ஆசிரியர் பற்றி நேற்று மந்திரி அளித்த பதிலில் எட்டாம் வகுப்பு மீண்டும் அநேகமாக இருக்கக்கூடும் என்று கூறப்பட்டது. ஏற்கெனவே இருக்கிற ஆசிரியர்களை அது பாதிக்காது என்றும் தெரிவிக்கப்பட்டது. நான் கேட்டுக்கொள்வது தொழிற் கல்வி ஆசிரியர்களுக்கு எப்படியாவது முழு நேர வேலை தரப்பட வேண்டும். முன் வகுப்பு ஒன்றில் தொழிற் பயிற்சியைத் தொடங்கியாவது அவர்களுக்கு முழு நேர ஊதியம் கொடுக்கப்பட வேண்டும். இது குறித்து ஆசிரியர்கள் பயப்படுகிறார்கள். அவர்கள் பயத்தைத் தீர்த்து நிலைமையைத் தெளிவுப் படுத்த வேண்டியது சர்க்கார் கடமை. இரண்டாவதாக, 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற திட்டம் சென்ற ஆண்டு இடையில் புகுத்தப்பட்டிருக்கிறது. பொதுவாக முன்பெல்லாம் 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று இருந்தது. 1958-ல் 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று ஸ்லாப் ஸிஸ்டம் கொண்டு வரப்பட்டது. அதன்படி 35 மாணவர்களுக்கு மேல் ஒரு மாணவர் வந்து சேர்ந்தாலும் இரண்டு ஆசிரியர்கள் போட்டுக்கொள்ள அப்போது வசதியிருந்தது. அதனால் கல்வியின் தரம் குறையாமல் இருந்தது. அதோடு ஆசிரியர்களுக்கும் மாணவர்களைத் தனித்தனியே கவனிக்க வசதியிருந்தது. இன்று ஆஜர் பட்டியல் பார்த்து பள்ளிக்கூடத்திற்கு வரும் மொத்த மாணவர்களில் 35 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. இதனால் ஒரு வகுப்பில் 60, 65 மாணவர்களைக் கூட ஒரு ஆசிரியர் கவனிக்க வேண்டியிருக்கும். ஆகவே இந்த முறையை மாற்றி அந்த ஸ்லாப் ஸிஸ்டத்தையாவது கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு வகுப்பில் 35-க்குமேல் இருந்தால் அங்கு வேறு ஓர் ஆசிரியர் அமைக்கப்பட வேண்டியது இன்றியமையாதது. இதை அமைச்சர் அவர்கள் கவனித்து அதற்கான திட்டத்தைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மூன்றாவதாக நிர்வாகச் செலவு மானியம் வழங்குவது. பொதுவாக 5 ஆசிரியர்கள் உள்ள ஒரு பள்ளியை எடுத்துக்கொள்வோம். உதவி பெறும் ஆரம்பப் பள்ளியாக இருந்தால், அவர்களுக்கு உதவித் தொகை எவ்வளவு தரப்படுகிறது என்று பார்ப்போம். ஐந்து ஆசிரியர்கள் இருக்கிற அந்தப் பள்ளியிலே நான்கு ஆசிரியர்கள் ஹையர் எலிமெண்டரி ஆசிரியர்களாக இருந்தால் அவர்கள் 65 ரூபாய் வீதம் சம்பளம் பெறுகிறார்கள் என்றால் மொத்தத்தில் 260 ரூபாய் சம்பளம்



பெறுகிறார்கள், ஒரு செகண்டரி க்ரேட் ஆசிரியர் இருந்தால் அவர் 90 ரூபாய் சம்பளம் பெறுகிறார், ஆக மொத்தத்தில் 350 ரூபாய் சம்பளம் கிடைக்கிறது. இதற்கு முன் 20 சத விகிதம் வீதம் நிர்வாகச் செலவுக்கு தரப்பட்டு வந்தது. 50 சத வீதம் கூட இருந்தது ஒரு காலத்தில். இப்போது 10 சத வீதம் மட்டுமே ஆசிரியர்களுடைய 'பேசிக்' சம்பள அடிப்படையில் நிர்வாகச் செலவுக்குக் கொடுப்பது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி 'பேசிக்' சம்பளத்தில் 10 சத வீதம் மட்டும் நிர்வாகச் செலவுக்காக அளிக்கப்படுமானால் ஐந்து ஆசிரியர்களுக்கு 350 ரூபாய் சம்பளம் தருகிற அந்தப் பள்ளிக்கு 35 ரூபாய் தான் நிர்வாகச் செலவுக்காகக் கிடைக்கும். அந்தப் பள்ளியில் செலவு எவ்வளவு ஆகிறது என்று கணக்குப் போட்டுப் பார்த்தோமானால், அவர்கள் வாடகை, கிட்டத்தட்ட ஐந்து வகுப்புகள் உள்ள பள்ளிக்கு, குறைந்தது 80 ரூபாய் கொடுத்துத் தீர வேண்டும், தளவாடச் செலவுகள்—சாக்கு, மை, போர்டு, மாப்புகள்—இப்படிப்பட்ட சாமான்களை வாங்கக் குறைந்தது 10 ரூபாய் செலவழிக்க வேண்டும். ஆயாவுக்கு 15 ரூபாய். பெருக்குகிறவனுக்கு 15 ரூபாய். தண்ணீர் ஊற்றுவதற்கு 10 ரூபாய். தோட்டிக்கு 5 ரூபாய். ப்ராவிடெண்ட் ஃபண்டுக்கு ஆசிரியருக்கு ரூபாய்க்கு 6 காசு வீதம் அவர்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது. அப்படி ரூபாய்க்கு 6 காசு கொடுப்பதில் குறைந்தது 11 ரூபாய் கொடுக்க வேண்டும். ரிபேர், போக்கு வரத்து தபால் முதலிய செலவுக்கு 25 ரூபாய். அப்படிக் கணக்குப் போட்டுப் பார்த்தால் மொத்தத்தில் 175 ரூபாய் அவர்களுக்கு மாதம் செலவு ஆகிறது—இது மிகக் குறைந்த செலவு. நிர்வாகச் செலவுக்காகச் சர்க்கார் தருகிற பணம் 35 ரூபாய். மொத்தத்தில் ஐந்தில் ஒரு பங்கு. சென்னை நகரைப் பொறுத்த வரையில் இந்தத் தொகைக்கு வாடகைக்குக் கட்டவாவது கிடைக்குமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே, இந்த 10 சத வீதம் என்று இருப்பதை 20 சத வீதம் ஆக உயர்த்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இது மிக மிக அவசியமானது என்று நான் கருதுகிறேன்.

நான்காவதாக, சம்பள இழப்புத் தொகைக்கு ஈடு தருவது. இதுபற்றி முதலிலே சொன்னதெல்லாம் எவ்வளவு சம்பளம் மாணவர்களிடம் வாங்குகிறார்களோ அவ்வளவுக்குத் தரப்படும் என்று கூறப்பட்டது. பின்னால், அது குறைக்கப்பட்டு சென்னையைப் பொறுத்த வரையில் 6-ம் வகுப்புக்கு 1 ரூபாய் 2 அணா வீதமும், 7-ம் வகுப்புக்கு 1 ரூபாய் 6 அணா வீதமும், 8-வது வகுப்புக்கு 1 ரூபாய் 8 அணா வீதமும் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது ஏதோ ஒரு உத்திரவு வரப் போவதாகவோ அல்லது வந்திருப்பதாகவோ பலர் அச்சப்படுகிறார்கள். 6-வது வகுப்புக்கு 6 அணா என்றும், 7-வது வகுப்புக்கு 7 அணா என்றும், 8-வது வகுப்புக்கு 8 அணா என்றும் தரப்படும் என்று அவர்கள் உத்திரவு எதிர்பார்க்கப்படுகிற நிலையில் இருப்பதாக ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் அஞ்சுகிறார்கள். அப்படி 6 அணா, 7 அணா, 8 அணா என்று கொடுப்பது மிகவும் குறைவு. இன்று நகர சபைகளுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும், மற்ற உயர் நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த தொடக்க வகுப்புகளுக்கும் நாம் தருகிற தொகை இதை விடப் பல மடங்கு உயர்வாக இருக்கிறது. அவற்றை கவனித்து, நிச்சயமாக 1 ரூபாய் 2 அணா, 1 ரூபாய் 6 அணா, 1 ரூபாய் 8 அணா என்ற முறையிலேயே இனியும் தொடர்ந்து தரவேண்டும், அதை சிறிதும் குறைக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திருமதி. பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கல்வி மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர் மதியழகன் அவர்கள் இந்த சபையை பட்டம் சூட்டு விழா சபை என்று நினைத்து விட்டார்கள் போலும். இங்கே சட்ட சபை நடக்கிறது என்பதை அவர்களுக்கு நான் ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன்.

அதற்கு அடுத்து, ஹிந்தி பரீட்சையை எடுத்தது மிகவும் வரவேற்கத் தகுந்தது என்று எதிர்க்கட்சி அங்கத்தினர் அவர்கள் பேசினார்கள். அதை வன்மையாக நான் கண்டிக்கிறேன். அந்த ஹிந்தி பரீட்சையை எடுத்த

பெண் கல்லூரிகளும் இருக்கின்றன. அதனால் டி.ஈ.ஓ.-க்களை நியமனம்
செய்யும்போது பெண்களையும் நியமனம் செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளு
கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையைப் பார்த்தால்
அப்பொழுதுள்ள டைரெக்டருக்கு வேலை பளு அதிகமாக இருக்கிறது.
இவருடைய அனுபவத்தைப் பார்க்கும்போது இது நன்றாகத் தெரிய வரு
கிறது. அதனால் இரண்டு டைரெக்டர்களை நியமனம் செய்தாலும் பாவா
யில்லை என்று தோன்றுகிறது. இப்பொழுது நிறைய ஆரம்பப் பள்ளிகளும்
உயர்நிலைப் பள்ளிகளும் ஏற்படுத்தப்பட்டு வருவதால் அவருக்கு வேலை
பளு அதிகமாக ஆகி வருவது நன்றாகத் தெரியும். ஆகவே இரண்டு
டைரக்டர்களை நியமிக்க வேண்டியது அவசியமாகத் தோன்றுகிறது.
அதற்குவேண்டிய நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்
றும் கேட்டுக்கொண்டு, என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளு
கிறேன்.

*** திரு. கே. பி. பழனி :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே,
ஆற்றல் மிக்க அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கல்வித் துறை
மானிய கோரிக்கையை ஆதரித்து அதை வரவேற்று ஒரு சில வார்த்தை
களை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரு நாட்டினுடைய இலக்கணத்
தைப்பற்றி எழுதும்போது நம்முடைய முன்னோர்கள் இந்த நாட்டில் இருக்கக்
கூடிய மலைகளைப் பற்றியோ அல்லது மாநதிகளைப்பற்றியோ காடுகளைப்பற்றி
யோ கழனிகளைப்பற்றியோ எல்லையைப்பற்றியோ இருக்கின்ற மக்கள் தொகை
யைப்பற்றியோ எழுதவில்லை. நாட்டிற்கு இலக்கணத்தை வகுத்து நம்
முடைய முன்னோர் கூறுவது விளை பொருள்கள், கற்றறிந்த சான்றோர்கள்,
கேடில்லாத செல்வம் ஆகிய மூன்று அம்சங்களை இலக்கணமாக வகுத்தார்
கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக வள்ளுவர், வெகு அழகாகச் சொல்லி
இருக்கிறார்கள். அதாவது —

" தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச
செல்வரும் சேர்வது நாடு "

என்று அழகாகச் சொல்கிறார். குறிப்பாக, ஜனநாயக நாடுகளில் சான்
றோர்கள் அதிகமாக இருப்பது இன்றியமையாதது என்பதை நான் எடுத்துச்
சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இதனை உணர்ந்த நமது முன்
னோர்கள்,

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்"

என்று அழகாக எடுத்துச் சொன்னார்கள். எந்த அளவு கல்விச் செல்வத்
தைப் பெற வேண்டும் என்பதற்காக

"கற்றல் நன்றே கற்றல் நன்றே
பிச்சைப் புகினும் கற்றல் நன்றே "

என்றபடி, பிச்சை எடுத்தாவது படிக்கவேண்டும் என்று கல்விச் செல்வத்
தின் பெருமையை அழகாக எடுத்துச் சொன்னார்கள். எனவேதான்,
அன்று கல்வித் துறையில் நம்முடைய நாடு, சீரான, சிறப்பான ஒரு
இடத்தைப் பெற்றிருந்தது. இடைக் காலத்தில் நம்முடைய நாடு அன்னி
யர்கள் ஆளுகைக்கு உட்பட்டுக் கிடந்த காரணத்தால், கல்வித் துறையில்
ஒருவிதமான மந்தமான நிலைமை ஏற்பட்டு, ஒரு வகையான அறியாமை
நாட்டிலே ஏற்படலாயிற்று. நாட்டின் விடுதலைக்குப் பிறகு, வருங்காலச்
சந்ததிகள் வகையாக, வளமாக வாழவேண்டும் என்ற எண்ணம்
கொண்ட தேசீயத் தலைவர்கள் அந்த அளவு கல்வித் துறையில் ஏனைய
மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய அளவில், மறு மலர்ச்சி
யான பல சீர்திருத்தங்களைச் செய்துள்ளார்கள் என்று இங்கேயிருக்கும்
அன்பர்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஐந்து மைல் சுற்று வட்டாரத்தில் உயர்நிலைப் பள்ளியும், மூன்று
மைல் சுற்று வட்டாரத்தில் நடுத்தரப் பள்ளியும், 300 மக்கள் வாழும்
கிராமத்தில் ஆரம்பப் பள்ளியும் நிறுவவேண்டும் என்று திட்டம் வகுத்து,
ஆயிரக்கணக்கான கல்வி நிலையங்களை அமைத்ததோடு, வறுமையிலே
வாடும் ஏழைக் குழந்தைகளும் கல்விச் செல்வத்தைப் பெறவேண்டும்





என்பதற்காக இலவசக் கல்வித் திட்டம், இலவச ஆடை வழங்கும் திட்டம்,
இலவசப் புத்தக வழங்கும் திட்டம், இலவச மதிய உணவு வழங்கும்
திட்டம் ஆகியவற்றிலேகூட, ஏனைய மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக
நம்முடைய மாநிலம் இருக்கிறது என்றால், அது மிகையாகாது.

திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அன்பர்களில் ஒருசிலர்
கூட மதிய உணவுத் திட்டம் வெற்றிபெறவில்லை என்ற கருத்துப்பட
எடுத்துச் சொன்னார்கள். அப்படித்தான் அடுத்துப் பேசக்கூடியவர்களும்
ஒரு கால் சொல்லக்கூடும். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு.
அண்ணாதுரை அவர்கள் 1963 ஜனவரி மாதம் 29-ம் தேதி அன்று அவ்வை
இல்லத்தில் மதிய உணவுத் திட்டத்தைப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள்
என்று "முரசொலி" தின ஏட்டில் செய்தி வந்திருக்கிறது. மதிய உணவுத்
திட்டத்தைப்பற்றி மதிப்பிற்குரிய திரு. அண்ணாதுரை அவர்கள், "பள்ளி
களில் நண்பகல் உணவு தர வேண்டும் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு
வந்தார்கள் அரசினர். அந்தத் திட்டத்தில் இந்தியத் துணைக் கண்டம்
முழுவதும் சுற்றி வருகின்ற நமது நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரி
யும்—தமிழகம் மட்டுந்தான் மிகுதியாக வெற்றி யடைந்திருக்கிறது" என்று
பாராட்டியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, ஆசிரியர்கள் அவல நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்
கள் என்ற கருத்துப்பட ஒருசிலர் எடுத்துச் சொன்னார்கள். இன்று
நம்முடைய ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளத்தைப் பொறுத்த வரையில்
மூன்று வகையான சிறப்பான அனுகூலங்களை அவர்கள் அனுபவித்து வரு
கிறார்கள். பென்ஷன் திட்டம், பிராவிடெண்ட் ஃபண்ட் திட்டம், இன்ஷூ
ரன்ஸ் திட்டம் ஆகியவை அம் மூன்று திட்டங்களாகும். இந்தியாவிலேயே
நாம் பார்க்கின்ற நேரத்தில், மூன்று வகையான அனுகூலங்களை அடைந்
திருக்கக்கூடிய ஆசிரியர்கள் நம் மாநிலத்தில்தான் இருந்து வருகிறார்கள்
என்றால் அது மிகையாகாது. ஆசியாவிலேயே முதன்முறையாக இந்த
மூன்று வகையான அனுகூலங்களையும் ஆசிரியர்கள் பெறக்கூடிய அளவு
சட்டத்தை உருவாக்கிய மாநிலம் அதற்கான சிறப்புப் பெற்ற மாநிலமும்
நம்முடைய மாநிலம்தான் என்றால் அது மிகை ஆகாது.

அந்த விதமாக, ஒரே ஒரு முக்கியமான விஷயத்தை இந்த மாமன்றத்
தில் கொண்டுவர விரும்புகிறேன். இன்று எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம்.
காம்., போன்ற போஸ்ட்-கிராஜுவேட் மாணவர்கள் அத்தனை பேருக்கும்
ஆண்டொன்றுக்கு நாற்பது மாணவர்களுக்குத்தான் அரசாங்க ஸ்காலர்
ஷிப் உதவி வழங்கப்படுகிறது. சட்டக் கல்லூரியில் 14 மாணவர்களுக்குத்
தான் அந்த உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. அந்த எண்ணிக்கையை
அதிகப்படுத்த வேண்டுமென்று நான் மதிப்பிற்குரிய ஹரிஜன நலத் துறை
அமைச்சர் அவர்களையும் கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்
கொண்டு என் உரையை முடிக்கின்றேன்.

*** திரு. சா. கணேசன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய
தினம் சபையிலே கனம் நிதி அமைச்சர் அவர்களாலே சமர்ப்பிக்கப்
பெற்றிருக்கிற கல்வி மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைப்
புலப்படுத்துகின்றேன்.

கல்வி என்பது எழுத்தறிவு, கல்வி அறிவு, கலை அறிவு முதலியவற்றை
கொடுப்பதற்கு இன்றியமையாத ஒரு துறை ஆகும். அதனுடைய இலட்சி
யம் வெறும் எழுத்தறிவு மட்டுமல்ல, வெறும் கல்வி அறிவு மட்டுமல்ல,
அல்லது பல்வேறு கலைகளைப் பற்றிய அறிவு மட்டுமல்ல. ஒழுக்கமுடை
மைக்கு இவையெல்லாம் அடிப்படை, அல்லது நெறி, படி, முறை
என்பதையெல்லாம் நாம் அறிவோம். அவற்றை யெல்லாம் சுட்டிக்காட்டி
விட்டுச் சொல்லுகிறேன். அந்த மன நிலையிலிருந்து நாம் பிறழாமல்,
கல்வியின் தத்துவத்தை அது கொடுக்கும் ஆற்றலை நாம் அணுக
வேண்டும் என்பதை நாம் அனைவரும் மனத்திலே கொள்ள வேண்டும் என்
பதற்காகத்தான் அதைச் சுட்டிவிட்டு மேலே செல்லுகிறேன்.

அதனாலேதான், நம் நாட்டிலே கூட, பரம்பரையாக வாழ்ந்து, உயர்ந்த
நிலையில் இருக்கிறவர்களைப் பார்த்து கூட்டங்களில் தலைமை வகிக்கிறவர்
களைப் பார்த்துச் சொல்லும்போது, "கல்வி அறிவு ஒழுக்கங்களில் சிறந்த

தலைவர் அவர்கள்" என்று சொல்லுகிற ஒரு மரபே இருந்தது. கல்வியின் பயனாக அறிவு வளர்ச்சியும், அறிவு வளர்ச்சியின் பயனாக ஒழுக்க நிறை வும் பெற்று, அதன் மூலமாக மனிதன் உலகத்திலே வாழ்வாங்கு வாழ் வதற்கு வழி வகுக்கிறது என்ற அடிப்படையை நம்பித்தான் இப்படிப்பட்ட சொற்றொடர்கள் எல்லாம் நாட்டிலே நிலையாக வளர்ந்தும் வருகின்றன. அந்தக் கண்ணோட்டத்தோடு இனி விஷயங்களைக் கவனிப்போம்.

கல்விக்கு மிக இன்றியமையாதது ஒன்று என்ன என்பதை நாம் சொல்லவேண்டாம். இப்பொழுது நிலைக்கிறோம், கட்டடம் இன்றியமை யாதது, புத்தகங்கள் இன்றியமையாதவை. அதைவிடப் பாதத்தால் நோட்டுப் புத்தகங்கள் இன்றியமையாதவை என்று. அந்தக் காலத்தில் அப்படிக் கருதப்படவில்லை. ஆசிரியன்தான் கல்விக்கு இன்றியமையா தவன். ஆதலினால்தான் "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்" என்றெல்லாம் நம்முடைய அற நூல்கள் உணர்த்தும். அந்த வகையிலே ஆசிரியன் தகுதியுடையவனாகவும், சொல்வதற்கு உரியவனாகவும் அமை யும்படியாகச் செய்யும் பொறுப்பு முழுவதும் ஆட்சியைச் சார்ந்தது என் பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. அந்த நிலையிலே ஆசிரியன் பூரணத் தகுதியுடையவனாக இருக்கிறானா? அவனுக்குச் சூழ்நிலை மரியாதையைக் கொடுக்கக்கூடிய அமைப்பிலே அமைந்திருக்கிறதா? வாழ்வதற்கேற்ற வாய்ப்புக்களை அளித்து, தரத்தை உயர்த்துவதற்கு நாம் எவ்வளவுக்கு முயல்கிறோமோ அந்த முயற்சி அவ்வளவுக்குப் பலன் தருகிறது என்பதை யும் மனத்திலே கொள்ள வேண்டும். ஆகவே, கல்வி நல்ல வளர்ச்சிபெற வேண்டுமானால், ஆசிரியன் எந்தவிதமான கவலையும் அற்றவனாக இருக்க வேண்டும். அந்த நிலையை ஆசிரியனுக்கு உண்டாக்க வேண்டியது ஆட்சி யாளருடைய பொறுப்பு, கடமை என்று கூறி மேலே செல்லுகிறேன்.

கல்வியிலே அடிப்படைக் கல்வியை நான் மிக அழுத்தமாகச் சொல்லிக் கொண்டே வருகிறவன். பல கருத்துக்களைப் பல்வேறு கமிட்டிகளிலும் சொல்லிவிட்டதனால் அவற்றையெல்லாம் இங்கே கொண்டுவந்து மீண்டும் சொல்லி, காலத்தை நான் விரயம் செய்ய விரும்பவில்லை. ஏனென்றால் அரசாங்கத்தின், அல்லது சம்பந்தப்பட்ட இலாக்காவின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுவது தான் என்னுடைய கடமையே தவிர, பத்திரிகை யிலே வர வேண்டும் என்பதற்காக நான் கருதினால் தவறு இழைத்தவனா வேன். அக் காரணத்தால், கமிட்டிகளிலே சொன்ன கருத்துக்களை விட்டு விட்டுப் புதுக் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்—ஒன்றிரண்டு திரும்ப வும் வரத்தான் செய்யும், வராமல் இராது என்ற நிலையிலே.

இந்த அடிப்படைக் கல்வியைப் பாலர் வகுப்புகளுக்குக் கொடுக்கும் போது, திராணி உடைய ஆசிரியர் இருக்க வேண்டும். "திராணி" என்று சொன்னால், படித்த கல்வித் தரத்தை அடிப்படையாக வைத்துச் சொல்லு கிறேன் என்பது பொருள் அல்ல. பட்டம் பெறாத ஒருவனும் எல்.டி.யைவிட சிறந்தவனாக இருக்க முடியும், எல்.டி.யை விடத் திராணியுடைய ஆசிரிய னாகவும் இருந்துவிட முடியும். அம்மாதிரி குழந்தைக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியன் கொஞ்சம் நல்ல அனுபவம் உடையவனாகவும் விஷய ஞானம் உடையவனாகவும், அதற்கு மேலே ஓரளவு மனத்துவம் (சைகாலஜி) புரிந்தவனாகவும் இருந்தால்தான் குழந்தைக்கு எங்கே தவறு எங்கே திருத்த வேண்டும் என்பதையெல்லாம் கணித்து, கோட்டத்தை நிறைவு செய்து, அதைச் செம்மையாக ஆக்கும் வாய்ப்புக் கிடைக்கும். இப்பொழுது மேல் படிப்புக்குப் பெரிய பெரிய ப்ரொஃபஸர்கள் வேண்டும். மேனாடுகளுக்குச் சென்றவர்கள் வேண்டும் என்ற மனோபாவம் வருகிறதே தவிர, அடிப்படையிலே செம்மையாக இல்லை. ஆறு மாடிக் கட்டடம் கட்டவேண்டுமானால், அஸ்திவாரத்தில் கல் உறுதியாக இருக்க வேண்டாமா? மணலைப் போட்டு, அதன் மீது கட்டடம் எழுப்பினால் நிற்குமா? இதைச் சிந்திக்க வேண்டும். ஆகவே, அடிப்படையிலேயே, ஒன்று இரண்டாவது வகுப்புப் பாடம் சொல்லிக்கொடுக்கக் கூடியவர்கள் குறைந்தபட்சம் எல்.டி.
12-00 noon படித்துள்ளவர்களுக்கு இருக்கக் கூடிய தகுதியைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும். அதற்கு மேலே அவர்கள், பெண்களாக இருப்பது, தாய்மார் களாக இருப்பது சிறப்பு என்பது என்னுடைய வாதம், நம்பிக்கை. "இன்றே முடிந்து விடுமா?" நம்முடைய பொருளாதாரம் அவ்வளவுக்கு





இடம் கொடுக்குமா? என்ற சர்ச்சை எல்லாம் தேவை இல்லாத ஒன்று. அந்த முறையிலே அணுக வேண்டும். பாலர் வகுப்புக்கு இந்த மாதிரி நெறியிலே கல்வியைக் கொடுக்க வேண்டுமென்றால் அங்கே பெண்கள் இருப்பதுதான் சரி என்று ஏற்பட்டால் பல கஷ்டங்கள் நிவர்த்தியாகும்.

ஒரு சோதனை வைத்துத்தான் ஆசிரியர்களைச் சேர்க்க வேண்டும். ஆசிரியர் ஆசிரியர்கள் ரொம்பப் பேரை நான் பார்த்திருக்கிறேன். எந்த மீதும் நான் குறை சொல்லவில்லை. நம்முடைய நிலையைப் பற்றி அலசிப் பார்க்கும்போது சிலருக்குக் குறைவாகத் தோற்றலாம். அதை மனத்தில் எடுத்துக்கொள்ளப்படாது என்று சொல்கிறேன். என்னுடைய "கம்பராமா யணம்" விளக்க உரையைப் பதிப்பிக்கின்ற போது "எம்.ஏ." பாஸ் செய்த ஒருவர் என்னிடம் பணி புரிந்து வந்தார். அவர் "வாலப் பலம்" என்று தான் சொல்வார். "வாழைப்பழம்" என்று அவரால் சொல்ல முடிய வில்லை. அப்படிப்பட்டவரை எழுதச் சொன்னால் சுத்தமாக எழுதுவார். எழுத்து நன்றாக இருந்தது. அப்படிப்பட்டவர் எழுத்து வேலையிலே ஈடு பட வேண்டுமே தவிர, கற்பிக்கும் வேலைக்கு அவர் வரக் கூடாது. மேல்நாடு களிலே மொழிகளின் உச்சரிப்பை நன்றாக அறிந்து கொள்ள "லிங்வா போன்" என்று வைத்திருக்கிறார்கள். அதைத் திருகி விட்டு விட்டு அதிலே வருகிற உச்சரிப்பைக் காதிலே வாங்கி சரியானபடி உச்சரிக்கப் பழகிக் கொள்ளுகிறார்கள். இந்த நாட்டின் நெறியும் அதுதான். சொல்வது பிரதானம். ஒலியைக் கேட்டுக் கேட்டுத்தான் மொழி வளர்ச்சி பெறுகிறது. அதனால்தான் "மொழி" என்ற பெயரே வந்தது. பாலிக்கப்படுவதனாலே பாலை ஆயிற்று. மொழியப்படுவதாலே மொழி என்றாயிற்று. பிழையாக உச்சரிக்கின்ற ஆசிரியர்கள் மேல் வகுப்பிலே வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும். பத்தாவது வகுப்புக்குக் கீழ், அடிப்படையில் எழுத்துப் பிழை இல்லாமல், எழுதக் கூடியவர்களை, ஒலிப் பிழை இல்லாமல் உச்சரிக்க கூடியவர்களைத்தான் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும். எழுத்தானது எழுதுகோல் மேலே சென்றால் மெல்லியவையாகவும், கீழே சென்றால் கனமானவையாகவும் வரிவடிவம் பெறும் என்பதை உணர்ந்து காரணத் துடன் சொல்லக் கூடிய, கையெழுத்தைத் திருத்தக் கூடிய தகுதியுடைய வர்கள் ஆசிரியர்களாக அமைய வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன். "Three R's." என்று சொல்வோம். அவற்றின் முன்னிரண்டான "ரீடிங்" தப்பு "ரைட்டிங்" தப்பு என்று இருக்கக் கூடியவரை ஆசிரியர் என்று சொன்னால் நியாயமா? தர்மமா? அது பண்புக்கு, வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்குமா என்பதைச் சிந்திக்க வேண்டும். இப்போது பலபேர் மார்க் அதிகமாக வாங்காமைக்குக் காரணம் என்ன? "பழனி" என்றால், பொது "ள"கரமா, சிறப்பு "ழ"கரமா, மூன்று சுழி "ண"வா, தந் நகரமா, றன்னகரமா என்று தெரியாவிட்டால், ஒரு கிறுக்குக் கிறுக்குத் தள்ளி விடுகிறார்கள். காதிலே கேட்கின்ற ஒலி, ஒலி வடிவமாக வந்து, வரி வடிவமாக மீண்டும் பிரதிபலிக்கிறது. ஆகவே, ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும்போது ஒலியும், வரியும் நன்றாகத் தெரிந் தவர்களாக இருக்கிறார்களா என்று பார்த்து, சோதனை செய்து தேர்ந் தெடுக்க வேண்டும். அப்படி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தால்தான் சிறப் பாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடிப்படையிலே கல்வியின் போக்கு ரொம்ப வருந்தத் தக்க நிலைமை யிலே இருக்கிறது. பாடப் புத்தகத்தைப் பார்த்தால், ஆத்தி சூடியில் ஐந்து சூத்திரம், கொன்றை வேந்தனில் நான்கு, மூதுரையில் சில பாட்டு என்ற நிலைமையிலே அமைந்திருக்கிறது. பழைய கால மரபு இப்படி இல்லை. ஒன்றாவது வகுப்புக்கு ஆத்திசூடி முழுவதும் என்று வைத்து விட வேண்டும். இரண்டாவது வகுப்புக்கு கொன்றைவேந்தன் முழுவதும், மூன் றாவது வகுப்புக்கு மூதுரை முழுவதும், நான்காவது வகுப்புக்கு நல்வழி ஐந்தாவது வகுப்புக்கு நன்னெறி ஆறாவது வகுப்பு குமரகுருபரர் ஆக்கிய நீதிநெறி விளக்கம் ஏழாவது வகுப்பு அறநெறிச்சாரம், எட்டு, ஒன்பது, பத்தாவது வகுப்புக்களிலே திருக்குறள் என்று வைத்து விடவேண்டும். இவற்றை ஒழுங்காகப் படித்து வந்தால் அந்தத் தமிழ் மகன் உண்மை யிலேயே தமிழ் மகனாக இருப்பான். இப்போது தொட்ட இடத்தில் எல்லாம் நாலுக்குச் சில பாடல்கள். அதாவது கம்பன் பாடல் பத்து, சேக்கிழார் பாட்டு

அடுத்து நண்பகல் உணவு அளிக்கும் திட்டம். இதிலே பல குறைபாடுகள் இருக்கலாம். உயர்ந்த நோக்கம், உயர்ந்த லட்சியம் இவற்றின் அடிப்படையில் நம் நாட்டில் ஆலயங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆயினும் அந்த ஆலயத்திலேயே அயோக்கியத்தனம் நடக்கவில்லையா? அப்படி நம்முடைய இந்த உயர்ந்த நண்பகல் உணவு அளிக்கும் திட்டத்தில் அங்கங்கே ஊழல் காணப்படுகிறது என்பதற்காக அந்தத் திட்டமே நல்லது அல்ல என்று சொல்லமாட்டேன். ஊருக்கு ஒன்று இரண்டு என்று இருக்கக்கூடிய புண்ணியாத்மாக்களை மட்டும் கொஞ்சம் கண்காணித்துக் கொண்டால் போதும், இத்திட்டம் மிக வெற்றிகரமாக நடக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது ஆசிரியர்களே கூடப் பொங்க வேண்டாம். இருக்கக்கூடிய நிதிக்குத் தகுந்தவாறு நான்கு, ஐந்து என்று கொடுத்து வேறு யாரையாவது சமையல் செய்ய நியமிக்கலாம் என்று செய்துள்ள ஏற்பாட்டை நான் வரவேற்கிறேன்.

அதற்குமேலே ஆசிரியர்களுக்குப் பென்ஷன் திட்டம் கொண்டுவந்தாற் போல கல்லூரி ஆசிரியர்களுக்கும் கொண்டுவரப்பட வேண்டும் என்ற கோரிக்கை இருந்தது. அதுவும் 1962 ஏப்ரல் மாதம் முதல் கல்லூரி ஆசிரியர்கள் விஷயத்திலும் அமுலாக்கப்படும் என்று கேட்டு மகிழ்ச்சி அடைகிறேன். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு இத்திட்டம் கல்விக் கூடங்களில் இருக்கும் எழுத்தர்கள், கணக்கர்கள் விஷயத்திலும் விஸ்தரிக்கப்பட வேண்டும், அங்கே வேலை செய்கின்றவர்கள் அத்தனை பேர்கள் விஷயத்திலும் இது அமுலாக்கப்படவேண்டும்.

அடுத்து உடல் பயிற்சிக் கல்லூரி சம்பந்தப்பட்டவரை யுனிவர்ஸிடி கிராண்ட் கமிஷன் சிபார்சு ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பது வருந்தத்தக்க விஷயம். கல்லூரி என்று வந்த பிற்பாடு இங்கு வேலை செய்கிறவர்களுக்கும் மற்ற கல்லூரியில் வேலை செய்கின்றவர்களுக்குக் கொடுப்பது போலவே சம்பளம் கொடுக்கப்பட வேண்டும். அறிவு எவ்வளவு பிரதானமோ அவ்வளவு பிரதானம் உடல் பயிற்சியும்.

“உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே” என்று சொல்வார் திருமூலரும். ஆகவே இங்கும் மற்ற கல்லூரிகளில் உள்ளதுபோலவே வரவேண்டும்.

மற்றொன்று, தென் இந்தியக் கட்டட முறையைக் கற்பிப்பதற்கு— கோயில் நிர்மாண அமைப்பு முறையைக் கற்பிப்பதற்கு—பொறியியல் கல்லூரிகள் ஒன்றிரண்டில் வகுப்புகள் நிறுவப்பட வேண்டும். (கனம் திரு. எம். பக்தவத்சலம் : காலேஜ் ஆப் டெக்னாலஜியில் இன்று அத்துறை இருக்கிறது). இருக்கிறது என்றால் சந்தோஷம். அதைக் கேட்டு ஒரு ஆறுதல். தேவையானால் இதை வேறு இடங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். யார் பெயரையும் குறிப்பிடுகிற வழக்கம் எனக்கு இல்லாததனால் பொதுவாகவே சொல்கிறேன். ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேருவதற்கு இன்றைக்கு என்ன என்ன முறைகளை எல்லாம் கையாள வேண்டியிருக்கிறது என்பதைக் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். திருச்சி பகுதியிலும், எங்கள் பகுதியிலும் லஞ்சம் கொடுத்தால்தான் சேர முடியும் என்றால், பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பள்ளியில் சேருகிறவர்கள் இந்த முறையைக் கையாள வேண்டுமென்றால், இதன் விளைவு என்ன ஆகும் என்று பார்க்கவேண்டும். பணம் கொடுத்தால்தான் சேர முடியும் என்கிற விஷம் ஆரம்பத்திலேயே இந்த ஆசிரியர்கள் உள்ளத்தில் புகுந்தால் ஆசிரியரான பிற்பாடு இவர்கள் விஷத்தைத்தான் கக்குவார்கள். ஆகவே இதில் அதிகக் கவனம் செலுத்தவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அதற்குமேலே கடைசியில் ஒன்றை மட்டும் சொல்லி முடிக்க விரும்புகிறேன். அரசாங்க உத்தியோகஸ்தர்கள் பிரசங்கம் பண்ணப்படாது என்று கனம அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார். அப்படி ஒரு விதி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நேரடியான அன்றாட அரசியல் உரை நிகழ்த்த



அவர்கள் அனுமதிக்கப்படவில்லை என்றால் என்னால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் கல்வித் துறையில், சமயத் துறையில், இலக்கியத் துறையில் அவர்கள் கலந்து கொள்வது என்றைக்குமே தடைபடுத்தப்பட்டதில்லை. இந்த மூன்றிலும் எனக்குக் கொஞ்சம் அனுபவம் உண்டு என்பதனால் சொல்கிறேன். கம்பர் விழா, இளங்கோ விழா வள்ளுவர் விழா என்று நான் இலக்கியக் கூட்டங்கள் நடத்தியிருக்கிறேன். அரசாங்கத்தில் பெரிய உத்தியோகம் வகிக்கிற செகரடரிகள் முதற்கொண்டு கலந்துகொண்டிருக்கிறார்கள். அதைப்போலவே கோயில்கள், சமய சொற்பொழிவுக் கூட்டங்கள் ஆகியவற்றிலும் அவர்கள் வந்து கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறார்கள். அரசியல் கூட “பாலிடிக்ஸ் ஆஸ் சயன்ஸ்” என்ற வகையில் அரசியல் எந்த எந்தக் காலத்தில் என்ன என்ன கொள்கைகள் கையாளப்பட்டு வந்திருக்கின்றன, அந்த தேச ஆட்சி முறை என்ன, இந்த தேச ஆட்சி முறை என்ன என்று விமர்சனம் செய்கின்ற முறையில் அவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். இதே நிலைமை நீடிக்க வேண்டும் என்பது என் கருத்தும். அதற்காகத் தவறுசெய்ப் போகிறவர்கள் மீது கண்காணிப்புக் கூடாது என்று நான் சொல்ல வரவில்லை. அதற்காக பொதுவாகவே யாருமே பேசக் கூடாது எந்தக் கூட்டத்திலும் பேசக் கூடாது என்பதாக வேண்டாதவற்றை எல்லாம் கொண்டு புகுத்துவது நமக்கு நன்மை அல்ல. தேசத்திற்கும் நல்ல வளர்ச்சியை உண்டாக்காது என்று கூறி நிச்சயமாக இந்தக் கருத்துக்களை எல்லாம் கைக்கொள்ள வேண்டுமென்று சொல்லி அமைகிறேன். வணக்கம்.

* **திரு. இரா நெடுஞ்செழியன் :** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்தின் மீது கொண்டு வரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஒட்டி சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கல்வி மானியத்திற்காக 29 கோடி ரூபாய்க்கு மேல் கோரி, அதனுடைய பணிகள் வருகிற ஆண்டில் மிகச் செம்மையாகக் கவனிக்கப்படும் என்ற வகையில், கனம் கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற முறைகள் பாராட்டுதலுக்கு உரியனவாகும். நெருக்கடி நேரத்தில், வேறு பல இனங்களில் செலவினங்களைக் குறைப்பதற்காக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், கல்வித் துறையைப் பொறுத்த மட்டில் மேற்கொண்டிருக்கும் பணிகளை நிறுத்தி வைக்காமல், மேலும் ஊக்குவிக்கக் கூடிய முறையில் அதிகமான நிதியை வழங்கி, அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று உறுதி அளித்திருப்பது மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

துவக்க நிலைக் கல்வி, இடைநிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி அனைத்துக்கும் சேர்த்து 29 கோடி ரூபாய் செலவிடுவதாகத் திட்டமிடப்பட்டிருக்கிறது. சென்ற பத்து, பன்னிரண்டு ஆண்டுக் காலத்தில் வேறு எந்தத் துறையிலும் ஏற்படாத அளவுக்கு மாறுதல், கல்வித் துறையிலே ஏற்பட்டிருக்கிறது என்று உறுதியாகக் கூற முடியும். சில்பல மாறுதல்களுக்கும், சில்பல திருத்தங்களுக்கும் குழப்பங்களுக்கும் ஆளாகித் தெளிவு ஏற்படாத அளவுக்கு ஒரு துறை இருக்கிறது என்றால், அது கல்வித் துறைதான் என்பதைப் பலரும் ஏற்றுக் கொள்வார்கள். கல்வித் துறையிலே இதுகாறும் ஏற்பட்ட மாறுபாடுகள், முரண்பாடுகள், குழப்பங்கள், திருத்தங்கள் ஆகிய அத்தனையையும் களைந்து, நல்லதொரு, திருந்திய, செம்மையான, சீரான நிலையை உருவாக்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் இப்போதுள்ள கனம் கல்வி அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்து, தலைமையாசிரியர்கள் கல்லூரித் தலைவர்கள் அரசியல் கட்சித் தலைவர்கள் ஆகிய பலரையும் அழைத்துக் கல்விக் குழு ஒன்றை அமைத்து, அதனுடைய ஆலோசனைகளைப் பெற்று, அப்படிப் பெறப்பட்ட கருத்துக்களைக் கொண்டு திட்டத்தை உருவாக்கி, இம் மன்றத்தின் முன்னால் வருகிற ஏப்ரல் திங்கள் முதல் நாள் வைத்து, இம்மன்ற உறுப்பினர்களின் சீரிய ஆலோசனைகளையும் பெற விரும்புவதாகக் குறிப்பிட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

கல்வித் துறையிலே ஏற்படுத்தப்பட வேண்டிய பல்வேறு மாறுபாடுகளையும், செய்யப்பட வேண்டிய சீர் திருத்தங்களையும் பற்றிப் பலரும் இங்கே தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். கல்வியின் தேவை நாளுக்கு நாள் வளர்ந்து வரும் நிலையில் இருப்பதைப் பார்க்கிறோம். [illegible]

எட்டு, சீறாப்புராணம் ஆறு ; ரக்ஷண்ய யாத்ரீகம் ஏழு என்பதாக ஒரு அவியல் பாடப் புத்தகம் அமைகிறது. நான் யாரையும் குறை சொல்லவில்லை. பழைய காலத்தில் கிறிஸ்தவர்கள் கம்ப ராமாயணம் படித்து வந்தார்கள். இலக்கியத்தைப் படிப்பதிலே ஜாதி வித்தியாசமோ, மத வித்தியாசமோ கிடையாது. "மெர்ச்சண்ட் ஆப் வெனீஸ்"-ஐ லண்டன் யூனிவர்சிடியில் ஒரு யூதப் பேராசிரியர் கற்பித்து வந்ததாக நான் படித்திருக்கிறேன். அங்கே ஜாதி உணர்ச்சியோ, மத உணர்ச்சியோ வருவதில்லை. பாடத்திட்டத்தில் வருகின்றவர் ஒரு ஹிந்துவாகவோ, கிறிஸ்தவராகவோ, முஸ்லீமாகவோ எதாவது ஒரு பிரிவையோ, மதத்தையோ சார்ந்தவராகத்தான் இருக்க முடியும். ஆகவே அதில் கவனம் திருப்பப்படாது.

பள்ளிகளில்—சமயக் கல்வி என்ற பெயரை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள், அல்லது ஒழுக்கக் கல்வி என்று வேண்டுமானாலும் வைத்து கொள்ளுங்கள்—எந்த மதத்தையோ, ஜாதியையோ, மதத்தின் போக்கையோ கண்டிக்காத வகையில் மனிதன் வாழ்வாங்கு வாழும் நெறியின் அடிப்படையாகச் சமயக் கல்வி அமையவேண்டும்.

அதற்குமேலே, பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் நிச்சயமாகக் கட்டுப்படுத்தப்படவேண்டும். அதற்கு உச்சவரம்பு வைத்தே ஆகவேண்டும். மக்கள் வாழ்க்கை வளம் குறைவான நிலையில் இருக்கும் நிலையிலும் கூட, புத்தக விலை ஏறிக்கொண்டே போனால் என்ன செய்வது ? போன வருஷம் என் அண்ணன் படித்த புத்தகத்தை நான் படித்தால் குடி முழுகிவிடுமா? ஏன் எல்லாப் புத்தகங்களையும் மாற்றிக் கொண்டே இருக்கிறார்கள்? வரலாற்று நூல்களிலே வளர்ச்சியின் காரணமாக மாற்றம் ஏற்படலாம். டெக்ஸ்ட் புத்தகத்தை ஏன் மாற்றிக்கொண்டே இருக்கிறார்கள் ? இப்பொழுதுள்ளவை கா. நமசிவாயம் முதலியார் எழுதிய பாடப் புத்தகத்தை விட தரத்தில் உயர்ந்து விட்டனவா ?

நோட்டுப் புத்தகத்தைப் பார்த்தால் பயங்கரமான நிலைமை ஏற்படுகிறது. எனக்கு ஏழு வயதில் ஒரு பேரனும், ஒன்பது வயதில் ஒரு பேரனும் இருக்கின்றனர். இந்த இரண்டு பயல்களுக்கும் 25 ரூபாய்க்கு நோட்டுப் புத்தகங்கள் வாங்க வேண்டியிருக்கிறது. வீட்டுக் கணக்குக்கு ஒரு நோட்டு, பள்ளிக்கணக்குக்கு ஒரு நோட்டு, இன்ஸ்பெக்டர் வரும்போது காட்டுவதற்கு ஒரு கணக்கு நோட்டு. இது நியாயமா? தருமமா? வருஷக் கடைசியில் பார்த்தால் அதிலே பத்து பக்கம்தான் எழுதியிருக்கிறார்கள். மூப்பது பக்கம் சும்மாவே விடப்பட்டிருக்கின்றன. தமிழ் நோட்டு என்றால், வீட்டுத் தமிழ், சிறப்புத் தமிழ், பொதுத் தமிழ், இன்ஸ்பெக்டர் வந்தால் காட்டுவதற்குத் தமிழ். இவை எல்லாம் நியாயமா ? நான் காலைப் பிடித்துக் கும்பிட்டு வேண்டுமானாலும் கேட்டுக்கொள்கிறேன்—இந்த நோட்டுப் புத்தகங்களின் அளவுக்கு நிச்சயமாக ஒரு உச்ச வரம்பு கட்டித்தான் ஆகவேண்டும். இரண்டே நோட்டில் எல்லாப் பாடங்களையும் எழுதினால் என்ன ? ஒரே நோட்டில் தமிழ், ஆங்கிலம், கணக்கு என்று எழுதினால் என்ன ? நோட்டு வாங்குவதிலே மாணவர்களைக் கட்டாயப்படுத்தக்கூடாது. அப்படிக் கட்டாயப்படுத்துகிற ஆசிரியர்களுக்குத் தண்டனை என்று உத்தரவு போடுங்கள் என்று வேண்டிக்கொள்கிறேன்.

அதற்கு மேலே பாட விளக்கம்—நோட்ஸ் தடைப்படுத்தப்பட வேண்டும். இதன் காரணமாகத்தான் அடிப்படையிலே ஆசிரியர்கள், மாணவர்கள் உறவு கெடுகிறது. ஒரு கல்லூரி மாணவன் ஒரு வெண்பாப் பாடினான். முதல் இரண்டு அடிகளையும் நான் இங்கே சொல்லவில்லை.

"
. . . . . . . . . . .
தேனைப் பொழிந்த தெளிவுரைகள் அத்தனையும்
கோனார் கொடுத்த கொடை"

என்று ஒரு மாணவன் வெண்பா பாடினான். 'தமிழ் ஐயா இவ்வளவு நேரம் போதித்தாரே, அவ்வளவும் "கோனார் நோட்ஸ்" மூலம் அவர் கொடுத்த கொடை' என்ற வகையிலே அவன் வெண்பாப் பாடுகிறான். முதல் இரண்டு அடியைச் சொன்னால் குறிப்பிட்ட ஒருவரைக் குறிக்கும் என்ற காரணத்தால் அதனைக் கூறாது விடுகிறேன். இந்த நிலையில், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் உள்ள உறவு நிலை செம்மையாக இருக்





குமா ? ஆசிரியர்களிடம் மாணாக்கர்களுக்கு மரியாதை இருக்குமா ? இப்படிப்பட்ட உணர்ச்சி மாணாக்கன் உள்ளத்திலே ஏற்படுகிறது என்றால், அது கல்லூரியா ? அது பள்ளியா ? ஆகவே, இந்த 'நோட்ஸைத் தடை' செய்ய வேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறேன்.

அப்புறம் மாணவர்களுடைய ப்ராக்ரஸ் ரிப்போர்ட். அது இப்போது இருப்பது போல வெறும் மார்க்குகளை மட்டும் குறித்தனுப்புவதாக இருக்கக் கூடாது. ஹிஸ்டரி ஷீட் மாதிரியாக—ஒரு மாணவரைப் பற்றிய விவரங்கள் எல்லாம்—அவரிடத்தில் காணப்படுகிற குணம் என்ன, அவருக்கு இயல்பாகவே எந்தப் பாடத்தில் ஊக்கம் அதிகமாக இருக்கிறது, அவரிடத்தில் உள்ள குறைபாடுகள் என்ன, அந்தக் குறைகளுக்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று ஊகிக்கப்படுகிறது—என்கிற முழு விரவங்கள் எல்லாம் அடங்கினதாக இருந்தால் உண்மையிலேயே அதைக் காண்கிற பெற்றோர்களுக்கு தம் பையனின் தரம், நிலை, வளர்ச்சி, குறைபாடு எல்லாம் புலப்படும். காரணம் சிறு வயதில் இருந்தே இயற்கையாகவே ஒரு மாணவனுக்கு எவ் விஷயத்தில் உள்ளப்பற்று இருக்கிறது என்பதைக் கண்டுகொண்டால் தான் பின்னால் அவனுடைய உள்ளப்பற்றுக்கு ஏற்ற கல்வியைக் கொடுக்க வசதியேற்படும். சிறு வயதில் இருந்தே என்ஜினீரிங் ஸ்கில் இயற்கையாகவே அமைந்த ஒரு பையனை மெடிகல் காலேஜில் போடுவதால் என்ன பயன் விளையும் ? ஆகவேதான் சொல்கிறேன். சிறு வயது முதலே ஒரு மாணாக்கரின் உள்ளப்பற்று எத்துறையில் ஈடுபாடு உடையதாக இருக்கிறது என்பதைக் கண்டறிந்து அதற்கேற்ப அவர் கல்விப் போக்குத் திருப்பம் பெறக் கூடியதாக அமைய வேண்டும்.

ஹென்றி சி லிங் என்பவர் ஒரு மனத்துவ நிபுணர். அவர் 'மைரிடர்ன் டு ரிலிஜன்' என்ற ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிறார். அவர் ஒரு சம்பவத்தைப் பற்றிச் சொல்கிறார். ஒரு பையன். வருடா வருடம் கணக்கில் நூற்றுக்கு நூறு வாங்கிக்கொண்டு வருவான். அவ்வாண்டு கால் வருடப் பரிட்சையில் கூட நூற்றுக்கு நூறு வாங்கியிருந்தான். ஆயினும் இடைப்பரிட்சையில் திடீரென்று நூற்றுக்கு 24 வாங்கினான். அடுத்த பரிட்சையில் 20 வாங்கினான். இந்தப் பையனுக்கு இயல்பாகவே கணக்கில் நல்ல உள்ளப்பற்று உண்டே, இருந்தும் இத்துறையில் இருபதும் இருபத்து நான்கும் வாங்கும்படி ஏன் அவன் திறன் குறைந்து காணப்படுகிறது என்கிற கவலை அவ் வகுப்பு ஆசிரியருக்கு உண்டாயிற்றாம். உடனே அப்பையனை இந்த மனத்துவ நிபுணரிடம் அனுப்பி வைத்தாராம். அவர் இவனை நன்றாகப் பல கேள்விகள் எல்லாம் அவன் மனோநிலைக்கு ஏற்றபடி கேட்டுவந்தபோது உண்மை புலனாகிவிட்டதாம். உடனே அந்தப் பையனின் தாய் தந்தையர்களைத் தம்மை வந்து பார்க்கச் சொன்னார். அவர்கள் வந்தபோது அவர்களிடம் சொன்னாராம், "நீங்கள் உடனே விவாக ரத்து கோரி விண்ணப்பித்துக் கொண்டிருக்கும் பத்திரத்தை வாபஸ் பெறுங்கள். இயல்பாகவே நல்ல ஊக்கமும், தேர்ச்சியும், திறனும் கணிதத்தில் இருக்கும் உங்கள் பையன்—நீங்கள் இருவரும் பிரியப் போகிறீர்கள் என்றவுடனேயே கவலையில் ஆழ்ந்தவனாக உள்ளம் ஏங்கிச் சாம்பிப் போகிறான். அதனாலேயே அவன் திறன் குறைந்துவிட்டது" என்றாராம். அவர்களும் தாங்கள் விவாகரத்துக் கோரி விண்ணப்பித்துக் கொண்டிருப்பது உண்மையென்றும், அதை உடனே வாபஸ் வாங்கிக் கொள்வதாகவும் ஒப்புக்கொண்டார்களாம். அவர்கள் விவாக ரத்து விண்ணப்பத்தை வாபஸ் பெற்றுக் கொண்ட மறு மாதமே அந்த மாணவன் திரும்பவும் நூற்றுக்கு நூறு வாங்க ஆரம்பித்துவிட்டான். இது வெறுங்கதை அல்ல. இதைப் போலவே நம் நாட்டிலும் ஒவ்வொரு மாணவனும் சரியான முறையில் கண்காணிக்கப் படவேண்டும். அவனுடைய மன இயல்பு, ஈடுபாடு இவற்றுக்கு ஏற்றபடி அவனை பொறுப்புள்ள ஒரு மனிதனாக ஆக்கும் சீரிய பணி கல்வி இலாகாவைச் சார்ந்தது என்பதற்காக மேல்நாட்டில் நடந்த இந்த ஒரு சம்பவத்தை எடுத்துச் சொன்னேன். கனம் அமைச்சர் அவர்கள் இத் துறையில் தம் முழு கவனத்தையும் செலுத்த வேண்டும்.

கிறது என்று கல்வி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது வர வேற்கத் தக்கதொன்றாகும். தமிழில் படித்து எந்தளவில் ஆற்றல் பெற் றவர்களாக மாணவர்கள் அமைகிறார்களோ அந்தளவில் ஆங்கிலத் திலும் ஆற்றல் பெற்றவர்களாக மாணவர்களை அமைதல் வேண்டும். அதற்கான முயற்சிகளை அரசினர் தீவிரப்படுத்துதல் வேண்டும். உயர்நிலைப் பள்ளியை விட்டுக் கல்லூரிக்குச் செல்லும்போது, தமிழ் அறிவு பெற்றவன் திடீரென்று கல்லூரிக்குச் செல்லும்போது அங்கு பாடங்களை நன்கு புரிந்து கொள்ளும் அளவிற்கு ஆங்கிலத்தில் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். ஆகவே உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் மாணவர்கள் இரு மொழிகளில் அறிவு பெற்றவர்களாக இருக்கும் அளவில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு அமைதல் வேண்டுமென்று எடுத்துச் சொல்ல விரும்பு கிறேன்.

தமிழிலேயே எல்லாவற்றையும் படித்து எல்லாவற்றையும் நன்கு அறிந்து கொள்ளும் அளவிற்கு ஒரு நிலை ஏற்படவேண்டும் என்பதுதான் இந்த அரசின் குறிக்கோளாக இருந்து தீர வேண்டும். அந்தக் குறிக் கோளைத்தான் இந்த அரசு கொண்டிருக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகிறேன். இன்று இல்லாவிட்டால் 1970-ல், இல்லாவிட்டால் கி. பி. 2,000-ல் ஆவது என்றாவது ஒரு நாள் நம் தாய் மொழியாகிய தமிழ் மொழியில், வட்டார மொழியில் பெற வேண்டிய பயிற்சிகள் அத்தனையையும் பெறுவதற்கு, அதற்கு வேண்டிய தகுதி, திறமை அத்தனையையும் அம்மொழி பெற எப்பொழுதாவதும் சரி—வேண்டிய முயற்சிகளை மேற்கொள்வது இந்த அரசின் குறிக்கோளாக இருக்க வேண்டுமென்பதை நான் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். பல்கலைக் கழகங்களில் எல்லாப் பாடங்களும் ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுக்கப் படுவது என்பது இருந்துவருகிற ஒரு நிலைமையாகும். தமிழிலேயே எல்லாப் பாடங்களும் சொல்லிக் கொடுக்கப்படவேண்டும் என்பது, அப்படி சொல்லிக் கொடுக்கப்படுகிற ஒரு நிலை ஏற்படவேண்டும் என்பது நாம் விரும்புகிற ஒரு நிலைமையாகும். அப்படி நாம் விரும்புகிற நிலைமையைக் கொண்டு வர முயல்கிறபோது இடைக்காலத்தில் சிலபல சிக்கல்கள் இருக்கத்தான் செய்யும், சிலபல சங்கடங்கள் நேரிடத்தான் செய்யும். அந்த சங்கடங்களை நாம் ஏற்றுக்கொண்டு தீரவேண்டும். தமிழிலேயே எல்லாப் பாடங்களைப் படிக்கவும், தமிழிலேயே எல்லாக் காரியங்களையும் கவனிக்கும் நிலைமை ஏற்படும்போது, ஆங்கிலத்தின் தொடர்பு நமக்கு அறவே வேண்டாமா என்றால் அப்பொழுதும் ஆங்கிலத்தின் தொடர்பு நமக்கு வேண்டும். இன்றைய உலகச் சூழ்நிலையில் 100-க்கு 50-க்கு மேற்பட்டவர்கள் ஆங்கில அறிவு பெற்றுத்தான் அறிவியல் உலகில் நிற்கிறார்கள் என்ற தன்மையை நாம் பார்க்கிறோம். அகில உலகத் தொடர்புக்கு, அகில உலக விஞ்ஞான தொடர்புக்கு, அகில உலக அர சியல் தொடர்புக்கு, அகில இந்திய தொடர்புக்கு ஆங்கிலம் இருந்தே தீரவேண்டும். ஆங்கில மொழி வளர்ச்சியை நாம் தொடர்ந்து பெற்று வருவதில் தவறில்லை. தமிழால் முடியாத இடத்தில், அதை நிறைவு செய்ய ஆங்கிலம் தேவை. ஆகவே தமிழ் அறிவைப் பெருக்கும் முயற் சியில் நாம் எடுத்துக்கொள்ளும் தீவிரம் போல் ஆங்கில அறிவைப் பெருக்குவதிலும் நாம் தீவிர முயற்சி எடுத்தல் வேண்டும். இன்று உலகில் எல்லா நாடுகளிலும் ஆங்கிலம் மூலம்தான் அறிவியல் பாடங்களை கற்றுக்கொள்கிறார்கள். ஜப்பான், சைனா, ரஷ்யா போன்ற வேறு பல நாடுகளில் அவர்கள் தங்கள் மொழியிலேயே தேவையான ஆற்றல், தகுதி பெறுகிற அளவிற்கு அம்மொழியை வளர்த்து வருகிறார்கள். இருந்தும் அவ்விடங்களிலும் பல்கலைக் கழகங்களில் ஆங்கிலத்தை வைத் துக்கொண்டிருக்கிறார்கள். அறிவியல் தொடர்பு கொள்ள, அரசியல் தொடர்பு கொள்ள, வாணிபத் தொடர்பு கொள்ள ஆங்கிலம் தேவை யாக இருக்கிறது. ஆகவே ஆங்கில அறிவு பெறுவதிலும் நாம் தீவிரம் காட்ட வேண்டும். நீந்தக் கற்றுக்கொண்ட பின்னர் தண்ணீரில் இறங்கு வதா அல்லது தண்ணீரில் இறங்கிய பின்னர் நீந்தக் கற்றுக்கொள் வதா என்று கேட்கலாம். அதற்கு நான் சொல்வது, தண்ணீரில் முதலில் இறங்கத்தான் வேண்டும், பின்னர் நீந்தக் கற்றுக்கொள்ளத்தான் வேண்டும். நீந்தக் கற்றுக் கொண்ட பின்னர் தண்ணீரில் இறங்க வாய்ப்பு



ஏற்படுவது என்பது பொருந்தி வராது. தமிழிலே பயிற்சி பெற்று நம் செயல்களை நிறைவேற்றுகிற தன்மையை நாம் அடையவேண்டும். அதில் சிலபல தொல்லைகள் நேரிடலாம். அவற்றை மெல்ல மெல்ல போக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தமிழில் சொல்லிக்கொடுக்க நல்ல நூல்கள் வேண்டும். அவற்றைச் சொல்லிக் கொடுக்க ஆசிரியர்கள் வேண்டும். தமிழில் பாடப் புத்தகங்களை அதிகமாகக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். அதற்கு தனிப்பட்டவர்களை ஊக்குவித்து அவர்களுக்கு பரிசுகள் வழங்கவேண்டும். தமிழில் பாட நூல்கள் அதிகம் வெளிவரத் தீவிர மாக முயல்தல் வேண்டும். அத்தகைய முறையில் பல்கலைக் கழகங் களில் என்றாவது ஒரு நாள் நாம் என்னுகிற நிலையை அடைய வழி ஏற்படும். நாம் மெல்ல மெல்ல போவதால் அதிக நூல்களும் இல்லை, பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் போதிய அளவில் இல்லை. ஆண்டுக்கு ஆண்டு அவற்றைப் பெருக்கி காண்பிக்கும் வழியில் நாம் முயற்சி எடுக்க வேண் டும். சிலபல கல்லூரிகளில்தான் இப்போது சிலபல பாடங்கள் தமிழில் சொல்லிக் கொடுக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இந்தளவு முயற்சியை எல்லாக் கல்லூரிகளிலும் எடுப்பதற்கு அமைச்சரவை முயற்சி எடுத்தல் வேண்டும். கல்லூரிகளில் தமிழில் படித்துப் பட்டம் பெற்று வெளி வருபவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதைப் பொறுத்தே தமிழில் படிப்பதற்குள்ள ஆர்வம் மாணவர்களுக்கு ஏற்படுகிறது. தமிழில் படித் துப்பட்டம் பெற்று வெளி வரும்போது பல துறைகளில் வேலை வாய்ப்புக்கு வழி இருக்கிறது என்றால், மாணவர்களுக்கு அதில் படிப்பதற்கு ஆர்வம் ஏற்படும். வாய்ப்பு அதிகமாக அதிகமாக ஆர்வம் அதிகமாக ஏற்படும். அப்படி வாய்ப்பு வசதி இருந்தால், கல்லூரிகளில் தமிழில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை வளர முடியும். அதற்கான தீவிர முயற்சியை அரசினர் மேற்கொள்ளவேண்டும். தமிழில் நூல்கள் வெளி யிடும் முயற்சியில் அமைச்சரவை முயன்று, சில நூல்களை வெளியிட முன்வந்திருப்பது வரவேற்க வேண்டிய ஒன்றாகும். அதற்கென்று தனி நிபுணர் குழு ஒன்றை அமைத்து அந்த நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் எந்தெந்தப் பாடங்களை எந்தெந்த நிலைகளுக்கு வைக்க வேண்டு மென்று முடிவு கட்டவேண்டும். அப்படி அமைக்கப்படுகிற குழுவில் மனோதத்துவ வல்லுனர் ஒருவரும் இருக்கவேண்டும். அப்படி ஒருவரை அக்குழுவில் இணைத்து எந்தெந்த பருவத்தில் இருப்பவர்களுக்கு, எந் தெந்தப் பாடங்கள் அமைய வேண்டும் என்பதை அவர்கள் மூலம் அறிய வேண்டும். அதில் போதிய கவனம் செலுத்தி பாட திட்டங்கள் வகுக்கப் பெற வேண்டும். தமிழில் என்னென்ன இலக்கியங்கள் இருக்கின்றன என்ற விவரம் நம்மிடம் இருக்கிறது. அதையும் அக்குழு ஆராய்ந்து துவக்கப்பள்ளியில், இடைநிலைப் பள்ளியில், உயர்நிலைப் பள்ளியில், கல்லூரிகளில் எந்தெந்த நூல்கள் எது எதற்கு பயன்படும், எந்தெந்த இலக்கியங்கள் எது எதற்கு பயன்படும் என்று அவர்கள் வரையறுத்து வைக்கவேண்டும்.

அதிலே கூட கருத்துக்களைப் பொருத்து, துவக்கப் பள்ளியில் படிக்கிற மாணவர்களுக்குச் சொல்லப்படுகிற கருத்து, இடைநிலைப் பள்ளியில் படிக்கிற மாணவர்களுக்குச் சொல்லப்படுகிற கருத்து, உயர்நிலைப் பள்ளியில் படிக்கிற மாணவர்களுக்குச் சொல்லப்படுகிற கருத்து என்று நிர்ணயிக்கவேண்டும். உதாரணத்திற்கு நல்வழியை எடுத்துக் கொண்டால், சில பாடல்களை எடுத்து துவக்கப் பள்ளியில் படிக்கிற மாணவர்களுக்கு சொல்லிக்கொடுக்கவும், இடைநிலைப் பள்ளி மாணவர் களுக்குச் சொல்லிக் கொடுக்கத் தகுதியானவைகளை எடுத்து அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கவும், அதே முறையில் உயர்நிலைப் பள்ளி மாணவர் களுக்கு ஏற்றவைகளை அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோல இருக்கக்கூடிய இலக்கியங்களையெல்லாம் தொகுத்து, என்னென்ன இலக்கியங்கள் என்னென்ன தன்மை வாய்ந் தன, என்னென்ன மொழித்தன்மை வாய்ந்தன என்று பார்த்து, இன்னின்ன இலக்கியங்கள் உயர் நிலைப் பள்ளிகளில் சொல்லிக் கொடுக் கப்படவேண்டும், இன்னின்ன இடைநிலைப் பள்ளிகளில் சொல்லிக் கொடுக் கப்படவேண்டும், இன்னின்ன துவக்கப்பள்ளிகளில் சொல்லிக் கொடுக்கப் படவேண்டும் என்று வரைமுறைப் படுத்துகிற பணியினை அந்தக் குழுவினர் கொள்ளவேண்டும்.

யைப் பெறுகின்ற வாய்ப்பு, நாடு நகரங்கள், பட்டி தொட்டிகள் எங்கும் விரிவுபடுத்தப்பட்டு வரக்கூடிய நிலைமையில் இருப்பதையும் பார்க்கிறோம். பொதுவாக நாட்டு மக்களிடத்தில் நிலவி வரும் கருத்து, "கல்வி வளருவதற்கு ஏற்பாடு செய்கிறோமே தவிர, கல்வியின் தரம் முன்பு இருந்த நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சற்றுக் கீழே போய்க் கொண்டிருக்கிறது" என்பதுதான். அந்தக் கருத்தைப் பேரறிஞர்களும், பொது மக்களும், பிறரும் எடுத்துக் கூறி வருகிறார்கள். அந்தத் தரத்தை உயர்த்துவதற்கு திறமையைப் பெருக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம். சின்னஞ்சிறு பிள்ளைகள் பயிலுகின்ற வகையில் "ப்ரி-ப்ரைமரி" பள்ளிகளை ஏற்படுத்துகிற முயற்சியில் அரசினர் ஈடுபடவேண்டும். தனிப்பட்டவர்கள் அந்த முயற்சியிலே ஈடுபட்டால், அப்படிப்பட்டவர்களுக்கு அரசாங்கம் பொருள் உதவி செய்து ஊக்குவிக்க வேண்டும். மேலை நாடுகளில் கொடுக்கப்படுவதைப் போன்ற பயிற்சிகளை நம்முடைய சின்னஞ்சிறுவர்கள் பெறக்கூடிய வகையிலே ஊக்குவிக்க வேண்டுமென்று கூற விரும்புகிறேன். துவக்கப்பள்ளிக் கல்வியின் மூலமாகத்தான் ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையை மிக நல்ல முறையில் ஈடேற்றவும், உலகத்தையும், தன்னையும், தன்னுடைய நாட்டையும் புரிந்து கொண்டு பணியாற்றவேண்டியவனாக இருக்கிறான். தேவைப்படும் அறிவைக் கொடுக்கக் கூடிய அளவில் துவக்கப் பள்ளிகளின் பாடத் திட்டங்கள் அமையவேண்டும். வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட துறைக்கு தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளும் அடிப்படையைப் பெறும் வகையில் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு அமைய வேண்டும். ஒரு குறிப்பிட்ட துறையில் தன்னை ஆட்படுத்திக்கொண்டு முழு அறிவும் பெறும் வகையில், வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் அளவுக்குக் கல்லூரிப் படிப்பு அமைய வேண்டும். நுணுக்கங்களையெல்லாம் அறிந்து கொள்ளும் அளவுக்குத் தொழில் நுட்பக் கல்வி அமையவேண்டும். அந்த முறையில் பல வேறு சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான முறைகளை வகுப்பதற்காகக் கல்விக் குழு ஒன்று அமைக்கப்பட்டு அது நிலைமைகளை ஆராய்ந்து வருகிறது. அவர்கள் ஆராய்ச்சி செய்து, அவர்களால் தயாரிக்கப்பட்ட திட்டம் இந்த மன்றத்தின் முன் வைக்கப்படும்போது அதைப் பற்றி விரிவாகப் பேச வாய்ப்புக் கிடைக்கும் என்று நினைக்கிறேன். அப்போது பயிற்சி மொழித் திட்டம் பற்றியும், மூன்று மொழித் திட்டம் பற்றியும் பேசலாம் என்று கருதுகிறேன்.

துவக்கப் பள்ளியைப் பொறுத்தவரையில் பள்ளிகளை நடத்துகிறவர்களிடையேயும், ஆசிரியர்களைப் பொறுத்தும் சிலபல சங்கடங்கள் இருப்பதைப் பற்றி பரவலாக எடுத்துச் சொல்லப்பட்டது. 1958-ம் ஆண்டு உத்தரவுப்படி ஒரு ஆசிரியருக்கு எத்தனை மாணவர்கள் என்ற விகிதாசாரம் இருக்க வேண்டும் என்று பார்த்தால், அதிக அளவு 35 மாணவர்கள் இருக்க வேண்டுமென்பதாகும். முப்பத்தைந்து மாணவர்களுக்கு அதிகமாக எண்ணிக்கை பெருகுமானால், அதனை இரண்டு வகுப்புகளாக்கி, இரு வேறு ஆசிரியர்களிடத்தில் ஒப்படைக்கவேண்டும். 1962-ஆம் ஆண்டில் அந்த உத்தரவு மாற்றப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக என்ன நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கின்றதென்றால், 70 மாணவர்கள் இருந்தால்தான் அதனை இரண்டு வகுப்புகளாகப் பிரித்து இரண்டு ஆசிரியர்களிடம் ஒப்படைக்க முடியுமே தவிர, 69 மாணவர்கள் இருந்தாலும் ஒரே ஆசிரியர் தான் அந்த 69 மாணவர்களுக்கும் பயிற்சி கொடுக்க வேண்டும். ஒரே ஆசிரியர் 60-க்கு மேற்பட்ட பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டுமென்ற நிலை இருந்தால், அது கல்வியின் தரத்தை உயர்த்துவதாக இராது. முப்பத்தைந்து மாணவர்கள் என்ற அளவிலே இருந்தால், ஆசிரியரும், யார் யார், எது எதிலே பலவீனமாக இருக்கிறார்கள் என்று கண்டறிந்து, அவர்களை ஊக்குவிக்கவும், அவர்களுடைய திறமையைப் பெருக்கவும் வழிவகைகள் ஏற்படும். ஆகவே, 60, 65 மாணவர்கள் என்ற அளவிலே இருந்தால் அதை இரண்டாகப் பிரித்து இரு வேறு ஆசிரியர்களிடத்தில் பயிற்சி கொடுக்கும் பொறுப்பினை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கூடுமான வரையில் ஓராசிரியர் பள்ளி முறையை எடுத்து விடும் முயற்சியை அரசினர் எடுத்துக்கொண்டால் மிக மிக நல்லது. மிக மிக இன்றியமையாத நிலையில் மட்டுமே, பத்து, பன்னிரண்டு மைல்கள்



சென்றால்தான் பள்ளிகள் இருக்கின்றன என்ற நிலைமையில் இருக்கும் பகுதிகளில் மட்டும் வேண்டுமானால், பல ஆசிரியர்களைப் போட்டு பள்ளிகளை நிறுவ முடியாது என்ற நிலையில் வேண்டுமானால், அப்படிப்பட்ட பகுதிகளில் ஓராசிரியர் பள்ளியை நிறுவலாம். மற்றபடி, கூடுமான வரையில் வகுப்புக்கேற்ற தனித்தனி ஆசிரியர்களைக் கொண்ட பள்ளிகளை நிறுவுவதுதான், கல்வியின் தரத்தை உயர்த்த மிகவும் பயன்படுவதாக இருக்கும்.

தற்போது தொழில் நுட்பக் கல்வியைப் பெறவேண்டுமென்பதிலே நாட்டிலே உள்ள மாணவர்கள் அத்தனைப் பேரும் அக்கரை காட்டுகிறார்கள் என்பதை நாம் நன்றாக அறிவோம். தாமாகவே சிலபல தொழில்களைத் துவக்கவும், வளர்ந்துவரும் தொழில்களில் ஈடுபடவும் தொழில் நுட்பக் கல்வியைப் பெறவேண்டுமென்பதிலே மாணவர்கள் பேரார்வம் காட்டுகிறார்கள். உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, தொழில் நுட்பக் கல்வியைப் பயின்று வாழ்க்கையில் வருவாயைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் இன்று 70·80 சதவிகிதத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அத்தனை பேருக்கும் தொழில் நுட்பக் கல்வி கொடுக்கும் அளவுக்கு வாய்ப்பும் வசதிகளும் போதுமானவையாக இல்லை. வாய்ப்பையும் வசதிகளையும் ஏற்படுத்த வேண்டுமென்றால், கட்டடச் செலவு செய்யவேண்டும், ஆய்வுக் கூடங்கள் கட்டவேண்டும், ஆராய்ச்சி நிலையங்கள் அமைக்கவேண்டும் அதற்கெல்லாம பெருஞ்செலவுகள் ஏற்படும். அந்தச் செலவினைத் தாங்கும் அளவுக்கு மாநில அரசு அமையவில்லை. மேலும் தற்போது நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்கக் கூடிய நிலையில், அதிக அளவுக்குப் பணத்தைச் செலவழிக்க முடியாத நிலையில் இருக்கிறோம். ஆகவே, தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் "ஷிப்ட் முறையை" புகுத்த முயற்சிகளை இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும். அதன் காரணமாக இரண்டாம் முறையாக ஏற்படக்கூடிய கட்டடச் செலவுகளோ, ஆய்வுக் கூடங்களை அமைக்கும் செலவுகளோ ஏற்படா. அதிகப்படியான 12-30 p.m.
மாணவர்கள் தொழில் நுட்பக் கல்வி பெற வழிவகைகள் ஏற்படும் முறையில் முயற்சி செய்யவேண்டுமென்று அரசினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

பாட மொழியைப் பற்றிச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நமது தாய் மொழி தமிழ். இந்த மாநிலத்துக்கு உரிய மொழி தமிழ், அந்த மொழியிலே அரசியல் துறை செயலாற்ற வேண்டும், ஆட்சி நடைபெறவேண்டும், அலுவலகங்கள் நடைபெற வேண்டும், நீதிமன்றங்கள் நடைபெற வேண்டும், மற்றப் பல நிலையங்களும் நடை பெறவேண்டும் என்ற ஆர்வம் தமிழகப் பெருங்குடி மக்களிடத்திலே ஏற்பட்டிருப்பதை அத்தனைப் பேரும் நன்றாக உணருவோம்.

மெல்ல மெல்ல அந்த நிலையை உருவாக்கும் முயற்சியில் நாம் ஈடுபடவேண்டியவர்களாகயிருக்கிறோம். தமிழை மட்டும் வைத்துக் கொண்டு இன்றைய தினம் அகில உலக தொடர்பு கொள்வது, அகில உலக வாணிபம் செய்வது, அகில உலக அரசியல் தொடர்பு கொள்வது ஆகிய இவற்றைச் செய்ய முடியுமா என்றால் அது மட்டும் போதாது. தமிழால் எந்தெந்த இடத்தில் எந்தெந்த வகையில், எதை எதை செய்யமுடியவில்லையோ அப்போது அந்த இடத்தில் வேறு ஒரு மொழி அவசியம் தேவை. தமிழால் நிறைவேற்றித் தர முடியாததை நிறைவேற்றித் தரும் அளவிற்கு ஆற்றல் கொண்ட மொழி ஆங்கிலமே. அது நம்மோடு இருநூறு ஆண்டுகளாகப் பழக்கப்பட்டதொரு மொழி. தமிழ் அறிவை எந்தளவு பெற வேண்டுமென்று விரும்புகிறமோ அந்தளவு ஆங்கில அறிவு பெறுவதும் அவசியம் என்பதில் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது.

உயர்நிலைப் பள்ளி அளவில் தமிழில் பாடங்களை படித்து அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டும். அப்படி தமிழில் பயிற்றுவிக்கிற முறை இன்று நடைமுறையில் இருக்கிறது. அந்தளவு ஆங்கில அறிவையும் வளர்க்கும் முயற்சி தீவிரப்படுத்தப்படவேண்டும். மூன்றும் வகுப்பிலிருந்து ஆங்கில மொழியில் பயிற்சி அளிக்கிற திட்டம் மேற்கொள்ளப்பட்டு

உடனேயே ஊர் மக்களும் மதிப்புக் கொடுக்கும் நிலை ஏற்படும். மாணவர்களும் உடனே மதிப்புக் கொடுக்கும் நிலை ஏற்படும். சில இடங்களில் ஆசிரியர்களாக இருப்பவர்களுக்கும், மாணவர்களுக்கும் வேறுபாடு தெரிவதில்லை. சில இடங்களில் சேவகர்களுக்கும் ஆசிரியருக்கும் கூட வேறுபாடு தெரிவதில்லை. ஆசிரியரை விட சேவகர் மிடுக்காக இருக்கிற நிலை கூட இருக்கிறது. இத்தகைய வேறுபாட்டைப் புரிந்துகொள்ளும் அளவுக்காவது சீருடைத் திட்டத்தைப் பெருக்கவேண்டும். அவர்களாகச் சீருடை தைத்துக் கொள்வதற்கு வாய்ப்பு இல்லாவிட்டாலும், சர்க்காரே தங்கள் செலவில் தைத்து வழங்க முன் வரவேண்டும். மாணவர்களுக்குச் சீருடை என்ற நிலைமை ஏற்படுமானால் சமத்துவ மனப்பான்மை ஏற்பட்டு, ஒரே எண்ணத்தோடு பழகுவதற்கு வாய்ப்பு ஏற்படும். சீருடையைப் புகுத்துவதிலே, சீருடை இதுதான் என்று வரையறுத்து விட்டால், பெற்றோரும் மற்றோரும் தாங்களாகவே தைத்துக் கொடுப்பதற்கு முன் வருவார்கள்.

இந்த முறைகளிலே உயர்நிலைப்பள்ளிகளிலே சீர்திருத்தம் செய்வதன் மூலமும், கல்லூரிகளில் சீர்திருத்தம் செய்வதன் மூலமும், கல்வித் துறையின் தரத்தை உயர்த்துவதற்கு மேலும் மேலும் முயற்சி செய்ய வேண்டும். வருங்காலத்தில் கல்வித் திட்டம் எப்படி இருக்கவேண்டும் என்று திட்டம் தீட்டப்படுகிறது. அந்தத் திட்டம் இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டு விவாதிக்கப்படுகின்றபோது மேலும் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லுவோம், அதை நிறைவேற்ற வழிவகை பிறக்கும் என்று எண்ணி, எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் துணைச் சபாநாயகர் அவர்களே, நான் இப்பொழுது கோரியிருக்கிற மான்யத்தொகை, மற்ற மான்யங்களின் தொகையைவிட அதிகமான தொகையாகத்தான் இருக்கிறது. அதைப்பற்றி கனம் உறுப்பினர்கள் குறைபாடாகக் குறிப்பிடவில்லை, பாராட்டும் முறையில்தான் குறிப்பிட்டார்கள். இந்த மான்யத்திற்கு ரூ. 29 கோடிக்கு மேலே ஆகிறது. இந்த மான்யம் சாதாரணக் கல்விக்கு மட்டுமல்ல, தொழில் நுட்பக் கல்விக்கும் சேர்த்துத்தான். சில கனம் அங்கத்தினர்கள் தொழில் நுட்பக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தினார்கள். தொழில் நுட்பக் கல்விக்காக சென்ற வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 1 கோடி 20 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது ரூ. 1 கோடி 60 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் கவனித்திருப்பார்கள். பொதுக் கல்வி, தொழில் நுட்பக் கல்வியோடு மியூஸியம், ஆர்கியாலஜி போன்ற சில பிரிவுகளுக்கும் செலவு செய்யவேண்டிய தொகையையும் சேர்த்துத்தான் இந்த மான்யம் இங்கே இப்பொழுது கோரப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய தொகைக்கு மான்யம் கோரப்படுகிறது, ஆனால் பேசுவதற்கு போதிய அவகாசம் இல்லை, போதிய அவகாசம் வேண்டும் என்று திரு. மதியழகன் அவர்கள் முதலில் கூறினார்கள். அறிவை வளர்ப்பதற்குத்தான், இவ்வளவு முயற்சி, இவ்வளவு செலவு, அதற்காக மான்யம் கோரப்படுகிறது. ஆனால், இந்த மன்றத்தில் உள்ள அங்கத்தினர்கள் யாவரும் அறிவில் சிறந்தவர்கள். அவர்கள் உணர்வார்கள். சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் தான் அறிவுக்கு ஒரு சின்னம், அறிவுத் திறனுக்கு ஒரு சின்னம். ஆகவே, தங்கள் கருத்துக்களை தெரிவிப்பதற்கு போதிய அவகாசம் இல்லையென்றாலும், கனம் அங்கத்தினர்கள் அதை பொருட்படுத்தவில்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

மேலும், நான் முன்பே தெரிவித்ததுபோல், கல்விக் கொள்கையைப் பற்றி மேலும் ஒரு நாள் இந்தத் தொடர்புக் கூட்டம் முடிவதற்கு முன்பே அநேகமாக ஏப்ரல் மாதம் முதல் தேதியன்று 4 மணி நேரத்திற்கு மேலாக விவாதிக்கலாம் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும், அப்பொழுது கல்விக் கொள்கையைப்பற்றி ஒரு நிர்ணயம் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். அதுதான் என்னுடைய கவலையும், அரசாங்கத்தினுடைய கவலையும். மாறுதலே கூடாது என்று யாரும் கூறமாட்டார்கள். அவசியமாயின், மாறுதல் செய்யத்தான் வேண்டும். ஆனால், அடிக்கடி மாறுதல் செய்வது, அடிக்கடி பரீட்சை செய்வது, நிரந்தரம் இல்லாத நிலை,



உறுதி இல்லாத நிலை, எந்தத் துறையிலும் கூடாது. அதுவும், கல்வித் துறையில் முக்கியமாகக் கூடாது. பல பிரச்னைகள் இன்னும் முடிவு செய்யப்படாத ஒரு நிலையில்தான் இருக்கின்றன. இப்பொழுது அதைப் பற்றியெல்லாம் சீக்கிரம் முடிவு செய்து, அதை இந்த மன்றத்திற்கு அறிவித்து, இந்த மன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்று, ஒரு நிரந்தரமான கொள்கையை, வருகிற கல்வி ஆண்டு தொடங்குவதற்கு முன்னமேயே அடுத்த ஆண்டிலிருந்து அமுலுக்குக் கொண்டு வரக்கூடிய ஒரு திட்டத்தை எல்லோரும் ஏற்றுக்கொள்ளச் செய்து, அதைப் பின்பற்றச் செய்யலாம் என்ற ஒரு நோக்கத்தோடு இப்பொழுது இதில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள்.

இந்த விவாதத்தில் பல கனம் அங்கத்தினர்கள் கலந்து கொண்டார்கள். ஆனால், ஒன்று இப்பொழுதே கூற விரும்புகிறேன். அவ்வாறு எப்பொழுதும் நான் கூறுவதற்கு வாய்ப்பு ஏற்படுவதில்லை. கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் கூறிய பல அரிய கருத்துக்களையும், சிறந்த கருத்துக்களையும் அப்படியே நான் முற்றிலும் ஏற்றுக்கொள்கிறேன். இப்பொழுதே கூறிவிடலாம். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதை பொதுவாக நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லக் கூடும். அதில் ஆட்சேபிப்பதற்கு ஒன்றும் இடமில்லை. அவர்கள் கூறிய கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டிய கருத்துக்கள்தான், கவனம் செலுத்தவேண்டிய கருத்துக்கள்தான். அப்படி கவனம் செலுத்தப்பட வேண்டிய கருத்துக்களில் மேலும் கவனம் செலுத்தப்படும். அரசாங்கமும், கல்வித் துறையும் இதில் மேலும் கவனம் செலுத்தும் என்று நான் இப்பொழுதே கூற விரும்புகிறேன்.

கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் எப்பொழுதும் உணர்ச்சி மிகுதியோடு பேசுவார்கள். உணர்ச்சி மிகுதி ஏற்பட்டால் ஆவேசமும் ஏற்படுகிறது. அதனால் சில கருத்துக்களை ரொம்ப ஆணித்தரமாகச் சொல்ல வேண்டும், ரொம்பக் கண்டிப்பாகச் சொல்லவேண்டும், உறுதியாகச் சொல்ல வேண்டும் என்று எச்சரிக்கையாகக்கூட அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை நான் தவறுதலாக எடுத்துக் கொள்ளவில்லை. நான் பின்னால் சொல்லக்கூடியதையும் அவர்கள் தவறுதலாகக் கொள்ளக் கூடாது. அவரை ஸீரியஸாக நான் எடுத்துக் கொள்ளப்போவதில்லை. அவருடைய எச்சரிக்கையை நான் ஸீரியஸாக எடுத்துக்கொள்ளப் போவதில்லை. அவர் உணர்ச்சி மிகுதியால் சொன்னார். அதேமாதிரி கனம் அங்கத்தினர் திரு. குஞ்சன் நாடார் அவர்கள் சவால் விட்டார்கள். அதுவும் நமக்குப் புதியதல்ல. அதையும் நான் ஸீரியஸாக எடுத்துக் கொள்வதற்கில்லை. ஒன்று பற்றி எனக்கு திருப்தி. கனம் அங்கத்தினர் திரு. கோசல்ராம் அவர்கள் கல்வித் துறையிலே மிகுந்த அக்கறை கொண்டு பேசக்கூடியவர்கள், பேசி வருகிறார்கள். அவருடைய இன்றைய பேச்சிலே மிகுந்த அபிவிருத்தி இருந்தது. அதைத்தான் எனக்கு ஓரளவுக்கு மகிழ்ச்சி என்று சொன்னேன். நாம் முன்னேறிப் போகவேண்டுமே தவிர, பின்னாலே போகக்கூடாது. இப்பொழுது அவர்கள் பேசிய பேச்சுக்கும், முன்பு நாம் கேட்ட அவருடைய பேச்சுக்கும் கொஞ்சம் அபிவிருத்தி இருந்தது.

இப்பொழுது முதலில் சொல்லிவிடலாம் என்று நினைக்கிறேன். கொள்கையைப்பற்றி மீண்டும் இந்த மன்றத்தில் பின்னாலே விவாதம் வரப்போகிறது. கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் ரொம்ப உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார்கள். போதனா மொழியைப்பற்றி பேசினார். அதிலே ஒரு அடிப்படையான விஷயத்தை நான் அவர்களுக்கும், மற்ற உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எந்த மொழியானாலும் சரி, முக்கியமானது நமது தாய்மொழி. தாய் மொழியை நன்றாகப் படிக்கவேண்டும். அதற்கு நாம் கல்வி அமைப்பிலே முதல் இடம் கொடுத்திருக்கிறோம். அதற்கு எப்பொழுதும் முதல் இடம் இருக்கும். அதை எல்லோரும் படிக்க வேண்டும். அதை நன்றாகப் படிக்க வேண்டும். தமிழ் என்றாலே ஒரு அலட்சியம் சில பேர்களுக்கு இருக்கிறது. அது கூடாது. மேடையிலே பேசவேண்டும், அவ்வளவுதானே, அதிலே படிப்பதற்கு ஒன்றுமில்லை, நம்முடைய தாய் மொழிதானே என்று சிலர்

அரசினர் புத்தகம் வெளியிட்டு, அவைகள் விற்பனை ஆகும்போது, தனிப்பட்ட விற்பனையாளர்களுக்கு 25 சதவிகிதம் கழிவுத் தொகை கொடுக்க கூடிய நிலை இருக்கிறது. அரசினரே அடித்து, இலட்சக் கணக்கில், 10 இலட்சக்கணக்கில் வெளியிடுகிற நிலையைப் பார்க்கும்போது கழிவுத் தொகை ஏராளமாகத் தான் இருக்கும். அந்தந்தப் பள்ளிகளில் நேரடியாக அரசினரிடத்தில் வாங்கி, வரக்கூடிய கழிவுத் தொகையை மதிய உணவுத் திட்டத்தில் சேர்த்து, அந்த வகையில் பயன்படுத்தப்பட்டால், பள்ளிகளுக்கும் அது பயன்படும். தனியார்களுக்குச் செல்லாமல் பள்ளிகளுக்குப் போய்ச் சேர நல்ல வழியாகவும் இருக்க முடியும்.

மேலும் பாடத்திட்டங்களைப் பற்றிச் சொல்லுகிற முறையிலுமகூட, திரைப்படத்தின் மூலமாகப் பாடங்களைக் கற்பிக்கிற வகையை உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பெருக்குவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். அதற்கென்று ஒவ்வொரு மாவட்டத்தினுடைய தலைநகரிலேயும் ஒரு ஃபில்ம் லைப்ரரி அதாவது திரைப்பட நூல்நிலையம் வைக்க வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளுக்கு என்னென்ன பாடத் திட்டம் வைக்கிறோமோ அந்த பாடத்திட்டங்களைப் போதிக்கும் அளவுக்குத் திரைப்படங்களைத் தயாரிக்கவேண்டும். மாவட்ட தலைநகரில் அத்தகைய நிலையத்தை ஏற்படுத்திவிட்டால், ஆங்காங்கு இருக்கிற பள்ளிகள், தங்களுக்குத் தேவையான படங்களைப் பெற்று, மாணவர்களுக்குப் போட்டுக் காட்டுவதன் மூலமாக, நிலநூல், உயிர்நூல் ஆகிய பாடங்களையும், உலக நிகழ்ச்சிகளையும் பாடங்களைப் படித்துச் சொல்லுவதைவிட, அவர்கள் கண் முன்னால் காட்சிகளாகக் காணுவது, அவர்களுடைய உள்ளத்தில் பதிவதாக இருக்கும். அந்த முறையில் வழிவகைகளைப் பெருக்குவதை அரசினர் மேற்கொள்ளுதல் வேண்டும்.

பேசிப் பழகுதல், எழுதிப் பழகுதல் ஆகியவை பற்றி கனம் உறுப்பினர்கள் சிலர் எடுத்துக் கூறினார்கள். சரியாக உச்சரிக்கிற பயிற்சியை பள்ளிகளில் மாணவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அதோடு அவர்களுக்கு எழுதிப் பழகுகிற பயிற்சியையும் கொடுக்க வேண்டும். "காப்பி ரைட்டிங்" என்று சொல்லுவார்கள் முன்பெல்லாம். எழுதிப் பழகுகிற பயிற்சி உயர்நிலைப் பள்ளிகளில் பெரும்பாலும் நல்ல முறையில் இல்லை என்றே நான் கருதுகிறேன். பாண்டிச்சேரி போன்ற இடங்களில் கல்லூரி நிலையிலும் கூட கையெழுத்துப் பயிற்சி இருக்கிற காரணத்தினால், ஃப்ரெஞ்ச் மொழி படித்தவர்களுடைய கடிதங்களைப் பார்த்தாலும், அவர்கள் எழுதுகின்ற எழுத்தைப் பார்த்தாலும், யார் எழுதினாலும், எழுதுகிற எழுத்து, எழுதுகிற ஃப்ரெஞ்சு மொழி அவ்வளவு அழகாக இருப்பதைக் காணலாம். அதற்குக் காரணம் என்ன என்றால், கல்லூரியிலும்கூட பாண்டிச்சேரி, காரைக்கால் போன்ற பழைய ஃப்ரெஞ்சு பகுதிகளில் எழுத்துப் பயிற்சி உண்டு என்று கூறுகிறார்கள். அத்தகைய பயிற்சியை உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்புவரை அடிப்படையாக வைத்தால்தான் எழுதுகிற பயிற்சி சரியாகவும், செம்மையாகவும் இருக்கும். பேசிப் பழகுதல் என்று வரும்போது, ஆங்காங்கு பள்ளிகளில் உள்ள பேசிய மன்றங்கள் மூலமாக ஒவ்வொரு மாணவனும் பேசிப் பழக வேண்டும் என்ற ஒரு கட்டாய நிலைமையை ஏற்படுத்தி, மாணவர்களுடைய சொல்லாற்றல் திறமையைப் பெருக்க வேண்டும். பள்ளிகளில் இருக்கக்கூடிய நூல் நிலையங்களை விரிவுபடுத்துவதன் மூலம், ஒவ்வொரு மாணவனும் வாரத்திற்கு ஒரு மணி நேரம் ஒதுக்கி, அந்த ஒரு மணி நேரத்தை நூல் நிலையத்திற்குள்ளேயே இருந்து அந்த ஒரு மணி நேரமும் ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்துப் படித்துப் படித்து முடித்த பிறகு என்ன புரிந்துகொண்டான் என்று ஆசிரியருக்கு அறிவிக்கும் பயிற்சி ஏற்பட்டால், புத்தகங்களை உட்கார்ந்து படிக்கும் பழக்கமும், எந்தப் புத்தகத்தைப் படிக்கலாம் என்கிற ஆர்வமும் வர வர ஏற்படும். நூல்நிலையம் என்று சொன்னால் எங்கு இருக்கிறது என்று தெரியாத நிலையில், கேட்டுத் தெரிந்து கொள்ளக்கூடிய நிலையில் பள்ளிகளில் உள்ள பல நூல்நிலையங்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. வாரத்திற்கு ஒரு மணி நேரம் நூல் நிலையத்தில் இருந்தே தீரவேண்டும், ஏதாவது ஒரு புத்தகத்தைப் படித்துத் தீர வேண்டும், அதைப் படித்து அவர்கள் என்ன புரிந்துகொண்டார்கள் என்று



ஆசிரியருக்கு எழுதித்தருகிற முறையை ஏற்படுத்தினால்தான், அவர்களுக்கு புத்தகத்தை எடுத்துப் படிக்கிற பயிற்சி வளர முடியும். அதோடு நூல்நிலையப் பொறுப்பாளர்களும் நூல்நிலையப் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். எந்தெந்த நூல் எங்கெங்கே இருக்கிறது, எந்தெந்த நூலை யார் யாருக்கு கொடுக்கலாம் என்ற முறையில், அந்தந்த நூல்களைக் கேட்பவர்களுக்கு எடுத்துக் கொடுக்கும் முறையில் இருந்தால் நன்றாக இருக்கும் என்ற முறையையும் மேற்கொள்ள வேண்டும்.

குழுவினராகப் பழகுவதற்கும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கக் கூடிய முறையில் ஏற்பாடு செய்யவேண்டும். அந்த முறையில் குழுவினராகச் சேர்ந்து ஒன்றைப்பற்றி 5–6 பேர்கள் சேர்ந்து, சிந்தித்து, விவாதித்து ஒரு முடிவுக்கு வரப் பழகவேண்டும். குறிப்பிட்ட பிரச்சினை பற்றி என்ன கருதுகிறீர்கள் என்று கேட்டால் அதற்குப் பதில் சொல்லக்கூடிய முறையில் பயிற்சி ஏற்பட "க்ரூப் லைஃப்" என்ற முறையில், "கோவாப்பரேட்டிவ் லைஃப்" என்ற முறையில், கூட்டுறவு முறையில் சிந்தித்து, ஒரு முடிவு காண பயிற்சி பெறுவதற்கு ஏற்பாடு செய்தால் அது நல்ல முறையில் பயன்படுவதாக இருக்கும்.

கட்டுப்பாடு பெரும்பாலும் மாணவர்களிடத்தில் இல்லை என்று இக்காலத்தில் பரவலாகச் சொல்லப்படுகிறது. அத்தகைய தன்மையை எங்கும் காண்கின்றோம். அப்படி கட்டுப்பாடு மாணவர்களிடத்தில் இல்லாமல் இருப்பதற்குக் காரணம், முழு முதற் காரணம், அந்தப் பள்ளித் தலைமை ஆசிரியரைப் பொறுத்து இருக்கிறது. பள்ளியின் தலைமை ஆசிரியருடைய திறமை, அந்தப் பள்ளியை நிர்வகிக்கிற தன்மை, அவர் அணுகுகிற முறையைப் பொறுத்து கட்டுப்பாட்டுத் தன்மை அமைந்திருக்கிறது. சிலபல பள்ளிகளில் உள்ள தலைமை ஆசிரியர்கள் திறமையாக இருக்கிறார்கள். சில இடங்களில் தலைமை ஆசிரியர்களுக்குத் திறமை இல்லாமல் இருக்கிறது. ஆசிரியர்களிடத்தில் எதிர்பார்க்கப்படும் சொல்லிக் கொடுக்கும் திறமை வேறு, நிர்வாகத் திறமை வேறு. ஆகவே, தலைமை ஆசிரியர்களுக்கென்று சிறப்பான, அடிப்படைத் தகுதிகள், திறமைகள் வேண்டும். முதலாவதாக எடுத்துக்கொண்டால் தோற்றப்பொலிவு தலைமை ஆசிரியருக்கு இருக்க வேண்டும். மற்ற ஆசிரியர்களால், மாணவர்களால் பழிக்கப்படும் நிலைமைக்குத் தலைமை ஆசிரியர்கள் நிலைமை வந்து சேரக் கூடாது. மற்ற ஆசிரியர்களும், மாணவர்களும் தலைமை ஆசிரியரைப் பார்த்தவுடனே தாங்களாகவே கட்டுப்பாட்டோடு நடந்துகொள்ளக்கூடிய வகையில் அவர்களுடைய தோற்றப் பொலிவு இருக்க வேண்டும். இரண்டாவது, கட்டுப்பாடு வேண்டும். மற்ற ஆசிரியர்களும், மாணவர்களும் மிரட்டுகிற அளவுக்கு, அதைக் கண்டு தலைமை ஆசிரியர்கள் ஒடுகிற அளவுக்கு சில பள்ளிகளில் நிலைமை இருக்கின்றன. தலைமை ஆசிரியராக ஒருவர் எப்படி வந்தார் என்று கேட்டால் சீனியாரிட்டி கணக்குப்படி வந்து உட்கார்ந்தார் என்று சொல்லப்படுகிறது. தலைமை ஆசிரியருக்கென்று சில தகுதி, திறமைகளை வகுக்க வேண்டும். அத்தகைய திறமை உடையவர்கள் மட்டுமே அந்தப் பதவியில் வைக்கப்பட்டாலொழிய, கட்டுப்பாடுத்தன்மையைக் காப்பாற்ற முடியாது. சிறந்த கட்டுப்பாட்டுத்தன்மை ஏற்படும் முறையில் இதிலே தீவிரமான கவனம் செலுத்தவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முன்பே எடுத்துச் சொல்லப்பட்டது, அதையே மீண்டும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். சீருடையைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய இரு சாராரையும் வற்புறுத்துகிற நிலைமையை ஏற்படுத்த வேண்டும். கூடுமானால் அரசாங்கமே ஆசிரியர்களுக்கு இந்த உடையை வழங்க வேண்டும். மற்ற துறைகளில் இருக்கிறவர்களுக்கு, நீதிபதிகளுக்கு, வழக்கு அறிஞர்களுக்கு, காவல் துறையினர்களுக்கு, புகைவண்டி நிலையங்களில் பணி புரிவோர்களுக்கு தனித் தனி உடை என்று ஏற்படுத்தியிருப்பதைப் போல, ஆசிரியர்களுக்கென்று தனி உடையை, தனி நிறம் என்று கூட ஏற்படுத்தி விடலாம்; பார்த்தவுடனே ஆசிரியர் என்று தெரிந்துகொள்ளும் நிலையில் கீழே வேட்டியோ, கால்சட்டையோ இருக்க வேண்டும். மேலே போட்டுக்கொள்ளக் கூடிய கோட்டு பச்சை நிறமாகவோ, நீல நிறமாகவோ இருக்கவேண்டும். அப்படியிருந்தால் பார்த்த

நினைக்கிறார்கள். தமிழ் பெரிய களஞ்சியம். அதை நன்றாகப் படிக்க வேண்டும். தமிழ் இலக்கியத்தை நன்றாகப் படிக்கவேண்டும். தாங்கள் படிப்பது மட்டுமல்ல. தாங்களும் படித்துச் சுவைத்து, மற்றவர்களையும் சுவைக்க வைக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய அவா. கல்லூரியில் தமிழில் உயர்படிப்பிற்கு இடம் வைத்திருக்கிறோம். அதற்குக்கூட மாணவர்கள் வருவதில்லை. போஸ்டு கிராஜுவேட் கோர்ஸ் தமிழிலே வைத்திருக்கிறோம். நான் கொஞ்ச காலத்திற்கு முன்பு காரைக்குடி போயிருந்தேன். கனம் சுதந்திரா கட்சித் தலைவர் அவர்கள் அந்தக் கல்லூரிக்கு நிர்வாகி. நிர்வாகக் கமிட்டிக் குழு அங்கத்தினர் ஒருவரை என்ன கோர்ஸுகள் இருக்கின்றன என்று கேட்டேன். வேண்டாத தமிழ் கோர்ஸ் கொடுத்திருக்கிறார்கள் யூனிவர்ஸிடி என்று பதில் வந்தது. நான் அவர்களைக் குறை கூறவில்லை. வேண்டாத தமிழ் கோர்ஸ் கொடுத்திருக்கிறார்கள் என்றால் என்ன அர்த்தம் என்றால் மாணவர்கள் அதை விரும்புவதில்லை. வேண்டாத தமிழ் என்று அவர் கூறியது, யாரும் வேண்டாதது அல்ல, மாணவர் வேண்டாத தமிழ் என்ற அர்த்தத்தில்தான் கூறினார். அந்த மனப்பான்மை அறவே அகற்றப்பட வேண்டும். அதற்கு கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** 1963-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ் போதனாமொழியாக வரும், வரவேண்டும் என்று நாம் ஒத்துக்கொண்டோம். வெள்ளையறிக்கையிலும் இதுபற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் இதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். மாணவர்கள் இஷ்டத்திற்கு விடாமல் எல்லாக் கல்லூரிகளிலும் புகுத்தவேண்டும், "சேஞ்ச் ஓவர்" வேண்டும் . . . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது வேறு விஷயம். போதனாமொழிக்கு பின்னாலே வருகிறேன். இது வேறு விஷயம். தமிழ் இலக்கியத்தைப் படிப்பது, தமிழில் உயர்ந்த படிப்பு படிப்பது, போஸ்ட் கிராஜுவேட் படிப்பது, தமிழில் எம். ஏ. படிப்பது, அது எல்லாக் கல்லூரிகளிலும் வைக்கப்பட வேண்டும். தமிழுக்காக எத்தனை கல்லூரி வேண்டுமானாலும் ஏற்படுத்துவதற்கு, அதற்கு வேண்டிய ஆதரவு கொடுப்பதற்கு அரசாங்கத்தின் சார்பாக நான் தயாராக இருக்கிறேன். தமிழை நன்றாகப் படிக்கவேண்டும். படிப்பதில்லை என்பதுதான் குறை. தமிழ் எம். ஏ. படித்தவர்களை சிந்துவார்கள் யாரும் இல்லை என்று கூறுவது நமக்குத்தான் குறைவு. அதைத்தான் அகற்ற வேண்டும். அதற்குக் கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும். நல்ல உயர்ந்த தமிழ் படிப்பு இருக்கிறது என்பதை உணரச் செய்ய வேண்டும் என்று நான் சொல்லுகிறேன்.

ஆனால், போதனாமொழி என்பதின் அடிப்படை என்ன? "மீடியம்" எங்கிருந்து வருகிறது? நாம் ஒரு பாடத்தைச் சொல்லிக் கொடுக்கிறோம். அந்தப் பாடத்தை எந்த மாணவனுக்குக் கற்றுக்கொடுக்கிறோமோ அந்த மாணவன் அதைப் புரிந்துகொள்ள வேண்டும். புரிந்து கொள்ளுவதற்கு எப்படிச் சொல்லிக் கொடுக்கிறது என்று அந்த அடிப்படையில்தான் போதனாமொழி, "மீடியம்" என்பதை நாம் கவனிக்கவேண்டும். கல்லூரிப் படிப்பு என்பது உயர் படிப்பு. அந்தக் கல்லூரிப் படிப்பு சொல்லிக் கொடுப்பது நாம் உயர்நிலைப் பள்ளியில் சொல்லிக் கொடுப்பது மாதிரி இல்லை, அதைவிட கஷ்டம். அதைவிட உயர்ந்த படிப்புக்கு நாம் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. கெமிஸ்டிரியாக இருந்தாலும் சரி, பிஸிக்ஸாக இருந்தாலும் சரி, எகனாமிக்ஸாக இருந்தாலும் சரி, எந்தப் பாடமாக இருந்தாலும் சரி, அந்த மாணவர்கள் நன்றாகப்புரிந்து கொள்ளவேண்டும். மாணவர்கள் பாடத்தைப் புரிந்துகொள்ளுவதுதான் முக்கியம். அதற்கு எந்த மொழியில் சொல்லிக் கொடுப்பது? எந்த மொழியில் அவர்கள் கேட்பது என்பது இரண்டாவது பிரச்னை. அவர்கள் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. எப்பொழுது புரிந்து கொள்வார்கள், எந்த மொழியில் புரிந்துகொள்வார்கள் என்று பார்க்க வேண்டும்.



புத்தகங்கள் பற்றி கவனிக்கவில்லை என்று குற்றம் சாட்டினார்கள். 40 புத்தகங்கள் போட்டிருக்கிறோம். 40 புத்தகங்கள் எந்த மூலைக்கு? 1,000 புத்தகங்கள் வேண்டும். திரு. மதியழகன் அவர்கள் போட்டுவிடுவார்களா? எப்பொழுது முடியும்?

**திரு. கே. ஏ. மதியழகன் :** சர்க்கார் எங்களிடம் இருந்தால் நிச்சயம் போட்டு விடுவோம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சினிமாப் படத்தில் போட்டிருக்கலாம். புத்தகம் போடுவது கிள்ளுக்கீரை இல்லை. தமிழ் நன்றாகத்தெரிந்து, நல்ல விளக்கமாக புத்தகம் போடவேண்டும். கிள்ளுக்கீரை இல்லை. இவர்கள் எழுதிக் கொடுத்துவிடுவார்களா? நான் இப்பொழுதே சொல்லுகிறேன். 100 புத்தகங்கள் திரு. மதியழகன் அவர்கள் 6 மாதங்களுக்குள் எழுதிக் கொடுக்கட்டும். கல்லூரிப் படிப்பிலே எவ்வளவு புத்தகங்கள் படிக்க வேண்டும்? டெக்ஸ்ட் புக்ஸ் போதவே போதாது.

பல டெக்ஸ்ட் புஸ்தகங்களை எழுதி மாணவர்களுடைய அறிவு வளர்ச் 1.00 p.m.
சிக்கு வசதி செய்ய வேண்டியதாக இருக்கிறது. மேலும் மேலும் அவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு பல புத்தகங்களை எழுதச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறையில் அவர்களுக்கு ஊக்கம் காட்ட வேண்டும் என்றும், அக்கரை இருக்கவேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறையில் கெமிஸ்ட்ரி, பிசிக்ஸ் போன்றவைகளில் புத்தகங்களை எழுதவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது போதுமா அல்லது போதாதா என்றும் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது மாணவர்களிடையே அதிகமாக தமிழிலேயே படிக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. அதற்காகவே பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கி பீரோ ஆப் தமிழ் பப்ளிகேஷன்ஸ் என்று வைத்து நல்ல புஸ்தகங்களை எழுதச் சொல்லி இருக்கிறார்கள். மற்ற மாணவர்களும் தமிழிலேயே படிக்க வேண்டும் என்று இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது தமிழிலேயே எல்லாப் பாடங்களையும் சொல்லிக்கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. கனம் அங்கத்தினர் மதியழகனுக்கு இருக்கிற நம்பிக்கையைவிட எனக்கு அதிகமாக இருக்கிறது. அதற்கு வேண்டிய வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும் என்ற எண்ணமும் இருக்கிறது. பொதுத் தேர்தலுக்கு முன்னதாக வேறு ஒரு மந்திரி சபை இருந்தது. இதை நான் சொல்லும்போது ஒருவரைப்பற்றி குறைகூற வேண்டும் என்ற எண்ணத்தில் சொல்லவில்லை. அப்பொழுது எவ்வளவு கல்லூரிகள் அங்கீகாரம் கேட்டன? சென்ற ஆண்டில் பல கல்லூரிகள் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கின்றன. சென்ற ஆண்டில் மூன்று கல்லூரிகள் சர்வகலாசாலையை அங்கீகாரம் கோரி இருக்கின்றன. சென்ற ஆண்டில் என்ன செய்தார்கள்? அந்தக் கொள்கைகள் அப்படியே அனுசரித்து நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கையுள்ளவர்களாக இருந்ததால் அதற்குத் தடை இல்லை என்று சொன்னதால் அநேகம் கல்லூரிகள் சென்ற ஆண்டில் சேர்ந்திருக்கின்றன. சென்ற ஆண்டில் ஒன்றுமே நடைபெறவில்லை. இதைப்பற்றி பொதுத் தேர்தலுக்கு முன்னதாகவே அக்கறை எடுத்துக்கொண்டிருக்க வேண்டும். தமிழிலேயே பாடத்தைச் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்றால் அதை நிலை நாட்ட வேண்டும். அப்படிப்பட்ட ஆர்வம் எனக்கு இருக்கிறது. மாணவர்களை கட்டாயப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. இதை நான் சொல்லும்போது என்னை தமிழ் துரோகி என்றும் சொல்லுவார்கள், அப்படிச் சொன்னால் எனக்கு பரவாயில்லை. கல்லூரிகளில் எல்லாவற்றையுமே தமிழ் மொழியில் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்றால் அதை கொஞ்சம் ஜாக்கிரதையாகக் கவனிக்கவேண்டும். ஜாக்கிரதையாக கவனம் செலுத்தவேண்டும். கிராம மக்கள் இப்பொழுது, அறிவு வளர்ச்சி வேண்டும் என்று கேட்கிறார்கள். கிராமங்களிலுள்ளவர்கள் முன்னேற்றமடையவிடாமல் தமிழையே கற்றுக் கொள்ளச் சொல்லி ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ளச் சொல்லாமல் இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நம் மீது சாட்டுவதற்கு இடம் கொடுக்கக்கூடாது. "கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு" என்று

சொல்லுவது போன்று கிராமத்திலுள்ள எல்லோரும் படிக்கவேண்டும் என்றும் தங்களுடைய அறிவை வளர்ச்சி அடையச் செய்யவேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். போஸ்ட் கிராஜுவேட் படிப்பு எல்லாம் நகரங்களுக்குத்தானா, கிராமங்களுக்கு தமிழ் படிப்புதானா என்று கேட்க இடம் கொடுக்கக்கூடாது. கிராமத்திலுள்ள ஏழை விவசாயி குழந்தைகளுக்கும் குமாஸ்தாவின் குழந்தைகளுக்கும் அறிவு வளர்ச்சி ஏற்பட்டு பிற மாநிலங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்று நினைக்கிறார்கள். இப்படி ஒவ்வொருவரும் விரும்புகிறார்கள். மாணவர்களும் பெற்றோர்களும் விவசாயிகளும் அவரவர்களுடைய குழந்தைகள் நாடு கடந்து செல்ல வேண்டும், அந்த முறையில் படிக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். தமிழிலேயே உயர்ந்த படிப்பு படித்துக்கொண்டிருந்தால் மேற்கொண்டு படிக்க முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும். தமிழையே படித்துக்கொண்டிருந்தால் மேற்கொண்டு படிக்க முடியாமல் போய்விடும் என்ற கவலை இப்போது இருக்கிறது. ஆகவே மேற்கொண்டு படிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வழிவகைகள் செய்யவில்லை என்றால் அதனால் பயன் இல்லை. இங்குள்ள மாணவர்கள் மற்ற கலாசாலைகளுக்குச் சென்று படிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். தமிழையே படித்துக்கொண்டிருந்தால் மற்ற மாநிலங்களுக்குச் சென்று மற்ற கலாசாலைகளில் சேர்ந்து படிக்க முடியுமா என்பதையும் யோசித்துப் பார்க்கவேண்டும். மற்ற சர்வகலாசாலைகளிலும் சேர்ந்து படிக்கக்கூடிய வசதிகளை நாம் மாணவர்களுக்குச் செய்து கொடுக்கவேண்டும்.

மற்றொரு பிரச்னையும் இருக்கிறது. நம்முடைய நாட்டில் பல மொழிகள் பேசப்படுகின்றன. பல மொழிகள் பேசக்கூடியது நம் பாரத நாடு. இப்பொழுது ஒருமைப்பாடு இருக்கவேண்டும் என்று கூறுகிறார்கள். இப்படி நாம் ஒரு மொழியை இங்கு பயின்று விட்டு அதிலும் நமது தாய் மொழியாகிய தமிழிலேயே படித்து விட்டால் நாட்டின் ஒருமைப்பாடு பாதிக்கப்படலாம். நமது நாட்டின் ஒருமைப்பாடு பாதிக்கப்படக்கூடாது. நாம் தமிழையே படித்துக்கொண்டிருந்தால், தெலுங்கையே படித்துக் கொண்டிருந்தால், வேறு கெமிஸ்ட்ரி முதலியவைகளைப்பற்றி பேசுவதற்குக்கூட ஆங்கிலம் தெரியாமல் போய்விடும். அதனால் நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு பாதகம் ஏற்படும். கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் சொல்வதுபோன்று தமிழையே வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், தமிழிலேயே எல்லாவற்றையும் நடத்த வேண்டும் என்றும் சொன்னால் அது சரியாக இருக்காது. சமீபத்தில் ஒரு பெரியார் பேசிக்கொண்டிருந்தார். அவரிடம் இதைப்பற்றிச் சொன்னபோது இது யோசிக்க வேண்டிய விஷயம்தான், முழுமையுமே தமிழில் படித்து வந்தால் பிறகு கல்லூரிகளுக்குச் சென்றால் அங்கு படிக்க முடியாமல் பாதகம் ஏற்படும், அப்படி பாதகம் ஏற்படக்கூடாது என்று அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார். இது கவனிக்கப்பட வேண்டியதுதான் என்றும் சொல்லி இருக்கிறார். நான் சொன்னதை அவரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இன்றைக்கு மாணவர்கள் மேலும் மேலும் படிக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். வெறும் உத்யோகங்களுக்கு மட்டும் அவர்கள் படிக்க விரும்பவில்லை. பல ஆராய்ச்சிகள் செய்ய வேண்டும் என்ற முறையில் மேலும் படிக்க விரும்புகிறார்கள். தங்களுடைய அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் விரும்புகிறார்கள். மற்ற நாடுகளுக்குச் செல்ல வேண்டும் என்றும் விரும்புகிறார்கள். அதற்கெல்லாம் இது தடையாக இருக்கக்கூடாது என்றும் சொல்லுகிறார்கள். இன்னும் எவ்வளவோ ஏழைகளுடைய குழந்தைகளும், கிளார்க்குகளுடைய குழந்தைகளும் ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். முதலியவைகள் பாஸ் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள். கெமிஸ்ட்ரி, பிசிக்ஸ், பாடனி முதலியவைகள் படிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். மத்திய அரசாங்க பரீட்சையாகிய காட்டிலாகா பரீட்சைக்குச் சென்று கன்சர்வேடர் ஆப் பாரஸ்டாக வர வேண்டும் என்றும் நினைக்கிறார்கள். அதே மாதிரி பெரிய டாக்டர்களாகவும் வர வேண்டும் என்று விரும்புகிறார்கள். இவர்களுக்கு எல்லாம் மத்திய அரசாங்கப் பரீட்சைகள் இருக்கின்றன. அவை ஆங்கிலத்திலோ அல்லது ஹிந்தியிலோதான் நடத்தப்படுகின்றன



ஆங்கிலத்திலாவது அல்லது இந்தியிலாவதுதான் பரிட்சை எழுத வேண்டும் என்று அவர்கள் திட்ட வட்டமாகச் சொல்லி விட்டார்கள். கனம் அங்கத்தினர்கள் சொல்லுகிறபடி தமிழிலேயே இங்கு படித்து விட்டு அங்கு சென்றால் அந்தப் பரிட்சைகளை எழுதவே முடியாது. ஒன்று ஆங்கிலத்தில் எழுத வேண்டும் அல்லது ஹிந்தியில் எழுத வேண்டும். ஹிந்தி கற்றுகொள்வதைவிட இங்கிலீஷ் கற்றுக்கொள்வது சுலபம்.

(கனம் சபாநாயகர் தலைமை)

அடுத்தபடியாக ஒரு அங்கத்தினர் ஹிந்தி பரீட்சை வேண்டாம் என்று சொன்னதைக் குறிப்பிட்டார். மார்க் ஒன்றும் வைக்காமல் பரீட்சையை வைத்து நடத்துவது பிரேயோசனம் இல்லை என்றுதான் வேண்டாம் என்று சொல்லப்பட்டது. பெயரளவில் மட்டும் பரீட்சையை நடத்துவது எதற்கு என்றுதான் அது வேண்டாம் என்று சொல்லப்பட்டது. பரீட்சை வேண்டுமென்றால் அதை வைக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் அப்படி வைக்கும்போது எதிர்ப்பு இருக்கக்கூடாது. இப்பொழுது ஹிந்தியை தாங்களாகவே படித்துக்கொண்டிருக்கிறார்கள். அதைப் படிக்கவேண்டும் என்ற ஆர்வம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. மற்ற மாகாணங்களுடன் தொடர்பு வேண்டும் என்று நினைத்தால் இங்கு தமிழையே வைத்துக்கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை. வைத்துக்கொள்ள முடியாது. தமிழையே வைத்துக்கொண்டிருந்தால் மற்ற மாகாணங்களுடன் தொடர்பு கொள்ள முடியாது. ஆங்கிலம் பேசத் தெரிந்து விட்டால் மட்டும் போதாது. கெமிஸ்ட்ரி, பிசிக்ஸ், பாடனி, ஸீவாலஜீ, எக்கனமிக்ஸ், சோஷியாலஜீ எதுவாக இருந்தாலும் அவைகளை தமிழில் படிக்க முடியாது. மற்ற மற்ற பல்கலைக் கழகங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுமானால் தமிழை வைத்துக்கொண்டிருக்க முடியாது. தமிழில் படித்துவிட்டால் எல்லோருடனும் தொடர்பு கொள்ள முடியாது. அதனால்தான் ஆங்கிலமும் படிக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதனால் தமிழே படிக்கக்கூடாது ஆங்கிலம்தான் படிக்க வேண்டும் என்று சொல்ல மாட்டேன், கட்டாயப்படுத்தி உத்தரவு போடுங்கள் என்று சொல்லுகிறார்கள். தமிழ்தான் படிக்க வேண்டும். ஆங்கிலம் போதனா மொழியாக இருக்கக்கூடாது என்பது கனம் மதியழகனுடைய எண்ணமாக இருக்கலாம். அவர் சொல்லுவதை வைத்துக்கொண்டால் அறிவு வளர்ச்சித்துறையைப் பொறுத்த வரையில் மற்ற சர்வகலாசாலைகளுடன் தொடர்பு கொள்ள முடியாது. மற்ற நாடுகளுடன் தொடர்பு கொள்ள முடியாது. மற்ற நாடுகளிலிருந்து இங்கு வரக்கூடிய பெரிய தலைவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாது. இண்டர்பிரிட்டர்தான் வைத்துக்கொள்ள வேண்டும். இண்டர்பிரிட்டர் வைத்துக்கொண்டால் மற்ற நாடுகளுடன் மேலும் மேலும் தொடர்பு வைத்துக்கொள்ள முடியாது. மேலும் மேலும் அறிவு வளர்ச்சி பெற முடியாது.

பண்டைய காலத்தில் நமது நாட்டில் பலப்பல சர்வகலாசாலைகள் இருந்திருக்கின்றன. பல்கலைக்கழகங்கள் இருந்திருக்கின்றன. சமீபத்தில் இருக்கிற காஞ்சிவரத்தில்கூட ஒரு பல்கலைக்கழகம் இருந்தது. அது ஒரு பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகம். இப்படி பல பல்கலைக்கழகங்கள் இருந்ததைப்பற்றி கனம் அங்கத்தினர்கள் கேட்டிருப்பார்கள். காஞ்சியில் இருந்த பிரசித்தி பெற்ற பல்கலை கழகத்தில் பேராசிரியராக இருந்த ஒரு பெரியார் அவர்களை நளந்தா என்று வட இந்தியாவிலுள்ள ஒரு பல்கலைக் கழகத்திற்கு வரவழைத்து அங்கு பணியாற்ற சொல்லி இருக்கிறார்கள். அப்படி அந்தப் பெரியார் அங்கு சென்று நல்ல பணியாற்றி இருக்கிறார் அவர் தமிழிலேயே படித்திருந்தால் அவரால் அப்படிப் போயிருக்க முடியாது. அப்படி அவர் போனார் என்ற வரலாறு இருக்கிறது. அதை கனம் அங்கத்தினர்கள் கேட்டிருப்பார்கள் என்றே நினைக்கிறேன். தமிழ் மட்டும் படித்திருந்தால் அவர்கள் இங்கிருந்து அங்கே சென்று எப்படிப் பணியாற்றி இருக்க முடியும்? ஆதிகுமரகுருபரர் காசியில் ஒரு மடத்தை ஸ்தாபித்தார் என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிந்திருக்கும். அந்த ஆதீனத்தார் தமிழுக்குச் சிறந்த தொண்டாற்றுகிறார்கள். ஆதிகுமரகுருபரர் தமிழ் நன்றாகப் படித்தவர். சம்ஸ்க்ருதமும், ஹிந்தியும் படித்தவர். காசியில் அவர் கம்ப இராமாயணத்தைப்பற்றி

தமிழில் பேசினால் எத்தனை பேருக்குத் தெரிந்திருக்கும்? அவர் ஹிந்தியிலும் புலமை பெற்றிருந்த காரணத்தால், ஹிந்தியில் அவர் அங்கே பிரசங்கம் செய்தார்கள். தமிழில் உள்ள கம்ப இராமாயணத்தை ஆதி குமர குருபரர் ஹிந்தியில் செய்த பிரசங்கத்தைக்கேட்டுக் கொண்டிருந்த பிரசித்தி பெற்ற துளஸிதாஸ் ஹிந்தியில் இராமாயணம் எழுதினார் என்ற வரலாற்றை ஒருக்கால் சிலர் கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன்.

இப்பொழுது நாம் மேலும் அறிவை வளர்த்துக் கொள்ளவேண்டுமென்றால், அதற்குத் தமிழ்தான் செரல்லிக் கொடுக்க வேண்டும் என்பதல்ல. உண்மையிலேயே பல "ஸப்ஜெக்ட்"களை நன்றாகத் தெரிந்துகொள்வதற்கு இன்னும் பக்குவம் ஏற்படவில்லை. இருந்தாலும், எவ்வளவு தூரம் ஊக்குவிக்க முடியுமோ அவ்வாறு ஊக்குவிக்கிறோம். புத்தகங்களும் வெளியிடப்பட்டு வருகின்றன. வெளியிடப்பட்டிருக்கும் புத்தகங்கள் போதவே போதாது. மற்ற நாடுகளில் எல்லாம் இன்று அவரவர் மொழியில் பாடம் சொல்லிக்கொடுக்கிறார்கள் என்றால், அங்கே கூட அன்னியமொழிகளைக் கற்கிறார்கள். ஜெர்மன் மொழி, இன்னும் மற்ற மொழிகளைக் கற்றுகொள்ளுவதற்கு அவர்களுக்கு ருசி இருக்கிறது. மற்ற மொழிகளிலும்கூட உயர்ந்த படிப்பு படிக்கவேண்டும் என்ற எண்ணம் இப்பொழுது இருந்து வருகிறது. போதிய வளர்ச்சி ஏற்பட்டிருக்கிற நாடுகளிலேயே அப்படி வேறு மொழிகளைக் கற்கவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், நம்முடைய நாடு சுதந்திரமடைந்து **17** ஆண்டுகள் கூட ஆகவில்லை. இன்னும் எவ்வளவோ வளர்ச்சி அடையவேண்டும். இதிலே ஏதோ "தமிழுக்கு குறுக்கே நிற்கிறோம்" என்று பொதுவாகக் குற்றம் சொல்லுவதில் பயன் இல்லை. போதனாமொழி என்ன. எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் சட்ட மன்றத்திலே கல்விக் கொள்கை விவாதிக்கப்படும் போது மேலும் விளக்கப்படும், மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படும் என்பதையும் கனம் அங்கத்தினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அவர்கள் (எதிர்க்கட்சியினர்) தான் தமிழைத் தாங்குகிறவர்கள் நாங்களெல்லாம் தமிழை வேண்டாம் என்று கொல்கிறவர்கள் என்று இம் மன்றத்திற்கு வெளியே பொது மேடைகளில் வேண்டுமானால் பேசலாம். அதைக் கேட்டு அங்கங்குள்ள மக்கள் கை தட்டவும் செய்யலாம். ஆனால், இங்கே, இந்த மன்றத்தில் அப்படிப் பேசுவதால் பயன் இல்லை. தமிழுக்குத் துரோகி, "தமிழுக்கு விரோதி" என்று வெறும் **Catch words**-ஐ வைத்துக்கொண்டு இந்த மன்றத்தில் சொல்வதில் பயன் இல்லை. தமிழைப்பற்றிக் கனம் அங்கத்தினரிடமிருந்து நாங்கள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை. தமிழைப்பற்றி எங்களுக்குத் தெரியும். தமிழை நன்றாகப் படிக்கச் செய்யவேண்டும் என்பதைத்தான் நான் நீண்ட காலமாகக் கூறிக்கொண்டிருக்கிறேன்.

கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள், பண்டைக் காலத்துக் கல்வியைப் பற்றிச் சொன்னார்கள். பண்டைக் காலத்துக் கல்வி உயர்ந்த கல்விதான். ஆனால், பண்டைக் காலத்துக் கல்வி மட்டும் போதாது. இன்று நாட்டின் தேவை என்ன? எத்தகைய முன்னேற்றம்? எத்தகைய விஞ்ஞான ஆராய்ச்சி, எத்தகைய விஞ்ஞான வளர்ச்சி? எத்தகைய அறிய சாதனைகளை இன்று உலகத்தில் சாதித்துக்கொண்டு வருகிறார்கள்? இதையெல்லாம் கவனிக்க வேண்டும். நம் நாட்டிலுள்ளவர்களும் உலகத்தில் ஏற்படுகிற முன்னேற்றங்களில் பங்குகொள்ள வேண்டாமா? நம் நாட்டு மக்கள், நம் நாட்டுக் குழந்தைகள் மட்டும் கிணற்றுத் தவளைகளாக இருக்க முடியுமா? கிணற்றுத் தவளைகளாக அவர்கள் வாழ முடியாது. உலகத்தில் ஏற்படுகிற முன்னேற்றங்களுக்கேற்ப நம் நாட்டிலுள்ள குழந்தைகளும் சரிநிகர் சமானமாக வளரவேண்டும். பண்டைக் காலத்துக் கல்வியையும் நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். ஆனால், பண்டைக் காலத்துக் கல்வியைமட்டும் வைத்துக்கொண்டு நாம் திருப்தி அடைந்துவிடக்கூடாது. இன்று நாட்டின் தேவை என்ன, உலகத்தின் தேவை என்ன, நம்முடைய குழந்தைகளின் தேவை என்ன என்பதை வைத்துத்தான் கல்வி போதனை அமைப்பை நாம் வகுக்க வேண்டியிருக்கிறது.



"தரம் குறைகிறது" என்று பல கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். தரம் போதிய அளவு உயரவில்லை என்பதை நானும் ஒத்துக்கொள்ளுகின்றேன். ஆனால், தரம் குறைந்துகொண்டு போகிறது என்பதை நான் ஒத்துக்கொள்ள முடியாது. இன்று கல்வியில் தரமும் வேண்டும்; அளவும் பெருக வேண்டும். தரத்தைப்பற்றிக் கவலை இல்லை என்று நான் சொல்லவில்லை. அரசாங்கமும் அவ்வாறு கருதவில்லை. கல்வியின் அளவையும் நாம் குறைத்துக்கொள்ள முடியாது. மக்களெல்லோரும் உயர்ந்த படிப்பு படிக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். குறைந்தபட்சமாக உயர்நிலைப் பள்ளிப் படிப்பாவது படிக்கவேண்டும் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். இன்று கல்வியின் தரத்தை மேலும் மேலும் உயர்த்தும் வகையிலும், அந்தக் கல்விச் செல்வத்தை எல்லோருக்கும் வாரி வழங்கும் வகையிலும் தான் இந்த அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள், "மதிய உணவுத் திட்டத்திலும், சீருடை வழங்குவதிலும் ஆசிரியர்கள் அக்கறை கொள்ளுவதுதான் கல்வியின் தரம் குறைவதற்கு ஒரு காரணம்" என்று சொன்னார்கள். அவருடைய இந்த வாதம் எனக்குப் புரியவில்லை. இத்தகைய திட்டங்களில் ஆசிரியர்களும் ஓரளவு அக்கறை கொள்வதை நான் குறை கூறமாட்டேன். ஆசிரியர்கள் பாடம் சொல்லிக் கொடுப்பதற்குக் குந்தகமாக இத்தகைய பணிகளில் ஈடுபடக்கூடாது; அவர்கள் ஈடுபடவும் மாட்டார்கள். ஆனால், "பிள்ளைகள் பட்டினியாக இருந்தாலும் இருக்கட்டும், பாடம் சொல்லிக்கொடுத்துவிட்டுப் போவோம்" என்று ஆசிரியர்கள் நினைக்கக்கூடாது. அவ்வாறு அவர்கள் நினைக்கவும் மாட்டார்கள் என்று நம்புகிறேன். நான் வாசித்த காலத்தில் ஒரு ஆசிரியர் இருந்தார். அவரிடம் சென்று ஏதாவது சந்தேகம் கேட்டால், "எனக்குக் கொடுக்கிற சம்பளத்திற்குச் சொல்லிக் கொடுத்தது போதும்" என்று சொல்லிவிடுவார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால், என் காலத்திலிருந்த அத்தகைய ஆசிரியரைப் போலவே இப்பொழுதும் இருக்கவேண்டும் என்று கனம் அங்கத்தினர் கருதுகிறாரா என்பது எனக்குத் தெரியவில்லை. அப்படி இருக்கவேண்டும் என்று கனம் அங்கத்தினர் கூறுகிறார் போலும்.

ஒரு குழந்தையின் தாயை விட அந்தக் குழந்தைக்குக் கல்வி கற்றுக் கொடுக்கும் ஆசிரியருக்குத்தான் அந்தக் குழந்தையின் மீது அதிக அக்கறை இருக்கும்; அக்கறை இருக்க வேண்டும். குழந்தை பள்ளிக்கூடத்திற்குப் பட்டினியாக வந்தால் அந்தக் குழந்தையை பட்டினியாகவே வைத்துவிடுவதா? பட்டினியாக இருக்கும்போது அந்தக் குழந்தைக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தால் என்ன பயன் இருக்க முடியும்?

மதிய உணவு வழங்குவதற்கு அரசாங்கம் ஓரளவு உதவியளிக்கிறது. பஞ்சாயத்துக்களும் "உதவியளிக்கிறோம்" என்று கூறுகிறார்கள். அவர்களும் உதவி அளித்துக்கொண்டு வருகிறார்கள். சில பஞ்சாயத்துக்கள் மேலும் உதவி அளிப்பதாகக் கூடச் சொன்னார்கள். "இதற்கென்று ஒரு வரி போட்டுவிடுவோமா" என்று கூட சில பஞ்சாயத்துக்கள் கேட்டார்கள். அவ்வளவு ஊக்கத்தோடு அவர்கள் இருக்கிறார்கள். பொது மக்களும் உதவியளிக்கிறார்கள். மதிய உணவு சமைப்பதிலே கூட இப்பொழுது கஷ்டம் இல்லை. "சமையல் செய்ய ஆள் வைத்துக்கொள்ளுங்கள்" என்றும் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டம் முக்கியமான ஒரு திட்டம். மெக்ஸிகோ நாட்டில் ஜனாதிபதியினுடைய மனைவியே இதிலே தலைமை வகித்து, அந்த நாடு பூராவும் சுற்றியலைந்து, பள்ளிகளிலே மதிய உணவு அளிக்கக்கூடிய அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நடத்திக்கொண்டு வருகிறார்கள். நம்மைப் போல் இவ்வளவு வறுமை அந்த நாட்டில் இல்லை என்றாலும், பிள்ளைகளுக்கு மதிய உணவு அளிப்பது முக்கியமானது, மதிய உணவு இல்லை என்றால் கல்வி இல்லை என்பதை உணர்ந்து, அந்த உணர்ச்சியோடு அவர்கள் அங்கே இந்தத் திட்டத்தில் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறார்கள் என்பதையும் நான் கனம் அங்கத்தினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

வைத்துக்கொள்ளலாம். அப்படி 25 பேர்களுக்கு ஒருவர் என்று வைத்துக் கொள்வதே நல்லது என்பது என் அபிப்பிராயம். ஆனால் நாம் இன்றைக் குள்ள நிலைமைக்கு ஏற்றபடிதான் செயல்பட வேண்டியிருக்கிறது.

இன்னும் ஆரம்பப் பள்ளிகளில் பெண்களே ஆசிரியர்களாக இருக்கும் படி செய்வது நல்லது என்று சொன்னார்கள். அதை வரவேற்கிறேன். அப்படி இருப்பதையே நானும் வரவேற்கிறேன். ஆனால் பெண்கள் செகண்டரி கிரேட் டீசர்களாக இருக்கவேண்டும். அதற்காக ஆண் ஆசிரியர் கள் பிரயோசனமில்லை என்று சொல்லவில்லை. அவர்களுக்கு வேறு வேலை தரலாம்.

இந்திப் பரீட்சையைப் பற்றிச் சொன்னார்கள். பேருக்குப் பரீட்சை என்று இருக்கக்கூடாது என்பதுதான் என் கருத்தும். லைப்ரரி அட்வை சரி கமிட்டியைப் பற்றி திரு. சிரஞ்ஜீவுலு நாயுடு குறிப்பிட்டார்கள். அதற்கு ஒரு சட்டம் இருக்கிறது. இவ்வளவு ஜனத்தொகை இருந்தால் அங்கே லைப்ரரி ஏற்படுத்தலாம் என்று இருக்கிறது. நாமாகப் பிரித்துக் கொடுத்துவிடுவது இல்லை. என்னுடைய அபிப்பிராயம் இன்னும் கொஞ்சம் குறைவாக ஜனத்தொகை உள்ள கிராமங்களுக்குக் கூட இது விஸ்தரிக்கப்படவேண்டும் என்பது. அதற்கும் சட்டத்தைத் திருத்த யோசனை சொல்லலாம்.

பாடப் புத்தகங்களைப் பற்றிச் சொன்ன கருத்துக்களை ஏற்கிறேன். அரசாங்கம் நல்ல புத்தகங்களாகப் பார்த்துத்தான் போடுகிறது. இதை யாருக்கோ கொடுப்பது இல்லை. டெண்டர் கேட்டுத்தான் விற்பதற்குக் கொடுக்கப்படுகிறது. இவ்விஷயத்தில் ஆதாரமற்ற அப் பட்டமான குற்றச்சாட்டுகளை எல்லாம் சொல்லுகிறார்கள். காரணம் இதில் லாபம் அதிகமிருக்கிறது. அவருக்குக் கொடுத்தால் இவருக்கு ஆகவில்லை. உடனே ஏதாவது குற்றம் சொல்லுகிறார். ஒருவர் என் னிடமே வந்து சொன்னார். நான் ரெக்கார்டுகளை எல்லாம் வாங்கிப்பார்த்த போது அவருடைய குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமே இல்லை என்பதைக் கண்டேன். அதிகாரிகள் சரியான முறையில் நடந்துகொண்டிருப்பதைப் பார்த்துத் திருப்தி கொண்டேன்.

ஆனாலும் அரசாங்கமே விற்பனை செய்வதற்கு வழிவகை செய்வது தான் நல்லது. இதில் கொஞ்சம் காலதாமதம் ஆனாலும் இந்த ஆண்டு டெண்டர் கேட்டுத்தான் கொடுக்கப்படும். மேற்கொண்டு அரசாங்கமே நேரிடையாக விநியோகிக்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் அவர்களே, நான் தங்கள் காலத்தை இதற்கு மேலும் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. மேலும், ஏதாவது குறிப்பிட வேண்டுமென்றால் கல்விக் கொள்கை பற்றிய விவாதத்தில் விளக்கம் தரலாம் என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சா. கணேசன்:** என்னுடைய கருத்துக்கள் எல்லாவற்றையுமே ஏற்றுக்கொள்வதாக கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதால் என் னுடைய வெட்டுப் பிரேரணையை நான் திரும்பப் பெறுவதே நியாயமும், கடமையும் ஆகும். ஆகையால் நான் அதை வாபஸ் வாங்கிக்கொள் கிறேன்.

The cut motion was, by leave, withdrawn.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 29,25,02,400 under Demand No. XIII—Education.'

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow.

**The House then adjourned.**



**IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE**

## A. Statutory Rules and Orders.

120. *Notification issued with G.O. Ms. No. 744, Industries, Labour and Co-operation, dated 6th February 1963, regarding enforcement in Panchayat Towns of Madras State, of the Madras Money-lenders Act, 1957 (Madras Act XXVI of 1957). [Laid on the Table of the House under section 22 (3) of the Madras Money-lenders Act, 1957 (Madras Act XXVI of 1957).]*

121. *Notification issued with G.O. Ms. No. 40, Rural Development and Local Administration, dated 4th January 1963, regarding removal of Sri M. Gopal, from the office of the Chairman of Salem Municipal Council. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]*

122. *Notification issued with G.O. Ms. No. 2670, Local Administration, dated 10th December 1962, regarding inclusion of certain areas within the limits of the Bodinayakanur Municipality. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]*

123. *Notification issued with G.O. Ms. No. 1861, Public (Services-A), dated 7th September 1962, amending the Madras Public Service Commission Regulations, 1954, relating to inclusion of certain temporary posts in the Madras Industrial Subordinate Service, within the purview of the Madras Public Service Commission. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India.]*

124. *Notification issued with G.O. Ms. No. 20, Home, dated 2nd January 1963, regarding collection of quarterly motor vehicles tax at reduced rate in respect of luxury coach bearing registration No. MDU 8676 belonging to Aruppukottai Sri Jaya Vilas (Private), Limited, Aruppukottai, for another year, so long as the said vehicle is used for tourist purposes. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931).]*

## B. Reports, Notifications and other papers.

***Nil.***

இருந்தாலும் சரி தங்களுடைய பிரமோஷனை குறித்தோ மற்றதைக் குறித்தோ "கான்வாஸிங்" செய்வது அவர்களுக்கே தீங்காக முடியும். இன்னும் குறிப்பாகச் சொன்னால், எந்த குறிப்பிட்ட அதிகாரி பேரிலாவது அங்கத்தினருக்குப் பரிவு இருக்குமானால், அவரைப் பற்றிச் சட்ட சபையில் பேசுவது அவருக்கே தீங்காகவும் விளையும். இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம் எத்தனையோ பேர்கள் என்னிடம் வருகிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு கூட சிலர் வந்தார்கள். வருவது, தங்களுடைய உத்தியோகப் பிரமோஷனைப் பற்றிக்கோருவது. அதோடு நின்று விடுவது இல்லை ; எச்சரிக்கையும் விடுகிறார்கள். அப்படி எனக்கு ஒரு எச்சரிக்கையும் கூட வந்தது. "இது பற்றி உடனடியாக கவனிக்காவிட்டால் எதிர்க்கட்சியினர் சட்டமன்றத்தில் இது பற்றி கேள்வி கேட்கத் தயாராய் இருக்கிறார்கள்" என்பதாக எச்சரிப்பது ; இந்த மாதிரி எல்லாம் செய்வது சம்பந்தப்பட்ட அதிகாரிக்கே தீங்காக விளையும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்களுக்கு வேண்டிய ஒருவர் இருக்கிறார். அவருக்குப் பிரமோஷன் கொடுக்கவில்லை. அதற்காக முன்பு இருந்த அமைச்சரை இங்கே குறை சொன்னார்கள். இப்போது இருப்பவர்களைப் பற்றிச் சொன்னால் கூடப் பரவாயில்லை. முன்பு இந்த மன்றத்தில் இருந்தவரைப் பற்றி இப்போது இங்கே பேசுவது மிக மிகத் தவறு. இது மிகவும் ஆட்சேபகரமானதும் கூட.

**புலவர் கா. கோவிந்தன் :** என்னுடைய குற்றச்சாட்டு, ஒரு ஆண்டுக்கு மேலாக அந்தப் பதவி காலியாகவே வைக்கப்பட்டு இருக்கிறது. இன்னும் ஒருவரையும் அதற்கு நியமனம் செய்யவில்லை என்பது தானே தவிர, இன்னாருக்குத் தான் அந்த உத்தியோகத்தைக் கொடுக்க வேண்டும் என்பது அன்று.

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் அதோடு நிறுத்திக்கொண்டு இருந்தால் நன்றாக இருந்து இருக்கும். ஆனால் முன்பு அமைச்சர் ஆக இருந்தவர், ஒருவருக்குக் கொடுக்க வேண்டுமென்பதற்காக அந்த ஸ்தானத்தைப் பூர்த்தி செய்யாது இருந்தார்கள் என்பதாக எல்லாம் பேசிக் கொண்டே போனார்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நானும் அதைத்தான் குறிப்பிடுகிறேன். முன்பும் சொன்னேன். இப்பொழுதும் சொல்கிறேன். உத்தியோகத்திற்குத் தகுதியாக ஒருவர், எல்லா யோக்கியதாம்சங்களும் நிரம்பிய ஒருவர் கிடைக்கிற வரையில் அதைக் காலியாகத்தான் வைத்து இருப்போம். சில ஸ்தானம் இரண்டு மூன்று ஆண்டுகள் கூட காலியாக இருப்பது உண்டு. காலியாக இருக்கிறது என்பதற்காக யாரை வேண்டுமானாலும் புகுத்திவிட வேண்டும் என்பது இல்லை. இதற்காக முன்பு இருந்த அமைச்சரைப் பற்றிக் குற்றம் குறை கூறுவது என்பது சரியாகாது என்று கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து ஆங்கிலோ இந்தியன் பிரதிநிதி திருமதி ஸைவாரஸ் அவர்கள் பேசும்போது, அரசாங்கத்தைப் பொதுவாகப் பாராட்டி விட்டு ஆங்கிலோ இந்தியன் ஸ்கூல்களுக்கு மானியம் ஒதுக்கப்பட்டு இருப்பது குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆங்கிலோ இந்தியன் பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ஒன்றும் குறைக்கப்படவில்லை. வேறு சில அம்சங்களில் குறிப்பாக—40 லட்சம், தொழில் நுட்பக் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே போல் வேறு ஒரு இனத்தில் இரண்டு கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது—அப்படி அதிகமாக ஒன்றும் ஒதுக்கப்படவில்லையே தவிர, இந்தப் பள்ளிகளுக்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்டிருந்த தொகை குறைக்கப்படவில்லை ; அப்படிக் குறைத்து விட்டார்களோ என்ற தவறான கருத்தை யாரும் எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து திரு. குஞ்சன் நாடார் அவர்கள் கல்வி இலாகா இயக்குநர் பற்றி பெருமிதமாகப் பேசினார்கள். அவர் சில குறைகளைக் கூறியபோது நான் மிகத் திருப்தியை அடைந்தேன். காரணம் கல்வி அதிகாரிகள் அவ்வளவு கண்டிப்பாகவும் நேர்மையாகவும் நடந்துகொண்டு இருக்கிறார்கள் என்பது தான், அதில் இருந்து எனக்கு ஏற்பட்ட திருப்தி.



திருவாங்கூர்-கொச்சி பிரதேசத்தில் இருந்து வந்து இருக்கக்கூடிய சில அங்கத்தினர்கள் இன்னும் பழைய நினைப்பையே கொண்டு இருக்கிறார்கள். திரு. குஞ்சன் நாடார் அவர்கள் பேசும்போது கூட தமிழ் நாட்டோடு அப்பகுதி இணைக்கப்பட்ட பிறகு அங்கிருந்து வந்த ஆசிரியர்களுடைய சம்பள விகிதம் இன்னமும் சரியாக இணைக்கப்படவில்லை என்று சொன்னார்கள். 1956-இல் தான் இணைப்பு ஏற்பட்டது. அப்போது 276 கிராஜுவேட் டீச்சர்ஸ் இருந்தார்கள். 2,516 நான்-கிராஜுவேட் டீச்சர்ஸ் இருந்தார்கள். இவர்கள் எல்லாம் இங்குள்ள சர்வீசோடு இணைக்கப்பட்டார்கள். 1-30 p.m. அப்போது அவர்களுக்குச் சம்பளம் எப்படி விதிப்பது என்பது பற்றி நன்றாகப் பரிசீலனை செய்யப்பட்டது. அவ்வாறு பரிசீலனை செய்து சம்பளம் நிர்ணயிக்கிறபோது பல சிக்கல்கள் உண்டாயின. குறிப்பாக திருவாங்கூர் கொச்சியில் 1955-ல் தான் ஒரு பே ரிவிஷன் செய்திருந்தார்கள். ஆகவே தான் அவர்களுடைய யோக்கியதாம்சங்கள், சர்வீஸ் எல்லாவற்றையும் பார்த்து நிர்ணயிக்கிறபோது அவர்களுக்கே ஒரு ஆப்ஷன் விடப்பட்டது. திருவாங்கூர்-கொச்சி கிரேட் வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம். அந்தச் சம்பளம் இங்கே குறைக்கப்படாது. அல்லது இங்குள்ள விகிதப்படி நிர்ணயிப்பதை அவர்கள் ஒப்புக்கொள்வதாக இருந்தால் ஒப்புக்கொள்ளலாம். இப்படி ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்து அப்பிரச்னையைச் சமாளித்திருக்கிறோம்.

இன்னும் வேறு ஏதாவது சில சலுகைகள் வேண்டுமென்றால் இந்தச் சலுகைகள் எங்களுக்கு அளிக்கப்படவேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொள்வது முறையே தவிர அதையே இந்த சர்க்காரின் குறைபாடாக எடுத்துச் சொல்வது சரியல்ல என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் என்ன விதி நிர்ணயித்திருக்கிறோமோ அந்த விதிப்படி உத்தரவு போடப்பட்டிருக்கிறது. மேலும் சில சலுகைகள் வேண்டுமென்றால் அவர்கள் கேட்கலாம். அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும். அவர்கள் கேட்பது வேறு. உரிமை கவனிக்கப்படவில்லை என்று சொல்லி அதற்காக ஒரு சவால் இந்த மன்றத்தில் விடுவது சரியல்ல. இங்கே சவால் விடவும் கூடாது. இங்கே சொல்வதைச் சவாலாகவும் நான் எடுத்துக்கொள்வது இல்லை. கனம் அங்கத்தினர் தாம் விடுத்தது ஒரு சவால் என்று எண்ணி, ராஜினாமா செய்து விட்டு தேர்தலுக்கு நிற்பது என்றால் நிற்கட்டும். 276 கிராஜுவேட் டீச்சர்ஸ்களையும், 2,516 நான்–கிராஜுவேட் டீச்சர்ஸ்களையும் நம்பி அவர் ராஜினாமாச் செய்துவிட்டு தேர்தலுக்கு நிற்பது என்றால் அதை யாரும் தடுக்கவும் போவதில்லை.

அடுத்து எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் குறிப்பிட்டார்கள். மற்ற அங்கத்தினர்களும் குறிப்பிட்டார்கள். ஆசிரியர், மாணவர் விகிதாசாரம் பற்றி. 35 மாணவருக்கு ஒரு டீச்சர் என்று விதித்திருப்பது பொது விதி தான். இதற்காக ஏற்கெனவே இருக்கிற ஆசிரியரை வேலையை விட்டு நீக்குவது இல்லை. சிக்கனம் வேண்டியிருக்கிறது. ஆசிரியர் போதுமான அளவும் இல்லை. பள்ளியில் இடமும் இல்லை. இவை எல்லாவற்றையும் கவனத்தில் கொண்டே சராசரியாக ஒரு வகுப்புக்கு 35 மாணவர் என்று நிர்ணயம் செய்தோம். பஞ்சாயத்து யூனியன் மொத்தத்தில் பார்த்துத் தான் இந்த விகிதாச்சார அடிப்படையில் ஆசிரியர்களை நியமிக்கிறார்கள். இதை அமுலுக்குக் கொண்டு வரும்போது நிச்சயமாக இப்போது இருக்கிற ஆசிரியர்கள் அதிகமாக இருந்தாலும் வேலையை விட்டு நீக்கப்படமாட்டார்கள் என்ற உத்தரவும் போடப்பட்டிருக்கிறது. பல நாடுகளைப் பார்க்கலாம். நம் நாட்டில் மட்டும் அல்ல. சுதந்திரம் அடைந்த பல மேலை நாடுகளில் ஆரம்ப காலத்தில் நம்மை விட அதிகமாக எண்ணிக்கையை அடிப்படையாக நிர்ணயித்துக் கொண்டிருக்கிறார்கள். ஜெர்மனியில் ஒரு காலத்தில் 63 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஜப்பானில் 55 பேர்களுக்கு ஒருவர், சுவிட்ஜர்லாந்தில் 69 பேர்களுக்கு ஒருவர், அமெரிக்காவில் 57 பேர்களுக்கு ஒருவர், ஆஸ்திரியாவில் 74 பேர்களுக்கு ஒருவர், இங்கிலாந்தில் 63 பேர்களுக்கு ஒருவர் என்று இப்படி ஆரம்ப காலத்தில் வைத்துக்கொண்டிருந்திருக்கிறார்கள். இன்றைக்கு நாம் சொல்வது 35 தான். இன்னும் நமக்கு பண வசதி, ஆசிரியர் வசதி எல்லாம் பெருகுமானால் 25 பேர்களுக்கு ஒருவர் என்று கூட

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, 15th March 1963.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### பாடப் புத்தகங்கள் (விற்பனை)

*238 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்காரால் வெளியிடப்படும் பள்ளிக்கூடங்களுக்கான பாடப் புத்தகங்கள் ஏஜெண்டுகள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றனவா?

(இ) 1962-63-ல் பாடப்புத்தகங்கள் விற்பனைக்காக ஏஜெண்டுகளுக்குக் கொடுக்கப்பட்ட கமிஷன் தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Rs. 91,128.48 nP. (upto 31st December 1962).

**திரு. து. ப. அழகமுத்து :** விற்பனைக்காக ஏஜெண்டுகளுக்கு அனுப்பப் படும் புத்தகங்களுக்கான பாக்கிங் அண்டு பார்வேர்டிங் சார்ஜஸ் சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா அல்லது ஏஜெண்டுகள் அதைக் கொடுக்கிறார் களா ? சர்க்கார் கொடுக்கிறது என்றால் அதற்கு ஆகும் செலவு என்ன ? மற்றச் செலவுகள் ஏதேனும் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஏஜெண்டுகளுக்கு கமிஷன் கொடுக்கப் படுகிறது. வேறு எந்தச் செலவும் ஆவதாகத் தெரியவில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, புத்தகத்தில் குறித் திருக்கும் விலைக்கு மேல் ஏஜெண்டுகள் விற்கிறார்கள் என்ற குறை இருக் கிறது. ஆகவே, ஆங்காங்குள்ள பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் மூலம் புத்தகங்களை வழங்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப்பற்றி நேற்றே நான் குறிப்பிட்டேன். இந்தப் புத்தகங்களை நேராக அரசாங்கமே வழங்கலாமா என்ற கருத்தும் இருந்தது. அது அவ்வளவு சுலபமல்ல என்று உணர்ந்த காரணத்தால், இந்த ஆண்டு ரிஜிஸ்டர்டு பப்ளிஷர்களிடமிருந்து டெண்டர் கள் கேட்டு விநியோகிப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. குறிப் பிட்ட விலைக்கு மேல் ஏஜெண்டுகள் புத்தகங்களை விற்கிறார்கள் என்று எனக்குப் புகார் வரவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள், குறிப்பாக எந்த இடத்தில் எப்படி விற்கிறார்கள் என்று தெரிவித்தால், அதற்கு மேல் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளமுடியும்.

**திரு. கே. பொன்னையா :** சர்க்கார் அனுமதி கொடுத்தால், பெற்றோர் கள் சங்கத்தின் மூலமாக இந்தப் புத்தகங்களை விநியோகிக்கலாம் அல்லவா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பெற்றோர்கள் சங்கம் என்று சாதா ரணமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது ரிஜிஸ்டர்டு சங்கமு அல்ல. அவர்களால் சரியாக விநியோகிக்க முடியும் என்பதை [illegible]

கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது போல, சீருடை இருப்பது நல்லது. ஒரே மாதிரி உடை இருக்கவேண்டும்; அப்பொழுது தான் ஏழை-பணக்காரன் என்கிற வித்தியாசம் இருக்காது; ஆகவே, சீருடை முறை இருப்பது முக்கியமானது. இதை எல்லோரும் ஒத்துக்கொள்ளுகிறோம். ஆனால், 'எல்லாப் பொறுப்பையும் அரசாங்கமே எடுத்துக்கொள்ளட்டும், அரசாங்கமே மதிய உணவு வழங்கட்டும், பிள்ளைகளுக்கும் சீருடை வழங்கட்டும், ஆசிரியர்களுக்கும் சீருடை வழங்கட்டும்" என்று சொன்னால், அது சரியல்ல. ஏனென்றால், இப்பொழுது கல்விக்காக 29 கோடி ரூபாய்க்கு மேல் செலவு ஆகிறது. மதிய உணவுத் திட்டம், சீருடை வழங்கும் திட்டம் இவை எல்லாவற்றையும் அரசாங்கமே எடுத்துக்கொண்டு நிறைவேற்றுவதென்றால், இன்னும் எவ்வளவு செலவாகும் என்பதையும் கனம் அங்கத்தினர்கள் சிந்திக்கவேண்டும். எல்லாவற்றையும் அரசாங்கமே எடுத்துக்கொண்டால், கல்வித் துறையில் போதிய வளர்ச்சி ஏற்படாது. ஆண்டுக்கு இரண்டு கோடி, மூன்று கோடி ரூபாய் அதிகம் ஆகிறது. இவற்றையும் எடுத்துக்கொண்டால் கல்வி வளர்ச்சி ஏற்படாது. மக்களும் இதில் முன்வரவேண்டும், அவர்களும் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்கிறோம். மக்கள் உணர்ந்து பாராட்டுகிறார்கள். ஆகவே சீருடை வழங்குவதை அவர்களே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பெற்றோர்களே கொடுத்தால் என்ன தவறு, என்று நான் கேட்கிறேன். யாசகமாகத்தானா வாங்கவேண்டும்? பெற்றோர்கள் கொடுப்பது தவறு என்று நாங்கள் கருதவில்லை. அதைப் பெருமையாகவே ஏற்றுக் கொள்ளலாம். சீருடைத் திட்டம் ரொம்பவும் நல்லது. கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறுவது போல, இப்போதே சில இடங்களில் ஆசிரியர்கள் கூட சீருடை உடுத்திக்கொண்டு வருகிறார்கள். அது சிறந்த ஒரு காட்சியாக இருக்கிறது. ஆசிரியர்கள் எல்லோரும் ஒரே மாதிரி உடை அணிவது நலம் என்ற கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய கருத்தை நான் ஏற்றுக்கொள்ளுகின்றேன். ஆனால், அதை எப்படி நிறைவேற்றுவது என்பதிலே கவனம் செலுத்த வேண்டும். இப்பொழுது நாம் ஏதாவது ஒன்று சொல்லிவிட்டால் போதும். ஆசிரியர்களும், ஆசிரியைகளும் மிகுந்த உற்சாகத்துடன் அதை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். கிராமத்திலுள்ள மக்களும் உடனுக்குடன் அதை ஏற்றுக்கொள்ளுகிறார்கள். நிறைவேற்றவும் முன்வருகிறார்கள். அரசாங்கச் செலவில் இல்லாமலேயே, முழுப் பொறுப்பையுமகூட அவர்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

“கல்வியின் தரம் குறைவதற்கு மற்றொரு காரணம் பாதுகாப்பு நிதி திரட்டுவது” என்று கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள் சொன்னார்கள். நாட்டின் பாதுகாப்புக்காகத் தங்களாலான உதவியைச் செய்ய வேண்டும் என்ற உணர்ச்சியும் உற்சாகமும் பள்ளிக்கூடத்தில் படிக்கும் குழந்தைகளிடம் மிகவும் அற்புதமான முறையில் காணப்படுகிறது. இது வரவேற்கத் தக்கது. இதை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஆசிரியர்களுக்குப் புதிய உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அவர்களிடையே நாட்டுப் பற்று மிகுதியாகக் காணப்படுகிறது. நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு இருக்கிறது. பாதுகாப்பு நிதி திரட்டுவதில் வற்புறுத்தல் ஒன்றுமில்லை. கட்டாயப்படுத்துவது ஒன்றுமில்லை. குழந்தைகள் 2 நயா பைசா, 4 நயா பைசா, 5 நயா பைசா, 10 நயா பைசா என்று க்யூ வரிசையில் நின்று பணம் கொடுக்க முன்வருவதை நான் பல இடங்களில் பார்த்திருக்கிறேன். “சிற்றுண்டிக்காகப் பெற்றோர்கள் அளித்தார்கள், சிற்றுண்டி சாப்பிடாமல் மிச்சப்படுத்திய காசை நாட்டின் பாதுகாப்புக்காக அளிக்கிறோம்” என்று சொல்லி, குழந்தைகளே மிக்க ஆர்வத்தோடு, உற்சாகத்தோடு கொடுக்க முன்வருகிறார்கள். இதிலே கட்டாயம் எங்கே இருக்கிறது? கட்டாயம் என்பது இல்லவே இல்லை. நாட்டைப் பாதுகாக்க வேண்டுமென்ற அத்தகைய உணர்ச்சி அவர்களுக்கு இருக்கிறது. “தேசியப் பாதுகாப்பு நிதி திரட்டுவதில் கட்டாயம் கூடவே கூடாது” என்று அரசாங்கம் அப்போதைக்கப்போது வற்புறுத்திக்கொண்டு வருகிறது. அப்படியேதான் நாங்கள் எடுத்துச் சொல்லி வருகிறோம்.

கல்வித் துறை இயக்குநர் அவர்களும், தம்முடைய இலாகாவில் இருக்கும் அதிகாரிகளுக்கு, “இதிலே எந்தவிதமான கட்டாயமும் கூடாது என்பதை எல்லோருக்கும் கண்டிப்பாகத் தெரிவிக்க வேண்டும்” என்று



வற்புறுத்தியிருப்பதாக அவர்கள் என்னிடம் சொன்னார்கள். “மாணவர்கள், ஆசிரியர்கள் உற்சாகத்தோடு, ஊக்கத்தோடு ஈடுபட்டு, ‘நாட்டின் பாதுகாப்பு, கடமைகள்’ ஆகியவைகளைப்பற்றி எங்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள்” என்று என்னை அழைக்கிறார்கள், அப்படி அழைக்கிறபோதுகூட நான் போவதில்லை என்று கல்வி இலாகா இயக்குநர் அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அதிகாரிகளுக்கும் அவ்வாறே தெரிவித்துவிட்டதாகக்கூட அவர்கள் சொன்னார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால், “இன்றைக்கு இங்கே இது பேசப்பட்ட பிறகுதான் கல்வி இலாகா இயக்குநர் அவர்கள் அம்மாதிரி தெரிவித்துவிட்டார்” என்று பின்னால் யாரும் சொல்லிவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் இதை இப்பொழுது சொன்னேன். பல நாட்களுக்கு முன்பே அவர்கள் தம் அதிகாரிகளுக்கு, “இனி சில நாட்களுக்கு நான் வர சௌகரியப்படாது” என்று தெரிவித்துவிட்டதாக என்னிடம் அவர்கள் சொன்னார்கள். கூப்பிட்டால் அவர் போகிறார். ஆசிரியர்கள், மாணவர்கள் கூப்பிட்டு அவர் அங்கு சென்றால், அதில் என்ன தவறு இருக்கிறது? தவறு ஒன்றுமில்லை. மாநிலத்தில் கல்வித் துறை இயக்குநர் என்றால் கல்வி ஸ்தாபனங்களுக்கெல்லாம் தலைமை ஸ்தானம் வகிக்கின்றவராக இருக்கிறார். மாணவர்களும், ஆசிரியர்களும் கல்வித்துறை இயக்குநருக்கு மரியாதை செலுத்துகிறார்கள் என்றால் அதில் என்ன தவறு இருக்கிறது? “அமைச்சருக்குச் செலுத்தாத மரியாதையைக் கூட கல்வித் துறை இயக்குநருக்குச் செலுத்துகிறார்கள்” என்று ஒரு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டார். அது உண்மையாகவே இருந்தாலும், அதிலே என்ன தவறு இருக்கிறது? இங்கிலாந்திலே ஒரு வரலாறு கேள்விப்பட்டிருக்கிறேன். கனம் அங்கத்தினர்களும் கேள்விப்பட்டிருக்கக் கூடும் என்று நினைக்கிறேன். நாட்டின் மன்னரும், அந்தக் கல்வி ஸ்தாபனத்தின் தலைவரும் பள்ளிக்கு வந்தபோது கல்வி ஸ்தாபனத்தின் தலைவருக்கு முதல் மரியாதை அளிக்கக்கூடிய உயர்ந்த பண்பாடு அங்கே இருக்கிறது. அந்தக் கல்வி ஸ்தாபனத்தைப் பொறுத்தமட்டில், மன்னரைப் பற்றியோ கவலைப்படவில்லை என்று கூறப்படுகிறது. மாணவர்களை வெய்யிலில் நிறுத்தவேண்டுமென்பதில்லை. உற்சாக மிகுதியால் ஒரு சில இடங்களில் அவ்வாறு செய்திருக்கலாம். ஒரு கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது போல், ஏற்கனவே குற்றம் செய்த அதிகாரி இதிலெல்லாம் ஈடுபட்டிருக்கலாம். குறிப்பாக, இரண்டு, மூன்று இடங்களில் கவனித்ததில் நான் பார்த்திருக்கிறேன். அவ்வாறு ஒன்றும் இல்லை. அம்மாதிரி எங்காவது நடக்கிறது என்று தெரிவித்தால் விசாரிக்கலாம். மாணவர்களை வெய்யிலில் நிறுத்தி வைக்கவேண்டும் என்பது நோக்கம் அல்ல என்பதைக் கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னது ஒரு பெரிய விஷயம். அவர்களுக்கு முதல் அமைச்சரைப் பற்றித்தான் எப்பொழுதும் நினைவு. முதலமைச்சருக்குக் கீழே அவர்கள் இறங்குவதே இல்லை. (சிரிப்பு). அவர் சொன்னது பெரிய விஷயம். அவ்வளவு பெரிய விஷயத்தில் நானும் ஈடுபட்டு அதிலே இறங்கவேண்டியதில்லை என்று நினைக்கிறேன். (சிரிப்பு.)

அதே மாதிரி பாடபுஸ்தகங்கள் பற்றி சில கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். பிரிவினை மனப்பான்மையில் ஒன்றும் பாடப் புஸ்தகங்கள் இல்லை. நாட்டுப் பற்றை வளர்க்கக்கூடிய பாட புஸ்தகங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் நம் நாட்டு சுதந்திரப் போராட்டம் பற்றிய சரித்திரத்தை குழந்தைகள் எல்லோரும் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசையும். அதில் அரசாங்கம் கவனம் செலுத்துகிறது. நம்முடைய தலைவர்களுடைய அருமை பெருமைகளை, நம் நாட்டு சுதந்திர சரித்திரத்தை நம்முடைய குழந்தைகள் எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் இப்போது சில புஸ்தகங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

கனம் அங்கத்தினர் புலவர் கோவிந்தன் அவர்கள் ஏற்கனவே இங்கு ஒரு குற்றத்தைச் சுமத்தினார்கள். அதே விஷயத்தைப் பற்றித்தான் இன்றைக்கும் குறிப்பிட்டார்கள். குறிப்பாக ஏதோ ஒரு கல்லூரியில் குறிப்பிட்ட ஒருவரை ஒரு பதவியில் நியமிக்கவில்லை என்பதற்காக குற்றம் சாட்டினார். இதில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். எந்த அதிகாரியாக

**திரு. கே. பொன்னையா :** பயிற்சிப் பள்ளிகளுக்குள்ள தேர்வை சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், 'நான் அபிஷியல்ஸ்' நடத்தி வந்தார்கள். இப்போது அப்படிக் கிடையாது. ஆகவே அதைப்பற்றி மீண்டும் பரிசீலிக்க முன் வருவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முன்பு அவ்வாறு நடைபெற்றபோது அரசாங்கத்திற்கு அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. அதைக் கொண்டு வேண்டாம் என்று இப்போது கைவிடப்பட்டிருக்கிறது.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** பெண் ஆசிரியைப் பயிற்சிப் பள்ளிகள் துவங்க சில மில் நிர்வாகம் போன்ற டிரஸ்டுகள் நடத்த முன்வர சித்தமாயிருக்கிறார்கள். அவர்கள் நன்கு நடத்துவார்கள் என்று எதிர் பார்க்கலாம். அதற்கு அரசாங்கம் அனுமதி அளிப்பது பற்றி யோசிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தனிப்பட்டவர்களிடம் இதை விட வேண்டாமென்பது அரசாங்கத்தின் எண்ணம் என்று கூறினேன். குறிப் பாக அப்படி சில விண்ணப்பங்கள் வந்தால் பரிசீலிக்கலாம். தர்ம ஸ்தாபனங்கள் நடத்துவதில் ரொம்பப் புகார்கள் இருப்பது எனக்குத் தெரியும். ஆகவே எல்லோருக்கும் பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி நடத்த அனுமதி கொடுப்பது தகாது என்று நினைக்கிறேன்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** பெண்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி நடத்த பெண்களே முன் வந்து அனுமதி கேட்பார்களானால் அவர்களுக்கு வழங்க அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பெண்களே முன்வந்தால் அதை வரவேற்பேன். ஒரு ஆட்சேபம் நீங்கும் என்னைப் பொறுத்த வரையில். அவர்களுக்கும் அந்தத் தகுதி வேண்டும். பெண்கள் என்ற காரணத்தினால் ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை நடத்தமுடியாது.

**திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** தமிழ் நாட்டில் முற்றும் துறந்த முனிவர் ஒருவர் பெண்கள் பயிற்சிப் பள்ளி நடத்திவருவதாக பிரஸ்தாபம் இருக்கிறது. அது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அங்கத்தினர் அவர்கள் பெயர் ஒன்றும் சொல்லவில்லை. முன்பே விடை அளித்தபோது நான் இது பற்றி குறிப்பிட்டிருக்கிறேன். சிலர் நடத்துவது திருப்திகரமாக இல்லை என்று புகார்கள் வருகின்றன. தர்ம ஸ்தாபனத்தின் பெயரால் நடத்து வதில் ஒன்றிரண்டு புகார்கள் வருகின்றன. அது பற்றி தீவிர பரிசீலனை செய்யப்படுகிறது என்று முன்பே சொன்னேன்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது பயிற்சிப் பள்ளி நடத்த சில தகுதிகள் வேண்டுமென்று குறிப் பிட்டார்கள். கலைக் கல்லூரி நடத்துகிற கரெஸ்பாண்டண்ட்ஸ் எல்லாம் எல்லாத் தகுதிகளும் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லமுடியாது. ஆகவே அந்தளவு பெண்களுக்கும் தகுதிக் குறைவு சில இருந்தால் கூட கொடுக்க அதுபற்றி யோசனை செய்யப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அங்கத்தினர் அவர்கள் பெண் களுக்கு மட்டும் இன்றி ஆண்களுக்கும் பிரதிநிதியாக இருந்தாலும் பெண்கள் உரிமை பற்றி அவர்கள் பெரிதும் வாதாடுபவர்கள். பெண் கள் நடத்த முன்வந்தால் தகுதிக் குறைவு இருக்கலாம் என்று அவர் ஒப்புக் கொண்டது கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன். அதை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன். தகுதி உள்ளவர்கள் நடத்துவது என்றால் யோசிக்கலாம். ஆசிரியர் பயிற்சிப் பள்ளி நடத்துவதில் தகுதியைக் கவனிக்காமல் இருக்கமுடியாது.

**திரு. மு. பொ. வடிவேல் :** காட்பாடியில் இயங்கி வரும் ஆதாரப் பயிற்சிப் பள்ளிக்கு மாதம் 500 ரூபாய் வாடகை கொடுக்கப்படுகிறது. அதை பாச்சூருக்கு மாற்றுவதாகச் சொல்லப்படுவது உண்மையா ?





**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தகவல் இல்லை. தனிக்கேள்வி கேட்டால் விடை அளிக்கிறேன். எனக்குத் தெரிந்தவரை மாற்று வதற்கு உத்தேசம் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவர் களைத் தேர்ந்தெடுப்பதில் ஹரிஜன மாணவர்களுக்கு தனி சலுகை அளிக்கப் பட்டுவருகிறதா ? அப்படியானால் எவ்வளவு சதவிகிதம் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. ம. கமலநாதன் :** ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் புதிதாக சேரும் மாணவர்கள் லஞ்சம் என்று பெயர் இல்லாமல் நன்கொடை இவ் வளவு கொடுக்க வேண்டும் என்று கேட்டால் அது அனுமதிக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நன்கொடை கொடுத்தால்தான் அட்மிஷன் என்றால் அதுவும் லஞ்சம் மாதிரிதான்.

**திரு. எஸ். மாதவன் :** தர்ம ஸ்தாபனங்கள் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் நடத்துவது பற்றி புகார்கள் வந்தன என்று சொன்னார்கள். எந்த தர்ம ஸ்தாபனத்தைப்பற்றி புகார் வந்திருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்துக் கொள்கிறவரையில் இதன் விவரங்களை அங்கத்தினர்கள் எதிர்பார்க்கக் கூடாது.

**கனம் சபாநாயகர் :** இவ்வளவு " ஆங்சைட்டி " எதற்கு ?

**திரு. சி. பொன்னுசாமி :** இப்போது இருக்கும் பள்ளிகளில் போது மான ஆசிரியர்கள் இருக்கிறார்களா ? அதிகமாக இருக்கிறார்களா ? குறை வாக இருக்கிறார்களா ? அதற்குக் கணக்கு உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பொதுவாக சொல்லும் அளவில் போதிய அளவு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்றுதான் கருதுகிறேன். எந்த இடத்திலாவது பற்றாக்குறையிருந்தால் மேலே ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளி வைக்க கவனம் செலுத்தப்படும்.

## *Liquor (Smuggling)*

*241 Q.—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Agriculture be pleased to place on the Table of the House a statement showing—

(a) the number of cases of smuggling of liquor from Pondicherry into Madras State apprehended by the Police during the years 1960–61 and 1962;

(b) the number of prosecutions launched in respect of the cases referred to in clause (a) above; and

(c) the number of cases which ended in (i) conviction, and (ii) acquittal?

The Hon. Sri P. KAKKAN: (a) to (c) A statement* is placed on the Table of the House.

**திரு. கே. ஏ. மதியழகன் :** மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிற குறிப்பில் 1960-ல் 632 வழக்குகளிலும், 1961-ல் 1046 வழக்குகளிலும், 1962-ல் 677 வழக்குகளிலும் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்றிருக்கிறது. காரைக்காலில் இருந்து தஞ்சைப் பகுதிக்கு கொண்டுவரப்படும் கள்ளக் கடத்தலையும் சேர்த்தால் இன்னும் அதிகமாகும். ஆகவே நம் மாநிலத் தில் இருக்கிற மதுவிலக்குச் சட்டத்தை தோற்கடிக்கும் முறையில் நிலை

* Printed as Appendix I on pages 259

முடியாது. இப்போது பதிப்பாளர்களிடமிருந்து டெண்டர்கள் கோரப்பட்டு பரிசீலித்து அவர்கள் மூலம் விநியோகிக்கப்படுகிறது. இந்த முறையே சிறந்தது என்று அரசாங்கம் கருதுகிறது.

**திரு. முனு. ஆதி :** ஏஜெண்டுகள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ? டெபாசிட் கட்டும் முறை உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முன்பே கூறினேன். ரிஜிஸ்டர்டு பப்ளிஷர்ஸ் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் டெண்டர் கோரப்படுகிறது. டெண்டர்களைப் பார்த்து யார் குறைந்த கமிஷனுக்கு விற்க முன்வருகிறார்களோ அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

**திரு. து. ப. அழகமுத்து :** சில பள்ளிக்கூடங்களில் ஸ்டூடண்ட்ஸ் கோவாப்பரேட்டிவ் சொஸைடீஸ் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்தப் புத்தகங்களை அனுப்பி விநியோகித்தால் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தேர்ந்தெடுக்கப்பட்ட பப்ளிஷர்கள் அந்தக் கோவாப்பரேட்டிவ் சொஸைடீஸ் மூலமாகவும் பள்ளிக்கூடங்களுக்கு விற்கலாம்.

## *Panchayat Union Schools (Text-books)*

* 239 *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the procedure in force for prescribing text-books for the Panchayat Union Schools;

(*b*) whether there is a proposal to revise the procedure and change the authority prescribing the text-books; and

(*c*) if so, the details thereof?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) The Panchayat Union Education Committee prescribes the text-books for Panchayat Union Schools in all subjects other than those for which text-books have been published by Government. The Committee can select only from out of the list of books approved as suitable for class use by the Text-Book Committee.

(*b*) & (*c*) Certain District Development Councils have suggested to Government that the selection of text-books for Panchayat Union schools may be made at the Development District level. The Government are examining the suggestions.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** மதுரை மாவட்டத்தில் பள்ளிப் பாடப் புத்தகங்கள் பஞ்சாயத்து யூனியனுக்கு யூனியன் வேறுபட்டிருக்கிறது. மாவட்ட அளவிலாவது ஒரேமாதிரிப் பாடப்புத்தகங்களை நிர்ணயிக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் முன்பே கூறினேன். யூனியன் ஸ்டாண்டிங் கமிட்டி "டெக்ஸ்ட் புக்ஸ்"-ஐ நிர்ணயிக்கவேண்டுமென்று விதி இருக்கிறது. ஒருமாவட்டத்திலுள்ள டெவலப்மெண்ட் கவுன்சில் அளவில் மொத்தமாக ஸ்டாண்டிங் கமிட்டி மூலம் பாடப் புத்தகங்களை நிர்ணயிக்கலாம் என்ற யோசனை இப்போது பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. எம். தண்டாயுதபாணி :** பஞ்சாயத்து கூட்டுத் தலைவர்கள் அந்தக் கமிட்டிக்குத் தலைவர்களாக இருக்கலாமா அல்லது அங்கத்தினரன் தலைவராக இருக்கலாமா ?



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சட்டப்படி தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அது சட்டத்தைப் பொறுத்தது.

**திரு. எஸ். மாதவன் :** தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் கல்வித்தரம் ஒன்றாக அமையும் வகையில் மாநில சர்க்காரே புத்தகங்களை நிர்ணயித்து வழங்க முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மாநில முழுவதும் கல்வித் தரம் ஒரேமாதிரியாகத்தான் இருக்கிறது. அதற்காக ஒரே புத்தகத்தையே வைக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. பல புத்தகங்கள் இருக்கலாம். கூடிய வரையில் நல்ல புத்தகங்களாகத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இப்போது பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில், பழைய கால நூல்களான விவேக சிந்தாமணி, அறப்பள்ளி சதகம், தண்டலயார் சதகம் போன்றவை வைக்கப்படுவதில்லை. அப்படி வைக்க சர்க்கார் அனுமதி வழங்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அனுமதி அளிப்பதில் கஷ்டம் இல்லை. கனம் அங்கத்தினரைப் போன்றவர்கள் பஞ்சாயத்து யூனியன்களுக்குச் சொல்லி பழைய ஒழுக்கத்தைக் கற்பிக்கக்கூடிய நூல்களை வைக்க வேண்டுமென்பதில் அவர்கள் அக்கறை செலுத்தவேண்டும்.

**திரு. சோ. ஆறுமுகம் :** பஞ்சாயத்து யூனியன்களால் அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்களை அடிக்கடி மாற்றி விடுகிறார்கள். அப்படி வேண்டியவர்களுக்காக மாற்றிக் கொண்டிருக்கும் நிலையைமாற்ற, குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு புத்தகங்களை மாற்றக்கூடாது என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பஞ்சாயத்து யூனியன்களுக்கு அந்தப் பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. சில பஞ்சாயத்து யூனியன்கள் தவறாக தங்கள் இஷ்டம் போல் மாற்றுவதைத் தவிர்க்க, மாவட்ட ரீதியில் புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கலாமா என்று அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

## ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்

*240 கேள்வி.—**திருமதி சி. குழந்தையம்மாள் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-64-ல் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் புதிதாகத் திறக்க உத்தேசமுண்டா ?

(இ) ஆம் என்றால், எங்கெங்கே ?

(உ) பெண்களுக்காகப் பயிற்சிப் பள்ளிகள் எத்தனை திறக்கப்படும்?

The Hon. Sri M. BHAKATAVATSALAM : (*a*) No. Sir.

(*b*) & (*c*) Do not arise.

**திரு. எஸ். மாதவன் :** தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் ஒரு சீட்டுக்கு இவ்வளவு என்று லஞ்சம் வாங்குகிறார்கள் என்ற புகார் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பொதுவாக அந்தமாதிரிப் புகார் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அதை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** பேசிக் ஜூனியர், சீனியர் என்று சொல்வதில், ஜூனியரை எடுக்க உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆதாரக் கல்வி விஷயமும் இப்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. தனிக் கேள்வி போட்டால் விடை அளிக்கிறேன்.

**திரு. ஆ. துரை அரசன் :** அறந்தாங்கி வட்டத்தில் ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளி திறக்கவேண்டுமென்று கோரிக்கைகள் வந்திருக்கின்றனவா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பொதுவாகக் கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. அறந்தாங்கி பகுதியிலிருந்து கோரிக்கைகள் வந்தனவா என்பதைப் பற்றிய தகவல் இல்லை. புதிய ஆசிரியர் பயிற்சிப் பள்ளியைத் திறக்கவேண்டுமென்றால், தேவை இருக்கிறதா என்பதைப் பார்த்து அரசாங்கம் முடிவு செய்யும்.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** ஏற்கனவே லோயர் கிரேடை எடுத்து விட்டு ஹையர் கிரேடை மட்டும் வைத்துக் கொண்டோம். கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக, ஹையர் கிரேடையும் எடுத்து விட்டு செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகவே நியமிக்கவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்துக்கு உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்தப் பிரச்னை எல்லாம் இப்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஜே. மாதா கவுடர் :** புதிய ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளைத் திறக்கவில்லை என்றாலும் இருக்கக்கூடிய பள்ளிகளில் அதிகம் பேரைச் சேர்க்க முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்தந்த ஸ்தலங்களின் தேவைகளை ஒட்டி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில், ஆற்காட்டில் ஒரு பயிற்சிப் பள்ளி, ராணிப்பேட்டையில் ஒரு பயிற்சிப் பள்ளி என்று அருகருகே இருப்பதால், செய்யாற்றுக்கு ஒரு பயிற்சிப் பள்ளியை மாற்ற உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இந்தப் பயிற்சிப் பள்ளிகள் எல்லாம் முன்பே அமைக்கப்பட்டவை. அதை வேறு ஸ்தலத்திற்கு மாற்றும் யோசனை இல்லை.

**திரு. தா. சின்னசாமி :** ஹரிஜனங்களுக்கு ஒதுக்கிய தொகை எவ்வளவு? அதில் செலவிடப்பட்டது எவ்வளவு ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பின்னால் இம்மான்யம் கோரப் போகிறார் அமைச்சர் அவர்கள். அப்போது இதையெல்லாம் கேட்கலாம்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு :** பெண் ஆசிரியைகள் பயிற்சி பெற பள்ளிகள் மிக மிக குறைவாக இருப்பதால் தனியார் யாராவது பெண் ஆசிரியைகளுக்கென பள்ளிகள் துவக்கினால் அதற்கு அரசாங்கம் ஆக்கம் அளிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** புதிதாக தனியார் துறையில் பயிற்சிப் பள்ளிகள் வைக்க அனுமதி கொடுக்க வேண்டாம் என்பது இப்போது அரசாங்கத்தின் கருத்து. எனினும் புதிதாக அரசாங்கமே தொடங்குவது என்றாலும் அந்த ஸ்தலத்தின் தேவையைப் பொறுத்ததாக இருக்கிறது.

**திரு. எஸ். மாதவன் :** திருச்சி பெரியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி கரஸ்பாண்டன்ட்டாக இருந்தவர் அங்கிருக்கிற காலத்தில் 500 ரூபாய் லஞ்சம் வாங்கப்பட்டது என்று அறிக்கை விடுத்திருக்கிறார்கள். அது அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதா ? அப்படியானால், அதன் மேல் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள உத்தேசம் உண்டா ?





**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** புகார்கள் எங்கிருந்து வந்தாலும் அவை அரசாங்கப் பரிசீலனையில் இருக்கின்றன. நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று சொன்னேன். அங்கத்தினர் அவர்கள் சொன்னது ஏதோ பத்திரிகையில் வந்திருக்கலாம். ஆனால் அரசாங்கத்திற்கு நேரடியாகத் தெரியாது.

**திரு. ஆர். ரங்கசாமி :** பேஸிக் ட்ரெயினிங் ஸ்கூல், நான்-பேஸிக் ட்ரெயினிங் ஸ்கூல் என்பது, பேஸிக் ட்ரெயினிங் என்றால் ஆதாரப் பயிற்சியும், நான்-பேஸிக் ட்ரெயினிங் என்றால் ஆதாரம் இல்லாத பயிற்சி என்றும் இருப்பதால் அதை மாற்றி பொதுவான பெயர் வைக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆதாரப் பயிற்சி என்ற விஷயம் இப்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இதை இப்போதைய தேவைக்கேற்றவாறு, நடைமுறைக்கேற்றவாறு எப்படி மாற்றியமைப்பது என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர் :** 8-வது வகுப்பு வரை ஆசிரியர் பயிற்சிக்கு பெண்கள் மிகத் தகுதி உள்ளவர்களாக இருக்கிறார்கள். அதை அனுசரித்து அதை பெண்களுக்காகவே ஒதுக்க வழி வகை செய்யப்படுமா ?

**MR. SPEAKER :** I suppose the hon. Member, Sri A. S. Dhakshinamoorthy Gounder is 'a champion of women's causes.'

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கீழ் வகுப்பில் பெண் ஆசிரியர்கள் இருப்பது நலம் என்பது என் கருத்தும் கூட. ஆனால் அவர்களும் குறைந்தபட்சம் செகண்டரி கிரேட் பயிற்சி பெற்றவர்களாக இருக்கவேண்டும். பெண்களுக்கென ஹையர் எலிமெண்டரி பயிற்சி வைப்பதாக உத்தேசம் இல்லை.

**திரு. முனு. ஆதி :** தனியார் நடத்துகிற பயிற்சிப் பள்ளிகளில் லஞ்சம் தாண்டவமாடுகிறது என்று எல்லோரும் சொல்கிறார்கள். அப்படி புகார்கள் வந்திருப்பதாக அமைச்சர் அவர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். ஆகவே அதிகாரிகளையும் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களையும் கொண்ட ஒரு குழு அமைத்து அதிகாரிகள் மார்க், தரம் போன்றவற்றை போட்டு மக்கள் பிரதிநிதிகள் அட்மிஷன் கொடுப்பது என்று செய்ய எண்ணம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தனியார் நடத்துகிற பள்ளிகள் எல்லாவற்றிலும் லஞ்சம் தாண்டவமாடுகிறது என்று சொல்வது முறை அல்ல, அது தவறு, அது அநீதி. தனியார் துறையினரும் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கு செலுத்துகிறார்கள். ஆங்காங்கே சில புகார்கள் இருக்கின்றன, அவை பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று சொன்னேன். இங்கும் அங்கும் புகார்கள் இருப்பதற்காக தனி கமிட்டி போட்டு பரிசீலனை செய்யவேண்டிய அவசியமில்லை.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** இப்போது புது ரேஷியோ பிரகாரம் பல ஆசிரியர்கள் வெளியேற்றும்படியான நிலை ஏற்பட்டிருப்பதால் ட்ரெயினிங் ஸ்கூலில் மேலும் இந்த ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வந்த பிறகு வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாகும் என்ற காரணத்தினால் ட்ரெயினிங் ஸ்கூலில் முக்கியமாக சில ஸ்கூல்களை நிறுத்துவது என்ற உத்தேசம் அரசாங்கத்திற்குண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நேற்றே நான் கூறினேன். புது ரேஷியோ அனுசரிக்கப்படும் என்றாலும் இப்போதுள்ள ஆசிரியர்கள் வேலையிலிருந்து எடுக்கப்படமாட்டார்கள் என்று சொன்னேன். ஆகவே மற்ற கேள்வி எழவில்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** என்ஜினீயரிங் கல்லூரியில் படிக்கும் மாணவர்களில் ஹரிஜன மாணவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

MR. SPEAKER : That is a separate question.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இப்பொழுது பெண்களுக்கு என்ஜினீயரிங் காலேஜில் படிப்பதற்கு வேண்டிய உடல் வலிவு இல்லை என்று சொன்னார்கள். (**கனம் சபாநாயகர் :** அப்படிச் சொல்லவில்லை). பெண்கள் விமானம் ஓட்டுகிறார்கள், ராணுவ சேவையும் செய்கிறார்கள். ஏன் அவர்களுக்கு இதில் மட்டும் உறுதி இருக்காது ?

**கனம் சபாநாயகர் :** இதைப்பற்றி அவர்களையல்லவா கேட்கவேண்டும்?

*Water-supply Scheme (North Madras)*

* 243 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) the estimated cost of North Madras Trunk main water-supply scheme;

(*b*) the total expenditure on the purchase of cast iron pipes including delivery and handling charges;

(*c*) the cost of jointing materials;

(*d*) labour charges; and

(*e*) supervision and establishment charges?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Rs. 62.62 lakhs

(*b*) Rs. 26 lakhs }
(*c*) Rs. 1.00 lakh } Approximate.
(*d*) Rs. 4.35 lakhs }

(*e*) There is no separate staff engaged for this work alone. The staff engaged are in charge of all Capital Water-Supply Works. Ten per cent supervision charges on the work outlay will be charged to each of the schemes.

**திரு. கே. ஏ. மதியழகன்:** அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதிலிருந்து இந்த வார்ப்பு இரும்புக் குழாய்கள் வாங்குவதற்கு ரூ. 26 லட்சம் செலவு என்றால், ஏறக்குறைய இந்தத் திட்டத்தின் மொத்தச் செலவில் பாதியாகிவிடுகிறது. குடி தண்ணீர் வசதி செய்வதற்காக இந்த வார்ப்புக் குழாயை இவ்வளவு நாளும் எங்கிருந்து வாங்குகிறார்கள் ? நம்முடைய மாநிலத்தில் இதைச் செய்தால், பணம் மீதமாகும். நம்முடைய மாநிலத்திலேயே இப்படிப்பட்ட இரும்புக் குழாய்கள் வார்ப்பதற்கான நிலைமைகள் இருக்கின்றனவா ? இல்லையானால், அதற்கு ஏதாவது ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் சபாநாயகர் :** எத்தனை கேள்விகள் ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தனிக் கேள்விகள் போட வேண்டும்.

**கலப்புத் திருமணங்கள்**

**244 திரு. முனு ஆதி :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் 1960-61 ஆண்டு 1962-ம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பெற்ற திருமணங்கள் எவ்வளவு ?

(இ) அவற்றில் கலப்புத் திருமணங்கள் எவ்வளவு ?



(உ) இதே போன்று இதர மாவட்டங்களில் தமிழ் நாட்டில் பதிவு செய்யப்பெற்ற திருமணங்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(எ) இவ்வாறு பதிவு செய்வதற்குப் பெறும் தொகை மூலம் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு ? மாவட்ட ரீதியாக .

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) *to* (*d*) The figures are not readily available. To collect them would entail a volume of work not commensurate with the usefulness of the result.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** மதுரை மாவட்டத்தில் காந்திகிராமத்தில் படிக்கும் மாணவ-மாணவிகள் காதல் திருமணங்களைப் பதிவு செய்து கொள்ள முன் வந்தால் கூட, கலப்புத் திருமணமாக இருந்தால் தான், அனுமதிக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். அதனால், அரசாங்கத்திற்கு வரக்கூடிய பதிவுக் கட்டணம் நஷ்டம் தானே ? இதை அரசாங்கம் கவனிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எந்தத் திருமணமாக இருந்தாலும், எல்லாத் திருமணங்களும் காதல் திருமணங்களாக இருக்க வேண்டுமென்று நான் வேண்டுகிறேன். எந்தத் திருமணமாக இருந்தாலும், சுயமரியாதைத் திருமணமாக இருந்தாலும் சரி, கலப்புத் திருமணமாக இருந்தாலும் சரி, ஜாதித் திருமணமாக இருந்தாலும் சரி, எந்தத் திருமணத்தையும் பதிவு செய்து கொள்ளலாம். அதற்குத் தடை கிடையாது.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** கலப்பு மணம் செய்து, அதனால் பிறக்கக்கூடிய குழந்தைகளை உற்சாகப்படுத்தக்கூடிய தன்மையிலே, கல்விச் சலுகைகள், உத்தியோகச் சலுகைகள் போன்ற சலுகைகள் அளித்தால், கலப்பு விவாஹங்கள் நிறைய நடப்பதற்கு வசதியாக இருக்குமே !

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எனக்குத் தெரிந்த வரையில் கலப்புத் திருமணத்தினால் பிறக்கும் குழந்தைகள் நல்ல புத்திசாலிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு விசேஷ சலுகைகள் கூட வேண்டியதில்லை.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** இந்த மாதிரிக் கலப்புத் திருமணத்தை அதிகமாகச் செய்தால், ஜாதிப் பிரிவுகள் குறைந்து, ஒற்றுமை ஏற்படுகிறது. ஆகவே, சர்விஸ் கமிஷன் பரீட்சைகளில் இம்மாதிரி கலப்புத் திருமணம் செய்துகொள்ளுபவர்களுக்கு அதிகச் சலுகைகள் கொடுப்பதற்குச் சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** முன்பு ஒரு முறை இது யோசிக்கப் பட்டது. ஆனால் வித்தியாசம் பாராட்டப்படுகிறது என்ற ஒரு ஆட்சேபம் ஏற்படலாம் என்று நினைத்து, அது மேற்கொண்டு தொடரப்படவில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஜாதி ஒழிப்பு அம்சமான இப்படிப்பட்ட கலப்புத் திருமணங்கள் செய்வதை இந்தச் சர்க்கார் உற்சாகப்படுத்துகிற வகையிலே ஏதேனும் புதிய திட்டம் வகுக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அந்த மாதிரி ஒரு திட்டம் தயாரித்துக் கொடுத்தால் அதற்கு அப்புறம் அதைப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும்.

**திரு. இராம அரங்கண்ணல் :** பிற்பட்ட வகுப்பினரில் பெண் கொள்ளும் ஆண்களை நல்ல முறையில் விளம்பரப்படுத்தி, பெரிய சீர்திருத்தம் செய்தவர் என்று பத்திரிகைகளில் படத்தோடு போட்டு பாராட்டுதல் வழங்கினால், கலப்புத் திருமணத்திற்கு ஆக்கம் அளிப்பதாக இருக்கும் அல்லவா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பத்திரிகைகள் செய்யவேண்டும் அல்லது கனம் அங்கத்தினர் இதைப்பற்றிக் கொஞ்சம் சொல்லலாம். கனம் அங்கத்தினர் அவர்கள் தான் எவ்வாறு கலப்புத் திருமணம் செய்து கொண்டார் என்பதுபற்றி முன்பு ஒரு முறை சொன்ன மாதிரி, அங்கத்தினர்கள் இதில் அக்கறை [illegible].

இருப்பது பாண்டிச்சேரியில் மதுவிலக்கு அமுல் செய்யாதிருப்பதினால் தான். ஆகவே பாண்டிச்சேரியில் மதுவிலக்குச் சட்டத்தைக்கொண்டு வர மத்திய சர்க்காரிடம் இந்த மாநில சர்க்கார் வற்புறுத்தியிருக்கிறதா ? அல்லது இப்போதாவது வற்புறுத்துமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதர மாநிலத்தில் குற்றம் ஏற்பட்டால் அதைப் பற்றி மத்திய சர்க்காரிடம் இந்த சர்க்கார் வற்புறுத்தியாக வேண்டுமென்றால் அது பலன் அளிக்காது. மத்திய சர்க்கார் அவர்கள் வ்யூஸ் படி நடந்து கொள்வார்கள்.

MR. SPEAKER : The Hon. Minister says that it will be a case of interference with the affairs of another State.

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்த மாநிலத்திற்கு அங்கிருந்து வருகிற சாராயம் அல்லது லாகிரி வஸ்துக்களைத் தடுக்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அதை அரசாங்கம் எடுத்துவருகிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஸார், அமைச்சர் அவர்கள் சொல்லுவது சரி. ஆனாலும், நம்முடைய மதுவிலக்குக் கொள்கை தோல்வி அடைகிற வகையில் பக்கத்திலே இரண்டு இடங்கள் இருக்கின்றன. ஆகையால் இதைப் பற்றி சிபாரிசு செய்யலாம் என்பதைப் பற்றி சர்க்கார் யோசனை செய்யக்கூடாதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்த யோசனையை நாம் மத்திய சர்க்காருக்குச் சொல்லுவதைக் காட்டிலும் அந்த மாநில மக்கள் தக்க ஏற்பாடு செய்து இத்தகைய மது விலக்குச் சட்டத்தை அங்கேயும் கொண்டுவருவதற்கு இந்த மாநில மக்களும் இந்த சபை அங்கத்தினர்களும் முயற்சி செய்ய வேண்டியதுதான் நியாயம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வை. சங்கரன் :** நம் ராஜ்யத்திலே மது விற்கக் கூடாது என்பது மட்டுமல்ல, இங்கே உள்ளவர்கள் மது அருந்தக்கூடாது என்று இருப்பதால் ஒரு அளவுக்கு ஏமாற்றக் கூடிய முறையில் அடுத்த இடத்தில் குடித்து விட்டு வந்து விடுகிறார்கள் ஆதலால் இதைப் பற்றி பரிசீலிக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துவார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** நான் முன்பே சொல்லி விட்டேன், மத்திய அரசாங்கத்தை இந்த அரசாங்கம் வற்புறுத்த முடியாது என்று. நான் முன்பு சொன்னபடி அந்த இரண்டு பகுதிகளில் உள்ள மக்களும் அந்த சட்டசபை அங்கத்தினர்களும் ஏற்பாடு செய்யவேண்டும். இங்கே உள்ள சட்டசபை அங்கத்தினர்களும் அங்கு சென்று அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம்.

**திரு. கே. பொன்னையா :** எல்லை ஓரமாக வசிக்கிற மக்கள் அடுத்த மதுவிலக்கு இல்லாத இடங்களுக்குப் போய் மது அருந்தி விட்டு வருகிறார்கள். பாண்டிச் சேரி, கேரளம் போன்ற இடங்களுக்கும் நம் மாநிலத்திற்கும் இடையே பெல்ட் ஏரியா போன்று, 10—15 மைல் தூரம் வைத்து விட்டால் ஏழைகள் போய்க் குடித்து விட்டு வர மாட்டார்கள். அரசாங்கம் அதைப் பற்றி யோசிக்குமா ?

**கனம் சபாநாயகர் :** பெல்ட் ஏரியாவை வெட்டாக வைப்பதா அல்லது ட்ரையாக வைப்பதா ? (சிரிப்பு).

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்த அரசாங்கத்திற்கு இங்கே உள்ளவர்கள் எங்கெல்லாம் மது விலக்கு இல்லையோ அங்கே சென்று சிலர் குடித்து விட்டு வருவது தெரியும். இதையெல்லாம் கட்டுப்படுத்த எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. சி. பொன்னுசாமி :** மது விலக்குச் சட்டத்தை எடுத்து விடவும் வேண்டாம், அதை அமல் நடத்துவதில் விஸ்தரிப்பும் வேண்டாம் என்று மத்திய சர்க்காரிடத்திலிருந்து ஏதாவது தாக்கீது உண்டா ?



**கனம் திரு. பூ. கக்கன் :** இதிலே குற்றம் குறைகள் இருக்கலாம். அதையெல்லாம் கட்டுப்படுத்தவேண்டும். நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் இதை எங்கும் விஸ்தரிக்க முடியாது. ஏற்கனவே எங்கும் அமலில் இருக்கிறது. நமது மதிப்புக்குரிய முதல் அமைச்சர் அவர்கள் இந்த மது விலக்குத் திட்டத்தை எடுத்து விட மாட்டோம், தீவிரமாக அமல் நடத்துவோம் என்று சொல்லி இருப்பதையும் நான் ஞாபகப்படுத்துகிறேன்.

**திரு. து. ப. அழகமுத்து :** கேரளம், மைசூர் போன்ற மாநிலங்கள் நமக்கு அடுத்துள்ள பிரதேசங்களில் மது விலக்கு செய்திருக்கிறார்கள். அதேபோல பாண்டிச்சேரியிலும் நமக்கு அடுத்துள்ள பிரதேசத்தில் மது விலக்கு செய்ய சர்க்கார் வற்புறுத்துமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்தமாதிரி கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் இருப்பது நல்லது என்று நினைக்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** சொல்ல வேண்டும் என்பது கட்டாயம் இல்லை.

**திரு. க. ர. முனிரத்தினம் :** பாண்டிச்சேரிக்குச் செல்லுவதற்கு ஏதாவது பாஸ்போர்ட் மாதிரி பர்மிட் வைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்த மாநிலத்தைப் பொறுத்த மட்டில் அந்த மாநிலத்தில் குடிப்பதற்கு இந்த மாநிலத்தில் பர்மிட் கொடுக்க முடியுமா என்று அங்கத்தினரே தெரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

## பொறியியல் கல்லூரிகள்.

*242 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) அரசாங்க எஞ்ஜினீயரிங் கல்லூரிகளில் தற்போது படிக்கும் ஆண்கள், பெண்கள் எத்தனை பேர்கள் ?

(இ) எஞ்ஜினீயரிங் கல்லூரிகளில் பெண்களுக்கென இடமொதுக்க உத்தேசமுண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) இக்கேள்வி சம்பந்தமாக ஓர் அறிக்கை* சட்ட சபையில் வைக்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஸார், இங்கு வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில், கிண்டி என்ஜினீயரிங் காலேஜில் 1,251 மாணவர்கள் படிப்பதில் இரண்டாவது ஆண்டில் மட்டும் ஒரு பெண்மணி இருக்கிறார். கோயம்புத்தூர் டெக்னலஜி கல்லூரியில் படிக்கக் கூடிய 513 மாணவர்களில் ஒருவர் கூட பெண்மணி இல்லை. அப்படி இல்லாமல் இருக்கக் காரணம் பெண்மணிகளே என்ஜினீயரிங்கில் அக்கறை காட்டவில்லையா ? அவர்களையும் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளுவதற்கு, அவர்களை உற்சாகப்படுத்த விதி முறைகளைத் தளர்த்துமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது இருக்கிற விதி முறைகள்படி ஆண்களாக இருந்தாலும், பெண்களாக இருந்தாலும், என்ஜினீயரிங் கல்லூரியில் சும உரிமை இருக்கிறது. பரீக்ஷை மார்க் அடிப்படையிலும், இண்டர்வ்யூ செய்யும்போது கொடுக்கும் மார்க் அடிப்படையிலும்தான் இந்தத் தேர்வுகள் நடந்து வருகின்றன. ஆனால், பொதுவாக, அதிகமாக பெண்கள் என்ஜினீயரிங் கல்லூரிக்கு வருவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

* Printed as Appendix II on pages 259-261.

சுய மரியாதை அற்றவர்கள் அல்லது குறைந்தவர்கள் என்ற கருத்து தொனிக்கும்படியாக இருப்பதால், சுய மரியாதைத் திருமணங்கள் என்று சொல்லுவதைப் புதிய முறைத் திருமணம் என்று சொல்லுவதற்கு சர்க்கார் உத்தரவிடுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஒரு பெயரை வைத்துக் கொள்ளுவதினுல் மற்றவர்கள் பாதிக்கப்படுகிருர்கள் என்று சொல்லுவது சரியல்ல.

**திரு. ர. ஜீவரத்னம் :** வைதீக முறைப்படி நடைபெறக் கூடிய கல்யாணங்கள் ஏராளமாக நடக்கிறபடியால், இடங்களுக்கு கிராக்கி இருப்பதினுலே, சர்க்கார் செலவிலே நகரத்திற்கு ஒரு கல்யாண மண்டபம் கட்டிக் கொடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நகர மன்றமே கல்யாண மண்டபம் கட்டுகிறது. பல தேவஸ்தானங்களும் கல்யாண மண்டபம் கட்ட வேண்டுமென்று நான் சொல்லி வருகிறேன். அவ்வாறு கட்டிக்கொண்டும் வருகிருர்கள். கோவில்களிலே திருமணம் நடத்தினுல் சிக்கனமாக நடத்தலாம். அவ்வாறு பல திருமணங்கள் நடைபெறுகின்றன.

**திரு. சி. பொன்னுசாமி :** விவாகரத்து செய்துகொள்ளுவதற்கு ஆண்களுக்கு உரிமை இருப்பது போல், பெண்களுக்கும் உரிமை உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இருசாராருக்கும் உரிமை உண்டு. சட்டப்படி அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

* * *

*Elementary Schools (Teacher-pupil ratio)*

* 245 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to reduce the present teacher-pupil ratio of 1 : 40 in Elementary Schools?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Certain representations have been received in the matter and they are under the consideration of Government.

**திரு. வை. சங்கரன் :** இப்பொழுதுள்ள விகிதாசாரம் 1 : 35 என்று அறிகிறேன். ஆனுல் 70 மாணவர்கள் வரையிலும் ஒரு உபாத்தியாயர் தான் போடுகிருர்கள். 70-க்கு மேல் போனுல் தான் 2 உபாத்தியாயர்கள் போடுகிருர்கள். 35-க்கு மேல் போனுல் 2 உபாத்தியாயர்கள் போடுவதற்கு சர்க்கார் உத்தரவிடுமா ?

**கனம் திரு. எம். பக்த்வத்சலம் :** இதைப் பற்றி விவாதத்தில் விடை அளிக்கும்பொழுதுகூடச் சொன்னேன். 1 : 35 என்ற விகிதாசாரம் வகுப்பைப் பொறுத்தது மாத்திரமல்ல. பஞ்சாயத்து யூனியனை ஒரு யூனிட்டாக வைத்துக்கொண்டு, "ஓவராலாக" 35-க்கு மேல் போகக் கூடாது. கல்வி இலாகா இயக்குநர் இதைக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்பது இப்பொழுதுள்ள உத்தரவு.

**திரு. கி. இரா. சம்மந்தம் :** இந்த ஓவரால் ஆக 35 என்ற விகிதம் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளுக்கு விதித்து அனுப்பப்பட்டிருக்கிற உத்தரவு ஏற்கெனவே உள்ள ஸ்லாப் மாதிரி இல்லை என்று சொல்லுகிருர்கள். ஏற்கெனவே 1 முதல் 35 மாணவர்கள் வரை ஒரு ஆசிரியரும், 36-க்கு மேல் 70 வரை 2 ஆசிரியரும், 71-க்கு மேல் 105 வரை 3 ஆசிரியர்கள் என்று இருந்தது. அந்த ஸ்லாப் முறை இப்பொழுது அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதா ?

*Expunged as ordered by the Chair.



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஓவரால் முறை அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது என்று குறிப்பிட்டேன். நான் நேற்று பேசும்பொழுது மாவட்டத்திற்கான ஓவரால் ஆவரேஜ் 35-க்கு மேற்பட்டிருந்தாலும் திருப்தி அடையலாமென்று கூறினேன். அதற்குட்பட்டு கல்வித் துறை அதிகாரிகள் வேண்டியதைச் செய்வார்கள்.

**திரு. எஸ். மாதவன் :** ஆசிரியர்—மாணவர் விகிதாசாரத்தைக் காரணம் காட்டி, பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில், குறிப்பாக சிறு கிராமங்களில் பல வகுப்புகளுக்கு ஒரு ஆசிரியர் போடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு ஒன்றும் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. இந்த மாதிரி தவறுகள் நடைபெற்ருல் கல்வி அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

*Deposits (refund)*

* 246 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that inordinate delay is being caused in the matter of refund of deposits; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) The Government are not aware of any inordinate delays in sanctioning refunds of contributions deposited towards building works under the Local Development Works Programme. If specific instances of inordinate delays are brought to the notice of Government, they will be looked into and the situation remedied.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** தர்மபுரி மாவட்டத்தில் காரியமங்கலம் பெண்ணுகரம் போன்ற இடங்களில்

**Mr. SPEAKER : If any specific case is brought to the notice of the Government, it will be looked into.**

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ரீபண்டுக்கு விண்ணப்பம் செய்கிறவர்கள் சரியாக அந்த மனு பாரத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் தாமதம் ஏற்படும். மேலும், ரீபண்டு காலாவதியாகிவிட்டால், அதற்கு ஒரு ப்ரொஸீஜர் இருக்கிறது. அதன்படி அரசாங்கத்திற்கு வரவேண்டியதாக இருக்கிறது. அதனுல்தான் காலதாமதம் ஏற்படுகிறது.

*Evening colleges*

* 247 Q.—SRI M. KALYANASUNDARAM AND SRI RAMA ARANGANNAL : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to open evening colleges; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

**திரு. இராம. அரங்கண்ணல் :** மாலை நேரக் கல்லூரி வகுப்புகள் அவசியமானவை என்று கோதாரிக் கமிட்டியாயினர் முடிவு தெரிவித்துள்ளனர். இப்பொழுது கல்கத்தா, பம்பாய் முதலிய நகரங்களில் மாலை நேரக் கல்லூரி வகுப்புகள் நடக்கின்றன. அதைப் போல் சென்னை மாநகரில் பரீட்சார்த்தமாக மாலை நேரக் கல்லூரி வகுப்புகள் திறப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதுபற்றி சென்னை பல்கலைக் கழகத்தோடு கலந்து ஆலோசிக்கப்பட்டது. அவ்வாறு மாலைநேர வகுப்புகள் மூலம் நல்ல முறையில் கல்வி போதிப்பது உகந்ததாக இருக்காது என்று கருதப்பட்டது. அதனால் மேலும் பரிசீலிக்கப்படவில்லை.

*Elliot Beach Area*

* 248 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government are aware of the fact that a lot of rubbish and garbage of the Madras City are carried in trucks and heaped regularly in the Elliot Beach area, Adyar, polluting the healthy atmosphere thereat?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** எலியட் பீச் பகுதியில் சில சமயங்களில் தவிர மற்றப்படி வழக்கமாகக் குப்பை கொட்டுவதில்லையென்றும், இப்பொழுது அங்கு குப்பை கொட்டுவதை நிறுத்திவிட்டு, வேறு இடத்தில் கொட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்றும் சென்னை மாநகராட்சிக் கமிஷனர் தெரிவித்துள்ளார்.

**திரு. வை. சங்கரன் :** மொபஸில் முனிசிபாலிடிகளில் இந்தக் குப்பைகளை கம்போஸ்ட் உரம் தயாரிப்பதற்கு உபயோகிப்பது போல கார்ப்பரேஷனிலும் செய்வதற்கு சர்க்கார் யோசனை கூறுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** எலியட் பீச்சுக்கு அருகில் பள்ளங்கள் இருந்ததால் அதை நிரப்புவதற்காக இந்தக் குப்பைகள் அங்கே போடப்பட்டது. இப்பொழுது எதிர்ப்பு தெரிவித்த பிறகு, நிறுத்தியாகிவிட்டது.

**திரு. ஆர். ரங்கசாமி :** இந்த குப்பை டெப்போக்கள் வெகு காலத்திற்கு முன்பு ஏற்பட்டவை. இப்பொழுது அபிவிருத்தி அடைந்து வரும் நகரங்களிலே, நகர எல்லைக்கு வெளியே இந்த டெப்போக்களை அகற்றுவதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** குப்பையிலிருந்து கம்போஸ்ட் உரம் தயாரிப்பதற்கு வேறு இடம் பார்த்திருக்கிறோம். எலியட் பீச்சில் குப்பையைக் கொட்டுதல் சம்பந்தமாகத்தான் இந்தக் கேள்வி எழுகிறது.

**கல்லூரியில் " ஷிப்டு " முறை**

* **249 கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம் : (திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி** சார்பாக) கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963-64 கல்வியாண்டில் கல்லூரி புதுமுக வகுப்பில் தேவையான இடங்களில் ஷிப்டு முறையினை வைப்பதற்கு உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The University of Madras is the competent authority to permit the adoption of shift system in colleges. Proposals for starting evening classes for girls for Pre-University Course in the Government College, Kumbakonam, are under consideration of Government.



**திரு. கே. ஏ. மதிழயகன் :** ஸார், இந்த ஒரு பாலிசியை நம்முடைய சர்க்கார் யுனிவர்சிட்டிக்கு சிபாரிசு செய்யுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சர்க்கார் இதைப்பற்றி முடிவு எடுத்து யுனிவர்சிட்டிக்கு எழுதியது. அது ஒப்புக்கொள்ளவில்லை. இவைகளையெல்லாம் யுனிவர்சிட்டியைக் கலந்து கொண்டுதான் ஒரு முடிவு எடுக்க வேண்டும். அவர்கள் முடியாது என்று சொல்லி விட்டபடியாலும் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்ற காரணத்தாலும் இந்த அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. யுனிவர்சிட்டியின் முடிவை இந்த அரசாங்கம் ஒப்புக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

*District Educational Officers (District Board High Schools)*

* 250 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that the posts of District Educational Officers have been sanctioned to be in charge of the administration of the High Schools which were under the management of the erstwhile District Boards ; and

(*b*) if so, the date from which it will be given effect to?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Proposals for filling up the posts are under consideration of the Government. The Special District Educational Officers are expected to be posted shortly.

**திரு. மு. பொ. வடிவேல் :** ஸார், மாவட்ட கழகப் பள்ளிகளில் வேலை பார்க்கக்கூடிய ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு மாதக் கடைசியிலும் தான் சம்பளம் கொடுப்பதாக புகார்கள் அரசாங்கத்திற்கு வந்தனவா ? அதைப் பற்றி அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்குமா ? மேலும் பஞ்சாயத்து யூனியனில் வேலை பார்க்கிறவர்களுக்குப் பண்டிகை முன் பணம் கொடுப்பது போன்று இவர்களுக்கும் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. இதையும் அரசாங்கம் கவனிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி தகவல் இப்பொழுது என்னிடம் ஒன்றும் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.

*Town Panchayat (Omalur)*

* 251 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any complaint signed by eight members of the Omalur Town Panchayat alleging irregularities and misuse of funds in that Panchayat has been received by the Government ;

(*b*) when was the complaint received ; and

(*c*) the action taken in the matter?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) In April 1962.

(*c*) The Collector of Salem who is the Inspector of Panchayats for Salem district is taking necessary action on the complaints referred to in the petition. The Government are watching the action taken in the matter.

*Power supply for Agriculture*

* 252 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that the Electricity Department insists on the agriculturists installing pump sets before they lay the line to the wells even though they know that loans have been sanctioned to the agriculturists by the L.M. Banks and in the Block Development Offices; and

(b) if so, whether the Government will give instructions to the department to lay the lines in such cases and avoid delay in giving service to the wells?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) No instructions of the kind are necessary as it will result in financial loss to the State Electricity Board in cases where the lines are erected, but services are not taken. There is no delay at present in giving the supply.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, what is the standing order given to the Department in the matter of giving connections to the pump-sets used by the agriculturists in view of the national emergency?

THE HON. SRI R. VENKATARAMAN : No connections are given during day-time. They will have power supply during the night.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** ஸார் இம்மாதிரி நடை முறையில் இருப்பதால் ஹஸூர் தாலூகாவில் நம்மநத்தம் என்ற கிராமத்தில் பல விவசாயிகள் தங்களிடமுள்ள இறைப்பு மாடுகள் ஆயில் எஞ்சின்கள் பம்பு செட்டுகள் எல்லாவற்றையும் விற்றுவிட்டு எலெக்ட்ரிக் மோட்டார் வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு கனெக்ஷன் கொடுக்கவில்லை. அதனால் அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இதனால் பல விதத்தில் கஷ்ட நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு மின்சார போர்டு பொறுப்பாளியா அல்லது யார் பொறுப்பாளி என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்தக் கேள்வி போடுவதற்கு. இதற்கு கனம் அங்கத்தினர் இவ்வளவு நாட்கள் காத்திருக்க வேண்டியதில்லை. இதைப்பற்றி எனக்கு எழுதி அனுப்பியிருந்திருந்தால் இரவு நேரங்களில் மின்சாரத்தை சப்ளை செய்வதற்காவது உடனடியாக ஏற்பாடு செய்திருக்கலாம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு பம்பு செட்டுகள் கிடைப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. பம்பு செட்டுகள் வைத்திருந்தாலும் கனெக்ஷன் கிடைப்பதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. பம்பு செட்டுகளை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு உடனடியாகக் கனெக்ஷன் கொடுக்க இந்த அரசாங்கம் உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஒரு பகுதியில் ஒரு அங்கத்தினர் மாத்திரம் பம்பு செட்டு வைத்து விட்டு மற்றப் பகுதியிலுள்ளவர்கள் பம்பு செட்டுகள் வைத்துக்கொள்ளாமல் இருந்து பம்பு செட்டு வைத்துக்கொண்டிருக்கிறவருக்கு மாத்திரம் கனெக்ஷன் கொடுப்பது என்பது முடியாத காரியம். அது கஷ்டமாக இருக்கும். அந்தப் பகுதியிலுள்ளவர்கள் எல்லோரும் கேட்டால் தான் கொடுக்க முடியும். அதனால் தான் அப்படிப்பட்ட



புகார்கள் வருகின்றன. அந்தப் பகுதிகளுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்கும் போது அதற்கு எவ்வளவு செலவாகிறது எவ்வளவு வருவாய் வரும் என்பதையெல்லாம் கணக்கிட்டுதான் கனெக்ஷன் கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. இவற்றையெல்லாம் கணக்குப் பார்த்துத்தான் போர்டில் சப்ளை செய்கிறார்கள். பின்னால் பம்பு செட்டுகளை வைத்துக்கொள்ளுவார்கள் என்ற முறையில் சப்ளை செய்வது இல்லை. அதனால் தான் கால தாமதம் ஏற்படுகிறது. சிலர் மட்டும் கேட்டு மற்றவர்கள் கேட்காமல் இருப்பதால் தான் கால தாமதம் ஏற்படுகிறது.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** ஒவ்வொரு கிராமத்திலும் விவசாயிகள் பம்பு செட்டுகளை வாங்கி வைத்துக்கொண்டு . , . .

**கனம் சபாநாயகர் :** எழுதிக்கொடுத்தால் தரப்படும் என்று சொல்லியிருக்கிறாரே.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** இரவில் கொடுக்க உத்தரவு போடப்படும் என்று சொல்லுகிறார். சாங்ஷன் ஆகியும் சில இடங்களில் இன்னும் கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை. பல மாதங்களாகக் காத்திருந்தும் இன்னும் கொடுக்கப்படவில்லை.

**கனம் சபாநாயகர் :** எழுதிக்கொடுத்தால்தான் கொடுக்கிறேன் என்று சொல்லுகிறாரே.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** கனெக்ஷன் கிடைக்க வில்லை என்று தான் சொல்லப்படுகிறது. கனெக்ஷன் வேண்டும் என்று கேட்கிறார்கள்.

**கனம் சபாநாயகர் :** கனெக்ஷன் தான் கொடுக்கிறேன் என்று சொல்லுகிறாரே.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** சாங்ஷன் ஆனவுடன் மோட்டார்கள் வாங்கி வைத்துக்கொள்ளுகிறார்கள். அப்பொழுது கனெக்ஷன் வேண்டும் என்று கேட்டால் கால தாமதம் ஏற்படுகிறது. சாங்ஷன் ஆனவுடனே லயனைக் கொண்டு வந்து கனெக்ஷனை உடனடியாகக் கொடுக்க சர்க்கார் யோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** முதலில் கேட்ட கேள்விக்குப் பதில் கனம் சுப்பையா முதலியார் கேள்விக்குப் பதில். சாங்ஷன் ஆனவுடனே கனெக்ஷன் கொடுத்து விட முடியாது. மோட்டார் வைக்காமல் இருக்கும் போது லயனைப் போட்டு விட்டு உட்கார்ந்திருக்க முடியாது. மோட்டார் வைக்காமல் லயனைக் கொடுப்பது என்பது சரியல்ல. அதனால் எலக்ட்ரிசிட்டி போர்டுக்கு நஷ்டம்தான் வரும். அதனால் பம்பு செட்டுகள் எரெக்ஷன் செய்த பிறகுதான் லயன் கொடுக்க முடியும். இல்லாவிட்டால் எலக்ட்ரிசிட்டி போர்டுக்கு நஷ்டம் வரும்.

**திரு. ஆர். ரங்கசாமி :** எரெக்ஷன் செய்த பிறகு கனெக்ஷன் வேண்டும் என்று கேட்டு எரெக்ஷன் செய்த தேதியிலிருந்து கட்டணத்தை வசூல் செய்தால் அதைக்கொடுக்கத் தயாராக இருந்தால் அந்த மாதிரி சமயங்களில் ஏன் கனெக்ஷனை உடனடியாகக் கொடுக்கக்கூடாது. அப்படிக் கொடுத்தால் விவசாயிகளுக்கு சௌகரியமாக இருக்கும் அல்லவா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எரெக்ஷன் செய்த பிறகு எவ்வளவு சீக்கிரத்தில் கனெக்ஷன் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கொடுக்க கவனம் செலுத்தப்படும். அப்படி கனெக்ஷன் கொடுப்பதற்குள் பம்பு செட்டுகள் போட வேண்டும். இதை நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன்.

**திரு. ரா. ஜீவரத்தனம் :** தனியார் நடத்தக்கூடிய கம்பெனிகளை மின்சாரம் விவசாயத்திற்கும் வீடுகளுக்கும் கொடுக்கவேண்டும் என்று கேட்டால் அவர்கள் சரிவர மின்சாரம் கொடுப்பதாக இல்லை. அதைப்பற்றிக் கேட்டால் சர்க்காருக்கு கடனுக்கு மனுச் செய்து கொண்டிருக்கிறோம், அவர்

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, பொறியியல் கல்லூரியில் சேர்க்கப்படுகிற மாணவர்கள் எண்ணிக்கையை வரும் ஆண்டில் உயர்த்தும் எண்ணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நேற்று நடந்த விவாதத்தின் போது கொடுக்கப்பட்ட அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. எண்ணிக் கையை 1,140-லிருந்து 1,400 சில்லரை ஆக உயர்த்துவதாக இருக்கிறது. அதற்கு, சில கல்லூரிகளைத் தேர்ந்தெடுத்து விட்டோம். அவைகளில் இப்போது 120 பேர்கள் இருக்கும் இடத்தில் 180 பேர்கள் அனுமதிக்கப் படுவார்கள். கிண்டி என்ஜினீயரிங் கல்லூரியில் அதே மாதிரி உயர்த்து வதாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் ஜில்லாவிலே, என்ஜினீயரிங் கல்லூரிக்குச் சேர்த்துக் கொள்ளுவதில் எனது கல்லூரி மாணவி ஒருவர் விண்ணப்பித்துக்கொண்டபோது, "என்ஜினீயரிங் கல்லூரியிலா சேரப் போகிறீர்கள், இவ்வளவு பெரிய சாமான்களைத் தூக்கிக் கொண்டு நீங்கள் வேலைகளை எப்படி செய்து முடிக்கப் போகிறீர்கள்" என்று விண்ணப்பம் வாங்கிக் கொள்ளும் போதே அவர்கள் பின்னடையும்படி செய்து விட்டார்கள் என்பது அமைச் சருக்குத் தெரியுமா ? அதோடு கூட இன்னொரு பெண்ணும் படிக்க முன் வந்தும் கூட எடுத்துக் கொள்ளாமல், திரும்ப பி. எஸ். ஸி-க்கு அனுப்பிவிட்டார்கள் என்பதும் அமைச்சருக்குத் தெரியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தமாதிரி கேட்பது தான் நியாயம், சரி என்று நினைக்கிறேன். ஏனென்றால் என்ஜினீயரிங்கில் இருக்கிற கஷ்டம், சிரமம் தெரியாமல் என்ஜினீயரிங் கல்லூரி என்பது சாதாரண கல்லூரியில் படிப்பது மாதிரித்தான் என்று நினைத்து சேர்ந்த பிறகு, இருக்கக் கூடிய "ஃபிஸிகல் வொர்க்கை" சமாளிக்க முடியாமல் போய் விட்டால் அந்த சீட்டும் நஷ்டமாகிவிடும், மாணவியின் வாழ்க்கையும் வீணாகிக் கெட்டு விடும். கல்லூரிக்கு செலெக்ஷன் செய்கிறவர்கள் இந்த மாதிரிக் கேட்கிறார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அப்படி கேட்பது நியாயம் என்றுதான் நினைக்கிறேன். வேண்டிய அளவுக்கு உறுதி இருப்பவர்களைத்தான் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

**கனம் சபாநாயகர் :** இதிலேயெல்லாம் பயந்து போய்விட்டார்களா என்ன ? (சிரிப்பு).

**திருமதி சி. குழந்தையம்மாள் :** இந்த மாதிரி உறுதி இருக்க வேண் டும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அநேகமாக எல்லாப் பெண்களுக்கும் அந்தமாதிரி உறுதி இல்லை என்பது கேள்வி கேட்டதி லேயிருந்தே தெரிகிறது. நல்ல உடல் வளம் பெற்ற பெண்களை இந்தக் கேள்வியைக் கேட்காமல் அவர்களுடைய விண்ணப்பங்களை ஏற்றுக்கொள் வார்களா ?

**கனம் சபாநாயகர் :** மன உறுதி வேண்டும் என்று சொல்கிறார். (சிரிப்பு).

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே சொல்லி விட்டார்கள். மன உறுதியும் தேவை. உடல் உறுதிமட்டும் போதாது. இந்த பதிலிலிருந்து எந்தத் தவறான அபிப்பிராயமும் கொள் ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஆண்களுக்கும், பெண் களுக்கும் என்ஜினீயரிங் கல்லூரியில் சேருவதற்குச் சம உரிமையிருக்கிறது. எவ்வளவு அதிகமாக அவர்களைச் சேர்த்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு அதிகமாகச் சேர்த்துக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். இப்போதே கூட 14—15 பேர்கள் என்ஜினியரிங் கல்லூரியில் சேர்ந்து, பாஸ் செய்து, பட்டம் பெற்று உத்தியோகத்திலும் இருக்கிறார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இப்போது இருக்கிற என்ஜினீயர்களு டைய எண்ணிக்கையை அதிகரிக்க, பயிற்சி ஆண்டுகளைக் குறைக்கிற உத் தேசம் சர்க்காருக்கு உண்டா ? அப்படியானால் அதனுடைய திட்டம் என்ன ?



**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இரண்டு திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவதாக இருக்கிறோம்.—

ஒன்று, இப்பொழுது 3-வது வருஷம், 4-வது வருஷம் படிக்கிறவர் களுக்கு, விடுமுறை நாட்களைக் குறைத்து அடுத்த பரீட்சையை ஏப்ரல்— மே மாதங்களில் எழுத வேண்டியவர்களை டிசம்பரில் எழுதச் செய்து சீக்கிரத்தில் என்ஜினீயர்களைத் தயார் செய்வது.

இரண்டாவது, பி. எஸ்ஸி. படித்தவர்களுக்கு 3 வருஷப் படிப்பு கொடுத்து அவர்களுக்கு என்ஜினீயரிங் பட்டம் கொடுப்பது என்பது.

இந்த இரண்டு திட்டங்களும் இந்த ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களி லிருந்து அமலுக்கு வரும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** என்ஜினீயரிங் கல்லூரிகளில் பெண்கள் படிக்க வருவதில்லை என்று இன்றைக்கு அறிந்து கொண்டிருக்கிறோம். இந்த நிலையில் அவர்களை நம்பி பெண்கள் பாலிடெக்னிக்குகளைத் திறக்க லாமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர் :** எத்தனையோ சங்கதிகளுக்கு நம்பித்தான் ஆகவேண்டும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கேள்விகளுக்கு பதில் சொல்லும் போது கனம் அங்கத்தினர்கள் நன்றாக கவனிக்க வேண்டும். பெண்கள் வரவில்லை என்று நான் சொல்லவே இல்லை. ஆரம்பித்திருக்கிற பெண்கள் பாலிடெக்னிக்கில் 120 இடங்கள் இருந்தன. ஆனால் அதற்கு மனுக்கள் 400-க்கு மேல் வந்திருக்கின்றன. இது போன வருஷம் ஆரம்பித்த பாலிடெக்னிக்கைப் பொறுத்த வரையில். ஆகையால் வரவில்லை என்று சொல்லுவது சரியல்ல. செலெக்ஷன் செய்யும்போது பார்த்துச் செய்ய வேண்டுமென்று தான் சொன்னேன்.

**திரு. வை. சங்கரன் :** செலெக்ஷன் கமிட்டியில் ஒரு பெண் அங்கத்தினர் கூட இல்லாததினால் இம்மாதிரி பெண்களுடைய விண்ணப்பங்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன என்று பெண்கள் ஒரு வதந்தியைக் கிளப்பி விட்டிருக்கிறார்களே ? அதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அம்மாதிரி வதந்தியைப் பெண்கள் ஒன்றும் கிளப்பியதாகத் தெரியவில்லை. கனம் அங்கத்தினர்தான் கிளப் பினரோ என்னவோ ?(சிரிப்பு).

**திரு. எஸ். முருகையன் :** பெண்களுக்கு என்று தனியாக ஒரு என்ஜினீயரிங் கல்லூரி ஆரம்பித்துவிட்டால், பெண்கள் தனியாக படிப்ப தற்கு வசதியாக இருக்குமே ? அப்படிச் செய்ய சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அது சாத்தியமில்லை.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** பெண்கள் பாலிடெக்னிக் பள்ளி களில் என்னென்ன கைத் தொழில்கள் சொல்லி கொடுக்கப்படுகின்றன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ரேடியோ மெகானிக், எலக்ட்ரா னிக்ஸ், இன்னும் செக்ரேடரியல் கோர்ஸ் இந்த விதமான 4, 5 திட்டங்கள் இப்பொழுது முதலில் ஆரம்பித்து வைத்திருக்கிறோம். இன்னும் விஸ் தரிப்பதற்கும் எண்ணம் இருக்கிறது.

**திரு. சி. பொன்னுசாமி :** தலைவர் அவர்களே, இந்த மாகாணத்தில், தேசத்தில் ஆண்களை விட சில சத விகிதம் பெண்கள் அதிகமாக இருக் கிறார்கள். பல துறைகளிலும் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டும்; என்ஜினீயரிங் துறையிலும் அவர்களில் அதிகமானவர்களுக்கு வாய்ப்பு கொடுப்பதற்கு உற்சாகம் கொடுக்கக்கூடிய வகையில் ஏதாவது திட்டம் வகுக்க சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்பொழுது அந்த வாய்ப்பு இருந்து கொண்டிருக்கிறது.

படி செய்தல், கூட்டுறவு நிலையங்கள் மூலமாக "தக்காவி" கடன்களையும் விவசாயக் கடன்களுக்கான வசூல்களையும் செலுத்தக் கோருவதை நிறுத்திப் போடுதல், பூச்சிக்கொல்லி மருந்துகளையும், உர வகைகளையும் இலவசமாக வழங்குதல் ஆகிய உதவிகள் மூலமாக அவர்களுக்குத் தக்க நிவாரணம் அளித்தல் பற்றியும் ஆனை, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தை நான் கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

THE HON. SRI V. RAMAIAH : The 'Late Blight' disease made its first appearance on a large scale in the Nilgiris district during June 1961. The rainfall during that period was nearly double the normal, and so the weather condition was very favourable for the quick spread of the disease. The disease spread throughout the district in a period of one week.

The potato crop is cultivated in the Nilgiris district in about 23,000 acres in a normal year. As the main crop in 1961 was extensively affected by the Late Blight, the yield was only 50 per cent. Due to the fear of the 'Late Blight' disease and want of seed materials, the area of cultivation of potatoes in the second crop for this year went down to 3,500 acres from the normal acreage of 7,000 acres. But due to systematic sprayings and the availability of dythane, an effective fungicide for 'Late Blight' disease, the incidence of the disease was checked to a great extent and the yield was about 80 per cent of the normal for the second crop. Encouraged by these results, the normal area under irrigated crop was brought under cultivation and the yield of this crop was normal though there was incidence of late blight disease. During the main crop season in 1962, the extent of potato cultivation came down to 10,000 acres from the normal 15,000 acres, due to the shortage of seed materials. This crop was also affected by 'Late Blight' in varying degrees depending on the climatic conditions and the time of sowing. The yield was 1 : 2 in the parts where there was heavy rainfall and 60 to 70 per cent of the normal yield in other parts. The non-availability of dythane during this season was also a contributing factor for these low yields. In the second crop the normal area of 7,000 acres was brought under cultivation but due to heavy rains before and after planting, followed by a dry spell during November 1962 and early fall of ground frost and non-availability of dythane the yield was less than 25 per cent. However the ryots have taken up the irrigated crops in right earnest and an average of 2,500 acres is expected in the season.

The Agriculture Department took effective steps to control the Late Blight disease by distributing printed hand-bills regarding the symptoms and control measures to be adopted extensively to the ryots. Fungicides were supplied at 50 per cent concessional rate. Sprayers were lent to the ryots at reduced hire charges and sold at subsidised rates. Power sprayers were also made available for large scale spraying operations. In response to this Government's request for import of Dithane 2.78, which is the only fungicide known to control 'Late Blight' disease effectively, the Government of India have taken steps to import



sufficient quantity of 'Zineb' which is an active ingredient for the formulation of this pesticide. It is therefore hoped that formulated Dithane 2.78 would be available in sufficient quantity well in advance of its use against 'Late Blight' disease during the next season. The collection of loan arrears has been postponed till 1st July 1963 and the question of extending the postponement for a further period of one year is under consideration. The provision of further short-term loans to the ryots through Co-operative societies is also under consideration. The relief to the ryots by way of remission of land revenue assessment will be insignificant in view of the fact that there are large number of joint-pattadars in each holding. The Government therefore consider that there is no need for remission or postponement of land revenue at present. I may therefore inform the Member that all possible steps have been taken to relieve the distress caused by the attack of 'Late Blight' on potato crops in the Nilgiris district.

## III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1963-64—*cont.*

## DEMAND NO. XXV—WELFARE OF SCHEDULED TRIBES, CASTES AND OTHER BACKWARD CLASSES.

* THE HON. SRI P. KAKKAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,89,71,800 under Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes".

கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தின் மீது முன்னுரையாக தங்கள் அனுமதியின் பேரில், சில வார்த்தைகள் நான் சொல்ல விரும்புகிறேன். ஹரிஜன நலத் துறையின் மூலம் 1962–63-ம் ஆண்டில் ஏற்பட்ட முன்னேற்றங்களையும், 1963–64-ம் ஆண்டிற்கான வேலைத் திட்டங்களையும் விளக்கி, கனம் அங்கத்தினர்களுக்குப் புத்தக வடிவில் அச்சிட்டு வழங்கப்பட்டிருப்பதனை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள். கனம் அங்கத்தினர்கள் பேசும்போது அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் கருத்துக்களை மனதில் கொண்டு தங்களது மேலான ஆலோசனைகளைக் கூறவேண்டும் என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

நம் நாடு சுதந்திரம் அடைந்த பின்னர், கல்வித் துறையில் நாம் அடைந்த முன்னேற்றத்தின் அளவு, சமுதாயத் துறையில் அடையாததற்கான ஒரே காரணம் தீண்டாமை என்னும் பேய்தான். இது ஜாதி இந்துக்களின் மத்தியில் நிலவி வந்த ஒரு மாசு. இந்த மாசினைப் போக்குதற்கு இந்த அரசு எடுத்துக் கொண்டு வருகின்ற முயற்சிகளை நான் கனம் அங்கத்தினர்களுக்குக் குறிப்பிட்டுச் சொல்லத் தேவையில்லை என்று கருதுகிறேன். அதனைக் கனம் அங்கத்தினர்களே நன்கு அறிவார்கள். நாட்டிலே ஜாதிப்பிரிவுகள் இருக்கக் கூடாது. உயர்ந்தவர்-தாழ்ந்தவர் என்கின்ற மனோபாவம் வளரக்கூடாது என்பதற்காக நம்முடைய ஆன்றோர்கள் நமக்கு நல்ல பல பொன்மொழிகளை எடுத்துச் சொல்லியுள்ளார்கள். அவைகளுள், குறிப்பாக, சிலவற்றை நாம் இங்கே நினைவுகொள்ளுவது பொருத்தமாக அமையும் என நான் கருதுகின்றேன்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என வள்ளுவப் பெருந்தகையும்,

கள் இன்னும் கொடுக்கவில்லை. அப்படிக் கொடுத்தவுடன் சப்ளை செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அம்மாதிரி கம்பெனிகளுக்கு கடன் கொடுப்பதாக அரசாங்கம் ஏதாவது வாக்குறுதி அளித்திருக்கிறார்களா அப்படி மின்சாரத்தை சப்ளை செய்யாத கம்பெனிகளை அரசாங்கமே எடுத்து நடத்துவதற்கு என் நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடாது அப்படி எடுத்துக்கொள்வதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அவர்கள் சொல்வது சரியல்ல. அவர்கள் தங்களுடைய கடமைகளைச் சரியாக செய்யாத காரணத்தால் அந்தப் பழியை அவர்கள் மற்றவர்கள் மீது போடுகிறார்கள். சர்க்கார் கடன் கொடுக்க வேண்டும் என்று சர்க்கார் மீது பழி சுமத்துகிறார்கள். உடனே கனம் அங்கத்தினர்கள் உடனடியாக அவர்களைக் கேட்கலாம். சர்க்கார் கடன் கொடுக்கவில்லையானால் கம்பெனியை சர்க்காரிடமே கொடுத்துவிடலாமே என்று கேட்கலாம். கம்பெனிகள் சப்ளை செய்வதற்கு எப்பொழுதுமே தயாராக இருக்க வேண்டும். அதற்கு வேண்டிய மூலதனம் வைத்துகொண்டிருக்க வேண்டும். சப்ளை செய்ய முடியவில்லை என்றால் சர்க்காரிடம் கொடுத்துவிடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறையில் ஒரு வாரத்திற்கு முன்னதாக அவர்களால் எந்தப் பகுதிகளுக்கு விஸ்தரிக்க முடியவில்லையோ அந்தப் பகுதிகளையெல்லாம் சர்க்காருக்கு சரெண்டர் செய்து விட்டார்கள்.

**திரு. ஏ. எஸ். தங்கவேலுமூர்த்தி கவுண்டர் :** கனம் தலைவர் அவர்களே, மின்சார பம்பு செட்டுகள் எரெக்ட் செய்வதற்கு சார்ஜ் வசூல் செய்கிறார்கள். அதை நிறுத்துவதற்கு சர்க்காருக்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அப்படி நிறுத்தி வைப்பது சாத்தியம் இல்லை.

Sri C. CHIRANJEEVULU NAIDU : In view of the difficulties experienced by the agriculturists to irrigate dry crops during the night, will the Government consider the desirability of relaxing these rules and allowing them to use these pump-sets during day-time for irrigating their dry crops?

The Hon. Sri R. VENKATARAMAN : I am well aware of the difficulties of the agriculturists but the agriculturists and other people should also be aware of the acute shortage of power through which the State is passing. It is not physically possible to supply power during day-time.

**திரு. எஸ். மாதவன் :** கனம் தலைவர் அவர்களே, அவசர நிலை காரணமாக விவசாயத்திற்குப் புதிய பம்பு செட்டுகளுக்கு எலெக்ட்ரிசிடி கொடுக்கக்கூடாது என்று இந்த அரசாங்கம் ஏதாவது உத்திரவு இட்டிருக்கிறதா ? அப்படி இருந்தால் அதைத் தளர்த்துவதற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அம்மாதிரியான உத்தரவு இடவேண்டிய நிலைமைதான். ஆனால் நமது ராஜ்யத்தைப் பொறுத்த மட்டில் உணவு உற்பத்திக்கு எந்த விதமான தடங்கலும் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் இரவில் மட்டுமாவது மின்சாரம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

-10 .m. **திரு. மு. பொ. வடிவேல் :** பாலார் பேஸின் ரூல்ஸ் காரணமாக வடாற்காடு ஜில்லாவிலுள்ள பல விவசாயிகள் பம்ப் செட் போட முடியாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். உணவு உற்பத்திப் பெருக்கத்திற்காவது தயவுசெய்து பாலார் பேஸின் விதிகளைத் தளர்த்த முடியுமா ? தளர்த்துவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதற்குத் தனியாகக் கேள்வி மராமத்து அமைச்சர் அவர்களுக்குப் போட்டால் பதில் வரும்.





**திரு. க. ர. முனிரத்தினம் :** கிராமங்களில் புதியதாக மின்சாரம் விஸ்தரிக்கப்படும் இடங்களில் விவசாய வேலைகளுக்கு மட்டுமல்லாமல், வீடுகளிலும் மின்சாரம் வேண்டுமென்றால்தான் மின்சாரம் அந்தக் கிராமத்திற்கு விஸ்தரிக்கப்படும் என்று சொல்வதைத் தடுத்து, விவசாயத்திற்கு மட்டும் மின்சாரம் கொடுப்பதற்கு உடனடியாக வழிவகை செய்ய முடியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மின்சார விஸ்தரிப்பு கட்டுப்படி ஆகின்ற முறையில்தான் செய்ய முடியும். நினைத்தபடி செய்தால் நஷ்டம் வந்துவிடும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இப்பொழுது ஓர் ஊரிலுள்ள 15 பேர்களுக்கு சாங்ஷன் ஆகிறது. 15 பேர்களும் அக்ரிமெண்டில் கையெழுத்து போட்டுவிடுகிறார்கள். ஓரிரண்டு பேர் பம்ப் செட் வைத்து, மின்சாரம் கிடைக்காமல் காத்துக்கொண்டிருக்கிற நிலையில் 15 பேர்களும் போட்டால்தான் மின்சாரம் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். பம்ப் செட் வைத்திருக்கும் இரண்டு பேர்களுக்காவது மின்சார கனெக்ஷன் கொடுக்க உத்திரவு அனுப்பப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அம்மாதிரி கொடுத்தால் எந்தப் பகுதிக்கு நாம் மின்சாரம் விஸ்தரிக்கிறோமோ அந்தப் பகுதியில் மின்சார போர்டாருக்கு நஷ்டம் ஏற்பட்டுவிடும். எப்பொழுது மின்சாரம் அந்த இடத்தில் எடுத்துக்கொள்வதாக முன்வந்தவர்கள் எல்லோரும் பம்ப் செட்டோ அல்லது மற்ற இயந்திரங்களோ பொருத்துகிறார்களோ, அப்பொழுது மின்சாரம் கொடுக்க முடியும்.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** இப்பொழுது சில கம்பெனிகள் சர்க்காருக்கு "ஸரண்டர்" செய்துவிட்டதாகக் கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சையில் ஸௌத் மெட்ராஸ் எலெக்ட்ரிஸிடி கார்ப்பரேஷன் என்று இருக்கிறது. அதுவும் இம்மாதிரி தான் " எக்ஸ்டன்ஷன்" கொடுக்காமலேயே இருக்கிறார்கள். அவர்கள் "ஸரண்டர்" செய்துவிட்டார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அவ்வாறு ஸரண்டர் செய்தவர்களில் ஸௌத் மெட்ராஸ் எலக்ட்ரிஸிடி கார்ப்பரேஷனும் ஒன்று.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** பத்தாண்டுகளுக்கு முன்பு மின்சாரத்தை எடுத்த விவசாயிகள், ஒரு ஐந்து பேர் சேர்ந்து, ஒவ்வொருவரும் பத்து ஹார்ஸ் பவர் மோட்டார் வைக்கவேண்டுமென்று கேட்டார்கள். இன்றைக்கு அவர்கள் $7\frac{1}{2}$ ஹார்ஸ்பவர் மோட்டார் வைத்துக்கொண்டாலே கிணற்றுக்குப் போதுமானதாக இருக்கிறது. அந்த $2\frac{1}{2}$ ஹார்ஸ் பவருக்குள்ள மின்சாரத்தைச் சர்க்காருக்குத் திரும்பக்கொடுக்கவேண்டுமென்றால் எடுத்துக்கொள்வதிலே காலதாமதம் செய்கிறார்கள். அதனால் மினிமம் காரண்டி தொகையைக் கட்டவேண்டியிருக்கிறது. மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கும் இந்த நேரத்தில், அதை மறு பரிசீலனை செய்து வேண்டிய அளவு கொடுத்துவிட்டு, மிச்சத்தைப் புதிதாக கேட்கிறவர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதையெல்லாம் மின்சார போர்டு பற்றிய விவாதத்தின்போது சொன்னால் பதில் சொல்லலாம்.

**கனம் சாபாநாயகர் :** கேள்விகள் முடிவுற்றன.

[*Note.*—**Asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—CALLING ATTENTION TO 'LATE BLIGHT' ATTACK ON POTATO CROPS IN THE NILGIRIS DISTRICT.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் சபாநாயகர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில், கடந்த மூன்றாண்டுகளாகத் தொடர்ந்து " லேட் பிளைட் " நோயினால் உருளைக் கிழங்குப் பயிர்கள் பாதிக்கப்பட்ட நிலையும், அதன் காரணமாக உருளைக்கிழங்கு பயிரிடுவோருக்கு ஏற்பட்ட பொருளாதாரச் சீரழிவு பற்றியும் அவர்கள் செலுத்த வேண்டிய நிலவரியைத் தள்ளு

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்துகொள்வதினால், எத்தனை குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு ஒன்றும் தகவல் இல்லை

**திரு. சா. ராமசாமி :** தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் பலவிதமான திருமண முறைகள் இருக்கின்ற காரணத்தினால், எல்லாத் திருமணங்களையும் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று அரசாங்கம் ஆணையிடுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அம்மாதிரி ஆணையிடுவது முறை அல்ல. ஆனால், எல்லாத் திருமணங்களையும் பதிவு செய்து கொள்ளுவது நலம் என்று வற்புறுத்திக்கொண்டிருக்கிறேன்.

**திரு. எஸ். மாதவன் :** முதல் மனைவியினுடைய சம்மதத்தின் பேரில் இரண்டாவது மனைவியைத் திருமணம் செய்துகொள்ளலாம் என்ற ஒரு கருத்து திரைப்படங்கள் மூலமும், கதைகள் மூலமும் தவறாகப் பரப்பப் பட்டு வருகிறது. இது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட் டதா ? இம்மாதிரி தவறான கருத்தைத் தடை செய்வதற்கு உத்தரவு போடப்படுமா ?

* **கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது தவறான கருத்து என்று சொல்வதற்கில்லை. இதிலிருந்து பெண்மணிகள் ரொம்பப் பெருந்தன்மை யுடையவர்கள் என்று புலப்படுகிறது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இப்பொழுது சுத்தத் தங்கத்தினால் தாலி செய்து கட்ட முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, கலப்புத் தங்கத்தில் தாலி கட்டுவது தாலியின் புனிதத் தன்மைக்கு மாசு என்று கருதி, தாலி கட்டும் முறையே கூடாது என்று சர்க்கார் உத்தரவு பிறப்பிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** திருமணத்தின்போது தாலி கட்டு வதோ அல்லது மோதிரம் மாற்றிக்கொள்வதோ அல்லது பிரசங்கம் செய்வதோ அவரவர்களுடைய கருத்தைப் பொறுத்தது. தாலி வேண்டு மென்றால் சுத்தத் தங்கத்தில்தான் செய்ய வேண்டுமென்ற நியதி இல்லை. சுத்தத் தங்கத்தில் செய்யப்பட்டிருக்கிற தாலி என்று நினைத் துக்கொண்டிருக்கிற தாலிகூட, சுத்தத் தங்கத்தில் இருப்பதில்லை.

* * * * *

**திரு. ர. ஜீவரத்தினம் :** தாலி கட்டுவது நமது இந்திய தேசத்தி னுடைய பண்பாடு, நாகரிகம். அதற்குப் புறம்பாக இந்தச் சட்ட மன்றத்தில் தாலி கட்டாமல் திருமணம் அனுஷ்டிக்கப்படுமா என்று கனம் அங்கத் தினர் கேட்டார்கள். இனியாகிலும், அம்மாதிரி "தாலி கட்டாமல் இருக் கக்கூடாதா" என்ற பதத்தை இங்கு உபயோகப்படுத்தாமல் இருக்கும்படி கனம் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் சபாநாயகர் :** அந்தப் பதத்தில் என்ன தவறு இருக்கிறது ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தமிழ்நாட்டில் என்றும் தாலி கட்டித் தான் திருமணம் என்று தமிழ் நாட்டு வரலாற்றில் இல்லை. இருந்தாலும், தாலி கட்டுவதைப் பற்றிக் குறை கூறவேண்டாம்.

**திரு. ஆர். ரெங்கசாமி :** காதல் திருமணம் காரணமாகக் கலகம் ஏற் பட்டு இரண்டு குடும்பங்களும் பாதிக்கப்பட்டு இரண்டு பேர் குடும்பங்களும் ஆதரவில்லாமல் போவதினால், அவர்களுக்கு உபகாரத் தொகை அளிப் பதற்குச் சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** காதல் திருமணமாக இருந்தாலும் சரி, காதலற்ற திருமணமாக இருந்தாலும் சரி, அவ்வாறு நடைபெறலாம்.

* * * *

**திரு. எஸ். முருகையன் :** சுய மரியாதைத் திருமணங்கள் சட்டப்படி செல்லுபடியாகாது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டு இருப்பதால், அத் திருமணங்கள் செல்லுபடியாகக் கூடிய நிலையில் சர்க்கார் ஒரு திட்டம் கொண்டு வருமா ?

* Expunged as ordered by the Chair.



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஸ்பெஷல் மாரேஜ் சட்டம் இருக்கிறது. நான் எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். சுயமரியா தைத் திருமணங்கள் செய்து கொள்ளுகிறவர்கள் ரெஜிஸ்தர் செய்து கொள்ளலாம். ரெஜிஸ்தர் செய்து கொண்டால் போதும். நீதிபதி, கடவுள் இவர்கள் எல்லோரையும் விடப் பெரியவர் ரெஜிஸ்டிரார். அவர் முன்பாகக் கையெழுத்துப் போட்டு விட்டால் இந்தத் திருமணங்கள் செல்லும்.

**திரு. ர. ஜீவரத்னம் :** தமிழகத்திலே கலப்பு மணங்கள் செய்து கொண்டவர்கள் எத்தனை பேர் ? அப்படிச் செய்துகொண்டவர்களில் உதறி னவர்கள் எத்தனை பேர் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப்பற்றி விவரம் இல்லை.

**திரு. எஸ். முருகையன் :** பதிவுத் திருமணங்கள் செய்யக்கூடிய அலுவலகம் மாவட்டத்தின் தலைநகரிலே மட்டும் இருந்து வருகிறது. ஒவ்வொரு தாலூகாவிலும் பதிவுத் திருமண அதிகாரிகளை ஏற்படுத்த சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்கென்று தனி அதிகாரிகளை ஏற்படுத்துவதாக உத்தேசமில்லை. எவ்வளவு சீர்திருத்தத் திருமணமாக இருந்தாலும் ஏராளமாகச் செலவு ஆகிறது. பதிவு செய்து கொள்வதிலே ஒன்றும் செலவாகாது.

**திரு. து. ப. அழகமுத்து :** நமது நாட்டிலே திருமணங்கள் பலவித மாக நடைபெறுகின்றன. ஒரு ஒருமைப்பாட்டை உண்டாக்குவதற்கு சர்க் கார் சட்டம் கொண்டு வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதற்குத் தான் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்ற முறை இருக்கிறது.

**திரு. மு. பொ. வடிவேல் :** காதல் திருமணம் செய்து கொள்ள விரும்புபவர்கள், சில சமயங்களிலே பெற்றோர்கள் சம்மதிக்காததினால், தற்கொலை செய்துகொள்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தற்கொலை செய்வதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. இயற்கை வளம் பொருந்திய வேறு ஒரு நாட்டில் கூட தற்கொலைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. காதல் திருமணம்தான் அதற்குக் காரணம் என்று சொன்னால், அதைப் பற்றிக் குறைவாகப் பேசுவதாகும்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பிரிவினையைப் பற்றியே பேசக் கூடாது என்று சொல்லுகிற இந்த நேரத்தில் கணவனும் மனைவியும் பிரிந்து போகிற உரிமை (டைவோர்ஸ் உரிமை) கூடாது என்று சட்டம் கொண்டுவர சர்க்காருக்கு உத்தேசமுண்டா ?

**கனம். திரு. எம். பக்தவத்சலம் :** நாட்டுப் பிரிவினை வேறு விஷயம். பிரிவினையைப் பற்றி நினைப்பது கூடத் தவறு. ஆனால் இந்த மாதிரி தம்பதிகளுக்குள் பிடிக்கவில்லை யென்றால், பிரிந்து போவதே நல்லது.

**திரு. எஸ். மாதவன் :** சப்-ரிஜிஸ்டிரார் ஆபிஸ்களிலே இந்த மாதிரி திருமணங்களைப் பதிவு செய்யக் கூடிய உரிமையை ஒரு சட்டத்தின் மூலமாகக் கொண்டுவர முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுது அவ்வாறு உத்தேச மில்லை. இந்த ஸ்பெஷல் மாரேஜ் ஆக்ட் மத்திய சர்க்காரால் இயற்றப்பட்ட சட்டம். இப்பொழுது இருக்கிற முறைப்படி பதிவு செய்து கொள்வதிலே கஷ்டங்கள் இருக்கின்றன என்று புலப்பட்டால் மேலும் அரசாங்கம் யோசிக்கும். ஆனால் அவ்வாறு தகவல் ஒன்றும் இல்லை.

**திரு. வை. சங்கரன் :** வைதீகச் சடங்குகள், சம்பிரதாயங்கள், இவை களை விட்டு விட்டு சுய மரியாதைத் திருமணங்கள் செய்து கொள்ளலாம் என்று சொல்லும்பொழுது, வைதீக முறைப்படி திருமணம் செய்து கொள்கிறவர்கள் [illegible]

" சாதி இரண்டொழிய வேறில்லை "

என தமிழ் மூதாட்டி ஔவையும்,

" சாதியிலே, சமய நெறிகளிலே "

என்று துவங்குகின்ற பாடலின் மூலம் இராமலிங்க அடிகளும்,

" ஏழையென்றும் அடிமையென்றும் எவருமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்பர் இந்தியாவில் இல்லையே ",

" ஜாதிகள் இல்லையடி பாப்பா—குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொலல்
பாவம் ",

என்று வரகவி பாரதியும்,

" நாய் குரங்கு பூனையை நத்தி முத்த மிடுகிறோம்—
நரகமுண்ணும் பன்றியும் நம்மைத் தீண்ட ஒப்புவோம் "

என்று நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களும்,

" ஓடும் உதிரத்தில் வடிந்து ஒழுகும் கண்ணீரில் தேடிப்
பார்த்தாலும் சாதி தெரிவதில்லை ",

என்று கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்களும் மிகவும் செம்மையான முறையில் நமக்கு எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள்.

ராமானுஜர், ராஜாராம் மோஹன்ராய் போன்றவர்களும் மிகவும் தீவிரமாகப் பாடுபட்டதை நாம் நன்கு அறிவோம். இருப்பினும் இவர்கள் எல்லோரையும் விட, மக்களின் மனதினை மாற்றக்கூடிய சக்தி ஒருவரிடம் தான் அமைந்திருந்தது: அவர்தான் மாந்தருக்குள் தெய்வம் மகாத்மா காந்தி என்று சொன்னால் அது மிகையாகாது. இந்து மதத்தில், குறிப்பாக ஜாதி இந்துக்களின் மனதில் நிலவிவந்த தீண்டாமை என்னும் மாசினைக் களைவதற்கு காந்தி அடிகள் மேற்கொண்ட முறைகள் இன்று மக்களிடையே, குறிப்பாக ஹரிஜனங்களிடையே ஒரு தைரியத்தையும், ஜாதி இந்துக்களிடையே ஒரு வித மனமாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது என்று சொன்னால் அது சாலப் பொருந்தும். நாட்டில் இன்று நிலவி வரும் நெருக்கடியான நிலையில், காந்தியடிகள் நமக்குச் செய்த சேவை, அவரது அரிய உபதேசங்கள் எந்த அளவிற்குத் துணை நிற்கின்றன என்பதனை நாம் நன்கு அறிகின்றோம். ஜாதி, மதம், மொழி, எதிலும் வேற்றுமை காணாது இந்திய மக்கள் அனைவரும் ஒரு வழி நின்று இப் புனித பாரதத்தைக் காப்பதற்கு வீறு கொண்டு எழுந்திருக்கின்ற காட்சியை நாம் காணுகின்றோம். அதற்குத் தலையாய காரணம் காந்தியடிகள் நமக்கு வாங்கித் தந்த சுதந்திரமும், அத்தன்மைப்பட்ட ஒரு விதத் தன்மான உணர்ச்சியும் தான். எப்படி நாம் அன்னியனுக்கு அடிமைப் படக்கூடாது என்கின்ற ஒரே விதமான உறுதியில் வாழ்கின்றோமோ, அத் தன்மைப்பட்ட உறுதி நோக்குடன் நம்முள் உயர்ந்தவரென்றும், தாழ்ந்தவரென்றும் இல்லை—நம்முள் ஜாதிப் பிரிவுகள் இல்லை என்கின்ற உறுதிப் பாட்டுடனும் நாம் வாழ வேண்டும்.

இன்னும் சிற்சில குக்கிராமங்களில் ஹரிஜனங்களை தீண்டப்படாதவர்கள் என்று ஒதுக்கி, அவர்களை ஆலயங்களில் சென்று ஆண்டவனையோ அல்லது அம்மனையோ வழிபடுவதினின்று தடுப்பது, உணவுச் சாலைகளில் சமமாக அமர்ந்து சாப்பிடுவதற்கு மறுப்பது போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன என்பதையும் நாம் கேள்விப்படுகின்றோம். பெரிய, பெரிய நகரங்களிலெல்லாம், ஆலயங்களிலும், உணவுச் சாலைகள் போன்ற பொது இடங்களிலும் ஹரிஜனங்களை எவ்வித வேற்றுமையும் பாராட்டாது இருக்கின்ற நேரத்தில், குக்கிராமங்களில் மட்டும் இத்தீய வழக்கம் இன்னும் செயல் முறையில் நிலவி வருவது மிகவும் வருந்துவதற்குரிய ஒன்றாகும். இப்படிப்பட்ட தீய வழக்கங்களைக் களைவதற்கு இம்மாமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் தங்களாலியன்ற அளவு முயற்சிகள் எடுத்துக்கொள்ளுவார்கள் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டுமெனவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.



உயர்வு, தாழ்வு, உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்பன போன்ற வேற்றுமை மனப்பான்மைகளை என்று நாம் விட்டொழிக்கின்றோமோ அன்றுதான் மிகவும் புனிதமான மதம் என்று சொல்லப்படுகின்ற இந்து மதம் தூய்மை மேலும் உயரும் என்று நான் சொல்லிக் கொள்ளுகின்றேன். இந்து மதத்தின் முன்னாள் பெருமை, இடைக்காலத்தில் இப்படிப்பட்ட தகாத செய்கைகளினால் சிறிது நலிவுற்றது. நலிவுற்ற இந்து மதத்தினை, மீண்டும் அதனுடைய தொன்மையான சிறப்பினை அது அடைவதற்கு, நாம் வேற்றுமைகளை மறந்து செயல்பட வேண்டும்.

அடுத்து, தமிழகத்தில் இந்து மதத்தின் சிறப்பினுக்கு அணிகலன்களாக இருக்கக் கூடிய கோவில்கள், மடாலயங்களையும் பற்றி நான் கூற விரும்புகின்றேன். மடாலயங்களில் இருக்கக் கூடியவர்களும் ஒருவித அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டுமென நான் மிகவும் விரும்புகின்றேன். நான் இப்படிச் சொல்லும்போது, முன்னர் அவர்கள் அப்படி இல்லை என்பது பொருளல்ல.

முடிவாக ஒன்றினைத் தங்கள் மூலம் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். மக்கள் தாமாகவே மனமாற்றம் பெற்று, ஒன்றே குலம் என்கின்ற வழியினைக் கடைபிடிக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை—அப்படி அவர்களாகவே, மனமாற்றம் பெறாவிடில், அந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கான ஒரே வழி—சட்டங்கள் மூலமான முறைகளை அரசினர் கையாளுவதுதான். ஆகையால், இந்த மாமன்றத்தின் மூலம் நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம்—நம்முள் உயர்வு தாழ்வு இல்லை—ஆண்டவன் படைப்பினில் அனைவரும் சமம் என்கின்ற கருத்தினை இம்மாநிலத்திலுள்ள மக்கள் அனைவரும் அறியும் படிச் செய்ய வேண்டிய தலையாய பொறுப்பு இம்மன்றத்திலுள்ள அங்கத்தினர்களைச் சார்ந்தது என்று கூறி என் முன்னுரையை முடிக்கின்றேன்.

* **திரு. து. ப. அழகுமுத்து :** கனம் தலைவர் அவர்களே, இந்த மானியத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை நான் பிரேரேபிக்கிறேன்.

**" That the allotment of Rs. 3,89,71,800 under Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes be reduced by Rs. 100."**

**Mr. SPEAKER : The Demand and the cut motion are before the House for discussion.**

* **திரு. நா. ராஜாங்கம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று இந்த மன்றத்தில் கோரப்பட்டுள்ள ஹரிஜன நலத்துறை மானியக் கோரிக்கையின் மீது இங்கு எழுந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஹரிஜன நலத்துறை இலாகா என்பது இன்று நேற்று அல்ல, அந்த இலாகாவின் சலுகைகளைப் பெற்று, உத்தியோகம் பெற்று, அதைவிட்டு இந்தச் சட்டமன்றத்திற்கு நான் வரும் காலம் அளவுக்கு—கடந்த 35 ஆண்டு காலமாக இவ்விலாகா இயங்கிவருகிறது. ஆனால் முன்பு இருந்த பெயர் வேறு. அந்தப் பெயர் குறிப்பாக நம் நாடு சுதந்தரம் அடைந்த பிறகு—பதினைந்து ஆண்டு காலத்திற்கு முன்பே மாறியிருக்கிறது. அதற்கு முன்னால் லேபர் இலாகா என்ற பெயரிலேயே அது இயங்கி வந்தது. சாதியொழியவேண்டும், சாதியொழிய எல்லா அங்கத்தினர்களும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று சொல்லுகிற இந்தச் சர்க்கார் சாதியின் பெயரை நினைவூட்டிக்கொண்டே இருக்கும் அளவில் ஹரிஜனத் துறை என்ற பெயர் இவ்விலாகாவுக்கு இன்னமும் வைத்துக்கொண்டிருக்க வேண்டுமா என்று யோசிக்க வேண்டும். அந்தப் பெயரை வைத்துக்கொண்டிருப்பது உசிதமல்ல என்று நான் கருதுகிறேன்.

காரணம் ஹரிஜன் என்ற பெயர் நமக்கு ஏற்கனவே இருந்த பெயர் அல்ல. இடையே மாறி வழங்கிய பெயராகும். இந்த மன்றத்தில் ஒரு காலத்தில் 1928-ல் ஹரிஜனத் தலைவராக இருந்தவர்களால் தென்னகத்தில் இருந்த தீண்டாதவர்களுக்கு ஆதி திராவிடர் என்றும், ஆந்திரத்தில் உள்ளவர்களுக்கு ஆதி ஆந்திரர், என்றும் கருநாடகத்தில் இருந்தவர்களுக்கு ஆதி கருநாடகர் என்றும், அந்தந்த நாட்டையும், அந்தந்த இனத்தையும் குறித்து சட்டபூர்வமாகக் கொண்டுவந்த பெயராகும். அந்தப் பெயர் எப்படியோ மாற்றப்பட்டுவிட்டது. அதற்கு ஒரே ஒரு காரணம் மகாத்மா காந்தியடிகள் வழங்கிய பெயர் இது என்பதாகத்தான் இருக்க முடியும். இந்தத் தீண்டாதவர்களை கோயில்களில் விட மறுத்தபோது வேதத்தின் அடிப்படையாக எழுந்த நான்கு வருணத்தார்களின் பெயர்களில் இது அடங்காததனால் விடமுடியாது என்று மறுத்தார்கள். சிவனை அடிப்படையாகக்கொண்டு எழுந்த வேதங்களின் அடிப்படியாக வந்தவர்களாக இவர்கள் ஆகாவிட்டாலும் அரியின் பிள்ளைகளாக இவர்கள் விளங்குகிறார்கள். ஆகவே இவர்களை கோயில்களில்விட அனுமதிக்கவேண்டும் என்றும் இவர்கள் ஹரிஜனங்கள் என்றும் பெயர் வழங்கினர். எப்படியிருந்தாலும் இழி சொல்லோ, பழி சொல்லோ—ஹரிஜன் என்று சொன்னமாத்திரத்தில் மக்களுடைய உள்ளத்தில் தாழ்வான நினைப்பே உண்டாகிறது. இன்றைக்கு உலகநாடுகளை எடுத்துக்கொண்டால் இரண்டே இரண்டு இனங்கள் தான் இருக்கின்றன. ஒன்று ஏழைகளின் இனம், மற்றொன்று பணக்காரர்களின் இனம். அல்லது ஒன்று தொழிலாளர்களின் இனம், முதலாளிகளின் இனம். இந்த அளவில் மற்ற நாடுகளில் இனம் பிரிக்கப்பட்டிருக்கிறபோது சாதியொழிய வேண்டும் என்று சொல்கிற நாம் இன்னமும் ஹரிஜன நலத்துறை என்று பெயர் வைத்துக்கொள்ள வேண்டுமா ? முன்போலவே இதை லேபர் இலாகா என்றே வைத்துவிடுவதில் என்ன தவறு இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எப்படி இருந்தாலும் பின்தங்கிய அந்த சமூகத்தாருக்கு ஒதுக்கப்படுகிற மானியத்தொகை கோடிக்கணக்காக உயர்ந்து வந்திருக்கிறது. அப்படிச் செலவிடுகிற பணம் பொதுமக்கள் கொடுப்பது. அப்படிப் பொதுமக்கள் கொடுக்கிற பணத்தை அந்தச் சமூகத்தாருக்கு நல்ல முறையில் செலவிட வேண்டும் என்பதில் நம்முடைய கடமை என்று சொல்ல விரும்புகிறேன்.

ஹரிஜனங்களின் நன்மைக்காக ஒதுக்கப்படுகிற பணம் முன்பு லேபர் இலாகாவின் மூலம் கொடுக்கப்பட்ட போது தொடக்கப்பள்ளிகள் நிறைய உருவாக்கப்பட்டன. இப்போது ஹரிஜன நல இலாகா அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு ஏற்பட்டிருக்கின்ற பள்ளிகளின் எண்ணிக்கை குறைவுதான். தற்போது ஹாஸ்டல்கள் ஓரளவு அதிகப்பட்டிருக்கின்றன என்று சொன்னாலும் அதன் தரம் உயர்ந்தால்தான் பலன் ஏற்படும்.

ஹரிஜன நல இலாகா என்ன வேலைகளைச் செய்து வருகிறது என்பதைக் குறிப்பிடும் வகையில் அமைச்சர் அவர்கள் அது பற்றிக் கொடுத்திருக்கின்ற வேலைத் திட்ட அறிக்கையில், படங்கள் போட்டு விளம்பரமாகத் தந்திருக்கிறார்கள். ஹரிஜன மாணவர்களுக்குப் படிப்பு வசதி, மாடு வாங்கிக் கொடுத்தல், கிணறு வெட்டிக் கொடுத்தல், தொடக்கப்பள்ளி அமைத்துக் கொடுத்தல், ஹரிஜனங்களைக் கோயிலுக்குள் அனுமதித்தல், மின்சார வசதி, வீடுகள் கட்டிக் கொடுத்தல், தையல் மிஷின்கள் வாங்கிக் கொடுத்தல் என்ற வகையிலே படங்கள் அட்டையிலே வரையப்பட்டிருக்கின்றன. தொழில் சம்பந்தமான கருவிகள் யார் யாருக்குக் கொடுத்து வருகிறார்கள் என்று பார்த்தால் வசதி உள்ளவர்களுக்குத்தான் அவை கொடுக்கப்பட்டிருக்கின்றன. வேண்டியவர்களுக்குத்தான் அவற்றைக் கொடுக்கிறார்களே தவிர சாதாரண ஏழை ஹரிஜனங்களுக்கு அவை கிடைப்பதில்லை.

விவசாய உற்பத்தியைப் பெருக்கும் வகையில் உழவு மாடுகள் ஹரிஜன மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருக்கிறது. அந்த வகையிலும் நல்ல பலன் அளிக்கவில்லை. மாடு கொடுக்கும் விஷயம்



ஹரிஜன மக்களுக்குத் தெரிவது கூட இல்லை. மேலும் மாடுகளைத் தாங்களே வாங்கிக் கொள்ளும் தகுதி படைத்தவர்களுக்குத்தான் வெல்பேர் இலாகா கொடுக்கும் மாடுகள் தரப்படுகின்றனவே தவிர, மாடு வாங்க வசதி இல்லாதவர்களுக்கு மாடுகள் கொடுக்கப்படுவதில்லை. தற்போது கிணறுகள் வெட்டுவதற்காக ஹரிஜனங்களுக்கு 1,500 ரூபாய் மானியம் கொடுத்து வருகிறார்கள். மானியத்தை வாங்கிக் கொண்டு பழைய கிணறுகளைப் புதுப்பித்துக் காட்டிவிட்டோ அல்லது கிணறு வெட்டாமலேயே ஏமாற்றி விடுகிறார்கள். நூற்றுக்கு 25 சதவிகிதம்தான் உண்மையிலேயே கிணறுகள் வெட்டுகிறார்கள்.

**கனம் திரு. பூ. கக்கன் :** " கிணறுகள் வெட்டப் பணம் வாங்கிக் கொண்டு கிணறு வெட்டாமல், ஏற்கெனவே இருக்கக் கூடிய கிணறுகளைச் செப்பனிட்டு விட்டு, புதிய கிணறுகள் வெட்டாமல் விட்டு விடுகிறார்கள் " என்று கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்கள். அது முற்றிலும் உண்மையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிணறு வெட்டுவதற்காக 1,500 ரூபாய் கொடுக்கிறோம் என்றால், முதலில் 500 ரூபாய் கொடுத்து, முதல் கட்டட வேலை முடிந்திருக்கிறதா என்று பார்த்து விட்டு, பிறகு 500 ரூபாய் கொடுத்து, இரண்டாவது கட்டட வேலை முடிந்த பிறகு கடைசியாக 500 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆகவே, கிணறு புதிதாக வெட்டப்படுவதில்லை என்பது உண்மையல்ல.

**திரு. நா. ராஜாங்கம் :** நான் சொல்வதை அந்தந்தப் பகுதியில் இருக்கக் கூடிய ஹரிஜன மக்களை அழைத்துக் கேட்டால் தெரிந்து கொள்ள முடியும். அந்தப் பகுதிகளில் விசாரித்துப் பார்த்தால் புரியும். பொதுப் பணம் விரயமாகக் கூடாது என்ற காரணத்தினால்தான் நான் இதை எடுத்துச் சொல்கிறேனே தவிர, நான் கிணறு மானியம் வாங்கிக் கொள்வதற்காகச் சொல்லவில்லை. அது மாத்திரமல்லாமல், தொழில் செய்ய மெஷின்கள் கொடுப்பதிலும் நிறைந்த குறைபாடுகள் இருக்கின்றன. நான் அதைப் பற்றிக் கலெக்டர் அவர்களிடத்தில் கேட்டபோது, " மெஷின்கள் கொடுக்கிறோமே தவிர, பாஜாரில் யாரும் வேலை செய்து வருவதை நான் பார்க்க முடியவில்லை " என்று கூறினார்கள். ஆகவே, இதிலுள்ள குறைபாடுகளைக் களைந்து நல்ல முறையில் மெஷின்கள் வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்தவர்கள் தொலைவிலே சென்று ஷார்ட் ஹாண்ட், டைப்ரைட்டிங் படிக்கவேண்டியிருக்கிறது. அப்படி வேறு இடத்தில் போய்ப் படிக்கிறவர்களுக்கு, அந்தப் பகுதியில் இருக்கின்ற ஹாஸ்டல்களில் தங்கிப் படிப்பதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த முறையில் அமைச்சர் அவர்களுடைய சிபாரிசை அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஐந்து ஆண்டுகள், பத்து ஆண்டுகள் சர்விஸ் ஆனவர்களை, அவர்களுடைய சர்வீஸைப் பொறுத்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்றவற்றுக்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. ஏ. ஆறுமுகம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மானியத்தை முழு மனதுடன் ஆதரித்து என்னுடைய உரையை நான் நிகழ்த்த விரும்புகிறேன். மதிப்புக்குரிய அமைச்சர் அவர்கள், அவர்களுக்கே உரித்தான முறையிலே படித்த வாசகங்களைக் கேட்டுக் கொண்டிருந்தபோது எல்லோருக்குமே மிகுந்த உற்சாகம் உள்ளத்திலே ஏற்பட்டது. எனக்கு முன் பேசிய கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர் அவர்கள் " ஹரிஜன் " ஆக் இருப்பதிலே அவருக்கு ஏதோ ஒரு குறை இருப்பது போலவும், " ஆதித் திராவிடன் " என்று சொல்லிக் கொள்வதிலே ஏதோ பெருமை இருப்பதாகவும் சொன்னார்கள். ஆதித் திராவிடர்கள் என்று சொன்னால் அது தமிழகத்தில் இருக்கின்ற ஒரு குறிப்பிட்ட இனத்தினரை மட்டுந்தான் குறிக்கும். ஹரிஜனங்கள் என்று சொல்லும்போது, தாழ்த்தப்பட்ட வகுப்பிலே பல இனங்கள், அருந்ததியர்கள், ஆதித்

பல இடங்களில் வாங்கிய மனைகள் சும்மாக் கிடைக்கிறது. நஞ்சை நிலங்களை வாங்கிக் கொடுத்தால் அது பள்ளமாக இருப்பதால் அந்த இடத்தை தூர்த்து அதன் மேல் வீடு கட்ட அவர்களுக்கு வசதி இல்லாமல் மனைகள் அப்படியே கிடக்கின்றன. ஆகவே அந்த மனைகளைத் தூர்த்து, தாங்கள் இருந்து வரும் குடிசைகளை பிரித்துப்போய் அங்கு புதிதாக அமைத்துக் கொள்ள அரசாங்கம் நிதி உதவி அளித்தால் அந்த மனைகளில் வீடு கட்டிக் கொள்ள வாய்ப்பு ஏற்படும். மின் வசதியை எடுத்துக் கொள்வோம். மேஜர் பஞ்சாயத்து ஏரியாவாக இருந்தாலும் கிராமப் புறங்களாக இருந்தாலும் தெருக்களுக்கு விளக்குகள் போடுகிறார்கள். ஆனால் ஹரிஜன சேரிகளில் போடுவதில்லை. ஏன் என்று கேட்டால், வீடுகளுக்கு மின்சாரம் எடுத்துக் கொண்டால்தான் அங்கும் மின் விஸ்தரிப்பு செய்து கொடுக்கமுடியும், அப்படி வீடுகளுக்கு மின்சாரம் எடுத்துக் கொள்ளவில்லை என்றால் தெருக்களுக்கு, தெரு விளக்குகளுக்கு மின்சாரம் கொடுக்க முடியாது என்று சொல்லி விடுகிறார்கள். ஆகவே இதற்கு வேண்டிய கட்டணத்தை ஹரிஜன நல இலாகாவிலிருந்து கட்டியாவது ஹரிஜன மக்கள் வாழும் பகுதிகளில் மின்சார வசதி செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சுதந்திர நாட்டில் சில சேரிகளுடைய பெயர்கள் அப்படியே இருந்து கொண்டிருக்கின்றன. சக்கிலியப்பட்டி, பறையப்பட்டி, பறைச்சேரி, பள்ளச்சேரி என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இந்தப் பெயர்களையெல்லாம் மாற்றி, நமது தேசியத் தலைவர்களுடைய பெயர்களை வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எடுத்துக்கொண்டால், விவசாயத்திலே ஈடுபட்டிருக்கக் கூடிய மக்களில் பெரும் பகுதி ஹரிஜனங்கள்தான். அந்த மக்களில் இன்றைய தினம் பெரும் பகுதியானவர்கள் விவசாயக் கூலிகளாக இருந்துகொண்டிருக்கிறார்கள். குறைந்த கூலி பெற்று அவர்கள் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சில தினங்களுக்கு முன் விவசாய அமைச்சர் அவர்கள் சொல்லும்போது வருஷத்துக்கு 360 ரூபாய் தான் வருமானம் வருகிறது என்று கூறினார்கள்.

**கனம் திரு. பூ. கக்கன் :** 373 ரூபாய்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** 400 ரூபாய்க்கு உட்பட்டு வருமானம் வருகிறது. 400 ரூபாய் வருமானத்தை வைத்துக்கொண்டு எப்படி குடும்பம் செய்ய முடியும் என்று யோசித்தாகவேண்டும். ஆகவே விவசாயக் கூலிகளாக இருக்கக் கூடிய அவர்களை விவசாயத் தொழிலில் நல்ல நிலையை அடைய செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, அவர்களுடைய பொருளாதார முன்னேற்றத்தைப் பொருத்த வரையில், வேறு தொழிலைச் செய்ய அவர்களால் முடியாது. விவசாயம் தெரிந்த காரணத்தினால், அதையே பிரதானமாகக் கொண்டிருக்கிற காரணத்தினால், இன்றைய தினம் அரசாங்கம் கொண்டு வந்திருக்கக் கூடிய நில உச்ச வரம்புச் சட்டத்தை அமல் நடத்துவதன் மூலமாக உபரியாக நிலம் கிடைக்கக் கூடுமானால், முன் சலுகை அளித்து ஹரிஜனங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோவில் நிலங்களுக்கெல்லாம் வரம்பு கட்டியிருக்கிறார்கள். மொத்தக் குத்தகைதாரர்களுக்கு வரம்பு கட்டப்பட்டிருக்கிறது. அப்படி வரம்பு கட்டப்பட்டு இருக்கிற உபரி நிலங்களை, கூட்டுறவு சாகுபடியாளர் சங்கம் அமைத்து, அவர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் நல்ல முறையில் சாகுபடி செய்வார்கள். தங்கள் குடும்பத்தை நடத்த வேண்டிய வருமானம் உயரும். அந்த முறையில் அவர்கள் பொருளாதாரம் உயர்ந்து தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்குப் போதுமான வசதியாக இருக்க முடியும்.

அதே போல, உழவு மாட்டு மானியம் வழங்கப்படுகிறது. அப்படி மானியம் வழங்கப்படுகிறது என்று சொல்லும்போது 100 பேர்கள் மனுக்கள் எழுதினால், ஒரே ஒருவருக்குத் தான் கிடைக்கிறது. சீட்டுக் குலுக்கிப்



போடும் முறை இருக்கிறதே அதை மாற்றி வேறு வழியில் சகல பேர்களுக்கும் மாடு கொடுக்கக் கூடிய முறையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கல்வி விஷயத்தை எடுத்துக்கொண்டால் கிரிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களென்றால் கல்விச் சலுகைகளோ, மற்ற சலுகைகளோ மறுக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கும் அம்மாதிரி சலுகைகளைக் கொடுக்க ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டும்.

* **திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** கனம் தலைவர் அவர்களே, ஹரிஜன நல இலாகா மான்யத்தின் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பிற்பட்ட சமூகத்தாருக்கும், ஹரிஜனங்களுக்கும் இந்த இலாகா சலுகை அளிப்பதாகக் கூறுகிறார்கள். அதற்கு ஏராளமான பணமும் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் முற்பட்ட சமூகத்தவர்கள் சிலர் அந்தச் சலுகைகளைப் பெற்று வருகிறார்கள். முற்பட்ட சமூகத்தவர்கள் தங்களுடைய சமூகப் பெயர்களை மாற்றி இந்த வாய்ப்பை அடைவதற்கு லாயக்காக அவர்களுடைய சமூகப் பெயர்கள் இந்தப் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, நாடார்கள் முற்பட்ட சமூகத்தினர்கள். சாணார்கள் என்று போட்டால் அவர்களும் சலுகை அடையக் கூடிய நிலை இருப்பதால் பல பேர்கள் சாணார்கள் என்று போட்டுக் கொண்டு சலுகையை அடைகிறார்கள். அந்த ஒரு சமூகம் மட்டும் அல்ல. இன்னும் மற்றும் பல முற்பட்ட சமூகங்களும் இந்தச் சலுகையை அடைந்து வருகிறார்கள். அதிலும் சாணார்கள் சமூகத்தை மட்டும் மிகவும் பின் தங்கிய வகுப்பினர் என்ற பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள். முக்குலத்தோர் சமூகம் ரொம்பவும் பழங்காலம் தொட்டு மிகவும் பின் தங்கிய சமூகத்தவர் பட்டியலில் இருந்தது இப்போது எடுபட்டிருக்கிறது. அதற்கு நேர் மாறாக, நாடார்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் பிற்பட்ட சமூகத்தவர் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பல சமூகங்கள் இந்த ஹரிஜன நல இலாகா கொடுக்கக் கூடிய சலுகைகளின் பயனை அடைகின்றன. முக்குலத்தோரைச் சேர்நதவர்கள் மிக மிகப் பின் தங்கிய நிலையில் இருக்கிறார்கள். கல்வித் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, பொருளாதாரத் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, மிக மிகப் பிற்போக்கான நிலையில் இருக்கிறார்கள். முக்குலத்தோர் மட்டுமல்ல, இன்னும் மற்றும் சில ஜாதியினரும் இது போன்று மிகவும் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் மிகவும் பிற்பட்டவர்கள் லிஸ்ட்டில் சேர்க்காமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. முற்பட்ட சமூகம், மிகவும் பிற்பட்ட வகுப்பு லிஸ்ட்டிலும், மிகவும் பிற்பட்ட வகுப்பினர், சாதாரண பிற்பட்ட வகுப்பினர் லிஸ்ட்டிலும் இருப்பதால் மிகவும் பிற்பட்ட சமூகம் நல்ல நிலைமையை அடைவது தடைபடக் கூடியதாக இருக்கிறது. ஆகவே, முக்குலத்தோர்களையும், இன்னும் சில ரொம்ப ஏழ்மையாக இருக்கக் கூடிய ஜாதியினரையும் மிகவும் பின் தங்கிய வகுப்பினர் லிஸ்ட்டில் சேர்க்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஹாஸ்டல்களில் முக்குலத்தோருக்கு அதிகச் சலுகை கிடைக்கச் செய்ய வேண்டும். இப்போது இருக்கிற பர்செண்டேஜை அதிகமாக உயர்த்தி அவர்களுக்கு நிறைய இடம் கிடைக்கும் நிலையைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹாஸ்டல்கள் கமிட்டிகளில் பெரும் பகுதி காங்கிரஸ்காரர்கள் தான் இருக்கிறார்கள். ஹாஸ்டல் கமிட்டிகளில் பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் மெம்பர்களாக இருக்கச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மிகவும் பின் தங்கியவர்களுக்கும், பின் தங்கியவர்களுக்கும், ஹரிஜனங்களுக்கும் மின்சாரம் கொடுப்பதிலே அவர்கள் 10 சதவிகிதம் கட்டவேண்டிய நிலை இருப்பதால் அதைக் கட்ட முடியாமல் மின்சாரம் கிடைப்பது தடைப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, ஹரிஜன [illegible]

திராவிடர்கள், நரிக் குறவர்கள் எல்லோரும் "ஹரிஜன்" என்ற வார்த்தையிலே அடங்குகிறார்கள். எல்லா வகுப்பாரையும் ஒன்றாகச் சேர்த்து "ஹரிஜன்" என்ற பெயரை நமக்குக் கொடுத்திருக்கிறார்கள். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்திலே எத்தனை பட்டதாரிகள் இருந்தார்கள்? விரல் விட்டு எண்ணக்கூடிய அளவுக்குத்தான் இருந்தார்கள். இப்போது—நான் மிகைப்படுத்திக் கூறவில்லை—ஆயிரக்கணக்கான ஹரிஜனங்கள் பட்டதாரிகளாக ஆகியிருக்கிறார்கள். எதனால் வந்தது இந்த முன்னேற்றம்? நாம் ஹரிஜனங்களாக இருக்கும் காரணத்தினால் தான் வந்தது. நமது காங்கிரஸ் மகாசபையானது காந்தியடிகளுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையிலே நடைமுறையிலே செயலாற்றிக் கொண்டு வருகிறது. தேசியத் திட்டங்கள் எந்த அளவுக்கு முக்கியமோ அந்த அளவுக்கு சமுதாயத்தின் எங்கோ ஒரு ஓரத்தில் இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்களை மற்றவர்களோடு சரிநிகர் சமானமாக உயர்த்துவதும் முக்கியமாகும். இந்தப் பிரச்னையானது மாநிலத்தை மட்டும் பொறுத்த பிரச்னை அல்ல. எப்படி வடக்கே காஷ்மீரிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரை ஒரே நாடாக இருக்கவேண்டுமென்று சொல்கிறோமோ அதே போன்று இந்த நாட்டிலே வாழக்கூடிய 45 கோடி மக்களும் அண்ணன் தம்பிகளாக, ஒரு தாயின் வயிற்றில் பிறந்தவர்களாகக் கருதப்படக் கூடிய நிலை ஏற்படவேண்டும்.

(திருமதி எ. எஸ். பொன்னம்மாள் தலைமை.)

10-00 p.m. மதிப்பிற்குரிய நம் பாரதப் பிரதமர், உலகம் போற்றும் உத்தமர், எல்லா நாடுகளாலும் புகழப்படுகிற நம் நேரு அவர்கள் கூட ஒரு முறை கூறியிருக்கிறார்கள், நம் நாட்டில் தீண்டாமை எல்லோருக்கும் வேதனை அளிக்கக்கூடிய ஒரு பிரச்னையாக இருக்கிறது என்று. இன்று நாட்டில் ஹரிஜன முன்னேற்றத்தை அதிகமாக விரும்பாதவர்கள் இருக்கிறார்கள். ஹரிஜனங்களுக்கு என்று தனி இலாகா என் இருக்கிறது என்று நினைக்கிறார்கள். நான் கூட அதை விரும்பவில்லை. ஜாதிமத பேதம் அல்லாத ஒரு சமுதாயத்தில், எல்லோரும் இந்தியர் என்ற அடிப்படையில் உள்ள நம் நாட்டில் ஒரு தனிப்பட்ட சமூகத்தினருக்கு என்று தனி இலாகா இருக்கக் கூடாது என்பது என் கருத்தும் கூடத்தான். ஆனால் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு குடும்பத்தில் ஒரு குழந்தைக்கு ஒரு வியாதி வந்து விட்டால் அக்குழந்தையை அதன் பெற்றோர்கள் ஒரு நல்ல டாக்டரிடம் எடுத்துச் சென்று வேண்டிய நல்ல மருந்துகளை எல்லாம் கொடுத்து அந்தக் குழந்தையின் வியாதியைப் தீர்த்து மற்றக் குழந்தைகளைப் போல் ஆக்குவது போன்று இன்று சமுதாயத்தில் இருக்கிற இந்த பிற்பட்ட ஹரிஜனங்களின் பிரச்னையும் தீர்க்கப்படவேண்டும். இன்று இந் நாட்டில் 45 கோடி மக்களில் 35 கோடி மக்கள் ஹரிஜனங்களாகவும், பிற்பட்ட இனத்தவர்களாகவும் இருக்கிறார்கள். எப்படி நாம் அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டு வந்து நல்ல முறையில் அவற்றை நிறைவேற்ற நினைக்கிறோமோ, எப்படி நாம் நம் நாட்டைப் பாதுகாக்க திட்டமிடுகிறோமோ அதேபோல் இந்த ஹரிஜனங்களின் தாழ்த்தப்பட்ட மக்களின் கஷ்டங்களைத் தீர்க்காவிடில், அவர்கள் பிரச்னையைத் தீர்க்காவிடில் இந்த நாடு முன்னுக்கு வந்த நாடாக எப்படி கருத முடியும்? ஹரிஜன நல இலாகா என்று தனி இலாகா இருப்பது தவறு என்று யாராவது நினைத்தால் அவர்களுக்காக ஏன் இவ்வளவு பணம் செலவழிக்க வேண்டுமென்று யாராவது கருதினால் அவர்கள் தங்களைத் திருத்திக் கொள்ளவேண்டும். ஹரிஜன இலாகா மூலம் எவ்வளவோ காரியங்கள் செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இன்று கல்வியை எடுத்துக் கொண்டால் குறிப்பாக ஹரிஜனங்கள் தங்கள் குழந்தைகள் கலெக்டராக வரவேண்டும், அமைச்சராக வரவேண்டும், எம்.எல்.எ. ஆக வரவேண்டும் என்று நினைக்கும் அளவில் நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்றால் பிற சமுதாயத்தினருக்கு சமமாக நாமும் வரவேண்டும் என்று நினைப்பதினால் தான். அதற்காகத்தான் ஒத்தாசை செய்யப்படுகிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. எந்த நாள் வரையில் ஹரிஜனங்களாக இருக்க விரும்புகிறோம் என்றால் பொருளாதாரத் துறையில், கல்வித்துறையில், பிற துறைகளில் பிற வகுப்பினர்களோடு சரி சமமாக வருகிற வரையில்தான். இப்போது



உத்தியோகஸ்தர்களாக இருந்தாலும் அல்லது படித்தவர்களானாலும், ஹரிஜனங்களுக்குள்ள சலுகைகளை பெற முன் வருகிறார்களே அல்லாது தங்களை ஹரிஜனங்கள் என்று சொல்லிக் கொள்வதை அவர்கள் மறைத்துக் கொள்கிறார்கள். ஹரிஜனங்கள் என்று சொல்லிக் கொள்வதில் என்ன தவறு இருக்கிறது (மணியடிக்கப்பட்டது.) சர்வீஸ் கமிஷனில் ஹரிஜனங்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், சில மாதங்களில் ஒரு இடம் காலியாகப்போகிறது, அதில் யாரைப் போடுவது என்ற யோசனையை எடுத்துக் கொள்ளவில்லை என்று. அவர்களும், முதல் அமைச்சர் அவர்களும் எங்கள் முன்னேற்றத்தில் கண்ணும்கருத்துமாக இருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. அத்தகைய நல்லவர்களிடம் கேட்கிறேன், நீங்கள் முதல் அமைச்சராக இருக்கிற காலத்தில் எங்களுக்கு இந்தப் பதவியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆந்திராவில் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் சர்வீஸ் கமிஷனில் அங்கத்தினராக இருக்கிறார். மைசூரில் அப்படி ஒரு அங்கத்தினர் இருப்பது மட்டுமல்ல அவரே சேர்மனாகவும் இருக்கிறார். ஹரிஜன சமுதாயத்தில் இப்போது படித்த பல அறிஞர்கள் இருக்கிறார்கள் என்பது நான் சொல்லி உங்களுக்கு தெரிய வேண்டியதில்லை. (மணியடிக்கப்பட்டது.) பின்னர் ஐ.எ.எஸ்., ஐ.பி.எஸ். போன்றவைகளில், நான்-ரெவன்யூ கோட்டா, ரெவன்யூ கோட்டாக்களில் அதிகப்படியான ஹரிஜனங்களுக்கு பெரிய உத்தியோகங்கள் அளிக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். ஹரிஜனங்கள் பல உத்தியோகங்களுக்கு வந்துவிட்டார்கள். வெளிநாட்டு தூதுவர்களாகவும், மாகாண கவர்னர்களாகவும் இன்னும் ஹரிஜனங்கள் நியமிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. . . . (மணியடிக்கப்பட்டது).

***திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் விவாதத்தில் இருக்கக்கூடிய ஹரிஜன மான்யக் கோரிக்கை மீது நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். 14 ஆண்டுகளுக்கு முன்னால் நம் அரசு ஹரிஜன மக்களை சமூகத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் முன்னேற்றம் அடையச் செய்வதற்கு ஒரு தனி இலாகாவை ஆரம்பித்து பல காரியங்களை நாம் செய்து கொண்டு வருகிறோம். ஹரிஜனங்களை சமூகம் அல்லது மற்ற துறைகளில் முன்னேற்றுவிக்க வேண்டுமென்று சொன்னால் அவர்கள் பொருளாதாரத் துறையில் உயர்ந்தால் அல்லாது அவர்கள் வேறு துறைகளில் முன்னேற்றம் காண்பது அரிது. இன்றைய தினம் ஹரிஜனங்களை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு சகல சுதந்திரத்தை வழங்கியும் அவர்கள் சுய உரிமையை பாதுகாத்துக் கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்காக இன்று அவர்கள் குடியிருந்து வரும் இடங்களை அரசாங்கம் அவர்களுக்கே சொந்தமாக்கிக் கொடுக்கவேண்டும் என்று நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகிறது என்று சொன்னாலும் அந்த நடவடிக்கைகளை தீவிரமாக எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் என் அபிப்பிராயம். இன்று ஹரிஜனங்கள் யார் மனைகளில் குடியிருக்கிறார்களோ அவர்களிடம் தங்கள் சுயஉரிமைகளை அடகு வைக்கும் அளவில் இன்றைய நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த மக்கள் யார் மனைகளில் குடியிருந்தாலும் அதை அரசாங்கம் அவர்களுக்கு சொந்தமாக்கிக் கொடுக்கவேண்டும். சர்க்கார் மனைகளில் அவர்கள் குடியிருந்தால் அவர்களை அங்கிருந்து வெளியேற்ற நடவடிக்கைகள் எடுக்கக்கூடாது. பல இலாகாக்கள் அந்த இடங்கள் தங்களுக்கு தேவை என்று அவர்களை வெளியேற்ற நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். அம்மாதிரி நடவடிக்கைகள் மூலம் இம்மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். பல இலாகாக்கள் இம்மாதிரி வெளியேற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். ஆகவே அதை தடை செய்வதற்கு வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும். கோவில், தர்ம ஸ்தாபனங்களுக்கு சொந்தமான மனைகளில் ஹரிஜனங்கள் குடியிருந்து வருகிறார்கள். அவர்கள் இம்மக்களை வெளியேற்ற சிவில் கோர்ட்களுக்கு சென்று உத்தரவு வாங்கி விடுகிறார்கள். அதன் அடிப்படையில் இந்த ஏழை மக்கள் வெளியேற்றப்படும் அபாயகரமான நிலை இருந்து கொண்டு வருகிறது. அரசாங்க வேலையில் மனைகள் வாங்கி ஜாரி செய்யப்படுகிறது.

பல இடங்களில் வாங்கிய மனைகள் சும்மாக் கிடைக்கிறது. நஞ்சை நிலங்களை வாங்கிக் கொடுத்தால் அது பள்ளமாக இருப்பதால் அந்த இடத்தை தூர்த்து அதன் மேல் வீடு கட்ட அவர்களுக்கு வசதி இல்லாமல் மனைகள் அப்படியே கிடக்கின்றன. ஆகவே அந்த மனைகளைத் தூர்த்து, தாங்கள் இருந்து வரும் குடிசைகளை பிரித்துப்போய் அங்கு புதிதாக அமைத்துக் கொள்ள அரசாங்கம் நிதி உதவி அளித்தால் அந்த மனைகளில் வீடு கட்டிக் கொள்ள வாய்ப்பு ஏற்படும். மின் வசதியை எடுத்துக் கொள்வோம். மேஜர் பஞ்சாயத்து ஏரியாவாக இருந்தாலும் கிராமப் புறங்களாக இருந்தாலும் தெருக்களுக்கு விளக்குகள் போடுகிறார்கள். ஆனால் ஹரிஜன சேரிகளில் போடுவதில்லை. ஏன் என்று கேட்டால், வீடுகளுக்கு மின்சாரம் எடுத்துக் கொண்டால்தான் அங்கும் மின் விஸ்தரிப்பு செய்து கொடுக்கமுடியும், அப்படி வீடுகளுக்கு மின்சாரம் எடுத்துக் கொள்ளவில்லை என்றால் தெருக்களுக்கு, தெரு விளக்குகளுக்கு மின்சாரம் கொடுக்க முடியாது என்று சொல்லி விடுகிறார்கள். ஆகவே இதற்கு வேண்டிய கட்டணத்தை ஹரிஜன நல இலாகாவிலிருந்து கட்டியாவது ஹரிஜன மக்கள் வாழும் பகுதிகளில் மின்சார வசதி செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சுதந்திர நாட்டில் சில சேரிகளுடைய பெயர்கள் அப்படியே இருந்து கொண்டிருக்கின்றன. சக்கிலியப்பட்டி, பறையப்பட்டி, பறைச்சேரி, பள்ளச்சேரி என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இந்தப் பெயர்களையெல்லாம் மாற்றி, நமது தேசியத் தலைவர்களுடைய பெயர்களை வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எடுத்துக்கொண்டால், விவசாயத்திலே ஈடுபட்டிருக்கக் கூடிய மக்களில் பெரும் பகுதி ஹரிஜனங்கள்தான். அந்த மக்களில் இன்றைய தினம் பெரும் பகுதியானவர்கள் விவசாயக் கூலிகளாக இருந்துகொண்டிருக்கிறார்கள். குறைந்த கூலி பெற்று அவர்கள் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சில தினங்களுக்கு முன் விவசாய அமைச்சர் அவர்கள் சொல்லும்போது வருஷத்துக்கு 360 ரூபாய் தான் வருமானம் வருகிறது என்று கூறினார்கள்.

**கனம் திரு. பூ. கக்கன் :** 373 ரூபாய்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** 400 ரூபாய்க்கு உட்பட்டு வருமானம் வருகிறது. 400 ரூபாய் வருமானத்தை வைத்துக்கொண்டு எப்படி குடும்பம் செய்ய முடியும் என்று யோசித்தாகவேண்டும். ஆகவே விவசாயக் கூலிகளாக இருக்கக் கூடிய அவர்களை விவசாயத் தொழிலில் நல்ல நிலையை அடைய செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, அவர்களுடைய பொருளாதார முன்னேற்றத்தைப் பொருத்த வரையில், வேறு தொழிலைச் செய்ய அவர்களால் முடியாது. விவசாயம் தெரிந்த காரணத்தினால், அதையே பிரதானமாகக் கொண்டிருக்கிற காரணத்தினால், இன்றைய தினம் அரசாங்கம் கொண்டு வந்திருக்கக் கூடிய நில உச்ச வரம்புச் சட்டத்தை அமல் நடத்துவதன் மூலமாக உபரியாக நிலம் கிடைக்கக் கூடுமானால், முன் சலுகை அளித்து ஹரிஜனங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கோவில் நிலங்களுக்கெல்லாம் வரம்பு கட்டியிருக்கிறார்கள். மொத்தக் குத்தகைதாரர்களுக்கு வரம்பு கட்டப்பட்டிருக்கிறது. அப்படி வரம்பு கட்டப்பட்டு இருக்கிற உபரி நிலங்களை, கூட்டுறவு சாகுபடியாளர் சங்கம் அமைத்து, அவர்களுக்குக் கொடுத்தால் அவர்கள் நல்ல முறையில் சாகுபடி செய்வார்கள். தங்கள் குடும்பத்தை நடத்த வேண்டிய வருமானம் உயரும். அந்த முறையில் அவர்கள் பொருளாதாரம் உயர்ந்து தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்குப் போதுமான வசதியாக இருக்க முடியும்.

அதே போல, உழவு மாட்டு மான்யம் வழங்கப்படுகிறது. அப்படி மான்யம் வழங்கப்படுகிறது என்று சொல்லும்போது 100 பேர்கள் மனுக்கள் எழுதினால், ஒரே ஒருவருக்குத் தான் கிடைக்கிறது. சீட்டுக் குலுக்கிப்



போடும் முறை இருக்கிறதே அதை மாற்றி வேறு வழியில் சகல பேர்களுக்கும் மாடு கொடுக்கக் கூடிய முறையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கல்வி விஷயத்தை எடுத்துக்கொண்டால் கிரிஸ்தவ மதத்தைச் சார்ந்தவர்களென்றால் கல்விச் சலுகைகளோ, மற்ற சலுகைகளோ மறுக்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கும் அம்மாதிரி சலுகைகளைக் கொடுக்க ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டும்.

* **திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** கனம் தலைவர் அவர்களே, ஹரிஜன நல இலாகா மான்யத்தின் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பிற்பட்ட சமூகத்தாருக்கும், ஹரிஜனங்களுக்கும் இந்த இலாகா சலுகை அளிப்பதாகக் கூறுகிறார்கள். அதற்கு ஏராளமான பணமும் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் முற்பட்ட சமூகத்தவர்கள் சிலர் அந்தச் சலுகைகளைப் பெற்று வருகிறார்கள். முற்பட்ட சமூகத்தவர்கள் தங்களுடைய சமூகப் பெயர்களை மாற்றி இந்த வாய்ப்பை அடைவதற்கு லாயக்காக அவர்களுடைய சமூகப் பெயர்கள் இந்தப் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, நாடார்கள் முற்பட்ட சமூகத்தினர்கள். சாணார்கள் என்று போட்டால் அவர்களும் சலுகை அடையக் கூடிய நிலை இருப்பதால் பல பேர்கள் சாணார்கள் என்று போட்டுக் கொண்டு சலுகையை அடைகிறார்கள். அந்த ஒரு சமூகம் மட்டும் அல்ல. இன்னும் மற்றும் பல முற்பட்ட சமூகங்களும் இந்தச் சலுகையை அடைந்து வருகிறார்கள். அதிலும் சாணார்கள் சமூகத்தை மட்டும் மிகவும் பின் தங்கிய வகுப்பினர் என்ற பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள். முக்குலத்தோர் சமூகம் ரொம்பவும் பழங்காலம் தொட்டு மிகவும் பின் தங்கிய சமூகத்தவர் பட்டியலில் இருந்தது இப்போது எடுபட்டிருக்கிறது. அதற்கு நேர் மாறாக, நாடார்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் பிற்பட்ட சமூகத்தவர் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பல சமூகங்கள் இந்த ஹரிஜன நல இலாகா கொடுக்கக் கூடிய சலுகைகளின் பயனை அடைகின்றன. முக்குலத்தோரைச் சேர்நதவர்கள் மிக மிகப் பின் தங்கிய நிலையில் இருக்கிறார்கள். கல்வித் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, பொருளாதாரத் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, மிக மிகப் பிற்போக்கான நிலையில் இருக்கிறார்கள். முக்குலத்தோர் மட்டுமல்ல, இன்னும் மற்றும் சில ஜாதியினரும் இது போன்று மிகவும் பிற்பட்ட நிலையில் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் மிகவும் பிற்பட்டவர்கள் லிஸ்ட்டில் சேர்க்காமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது. முற்பட்ட சமூகம், மிகவும் பிற்பட்ட வகுப்பு லிஸ்ட்டிலும், மிகவும் பிற்பட்ட வகுப்பினர், சாதாரண பிற்பட்ட வகுப்பினர் லிஸ்ட்டிலும் இருப்பதால் மிகவும் பிற்பட்ட சமூகம் நல்ல நிலைமையை அடைவது தடைபடக் கூடியதாக இருக்கிறது. ஆகவே, முக்குலத்தோர்களையும், இன்னும் சில ரொம்ப ஏழ்மையாக இருக்கக் கூடிய ஜாதியினரையும் மிகவும் பின் தங்கிய வகுப்பினர் லிஸ்ட்டில் சேர்க்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஹாஸ்டல்களில் முக்குலத்தோருக்கு அதிகச் சலுகை கிடைக்கச் செய்ய வேண்டும். இப்போது இருக்கிற பர்செண்டேஜை அதிகமாக உயர்த்தி அவர்களுக்கு நிறைய இடம் கிடைக்கும் நிலையைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹாஸ்டல்கள் கமிட்டிகளில் பெரும் பகுதி காங்கிரஸ்காரர்கள் தான் இருக்கிறார்கள். ஹாஸ்டல் கமிட்டிகளில் பல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் மெம்பர்களாக இருக்கச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மிகவும் பின் தங்கியவர்களுக்கும், பின் தங்கியவர்களுக்கும், ஹரிஜனங்களுக்கும் மின்சாரம் கொடுப்பதிலே அவர்கள் 10 சதவிகிதம் கட்டவேண்டிய நிலை இருப்பதால் அதைக் கட்ட முடியாமல் மின்சாரம் கிடைப்பது தடைப்பட்டுக் [illegible]ருக்கிறது. ஆகவே, ஹரிஜன [illegible]

மான்யத்திலிருந்தாவது பின் தங்கியவர்களுக்கும், ஹரிஜனங்களுக்கும் மின்சாரச் சலுகை கட்டணத்தைக் கொடுத்து மின்சார சப்ளை விரைவிலே கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற வருஷத்தில் இந்த மான்யத்தின் மீது பேசும்போது சொன்னேன், திருவாடானை தாலுகாவிலே ஹாஸ்டல்கள் மிகமிகக் குறைவாக இருக்கிறது என்று. கனம் மந்திரி அவர்களிடமும் கூறினேன். அதை கவனிப்பதாகச் சொன்னார்கள். ஆகவே மீண்டும் ஞாபகப்படுத்துகிறேன். திருவாடானை தாலுகாவில் ஆஸ்டல்கள் அதிகமாக ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த வாய்ப்பை அளித்ததற்காக நன்றி தெரிவித்துக் கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. கே. பொன்னையா :** கனம் தலைவி அவர்களே, ஹரிஜனங்களின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம். ஹரிஜனங்கள் கடவுளின் பிள்ளைகள் என்று உலகத்திற்கு காட்டினார் காந்தியடிகள். ஹரிஜன் என்ற பெயரே இந்த நாட்டில் ஒழிய வேண்டும், ஒரு ஹரிஜனப் பெண் ஜனாதிபதியாக வரவேண்டும் என்று ஆசைப்பட்டார்கள் காந்தியடிகள். கடவுள் இருக்கும் இடத்தை எப்படி புனிதமாகக் கருதுகிறோமோ அதுபோல் ஹரிஜனங்கள் வாழும் இடத்தைப் புனிதமாகக் கருதாமல் போனாலும், அதை சுத்தமாகவாவது, மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடமாவது இருக்கும்படிச் செய்வது சர்க்காரின் கடமை என்று சொல்லிக்கொள்கிறேன். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், ஹரிஜனங்களின் துயரை தீர்க்கவேண்டுமென்றால், ஹரிஜன் என்ற பெயரையே மாற்றவேண்டும், சேரி ஒழிய வேண்டும். சேரி ஒழிந்தால் தான் அந்த மாசு மறையும் என்பது என்னுடைய தாழ்மையான எண்ணம். இரண்டாவது ஐந்தாண்டு, திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 168 லட்சத்தில், ரூ. 48 லட்சம் செலவழிக்கப்படாமல் நின்றுபோய்விட்டது. திருச்சி, சேலம், மதுரை போன்ற இடங்களில் சேரி ஒழிப்புக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 20 லட்சமும் செலவழிக்கப்படவில்லை. ஆகையினால் சேரி ஒழிப்பை அவசியம் கண்காணித்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

சென்னை ராஜ்ய வீடு கட்டும் சங்கம் சமீபத்தில் வாழைப்பூச் சேரியிலும், நடைபாதை வாசிகளுக்கு பெரம்பூரிலும் குடியிருப்பு வசதி செய்து கொடுப்பதற்கு திட்டம் போட்டிருப்பது பற்றி எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேரி ஒழிப்புக்காக சுமார் 3 கோடி ஒதுக்கிவைத்திருக்கிறோம். நல்ல முறையில் செயல்பட்டு சேரிகளை ஒழிக்கப் பாடுபடவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களையும் டிபார்ட்மெண்டாரையும் மனமார வேண்டிக் கொள்கிறேன். நாம் சுதந்திரம் அடைந்த பிற்பாடு ஹரிஜனங்களின் வாழ்க்கை உயரவேண்டும் என்று ஏராளமாக சர்க்கார் பணம் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். முதல் திட்டத்தில் ஏறக்குறைய ரூ. 5½ கோடியும், இரண்டாவது திட்டத்தில் ஏறக்குறைய ரூ. 12¾ கோடியும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏறக்குறைய ரூ. 20 கோடியும் ஹரிஜனங்கள் அபிவிருத்திக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படி திட்டத்திற்குத் திட்டம் அதிகமாக பணம் ஒதுக்கியிருப்பது ஹரிஜன முன்னேற்றத்தில் சர்க்கார் அதிகமாக கவனம் செலுத்திவருவதற்கு அறிகுறியாகும். 1950–51–ல் ஹரிஜன முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை சுமார் 69 லட்சமாகும். ஆனால், 1963–64–ம் வருஷத்தில் கிட்டத்தட்ட ரூ. 3 கோடி 90 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். நமது மாகாணத்திற்கு ஏறக்குறைய ரூ. 127 கோடி வருமானம் வந்துக்கொண்டிருக்கிறது. அதில் ரூ. 3 கோடி 90 லட்சமானது சமுத்திரத்தில் பெருங்காயம் கரைத்தது மாதிரி தான். இவ்வளவு பெரிய சமுதாயத்தை முன்னேற்றுவதற்கு, எதை எடுத்தாலும் கீழ் நிலையில் இருக்கிற சமுதாயத்தை முன்னேற்றுவதற்கு இன்னும் கொஞ்சம் மான்யம் அதிகமாக ஒதுக்கித்தரவேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

கல்வி விஷயத்தில் டிபார்ட்மெண்டார் மிகவும் அக்கரை காட்டி வருகிறார்கள். உபகாரச் சம்பளம், ஹாஸ்டல் வைத்து நடத்துவது, பள்ளிகள் நடத்துவது, மதிய உணவு கொடுப்பது, புத்தகம், ஸ்லேட் முதலியவைகள்



வாங்கிக் கொடுப்பது ஆகிய சலுகைகளை அளித்து மக்களை படிக்க வைக்கிறார்கள். இந்தத் தரப்பிலிருந்து எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் திரு. ஆறுமுகம் மிகச் சிறப்பாக எடுத்துக் கூறினார்கள். சுதந்திரம் அடைந்த பிறகு இந்த நாட்டில் எத்தனை ஹரிஜனங்கள் முன்னேறியிருக்கிறார்கள், எத்தனை பேர்கள் பட்டதாரிகளாக ஆகியிருக்கிறார்கள் என்றெல்லாம் மிகத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். அதைப் பற்றி நான் மீண்டும் சொல்லவேண்டியதில்லை.

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் ஆதிவாசிகள் மிகவும் அதிகமாக இருக்கிறார்கள். நீலகிரி ஜில்லாவிலும், வட ஆற்காடு ஜில்லாவிலும் மருத்துவ வசதிக்காக மொபைல் வான் இயங்கிவருகிறது. அதேபோல கோவை ஜில்லாவிலும் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். டாப் ஸ்லிப், யானைமலை, தாளவாடி மலைப்பிரதேசங்களில் போக்குவரத்து வசதி இல்லை. ஆகையால் அந்தப் பகுதிகளில் மொபைல் மருத்துவ வான் இயங்குவதற்கு ஏற்பாடு செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆதிவாசிகள் அதிகமாக பாரஸ்ட் டிபார்ட்மெண்டின் கீழ் வேலை செய்து வாழ்கிறார்கள். அவர்களுக்கு பாரெஸ்டு டிபார்ட்மெண்டில் கொடுக்கக்கூடிய கூலி மிக மிகக் குறைவு. அவசியம் இந்தக் கூலியை உயர்த்திக் கொடுக்கவேண்டும். மேலும் அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய மருந்து, துணிமணி போன்ற வசதிகளைச் கொடுக்கவேண்டுமென்று மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வால்பாறையில் பெண்கள் ஹாஸ்டல் ஆரம்பித்து 2 வருஷங்கள் ஆகிறது. பெண்கள் ஹாஸ்டலுக்குக் கட்டிடம் கட்டுவதற்கு பணம் சாங்ஷன் ஆகியிருக்கிறது. ஆனால், இன்னும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படவில்லை. பெண்கள் ஹாஸ்டல் அவசியம் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்) :** ''கனம் அங்கத்தினருக்கு அளித்த நேரம் முடிந்து விட்டது.''

* **திரு. ஆர். ரங்கசாமி :** கனம் தலைவர் அவர்களே, இந்த மான்யத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இதுவரையில் கொண்டு வரப்பட்டுள்ள மான்யங்களில் பேசியதைக் காட்டிலும், இந்த மான்யத்தின் மீது பேசுவது பற்றி நான் மிகவும் பெருமை அடைகிறேன். சந்தோஷப்படுகிறேன். இதற்காக ஒரு தனி இலாகா வைத்து ஹரிஜனங்களுக்கு சலுகை செய்யக்கூடிய முறையிலே இன்று அரசாங்கம் செயல்பட்டுவருகிறது. ஆனால், எதற்காக, எந்தப் பெயரால் ஏற்படுத்தப்பட்டதோ, அதோடுகூட இன்னும் சில மக்களுக்கும் சேர்த்து, ஜாதிகளுக்கும் சேர்த்து சலுகை அளிக்கக்கூடிய முறையிலே இந்த இலாகா இப்பொழுது நடை பெறுகிறது. சிறப்பாக இந்தப் பெயரிலே வாழக்கூடிய சமூகத்தினருக்கு மட்டும் இந்த இலாகா தனிப்பட்ட முறையிலே சேவை செய்தால் மிக்க நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

தீண்டாமையைப் பற்றி பிரசாரம் செய்வதற்கு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. தீண்டாமை என்ற சொல்லை நாம் இன்னும் அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகிறோம். அநேகமாக அது ஓரளவுக்கு ஒழிக்கப்பட்ட சொல்லாக இருந்தாலும், இன்னும் சில இடங்களில் விடாப்பிடியாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது கண்டு வருத்தப்படக்கூடிய நிலையில் இருக்கிறோம். நகரங்களிலே அநேகமாக தீண்டாமை ஒழிந்துவிட்டது. ஆனால், கிராமப் புறங்களில் இன்னும் ஒரு சிலர், சொல்லப் போனால் காங்கிரஸ்காரர்களில் ஒரு சிலர் கூட, இதை இன்னும் விடாமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைத்துத்தான் நாம் மிக்க வேதனைப்பட வேண்டிய ஒரு நிலையில் இருக்கிறோம். ஆன்றோர்கள் ''ஆடை இல்லாத மனிதன் அரை மனிதன்'' என்று சொல்லுவார்கள். ஆங்கிலத்தில் ''Dress only makes a man'' என்று சொல்லுவார்கள். அவர்களுடைய உடையை வைத்துத்தான் அவர்களுக்கு கம்பீரமும், மனோ தைரியமும், தோற்றமும் உண்டாகிறது என்பதையும் நாம் பார்க்கிறோம். அந்த முறையில் தீண்டாமையை ஒழிப்பதற்கு, ஹரிஜனங்கள் இன்று இருக்க

அந்த முறையில் அந்த திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று நினைத்து நிறைவேற்றி வரும் நமது மதிப்பிற்குறிய முதல் அமைச்சர் அவர்கள் அரிஜனங்கள் சகல துறைகளிலும் முன்னேற்றமடைய வேண்டும் என்று சிந்தனை கொண்டு அவர்களுக்கு என்று அதிகப்படியான நிதியை ஒதுக்கி அரிஜன மக்கள் கல்வித்துறையிலும் விவசாயத் துறையிலும் முன்னேற்றமடையச் செய்தும், குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுத்தும் மற்றும் எல்லா விதமான சலுகைகளையும் பெற்று அதிகப்படியாக முன்னேற்றமடைய வேண்டும் என்று பணி புரிந்து வருகிறார். அந்த முறையில் அரிஜனங்கள் முன்னேற்றமடைந்து வருவதற்கு நமது மதிப்புற்குரிய முதல் அமைச்சரையும் அவருடைய மந்திரிசபையையும் நான் மிகவும் பாராட்டுகிறேன்.

மேலும் அரிஜன மக்கள் பொருளாதாரத் துறையில் வளர்ச்சி பெறவும் அரிஜனங்களுக்கு என்று கூட்டுறவு சங்கங்களை நிறுவி அதற்கு கடன் உதவி செய்து வருகிறார்கள். இன்னும் நல்ல முறையில் அவர்கள் முன்னேற்றமடையச் செய்வதற்கு அரிஜன பஸ் ட்ரான்ஸ்போர்ட் என்ற பெயரில் பஸ் சர்வீஸ் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் அதற்குரிய மூலதனச் செலவில் சர்க்கார் கடனாக உதவவேண்டும் என்றும் நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் அரசாங்க கண்ட்ராக்ட்களில் இப்பொழுது நூற்றுக்கு ஒருவர் கூட இல்லை. அதற்குக் காரணம் அரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு டிபாசிட் தொகையைக் கட்ட முடியாமல் இருப்பதால் அவர்களால் அரசாங்க கண்ட்ராக்ட்டுகளை எடுக்க முடியவில்லை. அதனால்தான் மேல் வகுப்பைச் சேர்ந்தவர்கள் கண்ட்ராக்ட்கள் எடுக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே நமது சர்க்கார் அரிஜன மக்களுக்கு சில சலுகைகளைக் காட்ட வேண்டும். அரிஜனங்களுக்கு இப்பொழுது பல சலுகைகளை காட்டுவது போன்று அரிஜனங்களுக்கும் பின் தங்கிய வகுப்பினருக்கும் காண்ட்ராக்ட் எடுப்பதில் கொஞ்சம் சலுகை காட்ட டெபாசிட் தொகை கட்டுவதாக இருந்தால் அதைக் குறைந்த தொகையாக கட்டுவதற்கு சலுகை காட்டவேண்டும் என்று அரிஜன மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல் மதுரை ஜில்லாவில் பிரமலை கள்ளர் மகாஜனங்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்று கள்ளர் ரெக்ளமேஷன் என்று ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதனால் அதிலுள்ள மக்கள் பொருளாதாரத் துறையில் அபிவிருத்தி அடைந்து வருகிறார்கள். அது போல மதுரை ஜில்லாவில் அரிஜன ரெக்ளமேஷன் என்று ஏற்படுத்தினால் அதை தாலூகா அளவிலாவது பஞ்சாயத்து யூனியன் அளவிலாவது பரீட்சார்த்தமாக ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு நமது மாநில அரிஜன இலாகா டைரெக்டர் அவர்களுக்கு உதவியாக ஒரு ஆலோசனைக் கமிட்டியையும் ஏற்படுத்த அனுமதி கொடுக்க வேண்டும் என்று நமது அரசாங்கத்தை தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல் சில அரிஜன வாலிபர்கள் தொழிற்சாலைகளில் சேருவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அரசாங்கத்தினிடம் கடன் உதவி பெற்று நடத்தக்கூடிய தொழிற்சாலைகளில் திறமை வாய்ந்த வாலிபர்களுக்கும் நமது அரசாங்கம் கணக்கு வைத்து அப்படி 16 பேர்கள் இருக்கக்கூடிய இடத்தில் ஒரு அரிஜன் இருக்கும்படியான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று அரிஜன வாலிபர்கள் சரர்பாக இந்த அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஜனத்தொகை ஈவுப்படி அவர்களை சேர்த்துக்கொள்வதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரிஜன வாலிபர்கள் வேலை இல்லரமல் குறைபடுவதால் இதைப்பற்றி யோசிக்க வேண்டும் என்று கனம் அமைச்சரை அரிஜன வாலிபர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் ஏழை அரிஜன விவசாயிகள் பல ஆண்டுகளாக விவசாயம் செய்து தண்டத் தீர்வை கட்டிக் கொண்டு வருகிறார்கள். அந்த நிலத்திலிருந்து வரக்கூடிய வருமானத்தை



வைத்துக்கொண்டு அவர்கள் அப்படிக் கட்டிவருகிறார்கள. அப்படி விவசாயம் செய்யக்கூடிய உழவர்களுக்கு அந்த நிலத்தையே ஜாரி செய்து கொடுக்கும்படியாக ஏழை உழவர்களின் சார்பாக மிக தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய தொகுதி மிகவும் பிற்போக்கான தொகுதி என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிந்திருக்கலாம். அவர்கள் மராமத்து அமைச்சராக இருந்தபோது, கடமலைக்குண்டு வரையில் தான் வந்து போனதாக அங்குள்ளவர்கள் கூறினார்கள். அமைச்சர் அவர்கள் கடமலைக்குண்டுக்குப் போயிருக்கும்போது, அதே மாதிரிதான் என்னுடைய தொகுதியும் இருக்கலாம் என்று நினைத்திருப்பார்கள். அதற்குத் தெற்கே போயிருந்தால்தான் அந்த வட்டாரத்தினுடைய நிலைமைகளையெல்லாம் அவர் அறிந்திருப்பார்கள். குறிப்பாக, சென்ற மாதம் கடமலைக்குண்டு வட்டாரத்திறகு நான் போயிருக்கும்போது ஒருவர் என்னைப் பார்த்து, " நீங்கள் வந்து ஒரு வருஷ காலம் ஆகின்றதே, கடவுளால் கைவிடப்பட்ட கடமலைக்குண்டு வரஷநாடு வட்டாரத்தை நீங்கள் ஒன்றும் கவனிக்கமாட்டீர்கள் போலிருக்கிறதே " என்று கூறினார்கள். அப்பொழுது எனக்கு அதிக விசனமாக இருந்தது. என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால் ஹரிஜன மக்களுக்குத் தனிச் சலுகை காட்டிவரும் மதிப்பிற்குரிய நமது முதல் அமைச்சர் அவர்கள் கடவுளால் கைவிடப்பட்ட எங்கள் கடமலைக்குண்டு வரஷநாடு வட்டாரத்தைக் கைவிடக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். நிச்சயமாக எங்களை கைவிடமாட்டார்கள். அங்குள்ள மக்களுக்குப் பல சலுகைகளைக் கொடுத்துக் கருணை காட்டுவார்கள் என்று நான் நம்புகிறேன். இதையேதான் ஹரிஜன நல அமைச்சராக இருப்பவரிடமும் நான் கூறிக்கொள்ளுகிறேன்.

**கனம் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்) :** நேரம் ஆகிவிட்டபடியால் சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திருமதி அ. கிருஷ்ணவேணி :** என்னுடைய தொகுதியாகிய ஆண்டிப்பட்டி வட்டாரத்திலிருக்கும் சா.ஃப்டூர் வட்டாரத்தில் மிகவும் பிற்போக்கான ஒரு கிராமம் இருக்கிறதென்றால் அது கரிசல்பட்டி கிராமம்தான் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்கும் தெரியலாம். அந்தக் கிராமத்தில் இவ்வாண்டிலாவது கண்டிப்பாக ஒரு காலனி கட்டிக்கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். (மணி அடிக்கப்பட்டது).

மேலும், சில ஜாதி ஹிந்துக்களும், ஏழை வகுப்புக்களைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். ஜாதி ஹிந்துக்களும் ஹரிஜன மக்களோடு தொடர்பு கொண்டு, ஜாதிப் பாகுபாடுப் பிரச்சினைகளையெல்லாம் ஒழிக்க வேண்டுமென்று ஆர்வம் கொண்டுள்ள ஒரு சில மக்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கும், ஹரிஜன மக்களுக்கும் சேர்ந்தாற்போல் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டால் நலம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மேலும். . . . . . .

**கனம் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்) :** கனம் அங்கத்தினர் உரையை முடித்துவிட வேண்டும். இப்பொழுது கனம் அங்கத்தினர் திரு. சின்னசாமி அவர்கள் பேசலாம்.

**திருமதி அ. கிருஷ்ணவேணி :** ஒரே ஒரு விஷயத்தை சொல்லி என் உரையை முடித்துவிடுகிறேன். ஏழுமலையில் மாணவ, மாணவிகளுக்கு விடுதிகளும், ஆண்டிப்பட்டியில் மாணவிகளுக்கான ஒரு விடுதியும் ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் மிகவும் முக்கியமான கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும். . . .

**கனம் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்):** கனம் அங்கத்தினர் உரையைத் தயவு செய்து முடித்துக்கொள்ள வேண்டும். இப்பொழுது கனம் அங்கத்தினர் திரு. சின்னசாமி அவர்கள் பேசலாம்.

*** திரு. தா. சின்னசாமி :** கனம் தலைவி அவர்களே, நான் இந்த அரிசன மானியத்தின் பேரில் என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நமது தேசம் சுதந்திரம் பெற்றது ஏழைகளுக்காகத்தான்

இப்பொழுது சலவைத் தொழிலாளிகளுக்கும், முடித் திருத்துவோருக்கும் சர்க்கார் சில சலுகைகளைக் கொடுத்து வருகிறார்கள். ஒரு சலவைத் தொழிலாளிக்கு ரூபாய் 53 கொடுக்கிறார்கள், இந்த ரூபாய் 53-ஐ வைத்துக்கொண்டு அவன் என்ன தொழிலை நடத்த முடியும். இப்பேற்பட்ட பிற்பட்டவர்கள் ஏமாற்றப்படுவதாகத்தான் நான் நினைக்க வேண்டியிருக்கிறது. அப்படியாவது, கொடுக்கின்ற பணத்தை விண்ணப்பம் செய்துகொள்ளும் எல்லோருக்கும் கொடுக்கிறார்களா என்று பார்த்தால், ஒரு சிலருக்குத்தான் கொடுக்கிறார்கள். ஒரு மாவட்டத்திலே 100 பேருக்குத்தான் கொடுக்கிறார்கள். கொடுக்கிற தொகையை மானியமாகக் கொடுக்க வேண்டும். ஐம்பது அல்லது 53 ரூபாய் கடன் கொடுக்கிறேன் என்று சொன்னால் அது வெறும் கண் துடைப்பு வேலையாகத்தான் இருக்கிறது. ஆகவே, சலவைத் தொழிலாளர்களுக்கும், முடி திருத்துவோருக்கும் குறைந்தது ரூபாய் 100 அல்லது 200, எப்படி மாடுகள் வாங்குவதற்குப் பணம் கொடுக்கிறோமோ, அதுபோல் அவர்களுக்கு மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*** திரு. டி. மணவாளன் :** கனம் சபைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சென்ற வருடத்தைப் போலவே இந்த வருடத்திலும் மாணவர்களுக்கு அதிகமாக ஸ்காலர்ஷிப்புகள் கொடுப்பதற்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதனால், ஹரிஜன மாணவர்கள் நல்ல பலனை அடைந்து வருகிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கனம் அமைச்சர் அவர்களும், ஹரிஜன இலாகா டைரக்டர் அவர்களும், மற்றவர்களும் இந்த இலாகாவின் பொறுப்பை நல்ல முறையில் வகித்து மாணவர்களுக்கு குறித்த காலத்திலே ஸ்காலர்ஷிப்பு வழங்குவதை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. மாவட்ட வாரியாக தொழில் கருவிகள் வழங்குவதிலும், மாடுகள் வாங்குவற்கும், கிணறுகள் வெட்டுவதற்கும் மானியங்கள் வழங்குவதிலே நேர்மையான முறையில் கமிட்டிகள் அமைத்து வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். குடியிருப்பு மனைகள் வழங்குவதிலும் இந்த வருடத்திற்குக் கூடுதலாக பல லட்சக்கணக்கான பணத்தை ஒதுக்கியிருப்பதற்கு நான் அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

இப்பொழுது குடியிருப்பு மனைக்கட்டுகள் வழங்கி வருகிறார்கள். அப்படி வழங்குவதில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இது சம்பந்தமாக என்னுடைய மாவட்டத்தில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக குடியிருப்பு மனைக்கட்டுகளை வழங்கும்போதெல்லாம் நிலச் சொந்தக்காரர்கள் பல இடஞ்சல்களைக் கொடுக்கிறார்கள் எங்கள் மாவட்டத்திலும் அப்படியேதான் செய்து வருகிறார்கள். இது சம்பந்தமாக ஒரு விஷயத்தை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எங்களுடைய மாவட்டத்தில் அப்துலாபுரம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. சமீபத்தில் அங்கே அரிஜனங்களுக்கு மனைக்கட்டுகள் வழங்குவற்கு என்று நிலத்தை எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள். அதற்கு பெடிஷன் வந்தவுடன் அரிஜன் வெல்பேர் ஆபீசரும் மற்றவர்களும் அங்கு சென்று அந்நிலத்தை அரிஜனங்களுக்கு வழங்குவதைப்பற்றி விசாரணை செய்துவிட்டு வந்த பிறகு அந்த நிலம் அங்குள்ள கோயிலுக்கு அருகாமையில் இருக்கிறது என்ற காரணத்தால் அங்கே இருக்கக்கூடிய மற்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள் அரிஜனங்களைத் தாக்கி அக்கிரமமாக கலகம் செய்திருக்கிறார்கள். தற்போது அந்த கிராமத்தில் போலீஸ் பந்தோபஸ்து செய்திருப்பதாக எனக்கு தகவல் வந்திருக்கிறது. அப்படிப்பட்ட தகவல் கனம் அமைச்சருக்கும் வந்திருக்கும் என்றே நினைக்கிறேன். இம்மாதிரி அட்டூழியங்கள் செய்து வருகிறார்கள் பல இடங்களில். இதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.



அதோடு அரிஜனங்கள் பொருளாதாரத் துறையில் முன்னேற்றமடைய வேண்டும் என்றும் அதற்கு பல வேலைகளைச் செய்ய வேண்டும் என்றும் இந்தச் சபையில் பல அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் பேசி வந்திருக்கிறார்கள். கடந்த பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளாக அரிஜனங்களுக்கு என்று அதிகப்படியான தொகை ஒதுக்கியும் பல காரியங்களைச் செய்து வந்தும் அவர்கள் முன்னேற்றமடைந்திருக்கிறார்களா என்று பார்த்தால் குறிப்பாக அவர்கள் முன்னேற்றமடையவில்லை என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். அப்படி உயராமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதைப்பற்றி ஆலோசனை செய்ய வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையும் ஆலோசனை செய்யவேண்டும். அப்படி ஆலோசனை செய்வதற்கு ஒரு பொருளாதாரக் குழுவை அமைத்து அந்தக் குழுவின் சிபாரிசின்படி அவர்களுடைய யோசனைகளை நடைமுறைக்குக் கொண்டு வந்தால் உண்மையிலேயே அரிஜனங்களுடைய நிலைமை சற்று மாறும் என்று நான் கருதுகிறேன். ஆகவே இப்படிப்பட்ட ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்றும் அப்படி அமைத்து அந்த குழுவின் சிபாரிசுகளை நடை முறைக்குக் கொண்டு வர வேண்டும் என்றும் கனம் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தப்படியாக என்னுடைய மாவட்டத்தில் குறிப்பாக சுமார் இருபதாயிரம் அரிஜனங்கள் தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய தொழில் முக்கியமாக தோல் பதனிடும் தொழில் அல்லது விவசாயமாக இருக்கும். தோல்பதனிடும் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களுடைய நிலைமை ரொம்பவும் மோசமாக இருக்கிறது. அவர்கள் தோல் நாற்றத்தில் வேலை செய்ய வேண்டியதாக இருக்கிறது. அவர்களுக்கு சரியான வீட்டு வசதி கிடையாது. அவர்களுக்கு கூலி நிர்ணயம் கிடையாது. அவர்களுக்கு கூலி நிர்ணயம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. தொழிலாளர்களுக்கு இருக்கிற சட்டத்தைப் போன்று இவர்களுக்கு எந்த விதமான சட்டமும் அமல் நடத்தப்படவில்லை. முதலாளிகளுக்கு விருப்பம் இருந்தால் அவர்களை வேலைக்கு வைத்துக்கொள்கிறார்கள். இல்லா விடில் அவர்களை வேலையை விட்டு நீக்கி விடுகிறார்கள். இதனால் தோல் பதனிடும் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய அரிஜனங்கள் மிகவும் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது நிவாரணம் அளிக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நாம் இப்பொழுது பல திட்டங்களை வகுத்து கூட்டுறவு முறையில் பல தொழிற்சாலைகளை அமைத்துக்கொண்டு வருகிறோம். சர்க்கரை ஆலை, நூற்பு ஆலை முதலிய ஆலைகளை கூட்டுறவு முறையில் நாம் இப்பொழுது ஏற்படுத்திக்கொண்டு வருகிறோம். ஆகவே அரிஜனங்களை பொருளாதரா துறையில் முன்னேற்றமடையச் செய்வதற்கு அவர்களுக்கு என்று கூட்டுறவு முறையில் ஒரு பெரிய தோல் பதனிடும் தொழிற்சாலையை எங்கள் மாவட்டத்தில் அமைத்து அவற்றில் அரிஜனங்களை பங்குதாரர்களாகச் சேர்த்து அவர்களுடைய நிலைமையை உயர்த்தும் படி கேட்டுக்கொள்ளுகிறேன். அதே போல கூட்டுறவு முறையில் இருக்கும் கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் பங்குதாரர்களாகச் சேர்க்கும் சந்தர்ப்பத்தில் ஹரிஜனங்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். புதியதாக ஆரம்பிக்கிற ஸ்தாபனங்களிலும் அவர்கள் குறைந்த பட்சம் பத்து சத விகிதமாவது (அரிஜனங்கள்) பங்குதாரர்களாக இருக்க வேண்டும் என்ற நிலையை உண்டுபண்ணவேண்டும் என்று சொல்லிக்கொண்டு அரிஜனங்களை பங்குதாரர்களாகச் சேர்த்து அவர்களை முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*** திருமதி அ. கிருஷ்ணவேணி :** கனம் தலைவர் அவர்களே, அரிஜன் இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானிய கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். அரிஜன இலாகா ஏற்பட்டு பல ஆண்டுகளாகின்றன. மகாத்மா காந்தி அவர்கள் அரிஜன மக்கள் நாட்டில் ஒரு மனித சமுதாயமாக வாழ வேண்டும் என்பதற்காகவும் அவர்கள் நல்ல முறையில் முன்னேற்றமடைய வேண்டும் என்பதற்காகவும் பல திட்டங்களை வகுத்தார்

கூடிய நிலைமையில் நல்ல மனிதர்களாகவும், மற்றவர்களோடு நெருங்கிப் பழகக்கூடிய முறையிலும் அவர்களை சீர்திருத்தம் செய்வதற்கு, அவர்களுடைய ஆடைகளை நல்ல முறையில் வைத்துக்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, ஆவன செய்யவேண்டும். அப்படிச் செய்தால் மிக நலமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

தீண்டாமையை ஒழிக்கும் கிராமங்களுக்கு பரிசு அளிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டது. பரிசு அளிக்கக்கூடிய சமயத்தில், எந்த கிராமத்தில் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து எல்லா சமூகத்தினரும் ஒன்றாகச் சேர்ந்து கேணியில் தண்ணீர் இறைக்கின்றார்களோ, எந்தக் கிராமத்தில் ஆலயங்களில் ஹரிஜனங்கள் அனுமதிக்கப்படுகிறார்களோ அந்தக் கிராமத்திற்கு தீண்டாமையை ஒழித்து எல்லா மக்களும் சமமாக வாழக்கூடிய கிராமத்திற்கு பரிசு அளிப்பது மிகவும் நலமாக இருக்கும் என்று நான் இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதோடுகூட, ஹரிஜன மக்கள் முன்னேற்றம் அடையவேண்டுமென்றால், ஒன்று பொருளாதாரத் துறையில் முன்னேற வேண்டும், அல்லது கல்வித் துறையிலே முன்னேறவேண்டும். நமது அரசாங்கத்தை எடுத்துக்கொண்டால் கல்வித் துறையிலே முன்னேறக்கூடிய நிலைமையிலே இருக்கிறோம் என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அந்த முறையில் ஒரு ஹரிஜன குடும்பத்தில் இருக்கக்கூடிய குழந்தைகளுக்கெல்லாம் அடுத்த 15 ஆண்டுகள் வரையிலாவது குறைந்தபட்ச கல்வி புகட்டி, நல்ல வழிகளில் அவர்களை சீர்திருத்தம் செய்து, அவர்களுக்கு உத்தியோகமும் வாங்கிக்கொடுத்து அந்தக் குடும்பத்தையே சீர்திருத்தம் செய்யக்கூடிய முறையிலே காரியங்கள் செய்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்கள் ஸ்தல ஸ்தாபனங்களில் ஒரு சில இடங்களில் கோ–ஆப்ட் செய்த மெம்பர்களாகப் போடப்பட்டிருக்கிறார்கள் என்றாலும், அநேக இடங்களில் அந்த மாதிரி நிலை இல்லாமல் இருக்கிறது என்பது நமக்குத் தெரிந்தது தான். சாதாரணமாக கிராமங்களில் இருக்கிற கூட்டுறவு சங்கங்களை எடுத்துக்கொண்டால், ஹரிஜனங்கள் மெம்பர்களாக வருவதற்கு வழி இல்லாத ஒரு நிலை இருக்கிறது. அதோடு சிறிய கோவில்களில் எல்லாம் ஹரிஜனங்களை டிரஸ்டிகளாகப் போட்டிருப்பதாகத் தெரியவரவில்லை. பெரிய கோவில்களில் தான் ஹரிஜனங்களை டிரஸ்டிகளாகப்போட்டிருக்கிறார்கள். சாதாரணக் கோவில்களில் ஹரிஜனங்களை டிரஸ்டிகளாகப் போட்டதாகத் தெரியவில்லை.

**கனம் திரு. பூ. கக்கன் :** டிரஸ்டிகள் போடுவதென்றால் ஒரு கோவிலுக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது என்று பார்த்து, அதை பராமரிப்பதற்காகப் போடுகிறோம். சிறிய கோவில்களில் டிரஸ்டியாகப் போடுவதற்கான ஏற்பாடில்லை. சொத்துள்ள கோவில்களிலெல்லாம் போட்டிருக்கிறோம்.

•10-30 p.m. **திரு. ஆர். ரெங்கசாமி :** கோயில்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பொதுமக்களோடு பழகுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படும். அங்குள்ள மக்களும் ஹரிஜனங்களை சரிசமமான நிலையில் கருதுவதற்கு வாய்ப்பு ஏற்படும். சிறிய கோயில்களில் ஹரிஜனங்களைப் போட்டால், கிராமங்களில் தீண்டாமையை ஒழிப்பதற்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

மேலும், விவசாயத்தைப் பெருக்குவதற்காக ஹரிஜனங்களுக்கு மாடுகள் வழங்குகிறார்கள். நிலம் வைத்திருக்கக்கூடிய ஹரிஜனங்களுக்கு மாடுகள் வழங்குவதைக்காட்டிலும், மாட்டிற்கு பதிலாக ஆடுகளை வழங்கி, நிலம் இல்லாத ஹரிஜன மக்களுக்குக் கொடுத்தால் நலமாக இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆகவே, இதை யோசிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால், சில பகுதிகளிலே அங்குள்ள ஓரிருவருக்கு மட்டும் மாடுகள் வழங்குவதினால் மற்ற மக்கள் பொறாமைப்படக் கூடிய, நிலையிலும், சர்க்காரைப்பற்றி குறை கூறுகின்ற நிலையிலும் இருக்கிறது. ஆகவே, ஆடுகள் வாங்கிக் கொடுத்தால் எல்லோரும் பயனடைவார்கள் என்பது என்னுடைய அபிப்பிராயம்.



அடுத்தப்படியாக, ஹரிஜன கிருஸ்தவர்களைப் பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். ஆரோக்கியசாமி ஆறுமுகமாகவும், ஆறுமுகம் ஆரோக்கியசாமியாகவும், சில சலுகைகளுக்காக இவ்வாறு ஹரிஜனங்கள் கிறிஸ்தவர்களாக மாற்றப்பட்டு இப்பொழுது கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பஞ்சாயத்திலே மெம்பர் பதவிக்குக்கூட ஜாதி ஹிந்து ஹரிஜன் கிடைக்காத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஹரிஜனும் இரண்டு பெயர்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளித்து அவர்களை முன்னேற்றம் அடையச்செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. சோ. ஆறுமுகம் :** கனம் தலைவர் அவர்களே, ஹரிஜன நல மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

நமது ஹரிஜன இலாகா அமைச்சர் அவர்கள் இன்றைய தினம் இந்த மானியக் கோரிக்கையை சமர்ப்பிக்கும் நேரத்தில் அவர்கள் தந்த விளக்கங்கள் அத்தனையும் மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகவும், வரவேற்கத் தக்க வகையிலும் இருந்தன. ஆகவே, எல்லோருக்கும் திருப்தி அளிக்குமென்றே நான் நினைக்கிறேன். ஆனால், அதே நேரத்தில், இருக்கின்ற சில குறைபாடுகள், சில ஊழல்களை, என்போன்று எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் எடுத்தச் சொல்லுவதை, வேண்டுமென்றே சர்க்கார் மீது பழி சுமத்துவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதுதான் என்னுடைய எண்ணமாகும். இன்றைய தினம் ஹரிஜனங்களுக்கு மாடுகள் வாங்குவதற்காக ரூ. 500 கொடுக்கிறார்கள். அப்படி கொடுக்கிற ரூபாய் 400-ம் அந்த ஹரிஜன விவசாயிகளுக்குப் போய்ச் சேருகிறதா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். லஞ்ச ஊழல் எங்கே இருக்கிறது என்றால் இந்த ஹரிஜன நல இலாகாவிலேதான் அதிகமாக தலைகாட்டுகிறது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். ஹரிஜன நல இலாகாவிலிருந்து உதவி பெறுகிறவர்கள் மிகவும் ஏழைகள். கிராம முனிசீப்பையோ பஞ்சாயத்துத் தலைவரையோ, தாசீல்தாரையோ பார்க்க வேண்டுமென்று சொன்னால் தகுதியில்லாதவர்களாகக் கருதப்படுகிறார்கள். இந்த நிலையில்தான் இடையிலே இருக்கிற சிலர், தாழ்த்தப்பட்ட மக்களிடம், "உனக்கு இதைச் செய்கிறேன், அதைச் செய்கிறேன்" என்று சொல்லி, வேண்டாத காரியங்களில் அவர்களை ஈடுபடச் செய்து, ரூபாய் 400 பெறுவதற்கு குறைந்த பட்சம் ரூபாய் 150 செலவு செய்கின்ற பணிகளில் இறங்குகிறார்கள். இந்த நிலைமை நீடிக்கக்கூடாது என்பது என்னுடைய கருத்து. இப்படிப்பட்ட ஒரு நிலைமையைப் போக்க வேண்டுமென்று சொன்னால், விண்ணப்பங்களை நேரடியாக தாசீல்தாருக்கோ அல்லது வெல்பேர் ஆபீஸருக்கோ அனுப்பித்து, குறிப்பிட்ட ஒன்று அல்லது இரண்டு மாதங்களுக்குள்ளாக அவர்களுக்கு மாடு வாங்குவதற்கு பணம் கிடைக்கும்படிச் செய்யவேண்டும். அதற்குப் பதிலாக இப்பொழுது மாதக் கணக்கில் நீடித்து விட்டு வரவில்லையே என்று ஏழை விவசாயி கவலைப்பட்டு, அதற்காக பணம் செலவழிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு, பல தொல்லைகளுக்கு உள்ளாகிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஹரிஜனங்களுக்கு கிணறுகள் வெட்டிக் கொடுக்கிறார்கள். வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள். ஆனால் அப்படி கட்டிக் கொடுக்கிற வீடுகள் ஒழுங்காக இருக்கின்றனவா என்பதை நாம் பார்க்க வேண்டும். தனிப்பட்டவர்களுக்கு காண்டிராக்ட் கொடுப்பதன் மூலம், அவர்கள் ஏராளமான லாபம் பெற வேண்டுமென்று நினைத்து, சர்க்கார் பணத்தை சிக்கனமாக செலவு செய்து, அந்தக் கட்டிடம் சீக்கிரத்திலேயே அழிந்து விடுகிற நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே, கட்டடம் கட்டுவதற்கும், கிணறுகள் வெட்டுவதற்கும், கூட்டுறவு முறையில் வேலை செய்வதற்கு முன் கூட்டியே அவர்களுக்கு பணத்தை கொடுத்துவிட்டால் இப்படிப்பட்ட தொல்லைகள் நீங்கும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குறைவுபடுத்தியாகிலும் அதிகமான நபர்களுக்கு இந்த வசதி கிடைக்கச் செய்ய வசதி செய்வது நலமாக இருக்குமென்று நான் நினைக்கிறேன். (கனம் திரு. பூ. கக்கன் : ஐநூறு ரூபாய்க்குக் குறைவாக மாடு வாங்கி என்ன வேலைக்குப் பயன்படும் ?) இந்த அளவு ரூபாய்க்கு மாடு வாங்கினால் பத்து ஏக்கர், பதினைந்து ஏக்கர் என்று பெரும் நிலம் உடையவர்களுக்கு பயன்படலாம். ஆனால் குறிப்பாக ஹரிஜனங்கள் ஒரு ஏக்கர், 2 ஏக்கர் என்று மட்டும் வைத்துக்கொண்டு பயிரிடுகிற நேரத்தில் இவ்வளவு அதிகமாக விலை கொடுத்து மாடு வாங்கி வைத்துக்கொள்ள வேண்டுமென்பது இல்லை. ஆகவே இத்தொகையைச் சற்றுக் குறைத்தாலும் அதிக நபர்களுக்கு மாடு கிடைக்க வசதி செய்து தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக பாசனக் கிணறைப் பொறுத்த வரையில் ஜில்லாவுக்கு 30 கிணறு என்று பணம் ஒதுக்குவதாகத் தெரிகிறது. சில ஜில்லாக்களில் ஆற்றுப் பாசன வசதி இருப்பதனால் கிணறுகள் தேவைபடுவதில்லை. பாசன வசதி பெற்றுள்ள அந்த அந்த ஜில்லாக்களுக்கு கிணறுக்காக ஒதுக்கப்படுகிற தொகையை வேறு வகையில் செலவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது அந்தத் தொகை செலவிடப்படுவது கிடையாது.

அடுத்தபடியாக ஹாஸ்டல் வசதியை எடுத்துக்கொண்டால் ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்த மாணவருக்கு 16 ரூபாயும், மற்ற சமூகத்தைச் சேர்ந்தவருக்கு 10 ரூபாயும் கொடுக்கப்படுகிறது. ஒரே வகுப்பில், ஒரே இடத்தில் இருந்து கொண்டு, ஒரே விதமான உணவை உண்ணுகிறவர்களில் ஒருவருக்கு 16 ரூபாயும், இன்னொருவருக்குப் 10 ரூபாயும் கொடுக்கிற முறையினால் மாணவர்களிடையே வேற்றுமை உண்டாகும். ஆகவே எல்லோருக்கும் சமமாக இந்த உதவித்தொகையை வழங்கினால் நன்றாக இருக்கும். அப்போது தசன் மாணவர்களிடையே ஒரேவிதமான மனப்பான்மை வளரும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஹாஸ்டல்களைப் பொறுத்த வரையில் அங்கங்கே மாவட்டவாரியாக இருக்கும் ஹரிஜன நல அதிகாரிகளே இந்த உதவித் தொகையை வழங்க உத்திரவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது அப்படியின்றி அவர்கள் சிபார்சு செய்து சென்னைக்கு வந்து, சென்னையில் உள்ள ஹரிஜன. நல இலாகா அதிகாரி உத்திரவிடவேண்டியிருப்பதால் காலதாமதமாகிறது ஆகவே இந்த அதிகாரத்தை மாவட்ட ரீதியாகவே வழங்க அனுமதி அளிக்கவேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கிராமங்களில் உள்ள புறம்போக்கு நிலங்களை ஹரிஜனங்கள் பலகாலமாகச் சாகுபடி செய்து வந்தார்கள். ஆனால் அவர்களுக்கு இதுகாறும் பட்டா வழங்கப்படாமலேயே இருந்தது. இப்போது அந்தப் புறம்போக்கு நிலங்களை பஞ்சாயத்துகளுக்கு மாற்றுவதனால் அந்தப் புறம்போக்கு நிலங்களை காலி செய்து தரவேண்டுமென்று பஞ்சாயத்துகள் நிர்ப்பந்திக்கின்றன. இதைப் பரிசீலனை செய்து பல வருஷங்களாகப் பயிரிட்டு வருகிற விவசாயிக்கே அந்த நிலத்தைப் பட்டா செய்து கொடுக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் தலைவர் அவர்களே, இந்த மானியம் மிகமிக முக்கியமானதாகையால் இதைப்பற்றிப் பேச விரும்புகிறேன். காரணம் சமுதாயத்தில் மிகத் தாழ்ந்து கிடக்கிற மக்களை, வசதிக் குறைவாக இருக்கிற மக்களை முன்னேற்ற வேண்டுமென்பதற்காக ஒதுக்கப்படும் மானியமாகும் இது. ஆனால் இந்தத் துறையில் மாத்திரம் இன்னும் தொகை அதிகப்படுத்தும் முக்கியத்துவம் வரவில்லை. மொத்தத்தில் 120 கோடி ரூபாய் செலவாகிற இந்த மாநிலத்தில் இந்த பிற்பட்ட ஹரிஜன சமூகத்திற்காகச் செலவிடப்படுகிற தொகை 3 கோடியே 89 லட்சம்தான் என்பது வருந்தத்தக்கதாகும். ஆகவே அடுத்த வருஷ வரவு செலவுத் திட்டத்திலாவது இத்தொகையை உயர்த்துவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள



வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல மானியங்களின் கீழ் செய்யப்படுகிற பல நல்ல காரியங்களை நாம் இந்த மானியத்தின்கீழ் பிற்பட்ட ஹரிஜன சமூகத்திற்குச் செய்யவேண்டியிருக்கிறது. கல்விச் சலுகை கொடுக்கிறோம். வீடு கட்ட வசதி செய்து கொடுக்கிறோம், இன்னும் பல சொஸைட்டிகளை ஆரம்பிக்க வசதி செய்து தருகிறோம். இப்படி பல முக்கியமான மானியங்களின்கீழ் செய்யப்படுகிற வசதிகளை எல்லாம் நாம் இந்தச் சமூகத்தார்களுக்கு இந்த ஒரு மானியத்தின்கீழ் அளிக்கவேண்டியிருப்பதால், சமுதாயத்தில் தாழ்ந்து கிடக்கிற மக்களை முன்னே கொண்டுவர வேண்டுவது மிக அவசியம் என்பதை உணர்ந்து கட்டாயம் இந்த மானியத் தொகையை அதிகரிப்பதில் இந்த அரசாங்கம் அக்கறை காட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே—ஹரிஜன நலத்துறையோடு பிற்பட்ட இனத்தவரும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு சமூகத்தினரும் சேர்த்துக் காரியங்கள் செய்வதனால் தாமதம் ஏற்படுகிறது. வெவ்வேறு இலாகாவாகவே இதைப் பிரித்து காரியங்களைச் செய்தால் இன்னும் அதிகாரிகள் அதிக அக்கறை காட்டமுடியும். ஆகவே இதைச் சிந்தித்துப் பார்ப்பது நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக பிற்பட்ட இனத்தவருக்கு என்று சொல்லும்போது செலவழிக்கப்படுகிற தொகை 46 லட்சம் ரூபாய்தான், கல்விச் சலுகை, வேறு பல சலுகைகளை நாம் தருவது கிடையாது. அவர்களுக்குச் சலுகைமட்டும் அளித்தால்கூடப் போதும். ஆனால் நல்லமுறையில் அந்த சமூகத்தினருக்கு அந்தச் சலுகை கிடைக்க வழி செய்யவேண்டும். சென்ற ஆண்டு 43 லட்சம் ஒதுக்கினார்கள். அதுபோதவில்லையென்று பின்னர் 8 லட்சம் ஒதுக்கினார்கள். அப்படியும் நூற்றுக்கு 50 மார்க்குக்கு மேல் வாங்கிய அத்தனை பேர்களுக்கும் கிடைத்ததாகச் சொல்லமுடியாது. அப்படி 50 லட்சத்திற்குமேல் ஒதுக்கியும் போதவில்லையென்கிறபோது இந்த வரவு செலவுத் திட்டத்தில் 46 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள் என்றால் எனக்கு என்ன காரணம் என்று புரியவில்லை. பின்னே உபமானிய கோரிக்கை பெறலாம் என்று சொல்லலாம். அப்படியின்றி பிற்பாடு உபமானியக் கோரிக்கை பெற இடமேற்படாது மொத்தமாக இவ்வினத்தில் 60 லட்சம் ஒதுக்கித்தரவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்ட சமூகத்தினருக்கு வேறு பல வசதிகளைச் செய்துதர வேண்டுமென்பதைக் காட்டிலும், கல்வி வசதி செய்து தரவேண்டுமென்பது மிக முக்கியமாகும். ஒரு பையனைப் படிக்க வைத்துவிட்டால் ஒரு குடும்பமே முன்னேறக்கூடிய நிலைமை ஏற்படும்.

இன்றைக்கு "போஸ்ட் கிராஜுவேட்" படிக்ககூடிய மாணவர்களுக்குக் கொடுக்கப்படக்கூடிய ஸ்காலர்ஷிப் மிகக் குறைவாக இருக்கிறது. படிக்கக் கூடிய மாணவர்கள் கையிலே பணம் இல்லாத. காரணத்தால் கல்வி வசதியை இழக்கிறார்கள் என்பதையும் பார்க்கும்போது பரிதாபமாக இருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கும் உதவித் தொகையை அதிகப்படுத்தி அவர்கள் கல்வி பெறும் வசதியைக் கொடுப்போமானால், அந்த மாணவன் எம். ஏ. படித்துவிட்டு 1,500 ரூபாய் சம்பளம் பெறும் அளவுக்கு அவன் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது அவனுடைய பிள்ளைகள் ஸ்காலர்ஷிப்புக்கு வராத நிலைமை ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

"லா காலேஜ்"-இல் படிக்கின்ற மாணவர்களுக்கும் மிகக் குறைந்த எண்ணிக்கையினருக்கே ஸ்காலர்ஷிப் கொடுக்கிறார்கள். பதினைந்து அல்லது இருபது பேருக்குத்தான் ஸ்காலர்ஷிப் கொடுக்கிறார்கள். அது கடலில் கரைத்த பெருங்காயம் மாதிரி இருக்கிறது. வேறு துறைகளில் குறைவாகச் செலவழித்தாலும் இதற்கு அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எக்ஸ் கிரிமினல்களுக்காக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. செங்கல்பட்டில் பம்மல் செட்டில்மெண்டில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த வீடுகள் குதிரை லாயம் மாதிரி அ[illegible]ந்திருக்

கின்றன. மனிதன் வசிக்கும் விதத்திலே அந்த வீடுகள் இல்லை. இருபதாவது நூற்றுண்டில் அந்த முறையில் வீடுகள் கட்டி அவர்களை அவதிக்குள்ளாக்கவேண்டாம். ஆகவே, நல்ல முறையில் அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு, ஆண்டுக்கு 1,500 ரூபாய்க்கு உட்பட்ட வருமானம் உள்ளவர்களுடைய பிள்ளைகளுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கவேண்டுமென்று இருக்கிறது. மாதம் ஐநூறு ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு ஐந்து பிள்ளைகள் இருந்துவிட்டால், அவர்களே தங்களுடைய பிள்ளைகளை கல்வி பெறச் செய்து நல்ல நிலைமைக்குக் கொண்டுவர மிகுந்த கஷ்டப்படவேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த இலக்கை 3,500 என்று ஆக்கினால் நலமாக இருக்கும்.

ஹரிஜன நலத் துறையினரால் 1,700-க்கு மேற்பட்ட பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போது நாம் கல்வி மானியத்திற்காக 29 கோடி ரூபாய் அளவிற்கு ஒதுக்கியிருக்கிறோம். எல்லாக் குழந்தைகளும் துவக்கப் பள்ளிப் படிப்பைப் பெறவேண்டுமென்று நம்முடைய கொள்கைகளை நாம் வரையறுத்திருக்கிறோம். ஆகவே, 1,700 பள்ளிகளை நடத்தக்கூடிய பொறுப்பையும் கல்வி இலாகாவிடம் ஒப்படைத்துவிட்டோ, அல்லது பஞ்சாயத்துக்களிடம் கொடுத்துவிட்டோ அந்தப் பணத்தையும் வேறு துறைகளில் ஹரிஜனங்கள் முன்னேற்றத்திற்காகச் செலவழிக்கலாம்.

ஹரிஜனங்களுக்கு மாடுகள், கன்றுகள் ஆகியவற்றை வாங்கிக் கொடுப்பதைக் காட்டிலும், அவர்களுக்கு மனைக்கட்டுகள் கொடுத்தால் அவர்களாகவே அழகான குடிசையைப் போட்டுக் கொள்வார்கள், அதிகம்பேரும் பயன்பெற முடியும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. பி. முருகையன் :** கனம் தலைவி அவர்களே, ஹரிஜனநல இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியத்தின் மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்று ஹரிஜன நல இலாகாவானது பல துறைகளிலும் ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வருகிறது என்று ஏட்டளவிலே சொல்லிவருகிறார்கள். தேர்தல் காலத்தில் அவர்களுடைய வோட்டைப் பெறும் வகையில்தான் நம்முடைய சர்க்கார் முயன்று கொண்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் தேர்தல் காலத்தில் அவர்களிடம் சென்று வோட்டுக் கேட்கின்ற காலத்தில், "உங்களுக்குக் காலனிகள் கட்டித் தருகிறோம், கிணறு வெட்டித் தருகிறோம், வீடு கட்டும் மனைக்கட்டு தருகிறோம்" என்று சொல்கிறார்களே தவிர, நல்ல முறையிலே செயல்படுவதில்லை. என்னுடைய தொகுதியில் வல்லத்திரா; கும்மங்குளம்கோட்டை அரசடிப்பட்டி, தட்டாமனைப்பட்டி, மணமடை ஆகிய பகுதிகளில் காலனித்திட்டம் இருந்தும், இன்னும் செயல்படவில்லை. இராமநாதபுரம் மாவட்டத்தில் சிங்கம்புணரி என்ற பகுதியில் புதுப்பட்டி, பூலாம்பட்டி என்ற இரண்டு ஊர்களில் காலனி அமைக்க இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே திட்டமிடப்பட்டது. ஆனால் அது இன்னும் செயல்படவில்லை. மாவட்ட நல அதிகாரியைக் கேட்டபோது, "அந்தத் திட்டம் விரைவில் தொடங்கப்படும்" என்று தெரிவித்தார்கள். இப்படிப்பட்ட நிலை நிலவி வருகிறது. இதைத் தவிர்க்க அரசாங்கம் நல்லதொரு முடிவை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்காகச் சேவை செய்தவர்கள் என்று சொல்லி சிலருக்குக் கவர்னர் அவர்களுடைய தங்க பதக்கங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. சிங்கம்புணரி சேர்மன் அவர்கள் ஹரிஜனங்களுக்காகச் சேவை செய்தவர் என்று சொல்லி அவருக்குக் கவர்னர் அவர்களுடைய பதக்கம் வழங்கப்பட்டிருக்கிறது. அவர் 1957–ஆம் ஆண்டிலே காங்கிரசை எதிர்த்து சுயேச்சையாக போட்டி இட்டவர். பல கிரிமினல் குற்றங்கள் அவர்மேல் சாட்டப்பட்டு கைதியாகக்கூட இருந்திருக்கிறார்கள். இந்த மாதிரி நிலைமையிலுள்ளவருக்குக் கவர்னர் பதக்கம் கொடுக்கவேண்டியது அவசியந்தானு ?



சிங்கம்புணரியில் சில பகுதியில் வலையர்களும், ஹரிஜனங்களும் சேர்ந்து பள்ளியில் படித்துவருகிறார்கள். வலையர்களுக்கு மட்டும் மதிய உணவு கொடுக்கப்பட்டுவருகின்றன. ஹரிஜனங்களுக்கு மதிய உணவு கொடுக்கப்படுவதில்லை. அதேபோன்று சிங்கம்புணரி யூனியன் பகுதியில் பூலாங்குரிச்சி பள்ளியில் வலையர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு மதிய உணவு கொடுக்கப்படுகிறது. ஆனால் ஹரிஜன மாணவர்களுக்கு மதிய உணவு கொடுக்கப்படவில்லை. இதையெல்லாம் அங்குள்ள வட்ட அதிகாரிகள் சென்று மேற்பார்வையிட்டு நல்ல முறையில் நடக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் புறங்களில் உள்ள ஏழை ஹரிஜன விவசாயிகளுக்கு நிலத்தைச் செப்பனிடுவதற்கும் மற்றச் செலவுகளுக்கும் கடன் கொடுகப்பட்டு வருகிறது அவர்கள் கடனை நேரடியாகப் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்துக்கோ, தாலூகா அலுவலகத்துக்கோ சென்று பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இடைத்தரகர்கள் இருக்கிறார்கள். இந்த நிலையை உடனடியாகத் தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மத்திய சர்க்கார் ஹரிஜன முன்னேற்றத் திட்டத்தைப் பொறுத்தவரை $12\frac{1}{2}$ சதவிகிதம் மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்குப் பதவி உயர்வு கொடுக்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறார்கள். நமது மாகாண சர்க்காரில் இந்தத் திட்டம் இருக்கிறதா என்பதே சந்தேகமாக இருக்கிறது.

சென்னை நகரத்தில் சொசைடிகள் மூலம் வீடுகள் கட்டிக் கொடுப்பது போன்று கிராமப் புறங்களிலும் வாழும் ஹரிஜனங்களுக்கு ஹௌஸிங் சொசைடிகள் மூலமாகக் காலனிகள் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாகாணத்தின் தென்பகுதியிலுள்ள மக்களில் அதிகப்படியான தமிழர்கள் வெளிநாடுகளில் சென்று பிழைக்கிறார்கள். அப்படி அயல் நாடுகளாகிய சிங்கப்பூர், மலேயா, பர்மா, சிலோன் போன்ற நாடுகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் பெரிய அளவில் இருக்கிறார்கள். அவர்கள் வறுமையின் காரணமாக அந்நிய நாட்டுக்குப் பிழைக்கச் சென்றவர்கள். அவர்கள் அந்தப் பகுதிகளிலிருந்து இங்கே திரும்பி வரும்போது தாங்கள் சேகரித்து மீத்துவைத்த பொருள்களைக் கொண்டுவர முடிவதில்லை. நமது சர்க்கார் சுங்க இலாகாவினரின் கண்டிப்பினால் அவர்களுடைய சாமான்களைக்கூட கொண்டுவர முடியாத நிலைமை இருந்துவருகிறது. ஆகவே, ஓரளவுக்காவது அவர்களுடைய சாமான்களைக் கொண்டுவருவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அல்லது இவ்வளவு அளவு சாமான்கள்தான் கொண்டு செல்லலாம் என்று அறிவித்துவிட்டால் அப்படி அயல் நாட்டிலிருந்து வருபவர்கள் அந்தக் குறிப்பிட்ட அளவுக்குமேல் கொண்டுவரமாட்டார்கள் என்று கூற விரும்புகிறேன்.

தீண்டாமைச் சட்டம் என்பது ஏட்டளவில் இருக்கிறதே தவிர, அச்சட்டத்தை செயல்படுத்த முடியவில்லை. என் தொகுதியில் ஒரு ஊரில் ஒரு ஹரிஜன் ஒரு ஹோட்டலில் சென்று காப்பி அருந்துகிறபோது, அவரை அங்கிருந்து அடித்து விரட்டியதாக எனக்கு தகவல் கிடைத்து மாவட்ட நல அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்து அவர்கள் விசாரிக்கச் செல்கிற நேரத்தில் ஹரிஜன மக்களை அந்த ஊரைவிட்டு வெளியே விரட்டும் அளவிற்கு ஏற்பாடுகள் நடைபெற்றன. இதையும் அமைச்சர் அவர்கள் கவனித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் தலைவர் அவர்களே, ஹரிஜன இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மான்யக் கோரிக்கையை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். ஹரிஜன நல இலாகா என்ற ஒரு இலாகாவை உருவாக்கிய பிறகுதான் இந்த நாட்டிலுள்ள பின்தங்கிய

அவர்களுடைய நிலைமை உயரவேண்டும் என்பதற்காகத்தான் என்று நான் கருதுகிறேன். அன்னிய நாட்டினரின் கையில் நம்நாடு பிடிபட்டிருந்த நிலையில் நாம் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டோம். நாட்டை விடுதலை செய்யவேண்டுமென்று பாரதப் போரில் விஜய காண்டீபன் தொடுத்த அக்கினி பாணம் போல் பாடுபட்டோம். மக்கள் சுதந்திரமாகவாழ வேண்டும், ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு இல்லாமல், எல்லோருக்கும் சம உரிமை இருக்க வேண்டும், தீண்டப்படாதவர் என்ற நிலை இருக்கக்கூடாது, எல்லோரும் ஒரு தாய் மக்களாக வாழவேண்டும் என்ற நோக்கத்திற்காக, மஞ்சள் பெட்டியில் வோட்டுப் போட்ட அன்று கூட, நாங்கள் செவிபடக் கேட்டது என்னவென்றால், "தீண்டாமையை ஒழிப்போம், வறுமையைப் போக்குவோம், சுதந்திரமாக வாழ்வோம்" என்ற கோஷங்கள். தற்போது, "லஞ்சப் பேயை ஒழிப்போம்" என்று சொல்லப்படுவதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். 1952-ம் ஆண்டு நடந்த தேர்தலில், அதே கேள்வி வந்தது. 1957-ஆம் ஆண்டு முக்கால் பாகம் மாறிவிட்டது. 1962-ம் ஆண்டில், "அணை கட்டினோம், பாடசாலை அமைத்தோம், ரோடுகள் போட்டோம்" என்று சொல்லப்பட்டதைக் கேட்டு வந்தோம். கனம் அங்கத்தினர் திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள் பேசும் போது, "நாங்களெல்லாம் முன்னேறிவிட்டோம்" என்று சொன்னார்கள். ஆனால், குக்கிராமங்களில் ஏழை அரிசனங்கள் படும் கஷ்டத்தை அவர்கள் பார்த்தார்களோ இல்லையோ எனக்குத் தெரியவில்லை "மாடுகள் கொடுத்தார்கள்" என்று சொல்கிறார்கள். "அரிசன லீக்" என்று வைத்துக்கொண்டு, பிர்க்காத் தலைவர், ஜில்லாத் தலைவர் என்று சொல்லி, ஒரு அரிசனனாக இருக்கக்கூடியவர் இந்த உதவிகளைப் பெற்று வாழ்கிறார் என்பது எனக்குத் தெரியும், ஆனால், ஏழை அரிசனங்கள் இவர்கள் சொல்கிற முறையைக் கையாண்டு, "லீக் கமிட்டி" என்று ஒன்றை வைத்துக்கொண்டு நாங்கள் ஒன்றாகப் போய்விட்டோம் என்று அவர்களும் ஆரம்பிக்கிறார்கள்.

இந்துக்களை அண்டி வாழும் அரிசனங்கள் சில இடங்களில் பாதிக்க படுகிறார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆத்தூர் தொகுதியில் வரவூர் என்கிற ஊர் இருக்கிறது. அதையொட்டி இன்னொரு கிராமத்திலும் இடுப்பில் வேட்டி கட்டிக்கொண்டு அரிசனங்கள் போக முடியாமல் இருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சார்ந்த, அரிசன வகுப்பு அங்கத்தினர்கள் சிறுவாச்சூர், வரவூர் குக்கிராமங்களுக்கு வந்து, அங்கு ஆதித் திராவிட மக்களாக இருந்து அரிசனங்களாக மாறியுள்ளவர்களின் நிலைமையைப் பார்க்க வேண்டும். 100 ஆண்டுகளாக அரிசன மக்கள் ஏதோ முன்னேறித்தான் வருகிறார்கள், என்றாலும், அவர்களுக்கு எந்தத் தொழிலும் இதுவரைக்கும் செய்யப் படவில்லை. அந்தக் காலத்தில் முன்னேறி வந்ததைப் போலத்தான் இப்பொழுதும் முன்னேறுகிறோம். ஏழைகளாக இருந்தவர்கள் ஏழைகளாகத்தான் இருக்கிறார்கள். நம்முடைய தமிழக மாநிலத்தில் இந்தப் பொறுப்பை ஏற்று, சாதி முறையை கையாண்டுக்கொண்டிருக்கும் அமைச்சர்கள் காலத்திலேயே இப்பொழுது ஏழைகளை வாழ வைக்க வேண்டும் என்ற கருத்து இல்லையானால் எத்தனை தடவை பதவி ஏற்றுக்கொண்டாலும் என்ன பயன்? எங்கள் ஊரில் டவுன் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஒருவர் இருக்கிறார். அவர்கள் மகாத்மா காந்தியார் படத்தை அரிசன காலனியில் ஊர்வலம் விட வேண்டும் என்பதைத் தடை செய்துவிட்டார்கள். உள்ளம் வெளுத்தால் தான் மனிதன் ஞானி ஆகலாம். இந்தக் கேள்வியை அரிசன நல இலாகா அமைச்சரோ, முதல் அமைச்சரோ, நிதி அமைச்சரோ பேசியிருந்தால் என் மனம் திருப்தியாய் இருந்திருக்கும். ஆனால், இப்படிப் பட்டவர் சொல்வது சரியல்ல என்று எனக்குத் தோன்றுகிறது. அரிசன நல இலாகாவினர் "அரிசனங்கள் முன்னேறிவிட்டார்கள்" என்று சொல்வது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. "நாடு எங்கும் வாழ்ந்தால் கேடு ஒன்றும் இல்லை" என்ற கருத்தை எங்களுடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லுவார்கள் அதுபோல, ஏழை, எளியவர்கள் வாழவேண்டும் என்றுதான் நாங்கள் சொல்லுகிறோம். எங்கள் தொகுதி மக்கள் சார்பில் நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், அரிசன மக்களைக் கல்வியின் மூலமாகத்தான்



உயர்த்த வேண்டும். "100 ஏக்கர், 500 ஏக்கர் என்று சொல்வது கிடையாது" என்று முன்பு ஒரு தடவை குறிப்பிடப்பட்டது. ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், ஐந்து ஏக்கர்தான் எங்கள் பகுதியில் இருக்கிறது. ஏழை இந்துக்களும் வாழவேண்டும். ஏழை அரிசனங்களும் வாழவேண்டும். அரிசனங்கள் வாழ ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. கல்வியின் மூலமாகத்தான் அவர்கள் முன்னேறினார்கள். இந்தத் தமிழகத்தில் அவர்கள் கல்வியின் மூலமாகத் தான் முன்னேறலாம். கல்வி வசதியை அரிசனங்கள் எந்த எந்த வகையிலே பெறமுடியுமோ அந்த வழிவகை செய்யவேண்டும். கேணி வெட்டுவது, மாடு கொடுப்பது என்பதெல்லாம் தனித்தனி மனிதன் கொண்டு போகிறான். கல்வியின் மூலமாகத்தான் பல தீய செயல்கள் ஏற்படாமல் தடுக்கலாம், மக்கள் முன்னேறமுடியும் என்ற கருத்தைத் தெரிவித்து, மணி அடிப்பதற்கு முன்பாகவே என்னுடைய உரையை முடித்துக்கொள்ளலாம் என்று நினைத்து என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

* **திரு. எம். தண்டாயுதபாணி :** கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மானியக் கோரிக் 1
கையை ஆதரித்து நான் எனது இரண்டொரு கருத்துக்களைக் கூறிக் ப.ம.
கொள்ள ஆசைப்படுகிறேன். ஹரிஜனங்களுக்கு மனை வழங்குவதற்காக 23½ லட்சம் ரூபாய் இந்த மானியத்தில் ஒதுக்கப்பட்டிருகிறது. அப்படி ஒதுக்கப்பட்டும் இந்தத் தொகையோடு மட்டுமில்லாமல் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காகவும் ஒரு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையை நல்ல முறையில் மறு பரிசீலனை செய்து பார்த்தால் நன்றாக இருக்குமென்று நம்புகிறேன். ஹரிஜனங்களுக்கு நிச்சயமாக வீடுகள் கட்டிக் கொடுக்க இடவசதி இல்லாத இடங்களிலும், பிற இடங்களிலும் மனை ஆர்ஜிதம் செய்து கொடுப்பது நலம் என்று நினைக்கிறேன். அப்படி ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்பட்ட மனைகளில் ஆயிரம் ரூபாய் அளவில் வீடு கட்டிக்கொடுக்கப்படுகிறது. ஒரு சேரியில் நூறு ஹரிஜனங்கள் வாழ்ந்தால் பதினைந்து அல்லது இருபது வீடுகள்தாள் கட்டிக் கொடுக்கப்படுகிறது. இப்படி ஒரு இருபது வீட்டுக்காரர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படுவதால் மற்றவர்கள் அதிருப்தி அடைகின்றனர். இந்த நிலையை மாற்றி நிலத்தை ஆர்ஜிதம் செய்தவுடன் கீழ்மட்டம் வரையிலாவது எல்லா வீடுகளுக்கும் அடிமனை போட்டுக்கொடுத்து விட்டால் அவரவர்கள் தங்கள் இஷ்டப்படி மேல்மனை கட்டிக்கொள்ள வசதி ஏற்படும். இதனால் பலர் அதிருப்தி அடைகின்ற நிலை மாறும். இப்படி மனை வாங்கி அளிக்கும்போது மிக தூரமான இடங்களில் மனை வழங்கக் கூடாது.

நில ஆர்ஜிதம் செய்யப்படும் முறையில் இப்போது இருக்கிற இடத்தை ஆர்ஜிதம் செய்வதிலேயே முதலிடம் கொடுக்கப்படுகிறது. இது ஊரில் இருந்து வெகு தூரத்தில் இருக்குமானால் ஊருக்கு அருகில் கிராமத்தில் உள்ள புறம்போக்கு நிலங்கள் இருக்குமானால் அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்து இவர்களுக்குக் கொடுக்க வழிவகுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஹரிஜன நல இலாகாவின் கீழ் இப்போது பல ஆரம்பப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவர்களது பொறுப்பில் உள்ள இந்தப் பள்ளிகளையும் கூட பஞ்சாயத்துகளிடமே கொடுத்தால் மிகவும் கண்காணிப்பாக, நல்லமுறையில் நடத்துவதற்கு வழியேற்படும். இப்போது நன்றாக நடக்கவில்லையென்பதற்காகச் சொல்லவில்லை. இன்னும் அதிக கண்காணிப்பும் ஒழுங்கும் ஏற்படும் என்பதற்காக இந்த யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக இப்போது மாடு வாங்கவும், உழவுக் கருவிகள் வாங்கவும் உதவி அளிப்பது பற்றி எனக்கு முன்பாகப் பேசிய பல அங்கத்தினர்கள் கூறினார்கள். இப்போது மாடு வாங்கிக் கொடுக்கப்படுகிறத் தொகை அதிகமாக இருக்கிறது. அதுவும் சீட்டு விழக்கூடிய ஒருவர் இருவருக்குத்தான் அத்தொகை கிடைக்கிறது. இந்தத் தொகையைச் [illegible]

மக்களை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லக்கூடிய வழிவகைகளை காண முடிந்தது. எந்த வகையில் நாம் முன்னேறுவது, எப்படி நாம் முன்னேறியிருக்கும் சமுதாயத்தினரோடு சரி சமமாக வரமுடியும் என்று அவர்களுக்கு தெரியாமல் இருந்த காலத்தில் இந்த இலாகா உருவாகிய பிறகு கிராம சேவக்குகள், டெப்டி சேவக்கள் இவர்கள் ஒவ்வொரு குக்கிராமத்திற்காகச் சென்று, இரண்டு மூன்று ஹரிஜன வீடுகள் உள்ள கிராமங்களுக்குக்கூடச் சென்று சர்க்காரால் உள்ள முன்னேற்றத்திற்காக இன்னின்ன உதவிகள் அளிக்கப்படுகின்றன, அதை அடைந்து பயன்படுங்கள், நீங்களும் ஒத்துழைத்து உங்களுக்கு என்ன வேண்டுமென்று கேளுங்கள் என்று சொல்லக்கூடிய அளவில் இன்று கிராமப் புறங்களில் நடப்பதை ஹரிஜனங்கள் என்றும் மறக்கமாட்டார்கள். உங்களுக்கு வீடு கட்டித் தருகிறோம், மாடு வாங்கித் தருகிறோம், ஆகவே காங்கிரஸுக்கு ஓட்டுப்போடுங்கள் என்று வோட்டு கேட்க சர்க்கார் இதை எல்லாம் செய்கிறது என்று பொதுப்படையான குற்றம் சுமத்தப்பட்டோம். எதிர்க் கட்சியினர் என்ன வோட்டு வேண்டாமென்று சொல்கிறார்கள். நிற்பவர்களுக்கு வோட்டு கேட்க உரிமையிருக்கிறது. எங்களுக்கு வோட்டு போட்டால், காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் உங்களுக்கு இன்னின்ன நன்மைகள் ஏற்படும், ஆகவே எங்களுக்கு வோட்டு போடுங்கள், மாறாக எதிர்க் கட்சியினருக்கு வோட்டு போட்டால் உங்கள் சமுதாயத்தை அவர்கள் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லமாட்டார்கள் என்று எதிர்க்கட்சியினை குறை சொல்வது அரசியல் கட்சிகளின் இயல்பு ஆகவே அதைக் குறையாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. ஹரிஜன இலாகாவையே இல்லாமல் செய்துவிட்டு, பஞ்சாயத்து யூனியன்களிடம் இதை ஒப்படைத்துவிட்டால் அவர்கள் செய்யமாட்டார்களா என்ற கருத்து சர்க்காருக்கோ அல்லது வேறு யாருக்காவது இருந்தால் அது மிக மிகத் தவறு. பஞ்சாயத்து யூனியன்களுக்கு பல பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கிராமங்களில் ஜாதி இந்துக்களுக்குச் செய்யவேண்டிய வேலைகளைக்கூட அவர்கள் செய்யவேண்டியிருப்பதால், இன்று ஆரம்ப காலத்தில் இருப்பதால், இந்த இலாகாவையும் அவர்களிடம் ஒப்படைத்தால் நன்றாக நடக்குமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஹரிஜனங்கள் ஒன்றிரண்டு இடங்களில் பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கமுடியுமே தவிர, அவர்கள் மெஜாரிடியாக இருக்கமுடியாது. சாதாரணமாக கிராமங்களில் மெஜாரிடியாக இருப்பவர்களுக்குத்தான் வசதி செய்யப்படுமே தவிர, மைனாரிடியாக இருப்பவர்களுக்கு போதிய வசதிகள், நன்மைகள் செய்து கொடுக்கப்படும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது, அப்படி எதிர்பார்ப்பது தவறு. ஆகவே அப்படி அரசாங்கம் ஏதாவது நினைத்திருந்தால், அதை கைவிட்டு விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜாதி இந்துக்களோடு ஹரிஜனங்கள் சரிசமமாக எல்லாத் துறைகளிலும் வரும் வரை இந்த இலாகாவை நாம் வைத்துக்கொண்டுதான் இருக்கவேண்டும். கூடியசீக்கிரம் அந்நிலை வந்துவிடும் என்று சொல்லமுடியாது. ஆகவே எந்தக் காலத்திலும் இந்த இலாகா இருந்தால்தான் இந்த ஹரிஜன மக்கள் முன்னேற்றம் அடையமுடியும். ஆகவே அவசரமாக சர்க்கார் ஒரு முடிவை எடுத்துவிட்டால் இந்த ஹரிஜன மக்களுக்கும், பின்தங்கிய வகுப்பு மக்களுக்கும் பெரும் பாதகம் செய்துவிட்டவர்களாகி விடுவார்கள். எங்கள் ஜில்லாவில் இருளர்கள், குறும்பர்கள் போன்றவர்கள் வீடுகளில் வசித்துக்கொண்டிருக்கவில்லை, குடிசைகளில் வசித்துக்கொண்டிருக்கவில்லை, அவர்கள் குகைக்குள் இருந்து வந்தார்கள். அவர்களை பிடித்து வெளியே கொண்டுவந்து வீட்டைக் கட்டித் தருகிறோம், வீடுகளில் இருங்கள் என்று சொல்லி வீட்டிற்கு கொண்டு வந்தது இந்த ஹரிஜன இலாகாதான். இவர்களின் குறைபாடுகளைப்பற்றி விசாரிக்க வைத்தியநாதன் ஐ. சி. எஸ்., அவர்களை நியமித்திருக்கிறோம். ஹரிஜன மக்கள், ஆதிவாசிகள் இவர்கள் இருக்கும் இடங்களுக்குச் சென்று அவர்களின் குறைகளைக் கேட்டு அறிந்து, தாமதமாகும் காரணங்களை அறிந்து, வைத்திநாதன் அவர்களின் ரிபோர்ட் வந்தவுடன் அதன்பேரில் நடவடிக்கை எடுத்து இந்த மக்களின் குறைகள் தீர்க்கப்பட்டுவிட்டால், இனி அத்தகைய குறைபாடுகள் நம் அரசாங்கத்திடம் வராது. அந்த ரிப்போர்ட்டை அமுல் செய்யாமல் இருந்



தால் அது பிரயோஜனம் இல்லாது போய்விடும். இந்த நெருக்கடி நேரத்தில்கூட ஹரிஜன இலாகாவிற்கு மட்டும் தொகையைக் குறைக்காமல் போட்டிருப்பது நம் அரசாங்கத்திற்கு பெருமை அளிக்கும் ஒன்று என்று சொல்லிக்கொண்டு, மேலும் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் இந்த ஹரிஜன இலாகாவிற்கு ஒதுக்குவதில் எந்தவிதமான தயக்கமும் காட்டாமல் நாம் தொகை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. சி. பொன்னுசாமி** : கனம் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மான்யத்தை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அரசாங்கம் போட்டிருக்கும் பல திட்டங்களில் இது மிக மிக முக்கியமான திட்டம் என்பதை உலகம் போற்றும் உத்தமர் காந்தி அடிகள் தம் ஹரிஜன் பத்திரிகையில் எடுத்துச் சொல்லி, அவர்கள் வாழ்க்கையில் கண்ட உண்மைகளை எடுத்துச்சொல்லி மக்கள் மனதை மாற்றினார்கள் என்பதை யாராலும் மறுக்கமுடியாது. உத்தமர் காந்தியடிகள் ஆப்பிரிக்காவில் இருந்தபோது அங்கு நிறத் துவேஷத்தால் ஏற்பட்ட கொடுமைகளை சகிக்கமுடியாமல் பல இயக்கங்களை நடத்தி பல் உடைய வேண்டிய நிலையிலும் பல இயக்கங்கள் நடத்தினார்கள். அதேபோல் நம் நாட்டிலும் ஒதுக்கப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்டவர்கள் என்று மக்கள் இருப்பதை பார்த்து மனவருத்தம்கொண்டு ஹரிஜன இயக்கத்தை ஆரம்பித்தார்கள். அந்த இயக்கத்திற்கு ஏன் ஹரிஜன இயக்கம் என்று வந்தது என்று கேட்கலாம். ஆண்டவனால் படைக்கப்பட்ட எல்லோருமே ஹரிஜனங்கள்தான், ஆனால் குறிப்பிட்ட ஒரு வகுப்பினர் மிகவும் பிறபட்ட நிலையில் இருக்கிறார்கள் என்பதுதான் காரணம். ஆங்கில சர்க்கார் காலத்தில் அவர்களைப் பார்ப்பார் இடையாது, கேட்பார் கிடையாது, ஆகவே அவர்கள் நிலையை உயர்த்த வேண்டுமென்று கருதி சுதந்திரம் வந்த பின்னர் அவர்கள் வாழ்க்கைநிலை உயரவேண்டும் என்று நம் காருண்ய சர்க்கார் எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். சுதந்திரம் பெற்ற பிறகு ஹரிஜனங்கள் கல்வித் துறையில், விவசாயத் துறையில், உத்தியோகத் துறையில், இன்னும் பல துறைகளிலும் கணிசமான அளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பது உண்மையே. எனக்கு முன்னர் பேசிய ஒரு எதிர்கட்சி அங்கத்தினர் கேட்டார், ஹரிஜனங்கள் என்று ஏன் தனியாக வைத்திருக்கிறீர்கள் என்று. அப்படி தனியாக ஒரு கூட்டமாக வைத்தால்தான் அவர்களுக்கு சலுகைகள் கொடுக்கமுடியும், அவர்கள் வாழ்க்கை நிலையையும் உயர்த்த முடியும். காலம் செல்லச் செல்ல அது எடுபடவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். 1960–ல் இவர்களுக்கு கொடுக்கப்படும் சலுகைகளை எடுத்துவிட வேண்டுமென்று மத்திய சர்க்கார் நினைத்தார்கள். இப்போதிருக்கிற நிலையில் இன்னும் பின்தங்கியவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்று கண்டு மேலும் பத்து ஆண்டுகள் வரை, 1970–ம் ஆண்டுவரை சலுகைகள் நீடிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் ஏழு ஆண்டுகள்தான் இருக்கின்றன. அதற்குள் தனி கண்காணிப்பு வைத்து அவர்கள் நிலையை உயர்த்த வேண்டும். பஞ்சாயத்து யூனியனில் சேர்க்கவேண்டும் என்றெல்லாம் சொல்கிறார்கள், அதெல்லாம் தப்பு. ஜில்லா அதிகாரிகள் கூட போதாது. இந்த ஏழு ஆண்டுகளில் அவர்களின் நிலை உயர்வதற்கு ஒரு தனி கமிஷன் போடவேண்டும். அப்படி தனியாக ஒரு திட்டக் கமிஷன்போட்டு இந்த ஏழு ஆண்டுக்குள்ளாக கோடிக்கணக்கான பணம் செலவுசெய்தாவது இந்த ஏற்பாடுகளைச் செய்தால் அவர்கள் மற்ற வகுப்பினர்களுக்கு சரிசமமாக வருவார்கள், பொருளாதாரத் துறையிலும், மற்ற துறைகளிலும் என்று பார்த்து ஒரு தனித் திட்டம் அமைத்துக் கொடுக்குமாறு நான் அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே சமயத்தில் நம்முடைய சர்க்காருடைய ரிப்போர்ட்டில் பார்க்கும் போது, தீண்டாமை எவ்வளவு தூரம் குறைக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது. 1957–58-ம் ஆண்டில் 106 வழக்குகள் இருந்தது. 1961–62-ம் 11-30
ஆண்டில் 47 வழக்குகளாகக் குறைந்திருக்கின்றன. இருந்தாலும் இந்த a.m.
வேகம் போதாது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அது மட்டுமல்லாமல், குறிப்பாக, 3 கோடியே 90 லட்சம் ரூபாய் 1963–64-ம்

ஆண்டுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். 1960–61-ம் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகைக்கும், இதற்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்த்தால் ஏறக்குறைய 25 லட்சம் ரூபாய் தான் இப்போது அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது போதாது என்று மறுபடியும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். செலவினங்களைப் பார்க்கும்போது, எஸ்ட்டாப்ளிஷ்மெண்ட் அண்ட் ஸ்டோர்ஸ் என்பதிலே 75 லட்சம் ரூபாய்க்கு அதிகமாக இருப்பதாகத் தெரிகிறது. நான் அதைக் கண்டு கொஞ்சம் அஞ்சுகிறேன். அதை மறுபடியும் சரி பார்த்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு கூட நான் முதலில் சொல்லியபடி கண்டிப்பாக ஒரு கமிஷன் ஏற்படுத்தவேண்டும். ஹரிஜனங்கள் ஏறக்குறைய 4-ல் ஒரு பங்கு இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்து விட்டால், பொருளாதார ரீதியில் எக்கனுமிக் கண்டிஷன் நல்ல ரீதியில் வந்துவிடும். இதை ஸ்பெஷலாக எடுத்து கவனிக்க வேண்டும். அகில இந்திய ரீதியில் எடுத்துக்கொண்டால், அகில உலக ரீதியில் எடுத்துக் கொண்டாலும், பல நாடுகளில் இது போன்று கஷ்டப்படுகிறவர்களுக்கு மான்யத் தொகைகள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். அந்த முறையில் கிடைக்கக் கூடிய கோடிக் கணக்கான ரூபாய் பணத்தை வாங்கி அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்த இலாகாவைத் துரிதப்படுத்தவேண்டும். தனியாக ஒரு திட்டக் கமிஷன் போட்டால் கூட நல்லது என்று மறுபடியும் சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. அ. துரைசாமி :** கனம் தலைவர் அவர்களே, 1963–64-ம் ஆண்டு ஹரிஜன நலத் துறை மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். ஹரிஜன சமுதாயம் இன்று ஒரு மறுமலர்ச்சியை அடைந்து வருகிறது என்று சொன்னால் அதை யாரும் ஒப்புக் கொள்ளத் தான் செய்வார்கள். நமது லட்சியமே சோஷலிஸம் காண வேண்டுமென்பதுதான். நமது முதல் அமைச்சர் கனம் காமராஜ் அவர்கள் நினைவெல்லாம் இந்த நாட்டிலே ஒரு மனிதன் உண்ண உணவில்லாமல், உடுக்க உடை இல்லாமல், இருக்க இடமில்லாமல், படிக்கப் பள்ளி இல்லாமல் இருக்கக் கூடாது, அதை எப்படியும் நிறைவேற்றித்தான் தீர வேண்டும் என்ற சதா அந்த நினைவோடு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட இந்த சந்தர்ப்பத்திலேதான் நமது ஹரிஜன சமுதாயம் நல்ல முறையிலே படிப்படியாக, பல திட்டங்களைப் போடுவதன் காரணமாக முன்னேறிக் கொண்டு வருகிறது. அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை, நாம் அடைகிற லட்சியத்தைப் பார்க்கும்போது மிக மிகக் குறைவாகவே இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். கனம் அங்கத்தினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்ன மாதிரி இந்தத் தொகை இரட்டிப்பாக மாறவேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம்.

மகாத்மா காந்தியடிகள் இந்த ஏழை ஹரிஜனங்களின் வீடுகளுக்கெல்லாம் விளக்கு ஏற்றி வைத்தார்கள். நமது சர்க்கார் அந்தத் தெருக்களுக்கெல்லாம் தெரு விளக்கு போட்டது. ஆனால் தெருக்களில் போட்டு இருக்கக்கூடிய விளக்குகள் எண்ணெய் விளக்குகள். அவை மின் விளக்குகளாக மாற வேண்டுமென்பதுதான் எனது கோரிக்கை. ஹரிஜன சமுதாயம் முன்னேற பாதைகள் அமைக்கப்பட்டு விட்டன. ஆனால் அவை மண் பாதைகளாக இருக்கின்றன, அவை ஜல்லிப் பாதைகளாக மாற்றப்படவேண்டும். ஏனென்றால், நடந்து சென்ற ஹரிஜன மக்கள் இன்று வண்டியில் செல்லுகிறார்கள். அவர்கள் பஸ்ஸில் போக வேண்டும். அப்படிப் போனால் தான் சோஷலிஸ அடிப்படையைச் சீக்கிரமாக அடைய முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். காட்டுமிராண்டியாக இருந்த ஹரிஜன மக்களை மனிதர்களாக மாற்றினார் காந்தியடிகள். சர்க்கார் ஹரிஜனங்கள் இடுப்பிலே கட்டிக் கொள்ள துண்டு கொடுத்திருக்கிறது. நான் வேஷ்டியைக் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறேன். இதையெல்லாம் பார்க்கும் நேரத்தில் ஹரிஜன மக்களுக்கு ஒதுக்கியிருக்கிற தொகைப் போதாது, அதிகப்படியாக ஒதுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.



சேலம் ஜில்லாவை எடுத்துக்கொண்டால் ஹரிஜனங்களுக்கு மனை வாங்கிக் கொடுக்கிற பிரச்னை இருக்கிறது. ஏழு எட்டு ஆண்டுகள் ஆகியும் அந்த ஜில்லாவிலே ஹரிஜன மக்கள் குடியிருக்க மனைக்கட்டுகள் கிடைக்க வகையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஜில்லா கவுன்ஸில் மீட்டிங்கிலே ஜில்லா கலெக்டரைக் கேட்டபோது, என்னிடத்தில் இருக்கிற கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் குறைந்தது ஏழு அல்லது எட்டு ஆண்டுகளாவது ஆகும் என்றும் சொன்னார். நானூறு, ஐந்நூறு கிராமங்களில் மனைக்கட்டு வாங்கும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். புதிதாக மனைக்கட்டு வேண்டுமென்று சொல்லுகிற ஏழை ஹரிஜனங்கள் எப்படி நிலம் பெற்று குடியிருக்க முடியும் என்று யோசிக்கும் போது எத்தனை ஆண்டுகள் ஆகுமோ என்று தெரியவில்லை. மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுப்பதில் சர்க்கார் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மலைவாசிகளுக்கு சேலம் ஜில்லாவிலே, அதிலும் குறிப்பாக, கொல்லி மலை, கல்லராயன் மலை, பச்சை மலை போன்ற மலைகளில் வசிக்கக்கூடிய மக்களுக்குப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். கொல்லிமலையிலும், கல்லராயன் மலையிலும் விவசாயத் துறையில் என்ன செய்யலாம் என யோசித்து இப்போது அங்கே உருளைக் கிழங்கு, வாசனைத் திரவியங்கள் தயாரிக்கும் செடிகள் ஆகியவைகளை யெல்லாம் மாதிரிப் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். நீலகிரியில் இருக்கிற உருளைக் கிழங்கை விட நல்ல முறையில் இங்கே விளைவதாக நான் கேள்விப்படுகிறேன். மலை மக்கள் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவதற்கு இது நல்ல வழியாக இருக்கும். கல்லராயன் மலை வாசிகளுக்கும், பச்சைமலை வாசிகளுக்கும் அந்தத் திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று இங்கே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நிலக் குடியேற்ற கூட்டுறவு சங்கங்கள் எங்கள் ஆத்தூர் தாலூகாவில் சுமார் 22 சங்கங்கள் ஆரம்பிக்கத் திட்டம் இருந்தது. ஏழு சங்கங்கள் ஆரம்பித்து நடைமுறையில் நடந்துகொண்டு வந்திருக்கிறது. இவற்றினால் நல்ல முறையில் ஹரிஜன மக்கள் முன்னேற வழி இருக்கிறது. மீதி இருக்கிற குடியேற்றத் திட்டங்களை உடனடியாக ஆரம்பிக்கவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜன மக்களுக்குத் தொழில் பயிற்சிப் பள்ளிகளை ஜில்லா தலைநகரங்களில் ஏற்பாடு செய்து ஜில்லாவில் இருக்கிற ஹரிஜன மக்கள், படித்த வாலிபர்கள் வேலை தேடி அலைகிறவர்கள் எல்லோருக்கும் பயிற்சிப் பள்ளியைத் தனியாக நடத்தி வேலை வாய்ப்பைத் தேடித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இதிலே பேசுவதற்கு வாய்ப்பைக் கொடுத்தற்தகாக வணக்கத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. சா. ராமசாமி :** கனம் தலைவர் அவர்களே, இன்று இந்த ஹரிஜன நல இலாகாவின் மீது நடைபெறுகிற இந்த மான்யக் கோரிக்கையிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஹரிஜனங்கள் பல வகைகளிலே முன்னேறுவதற்கான அடிப்படைத் திட்டங்களை வகுத்து அதற்காக பலகோடி ரூபாய்களைச் செலவழிக்கும் நேரத்தில், உண்மையாக அது ஹரிஜனங்களுக்குப் போய்ச்சேருகிறதா, அவர்களுக்காகச் செலவழிக்கப்படுகிறதா என்ற நிலைமையை நாம் ஆராய வேண்டும். இந்த நேரத்திலே என்னுடைய தொகுதியைப் பொருத்த வரையில் இரண்டொரு குறைபாடுகளைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த காலனி கட்டிக் கொடுக்கிற நடவடிக்கையைப் பொருத்த வரையில் என்னுடைய தொகுதியிலே, குருவாடி கிராமத்தில் ஆறு வீடுகள் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆறு பேர்களிடமிருந்து மனுக்களை வாங்கிக்கொண்டு, பஞ்சாயத்து போர்டிலே தலைவாராக இருக்கக்கூடிய அவரே காண்ட்ராக்ட் எடுத்து நடத்தினார். செங்கல் சப்ளைக்கு ஒருவரிடம் பேசி ஏற்பாடு செய்து, இந்த ஆறு பேர்களிடமிருந்து, ஒவ்வொருவரிட

என்று ஒரு இடத்தை ஒதுக்கி வைக்கக்கூடாது. ஜாதி இந்துக்கள் இருக்கும் இடத்திற்கு நடுவிலேயே ஹரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் நிலைமையை உண்டாக்கினால் ஒழிய, நிச்சயம் அந்த ஜாதி வித்தியாசம் ஒழிக்கப்பட முடியாது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். நமது மந்திரி அவர்கள் ஒருவர் பேசியதற்கு பதில் சொன்னார். "பணம் உள்ள கோவில்களில் நான் நாங்கள் டிரஸ்டிகளைப் போடுகிறோம், பணம் இல்லாத கோவில்களில் ஏழைகளைப் போட்டு பிரயோசனம் இல்லை" என்று தெரிவித்தார்கள். நான் சொல்லுகிறேன், பணம் இல்லாத கோவில்களுக்குப் பணக்காரர்களைப் பார்த்துப் போடுங்கள். பண முள்ள கோவில்களுக்கு ஏழைகளைப் போடுங்கள். இவர்களும் ஓரளவுக்குக் கொஞ்சம் சௌகரியமாக இருப்பதற்கு நன்றாக இருக்கும் என்று அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வதோடு கூட, யார் வேண்டுமானாலும் பக்தர்களாக இருக்கலாம். நெற்றியில் இடும் வர்ணத்தின் பாதுகாப்பை வைத்துக் கொண்டு இருப்பவர்கள்தான் பக்தர்கள் என்ற எண்ணம் இருக்கிறதே, அதுதான் பிசகு அந்த பக்தர்களுக்கு நாலாயிரப் பிரபந்தம் தெரியுமா? தேவாரம், திருவாசகம் புரியுமா? அந்த டிரஸ்டிகளை வரிசையாக உட்காரவைத்து மதத்தைப்பற்றி அவர்களுக்கு என்ன தெரியும் என்று பரீட்சை செய்து பார்த்தால், நெற்றியில் வர்ணம் இடாத பக்தர்களுக்குத் தெரிந்ததில் 50 சதவிகிதம் கூட அவர்களுக்குத் தெரிந்திருக்காது.

**கனம் திரு. பூ. கக்கன்:** கனம் தலைவர் அவர்களே, எந்த நிமிஷம் விபூதியை பூசிக்கொள்கிறார்களோ நிச்சயம் அப்பொழுதே அவர்கள் பக்தர்கள் ஆகிவிடுகிறார்கள், பக்தி இருக்கிறது, இல்லை என்று நான் சொல்லவில்லை. பக்தி இருக்கிறதா, இல்லையா என்பதை அந்த மதத்து அன்பர்கள் உணர்வார்கள். சாதாரணமாகத்தான் அந்த வார்த்தைகளையே நான் சொன்னேன். வீபூதி பூசாமல் ஆண்டவன் தூணிலும் இருக்கிறார், துரும்பிலும் இருக்கிறார் என்று நினைக்கும் பக்தர்களும் இருக்கிறார்கள். இருந்தாலும், விபூதி பூசின அந்த நிமிஷம் அந்த எண்ணம் வருகிறது, ஆண்டவனை நினைத்து தொண்டாற்றுவார் என்றும் நினைக்கலாம்.

**திரு. கோ. நாராயணசாமி நாயுடு:** கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுகிற மாதிரி, விபூதி பூசுகிறவர்களுக்கு அந்த சமயத்தில் அந்த சித்தம் வருகிறது, பாக்கி பேர்களுக்கு சதா சர்வதா அந்த சித்தம் இருக்கிறது என்ற வாதத்தை ஏற்றுக்கொள்கிறேன்.

**திரு டி. எல். சசிவர்ணத் தேவர்:** இந்த சர்ச்சையிலே சம்பந்தப்பட வேண்டாம் என்றுதான் நினைத்தேன். இருந்தாலும், திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள், நெற்றியில் வீபூதி பூசும்போதுதான் கடவுள் ஞாபகம் வருகிறது, அவரைப்போல் நெற்றியில் ஒன்றும் பூசாதவர்களுக்கு சதா அந்த ஞாபகம் இருக்கிறது என்று மற்றவர்களைக் குறைப்படுத்தி பேசும் முறையில் பேசுகிறார்களே! அந்த மாதிரிப் பேசலாமா!

**கனம் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்):** இதிலே ஒன்றும் மற்றவரைக் குறைப்படுத்தி பேசுகிறார் என்று நான் கருதவில்லை. அவருடைய மனதில் உள்ளதைச் சொல்லுகிறார்.

**திரு. கோ. நாராயணசாமி நாயுடு:** திரு. தேவர் அவர்களுக்கு சூடு எப்படி வந்தது என்று தெரியவில்லை. அவர் நல்லவர் என்ற எண்ணத்தில்தான் நான் இருக்கிறேன். அவரை நினைத்தும் நான் பேசவில்லை. அவர் சந்தேகப்படக்கூடிய நிலைமை ஏன் ஏற்பட்டது என்று தெரியவில்லை.

என்னுடைய பகுதியில் சமீபத்தில், வீடுகள் சம்பந்தப்பட்டவரை, விவகாரத்தில் இருக்கிற பொழுதே வீட்டைப் பிரித்துவிட்டார்கள். வீடுகட்டிக் கொடுக்கக்கூடிய பிரச்னை, வீடு கட்டுவதுபற்றி ஒரு கேள்வி என்ற நிலைமையே இல்லாமல், எந்த இடத்தில் எந்த வீடாக இருந்தாலும் அதைப் பிரிக்கக்கூடாது என்ற நிலைமையை உண்டாக்கி, பிறகு வேண்டுமானால் அற்காகப்பணம் கொடுக்கிறதோ, அல்லது சட்ட ரீதியாக இருக்கிற பிரச்னையையோ பிற்பாடு கவனிக்க வேண்டும்.



சேரியிலே இருக்கிறவர்கள், இதற்காகப் பணம் செலவு பண்ணி, கச்சேரிக்குப் போய், வக்கீலை வைத்து, அந்த வக்கீலும், எதிர்க் கட்சி வக்கீலும் ஒன்றாகப் போவதுதான் நமக்குத் தெரிகிறது.

**கனம் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்):** உங்களுக்கு அளித்த நேரம் முடிந்துவிட்டது.

**திரு வை. சங்கரன்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார். வக்கீலும் வக்கீலும் ஒன்றாகப் போகிறார்கள் என்று சொல்லுவது வக்கில் சமூகத்தை, மிஸ்கான்டெக்ட் என்ற முறையில் அவமதிப்பதாக ஆகும். ஆகவே, அதை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கோ. நாராயணசாமி நாயுடு:** வக்கீல் சமுதாயத்தைப்பற்றி நான் குறை சொல்லவில்லை. அப்படிச் சொன்னால் எனக்கே ஆபத்தாகப் போய்விடும் (சிரிப்பு.) வக்கீல்களில் நல்லவர்களும் இருக்கிறார்கள்.

இந்த வருஷத்திற்கு மேலே வீடு கட்டுகிற பிரச்னையையே வைத்துக் கொள்ளக்கூடாது. இப்பொழுதே ஒரு அவசரச் சட்டம் கொண்டுவந்து, அதன் மூலமாக ஒரு நல்ல ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னும் ஒரு விஷயத்தைமட்டும் சொல்லிவிட்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். இந்த ஹரிஜன லேபர் ஸ்கூல்களில் இருக்கிற உபாத்தியாயர்கள் எல்லாம் அய்யங்கார், ஐயர், முதலியார் போன்ற ஜாதி ஹிந்துக்களாக இருக்க வேண்டும். சேரியிலிருக்கும் ஆசிரியர்களைத் தூக்கி, ஜாதி ஹிந்துக்கள் எங்கே அதிகமாக இருக்கிறார்களோ, அங்கே போட்டால், ஓரளவுக்கு ஒருவரோடு ஒருவர் கலந்து, பழகிப் பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படும். வாத்தியாருக்குத் தனி மதிப்பு இருக்கிறது. அப்படிச் செய்தால், சேரியிலுள்ளவர்களின் பயம் போவதற்கு வாய்ப்பு ஏற்படும். இதை எல்லாம் செய்தால்தான் நல்ல ஒரு திட்டத்தை உருவாக்க முடியும் என்று தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு எஸ். சின்னய்யன்:** கனம் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் இந்த ஹரிஜன மானியக் கோரிக்கையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல நான் முற்படுகிறேன்.

நமது ஹரிஜன நலத்துறை, கல்வி, வீட்டு வசதி, பொது சுகாதாரம் விவசாயம், குடிசைத் தொழில், விளம்பரம் ஆகிய ஆறு பெரும் பொறுப்புக்களை ஏற்று, இந்தப் பொறுப்புக்கள் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டு வருகின்றன. நாளுக்கு நாள், நிமிடத்திற்கு நிமிடம், வருஷா வருஷம் நல்ல முறையிலே விரிவடைந்து மற்ற மாநிலங்கள் எல்லாம் பார்த்து பிரமிக்கக்கூடிய அளவிலே நமது ஹரிஜன இலாகா செயல்பட்டு வருவதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. கல்வியை பொறுத்தவரையில், ஒரு ராட்சஸ வேகத்துடன் செயல்படுகிறது என்று சொல்லத் தயாராய் இருக்கிறேன். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஹரிஜனங்கள் இருந்த நிலைமையையும், இன்றைக்கு அவர்கள் இருக்கிற நிலைமையையும் கூர்ந்து கவனித்தால், எத்தனை ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள், எத்தனை கெஸட்டட் ஆபீஸர்கள் இருக்கிறார்கள், இன்னும் எவ்வளவு உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்க முடியும். இதைத் தவிர, ஒவ்வொரு சேரியும் எந்த அளவிலே முன்னேற்றம் கண்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது, இதற்கு முக்கிய காரணம், கல்வித் துறையிலே நமது ஹரிஜன நல இலாகா நல்ல முறையில் பணியாற்றி வருகிறது என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது.

இப்படிப்பட்ட பணி ஆற்றிவருகிற இந்த ஹரிஜன நலத் துறை இலாகா, என்னமோ தெரியவில்லை, சேலம் ஜில்லாவிலே இருக்கிற ஹரிஜனங்களிலே ஒரு பகுதியினரான பறி தைக்கும் தொழிலாளர் விஷயத்தில் அக்கறை காட்டாமல் இருக்கிறது. சேலம் ஜில்லாவிலே நாமக்கல் தாலூக்காவில்

மிருந்தும் 150 ரூபாய்க்கு செங்கல் சப்ளை செய்யக் கூடியவருடைய பெயருக்கு பாண்ட் எழுதி வாங்கிக் கொண்டார். அவரே கூட்டுறவு சங்கத் தலைவர். அந்தச் சங்கத்தில் 200 ரூபாய்க்கு அக்ரிமெண்ட் செய்கிற நேரத்தில் தனியாக ஒவ்வொருவரிடமிருந்தும் 200 ரூபாய்க்கு பாண்ட் எழுதி வாங்கிக்கொண்டார். கட்டடம் கட்டுவதிலும் ஒவ்வொருவரிடமும் 75 நாள் வேலை வாங்கிக்கொண்டார். எங்கள் பகுதியில் நாள் ஒன்றுக்கு சாதாரணமாக கூலி ஒரு ரூபாய் எட்டு அணு ஆகும். இந்த அளவுக்கு வேலை வாங்கிக் கொண்டு இன்றுவரை வேலைக்கான கூலியைக் கொடுக்கவில்லை. 1961-ல் கட்டி முடிக்க வேண்டிய கட்டடத்தை இன்றைய வரையில் கட்டி முடிக்காமல் வைத்துக்கொண்டு இன்னும் ஹரிஜனங்கள் வீட்டுக்குக் குடி போகவில்லை. இந்த நிலையில் செங்கலுக்காக பாண்ட் எழுதிக்கொடுத்த பணத்தையும் அவர்களே கட்டிக்கொள்ளவேண்டும் என்று சொல்லி விட்டார். செங்கல்காரருக்கு இன்றுவரை பணம் கொடுக்கப்படவில்லை. இப்படி இருக்கும் நிலையில் கூட்டுறவு இலாகாவிலிருந்து 200 ரூபாய் வாங்கியதற்காக சென்ற மாதத்தில் ஜப்திக்கு கொண்டுவரப்பட்டு, ஹரிஜனங்கள் இப்போது இருக்கும் இடத்தில் ஜப்தி செய்யப் பார்க்கிறார்கள். இந்த நிலைமையை எடுத்து விளக்கி அமைச்சருக்குக் கூட தகவல் தெரிவித்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து சீராக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்று வரையில் வீடுகளின் ஜன்னல்களுக்குக் கதவுகள் போடப்படவில்லை. வீட்டிலே போடப்பட்ட தரைகள் பெயர்ந்துபோய் விட்டன. இன்னும் அந்த வீட்டுக்குக் குடிபோகவில்லை. இன்னும் முன்பு இருந்த இடத்திலேயே இருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, சென்ற தடவை கூட நான் கூறியிருக்கிறேன். இது பற்றி மாவட்ட மன்றத்திலும் கேள்வி போட்டிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் தகவல் தரப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பாஷா நகரில் குடியேற்றப்பட்ட மக்களுக்கு நபர் ஒன்றுக்கு வீடு கட்டிக்கொள்வதற்காக ரூ. 120 கடன் கொடுக்கப்பட்டதாகக் கூறினார்கள். அவர்களுக்கு அம்மாதிரி கடன் கொடுக்கப்பட வில்லை. ரூ. 120-க்கு மாறாக, அவர்களுக்கு 200 கீத்தும், அதற்குத் தேவையான மூங்கில்களும் கொடுத்து வீடு கட்டிக்கொள்ளச் செய்திருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த அளவில் இவைகளுடைய பெறுமானம் ரூ. 35. மீதித் தொகை என்ன ஆயிற்று என்று இன்று வரையிலே தெரியவில்லை.

1962-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9-ந் தேதியில் ஹரிஜனங்களுக்கு நில சீர்திருத்தம் செய்துகொள்ளுவதற்காக ரூ. 2,000 வழங்கப்பட்டதாக எடுத்துக் கூறப்படுகிறது. ஆனால், நில சீர்திருத்தம் செய்துகொள்வதற்கு இன்றைய வரையிலே அந்தத் தொகை கொடுக்கப்பட வில்லை யென்று கூறுகிறார்கள். இந்தப் பிரச்னையை சென்ற தடவையும் இந்த மாமன்றத்தில் கூறியிருக்கிறேன். அமைச்சர் அவர்களிடமும் எழுத்து மூலம் தெரிவித்திருக்கிறேன். மாவட்ட ஆட்சியாளரிடமும் தெரிவித்திருக்கிறேன். ஆனால், நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகையால், இந்தப் பிரச்னையை உடனடியாகக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சேரிகளிலே மனை வழங்கப்படுகிற பிரச்னையைப் பொறுத்த அளவிலே நாம் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தித் தர வேண்டும். குறிப்பாக, எனது தொகுதியைப் பொறுத்த வரையிலே 4, 5 ஆண்டுகள் சென்றும், மனைகள் கிடைப்பதே மிகவும் கஷ்டமாயிருக்கிறது. இது விஷயத்தில் நடவடிக்கையை மிகவும் துரிதப் படுத்த வேண்டும். குறைந்தது ஒரு ஆண்டு காலத்திற்குள் அவர்களுக்கு மனை கிடைக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தித் தரவேண்டும். இல்லாவிட்டால், இந்த ஆண்டில் ஒதுக்கிய தொகை இவ்வளவுதான் இருக்கிறது, அடுத்த ஆண்டில் மனை வழங்கப்படும் என்ற நிலைமையைத் தெரிவித்துவிட வேண்டும்.

அதோடுமட்டுமல்ல. கிராமப்புரங்களை எடுத்துக்கொண்டால், ஹரிஜன மக்கள் உழைப்பாளி மக்களாக இருக்கிற காரணத்தினால் அந்தப் பகுதியில் இருக்கிற எல்லா வேலைகளையும் அவர்கள் செய்கின்ற காரணத்தினாலே,



ஹரிஜனங்களுக்கென்று கூட்டுறவு சங்கங்கள் நிறுவி, அவர்களுக்குத் தேவையான பொருளுதவி செய்து, அந்தப் பகுதியில் நடைபெறும் நிவாரண வேலைகளையும், இதர எல்லா அரசாங்க வேலைகளையும் அவர்களுக்கே காண்டிராக்ட் கொடுத்து, அதன் மூலம் அவர்கள் உதவி பெறும் முறையை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும். அப்படி நிலைமை இல்லாத காரணத்தினாலே, பெரும்பாலும் அவர்கள் உழைப்பாளிகளாக இருந்தும், உழைப்பின் உண்மை ஊதியத்தை அவர்கள் அடையமுடியவில்லை.

அடுத்து, வட்டார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஹரிஜனங்களுக்கு சலுகைகள் கிடைக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஹரிஜனச் சேரிகளில் பாடசாலைகள் கட்டப்பட வேண்டுமென்றாலும், கிணறுகள் வெட்டப்படவேண்டுமென்றாலும், பஞ்சாயத்து போர்டு தலைவர் ஹரிஜன நல இலாகாவிலிருந்து அதற்காக பணத்தைப் பெற்றாலும், பணம் வரவில்லை என்று கூறி, மக்கள் பங்குக்காக, அவர்கள் வேலை செய்ய வேண்டுமென்று சொல்லி உழைப்பின் மூலம் வேலை வாங்கிக்கொள்கிறார்கள். ஹரிஜன நல இலாகா தொகையைப்பெற்றுவிட்ட பிறகும் அவர்களுக்கு உழைப்பின் கூலிப் பணத்தை திருப்பிக் கொடுக்க மறுக்கிறார்கள். ஹரிஜனச் சேரிகளில் கிணறுகள் வெட்டுவதாக இருந்தாலும் சரி, பாடசாலைகள் கட்டுவது, ரோடுகள் போடுவது போன்ற வசதிகள் செய்து கொடுப்பதாக இருந்தாலும் சரி, ஹரிஜன நல இலாகாவின் மூலம் வருகிற பணத்தை அவர்களுக்கு எடுத்துக் காட்டி, அவர்கள் உழைப்பின் மூலம் அந்தத் தொகையை ஈடுபடுத்த வேண்டியதில்லை என்ற நிலைமையைத் தெளிவாக எடுத்துச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. கோ. நாராயணசாமி நாயுடு :** அன்புமிக்க தலைவர் அவர்களே, இந்த மான்யத்தை முழு மனதுடன் ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் இங்கே கூறிக்கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஹரிஜன் என்கிற பெயரே கூடாது, ஆதிவாசி, ஆதி ஆந்திரர், ஆதி தமிழர் என்கிற முறையில் இருக்கிற பழமை தான் தங்களுக்கு உகந்த வார்த்தைகள் என்று எதிர் தரப்பிலிலே இருக்கிற ஒரு நண்பர் தெரிவித்தார். ஹரிஜன் என்ற வார்த்தை ஏதோ காந்தியடிகள் புதியதாகக் கண்டுபிடித்த ஒரு வார்த்தை என்றும் அவர் தெரிவித்தார். அதை நான் முற்றிலும் எதிர்க்கிறேன். காரணம், இந்த வார்த்தையே நம்முடைய அகராதியில் இல்லாமல், ஹரிஜன், ஆதிவாசி என்ற வார்த்தைகளையே அகராதியிலிருந்து ஒழித்தால் ஒழிய, இந்த ஜாதி வித்தியாசம் போகாது. சலுகை கொடுக்கிற வரையிலும் இந்த ஜாதி வளர்ந்துகொண்டு தான் போகும். சலுகை பெறாத சமுதாய அமைப்பு ஏற்பட வேண்டும். ஜனநாயக நாட்டில் தனிச் சலுகை பெறவேண்டிய சமுதாயம் இருக்கிறது என்ற நிலைமையையே எடுத்தெறிய வேண்டும். எனக்கு முன்னால் பேசிய சில நண்பர்கள் தெரிவித்தார்கள். சலுகைகளெல்லாம் 6 ஆண்டுகளுக்குள்ளே நிறுத்தப்படுகிற அளவுக்கு அமோகமாக நிறைய பணத்தை ஒதுக்கி வைக்க வேண்டும் என்று சொன்னார்கள். எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக பணத்தை ஒதுக்கி வைத்து சலுகைகளைக் கொடுக்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு இந்த நிலைமை நீடித்துக் கொண்டே போகும் என்பதை மறந்துவிடக் கூடாது. இப்பொழுது ஹரிஜனங்கள் மாத்திரம் அந்தச் சலுகைகளைப் பெறுகிறார்கள் என்று நினைத்துவிட வேண்டாம். வேண்டியவர்களெல்லாம் தங்களை ஹரிஜனங்களாக ஆக்கிக் கொண்டு பல சலுகைகளைப் பெற்றுவருகின்றனர். பணம் உள்ளவர்கள் கூட பணம் இல்லாதவர்கள் என்று சொல்லி, பிற்பட்ட வகுப்பினர் என்று சொல்லி சில பேர்கள், சலுகை பெற்று வருகிறார்கள். ஆகவே, நமக்குள்ளே இருக்கிற வித்தியாசங்களை ஒழிக்க வேண்டுமென்று சொன்னால், இந்தச் சலுகை முறையை ஒழிக்க வேண்டும்.

நான்கு வருஷங்களுக்கு முன்பாக சேரிக்காக ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அதை ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள், ஹெல்த் ஆபீஸர்கள் ஆசீர்வாதம் செய்து அந்த இடத்தில் சேரி அமையாமல் இருக்கக்கூடிய நிலைமையை உண்டாக்கியிருப்பதைப் பார்க்கிறோம். ஹரிஜன காலனி

மட்டும் கிட்டத்தட்ட 10,000–க்கு மேற்பட்டு அவர்கள் குடும்பங்கள் இருக்கின்றன. இது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், டைரக்டர் அவர்களுக்கும் நன்ருகத் தெரியும். அப்படியிருந்தும், இந்தத் தொழிலாளர்கள் முன்னேற்றத்திற்காக எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாமல் இருப்பதைக் குறித்து நான் வருந்துகிறேன். அதை இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அதோடு மட்டுமல்ல, இந்த மன்றத்திலே உள்ள அங்கத்தினர்கள் அனைவரும் பொற்கொல்லர்கள் விஷயமாக ஆவேசமாகவும், உணர்ச்சியோடும் பேசினார்கள். ஆயிரம் குடும்பங்கள் இருக்கின்ற ஒரு கிராமத்தை எடுத்துக்கொண்டால், அங்கே எத்தனை பொற்கொல்லர்கள் இருப்பார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஓரிரண்டு பேர்கள் (குடும்பங்கள்) தான் இருப்பார்கள். ஆனால் அதே ஆயிரம் பேரைக்கொண்ட ஒரு கிராமத்தில் பறி தைக்கும் தொழிலாளர்கள் எத்தனை பேர் இருப்பார்கள் என்று கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். பொற்கொல்லர்கள் விஷயத்தை மட்டும் இவ்வளவு ஆவேசமாகப் பேசிய அங்கத்தினர்கள், இந்த பறி தைக்கும் தொழிலாளர்களைப்பற்றி பேசாமல் இருப்பதைக் குறித்து நான் வருந்துகிறேன். இதற்குக் காரணம் என்னவென்றால், இந்த பறி தைக்கும் தொழிலாளர்கள் அறிவும் ஆற்றலும் இல்லாதவர்கள், தங்களது குறைகளை எடுத்துச் சொல்லுவதற்கு வசதியற்றவர்கள், மற்றவர்களோடு பேசிப் பழக்கம் இல்லாதவர்கள், யாரிடம் முறையிடலாம் என்று கூடத்தெரியாதவர்கள், இன்று இந்த மின்சார அபிவிருத்தியால் பாதிக்கப்பட்டிருக்கும் இவர்கள் இந்த காலத்திலேகூட "ஆண்டவனே ராமா, கிருஷ்ணு" என்று வீட்டிலே உட்கார்ந்து கொண்டு தவம் செய்து கொண்டிருக்கும் காரணத்தினால்தான் அவர்கள் அந்த நிலையில் இருக்கிருர்கள்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் பேசும்பொழுது சேலம் ஜில்லாவில் இருக்கிற தோல் தைக்கும் மக்கள் அறிவில்லாதவர்கள் என்று சொன்ஞர்கள். இதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. இந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அறிவுள்ளவர்கள், மதிப்புள்ளவர்கள், மரியாதையுள்ளவர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். சின்னய்யன் :** கனம் அமைச்சர் சொல்லியதை நான் வரவேற்கிறேன். ஹரிஜனங்கள் எந்த வகையிலும் தாழ்ந்தவர்கள் அல்ல. அவர்களிடம் அறிவு, ஆற்றல், திறமை எல்லாம் இருக்கிறது. ஆனால் இந்த பறி தைக்கும் தொழிலாளர்கள் மட்டும் அந்த வகையில் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள் என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். சென்ற ஆண்டிலேகூட இந்த மன்றத்திலே நான் இதைப்பற்றி பேசினேன். எந்த அளவுக்கு அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள் என்று சொன்னேன். ஒரு வருட காலம் ஆகியும் இவர்களுடைய பிரச்னை கவனிக்கப்படாமல் இருக்கிறது. பொற்கொல்லர்களைப்பற்றி ஏன் விஸ்தாரமாகப் பேசப்பட்டது ? அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் அரசியல் நுட்பம் தெரிந்தவர்கள். சபையிலுள்ள அத்தனை அங்கத்தினர்களுக்கும் மெமோராண்டம் எல்லாம் அனுப்பித்தார்கள். அதை வைத்துக்கொண்டு அங்கத்தினர்களும் பேசினுர்கள். ஆனுல் பறி தைக்கும் தொழிலாளர்கள் அவர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லாத காரணத்தினாலேதான், கனம் அங்கத்தினர்கள் அவர்களைப்பற்றி பேசமுடியவில்லை. கனம் அங்கத்தினர்களைப்பற்றி நான் குறை சொல்லுவதாக நினைத்துவிடக் கூடாது. இந்த மக்களின்மீது அங்கத்தினர்களுக்கு அக்கறை இல்லை என்று நான் சொல்லவில்லை. இந்த மக்களை முன்னேற்றத்திற்கு கொண்டுவரவேண்டும் என்ற ஆசை கனம் அங்கத்தினர்களுக்கும் கனம் காமராஜ் அவர்களின் மந்திரி சபைக்கும் உண்டு என்பதை நான் நன்கு அறிவேன். ஆகையால்தான் தைரியமாக இதை நான் எடுத்துச் சொல்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே நாமக்கல் தாலுக்காவில் 350 ரெவின்யூ கிராமங்கள் இருக்கின்றன. சில குக்கிராமங்களும் இருக்கின்றன. ஒரு கிராமத்திற்கு 30 குடும்பங்கள் என்று வைத்துக் கொண்டாலும், இந்த 350 கிராமங்களில் 10,000—க்கும்மேற்பட்ட பறி தைக்கும் தொழிலாளர்கள் இருக்கிருர்கள் என்பது தெரியவரும். இதைக் கண்கூடாகப் பார்க்கலாம். அந்த அளவுக்கு அதிகமான ஏழைத் தொழிலாளர்கள் மின்சார அபிவிருத்தியினுல் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள். அவர்களுக்கு தகுந்த வேலை வாய்ப்பு வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் அமைச்சரவையை மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.



அதோடு ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது நமது அரசாங்கம் விசேஷ அதிகாரி ஒருவரை நியமித்திருக்கிருர்கள். பொதுப் பணிகளிலும் அரசாங்கப் பதவிகளிலும் ஷெட்யூல் வகுப்பினர், ஆதிவாசி 12-00 noon
கள் ஆகியோர் போதிய எண்ணிக்கையில் இல்லாததின் காரணங்களை ஆராயவும் அவர்களது எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் அவைகளுக்கு தக்க பரிகாரம் எடுத்துச் சொல்லவும் ஒரு விசேஷ அதிகாரியை நியமிக்க ஏற்பாடு செய்திருக்கிருர்கள். அரிஜனங்களுக்கும் அரிஜன நலத் துறையிடமிருந்து உதவி பெறத் தகுதியுடைய வகுப்பினர்களுக்கும் வீட்டு மனைகள் வழங்குவதில் கால தாமதம் ஏற்படுவதன் காரணங்களை ஆராய்வதற்கும் அரிஜன நல இலாகா சம்பந்தமாக பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் ஒப்படைக்கப்படவேண்டிய அலுவல்கள் குறித்து ஆராய்வதற்கு ஐ.சி.எஸ். ஆபீசர் ஒருவரை நியமிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரி இவைகளைப் பற்றியெல்லாம் ஆராயும்போது சேலம் ஜில்லாவை முக்கியமாய் எடுத்துக்கொண்டு, சேலம் ஜில்லாவில் ஏற்பட்டுள்ள மின்சார விஸ்தரிப்பினுல் பறி தைக்கும் தொழிலாளர்கள் எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள், அப்படி பாதிக்கப்பட்டிருக்கக்கூடியவர்களுடைய எண்ணிக்கை என்ன என்பதையும் ஆராய வேண்டும் என்றும் அப்படி ஆராய்ந்து அரசாங்கத்திற்கு அறிவித்த பிறகு அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதைப் பற்றியும் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*__திரு. எஸ். மணி :__ கனம் தலைவர் அவர்களே, இன்றைய தினம் அரிஜன நல துறையின் மானிய கோரிக்கையைக் கொண்டு வந்து அதன்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கொடுத்ததற்கு கனம் சபாநாயகர் அவர்களுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ளும்போது இதிலுள்ள சில குறைபாடுகளையும் எடுத்துச்சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட நேரத்தில் ' இன்றைக்கு மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் அவர்களுடைய பொருளாதார அடிப்படையில் ஒரு சட்டம் அமைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிருர்கள். உண்மையிலேயே அப்படிப்பட்ட ஒரு சட்டம் அமைந்தால் இன்றைக்கு இருக்கக்கூடிய ஒரு சிறிய உதவிகூட கிடைக்காத நிலைமை ஏற்படும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு அரிஜன மக்கள் முன்னேற்றமடைந்திருக்கிருர்கள் என்று சொல்லுகிருர்கள். உண்மையிலேயே பார்த்தால் அவர்கள் அப்படிப்பட்ட முன்னேற்றம் இன்னமும் அடையவில்லை என்பதுதான் என்னுடைய வாதம். உண்மையிலேயே அவர்களுக்கு சில சலுகைகளைச் செய்திருக்கிரேம். அப்படிச் சலுகைகளைச் செய்யும் போது சில குறைபாடுகள் ஏற்படுகின்றன. அந்தக் குறைபாடுகளைப்பற்றி எதிர்க்கட்சிக்காரர்களும் ஆளும் கட்சிக்காரர்களும் எடுத்துச் சொல்லி இருக்கிருர்கள். உண்மையில் ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குக் கிணறுகளை வெட்டிக்கொள்வதற்கு கிணறு மான்யம் கொடுக்கிருர்கள். அப்படிக் கொடுக்கப்படுகிற பணம் அவர்களுக்குப் போய்ச் சேருவதாக இல்லை. அதை வாங்குவதற்குச் செலவு செய்யக்கூடிய பணம் கூட அவர்களுக்கு வருவதாக இல்லை. அந்தப் பணம் யாருக்குப் போய் சேருகிறது என்ருல் இடையில் இருக்கக்கூடியவர்களுக்குத்தான் போய்ச் சேருகிறது. இதைக் கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். அதற்காக இன்றைக்கு அதிகாரிகள் அரிஜனங்களுடன் ஒரு தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி ஒரு தொடர்பு வைத்துக்கொண்டால் பணம் பூருவும் அவர்களுக்குச் போய் சேர்ந்து விடும். இப்பொழுது வீடு கட்டும் திட்டம் வேறு இருக்கிறது. இதிலும் எவ்வளவோ கோளாறுகள் இருக்கின்றன. வீடு கட்டும் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் பூரு பணமும் அரிஜனங்களுக்குப் போய்ச் சேருவதாக இல்லை. இப்படிப்பட்ட நிலைமை

ஏராளமாக இருக்கிறது. இதற்கு முன்னதாகவே இந்த மன்றத்தில் சொல்லி இருக்கிறேன், நில ஆர்ஜிதம் செய்வதில் ஏராளமான ஊழல்கள் இருக்கின்றன என்று. என்னுடைய பகுதியில் குன்னம் என்ற கிராமத்தில் நிலத்தை அளந்து கொடுக்கும்போது யுத்த நிதிக்கு என்று ஏழு ரூபாய் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதைக் கொடுக்காவிட்டால் அவருடைய நிலைமை பாதிக்கும் என்று சொல்லி அப்படிப் பணம் வாங்கிக்கொண்டிருக்கிறார். இப்படி பல முறையில் லஞ்சமும் வாங்கி வருகிறார்கள். நாம் பல திட்டங்களைப் போடுகிறோம் அவைகளை நிறைவேற்ற பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்கிறோம். ஆனால் அவைகள் நல்ல முறையில் செலவு செய்யப்படுவதாகவே இல்லை. இங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் நல்ல முறையில் வேலை செய்தாலும் பல ஊழல்கள் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் அரசு நல்ல முறையில் இவைகளைக் கண்காணிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

(கனம் சபாநாயகர் தலைமை.)

அடுத்தபடியாக கிணறு வெட்டுவதற்கு என்று நாம் மானியம் கொடுக்கிறோம். கடன் கொடுக்கிறோம். அப்படி கடன் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. சாதாரணமாக கிணறு வெட்டுவதற்கு மானியம் கொடுக்கப்படுகிறது. பத்து அல்லது பதினைந்து பேர்கள் கேட்டால் நாலைந்து பேர்களுக்குத்தான் கிடைக்கிறது. அப்படிக் கிடைப்பதும் கால தாமதம் ஆகித்தான் கிடைக்கிறது. ஆகவே கிணறு வெட்டுவதற்குக் கொடுக்கக்கூடிய மானியத் தொகையை நல்ல முறையில் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அரிஜனங்களுக்கு பல சலுகைகள் காட்டப்படுகின்றன. அந்தச் சலுகைகள் பூராவும் அவர்களுக்குப் போய் சேருவதாக இல்லை. அவைகள் எல்லாம் அவர்களுக்குத் துரிதமாகப் போய் சேரும்படியாக இருக்க வேண்டும். அரிஜனங்களுக்கு இப்பொழுது மதிய உணவு கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கும்போது தப்புக் கணக்குக் காட்டப்படுகிறது. தப்புக் கணக்குக் காண்பித்து நமது பணம் அதிகப்படியாகச் செலவாகிறது. அப்படி இல்லாமல் நல்ல முறையில் செலவாகும்படியாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே நாம் செலவு செய்யக்கூடிய பணம் வீண் செலவு ஆகாமல் நல்ல முறையில் செலவு செய்யப்படவேண்டும். மதிய உணவு கொடுக்கிற இடங்களில் அரிசி, விறகு, இவைகளுக்கெல்லாம் தப்புக் கணக்கு காண்பித்து பணம் பெற்று வருகிறார்கள். அதைத் தடுக்கவேண்டும். இப்பொழுது பெண்களுக்கு உடைகளைக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். ஆண்களுக்குக் கொடுப்பதாக இல்லை. பெண்களுக்குக் கொடுப்பதுபோல் ஆண்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சமுதாய அபிவிருத்தி மன்றங்கள் நம்முடைய மாகாணத்தில் 25 இருக்கின்றன. அந்த சமுதாயத்தினுடைய பணி உண்மையிலேயே மோசமான நிலையில் இருக்கிறது. அதை நல்ல முறையில் மாற்றி அமைக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. வி. எஸ். அருணாசலம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைக்கு அரிஜன நல அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட மானியத்தை முழு மனதுடன் ஆதரித்து அதனுடைய முன்னேற்றத்தை எதிர்பார்த்து நடக்கவேண்டிய சில கருத்துக்களைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் இந்த மன்றத்தில் இதற்கு முன்னதாக பேசியவர்கள் நல்ல கருத்துக்களைச் சொன்னார்கள். இந்த நிர்வாகத்தில் அவர்களுக்கு நல்ல காரியங்களைச் செய்கிறார்கள் என்றால் அவர்கள் இருப்பதற்கு இடம், குடிக்க ஜலம், உடுக்க ஆடை கொடுப்பது தான். இந்தச் சலுகைகளைப் பல ஆண்டு காலமாகச் செய்து வருகிறார்கள். சுமார் முப்பது ஆண்டு காலமாக சொல்லக்கூடிய முறையில் குறிப்பாக சில இடங்களில் மக்களுக்கு நல்ல முறையில் பஞ்சாயத்து ராஜ்யம் என்று



ஒரு நிலையில் அவர்களுக்கு சேவை செய்யவேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் அரசாங்கமும் நாமும் அதில் ஈடுபட்டு பஞ்சாயத்து சட்டத்தைக் கொண்டு வந்து அதை நிறைவேற்றி அதை நடத்தி வருகிறோம். அதில் ஒரு சில இடங்களில் பஞ்சாயத்து தலைவர்களாலும் மற்றவர்களாலும் கிராமப்புறம் போக்கு நிலங்கள் என்று சொல்ல இருபது வருட காலமாக அரிஜனங்கள் அதில் இருந்தாலும் அவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இருபது வருட காலமாக இருந்தவர்களை சுலபமாக கலெக்டர், தாசில்தார் இவர்களை வைத்துக்கொண்டு இரண்டு மூன்று வாரங்களில் வெளியேற்றுகிறார்கள். அப்படி ஒன்றிரண்டு வாரத்திற்குள் அவர்களுடைய வீடுகளையும் பிரிக்க முன் வருகிறார்கள். இப்படிப்பட்ட ஊழல்கள் பல இடங்களில் நடைபெறுகின்றன. இதையெல்லாம் அரசாங்கம் கவனித்து இப்படி நடைபெறாமல் தக்க நடவடிக்கை எடுத்து அதற்கு ஒரு வழி வகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பஞ்சாயத்துக்களில் அரிஜனங்களுக்கு பல தொல்லைகள் ஏற்படுகின்றன. கிணறுகள் வெட்டுவதிலும் ரோடுகள் போடுவதிலும் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன. சில பகுதிகளில் ரோடு போடுதல் முதலிய வேலைகளைச் செய்தாலும் அதில் நாலில் ஒரு பங்கு அரிஜனங்கள் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அப்பொழுது அரிஜன இலாகா அதற்கு உதவிச் செய்து வந்தது. ஆனால் இப்பொழுது அந்த உதவி இல்லாத காரணத்தால் ஆங்காங்கே இப்படிப்பட்ட வேலைகள் நடைபெறாமல் தடைப்பட்டிருக்கின்றன. அதனால் அரிஜனங்களுக்கு எந்த விதமான நன்மையும் ஏற்படவில்லை. ஆகவே ரோடு வசதிகள் செய்வதற்கு முன் போலவே இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பழையபடியே பாதி பங்கு அரிஜன இலாகா கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். பின்தங்கிய வகுப்பினருக்கு இப்படிப்பட்ட வேலைகள் தயக்கம் இல்லாமல் நடைபெறுவதற்கு அரசாங்கம் முன் வரவேண்டும். இதுதான் என்னுடைய முழு எண்ணம். இதைக் கனம் அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து அதில் அக்கறை எடுத்துக்கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய செங்கற்பட்டு ஜில்லாவில் அரிஜன நலத் துறை நல்ல முறையில் இயங்கி வருவதை நான் வரவேற்கிறேன். அங்குள்ள அதிகாரிகளும் கலெக்டரும் மற்றும் அந்த இலாகா சம்பந்தப்பட்டவர்களும் நல்ல முறையில் வேலைகளைச் செய்து வருகிறார்கள். அதுவும் தொழில் கல்வியில் அரிஜன மக்களுக்கு நல்ல முறையிலே வாய்ப்புகள் கிடைக்கின்றன. ஆனால் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை கிடைக்காத நிலை இருப்பதால் கஷ்டப்படுகிறார்கள். அதைப் பற்றி அமைச்சர் அவர்களும் அரசாங்கமும் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜாதி இந்து சமூகத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் அரிஜனங்கள் வசிக்கும் காலனிகளில் உள்ள பள்ளிகளில் பாடம் சொல்லிக்கொடுக்கும்படியாகவும், அரிசன ஆசிரியர்கள் மற்ற பள்ளிகளில் பாடம் சொல்லிக்கொடுக்கும்படியாகவும் செய்தால், மன வேறுபாடு போகும் என்ற கருத்தைக் கனம் அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் பஞ்சாயத்து யூனியன் கீழ் வேலை செய்யும் ஆசிரியர்கள் படும் கஷ்டத்திற்கு ஒரு அளவு இல்லை. ஒரு கிராமத்தின் பெயரைச் சொல்லவேண்டுமென்று நினைக்கிறேன். ஆனால் அதைக் குறிப்பிட்டுச் சொல்ல மனம் வரவில்லை.

* **திரு. ஆ. துரை அரசன் :** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய மதிப்பிற்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற ஹரிஜன நல இலாகா மானியக் கோரிக்கையின் மீது எனக்குத் தெரிந்த சில கருத்துக்களைத் தங்கள் மூலமாக இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதன் காரணமாக எதிர் காலத்தில் இந்தக் குறைபாடுகள் களையப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நாட்டிலே இன்றைய தினம் தீண்டாமை எந்த அளவுக்கு ஒழிக்கப்பட்டு வந்திருக்கிறது, இன்னமும் சில பல பகுதிகளில் தீண்டாமை ஒழிக்கப்படாமல் இருக்கிறது என்பதை எங்கள் தரப்பிலே சொல்லுவதைக் காட்டிலும் ஆளுங் கட்சியைச் சார்ந்தவர்கள் அதிகமாகச் சுட்டிக் காட்டினார்கள்.

செலவு செய்யப்படுவதற்கும், நில ஆர்ஜிதம் செய்வதற்கும் நல்ல முறைகளை நாம் கையாண்டிருக்கிறோம். அந்த முறைகளை நாம் பயன்படுத்துவோமேயானால் சீக்கிரமாக நிலங்களை வாங்கிக் கொடுக்க நல்ல வாய்ப்பு இருக்கும்.

சுடுகாடு இல்லாத நிலைமையில் சில சமயங்களில் தண்ணீரில் பிணம் அடித்துச் செல்லக்கூடிய காட்சியைக் காண்கிறோம். இந்த நிலைமையை போக்க அரசாங்கம் அந்தச் சமூகத்தாருக்கு சுடுகாட்டுக்குப் பாதையோ, நிலமோ விரைவில் வழங்க ஏற்பாடு செய்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

அதோடுமாத்திரமல்லாமல் மின்சாரத்திற்காக நாம் நிறையப் பணத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஹரிஜனங்களுடைய தெருவுக்கு மின்சார விளக்குப் போட்டுத் தர வேண்டும் என்பதற்காக 8 லட்சத்திற்கு அதிகமாகப் பணத்தை கொடுத்திருக்கிறோம். ஆயினும் இன்னும் பல இடங்களில் மின்சார வசதி செய்து கொடுக்கப்படவில்லை. உடனடியாக அந்த வசதியைச் செய்து கொடுக்க வேண்டுமென்று அவர்களை வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் வீடு கட்டிக் கொடுப்பதற்காக 750 ரூபாய் கொடுத்துக் கொண்டிருந்ததைவிட இப்போது ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். இந்த முறை அப்படியே இருந்தாலும் சிறு சிறு நிலங்கள் வைத்திருப்பவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை உருவாக்கி வருகிறோம். ஒரு வீட்டிற்கு ஐந்தாயிரம் ரூபாய் என்று நிர்ணயம் செய்தால் பங்குதனத்தில் இப்போது பாதியில் ஒரு பாகம் அவர்கள் கட்டினால் போதும் என்று இருக்கிறது. ஆனால் ஹரிஜனங்களைப் பொறுத்த வரையில் அரசாங்கம் ஐந்தாயிரம் கொடுப்பது என்றால் அவர்கள் 500 என்று கொடுத்தால் போதும் என்று இருக்கிறது. இவர்களால் 500 கட்ட முடியவில்லை. ஆகவே ஹரிஜன இலாகா 750 ரூபாய் கட்டும்படியும் பாக்கி 250 ரூபாயை இவர்கள் கட்டினால் போதும் என்று செய்தால் நன்றாக இருக்கும்.

கனம் அங்கத்தினர் சொன்னதுபோல கட்டாயம் ஒரு ஹரிஜன மெம்பர் சர்வீஸ் கமிஷனில் இருந்தாகவேண்டும். அப்படியிருந்தால் தான் அந்தச் சமூகத்தாருடைய வேலை வாய்ப்புகள் பெருக இடமேற்படும். ஆகையால் சர்வீஸ் கமிஷன் மெம்பர்களில் ஒருவரை ஹரிஜன சமூகத்தைச் சேர்ந்தவராகப் போட நமது அமைச்சர்அவை தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பால் வழங்கும் சொஸைட்டிகளை நாம் ஏற்படுத்திக் கொடுத்திருப்பது பொருளாதாரத் துறையில் அந்தச் சமூகத்திற்கு நல்ல ஏற்றத்தை அளிக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதற்காக அமைச்சரைப் பாராட்டுகிறேன். இன்னும் அம்மாதிரி சொஸைட்டி அமைக்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. 3 லட்சம் ரூபாய் அத்திட்டத்திற்கு தேவைப்படுகிறது. பணமில்லை யென்று சாங்ஷன் செய்யப்படாமல் இருக்கிறது. அதையும் கவனித்து விரைவில் சாங்ஷன் செய்து கொடுக்கும்படியாக நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னும் சொஸைட்டியில் இருந்து பாலை எடுத்துப் போக மதுரை ஜில்லாவைப் பொறுத்த வரையில் வான்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள், அதைப்போலவே எந்த எந்த ஊர்களில் இம்மாதிரி சொஸைட்டி அமைக்கப்படுகிறதோ அங்கிருந்து பால் எடுத்துப் போக வான் வசதி செய்து கொடுப்பது நலம் என்று பணிவோடு தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. க. ர. முனிரத்தினம் :** கனம் மாமன்றத் தலைவர் அவர்களே, இங்கே நடைபெறும் ஹரிஜன இலாகா விவாதத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஹரிஜன மக்களுக்காகவும், அருந்ததிய மக்களுக்காகவும் இன்று வீட்டு வசதிகள் செய்து தரப்படுகின்றன. அப்படி வீட்டு வசதிக்காக அவர்களுக்குத் தரப்படுகிற தொகையும் சரியான



நேரத்தில் கொடுக்கப்படுவதில்லை. அதோடு அந்த ஹரிஜனங்கள் இன்றைய தினம் புதிய புறம்போக்கு நிலங்களில் எங்கே வசிக்கிறார்களோ அதே புறம்போக்கு நிலங்களை தங்களுக்குத் தேவை என்று கேட்பார்களேயானால் அதைத் தருவதற்கும் கட்டுப்பாடுகளைத் தளர்த்தித் தர வேண்டும், ஆட்சேபணை எதுவும் எழுப்பக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்படிப் பார்க்கும்போது என்னுடைய தொகுதியில் கலவைக்கு அருகாமையில் இருக்கிற காட்டு பகுதி முன்னால் காடாக இருந்து, இன்று அழிக்கப்பட்டு பொட்டல் வெளியாக காட்சி தருகிறது. அதன் அருகில் இருந்த ஒரு ஊரில் ஹரிஜன மக்களுக்கும், குடிமக்களுக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக அங்கே வந்து குடியேறினார்கள். அப்படி குடியிருந்தும் பலமுறை பட்டா கோரி மனு செய்தும் இன்றுவரை அவர்களுக்குப் பட்டா செய்து தரவில்லை. ஆனால் அவர்களை அங்கே இருந்து வெளியேற்ற எவ்வளவு ஆயத்தங்கள் அவசியமோ அவ்வளவும் செய்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றி அமைத்து அவர்களுக்குப் பட்டா செய்து தரவேண்டுமென்று நான் மிக்க பணிவோடுகேட்டுக் கொள்கிறேன்.

தவிரவும் ஹரிஜன மக்களுக்கு விவசாயத்திற்காக மாடு வழங்கும் ஒரு திட்டம் இந்த அரசாங்கத்திடம் இருக்கிறது. அந்தத் திட்டத்தின்கீழ் அவர்களுக்கு மாடுகள் வாங்கித் தந்துகொண்டிருக்கிறார்கள். மாடுகளாகத் தருவதில்லை. மானியமாகத் தருகிறார்கள். அந்த மானியத்தை அவர்கள் பெறுவதற்குள் எத்தனையோ சிரமமடைய வேண்டியிருக்கிறது. தட்சிணையாகப் பல ரூபாய்களைச் செலவு செய்த பிறகே அதைப் பெற முடிகிறது. கடைசியாக காலம் கடந்து அவர்கள் கைக்கு வந்து சேருகிற தொகையைக் கொண்டு மாடு வாங்கவும் முடியாது போவதானாலும் திடீரென்று ஏற்படும் எதிர்பாராத செலவிலும் கிடைத்த பணம் மாடு வாங்கப் பயன்படுத்தப்படுவதில்லை. அதிகாரிகள் வரும்போது யாருடைய மாட்டையாவது வாங்கிக் கொண்டுபோய் காட்டுகிறார்கள். இப்படிப்பட்ட நிலை மாற வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இது மாறுவதற்கு மானியமாக மாடு வாங்கப் பணம் கொடுப்பதற்குப் பதிலாக மாடுகளாகவே வாங்கிக் கொடுக்க வழி செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இப்படி மாடு வாங்கிக் கொடுக்க அதிகமாகப் பணம் ஒதுக்கினால் அதிகமான பேர்கள் நன்மை அடைவார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் கிராமங்களில் உள்ள ஹரிஜன மக்கள் மிகவும் பிற்பட்ட நிலையில் இருப்பதனால் அவர்களுக்கு ஏற்படும் நோயை அவ்வப்போது நீக்குவதற்கு வசதியாக ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு மொபைல் டிஸ்பென்சரி ஏற்படுத்தினால் நலமாக இருக்குமென்று கூற விரும்புகிறேன்.

மேலும் நில ஆர்ஜிதம் செய்யும்போது ஹரிஜனங்களுக்கும், குடிமக்களுக்கும் ஏற்படுகிற தகராறைத் தீர்க்கும் வகையில் அங்கு இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களை அந்த அதிகாரிகள் கலந்து கொண்டு ஆர்ஜித காரியங்கள் செய்வார்களேயானால் மிகவும் நலமாக இருக்குமென்று கருதுகிறேன்.

அதேபோன்று என்னுடைய தொகுதியில் சுடுகாட்டுக்குப் போக வழியில்லாமல் குடிமக்களுடைய நிலங்கள்மீது நடந்து சென்று, அதனால் அவர்களுக்கும் இந்த குடிமக்களுக்கும் தகராறு மூண்டு பல தொல்லைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே அவர்களுக்கு சுடுகாட்டுக்குச் செல்ல வசதியும், சுடுகாட்டுக்குப் போக பாதை வசதியும் செய்துகொடுக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*** திரு. கே. பி. பழனிசாமி :** கனம் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கோரப்பட்டிருக்கிற மானியத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு பல வகையில் முன்னேற்றம் அடைந்திருந்தாலும் பட்ஜெட்டில் ஹரிஜனநலத் துறைக்காக ஒதுக்கப்படுகிற தொகை மிகக் குறைவு என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் மூன்று கோடி 90 லட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்பட்ட மக்களுக்கு என்று

அதற்காக நான் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன். நகரப்புறங்களில் படித்தவர்களிடைய இன்றைய தினம் தீண்டாமை பெரும் பகுதி போக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும்கூட, கிராமப் புறங்களில் வாழும் மக்கள் இன்னமும் தீண்டாமையை விடாப்பிடியாக வைத்துக் கொண்டிருக்கிற நிலைமைகள் இருக்கின்றன. கிராமப்புறங்களில் டீ கடையில்கூட தனியாக அவர்களுக்கு என்று பாத்திரங்கள் ஒதுக்கி வைக்கும் பரிதாப நிலைமை இந்த இருபதாவது நூற்றாண்டிலும் இருக்கிறது என்றால் அது மிகையாகாது.

என்னுடைய பகுதியில் ஒரு ஊராட்சி மன்றத்தின் தேர்தல் நடத்தப்பட்ட நேரத்தில், அதிகாரியின் முன்பாக அங்கே மற்ற இந்துக்களோடு ஒன்றாக அமர்ந்த குற்றத்திற்காக அன்று ஒரு பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த ஊராட்சி மன்ற உறுப்பினர் தாக்கப்பட்டு, நீதி மன்றம் வரை அது எடுத்துச் செல்லப்பட்டும், அவருக்கு ஆதரவாக சாட்சிக் கூண்டில் ஏற ஆள் இல்லாத காரணத்தால் வழக்கு வெற்றிபெற முடியாத நிலைமை ஏற்பட்டது.

கிராமங்களில் இருக்கும் பொதுக் கிணறுகளில் தண்ணீர் எடுக்கக் கூடாது என்ற பரிதாபகரமான நிலைமை இன்றும் இருந்து வருகிறது. ஹரிஜன சமூகத்தைச் சார்ந்தவர்கள் கிராமப் புறங்களில் வசிக்கின்ற பகுதிகளை எடுத்துக் கொண்டால் மிக மிக வேதனை நிரம்பியதாக இருக்கிற பரிதாப நிலைமையையும் நாம் பார்க்கின்றோம். அவர்களுக்கு என்று சொந்தமாக வீடு இல்லை. அவர்களுக்கு என்று சொந்தமாக நிலம் இல்லை. அவர்களுக்கு என்று சொந்தமாக இடுகாடு இல்லை. இடுகாட்டுக்குப் பிணங்களை எடுத்துச் செல்வதற்குப் பாதைகள் இல்லை. இவைகளையெல்லாம் நல்ல முறையில் செய்ய ஐந்தாண்டுத் திட்டங்கள் போடப்பட்டு அதற்காக நிதி ஒதுக்கப்பட்டாலுங்கூட, இடையிலே இருக்கும் ஒரு சில அதிகாரிகள், இடைத் தரகர்கள் காரணமாக, இவை நல்ல முறையில் செயல்பட முடியாத சூழ் நிலை ஏற்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் நல்ல முறையில் கண்காணித்து, அவர்களுக்கு நேரடியாக எல்லாச் சலுகைகளும் கிடைக்க வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமாய் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நிலம் வேண்டுமென்று பலர் பன்னெடுங்காலமாக மனுக்களைப்போட்டிருக்கிறார்கள். மேற்பனைக்காடு என்கிற கிராமத்தில் 1960-ம் ஆண்டில் ரெவினியு போர்டார் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆனால், அந்தக் கிராமத்தில் இருக்கும் 20 குடிகளுக்கும் ஒரு பத்து எக்கர் நிலத்தை இன்று வரை அசைன்மெண்ட் கொடுக்க மாவட்ட அலுவலகங்களில் அவர்களுக்கு உத்தரவு கிடைக்கவில்லை. காரைக்கோட்டை கிராமத்தில் சர்வே நெ. 8-5-இல் 110 எக்கர் புறம்போக்கு நிலம் இருக்கிறது. முப்பது குடிகள் அந்த நிலங்களை அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். மூன்று, நான்கு ஆண்டுகளாக அவர்கள் அதை அனுபவித்தும், அவர்களுக்கு அந்த நிலங்களைக் கொடுக்க பல இடையூறுகள் இருக்கின்றன. இதைப் போல, வேறு சில பகுதிகளிலும் ஏராளமான தொல்லைகள் இருக்கின்றன.

திருக்கல்யாணபுரம் கிராமத்தில் பல்லாண்டுகாலமாக ஐம்பது எக்கர் நிலத்தைப் பழங்குடி சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் சாகுபடி செய்து வந்திருக்கிறார்கள். ஒரு நாளில் இராமனாதபுரம் மாவட்டத்தில் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்தார். அப்பொழுது இந்த நிலத்தின் சொந்தக்காரர் முதலமைச்சருடன் இருந்தார். அதே நாளில் அவரால் ஏவிவிடப்பட்ட 100 ஆட்கள் இந்தக் குடியானவர்களுடைய நிலத்தில் கதிரை அறுவடை செய்துவிட்டார்கள். உடனடியாக எனக்குத் தகவல் கிடைத்து. நான் மேல் அதிகாரிகளுக்குத் தந்தி கொடுத்தேன். போலீஸ் இலாகாவினர் விசாரித்து, அவர்கள் சாகுபடி செய்த நிலத்திற்கு இவர்கள் பேரால் கணக்கு இருந்த காரணத்தால் நாங்கள் நீதி வழங்க முடியவில்லை என்று சொல்லிவிட்டார்கள். ஆனால், நியாயப்படி இவர்கள்தான் உழுதார்கள் என்பது எங்களுக்குத் தெரிகிறது. ரிகார்டுகள் அவர்கள் பேரில் பதிந்திருந்த காரணத்தால் எதும்



செய்வதற்கில்லை என்று சொல்லி விட்டார்கள். இது போன்ற நிலைமைகளை நன்கு பரிசீலித்து, ஒதுக்கப்பட்டிருக்கும் தொகைகள் நேரடியாக அவர்களுக்கு கிடைப்பதற்கு வேண்டிய எல்லா சூழ்நிலைகளையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை.. .. .. ..

(மணியடிக்கப்பட்டது).

*** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, ஹரிஜன நல மானியக் கோரிக்கையை ஆதரித்து, நான் ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே கனம் அங்கத்தினர் திரு. சின்னய்யன் அவர்கள் பேசும்பொழுது, "அறிவு இல்லாத" என்ற வார்த்தைகளை உபயோகித்தார். தெரியாமல் பேசிவிட்டார் என்று நினைக்கிறேன். எத்தனையோ அறிவுள்ளவர்கள் அறிவில் சிறந்தவர்கள் இன்றைக்கு பல இலாக்காக்களில் இருந்து கொண்டு நல்ல முறையில் பணியாற்றுகிறார்கள் என்பது கனம் அங்கத்தினர்களுக்கு தெரிந்திருந்தும் இம்மாதிரி வார்த்தைகளைச் சொன்னது மிகவும் வேதனை தரத்தக்கதாகத்தான் இருக்கிறது.

ஹரிஜன நல இலாகாவுக்கு பல லட்சக்கணக்கான ரூபாய்களை நாம் ஒதுக்கியிருக்கிறோம். அப்படி ஒதுக்கப்படுவதன் நோக்கம் என்னவென்றால், பொருளாதாரத்தில் ஹரிஜன மக்களை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும், பின்தங்கிய மக்களை உயர்வுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான் அந்தப்பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் கூறியதுபோல, எவ்வளவு பணம் ஒதுக்கியிருந்தாலும்கூட, அது கடலில் கரைத்த பெருங்காயம் போல்தான் இருக்கிறது. 1970-ம் ஆண்டு வரைக்கும்தான் ஹரிஜனங்களுக்கு என்று தனியாக இந்த இலாகா அமைக்கப்பட்டிருக்கும் என்று சொல்லப்படுகிறது. இந்த 6, 7 ஆண்டுகளுக்குள்ளாகவே, ஹரிஜன மக்களுடைய குறைகளைத் தீர்க்க, அடுத்த ஆண்டாவது அதிகப்பணம் ஒதுக்கினால் நலமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

விவசாயம் செய்வதற்காக கிணறு வெட்ட, ஒரு கிணற்றுக்கு 1,500 ரூபாய் கொடுக்கிறோம். கிணறுகளுக்காக ஒதுக்கிய பணம் மிக மிகக் குறைவாக இருக்கிறது. மற்ற துறைகளில் இருப்பதைச் சற்றுக் குறைத்துக் கொண்டாலும் இதற்கு இன்னும் அதிகமானப் பணம் ஒதுக்கினால் நன்றாக இருக்கும். இரண்டு எக்கர் நிலம் வைத்துக்கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு இந்த உதவி அதிகமான பேர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிலே கூட சில பேர்கள் கூறினார்கள், 25 சத விகிதம் கூட கிணறு போட முடியவில்லை என்று சொன்னார்கள். ஹரிஜனங்களுடைய நிலை எப்படியிருக்கிறது. அவர்களுக்கு என்னென்ன தன்மையில் அரசாங்கம் உதவி செய்திருக்கிறார்கள் என்பதை உணராதவர்கள்தான் அதிலே ஒன்றும் செய்யவில்லை. 25 சதவிகிதம்கூட முடியவில்லை என்று குறை கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

நாம் இவ்வளவு நல்ல காரியங்களைச் செய்தும்கூட பொருளாதாரத் துறையில் அவர்கள் இன்னும் பின்தங்கியிருப்பதற்குக் காரணம்—அரசாங்கத்தில் உத்தியோகத்திற்கு ஒரு குறிப்பிட்ட சத விகிதம் ஹரிஜனங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று ஒதுக்கியிருக்கிறோம். அதேபோன்று தனியார் துறையிலும் பல மில்களை வைப்பதற்கு அரசாங்கம் லைசென்ஸுகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால், தனியார்கள் நடத்தும் தொழிற்சாலைகளிலும் ஹரிஜனங்களுக்கு என்று 25 சத விகித அளவுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும். இதன் மூலம் இன்னும் பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படும்.

மனை வாங்கிக் கொடுப்பதற்கு ஒதுக்கி இருக்கும் தொகை போதாது. சென்னை நகரத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் அவ்வளவும் செலவழிக்கப்படுகிறதா, செலவழிக்கப்படாமல் இருக்கிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும். மற்ற ஜில்லாக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையை இன்னும் சற்றுக் கூடுதலாக்க வேண்டும். அந்தத் தொகை துரிதமாக

பிரித்துக் கொடுக்கப்படுகிறபோது ஒவ்வொரு பிரிவுக்கும் குறைவாகவே ஆகிறது. இன்றைய தினம் நம்முடைய நாட்டு ஜனத்தொகையில் 5ல் ஒரு பங்கினராக அவர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு விவசாயம் முன்னேற வேண்டுமென்று சொன்னால் பிறபட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற்றம் அடைந்தாகவேண்டும். அதோடு காந்தியடிகளின் புனித சேவை காரணமாக தீண்டாமை ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டு ஓரளவு அவர்களுடைய சமுதாய அடிமை வாழ்வு நீக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், அவர்களுடைய சமுதாய பொருளாதார விடுதலைக்கு அடிப்படையாக இருப்பது கல்வி. அவர்களுக்குக் கல்வி அளிக்க நாம் தக்க ஏற்பாடு செய்யவேண்டும். ஆகவே கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகையை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். அதோடு ஹரிஜன ஹாஸ்டலில் சேர்ந்து படிக்கிற ஒரு ஹரிஜன மாணவனுக்கு ஒரு தொகையும் பிற்பட்ட இனத்து மாணவனுக்கு ஒரு தொகையும் என்று கொடுப்பது சரியல்ல. இந்த ஏற்றத் தாழ்வை ஒழித்து எல்லோருக்கும் ஒரே விகிதாசார அடிப்படையில் இந்த கல்விக்காக ஒதுக்கப்படுகிற பணம் விநியோகிக்கப்படவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்யப்போகும்போது எதிர்ப்பு ஏற்படுகிறது. அதன் காரணமாக "அக்வைர்" செய்யும் பணி நின்று போகிறது. ஆகவே, தகுந்த அதிகாரிகளைப் போட்டு நில ஆர்ஜிதம் செய்து ஹரிஜனங்களுக்கு மனைக்கட்டுக்கள் வழங்கும் முயற்சியில் ஈடுபடவேண்டும். மனைக்கட்டுகளை ஆர்ஜிதம் செய்யும் வகைக்காக 23 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணத்தை ஜில்லா வாரியாகப் பிரித்தால் ஒரு ஜில்லாவுக்கு இரண்டு லட்சம் அளவுக்குத்தான் செலவு செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. அந்தத் தொகையையாவது நல்ல முறையில் செலவு செய்து ஹரிஜன மக்களுக்கு வேண்டிய வீட்டு வசதியைச் செய்து தர வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

ஹரிஜனங்கள் பொருளாதாரத் துறையில் முன்னேறும் வகையில்
12-30 p.m. கோவாப்பரேட்டிவ் முறையில் ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். மில்க் சொசைடிகள் ஏற்படுத்தித் தரவேண்டும். இப்போது தையல் மிஷின்கள் வாங்கித் தருகிறோம். ஆனால் இன்னும் அந்த மிஷினையே கண்ணால் பார்க்காதவர்கள்கூட இருக்கிறார்கள். எல்லோரும் நல்ல முறையில் பயன்பெறும் வகையில், பொருளாதாரத் துறையில் அவர்களை முன்னேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாகாணத்திலே பல நகரங்கள் இருக்கின்றன. கிராமங்களிலே நில ஆர்ஜிதம் செய்து ஹரிஜனங்களுக்குக் கொடுப்பது போன்ற "ப்ரொவிஷன்" பட்டணங்களைப் பொறுத்தவரை கிடையாது. கோவை, மதுரை போன்ற பெரிய நகரங்களில் அந்த முறையில் நில ஆர்ஜிதம் செய்து ஹரிஜனங்களுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். சிலபேர் நிலத்தை விற்று விடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். இப்போது இருக்க கூடிய நிலைமையில் அந்த மாதிரி யாரும் விற்க முன் வரமாட்டார்கள். அதற்கான ஏற்பாடுகளையும் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. ந. பா. செங்கோட்டுவேலு:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, 1963-64-ஆம் ஆண்டுக்கான ஹரிஜன நல இலாகா மானியக் கோரிக்கை விவாதத்தின்பேரில் நானும் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, ஹரிஜன நல இலாகாவின் மூலம் ஏகப்பட்ட பணத்தைச் செலவழித்து வந்தபோதிலும் நாம் எதிர்பார்த்த முன்னேற்றத்தை நாம் இன்னும் அடையவில்லை. இந்த இலாகாவின் மூலம் செலவுதான் அதிகமாகச் செலவழிக்கப்பட்டிருக்கிறதேதவிர, ஹரிஜன மக்கள் அதன் முழுப் பயனையும் பெற முடியவில்லை. ஹரிஜனங்களுக்கு கிணறு வெட்டுவதற்காகக் கொடுக்கப்படுகிற 1,500 ரூபாய் உதவிப் பணத்தை ஆயிரம் ரூபாய் என்ற அளவுக்கு வேண்டுமானாலும் குறைத்துக் கொண்டு கல்விக்கு அதிகப் பணம் செலவழித்து அதிகமான பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு கிராமத்திலும்



பள்ளிக்கூடங்களை அமைத்து ஐந்து வயதுக்கு மேற்பட்ட ஹரிஜனப் பிள்ளைகள் அனைவரும் கல்வி கற்கவேண்டுமென்ற முறையில் ஏற்பாடுகளைச் செய்தால் பலனுடையதாக இருக்கும்.

சேலம் ஜில்லாவில் கொல்லிமலைப் பகுதியில் மலைவாசிகள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் இதுவரை எந்த விதமான முன்னேற்றத்தையும் அடையவில்லை. கொல்லிமலைப் பகுதி தனி பிளாக் டெவலப்மெண்டாக ஆக்கப்பட்டபோதிலும், அந்தப் பஞ்சாயத்து யூனியனுக்கு எந்த விதமான வருமானமும் கிடையாது. அதன் காரணமாக அந்தப் பஞ்சாயத்து யூனியன் எந்த விதமான முன்னேற்ற வேலைகளையும் செய்ய முடிவதில்லை. அந்தப் பகுதியை "டிரைபல் பிளாக்" ஆகச் செய்து, மக்களிடமிருந்து பங்குத் தொகையைப் பெறக்கூடிய நிலைமை இல்லாமல் அந்தப்பகுதியை முன்னேற்றக்கூடிய பணிகளை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் அங்கு ரோடு வசதி போன்றவற்றைச் செய்யமுடியும். ரோடு போடும் பொறுப்பை ஹைவேஸ் இலாகாவினரிடம் கொடுத்து ரோடு போட்டுக் கொடுக்கும்படி இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதோடுகூட கொல்லிமலைப் பகுதியில் ஒரு உயர்தரப் பாடசாலையையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கொல்லிமலைப் பகுதியில் அந்நிய நாட்டுச் செலாவணியைப் பெற்றுத் தருகின்ற விளைபொருள்கள் எல்லாம் விளைகின்றன. அவற்றை மலை மேலிருந்து கீழே கொண்டுவர சரியான பாதை வசதி இல்லாத காரணத்தால் அந்தப் பொருள்கள் சரியான விலைக்கு விற்கப்பட முடிவதில்லை. ஆகவே, அந்தப் பொருள்களை எல்லாம் கீழே கொண்டு வந்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவில் பாதை வசதி செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்கு மனை, நிலம் வழங்குவதில் அதிகாரிகள் கவனம் செலுத்தி, காலதாமதமின்றி அவர்களுக்கு மனை, நிலம் வழங்கினால் அவர்கள் வீடு கட்டிக் கொண்டு சவுகரியமாக இருக்கமுடியும். அந்தந்த கிராமங்களுக்கு அருகில் நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுத்தால்தான் அவர்கள் இந்துக்கள் வாழும் பகுதியில் கலந்து வாழ்வதின் காரணமாக, நாளடைவில் அவர்களும் சமூகத்தில் இரண்டறக் கலந்து வாழக் கூடிய வாய்ப்புகள் ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஹரிஜன மக்களுக்கு வேலைவாய்ப்புக்கான எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும். ஸ்காலர்ஷிப் கொடுப்பது 50 மார்க்குகள் வாங்கியிருப்பவர்களுக்குத்தான் கொடுப்பது என்பதைத் தளர்த்தி 40 சதவிகித மார்க் எடுத்தவர்களுக்குக்கூட ஸ்காலர்ஷிப் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** கனம் சபாநாயகர் அவர்களே, ஹரிஜன மானியத்தை ஆதரித்து ஒருசில கருத்துக்களைக்கூற விரும்புகிறேன். குறிப்பாக, எதிர்க்கட்சித் தோழர் ஒருவர் "ஹரிஜன்" என்று சொல்வதைப் பற்றி மிகவும் வருத்தப்பட்டு, குறைப்பட்டுக் கொண்டார்கள். பாரதியார் ஒருசமயம் மற்ற நண்பர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்போது, அங்கிருந்த பிராமணப்பையன் ஒருவன், "பிராமணர்கள் தலையில் பிறந்தார்கள், க்ஷத்திரியர்கள் புஜத்தில் பிறந்தார்கள், வைசியர்கள் விலாவில் பிறந்தார்கள், சூத்திரர்கள் காலில் பிறந்தார்கள், ஹரிஜனங்கள் எதிலே பிறந்தார்கள் ?" என்று கேட்டார். அதற்குப் பாரதியார், "ஹரிஜனங்கள் அப்பனுக்கும் மகளுக்கும் பிறந்தார்கள்" என்று சொன்னார்.

***திரு. மு. கருணாநிதி :** அவர்கள் தான் அப்பனுக்கும் மகளுக்கும் பிறந்தவர் என்று பாரதியார் சொன்னதாக கனம் அங்கத்தினர் சட்டசபையில் சொல்கிறார் ? அப்படிச் சொல்லலாமா என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**கனம் சபாநாயகர் :** நேரமாகிவிட்டதினால் களைப்பின் காரணமாக வார்த்தை புரண்டு விட்டது. கனம் அங்கத்தினரே அதைத் திருத்திக் கொண்டிருக்கவேண்டும்.

அடுத்து, ஹரிஜன மக்கள் வாழ்கின்ற பெருவாரியான பகுதிகளில் லோகல் டெவெலெப்மெண்டு திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யவேண்டிய சூழ்நிலையில் ஒரு பங்கு தொகையை ஹரிஜன மக்களிடமே கேட்கிருர்கள். அவர்கள் அந்தத் தொகையைக் கொடுக்கக்கூடிய நிலையில் இல்லாததிஞல் அவர்கள் அம்மாதிரி கொடுக்க வேண்டாம் என விதிவிலக்குச் செய்யவேண்டும் என்ற யோசனையையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொது சுகாதாரம்பற்றி எண்ணுகின்ற நேரத்தில் பெருவாரியான மக்கள் வாழ்வில் வறுமையும் அறியாமையும் கலந்து இருப்பதன் காரணமாக மிகமோசமான நிலையில் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கிறது. இதனுல் பல வியாதிகளுக்கு உள்ளாகிருர்கள். ஆகவே, அவர்கள் வாழக்கூடிய பகுதியில் பொதுச் சுகாதாரம் சரியான முறையில் கவனிக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். அரசாங்க டாக்டர்கள் மாதம் இருமுறையாவது சேரியைப் பார்வையிட சட்டம் செய்ய வேண்டு கிறேன்.

அடுத்து, ஹரிஜன மக்களுக்கு சமுதாய அந்தஸ்து உயரவேண்டுமென்று சொன்னுல் அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்துவதற்குத் திட்டம் வகுக்கவேண்டும். அதற்கு பஸ் பர்மிட் வழங்குவது, இன்னும் பல தொழில்களுக்கு லைசென்சு வழங்குவது ஆகியவற்றில் அதிக முக்கியத் துவம் கொடுத்து அவர்களுடைய பொருளாதார அந்தஸ்தை உயர்த்த வேண்டுமென்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஹரிஜன முன்னேற்றம் என்பது தனிப்பட்ட ஒரு அரசியல் கட்சியின் பிரச்சனை அல்ல. இது தேசீய பிரச்சனை. இந்த உண்மையை உணர்ந்து நாட்டில் உள்ள எல்லா எதிர்க்கட்சி நண்பர்களும் தங்களுடைய கட்சி வேறுபாடுகளை மறந்து, மன மாச்சர்யங்களை மறந்து ஹரிஜன பிற்பட்ட சமூகத்திற்கு உழைக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

MR. SPEAKER : The Deputy Leader of the Opposition will take 25 minutes and the Hon. the Minister will take 40 minutes for his reply and so the House will have to sit till 1-55 or 2-p.m. I hope the House has no objection to sit till that time.

* **திரு. மு. கருணுநிதி :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, இன்று இந்த மன்றத்திலே வைக்கப்பட்டுள்ள ஹரிஜன மான்யத்தின்மீது எங்களுடைய கட்சியைச் சேர்ந்த கனம் அழகமுத்து அவர்கள் வைத்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பல ஆண்டு காலமாகச் சமுதாயத்தினுடைய அடித் தளத்திலே அழுத்தப்பட்டு முன்னேற வழியில்லாமல் முடங்கிக் கிடந்த ஒரு சமுதாயத்திற்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவேண்டுமென்கின்ற புரட்சிகரமான நோக்கம் இந்தியாவில், குறிப்பாகவும் சிறப்பாகவும் தமிழகத்தில், பல ஆண்டுகளுக்குமுன்பே தோன்றியிருக்கிறது என்பதனை, இந்த உணர்ச்சியைத் தட்டி எழுப்பிய பெருமை ஏதோ ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு என்று இல்லாமல், பழங்குடி மக்களுடைய முன்னேற்றத்தில் அக்கரை கொண்டிருக்கிற தமிழகத்தைச் சேர்ந்த சான்ருேர்கள் உணர்ந்திருக்கிருர் கள். எல்லா அரசியல் கட்சிகளுமே அந்தக் கொள்கையை ஒத்துக்கொண்டு, அதற்காகப் போராடிக்கொண்டிருக்கிறது என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். அந்த வகையில் இந்த மான்யத்தில், ஹரிஜனங்களுக்காக, பின் அடைந்திருக்கிற மக்களுக்காக, ஆதிவாசிகளுக்காக, ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 3 கோடியே 90 லட்சம் ரூபாய் என்பது போதுமானது அல்ல என்பதை எதிர்த் தரப்பிலிருந்து மாத்திரமல்ல, ஆளும் கட்சித் தரப்பில் இருக்கிற தோழர்கள் பலரும் இங்கே அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறியிருக்கிருர்கள். வெட்டுப் பிரேரணை என்பது இந்த மன்றத்திலே



எதிர் கட்சியினரும், ஆளும் கட்சியினரும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறுவதற்கு ஒரு விவாதத்தை அமைப்பதற்காகப் பயன்படுத்துகிற முறையே அல்லாமல், இத்தனை ரூபாயை வெட்ட வேண்டும் என்று நாங்கள் குறிப்பிட்டிருக்கின்றது, மான்யத் தொகையிலிருந்து, உண்மையிலேயே வெட்ட வேண்டும் என்ற பொருளில் அல்ல. அந்த வகையில் ஆளும் கட்சி அன்பர்கள் அத்தனை பேருமே இந்தத் தொகையை அடுத்த ஆண்டிலாவது மேலும் கூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறினுர்கள். நாங்கள் இந்த மான்யத்தைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் குறைப்பாடுகளை எடுத்துச் சொல்லுகிருேம் என்ருல், தேவையானவைகளை எடுத்துச் சொல்லுகிருேம் என்ருல், அரசினரைக் குற்றம் சாட்ட வேண்டுமென்பதற்காக அல்ல என்பதை அரசினர் உணர்ந்து, மேலும் மேலும் பின்னடைந்து கிடக்கிற மக்களுக்கு, சமுதாயத்தினுடைய கீழ்த்தட்டிலே இன்றைய தினம் கேவலமாக ஆக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு, புதிய தெம்பும், நல்ல வாழ்வு வளமும் அளிப்பதற்காகத்தான் நாங்கள் எடுத்துக் கூறுகிருேம் என்று உணர்ந்து அந்த நிலையில் காரியங்களை அணுகவேண்டுமென்று எடுத்துக்கூறிகொள்ளுகிறேன்.

இந்த ஹரிஜன நலத்துறை அலுவல்களை கவனிப்பதற்காக ஒரு துறை ஏற்பாடு செய்யப்பட்டு இந்த இலாகா சம்பந்தப்பட்ட அளவிலே, கல்வி, வீட்டு வசதி, பொதுச் சுகாதாரம், விவசாயம், குடிசைத் தொழில் என்ற பல தலைப்புகளில் தங்கள் காரியங்களை ஆற்றி வருகிருர்கள். நல்ல நோக்கத்திற்காகச் செலவழிக்கப்படுகிற இந்த மானியத் தொகை யாருக்காக செலவழிக்கப்படுகின்றதோ அவர்களுடைய இருண்டு கிடக்கின்ற இல்லங்களில் கதவைத் தட்டி, "இந்தா உனக்கு இன்பம்" என்று சொல்லப்படுகிற அளவுக்குப் பயன்படுவதாக இருக்கிறதா என்று கேட்டால், எதிர் கட்சியில் இருக்கிற நாங்கள் மட்டுமல்ல, ஆளும் கட்சியில் இருக்கிற அவர்கள் உள்ளத்தில் கை வைத்து எண்ணிப் பார்க்கிற நேரத்தில், "இல்லைதான், இது அணுகவேண்டியவர்களை அணுகவில்லை" என்பதை நிச்சயமாக ஒப்புக் கொள்வார்கள்.

கல்வித் துறையில் நான் இங்கே சில கருத்துக்களை எடுத்துக் கூற விரும்புகிறேன். கல்வியைப் பொறுத்தவரையில் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப்படுகிற முறை பாராட்டப்படவேண்டிய ஒன்று என்ருலும், இந்த உபகாரச் சம்பளம் அளிக்கப்படுகிற முறையிலே சில மாறுதல்களைச் செய்யவேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்வேன். உபகாரச் சம்பளம் பெறுகிற மாணவன் புதிதாகச் சேருகின்ற நேரத்தில் உபகாரச் சம்பளம் பெறத் தகுதி வாய்ந்தவர்கள் என்று நற்சான்றிதழ் பெற்றுத்தந்து, பிறகு உபகாரச் சம்பளம் தரத்தொடங்குகிருர்கள். இடையில் வகுப்பிலே தேர்வு பெருமல் தோல்வி அடைந்து விடுவார்களாஞல், அவர்களுக்கு மீண்டும் உபகாரச் சம்பளத்தைப் புதுப்பித்துக்கொள்ள நற்சாட்சிப் பத்திரம் தேவைதான். ஆனுல், இப்போது இருக்கின்ற முறையில் ஆண்டுதோறும் உபகாரச் சம்பளம் பெறுவதற்கு நற்சாட்சிப் பத்திரத்தைப் புதுப்பித்துக்கொள்ளும் சிக்கல் அந்த மாணவனுக்கு ஏற்படுகிறது. தேர்விலே தோல்வி அடையாமல் வெற்றி பெற்ருலும் இந்தச் சிக்கலிலிருந்து விடுபடமுடியவில்லை. ஆசிரியரிடத்திலும், தாசில்தாரிடத்திலும், போலீஸ் இன்ஸ்பெக்டரிடத்திலும், சட்ட மன்ற உறுப்பினர் அல்லது நகர சபை உறுப்பினர்கள் ஆகிய அவர்களிடத்திலும் நற்சாட்சிப் பத்திரத்தைப் பெற்று அதற்குப்பின் அந்த மாணவன் ஹரிஜன நலத்துறை அதிகாரியிடத்திலிருந்து உபகாரச் சம்பளத்தை பெறுகிற வாய்ப்பை அடைய முடிகிறது. இதற்கு இடையில் அவன் படுகின்ற இன்னல்கள் எவ்வளவு என்று அவனுக்கு ஏற்படுகிற சிரமங்கள் எவ்வளவு, விரயம் ஆகின்ற நேரம் எவ்வளவு என்று எண்ணிப் பார்த்து, இனியாவது ஆண்டுதோறும் இப்படி புதுப்பித்துக் கொள்ளும் முறையை நிறுத்தி, ஒரு முறை உபகாரச் சம்பளத்தைப் பெறுவதற்குத் தகுதி பெற்ற மாணவன் என்ருல், தொடர்ந்து அதை அளிக்க வசதி செய்து தரவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** மன்னிக்கவேண்டும். ஒரு தாய்க்கும், தந்தைக்கும் பிறந்தவர் என்று சொன்னார். அத்தகைய ஒரு சமூகத்தாரின் மேன்மைக்காக ஏற்பட்டது இந்த இலாகா. கடந்த பல வருஷங்களாக அவ்விலாகா ஆற்றிவந்திருக்கிற பெரும் பணிகளினால் இன்றையதினம் அந்தச் சமூகத்தாரிடையே அதிக வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை எல்லா அங்கத்தினர்களும் உணர்வார்கள்.

இன்றைய தினம் அவர்களுக்கு மிக முக்கியமாக இருக்கக்கூடிய பிரச்னை மனைக்கட்டுதான். தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்த வரையில் பெரும்பகுதி நிலம் கோயில்களுக்கும், மடாலயங்களுக்கும், பெரிய நிலச் சுவந்தார்களுக்குமே சொந்தமாக இருக்கிறது. அதனால் பெரும் அளவிற்கு மனைக்கட்டு வழங்கப்படுவதில்லை. ஹரிஜனங்களுக்கு என்று சொந்த மனைக்கட்டு கிடையாது. இன்றையதினம் அவர்களுக்கு மாடு வாங்கிக் கொடுக்கிறோம், தையல் மிஷின் வாங்கிக் கொடுக்கிறோம் என்று இதெல்லாம் கொடுப்பதால் பிரயோசனம் இல்லை. அவன் மனிதனாக வாழ வேண்டும். மிருகங்களுக்குக் குகை இருக்கிறது. குருவிகளுக்குக் கூடு இருக்கிறது. ஆனால் ஆற்றிவுள்ள மனிதனுக்கு வீடில்லை. மனைக்கட்டு வாங்கிக் கொடுத்து, வீட்டு வசதி செய்து கொடுப்பதில் முக்கியமான கவனம் செலுத்தப்படவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து பிற்பட்ட ஹரிஜனங்களைப் போலவேதான் பிற்பட்ட வகுப்பார்களும் இருக்கிறார்கள். அவர்களிலும் பெரும்பாலானவர்கள் வீடு இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே மனைக்கட்டு வழங்கும் திட்டத்தில் ஏழை பிற்பட்ட வகுப்பினர்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஆகவே அவ்வினத்தில் அதிகமாகப் பணம் ஒதுக்கவேண்டும். இன்றைக்கு பிற்பட்ட இனத்தவர்கள், ஹரிஜனங்கள் ஆகியவர்களில் பெரும்பாலானவர்கள் இன்னும் மிகத் தாழ்ந்த நிலையிலேயே இருக்கிறார்கள். ஆகவே அத்துறைக்கு என்று 3 கோடியே 90 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது எந்தவிதத்திலும் போதுமானதாக இல்லை. அதை அடுத்த ஆண்டாவது இரட்டிப்பாக்க வேண்டும். இன்னும் 2 கோடி ரூபாய் மானியமாவது அதிகமாகக் கோர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நகரங்களில் எல்லாம் தோட்டிகள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான ஸ்திரமான உத்தியோகமும் கிடையாது. அவர்களுக்குச் சம்பளம் பன்னிரண்டரை ரூபாய். அலவன்சு ரூபாய் 45. சம்பளம் உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு இவர்களுக்கும் பென்ஷன், இன்சூரன்ஸ், ஆகிய வசதிகளைச் செய்து கொடுத்து அவர்களின் மிகமோசமான நிலையைப் போக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குக் காலனி கட்டிக் கொடுக்கவேண்டும்.

மேலும் ஹாஸ்டல்களில் தங்கிப் படிக்கும் ஹரிஜன மாணவர்களுக்கு மாதம் 16 ரூபாய் என்றும், பிற்பட்ட சமூகத்து மாணவர்களுக்கு 10 ரூபாய் என்றும் வழங்கப்படுகிறது. அதைக் கொஞ்சம் 20 ரூபாய் என்று உயர்த்தியாவது எல்லா மாணவர்களுக்கும் ஒரே மாதிரியாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாம் சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவதற்கே திட்டமிட்டிருக்கிறோம்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அரசாங்க ஹாஸ்டல்களில் ஹரிஜன மாணவர்களுக்கு என்றும், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர் றும் கொடுக்கும் பணத்தில் எவ்வித வித்தியாசமும் கிடையாது. சில தனியார் ஹாஸ்டல்களில் நாம் ஹரிஜன மாணவர்களுக்கு 16 ரூபாய் கொடுக்கிறோம். பின்தங்கிய மாணவர்களுக்கு நாம் 10 என்று கொடுக்கிறோம். அந்தத் தனியார் ஹாஸ்டல் நிர்வாகிகளுக்கு நாம் வேறு வகையில் பணம் கொடுப்பதால் அதிலிருந்து இந்தப் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு அவர்கள் 6 ரூபாய் வீதம் போட்டு 16 ரூபாயாகக் கொடுக்க வேண்டும் என்றே அந்த ஏற்பாட்டைப் பண்ணியிருக்கிறோம். ஆக எல்லா மாணவர்களுக்கும் வித்தியாசமின்றி ரூபாய் 16 தான் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம்.

DEMAND XXV—WELFARE OF SCHEDULED TRIBES, CASTES AND OTHER BACKWARD CLASSES



**திரு. கி. இரா. சம்பந்தம் :** அகவிலைகள் எல்லாம் ஒரேடியாக உயர்ந்து இருப்பதனால் அதைச் சற்று 20 ரூபாய் அளவுக்காவது உயர்த்தி எல்லோருக்கும் கொடுக்கவேண்டுமென்றுதான் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஹரிஜன இலாகாவினால் நடத்தப்படுகிற பள்ளியானது சரியாக நடத்தப்படவில்லை என்று கல்வி அதிகாரிகளால் சொல்லப்பட்டு வருகிறது. மற்ற ஆரம்பப் பள்ளிகளை எல்லாம் பஞ்சாயத்து யூனியன்கள் நிர்வாகத்தில் கொண்டு வந்திருப்பது போலவே ஹரிஜனப்பள்ளிகளையும் பஞ்சாயத்தின் நிர்வாகத்திலேயே கொண்டு வந்துவிடவேண்டும் என்பதாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து....

(மணியடிக்கப்பட்டது.)

**திரு. கே. பி. பழனி :** மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, ஆற்றல் மிக்க அமைச்சர் அவர்கள் கோரியிருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்பாகப் பேசிய அங்கத்தினர்கள் பலரும் காந்தியடிகள் இந்தச் சமூகம் முன்னேற்றம் அடையவேண்டுமென்பதற்காகச் செய்த சேவைகளைப் பாராட்டி அவர் காட்டிய வழியில் பல நற்பணிகளைப் புரிந்து கொண்டு வருவது இந்த இலாகா என்பதைக் குறிப்பிட்டார்கள்.

அன்று வெள்ளையரோடு வீரப்போர் புரிந்த நாளில், நமது நாட்டின் உரிமைக்காகப் பாடுபட்ட அந்த நாளில், நமது நாடு சுதந்திரம் பெற்று திகழவேண்டுமென்று அண்ணல் காந்தியடிகள் போராடிய அந்த நாளில் இந்நாட்டு மக்களாலேயே தாழ்த்தப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டு இருந்த ஹரிஜன சமூகத்தார் தங்கள் உரிமைகளைப் பெற்று, மற்ற மக்களைப் போல வாழவேண்டுமென்பதற்காக தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தை துவக்கினார்கள். அதன் பயனாக இன்றைய தினம் ஹரிஜன சமூகத்தைப்பற்றிய நினைப்பு நமக்கெல்லாம் வந்தது என்றால் அது மிகையாகாது. இதுபற்றி உலக மேதையாகிய ஷா குறிப்பிடுகையில், ஒரு மனிதன் தாங்கி நடந்து செல்கின்ற நேரத்தில் வலது காலும், இடது காலும் எப்படி மாறி மாறி எடுத்து வைக்கப்படுகிறதோ அதே போல மகாத்மா காந்தி அவர்கள் நாட்டின் விடுதலையையும், சமுதாய சீர்திருத்தத்தையும், மாறி மாறி ஒரே சமயத்தில் கொண்டு செல்கிறார். இப்படிக் கொண்டு சென்ற பெருமை காந்தியடிகள் ஒருவருக்கே உண்டு என்று ஆங்கில நூல் ஒன்றில் குறிப்பிட்டார்.

நாட்டின் விடுதலையைத் தொடர்ந்து காந்தியடிகள் வழியிலேயே அரசாங்கத்தை நடத்திச் செல்கின்ற காங்கிரஸ் கட்சியானது தாழ்த்தப்பட்ட சமூகத்தின் வளர்ச்சிக்காகவே பல திட்டங்களைப் போட்டுத் தொடர்ந்து நடத்திச் செல்கிறது. இதுவரையில் சாதித்துள்ள சாதனைகள் என்ன என்பதை நாடு நன்கு அறியும். இருந்தபோதிலும் இன்னும் செய்யப்பட வேண்டிய சில நன்மைகளைக் குறித்து என்னுடைய கருத்துக்களை நான் மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

குறிப்பாக இன்றையதினம் புறம்போக்கு நிலங்களை எல்லாம் பஞ்சாயத்துகளிடமே ஒப்படைத்துவிட்ட காரணத்தினால் பஞ்சாயத்து நிர்வாகமானது இந்த ஹரிஜனங்களை எல்லாம் புறம்போக்கு நிலங்களிலிருந்து வெளியேற்றி வருகிறார்கள். பல ஆண்டுகளாக அனுபவித்துக்கொண்டு வருகிற நிலங்களை அந்தந்த ஹரிஜனங்களுக்கே பட்டா செய்து கொடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கையை உடனடியாக மேற்கொண்டாகவேண்டும் என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் பல ஆண்டுகளாகக் குடியிருந்து கொண்டிருக்கும் புறம் போக்கு நிலங்களாக இருந்தாலும், விவசாயம் செய்து கொண்டிருக்கும் புறம்போக்கு நிலங்களாக இருந்தாலும் இதுவரை இருந்தது போலவே இன்னமும் தொடர்ந்து அவர்களிடமே விடப்படவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, கல்வியைப் பொறுத்தவரையில் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற இந்த நல்லேட்டில், மிக அழகாக நம்முடைய அமைச்சர் கக்கன் அவர்கள் தந்திருக்கிற இந்தப் புத்தகத்தில், ஹரிஜனங்களுடைய முன்னேற்றம் ஏறத்தாழ 8 வகையிலே எப்படி முன்னேறியிருக்கிறது என்பதற்கான எழிலோவியம் தீட்டப்பட்டிருக்கிறது. அப்படி ஹரிஜனங்களுடைய பள்ளிக்கூடம் எப்படி இருக்கிறது என்று இந்தப் படத்தைப் பார்த்துப் புரிந்து கொள்ளுகிறவர்கள், நேர்த்தியான கட்டிடம் என்றுதான் கூறுவார்கள். ஆனால் பல இடங்களிலே இப்படிப்பட்ட ஓட்டுவில்லைக் கட்டிடம் இல்லாமல் கூறைக் கட்டிடத்தில் கற்றுத் தருகின்ற நிலையம், திண்ணைப் பள்ளிகளாக இருக்கக்கூடிய நிலையிலும் இருக்கின்றது. அது மாற்றப்படவேண்டும். கல்விக்கூடங்கள் கல்வி பயிலுகிற ஹரிஜன மாணவர்கள், பின் தங்கிய மாணவர்கள் அவர்கள் கல்வி பயிலுகிற நேரத்தில் ஆபத்து விளைவிக்காத கட்டிடங்கள், விபத்துக்களை அளிக்காத கட்டிடங்கள் தேவை என்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஹரிஜன நல விடுதிகளில் 93 விடுதிகளை அரசினர் ஏற்று நடத்துகிறார்கள், மற்றவைகளை தனிப்பட்டவர்கள் நடத்துகிறார்கள் என்றும் சொல்லப்பட்டது. சென்ற ஆண்டு விவாதத்திற்கு பதில் அளித்த அமைச்சர் அவர்கள் மற்ற விடுதிகளை அரசினர் எடுத்து நடத்தாததற்குக் காரணம் அந்த விடுதிகளில் ஊழல்கள் எதுவும் இல்லாது நடைபெறுகிறது, ஆகையால் நாங்கள் ஏற்று நடத்த வேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் எல்லா விடுதிகளும் ஊழல் இல்லாமல் ஒழுங்காக நடைபெறுகிறது என்று சொல்ல முடியாது. சில குறிப்பிட்ட விடுதிகளை நான் இங்கே எடுத்துச்சொல்ல முடியும். விவரம் கேட்டால் அவைகளை அரசாங்கத்திற்கு விளக்க முடியும். உதாரணத்திற்கு ஒன்று சொல்லுவேன், குறிஞ்சிப்பாடியிலுள்ள ஹரிஜன நல விடுதி ஊழல் நிறைந்ததாக ஆகிவிட்ட காரணத்தினால், உடனடியாக அரசினர் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளெல்லாம் எழுதி, கடைசியில் மந்திரிகள் கைக்கு வந்த நேரத்தில் கைவிடப்பட்டது என்ற செய்தி உள்ளபடியே சோகத் தகவல்தான் என்பதை இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது.

ஹரிஜன வீட்டுப் பெண் குழந்தைகளுக்கு உடை வழங்குகிற திட்டம் இருக்கிறது. ஆனால் ஆண் பிள்ளைகளுக்கு உடை வழங்குகிற திட்டம் இல்லை என்பதை நாங்கள் மாத்திரமல்ல, ஆளும் கட்சியில் இருக்கிற உறுப்பினர்களும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

அடுத்து, இந்தத் துறையில் வீட்டு மனைகள் வழங்குகிற திட்டம். இவர்கள் வாழ்வதற்கான மனைகளை ஆர்ஜிதம் செய்வதற்காக இன்றைய தினம் திட்டமிட்டு அந்த வகையிலே எவ்வளவு மனைகளை ஆர்ஜிதம் செய்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எத்தனை காலனிகளுக்கு என்று சொன்னால் ஒருவேளை தருகின்ற புள்ளிவிவரம் குறைவாகத் தோன்றி தேர்தல் நேரத்தில் பயன்படாமல் போய்விடும் என்று கருதினார்களோ என்னவோ, எத்தனை மனைகள் என்ற கணக்கைத் தந்திருக்கிறார்கள். 1961-62-ல், 18,769 வீட்டு மனைகள் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றும், 19,227 மனைகள் அளிக்கப்பட்ட வீட்டு மனைகளின் மொத்த எண்ணிக்கை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எத்தனை காலனிகளுக்கு வழங்கப்பட்டது என்று தெரியவில்லை. இடையிடையே ஏற்படுகிற பொறுப்பற்ற செயலை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. அரக்கோணம் தாலுகாவில் அருகில்பாடி என்ற கிராமம் இருக்கிறது. பழங் காலத்தில் அது ஒரு ஜமீன் கிராமம். அந்த கிராமம் இன்றைய தினம் அரசினர்களுக்குச் சொந்தமாக ஆக்கப்பட்டிருக்கிற கிராமம். அந்த கிராமத்தில் 12 எகரா நிலம் ஒரு வருட காலமாக ரெவின்யூ டிபார்டுமெண்டின்
1-00 p.m. கீழ் இருந்துவருகிறது. அந்த 12 எகரா நிலத்தைத் தங்களுக்கு ஆர்ஜிதம் செய்து தரவேண்டுமென்று அங்கிருக்கிற ஹரிஜன மக்கள் மனுப்போட்டு கோரிக்கை விடுத்திருந்தார்கள். ஆனால், அந்த ஊரிலுள்ள மணியக்காரர் அந்த நிலம் தனக்குத்தான் சொந்தம் என்று வாதாடி, இல்லை என்று சொல்லி தங்களுக்குத் தேவை என்று வேண்டுகோள்விடுத்த ஹரிஜன மக்கள் 50 பேரை போலீஸ்காரர்கள் பிடித்து சிறைச் சாலையிலே அடைக்கச் சொல்லியிருக்கிறார்கள். இது ஒன்று இரண்டு மாதங்களுக்கு முன்பு



நடைபெற்ற சம்பவமாகும். இது எப்படி இருக்கிறது என்றால், சர்க்கார் நிலத்தை ஆர்ஜிதம் செய்யவேண்டும் என்ற நல்ல நோக்கம் கொண்டிருந்தாலும், இடையிலே இப்படிப்பட்டவர்கள் இருந்து அதைத் தடுக்கிறார்கள். சிதம்பரம் நடராசரை நந்தனார் வழிபட விரும்பியபோது, நந்தி மத்தியில் வழிவிட மறுத்தது என்று கதை உண்டு. பிறகு "சற்றே விலகி இரும் பிள்ளாய்" என்று கூற, நந்தி விலக கதை முடிந்தது. நான் அரசினரைக் கேட்டுக்கொள்கிறேன், இப்படிப்பட்ட மணியக்கார நந்திகளைப் பார்த்து "சற்றே விலகி இரும் பிள்ளாய்" என்று எச்சரிக்கை விடுவது அரசினரின் பொறுப்பாகும். இல்லாவிட்டால், நல்ல நோக்கங்களோடு தீட்டப்பட்ட திட்டங்கள் ஹரிஜனங்களுடைய வீடுகளுக்குப் போய் சேராமல், இடையிலே தடுக்கப்பட்டுவிடும் என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அஃதேபோல், ஹரிஜன காலனிகளுக்கு மின்சார வசதி என்ற அளவிலே, 1957–58-ல் மின்சார வசதி பெற்ற ஹரிஜன காலனிகளின் தொகை 90, அதற்காக அளிக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 1,54,818 என்று குறிப்பிடப்பட்டிருந்தது. 1961–62–ல் 235 காலனிகளுக்கு அளிக்கப்பட்ட உதவித் தொகை ரூ. 1,50,000 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. என்ன காரணம் இந்தச் செலவு குறைந்ததற்கு என்ற விளக்கம் இதில் இல்லை. அந்த விளக்கத்தை கனம் அமைச்சர் அவர்கள் அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களுக்கு மின்சார வசதி, பொது சுகாதார வசதி, இவைகளோடு, விவசாயத்திற்கான வசதிகளைச் செய்து கொடுப்பது என்ற அளவில், அவர்களுக்கு மாடு, மற்ற விவசாயக் கருவிகள் இவைகளை வாங்குவதற்காக விவசாயிகளுக்கு, ஹரிஜனங்களுக்கு, ரூ. 400 கடனாக அளிக்கப்படுகிற திட்டம் இருக்கிறது. ஆனால், அந்தக் கடன் அவர்களுக்குக் காலத்திலே கிடைப்பதில்லை. இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், கடன் பெற தகுதி உள்ளவர்களுக்கும் 2 எகரா சொந்தமாக இருக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது. குத்தகைக்கு வைத்து பயிரிடுபவர்களுக்கு இந்த ரூ. 400 கடன் கிடைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. அப்படிப்பட்டவர்களுக்கு கடன் கிடைப்பதற்கு சாத்தியக் கூறுகள் இருக்கவேண்டும். அவர்கள் கடன் பெறுவதற்கு அங்குள்ள மணியக்காரர்கள் கையெழுத்து பெறவேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறது. மணியக்காரர்களுக்கும் அங்குள்ள மக்களுக்கும் ஏதாவது சொந்தத் தகராறு இருக்குமானால், உள்ளபடியே இந்தக் கடனைப் பெறுவதற்கு தகுதியுடையவர்கள்கூட பெறக்கூடிய நிலைமை இல்லாமல் அற்றுப் போய்விடுகிறது. அவர்களுடைய குத்தகைச் சீட்டு, கிஸ்தி கட்டியதற்கான ரசீது இவைகளை வைத்து கடன் தொகை அளிப்பதற்கான நிலைமைகளை ஆராய்ந்து, கடன் தொகை அளிக்கவேண்டுமென்று நான் அரசினரை மிக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

3 கோடி 90 லட்ச ரூபாய் செலவழிக்கப்படுகிறது என்று சொல்லப்படும்பொழுது, பார்ப்பதற்கும், கேட்பதற்கும் பளபளப்பான திட்டங்களாக அவைகள் இருக்கின்றனவே தவிர, அவைகள் போய்ச் சேரவேண்டிய இடத்தில் போய்ச் சேரவில்லை என்பதை அரசினர் மிக மிக கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். முன்பு இந்த மன்றத்தில் வீற்றிருந்த எங்கள் கட்சித் தலைவர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்தில் ஹரிஜன மான்ய விவாதத்தின்போது பேசுகையில், உதாரணமாகக்கூட ஒன்று குறிப்பிட்டார்கள். இவ்வளவு பணம் செலவழிக்கின்றீர்களே, அது எங்கே போய்ச் சேருகிறது என்று நாங்கள் கேட்கிற நேரத்தில், எங்கே போய்ச் சேருகிறது என்று ஆச்சரியம் உங்களுக்கே ஏற்படுகிறது. இது எப்படியிருக்கிறது என்றால், ஒரு அரசன் " நான் செலவழிக்கிற பணம் என்ன மக்களிடத்தில் போய்ச் சேருகிறதா ? " என்று கேட்க, அமைச்சர் அந்த அரசரைப் பார்த்து, அவருடைய கையிலே பனிக்கட்டியைக் கொடுத்து, " இதை 10 பேர் கையிலே கொடுங்கள் " என்று குறிப்பிடுகிறார். அரசர் 10 பேர் கையில் கொடுத்துவிட்டு, கடைசியில் அது அரசர் கைக்கு வருகிற நேரத்தில் ஒரு துளி நீர்தான் மிச்சம் இருந்தது. இப்படி 10 பேர் கையிலே கொடுத்த பனிக்கட்டிபோல இன்றையதினம் அரசினர் ஹரிஜனங்களுக்காக செலவழிக்கப்படுகிற பணம் போய்ச் சேருகிறது என்று கருதுகிறேன் என்று சொன்னார்.

பெரிய தொகை ஹரிஜனங்கள் கைக்கு போய்ச் சேருவதில்லை. தொகை பெரும் தொகை என்று அரசினர் குறிப்பிடலாம். இது போதாத தொகை என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே குறிப்பிட்டார்கள் என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

ஹரிஜனங்களுக்குக் கட்டித்தரப்படுகின்ற வீடுகள் எத்தனை நாட்களுக்கு நிற்கின்றன ? "நெற்கொண்டு போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே" என்று சுவரைப் பார்த்து அல்லவா கேட்கவேண்டியிருக்கிறது. இதே மன்றத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. கவுந்தப்பாடியில் ஏழை ஹரிஜனங்களுக்காக கட்டப்பட்டிருந்த வீடு திறப்பு விழாவுக்கு முன்னால், ஒரு நாள் பெய்த மழையிலேயே, இருந்த இடம் தெரியாமல் குட்டிச்சுவராகி விட்ட செய்தி இந்த மன்றத்திலேயே எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. அது போலவே, தென் ஆற்காடு மாவட்டத்தில் கோண்டூரிலும்—கடலூருக்குப் பக்கத்து கிராமம்—கச்சரப்பாக்கத்திலும்—தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கிராமம்—கட்டப்பட்ட ஹரிஜனக் காலனிகளிலுள்ள வீடுகளெல்லாம் இடிந்து பாழடைந்து போய்விட்டன. அண்மையில் திருவண்ணாமலைத் தொகுதியில் இடைத் தேர்தல் வருகிறது. அமைச்சர் அவர்கள் அப்பொழுது அத்தகைய காட்சிகளைப் பார்ப்பதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படும். பல ஹரிஜனக் காலனிகளிலுள்ள வீடுகள் இடிந்து பாழடைந்து இருக்கிற நிலைமையைக் காணலாம். இந்த நிலைமையிலே ரூ. 1,000 வீடு கட்டுவதற்காக வழங்கப்படுகிற அந்தப் பணம் போதாது. அவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு ரூ, 3,000 கொடுக்கவேண்டும் என்று இந்த மன்றத்தில் அடிக்கடி திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சார்பிலே எடுத்துக் கூறியிருக்கிற கருத்தை நான் மேலும் மேலும் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அடுத்து, ஹரிஜனங்களில் மதம் மாறிய ஹரிஜனங்கள் என்ற ஒரு பிரிவு இருக்கிறது. அவர்கள் மதம் மாறிவிட்ட காரணத்தினாலே, சமுதாயத்தில் பெறவேண்டிய சலுகைகளைப் பெற்று மிக்க சந்தோஷமாக வாழ்கிறார்கள் என்று எண்ணுவது தவறு. ராமன் ராபர்டாக மாறிவிடலாம். நெற்றியில் விபூதி பூசிக்கொள்வதற்குப் பதிலாக கழுத்தில் சிலுவை அணிந்திருக்கலாம். ஆனால் அவன் அதே சேரியில்தான் சாக்கடை ஓரத்தில், பன்றிகளும், நாய்களும் நடமாடுகின்ற பயங்கரமான இடத்தில் இன்றையதினம் வாழ்ந்துகொண்டிருக்கிறான். அப்படிப்பட்டவர்களுக்கு இன்று தனித் தொகுதி முறையில்கூட இடம் இல்லாமல், அவர்கள் மதம் மாறிய ஹரிஜனங்கள் என்ற பெயரால் ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவில்லை. அவர்கள் மதம் மாறியிருக்கலாமே தவிர, அவர்களுடைய வாழ்க்கையில் வளம் ஏற்படவில்லை. அவர்கள் இன்றைக்கு அடித் தட்டிலேயேதான் கிடக்கிறார்கள் என்பதை மனதில் கொண்டு, அவர்களை உய்விக்க தனித் தொகுதி முறையில் அவர்களுக்கு இடம் தரவேண்டுமென்பதையும் நான் இந்த மன்றத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன். அவர்களுடைய வீடுகள், சேரிகள் என்ற பெயரால், காலனிகள் என்ற பெயரால், நகரங்களிலும், கிராமங்களிலும் எங்கேயோ ஒரு மூலையில் கட்டிக்கொடுப்பது என்ற நிலைமை இருக்கிறது. ஹரிஜனங்களுக்கு கட்டிக் கொடுக்கப்படுகிற காலனிகள், புதிய காலனிகள் கட்டப்படுகிற நேரத்திலாவது, ஊருக்கு நடுவில் கட்டினால் என்ன ? ஏன் மறுபடியும் மறுபடியும் மூலைக்குத் தள்ளுகிறார்கள் ? ஏன் சாக்கடை ஓரத்திற்கு தள்ளுகிறார்கள் ? சாக்கடை ஓரத்தில் குடியிருக்கச் சொல்லுகிறார்கள் ? ஊருக்கு நடுவில் இருக்கலாகாதா ? அக்கிரஹாரத்திற்குப் பக்கத்தில் சேரி இருக்கக்கூடாதா ? முதலியார் வீடுகளுக்குப் பக்கத்தில் அவர்களுக்கு வீடுகள் இருக்கக்கூடாதா ? செட்டியார் வீடுகளுக்குப் பக்கத்தில் அவர்களுக்கு வீடுகள் இருக்கக்கூடாதா ? ஏதோ தப்பித் தவறி எம். எல். ஏ. ஆகிவிட்ட காரணத்தினால், தப்பித் தவறி அரசாங்க ஊழியர்களாக ஆகிவிட்ட காரணத்தினால், தப்பித் தவறி படித்துவிட்ட காரணத்தினால் அவர்கள் வேண்டுமானால் ஊருக்கு நடுவிலே குடியிருக்கிறார்கள், அவர்களால் முடிகிறது. ஆனால், வாழ்க்கையிலே கடைக்கோடியில் இருக்கிற சாதாரண இந்த நாட்டு ஹரிஜனத் தோழன் இன்றைக்குப் புறக்கணிக்கப்பட்ட நிலைமையில்தான் இருக்கிறான். அண்ணல்



காந்தி சொன்னார், ஆலயங்களைத் திறந்துவிட்டோம் என்று பெருமை பேசுவதிலே அர்த்தமில்லை. காந்தி சொன்னார் ஆலயங்களைத் திறந்துவிட்டோம். ஆனால், இந்த ஆலயங்களில் இந்த நாட்டில் இருக்கிற ஹரிஜனங்கள் சென்று வழிபடுவதற்கு சட்டம் துணை புரிகிறதே தவிர, வழிபடுவதற்கு இன்றைய தினம் நடவடிக்கை இருக்கிறதா, நடைமுறையில் அது நடக்கிறதா, இல்லை. அது மாத்திரமல்ல. ஆலயங்களுக்குச் சென்று ஆண்டவனைத் தொழலாம் என்று ஹரிஜன மக்களுக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர, ஆண்டவனுக்கு அருகாமையில் இருந்து, ஆண்டவனுக்குப் பூஜை செய்வதற்கும், ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்வதற்கும் . . . .

SRIMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order, the hon. Member, Sri M. Karunanithi never goes to the temple. How can he know about the worship and other things?

MR. SPEAKER : It is not a point of order. The hon. Lady Member, Srimathi T. N. Anandanayaki, I think is a lawyer and she must know what is a point of order. It is not at all a point of order. Let the hon. Lady Member resume her seat.

**திரு. மு. கருணாநிதி :** கனம் தலைவர் அவர்களே, கொலை செய்தவர்கள் தான் கோர்ட்டுக்குப் போகவேண்டும் என்பதல்ல. கொலைக் குற்றங்களில் வாதாடுவதற்கும் கோர்ட்டுக்குப் போகலாம் என்பது அங்கத்தினருக்குத் தெரியும். ஆண்டவன் ஆலயத்திற்கு நேரடியாகச் சென்று ஹரிஜன மக்கள் வழிபடலாம் என்ற உரிமை இருக்கிறதே தவிர, ஆலயத்தில் இருக்கும் ஆண்டவனுக்கு பூஜை செய்வதற்கோ, அபிஷேகம் செய்வதற்கோ உரிமை அளிக்கப்படவில்லை. அப்படிப்பட்ட உரிமை அளிக்கப்படாததற்கு என்ன காரணம் ? தீண்டாமையை ஒழிப்பதற்குத் தீவிரமாகப் பிரசாரம் செய்ய வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதற்காக ஹரிஜன வாரம் கொண்டாடப்படுகிறது என்றும், ஹரிஜன தினம் கொண்டாடப்படுகிறது என்றும், மாவட்ட வாரியாக ரூ. 1,000 செலவழிக்க வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. தீண்டாமை ஒழிப்புப் பிரசாரத்திற்காக இவ்வளவு பணம் செலவழிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. ஆனால் அந்தப் பிரசாரம் ஒழுங்காக நடைபெறுகிறதா ? திரு. ஜெயபிரகாஷ் நாராயண் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டியின் அறிக்கையிலே கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது :

> "கிராமப் புறங்களில் வாழும் ஏழை எளியவர்களின் பொருளாதார நிலை முன்னேற வேண்டுமானால் அவர்களுக்குப் பொதுப் பணிகளில் வேலை கிடைப்பதற்கு வேண்டிய வாய்பபை ஏற்படுத்தித் தரவேண்டும்.
>
> கிராமங்களில் உள்ளவர்கள் 80 சத விகிதத்தினர் ரூ. 1,000-க்கும் குறைவாக ஆண்டு வருமானம் உள்ள 'நொடித்துப்போன தொகுதியினர்' ஆண்டுக்கு ரூ. 500-க்குக் குறைவாக வருவாய் பெறுபவர்கள் அதில் 50 சத விகிதமாக இருக்கிறார்கள். வேலை செய்து பிழைக்கத் தயாராக இருக்கும் ஒவ்வொரு குடிமகனுக்கும் வேலை கிடைக்கும் என்ற உத்திரவாதத்தை அரசு அளிக்க வேண்டும். அந்தப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். இவ்வாறு வெளிப்படையாகப் பிரகடனம் செய்துவிட வேண்டும்.
>
> சமுதாயத்தின் எல்லாத் துறைகளிலும் அமைதியான முறையில் மாபெரும் சமூகப் புரட்சி ஏற்பட்டு சாதி முறை வேருடன் ஒழித்துக் கட்டப்பட்டாலன்றி, கிராமப்புற ஏழைகளின் நலன், மறுமலர்ச்சிக்கான திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது."

இவ்வாறு 1961-ம் ஆண்டிலேயே இந்தக் குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. ஹரிஜனங்களுடைய மாபெரும் தலைவர் திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் கூட ஹரிஜனங்களுடைய வாழ்க்கைத் தரம் இன்னும் உயரவில்லை என்றுதான் கூறியிருக்கிறார்.

தீண்டாமை ஒழிப்பு விளம்பரத்திற்காக இந்த சர்க்கார் தைரியமாகச் செய்தது என்ன ? ஹரிஜன வாரத்தைக் கொண்டாடுவதைத் தவிர, ஹரிஜன தினத்தைக் கொண்டாடுவதைத் தவிர, ஹரிஜனங்கள் என்ற அழகான பெயரை வைத்திருப்பதைத் தவிர, வேறு என்ன செய்திருக்கிறார்கள் ? இப்பொழுது நாம் 1963-ம் ஆண்டிலே இருக்கிறோம். 7 அல்லது 8 ஆண்டுகளுக்கு முன்பு தீண்டாமையை ஒழிப்பதற்காக இந்த சர்க்கார் ரூ. 5,000 செலவில் 30,125 சுவரொட்டிகளை அச்சிட்டது. அந்தச் சுவரொட்டியிலே போடப்பட்ட படம் என்ன ? ஒரு ஏழை ஹரிஜனைத் தோழனை வைதீக முறையிலே வாழ்கிற பெரியவர் ஒருவர் "தொடாதே" என்று சொல்லுகிற படம். அப்படிச் சொன்னவர் இன்றைய அரசியல் சட்டத்தின்படி, தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்படி, கைது செய்யப்பட்டு சிறையிலே அடைக்கப்படுகிறார் என்ற முறையிலே அந்தப்படம் அமைந்திருந்தது. அந்தப் படத்தை யார் எதிர்த்தார்கள் ? பார்ப்பன சமூகத் தலைவர்கள் யாராவது எதிர்த்தார்களா இல்லை. எதிர்த்தவர்கள் திருச்சியிலே உள்ள நான்கு, ஐந்து பேர். ஒரு பத்திரிகை இதைப்பற்றி குறிப்பிட்டு எழுதியது. உடனே இந்த அரசு 30,000 சுவரொட்டிகளையும் தூக்கி எறிந்துவிட்டது. ரூ. 5,000 நஷ்டத்திற்குப் பொறுப்பாக்கிக் கொண்டது. ஏன் இந்த அரசுக்கு தைரியம் வரவில்லை. ? ஒரு குறிப்பிட்ட வகுப்பினரை மட்டும் குறிக்கும் படம் அல்ல அது. இன்றைக்கு பூணூல் போட்டவர்களும், முடி வைத்துக்கொண்டிருப்பவர்களும் பார்ப்பனர்கள் சமூகத்தில் மட்டும் இல்லாது பிற சமூகங்களிலும் இருக்கிறார்கள். அந்த உருவம் பார்ப்பனர்களை மட்டும்தானா குறிப்பிடும் ? வன்னியகுல க்ஷத்திரியர்களும் ஆசாரிக் குலத்தினருங்கூட முடி வைத்துப் பூணூல் அணிகிறார்கள். அதனால் நான் மாத்திரமல்ல, தோழர் விநாயகம், மாஜி எம். எல். ஏ. கூட இதைப்பற்றிக் கேட்டார். தீண்டாமை ஒழிப்பிற்கான சுவரொட்டிகளை வெளியிட வந்த இந்த சர்க்கார் ஏன் பயந்தது ? ஏன் அவர்களுக்குத் துணிவு வராமல் போய்விட்டது ? நாலைந்து பேர்கள் எதிர்த்தார்கள் என்பதற்காக இந்த சுவரொட்டிகளை மூட்டை கட்டி வைத்து விட்டார்கள். அதனால் என்ன லாபம் பெற்றார்கள் ? பச்சைத் தமிழர் ஆட்சி ஆயிற்றே, பாராட்டுப் பல குவித்துக் கொண்டவர்களாயிற்றே, யாரோ சொன்னார் என்பதற்காக, அந்த சுவரோட்டிகளை மூட்டை கட்டி வைக்கலாமா ? பொதுவாக, அடிதளத்தில் மாற்றம் ஏற்பட்டால்தான், இன்றைக்கு கடவுளின் பெயராலும், மதத்தின் பெயராலும், கீழ் மட்டத்திலே தள்ளப்பட்டிருக்கிற ஹரிஜன குடிமகனுடைய நிலை உயர முடியும். அவனுக்கு நல்ல துணிவும், எண்ணமும் ஏற்படும். அப்படி ஒரு மாறுதல் ஏற்பட்டால்தான் அரசு செலவழிக்கிற மூன்று அல்லது ஐந்து கோடி பணத்தின் முழுப் பயனையும், பெற முடியும். அப்படி பயன் தரத்தக்க வகையில் திட்டங்களைத் தீட்டும்படிக்கேட்டுக்கொள்ளுகிறேன். அந்தத் திட்டங்கள் ஏழை ஹரிஜன மக்களுடைய வீடுகளை அண்டாதபடி செய்து விடவேண்டாம். அவர்கள் நல் வாழ்வு பெறாத வகையில், அவர்களுக்கு அதிகாரிகள் செய்கின்ற கொடுமைகளினால் என்றென்றும் அவர்கள் ஏழை மக்களாக இருந்து கொண்டு, எந்தவிதமான முன்னேற்றமும் அடையாமல், தேர்தல் காலத்தில் எந்தக் கட்சிக்காரர்கள் வேண்டுமானாலும் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் கைப்பாவைகளாக வைத்திருக்கும் நிலைமை போகவேண்டும். தேர்தல் காலத்தில், சதுரங்கக் காய்களைப்போல் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் இந்த நாட்டிலே உள்ள ஹரிஜன மக்கள் இருக்கிறார்கள். ஆகவே ஹரிஜனங்களுக்காக நல்ல முறையில் பாடுபடுகிறோம் என்றால், அவர்கள் நல் வாழ்வுக்காக விழைகிறோம் என்றால், திட்டங்கள் போடுவது பெரிதல்ல, ஆனால் அப்படி போடப்பட்ட திட்டங்கள் நல்ல முறையிலே நிறைவேற்றப் படுகிறதா, அதிகாரிகள் மோசடிகளைச் செய்கிறார்களா என்று பார்க்க வேண்டும். ஊழல்கள் மலிந்திருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். அவைகளைப் போக்குவதற்குத் தக்க நடவடிக்கை எடுத்தால்தான், திட்டங்கள் வாழும். திட்டங்கள் வாழ்ந்தால்தான் இன்றைய தினம் தாழ்த்தப் பட்டவர்கள் என்று சமுதாயத்தின் ஒரு கோடியிலே கிடக்கிற ஹரிஜன மக்கள் முன்னேற முடியும். பொருளாதாரத் துறையிலே அவர்களுக்குச் சலுகைகள் வழங்கப்படுவதுதான் நல்லது என்று பிரசாரம் செய்யப்பட்டப் போதிலும், ஜாதி அடிப்படையிலே தாழ்த்தப்பட்டிருக்கிற ஹரிஜன மக்களின்



நிலையை உயர்த்துவது நம்முடைய குறிக்கோளாக இருப்பதால், அப்படிப்பட்ட நல்ல குறிக்கோள் நிறைவேற்றப்படுகிற வகையிலே அவர்களுக்கு எல்லாவிதமான சலுகைகளையும் சாதி அடிப்படையில்தான் வழங்கவேண்டிய நிலைமை இருக்கிறது என்று கூறிக்கொண்டு, இந்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. கே. பொன்னையா :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார். கனம் எதிர்க்கட்சி உப தலைவர் அவர்கள் பேசும்பொழுது, ஏதோ ஹரிஜன எம். எல். ஏ.க்கள் தப்பித் தவறி வந்துவிட்டதினால், அவர்களும் மற்ற பகுதிகளில் வசிக்கிறார்கள் என்று சொன்னார்கள். நாங்கள் தேர்தலில் நின்று, ஆயிரக்கணக்கான வோட்டுக்களைப் பெற்றுத்தான் வந்திருக்கிறோம். அப்படியிருக்கும்பொழுது, தப்பித் தவறி வந்துவிட்டோம் என்று சொல்லுவது முறையா ?

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் சொன்னதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் எழவில்லை. இவ்வளவு பெரிய சமுதாயத்திலே கொஞ்சம் பேர்தான் வந்திருக்கிறார்கள் என்ற கருத்தைத் தெரிவித்தார். **The hon. Member is misusing the privilege of raising a point of order.**

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய பல அங்கத்தினர்கள் இந்த ஹரிஜன மான்யத்திலே பங்கு கொண்டு பேசியது மிகவும் வரவேற்கத் தக்கது. பல அங்கத்தினர்கள் கலந்து கொண்டதினால் இந்த மான்யம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இந்த மன்றமும் அறியும், மக்களும் அறிவார்கள்.

கடைசியாகப் பேசிய எதிர்க் கட்சி உப தலைவர் திரு. கருணாநிதி அவர்கள் நிலைமையை முற்றிலும் தெரிந்து கொள்ளாமல் இங்கே பேசியது உண்மையிலேயே வருந்தத்தக்கது. மாணவர்கள் ஸ்காலர்ஷிப்புகள் வாங்குவதற்கு வருடம்தோறும் கையெழுத்து வாங்க வேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். அவ்வாறு கட்டளையிட்டதினால் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்றும் சொன்னார்கள். ஆகவே முதலிலேயே நான் இதைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். மாகாண சர்க்கார் ஸ்காலர்ஷிப்பை பொறுத்தவரையில், அவர்கள் தேறிவிட்ட அந்த வருடத்திலேயே, அந்தப் பாடசாலையின் முதல்வர் அல்லது கல்லூரியின் முதல்வர் சம்பந்தப்பட்ட மாணவன் பரீட்சையில் தேறிவிட்டான் என்று எழுதிவிட்டால் போதும், கையெழுத்துத் தேவையில்லை என்று இந்த அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. மத்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப்பைப் பொறுத்த வரையில், அவர்கள் சொல்கிற நிபந்தனைகளின்படி நாங்கள் கொடுக்கிறோம் என்று வாக்குறுதி கொடுக்க வேண்டியிருப்பதினால், அதற்கு மட்டும் கையெழுத்து வாங்க வேண்டும். மாகாண சர்க்காரைப் பொறுத்தவரையில் கல்லூரி முதல்வர் அல்லது ஹெட்மாஸ்டர் எழுதி விட்டால் போதும். ஒரு தரம் ஸ்காலர்ஷிப்கொடுத்தால், தொடர்ந்து ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம் என்பதை முதலிலேயே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஆன் எ பாயிண்ட் ஆப் இன்பர்மேஷன், ஸார். கடந்த ஆண்டிலே மத்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப் தந்த காரணத்தினால், மாகாண சர்க்காரால் கொடுக்கப்பட வேண்டிய ஸ்காலர்ஷிப்கள் ஒரு லட்சத்துக்கு மேல் கொடுபடாமல் ஸரண்டர் செய்யப்பட்டது உண்மையா?

**கனம் திரு. பூ. கக்கன் :** மதிப்பிற்குறிய கனம் மதியழகன் அவர்கள் அரிஜன மாணவர்களுக்கும் பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பணம் சரியாகக் கொடுக்கவில்லை என்று குறிப்பிட்டார். ஏற்கெனவே இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். இப்பொழுது அரிஜனங்களுக்கு மார்க்குகள் இல்லாமலேயே கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா அரிஜன மாணவர்களுக்கும் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசாங்கம் கொடுக்கும் பணத்தினால் மாநில அரசாங்கப் பணம் கொஞ்சம் மிச்சப்பட்டால் அதை வைத்துக் கொண்டு பின்னால் கொடுக்கப்படும். பணம் மிச்சப்பட்டால் கொடுக்கவில்லை என்று சொல்வது சரியல்ல. இப்பொழுது அதிகமாக செலவு செய்யப்படு

இறது என்றே சொல்லலாம். மத்திய சர்க்கார் கொடுப்பதோடு மாகாண சர்க்காரும் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பல கனம் அங்கத்தினர்கள் மனைக்கட்டு விஷயத்தைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள், கனம் அழகமுத்து அவர்களும் இதைப்பற்றிய ஒரு வெட்டுப் பிரேரபணையையும் கொடுத்திருக்கிறார். மனைக்கட்டு விஷயமாக அரிஜன நல இலாகா அடிஷனலாக சில ஸ்கீம்களை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வீடுகள் கட்டுவதற்குக் கூட அதிகப்படியான பெயர்களைக் கொடுத்தால் உதவி செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். ஐம்பது அல்லது அறுபது பேர்கள் கேட்டால் பத்து அல்லது பதினைந்து பேர்களுக்குத் தான் கிடைக்கிறது என்று சொன்னார்கள். இதை ஒரு குறையாக எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். மனைக் கட்டுகளை வழங்குவதில் வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்காகவே அறுபது லட்சம் ரூபாய் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஒதுக்கி இருக்கிறோம் என்பதை குறிப்பாக இந்த மன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1955-56-ல் இந்த இனத்திற்குக் கொடுத்த மானியத்தை காட்டிலும் இப்பொழுது குறிப்பாக இந்த ஆண்டு எட்டு மடங்கு அதிகமாக கொடுத்திருக்கிறோம். இந்த வருடம் சுமார் 23 லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறோம். மேலும் பணம் தேவைப்படுமானால் இன்னும் அதிகப்படியான பணத்தை ஒதுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதற்கு வாக்குறுதியும் கொடுக்கிறேன். வீடுகள் கட்டிக்கொள்வதற்கு என்று இதற்கு முன்னதாக 200 ரூபாய் கடனாகவும் இனமாக 550 ரூபாயும் வீடுகள் கட்டிக்கொள்ளக் கொடுத்தோம். இப்பொழுது அந்த தொகையை உயர்த்தி ஆயிரம் ரூபாய்க்கு வீடுகளை நல்ல முறையில் கட்டிக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறையில் இன்னும் அதிகப்படியாக 250 ரூபாய் கொடுக்கப்பட்டும் வருகிறது. 550 ரூபாய் கொடுத்த போது வீடுகள் நல்ல முறையில் அமையவில்லை என்று சொன்னதால் இப்பொழுது ஆயிரம் ரூபாய்க்குக் கட்டிக்கொள்ளும்படியாகச் சொல்லி தொகையையும் உயர்த்திக்கொடுத்துக்கொண்டு வருகிறோம். இதில் அரசினர் கொடுக்கும் தொகை 750 ஆகும். இந்த முறையில் சுமார் 850 வீடுகள் கட்டுவதாக அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. 1963-64-க்கு 6·30 லட்சம் ரூபாய் இதற்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. மனைக்கட்டு வழங்கும் விஷயத்தில் மத்திய சர்க்கார் சில ஆலோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். நகரசுத்தி தொழிலாளர்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள் என்று அவர்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். வீடு கட்டிக் கொடுக்கபடுவதில் சலுகைகள் கொடுக்கும்போது நகரசுத்தி தொழிலாளர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று மத்திய சர்க்கார் சொல்லி இருக்கிறார்கள். அந்த முறையில் அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கவேண்டியதாக இருக்கிறது.

அடுத்தபடியாக அரிஜனங்கள் குறிப்பாக நகரசபை நகரசுத்தி தொழிலாளர் அல்லாத மற்றவர்களுக்கும் சலுகை காட்டுவதற்கு தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே கனம் அழகமுத்து அவர்கள் தன்னுடைய வெட்டுப் பிரேரபணைக்கு இடம் இல்லை என்று ஏற்படுவதால் அவர் தன்னுடைய வெட்டுப் பிரேரபணையை வாபஸ் வாங்கிக்கொள்வார் என்று நினைக்கிறேன். ஆகவே மனைக்கட்டுகள் வழங்கும் விஷயத்திலும் அதிகப்படியாக செலவு செய்ய முன் வந்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். 1955-56-ல் ஒதுக்கியதை விட இந்த ஆண்டு எட்டு மடங்கு அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக கனம் கருணாநிதி அவர்கள் ஒவ்வொரு தடவையும் பேசும்போதெல்லாம் இதைப்பற்றியே சொல்லிக்கொண்டு வருகிறார். திருப்பி திருப்பி அழுத்தமாகச் சொல்லிக்கொண்டிருந்தால் அது உண்மையாக இருக்கலாம் என்று நினைப்பார்கள் என்று அப்படிச் சொல்லுகிறார்களோ என்னமோ தெரியவில்லை. அவருடைய கட்சித் தலைவர் அண்ணாதுரை அவர்கள் இங்கே இருந்தபோதுகூட இதைப்பற்றியே சொல்லிக்கொண்டு வந்



தார். கவந்தம்பாடியில் வீடுகள் கட்டியதைப் பற்றி அதன் பிறகு என்ன ஆயிற்று என்பதைப்பற்றி அவர் அடிக்கடி சொல்லிக்கொண்டு வருகிறார். லோயர் பாவணி அணைக்கட்டுப் பகுதியில் அந்த வீடுகள் கட்டப்பட்டன. அந்தப் பகுதியில் அணைக்கட்டில் தண்ணீர் வந்தவுடன் சீபேஜ் ஏற்பட்டதன் காரணமாக வீடுகள் கட்டிய இடத்தில் தண்ணீர் கசிவு ஏற்பட்டு அந்த வீடுகள் விழுந்து விட்டன. அதுதான் காரணமே தவிர வேறு ஒன்றும் இல்லை. அதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருப்பதால் பிரயோசனம் இல்லை. அதன் பிறகு மழை காற்றின் காரணமாக அந்த வீடுகள் விழுந்து விட்டன. ஹரிஜன நல இலாகாவினர் கட்டக்கூடிய வீடுகளையெல்லாம் நல்ல முறையில் கட்டிக்கொண்டு வருகிறோம். அதற்கு வேண்டிய பணமும் ஒதுக்கப்பட்டு கட்டிக்கொண்டு வரப்படுகிறது. கனம் கருணாநிதி அவர்கள் சொல்வதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு சக்கரம் வேகமாகச் சுற்றிக்கொண்டிருக்கிறது என்று வைத்துக்கொள்ளுவோம். அப்பொழுது அந்த சக்கரத்தின் மீது ஒரு ஈ வந்து உட்காருகிறது. உடனே அந்த ஈ என்ன நினைக்கிறது என்றால் தான் உட்கார்ந்துக் கொண்டதால்தான் அந்தச் சக்கரம் அவ்வளவு வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது என்று நினைத்துக்கொண்டதாம். அதைப்போலவே இப்பொழுது வீடுகளைக் கட்டிக் கொண்டு வருகிறோம். நல்ல வீடுகளாகக் கட்டிக்கொண்டு வருகிறோம். இதைப்பார்த்து கனம் கருணாநிதி நினைத்துக்கொள்ளலாம் அவர் அடிக்கடி கவந்தபாடி வீடுகளைப் பற்றி சொல்லிக்கொண்டு வந்ததால்தான் இப்பொழுது நல்ல வீடுகளைக் கட்டுகிறோம் என்று நினைக்கலாம். அப்படி அல்ல. அப்படி நினைப்பதும் நல்லது அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அடுத்தப்படியாக ஸ்காலர்ஷிப்களைப் பற்றி பல கனம் அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள். ஸ்காலர்ஷிப்புகளை எவ்வளவு துரிதமாகக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அவ்வளவு துரிதமாகக் கொடுக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒரு வருடம் ஸ்காலர்ஷிப்பு கிடைத்து விட்டால் அதைத் தொடர்ந்து பெறுவதற்கு வேண்டிய வாய்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. கல்லூரிகளில் பரீட்சையில் பாஸ் ஆகிவிட்டது என்று சொன்னால் போதும் ஸ்காலர்ஷிப்புகள் கொடுத்துவிடுவார்கள். இன்னும் மேலும் சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிகப்படியாகக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பின் தங்கிய மாணவர்கள் 50 மார்க்குகள் வாங்கினால் அவ்வளவு பேர்களுக்கும் கொடுக்கலாம் என்று இருந்தது. இப்பொழுது அதைத் தளர்த்தி 45 மார்க்குகள் வாங்கிருந்தாலும் மிகவும் பின் தங்கிய மாணவர்களுக்குக் கொடுக்கலாம் என்றும் அதை அந்த இலாகாவே பார்த்துக் கொடுக்கலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மிகவும் பின்தங்கிய மாணவர்கள் 45 மார்க்குகள் வாங்கி எவ்வளவு பேர்கள் பாஸ் பண்ணினாலும் அவ்வளவு பேர்களுக்கும் கொடுக்கும்படியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஜில்லா ஹரிஜன இலாகா அதிகாரி 10 சதவிகிதம் மாணவர்களுக்கு பார்த்துக் கொடுக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. சென்னை நகரில் அரிஜன இலாகா டைரக்டர் அவர்களே பார்த்து தனக்கு இஷ்டமானபடி பத்து சத மாணவர்களுக்கு கொடுக்கலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மார்க்குகள் குறைந்தாலும் குறைவாக எடுத்த மாணவர்களுக்கு கொடுப்பதாக இருந்தாலும் கொடுக்கலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. காலம் சென்ற கனம் பிரகாசம் காலத்தில் அரிஜனங்களுக்கு என்று ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இப்பொது கிட்டத்தட்ட நான்கு கோடி ரூபாய் வரையில் ஒதுக்கப்பட்டிருகிறது. ஒவ்வொரு வருடமும் இது உயர்ந்துகொண்டே போகிறது. இன்னும் சொல்லப்போனால் மூன்றாவது திட்டம் முடிவதற்குள் இன்னும் அதிகமாகப் போனாலும் போகலாம். ஆனால் கனம் அங்கத்தினர்கள் சொல்லுகிறார்கள் இது போதாது என்று. இன்னும் அதிகமாக கொடுப்பதாக இருந்தால் இந்த இலாகா அமைச்சர் வேண்டாம் என்று சொல்லவே மாட்டார். சந்தோஷமாக பெற்றுக்கொள்வார். இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நான்கு கோடி ரூபாய் மட்டும் அல்ல அவர்களுக்குச் செலவு செய்யப் போவது. மற்ற மானியங்களின் மீது செலவு செய்வதிலும் இவர்களுக்கு பங்கு உண்டு. அந்த

மத்திய சர்க்கார் கட்டளையிடுகிறது. அதன்படியே மாநில அரசாங்கமும் செய்து வருகிறது. நாம் அரசியல் சட்டத்தை அனுசரித்துத்தான் எல்லாக் காரியங்களையும் செய்கிறோம். அதே சமயத்தில் ஹரிஜனங்களுக்குள்ள கல்வி சலுகைகள் எம். ஏ. வரைக்கும் சம்பளம் இல்லாமல் படிக்கலாம் என்பது போன்ற சலுகைகள்—மதம் மாறிய கிறிஸ்துவ சகோதரர்களுக்கும் சென்னை அரசாங்கத்தின் மூலம் நாம் கொடுத்துவருகிறோம். ஹாஸ்டல்களிலும் அவர்களைச் சேர்த்துக்கொள்கிறோம். மத்திய சர்க்கார் ஹரிஜனங்களுக்காக நேரடியாகக் கொடுக்கும் கிராண்ட்-இன்-எயிடு (50 சத விகிதம் நாம் கொடுத்து மத்தியசர்க்கார் மூலம் கிடைக்கும் உதவி 50 சதவிகிதம்) மதம் மாறிய கிறிஸ்துவர்களுக்குக் கிடைப்பதில் கஷ்டம் கொடுக்கிறது. அதனால்தான் கொடுக்கப்படவில்லையே தவிர, மாநில சர்க்கார் அளிக்கக்கூடிய கல்விச் சலுகைகள், இடம் வாங்கி கொடுப்பது போன்று மாநில சர்க்கார் என்ன என்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அவை அத்தனையும் மதம் மாற்றிய கிறிஸ்துவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். ' அவர்களுக்கு ஏன் தனி தொகுதி முறைப்படி கொடுக்கவில்லை ' என்று கேட்டார்கள். இதெல்லாம் நானும் கனம் கருணாநிதி அவர்களும் செய்துவிடுவதில்லை. இந்த மன்றம் செய்வதில்லை. மத்திய சர்க்கார் அப்படி வகுத்திருக்கிறார்கள் என்று இந்த சமயத்தில் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களும், கடைசியாகப் பேசிய கனம் எதிர்கட்சி உப தலைவர் திரு. கருணாநிதி அவர்களைப் போன்றவர்களும் ' ஊருக்குள்ளே ஹரிஜனங்களுக்கு வீடு கட்டும் திட்டத்தைக் கொண்டுவரவேண்டும், அங்கேயே அவர்கள் குடியிருப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் ' என்று சொன்னார்கள். அப்படி இடம் இருந்தால் எனக்கு ரொம்ப சந்தோஷம்தான். ஊருக்குள்ளேயே புறம்போக்கு நிலம், பொதுவான நிலம், அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலம் இருந்தால் அதை எடுத்து முதன் முதலில் ஹரிஜனங்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதுதான் எங்களுடைய திட்டம். ஊருக்குள்ளே இடம் இல்லை என்றால், புறம்போக்கு நிலம் இருக்கிறதா என்று முதலில் பார்க்கிறோம். புறம்போக்கு நிலம் இல்லை என்றால், புஞ்சை நிலம் இருக்கிறதா என்று பார்க்கிறோம். புஞ்சை நிலம் இல்லாத பகுதியில்—தஞ்சை ஜில்லா போன்ற பகுதிகளில்—நஞ்சை நிலத்தைப் பார்க்கிறோம் ' ஊருக்குள்ளேயே ஏன் ஹரிஜனங்களுக்கு வீடு கட்டவில்லை ?' என்று சிலர் இங்கே கேட்கிறார்கள் என்றால், இடம் இருந்தால்தானே கொடுக்கமுடியும்.

நமக்குத் தெரியும்—ஒரு சில இடங்களில் கஷ்டங்கள் இருக்கின்றன. இப்போதே ஒரு சில அன்பர்கள். சொல்லுகிறார்கள்" எல்லாம் ஹரிஜனங்களுக்குத்தானா ஹரிஜனங்களுக்கு மாடு, ஹரிஜனங்களுக்கு வீடு, ஹரிஜனங்களுக்குத்தான் எல்லாவிதமான உதவிகளையும் சர்க்கார் செய்து வருகிறார்கள். உங்களுக்கு என்ன ஐயா இந்த சர்க்கார் பண்ணியிருக்கிறார்கள்? " என்று வேறு இடங்களில் சொல்வதையும் நாம் பார்க்கிறோம்.

ஊரின் மத்தியில் இருக்கும் நிலத்தை எடுத்து ஹரிஜனங்களுக்கு வீடுகட்டிக் கொடுத்து விடலாம். ஆனால் அப்பொழுது என்ன சொல்வார்கள் ? " பார்த்தீர்களா ? ஹரிஜனங்களை ஊரின் மத்தியில் வைத்தான் கக்கன் " என்று சொல்லுவதற்கும் ஆள் இருக்கிறது. ஆகவே, இடம், பொருள் ஏவல் எல்லாவற்றையும் பார்த்து, என்ன செய்யவேண்டுமோ அதை இந்த அரசாங்கம் செய்யும். தீண்டாமையை போக்குவதற்காக இந்த அரசாங்கம் யாருக்கும் ஒருநாளும் பின்வாங்காது என்பதை உங்கள் மத்தியிலே நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

**திரு. மு. கருணாநிதி :** ஊரின் மத்தியில் கொண்டுவந்து ஹரிஜன மக்களைக் குடி வைத்துவிட்டார் என்று பழி கூறுவார்கள் என்று அமைச்சருக்குப் பயமா ? அல்லது தேர்தல் ஒரு வேளை காரணமாக இருக்குமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் கருணாநிதி போன்றவர்கள் இருக்கிறார்களே என்ற காரணம்தான். (சிரிப்பு).



"ஆலயங்களில் ஹரிஜனங்களை ஏன் அர்ச்சகர்களாக வைக்கக்கூடாது?" என்று கேட்டார்கள். குறிப்பாக, சுவரொட்டிகள் (பாம்ப்ஃலெட்ஸ்) வெளியிட்டதைப் பற்றியும் சொன்னார்கள். பிராம்மண சகோதரர்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் அந்த சுவரொட்டிகளை நாங்கள் எடுத்துவிட்டோம் என்பதாகச் சொன்னார்கள். கனம் கருணாநிதி அவர்களுடைய சுயரூபம் இப்பொழுதுதான் தெரிகிறது என்று நான் சொல்லாமல் இருக்கமுடியவில்லை. பிராமணர்களுக்குப் பயந்துகொண்டு, பிராம்மணர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள் என்று பயந்துகொண்டு, சுவரொட்டிகளை நாங்கள் எடுத்துவிட்டதாக அவர்கள் சொன்னார்கள். கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். ஒரு காலத்தில் கனம் கருணாநிதி போன்றவர்கள் " பாம்பையும் பாப்பானையும் கண்டால் முதலில் பாப்பானை அடிக்கவேண்டும்" என்று சொன்னவர்கள் இப்பொழுது அவர்களுக்கெல்லாம் பரிந்துபேசும் முறையிலேதான் அவருடைய பேச்சு இருக்கிறது.

**திரு. மு. கருணாநிதி :** "பாம்பையும் பார்ப்பனரையும் கண்டால் முதலில் பார்ப்பனரை அடி" என்பது இன்று காங்கிரஸை ஆதரித்து வருகிற பெரியாரின் பொன்மொழி. நாங்கள் தனிப்பட்ட பார்ப்பனருக்கு விரோதி அல்ல. பார்ப்பனீயம் என்ற முறை செட்டியார் வீட்டில் இருந்தாலும் முதலியார் வீட்டில் இருந்தாலும் அந்த முறையைக் கண்டிக்கிறவர்கள் நாங்கள்.

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்பொழுது பார்ப்பனரை அழைப்பது வோட்டுக்காக. அதெல்லாம் அப்பொழுது போய்விட்டது.

முன்பு "தெய்வம் இல்லை" என்று சொன்னவர்கள் இப்பொழுது "சாமி இல்லை என்று நாங்கள் சொல்லவில்லையே" என்று சொல்வதும் வோட்டுக்காகத்தான் என்பதையும் நான் கனம் அங்கத்தினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** நாங்கள் திராவிடக் கழகத்தில் இருந்தபோதே, அண்ணா அவர்கள் "வேலைக்காரி" படத்தில் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற கொள்கைதான் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், ஸார், அவர்களுடைய கட்சி விளம்பரத்திற்காக "பாயிண்ட்ஸ் ஆஃப் ஆர்டர்" என்று கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர் எழுப்புவது நியாயமா என்பதற்குத் தங்கள் "ரூலிங்" கோருகிறேன்.

**கனம் சபாநாயகர் :** "டௌட்ஸ்"—ஐக் "க்ளியர்" பண்ணிக் கொள்ளுகிறார்கள்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** "பாயிண்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன்" என்று சொல்லி அடிக்கடி "இன்டரப்ஷன்" இருக்கக்கூடாது என்ற "ரூலிங்" தங்களுடைய "ப்ரடிஸெஸார்"-களால் கொடுக்கப்பட்டிருக்கிறது. **Interruption can only be on a point of order.**

**கனம் சபாநாயகர் :** தங்களைப் போன்ற கனம் அங்கத்தினர்கள் தைரியம் கொடுத்தால், அந்த ரூலிங்கை உடனே "என்போர்ஸ்" பண்ணிவிடுகிறோம். கனம் அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

(சில கனம் அங்கத்தினர்கள் எழுந்தார்கள்.)

**கனம் சபாநாயகர் :** கனம் அமைச்சர் அவர்கள் பேசவேண்டாமா ? அவர் பேசும்போது, சும்மா "பாயிண்ட் ஆஃப் ஆர்டர்" என்றோ, "பாயிண்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன்" என்றோ கேட்டுக்கொண்டேயிருந்தால் அவர் எப்படிப் பேசுவது? அமைச்சர் அவர்கள் பேச வேண்டியதைப் பேசி முடிக்கவேண்டாமா ? சந்தேகம் இருந்தால், ஏதோ ஓரளவுக்குக் கேட்கலாம். அவ்வளவுதான்.

தொகையுடன் கூடுதலாகத்தான் இந்த நான்கு கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை கனம் அங்கத்தினர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதர இலாக்காவிலிருந்து கிடைப்பதையும் சேர்த்து அதை விட அதிகமாக கிட்டதட்ட நான்கு கோடி ரூபாய் அவர்களுக்கு என்று தனியாகச் செலவு செய்ய ஒதுக்கப்பட்டிருக்கிறது. சாதாரணமாக கிடைக்கக்கூடிய சலுகைகளை விட அதிகமாக கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நான்கு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தத் தொகை குறைவு என்று சொல்ல முடியாது. வள்ளுவர் சொல்லியபடி

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்."

சொல்லுவது சுலபமாக இருக்கும். ஆனால் அதன்படி செய்வது தான் கஷ்டமாக இருக்கும். அரசாங்கம் ஹரிஜனங்கள் விஷயத்திலும் பின்தங்கிய வகுப்பினர் விஷயத்திலும் எவ்வளவு கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டுமோ அவ்வளவு கண்ணும் கருத்துமாக கவனித்து வருகிறார்கள். கட்டிடங்கள் கட்டுவதைப்பற்றி திரு. கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டார். அதற்குத்தான் 750 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரையில் போட்டிருக்கிறோம் இந்த ஆயிரம் ரூபாய் செலவில் கட்டினால் திருப்தி ஆகலாம் என்பதற்காகத்தான் அப்படி போடப்பட்டிருக்கிறது. இவைகளும் காற்று மழையில் விழாமல் இருக்கும்படியாகத்தான் கட்டப்படும். கூடுமான வரையில் நல்ல வீடுகளாகத்தான் கட்டப்படும். கனம் கருணாநிதி சொல்வது போன்று 'கக்கன் கட்டிய வீடாக இருக்கிறது' என்று சொல்லக் கூடிய முறையில் இல்லாமல் கட்டப்படும். கூடுமான வரையில் நல்ல முறையில் வீடுகளைக் கட்டுவதற்காகத்தான் அதிகப்படியான மனைக்கட்டுகளை வாங்கிக்கொடுக்கவேண்டும் என்று தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் போதவில்லை என்றால் மேலும் ஒதுக்கப்படும் என்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1–30 p.m.

'ஹரிஜனங்களுக்குக் கொடுக்கும் சலுகைகளை ஒரு சில அதிகாரிகள் துர்வினியோகம் பண்ணுகிறார்கள், மணியக்காரர்கள் குறுக்கே நிற்கிறார்கள்' என்று ஒரு சில கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். 'அதிகாரிகளிடத்தில் போய் கையெழுத்து வாங்க வேண்டியிருக்கிறது, அந்த சமயத்தில் கொஞ்சம் லஞ்சமெல்லாம் கேட்கிறார்கள்' என்றும் சொன்னார்கள் ஒவ்வொரு ஹரிஜன நல இலாகா அதிகாரிக்கும் இதுப்பற்றிக் கவனிக்க சொல்லியிருக்கிறோம். கடன்பெற விண்ணப்பிக்கிறவர்கள், ரெவனியூ இன்ஸ்பெக்டர்களிடம் கிராம அதிகாரிகளிடம் தேவைப்பட்டவர்கள் போக வேண்டியிருப்பதற்குப் பதிலாக, ஹரிஜன நல இலாகாவில் வேலை செய்யும் ரெவனியூ இன்ஸ்பெக்டரோ, தாசில்தாரரோ நேரில் சென்று பார்த்து, விசாரித்து தக்க உதவி—மாடு வாங்க உதவுவதோ, கிணறு வெட்ட உதவுவதோ—அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். எதாவது குறிப்பிட்ட ஓரிடத்தில் யாராவது அதிகாரி லஞ்சம் கேட்டார் என்றால், தக்க நடவடிக்கை எடுப்போம். அனேக இடங்களில் நடவடிக்கை எடுத்தும் இருக்கிறோம். இனியும் எங்கு தவறு ஏற்பட்டாலும், சம்பந்தப்பட்டவர் மீது நடவடிக்கை எடுப்போம் என்று இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

லஞ்சம் ஒழிக்கப்பட வேண்டியதுதான். இந்த அரசாங்கம் அதிலே தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. உயர்ந்த அதிகாரிகளை கூட இந்த அரசாங்கம் வேலையிலிருந்து நீக்கியிருக்கிறது. அவர் லஞ்சம் வாங்கினார் என்பதற்காக. அதே மாதிரி சில அதிகாரிகளைப் போகச் சொல்லியிருக்கிறது, இந்த அரசாங்கம். 'லஞ்சம் வாங்குகிறார்கள்' என்று பொதுவாக சொல்ல முடியாது. தங்கள் காரியம் காலாகாலத்தில் நடத்திவிடவேண்டும் என்பதற்க்காக ஒரு சிலர் தாங்களாகவே லஞ்சம் கொடுக்க முன்வருகிறார்கள். இலஞ்சப் பழக்கத்தை அதிகாரிகளிடம் உண்டு பண்ணும் முறையில் ஒரு சிலர் நடந்துக்கொள்வதையும் நாம் பார்க்கிறோம். லஞ்சம் ஒழிக்கப்படவேண்டும் என்பதிலே அக்கறை இருக்குமானால், யார் லஞ்சம் கேட்டாலும், 'கொடுக்கமாட்டேன்' என்று



தைரியமாக சொல்லிவிடவேண்டும். அதைக் குறித்து அரசாங்கத்திற்கும் சொல்லவேண்டும். வாங்குபவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள், வாங்காமல் இருப்பதற்கான தக்க நடவடிக்கையை இந்த அரசாங்கம் கண்டிப்பாக எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

மதிப்பிற்குரிய கனம் அங்கத்தினர் திரு. கருணாநிதி அவர்கள், மீண்டும் திருவண்ணாமலையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். எலக்ஷன் வரப் போகிறதல்லவா ? இப்படி இங்கே பேசினால்தான் 'நம்முடைய கட்சியைச் சேர்ந்தவர் சட்டசபையிலே நமக்காகப்பேசியிருக்கிறார்' என்று மற்றவர்கள் நினைத்துக்கொள்வார்கள் என்கிற எண்ணம் போலும். அவருடைய பிரசங்கத்தை அப்படியே நோட்டீஸ் கூடப் போட்டு விடுவார்கள். அப்படிச் சொன்னால் தான் ஹரிஜன மக்கள் தங்களுக்கு வோட்டுப் போடுவார்கள் என்ற எண்ணமாக இருக்கக் கூடும். திருவண்ணாமலையைப் பற்றி குறிப்பிடும்போது, எலெக்ஷனுக்காக நானும் என்னுடைய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களும் கூட இங்கே போகக்கூடும் என்று அவர்கள் சொன்னார்கள். ஆம். மந்திரி போவார். நிச்சயமாக மந்திரி போவது மட்டும் அல்ல, மந்திரியை சார்ந்த கட்சிக்காரர்களும் போவார்கள்.

மக்கள் பொதுவாக கடந்த பல ஆண்டுகளாகவே பார்த்து வருகிறார்கள். ஹரிஜனங்களுக்கு மதிப்பையும் மரியாதையும் தேடிக் கொடுக்கிறவர்கள் யார் என்பதை அவர்கள் பார்த்து வருகிறார்கள். அவர்களுக்காகப் பாடுபட்டு வருகிற கட்சி காங்கிரஸ்கட்சி தான் என்பதையும், அத்தகைய அரசாங்கம் இந்த அரசாங்கம் தான் என்பதையும் அவர்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஹரிஜன மக்கள் பல சலுகைகளை அடைந்திருக்கிறார்கள். அவர்கள் பூரணமாக இன்னும் முன்னேற்றம் அடையவில்லை. அதற்குக் காரணம், அன்னியருக்கு இந்த நாடு பல ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடந்த காரணத்தால், நாட்டில் திட்டம் போட்டு நிறைவேற்ற முடியாத நிலைமை இருந்தது. ஆனால் நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு நாம் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றிவிட்டு, மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தின் மத்தியில் இருக்கிறோம். மேலும், திட்டங்கள் நிறைவேற்றப்படும்போது, ஹரிஜனங்கள் இன்னும் அதிகமான நன்மை அடைவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

கல்வித் துறையில் நம் மாநிலத்தில் நாம் மிகவும் தீவிரமாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம். பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டாம் என்று நினைக்கக் கூடியவர் நாட்டில் ஒருவருமே இல்லை என்று சொல்லி விடலாம். சாதாரண ஏழை எளியவர்கள் கூட, பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டாம் என்று நினைப்பதில்லை. ஏழை ஹரிஜனங்கள் கூட தங்களுடைய பிள்ளைகள் படிக்கவேண்டும் என்பதிலே அக்கறை உள்ளவர்களாக இருக்கிறார்கள். அந்த எண்ணம் அவர்களுக்கு வந்து விட்டது. பொருளாதாரத் துறையில் நம் நாட்டில் நாம் போட்டிருக்கும் திட்டங்கள் நிறைவேறிக்கொண்டுவரும்போது, அந்த துறையில் ஹரிஜனங்கள் முன்னேறுவார்கள். 'நாடு உயர நாம் உயரவேண்டும்' என்ற நல்ல கண்ணோட்டத்துடன் பார்க்கவேண்டும். நாட்டை உயர்த்தாமல் நாம் மட்டும் எப்படி உயர்ந்து விடமுடியும் ? நாடு உயராமல் ஹரிஜனங்கள் மட்டும் உயர்ந்து விடமுடியாது. எல்லா மக்களும் முன்னேற வேண்டும். சுதந்திரமடைந்ததிலிருந்து நாம் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் இந்த நிலைமையில் ஹரிஜனங்களும் நிச்சயமாக உயர்ந்தநிலைக்கு வருவார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

மதம் மாறிய கிறிஸ்த்துவ சகோதரர்களைப் பற்றி சில அன்பர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நான் அவர்களுக்குச் சொல்வது என்னவென்றால்—அரசியல் நிர்ணயச் சட்டம் பல பெரியவர்கள், சிறந்த அறிவாளிகள், சட்ட நிபுணர்கள் எல்லோரும் சேர்ந்து செய்யப்பட்ட சட்டமாகும். அந்தச்சட்டத்திலே மதம் மாறிய கிறிஸ்துவ சகோதரர்களும் ஹிந்து ஹரிஜன் பெறும் உரிமைகளை எல்லாம் பெறலாம் என்று சொல்லவில்லை. இந்து சமூகத்தில் மிகவும் கஷ்டப்பட்ட ஹரிஜன மக்களுக்காக சில சலுகைகளை அதிலே நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அரசியல் நிர்ணய சட்டத்திலே எப்படி இருக்கிறதோ அதை அமுல் நடத்தும் வகையில்

**கனம் திரு. பூ. கக்கன் :** யாருக்கும் பயந்து கவரொட்டிகளை எடுத்து விடவில்லை. நல்ல முறையிலே விளம்பரம் பண்ணவேண்டும் என்பது தான். யாருக்கோ பயந்துகொண்டு, ஒருவர் கேட்பார் என்பதற்காக நாங்கள் வெளியிடாமல் இருந்துவிட்டோம் என்று சொல்வது நல்லதல்ல என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஹரிஜனங்கள் அர்ச்சகர்களாக வரவேண்டும் என்று கனம் அங்கத்தினர் சொன்னார்கள். ரொம்பப் பிரமாதமான யோசனை. ஹரிஜனங்களுக்காக அப்படியே கண்ணீர் வடிக்கிற மாதிரி இருக்கிறது. ஆடு நனைகிறதே என்று ஓநாய் கண்ணீர் வடித்ததாம். "ஹரிஜனங்களெல்லாம் அர்ச்சகர்களாகப் போய்ப் பணிசெய்யவேண்டும் என்கிற நிலைமையை நாங்கள் சொல்கிறோம்" என்று ஹரிஜனங்கள் மத்தியில் சொல்வதற்காகத் தான் கனம் கருணாநிதி அவர்கள் இப்படிச் சொல்லியுள்ளார்கள்.

ஹரிஜனங்கள் ஒரு காலத்தில் கோவில் பக்கத்திலேயே போக முடியாமல் இருந்தது. இப்போது ஐயர் போகும் அர்த்த மண்டபம் வரை இவர்களும் போக உரிமையிருக்கிறது. அப்படி அவர்களைத் தடுப்பதாக இருந்தால் 500 ரூபாய் வரை அபராதம் அல்லது ஆறு மாதம் ஜெயில் அல்லது நீதிபதி நினைத்தால் இரண்டும் விதிக்கலாம் என்று சட்டம் இருக்கிறது. ஹரிஜனங்கள் வேத பாராயணம் படித்து வேத பாராயணம் செய்யும் நிலையும் வரலாம். திரு. ராசாங்கம் அவர்களுக்கு ஏன் ஹரிஜனங்கள் என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டார். ஆதி திராவிடர் என்று முன்பு போல் இருக்கவேண்டுமென்று சொன்னார்கள். அவர் பல காலமாக ஹரிஜன் ஹாஸ்டல் நடத்தி வந்தவர். அப்போது அந்தப் பெயரின் பேரில் அவருக்கு வெறுப்பு கிடையாது. இப்போது தான் ஏன் இப்படி வைக்கிறீர்கள் என்று கேட்கிறார். சர்க்காரிலிருந்து அந்த ஹாஸ்டலை எடுத்து விட்டோம் என்ற கோபத்தால் சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஒரு ஹரிஜன சகோதரர் காந்தி அடிகளிடம் சொல்லித்தான் இந்தப் பெயர் வந்தது. ஹரிஜனங்கள் என்றால் ஆண்டவன் பிள்ளைகள் என்று பொருள். எல்லோருமே ஆண்டவனின் பிள்ளைகள் தான். ஆண்டவனை ஆபத்பாந்தவன், ஏழை பங்காளன் என்றெல்லாம் அழைக்கிறோம். எந்தப் பிள்ளை மெலிந்திருக்கிறதோ, அல்லது எந்தப் பிள்ளை சிரமப்படுகிறதோ அந்தப் பிள்ளை பேரில் தான் எல்லோருக்கும் பற்று இருக்கும். அதேபோல் சமுதாயத்தில் பின்தங்கிக் கிடக்கிற, கஷ்டப்படுகிற இந்த மக்களுக்கு அதனால் தான் அந்தப் பெயர் வைக்கப்பட்டது. இந்த ஹரிஜனங்களிடையே, பிளவுகள் இருக்கக்கூடாது, அருந்ததியர், வேடுவர்கள், என்றெல்லாம் இருக்கக்கூடாது என்று தான் பொதுவாக ஹரிஜனங்கள் என்று வைத்தால் நல்லது என்று ஏற்பாடு செய்தோம். ஆகவே பழைய முறையே நீடிக்கவேண்டுமென்று திரு. ராசாங்கம் அவர்கள் கூறுவதை என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை. பின்னர் ஹரிஜன பாடசாலைகள் பற்றிச் சொல்லப்பட்டது. முன்பு அவை லேபர் டிபார்ட்மெண்டின் கீழ் இருந்தது. இனி தனியாக ஹரிஜனங்களுக்கு பாடசாலைகள் அமைக்க உத்தேசம் இல்லை. மற்ற மாணவர்களுடன் சேர்ந்து படிக்கும்போதுதான் இந்தத் தீண்டாமை பேயை அகற்ற முடியும். அதற்காகத்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இருக்கிற ஹரிஜன இலாகா நடத்தும் பாடசாலைகள் தொடர்ந்து நடக்கும். ஏற்கெனவே நடந்தால் 8-வது வரை நடத்தலாம். ஹைஸ்கூல்களை எடுத்துக்கொண்டால் அங்கு போன பிற்பாடும் பாகுபாடு இருக்கக்கூடாது. இருக்கிற ஹைஸ்கூல்ஸ் கண்டினியூ செய்யும். 8-வது வரை உள்ள பாடசாலைகளும் இருப்பது கண்டினியூ செய்யும். மேலும் புதிதாக ஆரம்ப பாடசாலை அல்லது ஹைஸ்கூல்ஸ் ஏற்படுத்த உத்தேசம் இல்லை. அப்படிப்பட்ட பாகுபாட்டைச் செய்ய விரும்பவில்லை. ஹரிஜன பாடசாலையில் படிக்கும்போது நாம் தாழ்ந்தவர்கள், அவையெல்லாம் உயர்ந்த ஜாதிப் பிள்ளைகள் படிக்கும் பள்ளிகள் என்ற எண்ணம் ஏற்படக்கூடாது. எந்தவிதமான பாகுபாடும் கூடாது என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பின்னர் பணம் செலவழிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். கிணறுகள் வெட்டிக் கொடுத்திருக்கிறோம், மாடுகள் வழங்கியிருக்கிறோம். மாணவர்களுக்கு கல்வி கற்றுக்கொடுக்கப்படுகிறது. இவையெல்லாம்



பணம் செலவழிக்காமலா முடியும். சிதம்பரத்தில் அன்று இருந்த மாதிரியா பாடசாலைகள் இருக்கின்றன ? நல்ல பாடசாலைகள் அமைக்கப்பட்டு ஹாஸ்டல் போன்ற வசதிகள் எல்லாம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஒன்றும் செய்யவில்லை என்று சொல்வது நல்லதல்ல. ராசாங்கம் அவர்கள் மதப் பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பதாக அறிகிறேன். அது ரொம்ப நல்லது. இந்து மதத்தில் ஏற்பட்டிருக்கிற மாசைத் தீர்க்க அந்த பிரசாரம் பயன்படும். பின்னர், திண்டுக்கல் அங்கத்தினர் ஆடு வாங்கிக் கொடுத்தால் நல்லது என்கிறார்கள். இப்போது விவசாய உற்பத்தியை அதிகரிக்க காளை மாடுகள்தான் கொடுக்கிறோம். பால் மாடு வாங்க கூட்டுறவு சொஸைட்டிகள் மூலம் கடன் கொடுக்கப்படுகிறது. ஆடு வாங்கிக் கொடுத்தால் கிடைதான் வைக்க முடியும். உழ முடியாது. ஆகவே ஆடு வாங்கிக் கொடுப்பதில் கவனம் செலுத்தப்படமாட்டாது. பின்னர் திரு. ஆறுமுகம் அவர்கள் பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் ஹரிஜன் சகோதரர் ஒருவர் வரவேண்டுமென்று சொன்னார்கள். பல ஆண்டுகளாகவே அது அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது. "அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி எடுத்த கருமங்கள் ஆகா" என்பார்கள். அது எந்த சமயத்தில் வருமோ அந்த சமயத்தில் வரும். திரு. சுப்பையா அவர்கள் வெட்டுப் பிரேரணையிலேயே தெரிவித்திருக்கிறார். குடியிருப்புகளை அவர்களுக்கு சொந்தமாக்கிக் கொடுக்கவேண்டுமென்று. மனைக்கட்டுகள் வாங்கிக்கொடுக்கிறோம். எந்த இடத்திலும் போதுமான இடமிருந்தால் அதை அக்வயர் செய்து கொடுக்கிறோம். வசதியில்லை, நெருக்கடியாக இருக்கிறது, வேறு இடம் வாங்கிக்கொடுங்கள் என்றால் எல்லோரும் சேர்ந்துபோகக் கூட இடங்கள் வாங்கிக் கொடுக்கிறோம்.

தஞ்சை ஜில்லாவில் கோவில் நிலங்களையும், மடாலய நிலங்களையும் கூட்டுறவு சொசைடியின் மூலமாகச் சாகுபடி செய்து வருகிறார்கள். அந்த முறையில் சாகுபடி நன்றாக நடந்து வருவது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். உச்சவரம்புச் சட்டத்திலிருந்து கூட விதிவிலக்குக் கொடுத்து கூட்டுறவு சொஸைட்டி மூலம் சாகுபடி செய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம்.

மின்சாரத்திற்காக வருஷா வருஷம் 1½ லட்சம் ரூபாய் கொடுக்கிறோம். ஹரிஜனங்கள் வசிக்கும் எத்தனை ஊர்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்கிறோம் என்பதை எலக்ட்ரிசிடி போர்டு ஸ்டேட்மெண்டைப் பார்த்தால் நன்றாகத் தெரிந்துகொள்ளலாம். எவ்வளவு தூரம் அந்தக் காரியத்தைச் செய்யமுடியுமோ, அதனை அரசாங்கம் செய்து வருகிறது.

**திரு. மு. கருணாநிதி :** 1957–58-ல் 90 ஹரிஜன காலனிகளுக்கு மின்சார வசதி கொடுக்க 1,54,818 ரூபாய் உதவித் தொகையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1961–62-ல் 235 ஹரிஜன காலனிகளுக்கு மின்சார வசதி கொடுக்க 1,50,000 ரூபாய் அளவுக்குத்தான் உதவித் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வித்தியாசத்திற்குக் காரணம் என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** வித்தியாசத்திற்குக் காரணம் சில இடங்களில் ஹரிஜன மகாஜனங்கள் பிரயத்தனம் செய்யாமல் இருந்து விட்டது தான்.

விவசாயத் தொழிலாளர் பற்றி மதிப்பிற்குறிய சுப்பையா அவர்கள் சொன்னார்கள். தஞ்சை ஜில்லா விவசாயிகளின் நன்மையைக் கருதித்தான் விவசாயக் கூலி சட்டத்தை அங்கு அமல் நடத்தவில்லை. பண்ணையாள் சட்டப்படி அவர்கள் நல்ல பலனை அடைந்து வருவதால் அது அவசியமில்லை. அரசாங்கம் அப்போதைக்கப்போது அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

உழவு மாடு கொடுப்பதற்காகச் சீட்டு போடும் முறை வேண்டாமென்று சொன்னார்கள். அந்தச் சீட்டு போடும் முறை இல்லாவிட்டால் இஷ்டப்பட்டவர்களுக்கு உழவு மாடுகளைக் கொடுத்து விடுவார்கள். திருவுளச் சீட்டுப் பிரகாரம் யாருக்கு விழுகிறதோ அவர்களுக்கு உழவு மாடுகள் கொடுக்கப்படும். இல்லையென்றால், மந்திரி சொன்னார், கலெக்டர் சொன்ன

வாங்குவதற்காக அல்ல. இன்று ஆயிரக்கணக்கான பிராமண வாலிபர்கள் எங்கள் கழகத்தில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் சொன்னதைத் திருத்திக்கொள்ளவேண்டும்.

**கனம் திரு. பூ. கக்கன் :** பிரிவினை என்றால் பிரி வினை என்பதாகும். சில பிராமணர்கள் அதில் சேர்ந்திருந்தால் அது பற்றி நான் வருந்துகிறேன். நாடு நன்றாக இருக்க பிராமணன்-பிராமணன் அல்லாதான், ஹரிஜன்-ஹரிஜன் அல்லாதான் என்ற பாகுபாடுகள் எல்லாம் ஒழிய வேண்டும்.

**திரு. து. ப. அழகமுத்து :** அமைச்சர் அவர்கள் ஹரிஜனங்களுக்காக வீடு கட்டுவதற்கு ஒதுக்கிய தொகை எட்டு மடங்கு அதிகமாகியிருக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள்..................

MR. SPEAKER : I want to know whether the hon. Member is pressing his cut motion or not. I do not want any other explanation.

SRI T. P. ALAGAMUTHU : I am pressing my cut motion, Sir.

MR. SPEAKER : The question is—

"That the allotment of Rs. 3,89,71,800 under Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes be reduced by Rs. 100".

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

2-05 p.m "That the Government be granted a sum not exceeding Rs. 3,89,71,800 under Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes".

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

## VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

*Nil.*

### B. Reports, Notifications and other papers.

61. *Annual Financial Statement for 1963-64 and Supplementary Financial Statement for 1962-63 of the Madras State Electricity Board.*

† 62. *Note on Demand No. XIII—Education.*

* Circulated to Members on the 13th March 1963.



## APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 241 on page 179 supra.]

STATEMENT OF CASES OF SMUGGLING OF LIQUOR FROM PONDICHERRY INTO MADRAS STATE DURING THE YEARS 1960, 1961 AND 1962.

| Year. | Number of cases of smuggling of liquor from Pondicherry into Madras State apprehended by the police. | Of those referred to in column (2), number of case in which prosecutions were launched. | Of those referred to in column (3), number of cases ended in conviction. | Of those referred to in column (3), number of cases ended in acquittal. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1960 .. | 638 | 632 | 601 | 31 |
| 1961 .. | 1,047 | 1,046 | 934 | 112 |
| 1962 .. | 703 | 677 | 525 | 72 |

## APPENDIX II.

[*Vide* Answer to Starred Question No. 242 on page 181 supra.]

I. COLLEGE OF ENGINEERING, GUINDY :—

Class—

| *Under-Graduates* | | | *Boys.* | *Girls.* | *Total.* |
|---|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) | (4) |
| I year | (New Regulation) | .. .. | 271 | .. | 271 |
| II year | Do. | .. .. | 270 | 1 | 271 |
| III year | Do. | Civil .. | 40 | .. | 40 |
| | Do. | Mechanical | 101 | .. | 101 |
| | Do. | Electrical .. | 52 | .. | 52 |
| | Do. | Tele-communication. | 22 | .. | 22 |
| | Do. | Mining .. | 20 | .. | 20 |
| IV year | Do. | Civil .. | 47 | .. | 47 |
| | Do. | Mechanical .. | 75 | .. | 75 |
| | Do. | Electrical .. | 63 | .. | 63 |
| Final year | (Old Regulation) | Civil .. | 77 | .. | 77 |
| | Do. | Mechanical .. | 97 | .. | 97 |
| | Do. | Electrical .. | 68 | .. | 68 |
| | Do. | Tele-communication. | 30 | .. | 30 |
| | Do. | Mining .. | 14 | .. | 14 |
| Conversion course | .. | .. .. .. | 3 | .. | 3 |
| | | | 1,250 | 1 | 1,251 |

| | |
|---|---|
| I Under-Graduate Courses .. .. | 1,251 |
| II Post-Graduate Courses .. .. | 56 |
| Grand total .. | 1,307 |

II. GOVERNMENT COLLEGE OF TECHNOLOGY, COIMBATORE :—

| *Under-Graduate Courses.* | | | *Boys.* | *Girls.* | *Total.* |
|---|---|---|---|---|---|
| (1) | | | (2) | (3) | (4) |
| I year | (New Regulation) | | 128 | .. | 128 |
| II year | Do. | | 95 | .. | 95 |
| III year | Do. | Civil | 19 | .. | 19 |
| | Do. | Mechanical | 46 | .. | 46 |
| | Do. | Electrical | 20 | .. | 20 |
| IV year | Do. | Civil | 25 | .. | 25 |
| | Do. | Mechanical | 43 | .. | 43 |
| | Do. | Electrical | 24 | .. | 24 |
| Final year | (Old Regulation) | Civil | 33 | .. | 33 |
| | Do. | Mechanical | 49 | .. | 49 |
| | Do. | Electrical | 31 | .. | 31 |
| | | Total .. | 513 | .. | 513 |

III. COLLEGE OF ENGINEERING, GUINDY: —

| *Post-Graduate Courses.* | | *Boys.* | *Girls.* | *Total.* |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| Post-Graduate Course in Public Health Engineering. | | 15 | .. | 15 |
| Do. | Hydraulics and Dam Constrcution | 10 | .. | 10 |
| Do. | Structural Engineering .. .. | 10 | .. | 10 |
| Do. | Internal Combustion Engineering. | 5 | .. | 5 |
| Do. | Soil Mechanics .. .. ... | 6 | .. | 6 |
| Do. | Electrical Machine Design .. | 10 | .. | 10 |
| | Total .. | 56 | .. | 56 |

[181-ம் பக்கத்திலுள்ள 242-ம் எண்ணுள்ள நட்சத்திரக் குறியிட்ட கேள்வியின் பதிலைக் காண்க.]

I. கிண்டி பொறியியல் கல்லூரி.

பட்டப்படிப்பு—

| | ஆண். | பெண். | மொத்தம். |
|---|---|---|---|
| முதலாண்டு (புதிய பாடத்திட்டம்) .. | 271 | .. | 271 |
| இரண்டாம் ஆண்டு .. | 270 | 1 | 271 |
| மூன்றும் ஆண்டு— | | | |
| சிவில் துறை .. | 40 | .. | 40 |
| மெகானிகல் துறை .. .. | 101 | .. | 101 |
| எலக்டிரிகல் துறை .. .. .. | 52 | .. | 52 |
| டெலி கம்யூனிகேஷன் துறை .. | 22 | .. | 22 |
| மைனிங் துறை .. .. .. | 20 | .. | 20 |
| நான்காம் ஆண்டு— | | | |
| சிவில் துறை .. .. .. | 47 | .. | 47 |
| மெக்கானிகல் துறை .. .. | 75 | .. | 75 |
| எலக்டிரிகல் துறை .. .. .. | 63 | .. | 63 |





I. கிண்டி பொறியியல் கல்லூரி—தொடர்ச்சி.

பட்டப்படிப்பு—தொடர்ச்சி.

| | ஆண். | பெண். | மொத்தம். |
|---|---|---|---|
| இறுதி ஆண்டு (பழைய பாடத்திட்டம்)— | | | |
| சிவில் துறை .. .. .. | 77 | .. | 77 |
| மெக்கானிகல் துறை .. .. | 97 | .. | 97 |
| எலக்டிரிகல் துறை .. .. | 68 | .. | 68 |
| டெலி கம்யூனிகேஷன் துறை .. | 30 | .. | 30 |
| மைனிங் துறை .. .. .. | 14 | .. | 14 |
| மாற்றியமைக்கப்பட்ட பாடத்திட்டம் .. | 3 | .. | 3 |
| மொத்தம் .. | 1,250 | 1 | 1,251 |

பட்டப்படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு—

| | ஆண். | பெண். | மொத்தம். |
|---|---|---|---|
| பொது சுகாதார எஞ்சினீயரிங் துறை .. | 15 | .. | 15 |
| ஹைடிராலிக்ஸ் மற்றும் அணைக்கட்டும் துறை .. .. .. .. | 10 | .. | 10 |
| ஸ்டரக்சுரல் எஞ்சினீயரிங் துறை .. | 10 | .. | 10 |
| இன்டர்னல் கம்பஸ்சன் எஞ்சினீயரிங் துறை .. .. .. .. | 5 | .. | 5 |
| மண்வளத்துறை .. .. .. | 6 | .. | 6 |
| எலக்டிரிகல் மெஷின் டிசைன் துறை .. | 10 | .. | 10 |
| மொத்தம் .. | 56 | .. | 56 |

| | |
|---|---|
| பட்டப்படிப்பு .. .. | 1,251 |
| பட்டப்படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு .. .. | 56 |
| மொத்தம் .. | 1,307 |

II. அரசியலார் பொறியியல் கல்லூரி, கோயம்புத்தூர்.

| | ஆண். | பெண். | மொத்தம். |
|---|---|---|---|
| முதலாண்டு (புதிய பாடத்திட்டம்) .. | 128 | .. | 128 |
| இரண்டாம் ஆண்டு .. | 95 | .. | 95 |
| மூன்றும் ஆண்டு— | | | |
| சிவில் .. .. | 19 | .. | 19 |
| மெக்கானிக்கல் .. .. .. | 46 | .. | 46 |
| எலக்டிரிக்கல் .. .. .. | 20 | .. | 20 |
| நான்காம் ஆண்டு— | | | |
| சிவில் .. .. .. .. | 25 | .. | 25 |
| மெக்கானிக்கல் .. .. .. | 43 | .. | 43 |
| எலக்டிரிக்கல் .. .. .. | 24 | .. | 24 |
| இறுதி ஆண்டு (பழைய பாடத்திட்டம்)— | | | |
| சிவில் .. .. .. .. | 33 | .. | 33 |
| மெக்கானிக்கல் .. .. .. | 49 | .. | 49 |
| எலக்டிரிக்கல் .. .. .. | 31 | .. | 31 |
| மொத்தம் .. | 513 | .. | 513 |

னார், எம்.எல்.ஏ. சிபார்சு செய்தார், என்ற முறையில் குற்றம் சாட்ட வழி ஏற்படும். திருவுளச் சீட்டு முறைதான் நல்ல முறை என்று அரசாங்கம் கருதுகிறது.

மதிப்பிற்குரிய கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் முக்குலத்தோர் சமுகத்தினரை "மோஸ்ட் பாக்வார்டு கிளாஸி"-ல் சேர்க்கவேண்டுமென்று சொன்னார்கள். வருமான அடிப்படையில் சலுகைகளைக் கொடுப்பது பற்றிப் பேசப்பட்டு வருகிறது. அது மத்திய அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே, கனம் அங்கத்தினர் அவர்களுடைய கருத்தின் பேரில் எந்த விதமான முடிவும் சொல்ல முடியாத நிலைமை இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஹாஸ்டல் கமிட்டிகளில் அங்கத்தினர்களை நியமிக்கும்போது எல்லாக் கட்சிகளுக்கும் அதிலே இடம் கொடுக்க முடியாது. அது மந்திரி பார்த்து நியமிப்பது இல்லை. கலெக்டர் பார்த்து ஹரிஜன சேவையில் ஆர்வம் உள்ளவரை அங்கத்தினர்களாகப் போடுகிறார்கள். இன்னாரைத்தான் போடவேண்டுமென்று சொல்வது சரியல்ல. கலெக்டர் அவர்களுடைய கண்ணோட்டத்தில் ஆட்களைப் போடுகிறார் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திருவாடானைப் பகுதியில் ஹரிஜன ஹாஸ்டல் ஏற்படுத்தவேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தில் பல இடங்களில் ஹாஸ்டல்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. எந்த எந்த இடத்தில் ஹாஸ்டல் தேவை என்று சிபார்சு செய்கிறார்களோ அதை அரசாங்கம் கவனித்து அந்த சிபார்சை ஏற்றுக்கொள்ள முன் வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் கருணாநிதி அவர்கள் குறிஞ்சிப்பாடி ஹாஸ்டலைப் பற்றிச் சொன்னார்கள். அது இப்போது நன்றாக நடந்து வருகிறது. நன்றாக நடந்துவரக்கூடிய தனிப்பட்ட ஹாஸ்டல்களை அரசாங்கம் எடுத்துக்கொள்வதில்லை. நன்றாக நடக்கவில்லை என்று அரசாங்கம் உணர்ந்தால் அந்த ஹாஸ்டலை எடுத்துக்கொள்ளப் பின்வாங்காது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கனம் ஆறுமுகம் அவர்கள் கால்நடைகள் வாங்க 500 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். இப்போது மாடு, கலப்பை, விதை வாங்குவதற்காக 400 ரூபாய் கொடுத்து உதவி செய்கிறோம். லஞ்ச ஊழல்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். எங்கே அந்த மாதிரி நிலைமை இருக்கிறதோ, அந்தப் புகார்களை எழுதி அனுப்பினால் விசாரித்து உண்மையானால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹரிஜனங்களுக்காக வீடுகள் கட்டும்போது அந்த வேலையையெல்லாம் ஹரிஜனங்களுக்கே கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். "வீடுகள் கட்டும்போது நீங்களே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறீர்களா" என்று அவர்களைக் கேட்கிறோம். முதல் போடப் பணம் இல்லையென்று சொன்னால்தான் ஹரிஜன நல இலாகா மூலமாகவே அவர்கள் சொல்கிற பிரதிநிதியை அல்லது கண்ட்ராக்டரைக் கொண்டு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. சின்னையன் அவர்கள் பேசும்போது பறி தைக்கும் தொழிலாள மக்களைப் பற்றிக் குறிப்பிட்டு அவர்கள் அறிவில்லாதவர்கள் என்று சொன்னார்கள். அவர்கள், கஷ்டப்படுகிறார்கள், சிரமப்படுகிறார்கள், ஊழியம் செய்கிற மக்கள் என்று சொல்லியிருந்தால் நான் ஒப்புக்கொள்ள முடியும். அவர்கள் அறிவில்லாத மக்கள் என்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. பெரிய மகான்கள் எல்லாம் ஹரிஜன சமுதாயத்திலே தோன்றியிருக்கிறார்கள். அம்பேத்கார் அவர்கள் இந்த சமுதாயத்தில் பிறந்தவர்கள் தான். அவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னால் நான் பொறுத்துக்கொள்வேன். அவர்கள் அறிவில்லாத மக்கள் என்று சொன்னால் என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது.



**திரு. எஸ். சின்னையன் :** கனம் தலைவர் அவர்களே, அவர்கள் அறிவு இல்லாதவர்கள் என்று நான் சொல்லவில்லை. ஹரிஜனங்களில் ஒரு பிரிவினர் அறிவும் ஆற்றலும் குறைந்தவர்களாக இருக்கிறார்கள் என்று தான் சொன்னேன். ஹரிஜனங்கள் எல்லோரையும் அறிவு அற்றவர்கள் என்று நான் சொல்லவில்லை. 2-00 p.m.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்களே, ஹரிஜனங்களில் ஒரு பிரிவினர் கூட அறிவற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்ள முடியாது.

**கனம் சபாநாயகர் :** அவர்கள் படிக்காதவர்கள் என்று சொல்வதற்குப் பதில் இப்படிச் சொல்லியிருப்பார்.

**கனம் திரு. பூ கக்கன் :** திருமதி அனந்தநாயகி அவர்கள் பேசும்போது இன்னும் இரண்டு மடங்கு அதிகத் தொகை ஒதுக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஆண்டு தோறும் ஒதுக்கப்படும் தொகை உயர்ந்துகொண்டே போகிறது. எம்.ஏ., எம்.எஸ்.ஸி., எம்.காம்., படிக்க 40 மாணவர்களுக்கு சலுகை வழங்குகிறோம். லா காலேஜில் படிக்க பின்தங்கிய மாணவர்களுக்கு 14 பேர்களுக்கு கொடுக்கிறோம். டி நோட்டிபைட் ட்ரைப்ஸுக்கு உள்ள சலுகைகள் போக இது, கொடுக்கப்படுகிறது. ஆக, பார்த்து எது எதைச் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்கிறோம். சென்னை நகரில் உள்ள ஒரு கட்டிடம் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆதிவாசிகளுக்காக காலனிகள் கட்டுகிறோம். மாணவர்கள் படிக்க, இருக்க வசதி செய்து கொடுக்கிறோம். ஆதிவாசிகளின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசாங்கம் பாடுபட்டு வருகிறது. அவர்களுக்கு எவ்வளவு செய்யமுடியுமோ அவ்வளவும் செய்யப்படுகிறது. ஏக காலத்தில் எல்லாவற்றையும் செய்யமுடியாது. திரு முருகையன் அவர்கள் சிங்கம்புணரி சேர்மனுக்கு தங்கப் பதக்கம் கொடுத்தது பற்றி சொன்னார். அவர்கள் செய்த சேவையைப் பார்த்து கலெக்டர் சிபார்சு செய்ததின் பேரில் தங்கப் பதக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஹரிஜன இலாகா பாடசாலைகளை பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்புவிக்க வேண்டுமென்று சொன்னார்கள். தஞ்சை ஜில்லா பிரதிநிதி எந்தவிதமான முடிவும் எடுக்கவில்லை. பின்னர் பஞ்சாயத்து யூனியன் செய்ய வேண்டிய சில வேலைகளுக்கு மக்கள் தொகை கொடுக்கவேண்டுமென்றிருக்கிறது. ஹரிஜனங்கள் கொடுக்கமுடியாவிட்டால் ஹரிஜன இலாகாவிலிருந்து கொடுக்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருக்கிறோம். எல்லாம் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும். பின்னர் பல கோரிக்கைகள் தெரிவித்திருக்கிறார்கள். நல்ல கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன். இந்த இலாகா டயரக்டர், ஹோம் டிபார்ட்மெண்ட் செக்ரடரி, மற்றும் உள்ளவர்களுக்கெல்லாம், அவர்கள் குறிப்பாக தமிழ்நாட்டிலுள்ள இந்த, ஏழை, எளிய பின்தங்கிய மக்களுக்கு சேவை செய்து வருவதற்கு என் பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** 1,500 ரூபாய் இன்கம் லிமிட் வைத்திருக்கிறோம், ஸ்காலர்ஷிப் கொடுக்க. அதை உயர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அது பற்றி ஒன்றும் சொல்லவில்லை. உயர்த்தப் போகிறார்களா இல்லையா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** நாடு உயர நாம் உயர்வோம். நாட்டுக்கு நிறையப் பணம் வரும்போது அதுவும் உயர்த்தப்படும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** அமைச்சர் அவர்கள், நாங்கள் வோட்டு வாங்குவதற்குத் தான் பிராமணர் என்பதை பிராமணீயம் என்று மாற்றிக்கொண்டோம் என்று சொன்னார்கள். இந்த மன்றத்திற்கு நாங்கள் 1957-ல் தான் வந்தோம். 1949-லே பிராமணீயம் என்று திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கை மாற்றப்பட்டன. ஆகவே வோட்டு

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

**Saturday, 16th March 1963.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS

## STARRED QUESTIONS

### சிறு சேமிப்புத் திட்டம்

**253 கேள்வி.*—**திரு. எஸ். மாதவன்** (திரு. இராம. அரங்கண்ணல் சார்பாக) : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிறு சேமிப்புத் திட்டத்துக்காக மாவட்டந்தோறும் தாசில்தார்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்களா ?

(இ) எந்தத் தேதியில்? எத்தனை பேர் ?

(உ) அவர்களால் சராசரி ஒரு மாத காலத்தில் சேர்க்கப்பட்ட தொகை என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) ஆம். சிறு சேமிப்புத் திட்டத்திற்காக ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திற்கும் ஒரு தாசில்தாரை நியமித்துள்ளோம்.

(இ) இதற்கான அனுமதி நிதித் துறையில் 14-ம் தேதி டிசம்பர்மாதம் 1962-ல் வெளியான 1483-ம் எண் அரசாங்க ஆணையில் கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாணையில் தாசில்தார்களை உடனே நியமிக்கும்படி கலெக்டர்களைக் கேட்டிருக்கிறோம். ஒவ்வொரு அபிவிருத்தி மாவட்டத்திற்கும் ஒரு தாசில்தாரை நியமித்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களுக்கு இருவர் வீதமும், கன்னியாகுமரி, நீலகிரி, செங்கற்பட்டு மாவட்டங்களுக்கு ஒருவர் வீதமும் மொத்தத்தில் 21 தாசில்தார்கள் உள்ளனர்.

(உ) 1962 டிசம்பர் இறுதியிலிருந்துதான் இவர்கள் வேலையேற்றுக்கொண்டிருப்பதால், வசூல் எவ்வளவு தூரம் அபிவிருத்தியடைந்துள்ளது என்பதை இதற்குள் சொல்வதற்கில்லை.

(*a*) Yes, Sir. One Tahsildar has been appointed for each Development district.

(*b*) The sanction was given in G.O. Ms. No. 1483, Finance, dated 14th December 1962 and the Collectors have been requested to post Tahsildars immediately. One Tahsildar has been sanctioned for each development district. In all there are 21 Tahsildars at

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** காரணம் சிறு சேமிப்பின் அருமையை சமூகத்தவர்கள் அறிந்துகொள்ளவில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா :** இப்போது மாநில அளவில் ஒரு ஆலோசனை போர்டுதான் இருக்கிறது. மாவட்டவாரியாக இம் மாதிரி ஆலோசனை போர்டு அமைக்க அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது அவ்வாறு உத்தேசம் இல்லை.

**திரு. அ. துரைசாமி :** சிறு சேமிப்புத் திட்டத்தின் நன்மைகளை எடுத்துச் சொல்ல சர்க்கார் ஏதாவது திட்டமிட்டிருக்கிறார்களா ? அப்படியானால் அதை துரிதப்படுத்துவதற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்போது தாசில்தார்கள் இதற்கென்று தனியாக நியமிக்கப்பட்டிருப்பது இந்த உத்தேசத் தோடுதான். வேறு பிரசாரமும் நடத்தப்பட்டு வருகிறது. அதோடு இந்த மன்றத்தின் கனம் உறுப்பினர்கள் கூட அக்கறை எடுத்துக்கொண்டு செல்லுகிற இடங்களிலெல்லாம் இந்தப் பிரசாரம் செய்தால் அதுவும் பெரிதும் பயன்படும்.

**திரு. கே. பொன்னையா :** நமது நாட்டில் பல தொழில்கள் இருக்கின்றன. ஒவ்வொரு தொழிலுக்கும் சிறு சிறு கமிட்டிகளை மாவட்ட ரீதியாக அமைத்தால் நிதி வசூலிப்பதற்கு வசதியாக இருக்கும். அந்த மாதிரி கமிட்டிகளை ஏற்படுத்த சர்க்கார் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தொழிற் சங்கங்கள் இதில் அக்கரை எடுத்துக் கொண்டால் வேண்டிய பலனை அளிக்கும். அவ்வாறு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று தான் அவர்கள் கோரப்படுகிறார்கள்.

**திரு. சி. பொன்னுசாமி:** இந்த சிறு சேமிப்பை ஆதாரமாகக் கொண்டு அவர்களுக்கு லோன் கொடுக்க ஏதாவது வசதி செய்ய முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சேமித்து விட்டு உடனே கடன் வாங்கிக்கொண்டால் சேமிப்பின் பலனே போய் விடும்.

**திரு. ஆர். ரங்கசாமி :** புதிதாக நஞ்சைகளுக்கு வரி போட்டிருப்பதால் கட்டாய சிறு சேமிப்பிலிருந்து விவசாயிகளுக்கு, குறைந்த பட்சம் 25 ரூபாய் வரி செலுத்தக் கூடிய பட்டாதார்களுக்கு விதி விலக்கு அளிக்க சர்க்கார் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வரிகள் போடப்பட்டு, செலவினங்கள் அதிகமாக ஏற்பட்டிருக்கிற காரணத்தினால் சிறு சேமிப்பு வேண்டியது ரொம்பவும் அவசியம். செலவைக் குறைத்துக் கொள்ளவேண்டியது என்பது நெருக்கடி நிலையில் அவசியம். செலவைக் குறைத்துக்கொண்டு சேமித்து வைப்பது என்பது நலனை அளிக்குமே தவிர பாதகம் அளிக்காது.



**திரு. கே. பி. பழனி :** தேசீய சேமிப்புத் திட்டத்திற்கும், சிறு சேமிப்புத் திட்டத்திற்கும் ஏதாவது வித்தியாசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** தேசீய சேமிப்புத் திட்டத்தின் ஒரு பகுதிதான் சிறு சேமிப்பு இயக்கம்.

**திரு. சோ. ஆறுமுகம் :** சிறு சேமிப்புத் திட்டத்திற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிற தாசில்தாருக்குச் சம்பளம் எந்த அளவில் கொடுக்கப்படுகிறது ? இந்தத் திட்டத்திற்கென்று வேலை செய்கின்ற பணிக்குத் தனியாக வாகன வசதி செய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஜீப் கொடுப்பதென்றால் முடியாது. அவரவர்களுக்கு உரிய சம்பளம் அவரவர்களுக்கு வழங்கப்படும்.

### சர்க்கார் ஏரிகள் (அறந்தாங்கி வட்டம்)

*254 **கேள்வி.—திரு. ஆ. துரையரசன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அறந்தாங்கி தாலுக்காவில் உள்ள சர்க்கார் ஏரி மராமத்து வேலைகளைப் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கும்படி அரசாங்கத்திற்கு மாவட்டக் கவுன்சில் தீர்மானம் வந்துள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

### பெரியமூருக்குத் தனி பஞ்சாயத்து

*255 **கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

செஞ்சி தாலுக்கா, தேவதானம் பேட்டை பஞ்சாயத்திடமிருந்து பெரியமூர் கிராமத்திற்குத் தனி பஞ்சாயத்து பிரித்துக் கொடுக்க மகஜர் வந்துள்ளதா ? அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No such petition has been received.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, is the Hon. Minister aware that there have been several applications for bifurcation of the existing panchayats in certain blocks and if so, is there any proposal under the consideration of the Government to bifurcate panchayats before elections are conducted to the panchayats?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I would like to have notice. I have stated before that panchayats are not bifurcated in the middle of the term but when the General Elections are to be held, the delimitation of panchayats may be taken up for consideration.

the rate of two for the districts of North Arcot, South Arcot, Thanjavur, Tiruchirappalli, Salem, Coimbatore, Madurai, Ramanathapuram and Tirunelveli and at the rate of one for the districts of Kanyakumari, Nilgiris and Chingleput.

(c) Since the staff has been in position only from the close of December 1962, it is now too soon to assess the progress of collections made.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் தலைவர் அவர்களே, சிறு சேமிப்புத் திட்டம் மூலமாகச் சேர்ந்துள்ள மொத்தத் தொகை எவ்வளவு? மாதத்துக்கு மாதம் இப்படிச் சேரும் தொகை வளர்ந்துகொண்டு வருகிறதா? அல்லது குறைந்து கொண்டு வருகிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்த போது இதைப்பற்றிக் குறிப்பிட்டேன் என்று நினைக்கிறேன். இப்போது என்னிடம் புள்ளிவிவரம் இல்லை. அது சில சமயங்களிலே அதிகப்படுகிறது. மற்றச் சமயங்களில் குறைகிறது. இந்த ஆண்டிலே குறைந்திருப்பதால்தான் இந்தத் தாசில்தார்களெல்லாம் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. கே. பொன்னையா :** இந்த சிறு சேமிப்புத் திட்டத்தைப் பொறுத்த வரையில் மாநிலத்திலும், மாவட்டங்களிலும் கமிட்டிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படியானால் அந்தக் கமிட்டிகளின் வேலை என்ன?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மாநிலத்திலே ஒரு கமிட்டி இருக்கிறது. அது ஒரு ஆலோசனைக் குழு. எவ்வாறு இந்த இயக்கத்தை பலப்படுத்துவது என்று அப்போதைக்கப்போது ஆலோசனை கூறுவதற்காக இந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. பொன்னையா :** ஸார், இந்தத் திட்டத்தைத் தொழிலாளர்கள் வரவேற்கிறார்கள். இந்தத் திட்டத்திலே, குறைந்தது 5 ரூபாய் என்றும், அதிகப்படியாக 300 ரூபாய் என்றும் வைத்திருக்கிறார்கள். இந்த 5 ரூபாயை 1 ரூபாய் அல்லது 2 ரூபாயாகக் குறைக்க முடியுமா என்று கேட்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஐந்து ரூபாயை விடக் குறைக்க வேண்டிய அவசியம் இல்லை. அப்படிக் குறைத்தால் போதிய அளவுக்கு, முயற்சிக்கு ஏற்றவாறு பலன் கிட்டாமல் போய் விடலாம்.

**திரு. சி. பொன்னுசாமி :** கனம் ஐயா, இப்போது மத்திய சர்க்காரில் சிறு சேமிப்பு கட்டாயத் திட்டமாகக் கொண்டு வருவதால் இந்த நம் திட்டம் பாதிக்கப்படுமா? அப்படியானால் அதைச் சரிக்கட்டுவதற்கு என்ன யோசனை செய்திருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.



**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கட்டாயத் திட்டமாகக் கொண்டு வந்தாலும் இந்த மாநிலத்துக்கு அதில் பங்கு கிடைக்கும். இதனால் குறைந்து விட்டால் பாதகம் இல்லை.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, previously the Village Officers were also appointed to collect small savings to a certain percentage. Is it in continuation of these collections, Special Tahsildar are appointed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have no information. I would like to have notice, Sir.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, விவசாயிகள், வியாபாரிகள் ஆகியவர்களிடம் எந்த அடிப்படையில் இந்த சிறு சேமிப்புத் திட்டத்தை வசூலிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதை வசூலித்தால் அவர்களுக்குக் கமிஷன் கிடைக்கும். அந்த அடிப்படையில் அக்கறை உள்ளவர்கள் இதில் ஈடுபடலாம். இதை ஒரு சமூக சேவையாகவும் கருதவேண்டும். மக்கள் ஓரளவுக்குச் செலவைக் குறைத்து, சேமித்து அவசியத் தேவைக்குக் கிடைக்கும் வகையில் அவர்களுக்கு வழி காட்டுவது ஒரு சிறந்த சமூக சேவை. மற்ற பொது மக்களும் இதில் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கோரப்படுகிறார்கள்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** இந்த சிறு சேமிப்புத் திட்டத்தில் கிடைக்கக் கூடிய பணம் நம் மாநிலச் செலவினங்களுக்கு வழி நிலையாக உதவுகிறதா? அல்லது மத்திய சர்க்காருக்கு இது வசூலித்துக் கொடுக்கப்படுகிறதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இரு சர்க்கார்களும் பகிர்ந்து கொள்ளுகின்றன.

**திரு. எஸ். மாதவன் :** தலைவர் அவர்களே, இந்த சிறு சேமிப்புத் திட்டத்தை கட்டாய சிறு சேமிப்புத் திட்டமாக மாற்ற அரசாங்கம் உத்தேசிக்கின்றதா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மத்திய அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தை கனம் அங்கத்தினர்கள் பார்த்திருப்பார்கள். அதிலே கட்டாய சிறு சேமிப்புத் திட்டமாக மாற்ற இப்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கட்டாய ப்ராவிடெண்ட் ஃபண்ட் என்பதும் கட்டாய சிறு சேமிப்பு இயக்கம் போன்றது தான். அதை இந்த அரசாங்கம் மேற்கொண்டிருப்பது கனம் அங்கத்தினருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

**திரு. து. ப. அழகமுத்து :** சிறு சேமிப்புத் திட்டத்தில் எதிர்பார்க்கிற அளவு பணம் கிடைக்கவில்லை என்று பட்ஜெட் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) : Not now. The supply of mid-day meals in the case of 22 caste Hindu and Backward Class pupils newly admitted in the Harijan Welfare School, Ramapuram in December 1962 was discontinued from 2nd January 1963 pending receipt of certain clarification. Subsequently it was resumed on 4th February 1963.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஹரிஜன நல இலாகாவினுல் நடத்தப்படும் பள்ளிகளில் படிக்கின்ற எல்லா பிற்பட்ட மாணவர்களுக்கும் உணவு வழங்குவதற்கும் அரசாங்கம் முடிவு செய்திருக்கிறதா? அல்லது, ஒவ்வொரு பள்ளியாக இப்படிப் பார்த்துத் தான் உத்தரவு போட வேண்டிய அவசியம் இருக்கிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : ஹரிஜன நல இலாகாவினுல் நடத்தப்படும் எல்லா பள்ளிகளிலும், எல்லா மாணவர்களுக்கும், ஜாதி இந்து மாணவர்களுக்கும், எல்லோருக்கும் உணவு அளிக்கப்பட்டு வருகிறது.

*Panchayat Union Office (Buildings, Tirupathur)*

* 260 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to construct a building for the Panchayat Union Office of Thirupathur in Ramanathapuram district; and

(b) if so, when?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No; and

(b) Does not arise.

*History Students in B.A. Classes*

* 261 Q.—SRI A. P. DHARMALINGAM (on behalf of SRI K. A. MATHIALAGAN) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the total number of seats sanctioned for B.A. Degree Course in History subject in all the colleges of the State; and

(b) the number of students admitted to the course in 1962–63?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Six hundred and forty-five seats, in the First Year class ; and

(b) Two hundred and thirty-three.

*Re-employment (Director of Public Health Office)*

* 262 Q.—SRI T. L. SASIVARNA THEVAR (on behalf of SRI K. MOOKIAH THEVAR) : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether any statiscian has recently been re-employed after retirement in the Office of the Director of Public Health and

(b) if so, the reasons therefor?



THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) & (b) Yes; in the exigencies of public service.

*நகரசுத்தித் தொழிலாளர் (வீடுகள்)*

* 263 கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டத்தில் நகரசுத்தி தொழிலாளர்களுக்காக வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், எங்கெங்கு, எவ்வளவு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன?

(உ) இதற்காக, அரசாங்கத்திற்கான செலவு எவ்வளவு?

(எ) இவ் வீடுகளில் குடியிருக்கும் நகரசுத்தித் தொழிலாளர்களிடமிருந்து தொகை ஏதும் வசூலிக்கப்படுகிறதா? எவ்வளவு?

கனம் திரு. செ. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) காஞ்சிபுரம் நகராட்சி, நகரசுத்தி தொழிலாளர்களுக்காக, பன்னிரண்டு வீடுகள் கட்டித் தந்துள்ளது.

(உ) இதற்காக அரசாங்கம், அந்த நகராட்சிக்கு மான்யத் தொகையோ, கடனே அளிக்கவில்லை.

(எ) இல்லை.

திரு. மூனு. ஆதி : நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு முழுத் தொகையும் அரசாங்கம் மான்யமாகக் கொடுக்க வேண்டுமென்று பல பஞ்சாயத்துக்களிலிருந்து மனுக்கள் வந்திருக்கின்றனவா? அவர்கள் வீடுகள் இல்லாமல் தவிப்பதைத் தவிர்ப்பதற்கு, அரசாங்கம் முழு மான்யமும் கொடுத்து அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திரு. செ. ம. அ. மஜீத் : பஞ்சாயத்துக்கள் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடம் இந்தக் கேள்வியைப் போட்டால் நல்லது.

*Roads (Land Acquisition)*

* 264 Q.—SRI C. CHIRANJEEVULU NAIDU (on behalf of SRI R. S. VEERAPPA CHETTIAR) : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Government are aware of the difficulties in securing lands for the formation of roads when the owners of lands refuse to give their lands for such purposes; and

(b) if so, the steps taken to overcome the difficulties?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) The Panchayat Union Commissioner, the Extension Officer (Panchayats) and other officials of the concerned block usually persuade the owners to give up the portions of their lands which are required for forming the road. If the owner is recalcitrant, attempts are made to buy the land with money collected by the villagers. If all these attempts prove to be fruitless the lands are acquired compulsorily under the Land Acquisition Act and also applying emergency clause of the Land Acquisition Act where necessary to speed up the proposals.

**திரு. முனு. ஆதி :** பஞ்சாயத்துக்களுக்கு இது போன்ற ரோடுகள் அவசியம் தேவைப்படுகின்றன. சொந்தக்காரர் கொடுக்க மாட்டேன் என்று சொல்லுகிறார்கள். அதனால் அந்த இடத்தைச் சட்டப்படி ஆக்கிரமிக்கிற நிலைமையிலே இல்லை. வேண்டப்படுகிற இடத்தை ஆக்கிரமிப்பதற்கு பஞ்சாயத்துச் சட்டத்தை திருத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதற்காக பஞ்சாயத்துச் சட்டத்தை திருத்த வேண்டிய அவசியமில்லை. பொது சேவைக்காக நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்றால், அவசரமாகச் செய்வதற்குக்கூட இடம் இருக்கிறது. அந்தச் சட்டப்படி ஆர்ஜிதம் செய்யலாம்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** எல்லாவிதமான நடைமுறையும் முடிந்த பிறகு தான் எமெர்ஜென்ஸி ப்ரொவிஷனை அப்ளை செய்கிறார்கள். அதில் ஒரு வருஷம் காலதாமதம் ஆகிவிடுகிறது. சொந்தக்காரர் இடத்தைக் கொடுக்கச் சம்மதம் இல்லாவிட்டால், உடனே கலெக்டர் அதைக் கவனித்து எமர்ஜென்ஸி ப்ரொவிஷனை அப்ளை செய்வதற்கு சர்க்கார் வழி செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கூடியவரையில் தீவிரமாக ஆர்ஜித நடவடிக்கை எடுத்துக் கொள்கிறோம். சொந்தக்காரருடைய உடன்பாட்டைப் பெற்று ஆர்ஜிதம் செய்வதே நல்லது என்பது கருத்து. அதற்காக ஒரு ஆண்டு காலம் ஆகவேண்டியதில்லை. அம்மாதிரி முடிகிறதா என்று சீக்கிரம் பார்த்துவிட்டு, முடியவில்லை என்றால், சட்டப்படி ஆர்ஜிதம் செய்யலாம்.

**திரு. முனு. ஆதி :** ஆர்ஜிதம் செய்வதற்கு வழி இருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்களுக்கு அது புலப்படவில்லை. இப்படி நடவடிக்கை எடுத்து ஒரு ஆண்டுக்கு மேலாகியும், விஷயம் வழக்கு மன்றத்திற்குச் சென்று விடுவதால், உடனடியாகப் பாதைகள் அமைக்கப்படுவதற்கு முடியவில்லை. ஆகையால், இதை உடனே செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எமெர்ஜென்ஸி ப்ரொவிஷன் இருக்கிறது. அவசரமாக ஆர்ஜிதம் செய்வதற்குச் சட்டம் இருக்கிறது. இடம் இருக்கிறது. பஞ்சாயத்துத் தலைவர்கள் கலெக்டருடன் தொடர்பு வைத்துக்கொண்டு அதைக் கையாளலாம். விஷயம் கோர்ட்டிற்குப் போய் தடை செய்யப்பட்டு விட்டால் அதை நாம் தவிர்க்க முடியாது.



**கனம் சபாநாயகர் :** அது சட்டம்.

**திரு. எஸ். முருகையன் :** பஞ்சாயத்துக்களிலே ரோடுகள் போடும்பொழுது குறுகலான வழி இருந்ததும்கூட, சுற்றி வளைத்துக்கொண்டு போகக்கூடிய நிலையிலே பல ரோடுகள் போட்டிருக்கிறார்கள். அப்படிப் போடுவதற்குக் காரணம், வழியிலே பஞ்சாயத்துத் தலைவருடைய இடம் வந்துவிடுகிறது. அதற்காக ரோட்டை வளைத்து விடுகிறார்கள். அதுமாதிரி பஞ்சாயத்துத் தலைவருடைய இடமாக இருந்தால், இந்தக் காரணத்தை முன்னிட்டு அவர்கள் இடத்தை உடனே கொடுத்து விடவேண்டும் என்று சர்க்கார் உத்தரவிடுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு மட்டும் இம்மாதிரி செய்வதில்லை. அது நல்ல நஞ்சை நிலமாக இருக்கலாம். 2 ஏக்கர், 1 ஏக்கர், ½ ஏக்கர் வைத்துக்கொண்டிருப்பவர்கள் நிலமாக இருந்தால் அதைத் தவிர்ப்பது நலம் என்று கருதி, ரோடைச் சுற்றி வளைத்துப் போடலாம். எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு, கட்டுப்பாடான விதி என்று ஒன்றை அமுலுக்குக் கொண்டு வர முடியாது. பொது நலனையும் கவனிக்க வேண்டும். நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்களுடைய நலனையும் கவனிக்க வேண்டும். அதுவும் முக்கியமாக குறைந்த நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களுடைய நலம், பயிர் செய்யக்கூடியவர்களுடைய நலம் கருதப்பட வேண்டும். எல்லாவற்றையும் வைத்துக்கொண்டுதான் முடிவு செய்யவேண்டிய விஷயம் இது.

**திரு. எஸ். முருகையன் :** திருவண்ணாமலை வட்டாரத்திலே நவம்பட்டு கிராமத்திலும், மங்கலம் கிராமத்திலும் பஞ்சாயத்துத் தலைவர்கள், சாதாரணமாகப் புஞ்சை நிலத்தை வைத்துக் கொண்டு, ரோடு போடுவதற்கு இடம் கொடுக்காத காரணத்தினால், அங்கே ரோடு போடும் வேலையில் நாலைந்து ஆண்டு காலமாகத் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. வருகிற ஆண்டிலேயாவது அந்த இடத்தைக் கொடுப்பதற்கு சர்க்கார் உத்தரவிடுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இந்த வருஷத்திலே பஞ்சாயத்து யூனியன் தலைவரும், கமிஷனரும் கலெக்டருடன் தொடர்பு வைத்துக் கொண்டால், வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. ம. கமலநாதன் :** இந்த பஞ்சாயத்து லிங்க் ரோடுகள் 36 அடி அகலம் இருக்க வேண்டும் என்ற கட்டாயத்தை நீக்கினால், நிலத்தை இனாமாகக் கொடுப்பார்கள். ஆகவே அந்த நிபந்தனை நீக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பாதையைச் செப்பனிடும் போழ்து, குறைந்த அளவிலே செப்பனிட்டால், பின்னர் கஷ்டம் ஏற்படும், வரவர போக்குவரத்து அதிகரித்துக் கொண்டு வருகிறது. பின்னர் என்க்ரோச்மென்ட் வந்து விடும். அதற்குப் பிறகு ஆர்ஜிதம் செய்வதில் கஷ்டம் ஏற்படும். எந்தெந்த ரோடு எவ்வளவு அகலம் இருக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்யப் பட்டிருக்கிறது. அதிலே கை வைத்துக் குறைப்பது நல்லதல்ல.

### *பஸ் நிலையம் (அறந்தாங்கி)*

* 265 கேள்வி.—திரு. ஆ. துரையரசன்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

*அறந்தாங்கி பஸ் நிலையக் கட்டிடத்திற்காகத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளதா? எவ்வளவு?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No amount has been specifically allotted for the bus-stand building in Arantangi. Panchayats are only given loans on interest from the State Funds for the construction of or improvements to bus-stand. There is a lump sum provision of Rs. 8 lakhs in the current year's State Budget for the payment of loans to panchayats for remunerative enterprices schemes and applications for loans have been called for from panchayats. The Arantangi Panchayat has since requested sanction for a loan of Rs. 40,000 for construction of bus-stand. The request of the panchayat is under the consideration of the Government.

### *Precious Stones (Vangipatti)*

* 266 *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that precious stones were found in Vangipatti village in Madurai district; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) & (*b*) Yes, Sir. The reported occurrence of precious stones in Vangipatti village was investigated by the State Geological Branch. An assorted collection of stones was found in the clayey soil adjoining an old abandoned well in this village. On examination, some of the stones were found to be cut stones, indicating that the deposit was not a natural one. Probably, these stones were buried in this area by some persons in the past. The Geological Survey of India are however proposing to carry out a detailed investigation in this area regarding the occurrence of these stones.

திரு. கே. பொன்னையா: மலைப் பிரதேசங்களில் இப்படிப்பட்ட கற்கள் அடிக்கடி கிடைக்கின்றன. அவைகள் உயர்ந்த ரகக் கற்களா என்று பார்ப்பதற்கு என்ன பரீட்சை செய்கிறீர்கள்?



கனம் சபாநாயகர்: மலைப் பிரதேசங்களில் இருக்கிற கற்கள் என்று சொன்னால் . . . . (சிரிப்பு)

(பதில் இல்லை).

### *Development Councils (Transport Officers as Members)*

* 267 *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU (on behalf of SRI R. S. VEERAPPA CHETTIAR): Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Regional Transport Officers are members of the District Development Councils of their respective districts; and

(*b*) if not, whether they will be made members of the Development Councils?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*) No., Sir.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: மாவட்ட அபிவிருத்தி மன்றங்களில் இந்த வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் உறுப்பினர்களாக இருந்தால், கிராமப் புறங்களுக்கு பஸ்களை விஸ்தரிக்க முடியும் என்ற எண்ணம் இருப்பதால், அவர்களை இதிலே அங்கத்தினர்களாக நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கலெக்டர்களே இந்தக் குழுவிற்குத் தலைவர்களாக இருப்பதால், ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதிகாரிகளை இதிலே நியமிக்க வேண்டிய அவசியமில்லை.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speach indicates revision by the Member.]**

## II.—CALLING ATTENTION TO A MATTER OF URGENT PUBLIC IMPORTANCE.

MR. SPEAKER: The hon. Member Sri N. P. Sengottuvelu who has given a notice under rule 41 has applied for time since he has been urgently called for from his place. Therefore the consideration of the matter is adjourned.

## III.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1963-64—*cont.*

### (1) DEMAND No. XXII—KHADI.

### (2) DEMAND No. XXIII—COMMUNITY DEVELOPMENT PROJECTS, ETC.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 15,00,000 under Demand No. XXII—Khadi".

"That the Government be granted a sum not exceeding Rs. 5,75,43,500 under Demand No. XXIII—Community Development Projects, etc."

### கல்லூரிகளில் படிக்கும் பிற மாநில மாணாக்கர்கள் (தமிழ் நாட்டுக் கல்லூரிகள்)

* 256 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் படிக்க விரும்பும் பிற மாநில மாணவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதில், தமிழ்நாட்டு மாணவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளக் கையாளும் விதி முறைகளில் ஏதேனும் சலுகை காட்டப்படுகிறதா ?

(இ) ஆம் என்றால், அச் சலுகைகள் யாவை ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

* 257 **கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் வந்து படிக்கும் வட இந்திய மாணவர்களுக்குத் தனியான சலுகைகள் எவையேனும் தரப்படுகின்றனவா ?

(இ) ஆம் என்றால், அச் சலுகைகள் யாவை ?

(உ) வட இந்தியக் கல்லூரிகளில் படிக்கும் தமிழ் நாட்டு மாணவர்களுக்கு அது போலும் சலுகைகள் தரப்படுகின்றனவா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) தகவல் இல்லை.

**திரு. எஸ். மாதவன் :** பிற நாடுகளில் உள்ள தமிழர்களுக்கு இங்கே நம்முடைய மாநிலத்திலுள்ள தொழில் கல்லூரிகளில் இடம் ஒதுக்குவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? அதையும் அரசாங்கம் பரிசீலிக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சமீபத்தில் நடந்த ஸ்டேட் போர்டு ஆப் எஜுகேஷன் கூட்டத்தில் அண்டையில் இருக்கக் கூடிய ராஜ்ய மாணவர்களுக்கு ஒரு சிறு பகுதி இடம் ஒதுக்க வேண்டுமென்று ஆலோசனை சொல்லப்பட்டது. அந்த விதமாக மற்ற ராஜ்யங்களிலும் 'ரெஸிப்ரோகல் பேஸிசில்' இடம் ஒதுக்குவதாக இருந்தால், நாமும் செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. எஸ். மாதவன் :** என்னுடைய கேள்வி பிற நாடுகளிலுள்ள தமிழர்களுக்கு இங்கிருந்து போய் குடியேறிய தமிழர்களாக இருப்பதால் அவர்களுக்கு, ஓரளவுக்கு இடம் ஒதுக்குவதற்கு நம்முடைய நாட்டில் வசதி செய்து கொடுக்கப்படுமா ?



**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த மாதிரி ஏதாவது அப்ளிகேஷன் வந்தால் கவனிக்கலாம்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** மருத்துவம், பொறியியல், தொழில் நுட்பம் போன்ற கல்லூரிகளில் பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு இடங்கள் ஒதுக்கப்பட்டால், சத விகிதத்தில் ஒதுக்கப்படுகிறதா ? ஆம் என்றால், எத்தனை சத விகிதம் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எல்லா ராஜ்யங்களிலிருந்தும் இங்கு வருபவர்களுக்கு இடமே ஒதுக்கவில்லை. ஒரே ஒரு யோசனை. அண்டை ராஜ்யங்களில் இருப்பவர்களுக்கு ஏதாவது ஒதுக்க வேண்டுமா என்று இப்பொழுது பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அப்படி ஒதுக்குவதாயிருந்தால், மற்ற ராஜ்யங்களும் அதே விதமாக 'ரெஸிப்ரோகல் பேஸிசில்' ஒதுக்குவதானால், நாமும் செய்யலாம் என்று இப்பொழுது யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

### *Tiruverambur temple*

* 258 *Q.*—SRI A. K. **SUBBIAH** (on behalf of SRI M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the extent of lands belonging to the Tiruverambur temple in Tiruchirappalli taluk;

(*b*) the amount of annual income for the temple from these lands and other sources;

(*c*) the annual expenditure of this temple; and

(*d*) when was this temple inspected last by the Assistant Commissioner?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 80·58 acres of wet lands and 18·16 acres of dry lands;

(*b*) 49·324 Metric tonnes (1,030 kalams) of paddy from wet lands and Rs. 512 from dry lands annually. About Rs. 1,000 by way of kannikkai, from marriages, interest, building rent, sale of straw, etc.

(*c*) About Rs. 9,900 in cash and 19·141 metric tonnes (400 kalams) of paddy towards paditharam and pay of temple servants; and

(*d*) 22nd September 1961.

### மதிய உணவு

* 259 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹரிஜன நல இலாக்காவால் தென்னாற்காடு மாவட்டத்தில் நடத்தப்படும் பள்ளிகளில் பயிலும் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு மதிய உணவு அளிப்பது நிறுத்தப்பட்டுள்ளதா ?

**(இ) ஆம் எனின், காரணம் என்ன ?**

செய்ய வேண்டும். ஆகவே நிலவரி வசூலிப்பது போன்று வீட்டு வரியையும் வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். வசூலிப்பதில் கால தாமதம் ஆகிறது. அதையும் தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பஞ்சாயத்துக்களைப் பிரிக்கக் கூடிய காலத்தில் அவைகளை, ஏ, பி, சி, டி என்று பிரித்திருக்கிறார்கள். அப்படி பிரிக்கப்பட்டு அவைகளுக்கு காண்ட்ரிபியூஷன் தொகை கொடுக்கப்பட்ட பிறகு அவைகளுக்கு மேற்கொண்டும் வருமானம் இல்லாத காரணத்தால் பல சலுகைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அப்படிப் பல பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவற்றில் நான் தலைவராக இருக்கக்கூடிய பஞ்சாயத்தும் ஒன்று. அவைகளுக்கு எல்லாம் ரோடுகளை போட்டுக்கொள்ளக்கூடிய வசதி இல்லை. பல ரோடுகளில் ஆக்கிரமிப்பு நடந்து கொண்டிருக்கின்றது. அவைகளைத் தடுப்பதற்கான அதிகாரம் பஞ்சாயத்துக்களுக்கு இல்லை. இதைப் பற்றி டெவலப்மெண்ட் கவுன்சிலில் கேட்டபோதும் எந்த விதமான பரிகாரமும் கிடைக்கவில்லை. இம்மாதிரி பல இடங்களில் இருக்கின்றன. இப்படிப்பட்ட ரோடு வசதி குறைபாடுகள் பல பஞ்சாயத்துக்களில் இருக்கின்றன. இவைகளையெல்லாம் நிவர்த்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இதைப்போலவே அங்கங்கே ஜீப் கார்கள் கொடுத்திருக்கிறார்கள். எங்கள் பகுதி மலைப் பிரதேசமாக இருப்பதால் ஜீப் கார்களை எடுத்துக் கொண்டு போக வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது அவற்றிக்கு 325 லிட்டர் பெட்ரோல்தான் சப்ளை செய்கிறார்கள். என் பகுதியில் மலைப் பிரதேசங்களுக்குப் போக வேண்டியதாக இருந்தால் ஒரு தடவை கமிஷனர், பஞ்சாயத்து தலைவர் போய் விட்டு வருவதாக இருந்தால் சுமார் 200 லிட்டர் பெட்ரோல் செலவாகிவிடுகிறது. ஆகவே எங்களுடைய பிரதேசம் போன்ற மலைப் பிரதேசங்களுக்கு இன்னும் அதிகப்படியான பெட்ரோல் சப்ளை செய்யும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அதைப்போலவே பஞ்சாயத்துப் புறம்போக்கு நிலங்களில் மரங்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை வெட்டும் போது அது ரிவினியூ இலாகாவிற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. வெட்டக் கூடாது என்று ரிவனியூ இன்ஸ்பெக்டர் சொல்லுகிறார். அது தோட்ட புறம்போக்கு, அது ரிவனியூ இலாகாவைச் சேர்ந்தது என்று சொல்லுகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட இடங்களைக் கொடுக்கும்போது அதைப் பஞ்சாயத்து தலைவர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்படி பல விதங்களில் பல தகராறுகள் ஏற்படுகின்றன. அரசாங்கம் அதை எடுத்துக் கொண்டால் அதைத் தலைவருக்குத் தெரிவிக்கவேண்டும்.

அதைப்போலவே நிலவரியில் 12½ சத விகிதம் கொடுக்க வேண்டும் என்றும் 1955-ல் நிறைவேற்றப்பட்ட பஞ்சாயத்துச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதை இன்னும் நடைமுறைக்குக் கொண்டு வரவில்லை. அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



பஞ்சாயத்து போர்டுக்குச் சொந்தமான சில புறம்போக்கு நிலங்களைக் குத்தகைக்கு விடலாம் என்ற அதிகாரத்தை பஞ்சாயத்துத் தலைவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி குத்தகைக்கு விட்டு அதிலிருந்து வரக்கூடிய பணத்தை வைத்து பல அபிவிருத்தி வேலைகளைச் செய்து கொள்ளலாம். அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

பஞ்சாயத்துக்களுக்குச் சொந்தமான பல ரோடுகள் சர்வே செய்யப்படாமல் இருக்கின்றன. அவைகள் சர்வே செய்யப்படாமல் இருப்பதால் பக்கத்திலுள்ளவர்கள் அதில் ஆக்கிரமிப்பு செய்து கொள்ளுகிறார்கள். அதனால் அந்த ரோடுகள் எல்லாம் குறுகலாகிக் கொண்டே வருகிறது. ஆகவே பஞ்சாயத்து ரோடுகளைச் சர்வே செய்ய வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதைப்போலவே காட்டிலாகாவுக்கு பல இடங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. அந்த இடங்கள் எல்லாம் உடனடியாக சர்வே செய்யப்பட வேண்டும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பஞ்சாயத்து யூனியன்களில் விவசாயிகளுக்கு விவசாயக் கருவிகளை சப்ளை செய்வதற்கு என்று 2½ லட்சம் ரூபாய் ஒதுக்கி இருப்பதாகத் தெரிய வருகிறது. அதன் மூலம் விவசாயிகள் தங்களுக்கு வேண்டிய வண்டிப் பட்டா, இருசு போன்றவைகளை வாங்கிக் கொள்ளலாம் என்று இருக்கிறது. இவைகளைச் சப்ளை செய்யக்கூடிய அதிகாரம் பஞ்சாயத்து யூனியன் தலைவரிடம் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் கிராமங்களில் விவசாயம் சம்பந்தமாக அவரவர்களுக்கு வேண்டிய அச்சு, இரும்பு, இருசு, வண்டிப் பட்டா முதலியவைகளை வாங்கிக் கொள்வதற்கு சௌகர்யமாக இருக்கும். கூட்டுறவு சங்கங்கள் மூலமாக கிராமங்களில் கடன் உதவி செய்துகொடுக்கிறார்கள். கடன் உதவித் திட்டத்தின்கீழ் அப்படிக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். இப்படிப்பட்ட பணம் பூராவும் விவசாயிகளுக்குப் போவதாக இல்லை. இந்தப் பணத்தை இடைத்தரகர்கள் இல்லாமல் அரசாங்கம் விவசாயிகளுக்கு நேரடியாகவே கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். கொள்முதலை அரசாங்கமே நேரடியாகச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன், அப்படிச் செய்தால்தான் விவசாயம் நல்ல முறையில் இயங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே பஞ்சாயத்து யூனியன் மூலமாக அரிஜன இலாகா பல வசதிகளைச் செய்து வருகின்றன. வீடுகள் கட்டுவதற்குப் பணம் கொடுக்கும்போது கால தாமதமாகிக் கொடுக்கிறார்கள். இப்படி என்னுடைய பஞ்சாயத்திலும் நடக்கிறது.

SRI V. S. S. MANI : Sir, I move the following cut motion—

"That the allotment of Rs. 15,00,000 under Demand No. XXII—Khadi be reduced by Rs. 100".

SRI M. P. VADIVELU : Sir, I move the following cut motion—

"That the allotment of Rs. 5,75,43,500 under Demand No. XXIII—Community Development Projects, etc., be reduced by Rs. 100".

MR. SPEAKER : The Demands and the cut motions are before the House for discussion.

**திரு. மு. பொ. வடிவேல்:** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, கிராம அபிவிருத்தி நல நிர்வாகத் துறை மான்யத்தின் மீது நான் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஒட்டி, என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமத்திலுள்ள மக்கள் அவர்களுடைய சுயதேவையைப் பூர்த்தி செய்து கொள்ளும் வகையிலே, கிராம ராஜ்யம் வேண்டுமென்று மறைந்த அண்ணல் காந்தியார் குறிப்பிட்டதை ஒட்டி, அதிகாரம் பரவலாக இருக்க வேண்டும், ஒரே இடத்தில் குவிந்திருக்கக் கூடாது என்ற அடிப்படையின் கீழ், நமது நாட்டிலே இன்றைக்கு 12,200 கிராமப் பஞ்சாயத்துக்களும், 375 பஞ்சாயத்து யூனியன்களும் இயங்கி வருகின்றன. அப்படி இயங்கி வருகிற இந்த நேரத்தில், பழைய மாவட்டக் கழகங்கள் காலத்தில் அதிகாரம் குவிந்திருந்ததை நீக்கி, ஆங்காங்கே அதிகாரத்தைப் பரவலாகக் கொடுத்திருப்பதை நான் வரவேற்கிறேன். அதிலே சில குறைபாடுகளை நீக்க அரசாங்கம் தவறிவிட்டது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், ஊராட்சி மன்றத் தலைவர்களும் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அப்படி நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். பழைய மாவட்டக் கழகங்களிலே எல்லா நடவடிக்கைக் குறிப்புகளும் தலைவர் பெயரிலே வெளி வந்தன. இப்பொழுது நடவடிக்கைக் குறிப்புகள் ஆணையாளர் பெயரில் வருவதால், இது ஏதோ ஒரு அரசினர் அலுவலகம்போல் இருக்கிறது என்று நினைத்து, பொது மக்கள் நல்ல தொடர்பு கொள்ள முன்வருவதில்லை. எல்லா நடவடிக்கைக் குறிப்புகளும் தலைவரின் பெயரில் வந்தால்தான், உண்மையிலேயே மக்களுக்கு ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டும் என்கிற எண்ணம் ஏற்படும். ஆணையாளருக்கும் தலைவருக்கும் உள்ள அதிகாரங்கள் நல்ல முறையில் வரையறுக்கப் படவில்லை. அவர்கள் இருவருக்குள்ளே எந்தெந்த நேரத்தில் கருத்து வேற்றுமை ஏற்படுமென்று சொல்ல முடியாது. பெட்ரோல் பக்கத்திலே நெருப்பு இருப்பது போல, எந்த நேரத்திலே கருத்து வேற்றுமை ஏற்படுமென்று சொல்ல முடியாது. பெரும்பாலும் தாசில்தாரர்களாக இருப்பவர்கள் தான் ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய மனோபாவம் சற்றும் மாறினதாகத் தெரியவில்லை.



இப்படி செல்வதால் நான் பஞ்சாயத்துத் தலைவராக இருக்கும் இடத்தில் எனக்கும் ஆணையாளருக்கும் கருத்துவேறுபாடு இருக்கிறது என்று பொருள் கொள்ள வேண்டாம். பல பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கும் ஆணையாளர்களுக்கும் நல்ல பொருத்தம் இல்லை. இதற்குக் காரணம், தலைவரைத் கலந்து செய்ய வேண்டுமென்று உத்தரவு இருந்தும்கூட, ஆணையாளர் தலைவரைக் கலக்காமல் காரியங்களைச் செய்து, அதன் பிறகு தலைவருடைய பார்வைக்கு வரும்பொழுது, தலைவருக்கும் ஆணையாளருக்கும் வேறுபாடு ஏற்பட இடமிருக்கிறது. ஆகவே பழைய மாவட்டங்களில் தலைவர்களுக்கு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டதுபோல இவர்களுக்கும் கொடுத்து பெய்டு செகரடரிகள் போட்டு, ஆங்காங்கே பணியாற்றுவதற்கு வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே எல்லா நடவடிக்கைகளும் குறிப்புகளும் தலைவர் பேரில் வந்தால் கிராம மக்களுக்கும் 9-00
தலைவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டாகும் என்பதைச் a.m.
சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கமிஷனருக்கு ஏராளமான பொறுப்பு இருக்கிறது. அவர்கள் மாதத்தில் ஐந்து நாட்களுக்குக் கிராமத்தில் அதாவது ஹெட் குவார்ட்டர்ஸில் தங்க வேண்டியதாக இருக்கிறது. அதனால் பல வேலைகளைச் செய்ய முடியாமல் காலதாமதம் ஏற்படுகிறது. நாம் இப்பொழுது எவ்வளவோ செலவு செய்து பஞ்சாயத்து யூனியன்களை அமைத்திருக்கிறோம். பல அதிகாரிகளை நியமித்திருக்கிறோம். அப்படி நியமிக்க வேண்டியது அவசியம் இல்லை. அதற்குப் பதிலாக உதவிக் கமிஷனரை நியமிக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். சாதாரணமாக ஈ.ஓ. (கூட்டுறவு), ஈ.ஓ. (இண்டஸ்ட்ரீஸ்), ஈ.ஓ. (அனிமல் ஹஸ்பண்டரி) இப்படியெல்லாம் நியமித்திருக்கிறார்கள். இப்படி நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை. இரண்டு மூன்று யூனியன்களுக்கு ஒருவரை நியமித்தால் போதும். அதற்குப் பதிலாக உதவி கமிஷனர்களை நியமிக்கலாம் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களில் வீட்டு வரியை வசூலிப்பது மிகவும் கடினமாக இருக்கிறது. அதை வசூலிக்கக்கூடிய பொறுப்பு மணியக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அப்படி வீட்டு வரிகளை வசூலிப்பதற்கு அங்கங்கே மணியக்காரர்களுக்கு ஈட்டு மானியம் கொடுக்கப்படவேண்டுமென்று இருக்கிறது. வீட்டு வரி மூன்று வருஷங்களுக்கு வசூலிக்கவில்லையானால் அது காலாவதியாகி விடும் என்று இருக்கிறது. வீட்டு வரிகளை வசூல் செய்வதில் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வீட்டு வரியை வசூலிக்கும்படியாகச் செய்தால் சௌகர்யமாக இருக்கும். அந்த முறையில் நில வரியை வசூல் செய்யக்கூடிய காலத்தில் வீட்டு வரியையும் வசூலிக்க ஏற்பாடு செய்யலாம். நில வரி வசூலாகா விட்டால் தாசில்தாரை அணுகி டிஸ்ட்ரெயிண்ட் வாரண்ட் பெறுவது போன்று வீட்டு வரி வசூலிக்க முடியாமல் இருந்தால் பஞ்சாயத்து யூனியன் தலைவரை அணுகி ஜப்தி செய்வதற்கு உத்தரவு வாங்கிவருவதற்கு வழி

கிறது. பணத்தைக் கொடுத்துவிட்டு அதை இந்த மாதம் அதாவது மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் செலவு செய்துவிட வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். அதனால் அவசர அவசரமாக அதைச் செலவு செய்ய காரியங்களைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதற்காக யாராவது பத்து அல்லது இருபது பேர்களை எடுத்துக் கொண்டு அவர்களுக்குக் கொடுத்துவிடுகிறார்கள். கள். அதனால் பல ஆட்சேபனைகள் ஏற்படுகின்றன. ஆகவே டிசம்பர் மாதத்தில் கொடுத்து விட்டு மார்ச்சு அல்லது ஏப்ரல் மாதத்தில் முடித்துவிட வேண்டும் என்று சொல்லுவது சரியல்ல. டிசம்பர் மாதத்தில் கொடுத்துவிட்டு ஏப்ரல் மாதத்தில் செலவு செய்யவேண்டுமென்று சொல்வதால் அவசரம் அவசரமாக வீடுகளைக் கட்ட வேண்டியதாக இருக்கிறது. அதனால் அப்படிக் கட்டப்படுகின்ற வீடுகள் கீழே விழக்கூடியதாக இருக்கிறது. இந்த நிலையை மாற்றி அமைக்க அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கல்வியைப்பற்றி இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆசிரியர்களை நியமிக்கும் போது 1:45 என்ற முறையில் நியமிப்பதாக இருக்கிறது. அதை நடைமுறைக்குக் கொண்டு வரும்போது சில சமயங்களில் சுமார் எழுபது குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் இருக்கக்கூடிய நிலைமையும் ஏற்படுகிறது. ஆகவே இதையும் மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப்போலவே வெளியூரிலிருந்து வரக்கூடிய ஆசிரியர்களுக்கு விட்டு வசதி இல்லை. இப்பொழுதுள்ள உத்தரவுப்படி ஆசிரியர்கள் அந்தந்த ஊரிலேயே குடியிருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு வீடுகள் கிடைப்பதாகவே இல்லை. ஆகவே ஆசிரியர்கள் அந்தந்த ஊரிலேயே குடியிருக்க அங்கங்கே அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி அவர்களுக்குக் கட்டிக் கொடுத்து விட்டு குறைந்த அளவில் வாடகையை வைத்து அவர்களுடைய சம்பளத்திலிருந்து வசூலித்துக் கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதைப்போலவே வேலைத் தேடித்தரும் ஸ்தாபனத்தின் மூலமாக ஆசிரியர்களை நியமிக்கிறார்கள். சில சமயங்களில் வேலை தேடித் தரும் ஸ்தாபனம் ஆசிரியர்களை நியமிப்பதாக இல்லை. அப்படி நியமித்தாலும் மாதத்தின் மத்தியில்தான் நியமிக்கிறார்கள். ஆசிரியர்கள் பல சமயங்களில் வேலைக்கு வருவதாக இல்லை. அதனால் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் இல்லாமல் பல காலம் இருக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே ஜூன் மாதம் 15-ம் தேதிக்குள் ஆசிரியர்கள் வேலைக்கு வந்து சேரவில்லை என்றால் அந்தப் பள்ளிகளுக்கு ஆசிரியர்களை நியமிக்கக்கூடிய பொறுப்பு அந்தந்த பஞ்சாயத்து யூனியன்களுக்கு இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு அதிகாரத்தை பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.



ஆகவே, ஜூன் மாதம் 15-ம் தேதிக்குள் ஆசிரியர்கள் வந்து சேரவில்லை என்றால் பயிற்சி பெறாத ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய அளவு பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால், அவர்கள் நான்-அவய்லபிலிடி சர்டிபிகேட் கொடுக்க நீண்ட நாட்கள் ஆகின்றன. அந்த இடைக் காலத்தில் பள்ளிகளில் ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால் மாணவர்களுடைய பள்ளிப் படிப்பு கெட்டுவிடுகிறது.

பஞ்சாயத்தில் கடன்கள் பட்டுவாடா செய்யப்படுகின்றன. தாமதம் தவிர்க்கப்பட வேண்டுமானால், அந்தந்த பஞ்சாயத்திலுள்ள கிராம மணியக்காரரும், கர்ணமும் ஒத்துழைப்புத் தர வேண்டும். உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமானால், ரூ. 500-க்கு கடன் மனுப் போட்டால், ஊரிலுள்ள கிராமக் கர்ணத்திற்கு வேண்டாதவராக இருந்தால் சீக்கிரமாக அனுப்புவதில்லை. கிராம சேவக் அவரிடத்தில் பல முறை கேட்டாலும்கூட, 'தாசில்தார் வரச் சொன்னார், கலெக்டர் வரச் சொன்னார்' என்று சொல்லிவிட்டுப் போகும் காரணத்தால் தாமதம் ஏற்படுகிறது. பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அவர்கள், இம்மாதிரிக் குறைகளை நீக்க வேண்டும், கிராம மணியக்காரர்கள் ஆஜராக வேண்டுமென்று உத்தரவு போட்டாலும் வருவதில்லை. வந்தால்தான் குறைகளைத் தீர்க்க முடியும். வராவிட்டால் நேரடியான நடவடிக்கையை கமிஷனரால் எடுக்க முடிவதில்லை. அம்மாதிரி நிலை இருக்கிறது. கிராமக் கர்ணங்களை எப்படி அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுத்துவது என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாயத்து கான்டிரிபியூஷன் பெற்று, பஞ்சாயத்து யூனியன் மூலமாக ரோடுகள் இப்பொழுது போடப்பட்டுவிட்டன. பராமரிப்பு முழுவதும் பஞ்சாயத்துக்களே செய்ய வேண்டும் என்று இருக்கிறது. பெரும்பான்மை கிராம பஞ்சாயத்துக்களில் போதுமான நிதி வசதி இல்லாததால் போடப்பட்ட ரோடுகள் சரியாகப் பராமரிக்கப்படாமல் வீணாகப் போய்க் கொண்டிருக்கின்றன. முதல், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இருந்த அளவைவிட மூன்றாவது திட்டத்தில் குறைவதற்குக் காரணம் அவர்களுக்கு நிதி வசதி இல்லை. ரோடுகள் போடப்படுவது, பராமரிக்கப்படுவது இந்தப் பொறுப்புக்களை எல்லாம் பஞ்சாயத்து யூனியன்களே ஏற்றுக் கொண்டால்தான் கிராம ரோடுகள் நல்ல முறையில் இருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தொழில்கள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. அப்படிச் செய்யப்படும்பொழுது எவ்வளவு வீணாக்கப்படுகிறது, எந்தெந்த வகையிலே வீணாக்கப்படுகிறது என்பதை ஆராய்வதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். முதல் பாட்ச், இரண்டாவது பாட்ச், மூன்றாவது பாட்ச் பஞ்சாயத்துக்களில் எந்தெந்த வகைகளில் பணம் வீணடிக்கப்படுகிறது என்பதைக் கண்டறிவதற்கு அரசாங்கம் ஒரு குழு அமைத்துப் பரிசீலனை செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாத காரணத்தால், பொதுப் பணம்

கூட்டு மன்றங்களுக்கு நபர் ஒன்றுக்கு 40 ந.பை. விதம் கொடுக்கப் படுகிறது. இந்த 40 ந.பை. என்கிற விகிதம் சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில் எல்லா ஜில்லாக்களிலும் ஒரே அமைப்பாக இருந்து வருவதை நாம் பார்க்கின்றோம். குறிப்பாக, தஞ்சை ஜில்லாவை பொறுத்தவரையில் அங்கு கல் மலைக் க்வாரி கிடையாது. சென்னை மாநிலத்திலேயே மட்டமான ரோடு வசதி யுள்ள ஜில்லாவாக தஞ்சை மாவட்டம் இருக்கிறது என்பது எல் லோருக்கும் தெரிந்ததே. அடுத்த ஜில்லாவில் ஒரு மைலுக்குப் கப்பி ரோடு போடுவதற்கு ஐயாயிரம் ரூபாய் ஆகிறதென்றால், தஞ்சை ஜில்லாவில் 9,000 ரூபாய் செலவு செய்தால்கூட, கப்பி ரோடு போட முடியவில்லை. எல்லா ஜில்லாக்களுக்கும் ஒரே மாதிரியான தொகை வழங்கப்படுவதின் காரணமாக, தஞ்சை ஜில்லாவில் சாலை வசதி மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. ஆகவே தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில், நபர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் அளவுக்குக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சிறு பாசன வசதியும் பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஏக்கரொன்றுக்கு ஒரு ரூபாயி லிருந்து இரண்டு ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. இந்தக் குறைவான தொகையை வைத்துக் கொண்டு செய்ய முடிவதில்லை. சிறு பாசனத் திட்டங்கள் பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு நல்ல முறையில் கவனிப்பதற்கு அவர்களால் முடியவில்லை. நமது சர்க்காரிடமிருந்து கிடைக்கும் தொகை குறைவாக இருப்பதால், சிறு பாசனத் திட்டம் எதிர் பார்க்கும் அளவுக்குப் பயன் அளிக்காத நிலையில் இருக்கிறது. சிறு பாசனத் திட்டத்தை அவர்கள் மேற்கொள்ள வேண்டு மென்றால், இன்னும் நிதி வசதியை அதிகரித்து ஏக்கர் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் அளவுக்காவது கொடுத்தால்தான் அவர்கள் நல்ல முறையில் செயல்பட முடியும். அந்த அளவுக்குக் கொடுக்க நிதி வசதி இடம் கொடுக்காவிட்டால், சர்க்காரே மேற்கொண்டு நடத்துவது நலம் என்று நான் கூறிக் கொள்ளுகின்றேன்.

அடுத்தபடியாக ஜில்லா அபிவிருத்தி மன்றத்தில் நிறைவேற்றப் படும் தீர்மானங்களை நல்லமுறையில் உடனுக்குடன் பரிசீலனை செய்து அவற்றை நிறைவேற்றுவதற்கு அங்கீகாரம் கொடுத்தால் நலமாக இருக்கும். ஜில்லா அபிவிருத்திக் கவுன்ஸிலில் ஏகமன தாக முடிவான பிறகு ஓரளவு மாற்றப்படுவதன் காரணத்தினால் மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுக்கிறது. அதை அப்படியே ஏற்றுக் கொண்டு இயன்றவற்றை அப்படியே நிறைவேற்றுவதற்கு வழி செய்தால் நலமாக இருக்குமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு முன்பாகப் பேசிய சில அங்கத்தினர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் பொதுமக்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். தற்போது தேர்தல், யூனியன் களுக்கு நடத்துவது நல்லதல்ல. காரணம் முதல் செட் யூனியன்கள்



ஆரம்பித்துக்கூட 4 ஆண்டுகள்தான் ஆகியபடியால் இன்னும் அதன் நிர்வாகம் ஓர் அளவு சீர்பட வேண்டியிருப்பதால் பிறகு நடத்துவது நலமென நினைக்கிறேன். அப்படித் தேர்தல்கள் நடத் தப்பட்டாலும்கூட இப்போது இருக்கும் முறையைப் பின்பற்றி னால்தான் நன்றாக இருக்கும். ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் ஜனங்களால் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்றால் பொதுத்தேர்தல் மாதிரி அமைந்து விடும். ஆகையால் என்னுடைய அபிப்பிராயம் இப்போதுள்ளதுபோல பஞ்சாயத்து தலைவர் களால் தேர்தெடுக்கிற முறையே இருந்தால் நலம். பஞ்சாயத்துத் தலைவர்கள் பொதுமக்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆகையால் இந்த முறையே நன்மையாக இருக்குமென்று தெரிவித் துக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை எனக்கு அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* SRI C. CHIRANJEEVULU NAIDU: Mr. Chairman, Sir. I would like to say a few words on the Community Development Projects. Our State, which was the fore-runner in the developmental activities, which was responsible for ushering in the word 'development' itself in 1947, the Firka Development and subsequently the Rural Welfare Schemes and other developmental activities which have been progressing to a certain extent and finally the decentralisation which resulted in the constitution of the Panchayat Unions and Development Councils. The Chairmen who are in charge of Panchayat Councils have been discharging their duties to the maximum extent responsibly and effectively. The local administration was previously with the Taluk Boards and District Boards and they were replaced now by the Panchayat Unions and District Development Councils. Now the works like minor irrigation, education and certain other works are entrusted to them and they have been carrying on. The other aspects of the work entrusted to the present Union Councils were carried on with skeleton staff in the Firka Development Scheme more effectively. Now we have given Panchayat Union Councils adequate staff, not adequate but even more staff. There are number of officers working the Union Councils belonging to different departments. But the out-come of the work that is done there is not satisfactory. The co-ordination and co-operation at the block level is not a mater for satisfaction. There is always quarrel between one section of officers and the Extension Officers and the Commissioners this way or that way. There is non-official organisation. They are very indifferent. There has not been much improvement work except formation of certain roads, construction of certain school buildings which could be done by the Engineering Department. The out-come of the work and the spirit with which this community development scheme was started and for which it was intended had not gone to the villagers. It was intended to raise the standard of living and their economic level to a great extent. That is what we wished from this developmental department. Anyhow they should be asked to work more effectively.

[Sri C. Chiranjeevulu Naidu] [16th March 1963

The minor irrigation works are entrusted with the Panchayat Union Councils. I say, Sir, in the taken-over villages the irrigation sources are in a dilapidated and hopeless condition. Unless and until these sources are repaired and put in good condition by the Food Production Department, the Panchayats with their slender resources cannot undertake the work of maintenance.

Regarding kudimaramat, I welcome this measure. It has not been clearly enunciated which is kudimaramat work. The sources which were silted for the last 50 years cannot be treated as kudimaramat work and this should not be entrusted to the panchayats. Such kind of works should not be brought under the purview of kudimaramat. I request that it should be looked into and the defects rectified.

Regarding the road development, the Panchayat Councils are given local road grant based on the per capita system and not on the length of the roads under their maintenance. I request this fact should be taken into consideration before the grant is given to the Panchayat Union Councils and local road grant given based on the length of the road.

Regarding the fiscal classification of blocks, they are classified according to their economic soundness. The system of fiscal classification must be villagewise. This may be done either in consultation with the Panchayat Council or the District Development Council. Matching grant also may be given to the blocks based on the village economic stability.

Regarding the local cess surcharge collection, I would request the Government to consider the plight of the agriculturists, who are downtrodden. They have been heavily taxed. I suggest that it should be limited to 50 nP. per rupee. They cannot go on paying the tax. Their economic condition should be considered at this juncture and the whole thing should be reviewed.

We are thinking of augmenting the revenue resources of the panchayat. Fisheries may yield a good revenue. Wherever there is scope for improvement this should be done. The ponds which are generally found in the villages are silted up heavily. Government may provide grants to the Panchayat Unions to revive and repair these ponds. Fingerlings may be supplied to the panchayat to be grown in these ponds which will fetch revenue.

Regarding the District Development Council, I would suggest one thing. The Standing Committees should be vested with statutory powers. The District Development Councils can have certain powers. Administrative sanction after technical sanction and other categories of work may be given to the Committees. To review the work of the Panchayat Union Councils they must have some powers. In reviewing the achievements of the Panchayat Union Councils and the Budgets the District Development Council they should have powers to offer remarks and implementation.



16th March 1963] [Sri C. Chiranjeevulu Naidu]

Regarding the extension officers, the work of the extension officers appointed at the Block may be looked into and the question how their work could be co-ordinated and to what extent the Extension Officers are actually requied may be looked into.

With these words, I conclude my speech, thank you, Sir. 9-30 a.m.

* திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: கனம் தலைவர் அவர்களே, சமுதாய நல அபிவிருத்தித் துறை மானியத்தை ஆதரித்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். சமுதாய நல அபிவிருத்தித் திட்டமானது காந்தியடிகள் கருதி வந்த எண்ணங்களை, சிந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது என்பதை அனைவரும் அறிவர். இந்தத் திட்டத்தை நம்முடைய பாரதம் முழுமைக்கும் பரவும்படியான ஒரு சிந்தனையைத் தூண்டியது நம்முடைய மாகாணம் என்பதற்காக நாம் பெருமை அடையக் கூடும். ஆரம்பத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு ரெவின்யூ பிர்க்காவில் ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து இந்தத் திட்டத்தை அமல் நடத்துவதற்காக ஆலோசனைகள் இருந்து வந்தன. கிராம அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரிலே நடத்தத் திட்டமிடப்பட்டது. அடுத்தபடியாக, பிர்க்கா அபிவிருத்தித் திட்டம் என்று ரெவின்யூ பிர்க்கா அளவிலே விரிவடைந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் கிராம அபிவிருத்தி வேலைகளை எந்த அடிப்படையில் செயல்படுத்த வேண்டுமென்பதைப் பற்றி ஆலோசனை கூறுவதற்காக காந்தியடிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த, கிராமப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சில பெரியவர்கள், ஸ்ரீ குமரப்பா அவர்கள், ஸ்ரீ ராமச்சந்திரன் போன்றவர்கள் எல்லாம் அந்தக் கமிட்டியில் இருந்து, கிராமங்களை எந்த எந்த வகையில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்பதற்கான வழிவகைகளை எல்லாம் கூறினார்கள். காந்தியடிகள் வாழ்ந்த காலத்திலே கிராம இயக்கத்தைப்பற்றி அவருடைய கருத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

“கல்வி கற்றவர்களின் புறக்கணிப்பினால் கிராமங்கள் வெகு காலமாகத் துன்பத்திற்குள்ளாகி வந்திருக்கின்றன. படித்தவர்களெல்லாம் நகரங்களில் போய்க் குடியேறிவிட்டார்கள். அவர்களுள் ஊழிய மனப்பான்மை உள்ளவர்களை கிராமங்களில் திரும்பப் போய் வாழ்ந்து கிராம மக்களுக்கு உதவுவதனால் தம் தகுதியைப் பயன்படச் செய்து, அவற்றுடன் லாபகரமான தொடர்பை உண்டாக்கத் தோன்றியதே கிராம இயக்கம். ஊழிய மனப்பான்மையுடன் கிராமங்களில் குடியேறி இருப்பவர்கள் எதிர்ப்படும் சிரமங்களைக் கண்டு கலங்கமாட்டார்கள். போகு முன்னரே நமக்கு அங்கே எவ்வளவோ அல்லல்கள் ஏற்படும், கிராம மக்களும் அசட்டையாய் இருக்கலாம் என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கும். ஆகையால் தன்னம்பிக்கையும், தாம் ஏற்றுள்ள புனிதப் பணியில் உறுதியும் உள்ளவர்களாலேயே கிராமத்தாருக்கு உதவவும்; அவர்கள் வாழ்க்கையை மாற்றவும் இயலும். கிராம மக்களிடையே போய் ஒருவர் நடத்தும் நேரிய வாழ்க்கையே அம்மக்களுக்கு முன் மாதிரியாய் இருந்து, அவர்களைத் திருத்தும்.

வீணாக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. கதர் நூல் நூற்பதற்குச் சர்க்காவுக்காக 1,500 ரூபாய் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் கொடுக்கப்படுகிறது. நூற்கப்படுகிற நூலின் தரம் சரியாக இல்லை என்று திருப்பி அனுப்பப்படுகிறது. மொத்தமாக நூலைத் திருப்பி அனுப்புகிறார்கள். மேற்கொண்டு பண வசதி இல்லாததால் சர்க்காவை ஒரு மூலையில் போட்டு விட்டு கிராம மக்கள் சும்மா இருந்து விடுகிறார்கள். எதிர்பார்க்கப்படும் நோக்கம் நிறைவேறாமல் இருக்கிறது.

(திரு. கோ. வெங்கட்டராமன் தலைமை.)

இவற்றையெல்லாம் பரிசீலனை செய்ய உயர்தரக் குழு ஒன்றை அமைத்து, பஞ்சாயத்து யூனியன்கள் நல்ல முறையில் இயங்குவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். கமிஷனர்களையெல்லாம் பெட்டி-காரியதரிசி போல் நியமித்து, எல்லா நடவடிக்கைகளும் தலைவர் பெயரால் இயங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. எம். தண்டாயுதபாணி: கனம் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்காக 575 லட்சம் ரூபாய் மானியம் கோரப்பட்டிருக்கிறது. நம் நாடு பல ஆண்டுகளாக அன்னியரிடம் அடிமைப்பட்டிருந்த காரணத்தால் நகரங்களைக் கவனித்த அளவு, நகரத்தில் ஏற்படுத்திய ஒரு முன்னேற்றத்தின் அளவு கிராமத்தில் ஏற்படவில்லை. கிராமப்புறங்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தன என்பது அனைவருக்கும் தெரியும். சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில், இப்பொழுது கிராமங்கள் நல்ல முறையில் முன்னேறிக் கொண்டு வருவதை நாம் பார்க்கின்றோம். இப்பொழுது ஒரு சில கிராமங்களில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிற காரணத்தால், அந்த முன்னேற்றம் அத்தனை கிராமங்களிலும் எதிர்ப்பார்க்கப்படுகிற காரணத்தால் இப்பொழுது கொடுக்கப்படும் நிதியின் அளவு போதுமா என்பதையும் நாம் பரிசீலனை செய்து முடிவு செய்ய வேண்டும். 575 லட்சம் ரூபாய் தமிழ் நாட்டிலுள்ள அத்தனை கிராமங்களிலும் நிறைவேற்றப் போதுமானதாக இருக்காது என்று நான் எண்ணுகின்றேன். அந்தத் தொகையை இன்னும் அதிகரித்தால் நலமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களுக்கு ஆரம்பப் பள்ளிகளின் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களின் பொறுப்பில் ஆரம்ப பள்ளிகள் ஒப்புவிக்கப்பட்ட பிறகு, 300 ஜனத்தொகை உள்ள கிராமங்களில் ஆரம்பப் பள்ளிகளை





அமைத்து நல்ல முறையில் நடத்தி வருகிறார்கள். ஆரம்பப் பள்ளிகள் நடத்தி வருவதில் அவர்களுக்குச் சில சிக்கல்கள் இருந்து வருகின்றன. அவைகளை நிவர்த்தி செய்தால் நலமாக இருக்கும். குறிப்பாக ஒரு கிராமத்தில், ஆரம்பப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று ஒரு பஞ்சாயத்து தீர்மானம் செய்து, அந்த ஊரில் பள்ளிக்கூடம் தேவை என்று கூறி, பஞ்சாயத்துக் கூட்டு மன்றமும் அங்கீகாரம் அளித்தும், அந்தப் பள்ளி துவக்கப்பட்ட பிறகு கூட டெபுடி இன்ஸ்பெக்டருடைய அனுமதி அவர்களுக்குக் கிடைக்கவில்லை. பட்டுக்கோட்டை பஞ்சாயத்துக் கூட்டு மன்றம் ஒரு பள்ளி துவக்கி ஏழு மாதங்கள் ஆகின்றன. டெபுடி இன்ஸ்பெக்டரிடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை. அவர்களுக்கும் இவர்களுக்கும் ஒரு இணக்கமான தொடர்பு இல்லாததால் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடத்தை ஆரம்பித்து நடத்தி வந்தாலும், டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் அனுமதி கொடுக்கத் தாமதம் ஆகிறது. ஆகவே, பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களிலும் டெபுடி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ் என்கிற அதிகாரிகளை எக்ஸ்டன்ஷன் ஆபீசராக நியமித்தால் நலமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கிராம வேலைத் திட்டங்களுக்காக குடி தண்ணீர்த் திட்டத்திற்கு ஒரு கோடி 40 லட்சம் ரூபாயும், இணைப்புச் சாலைகளுக்காக ஒரு கோடி 29 லட்சம் ரூபாயும், பள்ளிக்கூடங்களுக்காக 80 லட்சம் ரூபாயும், மொத்தமாக இரண்டு கோடி 9 லட்சம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. இந்தத் தொகை 375 பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களுக்குச் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. இப்பொழுது பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்கள் அமைந்திருப்பது, ஜனத்தொகை அடிப்படையில் இல்லாத நிலையில், ஒரு பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்தில் ஒரு லட்சம் ஜனத்தொகை இருக்கிறது, மற்ற சில பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்தில் 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ஜனத்தொகை வரையில் இருக்கிறது. அப்படியிருந்தும் கூட, இப்பொழுது கொடுக்கப்படும் தொகை சமமாக 80 ஆயிரம் ரூபாயாகப் பங்கிட்டுக் கொடுக்கப்படுகிற காரணத்தால் அது மிகவும் குறைவாக இருக்கிறது. அதை ஜனத்தொகை அடிப்படையில் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால், பஞ்சாயத்து எண்ணிக்கை அடிப்படையிலாவது அதைப் பிரித்துக் கொடுத்தால் நன்மையாக இருக்கும். அதிகமாகப் பஞ்சாயத்துக்களைக் கொண்ட பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்திற்குக் குறைவான தொகையும், குறைவான பஞ்சாயத்துக்களைக் கொண்ட பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்திற்கு அதிகமான தொகையும் கிடைக்கிறது. அதனால், நாம் எதிர்பார்த்த அளவு நாம் அதைப் பயன்படுத்த முடியவில்லை என்ற காரணத்தால், அதை ஜனத்தொகை அடிப்படையிலாவது அல்லது பஞ்சாயத்து எண்ணிக்கை அடிப்படையிலாவது பிரித்துக் கொடுத்தால் நலமாக இருக்கும்.

ஸ்தல சாலை மானியத்தின் கீழ் நபர் ஒன்றுக்கு 40 ந.பை. வீதம் கொடுக்கப்படுகிறது. ஆரம்பத்திலே ஜில்லா போர்டு இருந்தபோது [illegible] சாலைகளுக்காகச் செலவு செய்வதற்கு பஞ்சாயத்துக்

முயற்சியைச் சார்ந்ததாக அமைக்கப்பட்டு இருக்கிறதென்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். அந்த வகையில் கிராம மக்களின் ஒத்துழைப்பைப்பெற்று அதிகப்படியாக உற்பத்தியைப் பெருகக்குவதற்கான முயற்சிகளிலே ஈடுபட வேண்டும். அதற்காகவே, கிராம சேவக்குகளும் மற்றைய அலுவலர்களும் இருக்கிறார்கள்.

அவர்கள் கிராமப்புறங்களில் வாழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் இன்னும் அதிக கவனம் செலுத்தப்படவேண்டும். கிராமப் புறங்களில் அவர்களுக்கு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் ஒருசில பகுதிகளில், கிராமப் பகுதிகளில் அவர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகளில் அவர்கள் வசிக்காமல் நகரங்களில் இருந்து வருகிறார்கள். அது கவனிக்கப்பட வேண்டும். ரேடியோக்களை பராமரிப்பது சம்பந்தமாக ஒவ்வொரு தாலுகாவிலும் ஒரு சூப்பர்வைஸர் இருப்பது நலம். ஒன்றிரண்டு ப்ளாக்குகளுக்கு என்று இல்லாவிட்டாலும் ஒரு தாலுகாவிற்கு ஒரு சூப்பரவைஸர் என்றிருந்தால் நூற்றுக்கணக்கான ரேடியோக்கள் இருக்கும் ஒவ்வொரு தாலுகாவிலும் எங்கெங்கு பழுது பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறதோ அவற்றைக் கவனிக்கமுடியும். ஆகவே அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கதர் அபிவிருத்தி சம்பந்தமாக பஞ்சாயத்துகளுக்கு இப்போது அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த மேற்பார்வையில் பஞ்சாயத்து கவுன்சில் கவனம் செலுத்தி வருகிறது. கிராமங்களில் உடல் நலம் குன்றியிருப்பவர்கள், ஜீவனோபாயம் நடத்த வழியில்லாதவர்கள் போன்றவர்களுக்கு எல்லாம் இது ஒரு நல்ல தொழிலாக அமைந்திருக்கிறது. ஆகவே இந்தக் கதர் அபிவிருத்தி முறை தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எப்போதும் அதற்கு வாய்ப்பு சமுதாயத்தில் இருந்து கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். சிக்கனமான வாழ்க்கை நடத்த கிராமங்களில் சரியான போதனை இருந்து கொண்டு வரவேண்டும். வாழ்க்கையில் அவர்களுக்குச் சரியான வருமானம் கிடைத்துக் கொண்டு வந்தாலும் கூட சிக்கனமான வாழ்க்கை முறையை கிராம மக்கள் தெரிந்து கொள்ளவில்லை. கையில் கிடைத்த பணத்தை எப்படியாவது செலவிட்டுவிட வேண்டுமென்ற நிலையில் அவர்கள் மனப்போக்கு இருக்கிறது என்பதை ஊன்றிக் கவனித்துப் பார்த்தால் தெரியும். ஆகவே சிக்கனமாக வாழ்க்கைக் கடைப் பிடிக்கும் வழக்கத்தை போதிக்க வேண்டும். அரசாங்க அலுவலகங்களில் சிக்கனமான முறையைக் கையாள வேண்டுமென்று அவ்வகையில் பல காரியங்கள் செய்யப்பட்டு வருவதைப் பார்க்கிறோம். சட்டசபை அங்கத்தினர்களாகிய நாம் நமக்கு அனுப்பப்படும் அரசாங்கத் தபால்கள், அனுப்பப்படுகிற கடிதங்கள், சட்டசபை நடக்கும் சமயத்தில் சட்டசபை அலுவல்கள் பற்றி நமக்கு அனுப்பப்படும் கடிதங்கள் இவற்றை நல்ல கவர்களில் போட்டு அனுப்புகிறார்கள். அந்தக் கவர்களை எல்லாம் அரசாங்கக் காரியாலயங்களுக்கு திருப்பிக் கொடுக்கும் பழக்கம் நமக்கு இருந்து வருகிறதா என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நாமே ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும். நான் பெருமைக்காக சொல்லவில்லை. பல ஆண்டுகளாக எனக்கு



வரும் கவர்களை எல்லாம் நான் வீணாக்குவதில்லை. எனக்கு வரும் கவர்களை எல்லாம் அந்தந்த தாலுகாவில் உள்ள ஒவ்வொரு ஆபீஸ்களுக்கும் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். இன்றும் அதைச் செய்கிறேன். காகிதத்தை சிக்கனமாகச் செலவு செய்யவேண்டும், நல்ல காகிதமாக இருந்தால் இரண்டு பக்கத்திலும் எழுத வேண்டும். சட்டசபையில் பேசுவதற்கு குறிப்புகள் எடுத்துக் கொள்வதற்குக்கூட அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்படுகிற அரசாங்க முத்திரையிட்ட தாள்களில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குறிப்பு எழுதி வைத்துக் கொண்டு, பல தாள்கள் கொண்ட கத்தையுடன் அங்கத்தினர்கள் பேசுவதைப் பார்க்கிறோம். அவற்றில் ஏழெட்டு குறிப்புகள் எழுத முடியும். இருந்த போதிலும் ஒன்றோ இரண்டோதான் எழுதிக் கொள்கிறார்கள். இது என்ன சிக்கனமோ தெரியவில்லை. அடுத்தப் பக்கத்தில்கூட குறிப்பு எடுத்துக் கொள்ள முடியும். அந்த வகையில் சட்டசபை அங்கத்தினர்கள் கூட இதற்கு வழிகாட்டியாக இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சுத்தமாக இருத்தல் மிகமிக அவசியம். சுத்தமாக இருப்பது கிராமங்களில் போதுமான அளவு சரியாக அனுசரிக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன். எனது சொந்த கிராமத்தில் கூட இது ஒரு பெரும் சோதனையாக இருக்கிறது. கிராமங்களை சுகாதாரமாக வைத்துக்கொள்ளும் வழக்கத்தை பொது மக்களிடம் ஏற்படுத்துவது கடினமானதாக இருக்கிறது. அதற்கான வழிவகைகளை நாம் கண்டு பிடித்தாக வேண்டும். காந்தியடிகள் கூறியிருக்கிறார்.

"கிராமப்புனரமைப்பில் கிராம சுகாதாரம் இடம் பெறாவிட்டால் நம் கிராமங்கள் இப்பொழுதுபோல் குப்பை மேடுகளாகத்தான் இருந்து வரும். கிராமச் சுகாதாரம் கிராம வாழ்க்கையின் முக்கியமான பகுதியாகும். அது எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவு அதை நடத்துதலும் சிரமம்தான். யுகயுகமாக இருந்துவரும் அசுத்தத்தைப் போக்குவதற்கு பிரம்மாண்டமான முயற்சி தேவை" என்று இதற்காக நான் அரசாங்கத்தையோ அல்லது சமுதாய நலத் திட்டத் துறையில் பணியாற்றுகிறவர்களையோ குறை கூறவில்லை. அவர்கள் போதிய கவனம் செலுத்திக் கொண்டுதான் வருகிறார்கள். சட்டசபை அங்கத்தினர்களும் இதில் போதிய கவனம் செலுத்தவேண்டும். பாரதியார்,

" துணிவெளுக்க மண்ணுண்டு
தோல் வெளுக்க சாம்பலுண்டு
மணிவெளுக்க சாணையுண்டு
மனம் வெளுக்க வகையில்லை"

என்று கூறியிருக்கிறார்கள். மக்கள் மனதை பிரகாசிக்க வைக்க புதுப் புது உண்மைகளை மக்கள் மனதில் புரிய வைப்பது கஷ்டமான காரியம்.

"உற்றவர் நாட்டவர் ஊரார் இவர்க்குண்மைகள் கூறி இனியன செய்தல் நற்றவ மாவது கண்டோம் இதில் நல்ல பெருந்தவம் யாதொன்றுமில்லை"

"சேவை மனப்பான்மை இல்லாவிட்டால் போன புதிதில் பிடித்தமாகத் தோன்றிய கிராமம் சிறிது காலத்தில் அருவருப்பளிப்பதாய் ஆகிவிடும்."

என்று காந்தியடிகள் கூறியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல.

"நாம் கிராமத்தாருக்கு மிகப் பெரிய கொடுமை இழைத்த குற்றம் புரிந்திருக்கிறோம். இக் குற்றத்திற்கு நாம் செய்யக்கூடிய ஒரேயொரு பரிகாரம் அவர்களை அழிந்து போன கைத்தொழில்களையும் கலைகளையும் மீண்டும் உயிர்ப்பிக்கச் செய்து, இவ் வகையில் உண்டாக்கப்படும் பண்டங்கள் உடனுக்குடன் விற்பனையாவதற்கு ஏற்பாடு செய்தலே. கடவுளைவிட அதிகப் பொறுமையும் சகிப்பும் உள்ளவர் இருக்க முடியாது. ஆனால் அவர் பொறுமைக்கும் ஓர் எல்லை, அளவு இருக்கவே செய்கிறது. நாம் கிராமங்களிடம் நமக்குள்ள கடமையை மறந்து வாழ்ந்தால் அது கடவுளுக்கே பொறுக்காமல் போய்விடவும், அது நம் அழிவில் போய் முடியும்." என்றும் காந்தியடிகள் கூறியிருக்கிறார்கள். கிராமங்களைப் பற்றி கிராம வாசிகளைப் பற்றி, கிராம நாகரிகத்தைப் பற்றி எல்லாம் காந்தியடிகள் வாழ்ந்த காலத்திலே அப்போதைக்கப்போது கூறி வந்திருக்கிறார்கள். அவைகளை யெல்லாம் மனதில் கொண்டுதான் இந்தத் திட்டம் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டு, பிர்கா அபிவிருத்தித் திட்டம், சமுதாய நலத் திட்டம் என்ற வகையில் பாரதம் முழுமைக்கும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் நல்ல முறையில் பயன் அளிக்கிறதா, செயல் படுத்தப்பட்டு வந்திருக்கிறதா என்பதைப் பற்றிக் கணிக்க இன்னும் உரிய காலம் வரவில்லை என்பது என்னுடைய அபிப்பிராயம். இன்றைக்குக் கிராம மக்களுடைய மனோபாவத்திலே மாறுதல் ஏற்பட்டு இந்தத் திட்டத்தை நடத்தி வைப்பதிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள், அக்கறை கொண்டிருக்கிறார்கள். நம்மைப் போன்றே மற்றவர்களும் சுகவாழ்வு, சுகஜீவனம் நடத்தும் வகையில் வாழ்க்கையைப் புனிதப்படுத்திக் கொள்ளவும், அமைத்துக் கொள்ளவும் மனப் பக்குவம் என்று உருவாகிறதோ, அதைப் பொறுத்து நல்லபடியான பலனை இத் திட்டங்கள் அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அந்த மன மாற்றத்தை இந்தக் குறுகிய காலத்தில் எதிர்பார்க்கவும் முடியாது என்பது என்னுடைய கருத்து. ஆயினும் இது வரை பெருமைப்படக்கூடிய முறையிலே பல நல்ல காரியங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன. பாரதியார் வாழ்ந்த காலத்தில்—

"கஞ்சி குடிப்பதற்கிலார் அதன்
காரணங்கள் இவை எனும் அறிவுமில்லார் . . ."

என்று கிராம மக்களுடைய போக்கைக் கவனித்துப் பாடியிருக்கிறார். இன்று இந்த எண்ணங்கள் கிராமப் புறங்களிலே மாறிக் கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் கவனித்துப் பார்க்கும் போது கிராமப் புறங்களிலே விழிப்பு உணர்ச்சியும் ஏற்பட்டிருக்கின்றன என்பதை உணர்ந்து கொள்ளலாம். அவர்களுடைய கிராமத்தை எல்லா வகைகளிலும் நல்லபடியாக வைத்துக் கொள்ள வேண்டுமென்ற அக்கறை ஏற்பட்டிருக்கிறது. பலவிதமான புதிய திட்டங்கள் நிறைவேறி வருகின்றன. சுதந்திரம் வந்தபிறகு



பின்னால் அவர்களுடைய கிராமத்திற்குப் பாட்டை வசதிகள், கல்வி சுகாதார வசதிகள் ஆகியவற்றுக்காக திட்டங்கள் நிறை வேற்றப்பட வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டு அதற்கான ஒத்துழைப்பை அளித்து வருகிறார்கள். இருந்தாலும் கூட கிராமங்களுக்குள்ளேயே சொந்த அளவிலே போட்டி, பொறாமை மனப்பான்மைகள் ஏற்பட்டு வருகின்றன. அவரவர்களுடைய கிராமங்களிலே கைத்தொழில்கள் ஏற்பட வேண்டுமென்ற மனப்பான்மை இன்று கிராம மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய போட்டி, பொறாமை மனப்பான்மை நாளடைவில் குறைந்து விடுமானால் இந்தத் திட்டங்களால் பூரண பலன் ஏற்பட முடியும் என்பதில் சந்தேகம் இல்லை. கிராம நாகரிகம் சரிவர அமல் நடத்தப்படுவதற்குக் கிராமக் கைத்தொழில் திட்டம் அனுகூலமாகவே அமைந்திருக்கிறது என்று கருதுகிறேன். காந்தியடிகள், 'கிராம நாகரிகம் அழிந்து விடுமானால், பாரதமே அழிந்து விடும், இந்தியாவின் புராதன நாகரிகம் கிராமங்களிலே தான் இருந்து வருகிறது. அந்த ஜீவன் எப்போதும் அழியாமல் இருக்கவேண்டும்' என்று கூறியிருக்கிறார். அத்தகைய நிலையை உண்டாக்கும் கிராமக் கைத்தொழில்களைத் தோற்றுவிக்க வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் ஏரியாவிலும் என்னென்ன கைத்தொழில்களை ஆரம்பிக்கலாம் என்று முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டபோது, கிராமங்களின் நலத்தைப் பேணக்கூடியவர்கள் கூட, குறிப்பாக இன்ன இன்ன கைத்தொழில்களைத்தான் செய்ய முடியும் என்று கூறி அவற்றுக்கு ஆக்கம் அளிப்பதற்கான யோசனைகளைக் கூறுவதில் தயக்கம் கொள்கிறார்கள். எல்லோருடைய கண்ணோட்டமும் பெரிய தொழில்களில், இயந்திர சாதனத் தொழில்களில்தான் இருந்து வருகிறது. கிராமங்களில் கிடைக்கக்கூடிய மூலப் பொருள்கள் என்னென்ன, வசதிகள் என்னென்ன என்பதைக் கவனித்து அத்தகைய தொழில்களை ஆரம்பிப்பது பற்றி யோசனைகளைக் கூற வேண்டும், அரசாங்கம் கடந்த ஓரிரண்டு ஆண்டுகளாக, பஞ்சாயத்து யூனியன் பகுதிகளிலே கிராமக் கைத்தொழில்களை நிறைவேற்றுவதற்காக வேண்டிய யோசனைகளைக் கூறி, குறிப்பிட்ட பஞ்சாயத்துக்களில் இன்ன இன்ன கைத்தொழில்களை ஆரம்பிக்க வேண்டுமென்ற வகையில் முயற்சி எடுத்துக் கொண்டு வருகிறது. மேலும் மேலும் அந்த வகையில் கிராமக் கைத்தொழில்களை வளர்த்து வரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

விவசாயம் சம்பந்தப்பட்ட மட்டில் அதற்காக ஒதுக்கப்பட்ட பணம் இப்போது சரிவர செலவு செய்யப்பட்டு வருகிறது. நூற்றுக்கு நூறு பயன் அளிக்க தக்க வகையில் அந்தத் தொகை செலவழிக்கப்பட்டு வருகிறதா என்பதை ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் நிர்வாகிகளும் கவனித்து ஸ்தல மக்களின் ஒத்துழைப்பைப் பெறும் வகையில் முயற்சிகளை மேற்கொண்டு விவசாயத் திட்டம் செயல்படும்படி ஏற்பாட்டைச் செய்யவேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே, விவசாய அபிவிருத்தியானது பெரும்பாலும் கிராமப் பஞ்சாயத்து யூனியன்களுடைய

என்றும் கூறியிருக்கிறார், பாரதி. தவத்தைப் பற்றி இவ்வாறு அவர் இலக்கணம் கூறியிருக்கிறார். இன்று கிராம மக்களிடம் பலவித எண்ணங்கள் புகுத்தப்படுகின்றன. அரசியல் கண்ணோட்டத்தோடு ஒவ்வொரு அரசியல் கொள்கையை அனுஷ்டிப்பவர்களும் தங்கள் கட்சிக்கு ஆதாரமாக இருக்கும் வகையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு உண்மையை கூறுகிறார்கள். ஆகவே கிராம மக்கள் எது சரி என்று உண்மையைப் புரிந்துகொள்வதில் கஷ்டம் ஏற்படுகிறது. ஒரு ஊரில் ஒரு வழியாக ஒரு ரோடு போட வேண்டுமென்று தீர்மானித்தால், அல்லது ஒரு இடத்தில் கிணறு வெட்டுவது என்று தீர்மானித்தால் இரண்டு கட்சிகள் ஏற்பட்டு அபிப்பிராய பேதம் ஏற்படுகிறது. தாம் குறித்த ஒரு வழியாக ரோடு செல்லாவிடில் அவ்வழியாகச் செல்லவேண்டுமென்று நினைப்பவர்களிடம் போய் ஒரு கட்சியினர் உட்கார்ந்து கொண்டு அவர்கள் எண்ணத்திற்கு ஆக்கம் அளித்து, ஊக்கம் கொடுத்து அவர்களைத் தங்களுக்கு ஆதரவாளர்களாக்க முயற்சிக்கிறார்கள். ஆக இரண்டு வித அபிப்பிராயம், கட்சி ஏற்படுகிறது. இதில் எது சரி என்று தேர்ந்து எடுக்க முடியாது மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இத்தகைய நிலையில் சமுதாய நலத் திட்டப் பணிகள் நிறைவேறுவதில் இப்படிப்பட்ட கஷ்டங்களும் குறுக்கிடுகின்றன. எனவேதான் மேற்கூறியவாறு "உண்மைகள் கூறி இனியன செய்தல் நற்றவம்" என்று பாரதியார் சொல்லியிருக்கிறார். ஆனால் அந்த உண்மைகள் எவ்வாறு எடுத்துக் கூறப்படுகின்றன, அவைகள் எவ்வாறு செயல்படுகின்றன என்று பார்க்கும்போது வருந்த வேண்டியிருக்கிறது.

"பக்கத்திலிருப்பவர் துன்பம் தன்னைப்
பார்க்கப்பொறாதவன் புண்ணியமூர்த்தி
ஒக்கத்திருந்தி உலகோர் நலம்
உயர்திடும் வண்ணம் உழைப்பவன் யோகி"

என்று அவர் சொன்னார். அம்மாதிரியாக தவத்தையும் யோகத்தையும், பாரதியார் எப்படி இப்பணிகளுடன் இணைத்தாரோ அந்த உண்மைகளை மனதில் கொண்டு, சமுதாய நலத் திட்டப் பணிகள் கிராமங்களில் நிறைவேறும் வகையில், எந்தெந்த வகையில் அவர்களுடைய சக்திகளும், அவர்களுடைய எண்ணங்களும் சிதறுண்டு போகாமல், வகுக்கப்பட்ட திட்டங்கள் நிறைவேறுவதற்கு அவர்களுடைய ஒருமித்த ஒத்துழைப்பைத் தரும் வகையில் அவர்கள் மனதில் உண்மைகள் மலரக் கூடிய முறையில் எடுத்துக் கூறினால் இந்தப் பணிகள் சீக்கிரமாக நிறைவேறும். அப்படிச் சொல்லும் போது இதிலே இருக்கக்கூடிய கஷ்டங்களையே அவர்கள் பிரமாதமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அந்த பலஹீனம் நம்மிடம் கூட வந்திருக்கிறது. கிராம மக்கள் இன்னின்ன வகையில் கஷ்டம் இருக்கிறது என்று சொன்னால், உடனே அவைகளுக்கு பதில் கூறுவதற்கு, அவைகளுக்கு விளக்கம் கூறுவதற்கு நாமாகவே பயந்து அவர்கள் சொல்லுவதை அப்படியே ஒப்புக்கொள்ளும் பலஹீனம் நம்மிடம் ஏற்பட்டிருக்கிறது. இப்படியே போய்க் கொண்டிருந்தால், உண்மையைத் தெரிந்துகொள்ள முடியாது. அவர்கள் சாத்தியமல்லாத தவறான ஆசைகளை மனதில் கொண்டு



இவ்வளவு வேலைகள், இப்படி இப்படி, இன்னின்ன காலத்திற்குள் நடைபெறவேண்டும் என்றெல்லாம் அவர்கள் எடுத்துக் கூறும் போது, கூறக்கூடிய ஒவ்வொரு பிரச்னைக்கும் எது சாத்தியம், எது சாத்தியமல்ல என்று அவர்கள் உணரும் வகையில் உண்மைகளைச் சொல்லும் தைரியம் நமக்கு வரவில்லை. அவர்களிடம் அறியாமை என்னும் பலஹீனம் இருக்கிறது. அந்தப் பொதுமக்கள் ஆசைப்படக்கூடிய ஒவ்வொரு கோரிக்கையிலும், இது நியாயம், இது நியாயம் அல்ல. இது குறித்த காலத்தில் நிறைவேறக் கூடும், இது நிறைவேற்றக்கூடாது, அதை நிறைவேற்றுவதில் அரசாங்கத்திற்கு இருக்கக் கூடிய கஷ்டம் என்ன என்ற உண்மையைச் சொல்லுவதற்கு தைரியம் வரவில்லை. எனவே அவர்கள் சரியாக எண்ணமிடத் தெரிந்து கொள்வதில் அவர்களுக்கு மனத் தெளிவில்லாத கஷ்ட மேற்படுகிறது. ஆகையால் திட்டங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் அவர்கள் விரும்பும் காரியங்கள் நிறைவேற்றப்படுவதில் நேரக் கூடிய சிரமங்களையும், சாந்தியங்களையும் புரிய வைக்கும் வகையில் நாம் உண்மைகள் கூற முற்பட்டால் அதை மக்கள் உணர்ந்து கொள்ளக் கூடிய நிலைமை ஏற்படும். இந்த சிரமங்களைப் பற்றிக் கூட வேண்டுமென்றே இரண்டு மூன்று விதமான மாறுபட்ட கருத்துக்களைச் சொல்லும் போது அவர்கள் மனதில் குழப்பம் உள்ளவர்களாகிறார்கள். அந்தத் திட்டத்தைப் பற்றி சரியாக கணிக்க இயலாது இருக்கிறார்கள். அவர்களிடமிருந்து ஒத்துழைப்புப் பெற்று கிராமப் பணிகளை நிறைவேற்றக் கருதியே கிராமப் புறங்களில் பஞ்சாயத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதற்கென்று சரியாக சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அவைகளுக்குச் சரியான நிதி மூலங்கள் தேடித் தரப்பட்டிருக்கின்றன. இவைகளெல்லாம் சட்டபூர்வமாக அமைந்திருக்கிறது. கிராம மக்கள் தாங்களே தங்களை அரசாட்சி செய்துகொள்ள சட்டம் உதவுகிறது. அதனுடைய நோக்கங்கள் நாளடைவில் அதிகமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஸ்தலத்தில் பஞ்சாயத்துக்களுக்கு, பஞ்சாயத்து யூனியன்களுக்கு, வரி விதிப்பு சம்பந்தமாக சட்டத்திலே என்னென்ன அதிகாரங்கள் இருக்கின்றனவோ, அவைகளெல்லாம் அப்படியே உரிய சந்தர்ப்பத்தில் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. இங்கே கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய விளக்க உரைப் பிரசுரத்தைக் கண்டதற்குப் பின்னர், சட்டத்தில் இருக்கக் கூடிய நோக்கங்கள் எவ்வளவு தீவிரமாக, எவ்வளவு விரைவாக அக்கறை கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்று தெரிகின்றது. சட்டத்திலே சொல்லப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படாமல் அதிகாரத்தை அரசாங்கம் கையில் வைத்துக்கொண்டிருக்கிறது என்று கருத இடமின்றி சட்டத்திலே கூறப்பட்டிருக்கக் கூடிய அத்தனை நோக்கங்களையும், செயல்களையும் நிறைவேற்றுவதற்காக அவ்வப்போது காரியங்கள் செய்யப்பட்டு வருவதையறிந்து எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. க. கோமதி சங்கர தீக்ஷிதர்:** கௌரவமிக்க தலைவர் அவர்களே, இந்த 22, 23 எண்களுள்ள, சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், கதர் ஆகிய மான்யங்களை ஆதரித்து இரண்டொரு

வார்த்தைகளைப் பேச ஆசைப்படுகிறேன். இந்த இரண்டு மான்யங்களும், மற்ற எல்லா மான்யங்களையும் விட, நம் நாட்டு மக்களுக்கு, அவர்களுடைய பொருளாதார சுபிட்ச வாழ்க்கைக்குப் பரவலான அதிகாரத்தை கிராம மக்கள் பெற்று, கிராமக் காரியங்களை, கிராம நிர்வாகங்களை தாங்களே நடத்திக்கொள்ள ஆற்றல் பெறக் கூடிய முறையில் காரியங்களில் ஈடுபடுவதற்குத் துணை புரியக் கூடிய வகையில் இருக்கக் கூடிய முக்கியமான மான்யங்கள் ஆகும். மகாத்மா காந்திஜி கண்ட கிராம ராஜ்யத்தை நிர்மானிக்கக் கூடிய திட்டங்களை நிறுவி, அவைகள் நல்ல முறையில் செயல்பட்டு, அதன் மூலமாக ஒரு மாபெரும் புரட்சியை காங்கிரஸ் ஆட்சி இந்த 15 ஆண்டு காலமாக இந்தநாட்டிலே நடத்தி சாதித்த சாதனை என்ன என்றால், நமக்குத் தெரியாமலேயே காந்திஜியின் பாதையில் நாம் சென்று சாத்வீகமான ஒரு பெரிய மாறுதலை, ஒரு பெரிய புரட்சியை, அதிகாரம் மக்களுக்கு ஜனநாயக அடிப்படையிலே சரி சமமாகப் பரவவேண்டுமென்று ஒரு மாறுதலை நாம் பெற்று வருகிறோம். அதற்கு உரிய திட்டங்கள் இந்த கிராம அபிவிருத்தித் திட்டமும, கதரும். பாரதியார் கூறினார்—

"ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச்சாலைகள் வைப்போம்
ஞாலம் நடுங்க வரும் கப்பல்கள் செய்வோம்
சந்தி தெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம்."

என்று. அவர் பாடியதற்கு இணங்க காங்கிரஸ் அரசாங்கம் திட்டங்கள் போட்டு அவைகளை செயலாற்றி வருகின்றன. கிராம பஞ்சாயத்து யூனியன்கள் கிராம மக்களாலேயே தங்கள் கிராமக் காரியங்களை நடைமுறையில் நிறைவேற்ற அதிகாரம் 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டம் மூலமாக அளிக்கப்பட்டு, அதன் படியே யூனியன்கள் நல்ல முறையிலே நடந்து வருகின்றன. வரி விதிக்கின்ற அதிகாரம், ஆரம்பக் கல்வியை நடத்துவது, ஏழைக் குழந்தைகளுக்கு உணவு இல்லாமல் கல்வி கற்றுக் கொள்வது நின்று விடக் கூடாது என்று எல்லாக் குழந்தைகளுக்கும் ஆரம்பக் கல்வி கிடைக்கவேண்டும் என்று அதற்கு வசதி செய்து கொடுக்கக் கூடிய முறையில் மதிய உணவு, விவசாய உற்பத்தி—இந்தியாவின் உயிர் நாடி இங்கு இருக்கிற கிராமங்கள் தான் என்று அதை நல்ல முறையிலே அறிந்து உணவுப் பற்றாக்குறை இல்லாமல், விவசாயத்தை விஞ்ஞான ரீதியில் அபிவிருத்தி செய்ய, கிராமப் பஞ்சாயத்துக்கள் மூலமாக, யூனியன்கள் மூலமாக இந்த விவசாய அபிவிருத்தி வேலையை மிகச் செவ்வனே, கண்ணும் கருத்துமாகச் செய்ய நம் மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலே விவசாயத்திற்கு டார்கெட் வைத்து, அந்த லட்சியத்திற்கு இணங்க விவசாய உற்பத்தியை கவனத்திலே கொண்டு, இந்த வேலைகளெல்லாம் பஞ்சாயத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்த மான்யம் இந்த நல்ல காரியங்களுக்காக ஒதுக்கப்பட்டு வந்திருக்கிறது.



உரம், உர வினியோகம், கம்போஸ்ட் உரம் என்று எடுத்துக் கொண்டால், கம்போஸ்ட் உரத்தை ஒவ்வொரு கிராமத்திலும் தாங்களே தயார் செய்து அதை உபயோகிப்பதற்கு வேண்டிய நல்ல நல்ல கவனங்கள் செலுத்தப்பட்டு வருகின்றன. உர வினியோகத்திலே காலாகாலங்களில் மக்களுக்கு பஞ்சாயத்து மூலமாக வினியோகிப்பதற்கு வேண்டிய காரியங்களைச் செய்து வருகிறார்கள். அது மாத்திரமல்லாமல் உர வினியோகத்தில் ஊழல்கள் இல்லாமல் வினியோகிக்க பஞ்சாயத்து கவுன்சில்களும், வில்லேஜ் கைடுகளும், அக்ரிகல்சுரல் எக்ஸ்டென்ஷன் ஆபீசர்களும் தங்கள் கடமையை ஆற்றி வருகிறார்கள்.

அது மாத்திரமல்லாமல் புறம்போக்கு நிலம் கிராமப் பஞ்சாயத்துக்களிடம் அளிக்கப்பட்டிருக்கின்றன. அதன் நோக்கத்தையும், அதனுடைய நன்மைகளையும் நாம் உணரக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைக்கு விலைவாசிகள் அதிகமாக ஆகிக் கொண்டிருக்கும்போது, விறகு விலை அதிகமாக இருக்கிறது. கிராம மக்கள் வாங்க முடியாத அளவுக்குக் கூடி விட்டது என்று, கிராம மக்களுக்கு வேண்டிய விறகைத் தயார் செய்ய இந்தப் புறம்போக்கு நிலங்களை உபயோகப்படுத்தவேண்டுமென்றும், பழத் தோட்டங்களையும், காய்கறித் தோட்டங்களையும் புறம்போக்கு நிலங்களில் பயிரிட்டு கிராம மக்களுடைய தேவைகளை நிறைவேற்றவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்தப் புறம்போக்கு நிலங்கள் பஞ்சாயத்துக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டங்களெல்லாம் கண்ணும் கருத்துமாக கிராமங்களில் நிறைவேற்றப் படுகின்றனவா, அமலாக்கப்படுகின்றனவா என்று பார்த்தால், அமலாக்கப் படுகின்றன என்று தான் சொல்லவேண்டும். அதிருஷ்டவசமாக நல்ல அனுபவம் உள்ள, தன்னுடைய வாழ் நாள் முழுவதும் கிராம மக்களுக்கு பணியாற்றி, நிர்மாணத் திட்டங்கள் வெற்றி பெறவேண்டும் என்ற கருத்துக்கொண்டுள்ள அடிஷனல் டெவலப்மெண்டு கமிஷனரால் இது அமலாக்கப்பட்டு வருகிறது என்பதை நாம் என்றும் பொழுது, இந்தத் திட்டங்களெல்லாம் நல்ல முறையில் கிராமங்களுக்கு நன்மை அளிக்கும் என்ற நம்பிக்கையைப் பெற்று, மகிழ்ச்சியுறுகிறோம். அவ்வாறே அதிக அனுபவம் உள்ள மந்திரிகள், ஜீவாதாரமாக இருக்கிற நிர்மாணத் திட்டங்களை, மக்களுடைய பொருளாதார முன்னேற்ற வாழ்வை அளிக்கும்படியான திட்டங்களை, நல்ல முறையிலே நிறைவேற்றி வருகிறார்கள் என்பதை அனுபவப்பூர்வமாகக் காண்கிறோம். நல்ல அனுபவம் வாய்ந்த மந்திரிகள் இதை நிர்வகிக்கின்றனர். அனுபவம் உள்ள உயர் அதிகாரிகளினால் இந்தத் திட்டம் அமல் நடத்தப்பட்டு, அங்கு என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதை அவர்களே கவனித்து சீர்திருத்தி வரக்கூடிய நிலைமையில் இப்பொழுது இவைகள் இருக்கின்றன. 10-00 a.m.

பஞ்சாயத்து கவுன்சில்களுக்கு ஆரம்பக் கல்வியை நிர்வகிக்கின்ற அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிராமாந்திரங்களில் போக்குவரத்து வசதி செய்துகொடுக்கவேண்டிய அதிகார

யைப் பார்க்கின்றபொழுது பாடசாலையில் வெய்யில் படுகின்ற அளவுக்கும், மழை பெய்தால் மழைத் தண்ணீர் படுகின்ற அளவுக்கும் நிலைமைகள் இருந்தன. இன்று அவைகள் மாற்றப்பட்டிருக்கின்றன. பாடசாலைகளுக்கு நல்ல கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அதன் மூலம் கல்வியின் தரம் உயர்வதற்கு வாய்ப்பும், வசதியும் ஏற்பட்டிருக்கிறது. கல்வித் திட்டத்தை எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு யூனியனிலும் ஒவ்வொரு பாட திட்டம் இருப்பதாகத் தெரிகிறது. அப்படியில்லாமல் ஜில்லா அடிப்படையிலாவது ஒரே பாட திட்டமாக இருந்தால் வசதியாக இருக்கும். அதிகாரி மாற்றப்படும்பொழுது ஒரு யூனியனில் இருக்கிற பையன் அடுத்த யூனியனில் போய் படிக்கவேண்டுமென்றால், அந்த யூனியனில் பாட திட்டம் வேறு மாதிரியாக இருக்கிறது. அதனால் அவர்களை பாதிக்கக்கூடிய நிலை ஏற்படுகிறது. பாட திட்ட முறையில் அரசாங்கம் கவனம் செலுத்தி, ஜில்லா அடிப்படையில் முன்பு ஜில்லா போர்டு இருந்த காலத்தில் இருந்த பாட திட்டத்தையாவது, அல்லது அரசாங்கமே மாகாணரீதியில் ஒரு பாட திட்டத்தையாவது வகுத்து, ஒரே பாட திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதிய உணவு திட்டத்தின்கீழ் பாடசாலைகளில் உணவு அளிக்கப்படுகிறது. அந்தத் திட்டத்திற்கு பஞ்சாயத்து போர்டு தலைவர் தலைவராக இருக்கிறார். ஆசிரியரும், தலைவரும் இரண்டு பேர்களும் ஒன்றுபட்ட கருத்துடன் இருக்கிறார்கள். ஓரளவுக்கு பணம் படைத்தவர்களை வசதி உள்ளவர்களை மதிய உணவுக் கமிட்டித் தலைவராகப் போடுவது நல்லது என்று பொதுமக்கள் பரவலாகப் பேசிக்கொண்டிருக்கிற காரணத்தினால், அதை அரசாங்கம் கவனித்து அதுமாதிரி செய்துதரவேண்டும்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை எடுத்துக்கொண்டால், ஒரு சில பஞ்சாயத்துக்களில் மிகத் தீவிரமான அக்கறை எடுத்துக் கொண்டு அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டு வருகிறார்கள். குறிப்பாக, ஜில்லா டெவலப்மெண்டு கவுன்சில் கூட்டத்தில் நாங்கள் பார்த்திருக்கிறோம். சில யூனியன்களில் உள்ளவர்கள் நல்ல முறையில் செயல்படவில்லை என்று குறைபாடுகளுக்கு இடம் இருக்கிறது. ஆகையால், இதற்கான காரணத்தை துரிதமாகக் கண்டுபிடித்து, அங்கிருக்கிற பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் சேர்ந்து நடவடிக்கை எடுத்து, குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று அரசாங்கம் கட்டளைப் பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேளாண்மையை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் வேளாண்மை மானியமாக ரூ. 2 லட்சம் கொடுக்கப்படுகிறது. ஆனால் குறிப்பாக, சாகுபடியாளர்களுக்கும், நிலமற்றவர்களுக்கும் இந்த மானியம் கிடைப்பதில்லை. நன்னிலம் பஞ்சாயத்து யூனியனிலே எல்லா விவசாயிகளுக்கும் மானியம் கொடுக்கப்படுமென்று பஞ்சாயத்துத் தலைவர்களே தண்டோரா மூலமாக விளம்பரம் செய்தார்கள். பிறகு



பட்டாதாரர்களுக்கு மாத்திரம்தான் கொடுக்கப்படும், மற்ற விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட மாட்டாதென்று சொன்னதால் விவசாயிகள் வெந்த மனதுடன் திரும்ப வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஐந்து ஏக்கர் வைத்து சாகுபடி செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் இந்த மானியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது, பஞ்சாயத்து யூனியன்களிடத்தில் புறம்போக்கு நிலம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் ஹரிஜன மக்கள்தான் அங்கே குடியிருக்கிறார்கள். தேர்தல் காரணமாகவோ, அல்லது வேறு காரணங்களுக்காகவோ, அங்கே உள்ள பஞ்சாயத்துத் தலைவர்கள் மரங்கள் நட வேண்டுமென்று சொல்லி அவர்களை அப்புறப்படுத்தி வருகிறார்கள். அவர்களுக்கு வேறு இடம் கொடுக்கும் வரையிலும் அவர்களை அப்புறப்படுத்தாமல் இருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சில பஞ்சாயத்து யூனியன்களில் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் கிட்டத்தட்ட 25 மைல் தூரம் இருக்கிறது. ஆகையால் அங்கு சென்று பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தங்களுடைய கடமைகளை ஆற்றி வருவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, சுற்றளவைக் குறைத்து, பஞ்சாயத்து யூனியன்களை ரீமாடல் செய்தால் ஓரளவுக்கு நலமாய் இருக்கும். இப்பொழுது பேரளம் பிர்க்காவும், நன்னிலம் பிர்க்காவும் ஒரு யூனியனாக இருக்கிறது. கொடவாசல் பிர்க்காவும், திருவிழிமலை பிர்க்காவும் ஒரு யூனியனாக இருக்கிறது. இந்த பஞ்சாயத்துக்களுக்கிடையே உள்ள தூரம் ஜாஸ்தியாக இருக்கிறது. ஆகவே, பேரளத்தையும், திருவிழிமலையையும் ஒன்றாக ஆக்கிவிடலாம். அதே போன்று நன்னிலத்தையும், கொடவாசலையும் ஒன்றாக ஆக்கிவிடலாம். அப்படியில்லையென்றால் கொடவாசலையும், கொரடாச்சேரியையும் ஒன்றாக ஆக்கிவிடலாம். நீண்ட தூரமாக இருக்கிற பஞ்சாயத்துக்களைப் பிரித்து நடுமையாக வைத்தால் தலைவர்கள் சீக்கிரத்திலே சென்று நல்ல காரியங்களைச் செய்வதற்கும், பொது மக்களுடைய குறைகளை தெரிந்துகொள்ளுவதற்கும் வாய்ப்பு ஏற்படும்.

பஞ்சாயத்து யூனியன் சட்டசபை உறுப்பினர்களுக்கு வோட்டுப் போடும் உரிமை கிடையாது. சட்டசபை உறுப்பினர்கள் பல லட்சக்கணக்கான வோட்டுகளைப் பெற்றுத்தான் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொள்ளுவதற்கு மட்டும் அரசாங்கம் வழிவகை செய்திருக்கிறது. வோட்டுரிமை கொடுக்கப்படாததினால், பஞ்சாயத்து யூனியனுக்குச் சென்று காரியங்களைச் செய்வதிலே அசிரத்தை ஏற்பட்டிருக்கிறது. அபாயின்ட்மென்ட் கமிட்டி, கான்டிராக்ட் கமிட்டிகளிலே அவர்களுக்கு இடம் கொடுக்காவிட்டாலும், வோட்டுரிமை வழங்க வேண்டும். பஞ்சாயத்துத் தலைவரை பொது மக்களே தேர்ந்தெடுக்கும்படிச் செய்தால் நலமாக இருக்கும். அப்படித் தேர்ந்தெடுத்தால் விரோத மனப்பான்மை ஏற்படாது. முன்பெல்லாம் தலைவர் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார். பிறகு அந்தத்

மும், கிராமாந்திர ரோடுகளை செப்பனிட்டு, ஒதுக்கமான இடங்களில் இருப்பவர்களுக்குக்கூட பஸ் போக்குவரத்து வசதி கிடைப்பதற்கு உள்ள நிலையை கவனித்து, அதைப் பெருக்குவதற்கான அதிகாரம் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

குடிதண்ணீர் திட்டம் நிறைவேற்றப்படாத கிராமமே கிடையாது என்று சொல்லலாம். நான் பார்த்துவருகிறேன், என்னுடைய தொகுதியில் 3 பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்கள் இருக்கின்றன. அநேகமாக எல்லா கிராமங்களிலும் குடிநீர் திட்டம் அமலாககப்பட்டிருக்கின்றன. அதன் மூலமாக ஏற்பட்ட பலனை இப்பொழுது மக்கள் உணர்ந்துதான் வருகிறார்கள். முன்பு குடிதண்ணீர் திட்டம் அமலில் இல்லாத காலத்திலே அங்கிருக்கிற மக்கள் கொடிய தொத்து வியாதியினால் பாதிக்கப்பட்டு நூற்றுக்கணக்கான மக்கள் மடிந்து போயிருக்கிறார்கள். அந்த நிலைமையையும் நான் பார்த்திருக்கிறேன். இப்பொழுது மக்கள் அந்த முன்னேற்றத்தை உணர்கிறார்கள். குடிதண்ணீர் திட்டம் அமலாக்கப்படுவதினால் சுகாதாரம் நல்ல நிலையில் இருக்கிறது என்பதை உணர்ந்து வருகிறார்கள். சில கிராமங்களில், மேஜர் பஞ்சாயத்து கிராமங்களில் மாத்திரம் குடிதண்ணீர் திட்டம் இன்னும் அமலாகவில்லை, சீக்கிரம அந்த இடங்களிலும் அமலாக்கப்படும் என்று நினைக்கிறேன்.

கதரைப் போல புனிதமான தொழில் வேறு ஒன்றும் கிடையாது என்பதை நான் அதிகமாக எடுத்துச்சொல்லத் தேவை இல்லை . . . மகாத்மாஜி இந்தக் கதர் திட்டத்தை அளித்தார். ராட்டைக் கதரின் நுனியில்தான் இந்த நாட்டினுடைய சுதந்திரம் இருக்கிறது என்று ராட்டைகளை அளித்தபோது கூறினார். அதைக்கூட நம்பாத அறிவாளிகள் அந்தக் காலத்தில் இருந்தார்கள். கடைசியில் அந்த ராட்டையின் மூலம் தான் சுதந்திரம் பெற்றோம் என்றால், அது மிகையாகாது. அந்தக் கதர் இயக்கத்தை இன்னும் நல்ல சிரத்தையோடு கிராமங்களில் அபிவிருத்தி செய்யவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். முன்பு அம்பர் சர்க்கா டிரெயினிங் கொடுத்தார்கள். இப்பொழுது அந்த பயிற்சி நின்றுவிட்டது, அந்தப் பயிற்சி இல்லை. கதர் நிர்வாகத்தை செய்யக்கூடியவர்களுக்கு காந்திஜியின் கதர் ஸ்பிரிட், அந்த சிரத்தையை ஊட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும் என்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கதர் ஸ்பிரிட் இருந்தால்தான் அந்தந்த கிராம மக்களோடு பழகி, வீடுகள் தோறும் ராட்டைகள் சுற்றும்படிச் செய்வதற்கு ஹேதுவாக இருக்கும். இப்பொழுது கிஸான் சர்க்கா சுற்றப்படுவதுகூட நின்றுவிட்டது என்று நினைக்கிறேன். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ராட்டைகள் இப்பொழுது சுற்றப்படவில்லை, கதர் இப்பொழுது அபிவிருத்தி செய்யப்படவில்லை. குடிசை கைத்தொழில்களில் மாத்திரம்தான் அங்கிருக்கும் இண்டஸ்டிரியல் எக்ஸ்டென்ஷன் ஆபீசர் கவனத்தைச் செலுத்திக்கொண்டு வருகிறாரே தவிர, கதர் அபிவிருத்தியில் கவனம் செலுத்துவதில்லை என்பதை நான் அனுபவபூர்வமாகக் கண்டிருக்கிறேன், இப்பொழுது இரண்டு வருஷங்களாகப் பார்த்துவருகிறேன். அந்தக்



குறையை நீக்கி, வீடுகள் தோறும், அம்பர் சர்க்கா சுற்றப்படவேண்டும். அதன் மூலம் ஆயிரக்கணக்கான ஏழை தாய்மார்கள் தங்களுடைய வாழ்க்கையை சிறிது அளவாவது நல்ல முறையில் நடத்துவதற்கு வழி ஏற்படும். முன்பு அந்த வகையில் அம்பர் சர்க்கா உபயோகமாக இருந்தது. இடையிலே அது நின்றுவிட்டது. என்ன காரணம் என்று தெரியவில்லை, மறுமுறையும் அம்பர் சர்க்காவுக்கு உயிர் கொடுக்கவேண்டும். கிஸான் சர்க்கா ஏராளமாக சுற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

“மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் வையவாழ்வு தன்னிலெந்த வகையிலும் நமக்குள்ளே தாதர் என்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே”

என்று பாரதியாரின் வாக்குக்கு இணங்க, பஞ்சாயத்து கவுன்சில் அமைப்பு ஆட்சியிலே எந்தக் கிராமத்திலும் நம் தாய்மார்கள் எல்லாம் பொது வாழ்வில் கொஞ்சம் தலைநிமிர்ந்து மாதர் சங்கங்களை அமைத்து, அந்த கிராம வாழ்க்கையிலே அவர்கள் பங்குகொள்வதை இந்தத் திட்டம் நல்ல முறையில் அமலாக்கியிருக்கிறது என்றால், இதைவிட நம்முடைய நாட்டுக்கு நாம் செய்ய வேண்டிய சிறந்த தொண்டு வேறு என்ன என்றுகூட எண்ண வேண்டியிருக்கிறது. நல்ல காரியங்களை கிராம அபிவிருத்தித் திட்டம் நிறைவேற்றி வருகிறது. நாமும் அதற்கு நல்ல ஒத்துழைப்பு கொடுத்து, பஞ்சாயத்து யூனியன், ஜில்லா அபிவிருத்தி கவுன்சில், கிராம மக்களுக்கு வேண்டிய நல்ல காரியங்களைத் தெரிவித்து, அவைகள் நல்ல முறையில் செயல்பட்டு, கிராம மக்கள் நன்மை பெறுவதற்கு நாம் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த இரண்டு முக்கியமான மான்யக் கோரிக்கைகளையும் ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். ஜெய் ஹிந்த்.

* திரு. பி. ஜயராஜ்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நான் கிராம அபிவிருத்தி ஸ்தல நிர்வாகத் துறை மான்யங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன். உலக உத்தமர் காந்திஜியினுடைய கனவை நினைவாக்குகிற முறையிலே இன்று கிராமங்களெல்லாம் புத்துணர்வு பெற்று, அதன் மூலம் கிராம மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு வழிவகை செய்து தரப்பட்டிருக்கிறது இந்த இலாகாவினால் என்று சொன்னால், அது மிகையாகாது. இந்த நாட்டிலே உள்ள ஏழை மக்கள், அரசாங்கம் என்றால் என்ன? நாட்டில் மக்களுக்கு அரசாங்கத்தின் மூலம் என்ன நன்மைகள் கிடைக்கின்றன? என்று எதிர்பார்க்க முடியாது இருந்த மக்கள், ஒவ்வொரு கிராமத்திலும் ஸ்தல அபிவிருத்தித் திட்டத்தின் மூலமும், பஞ்சாயத்து யூனியன் ஆட்சி மூலமும் நல்ல பல திட்டங்களின் பலனை அடைந்து வருகிறார்கள். குறிப்பாக, கல்வித் திட்டத்தின் மூலம் கிராம மக்கள் அபிவிருத்தி அடைந்து நல்வாழ்வு பெறுவதற்கு உள்ள சூழ்நிலைகள் இருக்கின்றன. முன்பெல்லாம் பாடசாலை என்று சொன்னால், பாடசாலை

Educational Officer என்ற கல்வி விஸ்தரிப்பு அதிகாரி இருக்கிறார். மேலும் டெபுடி இன்ஸ்பெக்டர் இருக்கிறார். இவர்கள் இருவருடைய வேலையும் ஒன்றாகத்தான் இருக்கிறது. ஆகவே இந்த இருவருடைய வேலையையும் ஒன்றாகச் சேர்த்து சிக்கனம் செய்யலாம். இப்படி பல முறைகளில் சிக்கனம் செய்வதற்கு வழி இருக்கிறது. இப்பொழுது ஏராளமான செலவு செய்யப்படுகிறது. அதைக் குறைக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே சி.எஸ்.ஆர். என்று ஒருவர் இருக்கிறார், அவருக்கு அரசாங்கம் ஏறத்தாழ 250 ரூபாய் சம்பளம் கொடுக்கிறது. அவருக்கு சம்பளம் கொடுப்பதைப்பற்றி நான் சொல்லவில்லை. கூட்டுறவு சங்கங்கள் கடன் வழங்க இருக்கின்றன. இது சம்பந்தமாக புள்ளி விவரங்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்தப் புள்ளி விவரங்களையெல்லாம் மற்றொரு அதிகாரி தயாரிக்கிறார். அதை அவர் தயாரித்து அவற்றை தணிக்கை செய்யப்படுகிறது. அவருடைய சொந்த முயற்சியில்லாமல் காப்பி அடித்து செய்யப்படுகிறது. அதனால் அங்கு இப்படிப்பட்ட ஒரு அதிகாரி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்படிப்பட்ட ஒரு அதிகாரி தேவையில்லை என்று தோன்றுகிறது. இதை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். எந்த அளவில் கிராமம் முன்னேற்றமடைய வேண்டுமோ, அந்த அளவில் கிராமம் முன்னேற்றமடையவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இதைப்பற்றி எஸ். கே. டே அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். அதிகார வர்கத்தினமுடைய தலையீட்டினால் இந்த முன்னேற்றமடையாமல் இருக்கிறது. ஆகவே கிராம முன்னேற்றமடைவதறகு வேண்டிய வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் இந்த பஞ்சாயத்துக்கள் சம்பந்தமாகச் சொல்லும்போது சில பஞ்சாயத்துக்கள் கடன்பட்டிருக்கின்றன. சில பஞ்சாயத்துக்கள் கடன் பஞ்சாயத்துக்களாகத்தான் இருக்கின்றன. எங்கள் பகுதியில், அதாவது கடலூர் பஞ்சாயத்திற்கு ஏறத்தாழ வருடம் ஒன்றுக்கு 65 ஆயிரம் ரூபாய்தான் வருமானம் வருகிறது. தண்ணீர் வசதி முதலிய வசதிகள் செய்து கொடுத்த குழாய் கடனுக்கு சுமார் 45 ஆயிரம் ரூபாய் சர்க்காருக்கு கட்டியாகிவிடுகிறது.. மற்றும் நிர்வாகச் செலவும் 20 ஆயிரம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. இப்படி 60 ஆயிரம் ரூபாய் செலவு செய்த பிறகு 5 ஆயிரம் ரூபாய்தான் மீதம் இருக்கிறது. இதை வைத்துக் கொண்டு ரோடு வசதிகள் முதலிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. நிதிக் குறைவால் ஏழெட்டு வருடமாக வசதிகளைச் செய்து கொடுக்க முடியாமல் இருக்கிறது. இந்த நிலைமையில் அந்த பஞ்சாயத்து கடன் பஞ்சாயத்தாக இருக்கிறது. அங்கே சுமார் ஒன்பது ஊர்கள் அடங்கிய யூனியன் இருக்கிறது. அங்குள்ள யூனியனுக்கு இவர்களால் கண்டரி-பியூஷன் கொடுக்க முடியாத காரணத்தால் பல வேலைகள், ரோடு போடுவது, பாலம் கட்டுவது போன்ற வேலைகள் நடைபெறாமல்



இருக்கின்றன. கேட்டால் பணம் கிடையாது என்று சொல்கிறார்கள். அந்தப் பஞ்சாயத்து ஒரு ஏழை பஞ்சாயத்தாகத்தான் இருக்கிறது. அவர்கள் கொடுக்க வேண்டிய தொகையை கொடுக்காததால், பல வேலைகள் நிதி ஒதுக்கியும் செய்யப்படாமல் இருக்கின்றன. பல இடங்களுக்கு பாலங்கள் கட்டப்படாமல் இருக்கின்றன. எங்கள் பகுதியில் சுருளி நதி என்ற ஒரு நதி இருக்கிறது. அதற்கு பாலம் கிடையாது. இதைப்பற்றி கனம் அமைச்சருக்கும் நன்றாகத் தெரியும் என்றே நினைக்கிறேன். அந்த நதியை கடக்கும்போது ஏதாவது மழை வந்துவிட்டால் அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. திடீரென்று மழை பெய்துவிட்டால், அந்த நதியை கடக்கவே முடியாது. அங்கு ஒரு பாலத்தைக் கட்டிக்கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அங்குள்ள பஞ்சாயத்துக்களுக்கு தங்களுடைய கண்ட்ரிபியூஷனைக் கொடுக்கக்கூடிய நிலைமையில் இல்லாமல் இருப்பதால், இந்த பாலம் கட்ட முடியாத நிலைமை இருக்கிறது. சில பஞ்சாயத்துக்களால் பங்கு கொடுக்க முடியாத காரணத்தால், ஏராளமான வேலைகள் நிறை வேற்றப்படாமல் இருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு உதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப்போலவே கூடலூர் பஞ்பாயத்துக்குத் தண்ணீர் வசதி முதலிய வசதிகள் செய்துகொள்வதற்கு சர்க்காரால் கொடுக்கப்பட்ட கடனை திருப்பிக்கொடுக்க இயலாமல் இருக்கிற காரணத்தால் அதை வாஜா செய்யும்படி வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் அடிப்படையில் கிராமந்தோறும் ஆரம்பப் பள்ளிகளை அமைக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. எங்கள் தொகுதியில் ஒரு ஹைஸ்கூலையும் அமைக்க வேண்டும் என்றும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பணம் இல்லாத காரணத்தால் ஆரம்பப்பள்ளிகளை ஆரம்பிக்காமல் இருக்கிறார்கள். இவைகளை அரசாங்கம் கவனித்து ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, தேர்தல் முறையைப்பற்றி எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி நானும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் சாதாரணமாக மூன்று வோட்டுகளைப் பெற்று வரக்கூடிய அளவில் இருக்கக்கூடாது. பஞ்சாயத்து தலைவர்களும், சேர்மனும் மக்களுடைய முழு ஆதரவையும் பெற்று வரக்கூடியவர்களாக இருக்க வேண்டும். இப்பொழுதுள்ள நிலைமையில் பல சங்கடங்களை உண்டாக்குகின்றன. அப்படி இருக்கக்கூடாது. கட்சி கண்ணோட்டத்துடன் இல்லாமல் இருக்க வேண்டும். கிராம ஆட்சி என்று மக்கள் கருத வேண்டும். அதற்கு இந்த அரசாங்கம் நல்ல வழிவகை செய்யவேண்டும். இப்பொழுதுள்ள திட்டமெல்லாம் நல்ல திட்டங்களாக இருந்தாலும் அதிருப்திதான் ஏற்படுகிறது. இப்பொழுது பல புகார்கள் வருகின்றன. அப்படி புகார்கள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நிர்வாகச் செலவு அதிகம் என்று கருதப்படுகிறது. செலவுகளைக் குறைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ள

தினர்களே தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று அரசாங்கம் ஆணையிட்டது. பொது மக்களால் தேர்ந்தெடுத்தால் பஞ்சாயத்திலே பிளவு ஏற்படாது. அங்கத்தினர்கள் தேர்ந்தெடுப்பதால், சில சமயங்களில் தேர்தல் காலத்தில் சில அங்கத்தினர்களை வெளியே வெகு தூரத்திற்கு கொண்டுபோகும் நிகழ்ச்சிகளெல்லாம் நடக்கின்றன. ஆகவே, பஞ்சாயத்துத் தலைவரையும், யூனியன் தலைவரையும் பொது மக்களே தேர்ந்தெடுப்பதற்கு வழிவகை செய்தால் நலமாக இருக்கும்.

கல்வியைப் பொறுத்தவரையில், ஹரிஜன மக்களிலே எத்தனை சதவிகிதம் ஆசிரியர் பதவிக்கு நியமிக்கலாம் என்று வழிவகை செய்யவில்லை. இப்பொழுது இருக்கிற முறைப்படி எம்பிளாய்மென்ட் எக்ஸ்சேஞ்சிலிருந்து அனுப்புகிறவர்களில் யாரை வேண்டுமானாலும் யூனியன் தலைவரும், மற்றும் அபாயின்ட்மென்ட் கமிட்டிகளும் தேர்ந்தெடுக்கலாம். திருப்பி அனுப்பித்து வேறு லிஸ்ட் கூட கேட்கலாம். ஆகவே ஹரிஜன மக்களுக்கு இவ்வளவு சதவிகிதம் கொடுக்கவேண்டும் என்று உத்தரவு அனுப்பித்தால், ஹரிஜன மக்களுக்கு உதவியாக இருக்கும்.

அடுத்தபடியாக, இப்பொழுது சமூக நல ஊழியர்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகளை பொது மக்களிடம் எடுத்துக் கூறி அவர்களுக்கான சமூக நலப் பணிகளைச் செய்து கொடுக்க வேண்டும். ஆனால், இப்பொழுது அவர்கள் தபால்காரர்கள் மாதிரி பஞ்சாயத்துத் தலைவர்களிடம் போய், கையெழுத்து வாங்கிக் கொண்டு வருகிற வேலையைத்தான் செய்கிறார்கள். இவர்களுக்கென்று திட்டவட்டமாக என்ன வேலையென்பதை நிர்ணயம் செய்தால் நலமாய் இருக்கும்.

மூன்றாவது நடவையாக கடைசிக் கட்டத்திலே ஆரம்பிக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன்களில் எல்லாம் கால்நடை விஸ்தரிப்பு அதிகாரி, விவசாய விஸ்தரிப்பு அதிகாரி, கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரி இவர்கள் இன்னும் போடப்படவில்லை. நன்னிலம் யூனியனில் விவசாய விஸ்தரிப்பு அதிகாரி இன்னும் போடப்படவில்லை. ஆகவே, கடைசிக் கட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்கும் சீக்கிரத்திலேயே அதிகாரிகளை நியமிக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் மற்ற யூனியன்களோடு சரிசமமாக முன்னேறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். இவைகளையெல்லாம் கவனித்து, துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் குடிமராமத்து வேலை நல்ல முறையில் செய்யப்படாததால், கால்வாய்கள் பழுது அடைந்திருக்கின்றன என்று குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. கீவளூர், மற்றும் சில ப்ளாக்குகளில் மட்டும் நல்ல முறையில் செய்திருக்கிறார்கள். குடிமராமத்து வேலையை பஞ்சாயத்துத் தலைவர் நல்ல முறையில் செய்து வருகிறார்களா, ஏதேனும் குறைகள் இருக்கின்றனவா, அதற்குக் காரணம் என்ன, இவற்றையெல்லாம் கவனித்து சர்க்கார் கொடுக்கும் பணத்தை நல்ல முறையில் செலவழிப்பதற்கு பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகள் ஊக்கத்துடன் செயல்பட வேண்டு



137882



மென்று கேட்டுக்கொண்டு, இத்தகைய கிராம அபிவிருத்தித் திட்டங்களினால் மக்களுக்கு நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது, வாய்ப்பும் வசதியும் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

*** திரு. மா. இராசாங்கம் :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சமுதாய நல அபிவிருத்தித் துறை மானியத்தின் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு ஏராளமான பொருள் செலவாகிறது, ஆனால் அதன் பலன் மிகவும் குறைவாக இருக்கிறது என்று நான் கூறுவதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். பொருளாதாரத் துறையில் இதை ஒரு நஷ்டமென்றுகூட சொல்லலாம். இது கறப்பது கால்படி, ஆனால் உதைபடுவது பல்போக என்பது போல். அரசாங்கத்தின் செல்வக் குழந்தையாக இந்த இலாகா இருக்கிற காரணத்தால், இந்த இலாகாவைப்பற்றி யாரும் எதையும் சொல்ல முடியாத நிலைமை இருக்கிறது. இதற்காக ஒதுக்கப்படும் தொகையில் பெரும்பாலான பகுதி ஊழியர்களுக்கே சரியாகப் போய் விடுகிறது. அதனால், திட்டங்களுக்காக செலவிடப்படும் தொகை மிகவும் குறைந்துவிடுகிறது. திட்டங்களுக்குத்தான் கூடுதலான பணத்தைச் செலவு செய்ய வேண்டும். ஆனால் இப்பொழுது அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்படும் அதிகாரிகளுக்காகவும், ஊழியர்களுக்காகவும் அதிகமான பணம் செலவிடப்படுகிறது. பெரும் பகுதிப் பணம் நிர்வாகத்திற்காக செலவு செய்யப்படுகிறது என்பதை மனதில் வைத்துத்தான் நான் இவ்வாறு சொல்கிறேன். இப்படி இருக்கிற நிலைமையிலே, கிராமங்களிலே பஞ்சாயத்து யூனியன்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை அந்த பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களைக் கேட்டால் தெரியும். "கையெழுத்துப் போடுகிற அளவிலேதான் எங்களுடைய அதிகாரம் இருக்கிறது, அதிகாரம் அத்தனையும் கமிஷனர் கையில் இருக்கிறது, நாங்கள் எதையும் செய்ய முடியவில்லை" என்று கூறுகிறார்கள். மக்கள் ஆட்சிக்கு மதிப்புக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிற நேரத்தில், மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றாலும், உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற தலைவரின் அதிகாரம் மிக மிகக் குறைவாக இருக்கிறது. கமிஷனருக்கே எல்லா அதிகாரமும் இருக்கிற காரணத்தினால், சேர்மனுடைய அதிகாரம் கையெழுத்துப் போடும் அளவில்தான் இருக்கிறது. ஆகவே பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு நேரடியான அதிகாரம் வழங்குவதற்கு வகை செய்தால்தான் அவர்கள் நல்ல முறையில் பணியாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

எனக்கு முன்பு பேசிய திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சிக்கனத்தைப் பற்றிப் பேசினார்கள். சிக்கனத்தை வரவேற்க வேண்டியதுதான். அவர் சொல்லும் வழிகளிலே என் போன்றவர்களும் சிக்கனத்தை வரவேற்கிறோம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆனால் இந்த சிக்கனம் பிளாக்குகளிலே எப்படிக் கையாளப்படுகிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். பிளாக்கில்

வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு இந்த சந்தர்ப்பத்தைக் கொடுத்ததற்கு என் நன்றியைக் கூறிக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. கோ. நாராயணசாமி நாயுடு:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து இது வரையிலும் பேசிய பல கனம் அங்கத்தினர்களுடைய கருத்துக்களையும் ஓரளவு நான் ஏற்றுக்கொண்டு, இது ஒரு நல்ல திட்டம் என்பதையும், இது ஒரு சிறந்த திட்டம் என்பதையும் சொல்லிக் கொண்டு நாம் கனவு கண்டு கொண்டிருந்தது இப்பொழுது நனவாகி இருக்கிறது, அப்படிப்பட்ட ஒரு திட்டம் இது என்றும், அதை நிறைவேற்றி வைக்கக்கூடிய ஒரு சூழ் நிலை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது என்பதிலும் ஆட்சேபனை இல்லை என்று சொன்னாலும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்பொழுது நிலைமை எப்படி இருக்கிறது என்றால், நிறைய மார்க்கு வாங்கின பையனுக்கு பாஸ் கிடைக்காமலும், குறைவான மார்க்கு வாங்கின பையனுக்கு பாஸ் கிடைப்பது போலவும் இருக்கிறது. அந்த நிலையில்தான் இப்பொழுது எம்.எல்.ஏ-க்கள் இருக்கிறார்கள். இப்பொழுது யூனியன் தலைவர்களை வைத்திருக்கக்கூடிய நிலைமை எப்படி இருக்கிறது என்றால் ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது. லட்சக் கணக்கில் வோட்டைப் பெற்று வந்த எம்.எல்.ஏ-க்கள் ஓட்டுபோட உரிமையிருக்க ஓட்டு அற்றவர்களாய் சாதாரணமாக பஞ்சாயத்து தலைவர்கள் பக்கத்தில் உட்கார வேண்டியதாக இருக்கிறது. இது ஜனநாயகத்திற்கு ஏற்ற வகையில் நடைபெறுவதாக இருக்கிறதா என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். எம்.எல்.ஏ-க்கள் எப்படி பஞ்சாயத்து தலைவர்களுடன் ஓட்டு அற்றவர்களாய் உட்கார வேண்டும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறதோ, அதே மாதிரி நகரங்களிலுள்ள நஞ்சை நிலங்களுக்கும் தீவிரசாகுபடி திட்டமோ இதர சர்க்கார் சலுகைகளோ இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. கிராமங்களில் இருக்கக்கூடிய நிலங்களுக்குக் கொடுக்கப்படுகிற சில சலுகைகள் நகரப்புறங்களில் இருக்கக்கூடிய நிலங்களுக்கு இப்பொழுது கொடுக்கப்படாமல் புறக்கணிக்கப்படுகிறது. உணவு உற்பத்திக்கு என்று நிலங்களை ஒதுக்கி இருக்கிறார்கள். நகரப்புறங்களில் இருக்கக்கூடிய நிலங்களும் உணவு உற்பத்திதானே செய்கிறது. ஆனால் அவைகளுக்கு கிராமத்திலுள்ள நிலங்களுக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகள் கொடுக்கப்படவில்லை. நகரப் புறங்களில் இருக்கக்கூடிய நிலங்களுக்குப் பக்கத்திலுள்ள நிலக்காரர்கள் சலுகைபெற, பக்கத்தில் நகரத்திலுள்ளவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். இவைகளுக்கு கிராம நிலங்களுக்குக் கொடுக்கப்படும், உணவு உற்பத்திக்காக கொடுக்கப்படும் கடன் சலுகைகள் கிடையாது, மற்ற சலுகைகள் எதுவும் கிடையாது. இப்படி பஞ்சாயத்து எல்லைக்குப்பக்கத்தில் இருக்கக்கூடிய நிலங்களுக்கு சலுகைகள் புறக்கணிக்கப்படுகின்றன. சென்ற ஆண்டில் மதிப்பிற்குரிய முதன் மந்திரி அவர்கள் விஜயம் செய்த பொழுது நகரப்புற விவசாய நிலங்கள் புறக்கணிக்கப்படுவதை எடுத்துச் சொன்ன பிற்பாடு ஏக்கருக்கு 20 ரூபாய் கொடுக்க ஏற்பாடு செய்தார்கள். அது எப்படி போதுமானதாக இருக்கும். நகரப்புறங்களில் நல்ல நிலங்களாக இருந்தாலும் போதுமான கடன் வசதி இல்லாததால் அதில் ஒன்றும் செய்ய முடியவில்லை. காவேரி தீரத்தில் நல்ல நிலமாக இருந்தாலும் இரண்டு போகம் சாகுபடி செய்யக்கூடிய இடமாக இருந்தாலும் நல்ல தானியம் உற்பத்தியாகக் கூடிய இடமாக இருந்தாலும் அங்கு போதுமான கடன் வசதி இல்லாததால் உற்பத்தி செய்ய முடியவில்லை. மாயவரத்தில் இப்படி நல்ல நிலமாக 6,000 ஏக்கர்கள் நகருக்குள் சலுகைபெறாமல் இருக்கின்றன அங்கு காய் கறி போட்டால் நல்ல முறையில் நகரவாசிகளுக்கு பயனுள்ளதாகும். ஆனால் வசதி புறக்கணிக்கப்படுவதால் எதுவும் செய்ய முடியவில்லை. இப்பொழுதுள்ள முறையில் ரிவினியூ டிபார்ட்மெண்ட்டார் ஏற்கனவே கொடுத்துவந்த கடன் வசதிகளை கொடுக்காமலும் செய்து விட்டார்கள். நகரப்புற நிலங்களுக்குக் கடன் கொடுப்பதாக இல்லை. இப்படிப்பட்ட நல்ல நிலங்கள் காவேரி தீரத்தில் இருக்கின்றன. கறிகாய் பயிர் செய்யக்கூடிய இடங்கள் இருக்கின்றன. உற்பத்தி பெருக்கக்கூடிய நிலங்கள் இருக்கின்றன. அந்த இடங்களுக்கு எல்லாம் சலுகைகள் கிடைக்கவில்லை. சலுகைகள் கொடுக்கப்படாமல் புறக்கணிக்கப்படுகின்றன. இப்படி இல்லாமல் எல்லா இடங்களிலும் ஒரே விதமான தீவிர சாகுபடி திட்ட வசதிகளை உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். என்னைப் பொறுத்த வரையில் விளம்பரப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இதை நான் சொல்லவில்லை. இது இல்லாமலேயே என்னால் இங்கு வரமுடியும். சாதாரணமாக ஒரு வாய்க்கால் வெட்டுவதாக இருந்தால்கூட எம்.எல்.ஏ-க்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவரிடம் செல்ல வேண்டியதாக இருக்கிறது. ஒருசமயம் நான் ஒரு பஞ்சாயத்து தேர்தல் கூட்டத்திற்குச் சென்றபோது நான் அங்கு வரலாமா என்ற கேள்வி கிளப்பப்பட்டது. உடனே நானே வெளியே வந்து விட்டேன். அந்த மாதிரியான நிலைமை இப்பொழுது அங்கு நிலவி வருகிறது. அதிகமான மார்க் வாங்கியவனுக்கு பாஸ் கிடைப்பது இல்லை என்றும் குறைவான மார்க் வாங்கியவனுக்குத்தான் பாஸ் கிடைக்கிறது என்றும் இதற்குத்தான் சொன்னேன். அதனால் பஞ்சாயத்து தலைவர் தேர்தல்கள் நேர்முகமான தேர்தலாக இருக்கவேண்டும். இப்படி அங்கு எம்.எல்.ஏ-க்களுக்கு கௌரவம் கொடுக்கப்படுவதால் அவர்கள் அங்கு போகாமல் இருப்பதே நல்லது என்று தோன்றுகிறது. அவர்கள் போகவேண்டாம் என்று சொல்லி விடலாம்.





**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** எம்.எல்.ஏ-க்கள் போக வேண்டும் என்ற அவசியம் இல்லை. போகாமலேயே இருக்கலாம்.

**திரு. கோ. நாராயணசாமி நாயுடு:** இப்படிப்பட்ட நிலைமை அங்கு இருக்கும்போது அங்கு போகாமல் இருப்பது நல்லதுதான். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஏற்கெனவே நாம் பல நல்ல திட்டங்களை போட்டு நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். பல லட்சக்கணக்கான வோட்டுகளை பெற்று வருகிறவர்களுக்கு அவருடைய சொந்த தொகுதியில் நடைபெறவேண்டிய திட்டங்களைப் பற்றி வேலைகளைப்பற்றி சொல்லக்கூட இடம் இல்லை. ஒரு

மைல் மட்டும் இருக்கக்கூடிய வாய்க்காலை இரண்டு மைல் தூரம் வெட்டியதாக ஒரு பஞ்சாயத்தால் கணக்கு சொல்லப்பட்டது, அதைப்பற்றி அந்த போர்டு க்ளார்க் வெளியே சொல்லி விட்டார், அவருக்கு அடி உதை இப்படியெல்லாம் கிடைத்தது—அவர் பேரில் திருட்டு வழக்கும் தொடுக்கப்பட்டது. அவர் வெளியே வருவதற்கே பாதுகாப்பும் கிடையாது. இந்த கிளார்க் தன் பந்தோபஸ்திற்காக கொடுக்கப்பட்ட மனுக்கள்—தந்திகள், மந்திரிகள்—கலெக்டர்—சூபரிண்டென்டண்டு இவர்களுக்கெல்லாம் சென்ற இரு ஆண்டுகளாக தொடர்ந்து பிரவாகமாக கொடுக்கப்பட்ட மனுக்கள்—தந்திகள் என்னவாயிற்று என்று தெரிந்துக்கொள்ள முடியவில்லை. யாரோ ஒரு பரமசிவன் நின்று கொண்டு தொடர்ந்து வரும் மனுக்கள்—தந்திகள் அனைத்தையும் பெரிய கங்கையைச் சடாமுடியில் ஏற்று ஒன்றுமே இல்லாமல் ஒரு தாரையாக ஆக்கி விட்டதைப்போல்—இந்த மனுக்களையும் தந்திகளையும் செய்து விட்டார். இன்று வரையிலும் தபால், தந்தி எல்லாம் அனுப்பி, பைல் பைலாக நிரம்பியிருக்கிறது. ஒரு அதிகாரி பாக்கி இல்லை.
10-30 a.m. 'இம்மாதிரி ஊழல் நடந்தது, கஷ்டம் வந்தது அடி வாங்குகிறேன், இந்தச் சர்க்காரிலே என்னைப் பாதுகாக்க வழி இல்லையா?' என்று கேட்கிறார். நானும் எல்லாப் போலீஸ் அதிகாரிகளையும் மந்திரிகளையும் பார்த்தாய்விட்டது. 'ஏதோ வருகிறது, ஏதோ வருகிறது' என்று சொல்கிறார்கள். வருஷம் இரண்டாய் விட்டது. திறமையான நல்ல ஆட்சி மேலே இருந்து நடத்துகிறபோதே இந்த ஊழல்கள் நடக்கிறதென்றால், கொஞ்சம் திறமைக் குறைவான ஆட்சியாக இருந்தால் என்ன ஆகுமோ சொல்ல முடியாது. அதிகப்படியான அதிகாரம் ஜனங்களிடத்தில் வோட்டு வாங்கி வருகிறவர்களுக்குக் கிடையாது. அதன் காரணமாக யாரையோ மேலே வைத்து, மரியாதைப் படுத்தலாம் என்ற நிலைமை இருப்பதன் காரணமாக, மக்களிடம் சென்று வோட்டு வாங்கித்தான் தீரவேண்டும் என்கிற அவசியம் இல்லாததன் காரணமாக அவர்கள் தங்கள் இஷ்டம் போல் காரியங்கள் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால், மக்களிடம் அடுத்த தடவை வோட்டு வாங்கவேண்டும் என்ற எண்ணம் இருப்பவருக்கு அதிகாரம் இருந்தால், அம்மாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அம்மாதிரி ஊழல்களைப்பற்றி இங்கே சட்டசபையில் நான் சொன்ன பிறகாவது, இது என்ன, இது எங்கு நடந்தது, பொய்யா, கற்பனையா கனவா என்று தெரிந்து, காளி கிராமத்தில் வெட்டப்பட்டதாக சொல்லப்பட்ட வாய்க்கால் உண்மையா? அம்மாதிரி வாங்கல் இருக்கிறதா? நீளம் எவ்வளவு என்று கணக்குக் காண்பிக்கப்பட்டிருக்கிறது, என்பதையெல்லாம் தெரிந்து ஆவன செய்ய வேண்டும்.

பன்னிரண்டு வருஷங்களாக கடகம் என்ற ஊரில் ஒரு பள்ளிக்கூடம் நடந்து வருகிறது. அதையடுத்து யூனியன் தலைவர் இன்னொரு பள்ளிக்கூடம் திறந்தார். அந்தப் பள்ளிக்கூடத்திற்கு அதிகாரியினுடைய அனுமதி இல்லாமல் இன்று வரையிலும் நடத்தி வருகிறார்கள். மேல் அதிகாரி, 'பள்ளிக்கூடத்தை நடத்தக்கூடாது' என்று தாக்கீது அனுப்பியும் அந்தப் பள்ளிக்கூடம் நடந்துகொண்டே இருக்கிறது. திரும்ப அந்தப் பள்ளிக்கூடம்





இருக்கவேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டே வருகிறது என்றால், இம்மாதிரி சர்க்காரின் திட்டங்கள், சட்டங்கள் எல்லாவற்றையும் தாண்டிச் செயல்படக்கூடிய நிலைமையை உண்டாக்கக் கூடாது, முறையெல்லாம் ரொம்ப சரியாக இருக்கிறது. அதிலே ஏற்படுகிற நலன்களும் ரொம்ப நன்றாக இருக்கின்றன. என்னுடைய பகுதிகளில் இருக்கும் கிராமங்களை நான் பார்க்கப்போகும்போது, விவசாயம் முன்னைவிட ரொம்பத் தரமாக நடத்தப்பட்டு வருகிறது. நான்கைந்து வருஷங்களாக, ஆங்காங்கு தேசிய அபிவிருத்தித் திட்டங்களும், சமுதாய நலத் திட்டங்களும் செவ்வனே நடந்து வருகிறது, பழைய தொழில்களோடு புதிய தொழில்களும் ஆரம்பித்து நடத்தப்படுகின்றன. சொல்லப்பட்டிருக்கும் திட்டங்களெல்லாம் நல்ல முறையில் நடக்கின்றன. மேலும் கண்காணிப்பும் இருக்கவேண்டும். நல்ல முறை இருந்தாலும்கூட, இந்த முறை எல்லாம் சேர்ந்து கடைசியில் கலெக்டரிடம் போகிறது. எங்கள் ஜில்லாவுக்கு வருகிற கலெக்டர்கள் எல்லாம் நல்ல கலெக்டர்களாகவே வருகிறார்கள். திறமையாகப் பணியாற்றுகிறார்கள். ஜனநாயக முறையை நன்கு அறிந்தவர்களாக, சென்ற பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளாக எங்கள் ஜில்லாவில் நல்ல கலெக்டர்களாக வருகிறார்கள். இருந்தாலும், ஜனநாயக முறையில் தேர்தெடுக்கப்படுகிறவர் தலைமை தாங்கும் நிலை இல்லாமல், கலெக்டர்தான் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி நடத்தவேண்டுமென்ற நியதி இருக்கிறது. இதற்கு பதிலாக, உத்தியோகச் சார்பற்ற ஒருவர் இருந்து நடத்தினால் திட்டங்களில் அதில் என்ன கெடுதல் ஏற்பட்டுவிடும் என்பதையும் சர்க்கார் சிந்திக்க வேண்டும்.

அதேமாதிரி, பஞ்சாயத்து யூனியனில் உத்தியோகப் பற்றற்றவரின் கையில் அதிகாரத்தைக் கொடுத்து எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றவும் நிறைவேற்றும் பொறுப்பு ஆர்.டி.ஓ.-விடம் ஒப்புவிப்பதுதான் நல்ல ஜனநாயகப் பண்பாடாக அமையும் என்று சொல்லிக்கொண்டு, இந்த மானியத்தை முழு மனதோடு ஆதரித்து, இதற்குக் கொடுக்கப்படும் மானியத்தை இன்னும் அதிகமாகக் கொடுத்தாலுங்கூட எனக்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன்.

* திரு. சோ. ஆறுமுகம்: கனம் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கிராம அபிவிருத்தி, ஸ்தல நிர்வாகத் துறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையின் மீது எதிர்க்கட்சியினர் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து, என்னுடைய சில கருத்துக்களை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்றைய தினம் பஞ்சாயத்து நிர்வாகம் உள்ளபடியே கிராம மக்களுக்கு, கிராமப் புறங்களில் இருக்கிறவர்களுக்கு நன்மை செய்கிற ஒரு துறை இருக்கிறதென்றுசொன்னால், அது பஞ்சாயத்துதான் என்று சொல்வதிலே ஆச்சரியம் இல்லை. அதே நேரத்தில், நம்முடைய சர்க்கார் பஞ்சாயத்து யூனியன்களையும் ஆரம்பித்து இருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியனால் கிராம மக்களுக்கு நன்மை ஏற்படுகிறதா, அல்லது கிராமப் பஞ்சாயத்தின் மூலமாக நன்மை ஏற்படுகிறதா என்பதைத்தான் நாம்

[திரு. ந. சௌந்தரபாண்டியன்] [16th March 1963

முன்பு மாவட்டக் கழகங்கள் நடத்தி வந்த பள்ளிகளை இப்போது பஞ்சாயத்து யூனியன்கள் நடத்தி வருகின்றன. அந்தப் பள்ளிகள் நல்லமுறையில் நடைபெறவேண்டுமானால் இப்போது கல்வி இலாகாவின் கீழ் இருக்கிற துணை ஆய்வாளர்கள்—டெபுடி இன்ஸ்பெக்டர்கள்—பஞ்சாயத்து யூனியன்களின் கீழ் மாற்றப்படவேண்டும். அப்படியில்லாத காரணத்தினால் இன்றைக்கு தனியார் பள்ளி தணிக்கையும், பஞ்சாயத்து யூனியன் பள்ளி தணிக்கையும், பள்ளியும் சரி—எவ்விதப் பாகுபாடும் இன்றி நல்லமுறையில் தணிக்கை செய்யாமல் விட்டு விடுகிறார்கள். ஆகவே டெபுடி இன்ஸ்பெக்டர்களை பஞ்சாயத்து யூனியன்களின் கீழ் நியமிக்க வழி செய்யவேண்டும்.

மேலும் பஞ்சாயத்துகளிடமே நண்பகல் உணவுத் திட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் பஞ்சாயத்துத் தலைவர்கள் அவற்றை நல்லமுறையில் நடத்தி வந்தாலும் பலவிடங்களில் பஞ்சாயத்துகளுடைய வருமானமே குறைவாக இருப்பதனால் இத்திட்டத்தை நல்லமுறையில் நிறைவேற்ற முடியவில்லை. அவர்களால் ஒரு மாணவனுக்கு 2 பைசா வீதம் கொடுக்க முடியவில்லை. முன்பு ஆசிரியர்களால் நடத்தப்பட்டுவந்த அளவு கூட பலவிடங்களில் நடைபெறவில்லை. பஞ்சாயத்தில் பணமில்லாத குறையினாலேயே பல பஞ்சாயத்துத் தலைவர்கள் இதைக் கவனிக்காமலேயே விட்டுவிடுகிறார்கள். அதைக் கட்டாயப்படுத்த பஞ்சாயத்து யூனியனுக்கோ, அரசாங்கத்திற்கோ ஒரு வாய்ப்பும் இல்லை. ஆகையால் இதை மறுபரிசீலனை செய்து மதிய உணவுத் திட்டத்தை நல்லமுறையில் நடைபெற மாற்றி அமைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பிராதன ஆரம்பக் கல்வியானது நம் நாட்டில் 730 பள்ளிகளில் நடைபெற்று வருகிறது. அந்தப் பள்ளி ஆசிரியர்களுக்கு எழுதப்படிக்கத் தெரிந்தால் போதும், 3 மாதம் பயிற்சி கொடுத்து அவர்களை அந்த உத்தியோகத்திற்கு நியமிக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கிற சம்பளம் 20 ரூபாய் தான். படிப்படியாக இதை ஓரளவு உயர்த்தினால் நலம் என்று நினைக்கிறேன். மேலும் பிரதான ஆரம்பப் பள்ளிகளுக்கு நல்லதொரு கட்டிடம் இல்லை. கட்டிடம் கட்டுவதற்கும் வழிவகை செய்யப்படவில்லை. எல்லா சிறுவர்களும் வந்து படிப்பதற்கும் வசதி அளிக்கும் இப்பள்ளிகளுக்கு நல்ல கட்டிட வசதி ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு மானிய உதவி அளிக்க திட்டத்தில் வசதி இல்லாவிட்டாலும் அரசாங்கம் வேறு முறையில் வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராம திட்டங்களிலே கிராம குடிதண்ணீர் திட்டம், இணைப்புச் சாலைகள் திட்டம், கிராமப் பள்ளிகள், திட்டங்கள் எல்லாம் இருக்கிறது. சில பஞ்சாயத்துகளிடம் சாக்கடை வடிகால் திட்டம் இருந்தாலும் அத்திட்டத்தை செயல்படுத்த முடியவில்லை. சாக்கடைத் திட்டத்தையும் கிராம வேலைத் திட்டங்களோடு இணைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



16th March 1963] [திரு. நா. சௌந்தரபாண்டியன்]

ரோடு பராமரிப்பு விஷயமாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். பஞ்சாயத்து யூனியன்களுக்கு ரோடு பராமரிப்புக்காக மானியமாக 30 ஆயிரம் ரூபாயில் இருந்து 35 ஆயிரம் வரை அளிக்கப்படுகிறது. சில பஞ்சாயத்து யூனியன்களுக்கு 70 மைல் வரை ரோடு பராமரிக்கவேண்டிய நிலை இருக்கிறது. இந்த 70 மைல் நீள ரோடையும் 35 ஆயிரம் ரூபாயில் எப்படி போட்டு பராமரிப்பது என்பது பிரச்சனையாக இருக்கிறது. அதனால் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்படுகிற ரோடுகளின் பராமரிப்பை பொதுப் பணித்துறை அமைச்சரே படிப்படியாக எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ரோட்டின் நீளம் 20 மைல், 30 மைல்களுக்குள்ளாக இருந்தால் நல்ல முறையில் பராமரிக்க முடியும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதோடுகூட ரோடுகளுக்கான மானியத்தை ஓரளவு கூட்டவேண்டும். முக்கியமான ரோடுகளைப் பராமரிக்கும் பொறுப்பையே பொதுப்பணித் துறைக்கு மாற்ற ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வேளாண்மை திட்டம் பஞ்சாயத்து யூனியன்களில் ஒப்படைக்கப்பட்டு நல்ல முறையில் கவனிக்கப்பட்டு வருகிறது. நல்ல முறையில் நடைபெறுவதற்குக் கிராமப் பஞ்சாயத்து தலைவர்களும் ஒத்துழைக்கிறார்கள். நாங்குநேரி தாலுகாவைப் பொறுத்த அளவில் அது மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அங்கு நல்ல வசதிகள் இல்லாத காரணத்தால் கொடுக்கப்படுகிற இரண்டு லட்சம் ரூபாயைச் செலவழிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். அங்குள்ள அதிகாரிகள், 'கொடுத்த பணத்தைச் செலவழித்து விடவேண்டும்' என்று வற்புறுத்துகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர், துணை ஆட்சித் தலைவர் ஆகியோர் பஞ்சாயத்து யூனியன் கமிஷனரைக் கட்டாயப் படுத்துகிறார்கள். அதன் காரணமாக மருந்து தெளிக்கும் கருவி போன்ற பலவற்றை அதிக அளவில் வாங்கி வருகிறார்கள். நான் இதைப் பற்றிப் பல தடவை சொல்லியும் நல்ல முறையில் நடைபெறவில்லை.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன்களுக்கு வரக்கூடிய ஸ்டாம்பு சர்சார்ஜ் (Stamp duty and surcharge) வரித் தொகையானது பஞ்சாயத்து நில வருவாயைப் பொறுத்து, அந்த அடிப்படையில் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. ஆறாயிரம், ஏழாயிரம் ஜனத்தொகை இருக்கிறது. ஆனால் நில வருவாய் குறைந்திருக்கிறது. ஆகவே, மக்கள் எண்ணிக்கையில் அடிப்படையில் பிரித்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது) என்னுடைய சிற்றுரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

* திரு. கி. ரா. சம்பந்தம்: தற்காலிகத் தலைவர் அவர்களே, கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். அபிவிருத்தித் திட்டங்கள் போடப்பட்டு அதற்கு ஏற்றாற் போல் பஞ்சாயத்து யூனியன்கள் வந்த பிறகு கிராமங்களில் தாம் புனருத்தாரணம் செய்யப்பட்டு, கிராமங்கள் நகரங்கள் மாதிரிக் காட்சி அளித்து

இங்கே ஆராய வேண்டியிருக்கிறது. முன்னைவிட இப்பொழுது கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு இருக்கும் அதிகாரங்கள் பறிக்கப் பட்டிருக்கின்றன. அந்த அதிகாரங்களைச் செயல் அளவில் கிராமங்களில் நல்ல முறையில் நடத்த வேண்டுமானால், அப்படிப் பட்ட அதிகாரங்களைப் பஞ்சாயத்துக்கு மீண்டும் வழங்குவது நல்லது. பஞ்சாயத்து துறைக்குச் சம்பந்தப்பட்டவர்களை அந்தப் பஞ்சாயத்து யூனியனுக்கு நியமிக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும். குறிப்பாக, ஸ்தல அபிவிருத்தி வரி விதிப்பதற்கு நம்முடைய சட்டம் இடம் தருகிறது. ஆனால், அந்தச் சட்டத்தைப் பலர் பலவிதமாகப் பயன் படுத்திக்கொள்ளு கிறார்கள். ரூபாய்க்கு 7 ந. பை. விதித்திருக்கும்போது, சிலர், வித்தியாசம் தெரியாமல்கூட, அதற்குமேல் கிராமத்தில் வரி விதித்துவிடுகிறார்கள். ஆகவே, குறிப்பிட்ட ஒரு வரம்புக்கு மேற் படாமல் இருக்கவேண்டும், ரூபாய்க்கு 7 ந.பை. தான் விதிக்க வேண்டுமே தவிர அதற்கு மேலே ஸ்தல அபிவிருத்தி வரி விதிக்கக் கூடாது என்ற திட்டத்தை முடிவாகச் சொல்லிவிட வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும்.

கல்வித் தரம் குறையாமல் கிராமத்தில் நல்ல முறையில் செயல் படவேண்டும். கிராமத்திலிருக்கும் ஆரம்பப் பாடசாலைகளின் நிர்வாகப் பொறுப்பு பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்கப்பட் டிருக்கிறது. அப்படி ஒப்படைக்கப்பட்டிருப்பதிலே கூட ஆட் சேபனை இல்லை. அந்த நிர்வாகத்தை நிர்வகிக்கும் பொறுப்பு கமிஷனரிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிடியைத் தான் கொஞ்சம் தளர்த்தவேண்டும். எந்தக் காரணமும் இல்லாமல் ஆசிரியர்களை ஓரிடத்தில் இருந்து ஓரிடத்திற்கு மாற்றுவது கூடாது. அப்படி மாற்றுவதாக இருந்தால் எந்தக் காரணத்தினால் மாற்றப்படவேண்டியிருக்கிறது என்பதை பஞ்சாயத்து தலைவர் களிடத்தில், பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களிடத்திலோ முன் கூட்டியே சொல்ல வேண்டும். இவ்விஷயம் கல்விக் குழுவின் பரிசீலனைக்கு விடவேண்டும். காரணம் இல்லாமல் ஆசிரியர்களை ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுவதை நிறுத்தத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்போதுதான் அங்கங்கே உள்ள பள்ளிகள் நல்ல முறையில் நடைபெறுவதற்கு வழியேற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு கமிஷனர் களாக நியமிக்கப்படுகிறவர்களைப் பற்றி நான் ஒரு கருத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ரெவின்யூ டிபார்ட்மெண்டைச் சேர்ந்தவர்களைத் தயவு செய்து போடக்கூடாது என்று தெரி வித்துக் கொள்கிறேன். அவர்களை போடுவதனாலே அவர்களுடைய மனோபாவம் மாறாத காரணத்தினால் பஞ்சாயத்து வேலைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. அவர்களைப் போடுவதைவிட ஸ்தல ஸ்தாபன இலாகாவில் வேலை செய்து வந்தவர்களைப் போடு வதே இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கு மிகவும் அனுகூலமாக இருக்கும் என்பது என் கருத்து.



அடுத்து, லைசென்சு வழங்குகிற அதிகாரத்தை பஞ்சாயத்து களிடம் இருந்து எடுத்து பஞ்சாயத்து யூனியன்களிடம் கொடுத் திருக்கிறார்கள். இதனால் வேலை தாமதப் படுகிறது. ஆகவே லைசென்சு கொடுப்பதைப் பஞ்சாயத்துகளிடமே ஒப்படைத்துவிட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் விரைவில் காரியங்களைச் செய்ய அனுகூலமாக இருக்கும்.

மேலும் கிராம சேவக்குகளை நியமிப்பதனால் என்ன நன்மை ஏற்படுகிறது என்றே எனக்குத் தெரியவில்லை. ஆல மரத்தடியில் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிறார்களே தவிர பொறுப்பாக எந்த வேலையையும் அவர்கள் செய்கிறதாகத் தெரியவில்லை. அவர் களை எல்லாம் எடுத்துவிட்டால் அந்தப் பணம் அரசாங்கத்திற்கு மீதமாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராம பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக் கிற ஜீப்புகளை சர்க்கார் வாபஸ் பெற்றுவிட வேண்டும். இன்றைய தினம் அந்த ஜீப் கார்கள் பலவிதமான கெட்ட செயல்களுக்கே பயன்படுத்தப்பட்டு வருகிறது. சர்க்கார் மீட்டர் கணக்கு வைத் திருந்தாலும், மீட்டரைக் கத்தரித்துவிட்டு, அவர்களே பெட்ரோல் போட்டுக் கொண்டு பலவிடங்களுக்குச் சுற்றிக்கொண்டிருக்கிறார் கள். அதனால் சர்க்காருக்கு ஏகப்பட்ட நஷ்டம் தான். ஆகவே அந்த ஜீப் கார்களை வாபஸ் பெறுவது நன்மை என்று தோன்று கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று இன்றைக்கு கோழி, ஆடு வாங்கிக் கொடுக்க திட்டம் வகுத்திருக்கிறார்கள். இன்றைக்குக் கோழியைக் கொடுத் தால் நாளை அதை அறுத்துச் சாப்பிட்டுவிடுகிறார்கள். எங்கே கோழி வளர்க்கிறார்கள்? இந்தமாதிரி வீணாகப் பெயரளவுக்கு சர்க்காருக்கு மிகுந்த நஷ்டம் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் திட்டங்களை எல்லாம் எடுத்துவிட்டு, பணம் இருந்தால் இன்னும் பஞ்சாயத்துகளுக்கு அதிகமாக உதவி செய்தால் நல்ல உருப் படியான திட்டங்களை வகுக்க முடியும். அதிகமான பள்ளிக்கூடங் களை ஏற்படுத்தலாம், ரோடுகளைப் போடலாம், பொதுசுகாதாரத் தை அபிவிருத்தி செய்யலாம் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. நா. சௌந்தர பாண்டியன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிற மானியத் தை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்லலாமென்று நினைக் கிறேன்.

இந்தத் திட்டத்தில் கிராம மக்கள் நல்லதொரு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பதில் யாதொரு ஐயமும் இல்லை. குறிப்பாக கிராம மக்களிடையே ஓர் விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக் கிறது. சுதந்திரம் பெற்ற நம்முடைய நாட்டை இன்ன இன்ன வழியில் வளமுடையதாக ஆக்கலாம் என்கிற கருத்தும் ஏற்பட் டிருக்கிறது. இதன் காரணமாக கிராம மக்களிடையே ஒரு புத் துணர்ச்சி பிறந்திருக்கிறது, பலவிதமான திட்டங்கள் நல்லமுறை யில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கொண்டிருக்கின்றன என்று சொன்னால் மிகைப்படுத்திச் சொல்வதாகாது. பஞ்சாயத்து யூனியன்கள் வந்த பிறகுதான் சுதந்திரம் வந்ததன் பலன் தெரிகிறது. கிராமங்களுக்கு வேண்டிய அத்தனை வேலைகளையும் பஞ்சாயத்து யூனியன்கள் செயய வேண்டுமென்று நியதி ஏற்படுத்தியதன் காரணமாக கிராமங்களில் ரோடு வசதி, பள்ளிக்கூடங்கள், மதகுகள் கட்டுதல், பாலங்கள் அமைத்தல் போன்ற காரியங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு வந்திருக்கின்றன. ஆனால் அதற்காகக் கொடுக்கப்படும் நிதி போதவில்லை. அவர்கள் எல்லாக் காரியங்களையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். இருந்தபோதிலும் நிதி போதுமானதாக இல்லாததன் காரணமாக அவர்கள் 'கல்வெட்' மாத்திரந்தான் செய்ய முடிகிறதே தவிர, பெரிய பாலங்களைக் கட்டிக் கொடுக்க முடிவதில்லை. முன்பு டிஸ்ட்ரிக்ட் போர்டு ரோடுகளாக இருந்தவை இப்போது பஞ்சாயத்து யூனியன்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அந்த ரோடுகளை இவர்களால் 'மெயின்டைன்' பண்ண முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்த ரோடுகளை எல்லாம் ஹைவேஸ் இலாகாவினர் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் பல ஆறுகள் ஓடுகின்றன. அந்த ஆற்றின் கரைகளெல்லாம் ரோடுகளாக அமைந்திருப்பதால் P.W.D. Highways- -க்கு வெஸ்ட் பண்ணுவதில் கருத்து வேற்றுமை இருக்கிற காரணத்தால் சில சிக்கல்கள் ஏற்பட்டு வருகின்றன. அந்த இரண்டு இலாகாக்களும் ஒரே அமைச்சர் அவர்களிடம் இருக்கும் காரணத்தால் இந்தச் சிக்கலை நிவர்த்திப்பதில் கஷ்டம் எதுவும் இருக்காது என்று நம்புகிறேன்.

கல்வியைப் பொறுத்த அளவில் கிராமப் பகுதிகளில் நல்ல முறையில் கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. சோஷியல் எஜுகேஷன் ஆபீசருக்கும், டெபுடி இன்ஸ்பெக்டருக்கும் இடையே ஒரு கோ-ஆர்டினேஷன் இருக்கவேண்டும். அதே போன்றே கூட்டுறவு முறையில் இரண்டு அதிகாரிகள் இருக்கிறார்கள். ஜில்லா அளவிலும், தாலுகா அளவிலும் இரண்டு அதிகாரிகள் இருக்கிறார்கள். அதே போன்றே பஞ்சாயத்து அதிகாரிகளும் இருக்கிறார்கள். இப்படி இரட்டிப்பாக அதிகாரிகள் இருந்து வருவதன் காரணத்தால் வேலைகளில் சில பிணக்குகள் ஏற்பட்டு வருகின்றன. ஆகவே, 'கோ-ஆர்டினேஷன்' செய்து ஒரே அதிகாரி இருக்கும் நிலைமையை ஏற்படுத்தவேண்டும். சிக்கனத்தைக் கையாளவேண்டிய இந்த நோக்கில் ஒரே இடத்திலே இரண்டு அதிகாரிகளைப் போட வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வெட்டிரனரி டாக்டர்கள் கால்நடைகளை நல்ல முறையில் அபிவிருத்தி செய்து வருகிறார்கள். 'ஆர்டிபிஷியல் இன்செமினேஷன்' போன்ற முறைகளைக் கையாண்டு மாட்டின் தரத்தை நல்ல முறையில் உயர்த்தி வருகிறார்கள்.



பள்ளிகளில் 1 : 40 என்ற ரேஷியோவில் ஆசிரியர்களை நியமிப்பதன் காரணமாகக் கொஞ்சம் பாதகம் ஏற்படுமென்று நினைக்கிறேன். ஒன்றிலிருந்து முப்பத்தைந்து வரை ஒரு ஆசிரியரும், 38-இல் இருந்து 70 வரை இரண்டாவது ஆசிரியரும், 71-இல் இருந்து 105 வரை மூன்றாவது ஆசிரியரும் என்ற பழைய ஸ்லாபிலே ஆசிரியர்களை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தற்போது, 69 மாணவர்கள் இருந்தால்கூட இரண்டாவது ஆசிரியரைப் போட முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இது பற்றிப் பரிசிலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களிலே நடத்தப்படுகிற திட்டங்களுக்காகச் செலவழிக்கப்படுகிற தொகையில் அதிகமாக அதிகாரிகளுக்காகவே செலவழிக்கப்படுகிறது என்று கனம் அங்கத்தினர் ராஜாங்கம் அவர்கள் சொன்னார்கள். 'காமாலை கண்ணுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்' என்று சொல்வது போல் அவர் சொன்னது எதிர்த்து சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொல்லப்பட்டதே தவிர, உண்மையன்று. உலகத்திலேயே இல்லாத அளவுக்கு நம்முடைய மாகாணத்திலேயே ஏற்பட்டிருக்கிறது. வெள்ளையர்கள் காலத்தில் யாருமே கிராமங்களைப் பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. இப்போதுதான் அவர்களுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் யூனியன் மூலமாகச் செய்து கொடுக்கப்படுகின்றன.

அதிகாரிகளுக்கு ஜீப் கார் கொடுக்க வேண்டியதில்லையென்று கனம் ஆறுமுகம் அவர்கள் சொன்னார்கள். பஞ்சாயத்துக்களிலே சரியான ரோடு வசதி கிடையாது. குறுக்கும் நெடுக்கும் ஆறுகள் இருக்கும். ஆனால் பாலங்கள் இருக்காது. ஆகவே, ஜீப் இல்லாவிட்டால் ஒரு வேலையும் நடக்காது. ஒரு வேலையைக் கவனிக்க சம்பந்தப்பட்ட அதிகாரி, கமிஷனர், சேர்மன் ஆகிய மூன்று பேரும் ஜீப்பில் போகிறார்கள். ஒரே நாளில் வேலையை முடித்து விடுகிறார்கள். ஜீப் இல்லாவிட்டால் எந்த வேலையையும் செய்ய முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

லோகல் இரிகேஷன் கிராண்ட் என்று மைனர் இரிகேஷன் பஞ்சாயத்து மூலமாக வேலையைச் செய்யவேண்டுமென்பது பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் ஆட்சேபிக்கிறேன். அந்தப் பொறுப்பு ஏற்கனவே பி.டபிள்யூ.டி.-இன் பொறுப்பில் இருந்து வந்தது. பஞ்சாயத்து யூனியன்கள் இப்போதிருக்கும் வேலைகளைச் செய்வதற்கே பணம் இல்லாமல் கஷ்டப்படும்போது, இந்த வேலையையும் அவர்களிடம் கொடுத்தால் நல்ல முறையில் நடக்காது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிதண்ணீர் வசதி நல்ல முறையில் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் 'ப்ரொடெக்டட் வாட்டர்' சப்ளை செய்யப்படுகிறது. முப்பதாயிரம், நாற்பதாயிரம் என்று செலவு செய்து ஓவர் ஹெட் டாங்க் கட்டி குடிதண்ணீர் அளித்து வருவதன் காரணமாக, இப்போது தொத்து வியாதிகள் அதிகமாகப் பரவுவது இல்லை.

பஞ்சாயத்து யூனியனில் எல்லா வரிகளையும் கர்ணம், பட்டா மணியம் போன்றவர்கள் வசூல் செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு வேலை அதிகமாக இருக்கிறது. போதுமான சம்பளம் கொடுக்கப்படவில்லை. ஒன்று அவர்களை எடுத்து விட்டு முழு நேர வேலை செய்யும் அதிகாரிகளைப் போட்டு வசூல் செய்யவேண்டும். இரண்டு முறைதான் வசூல் செய்யவேண்டுமென்றாலும் தினம் போய்த்தான் கேட்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்திக் கொடுத்து முழு நேரமும் அவர்களிடம் வேலை வாங்கும்படியானதொரு நிலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

11-00 a.m.

*திரு. அ. பெ. தர்மலிங்கம்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, குவிந்து கிடக்கிற அதிகாரங்களை பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு மாவட்டமன்றங்களாக இருந்து வந்தவைகள் தனித்தனியாக பிரிக்கப்பட்டு இன்று ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்களாக பணியாற்றி வருகின்றன. அப்படி பிரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்கள் கமிஷனருக்கு எத்தனை பங்கு, தலைவருக்கு எத்தனை பங்கு என்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிற காரணத்தால் பலயிடங்களிலும் தலைவருக்கும் ஆணையருக்கும் ஏற்படுகிற தகராறு காரணமாக பரிதாபத்திற்குரிய ஆசிரியர்களும் பல கிராம மக்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நான் இங்கு நினைவு படுத்த ஆசைப்படுகிறேன். அதனால் தேர்ந்தெடுக்கப்படுகிற பிரதிநிதிகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்படவேண்டுமென்று சொல்கிற அதே நேரத்தில் கொடுக்கப்படுகிற அதிகாரங்கள் அவர்களால் சரியாக பயன்படுத்தப்படுகிறதா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். சில பஞ்சாயத்துக்களில் ஆணையர் இடுகிற கட்டளையை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டு அதைத் தலைவரிடம் சொல்கிறபோது தலைவர் ஊராட்சி மன்றத்தலைவர் தயவால் அந்த காரணத்தினால் அவர்கள் எதைச் செய்வது என்று செய்ய முடியாமல் பல கிராமங்களில் வேலைகள் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றன. அதற்கு வேண்டிய பரிகாரத்தை இந்த அமைச்சரவை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனது கட்சி அங்கத்தினர்கள் குறிப்பிட்டதுபோல் தலைவர்களை மக்கள் நேரிடையாகத் தேர்தெடுக்கும் முறை வரவேண்டும். ஊராட்சி மன்றத் தலைவர்களையும், ஊராட்சி ஒன்றிப்புத் தலைவர்களையும் வட்டார மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்கும் முறை கொண்டு வரப்படவேண்டும். ஊராட்சிமன்ற ஒன்றிப்பு அங்கத்தினர் தனியாக ஒருவரை தேர்ந்தெடுக்கும் முறை வரவேண்டும். ஏனெனில் இன்று தலைவர் ஊராட்சி உறுப்பினராக இருப்பதால் ஊராட்சி மன்ற வேலைகளைச் சரியாகச் செய்ய முடிவதில்லை. இப்போதிருக்கிற அமைப்பு முறையில் ஊராட்சி மன்றங்கள் செய்கிற வேலைகளுக்கு எல்லாம் ஊர் மக்கள் பங்குத் தொகை,



உதவித் தொகை அளிக்கவேண்டுமென்று சொல்வதால் அதிகாரிகளே ஊராட்சிமன்றத் தலைவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்கள். எஸ்டிமேட்படி வேலையை ஒப்புக் கொள்ளுங்கள். இவ்வளவு மிச்சப்படும் அதைப் பங்குத் தொகையாகப் போட்டு வேலையைப் பூர்த்தி செய்து விடலாம் என்று சொல்லிக் கொடுக்கிறார்கள். அதனால் ஊராட்சி மன்றத் தலைவர்களே காண்ட்ராக்டர்களாக மாறி விடுகிறார்கள். அப்படி அவர்கள் காண்ட்ராக்டர்களாக மாறி விடும் நிலை ஏற்படுகிறதேதவிர ஊராட்சிமன்ற வேலைகள் கவனிக்கப்படுவதில்லை. ஒரு இடத்தில் ஊராட்சி மன்ற ஒன்றிப்புத் தலைவருக்கும் ஊராட்சி மன்றத் தலைவருக்கும் தகராறு ஏற்பட்டு ஊராட்சி மன்றத் தலைவர் ஒன்றிப்புக் கூட்டத்திற்கு வராமல் இருந்தாலும்கூட அவர்களை ஏன் வரவில்லை என்று கேட்க சட்டத்தில் அதிகாரம் இல்லை. ஆனால் ஊராட்சி, நகராட்சி உறுப்பினர்கள் மூன்று கூட்டத்திற்கு வராமல் இருந்தால் அவர்கள் பதவி போய்விடும் என்றிருக்கிறது. என் தொகுதியில் ஆந்திரை பஞ்சாயத்து தலைவருக்கும் ஊராட்சி மன்ற ஒன்றிப்பு தலைவருக்கும் ஏற்பட்ட மனத்தாங்கல் காரணமாக அந்தத் தலைவர் தொடர்ந்து கூட்டங்களுக்கு வருவதில்லை. அவரை ஏன் வரவில்லை என்று கேட்பதும் இல்லை. அதனால் ஊருக்கு செய்யவேண்டிய வேலைகள் எல்லாம் தாமதப்படுத்தப்பட்டு வருகிறது. ஊராட்சி மன்றத் தலைவர் அங்குள்ள அதிகாரியிடம் சொல்லியிருப்பார். ஆனால் அந்த அதிகாரி அந்த ஊருக்குப் போய் உங்கள் பஞ்சாயத்தில் இவ்வளவு அதிகத் தொகை இருக்கிறதே, செய்ய வேண்டிய வேலைகளும் அதிகமாக இருக்கின்றனவே ஏன் அவ்வேலைகள் செய்யப்படவில்லை என்று இதுவரை கேட்கப்படவில்லை. ஊராட்சி மன்ற ஒன்றிப்புத் தலைவரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அனுப்பி திட்டங்கள் தயார் செய்துகொடுக்கச் சொல்லுவதில்லை. எனவே அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போதிருக்கிற தேர்தல் முறையினால் ஊராட்சி மன்ற ஒன்றிப்புகள் சரியாக வேலை செய்யமுடியவில்லை. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால் முசிரியில் தொட்டியம் பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கும் உறுப்பினர்களுக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக தொடர்ந்து கூட்டம் நடத்தாமலே இருந்து வருகிறார்கள். மாதத்திற்கு ஒரு முறையாவது பஞ்சாயத்துக்கள் கூட்டங்கள் நடத்தி கௌன்சிலுக்கு அனுப்பவேண்டுமென்று சட்டத்தில் இருக்கிறது. ஆனால் பல பஞ்சாயத்துக்கள் பல மாதங்கள் கூட்டம் வைக்காமலேயே இருக்கிறது. வட்ட மாவட்ட வளர்ச்சிக் குழுவிற்கு அனுப்பவேண்டுமென்று விதிகள் இருந்தால் கூட அவை சரியாக அமுலாக்கப்படவில்லை ஏன்? எனவே எந்த இடத்தில் எப்படிப்பட்ட கோளாறு இருக்கிறது என்று பார்க்க வேண்டும். சட்டங்கள் இயற்றினால் மட்டும் போதாது, அதை நன்கு அமுல் நடத்த வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்பட வேண்டும். அடுத்து ஊராட்சி மன்ற ஒன்றிப்புகளில் நாமினேட்டட் மெம்பர்களை தேர்ந்து எடுக்கலாம் என்ற முறை இருக்கிறது. அது சரியல்ல, வேண்டுமென்றால் அந்த பஞ்சாயத்துக்கு 15 உறுப்பினர்கள் என்று இருப்பதை 12 என்று வேண்டுமானால் ஆக்கி விடலாம்.

ஊராட்சிமன்ற ஒன்றிப்புகளுக்கும் அதிகப்படியான அங்கத்தினர்களை தேர்ந்தெடுக்கும் அதிகாரத்தை கொடுக்கலாம். இப்படி கோ-ஆப்ட் செய்து சேர்ப்பதில் தவறு ஏற்படுகிறது. திறமைசாலிகளை, அனுபவசாலிகளை, பல்வேறு துறைகளில் அனுபவப்பட்டவர்களை சேர்த்துக் கொள்வதால் நல்ல காரியங்களைச் செய்ய முடியும். ஆனால் அப்படிப்பட்டவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்களா என்றால் இல்லை. பொதுத்துறையில், மருத்துவத் துறையில், இப்படி பல்வேறு துறைகளில் அனுபவம் பெற்றவர்களை, அதில் சேர்த்துக் கொள்வதில் ஆட்சேபனையில்லை. இதில் இரண்டு பேர் அதில் இரண்டு பேர் என்றால் தங்களுக்கு வேண்டியவர்களை சேர்த்துக் கொள்ளும் நிலைதான் ஏற்படுகிறது. அதனால் ஊராட்சி மன்றங்களினால் மக்களுக்கு நல்ல பலன் ஏற்பட முடிவதில்லை என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அடுத்து, தமிழ் நாட்டு பஞ்சாயத்து யூனியன் என்று ஒன்று இருக்கிறது. பஞ்சாயத்துக்கள், கிராமப் பஞ்சாயத்துக்கள் என்று இருந்த காலத்தில் அது பயன்பட்டிருக்கலாம். இப்போது அதற்கு என்ன அவசியம் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். 1954-ல் அமைச்சரவையில் இருந்த ஒருவர் இன்று இதில் தொடர்ந்து தலைவராக இருந்து வருகிறார். ஊராட்சி ஒன்றிப்புகளும், மன்றங்களும் ஏற்படாத காலங்களில் ஊராட்சிகளுக்கு பல சலுகைகள் செய்யவேண்டுமென்பதற்காக தமிழ் நாட்டு பஞ்சாயத்து தலைவர் சங்கம் என்று இருந்தது. அது இப்போதும் அவசியமா என்று சிந்திக்க வேண்டும். அதற்கும் நமக்கும் என்ன என்று கேட்கலாம். இப்போது ஒவ்வொரு ஊராட்சி மன்ற ஒன்றிப்பும் ஆண்டு ஒன்றுக்கு 100 ரூபாய் சந்தா கொடுக்கவேண்டுமென்ற விதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து தலைவர் சங்கம் என்ன செய்கிறது. அந்தத் தலைவருக்கு ஒரு கார் இருக்கிறது. எந்தெந்த ஊர்களுக்கு, எந்தெந்த ஒன்றிப்பு மன்றங்களுக்கு, எந்தெந்த கிராமப் பஞ்சாயத்துகளுக்குச் சென்று என்னென்ன வேலைகளை அவர் செய்தார் என்று எங்கு சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அது அவசியம் இல்லாத ஒன்று. வேண்டுமானால் முன்பு டிஸ்ட்ரிக்ட் போர்ட் ப்ரெசிடென்ட்ஸ் அசோசியேஷன் என்று இருந்ததுபோல் பஞ்சாயத்து யூனியன் சேர்மன்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து ஒரு யூனியன் அமைத்துக் கொள்வதில் ஆட்சேபணையில்லை. ஆனால் சம்பந்தம் இல்லாதவரை தலைவராக கொண்டு வந்து வைத்திருப்பது சரி அல்ல, நல்லதல்ல. அதேபோல் கல்வித் துறையைப் பொறுத்த வரையில் நேற்று திரு. அழகமுத்து அவர்கள் ஒரு கேள்வி கேட்டிருந்தார், புத்தகங்களுக்கு எவ்வளவு கமிஷன் கொடுக்கப்படுகிறது என்று. அமைச்சர் அவர்கள் 91,000 ரூபாய் என்று பதில் அளித்தார்கள். இந்த ரூபாயை ஏஜென்ட்களுக்கு கொடுப்பதைவிட 373 பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பிரித்துக் கொடுத்தால் ஒவ்வொன்றுக்கும் 250 ரூபாய் வந்தாலும் கூட 4,000 குழந்தைகளுக்கு ஒரு நாளைக்கு மதிய உணவு அளிக்க முடியும். ஆகவே தனிப்பட்டவர்களுக்கு கமிஷன் கொடுப்பதை விட்டு விட்டு யூனியன்களுக்கு கொடுத்தால் நலமாக இருக்கும் என்ற என் யோசனையை தெரிவித்துக் கொள்கிறேன்.



இப்போது இந்த பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்பட்ட பிறகு ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் 43-44 பேர்கள், அதிகாரிகள் இருக்கிறார்கள். யார் எந்த அதிகாரி என்று தெரிவதில்லை. (திரு. எஸ். முருகையன் : 63 பேர்கள் இருக்கிறார்கள்.) கனம் அங்கத்தினர் அவர்கள் 63 பேர்கள் என்று சொல்லுகிறார்கள். அத்தனை பேர்கள் இருக்கிறார்கள். இது ஒரு வகையில் வேலையில்லாத திண்டாட்டத்தைக் குறைக்க பயன்படுகிறதே தவிர அவர்களால் ஏற்படுகிற வசதிகள் குறைவு, ஒரு அதிகாரி கிராமத்திற்குப் போய் அங்கே உள்ள மக்களிடம் 'குப்பையைக் கொட்டுவதற்கு குழி வெட்டு' என்று சொன்னால், உடனே அவர்கள் 'யாரைப் புதைக்க' என்று கேட்கிறார்கள். கடைசியிலே 'இந்தத் தொல்லை நமக்கு எதற்கு என்று அந்தக் கிராமத்திற்குப் போனேன்' என்று வந்து விடுகிறார். முன்பெல்லாம் பஞ்சாயத்து ஆஃபீசர் வருகிறார் என்றால் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயம் இருந்தது. இப்போது நிலைமை மாறிப்போய் இப்படித் தான் கணக்கு எழுதவேண்டுமென்று சொல்லிக்கொடுக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இந்த மாதிரி பல வகைகளில் நான் சொல்ல முடியும். அவகாசம் இல்லாத காரணத்தினால் விட்டு விடுகிறேன்.

மாதர் நல சங்கத்தைப் பற்றி ஒன்று மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். வேண்டுமென்றால் நகரத்தில் லேடீஸ் கிளப் நிறுவலாமேயொழிய, கிராமங்களில் நிச்சயமாக இவைகள் பணியாற்றவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். கிராமங்களில் உள்ள எந்த மாதர் நல சங்கத்திலாவது நடக்கக் கூடிய கூட்டங்களுக்கு பெண்கள் கூட்டம் வருகிறதா என்றால் இல்லை. இதற்கென்று ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால் ஊரில் எந்தவித வேலையையும் செய்வதில்லை; அவர்களைக் கேட்டால் எங்களுக்கு எந்த வித வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை என்கிறார்கள். கிராமத்திலுள்ளவர்களை 'மாதர் சங்கக் கூட்டம் நடக்கிறது, வாருங்கள்' என்று கூப்பிட்டால், 'உனக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள் நீ வருகிறாய், எங்களுக்கு வீட்டு வேலைகள் இருக்கின்றன' என்று சொல்லக் கூடிய நிலை இருக்கிறது. எனவே தேவையில்லாத முறையில் இப்படிப்பட்ட பல செலவினங்கள் இருக்கின்றன. இவைகளைப் பார்த்து நல்ல முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*** திருமதி சி. குழந்தையம்மாள் :** கனம் தலைவர் அவர்களே, இன்று அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன்.

பஞ்சாயத்து யூனியன்கள் நல்ல முறையிலே கிராம அபிவிருத்தி வேலைகளைச் செய்யவேண்டும் என்ற அடிப்படையிலே, நகரங்களைப் போல பல்வேறு திட்டங்களில் முன்னுக்கு வரவேண்டுமென்ற அடிப்படையிலே இந்த மான்யக் கோரிக்கையானது அதிகமாகப் பஞ்சாயத்து யூனியன்களுக்குச் செலவு செய்வதற்காகவும் பல்வேறு திட்டங்களை அமைப்பதற்கும் வந்திருப்பது பாராட்டுக்

குரிய ஒன்று ஆகும். அப்படி வேலை செய்கிற நேரத்தில் ஆங்காங்கு ஏற்படக் கூடிய சில கஷ்டங்களையெல்லாம் கருத்திலே வைத்து, அவ்வப்போது அதனை சீர்திருத்தவேண்டுமென்பதனை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

என்னைப் பொறுத்த வரையில் பஞ்சாயத்து யூனியன்களிலே, கிராமப் புறங்களில் நல்ல முறையில் ரோடு போடவேண்டுமென்ற அடிப்படையில் யூனியன்களுக்கு ரோடு மான்யம் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கும்போது, சாதாரணமாக தலைக்கு 40 நயா பைசா வீதம் கொடுக்கும்போது அது போதாமல் இருக்கிறது. அதில் ரோடு போடும்போது ஒரு கஷ்டம் இருக்கிறது. இப்போது கிராமத்தில் இருக்கிறவர்களெல்லாம் கிராமங்களுக்கு பஸ் வசதி வேண்டுமென்று மிகவும் வற்புறுத்துகிறார்கள். ஆர்.டி.ஓ.-விடம் சென்று கிராமவாசிகளுக்கு பஸ் வேண்டுமென்று சொன்னால், ஹைவேஸ் டிவிஷனல் என்ஜினியரிடம் ஃபிட்னெஸ் சர்ட்டிஃபிகேட் வாங்கி வந்தால், அவர்கள் அப்ரூவ் செய்தால் பஸ் விட ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். உடனே ஹைவேஸ் இன்ஜினியரிடம் சென்று, இந்த இடத்தில் நல்ல முறையில் பஸ் போக வாய்ப்பு இருக்கிறது, ஆகையால் அவர்கள் பார்த்துச் செய்ய வேண்டுமென்று சொன்னால், ஆர்.டி.ஓ. பஸ் விட ஆயத்தமாக இருக்கிறார் என்றால் ஃபிட்னெஸ் சர்ட்டிஃபிகேட் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார். இதைப் பார்க்கும்போது முதலில் சர்ட்டிஃபிகேட் கொடுக்கவேண்டியது ஹைவேஸ் இன்ஜினியரா அல்லது ஆர்.டி.ஓ.வா என்ற நிலைமையில் யார் அதை தீர்த்து வைப்பது என்ற பிரச்னை இன்று பஞ்சாயத்து யூனியன்களிலே இருக்கின்றது. இந்தப் பிரச்னையை நம் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து தீர்த்து வைத்து, ரோடுகள் போடுவதற்கு மான்யம் கொடுப்பதிலே தலை அடிப்படையில் பணம் கொடுக்காது, ரோடுகளின் நீள அடிப்படையில் கொடுக்கவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கூறிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமப் பஞ்சாயத்துக்களிலே ஆசிரியர்களை நியமிக்கிறோம். கூடுமானவரையில் ஆசிரியர்கள் விரும்புகிற இடத்தில் இருந்தால் அடிக்கடி மாற்றம் ஏற்படாது, குழந்தைகளுடைய படிப்பும் கெடாது என்று கூறிக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, என்னுடைய வட்டாரங்களெல்லாம் பெரிய நீர்ப்பாசன வசதியால் வளம் பெறாத வட்டாரங்கள். பாண்ட்ஸ் ஸ்கீம் என்ஜினியர் என்று ஒருவரைப் போட்டிருக்கிறார்கள். அந்தந்த யூனியன் சேர்மனோடு கூட அந்தந்த வட்டாரத்தில் இருக்கக் கூடிய குளம் குட்டைகளைப் பரிசீலனை செய்ய அந்தந்த இடங்களுக்குப் போய்ப் பார்த்து, ஸ்கீம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கும்போது, அதற்குள் மூன்று மாதங்கள் ஆகி விடும். பிறகு அவர் இருக்க மாட்டார். அவரைப் பார்த்துக் புதிய என்ஜினியர் வந்து விடுவார். அவரைப் பார்த்துக் கேட்டால் 'நான் இப்போது தான் வந்திருக்கிறேன், இதையெல்லாம் ஸ்டடி செய்து ஸ்கீம் தருகிறேன்' என்று சொல்லுவார்.



அவரிடம் பழைய வாதங்களைச் சொல்லி, கிராமங்களுக்குக் கூட்டி வந்து கிராம அடிப்படையில் புதிய குளம் குட்டைகள் வெட்ட வேண்டுமென்று சொன்னால், அவர் போய்ப் பார்த்து விட்டு வருவார். அவர் 6-7 மாதம் இருந்து விட்டுப் போய் விடுவார். இப்படி ஸ்டடி செய்வதற்கே ஒரு வருஷம், இரண்டு வருஷம் ஆகின்றது. அதற்குப் பிறகு ஸ்கீம் போட்டு திட்டத்தைக் கொடுத்தால், காண்டிராக்டர்ஸ் எடுத்துச் செய்ய முடியாத அளவுக்குக் குறைந்த தொகையில் இருக்கிற காரணத்தினால், ஆறு ஆண்டு காலமாக என்னுடைய தொகுதியில் மூன்று குட்டைகளுக்கு மேல் வரவே இல்லை. என்னதான வற்புறுத்தினாலும் யாரும் எடுத்துக் கொள்வது கிடையாது. இன்றைக்கு இருக்கக் கூடிய விலைவாசி அடிப்படையில் இந்தக் குளம்-குட்டைகளைத் தோண்ட அதிகப் பணம் செலவழிக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கூறிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக இந்த பஞ்சாயத்து யூனியனிலே ஓரளவுக்கு அதிகப் பணம் செலவு ஆகிறது, நிர்வாகத்தில் அதிகம் செலவு ஆகின்றது என்று என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. கூட்டுறவு ஆய்வாளர் ஒருவர்; புள்ளிவிவர ஆய்வாளர் ஒருவர்; கைத்தொழில் ஆய்வாளர் ஒருவர்; இப்படி இவர்களெல்லோரும் சேர்ந்து என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை. அங்கே இருக்கக் கூடியவர்களில் 7-8 பேர்களுக்கு வேலை கிடையாது. அதோடு கூட வேலை செய்கிறவர்களையும் அவர்கள் கெடுத்து விடுகிறார்கள். இந்த மாதிரியாக உள்ள 4-5 பேர்களை 2-3 யூனியன்களுக்கு ஒருவராகப் போடவேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன். ஒவ்வொரு டிபார்ட்மெண்டிலும் உள்ளவர்கள் புள்ளிவிவரம் வைத்துக்கொண்டுதான் வேலை செய்கிறார்கள். அக்ரிகல்சரல் டிபார்ட்மெண்டில் வேலை செய்கிறவர்கள் அந்த டிபார்ட்மெண்ட் சம்பந்தப்பட்ட புள்ளிவிவரங்களை வைத்துக்கொண்டிருக்கிறார். இந்த புள்ளிவிவர ஆய்வாளர் என்ன செய்கிறார் என்றால் அவரிடமிருந்து வாங்கிக் கொடுத்து விடுகிறார். இவருக்கு என்ன வேலை இருக்கிறது என்று கேட்டால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். சாதாரணமாக மாதம் 30 நாட்களில் ஒரு ஐந்து நாள்களில் கூட வேலை செய்வது கிடையாது. இந்த மாதிரி உள்ள 2-3 பேர்களைக் குறைத்தால் அங்கே ஏற்படக் கூடிய சண்டையாவது குறைவாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, எனக்கு முன் பேசிய அங்கத்தினர், பெரும்பாலும் நிர்வாகச் செலவுக்கே ஆகிறது என்று சொன்னார். அதை நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். என்னுடைய வட்டாரம் இரண்டாவது பரிசு பெற்றது—முதல் பரிசு வேறு ஒரு கிராமத்திற்குக் கிடைத்தது—ஜில்லா அடிப்படையிலே. எங்கள் வட்டாரத்தில் 2 லட்சம் ரூபாய் நாங்கள் கிராம அபிவிருத்திக்காகச் செலவு செய்திருக்கிறோம். நிர்வாகத்திற்கு மட்டும் அதிகச் செலவு செய்வதாக கனம் எதிர் கட்சி அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது மறுக்கத்தக்கது என்று நான் ஞாபகப்படுத்திக்கொள்ளுகிறேன்.

[திருமதி சி. குழந்தையம்மாள்] [16th March 1963

மாதர் சங்கம் அமைப்பது பற்றி கனம் எதிர்க் கட்சி அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு ஒரே பயம், கிராம அடிப்படையில் பஞ்சாயத்து யூனியன் அடிப்படையில் பெண்கள் முன்னேறி வந்து பழக்கப்பட்டு விட்டால் இப்போது இருக்கின்ற அடிப்படையில் எம்.எல்.ஏ-க்கள் 205 பேர்களில் 175 பேர்கள் பெண்கள் வந்து விட்டால் நம் கதி என்ன ஆகுமோ என்று அவர்கள் பயப்படுகிறார்கள். படிப்படியாக இந்த அரசியல் பயிற்சியை அவர்கள் அடையாமல் மட்டம் தட்டி வைக்கவேண்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள் போலும். ஆகையால் அவர்கள் சொல்லுவதை ஒத்துக்கொள்ள முடியாது. பெண்கள் கருணை நிறைந்தவர்கள். உங்களுக்குக் கொடுக்க வேண்டிய இடத்தைத் தாராளமாகக் கொடுப்பார்கள். சொல்லுவார்கள் பானை பிடித்தவள் பாக்கியசாலி என்று. ஆண்களுக்கு இந்தச் சிறப்பு வருவதற்குக் காரணமாக உள்ள இந்தப் பெண்களுக்குக் கொடுக்கக் கூடிய சிறப்புகளைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். எங்கள் ஊரில் மாதர் சங்கம் நடத்துவதிலே 30-ம் தேதி கூட்டம் எப்படி நடத்துவது என்று சிரமப்பட்டுக்கொண்டிருந்தோம். 25-ம் தேதி நான் எஜுகேஷன் கமிட்டி மீட்டிங்குக்கு வந்து விட்டேன். நானே இல்லாமல் ஏகப்பட்ட பெண்கள் வந்து கூடியதை அமைச்சர் அவர்களும் பார்த்தார்கள். அப்படி இருக்கிறது. படிக்காத பெண்கள் மாலை நேரத்தில் அதிகப் பணி இருந்தால் செய்கிறார்கள். இடையிடையே வீட்டுக்குப் போகிறார்கள் என்றால் போகக் கூடாது என்று சட்டம் போட முடியாது. இப்படிப்பட்ட முறையில் மாதர் சங்கங்கள் வளருவதற்கு எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் இடம் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சென்ட்ரல் சோஷல் வெல்ஃபேர் போர்டிலே சென்டர்கள் நடத்துகிறார்கள். ஒருவாறு அவர்கள் வசதி செய்து கொடுத்து வந்தார்கள். இப்போது டில்லி சர்க்கார் மான்யத்தை நிறுத்தி விட்டார்கள், ஆகையால் நாங்களும் இதை நிறுத்தி விடுவோம் என்று அந்தப் பணியாளர்கள் தெரிவிக்கிறார்கள். அப்படி நிறுத்தினால் மருந்து கிடைப்பது கஷ்டமாக இருக்கும். இன்றைக்கு இருக்கக் கூடிய கம்யூனிட்டி டெவலப்மென்ட் திட்டத்தில் சென்ட்ரல் சோஷல் வெல்ஃபேர் போர்டிலிருந்து நடத்தப்படுகிற தாய்-சேய் நல விடுதிகளை எடுத்து நடத்தவேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

கிராமத்தில் வரி வசூல் செய்வது கர்ணத்திற்கும், மணியக்காரருக்கும் கஷ்டமாக இருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம் குறைவு; கமிஷன் பேஸிஸில் வரி வசூல் செய்யும் முறையை ஏற்படுத்தி ஆதரவு கொடுக்கவேண்டும். இன்றைய தினம் திட்டங்களைப் போட்டு அவர்களுக்கு வேலைகளைக் கொடுக்கிறோம். வசூல் செய்கிற வரியும் அதிகம். கமிஷன் பேஸிஸ் ஏற்படுத்தி வரி வசூல் செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



16th March 1963] [திருமதி சி. குழந்தையம்மாள்]

குடும்பக் கட்டுப்பாடு பற்றி ஒரே ஒரு வார்த்தை. நல்ல முறையில் விளம்பரம் செய்கிறார்கள். கிராமங்களில் இருக்கிறவர்களுக்கு எடுத்துச் சொல்ல மொபைல் வான் வைத்து ஆங்காங்கு நடைமுறையில் நடத்தப்படுகிற திட்டங்களை எடுத்துக்கூறி, இத்தனைத் திட்டங்களைப் போட்டும், இத்தனை செலவு செய்தும், இத்தனை டிபார்ட்மென்ட் பணி செய்தாலும் இன்றைக்கு பற்றாக்குறை இருக்கிறது, மக்கள் தொகைதான் இதற்கெல்லாம் காரணம் என்று அவர்கள் உணரக் கூடிய முறையில் பிரசாரம் செய்ய இந்தத் திட்டத்திற்கு அதிகமான பணம் செலவு செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, பஞ்சாயத்து யூனியன் தேர்தல், பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தல், பஞ்சாயத்து தேர்தல், பஞ்சாயத்து ப்ரெசிடெண்ட் தேர்தல் என்று எல்லாவற்றிற்கும் ஒரே ஓட்டைக் கையில் கொடுத்து செய்யவேண்டும் என்று சொன்னது கூடாது, அப்படிச் செய்தால் கஷ்டமாக இருக்கும், இப்போது இருப்பதே போதும், மாற்றம் ஏதும் செய்ய வேண்டியதில்லை, பஞ்சாயத்து மெம்பர்கள் ஓட்டுப் போட்டுத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. முனு. ஆதி:** ஸார், பஞ்சாயத்து தலைவர் தேர்தல் தனியாக இருக்கவெண்டும், பஞ்சாயத்து ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தல் தனியாக இருக்கவேண்டுமென்றுதான் சொல்லப்பட்டது. இதற்கப்புறம் அது என்று சொல்லவில்லை.

*** திரு. கே. பி. பழனி:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, ஆற்றல் மிக்க அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட கிராம அபிவிருத்தி, நல நிர்வாகத்துறை மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். எனக்கு முன்பு பேசிய மதிப்பிற்குரிய பல அங்கத்தினர்களும் பஞ்சாயத்துத் துறையிலே நமது மாநிலம் சாதித்துள்ள சாதனைகளை அழகாக எடுத்துச் சொன்னார்கள். ஏனைய மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக பல்வேறு துறைகளில் நம்முடைய மாநிலம் இருப்பதைப் போல், பஞ்சாயத்து நிர்வாகத்தையும் முதல் முதலாக இந்தியாவில் அமுல் செய்த சிறப்பைப் பெற்ற மாநிலம் நமது சென்னை மாநிலம் என்று சொன்னால், அது மிகையாகாது. அன்று அண்ணல் காந்தியடிகள் சொன்னார்கள், நாட்டின் முன்னேற்றம் நாட்டுப்புறங்களின் முன்னேற்றத்தைப் பொறுத்திருக்கிறது. உண்மையிலேயே இந்திய நாடு ஒரு உயர்ந்த நாடாக திகழவேண்டுமென்றால், நாட்டுப்புற மக்களுடைய வாழ்வு உயர்த்தப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அண்ணல் காந்தியடிகள் கனவுகண்ட அந்த லட்சிய கிராமமானது மூன்று முக்கியமான சக்திகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒன்று பஞ்சாயத்துத் திட்டம், மற்றொன்று கூட்டுறவுத் திட்டம், மற்றொன்று ஆரம்பக் கல்வித் திட்டம். முக்காலியானது மூன்று கால்களில் நிற்பது போல் நாம் உருவாக்கியிருக்கிற லட்சிய கிராமமானது இந்த

மூன்று முக்கியமான சக்திகளின் அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கிற காரணத்தினால், கிராம பஞ்சாயத்தானது எந்த அளவுக்கு இன்றியமையாதது என்பது நமக்கு நன்றாக புலப்படுகிறது.

இந்த சந்தர்ப்பத்தில் இருக்கிற திட்டங்களில் இருக்கிற சட்டங்களில் ஒரு சில கருத்துக்களை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டதைப் போல், பல லட்சக்கணக்கான ரூபாய்கள் அரசாங்கத்தினால் பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி வழங்கப்படுகிற தொகை சரியாக செலவு செய்யப்படுகிறதா என்பதை ஆராய்வதற்கு சட்ட மன்ற உறுப்பினர்களையும், முக்கியமாக அரசாங்க அதிகாரிகளையும் கொண்ட ஒரு குழுவை அமைத்து, ஆறு மாதங்களுக்கு ஒரு முறையாவது அந்தக் குழுவானது எல்லா பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களாலும் செலவு செய்யப்படுகின்ற தொகையைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று, முதலாவதாக கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, இன்றைய பஞ்சாயத்து கூட்டு மன்ற திட்டப்படி, பஞ்சாயத்து கூட்டு மன்றத்தில் உள்ள பள்ளிகளுக்கான புத்தகங்களை தேர்ந்தெடுக்கக்கூடிய பொறுப்பு அந்தப் பஞ்சாயத்து தலைவர், அதற்கான குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலைமை மாற்றியமைக்கப்பட்டு, மாவட்ட அபிவிருத்தி மன்ற தலைவராக இருக்கக்கூடிய கலெக்டர் அவர்களிடத்தில் அந்த அதிகாரத்தை வழங்கினால் நன்றாக இருக்கும் என்ற கருத்தை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, அந்தந்தப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களுக்காக சந்தைகளை மேலை நாடுகளில், ஒவ்வொரு கவுண்டியிலும் நடத்திவருகிறார்கள். ஒவ்வொரு கவுண்டிக்கும் ஒரு சந்தை இயங்கி வருகிறது. அதேபோல் ஒவ்வொரு பஞ்சாயத்து கூட்டு மன்ற எல்லைக்குள் அத்தகைய சந்தைகளை அமைத்தால், உற்பத்தி பொருள்கள் நல்ல முறையில் விற்பனை ஆவதற்கு ஏதுவாக இருக்கும் என்ற கருத்தை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இன்று இருக்கக்கூடிய பஞ்சாயத்து சட்டப்படி, ஒரு பஞ்சாயத்து கூட்டு மன்றத் தலைவர் அந்தக் கிராமப் பஞ்சாயத்து மன்றத்தில் நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வந்து இறக்கப்பட்ட போதிலும், அவர் பஞ்சாயத்து கூட்டு மன்ற தலைவராக இருக்கக்கூடிய அளவுக்கு நம்முடைய சட்டம் இயங்கி வருகிறது. இதனை மாற்றி அமைக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு தாழ்மையுடன் இதைக் கொண்டு வர ஆசைப்படுகிறேன்.



அடுத்தபடியாக, சுகாதாரத்துடன் மக்கள் வாழ்வதற்கு குடிதண்ணீர் திட்டம் எவ்வளவு இன்றியமையாதது என்பது நமக்கு நன்றாகத் தெரியும். ஓவர் ஹெட் டாங்கு கட்டுவதற்கு அந்தக் கிராமப் பஞ்சாயத்திலிருந்து குறிப்பிட்ட தொகை கொடுக்க வேண்டுமென்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பல கிராமங்கள் வறுமையில் இருக்கிற காரணத்தினால், அந்தத் தொகையைக்கூட கட்ட இயலவில்லை. அதனால் அந்தக் கிராமங்கள் ஓவர் ஹெட் டாங்கு வசதி பெற இயலாத சூழ்நிலையில் சில பஞ்சாயத்துகள் இருக்கின்றன. அவைகளுக்கு விசேஷ விதிவிலக்கு அளித்து, உடனடியாக குடிநீர் திட்டங்களை அந்தப் பகுதிகளில் நிறைவேற்றவேண்டும் என்று தாழ்மையுடன் அமைச்சர் அவையை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்று இருக்கக்கூடிய தேர்தல் முறையானது மாற்றி அமைக்கப்படவேண்டும் என்றும், இது இன்டைரக்ட் எலெக்ஷன் என்றும், நேரடித் தேர்தல் முறை வரவேண்டும் என்றும் ஒரு சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அந்த அளவு சர்வ ஜன வாக்குரிமை ஏற்பட்டால், பஞ்சாயத்துக் கூட்டு மன்றத் தலைவர்களுக்கும், கிராமப் பஞ்சாயத்து தலைவர்களுக்கும் நேரடியான தொடர்பு இருப்பதற்கு இடம் இருக்காது. பஞ்சாயத்து கூட்டு மன்றத் தலைவர் நேரடியாக மக்களின் ஆதரவைப் பெற்றுதான் தேர்தலில் வெற்றி பெற்ற காரணத்தினால், பஞ்சாயத்து தலைவர்களை புறக்கணிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். எனவே, நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறவேண்டுமென்றால், இன்று இருக்கக்கூடிய தேர்தல் முறையே ஏற்றது என்ற கருத்தை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த திருவையாறு பஞ்சாயத்து யூனியனில் 1½ ஆண்டு காலமாக ஜீப் இல்லாத நிலைமை இருக்கிறது. மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களை உடனே ஒரு ஜீப் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. வி. ஆர். பெரியண்ணன்:** கனம் தலைவர் அவர்களே, இந்த மான்யத்தின் மீது கொண்டுவரப்பட்டுள்ள வெட்டுப் பிரேரபணையை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன். கதர் கிராமக் கைத்தொழில் திட்டம் என்று கிராம கைத்தொழில்களை கதர் போர்டோடு இணைத்து இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. கதர் கிராமக் கைத்தொழில் திட்டத்தின்கீழ் கொல்லு வேலை, தச்சு வேலை, தேனீ வளர்த்தல், தோல் பதனிடுதல், சுண்ணாம்புக் காளவாய் முதலிய தொழில்களுக்கான யூனிட்டுகளை ஏற்படுத்த கடனாகவும், மான்யமாகவும் கொடுத்து, பல யூனிட்டுகள் ஏற்படுத்திக்கொண்டு வருவதற்காக நிறையத் தொகையை ஒதுக்கியிருப்பதாக அறிக்கையில் காண்கிறோம். குறிப்பாக, பரி தைக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த பல குடும்பத்தினர் இப்பொழுது கிராமப் பகுதிகளிலே மின்சார வசதி

[திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்]

ஷனரும் மற்றும் அங்கு இருக்கிற எக்ஸ்டென்ஷன் ஆபீசர்களும், கிராம சேவக்குகளும் அவர்களை வரவேற்பதிலே கண்ணுங்கருத்துமாக இருக்கிறார்கள். அவர்களை வரவேற்கும் முயற்சியில்தான் அவர்களுடைய முழு நேரமும் செலவழிக்கப்படுகிறதே தவிர, மக்களுக்கு சேவை செய்கின்ற முறையில் அவர்கள் செயல்படவில்லை என்று நான் கூறுகிறேன். மந்திரிகள் வருகிறார்கள் என்றால், 10 அல்லது 15 நாட்களுக்கு முன்பாகவே இந்த வேலையிலேயே அவர்கள் ஈடுபடுகிறார்கள். இந்த இலாகாவிற்காக செலவிடப்படும் பணம் நல்ல முறையிலே செலவு செய்யப்படவில்லை. அங்கு இருக்கிற ஆபீஸ், நிர்வாகம், புராபகண்டாவுக்கே பெரும்பகுதி செலவழிக்கப்படுகிறது என்ற கருத்தை சில அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள். அது உண்மைதான். கணக்குப் போட்டுப் பார்த்தால் இது நனகு தெரிய வரும். "தோட்டத்தில் பாதி கிணறு" என்பது போல்தான் இருக்கிறது. அதைப்போலத்தான் இந்த இலாகாவிற்காக ஒதுக்கப்படுகிற பணத்தில் பாதி அளவுக்கு மேல் புராபகாண்டா நிர்வாகச் செலவிற்காக பயன்படுத்தப்படுகிறது, முழுதும் கிராம அபிவிருத்திக்குப் பயன்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எங்கு பார்த்தாலும் கமிஷனருக்கும் சேர்மனுக்கும் இடையே ஒற்றுமையில்லாமல் திட்ட வேலைகள் நல்ல முறையில் செயல்படாமல் இருக்கின்றன. அப்படியிருக்கிற ஓரிரண்டு இடங்களைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். தஞ்சை ஜில்லாவிலே ஆவுடையார் கோயில் பிளாக்கில் கமிஷனருக்கும், சேர்மனுக்கும் தகராறு ஏற்பட்டு கிட்டத்தட்ட ஒரு வருட காலமாக கூட்டம் நடக்காமல் இருந்தது. அதே மாதிரி மானாமதுரையும் ஒன்று. அங்கே இருக்கிற சேர்மனுக்கும், கமிஷனருக்கும் பிடித்தமில்லாமல் இருவரும் முறண்பட்ட வகையிலே நடநது வருகிறார்கள். அங்கு நமது முதலமைச்சர் அவர்கள் யுத்த நிதி வசூலுக்காகச் சென்றிருந்த நேரத்தில் யூனியனிலே வசூல் செய்த பண முடிப்பை சேர்மன் கொடுக்காமல் அவருக்கு எதிர்ப்பாக இருந்த ஒரு காங்கிரஸ்காரர் கொடுக்கும் நிலைமை ஏற்பட்டது. இதையெல்லாம் நல்ல முறையில் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவதுடன், அப்படி தகராறு உள்ள இடங்களில் இருக்கும் கமிஷனர்களை ஏன் உடனடியாக மாற்றக் கூடாது என்று நான் கேட்கிறேன்.

நான் ஒரு கிராமத்திற்குச் சென்று திரும்பி வந்தேன். அப்பொழுது என் தொகுதியைச் சேர்ந்த யூனியன் கமிஷனர் நடந்து போய்க் கொண்டிருந்தார். நான் அவரை என்னுடைய ஜீப்பில் ஏறிக்கொள்ளும்படிச் சொன்னேன். அவர் ஏற மறுத்துவிட்டார். நான் வற்புறுத்தியதும், யாராவது காங்கிரஸ்காரர் மனுப்போட்டு விடுவார் என்று பதில் சொன்னார். அதே கமிஷனர் இரண்டு தினங்களுக்குப் பிறகு ஆளுங் கட்சியைச் சார்ந்த ஒருவருடைய ஜீப்பிலே போனதை நான் பார்த்தேன். எதிர்க் கட்சிக்காரர்களுடன் சேர்ந்தால் ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்று



[திரு. கே. ஆர். எம், கரியமாணிக்கம்]

அதிகாரிகள் பயப்படுகிறார்கள். இதுவா கிராம ராஜ்யம் என்று கேட்கிறேன். இதையெல்லாம் நல்ல முறையில் கண்காணித்து, எல்லாக் கட்சிக்காரர்களுடனும் அதிகாரிகள் சமத்துவமாகப் பழகுவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** கனம் தலைவர் அவர்களே, கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 375 பஞ்சாயத்து யூனியன்களுக்காக கிட்டத்தட்ட 28 கோடி ரூபாய் ஒரு வருஷத்திற்கு செலவு செய்யப்படுகிறது. இதற்கு ஒரு இலாகா இருப்பது நலம் என்று நான் கருதுகிறேன். அப்படியிருந்தால் நிர்வாகத்தை நல்ல முறையிலே நடத்த முடியும்.

இப்பொழுது இருக்கும் பிளாக்குகளை ரீ அலாட்மென்ட் செய்வது தேவை. சில ப்ளாக்குகள் விரிவாகவும், நிர்வாகத்திற்கு கஷ்டமான முறையிலும் இருக்கின்றன. ஆகவே, அவைகளை ரீ அலாட் செய்வது நலமாக இருக்கும். கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் போடப்படுகிற ரோடுகளுக்கு இப்பொழுது கொடுக்கப்படும் தொகை குறைவாக இருக்கிறது. மைலேஜுக்குத் தகுந்தபடி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அது போக மைனர் இர்ரிகேஷன் டாங்ஸ் ரிவினியூ டாங்ஸ் இவைகள் இருக்கின்றன. இவைகள் பஞ்சாயத்து பொறுப்பின் கீழ் இருக்கின்றன. ரிவினியூ குளங்களை மராமத்து செய்வதாக இருந்தால் அது அந்த நிர்வாகத்தின் பொறுப்பில் இருக்கிறது. அதற்குக் கொடுக்கப்படும் தொகை குறைவாக இருக்கிறது. அதை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து பொறுப்பில் இருக்கக்கூடிய கிணறுகளை வெட்டுவதற்கு மானியம் வேண்டும் என்று கேட்கிறார்கள். இந்த அறிக்கையில் 18-வது பாராவில் அதைப்பற்றி சொல்லி இருக்கிறது.

"The panchayats have themselves been representing the need for sanction of loans to them for the purpose of sinking wells in public lands vested in or entrusted to them for raising panchayat plantations."

இவைகளுக்கு கண்டிப்பாக லோன் கொடுக்க வேண்டியது அவசியம் என்று நினைக்கிறேன். மேலும் புறம்போக்கு நிலங்களை அபிவிருத்தி செய்ய வேண்டுமானாலும் லோன் கொடுக்கலாம். அப்படி நிலங்களை அபிவிருத்தி செய்வது நலம்.

இப்பொழுது ஈ.ஓ.-க்கள் இருக்கிறார்கள். விவசாயத்திற்கும் கூட்டுறவுக்கும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் ஆர்.டி.ஓ.-க்கு கீழ் இருக்கிறார்கள். அப்படி இல்லாமல் அவர்கள் எல்லோரும் டெக்னிகல் ஆபீசர்களின் கீழ் இருந்தால் நலமாக இருக்கும். ஆர்.டி.ஓ. மேல் பார்வையில் இருப்பது சரியல்ல. டெக்னிகல் ஹெட்டின் மேற்பார்வையில் இருந்தால் நலம் என்று

வந்துவிட்ட காரணத்தினால், அவர்கள் செய்து கொண்டிருந்த தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டு, மிகவும் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சுலபமாக செய்யக்கூடிய தொழில் தோல் பதனிடும் தொழில்தான். ஆகையால், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிப்பு மன்றத்தின் எல்லைக்குள் ஒரு தோல் பதனிடும் யூனிட்டை ஏற்படுத்தி, அவர்களுக்கு தோல் பதனிடும் யூனிட்டில் நல்ல முறையில் பயிற்சி கொடுத்து, அவர்கள் அந்தத் தொழிலைச் செய்வதற்கு பயிற்சி பெற்ற பிறகு, தொழில் செய்வதற்கு மான்யங்களும் கடன்களும் கொடுத்து, அவர்களை அந்தத் தொழிலில் ஈடுபடுத்தி அவர்களுக்கு அந்தத் தொழிலில் நல்ல ஆர்வம் ஏற்படும்படிச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு தோல் பதனிடும் தொழில் மட்டும் அல்லாமல், வேறு சில தொழில்களையும் செய்ய அவர்கள் ஆர்வத்துடன் முன் வந்தால், அவர்களுக்கு வேண்டிய மான்யத்தைக் கொடுத்து அவர்களை முன்னேற்ற வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் சேந்தமங்கலத்தில் தோல் பதனிடும் யூனிட் ஆரம்பிக்கப்பட்டு சில ஆண்டுகளாக பலருக்கு பயிற்சி கொடுக்கப்பட்டும் வருகிறது. அங்கு பயிற்சி பெற்ற அந்தத் தொழிலாளர்களுக்குத் தோல் பதனிடும் கூட்டுறவு சங்கம் நிறுவி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அவர்கள் அந்தச் சங்கத்தின் மூலம் அவர்கள் தொழில் செய்வதற்கு அந்த கூட்டுறவு சொஸைடிக்கு அளிக்க வேண்டிய கடன் வசதி இதுவரையில் அவர்களுக்கு அளிக்கப்படாமல் இருக்கிறது. இதை உடனடியாக அவர்களுக்கு அளித்து, அவர்கள் அந்தத் தொழிலில் ஈடுபடச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு ஆண்டுக்கு ஒரு முறை அந்த சங்க டைரக்டர்களை மாற்றி அமைக்கிறார்கள். கடந்த ஆண்டில் டைரக்டர்களாக இருந்தவர்கள் நல்ல முறையில் பணியாற்றி, அதற்கு ஆவன செய்துகொண்டிருந்தார்கள். பஞ்சாயத்து யூனியன் மூலம் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய பங்குத் தொகை வழங்கப்பட
11-30 a.m. வேண்டும் என்று தீர்மானம் அனுப்பி, காதி போர்டில் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்த நேரத்தில், ஆண்டு முடிவடைந்துவிட்ட காரணத்தினாலே, அங்கு வேறு சில டைரக்டர்களை நியமித்தார்கள். அந்த சங்கத்திலுள்ள மற்ற அங்கத்தினர்கள் யார் யாரை டைரக்டர்களாக நியமித்திருக்கிறோம் என்று தெரிந்து கொள்ளாத முறையிலே நியமித்து, அந்த சங்கம் கூட்டம் கூடாத முறையிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த சேந்தமங்கலம் தோல் பதனிடும் சங்கத்திற்கு வழங்கவேண்டிய கடன் தொகையையும், மானியத்தையும் வழங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தனிப்பட்ட முறையிலே இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு தொட்டிகள் கட்டுவதற்கு காதி போர்டார் ரூ. 200 மானியம் வழங்குகிறார்கள். ஆனால், அந்தப் பணத்தைப் பெற்று தொட்டிகள் கட்டிய பிறகு, அவர்களால் தொழில் செய்ய முடிய



வில்லை. தொட்டி கட்டியவர்களுக்கு கருவிகள் கொடுக்கப் படுவதில்லை. வெல் பேர் டிபார்ட்மெண்ட் மூலம் இந்தக் கருவிகள் வழங்கப்படுகின்றன. இந்தக் கருவிகள் சிட்டுக் குலுக்கல் முறை மூலம் வழங்கப்படுகின்றன. நடைமுறையில் பார்க்கும்பொழுது தொட்டி கட்டியவர்களுக்கு இந்தக் கருவிகள் கொடுக்கப்படுவதில்லை. கருவிகள் வழங்கியவர்களுக்கு தொட்டிகள் கட்டுவதற்குப் பணம் கொடுப்பதில்லை. இதனால் பலர் தொட்டிகளைக் கட்டிக்கொண்டு சும்மா இருக்கிறார்கள். அங்கே உள்ள அதிகாரிகளிடம் ஏன் இப்படி தொட்டி கட்டியவர்களுக்கு பணம் கொடுக்கப்படுவதில்லை என்று கேட்டால், அரசாங்கம் பிறப்பித்துள்ள ஆணையில் தொட்டி கட்டியவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று இல்லையென்றும், சிட்டுக் குலுக்கி கொடுத்துக் கொண்டு வருவதாகவும் சொல்லுகிறார்கள். ஆகவே, தொட்டி கட்டியவர்களுக்கு கருவிகள் கொடுத்தால் அவர்கள் தொழிலை நல்ல முறையில் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த சேந்தமங்கலம் கூட்டுறவு சங்கத்திலே பணி புரிகிறவர்கள் அடிக்கடிக் கூட்டம் போட்டு, எந்தெந்த முறையிலே அரசாங்கத்திற்கு மனுச் செய்து மானியங்களை பெற்றுக் கொள்ளவேண்டும் என்று சொல்லுவது கிடையாது. மேற்பார்வையிடும் அதிகாரிகளும் அங்கேயுள்ள மெம்பர்களை விசாரித்து ஒன்றும் செய்வது கிடையாது. எது கேட்டாலும் "பார்க்கலாம், பார்க்கலாம்" என்று சொல்லுகிறார்கள். இந்த நிலையில் எல்லாவற்றையும் நன்கு பரிசீலனை செய்து, இந்த சேந்தமங்கலம் தோல் பதனிடும் சங்கத்திற்கு அளிக்க வேண்டிய மானியத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*** திரு. கே. ஆர். எம். கரியமாணிக்கம் அம்பலம்:** கனம் தலைவர் அவர்களே, கிராம நல, தல நிர்வாகத் துறை மானியத்தின் மீது கொண்டு வரப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

கிராம அபிவிருத்தியானது, காந்திஜீ சொன்ன கிராம ராஜ்யம் என்ற முறையிலே நன்கு நடைபெறுகிறது என்று சொன்னார்கள். காந்திஜீ கண்ட கிராம ராஜ்யம் வேறு, இப்பொழுது நடக்கும் கிராம அபிவிருத்தி வேறு என்பதை நான் கூறுகிறேன்.

**(கனம் சபாநாயகர் தலைமை)**

இந்த கிராம அபிவிருத்தி இலாகாவானது, காங்கிரஸ் கட்சிக்கு ஒரு பிரசார இலாகாவாக இருக்கிறதே தவிர, உண்மையிலே மக்களுக்கு நல்ல முறையில் சேவைசெய்வதாக இல்லை. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இதில் அதிகம் வேலை செய்கிறார்கள். அவர்கள் தங்கள் கட்சிக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகிறார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மந்திரிகள் அந்த ஏரியாக்களுக்கு வரும்பொழுது, தமி

தோன்றுகிறது. புறம்போக்கு நிலங்கள் சம்பந்தமாக பல ஜி.ஓ.-க்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்கின்றன. பஞ்சாயத்து சம்பந்தமாக வெளியிட்டிருக்கிற ஜி.ஓ.-வைப் பார்த்தால் இது நன்றாகத் தெரியும். **G.O. Misc. No. 608-ல்.**

*Grazing grounds, threshing floors*

" These lands vest statutorily in the panchayats and the entire power for determining the method of utilising these lands for the common public benefit vest in the panchayats."

என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்ததாக 48 என்று நினைக்கிறேன். அதில்—

" The Panchayat shall have the powers to cut down or sell by public auction live trees on road margins "

என்று ஓர் இடத்தில் இருக்கிறது. இன்னொரு இடத்தில் . . .

" wind-fallen and withered trees except cyclone-fallen trees, irrespective of the fact whether they are fruit bearing trees or non-fruit bearing trees "

என்று சொல்லப்படுகிறது. இப்படி ஒரு இடத்திற்கு இன்னொரு இடம் முரணாக இருக்கிறது. ஜி.ஓ. 48-ஐப் பார்த்தால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றொரு ஜி.ஓ.-வில் அது நிறுத்தப்பட்டிருக்கிறது என்பது தெரியவரும். ஜி.ஓ. 608-ல் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம் ஜி.ஓ. 48-ல் எடுக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. அதிகாரம் கொடுப்பதில் மேலும் பல குறைபாடுகள் இருக்கின்றன. அதை ஆராய்ந்து தெளிவு படுத்த வேண்டும் என்று நினைக்கிறேன்.

அடுத்தபடியாக கிராமங்களில் பல பண்ணைகள் இருக்கின்றன. இரவு பத்து மணிக்குப் போனால் அங்கு அப்பொழுது ஈ.ஓ.-க்கள் இருப்பது இல்லை. ஆகவே அவர்கள் அங்கங்கே நைட் ஹால்ட் செய்யவேண்டும் என்று சொல்ல வேண்டும். அது அவசியம் என்று நினைக்கிறேன். அப்படி கண்டிப்பாக இருக்க வேண்டும். வில்லேஜ் இண்டஸ்ட்ரீசை எடுத்துக்கொண்டால் இண்டஸ்ட்ரியல் ஆபீசர்கள் இருக்கிறார்கள். காதி டிபார்ட்மெண்டில் டிஸ்டிரிக்ட் வில்லேஜ் ஆபீசர்கள் இருக்கிறார்கள். இப்படி பல ஆபீசர்கள் போடப்பட்டிருக்கின்றன. இவர்கள் ஒருவருக்கு ஒருவர் கோஆர்டினேஷன் இல்லை. கோஆர்டினேஷன் இருக்கும் படியாகச் செய்யவேண்டும். பல ஸ்கீம்கள் போடப்படுவதால் கோஆர்டினேஷன் இருந்தால் நன்றாக வேலை நடக்கும். சில ஜி.ஓ.-க்களில் சில கஷ்டங்கள் இருக்கின்றன.

அடுத்தபடியாக, மாச்சிங் கிராண்ட் என்றும், நான்-மாச்சிங் கிராண்ட் என்றும் கொடுக்கிறார்கள். சில இடங்களில் பயிருக்கு நோய் கண்டு விட்டது என்று சொல்லி மாச்சிங் கிராண்ட் கொடுத்து அந்த வேலை நடக்காவிட்டால் அந்தப் பணத்தை



எடுத்து வேறு பல வேலைகளுக்குக் கொடுக்கலாம். அப்படிச் செய்து விட்டால் சில புறம்போக்கு நிலங்களில் நல்ல ப்ளாண்டேஷன்களை உற்பத்தி செய்யலாம். அப்படி உண்டாக்குவதற்கு வசதியாக இருக்கும். அந்த வகையில் அதிகாரம் கொடுப்பது நலம் என்று நினைக்கிறேன்.

அது போக, சில இடங்களில் குடி மராமத்து வேலைகள் நடைபெறுகின்றன. சில இடங்களில் நல்ல வேலைகள் நடைபெறுகின்றன, சில இடங்களில் மோசமாக நடைபெறுகின்றன. பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு கால தாமதம் ஏற்படுகிறது. இதைப்பற்றி 31-ஆவது பாராவில் கூறப்பட்டிருக்கிறது. சில அதிகாரங்கள் ஆர்.டி.ஓ.-க்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

" In respect of trees fallen as a result of a evelone, the panchayat shall report to the Revenue Divisional Officer."

" The Revenue Divisional Officer shall hold bi-monthly meetings with the Panchayat Union Chairman for preliminary discussion of topics."

இன்னொரு முறையில் சில இடங்களில் இது அமுல் நடத்தப்படுகிறது. மாதம் இரண்டு முறை கூட்டங்களைக் கூட்ட வேண்டும் என்று சொல்லப்படுகிறது. பல சலுகைகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ரிவினியூ இலாகாவிலிருந்து அங்கு ஆட்களை நியமிக்கிறார்கள். ரிவினியூ இலாகாவிலிருந்து ஆட்களை நியமிப்பதால் அவர்களுக்கு பல சலுகைகள் காட்டப்பட்டு வருகின்றன. ரிவினியூ டிபார்ட்மெண்டிலிருந்து வந்தவர்களுக்கு அதிகப்படியான சலுகைகள் காட்டப்படுகின்றன. அப்படி இருக்கக்கூடாது. பல இலாகாவிலிருந்து எடுத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுது தான் வேலைகள் காலதாமதம் ஆகாமல் நடைபெறும். அந்த முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Is the hon. Member attacking the Hon. **Revenue Minister?**

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : அதில் இருக்கக்கூடிய கஷ்டத்தை சொல்லுகிறேன். ரிவினியூ இலாகாவில் இப்படி நடைபெறுகிறது என்பதை வருத்தத்துடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அது போக பல அபிவிருத்தி திட்டங்களை எடுத்து வேலை செய்து வருகிறார்கள். அவைகள் எல்லாம் நல்ல முறையில் நடந்து வருகின்றன. கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் பேசும்போது சில குறைபாடுகள் இருக்கின்றன என்றும் அவைகள் சரியான வேலைகளை நடத்தவில்லை என்றும் சொன்னார்கள். வேலைகள் எவ்வளவோ நலமாக செய்யப்படுகின்றன என்பதை பெருமையுடன் சொல்லிக்கொள்ளலாம். சென்ற வருஷக் கணக்கைப் பார்த்தால் எவ்வளவு நன்மைகள் செய்திருப்பது நன்றாகத் தெரியவரும்.

ஒரு வருஷக் கணக்கை எடுத்துப் பார்த்தால் எவ்வளவு நன்மைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பது தெரிய வரும். பஞ்சாயத்து ஆபீஸ்களில் வந்து பார்த்தால் எவ்வளவு வேலைகள் செய்யப்படுகின்றன என்பது தெரிய வரும். ஒரு வருஷம் இருந்து பார்க்க வேண்டும் என்பது அல்ல. ஒரு மணி நேரம் வந்து பார்த்தாலும் அவர்கள் எவ்வளவு வேலைகளைச் செய்கிறார்கள் என்பது தெரிய வரும். பார்த்தால் வருஷத்திற்கு இருபது அல்லது இருபத்தி ஐந்து வேலைகள் செய்து இருப்பது நன்றாகத் தெரிய வரும். அவர்கள் வேலையே செய்யவில்லை என்று சொல்வதற்கு இல்லை. நல்ல வேலைகளைச் செய்து வருகிறார்கள் என்பதைச் சொல்லிக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. ஆ. கு. சுப்பையா : கனம் சபாநாயகர் அவர்களே, தற்போது விவாதத்தில் இருக்கக்கூடிய கிராம அபிவிருத்தி ஸ்தல நிர்வாகத்துறை மானியத்தின்மீது சில வார்த்தைகளைச் சொல்வதற்கு விரும்புகிறேன். காந்திஜீ அவர்கள் கண்ட கனவை நினைவாக்கும் முறையில்தான் இந்த கிராம பஞ்சாயத்து, பஞ்சாயத்து கூட்டு மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவைகள் செய்யக்கூடிய வேலைகளைப்பற்றி அதில் கூறப்பட்டிருக்கிறது. இந்த பஞ்சாயத்து கூட்டு மன்றங்களுக்கும் பஞ்சாயத்துகளுக்கும் அதிகமான பொறுப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் இம்மாதிரியான ஒரு கிராம பொருளாதாரத்தை மாற்றி அமைத்து சமுதாயத்தில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி தொழில்களைப் பெருக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தும் நீர்ப்பாசன வசதிகள், போக்குவரத்து வசதிகள், சமுதாய மாற்றங்கள் போன்றவைகளைச் செய்வதற்கும் பெரிய பொறுப்பை கிராம பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. இப்படி கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய சந்தர்ப்பத்தில் பஞ்சாயத்து கூட்டு மன்றங்களின் அதிகாரிகள்தான் சகல பொறுப்புகளையும் நிர்வகிக்கக் கூடிய அதிகாரியாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பெரும் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய அந்த அதிகாரிகள் தங்களுடைய கடமைகளைச் சரியாகச் செய்து வருகிறார்களா என்று அரசாங்கம் கண்காணிப்பது மிகவும் அவசியமாகிறது. சில பஞ்சாயத்து கூட்டு மன்றங்கள் அவைகளுடைய ஆணையாளர்கள் தங்களுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கிறார்கள். திருவாடுதுறை பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் அவர்களுடைய அதிகாரத்தை அவர் துஷ்பிரயோகம் செய்து கொண்டு வருகிறார். இதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்களுக்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அந்த பிரதேசத்தில் இருக்கக்கூடிய பஞ்சாயத்தும் மக்களும் புகார் செய்திருக்கிறார்கள். அதைப்போலவே பல ஆணையாளர்கள் மீது பல இடங்களிலிருந்து பல புகார்கள் வந்திருக்கின்றன. அதேபோல் அப்படி பல இடங்களிலிருந்து இம்மாதிரியான புகார்கள் வந்துகொண்டிருப்பதன் காரணமாக, அதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்



என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். மாவட்ட அபிவிருத்தி மன்றம் ஒன்று இருக்கிறது. அது கூடும் சமயங்களில் தீர்மானங்கள் போடப்படுகின்றன. பல தீர்மானங்களை இங்கு சர்க்காருக்கு அனுப்பாத நிலைமை ஏற்படுகிறது. காலையில் ஒரு கேள்விக்கு, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது, 'அராந்தாங்கி பஞ்சாயத்து யூனியன் கூட்டு மன்றத்திற்கு ஏரி மராமத்து செய்ய, மானிய உதவி கேட்டு மாவட்ட அபிவிருத்தி மன்றம் தீர்மானம் போட்டது இங்கு வரவில்லை' என்று கூறுகிறார்கள். இப்படிப் போடக்கூடிய தீர்மானங்களை அரசாங்கத்திற்கு அனுப்பாத நிலைமையும் இருக்கிறது. ஒரே வேலையைச் செய்வதற்குப் பல தீர்மானங்கள் போடப்படுகின்றன. போட்ட தீர்மானங்கள் மீது நடவடிக்கை எடுப்பது கிடையாது. நிலைக் குழு அமைக்கிறார்கள். மாவட்ட மன்றக் கூட்டத்திற்கு முதல் நாள் நிலை குழு கூட்டம் வைத்துக் கொள்வதால், அதனால் பல உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வராமல் இருந்துவிடுகிறார்கள். 'கோரம்' இல்லை என்ற காரணத்திற்காக நிலைக் குழுவின் வேலைகள் தடைப்படுகின்றன. அம்மாதிரி இல்லாமல், 15 நாட்களுக்கு முன்னால், அந்த நிலைக் குழு கூடி அஜெண்டாக்களில் உள்ள விஷயங்களைக் குறித்து விவாதித்து, தீர்மானிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வது மேலாக இருக்குமென்று கூறுகிறேன்.

சில கனம் உறுப்பினர்கள் மாவட்ட மன்றக் கூட்டத்திற்கு வருஷக் கணக்கில் வராமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தொடர்ந்து அந்த மாவட்ட மன்ற உறுப்பினர்களாக வைத்துக் கொள்ளப்படவேண்டுமா என்பதை யோசிக்க வேண்டும்.

சில கிராமப் பஞ்சாயத்துத் தலைவர்கள் கிராமத்திலேயே இருப்பது கிடையாது. நகரப் புறங்களில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதனால், பஞ்சாயத்து வேலை நடைபெறாமல் சும்மா இருக்கிறது. பஞ்சாயத்து எல்லையிலுள்ள மக்களும், பஞ்சாயத்து உறுப்பினர்களும் சேர்ந்து சர்க்காருக்கோ அல்லது அமைச்சருக்கோ சொன்னாலுங்கூட, நடவடிக்கை எடுப்பது கிடையாது. குறிப்பாக, பாபுஞ்சம் தாலூகா வையச்சேரி பஞ்சாயத்தில் இரண்டு, மூன்று ஆண்டுக் காலமாக எந்த வேலையும் செய்யாமல் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுத்திருக்கும் அதிகாரம் சரியாக உபயோகப்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

புதிய பள்ளிகள் திறக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. புதிய பள்ளிகளைத் திறக்கும்போது, தனியார் பள்ளிகள் இருந்தால் அவர்களுடைய அனுமதி பெற்றுத்தான் திறக்கவேண்டுமென்று சொல்வதால் பஞ்சாயத்துப் பள்ளி திறப்பதற்கு, தனியார் அனுமதி கிடைப்பதில்லை. இம்மாதிரி நிலைமையைப் போக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

குடி மராமத்து வேலைகளைச் சென்ற ஆண்டு நிறுத்திவிட்டார்கள். இந்த ஆண்டு செய்வதற்கு வேண்டிய திட்டங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டாவது அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மிகவும் உதவிகரமாக இருக்கும். சில பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களுக்கு வருமானமே இல்லாத நிலைமை இருக்கிறது. குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலுள்ள கூட்டு மன்றங்களுக்குப் போதுமான வருமானம் கிடையாது. தஞ்சை மாவட்டத்திலிருக்கும் கூட்டு மன்றங்கள் அரசாங்கத்திடம் நிதி கோரினால், அவர்களுக்குப் போதுமான மானியம் கொடுத்து உதவி செய்யவேண்டும். குறிப்பாக, தலைஞாயிறு, திருத்துறைப்பூண்டி, கோட்டூர் பஞ்சாயத்து யூனியன்கள் மிகவும் பிற்பட்ட நிலையில் இருக்கின்றன. எந்த விதமான முன்னேற்ற வேலையும் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு அதிகமான உதவிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

ரேடியோ சூபர்வைசர் இரண்டு தாலூகாக்களுக்கு ஒருவராக இருப்பதை மாற்றி, தாலூகாவுக்கு ஒருவராக நியமனம் செய்ய வேண்டும். சில பஞ்சாயத்துக்களுக்கு இரண்டு ரேடியோக்கள் கொடுப்பது சரியாக இருக்க முடியும். பெரிய கிராமத்தில் எங்கோ ஒரு இடத்தில் ரேடியோ வைத்துவிடுகிறார்கள். அதனால், அந்தப் பஞ்சாயத்து போர்டு தலைவருக்கும் ஜனங்களுக்கும் ஒருவிதமான வருத்தமும், குறைபாடும் ஏற்படுகிறது. இதையெல்லாம் தவிர்க்கும் முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கால்நடை அபிவிருத்தி சம்பந்தமாக ....

* **திரு. ம. கமலநாதன்:** கனம் சபாநாயகர் அவர்களே, கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறைக்காகக் கோரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கை மீது கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளை நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

பஞ்சாயத்து யூனியன்கள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன, மக்களுக்கு ஓரளவு நேரடியாக உடனடியான தேவைகளைச் செய்து வருகின்றன என்று சர்வ கட்சிக்காரர்களும் ஒப்புக்கொள்ளக் கூடியதாகும். திட்டம் நிறைவேற்றப்படும் நேரத்தில் ஆங்காங்கு கட்சி வேறுபாடு இருக்கிறது. அது கூடாது. எதிர்க்கட்சிக்காரர்கள் குறை சொல்வதற்காக இருக்கிறார்கள் என்று நினைக்க வேண்டாம். பொதுவாக சில பல கருத்துக்களை நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஆரம்பக் கல்வியைப் பொறுத்த வரையிலும், பஞ்சாயத்து யூனியனுக்கு அந்தப் பொறுப்பு முழுமையும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. ஆரம்பப் பள்ளிகளை நம்முடைய தேவைக்கு அவசியமான அளவுக்கு எங்கெங்கு திறக்கவேண்டுமோ அந்த அளவுக்குத்





திறந்திருக்கிறோம். எந்த ஊருக்குப் பள்ளி தேவையோ அங்கு உடனடியாகத் திறக்க நமக்கு அதிகாரம் இருப்பதால் அவைகள் நிறைவேற்றப்பட்டு விட்டன. ஆனால், ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் தரம் உயர்ந்திருக்கிறதா என்பதைப் பார்க்கவேண்டும். ஓரளவு நாம் புதிதாக ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் திறப்பதை ஓராண்டிற்கு நிறுத்திவிட்டு, ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் அந்த நிதியை வைத்து, அந்தக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு நாம் பாடுபடவேண்டும்.

தரம் குறைவதற்கு ஒரு காரணம், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் பாடப்புத்தகங்களைப் பொறுக்கியெடுக்கலாம் என்று வைத்திருப்பதுதான். அந்தந்தப் பஞ்சாயத்து யூனியன் தலைவர் அங்கிருக்கும் கல்விக் குழுக் கூட்டத்தில் புத்தகங்களைத் தெரிந்தெடுக்கவேண்டும். ஆனால், தாட்சண்யத்திற்குப் பெயர் பெற்றது நம் தமிழகம். பஞ்சாயத்து யூனியன் தலைவரிடம் புத்தக வெளியீட்டாளர் யாராவது வந்து, தங்களுடைய புத்தகத்தைப் பள்ளியில் பாடப் புத்தகமாக வைக்கவேண்டுமென்று சிபார்சு கொண்டு வந்து விடுகிறார்கள். அதைத் தட்ட முடிவதில்லை. அப்படிப்பட்ட குறைகளுக்கு என் போன்றவர்களும் ஆளாகிறோம். அதை மறுக்கவில்லை. ஆகவே, பொதுவான பாடப் புத்தகங்கள் எல்லாப் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளிலும் இருக்கவேண்டுமென்றால், மாவட்ட அளவில் அதற்கென்று ஒரு குழுவை ஏற்படுத்தி, புத்தகங்களை அந்த மாவட்டக்குழு தெரிந்தெடுக்கச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பள்ளிக்கூடங்களைத் திறந்துவிடுகிறோம். ஸ்லாப் ஸிஸ்டத்தின்படி, நாற்பது மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறை இருக்கிறது. ஐந்து வகுப்புகள் இருந்தாலும், நான்கு வகுப்புகள் இருந்தாலும், 40 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலைமை இருக்கிறது. பொதுவாக கல்லூரியில் ஒரு பேராசிரியர் 200 மாணவர்களுக்குக்கூடப் பாடம் சொல்லிக் கொடுத்துவிடலாம். முன்னேறவேண்டுமென்று விரும்புகிற மாணவர்கள் தாங்களே படித்துக் கொள்ளலாம். வேறு விதமாக நினைப்பவர்கள் படிக்காமலிருக்கக்கூடும். ஆனால், சின்னஞ்சிறு சிறுவர்களைப் பொறுத்த வரையில், அவர்களைக் கண்ணுங்கருத்துமாக ஆசிரியர் கவனித்துப் பாடம் சொல்லித்தரவேண்டி இருப்பதால், மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக ஒரு ஆசிரியருக்கு இருக்க வேண்டும். மாணவர்கள் கல்வி வளர்ச்சியிலும், மன வளர்ச்சியிலும் நல்ல முறையில் வருவதற்கு ஒரு ஆசிரியருக்கு மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைத்து, அதற்கேற்றபடி அதிகமான ஆசிரியர்களைப் போடவேண்டுமென்ற நிலையை உண்டாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கல்வி அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். 'மெட்ராஸ் இன்ஃபர்மேஷன்' பத்திரிகையைப் பார்த்தால், சேலம் மாவட்டம் எந்த அளவுக்குப் பின் தங்கியிருக்கிறது என்பது தெரியும். சென்னை மாநிலத்திலேயே மிகவும் பின் தங்கிய மாவட்டம் சேலம்

மாவட்டம், அது மிகவும் கீழ்த்தரமாக இருக்கிறது, என்று சொன்னால், அது நம்முடைய மாநில சர்க்காருக்கே ஒரு இழுக்கு அல்லவா? அப்படிப்பட்ட மாவட்டத்தில் கல்வித் தரத்தை உயர்த்தவேண்டுமென்றால், ஓரளவு அந்தப் பள்ளிக்கூடங்களுக்குப் பயிற்சிபெற்ற ஆசிரியர்களாகப் பார்த்துப் போடவேண்டும். அங்கு அதிகப்படியான உயர்நிலைப் பள்ளிகளைத் திறக்க வேண்டும். மேலும் ஒரு கல்லூரியைத் திறக்க வேண்டும். இத்தகைய விஷயங்களைக் கல்வி அமைச்சர் அவர்கள் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பஞ்சாயத்து யூனியனில் இருக்கும் அதிகாரிகளெல்லாம் பொதுவாகவே இரண்டு பெண்டாட்டிக்காரன் நிலையில் இருக்கிறார்கள். எப்படியென்றால், ஒவ்வொரு அதிகாரிக்கும் இம்மிடியட் ஸுபீரியர் என்றும், டிபார்ட்மென்டல் ஸுபீரியர் என்றும் இரண்டு பேர்கள் இருப்பதால் அவர்களுக்குச் சங்கடமான சூழ்நிலை இருக்கிறது. கவர்னர் உரையின்மீது தோழர் திரு. வடிவேலு அவர்கள் பேசியதைக் குறித்து, 'தப்பான புள்ளி விவரம் கொடுக்கிறார்' என்று எதிர்த் தரப்பில் சொல்லப்பட்டது. கனம் உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பேசும்போது, 'தப்பான கணக்குச் சொல்வதற்குத் தலை குனிவு ஏற்படவில்லையா?' என்று கேட்டார்கள். அவர்களுக்கு நான் ஒன்று சொல்கின்றேன். விவசாய விஸ்தரிப்பு அதிகாரி ஒரு மாதத்திற்கு 167 பீரியாடிகல்ஸ் அனுப்ப வேண்டியிருக்கிறது.

**கனம் சபாநாயகர் :** சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ம. கமலநாதன் :** இதுவரை எந்த மானியத்திலும் நான் அதிக நேரம் பேசவேண்டும் என்று கேட்கவில்லை. இன்று மட்டும் ஐந்து நிமிஷங்கள் மேலும் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன்.

**கனம் சபாநாயகர் :** முதலில் பேசியிருந்தால் பத்து நிமிஷம் கூடக் கொடுத்திருக்கலாம். சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. ம. கமலநாதன் :** அந்த 167 பீரியாடிகல்ஸ் தயாரிக்கக் குறைந்தது பத்து நாட்கள் ஆகின்றன. இரண்டு நாட்கள் யூனியன் ஸ்டாஃப் மீட்டிங்குக்குப் போகவேண்டும். இரண்டு நாட்கள் டிபார்ட்மென்டல் ஸ்டாஃப் மீட்டிங்குக்குப் போகவேண்டும். டீ.ஏ.ஓ. இன்ஸ்பெக்ஷன், கலெக்டர் இன்ஸ்பெக்ஷன், சப்-கலக்டர் இன்ஸ்பெக்ஷன், கலெக்டர் அவர்களுடைய பி.ஏ. இன்ஸ்பெக்ஷன், டெபுடி செக்ரடரி, அஸிஸ்டென்ட் செக்ரடரி இன்ஸ்பெக்ஷன் இதைத் தவிர மற்றபடி இங்கிருந்து கோரப்படும் ஸ்டேட்மெண்ட் அனுப்ப அவர்களுக்கு நேரம் சரியாக இருக்கிறது. இருபத்தி ஒன்று நாட்கள் டைரி காட்டவேண்டுமென்றால், தப்பான புள்ளி விவரம் இல்லாமல் எப்படியிருக்க முடியும்? அந்தப் புள்ளி விவரத்தை நாங்கள் குறிப்பிடுவதற்கு எங்களுக்கு ஏன் தலைக் குனிவு ஏற்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



குறைகள் இருக்கின்றன என்று ஆளும் கட்சியைச் சேர்ந்த திருமதி குழந்தையம்மாள் அவர்கள் கூடச் சொன்னார்கள். இப்போது நிர்வாக அதிகாரிகள் அதிகமாக இருக்கிறார்கள்' என்று சொன்னதை பிறகு மறுக்கிறார்கள். கட்சிக் கட்டுப்பாட்டுக்குப் பயந்து சொன்னதை மறுக்கிறார்கள் என்று கருதுகிறேன். எல்லாப் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும் இப்போது சங்கடமான நிலையில் இருக்கிறார்கள். அதிகாரிகளைக் குறைத்து நிர்வாகத்தைத் திறமையாக நடத்தினால் பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் கிராமங்களுக்கு நல்ல முறையில் பலன் ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். 12-00 noon.

'வில்லேஜ் ஒர்க்ஸ் கிராண்ட்ஸ்-இன்-எய்டு'-க்கு ஒதுக்கப்பட்ட பணத்தைக் குடிதண்ணீருக்காகவும், ரோடு போடவும் செலவழிக்கிறார்கள். ஆரம்பப் பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டுவது பற்றிக் கவனிப்பதில்லை. புதிதாக சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையை வைத்து மாணவன் ஒருவனுக்குப் 15 ரூபாய் என்ற வீதத்தில் பள்ளிக்கூடக் கட்டிடங்களுக்காகப் பணம் ஒதுக்கப்படுகிறது. ஏற்கனவே படித்து வரக்கூடிய பழைய மாணவர்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அந்த மாணவர்கள் கூண்டுக்குள் அடைபட்டுக் கிடப்பவர்கள் போல் இருக்கிறார்கள்.

குடிதண்ணீர் கிணறு வெட்டுவதற்குதான் ஓரளவு செலவு செய்யப்படுகிறது. எல்லா கிராமங்களிலும் பொதுவாக குடிதண்ணீர் வசதி இருக்கிறது. மேலும் அப்படிப்பட்ட வேலைகளை பஞ்சாயத்து தலைவர் அவர்களே செய்கிறார்கள். அட்வான்ஸைத் தான் வாங்குகிறார்களே தவிர வேலை முடிந்த பாடில்லை. பாதியில் தான் நிற்கிறது. மேலும் புதிய ரோடு போட இலவசமாக நிலம் கிடைக்காத காரணத்தால் ரோடுகளும் அதிகமாகப் போடமுடியவில்லை. ஆகவே இவைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகையை பள்ளிக்கட்டிடங்களுக்காக divert செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மதிய உணவிற்காக அரசாங்கம் 6 பைசாவும், பஞ்சாயத்து 2 பைசாவும் கொடுக்கிறது. இன்னும் 2 பைசா வசூலிக்கும் நிலை தான் உள்ளது. இந்த 2 பைசாவையும் அரசாங்கமே கொடுத்து விட்டால் ஒன்றும் குடிமுழுகிவிடாது.

மேலும் தற்பொழுது பஞ்சாயத்து தலைவர்கள், மதிய உணவு கமிட்டிக்கு தலைவர்களாக இருக்கிறார்கள். மதிய உணவிற்காகக் கொடுக்கும் மானியத் தொகை அவர்கள் மூலமாகக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் சம்பந்தப்பட்ட பள்ளிகளின் பாஸ் புத்தகங்களில் வரவு வைக்கவேண்டும். இதில் ஊழல் ஏற்படாமல் தடுக்க பஞ்சாயத்து யூனியனே சம்பந்தப்பட்ட பள்ளிகளின் கணக்கில் வரவு வைக்கும் முறையை ஏற்படுத்தவேண்டும். இன்னொருவரிடம் கொடுத்து அவர் வரவு வைத்தாரா இல்லையா என்று சரி பார்த்துக் கொண்டிருக்கவேண்டாம்.

பெண்ணொருத்தி பேசில் பெரும்பூமிதான் அதிரும் . . . . (திருமதி சி. குழந்தையம்மாள் தம்மிடத்தில் எழுந்திருந்தார்கள்.) பார்த்தீர்களா இப்போதே பெரும் ஆபத்து வருகிறது. (சிரிப்பு) இனிமேல் நான் பேசிப் பயன் இல்லை. எனக்கு இப்போது வந்திருக்கிற ஆபத்தை அனுசரித்து போலீஸ் பாதுகாப்புக் கொடுத்தால்கூட நன்றாக இருக்கும்

**திருமதி டி. என். அனந்தநாயகி:** 'ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்' . . . .

**கனம் சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் பேசி முடிக்கட்டும். பிறகு கனம் அங்கத்தினர் திருமதி அனந்தநாயகி பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்பலாம். கனம் தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் மேலே பாட்டைச் சொல்லட்டும்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, இரண்டு பெண்களுக்கு மேல் போனால் . . . .

பெண் ஒருத்தி பேசில் பெரும் பூமிதான் அதிரும்,
பெண் இருவர் பேசில் விழும் வான்மீன்கள்,
பெண் மூவர் பேசில் அலை அலறும் பேதையே,
பெண் பலர் தன் பேசின் உலகு என் ஆமோபின்.

என்று அந்தப் பெரியவர் மிக அழகாகச் சொல்லியிருக்கிறார். அப்படி இருக்க இந்த மாமன்றத்தில் இருக்கிற 205 ஸ்தானங்களுக்கும் பெண் உறுப்பினர்களே வந்து விடுவார்களேயானால், சட்டசபைத் தலைவர்களாகிய நீங்கள் இந்த சட்டமன்றத்தை எவ்வாறு நடத்தப்போகிறீர்களோ என்பதே என் கவலையாக இருக்கிறது. (ஒரே சிரிப்பு).

**திருமதி சி. குழந்தையம்மாள்:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் மிஸ்டர் ஸ்பீக்கர்.

**கனம் சபாநாயகர்:** நானும் வந்ததிலிருந்து பார்க்கிறேன். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று பேச ஆரம்பித்து வேறு ஏதாவது தான் கனம் அங்கத்தினர்கள் சொல்லுகிறார்கள். யாராக இருந்தாலும் கனம் அங்கத்தினர் பேசி முடித்தவுடன் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். நேரமாகிவிட்டதால் கனம் அங்கத்தினர் தட்சிணாமூர்த்தி கவுண்டரை மேற்கொண்டு சொல்லவேண்டியதைச் சொல்லி சட்டென்று முடித்துக்கொள்ள அழைக்கிறேன்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நிலைமைகளை எல்லாம் அனுசரித்து நம்முடைய தமிழ்நாடு சர்க்கார் கிராமங்களில் மாதர் சங்கங்களை அமைக்காமல் இருக்கவேண்டுமென்றும், இப்போதுள்ள சங்கங்களை மூடுவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்றும் சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



SRIMATHI T. N. ANANDANAYAKI : On a point of Order, Sir, the references made by the hon. Member, Sri A. S. Dhakshinamoorthy Gounder, are highly derogatory to the women in this country and he may be requested not to use such remarks and enjoy the jokes at our expense.

MR. SPEAKER : I rule that this is not a point of order.

(Srimathi C. Kolandaiammal rose.)

MR. SPEAKER : Does the hon. Member, Srimathi C. Kolandaiammal want to raise a point of order ?

**திருமதி சி. கொளந்தையம்மாள்:** Yes, Sir, . கனம் சபாநாயகர் அவர்களே, பெண்களைப் பற்றிப் பேசும்போது இப்போது இருக்கிற மாதர் சங்கங்களை தடை செய்யவேண்டும் என்று சொல்வதோடு பெண் சமுதாயத்தையே குறைவுபடுத்தும் வகையில் கனம் அங்கத்தினர் பேசுகிறார். இது தாய்க் குலத்தையே இழிவு செய்வதாக ஆகாதா?

MR. SPEAKER : Does the hon. Lady Member, Srimathi C. Kolandaiammal states that it is a derogatory statement. Certainly it is not. There is no point of order. Let the hon. Lady Member resume her seat. The point raised by the other hon. Lady Member relates to the same point. There is nothing derogatory in it. On the other hand, it only enhances the prestige of the woman of the land.

* **திரு. ச. அங்கமுத்து நாயக்கர்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சமூதாய நல அபிவிருத்தித்துறை இலாகா மானியக் கோரிக்கையை ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த நெருக்கடியான காலத்திலும் நாம் வகுத்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களையும் நிறுத்தாமல் நிறைவேற்றுவதோடு, இந்தத் திட்டத்தின் கீழும் பல நல்ல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிற இந்த அரசாங்கத்தைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. நாம் முன்பு நிறைவேற்றியிருக்கிற இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களினாலும் நம்முடைய பொருளாதார நிலைமை ஓரளவு உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது என்று கருதுகிறேன். மகாத்மா காந்தியடிகள் நமக்குக் காட்டிய நெறிப்படியே நாம் நம்முடைய திட்டங்களை வகுத்துக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். அப்படியிருந்தும் எதிர்க்கட்சி மெம்பர் ஒருவர் சொன்னார். இந்தத் திட்டமானது காங்கிரஸ் கட்சிக்கு ஒரு பிரசாரத் திட்டமாகவே இருக்கிறது என்பதாக. ஆனால் ஜனங்கள் அப்படிக் கருதமாட்டார்கள். கிராமங்களில் போய்ப் பார்த்தால் தெரியும், மக்களுக்கு அத்யாவசியமான ஜீவனோபாயத் திட்டங்களை வகுத்து நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். மக்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்திருப்பதால் இன்றையதினம் தங்களுக்கு வாழ்க்கைக்கு இன்றியமையாத திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆரம்பக்

* **திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் :** கனம் சபாநாயகர் அவர்களே, திரு. மதியழகன் அவர்களும் கருணாநிதி அவர்களும் அடிக்கடி இந்த மன்றத்தில் பேசியிருக்கிறார்கள். இந்த நாட்டில் தரித்திர நாராயணன் சேவை சரியானபடி நடக்கவில்லை என்று பேசியிருக்கிறார்கள். தரித்திர நாராயணன் சேவையை நல்ல முறைகளில் பணிபுரிகிற கதர் இலாகா, சமுதாய இலாகா, ஹரிஜன நல இலாகா மானியக் கோரிக்கைகள்மீது வெட்டுப் பிரேரணைகளைக் கொண்டு வரலாமா என்பதைத்தான் நான் தாழ்மையோடு கேட்க விரும்புகிறேன். என்னைப் பொறுத்த அளவில் டெமாக்ரடிக் மெதட்ஸில் சரியான பயிற்சி இல்லை. அவற்றின்மீது வெட்டுப் பிரேரணை கொண்டுவரக்கூடாது, அதிகமான தொகை வேண்டுமென்றால், பிரேரணை கொண்டுவரலாம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதிகமான தொகை வேண்டுமென்றாலும் வெட்டுப் பிரேரணை மூலமாகத்தான் கேட்க முடியும்.

**திரு. எஸ். நஞ்சுண்ட ராவ் :** கதர்த் தொழில் 'அன்-எகனாமிக்' (uneconomic) என்ற காரணத்தினால் வெட்டுப் பிரேரணை கொண்டு வந்திருக்கிறார்கள். கதர் இலாகா என்றால், கதர் நூற்கும் தொழில் மட்டுமல்லாது மற்றப் பல கைத்தொழில்களும் இருக்கின்றன. அதிலே தச்சுத் தொழில், செக்கு ஆட்டும் தொழில், சோப்பு செய்யும் தொழில் போன்ற பல கைத்தொழில்கள் இணைந்து கொண்டிருக்கின்றன. இந்த இலாகா 'அன்-எகனாமிக்' என்று சொன்னால் அதன் அர்த்தத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. கதர் பற்றிக் காந்தியடிகள் சொன்னது எல்லோருக்கும் ஞாபகம் இருக்கும் "Swaraj hangs on the hand spun thread of yarn" இன்று காந்தியடிகள் இருந்திருந்தால், கதர்த் தொழில் பற்றிஎன்ன சொல்லி இருப்பார் என்றால்—

"Community welfare or rural welfare hangs on the hand spun thread of yarn." என்றுதான் சொல்லியிருப்பார். இன்று லட்சக் கணக்கான ஜனங்களுக்குத் தொழில் இல்லை என்ற நிலைமை இருக்கும்போது, அந்தக் கதர்த் தொழில் மட்டும் இல்லையென்றால் எத்தனை கோடிக்கணக்கான ஜனங்கள் இந்த நாட்டிலே தொழில் இல்லாமல் கஷ்டப்படுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். தரித்திர நாராயணர்களுக்கு உண்மையாகவே சேவை செய்யக்கூடியது கதர்த் தொழில்தான்.

அடுத்து, சமுதாய நலத் திட்டங்களைப் பற்றியும் ஓரிரண்டு கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். காலையிலிருந்து பேசிய பல அங்கத்தினர்கள் பல நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது இருக்கக்கூடிய 'எமர்ஜன்சி' நிலைமையிலே முக்கியமான திட்டத்தைப் பற்றி யாரும் சொல்லாமல் விட்டுவிட்டார்கள். (மணி அடிக்கப்பட்டது) ஒரே ஒரு கருத்தை



மட்டும் சொல்லி நான் முடித்துக் கொள்கிறேன். பத்திரிகைகளிலே 'ஆல்சோ ஸ்போக்' (also spoke) என்று அச்சடித்து வருகிற மாதிரி இந்த மன்றத்திலும் எனக்கு இரண்டு நிமிஷம் பேசுவதற்குக் கொடுப்பது போதாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். சமுதாய நலத் திட்டத்திலே இன்று முக்கியமான திட்டம் என்ன என்று சொன்னால், தொண்டர் படைத் திட்டமாகும். அது புரட்சிகரமாகக் கொண்டு வரப்பட்ட திட்டம். சமுதாய நலத் திட்டத்திலே 15 வருஷ காலமாகப் பல காரியங்கள் நடந்து வந்தன. இந்தத் தொண்டர்படைத் திட்டமானது உண்மையிலேயே—

"Village volunteer Force is the jewel of the Community Development Schemes." "சமுதாய நலத் திட்டத்திற்கு கிராமத் தொண்டர்படை திட்டம் ஓர் சிகரமாக இருக்கிறது." கிராமத் தொண்டர் படைத் திட்டத்தை நல்ல முறையில் அமலுக்குக் கொண்டுவரவேண்டும். இந்த நாட்டில் எல்லாருக்கும் ஓட்டுரிமை கொடுத்தோம். கிராமத் தொண்டர்களுக்கு 'டியூட்டிஸ்' இருக்க வேண்டும். கிராமங்கள் முன்னேற வேண்டுமென்ற வகையில் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். இந்தத் திட்டத்தைப் பலப்படுத்த வேண்டும். மணி அடிக்கப்பட்டது).

* **திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்று இம்மாமன்றத்தின் முன்பு கொண்டு வரப்பட்டுள்ள மானியக் கோரிக்கைகளை முழு மனத்துடன் வரவேற்கிறேன். ஆனால் ஒரு காரியத்தை நான் பலமாக எதிர்க்க வேண்டிய நிலையில் இருக்கிறேன். பஞ்சாயத்து யூனியன்கள் சார்பாக அமைக்கப்படுகிற மாதர் நல முன்னேற்ற சங்கங்கள் தேவையா என்பதுதான் என்னுடைய கேள்வி. அது கூடாது என்றே நான் நினைக்கிறேன். கிராமப் பகுதிகளில் பெண்கள் சங்கம்கூட ஆரம்பித்து விட்டார்கள் என்றால், சமையல் செய்வதற்கோ, வீட்டுக் காரியங்களைப் பார்க்கவோ, குடும்பத்தை வளர்ப்பதற்கோ யார் இருக்கிறார்கள் என்றுதான் எனக்குத் தெரியாமல் இருக்கிறது.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் அவர்கள் சமையல் செய்யக் கற்றுக் கொள்ளலாம். அது ஒன்றும் கஷ்டம் இல்லை. (சிரிப்பு).

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் சகோதரி குழந்தையம்மாள் அவர்கள் சங்கம் அமைப்பதோடு நிற்கவில்லை. அவர்கள் சொன்னார்கள்—'இந்தத் தமிழ் நாட்டில் பரவலாகப் பெண்கள் சங்கங்களை அமைத்து வருகின்ற தேர்தலிலே இந்த மன்றத்திற்குள்ளே 206 பிரதிநிதிகளும் மாதர்களாகவே நிரப்பப் பெறும்' என்று சொன்னார்கள். இது மகா பயங்கரமானதாக இருக்கிறது.

ஒரு பாடல் உண்டு.

கல்வித் திட்டத்தை எடுத்துக்கொண்டால் அது நல்ல விதத்தில் செயல்பட்டு வருகிறது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆரம்பக் கல்வியைப் பொறுத்த வரையில் 50 மாணவர்களுக்குக் குறையாமல் ஒரு ஆசிரியருக்கு இருக்கவேண்டுமென்று சொன்னால் கொஞ்சம் கல்வித்தரம் நல்லமுறையில் இருக்க வேண்டும். ஆகவேதான் 30 பேர், அல்லது 40 பேர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறையில் இருப்பதற்கு ஒரு வசதியைச் செய்து தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மையைப் பொறுத்த வரையில் விவசாயத்திற்கு வேண்டிய கருவிகளை பஞ்சாயத்து யூனியன்களே வாங்கிக் கொடுக்க வழி செய்யவேண்டும். இப்போது கூட்டுறவு சங்கங்கள் மூலமும், விவசாய இலாகா மூலமும் செய்து வருகிறார்கள் என்றாலும் பஞ்சாயத்து யூனியன் மூலம் செய்வதற்கு வழி செய்தால் நன்றாக நடைபெறும். மேலும் பஞ்சாயத்து யூனியன்களிடம் சிறு நீர்ப்பாசன திட்டங்களையும், ரோடு பராமரிப்புத் திட்டத்தையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இருக்கக்கூடிய பண வசதி மிகக் குறைவு. ஆகவே கிராமங்களில் பல ரோடுகள் செப்பனிடப்படாமல் இருக்கின்றன. ஆகவே பணத்தை அதிகமாக ஒதுக்கித் தந்து அந்தத் திட்டங்கள் எல்லாம் நல்லமுறையில் செயல்பட வழி செய்யவேண்டும்.

பஸ் போகும் ரூட்டுகள் சில பஞ்சாயத்துக்களிடம் இருக்கின்றன, அதை ஹைவேஸ் இலாகாவினரே தங்கள் பொறுப்பில் மராமத்து செய்ய வழி ஏற்படுத்த வேண்டும். இன்றைக்கு பஞ்சாயத்து போர்டுகளில் ஒரு சில குறைகள் இருந்து வருகின்றன என்றால் அதற்குக் காரணம் சில பல காரியங்களைச் செய்ய அவர்கள் ஹைவேஸ் இலாகாவிடம் கேட்கவேண்டியிருக்கிறது. அவர்கள் சீக்கிரமாக எந்த பதிலையும் கொடுப்பதில்லை. நிறைவேற்றியும் கொடுப்பதில்லை. இதனால் வேலை நிறைவேறாமல் நிற்கவேண்டியிருக்கிறது.

மேலும் பஞ்சாயத்து யூனியன்களிடமே போரிங் மெஷின் வாங்கிக் கொடுத்து வைத்தால் விவசாயத்திற்கும், மற்ற குடி தண்ணீர் திட்டத்திற்கும் வழி செய்வதற்குப் பயன்படும். இன்றைக்குக் கிணறு ஆழமாக வெட்ட நேரிட்டால்கூடத் தனிப்பட்டவர்களிடமிருந்து வாங்கிக்கொள்ளவேண்டிய நிலைமை இருக்கிறது. யூனியனுக்கு ஒரு போரிங் மெஷினாவது வாங்கிக்கொடுக்க வேண்டும். இதனால் விவசாயத்தைப் பெருக்க முடியும். இதனால் நஷ்டம் ஏற்படாதிருக்க வெளியில் கொடுக்கும்போது வாடகை மூலமாக அந்தப் பணத்தை வாங்கிவிடலாம் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. வீ. ராமநாதன்:** மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிற மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.



எதிர்க்கட்சி மெம்பர் ஒருவர் கூறினார், இத்திட்டத்திற்காக ஒதுக்கப்படுகிற பணம் அத்தனையும் வீண் என்று. ஆனால் இன்றைக்கு கிராம மக்களிடையே, அவர்களுடைய வாழ்விலே ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதற்கு அடிப்படைக் காரணமே பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் இந்த நாட்டில் அமைக்கப்பட்டதுதான்.

இன்று எல்லாச் சிற்றூர்களிலும் ஆரம்பப் பள்ளிகள் இருக்கிற சிறப்பினைப் பார்க்கிறோம். ஆரம்பப் பள்ளிகள் மட்டுமல்ல. பள்ளிகளுக்கான சிறப்பான கட்டிடங்கள் இருப்பதையும் பார்க்கிறோம். பழுது கிடந்த பாதைகள் எல்லாம் இன்று சீரான ரோடுகளாக அமைக்கப்பட்டிருக்கின்றன. பல ஆறுகளில் எல்லாம் பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. முன்பு கிராமங்களில் கேணிகளில் இறங்கித்தான் தண்ணீர் மொண்டு வருவது வழக்கம். இப்போது ஆங்காங்கு பாதுகாப்பு குடிதண்ணீர் தேக்கங்கள் அமைக்கப்பட்டு குழாய்கள் மூலம் சுகாதாரமான முறையில் தண்ணீர் வழங்கப்படுகிறது. சிறுசிறு ஊர்களில் கிணறுகள் இருக்கும் சிறப்பினைக் காண்கிறோம். இவைகள் எல்லாம் பஞ்சாயத்து யூனியன்கள் நாட்டில் ஏற்பட்ட பின்னர்தான் பார்க்கிறோம். அபிவிருத்தித் திட்டங்கள் நடைபெறும்போது கட்டிடங்களுக்கு சிமெண்ட் பற்றாக்குறை ஏற்படுகிறது. தற்போது தாசில்தார்தான் சிமெண்ட் பர்மிட் கொடுத்து வருகிறார்கள். பஞ்சாயத்து யூனியன் கமிஷனருக்கு, எந்தெந்த இடங்களில் எந்தெந்த வேலைகள் நடக்கின்றன, எப்படி எப்படி பர்மிட் கொடுக்கவேண்டுமென்று என்பது அவருக்கு நன்கு தெரியும். ஆதலால் இப்போது தாசில்தார் கொடுக்கும் முறையை மாற்றி கமிஷனர் மூலம் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று என் அபிப்பிராயத்தை தெரிவித்துக் கொள்கிறேன். பின்னர், முதியோருக்கு உதவித் தொகை கொடுப்பது இப்போது தாசில்தாரால் கொடுக்கப்பட்டு வருகிறது. யூனியன் லெவலில் ஒரு டெப்டி தாசில்தாரை நியமித்து கமிஷனர் மூலம் முதியோருக்கு உதவித்தொகை வழங்குவது நலமாகயிருக்கும். எல்லாப் பஞ்சாயத்து தலைவர்களும் அங்கு வருவதால் இந்தந்த ஊர்களில் யார் யார் ஏழைகளாக இருக்கிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும், அதை அவர்கள் சொல்வார்கள். ஆகவே ஏழைகள் உதவித்தொகை பெறுவதற்கு அது வசதியாக இருக்கும் என்றும் தெரிவித்து கொள்கிறேன். அடுத்தபடியாக யூனியனில் ஈ. ஓ. எட்யூக்கேஷன் என்ற ஒரு ஆபீசர் இருக்கிறார். தாலுகா லெவலில் ஒரு டெப்டி இன்ஸ்பெக்டர் இருக்கிறார். ஆக ஒரே வேலையை இரண்டுபேர்கள் கவனித்து வருகிறார்கள். ஆகவே ஈ.ஓ. Education -ஐ அல்லது டெப்டி இன்ஸ்பெக்டரை எடுத்து விடவேண்டும். யூனியன்கள் மூலம் பல ரோடுகள் நிர்வகிக்கப்படுகின்றன. மாவட்ட மன்றங்கள் முன்பு நிர்வகித்து வந்ததை இப்போது பஞ்சாயத்து யூனியன்கள் நிர்வகிக்கின்றன. அவற்றை ஹைவேஸ்-க்கு மாற்றினால் பஞ்சாயத்து யூனியன் இதர அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட ஏதுவாக இருக்கும். பஞ்சாயத்து

[திரு. வி. எஸ். எஸ். மணி] [16th March 1963

மில்லை ஒரு பக்கத்தில் ஆதரித்து, கதரை ஒரு பக்கத்தில் ஆதரிப்பது எந்த அளவிற்கு ஒத்து வரும் என்று யோசித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடி
12-30 a.m. யாக, கதர் குடிசைத் தொழில் என்று சொல்லுவார்கள். குடிசைத் தொழில் வேண்டுமென்றால் இந்த ராட்டை தான் கிடைத்ததா? ஜப்பானில் செய்யக் கூடிய முறையில் ஒவ்வொரு வீட்டிலேயும் ஒரு ஸ்பிண்டில், 2 ஸ்பிண்டில் என்று வைத்து பவர் கொடுத்து மின்சாரத்தைக் கொண்டு நூல் நூற்றால் என்ன? அதுவும் குடிசைத் தொழில் தானே? அந்த பழங்கால முறையை ஏன் கையாள வேண்டும்? அத்தகைய "ப்ரிமிட்டிவ் மெஷினை" (Primitive machine) ஏன் வைத்துக்கொள்ள வேண்டும்? அறிவு வளர்ச்சி தடைபடக்கூடிய முறையில் ஏன் இருக்க வேண்டும்? இதற்காகச் செலவழிக்கும் பணத்தைக் கொண்டு பல மில்களைக் கட்டினால் பல லட்சக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

இந்த பஞ்சாயத்து யூனியன் கூட்டத்திலே எம்.எல்.ஏ.-க்கள் கலந்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கலந்துகொள்ள வேண்டாம் என்று சொல்லும்போது கலந்துகொள்ளக் கூடாது என்று எம்.எல்.ஏ.-க்கள் நினைக்கவில்லை. அவர்கள் அப்படிக் கலந்து கொண்டால் அவர்களுக்கு உரித்தான மரியாதை கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் அவர்களுக்கு அறிவித்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர் அவர்கள் ......

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் அதைப் பற்றிப் பேச வேண்டாம், வேறு பேசவேண்டியதைப் பேசலாம்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** அதைப் பற்றி இரண்டொரு வார்த்தை பேச விரும்புகிறேன். பெண்களுக்கு எந்த விதச் சலுகையும் செய்யக்கூடாது . . . (கனம் சபாநாயகர்: அப்படி ஒன்றும் கொடுக்கக் கூடாது என்று அவர் சொல்லவில்லை.) புதுமைக் கவிஞன் பாரதி "வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் மாய்ந்து விட்டார்" என்று பாடியுள்ளார். (திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் : இதோ அந்த விந்தை மனிதன்.) அப்படிப்பட்ட விந்தை மனிதர் (சிரிப்பு) இங்கே வந்து அமர்ந்து, பெண்களைப் பார்த்து பயப் படக் காரணம் என்ன என்றால், ஒரு வேளை பல ஆண்டுகளாக



16th March 1963] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

வீட்டில் பயப்படுத்தப்பட்டதன் காரணமாக, எங்களைப் பார்த்து பயமாக இருக்கிறது என்று கூறுகிறார் என்று கருதுகிறேன். அதோடு பெண்கள் சக்தி பெறவேண்டுமென்று, விபூதி பூசி, 10 பெண்கள் வைத்துக்கொள்ளக்கூடிய, அதிலும் எங்கள் சுதந்தி ரத்தை பாதிக்கும் அளவில், எங்களுக்குக் கிடைக்காமல் செய்யும் வகையில், இவ்வளவு பெரிய பொட்டு வைத்துக்கொண்டு, இங்கே வந்து அமர்ந்துகொண்டு, பெண்களைப் பற்றி இப்படிப் பேசினார் என்றால், மாணிக்க வாசகப் பெருமான்—"தாயிற் சிறந்த தயாவான தத்துவனே" என்று பாடியிருக்கிறாரே யொழிய, தகப் பனை விடச் சிறந்தவர் என்று பாடவில்லை. அதுவும் ......

**Mr. SPEAKER :** He is the champion of women here.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** அதே போன்றுதான் புதுமைக் கவிஞன் பாரதிகூட "மாதராய்ப் பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" என்று பாடியிருக்கிறார்....

**Mr. SPEAKER :** Now the hon. Member can speak about Community Development.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** ஆகையால் இப்பேர்ப்பட்ட யாராவது, விந்தை மனிதர்கள் ஏதாவது சொல்லுகிறார்கள் என்ற காரணத்திற்காக மாதர் சங்கங்களை அதிகமாக அமைப்பதற்கு ஏற்பாடு செய்யாமல் விட்டு விடக்கூடாது என்பதை கனம் அமைச்சர் அவர்களையும் மாதர் முன்னேற்றத்தில் பங்குகொண்டி ருக்கிற அடிஷனல் டெவலப்மெண்ட் கமிஷனர் அவர்களையும் பெண் கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். தேர்தல் சமயத்தில் மாத்திரம் ....

**கனம் சபாநாயகர் :** மூன்று நிமிஷம் ஆகிவிட்டது. கனம் அங்கத்தினர் ஸப்ஜெக்ட்டுக்கு வரவேண்டும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** குறிப்பாக, ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். தேர்தல் சமயத்தில் மாத்திரம், பெண்கள் பேசினால்தான் அதிகக் கூட்டம் வருகிறது என்று பெண்களை அந்த சமயத்தில் பயன்படுத்திக் கொண்டு இப்போது பெண்கள் நலனில் அக்கரை காட்டாமல் இப்படிப் பேசினால், அது யாராக இருந்தாலும், வருகிற தேர்தலில் ஒரு பெண்ணினுடைய ஓட்டுக் கூடக் கிடைக்காமல் செய்து இங்கே வராமலிருக்கச் செய்து விடுவோம் என்று நான் சவால் விட்டுச் சொல்லிக் கொள்கிறேன் ....

**Mr. SPEAKER :** So he is justified ......

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** இப்போது நம் பஞ்சா யத்து யூனியன்களில் சரியாகக்கூட வேலை நடைபெறவில்லை என்று அங்கத்தினர்கள் கூறினார்கள். அங்கேயும் சில கட்சிகளைப் புகுத்தி வேலை செய்ய விடாது தடுப்பதால் ஒரு சில யூனியன்களில் வேலை

யூனியனுக்கு இருதயம்போல் இருப்பது என்ஜினியரிங் டிப்பார்ட்மென்ட்தான் பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு என்ஜினியர்தான் இருக்கிறார். இரண்டு என்ஜினியர்களாவது இருக்க வேண்டும். இல்லாவிட்டால் ரோடுகளை ஹைவேஸிடம் ஒப்படைக்க வேண்டும். அப்படிச் செய்தால் பஞ்சாயத்து வேலைகள் சிறப்பாக நடைபெறும். அடுத்தபடியாக ஜில்லா அபிவிருத்தி மன்றக் கூட்டங்களில் எல்லாம் எம்.எல்.ஏ.-க்கள், பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களும் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். அதற்கு கமிஷனர்களும் வருகிறார்கள். ஆனால் தாசில்தார்கள் அழைக்கப்படுவதில்லை. அப்படி தாசில்தார் வருகிற ஒரு முறையை ஏற்படுத்தினால் தாசில்தாரிடம் கேட்கவேண்டியதைக் கேட்கமுடியும். பின்னர் மாதர் சங்கங்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. "ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமமாக வாழவேண்டுமென்று" சொன்ன அமரகவி பாரதியார் கூறியதை மறுக்காது பெண்களுக்கு வாக்குரிமை, பேச்சுரிமை, தேர்தலில் நிற்பதற்குள்ள உரிமை, பாராளுகிற உரிமை போன்ற எல்லா உரிமைகளையும் அளித்து விட்டு மாதர் சங்கங்களை தடை செய்யவேண்டுமென்று கூறுவது சரியல்ல. பெண்களுக்கும் ஆண்களைப்போல் சரியான சமத்துவம் கொடுத்து அவர்களும் இந்த நாட்டை ஆள வாய்ப்பு அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பின்னர் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில், சில பள்ளிகளில் பிள்ளைகள் வணக்கம் அண்ணா என்று கூறுகிறார்கள். வணக்கம் ஐயா என்று கூறினால்கூட பரவாயில்லை, பிரிவினை மனப்பான்மை கொண்ட சில ஆசிரியர்கள் அப்படிச் சொல்ல அவர்களை தூண்டி விடுகிறார்கள். அதுவும் அண்ணா என்பதை அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார்கள். அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. வி. எஸ். எஸ். மணி:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, காதி மான்யக் கோரிக்கைமீது வெட்டுப் பிரேரணை தந்திருக்கும் நான் என் கருத்துக்களை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

(The hon. Member, Sri A. S. Dhakshinamoorthy Gounder was seen leaving the Chamber.)

**MR. SPEAKER:** The hon. Member, Srimathi A. S. Ponnammal is going to speak. So, the hon. Member, Sri A. S. Dhakshinamoorthy Gounder should be in his seat.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** கதருக்காக, கதர் திட்டத்திற்காக ஆண்டுதோறும் பல லட்சம் ரூபாய் செலவு செய்து வருகிற இந்நேரத்தில், அப்படி ஒதுக்கப்படுகிற பணம் கொள்கை அடிப்படையில் நியாயம் என்று வாதிக்கலாம். ஆனால் பொருளாதார அடிப்படையில் அது நேர்மையற்றது, பயன் அற்றது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கதர் திட்டத்திற்கு ஒரு தனிச் சிறப்பு ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் அதற்



கென்று ஒரு தனி இலாகா வைத்து, அதற்காக லட்சக் கணக்கில் பணம் விரயமாக்குவது, பல அதிகாரிகளை நியமித்திருப்பது போன்ற பல காரியங்களைச் செய்வது நியாயம் அல்ல என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நெருக்கடி காலத்தில் கதர் திட்டத்திற்காகச் செலவிடப்படும் பணத்தை சிக்கனத்தை முன்னிட்டாவது அந்த இலாகா வேலைகளை டயரக்டர் ஆப் ஹான்ட்லூம்களிடம் (Director of Handlooms) ஒப்படைத்து அந்த இலாகாச் செலவைக் குறைக்க முடியும். அன்று காந்தியார் அன்னிய துணியை பகிஷ்கரிக்கவேண்டுமென்று அவரவர்களே நூல் நூற்று நெய்து உடை அணிந்து கொள்ளவேண்டுமென்று, அன்னிய நாட்டை எதிர்பார்க்காது நாமே நம் உடைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டுமென்ற அடிப்படையில் கொண்டுவரப்பட்ட தத்துவத்தை இன்றும் விடாப்பிடியாக கடைப்பிடிப்பது நியாயமா என்று சிந்தித்து பார்க்கவேண்டும். காந்தியார் காலத்தில்கூட கவி ரவீந்தரநாத் தாகூர் அவர்கள்கூட கதர் திட்டத்தைப் பற்றி குறை கூறியிருக்கிறார். மனிதனின் அறிவு வளர்ச்சியைத் தடைப்படுத்தும் தத்துவம் இந்தக் கதர் திட்டம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சர்க்காவை ஒரு "பிரிமிட்டீவ் மெஷின்" (Primitive machine) என்று கூறியிருக்கிறார்கள். முன்னாள் அமைச்சர் ராமனாதன் அவர்கள்கூட கதர் திட்டத்தை குறை கூறியிருக்கிறார்கள். இத் திட்டத்தை நாம் மேலும் மேலும் செயல்படுத்தினால் அது நம் நாட்டின் வளர்ச்சியைத் தடைப்படுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். முன்காலத்தில் நம் தேவையை நாமே பூர்த்தி செய்து கொள்ளவேண்டுமென்று அடிப்படையில் அப்படிச் செய்திருக்கலாம். ஏனெனில் அப்போது நாம் துணிக்கு லங்காஷயரை எதிர்பார்த்து நின்றோம். இப்போது நம் நாட்டில் நூற்பாலைகள் ஏற்பட்டு நம் நாட்டில் உற்பத்தியாகும் துணியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிலையில் இருக்கிறோம். இந்நிலையில் அப்போது கடைப்பிடிக்கத் தொடங்கிய தத்துவத்தை இப்போது ஏன் கைக்கொள்ள வேண்டும். இத்திட்டம் வேலையில்லாத மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கிறது என்று சொல்லலாம். ஏழைகளை கைராட்டை சுற்றி நூல் நூற்க வேலை வாங்கி உற்பத்திச் செலவை அதிகமாக்கி அக்காரியத்தை செய்வதைவிட வேலை வாங்காமலேயே அவர்களுக்கு இந்தத் தொகையை கொடுத்துவிட்டு அவர்கள் வேறு வேலை செய்ய வகை செய்யலாம். இப்போது நாலு முழம் கைத்தறி வேட்டி 2-½ ரூபாய்க்கு கிடைக்கிறது. கதர் வேட்டிக்கு 5 ரூபாய் கொடுத்து வாங்குகிறதில்லை. இந்த அதிகப்படியான 2-½ ரூபாயை கதர் வாங்க வசதி உள்ளவர்களிடம் வசூல் செய்து அதை இத்தொழிலில் இன்று ஈடுபட்டிருக்கிற ஏழைகளுக்குக் கொடுத்தால் அவர்கள் வேறுதொழில் செய்து பிழைக்க முடியும். கதர் அதிக நாள் உடைத் தாங்காது என்றும் சொல்கிறார்கள். கதருக்குக் காட்டப்படும் ஆக்கமும் ஊக்கமும் கைத்தறிக்கும் கிடைத்தால் பல கோடி மக்களுக்கு அது உதவியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

நடைபெருமல் இருக்கலாம். குறிப்பாக, மதுரை ஜில்லாவில், நிலக்கோட்டை யூனியனில், எனது சொந்த யூனியனில் நல்ல முறையில் வேலை செய்து மாகாணத்திலேயே முதற் பரிசைப் பெற்றிருக்கிறது என்று சொன்னுல் அங்கே இருக்கிற அங்கத்தினர்களும், அங்கே இருக்கிற சேர்மனும், மற்றவர்களும் திறமையாக வேலை செய்த காரணத்திஞல்தான் அத்தகைய பரிசை வாங்க முடிந்தது.

சேர்மனுக்கு எந்த வித அதிகாரமும் இல்லை என்று கூறப்பட்டது. அந்த யூனியனில் அப்பாயிண்ட்மெண்ட் கமிட்டித் தலைவர் அவர்தான். ப்ளாக்கில் இருக்கிற ஜீப்பை எடுத்துக் கொண்டு இன்னின்ன கிராமங்களுக்குப் போகவேண்டுமென்று முன்னதாகவே கமிஷனர் அவர்கள் சேர்மனுக்கு எழுதி அனுப்பி அவர்களுடைய அனுமதி பெற்றுத்தான் எடுத்துச் செல்லவேண்டும் என்றெல்லாம் விதிகளை நிர்ணயம் செய்திருக்கிறேம். பஞ்சாயத்து யூனியனிலுள்ள அத்தனை காரியங்களிலும், கவுன்ஸிலர்ஸ் என்ன தீர்மானம் நிறைவேற்றுகிருர்களோ அதைத்தான் கமிஷனர் நடைமுறையில் அமல்படுத்தவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறேம். இந்த நிலையில் தலைவருக்கு ஒரு அதிகாரமும் இல்லை என்ருல் அது திறமையற்ற தலைவர்கள் சொல்லிக்கொள்ளும் வாதம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு பள்ளிப் புத்தகங்களைப் பற்றிப் பல அங்கத்தினர்கள் இங்கே சொல்லியிருக்கிருர்கள். ஜில்லாவாரியாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிருர்கள். நானும் அதையே செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக இங்கே இந்த கிராமக் கைத்தொழில்கள் சம்பந்தப்பட்ட மட்டில் நிறையப் பணங்களை ஒதுக்கியிருக்கிருர்கள். கதர்த்தொழிலில் அம்பர் சர்க்காத் திட்டத்தை மீண்டும் அமலுக்குக் கொண்டு வந்தால் பல பெண்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டு, அவர்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ள உதவியாக இருக்கும்.

டவுன் பஞ்சாயத்தில் இருக்கக்கூடிய தலைவர்களும், அங்கத்தினர்களும் கூறுகிருர்கள், கிராமப் பஞ்சாயத்துக்கு மாட்சிங் கிராண்ட் நிறையக் கிடைக்கிறது, பல காரியங்களுக்குப் பணம் கிடைக்கிறது, டவுன் பஞ்சாயத்து மாற்ருந்தாய் போல விட்டுவிட்டிருக்கிறது என்று கூறிக்கொள்கிருர்கள். ஆகையால், அதையும் பரிசீலனை செய்து டவுன் பஞ்சாயத்துக்கும் மாட்சிங் கிராண்ட், சாக்கடைத் திட்ட மான்யப் பணம், குடி தண்ணீர் திட்ட மான்யப் பணம், ஆகியவைகளையெல்லாம் கொடுக்க அமைச்சரவை வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டவுன் பஞ்சாயத்துக்கு எக்ஸிக்யூட்டிவ் ஆஃபீசர் போடுகிறேம். அவர்கள் டெப்யூட்டி தாசில்தார் ரேங்கில், அந்த கிரேடில் போட்டால் நிர்வாகத்தில் வரக்கூடிய தபால்களை நல்ல



முறையில் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கவும் மெம்பர்களை அனுசரித்துப் போகவும் நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று அதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ரோடு விஷயத்திலே, பல அங்கத்தினர்கள் கூறினுர்கள். இப்போது ஏ, பி, ஸி, டி என்று பிரித்திருக்கிருர்கள். இருந்தாலும்கூட 250 ரூபாய் அல்லது 100 ரூபாய் வரும்படி வரக்கூடிய சிறு சிறு பஞ்சாயத்துக்கள் மிகவும் பிற்போக்காக இருக்கிறது. அரசாங்கம் 80 சதவீதம் என்றும் பஞ்சாயத்து 20 சதவீதம் என்றும் வைத்திருந்தாலும், அந்த 20 சதவீதத்தையே கொடுத்து ரோடு போட முடியாத சூழ்நிலை இருக்கிறது. அதையும் மாற்றி, முடியாத பஞ்சாயத்தாக இருந்தால், வரும்படி இல்லாத பஞ்சாயத்தாக இருந்தால், மிகவும் பிற்போக்கான பஞ்சாயத்தாக இருந்தால், அந்த 20 சதவீதத்தை யூனியனிலிருந்து கொடுக்கவேண்டும் என்று உத்திரவு பிறப்பித்தால் சாலச் சிறந்தது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்போது பாசன வசதிகளுக்குப் பணம் கொடுப்பதோடு மாத்திரமல்லாமல் இந்தப் பணியை பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைத்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. தாலுகாவுக்கு ஒரு ஓவர்சியர் என்ற அடிப்படையில் போடுவதற்கு ஏற்பாடு செய்தால் இன்னும் சற்று நன்ருக இருக்கும்.

அதே போன்று மேன் புவர் திரட்டுவதற்கு இப்போது திட்டம் போட்டிருக்கிறேம். அதை அதிகமாக விஸ்தரித்தால் இன்னும் சற்று சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

இன்றைக்கு, இங்கே பேசும்போது ஸி.எஸ்.ஆர். தேவையில்லை என்று கூறினுர்கள். ஒவ்வொரு யூனியனுக்கும் ஸி.எஸ்.ஆர். அவசியம் தேவை. இப்படி ஸி.எஸ்.ஆர். இருப்பதன் காரணத்தினுல் கூட்டுறவு முறையில் பல தொழில்கள் ஆரம்பிக்க முடிகின்றது. அதனுல்தான் கூட்டுறவு முறையில் வீடுகள் கட்ட முடிகின்றது. ஹரிஜனங்களுக்கு பால் வழங்கும் சொசைட்டி ஏற்படுத்துகிறேம். அதற்குக்கூட ஸி.எஸ்.ஆர். இருந்தால்தான் நல்ல முறையில் கண்காணிக்க முடிகிறது. ஆகையால் ஸி.எஸ்.ஆர். அவசியம் இருக்கவேண்டுமென்று நான் வற்புறுத்திக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடுகூட, நான் கன்ஸல்ட்டேட்டிவ் கமிட்டி கூட்டத்தில் கூடச் சொன்னேன், ஹரிஜனங்களுக்குக் கொடுப்பதைப் போன்று மாதர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கேட்கிருர்கள், அவர்களுக்கும் பால் சொசைட்டி வைக்கவேண்டும் என்று. அப்படி அவர்களுக்கு வைத்துக்கொடுக்கும்போது ஹரிஜன மக்களுக்குக் கொடுக்கக் கூடிய அளவில் பாதிப் பணத்தை, 250 ரூபாயில் பாதியை, டிபென்ஸ் வெல்ஃபேர் டிபார்ட்மெண்டிலிருந்து கொடுத்துவிட்டு பாக்கிப் பாதியை அரசாங்கத்திலிருந்து கடனுகக் கொடுக்க

வேண்டும். அப்படி வருவாய் வரக்கூடிய வகையில் செய்துகொடுத்தால், கிராம மாதர் சங்கங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

SRI A. S. DHAKSHINAMOORTHY GOUNDER—Rose.

MR. SPEAKER: Let not the hon. Member go near the danger zone.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய கனம் அங்கத்தினர் சகோதரி பொன்னம்மாள் பெண்களைப் பற்றி நான் ஏதோ சொல்லியதாகச் சொன்னார்கள். உண்மையிலேயே என்னுடைய வழிபடும் தெய்வம் பெண் உருக்கொண்ட அபிராமியாக அமைந்திருக்கிற பராசக்தி என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகையினால், பெண்மைக்கு எந்த விதத்திலும் மாசுபடுத்துவதற்கு நான் அருகன் அல்ல. அதுமாத்திரமல்ல. பெண்களுக்கு இயற்கையாக உள்ள தாய்மைப் பணியைப்பற்றி கூறினார்கள் மணிவாசகப் பெருமான்.

**கனம் சபாநாயகர்:** அவ்வளவு தானே? கனம் அங்கத்தினர் முடித்துவிடட்டும். மேலும் பாடத் தொடங்கவேண்டாம்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** முடித்துவிடுகிறேன். அவ்வளவுதான். மணிவாசகப் பெருமான் "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து . . ." என்று கூறியிருக்கிறார். தாய்ப் பணியாகிய இயற்கை கருவூலத்திற்கு மாசு வந்துவிடுமோ என்று அஞ்சித்தான் அதையெல்லாம் சொன்னேன்.

MR. SPEAKER: I hope the hon. Lady members will appreciate the humour of the hon. Member and wll not take it very seriously or personally.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்:** மதிப்பிற்குரிய அவைத்தலைவர் அவர்களே, சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தின் மீதும், கதர் திட்டத்தின் மீதும் கோரப்பட்டிருக்கிற மான்யத்தின் மீது கொண்டுவரப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஒட்டி, சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தினுடைய அடிப்படையில் உரிமைகளை ஆங்காங்கு பகிர்ந்து கொடுக்கவும் அதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகளை மிக நல்ல முறையில் ஏற்படுத்தவேண்டுமென்ற அடிப்படை நோக்கத்தோடும் ஊராட்சிமன்ற ஒன்றிப்புகள் ஆங்காங்கு நிறுவப்பட்டிருக்கின்றன என்பதை, நாம் அனைவரும் நன்கு உணர்கிறோம். அந்த முறையில் ஊராட்சிமன்ற ஒன்றிப்புகள் அமைக்கப்பட்டிருக்கிற தன்மையையும், அவைகளிடத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற பணிகளையும் இந்த மன்றத்தில் இருக்கிற அத்துணை உறுப்பினர்களும் நன்கு வரவேற்றிருக்கிறார்கள். அதிகாரங்களும், உரிமைகளும் ஊராட்சி மன்றங்களின் இடத்தில் ஒப்படைக்கப்படவும், அந்த ஊராட்சி மன்றங்கள் கல்வியைப் பொறுத்தும்,



மருத்துவத்தைப் பொறுத்தும், பொது நலத்தைப் பொறுத்தும், விவசாயம் வளர்கின்ற தன்மையைப் பொறுத்தும், சிறு தொழில்களை ஆரம்பிப்பதைப் பொறுத்தும், கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்பித்து மக்களுடைய அறிவு, ஆற்றல், அவர்களுடைய பொருள், உழைப்பு ஆகிய அத்துணையையும் ஒன்று சேர்ப்பதைப் பொறுத்தும், பயன்படவும் ஆன நல்ல நோக்கம் என்ற முறையில் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஆங்காங்கு சுறுசுறுப்பாக பணிகளை இயற்றவும், நேரடியாகவும், எளிதாகவும், விரைவாகவும் பிரச்னைகளை அணுகவும், அப்படி அணுகுவதன் மூலமாக மக்கள் எதிர்பார்க்கின்ற பயன்களை விளைப்பதற்கும், இத்தகைய ஊராட்சி மன்ற ஒன்றிப்புகள் நல்ல முறையில் பயன்படுவனவாகும்.

இப்பொழுது அந்தக் கொள்கையைப் பொறுத்தவரைக்கும் யாரும் மறுப்பதற்கில்லை. அதிகாரிகள் நடைமுறைப்படுத்துகிற அளவிலே ஆங்காங்குச் சிலபல குறைகள் இருப்பதை மன்ற உறுப்பினர்கள் எடுத்துக்காட்டினார்கள். அத்தகைய குறைபாடுகளை எடுத்துச்சொல்கிறார்கள் என்றால் சமுதாய வளர்ச்சித் திட்டம் கொண்டிருக்கிற அடிப்படை நோக்கத்தையே மறுக்கிறார்கள் என்று யாரும் கொள்ளத் தேவையில்லை. எல்லாத் துறையிலும் சிலபல குறைபாடுகள் இருப்பதைப்போலவே, இந்தத் துறையிலும், அதுவும் மக்கள் கண்களில் படுகின்ற அளவுக்கு, மக்களால் எதிர்பார்க்கப்படுகின்ற விளைவுகள் விளையாத அளவுக்கு இருக்கின்றன. கூறப்படுகின்ற சிலபல குறைபாடுகள், ஆங்காங்குக் களையப்படவேண்டுமென்பதற்கான காரணங்களை உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

கல்வியைப் பொறுத்து ஆங்காங்கு விரிவாக வளர்வதற்கான முறையில் ஊராட்சி மன்றங்கள் பணிகள் ஆற்றிவருகின்றன. அதற்குக் கல்வித் துறையும் ஓரளவுக்கு உதவி செய்துவருகிறது. இப்படி ஊராட்சிமன்ற ஒன்றிப்பில் இருக்கிற பல்வேறு பணிகளைச் செய்கின்றபொழுது, ஊராட்சிமன்ற ஒன்றிப்புத் தலைவருக்கும், அதிலே அரசினரின் சார்பாக அமர்ந்திருக்கும் ஆணையாளருக்கும் சிலபல இடங்களில்—எல்லா இடங்களிலும் கூட அல்ல—சிலபல இடங்களில் ஏற்படுகின்ற பிணக்குகள் காரணமாகவும், வேறுபாடுகள் காரணமாகவும், ஊராட்சிமன்ற ஒன்றிப்பின் பணிகள் தடைப்பட்டிருக்கின்றன என்ற விளக்கங்களை உறுப்பினர்கள் தெளிவாகச் சொன்னார்கள். ஊராட்சிமன்ற ஒன்றிப்பின் தலைவருக்கு இருக்கக்கூடிய உரிமைகளின் அளவைப்பற்றியும், ஊராட்சிமன்ற ஒன்றிப்பில் நியமிக்கப்பட்டிருக்கிற ஆணையாளராக இருப்பவருக்கு இருக்கிற உரிமைகளைப் பற்றியும் சில பிரச்னைகள், வழக்கு மன்றம் சென்றுகூட தீர்க்கப்படவேண்டுமென்ற நிலையில் சில இடங்களில் இருக்கின்றன. ஆகவே, ஊராட்சிமன்ற ஒன்றிப்பின் தலைவருக்கும், அதன் ஆணையாளருக்குமுள்ள பிணக்குகளின் காரணமாக, இந்தப் பணிகள் கேடுறாமல் இருப்பதற்கு எவ்வளவு விரைவிலே நடவடிக்கை எடுக்க அரசினர் முன்வரவேண்டுமோ, அவ்வளவு விரைவிலே நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும்.

அந்தப் பிணக்குகள் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்று கண்டு அந்த நிலைமைகளை அகற்றுவதற்கு முயலுதல் வேண்டும். அப்படிப்பட்ட பிணக்குகள் ஏற்படாத அளவுக்குத் தடுப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தப் பிணக்குகள் தொடர்ந்திருக்குமானால், அந்தப் பிணக்குகள் ஏற்படாத அளவுக்கு தவிர்ப்பதற்கு முறைகளை விரைவிலே ஏற்படுத்துவதற்கு அரசினர் முன்வருதல் வேண்டும். அதன் காரணமாக ஒரு ஊரிலுள்ள ஆணையாளர், விம்புக்காகத் தாம் அந்த ஊரிலேயே இருந்து தீரவேண்டுமென்று முயலுவதினாலும், ஆணையாளரை வேறு ஊருக்கு மாற்றியே தீருவது என்று ஊராட்சிமன்ற ஒன்றிப்புத் தலைவர் முயலுவதினாலும் ஏற்படுகின்ற போட்டிகளின் விளைவாக, ஊராட்சிமன்ற ஒன்றிப்புப் பணிகள் நிறைவேறாமல் போகின்றன.

மேலும், ஊராட்சி மன்றத் தலைவரும், ஊராட்சி மன்ற ஒன்றிப்புத் தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுகிற வகையிலே, இரு வேறான கருத்துகள் வழங்கப்பட்ட தன்மையைப் பார்க்கிறோம். இப்பொழுது பஞ்சாயத்துத் தலைவர்களெல்லாம் ஆங்காங்கு இருக்கின்ற ஊராட்சிமன்ற உறுப்பினர்களாலும், ஊராட்சிமன்ற ஒன்றிப்பின் தலைவர்களெல்லாம் ஆங்காங்கு இருக்கிற ஊராட்சி மன்றத் தலைவர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. ஊராட்சிமன்றத் தலைவராக இருந்தாலும் சரி, ஊராட்சிமன்ற ஒன்றிப்பின் தலைவராக இருந்தாலும் சரி, பொது மக்கள் அத்தனை பேர்களாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்ற தலைவராக அமைகின்ற முறையில் தேர்தல் அமையுமானால், சில பல சங்கடங்கள் தவிர்க்கப்படும் என்ற கருத்தைப் பலரும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஊராட்சிமன்ற உறுப்பினர்களால் ஊராட்சி மன்றத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ற முறை இருக்கிறது. அரசியல் கட்சிகளுக்கிடையே ஏற்படுகின்ற மாச்சரியங்கள், அரசியல் கட்சிகளின் சார்பாக ஏற்படுகின்ற வாதப் பிரதிவாதங்கள், சர்ச்சைகள் ஆகியவற்றின் காரணமாக ஏற்படும் விளைவுகள் ஒருபுறம் இருந்தாலும்கூட, ஊராட்சிமன்ற உறுப்பினர்களிடையே 2, 3 கட்சிகள், எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, எந்த நிலையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, அத்தகைய கட்சிகள் ஏற்படுவதற்கு அந்த முறை வித்திடுகின்றது. ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊராட்சிமன்ற தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். ஊராட்சிமன்றத் தலைவர்கள் ஊராட்சிமன்ற ஒன்றிப்பின் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்றனர். அரசியல் கட்சி வேறுபாடுகள், நிலைமைகள் அரசியல் வெளி உலகத்தில் எப்படியிருந்தாலும், ஊராட்சி மன்றத்திற்கு உள்ளேயே நிர்வாக முறையில் தலையிடும் அளவுக்கு, அவ்வப்பொழுது தலைநீட்டும் அளவுக்கு இரண்டு பெரிய கோஷ்டிகளாக, முடிந்தால் 3 கோஷ்டிகளாக, 4, 5 கோஷ்டிகளாகப் பிரிந்து, ஒருவருக்கொருவர் மாறுபட்டு செயலாற்றுகிற சூழ்நிலை, ஊராட்சிமன்ற ஒன்றிப்பின் தலைவர் தேர்தலின் காரணமாக ஏற்படுகிறது என்பதைப் பலரும் நன்றாக





அறிவார்கள். ஊராட்சி ஒன்றிப்புத் தலைவரையும், ஊராட்சி மன்றத் தலைவரையும் நேரிடையாக மக்கள் தேர்ந்தெடுப்பதில் அரசினருக்குச் சிலபல சங்கடங்கள் இருக்கக்கூடும். இருப்பினும், அதிலே ஏற்படும் சங்கடங்களை விட, தீங்குகளைவிட, ஊராட்சிமன்றத் தலைவர்கள் சேர்ந்து ஒன்றிப்பின் தலைவரைத் தேர்ந்தெடுப்பதினால் ஏற்படுகின்ற சங்கடங்களும், ஏற்படுகின்ற தீங்குகளும் அதிகமாக இருக்கின்றன. மேலும், ஊராட்சிமன்றத் தலைவராக இருப்பவரே, ஊராட்சிமன்ற ஒன்றிப்பின் தலைவராக இருப்பதினால், ஊராட்சிமன்ற ஒன்றிப்பின் பணிகளையும், ஊராட்சி மன்றத்தைச் சேர்ந்த பணிகளையும் அவரே செய்யவேண்டும் என்ற நிலைமை மாறுவதற்குக்கூட, ஊராட்சிமன்ற ஒன்றிப்புத் தலைவர் அந்த ஊராட்சிமன்ற ஒன்றிப்பின் கீழே இருக்கிற பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற அளவுக்கு நிலைமை அமையுமானால், இந்தப் பிரச்னை நீங்குவதற்கு வழிவகைகள் ஏற்படக்கூடும். மேலும், இத்தகைய ஊராட்சிமன்ற ஒன்றிப்பை ஏற்படுத்தியதின் நோக்கம், ஆங்காங்கு விரைவாகப் பணியாற்றுவதற்கும், அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறவர்கள் தங்கள் தங்கள் பகுதி வளம் பெற, வசதிகள் பெருக, வாய்ப்புக்கள் ஏற்பட மிக அக்கறையோடு பணியாற்றுவதற்கும் வழிவகைகள் ஏற்படும் என்பதுதான்.

இப்பொழுதே, சிற்றூர்ப்புறங்களில் வாழ்க்கைக்கான வகைகளும், வசதிகளும் இல்லாத காரணத்தினால், நகர்ப்புறங்களை நோக்கி மக்கள் நகர்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத்தான் மக்கள் எண்ணிக்கைக் கணக்கு நமக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. வாழ்வதற்கேற்ற வசதிகளும், வாழ்க்கையை ஈடேற்றுவதற்கு ஏற்ற வாய்ப்புக்களும் அற்று இருக்கிற காரணத்தினாலே, அத்தகைய வாய்ப்புக்கள் கிடைக்கின்ற இடமாகிய நார்ப்புறங்களை நோக்கி மக்கள் நகர்கிறார்கள். ஒரு 10 ஆண்டு காலத்திற்கு முன்பாக பெரிய நகரங்களிலிருந்த மக்களின் எண்ணிக்கையைவிட, அங்கேயே இருக்கிறவர்கள் வளர்ந்திருக்கிறார்கள் என்பதைவிட, நகர்ப்புறங்களுக்கு வந்து சேர்ந்தவர்களுடைய எண்ணிக்கை அதிகம் வளர்ந்திருக்கிறது என்றுதான் கூற வேண்டும். நகர்ப்புறங்களில் இருப்பவர்களுக்கே வேலை வாய்ப்பு தேடித்தருகிற அளவுக்கு நகரங்கள் தன்னிறைவு பெற்று அமைந்திருக்கின்றனவா என்றால், இல்லை. சிற்றூர்ப்புறங்களிலிருந்து நகர்ப்புறங்களுக்கு மக்கள் வராமல் தடுக்கவேண்டுமென்றால், சிற்றூர்ப்புறங்களில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு தேடித்தர வேண்டிய பொறுப்புடையவர்களாகிறோம். அந்தப் பொறுப்பை ஊராட்சி மன்றங்கள்தாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் என்கிற முறையிலே, ஆங்காங்கு புதிய புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்கான வசதிகளைச் சொல்லவும், அதற்கான வழிமுறைகளைக் கூறவும் ஊராட்சி மன்ற ஒன்றிப்புகள் மூலம் அதிகாரிகள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் அமர்த்தப்பட்ட காலத்திலிருந்து எந்த அளவுக்கும் பயன்பட்டார்கள் என்பதையும், அவர்களுடைய

மருத்துவ வசதி, பொது நல வசதி, இவற்றைப் பார்க்கும்பொழுது, ஆங்காங்கே இருக்கும் மக்களுடைய எண்ணிக்கையின் அளவைக் கணக்கிட வேண்டியவர்களாக இருக்கிறோம். குறிப்பிட்ட வேறு பல நிலைமைகள், உரிமைகள், வாய்ப்புக்கள் ஆகியவற்றை ஏற்படுத்தித் தருகிற முறையில் ஊராட்சி மன்றங்களின் எண்ணிக்கையைப் பொறுத்துக் கணக்கிட வேண்டியிருக்கிறது. அப்படிப் பாகுபடுத்தி, முழு வாய்ப்பும் ஒன்றிப்புக்குப் போய்ச் சேருகிற நிலைமைகளை ஏற்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பொதுவாக, எப்படி இதனுடைய உரிமையையும், மற்றவற்றையும் பயன்படுத்திக் கொள்வது என்று அறியாத வகையிலே சிற்றூர்ப் புறங்களில் உள்ள பெருங்குடி மக்கள் வாழ்கிறார்கள் என்ற கருத்து எடுத்துத் தெரிவிக்கப்பட்டது. அவர்களுக்கு ஊக்கம் தந்து அவர்களுடைய வாழ்க்கையை வளப்படுத்துவதற்கும், சிறு பாசனத் திட்டங்கள் போன்றவற்றை நிறைவேற்றுவதற்கும் முழு முயற்சிகளை ஊராட்சிமன்ற ஒன்றியங்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் தூண்டுதல் செய்யும் பெரு முயற்சியை அரசினர் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

மாதர் சங்கம் அமைப்பைப் பற்றி சில உறுப்பினர்கள் கூறினார்கள். அது நன்றாக இயங்கவில்லை என்றும், அவ்வாறு நன்றாக இயங்காத ஒன்று இருப்பதைவிட அதை எடுத்து விடலாம் என்ற கருத்திலேதான் சில உறுப்பினர்கள் கருத்துக்களைக் கூறினார்கள் என்று நான் நினைக்கிறேன். மாதர் சங்கம் அடியோடு வேண்டாம் என்ற அடிப்படையில், கூடவே கூடாது என்ற அடிப்படையில் தெரிவித்திருப்பதாக எடுத்துக் கொள்வதற்கில்லை. அப்படி இயங்காத ஒன்று இருப்பதைவிட இல்லாமல் இருப்பது மேல் என்று சொல்லுவதன் அறிகுறி, அதை நன்றாக இயங்க வைக்க வேண்டுமென்ற அளவிலே, எதிர்மறையிலே வற்புறுத்தும் ஒன்றாக அமைகிறது என்ற அளவிலே கனம் பெண் உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். தவறாகக் கருதிச் சினங்கொள்ளக் கூடாது. (சிரிப்பு.) அந்த முறையிலேதான் இங்கேயுள்ள பலரும் எடுத்துக் கூறினார்கள். அதைத்தான் நானும் வற்புறுத்த விரும்புகிறேன்.

கதர் திட்டத்தைப் பொறுத்த வரையில் உறுப்பினர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அரசினர் பல்வேறு பிரச்னைகளில் மீண்டும் தங்களுடைய சிந்தனையைச் செலுத்தி, சிலபல சீர்திருத்தங்களையும், மாற்றங்களையும், போக்குகளையும் தொடர்ந்து எடுத்துக் கொண்டு வருவதைப் போலவே, கதர் திட்டத்தைப் பொறுத்தும் மீண்டும் சிந்தித்து நல்லதொரு சீர்திருத்தமான முடிவை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். கதர் திட்டத்தின் அடிப்படை நோக்கத்தை ஒரு நூலிலே அரசினர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் :



"கதர் இயக்கத்தைப் பரப்புவதற்கென்றே அகில பாரத சர்க்கா சங்கத்தை காந்திஜி நிறுவினார். நாடு அந்நிய ஆட்சியின் கீழ் இருந்தபோது கைராட்டையும், கதரும் சர்க்கார் உதவியின்றி, மக்களின் தேசீய உணர்ச்சியால் வளர்க்கப்பட்டன. தேசீயப் போராட்டத்தின் சின்னமாக கதர் உடை விளங்கியது. நாடு சுதந்திரம் அடைந்த பின் கதர் ஒரு அரசியல் வேதாந்தம் என்ற எண்ணம் மாறி, அது நாட்டின் பொருளாதாரத் திட்டத்தில் முக்கியத்துவம் பெற்றது. ராஜ்யங்களின் நிர்வாகப் பொறுப்பை மக்கள் பிரதிநிதிகள் ஏற்று ராட்டையும் கிராமப் பொருளாதார அபிவிருத்திக்கான ஒரு கருவியாகச் செய்தனர். அந்நிய ஆட்சிக் காலத்தில் அதை எதிர்த்துப் போராடும் சின்னமாக விளங்கிய ராட்டை இன்று சுயதேவைப் பூர்த்திக்காகவும், சமூகத்தில் நிலவும் வறுமையை ஒழிப்பதற்காகவும் நடைபெறும் போராட்டத்தின் சின்னமாக மாறிவிட்டது."

ஒரு அரசியல் சின்னமாக விளங்க, ஒரு அரசியல் ஒழுக்கத்தைக் கொடுக்க, தானே உழைக்க வேண்டுமென்ற ஆர்வத்தைத் தர, அந்நியருக்கு அடிமைப்பட்டு இருக்கக் கூடாது . என்ற எழுச்சியைத் தர, ஒரு அரசியல் சித்தாந்தமாக இருக்க, இந்தத் திட்டம் காந்தியாரால் உருவாக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சித்தாந்தங்களின் அடிப்படையில் நிறைவேற்றப்படுகிறது என்றாலும், அதற்காக சிலபல கஷ்டங்களையும், நஷ்டங்களையும் ஏற்றுக் கொள்கிறோம் என்றாலும் கூட, அதிலே பொருள் இருக்க முடியும். அந்த சித்தாந்தங்களின் படி அன்றைக்கு இந்தக் கதர் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நோக்கம், முக்கியத்துவம் மாறிவிட்டன. அதுவும் சுதந்திரம் பெற்ற பிறகு மாறிவிட்டன என்ற கருத்து தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்த அரசியல் சித்தாந்தத்தை ஒட்டித்தான் இந்தக் கதர்த் திட்டம் போற்றப்படுகிறதா என்று பார்த்தால் அந்த எண்ணம் மாறி, இப்பொழுது பொருளாதாரத் திட்டத்தின் அடிப்படையில்தான் கதர் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று இந்த நூலிலே தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. பொருளாதாரத் திட்டத்தை வளர்க்கும் அடிப்படையிலே இந்தத் திட்டம் அமைந்திருக்கிறதா, அத்தகைய பொருளாதாரத்தை வளர்ப்பதற்கு வேறு வகையிலே திட்டம் காணமுடியுமா என்ற முறையிலே ஆராய்ந்து பார்க்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு சித்தாந்தம், ஆகவே இதைப் பெறுவதற்கு கஷ்டங்களையும், நஷ்டங்களையும் வேறு பல வகைகளில் ஏற்றுக் கொள்வதில் தவறு இல்லை என்று சொல்வதில் பொருள் இருக்க முடியும். ஆனால் அந்த எண்ணம் இப்பொழுது மாறிவிட்டது, அந்த எண்ணத்தின் அடிப்படையில் அது அணுகப்படவில்லை, தானே நூற்று, தானே நெய்து, தானே உணர்ச்சி பெற்று உழைக்க வேண்டுமென்ற எண்ணம் ஏற்படவும், பிறருக்கு அடிமையாகாமல் தன்னைத்தானே, உரிமையுள்ள மனிதனாக ஆக்கிக் கொள்ளவும் பண்படும் சித்தாந்தமாகக் கதர்த் திட்டம் விளங்குகிறது என்று

கூறினால், அதிலே பொருள் இருக்க முடியும். இந்த எண்ணம் மாறுபட்டதாக இப்பொழுது இருக்கிறது. இந்த எண்ணம் பொருளாதார அடிப்படையில் நிறைவேறும் அளவுக்கு இருக்கிறதா என்பதையும் பார்க்க வேண்டும்.

இப்பொழுது மாநிலத்திலுள்ள நிர்வாகப் பொறுப்பை மக்களுடைய பிரதிநிதிகள் ஏற்றியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் ஏற்கப்பட்டு நிறைவேற்றும் அடிப்படையில் இருக்கிறதா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போராடும் சின்னமாக இருந்த ராட்டை இன்று சமுதாயத்தின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்கிறதா என்பதையும் பார்க்க வேண்டும். வறுமையை ஒழிப்பதற்கு இந்தத் திட்டம் இருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். இந்த இரண்டு நோக்கங்களை எவ்வளவு தூரம் நிறைவேற்றக்கூடியதாக இருக்கிறது இந்தத் திட்டம் என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்தப் புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிற கணக்கை விவரித்து நாம் ஆராய்ந்து பார்க்கும்போது 1959-ம் ஆண்டு அக்டோபர் மாதப்படி கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கணக்கின் அடிப்படையில் பார்க்கும்போது இந்தியா முழுவதிலும் இருக்கக்கூடிய ஆலைகளின் எண்ணிக்கை 479. அதற்குச் செலவழிக்கப்பட்டிருக்கிற மூலதனம் 122 கோடி ரூபாய். அதேமாதிரி கதர் வளர்ச்சிக்கு போடப்பட்டிருக்கிற மூலதனம் 55 கோடியே ஐம்பது லட்சம் ரூபாய். இந்த 479 ஆலைகளுக்கும் போடப்பட்ட மூலதனம் 122 கோடி ரூபாய் என்றால் கதருக்கு போட்டிருக்கும் மூலதனம் 55 கோடியே ஐம்பது லட்சம் ரூபாய் ஆகும் என்று இந்தப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆலைகளில் வேலை செய்கிறவர்களுடைய எண்ணிக்கை எட்டு லட்சத்தி தொண்ணூறாயிரம் பேர்கள். ஐம்பத்தைந்து கோடியே ஐம்பது லட்சம் ரூபாய் மூலதனம் போட்டு நடைபெறுகிற கதர்த் தொழிலில் வேலை செய்கிறவர்களுடைய எண்ணிக்கை 15 லட்சம் பேர்கள். ஆக இரண்டுமடங்கு அதிகமாக ஆகிறது. இந்த அளவில் வைத்துக்கொண்டாலும்கூட 122 கோடி ரூபாய் கதருக்கு செலவழிக்கப்படுகிறது என்று கணக்குப் போட்டாலும் இன்னொரு பங்கு உயருகிறது. எட்டு லட்சத்தி தொண்ணூறு ஆயிரம் பேர்கள் ஆலைகளில் வேலை செய்கிறார்கள் என்றால் முப்பது லட்சம் பேர்கள் கதரில் ஈடுபடுவார்கள். இப்படி மேலெழுந்தவாரியாகக் கணக்கு வரும். ஆனால் வருமானத்தைக் கணக்கிட்டால் 122 கோடி ரூபாய் மூலதனம் போடப்பட்டுள்ள ஆலைகளில் வேலை செய்கிற ஒரு தொழிலாளிக்கு ஓராண்டு வருமானம் 780 ரூபாய் என்று கணக்கிட்டால், கதர் தொழிலில் ஈடுபடுகிற தொழிலாளிக்கு ஓராண்டுக்குக் கிடைக்கும் பணம் 46½ ரூபாய் என்று கணக்கு வருகிறது. இந்தப் புள்ளி விவரம் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் நான்கு லட்சத்தி இருபத்திரண்டாயிரம் பேர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். கதர் இலாகாவின்கீழ் காந்தி கிராமத்தின் கீழ், மற்றும் இரண்டு ஸ்தாபனங்களின்கீழ் வேலை செய்கிற



மொத்தம் நூற்பவர்கள், துணி உற்பத்தி செய்கிறவர்கள் அத்தனை பேர்களையும் சேர்த்துப் பார்த்தால் நான்கு இலட்சத்து இருபத்து இரண்டு ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கு ஓராண்டுக்கு ஒரு கோடியே 99 லட்சம் ரூபாய் என்ற அளவுக்குத்தான் வருமானம் கிடைத்திருக்கிறது என்று கூறப்படுகிறது. ஆனால் ஆலைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிக்கு ஆண்டொன்றுக்கு கிடைக்கும் வருமானம் ரூ. 780 ஆக இருக்கிறது. கதரை நம்பி வாழும் தொழிலாளிக்கு சராசரி 46½ ரூபாய்தான் ஆண்டொன்றுக்கு கிடைக்கிறது. கிட்ட தட்ட மாதம் ஒன்றுக்கு நான்கு ரூபாய்தான் கிடைக்கிறது. இது எப்படி பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற திட்டமாக இருக்க முடியும் என்பதைச் சிந்திக்க வேண்டும். வறுமையிலிருப்பவர்களுக்கு இதன் மூலமாக ஓரளவாவது வருமானம் கிடைப்பது நல்லதுதான் என்று குறிப்பிட்டாலும்கூட, இந்தத் தொழிலாவது வளர்ச்சி பெறுகிறதா என்று பார்த்தால் ரூபாய்க்கு ஐந்தணு கழிவு (ரிபேட்) கொடுத்துத்தான் விற்றுத் தீர வேண்டிய அளவுக்கு நாட்டு மக்களால் விரும்பப்படுகிறது என்று தெரிகிறது. இந்தத் தொழிலை நம்பி வாழ்கிறவர்கள் முழுவதும் இதையே நம்பி இல்லாமல் வேறு தொழிலையும் செய்தே தீர வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஏதாவது கிடைக்கிறதே என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லக்கூடும். 55½ கோடி ரூபாய் முடக்கப்பட்டும் நல்ல வருமானத்தைக் கதர் தொழில் ஈட்டித்தரவில்லை. ரூ. 55 கோடிக்கு நல்ல பலன்தரும் திட்டங்களை உருவாக்கி இருக்கலாம். அப்படி உருவாக்குவதன் மூலமாக வருமானம் பெருக வழி ஏற்படும். அந்த வகையில் வாய்ப்பு வசதிகளை செய்து தருதல் வேண்டும்.

மற்றொன்றைப் பார்க்கும்போது இதுவும் கைத்தறியின்கீழ் வருகிறது. கைத்தறி நெசவாளர்கள் பிரச்னை, கதர் பிரச்னை என்ற இரண்டும் ஒன்றாக வருகின்றன. ஓரளவு பார்க்கும்போது கதர் கைத்தறியின்கீழ் தான் வருகின்றது. கைத்தறி நெசவாளர்கள் தொடர்ந்து கைத்தறித் தொழிலை நம்பி வாழ்ந்து வருகிறார்கள். இந்தத் தலைமுறையைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு அந்தத் தொழிலைக் காப்பாற்றித்தர வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்களை மெல்ல மெல்ல புதிதாக வளருகிற வேறு பல தொழில்களில் ஈர்க்கக்கூடிய சூழ்நிலை ஏற்படவேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வரும் காலம் வரையில் இந்தக் கைத்தறி நெசவாளர்களுடைய தேவைகளையும் நாம் கவனித்தாக வேண்டும். அவர்களைக் காப்பாற்றியே தீர வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். வேறு பல தொழில்களில் அவர்களை இன்னும் ஈர்க்கப்படாத நிலையில் அவர்களைக் காப்பாற்றியே தீர வேண்டிய நிலைமை அரசுக்கு இருக்கிறது. 80-ம் நம்பர் நூலாக இருந்தாலும், 60-ம் நம்பர் நூலாக இருந்தாலும் அதை ஆலைகளில் நூற்றாலும் கையால் நூற்றாலும் டெக்ஸ்சர் ஒன்றுதான். கைத்தறி தொழிலை நம்பி வாழ்கிறவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அதற்குச் சில பல சலுகைகளைத் தரவேண்டும் என்பதற்காகக் குறிப்பிட்டேனே தவிர வேறு

அறிவும், ஆற்றலும், நேரமும், கவனிப்பும், உழைப்பும், பொருளும் மற்றவைகளும் எந்த அளவுக்கு ஊராட்சிமன்ற ஒன்றிப்புகளின் நிலைமையை உயர்த்துவதற்கு பயன்பட்டு வந்திருக்கின்றன என்பதையும் நாம் கண்காணிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த முறையில் அங்கே சிறு சிறு தொழில்கள் வளம் பெறுவதற்கான வழிகளைச் செய்து தர வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கான வாய்ப்புக் கூறுபாடுகள் எல்லா ஊராட்சிமன்ற ஒன்றிப்புகளிலும் ஒரே வழியில் இருக்க நியாயமில்லை. ஆங்காங்கே இருக்கிற இயற்கை நிலையைப் பொறுத்து, கனி வளங்களைப் பொறுத்து, மூலப் பொருள்களைப் பொறுத்து, என்னென்ன தொழில்கள் ஆரம்பித்தால் நல்லது, என்னென்ன தொழில்கள் ஆரம்பிப்பதன் மூலமாக வருவாயையும், வசதியையும் பெருக்குவதற்கு வாய்ப்பு இருக்கும் என்பதைக் கண்டு அறிந்து கூறுவதற்கு அதிகாரிகள் முதலிலே தங்களுடைய முழு ஆற்றலையும், அறிவையும் செலவழிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அத்தகைய வாய்ப்புகள் இருக்கிற இடங்களில், மூலதனத்தைப் பொறுத்தவரையில் அதனைப் போட அந்த ஊரிலே இருக்கிற ஓரிருவர் முன்வராவிட்டாலும், மக்கள் அத்துணைப் பேரும் கூட்டுறவு முறையில் மூலதனம் போடுவதற்கும், அந்தத் தொழில்களை ஆரம்பிப்பதற்கும், கூட்டுறவுத் தொழில்கள் ஆரம்பிப்பதன் மூலமாக வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு போக்குவதற்கும் முன்வர வேண்டும். ஆங்காங்கு கிடைக்கிற சிறு சிறு மூலப் பொருள்களைக் கொண்டு, ஜப்பான் நாட்டைப் போல் சிறு சிறு தொழில்கள் ஆரம்பிக்கவேண்டும். அப்படி ஆரம்பிக்கும் தொழில்களிலிருந்து கிடைக்கிற சரக்குகள் மக்களுக்குத் தேவைப்படுகிற அளவுக்கு, மக்கள் விரும்புகிற அளவுக்கு, சந்தையில் விலை போகிற அளவுக்கு அமைந்திருக்க வேண்டும். தொழிலாளர்களுக்கு உழைப்பின் மூலம் வருகின்ற ஊதியம் அவர்கள் வாழ்க்கையை நடத்தக் கூடிய அளவுக்குப் போதுமானதாக இருக்க வேண்டும். ஏதோ பேருக்கு தொழிலை ஆரம்பித்து விட்டோம், தொழில் நடந்து கொண்டிருக்கிறது, நாலைந்து பேர் வேலை செய்கிறார்கள் என்று சொல்லாமல், ஆரம்பிக்கிற தொழில் பணம் ஈட்டித் தருகிற ஒன்றா? அதனால் வருவாய் ஏற்படுமா? சந்தைக் கூடங்களில் மக்கள் விரும்புகிற முறையில் உற்பத்திப் பொருள்களை உருவாக்கித் தருமா? அந்த அளவுக்கு மூலப் பொருள்கள் அமைந்திருக்கின்றனவா என்ற ஆராய்ச்சியை ஆங்காங்கு இருக்கும் ஊராட்சிமன்ற ஒன்றிப்பின் அதிகாரிகள் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். சிறு சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் இப்பொழுது திட்டமிடப்பட்டிருக்கிறது என்றாலும்கூட அந்த நிலைமைகள் மேலும் மேலும் வளர வேண்டும்.

நாட்டினுடைய பொதுநிலைமையைப் பார்த்தால், இன்று காலைப் பத்திரிகைகளிலே வந்திருக்கிற புள்ளி விவரக் கணக்குப்படி பார்த்தால், நாட்டினுடைய பொதுவருமானத்தைப் பார்க்கிறபொழுது

DEMAND XXII—KHADI AND DEMAND XXIII—
COMMUNITY DEVELOPMENT PROJECTS, ETC.



1960-61-ல் ரூ. 295.70 என்று இருந்தது. 1961-62-ல் ரூ. 293.40 ஆகி, கிட்டத்தட்ட ரூ. 2.30 பொதுவருமானத்தில் ஓராண்டு காலத்தில் நாட்டினுடைய நிலைமை இறங்கி இருக்கிறது என்று தெரிகிறது. அதற்குக் காரணம் சொல்லும்பொழுது, வறுமை நிலை உயர்ந்திருப்பதுதான் என்றும், 1960-61-ல் 295.70 ஆக இருந்தது, 1961-62-ல் ரூ. 293.40 ஆகி, ரூ. 2.30 இறங்கி இருக்கிறது என்றும் எடுத்துச் சொல்லுகிறார்கள். அதற்கான காரணத்தை பொருளாதார நிபுணர்கள் மேலும் எடுத்துச் சொல்லுகிறபொழுது, இந்த வருமானம்கூட பண வீக்கத்தின் காரணமாகவும், பணத்தின் மதிப்பு குறைந்திருப்பதன் காரணமாகவும் ஏற்பட்டிருக்கிறது என்றும், அதை உண்மையான வருமானமாக ஏற்றுக் கொள்வதற்கு இல்லை என்றும் கூறியிருக்கிறார்கள். எனவே, மக்களுடைய வாழ்க்கை வருமானம் அதிகரிக்கும் அளவுக்கு சிறு சிறு தொழில்களை ஏற்படுத்தவும், குறைந்தவர்களை வைத்துக்கொண்டு கூட்டுறவு முறை மூலமாகப் பொருள்களையும், மூலதனத்தையும் சேர்க்கவும், மேற்கொள்ள வேண்டிய முழுப் பொறுப்பை ஏற்கவும் ஊராட்சிமன்ற ஒன்றிப்புகள் முன்வரவேண்டும். அந்த வாய்ப்புக் கூறுகளை அதிகமாக ஆக்கும் அளவுக்கு, சென்ற 3, 4 ஆண்டுகளிலே நிலைமைகள் வளர்ந்திருக்கின்றனவா? என்று பார்த்தால், எதிர்பார்த்த அளவுக்கு வளரவில்லை என்றுதான் பல உறுப்பினர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மதிப்பிற்குரிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரும், இந்த மன்றத்தின் உறுப்பினருமான திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இந்தக் கருத்தை அழுத்தம் திருத்தமாகக் கூறினார்கள். ஆகவே, நிர்வாகத்தை இயக்குகின்ற முறையிலே அதிகத் தீவிரம் காட்டுதல் வேண்டும், அதில் மும்முரமாக ஈடுபடவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிடுகிறேன்.

ஊராட்சி மன்றங்களின் ஒன்றிப்புக்கு அளிக்கப்படுகிற மானியத்தைப் பொறுத்த வரையில், எந்த வகையிலே அதை முன்னேற்றுவது என்ற முறையிலேகூட பல்வகைக் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆங்காங்கு இருக்கிற ஊராட்சி மன்ற ஒன்றிப்பில் இருக்கும் மக்களின் எண்ணிக்கைக் கணக்கை வைத்தா? அல்லது அதன் தேவையை அடிப்படையாக வைத்தா? அல்லது ஊராட்சிமன்ற ஒன்றிப்பின் கீழ் இருக்கும் ஊராட்சி மன்றங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தா? என்று பார்க்கும்பொழுது, அந்தந்த நிலைமையைப் பொறுத்து, அந்தந்தத் தேவையைப் பொறுத்து, மூன்று வகைகளிலேயும் கணக்கிடுதல் வேண்டும். எல்லா நிலைமைகளுக்கும், எல்லா வகையான மானியத்திற்கும், எல்லா வகையான சலுகைகளுக்கும், இந்த மூன்று முறைகளையும் ஒன்றாக வைத்துப் பார்ப்பதற்கில்லை. சாலைகளைப் பொறுத்த வரையில், மக்களுடைய எண்ணிக்கையைக் கணக்கிட்டு, சாலையின் அளவை நிர்ணயிக்க முடியாது. அந்தந்த ஊராட்சி மன்றங்களின் தேவையைப் பொறுத்துத்தான் அதற்குக் கொடுக்க வேண்டிய மானியம் அமையும். அங்கே ஏற்படும்

**கனம் திரு. எம். பக்தவத்சலம்** : அந்த நண்பரிடம் சொன்னது வேறு. (சிரிப்பு.) 'அண்டை வீட்டில் நடப்பதை ஒண்டிக் கேட்கக்கூடாது' என்று நான் அந்த நண்பரிடம் சொன்னேன். அது வேறு.

இப்பொழுது நான் சொல்வது, இங்கே நடந்த விவாதத்தைப் பற்றித்தான். யாரையும் நாம் அலட்சியப்படுத்தக் கூடாது. அதுவும், பெண்மணிகளைப் பொறுத்தவரையில் அலட்சியப் படுத்தக்கூடாது. நாட்டின் ஜனத்தொகையில் அவர்கள் சரிபாதி இருக்கிறார்கள். பெண்கள் சாதுக்களாக இருக்கலாம். அவர்களை அவமதித்தால் சில சமயம் மிளகாய்த் தூளைக்கூட எறிந்துவிடக் கூடும்—இந்த மன்றத்தில் அம்மாதிரி செய்கின்றவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். அப்படிப்பட்டவர்கள் இங்கு இல்லை என்று நான் சொல்வேன்—மிளகாய்ப் பொடியைப் போட்டால் அப்பொழுது என்ன செய்வது? ஆகவே, ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பெண்களைக் குறித்து அலட்சிய மனப்பான்மை இருந்தாலும், அலட்சியமாக இருக்கக்கூடாது.

எனக்குப் பின்னால் வீற்றிருக்கும் கனம் அங்கத்தினர் ஒருவர் பேசியதைக் குறித்து ஒரு பெண்மணி கனம் அங்கத்தினர் ஆட்சேபித்தபோது, "derogatory ஆக ஒன்றும் பேசப்படவில்லை" என்று தாங்கள் சரியாகச் சொன்னீர்கள். ஆனால், "impolitic" ஆகவும் பேசக்கூடாது. நமக்கு என்ன கதி நேரும் என்பதையும் பார்க்கவேண்டும். "Impolitic" ஆகப் பேசுவது கூடவே கூடாது. "derogatory" ஆக இல்லாமல் பேசவேண்டும் என்பதோடு கூட, "Impolitic" ஆகவும் பேசக் கூடாது.

எந்தக் குடும்பமாக இருந்தாலும், பெண்மணிகள் இல்லாமல் குடும்பத்தை நடத்த முடியாது. பெண்களுக்குப் பதிலாக சில சமயம் ஆண்களும் சமையல் செய்யவேண்டியிருக்கும். சமையல் செய்ய வேண்டிய அவசியமும் ஏற்படலாம். (திரு. மு. கருணாநிதி: அனுபவம் உண்டா?) அனுபவம் இல்லை. பார்த்திருக்கிறேன். ஆண்கள் சமையல் செய்யவேண்டியிருக்கிறதோ இல்லையோ, சமையல் என்பது உத்தமமான வேலைதான். அதைப் பெண்கள் செய்கிறார்கள். சமையல்தானே அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று அலட்சிய மனப்பான்மையில், என்ன சொன்னாலும், என்ன செய்தாலும் அவர்கள் பொறுத்துக்கொண்டிருப்பார்கள் என்று எண்ணிவிடக் கூடாது. அவர்கள் பொறுத்துக் கொண்டிருக்கலாம். ஆனால், அவர்களுடைய பொறுமையும் சில சமயங்களில் மீறிப் போகலாம். 'ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானம்' என்பதை உண்மையிலேயே மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். "சக்தியை வழிபடுகிறேன்" என்று சொல்லி, குங்குமப் பொட்டு போட்டாலும் போதாது. (சிரிப்பு.) அப்படிச் சில பேர் செய்கிறார்கள். பெயரளவில் சொல்லி, செய்வதெல்லாம் வேறு விதமாகச் செய்தாலும், அதுவும் நலனை அளிக்காது.

இந்த இலாகாவின் வேலைகளில் பெண்களுடைய ஆதரவும், உதவியும், ஈடுபாடும் நமக்கு வேண்டியிருக்கிறது. அது இல்லாமல் நம்முடைய சமுதாயத்தை உயர்த்த முடியாது. அந்த நோக்கத்தோடுதான் நாம் காரியங்களைச் செய்துவருகிறோம். இன்று பெண்களில் பாதிப் பேர்கள் பிற்போக்கான நிலையில் இருக்கிறார்கள். குறிப்பாக, கிராமப் புறங்களில் வசிக்கும் பெண்களில் பெரும்பாலோர் பிற்போக்கான நிலையில் இருக்கிறார்கள். 'பெண்கள் ஒன்றும் செய்யவேண்டாம். ஆண்களே பார்த்துக்கொள்ளலாம்' என்று சொல்வோமானால், நாமே அவர்களுடைய பிற்போக்கான நிலையை அகற்றிவிட முடியாது. அந்தப் பெண்களையும் வைத்துத் தான், நம்முடைய நாட்டில், குறிப்பாக, கிராமங்களில் உள்ள பிற்போக்கான நிலையை நாம் அகற்ற முடியும். இதிலே எல்லா விதமான கவனமும் செலுத்தப்படுகிறது. பெண்களின் நிலையை உயர்த்துவதிலே, பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலே, அவர்களுக்கு வேண்டிய வசதிகளைப் பெருக்குவதிலே, அவர்களே ஈடுபட்டு அவ்வாறு உயர்த்திக்கொள்ளவேண்டும் என்ற வகையிலே இன்று பெரிதும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அது வற்புறுத்தப்பட்டும் வருகிறது. அந்த வகையிலேதான் கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மாதர் சங்கங்கள் நடத்துவது என்ற முறை இருக்கிறது.



கனம் அங்கத்தினர் அவர்கள் எங்கு போய்ப் பார்த்தாரோ! நான் எத்தனையோ மாதர் சங்கங்களுக்குப் போய்ப் பார்த்திருக்கிறேன். இரண்டு மாதங்களுக்கு முன்புகூட, திருச்சியை அடுத்த ஒரு குக்கிராமத்தில் மாதர் சங்க நிகழ்ச்சியொன்றுக்கு நான் சென்றிருந்தேன். அன்று பகல் 12 மணிக்குத்தான் நான் அங்கு போக முடிந்தது. பன்னிரண்டு மணி வெயிலில் யார் இருக்கப் போகிறார்கள் என்று நான் முதலில் நினைத்திருந்தேன். ஆனால், அங்கே போனபோதுதான் நான் அங்குள்ளவர்கள் எவ்வளவு ஊக்கத்தோடு அங்கு காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க முடிந்தது. பெண்கள், வயது முதிர்ந்தவர்கள், குழந்தைகள்—ஆண்கள்கூட ஏராளமாகக் கூடியிருந்தார்கள். பெண்மணிகள் அவ்வளவு உற்சாகத்தோடு மாதர் சங்க வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். கிராமப் புறங்களில் உள்ளவர்கள், தங்களுடைய குடும்பத்தின் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக—விவசாய வேலையைச் செய்வதோடுகூட—இம்மாதிரி மாதர் சங்கங்களின் மூலமாக, தையல் வேலை போன்ற மாற்று வேலைகளில் ஈடுபட்டு, குடும்பத்தின் வருமானத்தை உயர்த்திக் கொள்வதற்கு முன்வருகிறார்கள் என்பதை நான் பார்த்திருக்கிறேன். அந்த அளவு தங்களைத் தாங்களே உயர்த்திக்கொள்வதற்குக்கூட நாம் அவர்களைப் பக்குவப்படுத்தவில்லையென்றால், முன்னேற்றவில்லையென்றால், ஆண்களே முழுதும் சம்பாதித்துப் போட்டுவிட முடியுமா? பெண்களுக்கும் தேவை அதிகம் இருக்கிறது. ஆண்களுக்கும் தேவை இருக்கிறது. எல்லாப் பொறுப்பையும் ஆண்களே ஏற்றுக்கொள்ள முடியாது. நான் பல மாதர் சங்கங்களைப் பார்த்திருக்கிறேன். நான் பார்த்த வரையில் சொல்வேன்—மாதர் சங்கங்கள் நல்ல முறையில் பணியாற்றிக்கொண்டு வருகின்றன என்று நான் நிச்சயமாகச் சொல்வேன். கிராமங்களில் பெண்கள் அதில் ரொம்ப அக்கறையோடு உழைக்கிறார்கள் என்பதை எத்தனையோ இடங்களில்

ஒன்றும் இல்லை. ஆனால் கதரைப் பொறுத்த வரையில் அப்படி அல்ல. இது தொடர்ந்து இருந்து வரும் ஒரு தொழில் அல்ல. புதிது புதிதாகக் கதர்த் தொழிலை உருவாக்குகிற நிலைமையில் அரசு இருக்கிறது. அந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகிறது. அந்தத் தொழிலில் மேலும் மேலும் ஈடுபடு கிறபடி அவர்களால் போதிய வருமானம் பெற முடியவில்லை. எனவேதான் அதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கதரில் சிலர் நம்பிக்கை கொண்டிருப்பதைப்பற்றி நான் குறை கூற முன்வரவில்லை. பலருக்கு பல்வேறு தொழில்களில் விருப்பம் இருக்கலாம். கதர் வேண்டும் என்ற விருப்பம் உடையவர்களும் இருப்பார்கள். அதற்குத் தனியாக அகில இந்தியா சர்க்கா சங்கம் போன்ற ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அவைகள் இவர்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடும். ஆனால் அரசாங்கத்தின் பெரும் பொருள் அதில் செலவழிக்கப்படும்போது அதனைக் கண்டிக்காமல் இருக்கமுடியாது. நாட்டின் பொது வருமானத்தில் ஒரு பகுதி அதில் முடக்கப்படுமானால் எந்த அளவுக்கும் பெரும் நன்மையை அடைய முடியாது. இந்தத் தொகை மற்ற துறைகளில் செலவழிக்கப்படுமானால், மக்களுடைய வறுமையை, தொல்லையை நீக்குவதற்கு வழிவகை ஏற்படும். அந்த முறையில் கவனம் செலுத்திச் சமுதாய வளர்ச்சி திட்டங்களையும், சீர்திருத்தத்தையும் மேற்கொண்டு, இரண்டு மூன்று ஆண்டுகளாக நடைமுறையில் இருந்துவரும் குறைபாடுகளையும் குற்றங்களையும் கண்டறிந்து, ஆராய்ந்து, அவைகளை நீக்க அரசினர் முன்வரவேண்டும். அப்படி நீக்குவதற்கான முழு முயற்சியையும் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் சபாநாயகர்
1-00 p.m. அவர்களே, இந்த விவாதம் நான்கு மணி நேரம் நடந்தது. இருபத்தைந்து கனம் உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டார்கள். இந்த விவாதம் கிராம வளர்ச்சியைப் பற்றியதுதான். நம்முடைய நாட்டில், 'கிராமாந்திரம்' என்றாலோ, 'கிராமங்கள்' என்றாலோ நமக்குக் கொஞ்சம் அலட்சியம்தான். நம்மையும் அறியாமல் அலட்சியம் ஏற்படுவதுண்டு, நாமெல்லோரும் கிராமப் புறங்களிலிருந்து வருகிறவர்கள். கிராமம் நமக்குத் தேவைப்படுகிறது, கிராமம் இல்லாமல் வாழ்க்கை இல்லை என்று தெரிந்திருந்தாலுங்கூட, 'கிராமம்' என்றாலே சில சமயங்களிலே கொஞ்சம் 'சப்' பிட்டுப் போகிறது. அதேமாதிரி, கிராம வளர்ச்சியைப் பற்றிய இந்த இரண்டு மானியக் கோரிக்கைகள் பற்றிய விவாதம் வரும்போது, 'சப்' பிட்டுப் போய்விடுமோ என்று சில பேருக்குக் கவலை இருந்திருக்கலாம். ஆனால், அந்தக் கவலையைச் சில கனம் உறுப்பினர்கள் தீர்த்துவிட்டார்கள்.

வேறு சில சட்டமன்ற நடவடிக்கைகளைப் பத்திரிகைகளிலே நாம் பார்க்கிறோம். நல்லதோ கெட்டதோ ஒருவருக்கு வந்துவிட்டால் அது நமக்கும் வாராதா என்கிற ஆசை சாதாரணமாக





குழந்தைகளுக்கு இருப்பதுண்டு. ஒருவருக்கு ஒரு விபத்து ஏற்பட்டால்கூட, அது நமக்கு வரவில்லையே என்று குழந்தைகள் கவலைப்படுவதையும் நாம் பார்த்திருக்கிறோம், கவனித்திருக்கிறோம். வேறு மன்றங்களில் வருகிற தகராறுகள் சில சமயங்களில் முற்றிப் போவதையும் பார்த்திருக்கிறோம். அப்படித்தான் இங்கும் வந்துவிடக் கூடும், நமக்கு ஒன்றும் கவலை இல்லை. வேறு மன்றங்களில் சில சமயம் ஏதேதோ நடக்கிறதாகப் பத்திரிகைகளில் படிக்கிறோம், அது மாதிரி இங்கும்கூடத் தகராறு முற்றிவிடுமோ என்ற எண்ணம் வந்தது.

'புயல் உருவாகிக் கொண்டிருக்கிறது, புயல் வரப்போகிறது' என்பதைக் குறிக்கக் கப்பலில் புயல் சின்னக் கொடியை உயர்த்திவிடுவார்கள். இந்தக் காலத்திலும் பார்க்கிறோம். புயல் வருவதை முன்கூட்டியே அறிந்து, எச்சரிக்கை செய்வார்கள். புயல் வரப்போகிறதே என்று எச்சரிக்கையாக இருப்போம். ஆனால், புயல் அப்படியே ஒன்றுமில்லாமல் போய்விடும். அதற்குப் பிறகு புயல் இருக்காது. கேட்டால், 'எங்கோ ஓடிப் போய்விட்டது' என்று சொல்வார்கள். அம்மாதிரி இங்கே ஏற்பட்டது.

கனம் உறுப்பினர்கள் இரு சாரார் இடையே ஏற்பட்ட பொதுவான தகராறு முற்றிவிடுமோ என்ற நிலை இருந்தது. தாங்கள் அதைப் பாதுகாத்துக்கொள்ளுவீர்கள் என்ற நம்பிக்கை இருந்தாலும், சில சமயம் தங்களையுமே மீறிப் போகலாம். அப்படி ஏதாவது பெரிய தகராறாக வந்துவிடுமோ, 'வர வர மோசமாகப் போகிறதே நிலைமை' என்று சில பேருக்குக் கவலை இருந்திருக்கலாம். ஆனால், நல்ல வேளையாக அப்படியொன்றும் இல்லாமல் போய்விட்டது.

இப்படித்தான் சில நிமிஷங்களுக்கு முன்புகூட, கனம் அங்கத்தினர்—நண்பர் ஒருவர்—என்னிடம் தனியே பேசிக்கொண்டிருந்தார். 'ஏதோ தகராறு' பற்றிச் சொன்னார். நான் அவர்களுக்குச் சொன்னேன்—"அண்டை வீட்டிலே ஒண்டிக்கேட்கக் கூடாது. அங்கே கணவன் மனைவிக்குள்ளே எத்தனையோ தகராறு இருக்கலாம். தகராறு இருக்கிறதே என்று ஒண்டிக் கேட்கக் கூடாது. இன்று தகராறு இருக்கும். நாளைக்கே மறைந்துவிடும். பிறகு அனுசரணையாகப் போய்விடக் கூடும். எப்படியிருந்தாலும் ஒண்டிக் கேட்பது தப்பு" என்று நான் அவரிடம் சொன்னேன்.

யாராவது மேலே உட்கார்ந்திருக்கிறவர்கள்—மன்றத்திற்குள் இருப்பவர்கள் நினைத்திருக்கமாட்டார்கள்—'இங்கு ஏதோ பெரிய தகராறு முற்றும்போல் இருக்கிறது, பார்த்துவிட்டே போவோம், பசியாக இருந்தாலும் பரவாயில்லை, என்ன ஆகிறது என்று பார்த்துவிட்டே போவோம்' என்று நினைத்திருப்பாரானால், அவர்களுக்குக்கூட ஒரு ஏமாற்றத்தை அளிக்கக்கூடிய வகையில் ஒன்றும் இல்லாமல் போய்விட்டது.

**திரு. மு. கருணாநிதி:** விளக்கமாகவே சொல்லிவிடுங்கள்.

கண்டு நான் மகிழ்ச்சியோடு ஆச்சரியப்பட்டதுண்டு. அதெல்லாம் எனக்கு இப்பொழுது நினைவுக்கு வருகிறது. பன்னிரண்டு மணி வெய்யிலையும் பொருட்படுத்தாமல் பெண்களும், ஆண்களும், குழந்தைகளும் மாதர் சங்க நிகழ்ச்சியில் நான் சென்றிருந்த குக்கிராமத்தில் மகிழ்ச்சியோடு கலந்துகொண்டார்கள் என்றால், மாதர் சங்கத்தின் அருமையை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்றுதான் நாம் கொள்ளவேண்டும். மாதர் சங்கங்களை அவர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள் என்பதை நான் கண்டிருக்கிறேன். ஆகவே, வேறு அனுபவங்கள் ஒருசில கனம் அங்கத்தினர்களுக்கு இருந்தாலும், அந்த அனுபவத்தையே எப்போதும் வைத்துக்கொண்டு, 'மாதர் சங்கம் வேண்டாம்' என்று சொல்வது சரியல்ல. 'மாதர் சங்கமே வேண்டாம்' என்று சொன்னாலும் அரசாங்கம் அவைகளை நிறுத்த முடியாது. வேண்டாம் என்று சொல்வது அப்படிச் சொல்பவருக்கே நல்லதல்ல. எங்காவது ஒரு மாதர் சங்கம் சரியாக நடைபெறவில்லையென்றால், உண்மையான அக்கறையோடு, நம்பிக்கையோடு, அன்போடு, அது நல்ல முறையில் நடக்கத்தக்க வகையில் கனம் அங்கத்தினர்கள் உதவி செய்யவேண்டும். பெண்கள் மாத்திரம்—குறிப்பாகக் கிராமப் புறங்களில் இருக்கும் பெண்கள் மாத்திரம்—அவர்களே தங்களுடைய முன்னேற்றத்தில் ஈடுபட்டு எல்லாக் காரியங்களையும் சாதித்துவிட முடியாது. ஆண்களுடைய ஒத்துழைப்பும் அவர்களுக்குக் கட்டாயமாக வேண்டும். நகரங்களில் பெண்களுக்கான க்ளப்புகள் போன்றவை பழைய காலத்தில் பொழுதுபோக்குக்காக அமைந்திருந்தன என்றாலும், இப்பொழுது நகரப் புறங்களிலுள்ள பெண்கள் க்ளப்புகள் பொழுது போக்குக்கான இடங்களாக மட்டுமல்லாமல், அங்கேயும் நல்ல உருப்படியான வேலைகளும் நடைபெறுகின்றன. எப்படியும் மாதர் சங்கம் ரொம்ப அவசியம். அதிலே கனம் அங்கத்தினர்கள் எல்லோரும், நம்பிக்கை கொண்டுள்ளவர்கள் எல்லோரும் இன்னும் அதிக அக்கறை எடுத்துக்கொண்டு, மாதர் சங்கங்கள் சீரிய வகையில் இயங்குவதற்கு அவர்கள் தங்களுடைய ஒத்துழைப்பை அளிக்கவேண்டுமென்று நான் இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று இரண்டு மானியங்கள் சபையின் அனுமதிக்கு வந்திருக்கின்றன. அவற்றில் ஒன்று 'கதர்'. மற்றொன்று 'சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள்'. அதாவது, பஞ்சாயத்துக்களைப் பற்றியது. இன்றைய விவாதத்தில், கதரைப்பற்றி யாருமே பேசவில்லையே என்று நான் சிந்தித்துக்கொண்டிருந்தேன். அதைப் பற்றி யாரும் பேசாத அளவுக்கு அது அலட்சியமாகப் போய்விட்டதா? கவனிக்கவே இல்லையா? ஒருவேளை, பஞ்சாயத்துக்கும் கதருக்கும் தொடர்பு இருக்கிறது என்பதால் ஒரே வகையில் பேசிவிட்டார்கள் என்று நினைத்தேன். ஆனால், கனம் அங்கத்தினர் திரு. மணி அவர்கள் பேசினதைக் கேட்டபோது எனக்கு ரொம்ப ஆறுதல் ஏற்பட்டது. கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் கதரைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். கதரும் கனம் அங்கத்தினர்களுடைய கவனத்தைக் கவர்ந்திருக்கிறது



என்பதைக் குறித்து எனக்குத் திருப்தி ஏற்பட்டது. இவ்வளவு தூரம் சபைமுன் மானியத்தை வைக்கிறோம். யாருமே பேசாமல் இருக்கிறார்களே, கதர் போட்டுக்கொள்ளவில்லையென்றாலும், நாங்களெல்லோரும் கதர் போட்டுக்கொண்டிருப்பதையாவது கண்ணெடுத்துப் பார்க்கவேண்டாமா என்று நினைத்துக்கொண்டிருந்தபோதுதான் கனம் அங்கத்தினர் திரு. மணி அவர்கள் பேசியதைக் கேட்டு கவலை நீங்கிவிட்டது.

கதர் மானியத்தைப் பொறுத்தவரையில் நான் ஒன்று கனம் அங்கத்தினர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். கதர் அபிவிருத்தித் திட்டத்திற்காக இங்கு கோரப்படுகிற தொகை 15 லட்சம் ரூபாய்தான். இதையும்கூட 'இலட்சக்கணக்கான ரூபாய்' என்று சொல்லலாம் என்றாலும், கதர் அபிவிருத்தித் திட்டத்திற்காக நாம் இந்த மானியத்தில் கோரும் தொகை 15 லட்சம் ரூபாய்தான் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இதற்கென்று கதருக்கும் குறிப்பிட்ட சில கிராமக் கைத்தொழில்களுக்கும்—மத்திய கமிஷன் ஒன்று இருக்கிறது. அந்தக் கமிஷனுக்கு மத்திய அரசாங்கம் நிதி வழங்குகிறார்கள். அவர்கள் இராஜ்யங்களுக்கு நிதியைப் பகிர்ந்தளிக்கிறார்கள். இங்கே மாநில ரீதியிலும் நாம் கதர், கிராமக் கைத்தொழில் போர்டு ஒன்று வைத்திருக்கிறோம். அதன்மூலம் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. வருகிற ஆண்டில், மொத்த வரவு செலவுத் திட்டத்தைப் பார்த்தால், கதருக்கு 186 லட்ச ரூபாய் ஆகிறது. இதிலே நாம் கொடுப்பது 15 லட்சம் ரூபாய்தான். மொத்த வரவு செலவு 186 லட்ச ரூபாய் ஆகிறது. ஆனால், அதை மத்திய அரசாங்கம் கொடுக்கிறது. நாம் இப்பொழுது ஒதுக்குகிற இந்தப் பதினைந்து லட்ச ரூபாய் எதற்கு என்று கேட்டால், இது பயிற்சித் திட்டங்களுக்காகத்தான். ட்ரெயினிங் ப்ரொக்ராமுக்காகத்தான். பயிற்சிக்காக 3 லட்ச ரூபாயும், வட்டாரங்களில் செய்யப்படுகிற வேலைக்கு 4 லட்ச ரூபாயும், உத்தியோகஸ்தர்கள், மற்றவர்கள், இந்த வகையில் 7 லட்ச ரூபாயும் செலவாகிறது. இதுதான் இப்பொழுது கோரப்படுவது.

கதருக்கு என்று நாம் செலவு செய்தால் என்ன? மத்திய சர்க்கார் செலவு செய்தால் என்ன என்று கேட்கக்கூடும். 'பதினைந்து லட்ச ரூபாய்தான் நம்முடைய மாநில சர்க்கார் செலவு செய்கிறது' என்று நான் சொல்லும்போது, ஏதோ தப்பித்துக்கொள்வதற்காக நான் சொல்லவில்லை. யார் செலவு செய்தாலும், அது செய்யத் தகுந்ததா, செய்வதால் பலன் உண்டா என்பதை நாம் பார்க்கத்தான் வேண்டும்.

கனம் அங்கத்தினர் திரு. மணி அவர்கள் 'இதிலே பிரயோஜனம் இல்லை, இது விரயம்' என்று எல்லாம் சொன்னார்கள். இப்பொழுது மொத்த வரவு செலவுத் திட்டத்தில் நூற்பவர்களுக்கு மாத்திரம் இந்தத் திட்டத்தின்கீழ் ஓராண்டில் கிட்டத்தட்ட 39 லட்சம் ரூபாயும், நெய்கிறவர்களுக்கு 34 லட்சம் ரூபாயும் கொடுக்கப்படும். கதர் கூட கைத்தறியில்தான் நெய்யப்படுகிறது. கையால் நூற்கும் நூலைக் கைத்தறிக்காரர்கள் நெய்கிறார்கள்,

இவர்களுக்கு 34 லட்சம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. நூற்பவர்களுக்கு 39 லட்சம் ரூபாய் கொடுக்கப்படுகிறது என்பதை மீண்டும் தெரிவிக்கின்றேன்.

இன்னும் மற்ற இனங்கள்—டை போடுவது போன்ற காரியங்களுக்காக 5 லட்சம் ரூபாய் கிடைக்கும். இது அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு உருப்படியாகக் கிடைக்கக் கூடிய அனுகூலமாகும்.

இப்போது கைத்தறி என்றால் என்ன? நூல் மில்லிலே நூற்கப்படுகிறது. அந்த நூலைக்கொண்டு கைத்தறியில் நெய்கிறார்கள். கையினாலேயே துணி நெய்யப்படுகிற சிறப்பு இருக்கிறது. கனம் எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது இந்தக் கைத்தறிகூட ஒரு காலத்தில் மறையக்கூடும் என்று சொன்னார்கள். நான் அவ்வாறு கருதவில்லை. நம் நாட்டின் பொருளாதாரத்தை நாம் உணரவேண்டும். மற்ற நாடுகளுடைய பொருளாதாரத்திற்கும், நம் நாட்டினுடைய பொருளாதாரத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. நம் நாடு விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. விவசாயம் மாத்திரம் போதாது. இப்போது பல தொழில்கள் அங்கே ஏற்பட்டுக்கொண்டு வருகின்றன. கனரகத் தொழில்கள், சிறு தொழில்கள் எல்லாம் அமைக்கப்பட்டு வருகின்றன. என்றைக்கும் விவசாயத்தை நம்பியிருப்பதில் பிரயோஜனமில்லை. விவசாயத்தில் அதிகமான லாபம் ஒரு காலத்திலும் வராது. தொழில்துறையில் நல்ல லாபம் ஏற்படுகிறது. அதற்காக எங்கே பார்த்தாலும் விவசாயத்திற்கே நிலமில்லாதபடி பெரிய பெரிய ஆலைகளையே வைத்துக்கொண்டு போய்விடலாம் என்று யாரும் யோசனை சொல்லமாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். விவசாயம் இல்லையென்றால் மக்கள் எல்லாம் எப்படிச் சாப்பிடுவது? ஆகவே விவசாயமும் வேண்டும். தொழில்களும் வேண்டும். எங்கு பார்த்தாலும் தொழில்களை ஏற்படுத்துவது என்றால் முதலாவது போதுமான மூலதனம் வேண்டும். மேலும் உற்பத்தியாகிற சரக்குகளை எல்லாம் விற்க மார்க்கெட் வேண்டும். ஆகவேதான் தொழில் உற்பத்தியையும் சீராக வைத்திருக்கவேண்டும். அதேசமயம் விவசாயமும் பாதிக்கப்படாது பாதுகாக்கப்படவேண்டும். இப்படி இரண்டையும் இணைந்த ஒரு பொருளாதார அமைப்பு இருந்தால்தான் விவசாயத்திலும் ஈடுபடலாம். விவசாய வேலை இல்லாத நாட்களில் தொழில் துறையிலும் ஈடுபடலாம். இப்படி இரண்டும் இணைந்து செயல்படுகிறபோதுதான் தொழில் துறையில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி, விவசாயத் துறையில் இருப்பவர்களாக இருந்தாலும் சரி வளமாக வாழ முடியும். கிராமங்களில் இருக்கக்கூடிய மக்களுக்கு இன்று கைத்தறி பெருவாரியாகத் தொழில் தந்து கொண்டிருக்கிறது. இந்தக் கைத்தறித் தொழில், நம்முடைய நாட்டுப் பொருளாதார அமைப்பை வைத்துக்கொண்டு பார்க்கிறபோது ஒருநாளும் அழிந்துபோகாது. அது அழிந்து போகும் என்பதையும் என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. இன்றைக்கு ஆலை மயமாக வளர்ந்



திருக்கிற அமெரிக்க நாட்டிலேகூட கைத்தறித் துணி என்றால் ஒரு மோகம் இருக்கிறது. அவர்களுடைய நாட்டுக் கண்காட்சி ஒன்று சில காலத்திற்கு முன்பு இங்கே வைக்கப்பட்டது. அங்கே கையினால் செய்யப்படுகிற பொருள்களுக்கு ஒரு தனி மதிப்புக் கொடுத்தே பொருள்களை வைத்திருந்தார்கள். எந்தக் காலத்திலும் சரி, எந்த நாட்டிலும் சரி, கையினால் செய்யப்படுகிற பொருள் ஒருநாளும் தன் மதிப்பை இழந்துவிடாது.

கதர் எதற்கு என்று கனம் அங்கத்தினர் திரு. மணி கேட்டார்கள். நான் அவர்களையே கேட்கிறேன், கைத்தறி எதற்கு? மில்லிலே நூற்கப்படுகிற நூலைக் கொண்டு கைத்தறியிலே துணி நெய்தால், கதர் தொழிலில் நூலே கையினால் நூற்கப்படுகிறது. மறுபடியும் இந்த நூல்கள் கைத்தறியிலேயே துணியாக நெய்யப்படுகிறது. கைத்தறி போலவே இதுவும் சிறப்புடைய ஒரு தொழில் இல்லையா?

கனம் எதிர்க்கட்சித் தலைவர்கூடச் சொன்னார்கள், கைத்தறி, கதர் இவை எல்லாவற்றையும் காட்டிலும் மில்லில் வேலை செய்கிறவர்களுக்கு அதிக வருமானம் வருகிறது என்று. அது உண்மையாக இருக்கலாம். ஆனால் எத்தனைமில்கள் ஏற்படுத்த முடியும்? ஏற்படுத்தினாலும் எவ்வளவு பேருக்கு வேலை கொடுக்க முடியும்? அதிகமான பேர்களுக்கு வேலை கொடுக்கிறோம் என்றாலும் ஆலையின் வேகத்தில் உற்பத்தி செய்யப்படுகிற சரக்குகளை எப்படி விற்பனை செய்வது? அத்தனை ஆலைகளை வைப்பதற்கும், அத்தனை பேர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கும் எவ்வளவு மூலதனம் வேண்டும்? இதையெல்லாம் சிந்தித்திருக்க வேண்டும். நம்முடைய நாட்டுப் பொருளாதார அமைப்புப்படி நம் திட்டங்கள் வகுக்கப்படுவது தான் சிறப்புடையதாக இருக்கும். இன்றைக்கு 39 லட்சம் ரூபாய் நேரிடையாக கிராமங்களில் இருக்கும் தொழிலாளர்களுக்குப் போய்ச் சேருகிறது என்று சொன்னேன். இதுவே அவர்களுடைய பிரதான வருமானம் என்றுசொல்ல முடியாது. மற்ற வருமானத்தோடு இது சேரும்போது இது அவர்களுக்கு ஒரு பெரிய தொகை, பெரிய உதவி என்பதை கனம் அங்கத்தினர்கள் நினைவு கொள்ளவேண்டும். இது கிராமங்களில் உள்ளவர்களுடைய குடும்ப வருமானத்தை ஓரளவு உயர்த்தவே செய்கிறது. ஆகவே இது நமக்கும் ஒரு ஆறுதல் அளிக்கக் கூடிய திட்டமாக அமைந்திருக்கிறது. ஒரு நாளைக்கு நூல் நூற்பதன் மூலம் எவ்வளவு கிடைக்கும் என்றால் அதிகமாக நூல் நூற்பதற்கும் அந்த வருமானம் அதிகப்படுத்துவதற்கும் தான் சர்க்காவில் பல ஆராய்ச்சி செய்திருக்கிறோம். அம்பர் சர்க்கா கொண்டு வந்திருக்கிறோம். வீட்டில் இருந்தபடியே ஒரு நாளைக்கு அம்பர் சர்க்காவில் ஒரு ரூபாய், ஒண்ணரை ரூபாய் கூடச் சம்பாதிக்க முடியும். அதோடு ஒரு பெண் ஆலையில்போய் வேலை பார்ப்பது என்றால் வீட்டு வேலைகள் அத்தனையும் பாதிக்கப்படும். ஆனால் இப்போது வீட்டில் இருந்தே இந்தத் தொழிலில் ஈடுபடுவதினால் வீட்டு வேலைகளையும் கவனித்துக் கொள்ள முடிகிறது. ஆகவே நம்முடைய பொருளாதார அமைப்புக்கு ஏற்றபடி நம் கிராம

மக்களுடைய வருமானத்தைப் பெருக்க வழி செய்வது அடிப்படைக் கதர் கிராமத் தொழில்தான் என்று இப்போது கூற விரும்புகிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கதர் திட்டத்தைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றி ஒரு விளக்கம் கோருகிறேன். சென்ற ஆண்டு ஆடிட் ரிப்போர்ட்டில் . . .

MR. SPEAKER : Is the hon. Member raising any new point?

SRI K. A. MATHIALAGAN : I am referring to the audit report.

MR. SPEAKER : If the hon. Member Sri Mathialagan wants to bring in new points, he can talk afterwards and not now.

SRI K. A. MATHIALAGAN : Yes, Sir.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இங்கு கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட விஷயங்களுக்கு இப்போது பதில் சொல்கிறேன். கனம் அங்கத்தினர் கேட்க விரும்புவதை கேள்வியாகக் கேட்டால் பதில் சொல்லுகிறேன். அதற்கு இப்போது பதில் சொல்ல முடியாது என்பதல்ல. இப்போதே நேரமாகிவிட்டது. அதற்குப் பதில் சொல்வது என்றால் இன்னும் பத்துப் பதினைந்து நிமிடம் ஆகும். சபையின் காலத்தை நான் இப்போது அதிகமாக எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. ஆகவே கனம் அங்கத்தினர் தாம் கேட்கவிரும்புவதைக் கேள்வியாகப் பின்னர் கேட்கலாம்.

அடுத்தபடியாக கிராம அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இதிலே ஒன்று. இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கக்கூடிய பலர் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாக இருக்கிறார்கள். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவராக வரக்கூடாது என்ற கருத்தை ஒரு சிலர் வற்புறுத்தி வருகிறார்கள். நாம் அதற்குத் தடை போடவில்லை. ஆகையினால் தான் பல பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் இருப்பதனால் பல அரிய கருத்துக்களை எல்லாம் இங்கே அவர்கள் தங்கள் தங்கள் அநுபவத்தை வைத்துக்கொண்டு நமக்கு எல்லாம் எடுத்துக் காட்ட முடிந்ததைப் பார்த்தோம். அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களுக்கு எல்லாம் நான் பதில் சொல்லாமையினால் கவனிக்கவில்லையென்று நினைத்துக்கொள்ளக்கூடாது. அவற்றைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வேன் என்று கூற விரும்புகிறேன்.

முக்கியமாக சேலம் மாவட்டத்தில் இருந்து வந்த திரு. கமலநாதன் சில அரிய கருத்துக்கள் சொன்னமைக்குப் பாராட்டுகிறேன். தம் அநுபவத்தோடு சொன்னார்கள். குறிப்பாக பாட





புத்தகங்கள் விஷயத்தில் அந்த அந்த பஞ்சாயத்து யூனியன்கள் நிர்ணயம் செய்துகொள்ளட்டும் என்று சொன்னால் ரொம்ப சங்கடம் வருகின்றது. தாட்சண்யம் வந்துவிடுகிறது. அதனால் சரியான பாடப்புத்தகங்கள் நிர்ணயிக்கப்படுவதில்லை. ஆகவே மாவட்ட ரீதியில் புத்தகங்களை நிர்ணயித்து விட்டால் தேவலை என்று சொன்னார்கள். மாவட்ட ரீதியில் அல்லது மாவட்டங்களைச் சேர்த்து மொத்தமாக இதைப்பற்றி ஆராய்ந்தாவது எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அனுப்பலாம் என்ற யோசனை இருக்கிறது. இந்த மன்றத்தில் உள்ள கனம் அங்கத்தினர் அவர்களே அதைப்பற்றி யோசனை சொன்னதற்குப் பாராட்டுகின்றேன்.

இன்னொன்றையும் அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி நேற்று முன்தினம் கல்வி மானியத்தின்போதே விளக்கிக் கூறினேன். கல்வித் துறையினர் அது பற்றிக் கவனித்து ஒரு வரம்பு கட்டியிருக்கிறார்கள். ஒரு பஞ்சாயத்து யூனியனில் இருக்கும் 1-30 p.m.
பள்ளிக்கூடங்களில் 35-க்குக் குறையக்கூடாது என்பதுதான் அந்த உத்திரவினுடைய அர்த்தம். மொத்தத்தில் 35-க்கு மேல் போனால் செலவு அதிகமாகிறது. இந்த உத்தரவை அமுலுக்குக் கொண்டு வருவதன்காரணமாக இப்போது இருக்கக் கூடிய ஆசிரியர்கள் வேலையிலிருந்து நீக்கப்படமாட்டார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துத் தலைவர்களாக இருப்பவர்கள் பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்களாக இருப்பது நல்லதல்ல என்று சொன்னார்கள். பஞ்சாயத்துக்கும் பஞ்சாயத்து யூனியனுக்கும் ஒரு சம்பந்தம் இருக்கவேண்டும். ஜில்லாபோர்டு, பஞ்சாயத்து என்று இருந்தபோது அந்தச் சம்பந்தம் இல்லை. ஒருவருக்கொருவர் முரண்பாடு கொண்டு போராடிக் கொண்டிருந்தார்கள். ஒரு மார்க்கட்டை டிஸ்ட்ரிக் போர்டு வைத்துக் கொள்வதா, அல்லது கிராமப் பஞ்சாயத்து வைத்துக் கொள்வதா என்பதிலே தகராறு வரும். இப்போது பஞ்சாயத்துக்கள் ஒன்றுபட வேண்டுமென்ற காரணத்தினாலேயே பஞ்சாயத்து—பஞ்சாயத்து யூனியன்கள் என்று அமைத்திருக்கிறோம். பஞ்சாயத்துத் தலைவர்களாக இருப்பவர்கள் பஞ்சாயத்து யூனியனில் பிரதிநிதிகளாக வருவதுதான் சிறப்பு. பஞ்சாயத்துத் தலைவரை விடுத்து வேறு ஒருவரைப் பஞ்சாயத்து யூனியன் பிரதிநிதியாக வைப்பது சரியல்ல. பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் செய்யும் காரியங்களிலே ஒரு உடன்பாடு இருக்கவேண்டும் என்ற முறையில்தான் இப்போது அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த முறையை மாற்றுவது உசிதமல்ல என்று சொல்ல விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பஞ்சாயத்தில் இருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதிகாரம் இல்லாமல், ஓட்டுரிமை இல்லாமல் பஞ்சாயத்து யூனியன் கூட்டங்களுக்குப் போகலாம் என்று சொன்னால் போதுமா என்று குறிப்பிட்டார்கள். ஓட்டுரிமை வேண்டுமென்ற அவசியமில்லை. சட்ட மன்ற அங்கத்தினர் என்ற

உத்தரவுகளை நிறைவேற்றவேண்டியவர்கள் கமிஷனர்கள். தலைவர் உத்தரவுப்படிதான் செய்யவேண்டும். கமிஷனர் தன் கடமையை நன்கு ஆற்றுவது தலைவர்களுக்கு ஒரு பாதுகாப்பு போலாகும். அப்படியில்லாத இடங்களில் தலைவர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகுகிறார்கள். கமிஷனர் தலைவர் உறவு எப்படி இருக்க வேண்டும் என்பதெல்லாம் அப்போதைக்கப்போது விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. தலைவர்களில் சிலர் தவறு செய்பவர்களும் உண்டு, கமிஷனர்களில் தவறு செய்கிறவர்களும் இருக்கிறார்கள். இதையெல்லாம் கவனித்து அரசாங்கம் அப்போதைக்கப்போது அதிகாரிகள் ஷ்து வேண்டிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. ரோடுக்கு பணம் போதவில்லை என்று சொன்னார்கள். புது ரோடுகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். ரோடுகளை மெயின்டெனன்ஸ் செய்ய அதிகச் செலவாகிறது. அரசாங்கத்தின் கருத்து புது ரோடுகளைப் போடுவதை விட இருக்கின்றவைகளை பராமரிப்பது முக்கியமானது என்பதுதான். புது ரோடுகள் வேண்டாமென்று சொல்லவில்லை. அதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. விகிதாசாரம் பற்றி கூறப்பட்டது, ரோடின் நீளத்தை வைத்துச் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். எல்லாவற்றையும் கவனித்துத்தான் செய்கிறோம். பின்னர், நீர்ப்பாசனத் திட்டங்கள், குடிமராமத்து வேலைகள் இதில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஓரளவு பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. கொடுக்கப்படுகிற பணம் போதாது என்று சொன்னார்கள், போதாததுதான். குடிமராமத்து வேலைகளை விவசாயிகள் தங்களுக்குள்ளே ஒரு வரி விதித்து அதை வைத்துக் கொண்டு கால்வாய் மராமத்தில் கவனம் செலுத்தி வந்தார்கள். இப்போது எங்களால் சேர்ந்து செய்ய முடியவில்லை, நீங்களே வரி விதித்து செய்து கொள்ளுங்கள் என்று என்னிடமே கூறியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் செய்யாமல் பஞ்சாயத்தின் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது. அவர்களும் ஏக்கருக்கு கால் அல்லது அரை ரூபாய் என்று விதிக்கிறார்கள். ரொம்பநாட்களுக்கு முன்பு தாராபுரத்தில் 2 ரூபாய் கொடுக்கிறோம், வசூல் செய்து கொள்ளுங்கள் என்று என்னிடம் கூறியிருக்கிறார்கள். ஆகவே மக்கள் இதில் ஊக்கம் காட்டவேண்டும். பின்னர் லெவி போடுவதில் வரம்பு கட்டவேண்டுமென்று சொன்னார்கள். அப்போது பஞ்சாயத்தும், பஞ்சாயத்து யூனியனும் எதற்கு? பின், டிசென்ரலைசேஷன் எதற்கு? 12 சதவிதம் தான் செலவழிக்கப்படுவதாகச் சொன்னார்கள். கணக்கைப் பார்த்தால் வரி மீபூராவும் கிராமங்களுக்கு செலவிடுவதைக் காட்டமுடியும். நான் ஒரு அஷ்யூரன்ஸாக சொல்லவில்லை. நிலவரி எவ்வளவு கிடைக்கிறதோ அதை அப்படியே பங்கிட்டு கிராமங்களுக்கு கொடுப்பது என்ற யோசனை இருக்கிறது. இப்போதும் செலவாகிறது, புதிதாக தானம் கொடுப்பதல்ல. நிலவரி எவ்வளவு வருகிறதோ அதை அப்படியே கிராமங்களுக்கு பகிர்ந்து கொடுத்து விடலாம், கொடுக்கலாம் என்பதுபற்றி அரசாங்கம் தீவிரமாக யோசித்துக்கொண்டிருக்கிறது. 12 சதவிகிதம் என்று சொல்லப்பட்டது, யார் யார் என்னென்ன வகையில் செலவு செய்தாலும் இந்த விகிதத்தை விட அதிகமாகச் செலவாகிறது. 30, 40,



42 சதவிகிதம் என்று அந்தந்த இடத்தைப் பொறுத்து, அம்மக்கள் ஆர்வத்தைப் பொறுத்து, அவர்கள் வேலை செய்யும் ஆர்வத்தைப் பொறுத்து ஆகிறது. அடுத்தபடியாக மதிய உணவு பற்றி சொன்னார்கள். இப்பொறுப்பு பஞ்சாயத்து தலைவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆலோசனைக் குழுவில், நாங்கள் அதிகமாக கொடுக்கவேண்டுமென்று நினைக்கிறோம், அப்படிக் கொடுப்பதாக இருந்தால் நாங்கள் ஒரு லெவி போட்டுக் கொள்ளலாமா என்று கேட்டார்கள். அதற்கு அனுமதி கொடுக்கலாம் என்று சொன்னோம். அரசாங்கமே எல்லாவற்றையும் கொடுக்கவேண்டுமென்றால் எப்படி? கல்வித்துறைக்காக மான்யம் எவ்வளவு அதிகப்படுத்தப் பட்டிருக்கிறது என்று பார்த்தீர்கள். ஆகவே கிராம மக்களும் இதில் ஊக்கம் காட்டி ஆக்கம் அளிக்கவேண்டும். எல்லோரும் சேர்ந்து ஏழைக் குழந்தைகளுக்கு உணவு அளிப்பதுதான் திட்டம். மத்திய உணவுத் திட்டத்தைப் பொறுத்தமட்டில் பஞ்சாயத்து தலைவர்கள் மேலும் அதிக அக்கரை எடுத்துக் கொள்ள வேண்டும். கிராம மக்களும் அதில் தொடர்ந்து அக்கரை எடுத்துக் கொள்ள வேண்டும். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ரேடியோ சூப்பர்வைஸர்கள் பற்றி சொன்னார்கள். அவர்கள் கூறியபடி தாலுகாவிற்கு ஒன்று என்று சொன்னால் போதிய வேலை இருக்காது. ஜில்லாவை இரண்டு மூன்று பாகங்களாகப் பிரித்து எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு வைத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறோம். இன்று விவசாய உற்பத்தியைப் பெருக்குவது மிக முக்கியமானது. கிராமத் தொண்டர் படை பற்றி யாரும் சொல்லவில்லையே என்று ஒருவர் கூறினார். அவர்களை சண்டைக்கு அனுப்பப் போவதாக சிலர் பயமுறுத்துகிறார்கள். அவர்களும் சைன்யத்தில் சேருவதாக நினைத்துக் கொள்ள வேண்டாம். தொண்டர் படை என்பது அருமையான பெயர் கிராம மக்களுக்கு பணியாற்ற வேண்டும். அதற்கு மற்றவர்கள் ஊக்கம் அளிக்க வேண்டும். விவசாய உற்பத்தியைப் பெருக்க பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் கிராமத் தொண்டர் படைகளின் உதவியோடு அதில் போதிய கவனம் செலுத்த வேண்டும். பின்னர் சுப்பையா முதலியார் அவர்கள், பொது நிலங்கள் இருக்கின்றன, அங்கு கிணறு வெட்ட கடன் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அது அரசாங்கத்தின் யோசனையில் இருக்கிறது. ஸ்டாடிஸ்டிக்கல் ஆபீசர்கள் பற்றி திருமதி. குழந்தையம்மாள் அவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு ப்ளாக்கிற்கும் ஒவ்வொரு ஆபீசர் வேண்டாம் என்று. இப்போது 375-ல் 124 ஆபீஸ்கள்தான் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. புள்ளிவிவரங்களை நாம் அடியோடு புறக்கணிக்க முடியாது. எந்தத் திட்டம் நிறைவேற வேண்டுமானாலும் நமக்கு அப்போதைக்கப்போது புள்ளிவிவரங்கள் தெரிய வேண்டும். ஸ்டாடிஸ்டிக்ஸ் வேண்டாமென்று சொல்வதற்கில்லை. எக்ஸ்டன்ஷன் ஆபீசர்கள் போன்றவர்களைப் பற்றியெல்லாம் இங்கு சொன்னார்கள். எந்த அளவிற்கு நமக்கு வேண்டுமோ அந்த அளவிற்குத்தான் வைத்திருக்கிறோம். ஸ்கீமாட்டிக் பட்ஜட்டில் 25 லட்சம் ரூபாய் என்றால் அதில் 2 லட்சம் ரூபாய் தான் உத்தியோகஸ்தர்களுக்காக ஆகும். எல்லாமே உத்தியோ

மரியாதை இருக்கிறது. சட்ட மன்ற அங்கத்தினர்கள் பஞ்சாயத்து அங்கத்தினர்களை விட அதிக அனுபவம் கொண்டவர்களாக இருப்பார்கள் என்ற காரணத்தினால் நல்ல வழிவகைகளை எடுத்துச் சொல்லலாம் என்றுதான் பஞ்சாயத்து யூனியன் கூட்டங்களுக்குப் போகலாம் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இலட்சம் ஓட்டர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற அங்கத்தினர்களுக்குப் பஞ்சாயத்து யூனியன் கூட்டத்தில் ஓட்டு செய்ய உரிமை கிடையாது என்று சொன்னால் அது நியாயமா என்று கேட்டார்கள். இப்படியே தொடர்ந்து பேசலாம். மக்கள் மன்றம் இருக்கிறது. பாராளு மன்றம் இருக்கிறது. நாம் ஒரு லட்சம் ஓட்டுப் பெற்றுத் தேர்ந்தெடுக்கப்படுகிறோம் என்று சொன்னால் அவர்கள் ஐந்து லட்சம் ஓட்டுப் பெற்றுத் தேர்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் இந்த மன்றத்திலே வந்து உட்கார்ந்து கொண்டு ஓட்டுச்செய்யும் உரிமை வேண்டுமென்று சொன்னால் அது முடியுமா? மன்றத்தின் நடவடிக்கைகளை அருகில் இருந்து வேண்டுமானால் பார்த்துக் கொண்டிருக்கலாம். அந்தந்த மன்றத்திலே அங்கம் வகிப்பவர்களுக்குத்தான் உரிமை உண்டு. நம்முடைய ஜனநாயக அமைப்பை உணர வேண்டும். நமது அரசியலமைப்பை நாம் மனத்தில் கொள்ளவேண்டும்.

பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர், உப தலைவர்களைத் தேர்தெடுப்பதிலே சில தவறுகள் இருக்கின்றன. என்று குறிப்பிட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது என்னவென்றால், 'பஞ்சாயத்துத் தலைவரை கிராமத்தில் உள்ள மக்கள் எல்லாம் சேர்ந்து தேர்ந்தெடுக்கவேண்டும், பஞ்சாயத்து யூனியன் தலைவரை அந்த வட்டாரத்தில் உள்ள பஞ்சாயத்து மக்கள் எல்லாம் சேர்ந்து தேர்ந்தெடுக்கவேண்டும்' என்று சொன்னார்கள். பஞ்சாயத்து அங்கத்தினர் எல்லாம் சேர்ந்து பஞ்சாயத்து யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று ஒரு சிலர் சொல்லலாம். பஞ்சாயத்து யூனியனில் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் தொடர்பு வேண்டாமா? இப்போது நம்முடைய கனம் அங்கத்தினர்கள் 'நாங்கள் எல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்' என்ற முறையில் பேசுவது போல், பஞ்சாயத்து யூனியன் தலைவரும், பஞ்சாயத்துத் தலைவரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்ற நிலைமை இருக்குமானால், அவர்களுக்கு 'தாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்' என்ற உணர்ச்சி இருக்குமாதலால் அவர்களுக்கும் யூனியன் அங்கத்தினர்களுக்கும் ஒரு தொடர்பு இல்லாத நிலைமை உருவாகிவிடும். வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும்போது அதை மற்ற அங்கத்தினர்கள் ஏற்றுக் கொள்ளாமல் போகலாம். அந்த மாதிரி நிலைமைகளைத் தவிர்க்க முடியாது. அதைத் தவிர்க்க என்ன வழி? ஜனநாயக முறையிலே ஒரு சர்வாதிகாரி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவர் பார்த்து 10 பேரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அப்போது வேண்டுமானால் ஒற்றுமை ஏற்படக்கூடும். அந்த முறை ஏற்பட்டால் அதைப் பஞ்சாயத்து என்று எப்படிச் சொல்ல முடியும்? அது எப்படி பொருந்தும்? அது தொன்றுதொட்டு நாடு போற்றி வரும் முறைக்கு முரண்பாடாக இருக்கும். ஆகவே, எல்லோரையும் ஒரே மாதிரியாகத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.



பொதுவாகக் குறை சொல்வது சுலபம். இதுவரை செய்த செலவெல்லாம் வீண் செலவு என்று கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். பொதுவான ஒரு குற்றச்சாட்டு என்னவென்றால், இந்த அமைப்பின் காரணமாகக் காங்கிரஸ் கட்சிப் பிரசாரம் நடக்கிறது என்பதுதான். அவ்வாறு கனம் கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் சொன்னார்கள். இந்த அமைப்பினால் ஒன்றும் பலன் இல்லையென்று பலனையே பார்க்காதவர்கள் சொல்லலாம். அவ்வளவு தெரியாதவர்களா இந்த மன்றத்திலே இருக்கிறார்கள். ஏதோ வாதத்திற்காகச் சொல்லலாமே தவிர, எல்லா கனம் அங்கத்தினர்களுக்கும் தெரியும்,—பஞ்சாயத்துக்கள் பற்றிய புதிய சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத்து யூனியன்களும் நிறைவேற்றி வரும் பல திட்டங்களைப் பற்றியும், சமுதாய நலத் திட்டங்களைப் பற்றியும் எல்லா கனம் அங்கத்தினர்களும் நன்றாக உணருவார்கள். விவசாய உற்பத்தியிலே கிராம மக்கள் எல்லாம் உற்சாகத்தோடு ஈடுபட்டிருக்கிறார்கள். பல குழுக்களிலே அங்கத்தினர்கள் கலந்து கொண்டிருப்பார்கள். நானும் கலந்து கொண்டிருக்கிறேன் பெரும்பாலும் இளைஞர்கள் வருகிறார்கள். மிகவும் விழிப்போடு இருக்கிறார்கள். மாறுபட்ட கொள்கையைச் சார்ந்தவர்கள் கூட இருக்கிறார்கள். சீரிய கருத்தோடு, ஆர்வத்தோடு நடத்துகிறார்கள். காங்கிரஸ் ஆட்சி வந்த பிறகுதான் கிராம அபிவிருத்தித் திட்டத்தை எடுத்துக் கொண்டார்கள். காங்கிரஸ் ஆட்சி வந்தது பெரிய வரப்பிரசாதம் என்று மக்கள் சொன்னால் அதை எப்படித் தவிர்ப்பது? காங்கிரசுக்குப் புறம்பாக உள்ளவர்கள், எதிர்ப்பாக உள்ளவர்கள் அவர்கள் ஆட்சிக்கு வரும்போது காங்கிரஸ் கட்சியை விட நன்றாக நடத்தினார்கள் என்றால், ஒருவேளை அந்தக் கருத்து மாறலாம். எவ்வளவுதான் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் மனதிலே சங்கடப்பட்டுக் கொண்டாலும் அந்தக் கருத்தைத் தவிர்க்க முடியாது. நல்ல காரியங்களைச் செய்தால் காங்கிரசுக்கு நல்ல பெயர் வருகிறது. கெட்ட காரியங்களைச் செய்தால் கெட்ட பெயர் வரும். நாங்கள் கட்சிப் பற்றின்றி ஆட்சி நடத்தி வருகிறோம். அதை அங்கத்தினர்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். நல்ல காரியங்களைச் செய்கின்ற காரணத்தினால் மக்களில் பெரும்பாலோர் காங்கிரசிடம் அனுதாபம் உடையவர்களாக இருக்கிறார்கள். அதைத் தவிர்க்க முடியாது. சில அங்கத்தினர்கள், தலைவருக்கும் கமிஷனருக்கும் முரண்பாடு இருப்பதாகச் சொன்னார்கள். நான் ஒன்று கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கமிஷனர்களை ஆணையாளர்கள் என்று சொல்ல வேண்டாம். (Commission means to order) கமிஷன் என்று சொன்னால் ஆணை போடுவது என்று வைத்துக்கொண்டு ஏன் ஆணையாளர்கள் என்று போடுகிறீர்கள் என்று கேட்டேன். இதை நான் சொன்னால் தமிழுக்கு விரோதமாகச் சொல்கிறேன் என்று சொல்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்

126. *Notification issued with G.O. Ms. No. 10, Public (General-M), dated 3rd January 1963 regarding the use of Tamil in respect of all official communications from certain Government offices of the Animal Husbandry Department with effect on and from the 14th January 1963. [Laid on the Table of the House under section 6 of the Madras Official Language Act, 1956 (Madras Act XXXIX of 1956).]*

### B. Reports, Notifications and other papers.

* 63. *Review of Progress for 1962–63 and the Programme for 1963–64 of the Harijan Welfare Department.*

* 64. *Policy Note on Community Development and Panchayat Development issued under Demand No. XXIII (in English).*

† 65. *Short Review of the activities of the Stationery and Printing Department for the first half of the year 1962–63 (for the period from 1st April to 30th September 1962).*

---

*** Circulated to Members on 14th March 1963.**
**† Placed in the Legislature Library for perusal by Members.**

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Monday, 18th March 1963.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPPANDIAN) in the Chair.

## I. — QUESTIONS AND ANSWERS

## STARRED QUESTIONS.

### பஞ்சாயத்து யூனியன்களில் பணியாற்றும் ஆசிரியர்கள்

* 268 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களில் பணியாற்றும் ஆசிரியர்களை கலெக்டர் நிர்வாகத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கு சர்வீஸ் கண்டிஷன்களுடன் எடுத்துக்கொள்வது சம்பந்தமாக மாவட்ட மன்றங்கள் மூலமாக கோரிக்கைகள் வந்தனவா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஆம்; அவைகளின் மேல் தக்க உத்திரவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

**திரு. எஸ். மாதவன்:** பஞ்சாயத்து யூனியன்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு சர்வீஸ் ரிஜிஸ்டர் வைக்காமல் இருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா? உடனடியாக சர்வீஸ் ரிஜிஸ்டர் வைக்குமாறு அரசாங்கம் உத்தரவிடுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அதைப்பற்றி என்னிடம் இப்பொழுது தகவல் இல்லை.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை:** இப்பொழுது அரசாங்கம் வெளியிட்டிருக்கும் புதிய ஜி. ஓ. வின் காரணமாக ஒரு ஆசிரியருக்கு 79 பிள்ளைகள் இருந்தால், அதற்கு மேல் தான் இரண்டாவது ஆசிரியர் போடவேண்டுமென்று அரசாங்கம் வெளியிட்டிருக்கும் உத்தரவு கூறுவதால், அனேக ஆசிரியர்களுக்கு வேலை இல்லாமல் போகும். இதைப்பற்றி அரசாங்கம் கவனிக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதைப்பற்றி முன்பே இரண்டு, மூன்று முறைகள் விளக்கியிருக்கிறேன். 35 சத வீதம் இருக்க வேண்டுமென்ற உத்தரவு ஒவ்வொரு பள்ளியிலும், ஒவ்வொரு வகுப்பிலும் அல்ல. அந்தந்த யூனியன், அதற்கு மேலும் அந்தந்த வட்டாரத்திலும் மொத்தமாகக் கணக்குப் பார்த்து இதைச் சரிக்கட்டவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய எண்ணம்.

### காடுகள் (அறந்தாங்கி வட்டம்)

* 269 கேள்வி.—திரு. ஆ. துரை அரசன்: கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தாலூகாவில் அரசினருக்குச் சொந்தமான காடுகள் எத்தனை ஏக்கர்?

[திரு. எம். பக்தவத்சலம்] [16th March 1963

கஸ்தர்களுக்குத்தான் போகிறது என்று சிலருக்கு பிரமை ஏற்படுகிறது. உத்தியோகஸ்தர்கள் இல்லாமல் எப்படி வேலை செய்வது? நீர்பாசன இலாகா, விவசாய இலாகா இப்படியெல்லாம் இருக்கின்றன, அவைகளில் உத்தியோகஸ்தர்கள் இல்லாமல் எப்படி வேலை செய்வது? எதற்கு என்னென்ன செலவு செய்ய வேண்டுமோ அது செலவு செய்யப்படுகிறது. அனாவசியமாக ஒன்றும் செலவு செய்யவில்லை. கோவாப்பரேடிவ் சப்-ரெஜிஸ்ட்ரார்ஸ் பற்றி சொன்னார்கள். கூட்டுறவு பாங்குகள் கடன் கொடுக்கிறார்கள். அவர்களே நியமிக்கிறார்கள், கண்காணிக்க, வசூல் செய்வது இவற்றிற்காக கூட்டுறவு பாங்குகளே நியமிக்கிறார்கள்.

ஒன்று நான் கூற விரும்புகிறேன். அப்போதைக்கப்போது இதெல்லாம் கண்காணிக்கப்பட்டு, ஆலோசனைக் குழு கூட்டங்கள் நடைபெறுகின்றன, அவர்களுடைய ஆலோசனைகளைக்கூட என்னென்ன வகையில் செயல்படுத்தலாம் என்று செயல் படுத்துவது, ஏதாவது உத்தியோகஸ்தர்கள் தவறு செய்தார்கள் என்றால், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வது, அமைப்பை மாற்றுவது, சில அதிகாரிகள் அவசியம் இல்லை என்றால் அதில் கவனம் செலுத்துவது, எல்லாவற்றிலும் அப்போதைக்கப்போது அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது என்று சொல்லி எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

SRI K. A. MATHIALAGAN : On a point of personal explanation regarding the point I raised . . . .

MR. SPEAKER : Was it not postponed to some other day?

SRI K. A. MATHIALAGAN : By way of personal explanation, Sir.

MR. SPEAKER : இதிலே எப்படி பர்சனல் எக்ஸ்ப்ளனேஷன் வரும்.?

SRI K. A. MATHIALAGAN : I want to make a personal explanation.

MR. SPEAKER : The hon. Member, Sri K. A. Mathialagan has neither participated in this debate, nor has anybody mentioned his name. Hence what is the explanation the hon. Member wants to give?

SRI K. A. MATHIALAGAN : I want to present certain points.

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் 'பிரசன்ட்' செய்தால், அப்புறம் கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டுமே?

SRI K. A. MATHIALAGAN : Please allow me . . . ;



16th March 1963]

MR. SPEAKER : May I know under what rule the hon. Member, Sri K. A. Mathialagan wants to speak now when the Hon. Minister has finished his reply?

SRI K. A. MATHIALAGAN : நான் ஒன்றே ஒன்று கேட்க விரும்புகிறேன்.....

MR. SPEAKER : The hon. Member, Sri K. A. Mathialagan may put it in the form of a short notice question. I will allow hundred questions.

The question is—

'That the allotment of Rs. 15,00,000 under Demand No. XXII Khadi be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 15,00,000 under Demand No. XXII Khadi.'

The Demand was put and carried and the grant was made.

MR. SPEAKER : The question is—

'That the allotment of Rs. 5,75,43,500 under Demand No. XXIII—Community Development Projects, etc., be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

MR. SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 5,75,43,500 under Demand No. XXIII—Community Development Projects, etc.'

The Demand was put and carried and the grant was made. 1-53 p.m.

MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m., on Monday, the 18th March 1963.

The House then adjourned.

## IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

125. *Notification issued with G.O. Ms. No. 4598, Revenue, dated the 15th December 1962 regarding effecting of ryotwari settlement of Kesava Rao Mohite Thottam Inam Estate in Thanjavur district taken over by the Government under the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948. [*Laid on the Table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1948).]

(இ) அவைகளின் வளர்ப்புக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

**கனம் திரு. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** (அ) அறந்தாங்கி தாலுகாவிலுள்ள கீழ்க்கண்ட நான்கு எஸ்டேட் காடுகளும் காட்டு இலாகாவின் ஆதிக்கத்தில் உள்ளன—

| | | |
|---|---|---|
| 1. மணமேல் குடிக்காடு | 493.80 | ஏக்கர். |
| 2. குரும்பூர்க் காடு | 954.76 | ஏக்கர். |
| 3. எட்டியத்தலைக் காடு | 197.25 | ஏக்கர். |
| 4. மேற்பனைக் காடு | 388.54 | ஏக்கர். |
| மொத்த பரப்பு | 2,034.35 | ஏக்கர் |

(இ) இக் காட்டுப் பகுதிகளின் வளர்ச்சிக்காக கீழ்க்கண்ட திட்டங்கள் காட்டிலாகாவால் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

(1) குரும்பூர்க் காடு : 1961-ல் 100 ஏக்கரில் முந்திரி பயிரிடப்பட்டது.

(2) எட்டியத்தலைக் காடு : 1960-ல் 80 ஏக்கரில் முந்திரி பயிரிடப்பட்டது.

(3) மேற்பனைக் காடு : 1962-ல் 100 ஏக்கரில் முந்திரியும், யூக்கலிப்டஸ் மரங்களும் பயிரிடப்பட்டன.

(4) மணமேல்குடிக் காடு : இங்கே வருடம் ஒன்றிற்கு 40 ஏக்கர் விதம் தென்னை மரங்கள் வைத்துப் பயிரிடப்படும்.

**திரு. ஆ. துரை அரசன் :** குரும்பூர் காட்டில் ஒரு ஏகரா பயிரிடுவதற்கு அந்த பூமியில் உள்ள மரங்களை வெட்டிச் சுத்தம் செய்வதற்கு வெட்டுச் செலவு ரூ. 750 என்றும், ஏலம் போனது ரூ. 75 என்றும் அரசினருக்குத் தெரியுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் :** இப்பொழுது அந்தத் தகவல் என்னிடம் இல்லை.

## ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் (மேல் சட்டமன்றம்)

* 270 கேள்வி.—**திரு. ம. கமலநாதன் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குத் தமிழ்நாடு மேல் சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் அளிக்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No.

**திரு. எஸ். மாதவன் :** ஆரம்பப் பள்ளிகள் அதிகமாக திறக்கப்பட்டு, ஆரம்பப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஏராளமாகப் பெருகிவிட்டதனுல், அவர்களுக்கு தனிப் பிரதிநிதித்துவம் கொடுப்பது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆசிரியர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆரம்ப ஆசிரியர்களுக்கு தனிப் பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமென்று அரசாங்கம் கருதவில்லை.



**திரு. எம். எஸ். செல்வராஜன் :** ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு தனிப் பிரதிநிதித்துவம் கொடுப்பதில் அரசியல் சட்டபூர்வமாக ஏதேனும் தடை இருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இப்பொழுதிருக்கிற சட்டப்படி தான் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறுகிருர்கள். அந்த 'வோடர்ஸ் லிஸ்டில்' ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களையும் வோட்டர்களாகச் சேர்க்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம் பக்தவத்சலம் :** சற்று முன்புதான் விடை அளித்தேன். இப்பொழுது அரசியல் அமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டிருக்கிற சில ஆசிரியர்களுக்குத்தான் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** நாம் பெரிய அளவுக்கு ஏற்றுக்கொண்டிருக்கக்கூடியதும், ஜனநாயகத்திற்கு தாயகம் என்று கருதப்படுகிற கிரேட் பிரிட்டனில் இருக்கக்கூடிய அரசியல் சட்டப் பிரகாரம் ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு என்று தனியாகவும், மற்ற ஆசிரியர்களுக்கு என்று தனியாகவும் ஏதேனும் பிரதிநிதித்துவம் இருக்கிறதா ? அங்கு என்ன முறை பின்பற்றப்படுகிறது என்று அறியலாமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் இப்பொழுது அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனுல், இம்மாதிரி 'ஃபங்ஷனல் ரெப்ரெஸெண்டேஷன்' ஆசிரியர்களுக்கு மட்டும் இப்பொழுது இருக்கிற சட்டப்படி அளிக்கப்பட்டிருக்கிறது. வேறு ஒரு கருத்தும் நிலவி வருகிறது. இதை எடுத்துவிடலாம், ஆசிரியர்களுக்கு மட்டும் இம்மாதிரி பிரதிநிதித்துவம் வேண்டாம், வேறு விதத்தில் பிரதிநிதித்துவம் ஏற்பாடு செய்யவேண்டும் என்றுங்கூட கருத்து இருக்கிறது. இப்பொழுது அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில், இதை மாற்றியமைக்க வேண்டும் என்று அரசாங்கம் கருதவில்லை.

**திரு. ஆ. துரை அரசன் :** பஞ்சாயத்துக் கூட்டு மன்ற கல்விக் குழுக்களில் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு உத்தேசம் ஒன்றுமில்லை.

**திரு. ஆ. தங்கவேலு :** ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் சிறந்த பணியால் நாட்டிலுள்ள மக்கள் அமைச்சர்கள், தலைவர்கள் ஆவதற்கும் வழி இருக்கிற காரணத்தினுல் அவர்களுக்கு மேல் சட்ட மன்றத்தில் பிரிதிநிதித்துவம் கொடுப்பதுபற்றி நன்றியறிதல் காட்டுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுடைய அரிய பணிக்கும், சட்ட மன்றத்தில் அவர்கள் பிரதிநிதித்துவம் பெறுவதற்கும் சம்பந்தம் ஒன்றுமில்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** பொதுவாக மேல் சபைகளுடைய மெம்பர்கள் முறையை மாற்றி அமைக்கிற விதத்திலும், உழவர்களுக்கும், கூட்டுறவு சங்கங்களில் இருப்பவர்களுக்கும், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும் சேர்த்து அவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கக்கூடிய விதத்திலும் மத்திய சர்க்கார் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்களா? அப்படியிருந்தால், நமது மாநில அரசாங்கம் அதற்கு என்ன பதில் அனுப்பியது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** எனக்குத் தெரிந்தவரையிலே அவ்வாறு மத்திய சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பது சம்பந்தமாக, சர்க்காரிலே வேலை செய்கின்ற ஆசிரியர்கள் அபேட்சகர்களாக நிற்க முடியாத நிலைமை இருக்கிறது. 'பீபிள்ஸ் ரெப்ரெஸன்டேஷன் ஆக்ட்'-டின்படி, அவர்கள் சர்க்காரிலே உத்தியோகம் வகிப்பதினால், அவர்கள் அபேட்சகர்களாக நிற்பதற்கு 'டிஸ்குவாலிபிகேஷனை' இருக்கிறது. ஆகவே, வாக்களிப்பதற்குத்தான் சர்க்காரில் வேலை செய்கிற எல்லா ஆசிரியர்களுக்கும் வசதி இருக்கிறதே தவிர, அவர்கள் அபேட்சகர்களாக நிற்கமுடியாத ஒரு சிக்கல் இருக்கிறது. இதைப் போக்குவதற்கு சர்க்கார் ஏதாவது ஒரு பரிகாரம் தேடுவார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

### அண்ணாமலை சர்வகலாசாலையில் தொழிற்பயிற்சிப் பிரிவு (கடன் வசதி)

*271 கேள்வி.—திரு. எம். வி. கரிவேங்கடம் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்ணாமலை சர்வகலாசாலையில் தொழிற் பிரிவில் (Professional course) படிக்கும் மாணவர்களின் பெற்றோர்களாகிய கெஜெட் பதிவு இல்லாத உத்யோகஸ்தர்களும் (N.G.Os. ஆசிரியர்களும் தங்கள் பிள்ளைகள் படிப்பிற்கு கடன் வசதி கோரி அரசாங்கத்திற்கு மனு செய்திருந்தார்களா?

(இ) அதன்மேல் எடுத்த முடிவு என்ன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) ஆம்.

(இ) இந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

### நில உச்சவரம்புச் சட்டம்

*272 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நில உச்சவரம்புச் சட்டத்தின்படி தமிழகத்தில் எத்தனை விவசாயிகள் Authorized Officer -க்கு நிலவிவரக்கணக்கு 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி முடிய அனுப்பியுள்ளனர்?



(இ) அவ்வாறு அனுப்பியவைகளில் கண்டுள்ள மொத்த ஸ்டாண்டர்டு ஏக்கர்கள் எவ்வளவு?

**கனம் திரு. வெ. ராமையா :** (அ) 1,103 விவசாயிகள்.

(இ) 43,936 ஸ்டாண்டர்டு ஏக்கர்கள்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** இந்தப் புள்ளிவிவரத்தில் ஏழை விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய நிலங்களுடைய மொத்த விஸ்தீரணம் எவ்வளவு, அரசாங்கம் சட்டம் கொண்டு வந்த சமயத்தில் எவ்வளவு ஏகரா விவசாயிகளுக்குக் கொடுக்க முடியும் என்று புள்ளி விவரம் தந்தது என்பதையும் அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா?

**கனம் திரு. வெ. ராமையா :** இப்பொழுது நான் கொடுத்த தகவலை வைத்து எந்த விதமான முடிவுக்கும் அங்கத்தினர்கள் வந்துவிட வேண்டாம். தானாகவே அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தவர்களுடைய எண்ணிக்கையையும், அவர்கள் கொடுத்திருக்கிற ஏக்கரா விவரத்தையும் பற்றி நான் இப்பொழுது விவரம் கொடுத்திருக்கிறேன். ஆனால், சட்டப்படி இன்னும் என்ன முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமோ அதற்கு வேண்டிய முயற்சி, அதற்காக ஏற்பட்ட விதிகளின்படி, அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** விவசாயிகளும், நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களும் சட்டப்படி அரசாங்கத்திற்குத் தகவல் கொடுப்பதற்கு, சம்பந்தப்பட்ட விதிகளை இன்னும் சரிவர புரிந்து கொள்ளாமல் இருப்பதினால், இந்தக் காலகெடுவை சில மாதங்கள் நீடிப்பதுபற்றி அரசாங்கம் யோசனை செய்யுமா?

**கனம் திரு. வெ. ராமையா :** இதைத்தான் தக்க அதிகாரிகள் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த நில விவரக் கணக்கு சம்பந்தமாக நம்முடைய அமைச்சர்களில் எத்தனை பேர்கள் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள்? கொடுக்காத அமைச்சர்கள் யாரேனும் இருக்கிறார்களா? எந்த அமைச்சர்கள் விவரம் கொடுத்திருக்கிறார்கள், கொடுக்காதவர்கள் யார்?

**கனம் சபாநாயகர் :** மந்திரிகளாக இருக்கிற காரணத்தினால் கணக்குக் கொடுக்க வேண்டுமென்று விதி இல்லை.

**கனம் திரு. வெ. ராமையா :** சட்டப்படி யார் கணக்குக் கொடுக்க வேண்டுமோ அவர்கள் தான் விவரங்கள் கொடுப்பார்களே தவிர, நிலம் இல்லாதவர்கள் எப்படி விவரம் கொடுக்க முடியும்? மந்திரிகள் எல்லோருக்கும் நிலம் இல்லை. இந்தச் சட்டம் மந்திரிகளுக்கு மட்டும் அல்ல, அல்லது சட்டசபை அங்கத்தினர்களுக்கு மட்டுமல்ல. சென்னை ராஜ்யத்திலே இருக்கக்கூடிய விவசாயிகள் எல்லோரும் சட்டத்திலே குறிப்பிட்ட அளவுக்கு மேலே நிலம் வைத்துக்கொண்டிருந்தால் கணக்குக் கொடுக்கவேண்டும். மற்ற விவரங்கள் வேண்டுமானால், தனிக் கேள்வி போட்டால், பார்த்துச் சொல்ல முடியும்.

*Co-operative Societies (Mal-administration.)*

* 273 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) the number of cases of mis-appropriation, mal-administration, defalcation, etc., in the Co-operative Societies in 1961-62;

(*b*) the number of cases proved; and

(*c*) the steps taken to set right the affairs of the societies ?

**கனம் திரு. நல்ல சேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** (*a*) 1961-ம் வருஷம் ஜூலை மாதம் முதல் 1962-ம் வருஷம் ஜூன் மாதம் வரை நூற்றுத் தொண்ணூற்று எட்டு (198) கூட்டுறவுச் சங்கங்களில் கையாடல், ஒழுங்கற்ற நிர்வாகம் முதலிய ஊழல்கள் இருந்தன.

( ) இருபத்திரண்டு (22) சங்கங்களின் ஊழல்களைப்பற்றிய வழக்குகள் பதிவாயிருக்கின்றன.

(*c*) சங்கங்களின் நிதி நிலைமை ஊழல்களால் பாதிக்கப் படாமல் இருந்தால் அவைகளின் நிர்வாகக் கமிட்டிகளை மாற்றி அமைக்கப்படுவதன் மூலம் அச்சங்கங்கள் புதுப்பிக்கப்படுகின்றன. அவ்வித சங்கங்களை நன்கு கண்காணிக்க சங்க மேற்பார்வையாளர்களுக்கு உத்தரவுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சீர்திருத்தம் செய்ய முடியாத நிலையிலுள்ள சங்கங்கள் கலைக்கப்படுகின்றன. 1961-ம் வருஷம் ஜூலை மாதம் முதல் 1962 ஜூன் மாதம் முடிய 6 சங்கங்களின் நிலைமைகளைச் சீர்திருத்துவதற்காக அவற்றின் நிர்வாகக் கமிட்டிகள் கலைக்கப்பட்டன. கிராம கூட்டுறவு சங்கங்களின் மெம்பர்களுக்குக் கடன் கொடுப்பதில் அதிக கவனம் செலுத்தும்படியும் கடன் தொகை அதற்குரிய நபர்களுக்கு மட்டும் பட்டுவாடா செய்வதை மேற்பார்வையாளர்களின் மூலம் உறுதி செய்து கொள்ளவும் கூட்டுறவு மத்திய பாங்குகளுக்கு அறிவிக்கப் பட்டிருக்கிறது.

ஊழலில் சம்பந்தப்பட்ட நபர்கள் அப்போதைக்கப்போது சங்கப் பதவியிலிருந்து நீக்கப்படுகிறார்கள். கையாடல் செய்யப் பட்ட தொகையை அதற்கு பொறுப்புள்ளவர்களிடமிருந்து வசூலிக்க சென்னை கூட்டுறவு சங்கங்களைப்பற்றிய சட்டம் செக்ஷன் 49, 51-ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** பொதுவாகவே நம்முடைய மாநிலத்தில் கூட்டுறவு என்றாலேயே அங்கே ஊழல்கள், ஒழுங்கற்ற முறைகள், கையாடல்கள் என்பவை நிறைந்துள்ள ஸ்தாபனம் என்ற அளவில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் இருக்கின்றன என்ற காரணத்தால் அந்த வகையில் இல்லாமல் இப்படி நிரந்தரமாக இருப்பதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டு பிடித்து, அப்படி இல்லாமல் இருப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** கிராமங்களில் முக்கியமாக அதிகக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் இருக்கின்றன. சுமார் 1,983 சங்கங்கள் இருப்பதில் முக்கியமாக 22 சங்கங்களில் தான் இப்படிப்பட்ட கையாடல்கள் நடந்திருக்கின்றன. அவைகளின்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ





அவைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இவ்வளவு ஸ்தாபனங்கள் இருக்கக்கூடிய இடத்தில் இந்த அளவில் ஊழல் இருப்பது என்பது அவ்வளவு பெரிதல்ல. அது இருக்கத்தான் செய்யும். இருந்தபோதிலும், அவைகளும் நடக்காமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுத்தான் வருகின்றன.

**திருமதி சி. குழந்தை அம்மாள் :** கோயம்பத்தூர் ஜில்லாவைப் பொறுத்தவரையில் எவ்வளவு கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஒழுங்கான முறையில் நடைபெறவில்லை என்பதை அறிய விரும்புகிறேன். எவ்வளவு சங்கங்களில் குறைபாடுகள் இருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** இதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

**திரு. முனு ஆதி :** கனம் தலைவர் அவர்களே, ஊழல்கள் நிறைந்த கூட்டுறவு சங்கங்களில் சர்க்கார் பிரதிநிதிகள் செயலாளர்களாக இருந்து அங்கு ஊழல்கள் இருந்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** சர்க்கார் செயலாளர்கள் இருந்தாலும் அங்கு ஊழல்கள் இருந்தால் அங்கும் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுத்தான் வருகின்றன. எங்கேயெல்லாம் ஊழல்கள் இருக்கின்றனவோ அங்கேயெல்லாம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுத்தான் வருகின்றன. இதைப் பற்றி விரிவாகச் சொன்னால் அதற்கு விரிவான பதில் சொல்லுகிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** க்ரூப் ஆபீஸ் சொசைட்டிகளில் பெய்ட் செக்ரடரிகளைப் போடுவதாக சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ? அப்படி இருந்தால் அதை அமுல் நடத்துவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இப்பொழுது என்னிடம் அந்த விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

**திருமதி சி. குழந்தை அம்மாள் :** அநேகக் கூட்டுறவு சங்கங்களில் பெரிய மனிதர்கள் பெரிய அளவில் கையாடல் செய்வதால் அவர்களுடைய பெயர்கள் வெளியில் வருவதாக இல்லை. அவைகளைத் தணிக்கை செய்து அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். தனியாக ஒரு டிபார்ட்மெண்ட் அமைத்து இதைக் கண்டுபிடிக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** போலீஸ் இன்வெஸ்டிகேஷன் நடைபெறுகிறது. அப்படி போலீஸ் இன்வெஸ்டிகேஷன் நடத்தும்போது, பெரிய மனிதர் என்றும்

சிறிய மனிதர் என்றும் பார்ப்பது இல்லை. அப்படிப் பார்க்கவும் முடியாது. எல்லோர்மீதும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இன்வெஸ்டிகேஷன் செய்யும்போது பல அதிகாரிகள்மீது குற்றங்கள் இருப்பதாகத் தெரிய வருகிறது. தணிக்கை செய்யும்போது அதிகாரிகள்மீது குற்றங்கள் இருப்பதாகத் தெரியவந்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். எவ்வளவு அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ அவர்கள்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருந்தாலும் அவர்கள்மீதும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும். அவர்களுக்கு எந்தவிதமான சலுகைகளும் காட்டப்படுவது இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஏ. ஆறுமுகம் :** வாணியம்பாடி கூட்டுறவு சங்கம் சரிவர நடைபெறவில்லை என்ற புகார் ஏதாவது சர்க்காருக்கு வந்திருக்கிறதா ? அப்படி வந்திருந்தால் அதன்மீது ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இந்தக் கேள்வி முதல் கேள்விக்கு சம்பந்தம் இல்லை என்பதை கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. எஸ். முருகையன் :** திருவண்ணாமலை கூட்டுறவு பண்டகசாலை நல்ல முறையில் நடைபெறவில்லை என்ற காரணத்துக்காக அதைக் கலைத்துவிட்டு பணத்தை அங்கத்தினர்களுக்குக் கொடுக்காமல் மீண்டும் ஒரு பண்டகசாலை ஆரம்பித்து நடந்து வருகிறது. இதன்மீது ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** எந்த விதமாக அங்கு நடைபெறுகிறதோ அதைப்பற்றி கனம் அங்கத்தினர் தகவல் எழுதி அனுப்பினால் அதன்மீது வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

**திருமதி சி. குழந்தை அம்மாள் :** கூட்டுறவு சங்கங்களில் ஊழல்கள் நடப்பதைக் கண்டுபிடித்து கேஸ்கள் போட்டால் அவைகள் சீக்கிரமாக முடிவு பெறாமல் காலதாமதம் ஏற்படுவதன் காரணமாக இப்படிப்பட்ட கேஸ்கள் அதிகமாக நடைபெறுவதற்கு இடம் ஏற்படுகிறது என்ற காரணத்தினால் அந்தக் கேஸ்களைச் சீக்கிரமாக முடிப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** கேஸ்கள் கோர்ட்டுக்குப் போனால் அதற்கு வேண்டிய கால தாமதம் ஆகத்தான் செய்யும். அதைத் தவிர்க்க முடியாது என்பதைக் கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



**திரு. கே. ஏ. மதியழகன் :** ஸார், இம்மாதிரி கூட்டுறவு சங்கங்களில் திண்டுக்கல் கூட்டுறவு சங்கத்திலும் ஊழல் ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பொறுப்பாளியானவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் என்ற காரணத்தினால் வழக்குத் தொடரப்பட்டு, அது வாபஸ் வாங்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி வாபஸ் வாங்கப்பட்டது உண்மையா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இதில் கட்சிப் பாகுபாடு கிடையாது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் கூட்டுறவு சங்கத்தில் ஊழல் செய்தால், அவர்கள்மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவர்மீது முதலில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்பதை வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. முனு ஆதி :** கனம் தலைவர் அவர்களே, ஐயனாவரம் கூட்டுறவு பால் பண்ணையில் ஊழல் நடந்திருக்கிறதே, அதை அரசாங்கம் கவனித்து அதன்மீது நடவடிக்கை எடுக்க முன் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** நானே அந்தப் பால் பண்ணையை ஒரு தடவை சென்று பார்த்தேன். அது நல்ல முறையில் நடந்துகொண்டிருக்கிறது. ஊழல்கள நடந்தால் வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. எம். தண்டாயுதபாணி :** கனம் தலைவர் அவர்களே, சாதாரணமாக கிராமங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களைத் தணிக்கை செய்யும்போது சீனியர் இன்ஸ்பெக்டர்களைக் கொண்டு தணிக்கை செய்ய முடியவில்லை. அதனால் பஞ்சாயத்து யூனியனிலுள்ள சி.எஸ்.ஆர்.-ஐக் கொண்டு தணிக்கை செய்வதற்கு ஏதாவது வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அதற்கு வேண்டிய விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் அதற்கு பதில் சொல்லுகிறேன்.

## கைத்தறி கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் (சைதாப்பேட்டை)

*** 274 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் சைதை கைத்தறி கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கத்தின் **நிர்வாகிகள்மீது பணக் கையாடல் குற்றம் ஏதேனும் உண்டா ?**

(இ) அதன்மீது ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) ஆம்.**

கட்ட மத்திய அரசாங்கத்திலிருந்து பூராத் தொகையும் கிடைக்கும் வரையில் காத்துக்கொண்டிருக்கிறோம்' என்று சொன்னார். கோடம்பாக்கத்தில் மேம்பாலம் கட்டுவதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து பூரா கிராண்டும் கிடைத்திருக்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமையா :** 'பூராப் பணமும் மத்திய அரசாங்கத்தினிடமிருந்து வரவேண்டும்' என்று நான் சொல்லியிருக்க முடியாது. இப்பொழுதிருக்கும் ஏற்பாட்டின்படி, அவர்கள் ஒரு பங்கு கொடுக்கவேண்டும், நாமும் ஒரு பங்கு போட்டுச் செய்ய வேண்டும். ஆகையால், நம்மைப் பொறுத்தவரையில், நாம் எப்பொழுது பணம் கொடுக்கத் தயாராயிருக்கிறோமோ அதற்குத் தகுந்த முறையில் அவர்களும் அவர்களுடைய உதவியைக் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள்.

**திரு. ஏ. ஜீவரத்னம் :** வேலூரிலிருந்து ஆம்பூருக்குப் போகும் வழியில் பச்சைக்குப்பம் இரயில்வே லெவல் க்ராஸிங் இருக்கிறது. காட்பாடியிலிருந்து ஜோலார்பேட்டைக்கு ஏராளமான பிரயாணி இரயில்களும், குட்ஸ் ட்ரெயின்களும் போய் வந்து கொண்டிருக்கின்றன. அந்த இரயில்வே லெவல் க்ராஸிங்கை மூடினால், 15 நிமிஷங்கள் வண்டிகளும் மற்ற வாகனங்களும் காத்துக்கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது . . . .

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் குறிப்பாகக் கேள்வி கேட்கவேண்டும்.

**திரு. ஏ. ஜீவரத்னம் :** அந்தப் பகுதியில் பத்து, பதினைந்து நிமிஷம் வண்டிகள் காத்துக்கொண்டிருக்க வேண்டிய நிலைமை இருப்பதால், அங்கே மேம்பாலம் கட்ட சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ? உத்தேசம் இருந்தால் உடனடியாக கவனிக்கப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மேம்பாலம் மிகவும் அவசியம் என்பதை அநேகமாக போக்குவரத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள் எல்லோரும் உணருகிறார்கள். ஆனால், இதை எல்லாம் நாம் செய்யவேண்டுமானால், ஏராளமான பொருள் தேவைப்படுகிறது. இப்பொழுதிருக்கும் நெருக்கடி நேரத்தில், இப்பொழுது நாம் எடுத்துக் கொண்டிருக்கும் ஒருசில வேலைகளைத் தவிர, புது வேலைகள் எதையும் இப்பொழுது எடுத்துக்கொள்ளுவதாக ஒன்றும் உத்தேசம் இல்லை.

**திரு. கே. மூக்கையா தேவர் :** அமைச்சர் அவர்கள் நேரில் பல இடங்களில் இம்மாதிரி முக்கியமாக இருக்கும் பாலங்களைப் பார்த்திருக்கிறார்கள். குறிப்பாக, மதுரையில் உள்ள சுப்பிரமணியபுரம் பாலத்தைப் பார்த்திருக்கிறார்கள். இதனுடைய அவசியத்தை அரசாங்கம் உணர்ந்திருப்பதால், தங்களிடம் அதிகமாகப் பணம் இல்லாவிட்டாலும், மத்திய சர்க்கார் இரயில்வே இலாகாவின் மூலம் பணம் வாங்கி இதைச் செய்ய வாய்ப்பு இருந்தால், அதை ஏன் இன்னும் செய்யாமல் இருக்கிறது ? அந்தத் திட்டத்திற்கு முதல் இடம் கொடுக்கப்படுமா ?





**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினருடைய ஆலோசனையைக் கேட்டால் பொது மக்களுக்கு மிகவும் கஷ்டமாய்ப் போய்விடும். மந்திரியே நேராகப் போய்ப் பார்க்கும் காரணத்தால் அதற்கு முக்கியத்துவம் வந்து விடுகிறது, அதனால் உடனே நிறைவேற்றவேண்டும் என்ற கருத்தை ஏற்றுக்கொண்டால் ஒரு காரியத்தையும் நாம் செய்து பார்க்க முடியாது. பல இடங்களில் நெருக்கடி இருப்பதைப் பார்க்கிறோம். அதுபோல் அங்கும் போய் பார்க்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவசியத்தை உணருகிறோம். ஆனால், இப்பொழுதிருக்கும் நிலையில், மேம்பாலம் கட்டுவது மிக அவசியமா, அதற்குப் பதிலாக வேறொரு உற்பத்தித் தொழிலை உண்டுபண்ணுவது அவசியமா என்று பார்த்து, எது எதற்கு முக்கியமான இடம் கொடுக்கவேண்டுமோ அதற்குக் கொடுக்கிறோம். எல்லா இடங்களிலும் மேம்பாலம் கட்டவேண்டும் என்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. போக்குவரத்து அதிகமாக ஏற்படும்போது, படிப்படியாகத்தான் செய்யவேண்டும்.

**திரு. காஞ்சி மணிமொழியார் :** கோடம்பாக்கத்தில் மேம்பாலம் கட்ட இருக்கிற லெவல் க்ராஸிங்குக்கு அருகில் அடிக்கடி விபத்துக்கள் நேரிடுகின்றன. அதற்குக் காரணம், அங்குள்ள பாதை அகலக் குறைவாக இருப்பதுதான். ஆகவே, இப்பொழுதுள்ள அகலத்தைவிட, கூடுதலான அகலத்தில் மேம்பாலம் கட்டப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** போக்குவரத்துத் தேவைக்குத் தகுந்தாற்போல் கட்டப்படும்.

**திரு. முனு ஆதி :** கடற்கரைச் சாலையில் இரயில்வே பாதை வருகிற இடத்தில் மேம்பாலம் கட்டினால், ரிசர்வ் பாங்க் கட்டடத்தின் அழகு கெட்டுவிடும் என்று சொல்வதாகக் கேள்விப்படுகிறோம். ஆகவே, அங்கு 'சப்-வே' அமைப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இதை ஒரு தீர்ந்துவிட்ட பிரச்சினையாக நான் கருதினேன். அங்கு மேம்பாலம் ஒன்றும் அமைக்கப் போவதில்லை. பூமிக்கடியில் 'டன்னல்' தான் அமைக்கப்போகிறோம்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** தலைவர் அவர்களே, கோடம்பாக்கம் இரயில்வே நிலையத்தின் அருகிலிருக்கும் கடக்கின்ற சாலையில் சினிமா நடிகர்களும், நடிகைகளும் செல்வதால் ஆபத்து ஏற்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகையால், அவர்கள் அங்கு செல்லாமலிருக்கும்படி தடை உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

**கனம் சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் ஒவ்வொரு நாளைக்கும் ஒரு கட்சி ஏற்படுத்திக் கொண்டே இருக்கப்போகிறார்களா ? (சிரிப்பு)

(பதில் இ

(இ) குற்றவாளிகள்மீது கோர்ட்டில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. கையாடப்பட்ட தொகையை சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வசூலிப்பதற்கு சென்னை உதவி கூட்டுறவு ரிஜிஸ்தரார் முன்பு சங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதற்கு பொறுப்பான இலாகா அதிகாரிகள்மீதும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### மேம்பாலம் அமைத்தல் (கோடம்பாக்கம்)

*** 275 கேள்வி.—திரு. முனு ஆதி :** கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோடம்பாக்கம் இரயில்வே நிலயத்தின் அருகில் இரயில் பாதையைக் கடக்க மேம்பாலம் ஒன்று அமைப்பதுபற்றிய அரசாங்க உத்தேசம் எந்த நிலையிலுள்ளது?

(இ) எப்பொழுது வேலை துவங்கப்படும்?

THE HON. SRI V. RAMAIAH : (அ) & (இ) Orders have been issued for the construction of an over bridge, in lieu of the existing level-crossing at Arcot Road near Kodambakkam railway station in Madras City. The work will be taken up shortly.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஸார், கோடம்பாக்கம் மேம்பாலத்தைக் கட்டுவதாக நீண்ட நாட்களாகவே சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் அந்தப் பாலத்தின்மீது சினிமா நடிகர்களும், நடிகைகளும் அடிக்கடி போய் வருவதால் அங்கே பெரிய ஜன நெருக்கடி ஏற்படுகிறது. அது போக்குவரத்திற்கு இடையூறாக இருக்கிறது. அதனால் அங்கு மேம்பாலம் கட்டுவதைச் சீக்கிரத்தில் எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர் :** மற்ற ஜனங்கள்தான் போகவேண்டும். நடிகர்கள், நடிகைகள் போகக்கூடாது என்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறார்களா?

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினர் அந்த இடத்தில் ஜன நெருக்கடி உண்டாவதன் காரணத்தை எடுத்துச் சொன்னார். நடிகர்கள், நடிகைகளுக்காக பாலம் கட்ட வேண்டுமென்ற அவசியம் கிடையாது. அதையே அவர்கள் ஒரு விளம்பரமாக வைத்துக்கொள்ளலாம். அந்த இடத்தில் இருப்பதுபோன்று பல இடங்களிலும் மேம்பாலம் கட்டவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை மனதில் கொண்டு அதற்கு வேண்டிய எஸ்டிமேட்டும் தயாராக இருக்கிறது. இப்பொழுது அது சாங்ஷன் ஆகி வேலை தொடங்கக்கூடிய கட்டத்தில் இருக்கிறது.

**திரு. முனு ஆதி :** டெண்டருக்கு விடப்பட்டால் எந்த கால அளவுக்குள் அது முடிக்க வேண்டும் என்று அரசாங்கம் சொல்லி இருக்கிறதா? அதற்குள் அது கட்டி முடிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?



**கனம் திரு. வெ. ராமையா :** ரொம்ப வேகமாக முடிக்க வேண்டும் என்பதுதான் ஆசை. குறித்த காலத்தில் முடிக்க வேண்டும் என்பதெல்லாம் எஞ்சினியர்களுடைய கையில் இருக்கிறது. அவர்களுக்குச் சொல்லக்கூடிய கட்டத்தில் இப்பொழுது இல்லை. டெண்டர் விடக்கூடிய கட்டத்தில்தான் இப்பொழுது இருக்கிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** கோடம்பாக்கத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடியைப் போலவேதான் சைதாப்பேட்டை, ரௌண்ட்டானா போன்ற மற்ற இடங்களிலும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த இடங்களிலெல்லாம் மேம்பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** நெருக்கடி என்பது ஒரு இடத்தில் மட்டும் இல்லை, எங்கு பார்த்தாலும்தான் இருக்கிறது, குறிப்பாக, ரௌண்ட்டானாவை எடுத்துக்கொண்டால் அங்கே டன்னல் அமைப்பதற்கு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன, அதன் மூலமாக பாதசாரிகள் போவதற்கு என்று.

**திரு. இர. பொன்னப்ப நாடார் :** கனம் சபாநாயகர் அவர்களே, அதேபோன்று இப்படிப்பட்ட மேம்பாலம் எந்தெந்த இடங்களில் கட்ட ஆலோசிக்கப்பட்டிருக்கின்றன? அதைப் போலவே திருநெல்வேலியில் ஒரு மேம்பாலம் கட்ட உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது போன்று பல இடங்களில் கட்ட வேண்டியதாக இருக்கிறது. நெருக்கடி இருக்கக்கூடிய இடங்களில் கட்ட வேண்டும் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இப்படி நெருக்கடியான இடங்களை மனதில் கொண்டுதான் எல்லா இடங்களிலும் கட்ட முடியாவிட்டாலும் சில இடங்களிலாவது கட்டலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. திருநெல்வேலியைப் பொறுத்த மட்டில் அதைப்பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டியதாக இருக்கிறது. அதைப் பற்றியும் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பமும்.

**திரு. என். ராமசாமி உடையார் :** சேலத்தில் இம்மாதிரி மிக நெருக்கடியான பகுதியான செவ்வாய்ப்பேட்டையில் பாலம் கட்டுவது பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டதே, அது எந்த நிலையில் இருக்கிறது?

**கனம் திரு. வெ. ராமையா :** கோடம்பாக்கத்திலிருந்து திருநெல்வேலிக்குப் போய், இப்பொழுது சேலத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறோம். (சிரிப்பு). அதைப்பற்றியெல்லாம் தனியாகக் கேள்விகேட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** அமைச்சர் அவர்கள் ஒரு வாரத்திற்குமுன் பதிலளிக்கும்போது, 'இரயில்வே மேம்பாலங்களைக்

## அக்கினி ஆற்றின் குறுக்கே அணைக் கட்டல்

*** 276 கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆலங்குடி தாலுக்காவில் உள்ள அக்கினி ஆற்றில் புலவன் காட்டிற்கு அருகில் அணைக்கட்ட உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(உ) எப்போது அதன் ஆக்கவேலைகள் துவங்கப்படும் ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** (அ) ஆம்.

(இ) ரூ. 17,20,000.

(உ) கூடிய சீக்கிரத்தில் வேலைகள் துவங்கப்படும்.

**திரு. பி. முருகையன் :** அக்கினி ஆற்றில் கட்டப்படும் இந்த அணைக்கட்டின் மூலம் எத்தனை ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும் ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இந்தத் திட்டத்தின் மூலமாக 38 கண்மாய்களின் கீழுள்ள ஆயக்கட்டுக்குப் பலன் ஏற்படும். 2,655 ஏக்கர் நிலங்களுக்கு அது பாசன வசதி அளிக்கக்கூடும்.

**திரு. அ. தியாகராஜன் :** அதே போல், வெள்ளாற்றில் சுந்தரப் பட்டியில் ஒரு அணைக்கட்டு இருக்கிறது. அதை விரிவுபடுத்தித் தர அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? வேம்பனூர்க் கண்மாயிலிருந்து தளிஞ்சிக் கண்மாய்க்குத் தண்ணீர் கொண்டுபோக உத்தேசம் உண்டா ?

**கனம் சபாநாயகர் :** இப்படியே கேட்டுக்கொண்டு போனால், அது கேள்வியாக இல்லாமல் பிரசங்கம் மாதிரிப் போய்விடும். குறிப்பாக ஏதாவது கேள்வி இருந்தால் கேட்கலாம். கேள்வி ஸ்பெஸிபிக் ஆக இருக்கவேண்டும்.

**திரு. அ. தியாகராஜன் :** வெள்ளாற்றிலிருக்கும் சுந்தரப்பட்டி அணைக்கட்டை சீர்திருத்தித் தர அரசாங்கத்திற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** வெள்ளாற்றில் குறுக்கே இருக்கும் அணை பலனுள்ளதாகத்தான் இருக்கிறது. அதை விரிவுபடுத்த வேண்டும் என்று அரசாங்கத்தினிடம் திட்டம் கிடையாது. ஆனால், வெள்ளாற்றில் ஓடிக்கொண்டிருக்கும் தண்ணீரை இன்னும் அதிகமாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதற்காகப் பல 'இன்வெஸ்டிகேஷன்' நடந்துகொண்டிருக்கின்றன. அதெல்லாம் முடிந்த பிறகுதான் அரசாங்கம் முடிவு எடுக்கமுடியும்.

**திரு. ஆ. துரை அரசன் :** ஆலங்குடிக்கு அருகில் கட்டப்பட்டிருக்கிற அணைக்கட்டினால் பட்டுக்கோட்டை தாலுகாவில் எத்தனை ஏரிகளுக்கு தண்ணீர் கிடைக்கும் ? எத்தனை ஏக்கர் நிலம் பாசன வசதி அடைய முடியும் ?





**கனம் திரு. வெ. ராமைய்யா :** பட்டுக்கோட்டை தாலூகாவுக்குப் பலன் ஏற்படாது. ஆனால், ஒரத்தநாடு தாலூகாவில் ஐந்து ஏரிகளுக்குப் பலன் ஏற்படும் என்கிற தகவல் இருக்கிறது.

**திரு. து. ப. அழகமுத்து :** இந்தத் திட்டத்திற்குச் செலவழிக்கப்படுகிற பணத்திற்குத் தகுந்த வருமானம் இதிலிருந்து கிடைக்குமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** தகுந்த வருமானம் கிடைக்கும் என்ற காரணத்தால்தான் அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது.

**திரு. எம். தண்டாயுதபாணி :** ஒரத்தநாடு தாலூகாவுக்கு இது பலனளிக்கும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த ஏரிகளின் பெயர்கள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அவை கனம் அங்கத்தினருடைய தொகுதியில் இருக்காது என்று நான் நிச்சயமாகச் சொல்ல முடியும். (சிரிப்பு).

**திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் :** ஓமலூர் தொகுதியில், என்னுடைய தொகுதியில், சரபங்க நதிக்குக் குறுக்கே ஒரு அணை கட்டப்படுவதாக இருந்து அது பத்து வருஷமாகக் கட்டப்படாமலிருக்கிறது. அது கட்டப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் அங்கத்தினருடைய தொகுதியில் ஏற்படும் எந்தக் கஷ்டமாக இருந்தாலும் அதில் நான் நேரடியாகக் கவனம் செலுத்தத் தயாராக இருக்கிறேன்.

## கீழ் பவானித் திட்டம்

*** 277 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கீழ் பவானி திட்டத்தில், கசிவு, கழிவு நீர்த் திட்டங்கள் எத்தனை போடப்பட்டன ?

(இ) எத்தனை வேலைகள் முடிவு பெற்றிருக்கின்றன ?

(உ) இதன் மூலம் பாசனம் பெறும் நில விஸ்தீரணம் எத்தனை ஏக்கர் ?

(எ) எத்தனைத் திட்டங்கள் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கின்றன ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Thirty-six drainage schemes were considered.

(b) The works on two schemes have been completed.

(c) 187 acres.

(d) Twenty-four schemes are under investigation—7 schemes have been deferred and three schemes have been dropped.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கீழ்பவானி திட்டத்தின்கீழ் கசிவு நீரைப் பயன்படுத்திக்கொள்கிற விவசாயிகள் ஆண்டுதோறும்

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கசிவு, கழிவு நீரைத் தேக்கி பாசனத்திற்குப் பயன்படுத்த அணைக்கட்டுகள் கட்டுவது பற்றி கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பெண்ணையாற்றின் வெள்ளம் பெரும்பகுதி கடலில் போய்க் கலந்து விடுவதால் அதற்குத் திட்டம் வகுக்கப்பட்டது. முதல் கட்டம், இரண்டாவது கட்டம் என்று முடிந்தவுடன், அதன் கசிவு, கழிவு நீரைத் தேக்கி மீண்டும் பாசனத்திற்குப் பயன்படுத்த ஒரு திட்டம் வகுக்கப்படுமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** தென்னார்க்காடு ஜில்லா பிரதிநிதி கூறிய யோசனை பரிசீலனை செய்யப்படும்.

**திரு. அ. தியாகராஜன்:** வேம்பனூர் கண்மாயிலிருந்து வரும் கழிவு நீரை தழுந்தி கண்மாய்க்குக் கொண்டுவந்துவிட்டு அந்தப் பகுதியில் உள்ள, தவளப்பட்டி, கருவெம்பட்டி, பாம்பூர் வரை நீர் வழங்க அரசாங்கத்தில் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா:** அந்த விவரம் ஒன்றும் என்னிடம் இல்லை.

**திரு. ஆ. துரை அரசன்:** அறந்தாங்கி தாலுகா வி.எம்.பி. கானல் கழிவு நீர் வட பகுதியில் ஓடுகிறது. அந்தக் கழிவு நீரைத் தேக்கி வெள்ளாற்றுக்குத் தெற்கே பர்மனென்டாக எடுத்துச்செல்ல அரசாங்கத்தினர் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா:** இதையெல்லாம் பரிசீலனை செய்துதான் பல நல்ல திட்டங்களை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். அறந்தாங்கி தாலுக்காவில் ஆவுடையார் கோவிலுக்கு அருகில் வெள்ளாற்றுக்குத் தெற்கே இந்தக் கழிவு நீரைக் கொண்டுபோய்ச் சேர்க்க திட்டம் இருக்கிறது. இப்போது ஒன்றும் தண்ணீர் விறைகவில்லை. அந்த ஆயக்கட்டுப் பகுதியில் சென்று கேட்டால் சொல்வார்கள்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை:** கடலில் சென்று விழுந்தாலும் விழட்டும், மற்ற மாவட்டங்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய வகையில் அந்த உபரி நீரைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்று நாங்கள் ஒருபோதும் சொல்லவில்லை. தீவிர சாகுபடித் திட்டம் தஞ்சை மாவட்டத்தில் கொண்டுவரப்பட்டிருப்பதால் இப்போது ஒரு போக நிலம் கூட இருபோகமாக சாகுபடி செய்யப்படுகிறது. அதோடு சாகுபடி காலங்களில் திடீர் என்று தண்ணீர் மட்டம் குறைந்து பாசனம் செய்ய முடியாத சங்கடம் ஏற்பட்டுவிடுவதனால் மேற்கொண்டு காவேரி நீரை அங்கங்கே பயன்படுத்திக்கொள்ள திட்டம் வகுக்கும்போது ஏற்கனவே தஞ்சை மாவட்டத்திற்கு அளிக்கப்பட்டுள்ள உத்தரவாதம் பாதிக்கப்படாமல் நடவடிக்கையை மேற்கொள்வார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.



**கனம் திரு. வெ. ராமைய்யா:** கனம் அங்கத்தினர் மற்றொரு உப கேள்விபோடும் வகையில் ஒரு உறுதி சொன்னார்கள். கடலில் சென்று விழுந்தாலும் விழட்டும், மற்ற மாவட்டங்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய வகையில் காவேரியில் உள்ள உபரி நீரை அங்கங்கே பயன்படுத்தக் கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை என்றார்கள். இந்தக் கருத்தை அவர்கள் வலியுறுத்திச் சொன்ன காரணத்தினால் சொல்கிறேன், தஞ்சை மாவட்டத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்ட தண்ணீர் அளவு எந்த வகையிலும் பாதிக்கப்படாத வகையில்தான் மற்ற திட்டங்கள் கவனிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** கனம் சபாநாயகர் அவர்களே, நிலக்கோட்டை தாலுகாவில் ஒரு ஏரி இருக்கிறது. அந்த ஏரியின் சர்ப்ளஸ் வாட்டரைத் தேக்கி ஒரு வாய்க்கால் மூலம் கொண்டு போக ஒரு லட்சம் ரூபாய்க்குமேல் செலவாகிறது. அந்த ஒரு வாய்க்காலில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூடக் கிடையாது.

**கனம் சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் கேள்வியாகக் கேட்க வேண்டும். பேச்சை நீட்டிக்கொண்டே போனால் எவ்வாறு பதிலளிப்பது?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** கனம் அங்கத்தினர் கேள்வி எனக்குப் புரிந்துவிட்டது. அவரே அந்தப் பகுதியில் ஒரு ஏரி இருக்கிறது என்கிறார். அதன் பெயர், அந்தத் திட்டம் ஆகிய எல்லா முழு விவரமும் கொடுத்தால் நான் அதைப்பற்றி பரிசீலனை செய்து பதில் சொல்கிறேன். ஆகவே தனிக் கேள்வி போடலாம்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** சார், தஞ்சை ஜில்லா திருத்துறைப்பூண்டி தாலுகா கடைமடைப் பிரதேசமாக இருந்தாலும் தண்ணீர் அதிகமாக வரும்போது சேதம் ஏற்படுவதன் காரணமாக வெள்ளத்தைத் தடுக்கும் முறையில் வேதாரண்யம் பகுதியில் உள்ள மேட்டுக் கிராமங்களுக்கு மின்சாரத்தின் மூலமாகத் தண்ணீர் இறைப்பதற்கு வேண்டிய வசதியைச் செய்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** திருத்துறைப்பூண்டி தாலுகா போன்ற கடலோரப் பிரதேசங்களில் இந்தக் கஷ்டம் இருக்கிறது. மழைக் காலத்தில் அங்கே அதிகமாகத் தண்ணீர்த் தேக்கம் ஏற்பட்டு சேதம் ஏற்படுகிறது. இதைப் போக்கக் கூடிய முறையிலே கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டபடி, பம்பிங் ஸ்கீம் அமைத்து மேட்டுப்பாங்கான நிலங்களுக்குத் தண்ணீர் கொடுக்கும் முயற்சி இப்போது நடந்து கொண்டிருக்கிறது. எவ்வளவு சீக்கிரமாக அதற்கான திட்டங்களைப் போட வேண்டுமோ அவ்வளவு அவசரமாகச் செய்யவேண்டுமென்று நீர்ப்பாசன அதிகாரிகளை நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

**திரு. க. தா. பெருமாள் ராஜு:** கனம் சபாநாயகர் அவர்களே, அந்தியூர் பிர்க்கா மேட்டுப் பிரதேசங்களில் பாசன வசதி அற்ற நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. அந்தப் பகுதிக்கு பாசன

வசதி செய்து கொடுக்கும் அளவுக்கு, மணியாச்சித் திட்டம் என்ற திட்டம் பரிசீலனையில் இருந்து வருவதாகத் தெரிகிறது. அது எந்த நிலையில் இருக்கிறது?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இந்த உப கேள்விக்கு இப்போது என்றால் பதில் சொல்ல முடியாது. மானியக் கோரிக்கையின் போது இதுபற்றியெல்லாம் பேசினால் பதில் சொல்ல முடியும்.

**கனம் சபாநாயகர் :** பதில் சொல்ல முடியாது என்றால், 'முடியாது' என்று சொல்லிவிடலாம்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** சட்ட மன்றத் தலைவர் அவர்களைத் கீழ் பவானி பாசனப் பகுதியிலே பாசனத்தில் சேர்க்கப்பட்ட நிலங்களில் சென்ற மூன்று ஆண்டு காலமாக நெல் பயிரிடப்படாமல் இந்த ஆண்டு நெல் பயிரிடப்பட்ட நிலங்களுக்கு தண்டத் தீர்வை போடுவது என்ற நிலை அரசாங்கத்திடம் இருக்கிறதா? அப்படி இருந்தால் அதிலிருந்து விதிவிலக்கு அளிக்க அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இந்தக் கேள்விக்கு உடனடியாகப் பதில் சொல்ல முடியாது. ஆனால் இதைப் பரிசீலனை செய்ய வேண்டிய கட்டத்தில் அரசாங்கம் இருக்கிறது. லோயர் பவானி சிஸ்டம் ஏற்பட்டதானது, எல்லா இடங்களிலும் நஞ்சை சாகுபடி செய்யவேண்டுமென்பதற்காக ஏற்படவில்லை. புஞ்சை தானிய சாகுபடிக்காக அமைக்கப்பட்ட திட்டம் அது. மேலும் மேலும் புதிதாக நஞ்சை சாகுபடிக்குச் சென்றால் சிஸ்டத்தை மாற்றுவது சம்பந்தமாகவும், அது லாபமா நஷ்டமா என்பது பற்றியெல்லாம் பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது. நமது மாநிலத்தில் எந்த நீர்ப்பாசனத் திட்டத்தை நிறைவேற்றினாலும் விவசாயிகள் அந்தப் பகுதியிலே நஞ்சை சாகுபடி செய்யவேண்டுமென்று நினைக்கிறார்கள். பருத்தி, நிலக்கடலை போன்ற மற்றப் பொருள்களும் இந்த மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படவேண்டும். இதையெல்லாம் பற்றி பூரணமாகப் பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது.

**திரு. செ. சதாசிவம் :** லோயர் பவானி கழிவு நீர் அதிகமாக நொய்யலாற்றில் வருவதால் அங்கு அணைகட்டும் திட்டம் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதுவரை, அதிகமான தண்ணீர் இருக்கும்போது எலக்ரிசிடி மோட்டார் வைத்து இறைத்து தண்ணீர் பாய்ச்ச விவசாயிகளுக்கு அனுமதி கொடுத்து அவர்களுக்கு ஆதரவு கொடுக்க அரசாங்கம் முன்வருமா? பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் ஆளியாற்றின் மூலம் 7,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் போது, அதனுடைய கழிவு நீர் அமராவதியில் கலக்கிறது. அந்த அதிகத் தண்ணீரை அமராவதியின் கடைக் கோடியில் இருக்கும் கரூர் தாலுகாவுக்கு பம்பிங் ஸ்கீம் மூலம் பாசனத்திற்கு தண்ணீர் கொடுக்க முடியுமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** நான் முன்பு சொன்னது பம்பிங் ஸ்கீம் சம்பந்தமானது அல்ல. பெரிய ஸ்கீம் நொய்யலாற்றின் குறுக்கே வரவேண்டும். அதைப் பற்றிய பரிசீலனை முடிந்து



விட்டது. அந்தத் திட்டத்தை எப்போது எடுத்துக் கொள்ள முடியும் என்பதைப் பொறுத்துத்தான் சொல்ல முடியும். பம்பிங் ஸ்கீம் வைப்பது பற்றி தனிக் கேள்வி போட்டால் வேறு விவரங்களை கொடுக்க முடியும். பரம்பிக்குளம்-ஆளியாறு கழிவு நீரை எந்த முறையில் பயன்படுத்தவேண்டுமென்பதெல்லாம் பற்றி பூர்வாங்க வேலை இன்னும் முடிவடையவில்லை. பூர்வாங்க வேலை முடிந்த பிறகு வரண்ட பகுதி எங்கிருந்தாலும் கரூர் தாலுகாவில் இருந்தாலும் சரி, கனம் அங்கத்தினர் அவர்களுடைய தொகுதியில் இருந்தாலும் சரி, வரண்ட பகுதிகளுக்கு தண்ணீர் கொடுக்க அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** லோயர் பவானித் திட்டத்தால் பல லட்சக்கணக்கானவர்கள் பயனடைகிறார்கள். அந்தத் தண்ணீரானது எங்கள் பிராந்தியமான நீலகிரியிலிருந்து வரவேண்டியிருக்கிறது. குந்தா, எமரால்டு திட்டங்களுக்காக அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுடைய நிலங்களை சர்க்கார் ஆர்ஜிதம் செய்து எடுத்துக் கொண்டது. அந்த விவசாயிகளுக்கு வேறு பூமியைக் கொடுக்க . . . .

MR. SPEAKER : Is it a speech or a question?

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** விவசாயிகளுக்கு மாற்று பூமி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் அங்கத்தினர் அவர்கள் எந்த ஊரில் பூமி கேட்கிறார்கள் என்று தெரியவில்லை.

**திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் :** எங்கள் கடையாம்பட்டி தொகுதியில் சேர்வராயன்மலை அடிவாரத்தில் மாழை காலத்தில் தண்ணீர் தேங்கியிருப்பதன் காரணமாக ஜனங்களுக்கு சேதம் ஏற்படுகிறது. சேதம் வராமல் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** முன்பு ஒரு கேள்விக்கு விடை அளிக்கும்போதே உறுதியளித்திருக்கிறேன். அவருடைய தொகுதியில் அந்த ஒரு பிரச்னை ஏற்பட்டால் அரசாங்கம் நேரடியாகக் கவனிக்கும்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது லோயர் பவானித் திட்டமானது புஞ்சை பயிர்களைச் சாகுபடி செய்வதற்காக ஏற்பட்டது என்று அதன் நோக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அது வரவேற்கத்தக்கது. இயல்பாகவே தண்ணீர் அதிகமாக ஓடி நஞ்சை சாகுபடி இருக்கின்ற இடங்களில் நஞ்சை சாகுபடி செய்யும்போது தண்டத் தீர்வை விதிக்க வேண்டுமென்றிருக்கிற உத்தரவை எடுத்து, அதன் காரணமாக நடைபெற்று வருகிற கேஸ்களை வாபஸ் வாங்குவார்களா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இப்போது இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது. மானியக் கோரிக்கை வரும்போது விவரமாகப் பதில் கூறுகிறேன்.

அவ்வாறு அந்த நீரைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அதிகாரிகளிடத்தில் அனுமதி கோரவேண்டியிருக்கிறது. இதனால் விவசாயிகளுக்குச் சிரமம் ஏற்படுவதால், ஆண்டுதோறும் அனுமதிக்கிற காலத்தை நீடித்து, ஒரு முறை அனுமதி வழங்கினால் அது சில வருஷங்களுக்குச் செல்லும்படியாக இருக்கும்படிச் செய்வார்களா?

**கனம் திரு. வெ. ராமையா:** லோயர் பவானி திட்டத்தின்கீழ் ஆயக்கட்டுகளுக்கு அளிக்கப்படுகிற தண்ணீர் கசிவு காட்டாறுகளில் ஓடி வீணாகிறது. அதைச் சிலர் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். அவ்வாறு பயன் படுத்திக் கொள்வதற்கு தாராளமாக அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால் அவ்வாறு ஆண்டுதோறும் பர்மிஷன் வாங்கும்படி வைக்காது சில வருஷ நிரந்தர அடிப்படையில் வைத்தால், சில வருஷங்களுக்குப் பிறகு இந்த நிலங்களும் ஆயக்கட்டுக்குள் கொண்டுவரப்படவேண்டும் என்கிற பிரச்சனை எழுந்துவிடும். நாம் இதை மறுபரிசீலனை செய்து இந்த திட்டத்தினால் எவ்வளவு ஆயக்கட்டு நிலங்களுக்குப் பாசன வசதி கொடுக்கலாம் என்று நிர்ணயிக்கிற வரையில் இதுமாதிரி ஆண்டுதோறும் பர்மிஷன் கொடுக்கிற முறை நீடிப்பதுதான் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, ஈரோடு நகரத்திற்கு அருகில் கொரங்கன் பள்ளம், பெரும்பள்ளம் என்ற இரண்டு ஓடைகளில் மிகுதியாக ஓடுகின்ற கசிவு நீரைத் தடுத்து அணை கட்டினால் கீழ்பவானி திட்டத்தில் விடப்பட்ட பூமிக்குப் பாசன வசதி அளிக்க முடியும். கீழ்த்தரத்தில் இதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டதே, அதுபற்றி சர்க்காருக்கு வந்துள்ள தகவல் என்ன? சர்க்கார் என்ன முடிவு எடுக்க இருக்கிறார்கள்?

**கனம் திரு. வெ. ராமையா:** இந்தக் கசிவு நீரைப் பயன்படுத்திக் கொள்வது பற்றி பூராவாகவே நன்கு பரிசீலனை செய்யப்பட்டு இருக்கிறது. சில இடங்களில் அந்த ஸிஸ்டம் அடிப்படையில் இரண்டொன்றுக்கு அங்கீகாரம் கூட அளிக்கப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட இரண்டு ஓடைகளைப் பற்றியும் நான் நன்கு அறிவேன். அதிகமாகக் கசிவு நீர் அந்த ஓடைகளின் வழியே ஓடிப்போய் நொய்யல் ஆற்றில் சேர்ந்து விடுகிறது. இதைப்பற்றிப் பரிசீலனை செய்து அந்தக் கசிவு நீரைப் பயன்படுத்திக் கொள்ள சீஃப் என்ஜினியர் விரைவிலேயே நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள்.

**திரு. செ. சதாசிவம்:** கீழ்பவானி திட்டத்தின் கசிவு நீரும், கழிவு நீரும் ஏராளமாக நொய்யல் ஆற்றில் போய்க் கலந்து வீணாகிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் அறிவார்கள். ஆகவே நொய்யல் ஆற்றில் ஓர் அணை கட்டும் திட்டம் எந்த நிலைமையில் உள்ளது? அதை உடனடியாகச் செய்ய அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. வெ. ராமையா:** லோயர் பவானி கழிவு நீரும், கசிவு நீரும் நொய்யல் ஆற்றில் போய்க் கலந்து வீணாவதால் அதைத் தடுத்து நிறுத்த ஒரு அணை கட்டவேண்டுமென்ற கோரிக்



கையை அரசாங்கம் நன்கு பரிசீலனை செய்து ஒரு திட்டம் உருவாக்கியிருக்கிறது. இப்போது இருக்கிற நிலைமையில் அந்தத் திட்ட வேலை எப்போது ஆரம்பமாகும் என்று என்னால் ஒன்றும் உறுதியாகச் சொல்ல முடியவில்லை. ஆனால் சீக்கிரமே நல்லதொரு முடிவு எடுக்கப்படும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

**திருமதி சி. குழந்தையம்மாள்:** கனம் சபாநாயகர் அவர்களே, லோயர் பவானி அணைக்கட்டின் கசிவு நீர் இயற்கையிலேயே ஓர் ஓடை போல் ஓடுகிறது. இந்த நீரைப் பயன்படுத்திக் கொள்ள ஆண்டுதோறும் பர்மிஷன் ரெவின்யூ இலாகாவிடம் வாங்கவேண்டியிருக்கிறது. இதனால் கஷ்டம் ஏற்படுவதனால் இப்போது கசிவு நீரைக் கொண்டு சாகுபடி செய்யப்படுகிற பூமியையும் ஆயக்கட்டு நிலத்தின் கீழேயே கொண்டுவர அரசாங்கம் முயற்சி செய்யுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா:** இந்தத் திட்டம் பூர்த்தியானபோது இத்தனை ஆயிரம் ஏக்கரா பூமி இதன் ஆயக்கட்டுகளாக இருக்கும் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. சில ஆயிரம் பூமி அந்தப் பகுதியில் விடப்பட்டும் இருக்கிறது. இப்போது கசிவு நீரைக் கொண்டு சில இடங்களில் சாகுபடி செய்கிறார்கள். இதை மறுபடியும் பரிசீலனை செய்து இதன் ஆயக்கட்டாக இருக்கக் கூடிய பூமி எவ்வளவு என்பதை நிர்ணயம் செய்கிற வரையில் ஆண்டுதோறும் அனுமதி கோருவதும், பெறுவதும் இருப்பதுதான் நல்லது.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை:** பவானித் திட்டம் வகுக்கப்பட்டபோதே காவேரிப் பாசன ஆயக்கட்டுகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது. ஆனால் இப்போது கசிவு நீர்ப்பாசனம், கழிவு நீர்ப் பாசனம் என்று பவானி ஏரியா ஆயக்கட்டு அதிகப்படுவதன் காரணமாக இப்போதே ஸி.எம்.பி. கனால் கடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைப்பது அரிதாக இருப்பதனால் பின்னே தண்ணீர் கஷ்டம் ஏற்படாது என்கிற உத்தரவாதத்தை கனம் அமைச்சர் அவர்கள் கொடுப்பார்களா என்று கேட்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா:** தஞ்சை பிரதிநிதி என்ற முறையில் விஷயம் தெரியாமல் இந்தக் கேள்வியை கனம் அங்கத்தினர் கேட்டிருக்கிறார் என்று நினைக்கிறேன். முன்பு கொடுக்கப்பட்ட உத்தரவாதம் எப்போதுமே நீக்கப்படவில்லை. அதுவும் லோயர் பவானி திட்டம் பூர்த்தியான பிறகு அங்கே ஆயக்கட்டுகளுக்குத் தண்ணீர் கொடுப்பதன் காரணமாக இங்கே தண்ணீர் சரியாகக் கொடுக்கப்படவில்லை என்கிற பிரச்சனையே எழவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். கடலில் சென்று வீணாகக் கலந்து போனாலும் போகட்டும் தஞ்சை மாவட்டத்தைத் தவிர வேறு மாவட்டங்களுக்கு காவேரியில் இருந்து தண்ணீர் கொடுப்பது என்றால் அதை தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எதிர்ப்பது சரியல்ல. இப்படி நம் மாநிலத்திற்குள்ளேயே அந்த மாவட்டம், இந்த மாவட்டம் என்கிற உணர்ச்சியிருக்குமானால் பிற மாநிலங்களில் இருந்து நாம் தண்ணீர் கேட்பதற்கே தகுதியில்லாதவர்களாக ஆகிறோம் என்று மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, பவானி பாசனப் பகுதிகளில் சென்ற மூன்று ஆண்டுகளாக நெல் பயிரிடாமல் இருக்கும் விவசாயிகள் ஏழைகளாக இருக்கிறார்கள். அப்போது வசதி இல்லாமல் அவ்வாறு செய்தார்கள். இந்த ஆண்டு வசதியை அனுசரித்து நெல் பயிரிட முன் வரும்போது, சர்க்கார் தடை செய்தால், ஏழை விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படுகிறது. ஆகவே, தண்டத் தீர்வையை விதிக்காமல் இருக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இன்னும் இரண்டு தினங்கள் பொறுத்துக் கொள்ளுங்கள், பதில் சொல்லுகிறேன்.

*Roads and irrigation facilities (Tirunelveli district)*

* 278 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government have received any representation from Sri M. S. Selvarajan, M.L.A., during 1960–61 and 1961–62 regarding the general improvement of roads and better irrigation facilities for the Tirunelveli district; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Four representation were received during 1960–61. No representation was received during 1961–62.

(*b*) Action taken in the matter has already been intimated to the Member.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** சார், சட்டசபை அங்கத்தினர் செல்வராஜன் கொடுத்திருக்கக்கூடிய கோரிக்கைகள் பலவற்றில் சிலவற்றின் பேரிலாவது தீர்க்கமான முடிவுகளை அரசாங்கம் எடுத்திருக்கிறதா ? அதைப்பற்றி இங்கு அறிவிக்க முடியுமா ?

MR. SPEAKER : It is too general a question.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இந்தக் கேள்விக்குத் தக்க பதில் சொல்லியிருக்கிறேன். அவர் எழுதிய கடிதங்களுக்கெல்லாம் முறையாகப் பதில் போய்க்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வாணியன் ஏரி (தஞ்சாவூர் வட்டம்)**

* 279 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் தாலுகா நெ. 37-ம், சித்திரக்குடி கிராமத்தில் உள்ள வாணியன் ஏரி எத்தனை ஏக்கர் நிலம் ?

(இ) அந்த நிலம் சாகுபடியில் உள்ளதா ?

(உ) உள்ளதென்றால் தண்டத் தீர்வை வசூலிக்கப்படுகிறதா ?

(எ) அந்த நிலத்தில் சாகுபடி செய்பவர்கள் அடமானம் கோரினார்களா ?



**கனம் திரு. வெ. ராமைய்யா :** (அ) வாணியன் ஏரியின் விஸ்தீரணம் 73.56 ஏக்கர்களாகும்.

(இ) அதில் பெரும்பகுதி அதாவது 67.45 ஏக்கர் நிலம் சாகுபடியில் உள்ளது.

(உ) & (எ) ஆம்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** இந்த நிலத்தை அடமானம் செய்கிறபோது தண்டத் தீர்வை செலுத்தி விவசாயம் செய்து கொண்டிருக்கக்கூடியவர்களுக்கு அடமானம் செய்யாமல் தனி நபர்களுக்குச் செய்து கொண்டிருக்கிறார்கள். தண்டத் தீர்வை செலுத்தியவர்களுக்கு மட்டுந்தான் அடமானம் செய்யவேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** என்னுடைய தகவல்படி, கலெக்டர் பரிசீலனையிலிருந்து அந்தப் பூமி யார் யாருக்குக் கொடுக்க வேண்டுமென்ற தகுதி பார்த்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் விவரங்கள் வேண்டுமானால் தனியாக எழுதி அனுப்பினால் விவரங்களை கொடுக்க முடியும்.

**அமைச்சர்கள் சுற்றுப் பயணப்படி**

* 280 **கேள்வி.—திரு. முனு ஆதி :** கனம் முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்ற 1957-62 அமைச்சரவையில், பதவி வகித்த அமைச்சர்கள் ஒவ்வொருவரும், தாங்கள் பதவி வகித்த ஐந்தாண்டுகளில் 1961-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15-ந் தேதி வரையில் ஆண்டு தோறும், சுற்றுப் பயணப்படியாக எவ்வளவு தொகை பெற்றுள்ளார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement[a] is placed on the Table of the House.

**திரு. முனு ஆதி :** தலைவர் அவர்களே, அந்த அறிக்கையைப் பார்க்கிறபோது, அமைச்சருக்கு அமைச்சர் வித்தியாசமான பிரயாணப்படி இருப்பதால் தேசிய நெருக்கடியை முன்னிட்டு பிக்ஸட் டி. ஏ வாங்கிக் கொள்ள அமைச்சர்கள் முன்வருவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்த அறிக்கையிலுள்ள விவரங்களை கனம் அங்கத்தினர் அவர்கள் கவனித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். பிரயாணப் படியில், ரெயில், ஏரோபிளேன் ஆகியவற்றுக்கான கட்டணத் தொகையைப் பொறுத்ததாகத்தான் இருக்கிறது. பிரயாணம் செய்கிறவர்களுக்கு ஏற்றதாகத்தான் செலவு ஏற்படுகிறது.

---

[a] Printed as Appendix on pages 501–507.

வில்லை. அடிக்கடி வந்து வந்துதான் போய்க் கொண்டிருக்க வேண்டுமா, 22 நாட்கள் தங்க வேண்டுமென்றால் அங்கேயே முகாம் அடித்து விட்டு, டி.ஏ.-யைக் குறைக்கலாம் அல்லவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அங்குவந்து வந்து போவது அப்போதைக்கப்போதைய சௌகரியத்தை ஒட்டியது. காரில் சொந்தச் செலவில் பிரயாணம் செய்தால் அச்செலவு ஆகாது.

## பொறியியல் கல்வி

* 281 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தேச நெருக்கடியை சமாளிக்கும் வகையில் எஞ்சினீயரிங் கல்வித் துறையில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், B.E. துறையில் அதிகப்படுத்தவிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) ஆம்.

(இ) விவரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** எஞ்சினீயரிங் கல்லூரி மாணவர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்துகிற நேரத்தில் ப்ரீப்ரொபெஷனல் வகுப்பில் ப்ராக்டிக்கல் ட்ரெயினிங் அதிகமில்லாதிருப்பதால் அடுத்த ஆண்டு திருச்சியில் அமைக்கப்படுகிற என்சினியரிங் காலேஜில் படிக்க ப்ரீ-ப்ரொபெஷனல் மாணவர்களை அதிகப்படுத்த அரசாங்கம் உத்தேசிக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதுவும் பரிசீலனையில் இருக்கிறது.

## 'தாலிடோமைடு மருந்து'

* 282 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) "தாலிடோமைடு" என்ற மருந்தை தடை செய்யக் கோரி விண்ணப்பம் வந்துள்ளதா ?

(இ) அப்படியானால், அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா :** இந்த தாலிடோமைட் மருந்தை வியாதியஸ்தர்கள் உபயோகப்படுத்துவதின் மூலம் வியாதி குணமாகிறது என்று அரசாங்கம் கருதுகிறதா ?



**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இந்த மருந்து வருவதே கிடையாது. அதை 'பான்' செய்தாகிவிட்டது. குணப்படுத்துகிற சக்தியில்லை. தற்போது இது 'பான்' செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** அங்கஹீனமாக்குகிறது என்ற காரணத்திற்காக பான் செய்யப்படுவதற்கு முன்னால் இந்த மருந்து எவ்வளவு விற்கப்பட்டிருக்கிறது ? அதனால் எவ்வளவு குழந்தைகளுக்கு அங்கஹீனம் ஏற்பட்டிருக்கிறது, அல்லது எவ்வளவு குழந்தைகள் கால் கை குறைவாகப் பிறந்திருக்கிறது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இம்மருந்தைக் கொடுப்பதால் கர்ப்பத்திலேயே குழந்தைகள் அங்கஹீனப்படுகிறது என்று பேப்பரில் கண்டவுடன் அமெரிக்காவிலிருந்து இந்த நியூஸ் கிடைத்தது—அதுமுதல் இந்த மருந்து வரவில்லை. நம் நாட்டிற்கு வராத அளவிற்கு அதை 'பான்' செய்தாகிவிட்டது.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—ADJOURNMENT MOTION *RE* POLICE FIRING IN URAPPANUR NEAR TIRUMANGALAM.

MR. SPEAKER : Hon. Members Sri V. Krishnamoorthy and Sri K. A. Mathialagan have given notice of an adjournment motion regarding the shooting in the Village of Urappanur near Tirumangalam.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதுபற்றிய செய்தியை நேற்று இரவு பத்திரிகையில் முதலில் பார்த்தேன். இன்று காலை ஒரு தந்தியும் வந்திருந்தது. இதுபற்றிய விவரங்களைக் கோரி, கலெக்டர் ஒரு ரிப்போர்ட் அனுப்பவேண்டுமென்று கோரப்பட்டிருக்கிறது. அந்த விவரங்கள் தெரிவதற்கு முன்பு இதில் விவாதம் நடத்துவது முறையல்ல. மேலும் இந்தச் செய்தி பத்திரிகைகளில் வந்திருப்பதிலிருந்து சட்டப்படி, முறைப்படி கலெக்டர் உடனடியாக நடவடிக்கை எடுத்து, சுட்டதைப் பற்றி விசாரிக்க ஆர்.டி.ஓ. நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் வந்திருக்கிறது. 'என்கொயரி' ஆன பின்னர்தான் யார் மீது தவறு என்று தெரியும். இதில் ஏதாவது விவரங்கள் தெரிந்து கொள்ளவேண்டுமென்றால் கனம் அங்கத்தினர் அவசரக் கேள்வி ஒன்றைக் கேட்டால் சீக்கிரத்தில் ஒன்றிரண்டு நாட்களில் அங்கிருந்து தகவல் வந்தவுடன் அதற்கு விடை அளிக்கலாம் என்றும் சொல்லிக் கொள்கிறேன்.

MR. SPEAKER : What I say is this. There will be no detailed information either with the hon. Members or with the Government. Therefore, we can take up the adjournment motion afterwards.

## III.—CALLING ATTENTION TO DIFFICULTIES EXPERIENCED BY ELECTRICAL WIREMEN.

SRI R. S. VEERAPPA CHETTIAR : Sir, I wish to call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent public importance, viz., the difficulties experienced by the electrical

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தற்போது நாட்டில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலையையொட்டி அமைச்சர்களின் சுற்றுப் பிரயாணங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றனவா ? அப்படிக் குறைக்கப்பட்டிருக்கின்றன என்றால், எந்த அளவில் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** குறைக்கவேண்டுமென்ற எண்ணத்தோடுதான் சுற்றுப்பிரயாணம் வகுக்கப்படுகிறது. தேசிய நெருக்கடியை ஒட்டிக்கூட புது அவசியம் ஏற்படுகிறது. தவிர்க்க முடியாத வகையில்தான் பிரயாணம் நடத்தப்படுகிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** மேஜைமீது வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் பழைய நிதியமைச்சர், ரெவென்யூ அமைச்சர், ஸ்தல நிர்வாக அமைச்சர் இவர்கள் 1958-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் 1961-ம் வருஷம் டிசம்பர் மாதம் 15-ம் தேதி வரை வாங்கிய நாட்படி, மைலேஜ் சம்பந்தமாக மொத்த இலக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மற்றவர்களுக்கு ஒரு மாதிரியான கணக்கும், இவர்களுக்கு மொத்தமாகவும் இப்படி ஏன் தனித்தனியாகக் கொடுக்கப்பட்டுள்ளன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பிரயாணப்படி விவரங்களை அக்கவுண்டண்ட்-ஜெனரல் அப்போதைக்கப்போது பார்த்து அவர்கள் அனுமதித்த பிறகுதான் 'சாங்ஷன்' செய்யப்படுகிறது. பொதுவாக கணக்கு பார்க்கிறார், தனித்தனியாக கொடுப்பதையும் பார்க்கிறார். அவருக்குத் திருப்தி இருந்தால் அனுமதிக்கப்படுகிறது. அப்படி திருப்தி இல்லை என்றால் அக்கவுண்டண்ட் ஜெனரல் மேலும் விவரங்கள் கேட்கிறார், விவரங்கள் அளிக்கப்படுகின்றன.

**திரு. ர. ஜீவரத்னம் :** முதல் அமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் தேசிய நெருக்கடியை முன்னிட்டு எல்லா நகரங்களுக்கும் சுற்றுப்பிரயாணம் வந்ததன் மூலம் மக்களிடத்தில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது உண்மையா ? அதனால் யுத்த நிதிக்கு ஏராளமான பண வசூல் ஏற்பட்டிருப்பதும் உண்மையா ? என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பிரயாணம் செய்வது என்றால் பொழுதுபோக்குக்காகச் செய்வதல்ல. என்னைப் பொறுத்த மட்டில் பிரயாணங்களைக் குறைத்துக் கொண்டால் நலம் என்பது தான். தவிர்க்க முடியாத வகையில் பிரயாணம் ஏற்படுகிறது. அவசியமான வகையில்தான் பிரயாணங்கள் செய்யப்படுகின்றன. அதற்கு வேண்டிய செலவு செய்யப்படுகிறது.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** அமைச்சர்கள் ரயிலில் பிரயாணம் செய்யும்போது சட்டப்படி ஒரு கூப்பே புக் செய்யவேண்டியிருக்கிறது. அதற்கு இரண்டு பர்ஸ்ட் க்ளாஸ் புக் செய்யவேண்டியிருக்கிறது. அப்படி இரண்டு கட்டணம் செலுத்தவேண்டியிருப்பதால் அதுவும் இந்த பிரயாணப்படியில் சேர்ந்திருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதில் ரயில், ப்ளேன் கட்டணம்தான் முக்கால்வாசி என்று கூறினேன். ரயிலில் ஒரு 'கூப்பே' ரிசர்வ் செய்யப்படுகிறது. அதற்கு இரண்டு கட்டணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. எல்லாவற்றையும் சேர்த்துத்தான் சொல்லப்பட்டிருக்கிறது.



**திரு. சோ. ஆறுமுகம் :** தேசிய நெருக்கடி ஏற்பட்டிருந்தாலும் கூட அமைச்சர்கள் மாநிலத்தில் அடிக்கடி சுற்றுப் பிரயாணம் செய்யாத காரணத்தினால் பல குறைகள் தீர்க்கப்பட முடியவில்லை என்று பொது மக்களிடமிருந்து அரசாங்கத்திற்கு ஏதாவது முறையீடுகள் வந்திருக்கின்றனவா ? அப்படியிருந்தால் அதைக் கவனித்து ஆவன செய்வார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பிரயாணம் செய்யவேண்டும், வரவேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். அது கூடுமானவரையில் தவிர்க்கப்படுகிறது. தவிர்ப்பது அமைச்சர்களின் சௌகரியத்தை ஒட்டியது. இரண்டாவது காரணம் வேறு வேலை இருப்பது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** பயணப்படி வகையில் எந்த அமைச்சர் மிகக் குறைவாக வாங்குகிறார்களோ அவர்களுக்கும், தலைநகரில் எந்த அமைச்சர் அதிக நாட்கள் தங்கியிருக்கிறார்களோ அவர்களுக்கும் ஏதாவது பரிசு கொடுப்பதற்கு அரசாங்கம் ஒரு திட்டத்தை ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் வேண்டுமானால் பரிசு கொடுக்கலாம்.

**திரு. முனு ஆதி :** பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு பிக்ஸட் டீ.ஏ. என்று 100 ரூபாய் கொடுக்கப்படுகிறது. பஞ்சாயத்து தலைவர்கள், உறுப்பினர்கள் இவர்களுக்கும் பட்ஜட்டில் இவ்வளவு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் அமைச்சர்களுக்கும் ஆண்டுதோறும் இவ்வளவுதான் செலவு செய்யலாம் என்று டீ.ஏ. கொடுக்க முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பஞ்சாயத்து யூனியனில் இருப்பவர்கள் ரயிலிலும் ஆகாய விமானத்திலும் பிரயாணம் செய்வதில்லை. செய்ய முடியாது. அமைச்சர்கள் ரயிலிலும், விமானத்திலும் பிரயாணம் செய்யவேண்டியிருக்கிறது. அடிக்கடி டெல்லி போக வேண்டியிருக்கிறது. ரயிலில் செல்வதை விட, விமானத்தில் சென்றால், இரண்டு, மூன்று நாட்கள் குறைகின்றன. ஆகவே, பஞ்சாயத்து யூனியன்களுக்கு என்ன வரம்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அதுமாதிரி அமைச்சர்கள் சுற்றுப் பிரயாணத்திற்கு ஏற்படுத்த முடியாது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** செய்தித் துறை அமைச்சர் அவர்கள் டிசம்பரில் மட்டும் எங்கள் மாவட்டத்தில் 22 நாட்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் வாங்கிய மொத்த டீ.ஏ. ஒரு மாதத்திற்கு 1,000-க்கு மேல் ஆகியிருக்கிறது என்று அறிகிறேன். இருபத்திரண்டு நாட்கள் அமைச்சர் தங்கியிருப்பதை நான் ஆட்சேபிக்க

wiremen, supervisors and contractors as a result of the order of the Electrical Wiremen, Supervisors and Contractors Licencing Board.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir I wish to make the following statement :—

In view of the large number of accidents arising from the electrical installations should be carried out only by trained and

9-30 a.m. electrical installations should be carried out only by trained and competent persons so as to ensure the safety of personnel and property. The Government therefore decided to enforce the provisions of Rule 45 (1) of the Indian Electricity Rules from 1st October 1955, which stipulates that electrical installation work including additions, alterations, etc., should be carried out by an electrical contractor licensed by the State Government and under the direct supervision of a person holding a certificate of competency issued or recognised by the State Government. Because of repeated representations from wiremen of the hardship caused by the rule, the application of this rule in so far as it relates to electrical installations carried out by licensed contractors was being relaxed periodically since 1956 in respect of medium and low pressure installations. Since about 30 per cent of the fatal electrical accidents in the State occur yearly in domestic installations and as the execution of such works by the wiremen is not always in conformity with the approved code of practice and in view of the availability of a large number of approved contractors, the relaxation of the rule was not extended beyond 31st March 1962. This rule has not also been relaxed in any other State in India. The wiremen were aware of the existence and non-enforcement of the rule all along from 1956 on account of the rule being relaxed periodically and the withdrawal of the relaxation of the rule was not sudden. Continued relaxation of the rule is not in the interest of the public on account of the accidents occuring in domestic installations. With reference to representations received from the Tirunelveli District Private Electrical Wiremen's Association, the Government have recently issued a Press Release advising the District Wiremen's Associations to inform all wiremen to form themselves into a firm (Unit) or firms (Units) of contractors and apply to the Electrical Wiremen, Supervisors and Contractors' Licensing Board for 'B' Grade Contractors' Licence, which will be considered favourably.

No holder of Competency Certificates (Wireman or Supervisor) issued by the Electrical Wiremen, Supervisors and Contractors' Licensing Board has been insisted upon working under a contractor. Every Wiremen Competency Certificate holder is being issued 'B' Grade Contractors' Licence if he applies for the same, even if he is not in immediate possession of the necessary instruments.

The second part of the notice presumably refers to 'A' Grade contractors who erect High Voltage installations. Of the 3 instruments referred to, namely, earth-testing meters, frequency meters



and 1,000 Volts meggers, frequency meter is not included as one of the "necessary" instruments. Since the other 2 instruments are essential for the proper and efficient erection of equipment in any High Voltage installation, 'A' Grade contractors are being advised by the Electrical Wiremen, Supervisors and Contractors' Licensing Board to possess or at least place orders for these instruments. But no application (fresh or for renewal) for issue of 'A' Grade contractors' licence has been so far rejected by the Board for not being in immediate possession of these instruments.

IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1963-64—*cont.*

DEMAND NO. XIV—MEDICAL.

DEMAND NO. XV—PUBLIC HEALTH.

DEMAND NO. XXXVI—CAPITAL OUTLAY ON PUBLIC HEALTH.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM Mr. Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 7,14,18,100 under Demand No. XIV—Medical.'

'That the Government be granted a sum not exceeding Rs. 2,90,75,000 under Demand No. VX—Public Health.

'That the Government be granted a sum not exceeding Rs. 31,61,200 under Demand No. XXXVIII—Capital Outlay on Public Health.'

SRI S. MADHAVAN : Sir, I move—

'That the allotment of Rs. 7,14,18,100 under Demand No. XIV—Medical be reduced by Rs. 100.'

SRI V. KRISHNAMOORTHY : Sir, I move—

'That the allotment of Rs. 2,90,75,000 under Demand No. XV—Public Health be reduced by Rs. 100.'

SRI S. MURUGAIYAN : Sir, I move—

'That the allotment of Rs. 31,61,200 under Demand No. XXXVIII—Capital Outlay on Public Health be reduced by Rs. 100.'

MR. SPEAKER : The Demands and the cut motions are before the House for discussion.

* திரு. எஸ். மாதவன் : மதிப்புக்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மான்ய விவாதத்தில் நான் முக்கியமாகக் குறிப்பிட விரும்புவது நம்முடைய சர்க்கார் விவசாயப் பெருமக்கள் ஏராளமாக உள்ள கிராமப் பகுதிகளுக்கு மருத்துவ வசதிகளைப் பெருக்குவதற்கு தவறிவிட்டது என்பதைப் பற்றித்தான். காரணம், பெரும் பெரும் நகரங்களில் மருத்துவ வசதிகள் ஏராளமாக இருந்த போதிலும், கிராமப் பகுதிகள் அதிகமாக உள்ள நம் நாட்டிலே, இந்த மருத்துவ விடுதிகள் அதிக வசதிகளுடன்

[திரு. எஸ். மாதவன்] [18th March 1963

அதை இந்த மாநில சர்க்கார் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். பயன்படுத்திக்கொண்டு, பிரைமரி ஹெல்த் சென்டர்கள் ஏற்படுத்துவதை நிறுத்திவைக்கக்கூடாது என்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். உதாரணமாக, ராமனாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர் பஞ்சாயத்து யூனியனில் பிரைமரி ஹெல்த் சென்டர் ஏற்படுத்தவேண்டுமென்று உத்தரவு போட்டு, அதற்காக பணமும் ஒதுக்கப்பட்டு பல ஆண்டுகள் கடந்துவிட்டன. இதுவரையிலும், பிரைமரி ஹெல்த் சென்டர் கட்டுவதற்கு வேண்டிய ஆக்க வேலைகளுக்கு எந்த விதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதற்குக் காரணம் கேட்டால், அவர்கள் சொல்லுவது நிலம் கிடைக்கவில்லை என்ற காரணம் தான். நிலம் ஆர்ஜிதம் செய்யப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இல்லாத ஒரே காரணத்தினால் மருத்துவ மனை கட்டப்படவில்லை என்ற ஒரு பதிலை எங்களுக்கு தந்தார்கள், இது எந்த அளவுக்கு உண்மை என்பதுபற்றி அமைச்சரவை யோசித்துப் பார்க்கவேண்டும். ராமனாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் விவசாயத்திற்குப் பயன்படாத ஏராளமான நிலங்கள் (புஞ்சை நிலங்கள்) கிடக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கும்பொழுது, நிலம் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் இந்த மருந்துவ மனை அமைக்கப்படவில்லை என்ற ஒரு கருத்து பொருந்தக்கூடிய கருத்தா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அம்மை நோய் தடுப்பு விஷயத்தைப்பற்றி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் சில நாட்களுக்கு முன்னால் ஒரு கேள்விக்குப் பதில் சொன்னார்கள். தடுப்பு நடவடிக்கையில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்துவதில்லை என்பதை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன். காரணம், அம்மை நோய் வந்ததற்குப் பின்னால், அதனால் பல சாவுகள் தொடர்ந்ததற்குப் பின்னால் தான் அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது. இதற்கு முன்னாலேயே இந்தச் சூழ்நிலை எங்கெங்கே ஏற்படுகிறது என்பது கண்டு, அந்த இடங்களில் அம்மை நோயை தடுப்பதற்கு எந்த முறையை இந்த அரசாங்கம் பின்பற்றியது என்பதை அறிய விரும்புகிறேன். உதாரணமாக, இந்த மன்றத்தில், ராமனாதபுரம் மாவட்டத்தில் தேவகோட்டை நகரத்தில் அம்மை நோய் ஏற்பட்டிருந்து, அம்மை நோய் ஏற்பட்டதற்குப் பின்னாலே மாதத்திற்கு மாதம் சாவுகள் அதிகரித்ததாக நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கே புள்ளிவிவரம் கொடுத்தார்கள். அம்மைநோய் ஏற்பட்டதற்கு பின்னாலாவது அரசாங்கம் நிலைமையை சரிவர கண்காணித்து தடுப்பு முறையை மேற்கொண்டிருந்தால், சாவுகளுடைய எண்ணிக்கை குறைந்திருக்கும். ஆனால், நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்காத காரணத்தினால் மாதத்திற்கு மாதம் சாவு அதிகரித்தது என்பதை அமைச்சர் அவர்கள் இங்கே ஒப்புக்கொண்டார்கள். பின்தங்கிய மாவட்டங்களிலாவது, மருத்துவ வசதிகள் அதிகமில்லாத மாவட்டங்களிலாவது, இது போன்ற தடுப்பு நடவடிக்கைகளில் அதிகாரிகள் ஈடுபடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆலோசனை கூறவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



18th March 1963] [திரு. எஸ். மாதவன்]

இன்னொன்றும் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இங்கே கனம் நிதி அமைச்சர் அவர்கள் ஆசிரியர் மாற்றப்படுவது பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். கணவனும், மனைவியும் உத்தியோகத்தில் இருக்கும்பொழுது, அவர்களில் ஒருவரை மாற்றுவதா, மாற்றக்கூடாதா என்பது ஒரு பிரச்னை. பள்ளிகளில் ஏற்படும் சில சூழ்நிலையிலே மாற்றலாம் என்ற ஒரு கருத்தை நிதி அமைச்சர் அவர்கள் இங்கே கூறினார்கள். இந்த மருத்துவத்துறையிலே இருக்கக்கூடிய அமைச்சர் அவர்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஏதாவது ஒரு குற்றம் காரணமாக கணவன், மனைவியை பிரித்துத்தான் ஆகவேண்டுமென்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், இரண்டு பேர்களையும் சேர்த்து மாற்றிவிடுவது நல்லது. அவர்களைப் பிரித்து தொல்லைகளைக் கொடுக்கக்கூடாது என்பதை இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

எல்.ஐ.எம்., எல்.எம்.பி. டாக்டர்களுக்குள்ள வேறுபாட்டை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அண்மையிலே சர்க்காரிலிருந்து கொடுக்கப்பட்ட உத்தரவின்கீழ் இவர்களுடைய சம்பள விகிதம் வேறுபட்டு இருக்கிறது என்பதாக அறிகிறோம். எல்.ஐ.எம், எல்.எம்.பி. டாக்டர்களுடைய சம்பள விகிதத்திலும் சரி, அவர்களுக்குடைய சம்பள விகிதத்திலும் சரி, அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய மதிப்பிலும் சரி, அரசாங்கம் வேறுபாடு காண்பிக்க ஆரம்பித்தால், அவர்கள் மதிப்புக் குறைந்தவர்களாக கருதப்படுவார்கள். அதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அவர்களுடைய சம்பள விகிதத்தை ஓரளவுக்குக் கூட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி கூட்ட முடியாவிட்டாலும், அவர்களுக்கு இடையே உள்ள சம்பளவிகிதத்தில் உள்ள வேறுபாட்டைக் குறைப்பதற்கு ஏதாவது ஆலோசனைகளை அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எல்.ஐ.எம். படித்தவர்கள் மத்திய சர்க்கார் ஊழியர்களைப் பரிசோதிப்பதற்கும், நகரசபை லிமிட்டில் உள்ள இடங்களில் அவர்கள் சர்டிபிகேட் கொடுப்பதற்கும் அதிகாரம் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எல்.எம்.பி. படித்தவர்களுக்கு அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வேறுபாட்டிற்கு அவர்கள் மதிப்பு குறைந்தவர்கள் என்ற காரணமா அல்லது அவர்கள் படிப்புத் தரம் குறைந்திருக்கிறது என்ற காரணமா? இது போன்று இந்த அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். இது போன்ற சூழ்நிலை இருந்தால், அதை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொன்று, இந்த ஹவுஸ் ஸர்ஜன் கோர்சுக்கு ஸ்டைபெண்டு கொடுக்கிறார்கள். சென்னை மருத்துவ விடுதிகளில் உள்ள ஹவுஸ் ஸர்ஜன்களுக்கு 3 மாத காலமாக ஸ்டைபெண்டு கொடுக்கப்படவில்லை என்ற ஒரு தகவல் எங்களுக்கு வந்திருக்கிறது. அது

அமைக்கப்படவில்லை என்று இங்கே சுட்டிக் காண்பிக்க ஆசைப் படுகிறேன். அதே சமயத்தில் தனிப்பட்டவர்கள் வைத்திருக்கக் கூடிய மருத்துவ விடுதிகளை நம் அரசாங்கம் கண்காணித்து மேற் பார்வை செய்யவேண்டுமென்ற கோரிக்கையையும் வற்புறுத்த விரும்புகிறேன். தனிப்பட்டவர்கள் மருத்துவ விடுதிகள் வைப்பதை ஆதரித்து வரவேற்ற போதிலும், அவைகள் எப்படிச் செயல்படுகின்றன என்பதை நம் அரசாங்கம் மக்களுடைய நன்மையை உத்தேசித்துக் கண்காணிக்க வேண்டும் என்பதை ஒரு கொள்கையை நம் அரசாங்கம் ஏற்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் குறிப்பிலே அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார் கள்—நாட்டுப்புறங்களிலுள்ள, கிராமப்புறங்களிலுள்ள, குறிப் பாக தாலுகா தலைநகரில் உள்ள மருத்துவ விடுதிகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அந்த மருத்துவ விடுதிகளில் அதிக வசதிகள் செய்து கொடுத்திருப்பதாக. உண்மையிலேயே அந்தமாதிரி தாலுகா அளவில் உள்ள மருத்துவ விடுதிகள் வாய்ப்பும் வசதியும் நிறைந்த மருத்துவ விடுதிகளாக அமைக்கப்பட்டிருக்கின்றனவா என்பது சந்தேகத்திற்கு உரிய விஷயம். உதாரணமாக எடுத்துக் கொண்டால், ராமநாதபுரம் மாவட்டத்தில், திருப்பத்தூர் மருத்துவ விடுதி மிகவும் சிறிய விடுதியாக இருக் கிறது. அரசாங்கத்தில் இருக்கிற ஒரே காரணத்தினாலோ என்னவோ, கவனிக்கப்படாமல் கட்டிட வசதிகூட இல்லாத சூழ் நிலையில், ஏதாவது ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டால் அங்கே உள்ள நபர்களை அந்த மருத்துவ விடுதியிலுள்ள டாக்டரே சர்ட்டி ஃபிகேட் கொடுத்து மதுரைக்குத் தூக்கிச் செல்லக்கூடிய ஒரு இக்கட்டான சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய ஒரு குறிப்புக்கும் உண்மையிலேயே நடை முறையிலே இருக்கக்கூடிய நிலைமைக்கும் வேறுபாடு இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

அதேபோலத்தான் இந்த டி.பி. சானடோரியம் அல்லது லெப்ரஸி ஹாஸ்பிடல்ஸ் போன்ற பெரும் வியாதிகளுக்கு இருக்கக் கூடிய மருத்துவ விடுதிகளை தனிப்பட்டவர்கள் நடத்தினாலும் சரி, அல்லது அரசாங்கம் நடத்தினாலும் சரி, அதற்கு அதிக கவனம் கொடுத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மருத்துவ விடுதியையாவது ஒழுங்கான முறையில், நல்ல முறையில் நடத்து வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட டி.பி. சானடோரியங்களை தனிப்பட்டவர்கள் நடத்திக்கொண்டு வந்தாலும் கூட, அவைகள் சரியாக நடைபெறவிட்டால் அவைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதற்கு முன்வரவேண்டும். உதாரணத்திற்கு, அமைச்சர் அவர்களுக்கு ஏற்கெனவே தெரிந்த செய்தி, தேவகோட்டைக் குப் பக்கத்திலுள்ள டி.பி. சானடோரியம். தனிப்பட்டவர்கள் தொடங்கி வைத்து ஆரம்பித்திருக்கிற சோமநாதபுரம் சானடோ ரியம். அது வரவேற்க வேண்டியதுதான். தனிப்பட்டவர்கள்

DEMAND XIV—MEDICAL, DEMAND XV—PUBLIC HEALTH
AND DEMAND XXXVIII—CAPITAL OUTLAY ON
PUBLIC HEALTH



தொடங்கி வைத்த ஒரே காரணத்தினால் மருத்துவ விடுதியில் ஊழல் நடந்தாலும் சர்க்கார் கண்காணிக்கக் கூட முடியாதபடி, சர்க்கார் தலையிடக்கூட முடியாதபடி சூழ்நிலை இருந்தால் அது பொது மக்களைப் பாதிக்கிறது என்பதை அமைச்சரவை உணர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சோமநாதபுரம் சானடோரியத்தில் சமீபத்தில் ஸ்ட்ரைக் ஏற்பட்டது. அங்கே உள்ள நோயாளிகளுக்கு உணவில்லை, மருந்து இல்லை, டாக்டர் களுக்குச் சம்பளமே கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு வந்து, தேவகோட்டை சப்-கலெக்டர் உடனடியாகப் பார்வையிட்டு அந்த ஸ்ட்ரைக்கை நிறுத்தினார்கள். இது அரசாங்கத்தின் கவனத் திற்கு வந்தது என்பதை நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள் கிறேன். தனிப்பட்டவர்கள் நடத்துகிற காரணத்தினால் சட்ட பூர்வமாக அரசாங்கம் தலையிட முடியவில்லை என்ற ஒரே காரணத் திற்காக பொது மக்கள் கஷ்டப்படவேண்டியிருக்கிறது என்று அமைச்சர் உணர்ந்து, உடனடியாக இது போன்ற சூழ்நிலை எதிர் காலத்தில் ஏற்படாத அளவு, தனிப்பட்டவர்கள் எந்தெந்த மருத் துவ விடுதி நடத்தினாலும், அவைகளைக் கண்காணிக்கும் அதிகாரம் நம் அரசாங்கத்திற்கு வேண்டுமென்று கூறிக் கொள்ள . ஆசைப் படுகிறேன்.

அடுத்து, பிரைமரி ஹெல்த் செண்டர் ஏற்படுத்தி, நாம் விவசாய பெருமக்களுக்கு உதவ வேண்டும் என்ற ஒரு கொள்கையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. இதுபற்றி சமீபத்தில் மத்திய சர்க்காரில் பாராளுமன்றத்தில் பேசும்பொழுது அங்கே உள்ள மருத்துவ துறைக்கு அமைச்சராக உள்ளவர்கள் தெளி வாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அவசர கால நிலைக்காக பிரைமரி ஹெல்த் செண்டர்கள் கட்டுவதை நிறுத்தக்கூடாது என்ற உத்தரவை அவர்கள் மாநில சர்க்கார்களுக்கு அனுப்பி இருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். இது வரவேற்கக்கூடிய ஒன்று, காரணம், இந்த பிரைமரி ஹெல்த் செண்டர் அமைக்கப் படக்கூடிய இடங்களெல்லாம் கிராமப் புறங்களாக இருக்கின்றன. அந்த இடங்களில் எல்லாம் உடனே மருத்துவ வசதி செய்து தருவது அவசியம் என்ற காரணத்தினால், இந்தத் திட்டத்தைப் பற்றி மத்திய சர்க்கார் மாகாண சர்க்கார்களுக்கு ஆலோசனை கூறியிருக்கிறது. ஆனால், அமைச்சர் அவர்கள் அறிக்கையில் இந்த அவசர கால நிலையை ஒட்டி புதியதாக பிரைமரி ஹெல்த் செண்டர்கள் திறக்கப்படமாட்டாது என்ற ஒரு குறிப்பு காணப் படுகிறது. இது உண்மையிலேயே கிராமப்புறங்களிலிருந்து வந்திருக்கக்கூடிய எங்களுக்கெல்லாம் கவலை தரக்கூடிய செய்தி யாகும். இதை மாற்றி அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். நகர்புறங்களில் எந்த நிலை இருந்தபோதிலும், கிராமப் புறங்களில் மருத்துவவசதி இந்தப் பிரைமரி ஹெல்த் செண்டர்கள் ஏற்படுத்துவதைப் பொறுத்துத்தான் இருக்கப்போகிறது. அவசர கால நிலையை ஒட்டி மத்திய சர்க்கார் ஏராளமாக உதவி தருகிறோம் என்ற ஒரு வாக்குறுதியை ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது பாராளுமன்றத்தில் கொடுத்திருக்கிறார்கள்.

உண்மை என்றால், உடனே அவர்களுக்கு ஸ்டைபெண்டு கொடுக்க வேண்டிய ஒரு முயற்சியை இந்த அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இந்த மான்யத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையிலே இன்னும் அதிகமான அளவுக்கு கிராமப் புறங்களிலே வசதி செய்யக்கூடிய நிலையை ஏற்படுத்தும்படியான ஒரு கொள்கையை நம்முடைய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும். கிராமப்புறங்களில் மருத்துவ வசதி இல்லாத காரணத்தினாலே கிராமப்புறத்திலுள்ள மக்கள் மைல் கணக்காக நகர்புறங்களை தேடிச் செல்லவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது, நகர்புறங்களை நோயாளிகள் எட்டக்கூடிய நேரத்தில், உயிரே பிரிந்துவிடக்கூடிய நிலை ஏற்படுகிறது. இதை அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, இந்த மான்யத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையில் கிராமப்புறங்களுக்கு என்று தனியாக ஓரளவுக்கு ஒதுக்கி, அந்தத் தொகையை அதிகப்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திருமதி சி. குழந்தையம்மாள்: கனம் சபாநாயகர் அவர்களே அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய பொது சுகாதார மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த நாட்டிலே நூற்றுக்கு 52 பேர்கள் பெண்களாக இருக்கிற ஒரு காரணத்தினாலே, கனம் அமைச்சர் அவர்களும், நம்முடைய டி.எம்.எஸ். அவர்களும், பல்வேறு டாக்டர் பணியிலே ஈடுபட்டிருக்கிறவர்களும் தாய்மார்களாக இருக்கிற காரணத்தினாலே, இந்தத்துறை அமைதியாகவும், நல்ல முறையிலும் நடந்துவருகிறது என்பது பற்றி எங்களுடைய பாராட்டுதலை இந்தச் சபையின் மூலம் தெரிவித்துக்கொள்கிறோம். அதுவும் சிறப்பாக படிப்படியாக வளர்ந்துவருகிற இந்த சுகாதாரத் துறையானது பொது மக்களிடையே எதிர்பாராத விபத்துக்களை உண்டாக்காத முறையில் முன்னேற்றம் அடைந்து கொண்டு வருகிறது என்பதற்காகவும் நான் இங்கே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாக, கோவையைப் பொறுத்த வரையிலே பல ஆண்டுகளுக்கு முன்பு, பிளேக் நோயினாலும், சிறு அம்மை, பெரிய அம்மை, காலரா போன்ற நோய்களினாலும் நூற்றுக் கணக்கான பேர்கள், என் ஆயிரக்கணக்கான மக்கள், இறந்து வந்தார்கள். இப்படிப்பட்ட கொடிய நோய்களினால் மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம், திட்ட காலத்தில் படிப்படியாக நோய் வருவதை தடுப்பதற்கான சூழ்நிலை ஏற்படும்படி நம்முடைய அமைச்சர் அவை நல்ல முறையில் தீவிரமாக கண்ணும் கருத்துமாக கவனித்துக்கொண்டு வருகிற ஒரே காரணத்தினால் தான். இப்படிப்பட்ட பெரிய, கொடிய நோய்களினால் பாதிக்கப்பட்டு மக்கள் இறக்கக்கூடிய நிலை இல்லாமல் இருக்கிறது. அதற்காக நான் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த முறையானது வளர வேண்டும், இன்னும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்பதையும் சொல்லிக்கொள்ளுகிறேன்.





அடுத்தபடியாக கோயம்பத்தூரைப் பொறுத்தமட்டில் அங்கே அநேகம் தொழில் நிலையங்கள் அமைந்திருக்கின்றன. கோயம்பத்தூர் நகரத்திற்கு சிறுவாணித் தண்ணீர் கிடைத்து வருகிறது. அது ரொம்பவும் குறைவாகக் கிடைக்கிறது. அதன் காரணமாக அங்கே குடி தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அதனால் நகரத்தில் பொது சுகாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது. கோயம்பத்தூர் நகரத்தில் ஒரே துர் நாற்றமாக இருப்பதற்குக் காரணம் தண்ணீர் பற்றாக்குறைதான். சுகாதாரம் நல்ல முறையில் இல்லை. அங்கு குடி தண்ணீர்த் திட்டத்தை விஸ்தரித்தால் அங்கு சுகாதாரம் நல்ல முறையில் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஏற்கெனவே கேரள அரசாங்கத்துடன் இந்த மந்திரிசபை சிறுவாணி தண்ணீர் சம்பந்தமாக பேச்சு வார்த்தைகள் நடத்திக்கொண்டிருக்கிறது. சிறுவாணித் தண்ணீரைக் கொண்டுவந்து குடி தண்ணீர் வசதியையும் பாசன வசதியையும் செய்து கொள்ளலாம். அத்துடன் பெரிய நகரமாகிய கோவை நகரத்தில் குடி தண்ணீர்ப் பிரச்னையையும் தீர்த்து குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கலாம். அந்த முறையில் கோவை மாவட்டத்தில் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக தொழிலாளர்களுடைய இன்ஷூரன்ஸ் திட்டத்தின் மூலமாக சென்ற ஆண்டு பன்னிரண்டு ஆயிரம் தொழிலாளர் குடும்பங்களுக்கு ஸ்டேட் இன்ஷூரன்ஸ் திட்டத்தின் அடிப்படையில் மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் ஒரு திட்டம் வகுத்திருக்கிறார்கள். கோயம்பத்தூர் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் அங்கு தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தின் மூலமாக நல்ல பயனடைந்து வருகிறார்கள். இருந்தபோதிலும் அவர்களுக்குச் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவைகளை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன். கோவையில் இந்தத் திட்டத்தின் மூலமாக சுமார் 1,500 படுக்கைகள் தான் அவர்களுக்குள்ள ஆஸ்பத்திரியில் அமைத்திருக்கிறார்கள். 1,500 பேர்களுக்கு வசதி செய்திருந்தும் அங்கு சுமார் 3,000 பேர்கள் வருகிறார்கள். அதனால் இந்த 1,500 படுக்கைகளைக் கொண்டு அவர்களைப் பராமரிக்க முடியவில்லை. இந்த விதத்தில் அங்குள்ள டாக்டர்கள் கஷ்டப்படுகிறார்கள். இப்படிப்பட்ட ஆஸ்பத்திரிகளை நகரங்களில் அமைக்காமல் தாலூகா அடிப்படையில் அமைக்க வேண்டும். அந்தச் சூழ்நிலையை அமைக்க வேண்டும் என்பதை இந்த இடத்தில் சுட்டிகாட்ட விரும்புகிறேன்.

அதற்கு மேல் எம்.பி.பி.எஸ். படிப்பு, இதற்கு இப்பொழுது 600 'சீட்' டுகள் இருந்தவற்றை இப்பொழுது 700 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். ஆனால், இப்படி உயர்த்தியிருந்தும் பெண்களுக்கு என்று கொடுக்கப்படக்கூடிய பிரதிநிதித்துவம் மிகவும் குறைவாக இருக்கிறது. 700 'சீட்'டுகள் இருக்கக்கூடிய இடத்தில் குறைந்தது 350 'சீட்டு'களையாவது பெண்களுக்கு என்று ஒதுக்கி இருக்கவேண்டும். ஆனால் இப்பொழுது நூற்றுக்கு ஐந்

அல்லது பத்து சதவிகிதம் தான் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆகவே, பெண்களுக்கு இந்த 700 'சீட்'டுகளில் குறைந்தபட்சம் 250 'சீட்'டுகள் அல்லது 300 சீட்டுகளையாவது ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இதற்கு அடுத்தபடியாக, சென்னை நகரத்தை எடுத்துக் கொண்டால் கூவம் நதியில் அதிக நாற்றம் அடிக்கிறது. சட்டசபை அங்கத்தினர்கள் இங்கிருந்து ஹாஸ்டலுக்குப் போகும்போது ஒரே நாற்றம் அடிக்கிறது. குடலைப் பிடுங்கக்கூடிய அளவில் நாற்றம் அடிக்கிறது. நம்முடைய தலைநகரத்திற்குப் பல பெரிய அறிஞர்கள் எல்லாம் வெளி நாடுகளிலிருந்து வருகிறார்கள். அப்படி வருகிறவர்கள் இங்குள்ள இப்படிப்பட்ட சூழ்நிலையைக் கவனித்தால் நம்மைப்பற்றி என்ன நினைத்துக் கொள்ளுவார்கள், நம்மீது என்ன நம்பிக்கை கொள்ளுவார்கள், நம் முன்னேற்றத்தில் அவர்களுக்கு என்ன நம்பிக்கை இருக்கும் என்பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த நாற்றத்தை அவர்களால் என்றும் மறக்க முடியாது. அதனால் கொசு உபத்திரவம் அதிகமாக இருக்கிறது. ஆகவே,, இந்த நாற்றத்தைப் போக்குவதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது ரொம்பவும் பாராட்டத்தக்கதாகும். இது ரொம்பவும் வெற்றிகரமாகவே நடக்கிறது என்று சொல்லலாம். பல பெரியோர்கள் இதைக்கண்டு போற்றியிருக்கிறார்கள். ஆனால் 'தினத் தந்தி' போன்ற பத்திரிகைகள் இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் வெற்றிகரமாக இல்லை என்று சொல்லி அதை விளம்பரப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இதனைப் பார்க்கும்போது கிராமத்திலுள்ள சாதாரணமான படிப்பில்லாதவர்களும் சொற்ப அறிவு உடையவர்களும் என்ன நினைக்கிறார்கள் என்றால் இம்மாதிரியான திட்டம் வெற்றி பெறவில்லை என்றும் அதைக் கைவிட வேண்டும் என்றும் நினைக்கிறார்கள். இதனால் பல கணவன் மனைவிமார்களுக்கு இடையே சண்டை சச்சரவுகள் வேறு ஏற்படுகின்றன. இப்படிப்பட்ட நிலைமையை இந்த விளம்பரங்கள் உண்டுபண்ணுகின்றன. ஆகவே இப்படிப்பட்ட விளம்பரங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் அந்தப் பத்திரிகையின் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, தாய் சேய் நல விடுதிகள். குழந்தைகளின் பராமரிப்பு மிக மிக அவசியம். குழந்தைகளுடைய பராமரிப்பைப்பற்றி ஒன்று சொல்லாமல் இருக்க முடியாது. கோயம்பத்தூரை எடுத்துக்கொண்டால் அங்கே ஹைஸ்கூல்களுக்கு முன்னால் ஐஸ் க்ரீம் விற்கிறார்கள். அதனால் குழந்தைகளுக்கு 'டான்ஸில்ஸ்' வருகிறது என்று சொல்லப்படுகிறது. இப்படி 'டான்ஸில்ஸ்' வந்த குழந்தைகளை டாக்டரிடம் காண்பித்தால் சிலர் அதற்கு ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.



சில டாக்டர்கள் அதற்கு மருந்து சாப்பிட்டால் போதும் என்று சொல்லுகிறார்கள். இப்படி இரண்டு வித அபிப்பிராயங்கள் இருக்கின்றன. எதைச் செய்வது என்பது தெரியாமல் இருக்கிறது. இதற்கு என்ன செய்வது நலம் என்பதைப்பற்றி விளம்பரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதைப்பற்றி ஒரு முடிவான அபிப்பிராயம் இருக்க வேண்டும். குழந்தைகளும் ஐஸ் க்ரீம் சாப்பிடாமல் இருக்கமுடியவில்லை. குழந்தைகளைக் கட்டுப்பாடும் செய்ய முடியவில்லை. ஆகவே திட்டவட்டமாக இதைப்பற்றி ஆராய்ச்சி செய்து இதற்கு ஒரு முடிவான அபிப்பிராயம் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, குழந்தைகளுக்குச் சின்ன அம்மை, பெரிய அம்மை என்று வருகிறது. சாதாரணமாக இது வெய்யில் காலத்தில்தான் வரும் என்று சொல்லுவார்கள். ஆனால் இப்பொழுது ஐப்பசி கார்த்திகை மாதங்களில் கூட வருகிறது. சாதாரணமாக மழை காலத்தில் வராது என்று சொல்லுவார்கள். இப்படி மழை காலத்தில்கூட வருவதன் காரணம் என்ன என்பது தெரியவில்லை; அம்மை குத்திக்கொண்டாலும்கூட அம்மை வார்ப்பதை நாம் இப்பொழுது பார்க்கிறோம். இதற்கு என்ன காரணம் என்பதையும் ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இதைப்பற்றி ஆராய்ந்து பார்த்து விளம்பரப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். அம்மை குத்திக்கொண்ட பிறகு, வராமல் இருப்பதற்கு மேலும் ஊசி போட்டுக்கொள்ள வேண்டுமா என்பதைப்பற்றி ஆராய்ந்து விளம்பரப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் முறையில் பல நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அந்த முறையில் பல ஹெல்த் சென்டர்களை அமைத்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு கிராமங்களுக்குப் பல டாக்டர்கள் வருவதாகவே இல்லை. அதற்கு காரணம் என்ன என்பதைக் கண்காணிக்க வேண்டியதாக இருக்கிறது. கோயம்பத்தூரை எடுத்துக்கொண்டால் அங்கே பத்து சென்டர்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அவற்றில் மூன்று சென்டர்கள் என்னுடைய தொகுதியில் இருக்கின்றன. ஆனால், அங்கெல்லாம் டாக்டர்கள் கிடையாது. அதற்குக் காரணம் என்ன என்பது தெரியவில்லை. மத்திய அரசாங்கத்திலிருந்து மானியம் வந்தது, அது இப்பொழுது நின்று போய்விட்டது, அதனால் மருத்துவ வசதி கிராமங்களுக்கு இல்லாமல் நின்று விட்டது என்று சொல்லப்படுகிறது. அதை நம்முடைய மாகாண அரசாங்கம் எடுத்துக்கொண்டு சுகாதாரம் பாதிக்காத அளவில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். லோகல் பண்ட் ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்கள் வருவதாக இல்லை என்று சொல்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன என்பதைக் கண்டு பிடிக்க வேண்டியதாக இருக்கிறது. அங்கு டாக்டர்களுக்கு குறைவாக சம்பளம் கொடுப்பதால் வருவதாக இல்லை என்று சொல்லப்படுகிறது.

ஆகவே லோகல் பண்ட் ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்களை நியமிக்கும்போது அவர்களுக்கு நல்ல சம்பளத்தைக் கொடுத்து நியமிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, கோயம்பத்தூர் மாவட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி ஒன்றைக் கொண்டு வரும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய வசதி இந்தத் திட்டத்தில் இல்லாவிட்டாலும் அடுத்த திட்டத்திலாவது அதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

10-00 a.m. * திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் வைத்திய, சுகாதார மானியங்களை நான் வரவேற்கின்றேன். அமைச்சர் அவர்கள், டைரக்டர் ஆஃப் மெடிகல் சர்விஸஸ், டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் ஆகிய மூவரும் சகோதரிகளாக அமைந்திருக்கக் கூடிய இந்த அமைப்பு, தேச சரித்திரத்திலேயே, அல்லது உலக சரித்திரத்திலேயே கூட ஒரு புதுமை என்று நான் கருதுகிறேன்.

இன்றைய தினம் நம்முடைய மாநிலத்தில் வைத்திய சுகாதாரத் துறைகளில் ஏற்பட்டிருக்கும் ஒரு பெரிய தீவிரமான வளர்ச்சியை வேறு எந்த மாநிலத்திலும் பார்க்க முடியாது என்று சொல்வது மிகையாகாது. இந்தத் துறைகளில் சுமுகமான ஒரு வளர்ச்சியை நாம் பார்க்கிறோம். வருஷா வருஷம், ஓரளவுக்கு நுணுக்கமான வளர்ச்சியை நாம் பார்க்கிறோம். இவ்வருஷம் இந்த மானியங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையைப் பார்த்தாலும்கூட, தனி நபரைப் பொறுத்து செலவிடக்கூடிய விகிதாச்சார இனத்தையும், இன்னும் பெரிய சிறிய ஆஸ்பத்திரிகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய கணிசமான தொகையையும் பார்க்கும் போது, மக்களுடைய தேவையை எந்த அளவு அரசாங்கம் கவனித்து வருகிறார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது, திருநெல்வேலி மாவட்டத்தில் வைத்தியக் கல்லூரி ஒன்றும், குற்றாலத்தில் சித்த வைத்தியக் கல்லூரி ஒன்றும் வருகிற ஆண்டில் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது எல்லோருக்கும் தெரியும். இது மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாக இருப்பதோடு, எல்லோருக்கும் மிகுந்த சந்தோஷத்தையும் அளிக்கிறது.

எல்லாத் தாலூகா தலைநகர ஆஸ்பத்திரிகளையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டாய்விட்டது. மற்ற பகுதிகளிலும் ஆஸ்பத்திரிகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஏற்க இருக்கிறார்கள். என்னுடைய ஒரு ஆலோசனை—எல்லா பிளாக்குகளிலும் குறைந்தபட்சம் ஒரு சர்க்கார் ஆஸ்பத்திரியாவது இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்வது நல்லது.

திருச்செந்தூரில் உள்ள தாலூகா தலைநகர ஆஸ்பத்திரியில் எக்ஸ்-ரே யூனிட் வைப்பதற்கான கட்டிட அமைப்பு இருந்தாலும். எக்ஸ்-ரே யூனிட் இன்னும் வரவில்லை. பரமன்குறிச்சி லெப்ரஸி



ஸப்ஸிடயிரி சென்டருக்குக் கட்டடம் பூர்த்தி ஆய்விட்டது. அங்கே இன்னும் சிகிச்சைக்குரிய ஆரம்ப வேலைகள் நடக்கவில்லை. என்னுடைய கோரிக்கை—இன்-பேஷண்ட் வார்டு ஆக்கி சிகிச்சை ஆரம்பிக்கலாம். புனர்வாழ்வுக்கு (ரீஹாபிலிடேஷன்) என்ன ஏற்பாடு செய்யலாமோ அதைப் பற்றியும் பரிசீலனை செய்வது நல்லது.

இராஜ்ய அரசாங்கமும், மத்திய அரசாங்கமும் எவ்வளவு செலவு செய்தாலும், வெளியிலே தனியார்த் துறையில் இயங்கும் பெரிய ஆஸ்பத்திரிகளும் சிறந்து புகழ்பெற்றவைகளாக விளங்கி நல்ல சேவை செய்து வருவதையும் நாம் பார்க்கிறோம். அவைகளுக்கு அரசாங்கத்தில் உதவி கணிசமான அளவு கிடைக்கவில்லை. இன்னும் எந்த எந்த வகையில் அவைகளுக்கு உதவி கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுக்கலாம்.

திருச்செந்தூர் தாலூகாவிலுள்ள செண்ட்லூயிஸ் ஆஸ்பத்திரி, பேய்க்குளம் லெப்ரஸி செண்டருக்கு என்ன என்ன வகையிலே உதவி செய்ய முடியுமோ அந்த வகைகளைப் பரிசீலனை செய்வது நல்லது.

குஷ்ட நிவாரண வேலைகளுக்காக மத்திய அரசாங்கம் ஒதுக்கிய பல ஆயிரக்கணக்கான ரூபாயைச் சரிவரப் பெற்று உபயோகிக்கவில்லை என்ற விவரம் மத்திய அரசாங்க அறிக்கையில் காணப்படுவதோடுகூட, சம்பத்தில் நடந்த மாகாநாட்டிலும் தெரிவிக்கப்பட்டது. ஆகவே, இந்த ராஜ்ய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், என்னென்ன வகையிலே அதைப் பெற்று உபயோகிக்கலாம் என்று பரிசீலனை செய்வது நல்லது.

அரசாங்கம் சமீப காலத்திய திட்டப்படி, தேசம் முழுதும் ஏற்றுக் கொண்டிருக்கும் பொறுப்பின் அடிப்படையில், சென்னை நகரம், செங்கற்பட்டு ஜில்லா, வடஆற்காடு ஜில்லா ஆகிய மூன்று ஜில்லாக்களுக்கு நாஷனல் ஸ்மால்பாக்ஸ் எராடிகேஷன் திட்டத்தின்கீழ் கணிசமான அளவு வேலை செய்தார்கள். அதிலே நல்ல வேலை நடந்திருந்தாலும்கூட, ஆங்காங்கு சில இடர்பாடுகளை அனுபவத்தில் கண்டிருக்கக்கூடும். அரசாங்கத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஜில்லாவிலிருக்கும் அபிவிருத்தி ஜில்லாவில் இந்தத் திட்டத்தை முதலில் நிறைவேற்றுவது என்று எண்ணும்போது, டீ.பீ.ஹெச்., டீ.ஹெச்.ஓ. இவர்களுடைய கண்காணிப்பில் மட்டும் இதை விட்டுவிடுவது என்பது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்ளுகின்றேன். பி.சி.ஜி.-ஐப் பொறுத்தவரையில் விளம்பரத்திற்காக ஜில்லா அளவில் விளம்பர அதிகாரி நியமிக்கப்பட்டபோது இந்தத் திட்டத்தில் கூட, ஜில்லா அளவில் அதிகாரிகளை அமைத்து, விளம்பரத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். கூடுதலான சிப்பந்திகளை அனுப்பி வேலை செய்வது நல்லது. நாஷனல் ஸ்மால்பாக்ஸ் எராடிகேஷன் திட்டத்தை எடுத்துக் கொண்டு செயல்படுத்தும்போது, ஏற்கனவே உள்ள அனுபவத்தை வைத்து ஜாக்கிரதையாகப் பார்ப்பது நல்லது என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

மலேரியா ஒழிப்புத் திட்டம் வெற்றிகரமாக இருந்திருக்கிறது. அதில் கோளாறு வாராதபடி பார்த்துக்கொள்ள வழிவகை செய்வதும் நல்லது.

அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் என்பவர்கள் எல்லோரும் சென்னை நகரத்திலேயே இருந்து செயல்படுவது என்பது சரியான அமைப்பு என்று சொல்ல முடியாது—என்பது என்னுடைய கருத்தாகும். இந்த இராஜ்யத்தை ஐந்து ரீஜியன்களாகப் பிரித்து, சென்னை நகரத்தை ஒரு ரீஜியனாகவும் ஒருசில ஜில்லாக்களைச் சேர்த்து இணைத்து, ஐந்து ரீஜியன்களாக்கி ஒவ்வொரு ரீஜியனுக்கும் ஒரு அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த் என்று நியமித்தால் தாமதம் தவிர்க்கப்படும், எஃபெக்டிவ் சூபர்விஷன் இருக்க முடியும். இதிலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

அடல்ட்டரேஷனைத் தடுக்க அரசாங்கம் எத்தனை நடவடிக்கை எடுத்தாலும்கூட ஜில்லா அளவில் ஒரு ஸ்க்வாடு இருக்கலாம். அரசாங்கத்தின் குறிப்பில் இருக்கிறபடி, ஆங்காங்கு இருக்கும் சிறிய வியாபாரிகளுக்கு லைசன்ஸ் கொடுப்பது சரியா, தவறா என்று பரிசீலனை செய்யலாம் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய அபிப்பிராயம்—உற்பத்தி ஸ்தலத்தில், அதாவது மத்திய கேந்திர ஸ்தலத்திலேயே இதற்குச் சரியான கண்காணிப்பு இருந்தால், அவசியம் இல்லாத கஷ்டத்தைத் தவிர்க்க முடியும். யார் பொறுப்பாளி இல்லையோ அந்தச் சிறு வியாபாரிக்குக் கஷ்டம் வருவதைத் தவிர்க்கலாம். இதிலும் அரசாங்கம் ஜாக்கிரதையாக கவனம் செலுத்த வேண்டும்.

தொழிற்சாலைகளிலிருந்து வரும் கழிவு நீர், புகை இவைகளின் மூலமும் தீமை உண்டாகலாம். த்ரங்கத்ரா கெமிகல்ஸ் தொழிற்சாலையிலிருந்து வரக்கூடிய விஷப் புகையும், கழிவு நீரும் கெடுதல்களை உண்டாக்குவதோடு எத்தனையோ பேர்களுடைய பிழைப்பையும் கெடுக்கிறது. மீன் சாகிறது. கால்நடைக்கும் ஆபத்து வருகிறது. ஆகவே, அவற்றை மூடி குழாய் மூலமாகக் கடலுக்குள் வெகு தூரம் கொண்டு சென்று கரைத்துவிடவேண்டும். அல்லது, அதை ஆஸிட் ஆக மாற்றுவது நல்லது. அக் கம்பெனி முன்பே வாக்களித்து பொறுப்பை ஏற்றுக்கொண்டாலும் அது இன்னும் சரிவர நிறைவேற்றப்படவில்லை. அதை ஜாக்கிரதையாகப் பார்த்து நிவர்த்தி செய்வது நல்லது.

பஞ்சாயத்து யூனியனிலுள்ள ஹெல்த் ஸ்டாஃப் மற்ற எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் போல இயங்க முடியவில்லை. அவர்களுடைய சர்வீசும் சரியாக ரிகக்னைஸ் செய்யப்படவேண்டும். இன்னும் என்ன என்ன வகைகளில் அவர்களுக்கு உற்சாகம் கொடுக்கலாம் என்றும் பார்க்கலாம்.

நாம் எத்தனையோ வளர்ச்சித் திட்டங்களைப் போடுகிறோம். பெரிய டாக்டர்கள் கிராமப் பகுதிகளுக்குச் சென்று சேவை செய்ய நினைத்தாலும், சமீப காலத்தில் ஏற்பட்ட நெருக்கடியின்



காரணமாக அது நிறைவேற முடியவில்லை. ரிடையர் ஆனவர்கள், அல்லது சுகாதார இலாகா அல்லது வைத்திய இலாகாவில் இருக்கும் சிப்பந்திகளை—ஹெல்த் இன்ஸ்பெக்டர் போன்றவர்களையும் சிறு சிறு அளவில் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். ஹோமியோபதி டாக்டர்களை வளர்ச்சித் திட்டங்களில் 'பி' க்ளாஸ் டாக்டர்களாகப் பயன்படுத்துவது போல இப்படிப்பட்டவர்களுடைய சேவையையும் பயன்படுத்த நினைக்கலாம். சீனியர் ஹெல்த் இன்ஸ்பெக்டர்களை இத்தகைய பணிகளில் எந்த அளவுக்கு எடுத்துக் கொள்ள முடியும் என்பதையும் நாம் பரிசீலனை செய்வது நல்லது.

பஞ்சாயத்து யூனியனில் வேலை செய்கிறவர்களுக்கு ஸ்டாஃப் க்வாட்டர்ஸ் இருப்பது போல் ஹெல்த் ஸ்டாஃப்புக்குக்கூட அந்தந்த இடத்தில் அவர்களுக்கென க்வார்ட்டர்ஸ் கொடுத்தால் ஹெல்த் ஸ்டாபும் பஞ்சாயத்து யூனியன் ஸ்டாபும் சேர்ந்து முறையாக வேலை செய்வதற்கு முடியும் என்று தெரிவித்து, இந்த மானியங்களை ஆதரித்து என் உரையை முடிக்கின்றேன்.

* திரு. ஆ. ரு. சுப்பையா: கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது விவாதத்திலிருக்கும் இந்த மானியக் கோரிக்கையின் மீது சில விஷயங்களை நான் சொல்ல விரும்புகிறேன். நம் நாட்டில் ஜன நெருக்கம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது என்பது ஒருபுறமிருக்க பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களின் மூலமாக பல வேலைகளை நாம் செய்துகொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் நம்முடைய ராஜ்யத்தில் போதுமான சுகாதார வசதி செய்து கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டதனால்தான் காலரா போன்ற வியாதிகள் அதிகரித்துக்கொண்டிருக்கும் நிலைமை இருக்கிறது. நகரப் புறங்களில் அசுத்தமான தண்ணீர் பல இடங்களில் தேங்கிக் கிடக்கிறது. சாக்கடைத் தேக்கம் இருப்பதன் காரணமாக மக்கள் கொசு உபத்திரவம் தாங்க முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

சில தினங்களுக்கு முன் நமது நிதி அமைச்சர் அவர்கள் கூறுகிறபோது மின்சார விசிறி போட்டாலும்கூட கொசுத் தொல்லையைத் தடுக்க முடியாத நிலை இருப்பதாகச் சொன்னார்கள். அம்மாதிரியான ஒரு நிலையைப் போக்குவதற்கு ஏதாவது ஒரு வழியைக் கண்டுபிடிக்கவேண்டும். கொசு உபத்திரவம் நகர்ப்புறங்களில் மாத்திரமல்லாமல், கிராமப் புறங்களிலும் பெரிய அளவுக்கு அங்கிருக்கும் மக்களுக்கு தொல்லை கொடுத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே, ஆங்காங்கு தேங்கியிருக்கும் அசுத்தமான தண்ணீரை அகற்றுவதற்கு வேண்டிய சுகாதார நடவடிக்கைகளை அரசாங்கம் இந்தச் சமயத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்களை நிறுத்தி வைத்திருப்பது சரியாக இருக்க முடியாது. அத்தகைய நிலையங்கள் இருப்பது மக்களுக்கு மிகவும் உதவியாக இருக்கிறது. ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு சுகாதார நிலையம் இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டாலும் கூட இன்னும் நூற்றுக்கணக்கான பஞ்சாயத்து யூனியன்களுக்குச் சுகாதார நிலையங்களை ஆரம்பிக்க முடியாத

இன்னும் கன்னியாகுமரியைப் பொறுத்த வரையில் மிஷன் ஆஸ்பத்திரிகள் நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் இன்று அந்த ஆஸ்பத்திரிகளுக்கு ஆசாங்கம் கொடுக்கிற கிராண்டு போதுமானதாக இல்லை. ஆகவே அவர்களுக்குக் கொடுக்கிற மானியத்தை அதிகப்படுத்துவதோடுகூட, விலை உயர்ந்த மருந்துகளை அவர்களுக்கு வாங்கிக் கொடுத்து ஏழை மக்களுக்கு அந்த மருந்தை அவர்கள் உபயோகப்படுத்துவதற்கு வசதி செய்து கொடுக்க முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஒரு டாக்டரிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவர் சொன்னார். இன்றைக்கு மக்களுக்கு வருகிற வியாதியில் 50 சதவிகிதம் குடல் சம்பந்தமான வியாதியாகவே இருக்கிறது. டையோரியா, டைபாயிட் போன்ற வியாதிகள் வரும்போது உடனடியாக அவற்றை டயக்னோஸ் செய்ய அங்கங்கே லாபரேட்டரி வசதிகள் ஏற்படுத்தித் தரவேண்டியது மிகவும் அவசியம் என்றார். இதுமாதிரி ஆய்வுக் கூடங்கள் இல்லாத காரணத்தினால் வியாதி வந்தவுடன் அது இன்னது என்று நிர்மானிக்க முடியாமல் பல சங்கடங்கள் வருகின்றன. ஆகவே கட்டாயம் ஒவ்வொரு தாலுக்காவிலும் லாபரட்டரி வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் அம்மை நோயைப் பற்றிப் பலர் குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்த வரையில் ஒரு சில உதாரணம் சொல்ல முடியும். அம்மை ஊசி போட்டுக் கொண்டவர்களே சிலர் அம்மை நோய் கண்டு இறந்திருப்பதனால் இப்போது பயன்படுத்தப்படுகிற வாக்ஸின் நல்லதுதானா அல்லது கெட்டதா என்பதை அரசாங்கத்தார் நல்ல முறையில் பரிசீலனை செய்ய வேண்டும்.

மேலும் அலோபதி மருந்துவத் துறையைப் பொறுத்த வரையிலும் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறோம். ஆயுர்வேதத்தைப் பொறுத்த வரையிலும் முன்னேற்றம் இருக்கிறது. ஆனால் சித்த வைத்திய முறைதான் இன்னமும் கீழ்நிலையில் இருக்கிறது. எங்கள் பகுதியில் நிறைய சித்த வைத்தியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் மிகவும் குறைப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள். ஆகவே சித்த வைத்திய முறையும் வளர்ச்சி அடைவதற்கு உடனடியாக ஒரு சித்த வைத்தியக் கல்லூரியையும் கன்னியாகுமரியிலேயே அமைத்துக் கொடுக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் நாகர்கோயில் நகரத்திற்குள் ஒரு டி.பி. ஆஸ்பத்திரி இருக்கிறது. அங்கு நோயாளிகள் அதிகமாக இருப்பதால் போதுமான படுக்கை வசதி இல்லை. நகரத்திற்குள் இருப்பதனாலும் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. ஆகவே படுக்கை வசதியை அதிகரிப்பதோடு நகரத்திற்கு வெளியே—வட்டக்கோட்டை போன்ற பகுதியில் அந்த ஆஸ்பத்திரியை மாற்றி அமைத்துக் கொடுக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.





மேலும் எங்கள் மாவட்டத்தில் இரணியல் என்ற பகுதியில் யானைக்கால் நோய் அதிகமாக இருக்கிறது. அதை தடுப்பதற்குக் குடிதண்ணீர் திட்டம்தான் முக்கியமானதாகும். அத்திட்டத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் தேவையென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் 20 ஆயிரம் ரூபாய் பிரித்து வைத்திருக்கிறார்கள். அந்தப் பணத்தோடு பாக்கியை சர்க்காரே மானியமாகக் கொடுத்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் குறிப்பிட்டு முடித்துக்கொள்கிறேன். அதற்காகச் செலவிடப்படுகிற பணம் விரயமாகிறது என்று கருதுகிறேன். மக்கள் தாங்களே மனக் கட்டுப்பாட்டின்மூலம் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளலாம். அப்படியின்றி நாம் வீணாக வேறு பல முறைகளைப் புகுத்தி பணத்தை விரயம் செய்ய வேண்டாமென்று தெரிவித்துக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த சபாநாயகருக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதோடு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI K. S. G. HAJA SHERIFF : Mr. Speaker, Sir, I rise to support the various Demands moved by the Hon. the Minister for Health. I went through the statement circulated to us and I find that a sum of Rs. $10\frac{1}{2}$ crores is being budgeted for expenditure during this year. While I cannot but express my wholehearted appreciation in this regard, I may say that by and large the general health of the people of the State has improved. Yet I notice that certain vital statistics are not given in the statement. For instance the House would like to know what are the number of infectious diseases, how many such patients were admitted, treated and how many could not be helped due to want of facilities and what measures the Government have taken to combat this difficulty. If these facts are given, it would help us to find out how many were affected with infectious diseases and which are the diseases that are repeating and what steps the Government have taken to remedy them. We find that water is a powerful medium for communication of these infectious diseases. While we are on this subject, I cannot but say that the health in the City is going from bad to worse. I do not want to attribute any motive to any particular administration. But this fact cannot be contradicted.

Sir, for the last three or four years we find frequent outburst of epidemics in the City and they are particularly starting from the slum areas. Slums are devoid of sanitation. Added to this if the slums are not cleaned for weeks, months, we can understand what will be the position of the people in the slums.

Sir, I have brought before this House about two years ago the same subject and since then we are making this suggestion every year. But no attention appears to be paid for the cleanliness of the slums and streets of the City. I can take hon. Members of

ஒரு துரதிருஷ்டமான நிலைமை இன்றைய தினம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவேதான் சில பஞ்சாயத்து யூனியன் பிரதேசங்களை எடுத்துக்கொண்டால் அங்கு போதுமான போக்குவரத்து வசதி கிடையாது. 15, 20 மைல் தூரம் சென்று தாய்மார்களும் மற்றவர்களும் வியாதியைக் குணப்படுத்திக்கொள்வதற்கான நிலைமை ஏற்படுமானால் அவர்களை அழைத்துச் சென்று பார்ப்பதற்கு வேண்டிய வசதி இல்லை. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலாவது அவசியம் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து யானைக்கால் வியாதி "நல்ல அழகான ஆடவர்களும் சரி பெண்களும் சரி" திடீரென்று இந்த வியாதியினால் பாதிக்கப்பட்டு மிகவும் துன்பம் அடைகிறார்கள். குறிப்பாக எங்கள் மாவட்டத்தில் கும்பகோணப் பகுதியில் இந்த வியாதி அதிகமாக இருக்கிறது. இந்த வியாதியினால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கவும், இந்த வியாதி வராமல் தடுக்கவும் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமாறு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கலப்பு உணவு சம்பந்தமாக எடுத்துக்கொண்டால் பெரும் அளவு மாணவர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். மத்திய உணவு திட்டத்தினாலும் ஹாஸ்டல்களில் தங்கி உணவு உண்பதனாலும், சுற்றுப்பிரயாணம் சென்று ஹோட்டல்களில் உண்பதனாலும் சில சமயங்களில் திடீரென்று பாதிக்கப்படுகிறார்கள். எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த பாபநாசம் தாலுக்காவில் இரண்டு மூன்று மாணவர்கள் இறந்த விஷயம் அரசாங்கத்திற்குத் தெரியும். ஆகவே உணவில் கலப்படம் செய்வதைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, திருத்துறைப்பூண்டியில் பெரிய ஆஸ்பத்திரி ஒன்று இருக்கிறது. அங்கே அதிகமான நோயாளிகள் 11 மணி வரையிலும் க்யூவில் நிற்கிறார்கள். 11 மணி ஆனவுடன் திடீரென்று மூடிவிடுவதால் பல நோயாளிகள் 11 மணி வரை அங்கே நின்று சோர்வோடு டாக்டரைப் பார்த்து மருந்து வாங்க முடியாது, ஏமாற்றம் அடைந்து திரும்பிப் போகிறார்கள். இப்படி அதிகமான நோயாளியைப் பார்க்க வேண்டியிருப்பதனால் அங்கே ஒரே ஒரு டாக்டர் போடப்பட்டிருப்பது போதாது. சென்ற ஆண்டே நான் இது பற்றிச் சொன்னேன். இதுவரையிலும் இன்னொரு டாக்டர் நியமிக்கப்படவில்லை. ஆகவே உடனடியாக அந்த ஆஸ்பத்திரிக்கு இன்னொரு டாக்டரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு திருத்துறைப்பூண்டியில் இருக்கும் பிரசவ ஆஸ்பத்திரியில் நர்சுகளே கிடையாது. உடனடியாக அந்தப் பிரசவ ஆஸ்பத்திரிக்கு இரண்டு நர்சுகளைப் போடவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களிடம் நேரிடையாகவும் சொல்லியிருக்கிறேன். எழுதியும் கொடுத்திருக்கிறேன். இரண்டாவது அந்த ஆஸ்பத்திரிக்கு 2 நர்சுகளை நியமிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.



இன்னும் தலைஞாயிறு, வேதாரண்யம் பகுதியில் போதுமான சுகாதார வசதி, ஆஸ்பத்திரி வசதி கிடையாது. இங்கே பிற்பட்ட இனத்தவர்கள்தான் அதிகமாக வசிக்கிறார்கள். 'ஆங்காங்கே குறுக்கே குறுக்கே ஆறுகள் ஓடுவதனால் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குப் போய்வரக்கூட வசதி கிடையாது. அதிகமாகப் பிற்பட்ட இனத்தவர்கள் வசிக்கின்ற இந்தப் பகுதியில் தான் வியாதிகளும் அதிகமாக இருக்கின்றன. ஆகவே இந்த மாதிரி இடங்களுக்கு எல்லாம் ஆஸ்பத்திரி வசதி செய்து கொடுத்து, பொது சுகாதார அபிவிருத்தியும் செய்து கொடுக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆரம்ப சுகாதார நிலையங்களை நிறுத்தக் கூடாது. பஞ்சாயத்து யூனியன் ஒவ்வொன்றிலும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை ஏற்படுத்த அரசாங்கம் யோசிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. சுவாமிதாஸ்:** கனம் சபாநாயகர் அவர்களே, சுகாதார மானியத் துறை கோரிக்கையை ஆதரித்துப் பேசும்போது என்னுடைய சில கருத்துக்களைக் கூறலாமென்று நினைக்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அந்தப் பகுதியில் சுகாதார மருத்துவ நிலையம் நல்ல முறையில் செயல்படுவதோடு, மாநிலத்திலேயே முன்னணியில் இருக்கிறது என்று பெருமையோடு கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் அங்கங்கே போதிய டாக்டர்கள் இல்லாமையினால் மக்கள் க்யூவில் அதிக நேரம் நின்று, சில சமயம் ஏமாற்றத்தோடு வீடு திரும்ப வேண்டிய நிலைமைகூட இருக்கிறது. காரணம் டாக்டர்கள் போதுமான அளவுக்கு வருவதில்லை. அரசாங்கப் பணிக்கு அவர்கள் தங்களை உட்படுத்திக்கொள்ள விரும்புவதில்லை. காரணம் ஒரு சர்ஜனுக்கு அரசாங்கம் ஒரு மாதம் 300 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆனால் அதே சமயம் அவர் தனியாகப் ப்ராக்டீஸ் செய்தால் மாதம் குறைந்தது ஆயிரம் ரூபாய் வரையில் சம்பாதிக்க முடிகிறது. ஆகவே கொஞ்சம் அதிகமாகச் சம்பளம் கொடுத்தாவது அங்கங்கே இன்னும் அதிகமாக டாக்டர்களை நியமிக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் குளச்சல், தக்கலை, குழித்துறை போன்ற இடங்களில் உள்ள ஆஸ்பத்திரிக் கட்டிடங்கள் மிகவும் பழமையானவை. சென்ற பட்ஜெட்டில் குளச்சல் ஆஸ்பத்திரிக் கட்டிடத்திற்கு என்று பணம் ஒதுக்கியிருந்தார்கள். ஆனால் இவ்வாண்டு ஒதுக்கப்படவில்லை. கட்டிடம் கட்ட இவ்வாண்டு முயற்சி செய்யாவிட்டாலும். அக்கட்டிடத்திற்காக அதிகாரிகள் பார்வையிட்டு தீர்மானித்து வைத்துள்ள 5 ஏக்கரா நிலத்தையும் உடனடியாக இவ்வாண்டே ஆர்ஜிதம் செய்துவிட வேண்டும். நெருக்கடி [illegible] தீர்ந்த பின்னாவது கட்டிடம் கட்ட முற்படலாம்.

this House with me, if they could be kind enough to come with me, they themselves will find that for weeks streets are not cleaned and debris are not removed with the result that lot of unclean things are being left in heaps in the streets. The Government who are in charge of the health of the people of the State should have over-riding powers to supervise the Corporation and Municipalities so that they may take proper attention to this vital problem. I suggest that even a Committee should be appointed for making enquiries and to ascertain why the health of the City is going down and why there is frequent out break of cholera and other infectious diseases and what steps are to be taken to prevent them. As one hon. Lady Member has stated we have been seeing that these epidemics break out only during the summer season. But they are coming during winter season also. There should be some reason for it and this reason should be found out and proper steps should be taken to eradicate them.

Sir, I would like to say that more and more encouragement should be given for admission of girls in the Medical Colleges. Because I have found that there are no lady doctors in many villages. With the result, especially lady patients are very much handicaped. Since ladies constitute half the population, it is but right that they should be encouraged very much to take up the doctor course and they should also be given incentive so that they could joint this coures and work efficiently.

Sir, I do not know how many of our doctors are now being sent abroad for specialising in various subjects. I would like to see that our Government make efforts to send as many doctors as posible to various foreign countries where there are hospitals with up-to-date facilities for specialisation so that they can come back and introduce the same thing in our hospitals here. At the same time we should also welcome doctors coming from various other countries and then give them all facilities so that they can also work in our hospitals and learn. At present only the Ford Foundation have got schemes whereby they send experts to our hospitals here and they remain here for some months and work in our hospitals with our doctors and also teach them the latest methods of medicine. Similarly, if some arrangement is made with the foreign Governments, we can send as many of our doctors as possible and I am sure we would very much benefit by their work. Thank you, sir.

* SRIMATHI A. SUARES: Mr. Speaker, Sir, in supporting the Demands under 'Medical' and 'Public Health' I wish to make a few remarks. Last year when speaking on the Medical Demand I had occasion to draw the attention of the House to the unique feature that struck one at that time, viz., that 3 ladies held top positions at the Centre and the State in the Medical Services. This year one more lady has joined this number and that is the new Director of Public Health. In this case also it is the first time a lady holds this high position. With two highly qualified ladies



in charge of the Medical Services and Public Health and a lady Minister in charge of the Health portrofio, Madras State is indeed fortunate and can expect much good in respect of health.

When the Governor addressed the joint session on the 28th January this year he mentioned that there was a proposal to amalgamate the Medical Service and the Public Health Department. From a layman's point of view, I wish to offer a few remarks on this subject.

The Medical Service has been growing from year to year and from Plan to Plan. The number of new hospitals and dispensaries, Primary Health Centres, additional wards or wings in hospitals, new medical colleges, new post graduate courses testify to the great expansion on the medical side. The Public Health Department has also grown with several additional programmes, some of them sponsored by national organisations. When two departments have had such phenomenal expansion, to amalgamate them does not seem to be advisable. With the existing staff on the medical side the administrative machinery is sometimes unable to work with the desired speed. When a doctor is transferred or when there is change in salary it takes a long time for the concerned papers to move from one unit to another with the result that pay slips are delayed and the doctor is inconvenienced without his salary. Sometimes the time limit for drawing arrears expires. Then after special representation and correspondence and further delay, the whole amount is drawn. 10-30 a.m.

When such is the case, is it advisable to amalgamate these two big Services? The present trend is to divide a service that becomes too unwieldy to control. Larger districts are bifurcated with two District Collectors. Large towns have more than one municipality. When amalgamation also means an inter-change of personnel, it will present further problems. It is a fact that doctors in the Medical Services and in the Public Health Department have a common basic training. But after that, they branch off to specialised training, the doctors on the medical side taking diploma and post-graduate courses and securing M.S. and M.D. degrees, and doctors on the public health side taking specialised training in Social and Preventive Medicine. Will it be possible to have an inter-change of doctors between the two sections? Could a doctor who has worked for years in the Public Health Department take up the surgeon's knife without much experience? Will it not be a waste of specialisation if, after specialising in one service, a doctor is transferred to another service?

If doctors in the Public Health Department feel that they have fewer chances of promotion, this could be remedied by having more selection grade posts or more higher posts to bring them up to the level of the doctors on the Medical side. On the Public Health side more research work is necessary. We still have not completely controlled epidemics like smallpox, cholera, plague

and malaria. At the present moment, plague and small pox have broken out in some parts of the state in spite of the campaigns against these diseases.

The question of the integration of the two Services is now being examined by the Government. Integration may be possible or at least co-ordination may be possible in certain items like Maternity and Child Welfare. The Medical side can certainly guide this Department for it has reached a high stage of efficiency. The collection of vital statistics is now done by both the Services. Perhaps that also could be co-ordinated. If an epidimic breaks out, the Medical side treats the disease but it is the function of the Public Health side to find out the cause or the source of the disease. Perhaps this also could be co-ordinated. Co-ordination could be wodked out and it could be seen whether amalgamation is really necessary or not.

Parliament now wishes to pass an Act applicable to all the States in view of the fact that the Public Health is a matter of the utmost importance. It proposes to secure uniformity in the administration of public health throughout the country. This House has given its concurrence to this Act. To secure uniformity in the service, will it not be necessary to preserve the Department as a separate administrative unit?

I wish to repeat a plea that I had made at the last Budget session when speaking on the Medical Demand. To give an incentive to doctors to qualify for post-graduate degrees, the Government should give them some material recognition of these high degrees either in the form of a special allowance or advance increment. If this is not done, the M.B.B.S. doctor will be content to remain as such when he knows that he gets the same emoluments as a doctor with the M.S. or M.D. degree. The Central Government gives encouragement to higher qualifications. To doctors who possess diplomas, two advance increments are sanctioned. To post-graduate doctors four advance increments are given. Some States give an allowance of Rs. 50 or even more. A progressive State like Madras should also consider the qualifications of doctors and give them encouragement, if they posses higher degrees. Though the Pay Commission's scales of pay are in force, the starting salary of a doctor is still not encouraging. A sum of Rs. 300 after a study of 5½ years, is not a very large sum of money, considering the quantity and the quality of work a doctor has to put in not only during day-time but also at night. An additional allowance to post-graduate doctors cannot be considered as unnecessary. It need not be considered superfluous. So, I request the Government to consider this matter as early as possible.

I wish to bring to the notice of the Government the difficulties experienced by candidates who apply for admission into the medical colleges. The minimum age for admission to the Pre-University Course is 14½ years. So, the boys and girls pass the



Pre-University Course at the age of 15½ years but the minimum age for admission into the medical college is 15 years and 9 months. So a student who has passed the Pre-University Course has to wait for a whole year to be eligible for admission into the Medical College. This rule does not apply in the case of admission to Engineering College. So, I request the Government to consider this matter before applications are called for the ensuing academic year. Thank you, Sir.

*திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, இந்த சபையில் கொண்டு வந்திருக்கும் மெடிக்கல் மான்யத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எனது தொகுதியின் தலைநகராகிய திருவாடனையில் ஏற்கனவே லோக்கல் பண்ட் ஆஸ்பத்திரி ஒன்று இருந்து அந்த ஆஸ்பத்திரியை இப்போது சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆஸ்பத்திரி சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்ததோ அதேபோல்தான் இப்போதும் இருந்து வருகிறது. அதனால் அந்த ஆஸ்பத்திரியில் நோயாளிகள் தங்கியிருந்து வைத்தியம் பார்த்துக்கொள்ள வசதியில்லாமல் இருக்கிறது. தாலுகா தலைநகரில் இப்படி வைத்திய வசதியற்று இருப்பது என் தொகுதிதான் என்று நினைக்கிறேன். ஆகவே கூடியவிரைவில் தாலுகா தலைநகராகிய திருவாடானையில் அந்த ஆஸ்பத்திரியில் நோயாளிகள் தங்கியிருக்கக்கூடிய பகுதிகளை அதிகரித்து கட்டிடத்தையும் விஸ்தரித்து நல்லமுறையில் வைத்தியம் நடைபெற ஏற்பாடு செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாலுகா தலைநகராகிய திருவாடானையில் பிரசவ ஆஸ்பத்திரி இல்லாமல் இருக்கிறது. அதனால் தாய்மார்கள் பிரசவிக்க அங்கிருந்து தேவகோட்டை நகரத்தில் இருக்கிற முனிசிபல் ஆஸ்பத்திரிக்கு வரவேண்டியிருக்கிறது. கிட்டத்தட்ட தாலுகாவின் கடைசியிலிருந்து வருவது என்றால் 25-30 மைல் தூரம் இருக்கிறது. தேவக்கோட்டை ஆஸ்பிடலுக்கு வருவதற்குள் பல தாய்மார்கள் பிரசவ வேதனை தாங்காமல் வழியில் இறந்து போகக்கூடிய நிலை ஏற்படுகிறது. எனது தொகுதியில் போக்குவரத்து பெரும் பகுதி இல்லாததன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, தாலுகாவின் தலைநகரிலே ஒரு பிரசவ ஆஸ்பத்திரியை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியைச் சேர்ந்த வெள்ளையபுரம் கிராமத்தில் ஒரு ஆஸ்பத்திரி ஏற்படுத்தியிருக்கிறது. இரண்டு வருஷங்கள் ஆகியும் இன்னும் டாக்டர் போடாமல் இருக்கிறது. அங்கே அதிகமாக முஸ்லீம்கள் இருக்கக்கூடிய இடம் அங்கே கோஷா ஸ்திரீகள் ஆஸ்பத்திரிக்கு வெளி ஊருக்குச் செல்ல மிக மிகக் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அந்த ஆஸ்பத்திரிக்கு டாக்டரை உடனடியாகப் போட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்க அம்பலம்]
[18th March 1963

ப்ளாக் டெவலப்மெண்ட் இருக்கின்ற இடங்களிலே ப்ரைமரி ஹெல்த் செண்டர்கள் பல இடங்களில் போடப்பட்டிருக்கின்றன. எனது தாலுக்காவை சேர்ந்த கன்னங்குடி ப்ளாக்கிலே ஒரு ப்ரைமரி ஹெல்த் செண்டர் போடப்போவதாக இருக்கிறது. அதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. அதற்கு இடம்கூட அங்கே பார்த்து, அந்த இடத்திலே ப்ரைமரி ஹெல்த் செண்டரைக் கட்டலாம் என்று பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் அனுப்பியிருக்கிறது. அதன் பிறகு எந்தவித நடவடிக்கையும் எடுத்துக்கொண்டதாக தெரியவில்லை. எமர்ஜென்ஸி என்று சொல்லி வைத்திய வசதியையும் தள்ளிக்கொண்டே போனால் எமர்ஜென்ஸியிலே வைத்தியமும் மிக மிக அவசியம் இல்லையா என்று கேட்க விரும்புகிறேன். வைத்தியத்திற்கு மிக மிக முக்கியத்துவம் கொடுக்காவிட்டால், இது யுத்த காலம் என்று வைத்தியத்தை தள்ளி விட்டால் யுத்தத்திற்கு ஆள் கிடைப்பதே கஷ்டமாகப் போய்விடும். ஆகவே கண்டிப்பாக வைத்தியத்திற்குமட்டும் யுத்த காலம் என்று சொல்லாமல் வைத்தியத்திற்கு முதலிடம் கொடுத்து ப்ரைமரி ஹெல்த் செண்டர் கட்டடங்களை உடனடியாகக் கட்ட ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ப்ளாக் டெவலப்மெண்ட் இருக்கின்ற இடங்களிலாவது, ஒவ்வொரு இடத்திலும் சீக்கிரமாக ஆஸ்பத்திரிகளை, ப்ரைமரி ஹெல்த் செண்டர்களை ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே அம்மை நோய் பரவியிருந்ததைப் பற்றிப் பல மெம்பர்கள் பேசினார்கள். தேவகோட்டை நகரத்திலேயே நூற்றுக் கணக்கான பேர்கள் இறந்தார்கள். அங்கு அதற்கு எந்தவித சிகிச்சையும் பலன் அளிக்காமல் போய்விட்டது. இன்னும்கூட அம்மை நோய் பரவிக் கொண்டே இருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் அங்கே பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி இல்லாததுதான். பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி செய்யவேண்டுமென்று அந்த முனிசிபாலிட்டி சர்க்காரை அணுகியிருக்கிறது. அதையெல்லாம் உடனடியாகச் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவாடானை தாலுகாவைப் பொருத்தவரையில் கிராமங்களிலும் இந்த மாதிரி அம்மை நோய் பரவி நூற்றுக் கணக்கான பேர்கள் இறந்திருக்கிறார்கள். இதற்குக் கிராமங்களில் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி இல்லாததுதான். எனது தாலுகாவைப் பொருத்த வரையில், குடி தண்ணீர் கேணிகளில் நல்ல ஊற்று கிடைப்பதில்லை. ஊரணிகளைப் பழுதுபார்த்தால்தான் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் கிடைக்கும் வசதி இருக்கும். அங்கு ப்ளாக்கிலே குடிதண்ணீர் வசதியைப் பெருக்க ஒரு சில ஊரணிகளை வெட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையில் செய்து கொண்டு போனால் 50 வருஷங்கள் ஆனாலும் எல்லா கிராமங்களுக்கும் குடி தண்ணீர் வசதி ஏற்படாமல் போய்விடும். கிராமக் குடி தண்ணீர்த் திட்டத்தை திருவாடானை போன்ற வரண்ட இடங்



[திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம்]
18th March 1963]

களில் ஊரணிகளைக் குடி தண்ணீர் வசதிக்குப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய அளவில் ஸ்கீம் போட்டு சர்க்காரே எடுத்துக் கொண்டு மராமத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது எங்கு பார்த்தாலும் டாக்டர்கள் கிடைக்கவில்லை என்ற புகார்கள் அதிகமாக இருக்கின்றன. ஆஸ்பத்திரியை ஏற்படுத்தினால் டாக்டர் கிடைப்பதில்லை நமது மாணவர்கள் மெடிக்கல் காலேஜில் சேர்வதற்கு சென்றால் இடம் கிடைப்பதில்லை. இதைப் பார்க்கும்போது என்ன காரணத்தினால் இப்படி இருக்கிறது என்று தோன்றாமல் இருக்கிறது. ஆகவே இந்த வருஷத்திலாவது ஆங்காங்கு இருக்கிற மெடிக்கல் காலேஜுகளுக்கு வருகின்ற அத்தனை மாணவர்களையும் சேர்த்துக்கொண்டு அவர்கள் படிப்பதற்கு வசதி செய்து கொடுத்தால் இந்த டாக்டர் பஞ்சம் போகும் என்று கூறிக் கொண்டு எனக்கு இந்த வாய்ப்பை அளித்ததற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

*** திரு கி. நாராயணசாமி பிள்ளை:** கனம் சபாநாயகர் அவர்களே, இன்று சுகாதார அமைச்சர் கொண்டு வந்திருக்கிற மருத்துவ, சுகாதாரக் கோரிக்கைகளை அனுசரித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்திலே சுகாதார மந்திரியும், மெடிக்கல் டைரக்டர் அவர்களும், பப்ளிக் ஹெல்த் டைரக்டர் அவர்களும் பெண்மணிகளாக அமைந்திருப்பது நம்முடைய அதிர்ஷ்டவசம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தாய்மார்களுக்குத் தான் குழந்தைகளுடைய நலன்கள் பற்றித் தெரியும். மக்கள் நலனைப் பற்றி அம்மையாருக்குத்தான் நன்றாகப் புரியும்.

இப்போது நம் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு பல ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு, கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்து, ஆங்காங்கு தலைநகரில் பெரும் பெரும் ஆஸ்பத்திரிகளும், கிராமங்களில் ப்ரைமரி ஹெல்த் செண்டர்களும் அதிகமாக ஆகியிருக்கின்றன. மருத்துவ, சுகாதாரத் துறையில் நாம் எவ்வளவு முன்னேறியிருக்கிறோம் என்று நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அதே போல, வருஷந்தோறும் இருப்பதைப்போலவே இந்த வருஷமும் அதிக மான்யத்தைக் கோரியிருக்கிறார்கள். அதுவும் வரவேற்கத் தகுந்ததுதான்.

இன்றைய தினம் கிராமங்களில் அதிகமாக மருத்துவ வசதிகள் கொடுப்பதற்கு அனுகூலமாக இல்லை. காரணம் என்ன என்றால் டாக்டர்கள் கிராமங்களுக்குச் செல்லத் தயங்குகிறார்கள். அதற்காக அவர்கள் கிராமங்களில் வசிப்பதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். ஒரு கிராமத்திலிருந்து ஒரு கிராமத்திற்குப் போக மொபைல் வான் கொடுக்கவேண்டும். அதோடு அவர்கள் வசிப்பதற்கு வசதி கொடுத்து, டாக்டர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்கு வசதியும் செய்து கொடுத்து, இப்போது கொடுக்

[18th March 1963  [திரு. கி. நாராயணசாமி பிள்ளை]

கக் கூடிய சம்பளத்தையும் இரட்டித்தால் கண்டிப்பாக டாக்டர்கள் கிராமங்களில் தங்கிப் பணி செய்வார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிலையிலே மருத்துவத் துறையையும், சுகாதாரத் துறையையும் இணைப்பதற்குத் திட்டம் போடுவதாகப் பேசுகிறார்கள். அந்தத் திட்டம் அவ்வளவு வரவேற்கத் தகுந்தது அல்ல என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம் மாநிலத்திலே டாக்டர்கள் அதிகம் தேவைப்படுவதாலும் நர்சுகள் அதிகமாகத் தேவைப்படுவதாலும், மிட்வொய்ஃப்ஸ் அதிகமாகத் தேவைப்படுவதாலும், அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்க அரசாங்கம் முன் வந்திருக்கிறது. மருத்துவக் கல்லூரியில் சேர்த்துக்கொள்வது 600 என்று இருந்ததை 700 ஆக உயர்த்தி டாக்டர் படிப்புக்கு வசதி செய்து கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. அது வரவேற்கத் தகுந்தது. ஆஸ்பத்திரிகளை அதிகமாக்கவும் அரசாங்கம் முன் வந்திருக்கிறது. உதாரணமாக இந்த ஆண்டிலே திருநெல்வேலி அதிகம் அதிர்ஷ்டம் செய்திருக்கிறது, அங்கு ஒரு மருத்துவக் கல்லூரியும், சித்தா, ஆயுர்வேதம் யூனானி ஆகியவைகளை ஒருங்கிணைத்து படிப்புக் கொடுக்க குற்றாலத்தில் ஒரு இண்டியன் மெடிஸின் கல்லூரியை அமைக்க இருக்கிறார்கள் என்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். அதோடு இல்லாமல் ஆஸ்பத்திரிகளில் படுக்கை வசதியை அதிகமாகச் செய்துகொடுக்க அரசாங்கம் முன் வந்திருக்கிறது. அதையும் வரவேற்கவேண்டியதுதான்.

இப்போது அம்மை, காலரா, ப்ளேக் போன்ற தொத்து நோய்கள் அதிகப்படாமல் இருக்கிறது. ஆங்காங்கு மொபைல் யூனிட்டுகள் ஏற்படுத்தி சுகாதாரத் துறையிலே நம் நாட்டிலே அரும் பணி ஆற்றி வருகிறார்கள். சிற்சில இடங்களில் ஒன்றிரண்டு தவறி இது போல அம்மை நோய் எல்லாம் ஏற்படுகின்றன. இவைகளை நன்கு கவனித்து இதைப் போக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதே போல நம் நாட்டிலே டி.பி. அதிகமாக இருக்கிறது. அதற்காகப் பல ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். உதாரணமாக 144 படுக்கைகளோடு ஓட்டேரியில் திருவொட்டீஸ்வரர் ஆஸ்பத்திரியையும் 100 படுக்கைகளோடு வட ஆற்காடு மாவட்டத்தில் பெண்ணாத்தூரிலும் ஒரு ஆஸ்பத்திரி நிறுவியிருக்கிறார்கள் என்பது போற்றத் தகுந்தது. நம்முடைய தாம்பரம் சானிடோரியத்தில் எம்பிளாயிஸ் இன்ஷூரன்ஸ் ஸ்கீமின்கீழ் ஒரு வார்டு ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய காரியம். இருந்தாலும்கூட, தாம்பரம் சானிடோரியத்திற்கு செல்லவேண்டியிருந்தால் சென்னையிலிருந்து செல்லுகின்ற எலக்டிரிக் டிரைன் தாம்பரம் சானிடோரியம் ஸ்டேஷனில் நிற்பதில்லை. தாம்பரம் போய், மறுபடியும் அடுத்த வண்டியில்தான் திரும்பி வரவேண்டியிருக்கிறது. இம்மாதிரி மக்கள் அவதிக்குள்ளாக்கப்படுகிறார்கள். ஆகவே, மாநில அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து சென்னை

DEMAND XIV—MEDICAL, DEMAND XV—PUBLIC HEALTH
AND DEMAND XXXVIII—CAPITAL OUTLAY ON
PUBLIC HEALTH

18th March 1963]  [திரு. கி. நாராயணசாமி பிள்ளை]

யிலிருந்து செல்லும் எலக்டிரிக் டிரைன் தாம்பரம் சானிடோரியம் ஸ்டேஷனில் நிற்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிரைமரி ஹெல்த் சென்டர்கள் எல்லா பிளாக்குகளிலும் கட்டியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, அங்கே டாக்டர்கள் தங்குவதற்கு வீட்டு வசதி குறைவாக இருக்கிறது. அதையும் உடனே அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்கள், என்.ஜி.ஓ. பிள்ளைகள் கூட மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு கடன் வசதி அளித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. அதை நான் மிகவும் போற்றுகிறேன். சுகாதாரத் துறையிலே ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள், சானிடரி இன்ஸ்பெக்டர்கள் இவர்களுக்கு பதவி உயர்வே கிடையாது, சம்பளமும் மிகவும் குறைவாக இருக்கிறது. அவர்களுக்கு பதவி உயர்வும் கொடுத்து, அவர்களுடைய சம்பளமும் அதிகரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய நாட்டில் பாதுகாப்புக் குடி தண்ணீர் வசதியும், பாதாள சாக்கடை வசதியும் ஆங்காங்கு ஒருங்கே அமைக்கப்பட்டால், கண்டிப்பாக வியாதிகள் அதிகமாகக் குறையும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உதாரணமாக, ஒரு மனிதன் நல்ல உணவு உண்டு, நல்ல சுத்தமான நீர் குடித்து ஆரோக்கியமான காற்றை உட்கொண்டால் வியாதியே வராது, வியாதி வரவில்லையென்றால், மருந்தே தேவையில்லை. மருந்து தேவையில்லை என்றால், ஆஸ்பத்திரிகள் தேவையில்லை, டாக்டர்கள் தேவையில்லை என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். விருத்தாசலம் தாலூகா மேட்டுப்பாங்கான இடம். ஊமங்கலம் பிர்க்காவில், செய்தித்துறை அமைச்சர் அவர்கள் இருக்கக்கூடிய ஊர் இருப்பூர், தண்டியங்குப்பம், கோட்டேரி ஆகிய இடங்களில் குடிதண்ணீர் வசதி கிடையாது. தண்ணீர் செம்பட்டை படர்ந்திருக்கும், சிவப்பாக இருக்கும், அதை அருந்துவதினால் பல வியாதிகள் வருகின்றன. நரம்புச் சிலந்தி வியாதி அதிகமாக இருக்கிறது. நரம்புச் சிலந்தி வியாதியை என்ன முறையில் தடுத்தாலும் அதைத் தடுக்க முடியாது. பச்சிலை ஒன்றுக்குத்தான் அது அஞ்சும். அதுபோன்ற நிலையில் செம்பட்டைத் தண்ணீரை சுத்தமாக்கி குடிப்பதற்கு வேண்டிய வசதி தேவைப்படுகிறது. பாதுகாப்புக் குடிதண்ணீர் திட்டம் கிராமங்களுக்கு, பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து, கொண்டுவருவதாக இருந்தார்கள். அந்தத் திட்டம் என்னவாயிற்று என்று தெரியவில்லை. ஆகையால், இந்தப் பகுதிகளில் பாதுகாப்புக் குடிதண்ணீர் திட்டத்தை விரைவில் கொண்டு வந்து நரம்புச் சிலந்தி வியாதி வராமல் தடுப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். யானைக்கால் வியாதியும் நீரினால்தான் வருகிறது. அதையும் தடுப்பதற்கு கிராமப்புறங்களில் பாதுகாப்புக் குடிதண்ணீர் திட்டத்தை துரிதமாக நிறைவேற்ற

வேண்டும். எல்லா கிராமங்களுக்கும், எல்லா நகரங்களுக்கும் பாதுகாப்புக் குடிதண்ணீர் திட்டம் கொண்டுவரப்படவேண்டு மென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்காக வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. வி. எஸ். அருணாசலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மான்யக் கோரிக்கையை நான் முழுமனதோடு ஆதரித்து, அதிலே ஏற்பட்ட அனுபவத்தைக்கொண்டு, சில வார்த்தைகளை இங்கே கூற ஆசைப்படுகிறேன். எங்கள் ஜில்லாவிலே சுகாதார வசதி மக்களுக்குப் பயன்படும்படி நல்ல முறையிலே அமைந்திருப்பது பற்றி எனக்குப் பெரும் மகிழ்ச்சி. அதோடு, தாலுகா அளவிலே ஹரிஜனத் தொகுதியாகிய திருவள்ளூர் தாலுகாவில், முனிசிபல் நகரத்தில், சிறிய கட்டிடமாக இருந்த ஒரு காரணத்தை ஒட்டி, நாங்களும், அங்குள்ள பொது மக்களும் விடுத்த வேண்டுகோளுக் கிணங்கி, ஆஸ்பத்திரிக்குரிய இடத்தை நில ஆர்ஜிதம் செய்து நல்ல முறையில் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது, இன்னும் சில மாதங்களில் கட்டிடம் முடிந்து மக்களுக்கு அதனால் நல்ல வசதி ஏற்படும் என்பதற்காக என்னுடைய சந்தோஷத்தை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு என்னுடைய தொகுதியில் வெள்ளியூர் என்ற கிராமத்தில் பிளாக் ரீதியாக ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் ஆரம்பித்து, நடைபெற்று வருகிறது. அந்த நேரத்திலே அந்தக் கிராமப் பகுதியிலே இடம் வாடகை இல்லாமல் வேண்டும் என்று கேட்ட ஒரு காரணத்தினால், பொது மக்களுக்கு வசதியாக அங்கு ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் அவசியம் என்ற காரணத்தினால், ஒரு சிறிய கட்டிடத்தைக் கொடுத்தார்கள். அதிலே இப்பொழுது 4 வருட காலமாக பிரைமரி ஹெல்த் சென்டர் நடைபெற்று வருகிறது. ஆனால், இட வசதி மக்களுக்குப் போதாது. அதற்காக வேண்டி, அதிகாரி களும், ஜில்லா கலெக்டரும் அங்கு வந்து இடத்தைப் பார்த்து, அதற்கு வேண்டிய சர்க்கார் பூமியை அங்கு வசதியாக இருப் பதைப் பார்த்து, இடம் தேர்ந்தெடுத்தார்கள். அதற்கு வேண்டிய மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இரண்டு வருஷங்களுக்கு முன்னதாகவே கட்டிடம் கட்டி முடிந்துவிடும் என்று எதிர் பார்த்தோம். ஆனால், அதைப்பற்றி நடைமுறையிலே ஒன்றும் காணவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்களும், நிர்வாக அதிகாரிகளும் கவனித்து, மறு படியும் ஆவன செய்யவேண்டும் என்பதை இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்தப் பகுதியிலே நல்ல முறையிலே எம்.பி.பி.எஸ். டாக்டர் பணியாற்றி வந்தார். என்ன காரணத் தினாலோ, இப்பொழுது 2, 3 மாதங்களாக அங்கு எம்.பி.பி.எஸ் டாக்டர் இல்லை. வேறு டாக்டரைப் போட்டிருக்கிறார்கள். எல்.எம்.எஸ். என்று சொல்லக்கூடிய ஒரு டாக்டரைப் போட்டிருப் பதாகத் தெரிகிறது. அந்த வட்டாரத்திலுள்ள மக்களுக்கு வைத்திய வசதி வேண்டுமானால் அங்குதான் வரவேண்டும்.



ஆயிரக்கணக்கான மக்கள் வருவதுண்டு. அங்கு ஒரு ஓலைக் கீத்துப் பந்தல் போட்டிருந்தார்கள். அந்தக் கீத்துப் பந்தலில் கூட அடங்காத அளவுக்கு மக்கள் வெளியில் நின்று கொண்டிருந் ததை நான் பார்த்திருக்கிறேன். அதைப்பற்றி நான் நேரிலும் வந்து சொல்லியிருக்கிறேன். ஆனால், இப்பொழுது அங்கு மக்கள் கூட்டம் குறைந்துவிட்டது. என்ன காரணம் என்று தெரியவில்லை. மருந்து இல்லை என்ற காரணத்தினாலோ, அல்லது எம்.பி.பி.எஸ். டாக்டர் இல்லை என்ற காரணத்தினாலோ, அது மக்களுடைய மனதில் பதிந்து, வைத்தியத்திற்கு அங்கு வரும் மக்களின் தொகை குறைந்திருப்பதை நான் கண்டிருக்கிறேன். ஆகவே, அதற்கு வேண்டிய கட்டிட வசதி செய்து கொடுத்து, நல்ல டாக்டரையும் நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்களுடைய பகுதியிலே பல மக்கள் வியாதிக்குத் தகுந்தவாறு செங்கல்பட்டு ஆஸ்பத்திரிக்குப் போவது வழக்கம். செங்கல்பட்டு ஆஸ்பத்திரியில் நல்ல அருமையான இடவசதி உண்டு. ஆனால் சில வியாதிகளை சொஸ்தப்படுத்துவதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் அங்கு இல்லாததால், சில சமயங் களில் சென்னையிலுள்ள ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு வரவேண்டிய சந்தர்ப்பமும், சூழ்நிலையும் ஏற்படுகிறது. அந்த முறையில் பார்க்கும்பொழுது, அதுவும் குறிப்பாக திருத்தணி, திருவள்ளூர் பகுதி மக்கள் இங்கே ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு வரும்பொழுது, இடம் கிடைக்காமல் கஷ்டப்படவேண்டியிருக்கிறது. அவர்கள் ரயிலிலும், பஸ்ஸிலும் கஷ்டப்பட்டு பிரயாணம் செய்துவந்த பிறகு, இங்கே இடமில்லை என்று சொல்லக்கூடிய செய்தியை நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். அதற்காக வேண்டி பல சந்தர்ப்பங்களிலே பெரிய டாக்டர்களை, நிர்வாக டாக்டர்களைப் போய் பார்த்தேன். அவர் அங்குள்ள சிறிய குறையை எனக்கு எடுத்துச் சொன்னார். 'அங்குள்ள இட வசதி, படுக்கை வசதி இருப்பதைவிட அதிகமான மக்கள் வருகிறார்கள். கொஞ்சம் கூட அதைவிட அதிகப்படியாக 200, 300 பேர்களை சேர்த்துக்கொண்டி ருக்கிறோம், அதற்கு மேலும் அதிகம் பேர்களை சேர்க்க முடியாத காரணத்தினால்தான் சில சந்தர்ப்பங்களில் நோயாளிகளுக்கு இடம் கிடைக்காமல் போய்விடுகிறது' என்று அவர்கள் சொன்னார்கள். அவர் அப்படிச் சொல்லுவதை நான் பார்க்கும் பொழுது அந்த உண்மையை நான் கண்டேன். ஒரு சிலபகுதிகளில பெட்கள்கூட இல்லாமல் தரையிலே மக்கள் படுத்திருக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் இம் மாதிரி காட்சிகளை நான் கண்டிருக்கிறேன். ஆகவே, அங்குள்ள இடவசதி, படுக்கை வசதியை மேலும் அதிகரிக்குமாறு நான் அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

அங்குள்ள சில கீழ் சிப்பந்திகளுக்கு வசதி குறைவு என்று சொல்லுகிறார்கள். சம்பளமும் போதாது என்று சொல்லுகிறார் கள். சிறிய உதவி செய்யும் அந்த கீழ்த்தர சிப்பந்திகளுக்கு வேண்டிய சம்பள வசதியையும், மற்ற வசதிகளையும் [illegible]

செய்துகொடுக்கவேண்டுமென்று இந்த மன்றத்தில் கேட்டுக் கொள்கிறேன். சுகாதாரத் துறை, மருத்துவத் துறை இந்த ஆட்சியில் நமது மாநிலத்தில் நல்ல முறையில் நடைபெறுகிறது என்று மக்கள் மிகவும் சந்தோஷப்படுகிறார்கள். அவர்களுடைய சார்பாக நான் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எஸ். முருகையன் :** கனம் சபாநாயகர் அவர்களே, சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த
11-50 மு.ப. மானியத்தின் மீது கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரணையை ஒட்டி, என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்பு கிறேன். பொது சுகாதாரத்தை எடுத்துக்கொண்டால், உணவுக் கலப்படச் சட்டத்தில் நல்ல ஷரத்துக்கள் இருந்தும்கூட, நல்ல முறையில் செயல்பட முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நகரசபையும் ஒரு மாதத்திலே இத்தனை கேஸ்கள்தான் கண்டுபிடிக்க வேண்டுமென்று தடை போடப்பட்டிருக்கிறது. அதனால் பல இடங்களிலே உணவுக் கலப்படத்தைத் தடுக்கும் முறையில், சுகாதார அதிகாரிகள் அவர்களுடைய கடமையை நல்ல முறையில் செய்ய முடிவதில்லை. இரண்டாவது கிரேடு நகர சபைகளைப் பொறுத்தவரையில் 7 அல்லது 8 கேஸ்கள்தான் கண்டு பிடிக்க வேண்டுமென்று சர்க்காரிலிருந்து தடை உத்தரவு இருந்து வருகிறது தெரிந்ததே. 50,000 மக்கள் வசிக்கக் கூடிய நகரத்திலே பலதரப்பட்ட உணவுப் பொருள் வியாபாரிகள் இருக்கிறார்கள்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

அங்கு அதிகமான கேஸ்கள் பிடிக்க வேண்டிய அளவில் இருந்தாலும்கூட, சர்க்கார் அதைக் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். அதனால் உணவுக் கலப்படம் ஏராளமாக இருந்து வருகிறது. இந்த உணவுக் கலப்படத்தில் கூட்டுறவு முறையில் பால் வழங்கும் சங்கங்கள் கூட சம்பந்தப்பட்டிருக்கின்றன என்று சொல்லப் படுகிறது. என்னுடைய வட ஆற்காடு ஜில்லாவிலே ஒரு கூட்டுறவு சங்கம் பாலிலே தண்ணீர் கலந்ததற்காக தண்டனை விதிக்கப்பட்டு, அபராதமும் கட்டியிருக்கிறது. ஆகவே, இப்பொழுது விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்கி, 3-வது வகுப்பு நகரசபையாக இருந்தால் மாதத்தில் 50 கேசுகள் பிடிக்க வேண்டுமென்றும் இரண்டாவது வகுப்பு நகரசபையாக இருந் தால் மாதத்தில் 100 கேசுகள் பிடிக்கலாம் என்றும் மாற்றும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த மாதிரி ஒரு தடை சர்க்கார் விதித்திருப்பதாக நான் சொல்லுகிறேன். அதிகமான கேசுகளைப் பிடித்தால், அவற்றைப் பரிசீலனை செய்வதற்குப் போதுமான உபகரண வசதிகள் கிண்டியில் இல்லை என்று சொல்லப்படுகிறது. உணவுக் கலப்படத்தைத் தடுக்க வேண்டுமென்றால், அதற்கு

DEMAND XIV—MEDICAL, DEMAND XV—PUBLIC HEALTH
AND DEMAND XXXVIII—CAPITAL OUTLAY ON
PUBLIC HEALTH



வேண்டிய வசதிகளையும், உபகரணங்களையும் சர்க்கார் செய்து கொடுக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால் உணவுக் கலப்படச் சட்டம் சரிவர அமலாகாமல் இருந்துவிடும்.

என்னுடைய துரிஞ்சாபுரம் தொகுதியில் சேத்துப்பட்டு என்ற மேஜர் பஞ்சாயத்து இருக்கிறது. அந்தப் பகுதியிலே நரம்புச் சிலந்தி வியாதி அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. போளூ ரிலே ஒரு நரம்புச் சிலந்தி யூனிட் வைக்கப்பட்டிருக்கிறது. அம் மாதிரி ஒரு யூனிட் இருக்கிறது என்று கூட அந்தப் பகுதி மக்க ளுக்குத் தெரியாது. அந்த அளவிலே அது செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அதற்காக ஒரு ஜீப் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதி காரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இருந்தாலும் அது நல்ல முறையிலே செயல்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள் ளுகிறேன். ஏனென்றால், ஒவ்வொரு ஆண்டும் ஊரிலேயே சுமார் 300 அல்லது 400 பேர் இந்த வியாதியால் கஷ்டப்படுகிறார்கள். அப்படி அவஸ்தைப்படக்கூடிய நேரத்தில் ஆஸ்பத்திரியில் போய் சிகிச்சைப் பெற்றுக் கொள்ளலாம் என்று சொன்னால், அங்கே ஒரு நல்ல ஆஸ்பத்திரி கிடையாது. அங்கு இருக்கும் ஆஸ்பத்திரி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்தது. வருடம் ஒன்றுக்கு ரூபாய் 3,000-க்கு மருந்துக்கள் வாங்கிக் கொடுத்துவிட்டு, அது நல்ல முறை யில் நடைபெற வேண்டுமென்றால், எவ்வாறு முடியும்? ஆஸ்பத்திரி ஒரு நல்ல சர்க்கார் கட்டிடத்தில் இருக்கிறது. டாக்டரும் இருக் கிறார், சிப்பந்திகள் இருக்கிறார்கள். ஆனால் அந்த ஆஸ்பத்திரி பஞ்சாயத்து யூனியனிலே இருக்கிற காரணத்தினால் நல்ல முறை யில் செயல்பட வில்லை. சேத்துப்பட்டைச் சுற்றி 18 அல்லது 20 மைல் விஸ்தீரணத்திற்கு ஒரு நல்ல ஆஸ்பத்திரி கிடையாது. பல மைல் தூரம் சென்றுதான் வைத்திய வசதி பெற வேண்டியிருக் கிறது. அவ்வாறு பஞ்சாயத்து யூனியனிலே இருக்கக் கூடிய சேத் துப்பட்டு ஆஸ்பத்திரியை சர்க்காரே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தீர்மானம் அனுப்பியும்கூட, இதுவரையிலும் நட வடிக்கை ஒன்றும் எடுக்கப்படவில்லை. ஆகவே, அந்த ஆஸ்பத் திரியை சர்க்கார் உடனடியாக எடுத்து, நல்ல முறையிலே நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொதுச் சுகாதார சட்டத்தின்படி, க்ஷேத்திரங்கள் இருக்கக் கூடிய நகர சபைகள் உற்சவ காலங்களில் ஏராளமான பணம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. நகரசபைகளுடைய வருமானம் அதிகமாக இல்லாத காரணத்தால் யாத்ரீகர்களுக்கு நல்ல முறை யில் சுகாதார வசதிகள் சில நேரங்களில் செய்து கொடுக்க முடிய வில்லை. நான் திருவண்ணாமலை நகரசபையைப் பற்றிச் சொல்லு கிறேன். ஆண்டுதோறும் கார்த்திகை தீபத்திற்காக அங்கு கிட்டத் தட்ட 2 லட்சம் மக்கள் வருகிறார்கள். அப்படி வரும் யாத்ரீகர் களுக்கு சுகாதார வசதிகள் செய்து கொடுக்க நகரசபை ரூபாய் 40,000 அல்லது ரூபாய் 50,000 வரை செலவழிக்க வேண்டியிருக் கிறது. யாத்ரீகர்கள் வரி மூலமாக சுமார் ரூபாய் 6,000 அல்லது ரூபாய் 7,000 தான் கிடைக்கிறது. மீதிப் பணத்தை நகரசபை [illegible]

செலவழிக்க வேண்டியிருப்பதால், மற்ற வேலைகளை நகரசபை செய்ய முடியாமல் இருக்கிறது. இதனால் சென்ற 2 ஆண்டுகளாக நகரசபையின் வரவு செலவுத் திட்டத்தில் ரூபாய் 2 லட்சம் துண்டு விழுகிறது. சர்க்காரிடம் மானியம் கேட்டும் கொடுக்கப்படவில்லை. ஆகவே, திருவண்ணாமலை போன்ற யாத்திரை ஸ்தலங்களுக்கு சர்க்கார் பணம் கொடுக்க வேண்டும். இல்லாவிடில், தேவஸ்தானங்களே இந்தச் செலவை மேற்கொள்ள வேண்டுமென்று சர்க்கார் உத்திரவிடும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன் .

தூரிஞ்சாபுரம் தொகுதி நார்த்தாம்பூண்டியில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கிறது. அது ஒரு வாடகைக் கட்டடத்தில் இருக்கிறது. கட்டடம் கட்டுவதற்கு சென்ற ஆண்டில் பணம் ஒதுக்கப்பட்டும் இன்னும் கட்டி முடிக்கவில்லை. ஆகவே, இதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மருத்துவ சுகாதார மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

திருநெல்வேலி ஜில்லாவில் இரண்டு மெடிகல் காலேஜ்கள் வருவது வரவேற்கத் தக்கது. குறிப்பாக, எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் எல்லாம் அதிகாரத்தில் இருக்கக்கூடிய சகோதரிகளைப் பற்றி பெருமையாகச் சொன்னார்கள். அதைவிடப் பெருமைப் படக்கூடிய விஷயம் என்னவென்றால், அவர்கள் எந்தக் காரியத்தையும் சீக்கிரத்திலேயே செய்து முடிக்கிறார்கள். 1961-ல் ஏ. எல் முதலியார் கமிட்டி ஒரு காலேஜ் ஆப் இந்தியன் மெடிஸின் வேண்டுமென்று சொன்னார்கள். மேதா கமிட்டியினரும் அதே அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்கள். 1962-ல் தான் மதிப்பிற்குரிய சுகாதார மந்திரி அவர்களும், டி. எம். எஸ். அவர்களும் வந்து பார்த்தார்கள். பத்து மாதத்திற்குள் ஒரு முடிவு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, சகோதரிகள் பொறுப்பில் விட்டால் சீக்கிரமாக ஒரு முடிவு காண முடிகிறது. குற்றாலத்தில் அந்தக் கல்லூரியை வைக்க வேண்டுமென்று சொல்லியிருப்பதனால், இப்பொழுதே ஒரு நோட்டிபிகேஷன் போட்டு, அந்த இடத்தை யாரும் வாங்கக் கூடாது என்று செய்தால், விலை உயர்வைத் தடுக்க முடியும்.

ஒவ்வொரு நகரத்திற்கும் ஒரு ஆக்ஸிடெண்ட் ஆஸ்பத்திரி தேவையாக இருக்கிறது. இந்த யுத்த நெருக்கடி நேரத்தில் அது மிகவும் அவசியம். உடனடியாகச் செய்வதற்குப் பணமில்லை என்று சொன்னால், 24 மணி நேரமும் எமெர்ஜென்ஸி சர்வீஸ் இருப்பது நலம். சர்க்கார் இதற்காக செலவு செய்ய வேண்டியதில்லை. இருக்கக்கூடிய பெட்களை வைத்துக்கொண்டு, ஒன்றிரண்டு டாக்டர்களைப் போட்டுச் செய்யலாம். 1935-ல் பிரிட்டிஷ் மெடிகல் கமிட்டியில் விவாதிக்கப்பட்டு, ஒவ்வொரு நகரத்திலும் ஒரு ஆக்ஸிடண்ட் ஆஸ்பத்திரியும், 24 மணி நேரத்திற்கு எமெர்ஜென்ஸி சர்வீஸ் இருக்க வேண்டும் என்பதை அனுசரித்து இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கோடம்பாக்கத்தில் ஒரு ரீஹாபிலிடேஷன் ஸ்கீம் ஆரம்பிப்பதாக இருந்தது. எமெர்ஜென்சி காரணத்தினால் அதை ஒத்தி வைக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு ஜாயின்ட் டைரக்டர் ஆப் மெடிகல் சர்விஸ் தேவை என்று நினைக்கிறேன். இப்பொழுது அதிகக் கல்லூரிகள் இருப்பதால், டி. எம். எஸ்.-க்கு உதவியாக ஒரு ஜாயின்ட் டைரக்டரைப் போட்டால் நலமாயிருக்கும். ஸ்டான்லி ஆஸ்பத்திரியில் ஒரு நியூரோ ஸர்ஜரி யூனிட் வைக்கப் போவதாகத் தெரிகிறது. சென்னைக்கு அடுத்தபடியாக உள்ள பெரிய நகரம் மதுரை. சென்னை நகரிலேயே இரண்டு யூனிட்டுகள் வைப்பதைவிட, அங்கே ஒரு யூனிட் வைப்பது நல்லது. ஏனென்றால் இப்பொழுது கன்னியாகுமரியிலிருந்து வர வேண்டும் என்று சொன்னால் பிளேனில் கூட வர முடியாது. ஒரே நகரத்தில் இரண்டு வைக்க வேண்டும என்பதில்லை. பல இடங்களுக்கும் திட்டங்களை விரிவுபடுத்திக் கொடுக்கவேண்டும்.

சென்னைக்கு அடுத்தாற்போல் மதுரை ஒரு பெரிய நகரமாக இருப்பதால் அங்கே இதை வைக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஒரே இடத்தில் இல்லாமல் பல இடங்களில் வைத்தால் சௌகரியமாக இருக்கும். அப்பொழுதுதான் வருவதற்கு வசதியாக இருக்கும். கன்யாகுமரியிலிருந்து வருவதாக இருந்தால் சௌகரியமாக இருக்கும். ஆகவே ஒரே இடத்தில் இதை அமைக்காமல் பரவலாக அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தாற்போல் டிஸ்பென்சரிகளை எடுத்துக்கொண்டால் தாலூகா டிஸ்பென்சரிகள் பல ப்ளாக் லெவலில் இருக்கின்றன. அவைகளில் பல இடங்களில் டாக்டர்கள் இல்லை. அதற்குக் காரணம் டாக்டர்கள் பற்றாக்குறை என்றும் சொல்லப்படுகிறது. அந்நிய நாட்டிற்குச் சென்று படித்துவரக்கூடிய டாக்டர்கள் நமக்கு மிகவும் குறைவான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அதனால் அந்நிய நாட்டிலிருந்து தகுதியுள்ளவர்களை இங்கே கொண்டு வந்து டாக்டர்களுக்கு பயிற்சி கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். அந்நிய நாட்டில் படிப்புக்கு என்று அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்நிய நாட்டிற்கு அதிகப்படியான டாக்டர்களை அனுப்பி வைத்துப் படித்து வரும்படியாக ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். 1919-ல் இந்திய ஆக்ட் ஆப் சானிடரி அண்ட் மெடிகல் டிபார்ட்மென்ட் என்று ஏற்படுத்தப்பட்டு அது 'சாட்டிஸ்பாக்டரியாக' வேலை செய்யவில்லை என்று 1923-ல் அதைப் பிரிக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு 1953-ல் அதைச் சேர்க்க வேண்டும் என்று திட்டம் வகுக்கப்பட்டது. இப்பொழுது டாக்டர்கள் ஜாஸ்தியாக இல்லை. மெடிகல் டிபார்ட்மெண்டில் அன்று டாக்டர்கள் ஜாஸ்தியில்லை என்று உணர்ந்து பிரிக்கப்பட்டது. இப்பொழுது பிரிந்து இருக்க வேண்டும் என்று நினைப்பது அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். இப்பொழுது மாகாணத்தில் மலேரியா தடுப்பு நட[illegible]க்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன, மற்ற பிர[illegible]

இங்கு வந்து தடுப்பு வேலை செய்து வருகிறார்கள். இங்கு நல்ல முறையில் வேலை செய்யப்பட்டு வருகிறது. இங்கு நல்ல முறையில் அது விரிவு படுத்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது பல இடங்களில் ஸ்கூல் ஹெல்த் ப்ரோகிராம் இல்லாமல் இருக்கிறது. அவை இல்லாத இடங்களில் இருக்க வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக 'ஃபுட் அடல்டரேஷன்' இருக்கிறது. இதை ரொம்பவும் கண்காணிக்க வேண்டியதாக இருக்கிறது. குற்றாலத்தில் குடி தண்ணீர் வசதிக்காக ஒரு ரிசர்வாயரைக் கட்ட வேண்டும். பப்ளிக் ஹெல்த் சம்பந்தமாக குற்றாலத்தில் ஒரு ரிசர்வாயரைக் கட்டிக் கொடுத்து அங்கு குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அங்கு குடி தண்ணீர் வசதி இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஆதலால் உடனடியாக ரிசர்வாயரைக் கட்டுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*** திரு. டி. கடம்பவனசுந்தரம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் சுகாதார அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த மானிய கோரிக்கையை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். நம் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு சுகாதாரத்துறையில் பல முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறது. நல்ல முறையிலே இந்த இலாக்காவும் பணியாற்றி வருகிறது. இருந்தாலும் சில குறைபாடுகள் இருக்கின்றன என்றும் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. எங்கு பார்த்தாலும் ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லை என்று கூக்குரல்தான் எழுப்பப்படுகிறது. சில இடங்களில் டாக்டர்களைப் போடவில்லை என்றுதான் சொல்லுகிறார்கள். கிராமங்களுக்கு டாக்டர்களைப் போட்டாலும் அவர்கள் போவதாக இல்லை என்றும் சொல்லப்படுகிறது. ஆதலால் என்னுடைய அபிப்பிராயம் ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதாவது எம். பி. பி. எஸ். பட்டம் பெற்று வெளியே வரக்கூடிய டாக்டர்கள் கிராமப்புறங்களில் கட்டாயமாக கொஞ்ச நாட்களுக்கு அதாவது இரண்டு மூன்று வருடங்களுக்கு கிராமங்களில் பணியாற்ற வேண்டும் என்று ஒரு விதியை கையாள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி கிராமப்புறங்களில் பணியாற்றிய டாக்டர்களைத்தான் நகர்ப்புறங்களில் சொந்தத்தில் மருத்துவமனைகள் நடத்த அனுமதிக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தையும் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட ஒரு விதி செய்தால் தான் கிராமங்களுக்கு டாக்டர் சென்று வேலை செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்படும். அதோடு கிராமங்களில் வேலை செய்யக்கூடிய டாக்டர்களுக்கு அவர்களுடைய பகலிக்காலங்களில் நகர்ப்புறங்களில் பணியாற்றக் கூடிய டாக்டர்களைவிட அதிகப்படியான சம்பளமோ அலவன்ஸோ கிடைக்கக்கூடிய அளவில் இருக்க வேண்டும். இப்படி அதிகப்படியான சம்பளம் அலவன்சு கொடுத்தால் கிராமங்களில் சேவை செய்ய டாக்டர்கள் முற்படுவார்கள். அந்த முறையை கையாண்டால் பஞ்சாயத்து மருத்துவமனைகளிலும் கிராமப்



புறங்களில் உள்ள மருத்துவமனைகளிலும் பணியாற்ற டாக்டர்கள் முன்வருவார்கள். இதைப் பற்றி பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய ஜனங்கள் தான் அதிகப்படியான மருத்துவ வசதி பெறாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். சில பஞ்சாயத்து மருத்துவ மனைகளில் வாரத்திற்கு ஒரு தடவையோ அல்லது பதினைந்து நாட்களுக்கு ஒரு தடவையோ டாக்டர்கள் வந்து போய் கொண்டிருக்கிறார்கள். அம்மாதிரியான ஆஸ்பத்திரிகள் நிரந்தரமாக டாக்டர்களைப் போடுவது மிக மிக அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்பொழுதுதான் அவர்கள் நல்ல முறையில் பணியாற்றமுடியும், கிராம மக்களும் மருத்துவத்துறையின் பண்பினை உணர முடியும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நோய் வந்த பிறகு அதற்கு வைத்தியம் செய்வதைவிட நோய் வருவதற்கு முன்னேயே அது வராமல் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதுதான் சிறந்த முறை. அதற்காக பல தடுப்பு முறைகளை அரசாங்கம் கையாள வேண்டும். இப்பொழுது குறிப்பாக நாஷனல் மலேரியா எராடிகேஷன் ப்ரோகிராம், ஸ்மால் பாக்ஸ் எராடிகேஷன் ப்ரோகிராம் என்று ஆரம்பித்திருக்கிறார்கள், அவைகள் எல்லாம் ரொம்பவும் வரவேற்கத்தக்கதாக இருக்கிறது. இம்மாதிரியான திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டுவரும் சமயங்களில் முக்கியமாக ஒன்றை கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. அங்கங்கே இருக்கக்கூடிய சுகாதாரக் குறைவினால் பல வியாதிகள் பரவுகின்றன. இதைக் கவனிக்கும்பொழுது முக்கியமாக பெரிய நகரங்களில், போதுமான பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பது அவசியமாக இருக்கிறது. பல நகரங்களில் குடி தண்ணீர் பாதுகாப்பு வசதி இல்லாத காரணத்தால் யானைக்கால் நோய்கள் பரவுகின்றன. இந்த முறையில் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் அருப்புக் கோட்டை நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி இல்லை என்று பல சந்தர்ப்பங்களில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மிகுந்த பிரயாசையின் பேரில் நகரசபையில் குடி தண்ணீர் வழங்க முயற்சி செய்து வருகிறார்கள். ஆனால் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல்தான் சர்க்காரிடம் குடி தண்ணீர் திட்டத்தை நிறைவேற்ற வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதை வெற்றிகரமாக நிறைவேற்ற சர்க்கார் உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக குஷ்ட ரோகிகளைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இப்பொழுது அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது வரவேற்கத்தக்கதாக இருக்கிறது. பெரிய நகரங்களில் தெரு நடைபாதைகளிலும் குஷ்டரோகிகள் கூடிக்கொண்டு பிச்சை எடுக்கக் கூடிய அளவில் இருக்கிறார்கள். இதைத் தடுப்பது மிகவும் அவசியமாக இருக்கிறது. குஷ்டரோகம் தொத்து வியாதி இல்லை என்றும் இது பரம்பரையான வியாதி என்றும் சொல்லப்படுகிறது. பரம்பரை பரம்பரையாக இந்த வியாதி பரவாதபடி குஷ்டரோகிகள்

மணவாழ்க்கைக்கு தகுதியற்றவர்களாக செய்து விடுவதன் மூலம் ஓரளவு தடுக்கமுடியும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். மேலை நாடுகளில் இம்மாதிரி முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அதைப்போலவே இங்கேயும் எடுத்துக்கொள்ள வேண்டும். (மணி அடிக்கப்பட்டது.)

* திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என்னுடைய வெட்டுப் பிரேரணையை வற்புறுத்தி சுகாதாரத் துறையில் இருக்கும் சில குறைபாடுகளை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் பதவியேற்ற பிறகு, ஓரளவு இந்த இலாகாவிலே நல்ல பல சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள் என்றாலும், குறைபாடுகள் இல்லாமல் இல்லை என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் நிர்வாகத்திற்கு வந்த பிறகு, சுகாதார இலாகா டைரக்டர் அவர்களையும், வைத்திய இலாகா டைரக்டர் அவர்களையும் தாய்மார்களாகவே பார்த்து நியமனம் செய்திருக்கிறார்கள். அதேபோல்தான் மற்ற துறைகளிலே இருக்கும் டக்டர்களையும், ஜில்லா மருத்துவ அதிகாரிகளையும், பெண்களாகவே அதிகமாக நியமிப்பதன் மூலம் நல்லதொரு சீர்திருத்தத்தைச் செய்ய முடியும் என்று நான் கருதுகின்றேன்.

நோய், தாய்மை உள்ளத்தோடு கவனிக்கின்ற முறையில் போக்கப்படுவதைவிட மருந்தினால் போக்கப்படுவது அவ்வளவு அதிகம் இல்லை. எப்படி குழந்தையைச் சீராட்டி, தாலாட்டி வளர்க்கிறார்களோ, அதே போல்தான், நோயாளிகளிடம் காட்டும் அனுசரணையின் மூலம் நல்ல முறையில் அவர்களைப் பார்த்துக்கொள்வதன் மூலம், மருத்துவத் துறையில் நல்ல முன்னேற்றம் காணலாம். பெண் டாக்டர்கள், அதுவும் பொறுமையாக இருக்கும் நல்ல மனம் படைத்த பெண் டாக்டர்கள் அதிகமாக வருவதன் மூலம் நம்முடைய இந்த இலாகாவில் இருக்கும் நல்ல முன்னேற்றத்தை மேலும் வளப்படுத்தலாம் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்த இலாகாவிலே நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்று நான் சொல்கிற இந்தச் சமயத்தில் சில குறைபாடுகளையும் என்றால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. தென்னாற்காடு மாவட்டத்தில், செஞ்சியில் ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. அதிலே ஒரு டாக்டரம்மாள் இருக்கிறார். அவருடைய பெயரை நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. கடந்த மாதத்தில் ஒரு பெண் குத்தப்பட்டு ஆஸ்பத்திரியில் கொண்டுவந்து கிடத்தப்பட்டிருந்தாள் . . . .

**MR. DEPUTY SPEAKER:** There is a case pending, I think.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** அந்த அம்மையார் காலை ஐந்து மணிக்கு அந்த ஆஸ்பத்திரியில் கொண்டுவந்து நோயாளியாகக் கிடத்தப்பட்டாள். ஆனால், மாலை நான்கு மணி வரையில் அங்கே



அவள் கவனிக்கப்படவில்லை. இதை அறிந்த அந்த அம்மாளின் கணவன், ஊருக்குச் சென்று ப்ரெசிடென்டை அழைத்து வந்து புகார் செய்துகொண்டதன் பேரில், அந்த பிரசிடென்ட் வந்து கேட்டபோது கூட, அவரைக் கழுத்தை பிடித்து வெளியே தள்ளும் நிலைமை வந்திருக்கிறது. அப்படிச் செய்தது தவறு என்பதை ஜில்லா மருத்துவ அதிகாரிக்கு அந்தப் பிரசிடென்ட் எடுத்துத் தெரிவித்து முறையிட்டிருக்கிறார். அங்கேயும் அவருடைய குறை தீர்ந்தபாடாகக் காணோம். கடைசியில் கோர்ட்டுக்குப் போனார்கள். கீழ்க்கோர்ட்டில் நீதிபதி அதைத் தள்ளிவிட்டதன் பேரில் கடைசியில் ஜில்லா கோர்ட்டுக்கு கேஸ் வந்தது. அங்கு தென்னாற்காடு மாவட்ட நீதிபதியாக இருக்கிறவர் கடுமையாக எச்சரிக்கின்ற முறையில் இந்த நிலைமை சென்று கொண்டிருக்கிறது என்றால், இப்படிப்பட்டவர்கள் மீது தக்க கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களையும் அந்த இலாகாவின் தலைவரையும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பேர்ப்பட்ட ஒரு சில டாக்டர்களின் செயலின் காரணமாக, இலாகாவிற்கே கெட்ட பெயர் வந்துவிடுகிறது. நல்ல டாக்டர்களுடைய பெயரும் கெட்டுவிடுகிறது. என்னுடைய தொகுதியில் பண்ணுருட்டி ஆஸ்பத்திரியில் உள்ள டாக்டரம்மாள் கூட சில சமயங்களில் பெண் நோயாளிகளை கேவலமாகப் பேசிவிடுகிறார்கள்; சில தவறான முறைகளெல்லாம் கையாளப்படுகின்றன என்று பாதிக்கப்படுகின்றவர்களில் சிலர் எங்களைப் போன்றவர்களிடம் வந்து எடுத்துச் சொன்னால், அதைப்பற்றி நாங்கள் மேலதிகாரிகளுக்கு எழுதுவதற்கு முன்னால், டி. எம். ஓ. விடம் முறையிடுகிறோம். நண்பர் கனம் உறுப்பினர் திரு. எம். ஆர். கிருஷ்ணமூர்த்தியுடன் ஒரு தடவை கடலூரில் இருக்கும் மருத்துவ அதிகாரியினிடத்தில் சொல்லிக்கொள்ளும் சமயத்தில் அவர் கூறிய பதில் எங்களுடைய உள்ளத்தைப் புண்படுத்துவதாக இருக்கிறது. இந்த இலாகா மிக நல்ல இலாகா தான் என்றாலும், சிற்சில இடங்களில் ஏற்படும் சில தவறுகள் காரணமாக இலாகாவுக்கே ஒரு கெட்ட பெயரை தேடித் தந்துவிடுகிறது. அதைக் களைவதற்கு இந்த இலாகாவில் பொறுப்பேற்றிருக்கும் அம்மையார்கள் இருவரும் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். குறிப்பாக நோயாளிகளிடம் எந்த டாக்டர் கடுமையாக நடந்துகொண்டாலும், அல்லது கவனக்குறைவாக இருந்தாலும், அப்படிப்பட்டவர்கள் பேரில் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மருத்துவக் கல்லூரியில் சேரும் மாணவர்களுடைய எண்ணிக்கையில் சரிபாதி பெண்களை எடுத்துக்கொண்டால், இந்த நாட்டில் நல்ல முறையில் மருத்துவத் துறை பணியாற்ற முடியும். என்னுடைய தொகுதியிலிருக்கும் பண்ணுருட்டி ஆஸ்பத்திரி ஏற்கெனவே லோகல் பண்டு ஆஸ்பத்திரியாக இருந்துவந்து இப்பொழுது சர்க்கார் ஆஸ்பத்திரியாக மாறியிருக்கிறது. இப்படி

மாறி ஏறக்குறைய ஓரிரண்டு வருஷங்கள் ஆகியும், அங்கே ஒரு 'பெட்டு' கூட ஆண்களுக்காகக் கிடையாது. தினமும் 300-க்கு மேற்பட்ட நோயாளிகள் அங்கு வருகிறார்கள். அந்த இடத்தில் ஒரே ஒரு ஆண் பெட்டுதான் இருக்கிறது. அதை அதிகப்படுத்த வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் கடலூருக்கு வந்தபோது எழுதிக் கொடுத்தேன். ஆனால், இதுவரை என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பதற்குப் பதிலே வரவில்லை. இந்தக் குறையை உடனடியாகப் போக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள் சில அமைத்தாகிவிட்டன. (மணி அடிக்கப்பட்டது) நான் சில நிமிஷங்கள்தான் எடுத்துக் கொண்டேன். மேலும் ப்ரைமரி ஹெல்த் சென்டர்களை வாடகைக் கட்டடங்களில் அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

என்னுடைய தொகுதியில் காலரா அதிகமாகப் பரவியிருக்கிறது. கடலூர் தொகுதியில் காடாம்புலியூர் பகுதியிலும், மேட்டுப் பகுதியிலும் கினி வர்ம் தொல்லையினால், பல ஆயிரக்கணக்கான மக்கள் அடிக்கடி பாதிக்கப்படுகிறார்கள். எந்த எந்த இடங்களில் காலரா அதிகமாகப் பரவியிருக்கிறதோ அந்த இடங்களுக்கும், இப்படி கினி வர்ம்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் காடாம்புலியூர் பிர்க்காவுக்கும் நேஷனல் வாட்டர் சப்ளை திட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றி, அந்தப் பகுதி மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன.

ஃபுட் அடல்டரேஷன் சட்டத்தைப்பற்றி இங்கே சொல்லப்பட்டது. எண்ணெய் வியாபாரிகளாக இருப்பவர்கள் அந்த எண்ணெய்களை உற்பத்தி செய்வது கிடையாது. யாரோ எண்ணெய் எங்கோ ஆட்டுகிறார்கள். இருந்தாலும் விற்கின்றவர்களுக்கு ஓராண்டு, இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை அளிக்கப்பட்டுவிடுகிற நிலைமை ஏற்பட்டு விடுகிறது. எண்ணெயில் கொழுப்புச் சத்து ஐந்து சத விகிதத்திற்கு மேல் இருந்தால் உடனே சிறைத் தண்டனை கொடுக்கப்படுகிறது. கொழுப்புச் சத்து எப்படி வருகிறது என்றால், அது எள்ளின் வளத்தைப் பொறுத்தது. எள் உற்பத்தி செய்யப்படும் இடத்தையும் பொறுத்தது அது. அந்த எண்ணெய் எவ்வளவு நாட்களுக்கு நிறுத்தி வைக்கப்படுகிறதோ, அதன் பக்குவத்திலே கொழுப்புச் சத்து உண்டாகிறது. இப்படியிருக்க ஏன் குற்றமற்றவர்கள் தண்டிக்கப்படத்தக்க நிலைமையை உண்டாக்க வேண்டும்? உற்பத்தி செய்கிற வியாபாரி கலப்படம் செய்தால், அதை அங்கே சென்று கண்டுபிடித்து, அந்த வியாபாரியைச் சிறையிலே தள்ளி தண்டனை அளிக்க வேண்டுமே தவிர, கலப்படம் செய்யாத குற்றமற்ற சிறிய வியாபாரிகளை இந்த இன்னல்களுக்கு ஆளாக்காமல் தடுப்பதற்கு அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.





பாலில் கலப்படம் செய்யப்படுகிறது. முதல் தடவை செய்யும் குற்றத்திற்கு அபராதம் என்றும், இரண்டாவது குற்றத்திற்கு குறைந்தது ஒரு ஆண்டு சிறைத்தண்டனையும் இரண்டாயிரம் ரூபாய் அபராதம் என்றும் இருக்கிறது. இதைக் குறைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். ஒரு வருஷச் சிறைத் தண்டனை என்பது அதிகமான தண்டனையாகும். முதல் தடவை அபராதம் போட்டு, இரண்டாவது தடவை ஒரு மாதம், இரண்டு மாதம் சிறைத் தண்டனை என்று போட்டு, மூன்றாவது தடவை குற்றத்திற்கு ஓராண்டு சிறைத்தண்டனை என்று வைக்கலாமே தவிர, எடுத்த எடுப்பிலேயே இப்படி தண்டனை அதிகமாக வைப்பது சாலச் சிறந்ததல்ல என்று நான் நினைக்கிறேன். இந்த முறைகளைக் கையாண்டு, இந்தத் துறையிலே இருக்கும் குறைபாடுகளை அமைச்சர் அவர்கள் திறம்படக் களைந்து, நிர்வாகத்தைச் சீர்திருத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இப்பொழுது புதிதாக சுகாதார இலாகா டைரக்டர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கும் அந்த இலாகாவில் முன்பு பல ஊழல்கள் இருந்ததாக நான் கேள்விப்படுகிறேன். அந்த ஊழல்கள் எங்கெங்கே இருந்தன என்பதைக் கண்டறிந்து, களைந்து, தக்க பரிகாரம் காணவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். (மணி அடிக்கப்பட்டது) இரண்டு நிமிஷங்களில் முடித்துக்கொள்ளுகின்றேன்.

என்னுடைய தொகுதியில் எனகிரிமங்கலம் என்னும் ஊரில் சென்ற மாதம் 47 பேர்கள் காலராவினால் இறந்திருக்கிறார்கள். இதை ஏன் கட்டுப்படுத்தபடவில்லை? இதனை ஏன் உடனடியாக சுகாதார அதிகாரி முன்கூட்டியே கண்டுபிடிக்கவில்லை? பஞ்சாயத்து யூனியனிலிருக்கும் அதிகாரி என்ன செய்தார்கள்? இலாகாவில் இருக்கும் அதிகாரி என்ன செய்தார்கள்? பத்து நாட்களுக்கு மேல் ஒரே கிராமத்தில் 47 பேர்கள் காலராவினால் இறந்தார்கள் என்றால் இந்த இலாகாவில் எவ்வளவு குறைபாடு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்த்தால் போதும். ஆகவே ஓரிரண்டு குறைகளை எடுத்துக் காட்டினேன். இதை அமைச்சர் அவர்கள் கண்டறிந்து இந்த இலாகாவை நல்ல முறையில் பரிபாலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய வெட்டுப் பிரேரணையை வற்புறுத்தி உரையை முடிக்கிறேன். வணக்கம்.

***திரு. ர. ஜீவரத்தினம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய வடாற்காடு ஜில்லாவில் வேலூரில் ஒரு சர்க்கார் ஆஸ்பத்திரி இருக்கிறது. அந்த ஆஸ்பத்திரியை விஸ்தரிக்க வேண்டுமென்று சென்ற ஆண்டு விவாதத்தில்கூட நான் சொன்னேன். அது இன்னும் கவனிக்கப்படாமலிருக்கிறது. அந்த

ஆஸ்பத்திரியை விஸ்தரிப்பதற்குப் போதுமான இட வசதி கூடக் கிடையாது. அந்த ஆஸ்பத்திரியை நகரத்திற்கு வெளிப் புறத்தில் கொண்டுவந்து, பெரிய வசதியுள்ள ஆஸ்பத்திரியாக விஸ்தரிக்க வேண்டுமென்று மறு முறையும் நான் சுகாதார இலாகா அமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுதுள்ள ஆஸ்பத்திரியில் அங்கு போதுமான படுக்கை வசதி கிடையாது. அவுட்-பேஷன்ட்டாக வரக்கூடிய நோயாளிகளுக்கு சிகிச்சை வசதி கூடச் செய்வது கிடையாது. காரணம், நான்கு டாக்டர்கள் இருக்கிறார்கள். தினசரி இரண்டாயிரம் நபர்களுக்கு மேல் வைத்தியத்திற்காக அங்கு வருகிறார்கள். போதுமான அளவு டாக்டர்களை அங்கு நியமிக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அந்த ஆஸ்பத்திரியில் கண் வைத்தியப் பிரிவு ஒன்றும் ஏற்படுத்தப்பட வேண்டும். இப்பொழுது அதற்கு அங்கு வசதி செய்யப்படாமலிருக்கிறது. பல் வைத்தியத்திற்கான வசதியும் அங்கு ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். அதற்கும் இப்பொழுது அங்கு வசதி இல்லாமல் இருக்கிறது.

ஆனால் இந்த வருஷ பட்ஜெட்டைப் பொறுத்த வரையில் வட
11-30 a.m. ஆற்காடு ஜில்லாவைப் பற்றி ஒன்றுமே காணவில்லை. அதற்காக
வடாற்காடு ஜில்லா வாசிகளாகிய நாங்கள் வருந்த வேண்டியதாக இருக்கிறது. வைத்தியக் கல்லூரியையாவது அந்த மாவட்டத்தில் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்கலாம் என்று நினைத்து வந்தேன். அதுவும் திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்படுத்தப்படப்போகிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்படுத்துவதைப் பற்றி எனக்கு வருத்தமில்லை. ஆனால் இனி ஏதாவது கல்லூரி ஏற்படுத்துவதாக இருந்தால் அதையாவது வடாற்காடு மாவட்டத்தில் ஏற்படுத்தித்தர வேண்டும். அங்கே 30 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். எனவே இந்தச் சர்க்கார் அந்த மாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் கொஞ்சம் கவனம் செலுத்தி, தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. அந்த மாவட்டத்தில் ஜவ்வாது மலை என்ற பிரசித்திப்பெற்ற மலை இருக்கிறது. அங்கே விளையக்கூடிய சந்தன மரத்தினால் அரசாங்கத்திற்கு அதிக வருமானம் வருகிறது. அந்த மலையின் மீது 60 கிராமங்கள் இருக்கின்றன. அங்கே வைத்திய வசதி எதுவும் கிடையாது. ஆகவே அந்த மலை கிராம மக்களுக்கு வைத்திய சுகாதார வசதியை அளிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சுகாதாரத்தைப் பொறுத்த வரையில் எங்கள் நகரம் மிக மோசமாக இருக்கிறது. கொசு ஒழிக்கப்படவில்லை. இன்னும் ஓட்டல்கள் எல்லாம் சரியான முறையில் கண்காணிக்க வசதி செய்ய வேண்டும். பத்திரிகையில் வந்த செய்தியை எல்லோரும் பார்த்திருப்பார்கள். ஓட்டல்களில் கெடுக்கு உணவை உண்





பதனால் சிலர் இறந்துவிட்டார்கள் என்றால் மிகவும் கவலையளிக்கக் கூடிய விஷயமாகும் இது. ஆகவே ஓட்டல்களில் சுகாதார விதிகள், சரியான முறையில் கண்காணிக்கப்படவேண்டும். மேலும் சுகாதார இன்ஸ்பெக்டர்கள் நகர சபையில் இருந்து கொண்டிருக்கிறார்கள் ஆயினும் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. அவர்களுக்கு மாநில ரீதியில் 3 வருடத்திற்கு ஒரு முறை மாற்றல் கொடுத்து நல்ல முறையில் அங்கங்கே பணியாற்ற வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் நகரத்தைப் பொறுத்த வரையில் சுகாதார வசதி மோசமாக இருக்கிறது. பாதாளச் சாக்கடை திட்டத்தை உடனடியாக அந்த நகரத்தில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கெகாள்கிறேன். கடந்த 1½ வருஷமாக அம்மை நோய் பரவிக் கொண்டிருக்கிறது. அதைத் தடுப்பதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவில் யானைக்கால் நோய் இருக்கிறது. அதற்கு என்று வைத்திய இலாகாவில் ஒரு தனிப் பிரிவை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அதிகாரிகள் என்னமோ வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதுவரையிலும் அந்த நோயைக் குறிப்பிட்ட வகையில் தடுப்பதற்கு வழி செய்யப்படவில்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே உடனடியாக அந்த நோய் பரவாமல் இருப்பதற்கும் நோய் வந்தவர்களுக்குச் சிகிச்சை செய்வதற்கும் வழி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் எங்கள் ஜில்லாவில் தோல் ஷாப்புகள் ஏராளமாக இருக்கின்றன. அந்தத் தோல் பதனிடும் முறையில் கழிக்கப்படுகிற நீர் பாலாற்றில் கலக்கிறது. இதனால் அந்தப் பகுதியில் உள்ள பயிர்கள் நாசமடைகின்றன. கருகிப் போகின்றன. அந்த ஆற்று நீரை மக்கள் குடிக்கக்கூடிய நிலையும் இருப்பதனால், அதன்மூலம் பல வியாதிகள் ஏற்படாதிருக்க, இந்தத் தண்ணீர் அதில் போய்ச் சேராமல் இருக்க, தக்க வழிவகை செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காகப், பல மனுக்கள் கொடுத்திருக்கிறோம். பத்தாண்டு காலமாகச் சொல்லிக்கொண்டு வருகிறோம். இனி அப்படியின்றி உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் வேலூர் தலைநகரில் உள்ள ஆஸ்பத்திரிக் கட்டிடத்தை ஒட்டியே ரத்த சேமிப்புக் கிடங்கு ஏற்படுத்தப்பட வேண்டும். இப்போது ஆஸ்பத்திரிக்கு வெகு தூரத்தில் இருக்கிறது. அதனால் ஏற்பட்ட துன்ப அநுபவம் எனக்கே உண்டு. ஆகவே இப்படி ரத்தக் கிடங்கு வெகு தூரத்தில் இல்லாதபடிக்கு ஆஸ்பத்திரிக் கட்டிடத்திலேயே ஏற்படுத்த வழி செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற பட்ஜெட் விவாதத்தின்போது நான் இன்னொரு விஷயத்தையும் குறிப்பிட்டேன். டி.எம்.ஓ. இரண்டு பேர்கள் என்று ஏற்படுத்த வேண்டும். ஒருவர் ஸ்தலத்தில் இருந்து காரியங்களைச் செய்தால், இன்னொருவர் ஜில்லாவைச் சுற்றிப் பார்க்க வசதியேற்படும். அதையும் கவனிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் வேலூரில் தனியார் துறையில் ஒரு பெரிய ஆஸ்பத்திரி இயங்கிக் கொண்டிருக்கிறது. பல தேசங்களில் இருந்தும் நோயாளிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக எங்கள் தொகுதியின் பெருமை அதையே சாரும். இன்னும் அதற்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*** திரு. ஆர். சுப்பிரமணியம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மருந்தைக் காட்டிலும் அன்பும், இரக்கமும்தான் நோயைக் குணப்படுத்தும். ஆகவே அன்பு, இரக்கம் ஆகியவற்றை இயல்பாகவே உடைய தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்கள் இவ்விலாகா அமைச்சராகவும், சுகாதார இலாகா அதிகாரியாகவும் இருப்பதற்கு நான் மகிழ்ச்சி அடைவதோடு ஆஸ்பத்திரிகளிலும் அவர்கள் அதிகமாக இருக்க வசதி செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குப் பெண் டாக்டர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருப்பதனால் அட்மிஷன் செய்யும்போது பெண்களுக்கு என்று 50 சதவிகிதம் ஒதுக்க வேண்டும். முடியாவிட்டால் மூன்றில் ஒரு பாகமாவது பெண்களைச் சேர்த்தால் நலம் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மருத்துவம், சுகாதாரம் ஆகிய இனங்களில் பார்ப்போமேயானால் பத்து வருஷங்களுக்கு முன்னால் லட்சக் கணக்கில் நாம் ரூபாய் ஒதுக்கிக் கொண்டிருந்தோம். இப்போது கோடிக் கணக்கில் ஒதுக்குகிறோம். நல்லமுறையில் பலவிடங்களில் காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அதற்காகப் பாராட்டுகிறேன் என்றாலும் எங்கே போனாலும் டாக்டர்கள் இல்லை, மருந்துகள் இல்லை, நர்சுகள் இல்லையென்ற புகார்கள் இருக்கின்றன. மூன்றாவது திட்ட இறுதியில் நமக்கு 8,032 டாக்டர்கள் தேவைப்படுவார்கள். இதில் 7,725 டாக்டர்கள் கிடைக்கலாம்; பாக்கி 307 குறைவாகத்தான் இருக்கும் என்று முன்பு சொல்லப்பட்டது. இதன்படி பார்த்தால் கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கையை 600 இல் இருந்து 700 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். ஆகவே டாக்டர்கள் போதாக்குறையை ஓரளவு பூர்த்தி செய்துவிடலாமென்று நினைக்கிறேன். ஆகவே டாக்டர்கள் குறைவு என்று சொல்லுவதைவிட அவர்கள் நம்முடைய ஆஸ்பத்திரிகளில் வந்து வேலை செய்வதற்குப் போதுமான ஊக்கம் காட்டப்படுவதில்லை. டாக்டர்களுக்கு நாம் மாதம் 300 ரூபாய்



சம்பளம் கொடுக்கிறோம். கிராமங்களில் சென்று வேலை செய்யக்கூடியவர்களுக்கு இன்னும் ஒரு நூறு ரூபாய் அதிகமாக காம்பென்சேடரி அலவன்சு கொடுக்கிறோம். இது மட்டும் போதுமான பலனை அளிக்கவில்லை. ஆகவே கிராமங்களில் போய் வேலை செய்கின்ற டாக்டர்களுக்குத்தான் உத்தியோக உயர்வில் சலுகை கொடுப்பது என்று செய்தால் கிராமங்களுக்கு டாக்டர்கள் செல்ல வசதி ஏற்படும். இன்னொன்று, சிவில் அசிஸ்டெண்ட் சர்ஜனாக ஒருவர் வந்தால் அதே பதவியில் இருந்தே அவர் ஓய்வு பெற வேண்டியிருக்கிறது. நாம் செலக்ஷன் காடர் என்று 50 போஸ்ட் ஏற்படுத்துகிறோம் என்றால் 50 இடங்கள் இருக்கின்றனவா? டாக்டர்களுக்கு என்பது சந்தேகமாக இருக்கிறது. ஆகவே தாலுக்காவுக்கு ஒரு செலக்ஷன் காடர் ஏற்படுத்த வேண்டும். அதற்கு 450 ரூபாய் முதல் 600 வரை சம்பளம். இதனால் கொஞ்சம் ஊக்கம் ஏற்படலாம் என்று நினைக்கிறேன். அதோடு இவ்விலாகாவில்தான் ராஜினாமா அதிகமாக இருக்கிறது. ராஜினாமா செய்த ஒரு டாக்டரே 'அடிக்கடி மாற்றுகிறார்கள். அந்தத் தொல்லை பொறுக்காது ராஜினாமா செய்துவிட்டேன்' என்கிறார்கள். இது எவ்வளவு தூரம் உண்மை தவறு என்பதை உங்கள் முடிவுக்கே விட்டு விடுகிறேன். எனக்கு ஒன்றும் தெரியாது. வேறு ஒரு துறையில் உள்ளவர்கள் இப்படி ராஜினாமா செய்தால் வெளியில் இருந்து பிழைக்க முடியாது. என்ஜினியர்களுக்கு வேலைக்குப் போனால்தான் சம்பளம். வக்கீல்களுக்குக் கூடக் கோர்ட்டுக்குப் போகவேண்டும். ஆனால் இந்த டாக்டர்கள் வீட்டில் உட்கார்ந்திருந்தாலே போதும், இவர்களைத் தேடிக்கொண்டு வந்து பணம் கொடுக்கிறார்கள். ஆகவே வீட்டில் உட்கார்ந்தபடியே ஆயிரக்கணக்கில் சம்பாதிக்கலாம். ஆகவே இவர்களுடைய சர்விஸை நாம் இழந்துவிடாதபடி, அவர்களுக்கு சற்று ஊக்கம் காட்டும் வகையில் கருணை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் பட்டம் பெற்றவுடன் கிராமப் புறங்களில் கட்டாயமாகப் பணியாற்ற வேண்டுமென்று விதி ஏற்படுத்த வேண்டும். எப்படி வாத்தியார் டிரெயினிங் எடுத்துக் கொண்டவர்கள் இரண்டு வருஷங்கள் கண்டிப்பாக வேலை செய்யவேண்டுமென்று வைத்திருக்கிறோமோ அதே முறையை இந்த வகையிலும் கடைப்பிடிக்கவேண்டும். சர்க்கார் உதவி பெற்றுப் படிக்கக்கூடியவர்கள், சர்க்கார் கடன் பெற்றுப் படிக்கக் கூடியவர்களுக்காவது இந்தக் கண்டிஷனை இம்போஸ் பண்ணுவது நல்லது.

அடுத்தபடியாக, காச நோயைப் போக்குவதற்காக அநேக இடங்களில் டி.பி. சானடோரியங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். 'தோலிருக்க சுளை விழுங்கி' வியாதி இது என்று சொல்வார்கள். அந்த முறையில் இருக்கக்கூடிய வியாதி இது. அநேகம் பேருக்கு 'போஸ்த்மஸ்' ஆர்டர்தான் வருகிறது. பணம் இருந்தால்தான் இந்த வியாதியைப் போக்கிக் கொள்ளலாம் என்ற நிலைமை இருந்து வருகிறது. ஏழைகளுக்கு இந்த வியாதி வந்தால் அதைப்

போக்கும் முறையில், படுக்கை வசதி இல்லாமலிருப்பினும், மேல் நாடுகளில் இருப்பது போன்று 'டொமிஸிலியரி ட்ரீட்மெண்ட்'டை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் ஜில்லாவைப் பொறுத்தவரை இன்று அம்மை நோய் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அந்த நோய் ஐந்தாறு ஆண்டுகளுக்கு ஒரு தடவைதான் சொல்லக் கடுமையாக வருகிறது. முன்பு 1951-ல் இந்த நோய் கடுமையாக வந்தது. பிறகு 1957-ல் வந்தது. இப்போது 1962-இல் வந்திருக்கிறது. பீரியாடிக்காக அம்மை நோய் அதிகமாக வரும் சமயத்தில் தடுப்பு ஊசியை முன் ஜாக்கிரதையாகப் போட வேண்டும். இந்த மாதிரித் தடுப்பு ஊசி போடுவதில் தாமதம் காட்டுகிறார்கள். தடுப்பு ஊசிப்போடுவதில் சுறுசுறுப்பாக வேலை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தடுப்பு ஊசி போடுவதன் காரணமாக உண்மையிலேயே நோய் தடுக்கப்படுகிறது. ஒருவருக்கு எங்கள் ஊரில் அம்மை நோய் கண்டது. அதை ஹெல்த் இன்ஸ்பெக்டருக்குத் தெரிவித்து வீட்டில் ஒருவர் தவறாமல் எல்லோருக்கும் ஊசி போடப்பட்டது. வேறு யாருக்கும் அந்த நோய் வரவில்லை, அவரும் பிழைத்துக் கொண்டார். ஆகவே, தடுப்பு ஊசியை எல்லோருக்கும் போடுவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது 100 ரூபாய்க்கு மேல் மாத வருமானமுள்ளவர்களுக்கு இலவச வைத்தியம் கொடுப்பதில்லை. அந்தத் தொகை எப்போதோ நிர்ணயித்ததாகும். பத்து வருஷத்திற்கு முன்பு 50 ரூபாய் வருமானம் பெற்று வந்தவர்கள்கூட இப்போது 100 ரூபாய்க்கு மேல் மாத வருமானம் பெறக் கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, மாத வருமானத்தை 200, 250 என்று அடிப்படையில் உயர்த்தினால் நல்லது என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சாவூர் ஆஸ்பத்திரியைப் பொறுத்தவரை தக்கூல் வசதி போதுமானதாக இல்லை. வல்லத்திலிருந்து வாட்டர் சப்ளை ஸ்கீம் இன்னும் 'பெண்டிங்'காகவே இருக்கிறது. அதையும் சீக்கிரம் முடித்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ரா. கு. வீரப்ப செட்டியார்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பொதுச் சுகாதார வைத்திய மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 1963-64-ம் ஆண்டு கோரிக்கையானது மொத்தத் தொகையில் நான்கு சதவிகிதம் உயர்ந்திருப்பதாகக் காணப்படுகிறது. மொத்தத் தொகையில், நகர்ப்புற மருத்துவ மனைகள் பொறுத்தவரை 78 சதவிகிதமும், கிராமப் புறங்களைப் பொறுத்தமட்டில் 5 சதவிகிதமும் ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமப் புறங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகையானது மிகவும் குறைவு. நகரப் புறங்களில் அரசாங்க மருத்துவ மனைகளோடு கூட, லோகல்பாடிஸ் நடத்தக் கூடிய மருத்துவ மனைகளும் தனியார் துறையில் நடத்தப்படும்



மருத்துவ மனைகளும் இருக்கின்றன. கிராமப் புறங்களிலோ பத்து மைல்களுக்கு அப்பால்கூட மருத்துவ மனை இருப்பதில்லை. அமைச்சர் அவர்கள் கிராமப் புறங்களைக் கவனிக்கும் வகையில் அதிகப்படியான மானியத்தைக் கிராமப்புறங்களுக்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மருத்துவ மனைகளை ஏற்படுத்தியபோதிலும் டாக்டர்கள் கிடைப்பதில்லை என்ற குறைகள் இருக்கின்றன. தற்போது எடுத்துக் கொண்டிருக்கக் கூடிய நடவடிக்கைகள் மூலம் பற்றுக்குறையை நீக்க முடியாது என்பது என்னுடைய அபிப்பிராயம். இன்னும் குறுகிய காலப் பயிற்சித் திட்டங்களை ஏற்படுத்தியும், எல்.ஐ.எம். கோர்ஸை மீண்டும் கொண்டு வந்தும், ஹோமியோபதி முறையை அங்கீகாரம் செய்தும் கிராமப் புறங்களில் டாக்டர்கள் பற்றுக் குறையை ஓரளவு தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மருத்துவ மனைகளில் வேலை செய்யும் கம்பவுண்டர்களுக்கும், பார்மஸிஸ்டுகளுக்கும் ஒரேவிதமான சம்பளம் கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. பார்மஸிஸ்டுகளுக்கு 125 ரூபாயில் ஆரம்பிக்கக் கூடிய ஸ்கேலைக் கொடுக்காமல் கம்பவுண்டர்கள் சம்பளத்தையே கொடுக்கிறார்கள். பார்மஸிஸ்டுகளுக்காக சாங்ஷன் செய்யப்பட்ட ஸ்கேலில் அவர்களுக்குச் சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான தர்மபுரியைப் பொருத்த வரையில் மெடிகல் பெனிபிட்ஸ் கொடுக்கப்பட்டுள்ளன. என்.ஜி.ஓ.-க்களும் மற்றவர்களும் மேற்படி சலுகைகளைப் பயன்படுத்திக்கொள்வதில் சில குறைகள் ஏற்பட்டுள்ளனதென கேள்விப்படுகிறேன். காரணம் அவர்கள் எந்த முறையில் சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று விரிவாகத் தெரியப்படுத்தாமையால் அநேகம் பேர்கள் சிகிச்சை எடுத்துக் கொண்டு 'ரி-இம்பர்ஸ்மெண்ட்' வாங்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். என்னுடைய தொகுதியிலே உள்ள கிராமக் கர்ணம் ஒருவர் 1,300 ரூபாய் வரையில் சானடோரியத்தில் தன் மகள் சிகிச்சைக்காகச் செலவு செய்து விட்டு அந்த பில்களை 'ரி-இம்பர்ஸ்மெண்ட்' பெற முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார். இந்த மாதிரியான கேஸ்களுக்கு அரசாங்கம் விதிவிலக்கு அளித்தாவது ரி-இம்பர்ஸ்மெண்டுக்கு உத்தரவிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தர்மபுரி அரசாங்க ஆஸ்பத்திரியைப் பொறுத்தவரை, அதிகப்படியான பெட்களைப் போட கட்டிடங்கள் கட்ட ஏற்பாடு செய்வதாக அமைச்சர் அவர்கள் சென்ற வருஷத்தில் வாக்குறுதி அளித்தார்கள். நெருக்கடி நிலைமையின் காரணமாக அதை நிறுத்தி வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். மருத்துவ வசதி இல்லாமல் ஜனங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற நிலைமையில், நெருக்கடி இருந்தபோதிலும் பெட்களை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வாக்சினேஷன் செய்யவேண்டும். பஞ்சாயத்து ஆக்டில் ரீ-வாக்சினேஷன் இல்லை. நகர்ப்புறங்களில் கட்டாயப்படுத்தப்படுகிறது. ஆனால் பஞ்சாயத்துக்களில் அப்படி இல்லை. ஆகவே பஞ்சாயத்துக்களிலும், கிராமங்களிலும், இந்த ரீ-வாக்சினேஷன் கட்டாயப்படுத்தப்படவேண்டும். பின்னர் மெடிகல் காலேஜ் அட்மிஷனுக்கு வயது நிர்ணயிக்கப்பட்டிருப்பதைப் பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். பி.யூ.சி. வகுப்பில் சேரும்போது மாணவன் அல்லது மாணவிக்கு 14 வருடம் 6 மாதம் முடிந்தால் போதும் என்றிருக்கிறது. பி.யூ.சி. கழிந்து வெளியே வரும்போது 15 ஆண்டு 6-மாதம் கழிகிறது. ஆகவே மெடிக்கல் காலேஜ்க்கு மனுப் போடும்போது அவருக்கு வயது 15 வருடம் 6 மாதமாகத்தான் இருக்க முடியும். ஆனால் சட்டப்படி மெடிகல் காலேஜ் அட்மிஷனுக்கு 15 ஆண்டு 9 மாதங்கள் ஆகியிருக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அக்டோபரில் 16 முடிந்திருக்கவேண்டும். இப்படி வைக்கக் காரணம் என்னவென்று தெரியவில்லை. பி.யூ.சி. படிப்பது விட்டு சமுதாயத்தில் வைத்திய நிபுணர்களாக அவர்கள் வரலாம். ஆகவே இந்த மூன்று மாதம் குறைவாக இருப்பவர்களை மெடிக்கல் காலேஜில் சேராமல் தடை செய்வதென்றால் அது சமுதாயத்திற்கு இழைக்கும் ஒரு பெரிய குற்றமாகும். ஆக, இச்சட்டத்தினால் நாம் எதிர்காலத்தில் நிபுணர்களாக வரும் டாக்டர்களை இழக்கும் ஒரு நிலை ஏற்படுகிறது. ஆகவே இந்தச் சட்டத்தைத் திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்களிடம் இது பற்றிச் சொன்னபோது இது மெடிக்கல் கவுன்சில் செய்யவேண்டியது என்று சொன்னார்கள். அந்தக் கூட்டத்திற்கு அமைச்சர் போகவில்லையா, டயரக்டர் செல்லவில்லையா? இவர்கள் செல்லும்போது இதை ஏன் எடுத்துச் சொல்லக் கூடாது என்பது தான் என் தாழ்மையான வேண்டுகோள். பிரிட்டிஷ் ஹிஸ்டரியில் படித்திருக்கிறோம். அரண்மனைப் பூங்காவில் உள்ள ஒரு பெஞ்சில் வர்ணம் பூசப்பட்டிருந்தது; அதில் மகாராணி வந்து உட்கார்ந்து விட்டாள். அப்போது அந்த வர்ணம் அவர்கள் கவுனில் ஒட்டிக் கொண்டது. மறுநாளே ஒரு போலீஸ்காரர் அங்கு போடப்பட்டு, அந்த பெஞ்சில் யாரும் உட்காராமல் பார்த்துக்கொள்ளவேண்டுமென்று சொல்லப்பட்டது. நெடுநாள் வரை அந்த பெஞ்ச் பக்கம் காவற்காரர் இருந்து வந்தாராம். என்ன அர்த்தமில்லாத நிலை— ஆகவே பத்து ஆண்டுகளுக்கு முன்பு போட்ட சட்டத்தை வைத்துக் கொண்டு இருப்பது என்றால் என்ன அர்த்தம்? ஆகவே 15 ஆண்டு 6 மாதம் முடிந்ததும் மெடிகல் காலேஜில் சேரலாம் என்ற மாறுதலை ஏன் கொண்டு வரக் கூடாது? இதனால் மக்கள் இப்போது அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். மூன்று மாதங்கள் குறைவதால் மாணவர்கள் ஒரு ஆண்டு காத்து நிற்க முடியாமல் வேறு பயிற்சிகளுக்குப் போய்விடுகிறார்கள். ஆகவே இந்தத் தடங்கல் இல்லாது மெடிக்கல் காலேஜ் அட்மிஷன் வயதை 15 ஆண்டு 6 மாதம் என்று இருந்தால் போதும் என்ற சட்டத்தை அமைச்சர் அவர்கள், அவர்கள் காலத்திலேயே கொண்டுவரவேண்டும். முக்கியமாகப் பெண்



கள் இந்த இரண்டு இலாகாக்களிலும் இருப்பதால் இதை விரைவில் செய்துமுடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. டி. கார்ச்சா கவுடர்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த இரண்டு மான்யங்களையும் ஆதரித்து நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு நமக்கு இரண்டு வித முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒன்று கண்களுக்குப் புலப்படும் முன்னேற்றம்; மற்றொன்று கண்களுக்குப் புலப்படாத முன்னேற்றமும் ஆகும். கண்களுக்குப் புலப்படாத முன்னேற்றத்தை நாம் சுகாதாரத் துறையில் ஏற்படுத்தியிருக்கிறோம். தொத்து நோய்கள் ஒழிக்கப்பட்டிருக்கின்றன. அம்மை, ப்ளேக், காலரா, போன்றவை 1947-ல் இருந்ததைவிட இன்று பெருமளவில் குறைந்திருக்கின்றன. அதை கண்களுக்குப் புலப்படாத ஒரு முன்னேற்றம் என்று சொல்ல வேண்டும். அவ் வியாதிகள் ஒழிக்கப்பட்டு வருகின்றன. இதை மனசாட்சியுள்ள தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் ஒப்புக் கொண்டிருப்பதைக் காண நான் சந்தோஷப்படுகிறேன். முதலில் சுகாதாரத் துறையை எடுத்துக் கொண்டால் இன்று அநேக இடங்களில் ஹெல்த் ஆபீசர்களின் பதவிகள் காலியாக இருக்கின்றன. இதற்குக் காரணம் என்னவென்று யாரைக் கேட்டாலும் ஒழுங்கான பதில் கிடைப்பதில்லை. அவர்களுக்குச் சம்பளமும் அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு வேண்டிய வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன. இருந்தும் அநேக இடங்களில் ஹெல்த் ஆபீசர்கள் பதவிகள் காலியாக இருக்கின்றன. ஏன் இந்நிலை என்று பார்த்தால், எம்.பி.பி.எஸ். படித்தவர்கள் ஹெல்த் ஆபீசர்களாகப் போகவேண்டுமென்று சொன்னால் அதைப் படித்து விட்டு ஹெல்த் ஆபீசராகப் போனால் அவர்கள் தங்கள் தொழிலை மறந்து விடும் ஒரு அபாயம் இருப்பதால் யாரும் அந்தத் தொழிலுக்குப் போக அஞ்சுகிறார்கள் என்றுதான் நான் நினைக்கிறேன். நிறைய ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள் இன்று நல்ல பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அவர்களில் அநேகர் ப்ரமோஷனுக்காகக் காத்து நிற்கிறார்கள். இவர்களில் சிலர் நல்ல திறமைசாலிகள். ஆகவே அவர்களை ஹெல்த் ஆபீசர் பதவிகளுக்கு உயர்த்தினால் நல்லது என்று நான் நினைக்கிறேன். பி.எஸ்ஸி. படித்தவர்களுக்கு இரண்டு ஆண்டு சுகாதார டிப்ளமா கோர்ஸ் ஏற்படுத்தி பயிற்சி கொடுத்து அவர்களை ஹெல்த் ஆபீசர்கள் பதவிகளுக்கு அமர்த்துவது நல்லது என்று நினைக்கிறேன். அடுத்தபடியாக எராடிகேஷன் ஸ்கீமில் அமர்த்தப்படும் தொழிலாளர்கள் தினக் கூலிகளாக இருக்கிறார்கள். என் தொகுதியில் அதுபற்றி முறையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை "லாஸ்ட் கிரேட் கவர்ன்மென்ட் சர்வன்ட்ஸாக"-க் கருதி அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரிக்குக் குடிதண்ணீர்த் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதை அதிவிரைவாக அமலாக்க வேண்டுகிறேன். தர்மபுரி மகளிர் அரசாங்கப் பள்ளிக்கூடத்தில் இடவசதி இல்லாமல் சுகாதாரக் குறைவு காரணத்தால் மாணவிகளின் உடல்நிலை பாதிக்கக்கூடிய நிலையில் இருப்பதால், ஆண்கள் பள்ளிக்குக் கூடிய சீக்கிரத்தில் தனியாகக் கட்டடங்கள் கட்டிக்கொடுத்து அந்த இடத்திற்கு மகளிர் பள்ளியை மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குஷ்ட நோயைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் சரியானபடி எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதற்காக யூனிட் ஏற்பாடு செய்து குஷ்ட நோய் ஒழிப்புத் திட்டத்தை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: சட்ட மன்ற உப தலைவர் அவர்களே, இந்த மருத்துவ சுகாதார மானியக் கோரிக்கையை நான் முழு மனதுடன் ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். சிறப்பாக, இந்த மானியத்தைக் கோருகின்ற அமைச்சர் அவர்கள் திருநெல்வேலிக்கு ஒரு மெடிகல் காலேஜ் கொடுக்கிறோம் என்று சொன்னது எங்கள் மாவட்டத்திலுள்ள அத்தனை பேராலும் வரவேற்கக்கூடிய ஒன்றாகும். அதற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன். எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் சொன்னபடி, மெடிகல் காலேஜ்களில் அட்மிஷன் ஆகிறபோது அதிகப்படியான பெண்களை அனுமதிக்க வேண்டுமென்று நானும் கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு இந்தத் தரப்பில் உள்ள பெண்கள் மட்டும் கேட்டுக் கொண்டதோடு மட்டுமல்லாது, எதிர்த்தரப்பில் உள்ள ஆண்களும் பெண்களை அதிக அளவில் மெடிகல் காலேஜ்களில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கூறியிருப்பதால், அந்த ஏகோபித்த கருத்தை அமைச்சர் அவர்கள் ஏற்று, இந்த ஆண்டு மெடிகல் காலேஜ் அட்மிஷன்களில் பெண்களை அதிக அளவில் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெண் டாக்டர்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. என் பகுதியில் உள்ள மேலப்பாளையம் பகுதி முஸ்லீம்கள் நிறைந்த இடம். அங்குள்ள பெண்கள் பிற்போக்கான மன நிலை கொண்டவர்கள். அவர்கள் உடம்பில் நோய் இருந்தாலும் அதை அவர்கள் வெளியே சொல்வது கஷ்டம். அப்படி அவர்கள் அதை வெளியே சொல்லக்கூடிய அவசியம் வந்தாலும் அவர்கள் ஆஸ்பத்திரிக்குச் சென்று ஆண் டாக்டர்களிடம் சென்று காட்டுவது என்பது கஷ்டம். மேலப்பாளையத்தில் 40,000 ரூபாய் செலவில் ஒரு ஆஸ்பத்திரி கட்டி வைத்திருக்கிறார்கள். அங்கு டாக்டர் வேண்டுமென்றால் கிடைக்கவில்லை. கிடைக்கவில்லை என்ற பதிலைத் தான் ஜில்லா மருத்துவ அதிகாரி கூறுகிறார்கள். இது வேதனை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. இப்போது டாக்டர்கள் வக்கீல்கள் பயிற்சி பெற்று முடிந்தவுடன் ஒரு





போர்ட் போட்டுக் கொண்டிருந்தால் அவர்களுக்குப் போதுமான வருமானம் கிடைத்து விடுகிறது. ஆகவே அதிகமான அளவில் பெண் டாக்டர்கள் பயிற்சி பெற்று வந்தால் ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் கிடைப்பது சுலபமாக இருக்கும். இப்போது சுகாதார அமைச்சர் அவர்கள், சுகாதார டைரக்டர்கள் அவர்கள் மெடிகல் சர்வீஸஸ் டைரக்டர் இவர்கள் மூவரும் பெண்களாக இருக்கிறார்கள். ஆண்டவன் படைப்பில் உள்ள ஜீவராசிகள் அத்தனை பேரையும் ரட்சிப்பது 'மும்மூர்த்தி என்று சொல்வது உண்டு'. அதேபோல் இன்று மும்மூர்த்திகளாக இம்மூவரும் வீற்றிருப்பது இந்த இலாகாவிற்கு நல்லதொரு எதிர்காலம் இருக்கிறது, சுபீட்சத்தைக் காண வழியிருக்கிறது என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். டாக்டர்கள் பெண்களாக இருந்தால், அவர்கள் மெல்லியலார்களாக இருப்பதால் அவர்கள் அன்புள்ளத்தோடும் ஆதரவோடும் நடப்பார்கள் என்று எதிர் தரப்பு அங்கத்தினர்கள்கூடச் சொன்னார்கள். எங்கள் ஊரில் ஒரு ஆஸ்பத்திரியைத் திறக்க வந்திருந்த முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள், 'ஆஸ்பத்திரி பெரிதாக இருந்தால் போதாது, நல்லதாக இருந்தால் மட்டும் போதாது, அங்குள்ள டாக்டர்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்று'. அது ஒரு முக்கிய அம்சமாகும். மருந்து வளம் மட்டும் போதாது; டாக்டர்களுக்கு மன வளமும் வேண்டும். நோயாளிகளின் மன வளத்தைப் பெருக்க டாக்டர்களுக்குக் குண வளமும் வேண்டும். ஆகவே டாக்டர்கள் குணத்தை வளர்த்துக்கொள்ளவேண்டும். போலீஸ் இலாகா மரியாதை வாரம் கொண்டாடுகிறார்கள். எங்களை நீங்கள் உங்கள் நண்பனாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்கிறார்கள். அதேபோல் டாக்டர்கள் படித்துவிட்டு வந்துவிட்டால் மட்டும் போதாது; அவர்கள் மருந்து கொடுத்து விட்டால் மட்டும் போதாது; அவர்கள் அன்போடும், ஆதரவோடும் நோயாளிகளிடம் பழக வேண்டும். அவர்கள் அன்போடும் ஆதரவோடும் நோயாளிகளிடம் பழகினால் அவர்கள் நோய் எத்தனை கடுமையானதாக இருந்தாலும் அது போய்விடும். கடுகடுப்பாக இருக்கும் டாக்டரைப் பார்த்தால் நோய் அதிகமாகும் நிலைதான் ஏற்படும். அடுத்தபடியாக, அம்மை நோய் பற்றி அத்தனை பேர்களும் குறிப்பிட்டார்கள். முன்பெல்லாம் பனி காலத்தில் அல்லது வெய்யில் காலத்தில் வரும். தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சொல்வது உண்டு. பொங்கல் இட்டுவிட்டால் அம்மை நோய் பரவாமல் போய்விடும். அம்மை வந்து சூரையாடினாள், பொங்கல் இட்டோம் போய்விட்டாள் என்று சொல்லும் நிலை இருந்தது, அப்படி போய்க் கொண்டும் இருந்தது. ஆனால் இப்போது தலைவலி, காய்ச்சல் போல் இந்த அம்மை நோய் ஆகிவிட்டது. சின்னம்மையிலிருந்து பெரியம்மையாகி கடைசியில் சமுதாயத்தில் அது பாட்டியம்மையாகிவிட்டது என்று சொன்னால் அது மறுக்க முடியாத நிலையாகி விட்டது. அது ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு பிள்ளைக்கும் மாறி மாறி வந்து கொண்டிருக்கி[illegible] ஆகவே இதைப் போக்க, வருமுன் காக்கும் இலாகா[illegible]

கிராம சுகாதாரத்தில் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்றுதான் கூற வேண்டியிருக்கிறது. முக்கியமாக நகரப்புறங்களில்தான் ஆஸ்பத்திரிகளில் அநேக வித வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. கிராமங்களில் இருந்த ஒரே ஒரு வசதி ப்ரைமரி ஹெல்த் சென்டர்கள். அதையும் எமர்ஜன்ஸி என்று கூறித் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நிலை மாறவேண்டும். ஆகவே கிராமங்களிலும் நகர்ப்புறங்களைப்போல் வைத்திய வசதிகள் செய்து கொடுக்கத்தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு, முக்கியமாக மத்திய வேளைகளில் ஈ மொய்க்கும் பண்டங்களை விற்று, அல்வா, மிட்டாய் போன்ற பண்டங்களை விற்று அவர்களுடைய ஆரோக்கியத்தைக் கெடுக்கும் நிலை அநேக இடங்களில், முக்கியமாக கிராமங்களில் இருக்கின்றன. அதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

11-00 noon. அடுத்தபடியாக, மெடிகல் லைனில் பார்த்தால் அநேகவித முன்னேற்றங்களைக் கண்டிருக்கிறோம். அவைகளெல்லாம் கண்ணுக்குத் தெரியும் முன்னேற்றங்கள். ஆஸ்பத்திரிக் கட்டடங்கள் தமிழ் நாட்டிலே அதிகமாகியிருக்கின்றன. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பித்தபோது நம் மாநிலத்தில் 7,955 படுக்கைகள் இருந்ததானது இன்று 18,213 படுக்கைகளாக உயர்ந்திருக்கின்றது.

அடுத்தபடியாக வைத்தியக் கல்லூரிகளில் மாணவர்களை அதிகமாகச் சேர்த்துக்கொண்டு வந்திருக்கிறோம்.

அதோடுகூட, சிசு மரணம் ஒழிக்கப்பட்டிருக்கிறது. நாம் சுயராஜ்யம் அடைவதற்கு முன்னால் சிசுக்கள் அதிகமாக இறந்து கொண்டிருந்தன. அது மாறி, இப்போது சிசு மரணம் ஒழிக்கப் பட்டிருக்கிறது.

இந்தத் துறையிலே செய்யவேண்டிய சில விஷயங்களைக் கூறிக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டிலே ஹவுஸ் சர்ஜன்ஸ் விஷயமாக அநேக அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். ஹவுஸ் சர்ஜன்ஸ் என்று எடுத்துக் கொண்டால், அவர்களை 'பெய்ட்', 'அன்பெய்ட்' என்று பிரித்து, பாதிப் பேர்களுக்கு ஸ்டைஃப்பண்ட் கொடுத்து, சிலருக்குக் கொடுக்காமல் இருக்கிறார்கள். இந்த பட்ஜெட்டிலே பார்த்தால் 46,800 ரூபாய் இந்த இனத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு இதே தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. சென்ற ஆண்டு அமைச்சர் அவர்கள் எந்த விதப் பாகுபாடும் இல்லாமல் எல்லோருக்கும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று வாக்குறுதி அளித்தார்கள். அந்த வாக்குறுதி இதில் அடங்கியிருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.



அநேக அங்கத்தினர்கள் கூறியதுபோல மருத்துவக் கல்லூரிகளில் பெண்களை அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இப்போது 20 சதவிகிதம் பெண்களைச் சேர்த்துக்கொள்கிறார்கள். அதை 30 சதவிகிதமாக ஆக்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். மருந்துகளால் நோய் குணம் அடைந்தாலும், பெண் டாக்டர்கள், பெண் நர்சுகள் ஆகியவர்களுடைய புன்முறுவலால் நோயாளிகள் நோயிலிருந்து சீக்கிரமாகக் குணம் அடைவார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது.

அடுத்தபடியாக, சில இடங்களில் டாக்டர்களிடம் லஞ்சப் பழக்கம் இருக்கின்றது என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்கு எடுத்துக்கூற ஆசைப்படுகிறேன். ஏதாவது டாக்டர்கள் கையில் கொடுத்தால்தான் அந்த ஆஸ்பத்திரியிலே ஒழுங்கான விதமாக மருந்தும் கிடைக்கிறது. காலா காலத்தில் ஊசியும் போடுகிறார்கள். இந்த மாதிரியான சில குறைபாடுகள் அநேக ஆஸ்பத்திரிகளில் இருக்கின்றன என்று நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் கிராமப் புறங்களிலாகட்டும், சர்க்கார் ஆஸ்பத்திரிகளிலாகட்டும் ஏன் டாக்டர்கள் வருவதில்லை என்றால், போதிய அளவு ப்ரொமோஷனுக்கு வாய்ப்பில்லை. ஒருவர் டாக்டராகச் சேர்ந்தால் அவர் ரிட்டயர் ஆகும்வரை அப்படியே இருக்க வேண்டும். சர்வீஸ் கண்டிஷனை மாற்றித் தாராளமாகப் ப்ரோமோஷன் கிடைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

இன்னொன்று கூற ஆசைப்படுகிறேன். ஆப்பரேஷன் தியேட்டர்களில் டி.எம்.ஓ.-வுக்கு வால் பிடிக்கிறவர்கள்—எந்தெந்த டாக்டர்கள் வால் பிடிக்கிறார்களோ . . . .

**கனம் உதவி சபாநாயகர்:** 'வால் பிடிக்கிறார்கள்' என்ற வார்த்தைகளைவிட வேறு வார்த்தைகளைச் சொல்லலாம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** யார் ஆமாம் சாமி போடுகிறார்களோ அவர்கள்தான் உள்ளே போக அனுமதிக்கப்படுகிறார்கள், மற்றவர்களை 'நீங்கள் உள்ளே போகக் கூடாது' என்று சொல்லுகிறார்கள் என்ற புகார் என்னிடத்தில் வந்திருக்கிறது. அதையும் அமைச்சர் அவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக இராணுவத்திற்கு ஏறக்குறைய 150 டாக்டர்கள் நமது மாநிலத்திலிருந்து அனுப்பப் போவதாக நான் அறிகிறேன். ஏற்கனவே 50 பேர்கள் ட்ரெயினிங்குக்குச் சென்றிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. அவர்களுடைய குடும்பங்களுக்கு ஏழை மாணவர்களுக்கு என்னென்ன சலுகைகளையெல்லாம் அளிக்கிறோமோ அவைகளையெல்லாம் இராணுவச் சேவை புரியச் சென்றுள்ள டாக்டர்களுக்கு ஆறுதல் தரக் கூடிய வகையில் ஏற்படுத்துவார்கள் என்று நான் நம்புகிறேன். . . .

*** திரு. ரெ. தங்கவேலு :** கனம் சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவ, பொதுச் சுகாதார மான்யத்தின்மீது எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் கொண்டு வந்திருக்கும் வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம். நோய் வருமுன் தடுப்பது பொது சுகாதாரம். நோய் வந்த பிறகு தீர்ப்பது மருத்துவம். பொதுச் சுகாதாரம் நல்ல முறையில் நடைபெற்றால், வியாதிகள் அதிகமாக வராமல் தடுக்க முடியும். காலரா, நரம்புச் சிலந்தி முதலிய கொடிய வியாதிகள் நம்முடைய நாட்டிலே அதிகமாகப் பரவி மக்களைத் தொந்தரவுக்குள்ளாக்குகின்றன. இதற்கு முக்கிய காரணம் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி குறைவாக இருப்பதால்தான். இதுதான் இம்மாதிரி வியாதிகள், தொத்து நோய்கள், பரவக் காரணமாக இருக்கின்றது. அதற்காக அரசாங்கத்தில் குடி தண்ணீர் வசதியைப் பெருக்குவதற்குப் பல இடங்களில் குழாய்த் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அந்தத் திட்டம் நடைமுறையில் வரும்போது நிறைவேற்றப்படாமல் அநேக இடங்களில் தடையாக இருந்து கொண்டிருக்கிறது. பொதுவாக அதற்கு வேண்டிய என்ஜினீயர்கள் கிடைப்பதில்லை. ஆஸ்பத்திரிகளுக்கு எப்படி டாக்டர்கள் கிடைக்கவில்லை, லேடி டாக்டர்கள் கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறதோ, அதே மாதிரிக் குழாய்த் திட்டங்களை நிறைவேற்றப் போதிய அளவு என்ஜினீயர் கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. ஆனால் இருக்கக்கூடிய என்ஜினீயர்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்பதுதான் என்னுடைய வருத்தம். உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். திண்டிவனத்திலே இப்போது பப்ளிக் ஹெல்த் அஸிஸ்டெண்ட் என்ஜினீயர் ஒருவர் இருக்கிறார்—திரு. தண்டபாணி என்பவர்.

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் தயவுசெய்து பெயரைக் குறிப்பிடவேண்டாம்.

**திரு. ரெ. தங்கவேலு :** ஓராண்டுக்கு முன்னால் தன்னுடைய தகப்பனாரே அதிக ஜுரத்தினால் பாதிக்கப்பட்டிருந்த காரணத்தினால் லீவு கேட்டார். இது வரையிலும் அந்த லீவு என்ன ஆயிற்று என்றும் தெரியவில்லை. அவருடைய உத்தியோக நிலை என்ன என்ற ஒரு முடிவும் இல்லை. அரசாங்கத்திற்கு 4 மாதங்களுக்கு முன் மனுக்கள் கொடுத்தும் எந்த விதமான பதிலும் இல்லை. இதை நான் ஏன் வலியுறுத்துகிறேன் என்றால், இப்போது டாக்டர்களும் என்ஜினீயர்களும் தேவை என்று இருக்கும்போது இப்படிப்பட்ட திறமையுள்ள அனுபவமுள்ளவர்களை ஏன் ஒதுக்கவேண்டுமென்று தெரிந்துகொள்வதற்காகத்தான்.

அடுத்தபடியாக, சானிட்டரி இன்ஸ்பெக்டர்கள் முனிஸிபாலிட்டிகளில் இருக்கிறார்கள். அவர்களுடைய பதவி உயர்வுக்கு நல்ல முறையிலே ஏற்பாடு செய்யப்படவில்லை. 20 வருஷ அனுபவம்



உள்ளவர்கள்தான் சானிட்டரி ஆஃபீசர்களாக நியமிக்கப்பட வேண்டுமென்று விதி இருக்கிறது. சாகின்ற போது சங்கரா, சங்கரா என்பது போல, பென்ஷன் வாங்குகிற நேரத்தில், 20 வருஷம் ஆன பிறகு பதவி உயர்வு கொடுத்தால் அது அவ்வளவு உசிதமல்ல. ஆகையால், திறமை வாய்ந்தவர்களாக இருந்தால், சர்வீஸைக் குறைத்து 10, 15 வருஷத்திற்குள் இருப்பவர்களை சானிட்டரி ஆஃபீஸர்களாக நியமிக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவ நிலையங்கள் கூடுமான அளவில் நல்ல முறையில் கவனிக்கப்பட்டு வந்தாலும்கூட அநேக இடங்களில் மருத்துவ நிலையங்கள்கூடச் சுகாதாரக் குறைவாக இருக்கின்றன என்று இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். உள்ளே போகக்கூட முடியாத அளவுக்கு நாற்றம் அடிக்கும் நிலையில் பல இடங்களில் இருக்கின்றன. அதையும் கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் அமைச்சர் மஜீத் அவர்கள் மாறுவேடத்தில் சென்று அநேக இடங்களில் பார்த்தார் என்றும், கூட்டுறவு அமைச்சர்கூட முன்னறிவிப்பு இல்லாமல் அய்யனாவரம் பால் பண்ணைக்குப் போய்ப் பார்த்தார் என்றும் கேள்வி நேரத்தில் இங்கே சொன்னார்கள். அது பற்றி மிக்க மகிழ்ச்சி. நம் சுகாதார அமைச்சர் அவர்கள் அநேக ஆஸ்பத்திரிகளுக்கு முன் அறிவிப்பு இல்லாமல் போகலாம், அதிகமாக மாறுவேடம் போடவேண்டிய அவசியம் இல்லை. தாய்மாராக இருக்கிற காரணத்தினால் மருந்து வாங்கப் போகிறவர் மாதிரி சென்றால் இருக்கக் கூடிய குறைபாடுகளைத் தெரிந்து நீக்குவதற்கு வேண்டிய வசதி செய்யச் சௌகரியமாக இருக்கும். அநேக இடங்களில் ஆஸ்பத்திரிகளில் ஒரு வருஷத்திற்கு அல்லது இரண்டு வருஷத்திற்கு ஒரு தடவை சுண்ணாம்பு அடிக்கிறார்கள். அந்த இடங்களெல்லாம் ரொம்பவும் ஆபாசமாக இருக்கின்றன. மந்திரி வருகிறார் என்றால் உடனே சுண்ணாம்பு அடித்து விடுகிறார்கள். அதைக் கண்டு சுத்தமாக இருக்கிறது என்று அவர்கள் கருதுகிறார்கள். அந்த மாதிரி இல்லாமல் உடனுக்குடன் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*** திரு. கோ. ராஜாராம் :** மதிப்பிற்குரிய மன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய மான்யக் கோரிக்கைகளை ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றை எடுத்துக்கூற விரும்புகிறேன்.

நம் மாநிலத்திலே, மருத்துவத் துறையிலே நல்ல வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. அதன் விளைவாக சுகாதாரத் துறையிலும் நல்ல மாற்றமும் மலர்ச்சியும் ஏற்பட்டிருக்கின்றது என்பதை நல்ல மனம் படைத்த அனைவரும் ஏற்றுக்கொள்ளுவார்கள். ஆனால், மருத்துவத் துறையிலும், சுகாதாரத் துறையிலும் கண்டுள்ள வளர்ச்சியும் மலர்ச்சியும் மேலும் பெருகவேண்டும், மேலும் சிறப்புற வேண்டும் என்பதிலே அனைவருக்கும் ஆசையும் ஆர்வமும் இருப்ப

தில் ஆச்சரியமில்லை. அப்படி ஆசைப்படுகிற எல்லோரையும் திருப்திபடுத்தும் விதத்தில் அமைச்சருடைய அறிக்கை அமைந்திருப்பது போற்றுதற்குரியது, பாராட்டுக்குரியது.

மருத்துவத் துறையில் வளர்ச்சி ஏற்படவேண்டும் என்று சொன்னால் மருத்துவ மனைகள் பெருகவேண்டும். மருத்துவ மனைகள் பெருகிவிட்டால் மட்டும் போதாது. நோயாளிகளை அதிக அளவில் ஏற்றுக்கொள்ளும் அளவில் வசதிகள் பெருகவேண்டும். படுக்கைகளின் எண்ணிக்கை அதிகரிக்கவேண்டும். அங்கு பணி புரிகிற ஊழியர்கள், டாக்டர்கள், நர்சுகள், மிட்வொய்ஃப்புகள் ஆகியவர்களின் எண்ணிக்கை உயரவேண்டும், அதிகரிக்கவேண்டும். அப்படி அவர்களுடைய எண்ணிக்கை உயரவேண்டுமானால், அவர்களை உருவாக்குகின்ற மருத்துவக் கல்லூரிகள், மருத்துவப் பள்ளிகள், பயிற்சி நிலையங்கள் ஆகிய இவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கும்போது இந்த மான்யத்தில் கோரியுள்ள தொகையில் பெரும் பகுதி, 559 லட்சம் ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 78 சதவீதம் மருத்துவ மனைகளுக்காகவும், டிஸ்பென்ஸரிகளுக்காகவும் ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத் தகுந்தது. அதைப்போல மொத்தச் செலவில் 11 சதவிகிதம், ரூ. 72 லட்சம் மருத்துவக் கல்லூரிகளுக்காகவும், பள்ளிகளுக்காகவும் ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். 600 மாணவர்களை மட்டும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் இருந்த மருத்துவக் கல்லூரிகள் இன்றையதினம் 700 மாணவர்களை ஏற்றுக்கொள்ள முன்வந்திருப்பதும், புதியதாக கல்லூரி திறக்க இருக்கிற செய்தியும், நெருக்கடி நிலைமையை முன்னிட்டு ஹவுஸ் ஸர்ஜன்ஸ் இண்டர்னீஸ் சம்பந்தமாக செய்யப்பட்ட சில மாற்றங்களும் சிறப்பான அம்சங்களாகும்.

மருத்துவக் கல்லூரிகளைப் பற்றி குறிப்பிடுகையில், பொதுவாக மாவட்ட ரீதியில் மருத்துவக் கல்லூரிகளில் இடம் பெறுகிற ஒரு விதத்தில் குறைபாடு ஒன்றினை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாவட்ட ரீதி என்று கூறப்படும்பொழுது, என் மாவட்டத்தைப் பொறுத்தவரை பிற மாவட்ட மாணவர்கள் தென் ஆற்காடு மாவட்டத்தில் இருப்பதாகக் கூறிக்கொண்டு, அந்த மாவட்ட ரீதியில் இடம் பெறுவதாக செய்திகள் கிடைத்திருக்கின்றன. பிற மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள் கல்லூரியில் இடம் பெறுவது பற்றி எனக்குக் கசப்பு கிடையாது. ஆனால், உண்மையில் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த பரிதாபகரமான மாணவர்கள் அந்தக் காரணத்தினால் மருத்துவக் கல்லூரியில் இடம் பெறமுடியாமல் போய்விடுகிறது. இது பொதுப்படையான ஒரு குற்றச்சாட்டாக இருந்தாலும்கூட, அமைச்சர் அவர்கள் அனுதாபத்துடன் இந்தப் பிரச்னையை அணுகவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் சென்றமுறைகூடக் கூறியிருக்கிறேன். படுக்கை வசதி பற்றி. ஆஸ்பத்திரிகளிலுள்ள படுக்கை வசதிகளை அதிகரிப்பதற்கு அவ்வப்பொழுது நடவடிக்கை எடுத்துக்கொண்டு



வரப்படுகிறது. இன்றையதினம் அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்தால் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத் துவக்கத்தில் 8,000 படுக்கைகளாக இருந்தது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 12,000 படுக்கைகளாக உயர்ந்து, தற்பொழுது 18,000 படுக்கைகளாக உயர்ந்திருப்பது மாபெரும் வளர்ச்சி. அந்த வளர்ச்சி இன்னும் அதிகரிக்கவேண்டுமென்பது என்னுடைய ஆசை. ஆஸ்பத்திரிகளிலே உள்ள நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்கு, ஆங்காங்கு பிரைமரி ஹெல்த் சென்டர்களை நிறுவினால் அதைச் சமாளிக்க முடியும் என்று குறிப்பிடப்பட்டாலும்கூட, நெருக்கடி நிலைமையின் காரணமாக, பிரைமரி ஹெல்த் சென்டர்கள் புதியதாகத் திறக்கப்படமாட்டாது என்று அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லப் போனால், என்னுடைய தொகுதியில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர் கூடக் கிடையாது. நெருக்கடி நிலைமை காரணமாக அந்தக் கொள்கை வகுக்கப்பட்டிருப்பதினால் நான் இந்தப் பிரச்னையை வலியுறுத்தவில்லையென்றாலும் கூட, என்னுடைய தொகுதியில் ஒரு பிரைமரி ஹெல்த் சென்டரையாவது ஆரம்பிக்க வழிவகை இருக்குமா என்பதை ஆராய்ந்து பார்க்குமாறு அமைச்சர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

மருத்துவத் துறையில், குடும்பக் கட்டுப்பாடு முறை சிறப்பான ஒன்றாகும். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் வெற்றியைத் தான் பொறுத்திருக்கிறது நாட்டினுடைய சிறப்பும், வளமும். உற்பத்தி குறைந்தால் தான் நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்படும். உற்பத்தியைக் குறைக்கவேண்டுமென்று நான் சொல்லும்பொழுது அதைத் தவறாகக் கருதவேண்டாம். நான் வீட்டிலே உருவாகிற பிரஜா உற்பத்தியைப்பற்றித் தான் குறிப்பிட்டேன். உற்பத்தி பெருகவேண்டும். அப்படிக் கூறும்போது நாட்டில் உற்பத்தி பெருகுவதற்குப் பதிலாக வீட்டில் உற்பத்தி பெருகுவதன் காரணமாகத் தான் பொருளாதார சிக்கல்கள் ஏற்படுகின்றன. வீட்டில் உற்பத்தி குறைந்து, நாட்டில் உற்பத்தி பெருகினால், இந்த நிலையைச் சமாளிக்க முடியும். குடும்பக் கட்டுப்பாடு திட்டம் பற்றி அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கை நமக்கு நல்ல நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கிறது. கருத்தடையில் பல ஆயிரக்கணக்கான மக்கள் தங்களை ஆட்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். கருத்தடை செய்துகொண்டால் போதுமா? பயன் கிட்டியதா? என்று யாரும் கேட்கமாட்டார்கள் என நம்புகிறேன். காரணம் சில நாட்களுக்கு முன்னால் இதே மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தந்த புள்ளிவிவரப்படி, இந்த மாநிலம் பிற மாநிலங்களைவிட மக்கள் தொகை அதிகரிப்பதைக் கட்டுப்படுத்துவதிலே முன்னேறியிருக்கிறது என்று தெரியவருகிறது. இந்தத் திட்டம் இன்னும் தீவிரமாக செயல்படுத்தப்படவேண்டும். எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் கூறியதுபோல. . . (மணி அடிக்கப்பட்டது).

**திருமதி டி. என். அனந்தநாயகி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் பேச நான் ஆசைப்படுகிறேன். நான் முன்னமேயே கூறியிருக்கிறேன். சுகாதாரத் துறையையும், மருத்துவத் துறையையும் ஒருங்கே இணைப்பது அவ்வளவு அழகாக இருக்காது என்று கூறிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். ஏதோ இப்பொழுது இந்த இரண்டு இலாக்காக்களுக்கும் இடையிலே இணைப்பு முறைவாக இருப்பதன் காரணமாக அந்த இரண்டு துறைகளையும் ஒன்று சேர்க்கவேண்டுமென்று சொல்வது, அம்மாதிரி இணைப்பினால் ஏற்படும் நன்மைகளைவிடத் தீமைகள் தான் அதிகமாக ஏற்படும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகையினால், தயவு செய்து அமைச்சர் அவர்களும், அரசாங்கமும் இதை உணர்ந்து, இதற்காக ஒரு கமிட்டியைப் போட்டு நேரத்தை வீணாக்காமல், முன்னதாக இந்தத் துறைகளை மேலும் முன்னேற்றம் அடையச் செய்வதற்கு என்னென்ன செய்யவேண்டுமென்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இப்பொழுது இரண்டு பெண்மணிகள் இந்தத் துறைகளுக்கு அதிகாரிகளாக இருக்கிறார்கள். அதற்குப் பதிலாக இரண்டு துறைகளையும் இணைத்து, இரண்டு பேர்களுக்கும் மேலாக வேறு ஒருவரை அதிகாரியாகப் போட்டால், இணைப்பு என்ற காரணத்தினாலே, இரண்டு பேர்களுக்கும் தனித்தனியாக இப்பொழுது இருக்கிற அதிகாரங்கள் இல்லாமல், அவர்களுக்கு இருக்கிற ஸ்டேட்டஸையும் குறைத்து, அவர்களுக்கு மேலே ஒரு அதிகாரியைக் கொண்டு போட்டால், எதற்கு எடுத்தாலும் அவரைக் கேட்டுக்கொண்டிருக்கவேண்டிய நிலைமை தான் ஏற்படும். அவர்களுக்குக் கீழே எத்தனை அதிகாரிகள் வேண்டுமானாலும் போடுங்கள், டெப்யூடி டைரக்டர்களைப் போட்டுக்கொள்ளுங்கள், பரவாயில்லை. அவர்களுக்கு மேலே ஒரு அதிகாரியைப் போட்டால், அவர்களுக்குக் கீழே பல அதிகாரிகளை வைத்துக்கொண்டு தலைமை அதிகாரியாக இருந்து அந்த இலாகாவை உரிமையோடு நிர்வகிக்கும் சமயத்தில் அவர்கள் மூளை வேலை செய்வதுபோல், அவர்கள் வேறு ஒருவருக்குக் கீழே வேலை செய்யும்பொழுது மூளை வேலை செய்யாது. ஆகவே, இரண்டு இலாகாவையும் இணைக்கவேண்டுமென்ற எண்ணத்தை விட்டு விட்டு, இரண்டு இலாகாவையும் விஸ்தரிக்கும் வகையிலே, வேலைகளைப் பகிர்ந்து கொடுக்கும் அளவிலே, அவர்களுடைய வேலையைக் குறைக்கும் அளவிலே, அவர்களுக்குக் கீழே இன்னும் 4 அதிகாரிகளைப் போடுங்கள். மேலும் இணைப்பு என்று பேசிக்கொண்டிருப்பது நல்லது அல்ல, நாட்டு மக்களுக்கு உகந்தது அல்ல என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மருத்துவக் கல்லூரிகளைப் பொறுத்த மட்டில் ஒரு தனி அதிகாரியைப் போட்டு விடலாம். அதேமாதிரி ஆஸ்பத்திரிகளுக்கென்று ஒரு தனி அதிகாரியைப் போட்டு விடலாம். அப்படிச் செய்தால் இன்னும் வேலைகள் தீவிரமாகவும், துரிதமாகவும் நடக்கும். மாவட்ட ஆஸ்பத்திரிகளில் குறைந்தது 100 பெட்கள், 75 பெட்களாவது இருக்க வேண்டும். அந்த அளவுக்கு படுக்கை வசதியை விஸ்தரிக்க



வேண்டும். மேலும், இப்பொழுது டி.எம்.ஓ.-க்கள் தலைமை ஆஸ்பத்திரியின் தலைமை அதிகாரியாகவும் இருந்து கொண்டு, மாவட்டத்திலுள்ள மற்ற ஆஸ்பத்திரிகளையும் கண்காணிக்கும் அதிகாரியாகவும் இருக்கிறார்கள். இரண்டு வேலைகளையும் அவரே கவனிக்கவேண்டியது என்றால், மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இதிலே கூட இந்த இரண்டு வேலைகளையும் இணைப்பது வரவேற்கத்தக்கது அல்ல. வேலூர் தொகுதி அங்கத்தினர்கூட இதைப்பற்றி எடுத்துக்கூறினார். இரண்டு டி.எம்.ஓ.-க்களைப் போடவேண்டும். ஒருவர் தலைமை ஆஸ்பத்திரியை பார்த்துக்கொள்வதற்கும், மற்றொருவர் மாவட்டத்திலுள்ள மற்ற மருத்துவ மனைகள் சம்பந்தமான வேலைகளைப் பார்ப்பதற்கும், ஆக இரண்டு அதிகாரிகள் போடுவது சிறந்த ஏற்பாடாக இருக்கும். அப்படியிருந்தால் பிரைமரி ஹெல்த் சென்டர்களில் மருந்து இருக்கும், டாக்டர்கள் இருப்பார்கள், மக்களுக்கும் அதிக நம்பிக்கை பிறக்கும். ஆகவே, இம்மாதிரி பிரிவு வேலைகளில் அக்கறை காட்டுவது அவசியம் மட்டுமல்ல, அவசரமும் கூட என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இங்கு இருக்கும் ஆஸ்பத்திரிகளில் ஸ்பெஷல் வார்டு கிடைக்காத கடஷ்டத்தைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மந்திரி சிபார்சு தேவை, அவருடைய சிபார்சு தேவை, இவருடைய சிபார்சு தேவை என்று சொல்லக்கூடிய அளவுக்கு நெருக்கடி இருக்கிறது. ஸ்பெஷல் வார்டு கிடைப்பதற்குள்ளே உயிரேபோய் விடுகிறது. ஸ்பெஷல் வார்டு கொடுப்பதில் இன்னும் அதிக அக்கறை காட்டவேண்டும். வேண்டுமானால், பணம் அதிகமாக வாங்கிக்கொள்ளலாம். ஸ்பெஷல் வார்டுக்குப் போகிறவர்கள் அதிகமாகப் பணம் படைத்தவர்கள். அவர்களிடமிருந்து பணத்தை வாங்கி பாட்டாளி மக்களுக்கு செலவழிக்கக்கூடிய நிலைமையை பயன்படுத்திக்கொள்ளக்கூடிய சூழ்நிலையை உண்டாக்கவேண்டுமே தவிர, ஸ்பெஷல் வார்டு வாங்குவதென்றால் இவ்வளவு கஷ்டம் இருக்கக்கூடாது. செல்வாக்கின் உச்ச நிலையில் தான் ஸ்பெஷல் வார்டு வாங்க முடியும் என்று அந்த அளவுக்கு நிலைமை இருப்பது நல்லது அல்ல. பணக்காரர்களுக்காக எத்தனையோ நர்ஸிங் ஹோம்கள் இருக்கின்றன என்று சொல்லலாம். இருந்தபோதிலும், சிகிச்சைக்கு வேண்டிய சில பெரிய ஸ்பெஷல் அபாரடஸ்களெல்லாம் பெரிய மருத்துவ மனையில்தான் இருக்கின்றன. ஆகவே, ஸ்பெஷல் வார்டு வசதியை மேலும் அதிகப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்ய முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு செய்தால் அந்தப் பணத்தைக்கொண்டு ஏழை மக்களுக்கு மேலும் வசதிகள் செய்து தருவதற்கு அனுகூலமாக இருக்கும்.

மக்கள் தொகை அதிகரித்துக்கொண்டே போகிறது. அது போன்று சென்னையில் நோய்களும் புதிது புதிதாக வளர்ந்து கொண்டே போகின்றன. புதிய புதிய நோய்கள் வந்து தொல்லை கொடுக்கும்படியான நிலைமை நிலவிவருகிறது. இப்படிப் பட்ட நிலையிலே—(மணி அடிக்கப்பட்டது). "ஸோ [illegible]

ஹாஸ்பிடல் கான்" தென் சென்னைக்கு தனியாக ஒரு பெரிய ஆஸ்பத்திரி அமைக்கப்படவேண்டும். இப்பொழுதிருக்கும் ஜெனரல் ஆஸ்பத்திரி மட்டும் போதாது. கோடம்பாக்கத்தில் 'டிஸேபில்' ஆனவர்களுக்காக ஒரு ஆஸ்பத்திரி ஆரம்பிக்க இருக்கிறார்கள். இருந்தாலும் கூட தென் சென்னைக்கு என்று தனியாக ஒரு பெரிய ஆஸ்பத்திரி ஏற்படுத்தினால் ஜெனரல் ஆஸ்பத்திரியில் இவ்வளவு நெருக்கடி இருக்காது. டாக்டர்களும் மேலும் அக்கறையோடு நோயாளிகளைக் கவனிக்கக்கூடும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

'பைனல் இயர்' ஜி.ஸி.ஐ.எம். மாணவர்களுக்கு டி.எம். அண்டு எஸ். என்று டிப்ளமா கொடுக்கப்போகிறார்கள். இவர்களை எம்.பி.பி.எஸ். கோர்ஸில் சேர்க்காமல், இவர்களுக்கு எம்.பி.பி.எஸ்.-க்கு சமமாக இருக்கக்கூடிய அளவுக்கு டி.எம். அண்டு எஸ். டிப்ளமா கொடுக்கப்போகிறார்கள். இதற்கு முன்னால் ஜி.ஸி.ஐ.எம். பாஸ் செய்துவிட்டு அரசாங்க வேலையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இது ஏதாவது புதிய வேதனையைத் தந்துவிடுமோ என்பதை சற்று ஆலோசிக்கவேண்டும். முன்னாலேயே ஜி.ஸி.ஐ.எம். பாஸ்செய்துவிட்டு அஸிஸ்டெண்டு சர்ஜனாக இருப்பவர்களும், அவர்களுடைய அனுபவத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, புதியதாக டி.எம். அண்டு எஸ். டிப்ளமா வாங்குகிறவர்களுக்குச் சமம் என்ற நிலைமை இருந்தால்தான் நலமாக இருக்கும். 50, 50 பேர்களாகப் படிக்க வேண்டும். இப்பொழுதே பாஸ் செய்தவர்கள் 200, 300 பேர்கள் இருக்கிறார்கள். எந்தக் காலத்தில் 50, 50 பேர்களாகப் படித்து முடிவது? ஆகையினால், டி.எம். அண்டு எஸ். டிப்ளமா பெறும் மாணவர்களால் இதற்கு முன்னாலே பாஸ் செய்தவர்களுக்கு எந்த விதமான பாதகமும் ஏற்படக்கூடாது. முன்னால் பாஸ் செய்தவர்களுக்கு 3 வருஷ அனுபவம் இருந்தால், அதை வைத்துக்கொண்டு அவர்கள் டி.எம். அண்டு எஸ். டிப்ளமா வைத்திருப்பவர்களுக்கு சமம் என்று சொல்லக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுத்தினால், இந்தக் கஷ்டம் தீர்ந்துவிடும் என்று நினைக்கிறேன்.

மேலும், எம்ப்ளாயீஸ் ஸ்டேட் இன்ஷூரன்ஸ் ஸ்கீமை பாமிலிக்கும் எக்ஸ்டென்டு செய்திருப்பது வரவேற்கத்தக்கது என்று கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. என். ராமசாமி உடையார்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது பல வியாதிகள் ஊசியால் தீர்ந்து விடுகின்றது என்று கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு எடுத்துக்காட்டாக நமது சுகாதார அமைச்சர் அவர்கள் விளங்குகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய சீரிய தலைமையிலே இந்த இலாகாவில் பல அரிய சாதனைகளைச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது. அநேக இடங்களில் புதிய ஆஸ்பத்திரி



களும், ஆஸ்பத்திரி விஸ்தரிப்பு வேலைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இப்பொழுது அரிய பெரிய திட்டங்களைப் போட்டு, வைசூரி, காலரா போன்ற கொடிய வியாதிகளை கட்டுப்படுத்தியிருக்கிறார்கள். மலேரியா வியாதியை நமது தமிழ் நாட்டில் நல்ல முறையில் கட்டுப்படுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. மற்ற மாநிலங்களிலே உள்ளவர்கள்கூட இங்கு வந்து தெரிந்துகொண்டு போகிறார்கள். எல்லா அங்கத்தினர்களும் வைசூரி தமிழ் நாட்டிலே அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். மலேரியா ஒழிப்புத் திட்டத்தை வகுத்து வெற்றி கண்டதுபோல, வைசூரிக்கும் ஒரு ஒழிப்புத் திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்ற தேசங்களில்கூட வைசூரி ஒழிப்புத் திட்டத்தைக் கொண்டு வந்து வெற்றி கண்டிருக்கிறார்கள். அந்த முறையில் வைசூரியை ஒழிப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம குடி தண்ணீர் திட்டத்தைப் பற்றிப் பல அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீருக்கு ஏற்பாடு செய்தால் பல வியாதிகள் வராமல் இருப்பதற்கு வழி ஏற்படும். யானைக்கால், நரம்புச் சிலந்தி போன்ற வியாதிகள் குடி தண்ணீரால்தான் ஏற்படுகின்றன. பொதுவாக, கடற்கரைப் பகுதிகளிலே யானைக்கால் வியாதி இருந்துகொண்டிருக்கிறது. பாதுகாக்கப்பட்ட தண்ணீர் கொடுத்து, நல்ல முறையில் இந்த வியாதியை ஒழித்திருக்கிறார்கள். அதைப் போன்று எல்லா கிராமங்களிலும் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் கொடுப்பதற்கு முயற்சி செய்தால், பல வியாதிகள் வராமல் இருப்பதற்கு ஏதுவாகும். சேலம் ஜில்லாவைப் பொறுத்த வரையில் இந்தக் குடி தண்ணீர் பிரச்னை ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. அங்கு 120 அடி ஆழத்திலே கிணறுகள் இருக்கின்றன. அவ்வளவு ஆழத்திலிருந்து தண்ணீர் இறைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதனால் சேலம் ஜில்லாவிலுள்ளவர்களுக்குப் பெண்கள் கொடுப்பதற்குப் பயப்படுகிறார்கள். (சிரிப்பு.) இவ்வளவு ஆழமான கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைக்க முடியாது. ஆகவே இப்படிப்பட்ட இடங்களுக்கு முதல் சலுகை கொடுத்து, இந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப் புறத்திலுள்ள ஆஸ்பத்திரிகளைப் பற்றிச் சொன்னார்கள். எல்.எம்.பி. போன்ற குறுகிய காலப் பயிற்சியை ஏற்படுத்தி, டாக்டர்களைப் பெருக்கி, கிராமப் புறங்களுக்கு அனுப்பினால் நலமாயிருக்கும். நகர்ப் புறங்களில் எல்லாம் டாக்டர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னாலும் கூட, அவர்கள் கிராமப் புறங்களுக்குச் செல்ல முடிவதில்லை. நகரங்களில் உள்ள டாக்டர்களை நாம் நிர்வாகத் துறையில் அதிகமாக ஈடுபடுத்துகிறோம். பெரிய ஆஸ்பத்திரிகளில் இருக்கிற ஆர்.எம்.ஓ. போன்றவர்களுக்கு நிர்வாக சம்பந்தமான வேலைகள் அதிகமாக இருப்பதால் மருத்துவத் துறையிலே அதிக கவனம் செலுத்த முடிய

வில்லை. டி.எம்.ஓ.க்குக் கூட நிர்வாக சம்பந்தமான வேலை தான் அதிகமாக இருக்கிறது. ஆகவே, தேர்ச்சி பெற்ற அவர்களுடைய சேவை பெரிய ஆஸ்பத்திரிகளிலே பிரயோசனப் படுவதில்லை. இதுபோன்ற விஷயங்களில் அரசாங்கம் கவனம் செலுத்தி, இன்னும் அதிகமான அளவுக்கு டாக்டர்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மொபைல் ஆஸ்பத்திரிகளை ஏற்படுத்தி மலை ஜாதி வகுப்பினருக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்கலாம். மொபைல் ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தி, 10 நாட்களுக்கு ஒரு தடவை குறிப்பிட்ட கிராமப் பகுதிகளுக்குப் போய் வைத்திய வசதி செய்து கொடுப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு நம்முடைய ஆளுங் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல, சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் • என்ற முறையைப் பின்பற்றி, என்னுடைய முதல் முயற்சியாக, இந்த மன்றத்திலுடைய விலை மதிக்க முடியாத நேரத்தை உணர்ந்து, இந்த மருத்துவ, சுகாதார மானியத்தின் மீது, என்னுடைய கருத்துக்களைச் சொல்லி சில தகவல்களைக் கேட்கலாம் என்று நினைக்கிறேன்.

ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் 500 படுக்கைகள் கொண்ட பிளாக் ஏற்படுத்துவதைப் பற்றி அமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்திருந்தார்கள். அதைப் பற்றி விவரம் ஒன்றும் இல்லை. இப்பொழுது அது என்ன நிலையில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து சொல்லக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறார்கள். மேலும், தென் சென்னையில் ஒரு ஆஸ்பத்திரி நிறுவுவது சம்பந்தமாக அவர்கள் வாக்குறுதி அளித்திருந்தார்கள். கனம் பெண் உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள், 'வடக்கு தேய்கிறது, தெற்கு வாழ்கிறது' என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள், தென் சென்னைக்கு ஒரு ஆஸ்பத்திரி வேண்டுமென்று ஒரு புதிய தோற்றத்துடன் அந்தப் பிரச்னையை எடுத்துச் சொன்னார்கள். உண்மையிலே அது ஒரு சந்தோஷமான விஷயம். தென் சென்னைக்கு அவசியமாக ஒரு பெரிய ஆஸ்பத்திரி தேவைப்படுகிறது. எல்லோருடைய கோரிக்கையும் அதுவே. கனம் உறுப்பினர் அவர்கள் வட சென்னை உறுப்பினரானாலும் ஆயிரம் விளக்குத் தொகுதியில்தான் வசிக்கிறார்கள் என்பதும் ஒரு காரணம். இன்டெர்னிக்கள், ஹவுஸ் சர்ஜன் ஆகியோருக்கு சலுகைத் தொகை கொடுக்கப்படுவதில்லை. பீகார், பம்பாய், ஒரிசா மாநிலங்களைப் போன்று எல்லோருக்கும் சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது ஒரு ஆளுக்கு ஒரு வருடத்திற்கு மருத்துவச் செலவுக்காக ரூபாய் 1.90 லிருந்து ரூபாய் 2.10 வரை செலவழிப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது கடலில் கரைத்த பெருங்காயம் மாதிரிதான். அதேபோல் எம்.பி.பி.எஸ். விற்கான





சீட்டுகளை 600-லிருந்து 700 ஆக உயர்த்தி இருக்கிறார்கள். நமது மதிப்பிற்குரிய அமைச்சர் திரு. கக்கன் அவர்கள் கூறியது போல், காங்கிரசாட்சியின் சட்டங்களாலும் சுயமரியாதை இயக்கத்தின் சமுதாய புரட்சியாலும் தீண்டாமை ஒழிந்துவிட்டது என்றாலும் கூட, நமது ஆஸ்பத்திரிகள் ஏழை மக்களுக்கு தீண்ட முடியாத இடங்களாகவே இருக்கின்றன. இதில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். 3½ கோடி மக்கள் வாழ்கிற நம் நாட்டில் 18,213 படுக்கைகள்தான் இருக்கின்றன. அது போதுமானதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். குடும்பக் கட்டுப்பாட்டைப் பொறுத்த வரையில் அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரங்களிலிருந்து வெளியிடங்களில் அவ்வளவாகப் பரவவில்லை என்று தெரிகிறது. சென்னையில் மட்டும் 20,233 ஆபரேஷன்கள் நடந்திருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். வெளியிலேயும் பரப்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

உணவுக் கலப்படத்தைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது கனம் அமைச்சர் அவர்கள்—

" In these days food poisoning cases have been on the increase and the Government have a marol responsibility on the interest of public health of the State, to put down such unhealthy practices, completely, and impose deterrent punishments, wherever such punishments are called for. "

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

**You have not only a moral responsibility but a legal responsibility**

இன்றைய தினம் பார்த்தால் பெரிய அளவில் உணவுக் கலப்படம், மருந்துக் கலப்படம் செய்யப்படுகிறது. லாபகரமான அளவில் கலப்படம் செய்யப்படுகிறது. இதை ஒரு பெரும் தொழிலாகவே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இதை கண்டுபிடிக்காமல் விட்டு விட்டால் மனித சமூகத்தில் பெரிய தீங்கு விளைவிக்கக்கூடியதாக ஏற்படும். கலப்படத்தைப் பிடித்து தக்க தண்டனை கொடுக்கா விட்டால் மனித உயிருக்கே ஆபத்து விளைவிக்கக்கூடியதாக இருக்கிறது. கலப்படத்தை சரியான முறையில் கண்டு பிடிக்காத தால்தான் பல கேடுகள் வருகின்றன. அவர்களைக் கண்டுபிடித்து தக்க முறையில் அவர்களை தண்டிக்க வேண்டியதாக இருக்கிறது. குறிப்பாகச் சொன்னால் இப்படிக் கலப்படம் செய்கிறவர்கள் திரைமறைவிலே இருக்கும் திருடர்களாக இருக்கிறார்கள். இவர்கள்தான் பொதுஜன விரோதி நம்பர் ஒன்று என்று நான் கூறுவேன். ஆகவே, திரை மறைவிலே இருக்கும் திருடர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தக்க தண்டனை விதிக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். 12-30 p.m.

அடுத்தபடியாக இந்த நகரம் சம்பந்தமாக குடி தண்ணீர் பிரச்னையைப் பற்றிக் குறிப்பிட வேண்டியதாக இருக்கிறது

"It is not a challenge to town planers alone but it is a challenge to the Ministry. It is a challenge to the Health Minister. It is a challange to all." சென்னை நகரத்தைப் பொறுத்த மட்டில், குடி தண்ணீர்ப் பிரச்னை பெரிய பிரச்னையாக இருக்கிறது. ஏழு லட்சம் பேர் இருக்கக்கூடிய காலத்தில் போடப்பட்ட திட்டம் இப்பொழுது இருபது லட்சம் பேர்கள் இருக்கக்கூடிய காலத்தில் நீடித்து வருகிறது. அதனால் இப்பொழுது இருபது லட்சம் பேர்கள் இருக்கக்கூடிய காலத்தில் குடி தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்க்க முடியவில்லை. இன்றைக்கு இயந்திர வடிகட்டிகளை அமைப்பதற்கு என்று பணம் ஒதுக்கி இருக்கிறார்கள். அதைக் கண்டு சந்தோஷப்படுகிறோம். இதற்கு முன்னால் பத்து ஆண்டு காலமாக காங்கிரஸ் கட்சி நகரசபை நிர்வாகத்தை நடத்திக் கொண்டு வந்ததிலிருந்து இதைப்பற்றி வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். அப்போதே அமைத்திருந்தால் 50 லட்சம் ரூபாய் மீதமாகியிருக்கும். பூண்டி ரிசர்வாயரிலிருந்து ரெட் ஹில்ஸ் வழியாக குர்ட்டலையாறுக்கு தண்ணீர் கொண்டு வருவதைப்பற்றி திட்டம் இருக்கிறது.

"In order to save this loss, the Government have approved a proposal for the construction of an open-lined channel at an estimated cost of Rs. 85 lakhs and have asked the Commissioner, Corporation of Madras, to submit plans and estimates."

என்ற ஒரு திட்டத்தைச் சொல்லி இருக்கிறார்கள். இது ஒரு கோடி ரூபாயில் முடிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. அப்பொழுது தண்ணீர் கொண்டு வருவதாக இருந்தால் அதை திறந்தவெளி வாய்க்காலின் மூலமாகக் கொண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. இதற்கு ஒரு கோடி ரூபாய் வரையிலும் தேவைப்படும் என்றும் சொல்லப்படுகிறது. ஏற்கெனவே நகர சபை இது சம்பந்தமாக ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கிறது. காண்டுயிட் பைப் மூலமாகத் தண்ணீரைக் கொண்டுவரவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே காண்டுயிட் பைப் மூலமாக இதைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போது போட்டிருக்கும் திறந்த வாய்க்கால் திட்ட உத்தரவை திருப்பப் பெறவேண்டும். திறந்த வாய்க்கால் மூலம் தண்ணீர் வந்தால், சென்னை நகரில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுதும் தொத்துவியாதி பரவும் ஆபத்து தொக்கியிருக்கிறது. எனவே, எவ்வளவு கால மானாலும் காண்டுயிட் பைப் மூலமே கொண்டுவர வேண்டும்.

அடுத்தபடியாக, காலராவைப்பற்றி சொல்ல வேண்டியதாக இருக்கிறது. காலராவைப்பற்றி எங்களுடைய கட்சித் தலைவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கவனை ஈர்ப்புப் பிரச்னை கொண்டுவந்தபோது அமைச்சர் கூறிய பதில் எனக்குத் திருப்தி அளிக்கவில்லை. கிண்டியிலேயே ஊசி போடவேண்டிய மருந்துகளைத் தயாரித்தால் மட்டும் போதாது. ஆகவே காலராவைத் தடுக்க காம்பிரகன்சிவ் ஸ்கீமாக ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திரு. வி. எல்லம நாயுடு: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று இந்தச் சபையின் முன் கனம் சுகாதார அமைச்சர் அவர்களால கொண்டுவரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பிரைமரி ஹெல்த் சென்டர்கள் சாங்ஷன் ஆகியும், நடைபெறாமல் விட்டு விட்டிருப்பதைத் தொடர்ந்து நடத்தும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். முதலாவதாக குடி தண்ணீர்ப் பிரச்னை. வியாதி வந்த பிறகு அதைப்போக்க நல்ல முறையில் திட்டங்களை வகுத்திருந்தாலும் வியாதிகள் வராமல் தடுப்பதற்கு வேண்டிய திட்டங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியமாக இருக்கிறது. வியாதிகள் வராமல் தடுக்க குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அத்துடன் சுகாதார வசதி, குடியிருப்பு வசதி முதலியவைகளையும் செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அந்த முறையில் நகரங்களில் நல்ல முறையில் வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. பெரிய நகரங்களிலும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றன. அப்படிப்பட்ட திட்டங்களை கிராமங்களிலும் விஸ்தரிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். கோவைக்கு வரும் சிறுவாணித் தண்ணீரை அதிகப்படுத்த கேரள அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடப்பதாகத் தெரிகிறது. அதைத் தொடர்ந்து வாங்கி மேற்கொண்டும் அந்த மேற்குப் பிராந்தியத்திலுள்ள கிராமங்களுக்குக் கொடுக்க வேண்டும என்று பல வருடங்களாகக் கேட்டுக்கொண்டு வரப்படுகிறது. அந்தத் திட்டத்தை முடித்துக் கொடுக்கிறோம் என்று இப்பொழுது உறுதி அளித்திருக்கிறார்கள். சிறுவாணி நதியில் அணையை உயர்த்தி தண்ணீரைக் கொண்டு வரும்போது மேற்குப் பிராந்தியத்திலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டும். அத்துடன் பஞ்சாயத்துக்களில் ஜலதாரை கட்டும் திட்டம் இருந்து வந்தது. அது இப்பொழுது வேண்டாம், பின்பு பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லி தாற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அப்படி நிறுத்தி வைக்காமல் அதைத் தொடர்ந்து எடுத்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த முறையில் அங்கே ஜலதாரை திட்டத்தை எடுத்து கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதைத் துரிதமாகச் செய்ய வேணடும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சிறுவாணியிலிருந்து அதிக தண்ணீரைக் கொண்டு வரும்போது பக்கத்திலுள்ள கிராமங்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படிப் பல்வேறு திட்டங்கள் போட்டு அவற்றை நிறைவேற்றிக் கொடுக்கும்படியாக கேட்டுக்கொள்ளுகிறேன். அரசாங்கம் பெரியநாயக்கன் பாளையத்தில் கட்டப்போகும் பேபர் மில்ஸ் கட்டிடத்தை முடி

பதற்குள் அங்கு மேட்டுப்பாளையம் ஆற்றிலிருந்து குடிதண்ணீரைக் கொண்டுவரப் போகிறார்கள். அப்பொழுது அங்குள்ள எல்லாக் கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதுடன் டாக்டர்கள் பற்றாக்குறை வேறு இருக்கிறது. கிராமங்களில் நல்ல சித்த வைத்தியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல அனுபவம் இருக்கிறது. நல்ல தேர்ச்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு சர்க்கார் நல்ல உதவி அளிக்கவில்லை. அவர்களுக்கு உதவி அளிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு உதவி அளித்தால் அவர்கள் நல்ல முறையில் கிராமங்களில் வைத்தியம் செய்வதற்கு வசதியாக இருக்கும். கிராமங்களிலுள்ள ஹரிஜனங்கள், மலைவாசிகள், ஆதிவாசிகள் நகரங்களுக்குச் சென்று வைத்தியம் செய்துகொள்ளமுடியாமல் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சித்த வைத்தியர்களுக்கு அரசாங்கம் உதவி அளித்தால் கிராமத்திலுள்ள அரிஜனங்கள், ஆதிவாசிகள் வைத்திய வசதி பெற்றுக்கொள்வதற்கு வசதியாக இருக்கும். அரிஜனங்களைப் பொறுத்த வரைக்கும் கிராமங்களில் குடிதண்ணீர் வசதி கொடுக்கப்படவில்லை. கிராமங்களில் அரிஜனங்களும் ஆதிவாசிகளும் தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வைத்திய வசதி, குடியிருப்பு வசதி மற்றும் பல வித வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் மலைப் பிரதேசங்களிலிருந்து நகரங்களுக்கு வந்து வைத்திய வசதி பெறுவதற்குக் கஷ்டமாக இருக்கிறது. மேற்கு மலைப்பிரதேசங்களிலுள்ளவர்கள் நகரங்களுக்கு வந்து வைத்தியம் செய்துகொள்ள முடியவில்லை. அதனால் என்னுடைய தொகுதியாகிய தொண்டாமுத்தூர் தொகுதியில் புங்கஞ்சேரி மலையில் ஓடும் நதியாகிய சோலையாற்றிலிருந்து குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதற்கு என்று ஒரு திட்டத்தைத் தயாரித்து, மூன்று லட்சத்தி எழுபத்தைந்து ஆயிரம் ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டது. அந்த அளவில் ஒரு திட்டம் அமைக்கப்பட்டது. அதில் முக்கால் பங்கு அரசாங்கமும் கால் பங்கு அங்குள்ள மக்களும் கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அங்குள்ள மக்கள் அந்த கால் பங்கையும் கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அதனால் அரசாங்கமே அந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டு நிறைவேற்றிக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அங்கு சுமார் 15 அல்லது 20 ஆயிரம் ஜனங்கள் பூலுவபட்டி, ஆலந்துறை, மத்துவராயபுரம் ஆகிய கிராமங்களில் வசிக்கிறார்கள். ஆகவே அந்தத் திட்டத்தை இந்த வருடமே எடுத்துக்கொண்டு நிறைவேற்றிக் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சுகாதாரத் துறையைப் பொறுத்த வரையில், யாஸ் எராடிகேஷன் திட்டத்தை வைத்திருக்கிறோம். கோவை ஜில்லாவில் சென்ற ஆண்டில் சர்வே செய்யப்பட்டபடி பார்த்தால், 4,511



பேருக்கு அந்த வியாதி வந்திருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படவேண்டுமென்று சொன்னார்கள். 2,945 பேர்களுக்குத்தான் சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கிறது. இதைக்குறித்து நான் முன்பே சொன்னது போல, இந்த நோய் வராமலேயே தடுக்க வழி வகுக்கவேண்டும். அதற்காக 1½ லட்சம் ரூபாய் செலவு செய்திருக்கிறோம். என்றாலும், அந்த ஜில்லாவில் உள்ள எல்லோருக்கும் மருத்துவ வசதி கிடைக்கவில்லை. அந்த நோய் வராமல் தடுக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

* திரு. சா. கணேசன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் சபையின் முன்னே சமர்ப்பிக்கப் பெற்றிருக்கிற வைத்திய, சுகாதார மானியத்தையொட்டி என்னுடைய கருத்துக்களை உங்கள் மூலமாகச் சமர்ப்பிக்க முன்வந்திருக்கிறேன்.

இந்த வைத்திய முறை எவ்வளவு இன்றியமையாதது, வைத்திய முறைக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய, தவிர்ப்பு முறையாக இருக்கக்கூடிய, சுகாதார முறை அதைவிட எவ்வளவு இன்றியமையாதது என்பதையெல்லாம் இப்பொழுது விளக்கி நான் கூறவேண்டியதில்லை. தற்கால நவீன மருத்துவ முறையிலே மட்டுமன்றி, பழங்கால வைத்திய முறையிலுங்கூட, இரு துறைகள் பிரிக்கப்பட்டிருந்தன என்பதைப் பழைய நூல்களின் மூலமாகவும் சாசனங்களின் மூலமாகவும் நாம் உணர முடியும். வைத்தியம் என்பது இப்பொழுது எப்படி 'மெடிஸின் அண்டு ஸர்ஜரி' என்று இரண்டு பிரிவாக இருக்கிறதோ அப்படியே, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தத் தமிழ்நாட்டில் விளங்கிவந்திருக்கிறது என்பது ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சான்றுகள் மூலமாக நமக்குப் புலப்படுகிறது.

பாண்டியன் அவையில் பிரதான மந்திரியாக இருந்த ஒருவருடைய பெயர் "களக்குடி வைத்தியன் மூவேந்த வேளான்" என்பது. இன்னொருவர்—இலக்கியங்களில் நிறையப் பயிலப் பெற்று வருகிற—பெயர் "மருத்துவன் தாமோதரனார்" என்பது. 'வைத்தியன்' என்ற சொல்லும் 'மருத்துவன்' என்ற சொல்லும் எப்படிப் பாகுபடுத்தப்பட்டு வந்திருக்கின்றன என்பது நமக்கு இன்று ஆராய்ச்சிக்குரிய ஒன்றல்ல. இந்தத் துறையை இரு கூறாகப் பிரிந்து, ஒன்றை சஸ்த்ர சிகிச்சை என்றும், மற்றொன்றை மூலிகை சிகிச்சை என்றும் கொண்டார்கள் என்று புலப்படுகிற முறையை, பின்னே சொல்லப்போகிற விஷயத்திற்கு அடிப்படையாக முன்னே இதைக் கூறிச் செல்லுகிறேன்.

இப்பொழுது நான் உங்கள் மூலமாகச் சமர்ப்பித்துக்கொள்ள விரும்புகிற கோரிக்கை—நகர ஆஸ்பத்திரிகளில் முடிந்த அளவுக்கு கௌரவ டாக்டர்களைப் போடுவதற்கு ஏற்பாடு செய்துவிட வேண்டும். அப்படி செய்வதால் அதன் மூலமாக நகர ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்கள் நிறையச் செல்ல வேண்டாத ஒரு நிலை ஏற்பட்டு, அந்த மிகுதியை, அதனால் ஏற்படுகிற வைத்தியர்

களுடைய தொகையைக் கிராம ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பி, 'கிராமங்களிலே ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லை' என்ற யை நிவர்த்திக்கலாம்.

அதற்கு மேலே இதைப்பற்றி விளக்கிப் பேசுவதற்கு நேரம் இல்லாமையினால் குறிப்பாக மட்டும் இந்தக் கருத்துக்களைச் சொல்லிவிட்டு மேலே செல்லுகிறேன்.

ஏற்கெனவே பேசிய அன்பர்கள் பலரும் அம்மையைப்பற்றி, அதாவது அம்மை நோயைப்பற்றி அழுத்தமாகப் பேசினார்கள். எங்கள் பகுதியில், அதிலும் சிறப்பாக என்னைச் சார்ந்தவர்கள் வசிக்கின்ற பெரும் பகுதியில், நான் ஒரு முறையைக் கையாண்டு வருகிறேன். அதனால் கிட்டத்தட்ட பதினைந்து வருஷங்களாக என் வீட்டைச் சுற்றி அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட மூன்று, நான்கு வார்டுகளில் அம்மை பெரும்பாலும் இல்லை என்று ஆகிவிட்டது. இதை நவீன வைத்தியத் துறையிலே உள்ள அறிஞர்கள் ஏற்பார்களோ இல்லையோ, கவனிக்க வேண்டும் என்று சமர்ப்பிக்கின்றேன். எங்கோ ஒருவருக்கு அம்மை கண்டிருக்கிறது என்று தெரிந்தால், அந்தப் பகுதியிலே இருக்கிற அத்தனை பேரையும் பேதிக்கு சாப்பிடச் சொல்லிவிடுவது. இப்படிச் செய்துவிடுவதால் அம்மை தோன்றவே இல்லை. எங்கும் வரவில்லை. என் குடும்பத்தில் கிட்டத்தட்ட முப்பது வருஷங்களாக யாருக்கும் அம்மையே கிடையாது. அம்மை என் வீட்டைச் சுற்றிலும் கிடையாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் புலப்படுத்திக் கொள்ளுகிறேன். இதிலே என்ன பலன் இருக்கிறது, என்ன நன்மை இருக்கிறது என்பதை அறிந்து, இதைச் செய்வது சிறந்த தடுப்பு முறை என்று நான் பரிபூரணமாக நம்புகிறேன்; அனுபவிக்கின்றேன்; பிறருக்கும் என் பகுதியில் சொல்லுகிறேன். இதை அரசாங்கம் ஆராயவேண்டும் என்றும் நான் சமர்ப்பித்துக் கொள்ளுகின்றேன்.

பின்னே, அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே, 'ஜில்லாக்கள் தோறும்—கன்னியா குமரி ஜில்லா நீங்கலாக—காச நோய் வைத்தியத்திற்கு வேண்டிய சானடோரியம்கள் எல்லாவிதமான வாய்ப்பு வசதிகளோடு அமைக்கப்பெற்று விட்டன" என்று குறிப்பிடுகிறார்கள். உண்மை. அதை ஏற்றுக்கொள்கிறேன். அதற்காகப் பாராட்டையும் தெரிவிக்கிறேன். ஆனால், எல்லா இடங்களிலும் அதனால் பெறவேண்டிய பயன் பெறவில்லை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. காரைக்குடியை அடுத்துள்ள சோமநாதபுரத்திலிருக்கும் சானடோரியத்தில் முதலாவது, வைத்தியர் இல்லை; இரண்டாவது மருந்து இல்லை. கட்டடம் அபாரமாக இருக்கிறது. சுமார் 60, 70 ஏக்கராவுக்கு மேற்பட்ட நல்ல நிலம். அதிலும் காச நோய் தீர்வதற்கு வேண்டிய சூழ்நிலை மரம், செடி, கொடி, குளுமை ஒன்றும் இல்லாத நல்ல பொட்டல் காடு. அந்த வட்டாரத்தில் உள்ள நோயாளிகள், வேறு எங்கும் இடம் கிடைக்கவில்லை என்று கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறவர்கள், நூற்றுக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அங்கே புதிதாக



வந்திருக்கும் டிவிஷனல் அதிகாரி பத்து, ஐந்து வசூல் செய்து, காட் லிவர் ஆயில், முட்டை இப்படி ஏதோ கொடுத்துக் காரியம் பண்ணிக்கொண்டிருக்கிறார். இதை உடனடியாக அரசாங்கம் ஏற்றுக் கொண்டுவிடவேண்டும். தனிப்பட்ட நிர்வாகத்தினர் வைத்திருந்தார்கள்; அதிலே பல குறைகள், குற்றங்கள் சொல்லப்படுகின்றன. அதற்கெல்லாம் பதில் அல்லது சமாதானம் சொல்ல நான் வரவில்லை. அதையெல்லாம் விட்டு, அந்த சானடோரியத்தை அரசாங்கமே நேரடியாக எடுத்து நடத்த வேண்டும் என்று நான் விண்ணப்பித்துக்கொள்ளுகிறேன்.

அதற்கு மேலே, இந்த நாட்டுக்கு எத்தகைய வைத்தியம் தேவை என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. இந்த நாட்டிலே பிறந்து, பல்லாயிரம் வருஷங்களாக இந்த நாட்டிலேயே வளர்ந்து வருகிற வைத்திய முறையைப்பற்றி நன்கு அறிந்தவர்கள் சொல்கிறார்கள்—இந்த நாட்டிலே வாழ்கிறவர்களுக்கு இந்த நாட்டிலே உள்ள மூலிகைகள் பயன் அளிக்கும் அளவுக்கு பிற நாட்டு மருந்துக்கள் அவ்வளவாகப் பயன் அளிக்காது என்று. இந்த உண்மையை மனத்துவமும், உடற்கூறும் அறிந்தவர்கள் நன்றாக உணருவார்கள். அந்த வகையிலே, பல ஆண்டுகள் பல வகையான சோதனைகளையும் சாதனைகளையும் நம் தேசத்தில் நடத்தி இருக்கிறார்கள். சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்தவர் என்று சொல்லவேண்டுமானால், தஞ்சையில் வாழ்ந்த சரபோஜி மன்னர் பல நாட்டு வைத்திய முறைகளையும் கொண்டு வந்து, தங்களுடைய சமஸ்தானத்தில், அரண்மனையில் தக்கவர்களைக்கொண்டு ஆராய்ந்து, அதன் மூலம் பல வகையான மருந்துகளையும் தயாரித்து, அவற்றினுடைய செய்முறைகளையும் குறிப்பிட்டு நூல் பல ஆக்கியுள்ளார். சுமார் 20-க்கு மேற்பட்ட புத்தகங்களாக நமது அரசாங்கம்தான் அவற்றையெல்லாம் மூலச் சுவடிகளிலிருந்து எடுத்து அச்சிட்டார்கள். "சரபேந்திரர் வைத்திய முறைகள்" என்ற பொதுத் தலைப்பில் பாலவாகடம் முதல் குஷ்டரோகம் வரை, ஏன் மாட்டு வைத்தியம், குதிரை வைத்தியம் உட்பட எல்லாவற்றையும் வெளியிட்டிருக்கிறார்கள். சித்த வைத்திய முறை, ஆயுர்வேத முறை, யுனானி வைத்திய முறை, அலோபதி வைத்திய முறை மட்டுமல்ல, ஹோமியோபதி முறை உட்பட அதிலே காணப்படுகின்றன. ஃப்ரெஞ்சுக்காரரைக் கொண்டுவந்து ஆராய்ச்சி செய்திருக்கிறார். ஜெர்மானியர்களை வைத்து ஆராய்ச்சி செய்திருக்கிறார். ஆங்கிலேயர்களை வைத்து ஆராய்ச்சி செய்திருக்கிறார். இத்தாலியரை வைத்து ஆராய்ச்சி செய்திருக்கிறார். கிரேக்கர்களை வைத்தும் ஆராய்ச்சி செய்திருக்கிறார். அவ்வளவும் 'ரிகார்டட் எவிடென்ஸ்' களாக, தஸ்தாவேஜுகளாக, சரஸ்வதி மகாலில் விளங்கக் காண்கிறோம். அந்த முறை தொடர்ந்து வளர்ந்தால் அல்லவா பயன் கிடைக்கும்? அதுவெல்லாம் அவர்களோடு போச்சு. சுமார் 150 ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது புத்தகமாக வெளிவந்திருக்கிறது. அதை அச்சிட்டவர், பரிசோதித்தவர், முதலியோரால் ஏற்பட்ட பல தவறுகளோடு ஏதோ ஓரளவுக்குப் பயன் தரத்தக்க அளவில்

முறையோடு இணைத்து ஒன்றாகச் சேர்த்து நம் நாட்டுக்குப் பயன்படுகிறவாறு வளர்க்க முயற்சி செய்யவேண்டுமேயல்லாது "சுத்த முறை, சுத்த முறை" என்று சொல்லி நம்மவைகள் அழிந்துபோக தெரிந்தோ தெரியாமலோ வழி செய்துவிடக்கூடாது என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள்.

நாம் இங்கே கீழ்ப்பாக்கத்தில் ஒரு இணைப்புக் கல்லூரியை ஏற்படுத்தினோம். இதைப் பார்த்து மற்ற மாநிலத்தவர்கள் நம்மைப் பின்பற்றி வளர்ந்து வருகிறார்கள். குறிப்பாக இது போலவே புனாவில் ஒரு கல்லூரி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதை அப்படியே காப்பி அடித்தார்கள். நமது முன்னாள் அமைச்சர் திரு. மாணிக்கவேலு அவர்களும், இவ்விலாகா செக்ரட்டரி திரு. சீனுவாசன் அவர்களும் அங்கே போய் அதைப் பார்த்து வந்திருக்கிறார்கள். இவர்கள் போனபோது ஒருவர் பல் பிடுங்கிக்கொண்டிருந்தார். சிகிச்சை பெற்றவர் வலியால் துன்புறவில்லை. மரத்துப்போக கொக்கைன், நொவாக்கேன் முதலிய ஊசி மருந்து செலுத்தவுமில்லை. அதைப் பார்த்து இவர்களே வியந்து வந்துள்ளார்கள். நம்மை பார்த்துக் காப்பி அடித்தவர்கள் இவ்வளவு திறம்பட அத்துறையில் வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் நாம் இன்றைக்கு அதைக் கைவிடுவது என்பது தர்மமா? நியாயமா? நாம் இப்படி போய்க்கொண்டிருக்கலாமா? இந்த முறை ஆராய்ச்சிக்கூடம், கல்லூரி எதுவுமே சென்னையில் இருக்கக் கூடாது; அதைத் தூக்கிக்கொண்டுபோய்க் குற்றாலத்தில் போடு என்று சொல்வதானது ஓரேயடியாக இதை ஒழிப்பதற்கான திட்டமாகவே அமையும் என்று சொல்வேன்.

நீங்கள் குற்றாலத்திலே இதற்கென்று தனியாகக் கல்லூரி ஏற்படுத்தி அங்கே ஒருவர் சென்று நான்கைந்து ஆண்டுகள் படித்து வருகின்றார் என்றாலும் அவ்வாறு வெளியே வருகிறவர்களுக்கு நீங்கள் வேலைக்கு என்ன உத்தரவாதம் அளிக்கிறீர்கள்? நன்றாகச் சிந்திக்கவேண்டும். ஒரு சுகாதார அதிகாரியாகவாவது போடுவீர்களா? இல்லை சானிடரி இன்ஸ்பெக்டராகவாவது அவர் ஆகமுடியுமா? அம்மைப் பால் வைக்கிறவராகவோ அல்லது கம்பௌண்டராகவாவது அவருக்கு வேலை கொடுக்க வாய்ப்பு இருக்கிறதா? ஒன்றுமே இல்லையென்றாலும் ஆஸ்பத்திரியில் பணி செய்யும் ஒரு ஆண் நர்ஸ் உத்தியோகமாவது அவர்களுக்கு அளிக்கப்படும் என்று அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கிறதா? அப்படி உத்தரவாதம் அளிப்பதற்கு இல்லையென்றால் எப்படி மாணவர்கள் இத்துறையில் உற்சாகம் கொள்ள முடியும்? "குற்றாலத்தில் ஆரம்பிப்பதும் பரிட்சார்த்தமானது, இதில் மாணவர்கள் காட்டுகிற ஊக்கத்தைப் பொறுத்திருக்கிறது இதன் வளர்ச்சி" என்றால் மாணவர்கள் ஊக்கம் கொள்வதற்கு அவர்களுக்கு என்ன வேலை வாய்ப்பு உத்தரவாதம் அளிக்கப்படுகிறது? நன்றாகச் சிந்திக்கவேண்டும். ஒன்று இவை ஒன்றுமே வேண்டாம் என்று சொல்லிவிடுங்கள். நான் அதைப்பற்றி ஒன்றுமே சொல்வதற்கில்லை. ஆனால் யாருக்காகவோ, யாருடைய திருப்திக்கோ உங்களுக்கே இஷ்டமில்லாதபடி இப்படிக் காரியங்கள் செய்வது





கொஞ்சங்கூடப் பயன் அளிக்காது. அதுமட்டுமல்ல. எதை எதை எந்த எந்தச் சூழ்நிலையில் வளர்க்கவேண்டுமோ எந்த எந்த நபர்களைப் போட்டு வளர்க்கவேண்டுமோ அப்படி வளர்க்கத் திட்டம் வகுக்காது இப்படிச் செய்வது சரியாகாது.

என்னை கதர் அபிவிருத்தித் திட்ட அதிகாரியாகப் போட்டால் கதர்த் திட்டம் நிச்சயம் செம்மையாக நடைபெறும். கதர் கட்டுவதே பாவம், கதரே கட்டக் கூடாது என்கிற ஒருவரைக் கொண்டு அவ்விலாகாவில் போட்டால் கதர் அபிவிருத்தித் திட்டம் என்ன ஆகும்? அடியோடு ஒழிந்துதான் போகும். நான் யாரையும் குறை சொல்வதாக நினைத்துக் கொள்ளக் கூடாது என்று மீட்டும் சொல்கிறேன். உண்மையிலேயே உங்களுக்கு நம்முடைய நாட்டு வைத்திய முறைகள் வளர்ச்சி அடையவேண்டுமென்ற நோக்கம் இருந்தால், அதிலே அக்கறை இருந்தால், அதிலே ஆர்வம் இருந்தால், அத்துறையிலே நல்ல பயிற்சி உடையவர்களைப் போடுங்கள். அதிலே அக்கறை உடையவர்களை, ஆர்வம் உடையவர்களைப் போடுங்கள். அதிலே அனுபவம் உடையவர்களைப் போடுங்கள். ஒன்றும் இல்லையென்றாலும் குறைந்த பட்சம் சிம்பதி—பரிவு—காட்டுகின்றவர்களாகவாவது பார்த்துப் போடுங்கள். அதுவும் இல்லையென்றால் எவ்விதப் பயனும் தராது.

இன்றைக்கு நாட்டு வைத்திய முறைகள் அத்தனையும் சரியில்லையென்று சொல்ல முடியாது. அலபதி முறை நூற்றுக்கு நூறு பயன் அளிக்கக்கூடியது என்றும் கொள்வதற்கில்லை. குறிப்பாக இன்றைக்கு ஒருவருக்கு மஞ்சட்காமாலை வருகிறது என்றால் எத்தனைத்தான் அலபதி வைத்திய முறைப்படி வேண்டுமானாலும் செய்து பாருங்கள். பணம் செலவு தான் ஆகும். நாட்டு வைத்திய முறையில் அதற்கு ஒரு சிகிச்சை இருக்கிறது. கீழ்வாய் நெல்லி என்று ஒரு பச்சிலை. நெல்லி இலையைப் போல இருக்கும். பின்பக்கம் சிறு சிறு காய்களாக இருக்கும். கீழ்பக்கம் காய் உடையதாய் நெல்லி இலையைப் போல உள்ள அதற்கு கீழ்வாய் நெல்லி என்று பெயர். கீழாநெல்லி என்று கூடச் சொல்வார்கள். மூன்று வேளை அதைச் சாப்பிட்டால் போதும், நூற்றுக்கு 95 நோயாளிக்குக் குணமேற்படல் உறுதி. நானே பலருக்குக் கொடுத்துக் குணப்படுத்தியிருக்கிறேன். நோய், மூன்று வேளை அதை உண்ட மாத்திரத்தில் நீங்கிவிடுகிறது. இதைக் கொடுப்பதற்கு அதிகச் செலவு ஆகுமா? இதற்காக நூற்றுக்கணக்கில் செலவழிக்க வேண்டுமா? இவற்றையெல்லாம் நீங்கள் மறந்துவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். இதை வளர்ப்பதற்கு உண்மையிலேயே நீங்கள் முயலவேண்டும். ஆகவே ஒன்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இப்போது சென்னையில் இருக்கிற பள்ளியை, தயவு செய்து வேறு எந்த இடத்திற்கும் மாற்றி விடாதீர்கள். குற்றாலத்திலே கொண்டு போய்ப் போட்டு, அதுவும் சுத்த ஆயுர்வேதம், சுத்த சித்தம் என்று எதையோ அவர்கள் ஆராய்ந்து—உடல் கூறு என்ன, உடல் உறுப்பு அமைப்பு என்ன என்பதை இந்த மாணவர்கள் புரிந்துகொள்ளாமல், பழைய சித்த முறையையும் நன்கு புரிந்து கொள்ளாமல்—ஏதோ படித்தேன்

வந்திருக்கிறது. இதையெல்லாம் மனத்திலே கொண்டால், நம்முடைய வைத்திய முறை எப்படி அமையவேண்டும் என்பது தெரியவரும். இதையெல்லாம் நான் சொல்வதால், அலோபதி முறையில் இருக்கும் தற்கால நவீன சாஸ்திர வைத்திய முறைகளை நான் மறுக்கிறேன், அல்லது உதாசீனப்படுத்துகிறேன், அல்லது குறைவாகக் கூறுகிறேன் என்று யாரும் கொள்ள மாட்டார்கள் என்று நான் மனப்பூர்வமாகக் கருதியே மேலே செல்லுகிறேன்.

அதற்குப் பிறகு, சமீப காலத்திலே, சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு முறையைத் தொடங்கினார்கள். இந்திய வைத்தியத்தை அலோபதி முறையோடு கலந்து ஒரு நல்ல கலவையாக— கலப்படம் என்ற பொருள் அல்ல. கலவைச் சந்தனத்தில் எவ்வளவு மணம் பிறக்குமோ அந்த முறையில்—ஒரு செம்மையான முறையை வகுக்கவேண்டும் என்ற முயற்சியைத் தொடங்கினார்கள். அது பலன் தரத்தக்கதாக அமைகிறதா என்று பார்த்தால், அது கொஞ்சங் கொஞ்சமாக, ‘கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆயிற்று’ என்று சொல்கிற பழமொழி இருக்கிறதல்லவா, அப்படிப்பட்ட நிலைக்கு வந்துவிட்டது—என்று சொல்ல நான் மிகவும் வருத்தப்படுகிறேன். அந்த நிலை வந்துவிட்டது இந்தத் துறைக்கு. காரணம் என்ன என்று நான் சொல்ல வேண்டாம். அதற்கு எத்தனையோ கமிட்டிகள் போட்டிருக்கிறார்கள் என்பது நம்மில் பலருக்குத் தெரியும். மேத்தா கமிட்டி, துவாரகநாத் கமிட்டி போன்ற பல கமிட்டிகள் போட்டார்கள். அதற்கும் மேலே, யூனியன் ஹெல்த் மினிஸ்டர் தலைமையில் ஒரு சிறப்புக் கூட்டம் வேறு நடைபெற்றது. அதற்கு எல்லா மாநிலங்களிலிருந்து எல்லா சுகாதார அமைச்சர்களும் அழைக்கப் பெற்றிருந்தார்கள்; சம்பந்தப்பட்ட துறை நிபுணர்களும் அழைக்கப்பெற்றிருந்தார்கள். எல்லோரும் தத்தம் கருத்துக்களைச் சொன்னார்கள். கூட்டம் அத்துடன் முடிந்தது. ஒன்றும் முடிவே கட்டவில்லை. உடனே மந்திரி எழுந்துவிட்டார். “நீங்கள் சொன்னதெல்லாம் கவனத்தில் வைத்துக்கொள்ளப்படும்” என்று சொல்லி. மினிஸ்டர் புறப்பட்டுவிட்டார். அவரைத் தொடர்ந்து பிளானிங் மினிஸ்டரும் புறப்பட்டுவிட்டார். இந்த ஒரு குழப்பம் வந்த நிலைமையில் நமது பிரதம மந்திரி அவர்கள் டெல்லியில் பேசும்போது, “இதுபற்றி நன்றாகச் சிந்தித்து தக்கமுறையில் பரிசீலனை செய்து ஒரு முடிவு செய்யப்படும்; அதுவரையில் எந்த முறையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது” என்று குறிப்பிட்டார்கள். இப்போது நிலைமை என்ன? ஆயுர்வேதமாக இருந்தாலும், யுனானியாக இருந்தாலும், சித்த வைத்தியமாக இருந்தாலும், அவை அவை சுத்தமாக இருக்கவேண்டும், வேறு ஒரு முறையின் கலப்பு இல்லாமல் சுத்த ஆயுர்வேதம், சுத்த யுனானி, சுத்த சித்தம் என்று அமைய வேண்டும் என்கிறார்கள். சுத்தம் என்றால் வேறு ஒன்றன் கலப்பு இன்றி இருப்பது. மிச்ரம் என்றால் இரண்டின் கலப்பு. சங்கீரணம் என்றால் பல கலப்பு. இந்த சங்கீரணம், மிச்ரம் என்பதே இந்த நாட்டு வைத்திய முறை



களில் வரக்கூடாது, அவை அவை சுத்தமாக வளர்ச்சி அடைய வேண்டும் என்கிறார்கள். இப்படி எதற்காகச் செய்தார்கள்—நான யாரையும் குறை சொல்வதாக நினைக்கக்கூடாது—இவை குட்டிச்சுவர் ஆகவேண்டும், ‘கழுதை தேய்ந்து கட்டெறும்பானாற் போல இவை அழிந்து போகவேண்டும் என்கிற கருத்து உள்ளவர்கள் தான் இதைச் செய்திருக்க முடியும் என்று சொல்வேன்.

காரணம் என்ன? இன்றைக்கு எந்த முறை உலகத்தில் வேறு எதனுடைய கலப்பும் இல்லாமல் வளர்ச்சி அடைந்திருக்கிறது? அலோபதி முறையை எடுத்துக்கொண்டால் நம்முடைய நாட்டுப் பச்சிலைகளின், முறைகளின் சேர்க்கையும் அதில் இல்லையா? இருமலுக்கு “சிரப் ஆப் வாசிகா” என்று இப்போது மருந்து தயாரிக்கப்பட்டு கொடுக்கப்படவில்லையா? “ச்யவனப் பிராசம்’ என்ற லேகியம் இன்று அலோபதி மருந்து தயாரிப்பவர்களாலும் உற்பத்தி செய்து விற்கப்படவில்லையா? இவை எல்லாம் சுதத முறையா?

ஏதோ சித்த முறை என்றால் அது தனியே வளர்ச்சி அடைய வேண்டும் என்றால் கடந்த ஆயிரம் ஆண்டுகளாக அதன் வளர்ச்சி தடைபட்டே கிடந்திருக்கிறது. இன்றைக்கு சுத்த சித்த முறை என்றால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே சித்தர்கள் குறிப்பிட்டுள்ள பல விஷயங்களுக்கு இப்போது பொருள் கூடக் கண்டு பிடித்துக் கொள்ளவே முடியாத நிலை அல்லவா நாட்டில் இருக்கிறது. இன்றைக்கு உள்ள நிலைமை, அன்றைய நிலைமை இரண்டையும் இணைத்து நல்லமுறையில் பரிசீலனை செய்தால் அத்துறை வளர்ச்சி அடைய உண்மையிலேயே உதவினவர்களாக ஆவோம். குறிப்பாக, ‘திருமந்திரம்’ என்ற நூலைப் பார்த்தால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சுகாதாரத்தோடு மட்டும் அல்லாமல், மருத்துவத்தையும்பற்றிப் பல விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக ‘மாதா உதரம் மலம் மிகில் மந்தனாம்’. தாயாரின் வயிற்றில் அந்தக் குறிப்பிட்ட காலத்தில் மலம் மிகுந்திருக்குமானால் பிறக்கிற குழந்தை மந்த புத்தி உடையதாக இருக்கும்.

‘மாதா உதரம் சலம் மிகில் மூங்கையாம்’

அவள் வயிற்றில் ஜலம் மிகுந்திருக்குமானால், அவள் உதரத்தில் வந்த குழவி ஊமையாகப் போய்விடும். மலம், ஜலம் ஆகிய இரண்டும் நிறைந்திருந்தால் கண்ணில்லையாகப் போய்விடும் மாதா உதரத்தில் வந்த குழவிக்கு. அப்பொழுதுள்ள அவள் உடல் நிலையைப் பொறுத்து என்ன என்ன கெடுதி விளையும் என்றெல்லாம் திருமூலர் சொல்லியிருக்கிறார்—அதுவும் அந்தக்காலத்திலேயே—என்றால் நம் நாட்டில் வைத்தியத் துறை அன்றைக்கு எப்படி இருந்திருக்கவேண்டும் என்பதை ஊகித்தாவது உணர முடியுமல்லவா? வெளிநாட்டில் இருந்து வருவன எல்லாம் உயர்ந்தவை என்றோ, தாழ்ந்தவை என்றோ நான் சொல்ல வரவில்லை. நம் நாட்டில் இருந்த—மிக மகத்தானதாக இருந்த—முறைகளை எல்லாம் வெளிநாட்டில் இருந்து வருகிற உயர்ந்த

ஏற்படுமா? அல்லது ஒன்றாக இயங்குவதனால் நன்மை ஏற்படுமா? என்பதை முடிவு செய்ய பிரச்சினையை இம்மன்றத்திலே வைத்து, இம்மன்றத்தின் கருத்தை அறிந்து, பெரும்பாலோர் கருத்தையும் அறிந்ததற்குப் பிறகு அதற்கானதொரு முடிவை எடுக்கும் முயற்சியை அரசினர் மேற்கொண்டிருப்பார்களேயானால் நன்றாக இருந்திருக்கும். இந்த மன்றத்தின் கருத்துக்களை அறியாமல் இரு துறைகளையும் இணைக்கும் முயற்சியிலே அரசினர் ஈடுபட்டிருப்பது மிக மிக வருந்தத்தக்க ஒன்றாகும். இரண்டு துறைகளின் பணிகளையும் நாம் நன்றாக அறிவோம். இரண்டு துறைகளையும் உருவாக்கிய ஆரம்ப காலத்திலே அவை ஒன்றாகத்தான் இருந்து வந்தன. ஆரம்ப காலத்திலே இருந்த பணிகள் மிகமிகக் குறைவு. அதற்குப் பிறகு இரு துறையினரின் பணிகளும் வளர்ந்திருக்கின்றன. பொறுப்புக்கள் வளர்ந்திருக்கின்றன, கடமைகள் வளர்ந்திருக்கின்றன; செலவழிக்கப்பட வேண்டிய நேரம், நினைப்பு, உழைப்பு எல்லாம் வளர்ந்து வந்திருக்கின்றன. அந்த நிலைமையை ஒட்டி, இவை இரண்டும் இணைந்திருப்பதைத் தனித் தனியாகப் பிரித்து வைத்தால்தான் செயல்கள் செம்மையாக ஆற்றப்பட முடியும் என்று உணரப்பட்டு, அவை, இரு வேறு துறைகளாக ஆக்கப்பட்ட வரலாற்றை நாம் அறிவோம்.

இரண்டு துறைகளிலும் இருக்கின்றவர்களுடைய நோக்கங்கள் வேறு வேறு; இரண்டு துறையினர்க்குமுள்ள பயிற்சிகள் வேறு வேறு; இரண்டு துறைகளிலும் இருக்கின்றவர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளும் வேறு வேறு; இரண்டு துறையினரும் கவனித்து வந்த நிலைமைகளும் வேறு வேறு. ஒன்று நோயைத் தடுக்கின்ற முறை, மற்றொன்று நோயைத் தீர்க்கின்ற முறை. மனிதனைச் சுற்றி இருக்கின்ற சூழ்நிலையினைத் தூய்மைப்படுத்தி, நோய் வராமல், பெருகாமல், பரவாமல் தடுப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய முயற்சிகளைச் செய்யவேண்டியது ஒரு துறை. மற்றொன்று நோயைத் தீர்க்கின்ற துறை. ஒரு மனிதன் நோயிலே விழுந்து விட்ட பிறகு, அந்த மனிதனின் சக்தியைச் சிறிதளவு அதிகப்படுத்த முடியுமா? இழந்த சக்தியை மீட்க முடியுமா? நீடிக்க முடியுமா? ஆயுட்காலம் முடிவடையாது பார்த்துக் கொள்ளும் முறையிலே நோயினைத் தடுத்து நிறுத்த முடியுமா? என்ற வகையில் ஒரு தனி மனிதனுடைய உடல் நிலைக்கேற்ப, ஏற்பட்டு விட்ட நோயைத் தீர்க்கின்ற பணியிலே ஈடுபடவேண்டிய துறை. ஒரு துறை மக்களுடைய புறச் சார்புகளைப் பற்றிய நிலைகளை அறிந்து பணியாற்றவேண்டிய துறை. மற்றொரு துறை, தனித் தனியாக ஒவ்வொரு மனிதனைப் பற்றியும் கவனம் செலுத்தி, அதற்காகவே தங்களுடைய நேரத்தைச் செலவழிக்கவேண்டிய துறை. நோய் தடுக்கும் துறையிலே ஈடுபட்டிருக்கின்றவர்கள் சில பல நேரங்களில் நாட்டுக்கும், ஊர்களுக்கும், சில நேரங்களில் சில பகுதிகளுக்கும் ஏற்பட்டு விட்ட சூழ்நிலைகளைக் கவனித்து, நோய்க் கிருமிகளைத் தடுப்பதற்கு வேண்டிய பயிற்சியினைப் பெற்றவர்களாக இருக்கவேண்டும். நோய் தீர்க்கின்ற துறையினர் தங்களுடைய



முழு எண்ணத்தையும், நேரத்தையும் தனி மனிதனின் மீது செலுத்தி, அவனுடைய நோயைக் குறைப்பதற்கான பணிகளைச் செய்ய வேண்டியவர்களாவர். அது தன்னுடைய முழு கவனத்தையும் தனிப்பட்ட ஆளுக்காகச் செலவழிக்கின்ற துறை. அவர்களுடைய எண்ணம் நினைப்பு அவ்வளவும் தனித் தனியாக ஒவ்வொரு மனிதனிடத்திலும் இருக்கும் நோய்களைக் கண்டறிந்து, அவற்றைப் போக்க வேண்டிய முறைகளில் ஈடுபடவேண்டியிருக்கும். ஆகவே, இரண்டு துறைகளுக்கும் தொடர்பு இருக்கிறது. ஆனால் இரண்டு துறையினரின் வேலைகளும் ஒன்றல்ல. அந்த வேலைகளிலே ஈடுபடுகின்றவர்களுடைய நடவடிக்கைகள் ஒன்றல்ல. இரு துறையினரும் செலவழிக்க வேண்டிய நினைப்பு, நேரம் ஆகியவையும் ஒன்றல்ல. இரண்டுக்கும் தொடர்பு இருக்கும் காரணத்தால்தான் இரண்டு துறைகளும் ஒரு அமைச்சரின் கீழ் வைக்கப்பட்டிருக்கின்றன. அது சாலப் பொருத்தமானதாகும். ஆக கண்காணிப்பவர் ஒருவர் இருந்து இந்த இரு துறைகளுக்கும் இடையே ஒரு தொடர்புள்ள நிலையை ஏற்படுத்த வேண்டும். அப்படி ஒரே முறையில் கண்காணிக்கின்ற பொறுப்பை அமைச்சர் ஒருவர் ஏற்று இருப்பது பொறுத்தமானதொன்றுதான். ஆனால் துறைகள் இரண்டும் வெவ்வேறாகத்தான் செயல்பட வேண்டும். மருத்துவத் துறையில் பத்து பதினைந்து ஆண்டுகள் பயிற்சி பெற்ற ஒருவரை திடீரென்று பொதுநலத் துறைக்கு மாற்றி அதில் ஈடுபடச் செய்வது நல்லதல்ல, பயன் தரத்தக்கதுமலல. காலராவை போக்குகிற முறை, வாந்திபேதியை போக்குகின்ற முறை சீதபேதியைப் போக்குகிற முறை, தூய்மையான நீர் வழங்கும் முறை இவற்றில் ஆற்றல், தகுதி பெற்றவர்களை மருத்துவத் துறைக்கு செல்ல வேண்டுமென்று கூறினால் அவர்களின் அறிவு, ஆற்றல் இத்துறைக்கு போதிய அளவு பயன்படா. அதேபோல்தான் மருத்துவத் துறையில் உள்ளவர்களைப் பொதுநலத் துறைக்கு மாற்றுவதும் ஆகும். ஆகவே இந்த இரண்டு துறைகளும் தனித் தனியாக இயங்கும் ஒரு முறை இருந்தால்தான் இவ்விரண்டும் செம்மையாகச் செயல்பட முடியும். ஒவ்வொரு துறையிலும் ஆற்றப்பட வேண்டிய பணியின் அளவு இன்று பெரிதும் வளர்ந்திருக்கிறது. அந்தத் துறைகள் போதிய அளவு கவனிக்கப்படாததினால் இன்று பல குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன, ஏற்படுகின்றன என்று பல உறுப்பினர்கள் இங்கு எடுத்துக் கூறினார்கள்.

மேலும் அந்தத் துறைகளை ஒன்றாக இணைப்பதினால் சிக்கனத்திற்கு வழி இருப்பதாகவும் தெரியவில்லை. ஒரு துறையில் உள்ள குறைபாடுகளை மற்றத் துறைகளில் இருப்பவர்களைக் கொண்டு தீர்க்க முடியுமா? என்றால் அதற்கும் வாய்ப்பில்லை. இன்று மருத்துவத் துறைக்கு வருகிற டாக்டர்கள் தங்கள் அரசாங்கப் பணியைச் செய்து கொண்டு, தங்கள் சொந்தப் பணியையும் செய்து கொள்ள உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அப்படிச் சொந்தப் பணி செய்து அதன்மூலம் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டும் கூட, மருத்துவத் துறைக்கு

என்று வந்து, எதையோ கொடுத்து 'கை கண்ட மாத்திரை வை குண்ட யாத்திரை' என்ற ரீதியில் அழிந்து போகப் பண்ணி விடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு).

1.00 p.m. உடற் கூறு தெரிந்து, உடல் நிலை தெரிந்து, சீதோஷ்ண நிலை தெரிந்து காரியம் பண்ணவேண்டும். இப்போது இருக்கும் திட்டப் படி தர்மாமீட்டர் கூட சுத்தமுறை வைத்தியர் வைத்துக் கொள்ளக் கூடாது. எனிமாக் கானைத் தொடக்கூடாது. எனிமா முறையெல்லாம் புதியது என்று ரொம்பப் பேர் நினைக்கிறார்கள். அது ரொம்பப் பழையது. ஆயுர் வேதத்தில் வஸ்தி (Vasti) என்று சொல்வார்கள். அது மலம் கழிப்பதற்காக மட்டும் பயன்படுத்தப் படுவதில்லை. வாயினால் ஒருவன் மருந்து சாப்பிட முடியவில்லை என்றால், குடலுக்குள்ளே இருக்கின்ற விஷத்தை வெளியேற்ற வேண்டுமென்று சொன்னால், மருந்து கஷாயத்தையே 'வஸ்தி' வைப்பார்கள். அது "அஷ்டாங்க ஹிருதயம்" போன்ற ஆயுர் வேத நூல்களில் காணலாம். இவற்றையெல்லாம் வளர்க் காமல் தடுப்பது தர்மமாக இருக்காது, நன்மை தராது என்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

குற்றாலத்திலே சித்த வைத்தியக் கல்லூரியை ஆரம்பிப்பது பற்றி நான் ஆட்சேபிக்கவில்லை. இங்கு இருக்கும் கல்லூரியை மாற்றுவது கூடாது. பழனியிலோ, குற்றாலத்திலோ சென்னையில் உள்ள மாதிரி ஆஸ்பத்திரிகள் இருக்கின்றனவா? ஆப்பரேஷன் தியேட்டர்கள் இருக்கின்றனவா? காரைக்குடியில் ஆப்பிள் மரத்தை வை யென்றால் வளருமா? இங்கிலாந்தில் மா மரமும் பலா மரமும் வளருமா? ஆகவே, குற்றாலத்தில் சித்த, ஆயுர்வேத, யுனானி வைத்தியக் கல்லூரியை ஆரம்பித்தாலும் சென்னையில் ஏற்கனவே இருக்கக் கூடிய அந்தக் கல்லூரியை எடுத்து விடக் கூடாது. ஆகவே, சுற்றி இருக்கும் நிலங்களையும், வாய்ப்பையும் வசதியையும் பயன்படுத்தி தக்க முறையில் இந்தத் துறையை வளர்ப்பதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியில் கேட்டுக்கொள்வது இதுதான். சென்னையிலே இந்த வைத்தியக் கல்லூரி இருக்கவேண்டும். இருப்பதோடு மட்டு மல்லாமல் அவர்களுக்கு அலபதியில் இருக்கும் அருமையான விஞ்ஞான ரீதியான அறிவு முறைகளையும், யூனானியில் இருக்கும் கசப்பு இல்லாத மருந்து வகைகளையும், சித்த வைத்தியத்தில் இருக்கும் சத்தான, பலன் தரத்தக்க நிலைகளையும், ஆயுர்வேதத்தில் இருக்கின்ற பலவிதமான அரிஷ்டங்கள் போன்ற ஷர்பத்துக்கள் ஆகியவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து ஒரு அருமையான கூட்டு முறையைக் கையாண்டு நோய்களைக் குணமாக்குவதற்குப் பயிற்சி அளிக்கவேண்டும். வரிசையாகப் பெயர் மாறிக் கொண்டே வந்துவிட்டது. பட்டங்கள்கூட மாறிக்கொண்டே போகிறது. இந்த வைத்தியக் கல்லூரியை அமைத்து, எல்லாக் காரியங்களை யும் செம்மையாகச் செய்து, திறமையாகப் பணி செய்து அதன் மூலம் தமிழ் நாட்டுக்கு நன்மை தேடித் தருவதோடு, தமிழ் நாடு



அமைச்சரவை சிறந்த புகழையும், பெயரையும் பெறவேண்டு மென்றுகூறி, அதற்கு தக்கவற்றைச் செய்யவேண்டுமென்று உதவிசபாநாயகர் அவர்களே, உங்கள் மூலம் கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன்** : மதிப்புக்குரிய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே! கனம் பொதுநலத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள பொதுநலத் துறை, மருந்து வத் துறை மானியங்கள் மீது கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப்பிரே ரணைகளையொட்டிச் சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன். 1-00 p.m. பொதுநலத் துறை, மருத்துவத் துறை ஆகிய இரண்டு பணிகளும் எந்த எந்த வகையிலே நடைபெற்று வருகின்றன? எந்த எந்த வகையிலே நடைபெறவேண்டும்? அவற்றிற்காக நாம் எடுத்துக் கொள்ளவேண்டிய பணிகளும், கடமைகளும் என்னென்ன? என்பன பற்றி இம்மன்றத்தின் உறுப்பினர்கள் பலரும் தெளிவுபட எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த இரண்டு துறைகளையும் கவனிப்பதற்குத் தாய்க்குலத்தைச் சேர்ந்த இருவர் மேலதிகாரி களாக அமைந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று ஆகும். தாய்க் குலத்தைச் சேர்ந்த இருவர் பொறுப்பேற்றுப் பிரச்னைகளை அன் போடும், அனுதாபத்தோடும் அணுகும் வண்ணம் செவ்வனே பணி யாற்றிக் கொண்டு வருகின்ற வழிவகைகளைப் பற்றிப் பலரும் கூறி னார்கள். சாதாரணமாக வீட்டிலே பார்த்தாலும்கூட, நோய் தடுக்கும் முறையானாலும், நோய் தீர்க்கும் முறையானாலும் பெண் கள்தாம் அதிக அக்கறையும், ஆர்வமும் காட்டிப் பணியாற்றுவார் கள். அந்த முறையிலே நோய் தீர்க்கும் துறைக்கும், நோய் தடுக் கும் துறைக்கும் இரண்டு பெண்மணிகள் அதிகாரிகளாக அமைந் திருப்பது பாராட்டுக்குரிய ஒன்றாகும். அந்த இரண்டு துறைகளை யும் நன்கு கவனிப்பதற்குப் பொதுநலத்துறை அமைச்சர் அவர் களும் தாய்க் குலத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பது மகிழ்ச்சிக் குரிய ஒன்றாகும்.

அந்த இரண்டு துறைகளும் இயங்கி வரும் தன்மையையும், இனிமேல் இயங்க வேண்டிய தன்மையையும் பற்றிக் கவர்னர் பெருமான் அவர்கள் தம் உரையிலே குறிப்பிடும்போது, 'அந்த இரு துறைகளையும் ஒன்றாக இணைப்பது என்ற முடிவினை இந்த அரசு ஏற்று, அதற்கான வழிவகைகளைக் காண்கின்ற முயற்சி களிலே ஈடுபட்டிருக்கிறது', என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பற்றிய கருத்துக்களை இந்த மன்றத்தைச் சார்ந்த ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் எடுத்து வைத்திருக்கிறார்கள். பொதுநலத் துறை, மருத்துவத் துறை பற்றிய பிரச்னை, பொதுவாக நாட்டு மக்கள் அனைவரின் உள்ளத்தையும் பெருமளவுக்குக் கவருகின்ற பிரச்னையாகும். நாட்டு மக்கள் கவனத்தை ஈர்த்திருக்கின்ற பிரச்னை ஆகும் என்பதையும் அனைவரும் நன்கு உணர்வர். இரண்டு துறைகளும் தனித் தனியாக இயங்குவதால் நன்மை

டாக்டர்கள் கிடைப்பது மிகக் கடினமாக இருக்கிறது. பல மருத்துவ மனைகளில் போதுமான மருத்துவர்கள் இல்லை என்ற குறைபாட்டினைப் பல உறுப்பினர்கள் இங்கு தெரிவித்தார்கள். ஆக, இப்படிச் சொந்தப் பணியைச் செய்துகொள்ள, வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தும் போதுமான அளவில் மருத்துவர்கள் கிடைக்காத நிலை இருக்கும்போது, மருத்துவத் துறையில் இருப்பவர்களைப் பொதுநலத் துறைக்கு மாற்றலாம் என்ற எண்ணம் ஏற்படுவது எப்படிப் பொருத்தமானதாக இருக்க முடியும்? அவர்கள் தனித் தொழில் செய்ய முடியாத பொதுநலத் துறைக்கு எப்படி வர முற்படுவார்கள்? தனித் தொழில் செய்ய முடியாத ஒரு நிலை ஏற்படும் என்பதால், மருத்துவத் துறைக்கே மருத்துவர்கள் கிடைப்பது மேலும் கடினமாகிவிடும். ஆகவே, அவ்விரு துறைகளையும் மிகத் தீவிரப்படுத்தி அவை ஏற்றுக்கொள்கிற பணியினைத் தனித் தனியாகச் செய்கிற அளவிற்குச் சூழ்நிலையை உருவாக்குவதுதான் நல்லது. அத்தகைய சூழ்நிலையை உருவாக்கித் தருகிற பணிகளில் அரசினர் ஈடுபடுதல் வேண்டும். ஆக, மருத்துவத் துறை தனியாகச் செம்மையாக நடைபெறவும், அதேபோன்று பொதுநலத் துறையும் தனியாகச் செம்மையாக நடைபெறவும் அரசினர் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இப்போது ஏற்பட்டிருக்கிற குறைகள் எல்லாம், நாட்டு மக்களின் எண்ணிக்கை வளர வளர, நோய் வகைகளும் வளர்கின்றன. அவை வளர வளர, அவற்றால் பாதிக்கப்படுகிறவர்களின் எண்ணிக்கையும் வளர்கின்றன. அவற்றைத் தடுக்கவும் தீர்க்கவும் உள்ள முறைகள் வளர்க்கப்படவேண்டும். மருத்துவத்துறையிலும், பொது நலத் துறையிலும் எடுக்கப்படும் முயற்சிகள் ஆண்டு தோறும் வளர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் தேவையை நிறைவேற்றுகிற அளவிற்கு ஏற்படுகிற கேடுகளை நீக்குகிற அளவிற்கு அத்துறைகள் வளர்க்கப்பட்டிருக்கின்றனவா? சமாளிக்கக்கூடிய அளவிற்கு அரசினரால், அத்துறைகள் வளர்க்கப்பட முடிந்தனவா? என்று பார்த்தால், இல்லை என்று தான் கூற வேண்டியிருக்கிறது. பல இடங்களில் உள்ள பல குறைபாடுகளைப் பற்றி இங்கு உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். மருத்துவ மனைகளுக்கு வருகிற ஏழை எளிய பாட்டாளி மக்கள் பேரில் சரியான கவனம் செலுத்தப்படவில்லை என்பது பரவலாக இருந்துவரும் குற்றச்சாட்டாகும். எல்லாவிடங்களிலும் இல்லை என்று நான் சொல்ல வரவில்லை. எல்லா டாக்டர்களும் அப்படி நடந்து கொள்கிறார்கள் என்றும் நான் சொல்ல வரவில்லை. எல்லா இடங்களிலும் அப்படிப் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்றும் நான் சொல்ல வரவில்லை. சில இடங்களில் அந்தக் குற்றச்சாட்டுக்கள் உண்டு என்பதை உறுப்பினர் கூற்றுக்களிலிருந்து அறியலாம். நாம் விரும்பத் தகாத நிலைமைகள் அத்துறையில் ஏற்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். நான் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தபோது, மாணவர்கள் வேடிக்கையாகப் பேசுவார்கள். அது மிகைப்படுத்தப்படுவதுதான்





என்றிருந்தாலும் கூட, அதில் பொருள் இல்லாமல் இல்லை. அங்கு ஒரு மருத்துவ மனை உண்டு. அங்கு ஒரு டாக்டர் இருந்தார். அங்கு மருந்து தர ஒரு கம்பவுண்டரும் இருந்தார். டாக்டரிடம் சென்றால் அவர் நோயாளியைப் பார்க்காமலேயே மருந்து எழுதித் தருவார், அந்தச் சீட்டை எடுத்துப் போய் கம்பவுண்டரிடம் கொடுத்தால், அவர் சீட்டைப் பார்க்காமலேயே மருந்து தந்து விடுவார் என்று மாணவர்கள் சொல்வதுண்டு. (சிரிப்பு.) இதில் முழு உண்மை இருக்கிறது என்று நான் சொல்ல வரவில்லை. மிகைப்படுத்திச் சொல்லப்பட்டதுதான் என்றாலும், இதில் கால் பங்கு அல்லது அரைப் பங்கு உண்மை இருக்கக்கூடிய வகையில் தான் ஆங்காங்கு நிலைமைகள் இருக்கின்றன. பொதுவாக ஏழை எளியவர்கள் பெற வேண்டிய வசதிகளைப் பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள். அந்நிலைமை மாறி, ஏழை எளிய மக்களும் வேண்டிய மருத்துவ வசதிகள் பெறக் கூடிய நிலையை உண்டு பண்ணுதல் வேண்டும். அதில் அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

மருந்துகள் வழங்கும் துறையில் கூட குறிப்பிட்ட காலத்தில் மருத்துவ மனைகளுக்கு மருந்துகள் கிடைப்பதில்லை, குறிப்பிட்ட காலத்தில் மருந்துகள் போய்ச் சேருவதில்லை என்பதைக் கேள்வி நேரத்தில் உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். மருந்துகள் எல்லா இடங்களிலும் விரைவாகக் கிடைக்கக் கூடிய வகையில் நாம் கவனம் செலுத்த வேண்டிய பொறுப்புடையவர்களாக இருக்கிறோம். மருத்துவ மனைகளில் தேவையான மருந்துகள் இல்லையென்றால், அவற்றை வெளியிலிருந்து வாங்கிக் கொள்ள மருத்துவ மனை அதிகாரிகளுக்கு அதிகாரம் இருந்தால்தான் மக்கள் நன்கு மருத்துவ வசதிகளைப் பெற முடியும். இப்போது பலவிடங்களிலும் மருத்துவ மனைகள் இருந்தபோதிலும், எந்த நோய் வந்தாலும் அதைப் போக்கக்கூடிய தகுதி, திறமை வாய்ந்தவர்கள் சென்னையில் உள்ள பெரிய மருத்துவ மனைகளில்தான் இருக்கிறார்கள் என்று எண்ணி குமரி முனையிலிருந்துகூட மக்கள் இங்கு சென்னையை நாடித்தான் வருகிறார்கள். அப்படிச் சென்னையை நாடி வரும்போது, இங்குள்ள மருத்துவ மனைகளில் இருக்கவேண்டிய அளவிற்கு மேல் நெருக்கடி வளர்ந்து கொண்டிருக்கிற தன்மையைப் பார்க்கிறோம். அதோடு சென்னையிலேயே நெருக்கடி வளர்ந்து வருவதையும் பார்க்கிறோம். இந்நிலை மாற வேண்டுமென்றால், அந்தந்த மாவட்ட மருத்துவ மனைகளில் இருக்கிற தலைமை அதிகாரிகள் மிகத் திறமையானவர்களாக இருத்தல் வேண்டும். அத்துடன் சென்னையில் உள்ள மருத்துவ மனைகளில் இருக்கிற மருத்துவர்கள் அறிவு, திறமை ஆகியவைகள் இவர்களுக்கும் இருக்கின்றன என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்பட வேண்டும். அதற்காக அதிகப்படியான ஊதியம் அளித்தாவது மிக்க திறமை வாய்ந்தவர்களை மாவட்டங்களுக்கு அனுப்பினால், மாவட்ட நிலை சீர்படுவதோடு, அங்குள்ள மக்கள் பெரும் செலவு செய்து இங்கு வர வேண்டிய நிலை ஏற்படாதிருக்கும். அதோடு சென்னையிலும் நெருக்கடி குறைய வாய்ப்பு ஏற்படும். நிரூ…

படுகின்றன. குடி நீருக்குத் தீவிரமாகத் திட்டம் போட்டால்தான் பரவக்கூடிய நோய்களைத் தடுத்து நிறுத்த வழிகளும், வாய்ப்புகளும் ஏற்படும். முயற்சி எடுக்கப்படுகிறது என்றாலும், ஒவ்வொரு கிராமத்திலும் 'ப்ரொட்டெக்டெட் வாட்டர் சப்ளை' என்று சொல்லக்கூடிய பாதுகாக்கப்பட்ட நீரை வழங்கவேண்டும். மேலும் சாக்கடைகள் ஏற்படுத்தும் திட்டங்களைப் போட்டு நிறைவேற்றி நோய்கள் பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சென்னை நகரைப் பொறுத்த வரையில், குடி தண்ணீர் வழங்கும் பிரச்சினை கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அண்மையில் ஆந்திர அரசினர் கிருஷ்ணா ஆற்று நீரை சென்னை நகரில் உள்ள மக்களுக்குக் குடி தண்ணீருக்காக மட்டும் வழங்க முன் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று ஆகும். அதைப் பற்றி கனம் அமைச்சர் கூட பாராட்டுரை தெரிவித்தார்கள். விரைவில் இதனை நடைமுறைப்படுத்த எவ்வளவு முயற்சி எடுக்க முடியுமோ, அவ்வளவு முயற்சிகளை எடுத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிற முறையில் அரசினர் ஈடுபடுதல வேண்டும். கனம் நிதி அமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியது போல, இந்த அரசினர் ஒரு முறையை மேற்கொள்ளுவது கூட நல்லது. சிலபல நேரங்களில் குடிப்பதற்காகக் குடி தண்ணீர் வழங்குகிற முறையை மேற்கொண்டு, மற்றப் பணிகளுக்குச் சுத்தம் செய்தல் போன்ற வேறு பல பணிகளுக்குச் சாதாரண நீரைப் பயன்படுத்தக் கூடிய முறையில் ஏற்பாடு செய்யலாம். குடிக்கும் நீர்—குளிக்கும் நீர் என்ற இருவகை நீரை வழங்க நகராட்சியினர் முற்படலாம். சில நகராட்சிகளில் சோதனையாக இந்தத் திட்டத்தை அரசினர் மேற்கொள்ளுவது மிக மிக நல்லது.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைப் பற்றி உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தின் நிலைமைகளை நாட்டு மக்கள் பெரும்பாலும் வரவேற்று வருகிறார்கள். ஆனால் அதன் முறைகளையும், வகைகளையும் நன்கு அறியவில்லை. இந்தத் திட்டத்தின் அவசியம், இன்றியமையாத தன்மை, விளைவுகள் ஆகியவைகளை மக்கள் நன்றாக உணர வேண்டியவர்களாக இருந்து வருகிறார்கள். இந்தத் துறை இப்போது மருத்துவத் துறையின் கீழ் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். இந்தத் துறையின் பணிகள் பெரும்பாலும் பொதுநலத்துறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டால், மக்களுக்கு இந்தத் திட்டத்தைப் பற்றிப் போதிப்பதற்கும், இந்த முறையை மக்கள் தெரிந்து கொள்ளவும் வாய்ப்பாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். குடும்பக் கட்டுப்பாடு என்பது, 'ப்ரிவென்ஷன்' என்ற தடுப்புமுறையைச் சார்ந்ததாகும். இதனைப் பொதுநலத்துறை ஏற்றுக்கொண்டு பிரசாரம் செய்யவேண்டும். ஆங்காங்கு மலேரியா, வாந்திபேதி போன்ற வியாதிகள் வராமல் தடுக்க எப்படிப் பிரசார இலாகாவை வைத்திருக்கிறார்களோ, அந்தமுறையில் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை எடுத்துச் சொல்லவும் பிரசாரம் வேண்டும். பொது

சர்ஜரி பொறுத்த வரையில், சென்னை பெரிய மருத்துவ மனையில் மட்டும் இருந்தது. மாநிலத்திலுள்ள எல்லாப் பகுதிகளில் இருந்தும் இங்குதான் அதற்கு சிகிச்சை பெற வரவேண்டியிருந்தது. இப்போது ஸ்டான்லி மருத்துவ மனையிலும் நியூரோ சர்ஜரி பகுதி ஒன்றைத் திறக்க முடிவு செய்திருப்பது மகிழ்ச்சிக்குரியதொன்றாகும். தென் மண்டலத்தில் இருக்கிறவர்கள் எல்லாம் அச்சிகிச்சை பெற வசதியாக இருப்பதற்கு, மதுரை மருத்துவ மனையில் அப்பகுதி ஒன்றினைத் திறக்கவேண்டும். அதன்மூலம் தென் மண்டலத்தில் இருப்பவர்கள் அந்தச் சிகிச்சையின் பயனை நுகர்வதற்குள்ள வழிவகையை ஏற்படுத்தித் தர அரசினர் முன் வருதல் வேண்டும். ஸ்டான்லி மருத்துவ மனைப் பகுதியை மாற்ற வேண்டுமென்று நான் கூறவில்லை. இங்கு ஏற்படுத்தப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதொன்றாகும். அதேபோன்று மதுரை மருத்துவ மனையிலும் அப்பகுதி ஒன்றினை ஆரம்பித்தால், தென் மண்டலத்தில் இருப்பவர்களுக்கு வசதியாக இருக்குமென்பதைத்தான் நான் இங்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். அடுத்து, பெரிய மருத்துவ மனைகளில் சில நோயாளிகள் ஒரே படுக்கையிலிருந்து கொண்டு 2, 2½ ஆண்டுகாலமாக, ஐந்து ஆண்டுகள் வரையில் கூட சிகிச்சை பெற்று வருவதால், அந்தப் படுக்கை பிறருக்கு பயன்படாமல் இருக்கும் ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே நீடித்த நோய் உள்ளவர்கள், நெடுநாள் மருத்துவ மனையில் இருந்துதான் தீர வேண்டும் என்ற நிலையிலுள்ள நோய் உள்ளவர்களைத் தனி மருத்துவ மனைக்கு அகற்ற வேண்டும். அப்படிச் செய்வதினால், அடிக்கடி வருகிறவர்களுக்கு படுக்கை வசதி ஏற்படுத்திக் கொடுக்க வாய்ப்பு இருக்கும். அத்தோடு வருகிறவர்களுக்கு நெருக்கடி இல்லாமல் நல்ல வசதிகள் அளிக்கவும் வாய்ப்பு ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல், உள்ளக் குறைபாடு உடையவர்களுக்கென்று தனியாக ஆங்காங்கு நிலையங்கள் நிறுவியும், அதன் மூலம் அவர்களுடைய இடர்பாடுகளைப் போக்குவதற்கும், கஷ்டங்களைப் போக்குவதற்கும் முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். மிக மிக மக்களால் அருவருக்கத் தக்க நோய், நோய் வந்தவர்களையும் மிக மிக வேதனைக்கு உள்ளாக்கக்கூடிய நோய், பெரு நோய்—தொழு நோய் ஆகும் என்பதை எல்லோரும் அறிவார்கள். இப்படிப்பட்ட தொழுநோய் பிடித்தவர்கள் இந்தியாவில் 25 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் இருக்கிறார்களென்றும், நமது தமிழகத்தில் மட்டும் எடுத்துக் கொண்டால் 3 லட்சத்துக்கு மேல் இருக்கக்கூடும் என்றும் கருதப்படுகிறது. ஆனால் தொழுநோய் பிடித்தவர்களுக்கென்று சிலபல முயற்சிகளும், அவர்களுக்கென்று சில பல நிலையங்களும், அவர்களுக்கென்று சிலபல. மருத்துவ விடுதிகளும் நிறுவப்பட்டு வருகிறது என்று சொன்னாலும், அத்தகைய தொழுநோய் பிடித்தவர்களுடைய தேவையை நிறைவேற்றுகிற அளவுக்கு அவைகள் இல்லை. தொழுநோய் பிடித்தவர்களில கூட தொற்றுகிற நோய் உடையவர்கள், தொற்றாத நோய் உடையவர்கள் என்று இரண்டு



வகையினர் இருக்கின்றனர். இது தொற்றுகிற நோய், இது தொற்றாத நோய் என்று தொழு நோய் பிடித்தவர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே அறிந்து கொள்ளக் கூடிய அறிவும், பக்குவமும் நமது நாட்டு மக்களிடம் இல்லை. தொற்றுகிற நோய்க்கு என்று ஏற்பட்டிருக்கிற மருத்துவ மனையில், செங்கற்பட்டுக்கு அருகில் அமைந்திருக்கிற மருத்துவ மனையில் 10 ஆண்டு காலம், 15 ஆண்டு காலம் மருத்துவ சிகிச்சை செய்துகொண்டு இனிமேல் நோய் இல்லை என்று வெளியே வந்த பிறகும், அந்நோயின் வடுக்கள் அவர்களிடத்தில் அமைந்துதான் இருக்கின்றன. மேற்கொண்டு நோய் இருக்கிறதா இல்லையா என்று தெரிந்துகொள்ளும் அளவுக்கு அறிவு மக்களிடத்தில் இல்லை, அவர்களிடமிருந்து சர்ட்டிபிகேட்டை வாங்கிப் பார்த்த பிறகு தான் தெரிந்து கொள்ளக்கூடிய நிலை ஏற்படுகிறது. நோய் குணப்படுத்தப்பட்டு விட்டது என்று சொன்னாலும், நோயின் வடுக்கள் உடலில் இருப்பதால் மக்கள் பார்த்தவுடனேயே தொழுநோய் பிடித்தவர்கள் எங்கே சென்றாலும், சாலையிலே சென்றாலும், கடைத் தெருவிலே சென்றாலும், மருத்துவ விடுதிக்குச் சென்றாலும் மக்களால் அவர்கள் துரத்தியடிக்கப்படுகிறார்கள். தொற்றாத நோய் என்று சர்ட்டிபிகேட் இருந்தாலும், இவர்கள் அடித்து விரட்டப்படும் அளவுக்கு, அவமானப்படுத்தப்படும் அளவுக்குத் தங்கள் நிலைமையை எண்ணி எண்ணி ஏங்கும் அளவுக்கு இருக்கக் கூடிய நிலைமையைப் போக்கி, அப்படிப்பட்டவர்களைப பாதுகாத்து, அவர்கள் முடியும் வேலையைப் பார்க்க ஏற்பாடுகளை மேற்கொள்ளுவது முறையாகும். தொற்றாத தொழுநோய் உடையவர்களுக்குத்தான் கை கால்கள் குறைவு ஏற்படும் என்றும், அதில் தான் புண்கள் ஏற்படும் என்றும் அத்தகைய புண்களில்தான் ஈக்கள் உட்காரும், அதே நேரத்தில் தொற்றுகிற நோய்க்கு ஆளாகியுள்ளவர்களுக்கு கை கால்கள் குறையாமல் வேறு விதத்தில் இருக்கிறது என்றும் அந்தத் துறையில் உள்ள வல்லுனர்கள் கூறுகிறார்கள். ஆனால் அத்தகைய வேறுபாடு மக்களுக்குத் தெரியாது. தொற்றாத நோயை உடையவர்களுக்குத் தான் கை கால்கள் குறைந்து போகின்றன. அத்தகைய தொற்றாத நோயை உடையவர்களுக்கு முழுப் பாதுகாப்பையும் அளித்து, சாலைகளில் கூட தெருக்களில்கூட அவர்களும் அவமானப்படாமல, மககளும் அருவருக்கத் தக்க நிலை ஏற்படாமல், அவர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தரவும், தொற்றுகிற நோய் உடையவர்களுக்கு, அவர்களைக் காப்பாற்ற அவர்கள் வாழ் நாள் முழுதும், வயது வந்தவர்களுக்கு நாம் இப்போது மாதந்தோறும் 20 ரூபாய் மான்யம் வழங்குவது போன்று, மான்யத்தை வழங்குவதற்கும் அரசினர் முன்வரவேண்டும்.

நோய் பரவாமல் இருப்பதற்குக் காரணம் சொல்லும்போது, முதல் படியாக குடி தண்ணீரைப் பொருத்தும், நீரின் வகையைப் பொருத்தும், ஆங்காங்கு வைத்திருக்கிற நிலையைப் பொருத்தும், வீட்டு வசதியைப் பொருத்தும் . சில கருத்துக்கள் சொல்லப்

# APPENDIX.

[ *Vide* Answer to Starred Question No. 280 on page 397].

STATEMENT SHOWING THE AMOUNT OF TRAVELLING ALLOWANCE DRAWN BY EACH MINISTER DURING THE YEARS 1957 TO 1961.

| *Serial number and name of the Minister.* | | *Amount drawn as Travelling Allowance.* *Train or plane fare.* | *Daily Allowance.* | *Mileage, if any.* | *Total.* |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| | | RS. NP. | RS. NP. | RS. NP. | RS. NP. |
| 1 Sri K. Kamaraj, Chief Minister .. .. .. | 1957 | 2,839 86 | 395 00 | 266 50 | 3,501 36 |
| | 1958 | 6,667 31 | 320 00 | 740 50 | 7,727 81 |
| | 1959 | 5,396 07 | .. | 622 50 | 6,018 57 |
| | 1960 | 5,833 50 | .. | 641 50 | 6,475 00 |
| | 1961 (up to 15th December 1961) | 5,135 19 | .. | 256 50 | 5,401 69 |
| 2 Sri M. Bhaktavatsalam, Minister (Home) .. | 1957 | 6,099 50 | 595 00 | 1,488 03 | 8,182 53 |
| | 1958 | 7,761 11 | 960 00 | 3,4[illegible]3 29 | 12,174 40 |
| | 1959 | 7,794 57 | 960 00 | 3,953 76 | 12,708 33 |
| | 1960 | 9,635 33 | 1,230 00 | 2,841 21 | 13,706 54 |
| | 1961 (up to 15th December 1961) | 6,398 21 | 1,015 00 | 3,192 17 | 10,605 38 |
| 3 Sri C. Subramaniam, Minister for Finance .. | 1957-1958 | 5,390 35 | 1,543 75 | 1,707 64 | 8,641 74 |
| | 1958-1959 | 5,837 84 | 4,959 94 | .. | 10,797 7[illegible] |
| | 1959-1960 | 7,374 14 | 3,895 94 | .. | 11,26[illegible] [illegible] |

## APPENDIX—*cont.*

| *Serial number and name of the Minister.* (1) | | *Amount drawn as Travelling Allowance.* Train or plane fare. (2) RS. nP. | Daily Allowance. (3) RS. nP. | Mileage, if any. (4) RS. nP. | Total. (5) RS. nP. |
|---|---|---|---|---|---|
| Sri C. Subramaniam, Minister for Finance—*cont.* | | | | | |
| | 1960-1961 | 9,158 73 | 4,177 08 | .. | 13,335 81 |
| | 1st April 1961 to 15th December 1961 | 5,477 53 | 2,348 16 | .. | 7,825 69 |
| Sri M. A. Manickavelu, Minister for Revenue .. | 1957-1958 | 4,204 84 | 303 75 | 2,645 00 | 7,153 59 |
| | 1958-1959 | 5,064 31 | 4,455 24 | .. | 9,519 55 |
| | 1959-1960 | 4,623 58 | 4,008 01 | .. | 8,631 59 |
| | 1960-1961 | 3,636 95 | 4,709 90 | .. | 8,346 85 |
| | 1st April to 15th December 1961 | 3,253 99 | 3,194 79 | .. | 6,448 78 |
| 5 Sri R. Venkataraman, Minister for Industries .. | 1957 | 3,762 81 | 615 00 | 1,269 00 | 5,646 81 |
| | 1958 | 3,381 63 | 225 00 | 1,415 50 | 5,022 13 |
| | 1959 | 3,812 36 | 615 00 | 1,637 50 | 6,064 86 |
| | 1960 | 3,769 05 | 690 00 | 824 50 | 5,283 55 |
| | 1961 up to 15th December 1961 | 4,582 62 | 797 50 | 122 00 | 5,502 12 |
| 6 Sri V. Ramaiah, Minister for Electricity .. .. | 1957-1958 | 4,189 72 | 702 50 | 1,546 50 | 6,438 72 |



| *Serial number and name of the Minister.* (1) | | Train or plane fare. (2) RS. nP. | Daily Allowance. (3) RS. nP. | Mileage, if any. (4) RS. nP. | Total. (5) RS. nP. |
|---|---|---|---|---|---|
| | 1958-1959 | 6,772 17 | 1,600 00 | 2,194 00 | 10,566 17 |
| | 1959-1960 | 9,623 80 | 1,631 25 | 658 00 | 11,913 05 |
| | 1960-1961 | 5,950 07 | 2,060 00 | 451 00 | 8,461 07 |
| | 1st April to 15th December 1961 | 5,661 32 | 1,848 75 | 238 50 | 7,748 57 |
| 7 Sri P. Kakkan, Minister for Works. .. .. .. | 1957-1958 | 1,978 26 | 340 00 | 4,471 00 | 6,789 26 |
| | 1958-1959 | 3,084 42 | 1,640 00 | 3,334 50 | 8,058 92 |
| | 1959-1960 | 5,935 89 | 1,425 00 | 3,393 00 | 10,753 89 |
| | 1960-1961 | 4,481 36 | 1,260 00 | 527 00 | 6,268 36 |
| | 1st April to 15th December 1961 | 4,116 44 | 963 00 | 2,093 00 | 7,172 44 |
| 8 Smt. Lourdammal Simon, Minister for Local Administration, | 1957-1958 | 3,158 19 | 490 00 | 6,148 50 | 9,796 69 |
| | 1958-1959 | 2,120 62 | 7,333 29 | .. | 9,453 91 |
| | 1959-1960 | 3,243 76 | 7,629 38 | .. | 10,873 14 |
| | 1960-1961 | 5,487 48 | 6,880 81 | .. | 12,368 29 |
| | 1st April to 15th December 1961 | 3,580 20 | 4,103 04 | .. | 7,683 24 |

NOTE—As separate figures for daily allowances and mileage are not available in respect of Minister (Finance), Minister (Revenue) and Minister (Local Administration) during the period from 1st April 1958 to 15th December 1961, only consolidated figures as shown in column (4) are furnished.

## இணைப்பு—தொடர்ச்சி.

| தொடர் எண்ணும் அமைச்சர்களின் பெயரும். | | பயணப்படியாக வாங்கிய தொகை. ரயில் அல்லது விமானக் கட்டணம். | நாட்படி. | மைலேஜ் (இருந்தால்). | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. ந.பை. | ரூ. ந.பை. | ரூ. ந.பை. | ரூ. ந.பை. |
| 6 திரு. வி. ராமையா, மின்சாரத் துறை அமைச்சர். | 1957-58 .. | 4,189 72 | 702 50 | 1,546 50 | 6,438 72 |
| | 1958-59 .. | 6,772 17 | 1,600 00 | 2,194 00 | 10,566 17 |
| | 1959-60 .. | 9,623 80 | 1,631 25 | 658 00 | 11,913 05 |
| | 1961-61 .. | 5,950 67 | 2,060 00 | 451 00 | 8,461 07 |
| | (1-ந் தேதி ஏப்ரல் 1961 முதல் 15-ந் தேதி டிசம்பர் 1961 வரை.) | 5,661 32 | 1,848 75 | 238 50 | 7,748 57 |
| 7 திரு. பூ. கக்கன், பொதுப்பணித் துறை அமைச்சர். | 1957-58 .. | 1,978 26 | 340 00 | 4,471 00 | 6,789 26 |
| | 1958-59 .. | 3,084 42 | 1,640 00 | 3,334 50 | 8,058 92 |
| | 1959-60 .. | 5,935 89 | 1,425 00 | 3,393 00 | 10,753 89 |
| | 1960-61 .. | 4,481 36 | 1,260 00 | 527 00 | 6,268 36 |
| | (1-ந் தேதி ஏப்ரல் 1961 முதல் 15-ந் தேதி டிசம்பர் 1961 வரை.) | 4,116 44 | 963 00 | 2,093 00 | 7,172 44 |

APPENDIX

18th March 1963]

| தொடர் எண்ணும் அமைச்சர்களின் பெயரும். | | ரயில் அல்லது விமானக் கட்டணம். | நாட்படி. | மைலேஜ் (இருந்தால்). | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| 8 திருமதி லூர்தம்மாள் சைமன், ஸ்தல நிர்வாக அமைச்சர். | 1957-58 .. | 3,158 19 | 490 00 | 6,148 50 | 9,796 69 |
| | 1958-59 .. | 2,120 62 | 7,333 29 | .. | 9,453 91 |
| | 1959-60 .. | 3,243 76 | 7,029 38 | .. | 10,873 14 |
| | 1960-61 .. | 5,487 48 | 6 880 81 | .. | 12,368 29 |
| | (1-ந் தேதி ஏப்ரல் முதல் 15-ந்தேதி டிசம்பர் 1961 வரை.) | 3,580 20 | 4,103 04 | .. | 7,683 24 |

**குறிப்பு.**—நிதி அமைச்சர், ரெவின்யூ அமைச்சர், தல நிர்வாக அமைச்சர் இவர்கள் 1958-ம் வருடம் ஏப்ரல் மாதம் 1-ந்தேதி முதல் 1961-ம் வருடம் டிசம்பர் மாதம் 5-ம் தேதி வரை வாங்கிய நாட்படி, மைலேஜ் சம்பந்தமாகத் தனித்தனி இலக்கங்கள் கிடைக்காமையால் மேலே 4-வது பத்தியில் கொடுத்துள்ளதைப்போல மொத்த இலக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

# இணைப்பு

[397-ம் பக்கத்திலுள்ள 280 எண்ணுள்ள நட்சத்திரக் குறியிட்ட கேள்வியின் பதிலைக் காண்க.]

1957 முதல் 1961 முடிய ஒவ்வொரு அமைச்சரும் வாங்கிய பயணப்படியைக் காட்டும் அறிக்கை.

| தொடர் எண்ணும் அமைச்சர்களின் பெயரும். | | பயணப்படியாக வாங்கிய தொகை. | | | |
|---|---|---|---|---|---|
| | | ரயில் அல்லது விமானக் கட்டணம். | நாட்படி. | உடமேஜ் (இருந்தால்). | மொத்தம். |
| (1) | | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. ந.பை. | ரூ. ந.பை. | ரூ. ந.பை. | ரூ. ந.பை. |
| 1 திரு. கு. காமராஜ், முதலமைச்சர் .. | 1957 .. .. | 2,839 86 | 395 00 | 266 50 | 3,501 36 |
| | 1958 .. .. | 6,667 31 | 320 00 | 740 50 | 7,727 81 |
| | 1959 .. .. | 5,396 07 | .. | 622 50 | 6,018 57 |
| | 1960 .. .. | 5,833 50 | .. | 641 50 | 6,475 00 |
| | 1961 (15-ந் தேதி முதல் டிசம்பர் மாதம் 1961 வரை.) | 5,135 19 | .. | 266 50 | 5,401 69 |
| 2 திரு. எம். பக்தவத்சலம், உள்துறை அமைச்சர். | 1957 .. .. | 6,099 50 | 595 00 | 1,488 03 | 8,182 53 |
| | 1958 .. .. | 7,761 11 | 970 00 | 3,443 29 | 12,174 40 |
| | 1959 .. .. | 7,794 57 | 960 00 | 3,953 76 | 12,708 33 |
| | 1960 .. | 9,635 33 | 1,230 00 | 2,841 21 | 13,706 54 |
| | 1961 (15-ந் தேதி முதல் டிசம்பர் மாதம் 1961 வரை.) | 6,398 21 | 1,015 00 | 3,192 17 | 10,605 38 |
| 3. திரு. சி. சுப்பிரமணியம், நிதி அமைச்சர். | 1957–58 .. | 5,390 35 | 1,543 75 | 1,707 64 | 8,641 74 |
| | 1958–59 .. | 5,837 74 | 4,959 94 | .. | 10,797 78 |
| | 1959–60 .. | 7,374 14 | 3,895 84 | .. | 11,269 98 |
| | 1960–61 .. | 9,158 73 | 4,177 08 | .. | 13,335 81 |
| | 1-ந் தேதி ஏப்ரல் 1961 முதல் 15-ந் தேதி டிசம்பர் 1961 வரை.) | 5,477 53 | 2,346 16 | .. | 7,825 69 |
| 4 திரு. எம். ஏ. மாணிக்கவேலு, ரெவின்யூ அமைச்சர். | 1957–58 .. | 4,204 84 | 303 75 | 2,645 00 | 7,153 18 |
| | 1958–59 .. | 5,064 31 | 4,455 24 | .. | 9,519 55 |
| | 1959–60 .. | 4,623 58 | 4,008 01 | .. | 8,631 59 |
| | 1960–61 .. | 3,636 95 | 4,709 90 | .. | 8,346 85 |
| | (1-ந் தேதி ஏப்ரல் 1961 முதல் 15-ந் தேதி டிசம்பர் 1961 வரை.) | 3,253 99 | 3,194 79 | .. | 6,448 78 |
| 5 திரு ஆர். வெங்கட்டராமன், தொழில் அமைச்சர். | 1957 .. .. | 3,762 81 | 615 00 | 1,269 00 | 5,646 81 |
| | 1958 .. .. | 3,381 63 | 225 00 | 1,415 50 | 5,022 31 |
| | 1959 .. | 3,812 36 | 615 00 | 1,637 50 | 6,064 86 |
| | 1960 .. .. | 3,769 05 | 690 00 | 824 10 | 5,283 85 |
| | 1961 (15-ந் தேதி டிசம்பர் 1961 வரை). | 4,582 62 | 797 50 | 122 00 | 5,502 12 |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Tuesday, 19th March 1963.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### மருத்துவ மனை (தஞ்சாவூர்)

* 283 கேள்வி.—திரு. ஆ. துரை அரசன்: கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மருத்துவமனையில் உணவு வகைக்காக தினம் நோயாளிகளுக்கு ஏற்படுகின்ற செலவு எவ்வளவு?

(இ) நோயாளிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற பால் எந்த வகையைச் சார்ந்தது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) Rs. 1.115.98 nP.

(b) For the preparation of arrowroot conjee, coffee and for drinking purposes for patients, cows' milk is used and for the preparation of butter milk and curd, buffaloe's milk is used. To meet shortage in supply of cow's milk, condensed milk is used.

திரு. ஆ. துரை அரசன்: பவுடர் பால் வழங்குகிறார்களே, நோயைத்தீர்ப்பதற்கு வந்திருக்கிறவர்களுக்கு இந்த பவுடர் பால் வழங்கப்படுவதால் வியாதி அதிகரிக்கிறது என்று டாக்டர்கள் கூறுகிறார்களே, அது பற்றி அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: பசுவின் பால், எருமைப் பால், கண்டன்ஸ்ட் மில்க் தவிர பவுடர் பால் உபயோகிப்பதில்லை.

திரு. எம். டி. தியாகராஜு பிள்ளை: தஞ்சை ஜில்லா தலைநகரில் பால் கூட்டுறவு சொஸைட்டி நன்கு நடக்கிறது. அந்த சொஸைட்டியிலிருந்து பால் வாங்காமல் தனிப்பட்டவர்களிடமிருந்து ஆஸ்பத்திரிக்கு பால் வாங்குவதால் அநேக குறைபாடுகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது பற்றி என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: டெண்டர் பிரகாரம் தான் வாங்குகிறார்கள். குறைவாக இருக்கும்போது யூனியனிலிருந்தும் வாங்கப்படுகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** நோயாளிகளுக்கு அழுகிய பழங்களை கொடுக்கிறார்கள். அப்படி அழுகிய பழங்கள் கொடுக்கப்படாத அளவிற்கு, இதை மாற்றக் கூடிய அளவிற்கு, காண்ட்ராக்டர்களுக்குச் சொல்லி நல்ல பழம் கொடுக்க ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பழங்கள் சப்ளை செய்கிற கண்ட்ராக்டர்களுக்கு அழுகிய பழம், சிறிய பழம் போன்றவை கொடுக்கக்கூடாது என்று கண்டிப்பாக உத்தரவு போட்டிருக்கிறோம். பெரிய வைட்டமின் உள்ள பழங்களாக கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

**திரு. ஆ. துரை அரசன் :** 1962 அக்டோபர் 13-ம் தேதியிலிருந்து 30-ம் தேதி வரை அந்த மருத்துவ நிலையத்தில் என் துணைவியாரைச் சேர்த்திருந்த காரணத்தினால் நான் அங்கு இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது பவுடர் பால் வழங்கப்படுவதை நானே நேரில் பார்த்து அதுபற்றி கேட்டதற்கு ஷார்ட்டேஜ் இருப்பதால் வழங்குகிறோம் என்று அங்குள்ள ஸ்டாப் தெரிவித்தார்கள். ஆகவே இனிமேலாவது இம்மாதிரி தவறு ஏற்படாமல் இருக்க அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அம்மாதிரி இருந்திருந்தால் அங்கத்தினர் அவர்கள் அதுபற்றி எழுதிக் கொடுத்தால் அது கவனிக்கப்படும்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** கூட்டுறவு சொஸைட்டி லட்சக்கணக்கில் ரூபாய் செலவு செய்து பால் சப்ளை செய்கிறார்கள். குறைந்த விலைக்கு டெண்டர் கொடுப்பதால், தனிப்பட்ட வியாபாரிகள் குறைந்த விலைக்கு டெண்டர் போடுகிறார்கள் ; அப்படி குறைந்த விலைக்குக் கொடுப்பதால் நல்ல பால் சப்ளை செய்ய முடியவில்லை. ஆகவே கூட்டுறவு சொஸைட்டி மூலம் பால் வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அங்கத்தினர் அவர்களின் ஆலோசனைப்பற்றி பரிசீலிக்கலாம். தனிப்பட்டவர்கள் மூலம் வாங்கிக் கொடுக்கிற பாலும் "அனலைஸ்" செய்துதான் வாங்கப்படுகிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** மருத்துவமனைகளில் நோயாளிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற உணவு ஒழுங்காகவும், முறைப்படியும், குறையாமலும் கொடுக்கப்படுகிறதா என்று அவ்வப்போது கண்காணிக்கப்படுகிறதா ? அதற்கு என்ன முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** நல்ல முறையில்தான் உணவு அளிக்க அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. நடக்க முடியாத பேஷண்ட்ஸ்-க்கு படுக்கை அருகில் கொண்டு போய் கொடுக்கப்படுகிறது. மற்றவர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சாப்பிடுகிறார்கள். நல்ல கண்காணிப்பும் இருந்து கொண்டு வருகிறது.





**திரு. சா. கணேசன் :** கூட்டுறவு ஸ்டோர்கள் பாலுக்கு டெண்டர் போடும்போது விலை சிறிது கூடுதலாக இருக்கிறது என்ற காரணத்திற்காக அதை மறுக்காமல் அந்த பாலையே முழுவதும் சப்ளை செய்யவேண்டுமென்றும் அதோடு சில சமயங்களில் அவர்கள் வியாபார ரீதியில் போய் விடுவதால் ஆஸ்பத்திரிகளுக்கு அவர்கள் ஒழுங்காக தேவையான அளவு முழுவதையும் சப்ளை செய்ய வேண்டுமென்றும் நிர்ப்பந்தம் செய்து அதன் மூலம் நோயாளிகளுக்கு நல்ல பால் கிடைக்க வழி ஏற்படுவதைக் கவனித்து அரசாங்கம் அதற்கு ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** கூட்டுறவு சொஸைட்டிகள் நகர்புறங்களுக்கெல்லாம் சப்ளை செய்வதால் சப்ளை செய்ய சில சமயம் அவர்களுக்கும் கஷ்டம் ஏற்படுவதால் டெண்டர் "கால்ஃபார்" செய்து வாங்கும் நிலை ஏற்படுகிறது. இருந்தபோதிலும் அங்கத்தினர் அவர்களின் ஆலோசனையும் யோசிக்கப்படும்.

**திரு. மூ. சண்முகம் :** கூட்டுறவு சங்கங்கள் பால் விநியோகம் செய்வதற்கு இஷ்டப்பட்டு டெண்டர் கொடுத்தால் அதற்கு ஏதாவது சலுகை கொடுக்கப்படுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சில ஆஸ்பத்திரிகளில் கூட்டுறவு சொஸைட்டிகளுக்கு சலுகை கொடுத்து வாங்கிக் கொண்டுதானிருக்கிறார்கள்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** பாலும் பழமும் கைகளில் ஏந்தி பணிப் பெண்கள் பரிவுடன் நோயாளிகளுக்குக் கொடுப்பதால் வியாதி சீக்கிரத்தில் குணமடைகிறது என்பது உண்மையா.

(பதில் இல்லை.)

**பவர் போரிங் செட் (செஞ்சி பஞ்சாயத்து யூனியன்)**

*284 **கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர் :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி பஞ்சாயத்து யூனியனுக்கு இரண்டு பவர் போரிங் செட் அரசாங்கத்தில் சப்ளை செய்யும்படி கோரிக்கை வந்ததா ?

(இ) ஜில்லா அபிவிருத்தி கவுன்சிலும் சிபார்சு செய்துள்ளதா ?

(உ) அதன்பேரில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) & (இ) இல்லை.

(உ) வினவிற்கு இடமில்லை.

(a) & (b) No.

(c) Does not arise.

**திரு. கு. கோபால கவுண்டர் :** செஞ்சித் தாலுகா பெரும் பாறைப் பிரதேசமாக இருப்பதால் 12 அடி கிணறு வெட்டினாலும் பாறை தென்படுகிறது. ஆக ஒவ்வொரு கிணறு வெட்டவும் 10,000, 15,000 ரூபாய் செலவாகிறது. ஆகவே செஞ்சி தாலுகாவிற்கு ஒரு தனி பவர் போரிங் செட் கொடுக்க ஆவன செய்வார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** மாநிலத்தில் மொத்தம் 35 தான் இருக்கின்றன. ஜில்லாவைப் பார்த்து, எவ்வளவு தூரம் கொடுக்க முடியும் என்று பார்த்து அங்குள்ள அஸிஸ்டெண்ட் என்ஜினியர், அஸிஸ்டெண்ட் டயரக்டர் இவர்கள் பார்த்து செய்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** வட ஆற்காடு மாவட்டத்தில் பாறைக் கிணறுகள், 100 குழி கிணறு எடுக்க ஒரு கெஜத்திற்கு 1,000 ரூபாயாகிறது. எவ்வளவுதான் அரசாங்கம் கடன் கொடுத்தாலும் கிணறு எடுக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இந்த பவர் போரிங் செட் கொடுத்தால்தான் எடுக்கமுடியும். ஆகவே வட ஆற்காடு ஜில்லாவிற்கு பவர் போரிங் செட் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அன்னியச் செலாவணி அதிகமாகக் கிடைத்து பவர் ட்ரில் அதிகமாக வாங்கும்போது அவை கவனிக்கப்படும்.

**திரு. ஆ. துரை அரசன் :** அறந்தாங்கி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பலவிடங்களிலும் நிறைய ஊற்றுக்கள் இருப்பதாக தொழில் அமைச்சர் அவர்கள்கூட பேசியிருப்பதைப் பார்த்தேன். எனவே, அங்கு கற்பாறைகள் அதிகமாக இருப்பதால் அங்கு பவர் போரிங் செட் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** தமிழ் நாட்டில் பலவிடங்களில் பல தாலூகாக்களில் இம்மாதிரி நிலை இருக்கிறது. எல்லாவற்றையும் பார்த்து எது எது அவசியம் என்று பார்த்து கொடுப்பதில் ஆங்காங்குள்ள ஜில்லா விவசாய அதிகாரிகள், அஸிஸ்டெண்ட் இன்ஜினியர்கள் பார்த்து அதில் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறார்கள்.

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, கிணறை விட சிக்கனமாக இருப்பதால், யூனியன் ஒன்றுக்கு ஒரு போரிங் ஸெட் என்ற வீதத்தில் இந்த போரிங் ஸெட்டைச் சர்க்கார் மூலமாகக் கொடுத்தால் கிராமங்களில் வசதி செய்து கொடுக்க முடியும். ஆகவே அந்த எண்ணம் அரசினருக்கு உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஸெட்டுகள் ஜாஸ்தியாக இருந்தால் அரசாங்கத்திற்கு எண்ணம் இருந்தே தீரும். அப்படி ஸெட்டுகள் ஜாஸ்தியாகக் கிடைக்கும்போது பின்னால் இது பரிசீலனை செய்யப்படும்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** கொடவாசல் யூனியன் வடவேர் கிராமம் ஸ்ரீ சாமிநாத அதியமார் பவர் டிரில் போட 5,000 ரூபாய் செலவு செய்து, சரியாக வேலை செய்ய முடியாமல் ரிப்பேர்



ஆகிவிட்டது. அரசாங்கத்தினிடம் எத்தனை பவர் டிரில்கள் இருக்கின்றன ? அவைகளில் ரிப்பேர் ஆகாமல் வேலை செய்யக் கூடியது எவ்வளவு இருக்கின்றன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** சில இடங்களில் போடும்போது ரிப்பேர் ஆகிவிடுகிறது. அப்படி ரிப்பேர் ஆகி விட்டால் அதற்குத் தேவையான சாமான்களை இங்கேயே செய்வதற்குப் பிரயத்தினம் செய்து கொண்டிருக்கிறோம். நமக்கு பவர் டிரில் மட்டும் அல்ல, ஸ்பேர் பார்ட்ஸும் வேண்டியிருக்கின்றது. அதற்கு இன்னும் அதிக அன்னியச் செலாவணி வேண்டும். மேலும் அதிகமாக வாங்குவதற்குப் பிரயத்தினம் செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** ஸார், சேலம் ஜில்லாவுக்கு ஒரு பவர் போரிங் செட் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்த மாநிலத்திலேயே 35 பவர் டிரில் இருக்கிறது என்று சொன்னேன். சேலத்தில் இருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது. சேலத்தில் இருக்குமானால் அதையும் சேர்த்துத் தான் இந்த 35 செட்டுகள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, இப்போது விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிற பவர் போரிங் செட் அன்னிய நாணயச் செலாவணி காரணத்தினால் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். விவசாயிகளுக்குக் கூட இந்த மாதிரிச் சலுகை அளிக்கவில்லை என்று சொன்னால் விவசாயிகள் எப்படி முன்வருவார்கள். விவசாயத்திற்காகவாவது சலுகை அளித்து இந்த மாதிரி சாமான்களை அதிகமாக வரவழைக்க சர்க்கார் ஆவன செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** பவர் டிரில் வாங்கி வினியோகம் செய்வதிலே விவசாயிகளுக்குத் தான் முதலிலே கொடுக்கப்படுகிறது. விவசாயிகளுக்காகத்தான் இந்த ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். வேலை யில்லாத நேரங்களில் தான் வேறு வேலைகளுக்குக் கொடுக்கிறோம்.

**திரு. செ. சதாசிவம் :** இப்போது வைத்திருக்கிற பவர் டிரில்களை வைத்து இந்த ஆண்டிலே போட இருக்கிற 30 குழாய் கிணறுகளைப் போட அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** இதற்கு நான் உடனடியாக பதில் சொல்ல முடியாது. பரிசீலனை செய்து பார்த்துத் தான் இந்த ஆண்டிலே போட முடியுமா, முடியாதா என்று சொல்லவேண்டும்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** இந்த பவர் போரிங் செட்டானது பஞ்சாயத்து யூனியனுக்கு ஒன்றாக இருந்தால், உணவு உற்பத்தித் திட்டத்தில் நன்மை பயக்கும் என்று கருதி, நம் நாட்டிலேயே இதைச் செய்து தாராளமாக வழங்க நம் சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சி என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்போது அன்னிய நாட்டிலிருந்து அன்னிய நாட்டுச் செலாவணி பெற்று வாங்க வேண்டியிருக்கிறது. இப்பேர்ப்பட்ட சாமான்களை நம் நாட்டில் செய்ய மத்திய அரசாங்கம் தக்க ஏற்பாடுகளைச் செய்யும்.

**திரு. சி. பொன்னுசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த ஆலோசனைக் குழுவில் அன்னிய நாடு சென்று வந்த நிபுணர்கள் இருக்கிறார்களா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** இதிலே பல அங்கத்தினர்களின் பெயர்கள் இருக்கின்றன. அன்னிய நாடு சென்று வந்தவர்களா இல்லையா என்ற தகவல் என்னிடம் இல்லை.

### தொதுவர்களுக்கு கூட்டுறவு சங்கம்

* 286 கேள்வி.—**திரு. டி. கார்ச்சா கவுடர்:** கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லாவிலுள்ள தொதுவர்கள் (Todas) தங்களுக்கு ஒரு கூட்டுறவு சங்கம் தேவை என்று அரசாங்கத்திற்கு மனு செய்துள்ளனரா?

(இ) ஆம் என்றால், அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

**கனம் திரு. பூ. கக்கன்:** (அ) இல்லை. ஆனால் உதகை தாலுகாவிலுள்ள தொதுவர்களுக்காகக் கூட்டுறவு கடன் சங்கம் ஒன்றை அமைக்க ரூ. 15,500 வரை நிதி உதவி அளிக்கலாமெனக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் யோசனை கூறியிருந்தார்.

(இ) இந்த யோசனை தற்போதைக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

(*a*) No, Sir. But the Registrar of Co-operative Societies submitted proposals for the grant of financial assistance to the extent of Rs. 15,500 for the organisation of a Co-operative Credit Society for the Todas in Ooty taluk.

(*b*) The proposals were deferred for the present.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** ஸார், நீலகிரி ஜில்லாவிலுள்ள இந்த தொதுவர்கள், ஆதி வாசிகள், ஜில்லாவுக்கே முதல் முதலாக வந்தவர்கள். இவர்கள் விவசாயிகள். இவர்களுக்கு 500 ஏக்கர்களுக்கு மேல் பூமி இருக்கின்றது. விவசாயமும் செய்கிறார்கள். தற்போது அவர்களுக்கு கூட்டுறவு சங்கம் அமைப்பதில் எமர்ஜென்சி என்று சொல்லித் தள்ளிப் போடாமல், உடனடியாக அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** இது தேச நெருக்கடி காரணமாகத்தான் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். இருந்தாலும் கனம் அங்கத்தினர் கேட்டுக்கொள்வதால் இது பற்றிப் பரிசீலனை செய்யப்படும்.

### *Cause-way (Cheyyar river)*

* 287 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR: Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal to construct a cause-way across the Cheyyar river near Thachur on Arni-Devikapuram road in North Arcot district during the Third Five-Year Plan?

**கனம் திரு. வெ. ராமையா:** இல்லை.





### கரும்பு செஸ்

* 283 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கரும்பு செஸ் வசூலிப்பதினின்றும் எந்த சர்க்கரை ஆலைக்கேனும் விதி விலக்களிக்கப்பட்டதா?

(இ) ஆம் எனின், எந்தெந்த ஆலைக்கு எந்த அளவில் விலக்களிக்கப்பட்டது?

(உ) அவ்வாறு அனுமதிக்கக் காரணம் என்ன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** (அ) கரும்புத் தீர்வை செலுத்துவதிலிருந்து எந்தச் சர்க்கரை ஆலைக்கும் விலக்கு அளிக்கப்படவில்லை.

(இ) & (உ). இக் கேள்விகளுக்கு இடமில்லை.

(*a*) No sugar factory has been exempted from the payment of sugarcane cess;

(*b*) & (*c*): Do not arise.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** சென்ற ஆண்டு விதித்த கரும்பு செஸ் அதிக வரி விதிப்பிலிருந்து கூட்டுறவு ஆலைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. பூ. கக்கன்:** புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு ஆலைகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கூட்டுறவு முறையிலே ஆலைகள் வைத்திருக்கிறவர்கள் கரும்பு பயிரிடுபவர்களிடமிருந்து அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற குறைந்த பட்ச விலைக்கு வாங்குவதோடு கூட, டிரான்ஸ்போர்ட் சப்ஸிடியும் அங்கு இருக்கிற விவசாயிகளுக்கு கொடுக்கிறார்கள். ஆனால், எங்கள் பகுதியிலே தனிப்பட்ட முறையிலே மில் வைத்திருப்பவர்கள் அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற குறைந்தபட்ச விலைக்கு வாங்கினாலும், எங்களுக்கு டிரான்ஸ்போர்ட் சப்சிடி கிடைப்பதில்லை. எங்களுக்கும் டிரான்ஸ்போர்ட் சப்சிடி கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பழைய ஆலைகள் நன்றாக லாபகரமாக வேலை செய்கிறது. புதியதாக ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு ஆலைகளை என்கரேஜ் செய்யவேண்டுமென்று, அவர்களுக்கு ஒத்தாசை உதவி செய்யவேண்டுமென்று, இந்தச் சலுகை கொடுக்கப்படுகிறது.

* 289 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் கரும்பு ஆலையிலிருந்து 1957-62 வருடங்களில் மொத்தமாக வசூலித்த கரும்பு செஸ் தொகை எவ்வளவு?

திரு. க. தா. பெருமாள் ராஜு : ஸார், பாசன வசதியற்ற தாளவாடி யூனியனுக்காவது இந்த பவர் போரிங் செட் கொடுக்க சர்க்கார் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

கனம் திரு. பூ. கக்கன் : தாளவாடியையும் பார்த்திருக்கிறேன். அது மலைப் பிரதேசம். நிறைய இருந்தால் அதையும் பரிசீலனை செய்யலாம்.

திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் : ஜீவ நதியே இல்லாத கிழக்கு ராமநாதபுரம் பகுதிக்கு மிஷின் போரிங் செட் கொடுத்து உதவ ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : காவேரியே ஜீவ நதியாக ஓடிக் கொண்டிருக்கிறது. கிழக்கு ராமநாதபுரம் மட்டுமல்ல, தமிழகத்திலே எந்த விதப் பாகுபாடுமின்றி எந்த இடத்தில் தேவையோ அந்த இடத்தில் கொடுத்து விவசாய மக்களுக்கு ஒத்தாசை உதவிகளை, இப்போது இருப்பதை வைத்துக்கொண்டு செய்கிறோம். மேலும் கிடைக்கும்போது எல்லாவற்றையும் நன்கு கவனித்து ஏற்பாடு செய்யும்.

திரு. சி. பொன்னுசாமி : இந்த பம்பிங் செட்டுகளைக் கொடுப்பதிலே ஒவ்வொரு மாவட்ட கோவாப்பரேடிவ் சொஸைட்டி மூலமாக விநியோகம் செய்ய அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : என்னிடத்தில் அதைப் பற்றிய விவரம் இல்லை. கோவாப்பரேடிவ்வுக்குத் தான் என்று கிடையாது. தனிப்பட்ட நபர்கள் கேட்கிறார்கள். அவர்களுக்கும் கொடுக்கிறோம். கோவாப்பரேடிவ் சொஸைட்டிகள் கேட்டால் அது பரிசீலனை செய்யப்படும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த பவர் போரிங் போட சர்க்காரில் கடன் கொடுக்கிறார்கள். ஆனால் ஏழை விவசாயிகள் அனுபவிக்க முடியாத நிலையில் இருக்கிற காரணத்தினால் இதில் ஏதாவது மான்யம் கொடுக்க சர்க்கார் உத்தேசிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அந்த மாதிரி இப்போது இருப்பதாகத் தெரியவில்லை. ஏழைகள் இரண்டு விதமாக இருக்கிறார்கள் ; பர்ஸ்ட் க்ளாஸ், செகண்ட் க்ளாஸ் என்று இருக்கிறார்கள். (திரு. சா. கணேசன் : இதில் கூடவா பாகப் பிரிவினை ?) முதலிலே 10 ரூபாய் இன்ஸ்பெக்ஷனுக்குக் கட்டவேண்டும். அதையடுத்து ட்ரான்ஸ்போர்ட் ஃபீ பெடிஷனுடன் 200 ரூபாய் கட்டவேண்டும். காஷன் டெபாஸிட் 250 ரூபாயும், ஒரு நாளுக்கு 10 ரூபாய் வீதம் 8 நாட்களுக்கு பணம் கட்டி விட வேண்டும். அவர்களுக்கு உதவி கொடுப்பதைப் பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

அதே போல செகண்ட் க்ளாஸை எடுத்துக்கொண்டால் அவர்கள் கொஞ்சம் ஜாஸ்தி கட்டவேண்டும். அவர்கள் அதிகமாக நன்மை அடையக் கூடியவர்களாகவும், போடுவதிலே அதிகச் செலவு ஏற்படக் கூடியதாகவும் இருக்கக் கூடியவர்கள்.



திரு. சா. கணேசன் : ஏழைகளில் ஃபஸ்ட் க்ளாஸ் ஏழைகள் செகண்ட் க்ளாஸ் ஏழைகள் என்பதற்கு என்ன வரையறை, டெஃபனிஷன் என்று தெரிவிப்பார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : செலவைப் பொறுத்துத் தான் இந்த அளவினை வைத்திருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*Food Advisory Committee*

* 285 *Q.*—Sri A. K. SUBBAIAH (on behalf of Sri M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to constitute an All-Party Food Advisory Committee; and

(*b*) if so, the functions of the Committee?

The Hon. Sri P. KAKKAN : (*a*) No.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. இரா நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சி உணவு ஆலோசனைக் குழு வைப்பதால் உருவான பலன் ஏற்படாது என்று அரசினர் கருதுகிறார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : அப்படி கருதவில்லை. இருந்தாலும் ஏற்கெனவே கமிட்டி இருந்து அதனால் ஜாஸ்தி நன்மை ஏற்படவில்லை. இப்போது அதை ஒத்தி வைத்திருக்கிறோம். வேறு ஒன்றும் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : உணவுப் பிரச்னை மிகவும் முக்கியமான பிரச்னையாக இருக்கிற காரணத்தினால், உற்பத்திப் பெருக்கம் உணவுப் பங்கீடு ஆகிய காரியங்களை கவனிப்பதற்காக அந்தந்த வட்டாரங்களில் சகல கட்சி ஆலோசனைக் குழு நிறுவ அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஒவ்வொரு ஜில்லாவிலும் டெவலப்மெண்ட் கவுன்சில் இருக்கிறது. அதிலே பல பிரதிநிதிகள் இருக்கிறார்கள். அடிக்கடி அவர்கள் எல்லாவற்றையும் பரிசீலித்து அரசாங்கத்திற்குத் தெரிவிக்கிறார்கள். மாநிலத்தைப் பொறுத்த வரையில் முன்பு ஒரு ஆலோசனைக் குழு இருந்தது, அது தான் இப்போது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. விவசாயம் சம்பந்தப்பட்ட மட்டில் விவசாயிகள் ஃபோரம் வைத்திருக்கிறோம், குறிப்பாக ஜில்லாக்களைப் பொறுத்த மட்டில், அவர்கள் விவசாயிகளுக்கு என்னென்ன நன்மைகள் செய்யவேண்டுமென்று யோசனை செய்கிறார்கள்.

(இ) மேற்படி தொகையிலிருந்து கரும்பு ஆலைக்கு ரோடுகள் போட செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

**கனம் திரு. பூ. கக்கன்:** (அ) ரூ. 28,81,498.34 ந. பை.

(இ) ரூ. 7,83,326·41 ந.பை.

(a) Rs. 28,81,498·34 nP.

(b) Rs. 7,83,326·41 nP.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** அரசாங்கம் கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்களில் ஏதோ தவறு இருக்கிறது என்று கருதுகிறேன். ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் டன்கள் கரும்பு ஆடப்படுகிறது. டன் ஒன்றுக்கு 2 ரூபாய் வைத்தால்கூட அதிகமான தொகை வரும். ஆதலால் இந்தப் புள்ளிவிவரத்தில் ஏதாவது தவறுதல் இருக்கிறதா என்பதை முதலில் அறிய விரும்புகிறேன். இரண்டாவதாக, அந்தக் கரும்பு ஆலைகளில் ரோடு மேற்கொள்ளும் வேலை கரும்பு அபிவிருத்தி திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதா? அப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டால் எப்பொழுது அது முடிக்கப்படும்?

**கனம் திரு. பூ. கக்கன்:** கனம் அங்கத்தினர் அவர்கள் புள்ளி விவரத்தை நன்றாக ஆராய்ந்து கேள்வி போடுவார்கள் என்று நினைக்கிறேன். அரசாங்கத்திற்கு வந்துள்ள புள்ளிவிவரங்கள் நல்ல முறையில் பரிசீலனை செய்யப்பட்ட பிறகு தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இந்த மன்றத்திற்குக் கொடுக்கப்படும் புள்ளிவிவரங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டுத் தான் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது கொடுக்கப்பட்ட புள்ளிவிவரம் சரி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அரசாங்க நிலம் (ஒதுக்குதல்)

*290 கேள்வி.—**திரு. முனு. ஆதி:** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மீனம்பாக்கத்தில் கட்டப்பட்டுள்ள பின்னி இன்ஜினீரிங் வொர்க்ஸிற்கு, ஒதுக்கப்பெற்ற அரசாங்க நிலம் எவ்வளவு?

(இ) இதற்கான பெறுமான தொகையாக அரசாங்கம் பெற்றது எவ்வளவு?

(உ) இவ்வளவு பரப்புடைய நிலம் ஒதுக்க, மத்திய அரசாங்கத்திலிருந்து ஏதும் கடிதம் வந்து ஒதுக்கப்பெற்றதா?

THE HON. SRI V. RAMAIAH: (a) & (b) An extent of 1·91 acres has been leased to the company by this Government subject to the payment of an annual rent of Rs. 635 and premium of Rs. 12,700.

**(c) No.**



**திரு. முனு. ஆதி:** இதே போன்று இன்னும் பரந்து கிடக்கின்ற இடங்களில் மற்ற தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கு மனு ஏதாவது வந்திருக்கிறதா? அரசாங்கத்திற்கு அதை உடனே கவனிக்கிற எண்ணம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா:** கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு பதில் சொன்னேன். இதே போன்று மற்ற கேள்விகளையும் கேட்டால் அதையும் பரிசீலனை செய்து பதில் சொல்ல முடியும்.

### ஏரலில் கைதானோர் (திருநெல்வேலி மாவட்டம்)

*291 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டம் தாலூகா ஏரலில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 13-ம் தேதி மாலை நூற்றுக் கணக்கானோர் ஏரல் போலீஸாரால் கைது செய்யப்பட்டது உண்மையா?

(இ) அப்படியானல், காரணமென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) "No," Sir.

(b) Does not arise.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** அரெஸ்டு செய்யப்படாவிட்டாலும் கூட ஏறக்குறைய 140 பேர்கள் நியூஸன்ஸ் சார்ஜ் செய்யப்பட்டு, இரண்டு தினங்களுக்குப் பிறகு ஸ்ரீவைகுண்டம் கோர்ட்டில் 2 ரூபாய் அபராத தண்டனை விதிக்கப்பட்டு, அதை அனுபவித்திருக்கிறார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நியூஸன்ஸ் மற்ற எத்தனையோ குற்றங்கள் செய்ததாக கருதப்படுபவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. என்ன புள்ளி விவரங்கள் வேண்டுமென்று கனம் அங்கத்தினர் அவர்கள் கோருகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

**திரு. எம். எஸ். செல்வராஜன்:** சங்கராந்திக்கு முந்தின தினத்தன்று மாலையிலே பெஜாரில் இருந்தவர்களில் சாமான்கள் வாங்கு கையில் சத்தமாக இருந்தது என்ற காரணத்திற்காக 140 பேர்கள் அரெஸ்டு செய்யப்பட்ட தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** சங்கராந்திக்கு முந்தின நாள் 140 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற தகவல் கனம் அங்கத்தினருக்கு எங்கிருந்து கிடைத்தது என்று தெரியவில்லை. 13—1—1963 தேதியன்று 2 பேர்கள் ஐ.பி.ஸி. 279 செக்ஷன்படி (driving or riding on a public way so rashly on negligently as to endanger human life). அரெஸ்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். 15—1—1963 அன்று சார்ஜ் செய்யப்பட்டார்கள் இப்பொழுது கேஸ் நடக்கிறது.

**திரு. சி. பொன்னுசாமி :** சிறிய கிராமங்களாக இருப்பதினுலே அங்கெல்லாம் பிளாட்பாரம் வசதி கிடையாது. அதுவும் நல்ல நாளை முன்னிட்டு கிராம மக்கள் கூடி பொருள்களை வாங்கும் பொழுது, இது போன்று நடவடிக்கை எடுப்பது, அதாவது அரெஸ்டு செய்வது, நியூஸன்ஸ் சார்ஜ் செய்வது இனிமேலாவது அகற்றப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** சிறிய கிராமமாக இருந்தாலும் பண்டிகை நாளன்று ஒருவருக்கு மேல் ஒருவர் ஓட்டிக் கொண்டு சைகிளை அதிவேகமாக ஓட்டி, மற்றவர்களுக்கு இம்சை அளிப்பது என்பது ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல.

### தற்கொலை செய்து கொண்டோர்

* 292 கேள்வி.—திரு. நா. ப. செங்கோட்டுவேலு : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1961-62-ல் தற்கொலை செய்து கொண்டவர்கள் எத்தனை பேர் ?

(இ) என்ன காரணத்திற்காக ?

(உ) இது முந்திய ஆண்டுகளைவிட அதிகமா அல்லது குறைவா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** (அ) 1961-ம் ஆண்டு தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை—3,164.

1962-ம் ஆண்டு (செப்டம்பர் மாதம் முடிய) தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை—2,516.

(இ) தற்கொலை செய்து கொண்டதற்கான காரணங்கள்:— வேலையின்மை பணத்தொல்லைகள், வறுமை, கடன்தொல்லை நீடித்தநோய், தீராதநோய், காதலில் தோல்வி, பரிட்சையில் தோல்வி, வீட்டுத் தொல்லைகள், நம்பிக்கை மோசம் ; சமூகத்தில் கெட்ட பெயர், இவை போன்றவை.

(உ) 1961-ல் நிகழ்ந்த தற்கொலைகள் 1959-ல் நிகழ்ந்தவற்றை விடக் குறைவு ; ஆனால் 1960-ல் நிகழ்ந்தவற்றைவிடச் சிறிது அதிகம். 1962-ல் நிகழ்ந்த தற்கொலைகளின் எண்ணிக்கை செப்டம்பர் மாத இறுதிவரையில்தான் கிடைத்துள்ளது. ஆகவே இதை முந்திய வருடங்களுக்கான எண்ணிக்கையுடன் ஒப்பிட முடியாது.

(*a*)—

| *Year.* | *Number of suicides.* |
|---|---|
| 1961 .. .. .. .. | 3,164 |
| 1962 (up to the end of September) | 2,516 |

(*b*) Causes for committing suicides :—Unemployment, financial difficulties, poverty, indebtedness, protracted illness, incurable diseases, frustration in love affairs, failure in examination, domestic troubles, infidelity, social stigma and the like.



(*c*) The incidence of suicide in 1961 is less than in 1959 and slightly higher than in 1960. The number of suicides in 1962 is available only up to the end of September and it cannot, therefore, be compared with the figures of the previous years.

**திரு. சா. கணேசன் :** இத்தனை வகையான காரணங்களுக்காக தற்கொலைகள் ஏற்பட்டிருப்பதைக் கணித்து என்னென்ன காரணங்களுக்காக என்னென்ன கொலைகள் ஏற்பட்டன என்பதைக் கண்டு (கனம் சபாநாயகர் : கொலைகளா, தற்கொலைகள் என்று சொல்லுங்கள்) தற்கொலைகளைத்தான் நான் 'மீன்' பண்ணுகிறேன். இருக்கிற விஷயம் தற்கொலையைப் பற்றியே தவிர, பிற கொலையைப்பற்றி அல்ல. அதைக் கணித்து எந்தத் துறையிலே இவை பெருகி வருகின்றன அல்லது ஏற்படுகின்றன, அதற்கு காரணம் என்ன, அதை நிவர்த்திக்க என்ன வழி என்பதையெல்லாம் சட்டமும், மனத்துவமும் (ஸைகாலஜி) உணர்ந்த அறிஞர்களைக்கொண்டு கண்டுபிடிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு உண்டா என்று கேட்க விரும்புகிறேன். அதோடு இன்னொன்றையும் சேர்த்துக் கேட்கிறேன். தற்கொலைகளுக்கு என்ன கருவி அல்லது என்ன முறை அல்லது என்ன மருந்து கையாளப்பட்டன, அவற்றை தடுப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு அல்லது விற்பனையை தடைசெய்வதற்கு ஏதாவது வழிவகைகள் மேற்கொள்ளப்படுமா ? இந்த இரண்டு விஷயங்களையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பொதுவாக சமூகத் துறையிலே இது கவனிக்கப்பட்டு வருகிற விஷயம். பிரத்தியேகமாக கவனிக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. ஒன்று கனம் அங்கத்தினர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மிக செழிப்பான ஒரு நாடு, வேலையில்லாத் திண்டாட்டமே கிடையாத நாடு, வேலை மக்களைத் தேடிக்கொண்டு போகிற நாடு, யுத்தங்களால் கூட பாதிக்கப்படாத நாடு, இயற்கை வளம் வாய்ந்த நாடு, அந்த நாட்டில் தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகம் என்று உலக தற்கொலை புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. தற்கொலை செய்துகொள்வதற்கு மருந்துகள், கருவிகள் இவைகளை பயன்படுத்துகிறார்கள் என்றால், பாஷாண மருந்துகள் விற்கப்படுவது சாதாரணமாக கண்காணிக்கப்படும். ஆனால், பாஷாணத்தை உட்கொண்டு தற்கொலை செய்துகொள்பவர்களை நாம் அடியோடு 9-0 a.m. தவிர்க்க முடியாது. அதுபோலத்தான் கிணற்றிலோ, குளத்திலோ விழுந்து தற்கொலை செய்துகொள்ளுபவர்களையும் தடுக்கவே முடியாது.

**திரு. மு. கருணாநிதி :** 1961-62-ல் தற்கொலை செய்து கொண்ட சுமார் 5,000 பேரில் வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக தற்கொலை செய்து கொண்டவர்கள் எத்தனை பேர் ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைப் பற்றிய புள்ளிவிவரங்கள் என்னிடமில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** அமைச்சர் அவர்கள் தற்கொலைக்கான காரணங்களைக் கூறும்பொழுது, வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் என்றெல்லாம் சொன்னார்கள். வறுமை ஒரு

**திரு. கோ. சி. மணி :** மூட்டைப் பூச்சி கொல்லும் மருந்து, எலி கொல்லும் மருந்து இவைகளைச் சாப்பிட்டு தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அம்மாதிரி சில தற்கொலைகள் ஏற்படுகின்றன. தற்கொலை செய்து கொள்ள விரும்புகிறவர்கள் சுலபமாகத் தற்கொலை செய்து கொள்ளலாம். அது எல்லோருக்கும் தெரியும் (சிரிப்பு).

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** உலக வாழ்க்கையிலே வெறுப்படைந்து சிலர் தற்கொலை செய்து கொள்ள முயலுகிறார்கள். அப்படிச் செய்ய முற்படும்போது அரைகுறையாகச் செய்கிறவர்களின் மீது அரசாங்கம் மீண்டும் தண்டனை விதிக்க நடவடிக்கை எடுப்பதன் காரணமாக கஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். ஆகவே அதை மாற்றுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினருடைய கருத்தை நான் ஏற்றுக்கொண்டு அதை நிறைவேற்றுவது என்றால், எப்படி தற்கொலை செய்து கொள்வது என்று பிரசாரம் செய்ய வேண்டும். இப்பொழுது நாம் தற்கொலை செய்து கொள்ளக் கூடாது என்று சொல்லுகிறோம். அதனால்தான் தற்கொலை செய்ய முயற்சிப்பவர்களுக்கு தண்டனை விதிக்கப்படுகிறது.

**திரு. அ. தியாகராஜன் :** இந்த மாதிரி தற்கொலைகள் செய்யாமல் இருப்பதற்கு, வைரத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவதிப்படுகிற தொழிலாளர்களை இது தூண்டுவதாகும். அவ்வாறு "அபெட்" செய்வது தவறு. அப்படிச் செய்தால் ஒருக்கால் சட்டம் பிரயோகிக்கப்படலாம். இந்த மன்றத்திலே இருக்கிறவர்கள் தற்கொலை செய்வதற்கு யாரையும் தூண்ட முயற்சி செய்யக்கூடாது. இப்படிப் பேசுவதே குற்றம் என்பதை நான் மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** மனப் பக்குவம் இல்லாத காரணத்தால் சிலர் தற்கொலைகள் செய்துகொள்ளுகிறார்கள். இப்படி தற்கொலை செய்து கொள்ளுவதைத் தடுக்க கல்வித் துறையிலே ஏதாகிலும் அபிவிருத்தி செய்து கிராமப்புறங்களிலே நல்ல சினிமா விளம்பரங்கள் செய்து கொடுக்க சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** மனப்பக்குவம் இல்லாதவர்கள் தான் தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள் என்பது இல்லை. நல்ல மனப்பக்குவம் உள்ளவர்களும்கூட தெரிந்து பெரிய பெரிய குற்றங்களைச் செய்துவிட்டு அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக தற்கொலை செய்துகொள்கிறார்கள். பிரத்தியேகமாக பள்ளிகள் வைத்தோ, சினிமாக்கள் மூலமாகவோ பிரசாரம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.



**திரு. ர. சம்பங்கி :** அமைச்சர் அவர்கள் கொடுத்த புள்ளி விவரங்களின்படி தற்கொலை செய்துகொண்டவர்களில் ஆண்கள் அதிகமா, பெண்கள் அதிகமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

*Copies of Constitution of India*

* 293 *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether the Government are aware that the copies of the Constitution of India are not available for sale in the Government Press, and

(*b*) if so, the action taken in the matter ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) மாநில அரசாங்கம் (செய்தி விளம்பரத்துறை) அச்சிட்ட இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் (1—12—1957 வரை திருத்தப்பட்டது) தமிழ்ப் பிரதிகள், அரசாங்க வெளியீட்டு டிப்போவில் விற்பனைக்குக் கிடைக்கின்றன. இந்திய அரசாங்கம் வெளியிட்டுள்ள அரசியலமைப்பின் ஆங்கிலப் பிரதிகள் இப்போது இருப்பில் இல்லை.

(இ) ஆங்கிலப் பிரதிகள் தயாரானதும் அவற்றை அனுப்பும்படி புது டில்லியில் உள்ள இந்திய அரசாங்க வெளியீடுகள் மானேஜருக்கு அரசாங்க அச்சக மேற்பார்வையாளர் இன்டென்ட் அனுப்பியிருக்கிறார்.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் :** இந்தச் சட்டத்தின் நகல் அங்கத்தினர்களுக்கு இலவசமாகக் கொடுக்கப்படுமா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** அப்படி இலவசமாக கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்பது பரிசீலனை செய்யப்படும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** தமிழ் நாட்டில் அரசியல் அமைப்புச் சட்டம் எத்தனை பிரதிகள் அச்சிடப்பட்டன. அதில் எத்தனை இந்த ஆண்டு விற்பனை ஆயிற்று ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** எத்தனை அச்சிடப்பட்டன என்ற தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. ஆனால் அச்சிடப்பட்ட பிரதிகள் இப்பொழுது கைவசம் இருக்கின்றன. ஒரு பிரதியின் விலை ரூபாய் 2.50 ந.பை.

**திரு. து. ப. அழகமுத்து :** சென்னை மாகாணத்தில் இயற்றப்பட்ட சட்டங்கள் பூராவையும் சட்டசபை அங்கத்தினர்களுக்கு இனமாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இதைப்பற்றி இதற்கு முன்னாலேயே பதில் சொல்லி இருக்கிறேன்.

**தனியார் துறை பஸ்கள்**

*294 கேள்வி.—திரு. ஆ. துரை அரசன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1962-ல் தனியார் துறையில் ஓடுகின்ற பஸ்களின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) 1962 ஜனவரி மாதம் முதல் அக்டோபர் முடிய அரசினருக்கு வரியாகக் கிடைத்த தொகை எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) 3,847 route buses and 928 spare buses.

(b) Rs. 698 lakhs roundly.

திரு. மு. கருணாநிதி: இந்த பஸ்களில் எத்தனை தனியார் துறையினருக்கு சொந்தமானவை என்பதைக் கூற முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: தனியார் துறையில் ஓடுகின்ற பஸ்களின் எண்ணிக்கையைப்பற்றித்தான் கேள்வி கேட்கப் பட்டிருக்கிறது. மற்ற விவரம் என்னிடம் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: ஸார், தனியார் துறையில் ஓடுகின்ற பஸ்களின் எண்ணிக்கையைக் குறைக்க அரசாங்கத்திற்கு ஏதாவது உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஏற்கெனவே இதைப்பற்றி பதில் சொல்லி இருக்கிறேன். அப்படிப்பட்ட உத்தேசம் ஒன்றும் இல்லை.

*Stage Carriages, Ramanathapuram (Tax Collection)*

*295 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR: Will the Hon. the Chief Minister be pleased to state the circumstances under which the tax payable in respect of stage carriages in Ramanathapuram district for the quarter commencing from 1st January 1963 was notified to be paid on or before 28th February 1963, as per G.O. Ms. No. 317, Home, dated 28th January 1963?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Due to continuous rains, the roads in the District became damage and consequently there were interruptions in the scheduled services resulting in poor collections. To minimise hardship to operators, extension of grace time was allowed.

திரு. சா. ராமசாமி: தனியார் நடத்தும் பஸ்களுக்கு சினிமா டிக்கட்டை அரசாங்க முத்திரையிட்டு தருவதுபோல, டிக்கட் கொடுக்கப்படுவதற்கு அரசாங்கம் ஏதாவது உத்தரவு பிறப்பித் திருக்கிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தக்கேள்வி முதல் கேள்வி யிலிருந்து எழவில்லை. வேறு தனி கேள்வி போட வேண்டும்.



திரு. கே. ஏ. மதியழகன்: தனியார் துறையில் இன்று ஐந்து பஸ்களுக்கு மேல் வைத்துக்கொண்டிருக்கக் கூடியவர்களுடைய எண்ணிக்கை என்ன என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இந்தக் கேள்வி இராமனாத புரத்தில் பஸ்களுக்கு வரி கட்டுவதைப்பற்றியது. அதனால் இந்தக் கேள்வி அதில் வராது.

**சிலட்டூர் ஏரி (அறந்தாங்கி தாலுக்கா)**

*296 கேள்வி.—திரு. ஆ. துரை அரசன்: கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) அறந்தாங்கி தாலுக்கா சிலட்டூர் ஏரி, சோட்டுப் புலிவாத்தலையைப் புதுப்பிக்க வேண்டுமென்று அரசினருக்கு கோரிக்கைகள் வந்தனவா?

(இ) ஆமென்றால், விபரமென்ன?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) வந்தன.

(இ) தஞ்சாவூர் மாவட்டம் அறந்தாங்கி தாலுகாவில் உள்ள சிலட்டூர் ஏரிக்கு தண்ணீர் வருவதற்காக சோட்டுப்புலி வாத்தலை வாய்க்காலைச் செப்பனிட்டு புதுப்பிக்கும்படிக் கோரிக்கைகள் வந்தன. இந்த வாய்க்கால் ஆழமான ஒரு பள்ளத் தாக்கைக் கடந்து வரவேண்டியிருப்பதால், அங்கே வாய்க்கா லுக்கு கரைகட்டித் தண்ணீரைத் தேக்கவேண்டி வரும். அங்குள்ள குடியானவர்கள் கரையை உடைத்துத் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதனால் சிலட்டூர் ஏரிக்கு தண்ணீர் ஏறாது. ஆகவே, இத் திட்டத்தை மேற்கொள்வதால் பயனில்லை யென்று தெரிகிறது.

(a) Yes.

(b) Requests were made for carrying out repairs and improvements to Chottupulivathalai channel for the supply of water to Silathur tank in Aranthangi taluk of Thanjavur district. The proposal was found to be not feasible as a deep valley has to be negotiated involving formation of the channel in embankment and the ryots enroute are likely to cut open the bund for tapping water resulting in the Silathur tank being not benefited.

**சிறு பாசனத் திட்டம்**

*297 கேள்வி.—திரு. ஆ. துரை அரசன்: கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

அறந்தாங்கி தாலுக்கா, நரசிங்கக் காவேரியில் சிறு பாசனத் திட்டத்தின்கீழ் அணைகட்டும் உத்தேசமுண்டா?

கனம் திரு. பூ. கக்கன்: ஆம்.

முக்கியமான காரணமாய் இருப்பதற்கு, சர்க்கார் சோஷலிஸப் பாணியை சரியாக அமுல் நடத்த முன்வராத காரணத்தினால் . . . . ,, . . .

**கனம் சபாநாயகர் :** இது ஒரு பெரிய ஸ்பீச் ஆக இருக்கிறதே. கனம் அங்கத்தினருடைய கேள்வி என்ன ?

**திரு. கே. ஏ. மதியழகன் :** சர்க்கார்தான் இந்தத் தற்கொலைகளுக்கு மறைமுகமான காரணம் என்பதை உணருகிறார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினர் என்ன அபிப்பிராயம் வேண்டுமானாலும் . வைத்துக் கொள்ளலாம். அவர்கள் சர்க்காருடைய போக்கையெல்லாம் நன்கு கற்று உணர்ந்தவர்கள். அவர்களுக்கு பிரத்தியேகமான அபிப்பிராயங்கள் உண்டு. அவர் கேட்ட உப கேள்விக்கு விடையளிக்கும் வகையிலேதான், வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், இவை இல்லாத நாட்டிலேயே தற்கொலைகள் அதிகமாக இருக்கின்றன என்று சொன்னேன்.

**திரு. டி. எல். சசிவர்ண தேவர் :** சமீபத்தில் தங்கக் கட்டுப்பாடு கொண்டு வந்த காரணத்தினால், அதன் மூலமாக வேலையிழந்து தற்கொலை செய்து கொண்ட பொற்கொல்லர்களின் கணக்கு என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்தக் கணக்கு என்னிடம் இல்லை. பொற்கொல்லர்கள் பிரச்சனை தீருவதற்கு தற்கொலையைப் பயன்படுத்தக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவம் :** பொதுவாக, பொற்கொல்லர்களுக்கு வேறு தொழிலே தெரியாத காரணத்தினால், பத்திரிகைகளில் வந்த செய்தியிலிருந்து, 10, 15 பேர் தற்கொலை செய்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அந்தக் குறிப்பிட்ட வகுப்பினராவது தற்கொலை செய்து கொள்ளாமல் இருப்பதற்கு, சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன், அவதிப்படுகிற நிலையில் இருக்கிற பொற்கொல்லர்களை இது தற்கொலை செய்து கொள்ளத் தூண்டுவதாகும்.

**திரு. வி. எஸ். எஸ் மணி :** வாழ்க்கையிலே வெறுப்பு கொண்டு சிலர் தற்கொலை செய்து கொள்கிறார்கள். அதிலே சிலர் வெற்றி காண்கிறார்கள். ஆனால் வெற்றி காணாதவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். அது நியாயமில்லை என்று நான் கருதுகிறேன். ஆகவே சட்டத்தைத் திருத்தி, அவர்களுக்கு ஆறுதல் சொல்லி அவர்களை நல்ல வழியிலே திருப்புவதற்கு சர்க்கார் முயற்சிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அநேகமாக எல்லா நாடுகளிலும் இப்படித் தான் இருக்கிறது. தற்கொலை செய்ய முயற்சிப்பதானது ஒரு குற்றம், ஆகவே அதற்குத் தண்டனை உண்டு என்றிருக்கிறது. தன் உடல்மீதுகூட ஒரு மனிதனுக்கு உரிமை இல்லை என்பது இதன் அர்த்தம்.



**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தற்கொலை செய்து கொள்ள முயன்று மீட்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை எவ்வளவு ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்த விவரம் என்னிடமில்லை.

**திரு. சி. பொன்னுசாமி :** இந்த மாதிரி தற்கொலை செய்து கொள்வதிலே காதல் ஏமாற்றத்தினால் அதிகமாகத் தற்கொலைகள் செய்து கொள்கிறார்கள். அதற்கு ஒரு சில சினிமாப் படங்கள் காரணம் என்று சொல்கிறார்களே, அது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்த ஆராய்ச்சியை நான் செய்யவில்லை (சிரிப்பு).

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கிராமப்புறங்களிலே தற்கொலைகள் குறைவாக ஏற்படுகின்றன. பெருவாரியான தற்கொலைகள் நகர்ப்புறங்களிலே ஏற்படுகின்றன என்பது உண்மையா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது உண்மையாக இருக்கலாம். அது நகரத்திற்கும் கிராமத்திற்கும் உள்ள வேற்றுமையை எடுத்துக் காட்டுகிறது.

**திரு. எம். எஸ். மணி :** அரசாங்கத்திற்கு வரி கட்ட முடியாத காரணத்தினாலே தற்கொலை செய்து கொண்டவர்களுடைய பட்டியல் இதிலே சேர்க்கப் பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் அங்கத்தினருக்கு அரசாங்கத்தின் திட்டங்களைப் பற்றி வேறு கருத்துக்கள் இருக்கலாம். அதற்காக தற்கொலையைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது. கனம் அங்கத்தினருக்கே அந்த மாதிரி வெறுப்பு ஏற்படலாம். அதற்காக தற்கொலையைக் கையாளக் கூடாது. (சிரிப்பு).

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** சமூக, பொருளாதாரம் காரணமாக தற்கொலை செய்து கொண்டவர்கள் கணக்கில் அரசியல் தற்கொலை செய்து கொண்டவர்களுடைய கணக்கும் சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அது எனக்குத் தெரியவில்லை. கனம் அங்கத்தினருக்கு தெரிந்தால் ருசிகரமான விவரங்களாக இருக்கும். அந்தத் தகவல் என்னிடமில்லை.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** தனிமனிதனுடைய வாழ்வு, தாழ்வு, இழிவு காரணமாக சமுதாயத்திற்கு சம்பந்தப்பட்ட தற்கொலைகள் செய்ய முயற்சிப்பவருக்கு தண்டனை விதிக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் கருத்தா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதைத்தான் நான் முன்பே கூறினேன்.

**திரு. கே. மூக்கையா தேவர் :** வளமும் வசதியும் பொருந்திய நாடுகளில் தற்கொலை நடப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அம்மாதிரி நடப்பதற்கான காரணங்கள் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** வாழ்க்கையில் ஏற்படும் வெறுப்புதான் முக்கியமான காரணம்.

## கரும்பு (விலை நிர்ணயம்)

*297- A கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) விவசாயிகள் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு சப்ளை செய்யும்போது கரும்பின் எடைக்கும் தரத்திற்கும் தகுந்த விலை நிர்ணயம் செய்யாமல் அதன் மூலம் கிடைக்கும் சர்க்கரையின் அளவைக் கொண்டு விலை நிர்ணயம் செய்வதால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுவது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

(இ) அப்படியானால் இதை நிவர்த்திக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) விவசாயிகள் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு சப்ளை செய்யும்போது கரும்பின் எடைக்கும் தரத்திற்கும் தகுந்த விலை நிர்ணயம் செய்யாமல் அதன் மூலம் கிடைக்கும் சர்க்கரையின் அளவைக்கொண்டு விலை நிர்ணயம் செய்வதால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுவதாகக் கருதுவது சரியல்ல.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(a) The assumption that the agriculturist is put to loss because of the fixation of the cane price based on the recovery of sugar and not according to weight and quality is not correct.

(b) Does not arise.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சர்க்கரை ஆலைகளுக்கு ஒரே விவசாயி கரும்பு சப்ளை செய்வதாக இருந்தால் இதில் குறை பாடில்லை. ஆனால் பல விவசாயிகள் கரும்பு சப்ளை செய்து வருகிறார்கள். அப்படி சப்ளை செய்யும்போது பலதரப்பட்ட கரும்பை சப்ளை செய்யும்போது அவைகளில் பலதரப்பட்ட கரும்பு சத்து இருக்கின்றன. இப்படி அவரவர்கள் சப்ளை செய்யக் கூடிய கரும்பில் சர்க்கரை சத்து ஒரேமாதிரியாக இல்லாமல் இருக்கிறது. அதனால் சர்க்கரை சத்து அதிகமாக இருக்கிற கரும்புக்கு அதிகப்படியான விலையும் குறைந்த சத்துள்ள கரும்புக்கு குறைந்த விலையும் இப்படி வைத்து விலை நிர்ணயம் செய்யப்படுகிறதா ? இதை கண்டு ஆராய்ந்தறிவதற்கு அங்கே விவசாயிகளுடைய பிரதிநிதி ஒருவர் இருப்பதற்கு ஏதாவது வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** சர்க்கரையின் தரத்தை எடுத்துத் தான் விலையை நிர்ணயம் செய்கிறார்கள்.

If the sugar content is 9.8 per cent per 100 maunds of sugar-cane, the price of sugar-cane is Rs. 1.62 per maund. If the sugar content is 9.9 per cent, viz., 0.1 per cent increase the price will be Rs. 1.63½ per maund. If the sugar content is 9·7 per cent, **the price will be Rs. 1·60 per maund.**





**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சர்க்கரை கண்டு முதலை கண்டறி வதற்கு விவசாயிகளுடைய பிரதிநிதி யாராவது அங்கே அதைக் கண்காணிக்க அரசாங்கம் வழிவகை செய்வார்களா என்று கேட்டேன், அதற்கு பதில் அளிக்க வேண்டும்.

**கனம் திரு. பூ. கக்கன் :** விவசாயிகளுக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். ஆலைக்காரர்களுக்குக் கொடுக்கக்கூடிய கரும்பை அவர்கள்தான் சர்க்கரைச் சத்தை நிர்ணயம் செய்கிறார்கள். அதை விவசாயிகள் நம்பித்தான் ஆகவேண்டும். அப்படிப்பட்ட நம்பிக்கை இருக்கும் என்றுதான் இந்த ஏற்பாடு செய்யப்பட் டிருக்கிறது.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** லால்குடிக்கு அருகில் அமைக்கப் பட்டிருக்கிற கோதாரி சர்க்கரை ஆலையில் உற்பத்தியாகக்கூடிய சர்க்கரை நமது மாநிலத்தில் உற்பத்தியாகிற மற்ற சர்க்கரையின் தரத்தைவிட நல்ல உயர்ந்த ரகமான சர்க்கரையாக இருக்கிறது என்றும் அந்த சர்க்கரையில் சர்க்கரை சத்து அதிகமாக இருக் கிறது என்றும் சொல்லப்படுகிறது. அதனால் அந்தப்பகுதியில் விவசாயம் செய்யக்கூடிய கரும்புக்கு அதிகப்படியான விலை விவசாயிகளுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** உயர்ந்த ரக சர்க்கரையாக இருந்தால் அதற்குத் தக்கபடித்தான் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. சர்க்கரை சத்துக்கு தகுந்தாற்போல்தான் விலை நிர்ணயம் செய்து கொடுப்பார்கள்.

**திரு. க. ர. நல்லசிவம் :** ஒவ்வொரு விவசாயியும் உற்பத்தி செய்யக்கூடிய கரும்புக்கு அந்தந்த நிலங்களின் சத்துக்குத் தக்கபடி சர்க்கரை சத்து இருக்கிறது. அந்த விகிதாசாரப் படி அவரவர்களுக்கு விலையை நிர்ணயம் செய்து அந்த முறையில் விவசாயிகளுக்கு பணம் கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கரும்பின் சர்க்கரைச் சத்தைப் பார்த்துதான் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

**திரு. கி. இரா. சம்பந்தம் :** ஆரூரான் சர்க்கரை ஆலையில் உற்பத்தியாகக்கூடிய கரும்பில் சர்க்கரை சத்து குறைவாக இருக் கிறது என்று சொல்லப்படுகிறது. அதனால் விவசாயிகள் பாதிக் கப்படுகிறார்கள். ஆகவே அங்குள்ள விவசாயிகளுக்கு சப்சிடி கொடுப்பதைப்பற்றி சர்க்கார் கவனம் செலுத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** சப்சிடி கொடுக்க முடியாது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** காட்டூர் சர்க்கரை ஆலையில் விவசாயிகள் ஒப்பந்தம் செய்து கொண்ட மாதிரி பணம் கொடுக் காமல் குறைவாகக் கொடுத்து வருகிறார்கள். அதை நிவர்த்தி செய்ய ஏதாவது வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கேள்வியை மறுபடியும் கேட்க வேண்டும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** காட்டூர் சக்கரை ஆலையில் விவசாயிகள் ஒப்பந்தம் செய்துகொண்ட நேரத்தில் எந்தத் தொகை கொடுக்கப்பட வேண்டும் என்று ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதோ அப்படி நடைமுறையில் கொடுக்கப்பட வில்லை. அப்படி இல்லாமல் ஒப்பந்தம் செய்து கொண்டபடி கொடுக்க ஏதாவது வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** முதலில் ஒப்பந்தம் செய்து கொண்ட படி கொடுப்பார்கள். அப்படி கொடுக்கவில்லை என்ற தகவல் என்னிடம் இல்லை. அப்படியிருந்தால் அதைப்பற்றி பரிசீலனை செய்யப்படும்.

**திரு. க. ர. நல்லசிவம் :** கரும்பு விலையை நிர்ணயிக்கும் போது கரும்பிலுள்ள சர்க்கரையின் சத்தை அடிப்படையாகக் கொண்டு விலை நிர்ணயம் செய்யப்படுகிறதாக சொல்லப் படுகிறது. அதனால் சர்க்கரை சத்தை அதிகப்படுத்துவதற்கு என்று அதிகப்படியாக உரம் முதலியவைகள் போடுவதற்கு விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அவ்வாறுதான் செய்து கொண்டிருக் கிறார்கள்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

**[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member..]**

## II.—ADJOURNMENT MOTION *RE* POLICE FIRING IN MELA URAPPANUR.

MR. SPEAKER : Sri K. Mookiah Thevar and Sri T. L. Sasivarna Thevar have given notice of an adjournment motion on the very same question raised on the floor of this House, yesterday, viz., firing by the Police and death of three persons on 17th instant in Melaurappanur in Madurai. We shall consider that after the short-notice question is answered.

SRI K. MOOKIAH THEVAR rose . . . .

MR. SPEAKER : I say the adjournment motion given notice of by the hon. Member Sri K. Mookiah Thevar will be taken after the short-notice question.

**திரு. கே. மூக்கையா தேவர் :** முதலிலிருந்தே நிற்கிறேன்.

MR. SPEAKER : I have given my ruling. This matter might be considered after the short-notice question. The Hon. Minister had stated yesterday that he would make a statement after getting the details. So it would be useful for the hon. Member as well as ourselves to discuss this question after the short-notice question is answered tomorrow or the day after.



**திரு. கே. மூக்கையா தேவர் :** கேள்விக்குப் பதில் அளிக்கப் பட்ட பிறகு இது கவனிக்கப்படும் என்று தாங்கள் சொல் கிறீர்களா ?

**கனம் சபாநாயகர் :** அப்படித்தான் சொல்கிறேன்.

## III.—CALLING ATTENTION TO THE DISMANTLING OF HOUSES OF HARIJANS AT TUTICORIN

MR. SPEAKER : Sri V. Krishnamoorthy will now call the attention of the Hon. Minister for Works to a matter of urgent public importance, viz., dismantling of forty houses of Harijans, at Tuticorin on 21st January 1963 by the Revenue authorities.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** தூத்துக்குடியில் 21-1-1963-ம் தேதி யன்று ரெவின்யூ அதிகாரிகள், ஹரிஜனங்களின் நாற்பது வீடுகளைப் பிரித்தெடுத்தது பற்றிய அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த விஷயத்தை கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகின்றேன்.

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, 31 persons have encroached upon the lands in T.S. Nos. 3077/3, 3412/1 and 3412/2 of Brahmin Colony in the 19th Ward of Tuticorin Municipality by putting up thatched huts. They did not obtain the permission of the Municipality for constructing huts, nor did they pay any tax to it for their occupation. T. S. Nos. 3077/3, 3412/1 are registered as road poramboke. The Municipal Council has proposed to form a 60 scheme road in S. No. 3412/1. After meeting the requirements for the road only a narrow strip will be left and it will be insufficient for the encroachers to have their habitation. As for T.S. No. 3412/2 it has already been placed under the disposal of the V.O.C. Educational Society. As such the encroachers were asked to settle themselves in an alternative site in T.S. No. 495/5/B-2 selected by the Deputy Tahsildar, Tuticorin. The Government, after consulting the Director, Harijan Welfare and the District Revenue Officer, informed the encroachers that they should shift to the alternative site proposed by the District Revenue Officer, Tirunelveli and that if they were not willing to do so they would have to make their own arrangements to get alternative accommodation.

The encroachers had not moved to the alternative site even after their request for assignment of the sites was rejected by the Government. In pursuance of the orders of the Government eviction proceedings were initiated by the Deputy Tahsildar, Tuticorin. However, on a mahazar petition received against eviction of the encroachers from the S. Nos. the Collector of Tirunelveli called for a report from the Assistant Collector, Tuticorin. It has now been reported that despite a good deal of persuasion and inducement, the encroachers had refused to vacate their huts and shift to the alternative site and that, therefore, the hut in T.S. No. 3077/3 (adjacent to T.S. No. 3412/1) belonging to one Perumal was removed by the Deputy Tahsildar, Tuticorin on 28th January

1963 with the help of the Police. The entire building materials were confiscated. On seeing this, the other encroachers vacated their huts, either by shifting to the alternative site or to the site owned by their relatives nearby.

## IV.—GOVERNMENT MOTION *RE* CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move "that item III—Government Resolutions and item IV—Government Bill in the Agenda be taken up before item II—Budget for the year 1963–64."

இந்தத் தீர்மானங்களையும், மசோதாவையும் இப்பொழுது முதலில் எடுத்துக்கொண்டு சீக்கிரமாக முடித்துவிட்டால், அதற்குப் பிறகு மானியங்களை எடுத்துக்கொண்டு, எவ்வளவு நேரம் வேண்டுமோ அவ்வளவு நேரம் விவாதிக்கலாம் என்று நான் பிரேரேபிக்கின்றேன்.

MR. SPEAKER : The question is—

'That item III—Government Resolutions and item IV—Government Bill in the Agenda be taken up before item II—Budget for the year 1963–64.'

The motion was put and carried.

## V.—GOVERNMENT RESOLUTIONS.

### (1) CONSTITUTION OF TOWNSHIP FOR THE VALAPARAI PANCHAYAT AREA IN THE COIMBATORE DISTRICT

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I move—

'That in pursuance of sub-section (1) of section 4 of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958), the House do resolve that the Valparai Panchayat comprising the Anamalai Hills revenue village in the Coimbatore District which is an industrial colony, be declared to be a township.'

முன்பு வேறு சில பிராந்தியங்கள் டவுன்ஷிப் ஆக்கப்பட வேண்டும் என்று தீர்மானம் கொண்டுவந்து இந்தச் சபையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானம் இங்கே விவாதிக்கப்பட்டபோது, வால்பாறைப் பகுதியிலிருந்து வந்திருக்கும் கனம் அங்கத்தினர் திரு. பொன்னையா அவர்கள் 'வால்பாறையை விட்டுவிட்டீர்களே' என்று குறிப்பிட்டார்கள். அப்பொழுது நான், 'வால்பாறையை சீக்கிரத்திலேயே சேர்த்துக்கொள்வோம்' என்று சொன்னேன். அதன்படிதான் இந்தத் தீர்மானம் இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிறது.

வால்பாறை பஞ்சாயத்தில் ஆனைமலை பூராவும் உள்ளது. ஒரே ரெவினியூ கிராமமாக இருக்கிறது. அது 152 சதுர மைல் விஸ்தீரணம் உடையது. எண்பதாயிரம் ஜனத்தொகை கொண்டது. இப்பொழுது அந்தப் பஞ்சாயத்திற்கு வரும்



வருமானம் மூன்று லட்ச ரூபாய். இது சாதாரணமாக நகர மன்றமாக இருக்கவேண்டியது என்றாலும் கிராமாந்திரமாகவே இருக்கிறது. ஆகையால்தான், முன்பு வேறு சில பகுதிகள் டவுன்ஷிப்களாக ஆக்கப்பட்டது போல, வால்பாறை பகுதியையும் டவுன்ஷிப் ஆக ஆக்குவது என்பதற்கான தீர்மானம் இந்தச் சபை முன் நான் கொண்டுவந்திருக்கின்றேன். இதைக் கனம் அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று எண்ணி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகின்றேன்.

MR. SPEAKER : The question is—

'That in pursuance of sub-section (1) of section 4 of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958), the House do resolve that the Valparai Panchayat comprising the Anamalai Hills revenue village in the Coimbatore District which is an industrial colony, be declared to be a township.'

The motion was put and carried.

### (2) APPROVAL OF THE MUTHU CHIPPI PARKAL FISHING RULES, 1963

THE HON. SRI NALLASENAPATHI SARKARAI MANRADIAR : Mr. Speaker, Sir I move—

'That in pursuance of the proviso to sub-section (4) of section 6 of the Indian Fisheries Act, 1897 (Central Act IV of 1897), the House do resolve that the Muthuchippi Parkal Fishing Rules, 1963, be approved.'

MR. SPEAKER : The question is—

'That in pursuance of the proviso to sub-section (4) of section 6 of the Indian Fisheries Act, 1897 (Central Act IV of 1897), the House do resolve that the Muthuchippi Parkal Fishing Rules, 1963 be approved.'

The motion was put and carried.

## VI.—ANNOUNCEMENTS.

### THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1963 (L.A. BILL NO. 5 OF 1963)

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation for moving in the Madras Legislative Assembly, the following amendment to the Madras General Sales Tax (Amendment) Bill, 1963 (L.A. Bill No. 5 of 1963).

*Amendment*

In sub-clause (*b*) of clause 7.

In the proposed item 51, for the words, "snows, scented hair oils and cosmetics" substitute the word "snows and scented hair oils".

## VII.—GOVERNMENT BILL.

### THE MADRAS GENERAL SALES TAX (AMENDMENT) BILL, 1963 (L.A. BILL NO. 5 OF 1963).

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I beg to move—

'That the Madras General Sales Tax (Amendment) Bill, 1963 (L.A. Bill No. 5 of 1963) be taken into consideration'.

கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது நான் கொண்டு வந்திருக்கிற திருத்த மசோதா, நமது சட்டசபையிலும் ஸ்டேட் ஸேல்ஸ் டாக்ஸ் அட்வைஸரி கமிட்டியிலும் சொல்லப்பட்ட அபிப்பிராயங்களையொட்டி, அவைகளை ஏற்றுக்கொள்ளுகின்ற வகையில் கொண்டுவரப்படுகிறது. முக்கியமாக, கடந்த சட்ட சபைக் கூட்டத்தில், ஸேல்ஸ் டாக்ஸ் சம்பந்தமான மானியக் கோரிக்கை விவாதம் நடந்தபோது, கனம் அங்கத்தினர்கள், 'பருத்தி வியாபாரம் செய்வதில், ஒரே பண்டத்திற்கு இரண்டு தரம் வரி கொடுக்கும்படியான நிலைமை ஏற்படுகிறது, அதைத் தவிர்க்க வேண்டும்' என்று சொன்னார்கள். அது எவ்வாறு ஏற்படுகிறது என்பதை நான் சற்று விளக்கிச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய ஸேல்ஸ் டாக்ஸ் சட்டத்தில் சில பண்டங்கள் 'டிக்ளேர்டு கூட்ஸ்' என்று நிர்ணயம் செய்யப்பட்டு, அவற்றுக்கு எந்த இடத்தில், எவ்வளவு வரி விதிக்கவேண்டும் என்று கண்டிருக்கிறது. அதில் இரண்டாவது ஷெட்யூலில், இரண்டாவது 'ஐட்டத்'தை எடுத்துக்கொண்டால், பருத்திக்கு கடைசியில் வாங்குகிறவர்களுக்கு ஒரு சதவிகிதம் என்று வரி போடப்பட்டிருக்கிறது. 1962-ஆம் வருஷம் யார் கடைசியில் வாங்கியிருக்கிறார்களோ, அவர்களிடமிருந்து வரி வசூல் செய்கின்றோம். அதே நபர், 1963-ஆம் வருஷம் அந்தப் பருத்தியை மற்றொருவருக்கு விற்றால், அவர்களிடத்திலும் வரி வசூல் செய்யும்படியான நிலைமை இன்றைக்கு சட்டப்படி இருக்கிறது. ஆனால் இந்தச் சர்க்காருடைய நோக்கம் அது அல்ல. யாராவது ஒருவரிடத்தில் இருந்து வரி வாங்கவேண்டுமென்பதுதான் நோக்கம். அதற்காகத் தான் இப்போது அந்தச் சட்டத்தில் நான்காவது, ஐந்தாவது விதிகளைத் திருத்துகிறோம். இப்படித் திருத்துவதன் விளைவாக என்ன ஏற்படும் என்றால், அந்த வருஷ இறுதியில் "லாஸ்ட்
9-30 a.m. பர்சேஸர்" யாரோ, அவர் வேறு யாரிடத்தில் விற்றுவிட்டதாகக் கணக்குக் காட்டினால், அந்த வியாபாரி கட்டியிருக்கும்படியான வரியைத் திருப்பி கொடுக்க வழியேற்படும். அவ்வாறு திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்பதற்குத்தான் இந்தத் திருத்தம் செய்யப்படுகிறது.

இரண்டாவது திருத்தம் இந்த மசோதா விவாதிக்கப்படுகின்ற காலத்திலே மதுரை, கோவை போன்ற இடங்களில் அப்பலேட் ட்ரிப்யூனல் உட்கார்ந்து அந்த இடங்களிலேயே கேஸை விசாரிப்பதன் மூலமாக வியாபாரிகளுக்கு ஓரளவு நன்மை ஏற்படும் என்று சொல்லப்பட்டது. அவ்வாறு அப்பலேட் ட்ரிப்யூனல் மூலமாக மதுரை, கோவை போன்ற இடங்களிலேயே உட்கார்ந்து விசாரிப்பதற்கு இரண்டு மூன்று பேர்கள் இருந்தால் போதும்



என்று நினைத்து 3 நபர்கள் என்று போட்டோம். ஆனால் நடைமுறையில் 3 மெம்பர்கள் மட்டும் போதவில்லை. வேலை மிக அதிகமாகவும் இருக்கிறது. இப்படி வேலை அதிகமாக இருப்பதனால் வேறு இடங்களில் உட்கார்ந்து கேஸை விசாரிக்க வழியில்லை. ஆனால் சென்ற ஆண்டிலே அப்பலேட் ட்ரிப்யூனலை மதுரையில் உட்கார்ந்து விசாரிக்க ஏற்பாடு செய்ததில் இருந்து மிகவும் திருப்திகரமான நிலை இருக்கிறது. வியாபாரிகளுக்கும் நன்மை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. ஆகவே அந்த முறையைத் தொடர்ந்து நடத்துவதற்கு வசதியாக இன்னும் 2 அங்கத்தினர்களை அதிகப்படுத்துவதுதான் இந்தத் திருத்தத்தின் நோக்கம். இந்த இரண்டு அங்கத்தினர்களில் ஒருவர் சப்-ஜட்ஜாக இருக்க வேண்டும் என்றும், இன்னொருவர் டெபுடி கமிஷனர் ஆப் கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசர் கேடரில் இருந்து நிர்வாக அதிகாரி ஒருவராக இருக்கவேண்டும் என்பதும் ஏற்பாடு. இதுவும் வியாபாரிகளுக்கு மிகவும் அனுகூலமானதாக இருக்கும்.

அடுத்த திருத்தம் வெஜிடபிள் ஆயில் சம்பந்தமானது. நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், கடலெண்ணெய் முதலியவற்றுக்கு நாம் 3 சதவிகிதம் ஒருமுக வரி விதித்திருந்தோம். இதனால் நம் ராஜ்யத்தில் உற்பத்தி செய்யப்படுகிற எண்ணெய் பாதிக்கப்பட்டது. நம் ராஜ்யத்தில் உற்பத்தியாகின்ற எண்ணெய் விற்பனைக்குத் தடங்கல் ஏற்படுகிறது என்று வியாபாரிகளும் சொன்னார்கள். உதாரணமாக ஆந்திராவில் உற்பத்தியாகிற வெஜிடபிள் ஆயிலை—மத்திய விற்பனை வரி 1 சதவிகிதம் கட்டி ஸி. பாரம் வாங்கி இங்கே கொண்டுவந்தார்கள். இங்கே வாங்கினால் 3 சதவிகிதம் என்பதனால் 1 சதவிகிதம் மத்திய விற்பனை வரியை மட்டும் கட்டி இங்கே 'ஸி' பாரம் வாங்கிக் கொணர்ந்து ஹோட்டல் நடத்துகிறவர்கள் எல்லாம் உபயோகித்தார்கள். அதனால் நம் வியாபாரம் தடைபடுகிறது, மந்தம் அடைகிறது. ஆகவே இப்போது மத்திய சர்க்காரும் 2 சதவிகிதம் வரி என்று விதிப்பதினால், நாமும் அதை 2 சதவிகிதம் என்றே பலமுனை வரியாகக் குறைத்துக் கொள்வதுதான் இந்தத் திருத்தம். இந்தத் திருத்தமும் நம் ராஜ்ய வெஜிடபிள் ஆயில் வியாபாரத்தை அதிகப்படுத்தும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் 51 ஷெட்யூல் பிரகாரம், '**Scents and perfumes, powders, snows, scented hair-oils, scented sticks, cosmetics and toilet requisites except soaps**' என்ற அடிப்படையில் வாசனை திரவியங்களுக்கு ஒருமுனை வரி போடுகிறபோது இன்னின்ன பொருள் அவற்றில் அடங்கும் என்று நிர்ணயிக்கவேண்டியிருக்கிறது. குறிப்பாக அதில் "டாய்லட்ஸ்" என்கிறபோது சோப்பு, சீப்பு, சவுரி போன்றவற்றுக்கு எல்லாம் கூட 6 சதவிகிதம் என்று வரி போட்டுவிடுகிறார்களே என்று சென்ற சட்டசபை கூட்டத்திலேயே பல பெண் அங்கத்தினர்கள் எதிர்த்தார்கள். அவற்றுக்கும் 6 சத விகிதம் என்று போடுவது சரியல்ல என்று அரசாங்கம் கருதித்தான் 2 சதவிகிதம் என்று மொத்தத்தில் போட்டால் போதும் என்று முடிவு செய்திருக்கிறோம். இதையும் பலமுனை விற்பனை வரியாக மாற்றி அமைத்திருக்கிறோம்.

அதேபோல ஊதுவத்தி போன்ற சாமான்களை எடுத்துக் கொண்டால்—ஊதுவத்தி இங்கே தயாரிக்கப்படுகிறது. வாசனைப் பொருள்கள் வேறு இடங்களில் இருந்து வரலாம். அதற்கு 6 சதவிகிதம் வரி என்றும், உற்பத்தியாகிற நம் ராஜ்ய ஊதுவத்திக்கு 6 சதவிகிதம் என்றும் வரி விழுந்தால் பிற மாநிலங்களில் இருந்து அந்தப் பொருள்கள் இங்கே வர இடமேற்படுகிறது. ஆகவே அதையும் ஒரு முனை வரியாக இருந்ததை மாற்றி, பல முனை வரியாகச் செய்துவிட்டோம். இவ்வாறு செய்வதன் மூலம் இறுதியில் எப்படி இருக்குமென்று சொன்னால் Scents and perfumes, powders, snows, scented hair-oils and cosmetics'. என்று இவற்றுக்கு 6 சதவிகிதம் இருக்கும். மற்றபடி டாய்லட், சீப்பு, கண்ணாடி, சவுரி போன்றவற்றுக்கு 2 சதவிகிதமாகக் குறைந்துவிடும். இதில் இன்னும் ஒரு சங்கடம் இருக்கிறது. "காஸ்மெடிக்ஸ்" என்றால் என்ன என்று நிர்ணயம் செய்ய முடியவில்லை. இப்போது இவற்றுக்கு 6 சதவிகிதம் வரி விழுகிறது. காஸ்மெடிக்ஸ் என்றால் அழகுப் பொருள். அழகுப் பொருளில் ஸ்னோ, சென்டெட் ஆயில், மஞ்சள் கூட வரலாம். ஆகவேதான் இவற்றையும் பரிசீலனை செய்து 2 சதவிகிதம் என்று பலமுனை வரியாக மாற்றிவிடலாம் என்பதற்கு இந்தத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. எப்போதுமே விற்பனை வரி மசோதாவுக்கு இப்படிக் கொண்டு வரப்படுகிற திருத்தங்கள் புதிதாக வரியைப் போடுவதற்காகக் கொண்டுவரப்படுவதில்லை. நடைமுறையில் வியாபாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் இந்த மசோதாவினால் ஏற்படுகிற கஷ்டங்களையும், சிக்கல்களையும் நீக்குவதற்காகவே இந்தத் திருத்தங்கள் கொண்டுவரப்படுகின்றன. அவ்வாறு கொண்டுவரப்பட்டுள்ள திருத்தங்கள்தாம் இவை. ஆகவே இந்தச் சபை இந்தத் திருத்த மசோதாவை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : Motion moved—

'That the Madras General Sales Tax (Amendment) Bill, 1963 (L.A. Bill No. 5 of 1963) be taken into consideration.'

* **திரு. பி. வி. ஸ்ரீராமுலு :** கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது விற்பனை வரி மசோதாவுக்குத் திருத்தம் கொண்டு வந்ததைப் பார்த்தால் மக்களுக்கு நன்மை செய்வதற்காகவே கொண்டுவந்தது போல இருக்கிறது. மூன்று சதவிகிதம் என்று ஒருமுனை வரியாக இருந்ததை 2 சதவிகிதம் ஒருமுனை வரி என்றே கொண்டு வந்திருந்தால் நன்மையாகவே இருக்கும். வரவேற்கக் கூடியதாக இருக்கும். ஆனால் இப்போது இது 2 சதவிகிதம் பலமுனை வரியாகக் கொண்டுவரப்படுகிறது. மத்திய அரசாங்கம் சென்ற பட்ஜெட்டிலேயே இந்த வெஜிடபிள் ஆயிலுக்கு 10½ கோடி ரூபாய்க்கு வரி விலக்கு அளித்திருக்கிறார்கள். மக்களுக்கு அனுகூலமாக இருக்கவேண்டும், இந்த வரியினால் மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்று அவ்வாறு விலக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இங்கே நாம் 3 சதவிகிதம் என்று ஒருமுனை வரி கட்டிக்கொண்டிருந்த வியாபாரிகளுக்கு அனுகூலம் செய்ய 2 சதவிகிதம் என்று குறைக்கிறோம்



என்றாலும் இதைப் பலமுனை வரியாகக் கொண்டு வருவதனால் உற்பத்தியாகின்ற இடத்தில் 2 சதவிகிதம் வரி, அதை மொத்தமாக வியாபாரிகள் வாங்கும் இடத்தில் 2 சதவிகிதம் வரி, சில்லரை வியாபாரிகளிடமிருந்து மக்கள் வாங்கும்போது 2 சதவிகிதம் வரி என்று கணக்குப் பார்த்தால் 6 சதவிகிதத்திற்கு அதிகமாகவே போய்விடும். கனம் அமைச்சர் அவர்கள் சலுகை காட்டப்படுகிறது என்று சொல்கிறார்களே தவிர நடைமுறையில் நாட்டு மக்களுக்கு இது நன்மையை அளிக்காது. மூன்று சதவிகிதம் கட்டின இடத்தில் இப்போது இந்தப் பொருள்களின் மேல் 6 சதவிகிதத்துக்கு மேல் வரி கூடப்போகிறது. இதனால் பொதுமக்களுக்கும், வியாபாரிகளுக்கும் எந்தவிதமான பயனையும் தர இயலாத நிலைமையைத்தான் இதைப் "பலமுனை வரி" என்று மாற்றுவதால் உண்டாகப் போகிறது.

சேல்ஸ்டாக்ஸாவது மல்டி பாயிண்ட் டாக்ஸாவது வரும்போது வெஜிடபிள் ஆயில்களுக்கு, இன்டஸ்ட்ரியலில் தயாரிக்கும்படியான எண்ணெய்க்கு வரி விலக்கு என்று கூறியிருக்கிறார்கள். நாட்டுச் செக்கில் தயார் செய்யும்படியான எண்ணெய்க்கு 3 சதவிகிதத்திலிருந்து விதிவிலக்கு இருந்தது. இப்போதும் அது உண்டா? நாட்டுச் செக்கில் தயாரிக்கும் எண்ணெய்க்கும் மில்லில் தயாரிக்கும்படியான எண்ணெய்க்கும் என்ன வித்தியாசம்? இதற்கு மாத்திரம் வரி உண்டு என்பது சரியானபடி விளக்கப்படவில்லை.

இப்போது 13-ஏ பிரிவில் **such returns** என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு வியாபாரி ஒரு வருஷத்தில் ஐந்து லட்சமோ, பத்து லட்சமோ வியாபாரம் செய்வாரானால், அவர் ஏ-3 நமூனாவை அனுப்பி, என்ன வியாபாரம் செய்கிறார்களோ, அதற்குண்டான வரியைக் கட்டவேண்டுமென்று விதி இருக்கிறது. ஒரு வியாபாரி 1960-61-ல் ஒரு மூட்டை எள்ளை 116 ரூபாய் விதம் பத்தாயிரம் மூட்டை வாங்கினால் 11,60,000 ரூபாய் வருகிறது. 1961-62-இல் ஒரு மூட்டை 65 ரூபாய் என்று வைத்துக்கொண்டால் பத்தாயிரம் மூட்டைக்கு 6,50,000 ஆகிறது. பதினொரு லட்சத்திற்கு வரி கட்டும்போது ஒவ்வொரு மாதமும் ரிட்டர்ன் பார்த்து வரி கட்டி விடுகிறோம். **such returns** என்ற வார்த்தையை உபயோகித்துப் பார்த்தால், சென்ற ஆண்டு அந்த வியாபாரி எவ்வளவு கட்டி இருக்கின்றாரோ அதேபோல் இந்த ஆண்டும் கட்டவேண்டும். அப்படிக் கட்டிவிட்ட பிறகு அடுத்த ஆண்டில் ஏதாவது குறைவு ஏற்பட்டாலும் சரி, அதிகமாக இருந்தாலும் சரி அதை அடுத்த ஆண்டு தள்ளுபடி செய்து கொள்ளலாம் என்று விதி இருக்கிறது. இந்த 11,60,000-க்கு இந்த ஆண்டு வரி கட்டிவிட்டு அடுத்த ஆண்டு பெறவேண்டுமென்றால், அடுத்த ஆண்டு அதிகாரிகள் அஸெஸ்மெண்ட் செய்வதுகூட இல்லை. ஒரு சமயம் எங்கள் ஊரில் 1958-59-இல் 'ஃபஸ்ட் பர்ச்சேஸிங்' ஆக (கிரவுண்ட் நட்டுக்கு) கடலைகாய்களுக்கு சேல்ஸ் டாக்ஸ் கட்டி விட்டோம். 1959-60-இல் இந்த மன்றத்தின் மூலமாக விதிகளை மாற்றியதன் காரணமாக ஏற்கெனவே கட்டப்பட்ட வரியை மறுபடியும்

முனை வரியாக மாற்றலாம் என்று திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒருமுனை வரியாக இருந்ததை பலமுனை வரியாக மாற்ற வேண்டுமென்று கேட்டது யார் என்று யோசிக்கவேண்டும். பலமுனை வரியாக இருந்தபோது ஒரு சில வியாபாரிகள் தங்களுக்கும் கணக்கு வைக்க கஷ்டம் நேரிடும் என்ற நோக்கத்தோடு ஒருமுனை வரி வைத்தால் நல்லது என்று சர்க்காரிடம் கேட்ட காரணத்திற்காகத் தான் பலமுனை வரியாக இருந்த ஒரிஜனல் ஆக்டைத் திருத்தி ஒருமுனை வரியாகச் செய்து கொண்டே போகிறோம். இன்று ஒரு முனை வரியிலுள்ள கஷ்டத்தை எடுத்துச் சொல்லி பலமுனை வரியாக மாற்றிக் கொண்டே வந்திருக்கிறோம். இந்த மன்றத்தில் விற்பனை வரி சட்ட திருத்த மசோதா வருவதெல்லாம் ஒருமுனை வரியாக்கிய பிறகு அதைப் பலமுனை வரியாக்கலாம் என்பது பற்றித்தான் திருத்தங்கள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, அடிக்கடி ஒவ்வொரு பொருள்களுக்கும் பலமுனை வரியாக மாற்றுவதைவிட எல்லாவற்றையுமே பல முனை வரியாக மாற்றியமைத்து விடுவது நலம் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இரண்டு சத விகிதம் பலமுனை வரியாக இருந்தபோது வியாபாரிகள் ஒருமுனை வரியாக்கி விட்டால் நாம் வெளி மாநிலங்களுக்கு அனுப்பி விட்டால் நமக்கு 1 சத விகிதம்தான் வருகிறது என்ற நோக்கத்தோடு சொன்னார்கள். இன்று மத்திய அரசாங்கம் வேறு மாநிலங்களுக்கு அனுப்பினாலும்கூட சென்ட்ரல் சேல்ஸ் டாக்ஸை இரண்டு சத விகிதம் என்று செய்து விட்டால் பழைய முறைப்படி நம் மாநிலத்தில் உள்ள விற்பனைக்கு இரண்டு சத விகிதம் பலமுனை வரி என்று விதித்த வரிப்படி இன்று எட்டியாகிவிட்டது. அதைப் பார்க்கும்போது பலமுனை வரியாக்கி விட்டால் நம் மாநிலத்திற்கும் அதிக வருவாய் வரும். இப்போது விற்றுவிட்டு "சிபாரம்" கொடுப்பதால் நம் வருவாய் குறைந்திருக்கிறது. பலமுனை வரியாக மாற்றிவிட்டால் சிறிய வியாபாரிகளுக்குக் கஷ்டம் வராது. ஸ்லாப் ஸிஸ்டம் 25,000 ரூபாய் என்று கொண்டு வந்து விட்டதால் சிறிய வியாபாரிகள் எவ்விதத்திலும் பாதிக்கப்பட மாட்டார்கள். முன்பு 7,500 என்று இருந்தது, சிறு வியாபாரிகள் பாதிக்கப்படுவார்கள் என்று ஒருமுனை வரியாக செய்யப்பட்டது. இன்று ஸ்லாப் ஸிஸ்டம் வந்திருப்பதால் கணக்கு வைக்க முடியும் என்று இருப்பதால் கனம் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து இதை பரிசிலனை செய்ய வேண்டும். விற்பனை வரி மான்யக் கோரிக்கை வரும்போது விளக்கமாகக் கூறிக் கொள்கிறேன். இதைப் பரிசீலனை செய்து ஒரு முனை வரியை இந்த மாநிலத்தில் அடியோடு ஒழித்து விட்டு பழைய முறைப்படி பல முனை வரியைக் கொண்டு வருவது நல்லது என்று நான் எடுத்துக் கூற விரும்புகிறேன். சிறிய வியாபாரிகளுக்கு ஸ்லாப் ஸிஸ்டம் இருப்பதால் கஷ்டமில்லை. ஆக சிறிய வியாபாரிகளுக்குக் கஷ்டம் இல்லாத வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால் நல்லது என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

* கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் இரண்டு விஷயங்கள் கூறப்பட்டன.



போடுவது நல்லது என்று கூறப்பட்டது. இரண்டாவதாக, ப்ரொவிஷனல் அஸெஸ்மென்ட் செய்வதினால் வியாபாரிகள் பணம் அதிகம் கொடுக்கவேண்டிய நிலை இருக்கும் என்றும் சொல்லப்பட்டது. நான் இரண்டையும் பற்றி விளக்கமாக சொல்ல விரும்புகிறேன். ஒருமுனை வரி, பலமுனை வரி என்பது பெரிய மீனுக்கும் சின்ன மீனுக்கும் நடந்து வருகிற ஓயாத போராட்டம். பெரிய வியாபாரிகளுக்கு ஒருமுனை வரி போட்டால் அவர்களைப் பாதிக்காது. சிறிய வியாபாரிகளுக்கு ஒருமுனை வரி போட்டால் 10,000 வரையில் எக்ஸெம்ஷன் கிடைக்காது. 5, 10, 200 வரை எண்ணெய் உற்பத்தி செய்தால் வரி கொடுக்கும்படியான நிலை இருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்தில், எண்ணெய் வியாபாரம் செய்கிறவர்கள்—எக்ஸ்பெல்லர்ஸ் வைத்திருப்பவர்கள் குறைவு—பெருவாரியாக இருப்பதால் அவர்களுக்கு 10,000 வரை எக்செஷன் கிடைக்க வேண்டுமென்றும் நம் ராஜ்ஜியத்தில் உற்பத்தி செய்யும் எண்ணெய்யை நம் ராஜ்யத்தில் உபயோகிக்க வேண்டுமென்ற காரணத்தாலும் பலமுனை வரியாக மாற்றி அமைத்திருக்கிறோம். பெரிய வியாபாரிகள் கூட 3 சத விகிதம் கொடுத்துத்தான் வனஸ்பதி செய்கிறவர்களோ அல்லது ஹோட்டலில் வாங்கி நடத்துகிறவர்களோ நடத்த வேண்டுமென்று சொன்னால் இவர்கள் நமது மாநில எண்ணெயை வாங்கி உபயோகிக்கமாட்டார்கள். மற்ற ராஜ்யத்தில் 1 சத விகிதம் சென்டரல் சேல்ஸ்டாக்ஸ் கொடுத்து வாங்கி அதை உபயோகிப்பார்கள். இதைப் புரிந்து கொண்டால் நம் ராஜ்யத்திலுள்ள சிறிய வியாபாரிகளுக்கு இது பெரிய நன்மை பயக்கும் என்பதை அறிந்துகொள்ள முடியும். இது பற்றி சட்டசபை அங்கத்தினர் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

ப்ரொவிஷனல் அஸெஸ்மென்ட் செய்வதில் நிலை என்னவென்றால் அந்தந்த ஆண்டில் அவர்களுக்கு எவ்வளவு வியாபாரம் ஆகும் என்று மதிப்பீடு செய்து அந்த மதிப்பீட்டின் பேரில் வரி கொடுக்க வேண்டும். அவ்வப்போது கொடுக்கிற ரிட்டேர்னை வைத்துக்கொண்டு கொடுக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. இதில் என்ன கஷ்டம் என்றால் சென்ற ஆண்டு வியாபாரம் ஒரு தொகைக்கு நடந்திருக்கும்; புது ஆண்டில் அவ்வளவு வியாபாரம் ஆகாது என்று சொல்லி குறைவாகக் கொடுப்பார்கள். குறைவாகக் கொடுத்தவுடன், அதை சேல்ஸ் டாக்ஸ் ஆபீசர் ஒத்துக் கொள்ளமாட்டார். அப்படி ஒத்துக் கொள்ளாமல் அவர்கள் ஒரு ப்ரொவிஷனல் அஸெஸ்மெண்ட் போடுவார்கள், இவர்கள் ஒன்று போடுவார்கள். ஆக தகராறு முற்றிக் கொண்டு போகிறது. சென்ற ஆண்டு கட்டினதுபோல் இந்த ஆண்டும் கட்டிவிட்டு வருட இறுதியில் என்ன வருகிறது என்று பார்த்து அட்ஜஸ்ட் செய்து விடுகிறோம் என்று சொல்லியிருக்கிறோம்.

'Any tax paid in accordance with the provisions of sub-section (1) shall be adjusted in the prescribed manner against the tax found due.' என்றிருக்கிறது. ஆகவே நிர்வாகத்தில் தொல்லை ஏற்பட்டாலும், அதிகாரிகளுக்கும், வியாபாரிகளுக்கும் மோதல் ஏற்படாமல் இருக்கவும், கடந்த ஆண்டு கட்டின தொகையைக்

வசூலித்திருக்கிறார்கள். ஏனென்றால் அப்போது பர்ச்சேஸிங் டாக்ஸ், இப்போது செல்லிங் டாக்ஸ். வருஷ முடிவில் நாங்கள் ஸ்டாக் வைத்திருந்ததற்கு இந்த ஆண்டு பர்ச்சேஸிங் அண்டு செல்லிங்—இரண்டு டாக்ஸ்களும் கட்டப்பட்டிருக்கின்றன. அந்த ஆண்டு அரசாங்கத்திலிருந்து ரூபாய் 472.72 வர வேண்டியிருக்கிறது. அதற்காக அப்பீல் செய்திருக்கிறார்கள். ஈரோடு கமிஷனரின் உத்தரவு 24-5-1962 அன்று பிறப்பிக்கப் பட்டது. 1958-ஆம் ஆண்டு அதிக வரி கட்டியதைத் திருப்பிக் கொடுக்க உத்தரவு 1962-ஆம் ஆண்டு மே மாதம் 24-ஆம் தேதி பிறப்பிக்கப்பட்டது. ஆனால் இன்று வரை பணம் வரவில்லை. வியாபாரத்தில் இந்தத் தொல்லைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இப்போதே அதிகாரிகள் இப்படி அலட்சியமாக இருந்தால் such returns என்ற வார்த்தையை உபயோகப்படுத்தினால், அதிகாரிகள் கணக்கை அசெஸ்மெண்டு சரிவர செய்ய மாட்டார்கள். அரசாங்கத்திடம் இருந்து பணம் வர நான்கு ஆண்டுகள் ஆகுமோ ; ஐந்து ஆண்டு ஆகுமோ ! ஆகவே, பழைய முறைப்படி இருந்தால் வியாபார மக்களுக்கு நல்லது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வெஜிடபிள் ஆயில்ஸ் என்று சொல்லும்போது நாட்டுச் செக்கைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நாட்டுச் செக்கில் தயார் செய்யும்படியான எண்ணெய்க்கும், இண்டஸ்ட்ரியல் செக்கில் தயார் செய்யும்படியான எண்ணெய்க்கும் என்ன வித்தியாசம்? ஒருவரே ஒரு இண்டஸ்ட்ரியல் செக்கை வைத்துக்கொண்டு பக்கத்திலே எட்டு நாட்டுச் செக்குகளை வைத்துக்கொண்டு விதிவிலக்கு வாங்கிக்கொண்டு எண்ணெயை விற்றார் என்றால், அவர் எந்தச் செக்கு எண்ணெயை விற்றதாக அர்த்தம்? அதோடு கூட 2 சதவிகிதம் என்பது மக்களுக்குப் பயன் தருவதாக இல்லை. மல்டிபாயிண்ட் டாக்ஸ் என்ற முறையில் போட்டால், நான்கு, ஐந்து பேர்களுக்கு மாற்றினால், எந்த கணிப்பட்ட பொது மக்களுக்கும் இதனால் நன்மை பயக்காது. விலையும் கூடும். இதைத் தடுக்க இதற்கு அரசாங்கம் ஆவன செய்யவேண்டும். சேல்ஸ் டாக்ஸ் ஆக்டைத் திருத்த வேண்டாமென்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் சபாநாயகர் அவர்களே, 1959-ஆம் ஆண்டு விற்பனை வரி திருத்த மசோதாவிலே செக்ஷன் . . . .

**கனம் சபாநாயகர் :** இப்போது பொதுவாகப் பேசுங்கள். இல்லை என்றால் அந்தப் பிரிவை எடுத்துக்கொள்ளும்போது கனம் அங்கத்தினர் கருத்தை எடுத்துக் கூறலாம்.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** செக்ஷன் 13-ல்

'either an advance estimate of his turnover for the year, or such periodical returns of the actual turnover'

என்ற வாசகங்கள் அகற்றப்படுவதால் கடந்த ஆண்டு எந்த அளவுக்கு ஒரு வியாபாரி விற்பனை வரி செலுத்தி வந்தாரோ, அதே அளவுக்கு அந்த விற்பனை வரி விகிதத்தை மாதத் தவணை



யில் செலுத்தி வரவேண்டுமென்ற முறையில் திருத்தங்கள் இருக்கின்றன. வியாபாரி முன்கூட்டியே தன்னுடைய 'டர்ன் ஓவர்' எவ்வளவு இருக்கும் என்று கவனித்துக் கொடுத்தால், அதன் பேரில் விற்பனை வரி வசூலிக்கப்பட்டு வந்தது. அதோடு மட்டு மல்லாமல் 'ஆக்சுவல் டர்ன் ஓவர்' எவ்வளவு என்று மூன்று மாதங்களுக்கு ஆறு மாதங்களுக்குக் கணக்குக் கொடுத்தால் அதன் பேரில் விற்பனை வரி அதிகாரி வரியை விதித்து வசூலிக்க வேண்டுமென்றிருக்கிறது. கீழே இருக்கும் ஷரத்துக்களைப் பார்க்கும்போது அந்த அனுகூலங்கள் இருக்காது. சென்ற ஆண்டில் எந்த விகிதத்தில் வரி விதிக்கப்பட்டதோ, அதே விகிதத்தில் நடைமுதல் ஆண்டுக்கும் வரி விதிக்கக்கூடிய ஷரத்து அமைந்திருக்கிறது. ஆகவே—

'either an advance estimate of his turnover for the year, or such periodical returns of the actual turnover'

என்ற வாசகங்கள் எடுபட்டுப் போகின்றன. அனுகூலங்கள் வியாபாரிகளுக்கு இல்லை. அப்படி இல்லாத காரணத்தால் ஒரு ஆண்டில் ஒரு பொருள் விலை அதிகமாக இருக்கலாம். அந்த டர்ன் ஓவருக்கு ஏற்றாற்போல் வியாபாரி வரி செலுத்துகிறார். அடுத்த ஆண்டு அறுவடைக் காலத்திலோ, மற்றக் காலங்களிலோ விலை கணிசமான அளவுக்குக் குறைந்திருக்கலாம். பத்து லட்சம் அளவுக்கு வியாபாரம் செய்தவர்கள் ஐந்து லட்சம் அளவுக்கே வியாபாரம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கலாம். அப்படிப்பட்டவர் கூட சென்ற ஆண்டு எந்த விதத்தில் வரியைச் செலுத்தினாரோ, அதே வரியை அடுத்த ஆண்டும் செலுத்த வேண்டுமென்றிருப்பது வியாபாரிகளுக்கு நஷ்டத்தைத்தான் ஏற்படுத்தும். ஆகவே, செக்ஷன் 13-இல் திருத்தங்கள் அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல் இரண்டொரு திருத்தங்களை நான் கொடுத்திருக்கிறேன். குறிப்பாக நம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மசோதாவில் தொழில்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்று, ஒருமுனை வரியை நீக்குவதால் ஊக்கம் அளிக்க முடியும் என்ற நல்ல நோக்கத்துடன்தான் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த நல்ல நோக்கம் நிறைவேறாது என்பதை நான் க்ளாஸ் பை க்ளாஸ் டிஸ்கஷன் வரும்போது கூறலாம் என்று நினைக்கிறேன். அதற்குள்ள காரணங்களை அப்போது நான் கூறுகிறேன். இத்திருத்தங்களை நன்கு ஆராய்ந்து கனம் அமைச்சர் அவர்கள் அவற்றை அருள்கூர்ந்து ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று முன்கூட்டியே வேண்டி, திருத்தங்கள் வரும்போது அவைகளைப் பற்றி கூறிக்கொள்கிறேன் என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் பொது விற்பனை வரி மசோதாவை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். பொது விற்பனை வரிச்சட்டம் முன்பு பலமுனை வரியாக இருந்து அமைக்கப்பட்டது. இன்று கனம் அமைச்சர் அவர்கள் ஒரு சில பொருள்களுக்கு ஒருமுனை வரியாக இருந்ததை பல

கட்டிவிட்டு அது அதிகமாக இருந்தால் இந்த ஆண்டுக்குக் கொடுப்பதை கொடுத்து விட்டுப் பாக்கியிருப்பதைத் திருப்பிக் கொடுத்து விடுவது அல்லது குறைவாக இருந்தால் மீதியைப் பெற்றுக் கொள்வது என்ற முறையில் ப்ரொவிஷனல் அஸெஸ்மெண்டை மாற்றி அமைத்திருக்கிறோம். மொத்தமாகப் பார்த்தால் இது வியாபாரிகளுக்கு நன்மை பயப்பதாக இருக்கும். போன ஆண்டு இவ்வளவு வியாபாரம் ஆயிற்று—அதே அளவில் கொடுத்து விட்டோம் என்று சொன்னால் தொல்லை, சச்சரவு கிடையாது. ஸேல்ஸ் டாக்ஸ் ஆபீசர்களுக்கும், வியாபாரிகளுக்கும் முரண்பாடும் ஏற்படாது. இது டாக்ஸ் அல்ல, அட்வான்ஸ்தான். ஆகவே இதில் தவறு இல்லை, இது நன்மையாகத்தான் இருக்கும் என்றும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. பி. வி. ஸ்ரீராமுலு :** கனம் அமைச்சர் அவர்கள் அஸெஸ்மென்டைப் பற்றி கூறும்போது சென்ற ஆண்டு கட்டினது எவ்வளவோ, அதேபோல் இந்த ஆண்டும் கட்டிவிட்டால் அதில் எந்த விதமான தொல்லையும் இருக்காது என்று கூறினார்கள். ஒவ்வொரு . . .

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, on a point of order. If the hon. Member wants any information I can give but he cannot reply to the reply of the Minister.

MR. SPEAKER : The question is—

'That the Madras General Sales Tax (Amendment) Bill, 1963 (L.A. Bill No. 5 of 1963) be taken into consideration.'

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 6 were put and carried.

*Clause* 7.

MR. SPEAKER : The question is—

"That Clause 7 do stand part of the Bill".

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move the following amendment :—

"In sub-clause (*b*) of Clause 7, in the proposed item 51, *for* the words "snows, scented hair oils and cosmetics", *substitute* the words "snows and scented hair oils".

10-00 a.m. அதாவது நான் ஆரம்பத்திலேயே சொன்னது போல, காஸ்மெட்டிக்ஸ் என்ன என்பதில் சரியான விளக்கம் இல்லாத காரணத்தினால் அதையும் 6 சதவீதத்திலிருந்து நீக்கி, 2 சதவீதமாக மாற்றி அமைத்திருக்கிறோம்.



SRI M. V. KARIVENGADAM : Sir, I move the following amendments :—

"For sub-clause (a) substitute the following—

"(a) "(20) All vegetable oils -do-1.".

In sub-clause (*b*) of Clause 7, after the proposed item 51 and the entries relating thereto, *add* the following :

"51-A. Scented sticks and toilet requisites -do- 2".

The amendment were duly seconded.

MR. SPEAKER : The Clause and the amendments are before the House for discussion.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த ஃபர்ஸ்ட் ஷெட்யூலிலுள்ள ஐட்டெம் 20, வெஜிடபிள் ஆயிலுக்கு ஒருமுனை விற்பனை வரியிலிருந்து விதிவிலக்கு அளித்துத் தொழிலை ஊக்குவிப்பதற்காகக் கொண்டு வந்திருப்பதாகத் தெரிகிறது. மூன்று சதவீதம் உள்ளதை 2 சதவீதமாகக் குறைக்கிறார்கள். ஆகவே இது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது என்று சொன்னார்கள். ஒரு பொருள் 4 கை, 5 கை மாறி வரும்போது வாங்குவோர் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். மூன்று சதவீதம் என்பது 8 சதவீதம், 9 சதவீதம் கூட ஆகி விடும். ஆகவே நாம் ஒருமுனை வரி நோக்கத்தை ஒத்துக் கொள்ளும் வகையிலும், ஒரு முனை வரியை ஒத்துக்கொண்டு 3 சதவீதம் இருப்பதை 1 சதவீதமாகக் குறைத்தால், நிச்சயமாக அந்தத் தொழிலுக்கும் நாம் ஊக்கம் அளித்தவர்கள் ஆவோம். அதே சமயத்தில் வாங்குவோர், பயன்படுத்துவோர் ஆகியோர் பாக்கெட்டில் கை வைக்காமல் இருப்போம். அவர்களுக்கும் நிவாரணம் கொடுத்த மாதிரி ஆகும். ஆகவே 3 சதவீதம் என்று இருப்பதை 1 சதவீதமாக மாற்றி, அதுவும் ஒருமுனை விற்பனை வரியாக ஆக்கவேண்டுமென்று நான் என்னுடைய திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். தொழிலை ஊக்குவிக்கும் முறையிலும், வாங்குவோர், பயன்படுத்துவோர் ஆகியவர்களுக்கு நிவாரணம் கொடுக்கும் வகையிலும், தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு ஊக்கம் அளித்து உதவி செய்ய கனம் அமைச்சர் அவர்கள் முன் வர வேண்டும் என்று கூறி, இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இதன் விதி முறைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக இதை விளக்கிச் சொல்ல விரும்புகிறேன். கனம் அங்கத்தினர் திரு. கரிவேங்கடம் அவர்கள் கொண்டு வந்த திருத்தம் சட்டப்படி செல்லாது. கனம் அங்கத்தினர் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் இதைச் சொல்லுகிறேன். கான்ஸ்டிட்யூஷனில் 207-வது ஆர்டிகிள் பிரகாரம்

**"A Bill or amendment making provision for any of the matters specified in sub-clauses (*a*) to (*f*) of Clause (1) of Article 199 shall**

not be introduced or moved except on the recommendation of the Governor" 199-ல் 'ஏ' முதல் 'எஃப்' வரை பார்த்தால் imposition abolition, remission, alteration or regulation of any tax.

MR. SPEAKER : The Hon. Minister may kindly refer to proviso to Article 207

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. It says as follows : "Provided that no recommendation shall be required under this clause for the moving of an amendment making provision for the reduction or abolition of any tax. In this case I will show that it will be really increasing the tax on certain sections.

சபாநாயகர் அவர்களே, நான் கொண்டு வந்திருக்கிற திருத்தத்தில் சில காஸ்மெடிக்ஸ் போன்ற சாமான்களுக்கு ஒருமுனை விற்பனை வரியிலிருந்து பலமுனை விற்பனை வரி என்று கொண்டு வந்திருக்கிறேன். அவ்வாறு கொண்டு வரும்போது 10,000 ரூபாய் வரையில் யார் யார் வியாபாரம் செய்கிறார்களோ, அவர்களுக்கு வரி கிடையாது. அதன் பிறகு, 2 சத வீதம் சிங்கிள் பாயிண்ட் டாக்ஸ் போடவேண்டும் என்று திருத்தம் செய்தால் 10,000 ரூபாய் வரை வியாபாரம் இருப்பவர்களுக்கு விதி விலக்கு இருக்காது. This is an imposition of tax. இந்த மாதிரியான திருத்தம் செல்லாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். There are parliamentary precedents for this.

இரண்டாவது, திருத்தத்தின் மூலமாக கனம் அங்கத்தினர் அவர்கள் உண்மையாகவே இந்தச் சிறு வியாபாரிகளுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை. சிறு வியாபாரிகளுக்கு, பலமுனை வரி இருந்தால்தான் 10,000 ரூபாய்வரை எக்ஸெம்ப்ஷன் உண்டு. ஒரு முனை விற்பனை வரி என்பது பண்டத்தின் மீது வரியே தவிர, வியாபாரத்திற்கு அல்ல. அது எக்ஸைஸ் ட்யூட்டியைப் போன்றது. நூறு ரூபாய்க்கு வியாபாரம் செய்தாலும் கொடுக்கவேண்டும், 1,000 ரூபாய்க்கு வியாபாரம் செய்தாலும் கொடுக்கவேண்டும். அந்த மாதிரி இருக்கிற காரணத்தினால் கனம் அங்கத்தினர் சொல்லுவதன் மூலமாகச் சிறு வியாபாரிகள் இன்னும் பாதிக்கப் படுவார்கள். ஆகையால்தான் அவருடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நிர்வாகத்தில் இருக்கிறவர்களுக்குத் தான் இதில் இருக்கிற கஷ்டம் தெரியும். சிறு வியாபாரிகளிடம் கணக்கு வைத்துக்கொள்ளவேண்டும், கணக்குக் காட்டவேண்டும், வரி கொடுக்கவேண்டும் என்று சொன்னவுடன் சர்க்காரிடத்தில் வந்து ஏராளமாகப் புகார் செய்கிறார்கள், மனுக் கொடுக்கிறார்கள். பொதுவாகப் பெரிய வியாபாரிகள் அபிப்பிராயம் தான் பத்திரிக்கைகளில் விளம்பரம் ஆகிறது. எப்படி இருந்தாலும் அவர்கள் வரி கொடுக்க வேண்டியவர்கள். 10,000 ரூபாய் அல்லது அதற்கு மேல் இருக்கக் கூடியவர்கள் அவர்கள் எப்படி இருந்தாலும் கொடுக்கவேண்டியவர்கள். ஆகையால் தான் அவர்கள் ஒரு



முனை வரி என்று சொல்லுகிறார்களே தவிர, சிறு வியாபாரிகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், நான் கொண்டு வந்த திருத்தப்படி பல முனை வரியாகச் செய்தால் தான் அவர்கள் காப்பாற்றப்படுவார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That in sub-clause (*b*) of clause 7, in the proposed item 51 *for* the words "snows, scented hair oils and cosmetics", *substitute* the words "snows and scented hair oils".

The amendment was put and carried.

MR. SPEAKER : I will now put the hon. Member Sri M. V. Karivengadam's to the vote of the House.

The question is—

*For* sub-clause (*a*) *substitute* the following :—

'(*a*) 20 All vegetable oils-do-1".

In sub-clause (*b*) of clause 7, after the proposed item 51 and the entries relating thereto, *add* the following :—

"51-A Scented sticks and toilet requisites-do-2".

The amendments were put and lost.

Clause 7 as amended was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"The Madras General Sales Tax (Amendment) Bill, 1963 (L.A. Bill No. 5 of 1963) as amended be passed".

MR. SPEAKER : The question is—

"The Madras General Sales Tax (Amendment) Bill, 1963 (L.A. Bill No. 5 of 1963) as amended be passed".

The motion was put and carried and the Bill, as amended, was passed.

## VIII.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1963-64—*cont.*

### DEMAND No. V—REGISTRATION AND DEMAND NO. XXXIV—STATIONERY AND PRINTING.

THE HON. SRI G. BHUVARAHAN : Sir, On the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 53,20,200 under Demand No. V—Registration".

[19th March 1963

SRI RAMA. ARANGANNAL : Sir, I move the following cut-motion—

"That the allotment of Rs. 53,20,200 under Demand No. V—Registration be reduced by Rs. 100."

THE HON. SRI G. BHUVARAHAN : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 1,53,45,200 under Demand No. XXXIV—Stationery and Printing."

SRI SAW. GANESAN : Sir, I move the following cut-motion :

"That the allotment of Rs. 1,53,45,200 under Demand No. XXXIV—Stationery and Printing be reduced by Rs. 100."

MR. SPEAKER : The Demands and cut motions are before the House for discussion.

Now the time is 10-10 a.m. We shall take 2 hours for the two Demands, Registration and Stationery and Printing. Then we shall have Demand No. XXIX. We shall have 1½ hours for this Demand. That means we will finish discussion of that Demand by 1-45 p.m.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I would suggest longer hours for Demand No. XXIX because many hon. Members would like to participate in that Demand. We shall have 2 hours for Demand No. XXIX and 1½ hours for Demands, Registration and Stationery and Printing.

MR. SPEAKER : All right.

* திரு. வி. எஸ். எஸ். மணி : சட்டமன்றத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவுத் துறை மான்யத்தின் மீது எழுப்பப்பட்ட வெட்டுப் பிரேரபணையை ஆதரித்து சில வார்த்தைகள் பேச நான் விரும்புகிறேன். கனம் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். பிரத்தியேகமாக ஒரு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பிரத்தியேகமான அறிக்கையிலே நான் பார்த்தேன். மேலே தமிழ் நாடு அரசாங்கம் 1963 என்றும், கீழே ஜே. சிவானந்தம் என்றும் அச்சடிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, சிவானந்தம் என்பது யார் என்று தெரியவில்லை, அவருடைய டெஸிக்னேஷன் அதிலே குறிப்பிடப்படவில்லை. நான் இதைக் குறையாகச் சொல்லவில்லை. இது எந்தத் துறை அதிகாரியால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்குத் தான் இதை நான் சொன்னேன்.

அடுத்தபடியாக, பத்திர பதிவுத் துறையிலே திருமணம் பதிவு செய்துகொள்ள விரும்பும் கிராம மக்கள் மாவட்டத்திலுள்ள ஜாயிண்டு ரிஜிஸ்டிரார் ஆபீஸுக்குத் தான் போகவேண்டியிருக்கிறது. அங்கு போனால் தான் பதிவு செய்து கொள்ள முடியும்



19th March 1963] [திரு. வி. எஸ். எஸ். மணி]

என்ற நிலை இருக்கிறது. சிறு சிறு கிராமங்களிலுள்ள மக்கள் சிக்கனமான முறையிலே திருமணம் செய்துகொள்ளவேண்டுமென்ற நோக்கத்தோடு இருப்பவர்கள். அப்படியிருக்கும் பொழுது, அவர்கள் சாட்சிகளைக் கூட்டிக்கொண்டு மாவட்டத் தலைநகரத்திலுள்ள, ஜாய்ண்டு ரிஜிஸ்டிரார் அலுவலகத்திற்குப் போவது என்றால், வீணாக செலவாகிறது. ஆகையால், அந்தவிதமான திருமணங்களை அந்தப் பகுதிகளிலுள்ள உதவி பதிவாளர் ஆபீசில், (சப் ரிஜிஸ்டிரார் ஆபீசில்) பதிவு செய்துகொள்ளலாம் என்ற ஒரு விதியை ஏற்படுத்தினால், மிகவும் வசதியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே மாதிரி வர்த்தக நிலையங்களைப் பொறுத்துள்ள பத்திரங்களை சப் ரிஜிஸ்டிரார் ஆபீஸிலேயே பதிவு செய்துகொள்ளலாம் என்ற விதியையும் ஏற்படுத்தினால், சிறு சிறு வியாபாரிகளுக்கு வசதியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, சிறு சிறு ஊர்களில் இருக்கும் மக்கள் சப் ரிஜிஸ்டிரார் ஆபீஸுக்குச் சென்று பத்திரங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்றால், 10, 12 மைல்கள் நடந்துபோய் தான் பதிவு செய்யவேண்டிய நிலை இருக்கிறது. மக்கள் விகிதாசாரத்தைக் கணக்கெடுத்து, ஒவ்வொரு கிராமவாசியும் 2 மைல்களுக்கு அப்பால் செல்லாத முறையில் ஆங்காங்கே பத்திரப் பதிவு அலுவலகங்கள் திறக்கப்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், ஒரு சொத்தை வாங்கவேண்டுமென்றால், சொத்தை வாங்குபவர்கள் பெரிய தொகையை கையில் எடுத்துக்கொண்டு பத்திரப் பதிவு ஆபீஸுக்குப் போக வேண்டியிருக்கிறது. தொலைதூரம் நடந்தோ அல்லது வேறு வகையிலோ போனாலும், அவ்வளவு பெரிய தொகையை எடுத்துக்கொண்டு போவதற்கு அவர்களுக்கு அச்சம் ஏற்படுகிறது. அதேபோன்று அந்த சொத்தை விற்ற பணத்தை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு திரும்பிவருபவர்களுக்குக்கூட அதே பயம்தான் ஏற்படுகிறது. ஆகையினாலே, கூடுமானவரையில் 2 மைல்களுக்குள் ஒரு பத்திரப் பதிவு ஆபீஸ் அமைக்கப்படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியில் மதுரை மாவட்டத்தில் ஆத்தூரில் ஏறத்தாழ ஒரு லட்சத்திற்கு மேல் வாக்காளர் தொகை இருக்கிறது. மக்கள் தொகையைக் கணக்கிட்டால் இன்னும் அதிகமாக இருக்கும். அந்தத் தொகுதியிலே ஒரே ஒரு உதவி பத்திரப் பதிவு ஆபீஸ்தான் இருக்கிறது. பத்து மைல், இருபது மைல் மக்கள் நடந்துசெல்லவேண்டிய நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே மலைப்பகுதியில் மலைவாசிகள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்கள் மூலம் பத்திரப் பதிவுத் துறைக்கு ரெவின்யூ அதிகமாகக் கிடைக்கிறது.

(கனம் உதவி சபாநாயகர் அவர்கள் தலைமை)

அந்த மலைப்பிராந்தியங்களில் ஒரு பத்திரப் பதிவு ஆபீஸ் கிடையாது. என்னுடைய தொகுதியில் மணலூர், பன்றிமலை, ஆடலூர் ஆகிய பகுதிகளிலிருந்து 10 மைல், 12 மைல் [illegible]

விட்டுக் கீழே இறங்கி வந்து பத்திரப் பதிவு ஆபீஸுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, மணலூர், பன்றிமலை, ஆடலூர் ஆகிய இடங்களில் பத்திரப் பதிவு உதவி ரிஜிஸ்டிரார் ஆபீஸ் இருந்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 22,000 மக்கள் தொகை கொண்ட சின்னாளப் பட்டியில் பத்திரப் பதிவு செய்யவேண்டுமென்றால், வசதி கிடை யாது. மக்கள் அதற்காக 8 மைல், 10 மைல் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. அந்த ஊரில் ஒரு பத்திரப் பதிவு ஆபீஸ் ஏற்படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதே மாதிரிதான் கன்னிவாடியில் பத்திரப் பதிவு ஆபீஸ் கிடையாது. பத்திரப் பதிவு ஆபீஸுக்குப் போகவேண்டுமென்றால், குறைந்த பட்சம் 12 மைல் நடந்து செல்லவேண்டியிருக்கிறது. அந்தப் பகுதியில் ஒரு பத்திரப் பதிவு ஆபீஸ் திறந்தால், அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, பத்திரங்களுக்கு நகல் வாங்கவேண்டு மென்றால், எழுதிக்கொடுக்கப்படுகிற நகலை சரிவர படிக்க முடிய வில்லை. அவ்வளவு 'இல்லேஜிபிளாக' எழுதுகிறார்கள். நான் எழுத்தாளரைக் குறை சொல்லவில்லை. அவர்கள் அவசரமாக எழுதவேண்டியிருக்கிறது. ஆள் பற்றாக் குறையினால் அவர்கள் அந்த மாதிரி எழுதவேண்டியிருக்கிறது. இந்த நிலையைப் போக்க எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. எழுத்து அழகாக நிறுத்தி எழுதப்பட்டு, செம்மையாக வாசிக்கக் கூடிய முறையிலே அமையவேண்டும். பெண்களின் எழுத்து நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, பெண் களை அதிகமாக எழுத்தாளர்களாக நியமித்தால் நன்றாக இருக்கும். அதைவிட ஒவ்வொரு ஆபீஸுக்கும் வேண்டிய டைப்ரைடர்களைக் (தட்டெழுத்து இயந்திரம்) கொடுத்துவிட்டால் இந்த சிரமத்தைப் போக்கி விடலாம். இல்லையென்றாலும்கூட, நான் இன்னொரு யோசனை சொல்லுகிறேன். இந்தவிதமாக பத்திரங்களுக்கு வேண்டிய நகல்களை கையால் எழுதுவதைவிட, பத்திரங்களை புகைப்படம் எடுத்துவிட்டால், நகல் ஒரிஜனல் போலவே இருக் கும். அப்படிச் செய்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த முறையிலே இந்த வசதிகளை யெல்லாம் செய்துகொடுத்தால், பதிவுத் துறையில் உள்ள சங்கடங் களெல்லாம் தீருவதற்கு வழிவகை ஏற்படும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, டாகுமெண்டு ரைட்டர்களுக்கு பத்திரங்களை எழுதுவதற்கு 'ப்ரஸ்கிரைப்டு பாரம்களை' (Prescribed Forms) அமைத்துத் தரவேண்டும். எந்த டாகுமெண்டு எந்த விதத்திலே அமையவேண்டும், எப்படியெல்லாம் ஷரத்துக்கள் இருக்க வேண்டும் என்ற முறைகள் அவர்களுக்குத் தெரிவதில்லை. கூடிய வரையில், ரிஜிஸ்டர் செய்துகொண்டவர்களைத்தான் டாகுமெண்டு ரைட்டர்களாக அனுமதிக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்



களுக்கு பத்திரங்களை எழுதுவதற்கு தேவையான அறிவு உண்டாகும். அந்த முறையைக் கையாண்டால் மிகவும் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு பத்திரப் பதிவு ஆபீஸ் என்றால், மக்கள் தங்குவதற்கு வசதி கிடையாது. மரத்தின் நிழலிலும், வெய்யிலி லும் கூட அவர்கள் காத்துக்கொண்டு நிற்கவேண்டியிருக்கிறது. பத்திரப் பதிவுத் துறை மூலம் அரசாங்கத்திற்கு ஏராளமான ரெவின்யூ கிடைக்கிறது. ஆகவே, மக்களுக்கு வேண்டிய வசதி களைச் செய்துகொடுக்கவேண்டியது நம்முடைய கடமை. ஒவ்வொரு பத்திரப் பதிவு ஆபீசிலும், 'வெயிடிங் ஷெட்', மக்களுக்குத் தங்குவதற்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். அம்மாதிரி செய்தால் மக்களுக்கு நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற பத்திரப் பதிவு, எழுது பொருள், அச்சுத்துறை மான் யங்களை ஒட்டி சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன். பத்திரப் பதிவுத் துறை வருமானம் அதிகமாக வரக் கூடிய துறை. ஆகையினால், பத்திரங்களை பதிவு செய்ய செல்லும மக்களுக்கு அதிகமான வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது நமது மாநிலத்திலே இந்தத் துறைக்கு தலைமையாக இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் ரிஜிஸ்ட ரேஷன் ஒருவரும், அவருக்கு உதவியாக ஒரு இன்ஸ்பெக்டரும், 17 மாவட்டப் பதிவாளர்களும், 383 உதவிப் பதிவாளர்களும், 27 ரிசர்வ் உதவிப் பதிவாளர்களும், 1,415 எழுத்தர்களும், 788 கடை நிலை ஊழியர்களும் இருக்கிறார்கள். சப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸ் வைக்கப்படவேண்டிய இடத்தைப்பற்றியும், அந்த ஆபீஸ்கள் எந்த மாதிரி வைக்கப்படவேண்டும் என்பதைப்பற்றியும் கூறப்படு கிறது. சில இடங்களில் பழைய நாள் தொட்டு இருக்கும் ஆபீஸ் களில் மக்கள் தங்குவதற்கு வசதி கிடையாது. மிகவும் பழைய கட்டிடமாக இருக்கிறது. மின்சார வசதி இருக்கக்கூடிய இடங் களில் இந்த ஆபீஸ்களில் மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும். சில சப்-ரிஜிஸ்டிரார்களிடத்தில் பதிவு செய்யும் பணி யோடு மட்டுமல்லாமல், மழை அளவு எடுக்கவேண்டிய பணியும், சிறைச்சாலையை மேற்பார்வை பார்க்கவேண்டிய பணியும் ஒப்ப டைக்கப்பட்டிருக்கிறது. அதைப் போன்ற சப்-ரிஜிஸ்டிரார் களுக்கு சிறிது அலவன்ஸ் அதிகப்படுத்தவேண்டுமென்று நான கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே சப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸ்களில் வேலைசெய்யும் எழுத்தாளர்களை "ஈ அடிச்சான் காபி செய்ப வர்கள்" என்று பரிகாசம் செய்வது பழக்கம். காரணம் என்ன வென்றால், ஒரு பத்திரத்திற்கு பிரதி தயாரிக்கும்பொழுது ஒரு எழுத்தின்மேல் ஒரு ஈ செத்துப்போய் ஒட்டிக்கொண்டிருந்தது. அந்தக் காலத்தில் நகல் எடுக்கும்பொழுது, அதற்காக ஒரு ஈயைப் பிடித்து அடித்து அந்த எழுத்தின்மேல் ஒட்டிவைக்ககாகச்

சொல்லுவதுண்டு. ஆகவே, நல்ல முறையில் அழகாக எழுதக் கூடியவர்களைத்தான் எழுத்தாளர் வேலைக்கு வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுகூட, தாய்மார்களை சப்-ரிஜிஸ்டிரார்களாக நியமித்தால் நலமாய் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்பொழுது ஏராளமான மக்கள் பத்திரங்களை எழுதிக்கொண்டு போய், சப்-ரிஜிடிரார் ஆபீஸ்களில் 'க்யூ' வரிசையில் நிற்க வேண்டிய அவதியான நிலைமை இருக்கிறது. அந்த நேரங்களில் அவர்களிடம் அன்பாக பேசக்கூடிய சூழ்நிலை காணப்படவில்லை. சில தலைநகரங்களிலே திருவிழா போன்ற காலங்களில் ஏராளமான மக்கள் பத்திரங்கள் எழுதிக்கொண்டு, ரிஜிஸ்டர் செய்ய வருகிறார்கள். அவர்களிடம் அன்பு கொண்டு, பத்திரங்களை ரிஜிஸ்டர் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது இருக்கிற பொருளாதார நிலைமையை ஒட்டி, நிலங்கள் அதிகமான அளவுக்கு பரிவர்த்தனை செய்யப்படுகின்றன. சர்க்காரிடமிருந்து கடன் வசதி பெறுவதற்கு அதிகமாக வில்லங்க சான்றுகள் வாங்க வேண்டி இருக்கிறது. ஆகவே அதிகமான அளவுக்கு சப்-ரிஜிஸ்டிரார் ஆபிஸ்களை திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அங்கத்தினர்களுக்குக் கொடுக்கப்பட்ட குறிப்பிலே 1961-ல் ஏழு சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ்களும், 1962-ல் மூன்று புதிய சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ்களும், திறக்கப்பட்டதாகவும், 1963-ல் மேலும் ஐந்து அலுவலகங்களை ஆரம்பிக்க உத்தேசித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. விருத்தாசலம் தாலுகாவில் வேப்பூர் என்ற பெரிய கிராமம் இருக்கிறது. அதைச் சுற்றிலும் பல கிராமங்கள் இருக்கின்றன. அங்கே ஒரு போலீஸ் ஸ்டேஷனும், ஒரு தபால் ஆபீஸும் இருக்கிறது. போக்குவரத்து வசதிகள் எல்லாம் இருக்கின்றன. இப்பொழுது விருத்தாசலம் அல்லது கள்ளக்குறிச்சிக்குப் போய் பதிவு செய்யவேண்டியிருப்பதால், இந்தக் கஷ்டத்தை நிவர்த்திக்க வேப்பூரில் ஒரு சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது சில இடங்களிலே சப்-ரெஜிஸ்டிரார் ஆபீஸ்கள் பழைய கட்டடங்களிலேயே வைக்கப்பட்டிருக்கின்றன. சப்-ரெஜிஸ்டிராரும், சிப்பந்திகளும் பக்கத்திலே தங்குவதற்கு வசதி கிடையாது. ஆபீஸுக்கு அருகாமையிலேயே அவர்கள் தங்குவதற்கு கட்டடம் கட்டிக் கொடுத்தால் நலமாய் இருக்கும்.

நமது அமைச்சர் அவர்கள் பல பல இடங்களுக்கு நேரில் சென்று ஆபீஸ்கள் நல்ல முறையில் நடை பெறுகின்றனவா என்று பார்க்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். இப்பொழுது சில இடங்களிலே எழுத்தாளர்கள் (Document-writers) சரிவர பத்திரங்களை எழுதுவதில்லை. ஆகவே, அவர்களுக்கு ஒரு டெஸ்ட் வைத்தோ, அல்லது ஒரு க்வாலிபிகேஷன் வைத்தோ லைசென்ஸ் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி ஒரு



முறை இருந்தால்தான், நல்ல முறையில் பத்திரங்கள் எழுதுவதற்கும், அவைகளை ரிஜிஸ்டர் செய்வதற்கும் அனுகூலமாக இருக்கும். இல்லாவிட்டால் பின்னர் கோர்ட்டுகளுக்குப் போகவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இப்பொழுது இருக்கின்றவர்களே நல்ல முறையில் எழுதினால், அந்தப் பத்திரங்களை ரிஜிஸ்டர் செய்வதில் ஆட்சேபணை இருக்கக்கூடாது.

அடுத்தபடியாக, எழுதுபொருள், அச்சுத் துறை இலாகாவைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது அச்சகப் பிரிவிலே சுமார் 3,200 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். இவர்களில் மூன்றில் ஒரு பங்குதான் பெண்கள் இருக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுக்கு வீட்டு வசதியும், தாய்மார்களுக்கு வேண்டிய சிசு நல விடுதிகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். மேலும் ரெக்ரியேஷன் க்ளப், ரேடியோக்கள் எல்லாம் வைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இது பாராட்டத் தக்கது. நல்ல டைப்புகளை வைத்து எம்ப்ளம் போன்றவைகளை நல்ல முறையில் அச்சடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

*திரு. ஏ. ஆறுமுகம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய செய்தித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த பதிவுத் துறை மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

இந்த பத்திரப் பதிவுத் துறையானது மிகவும் பழமையான ஒரு துறை என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், இந்தத் துறை பழமையானது என்ற காரணத்திற்காக, இது எப்போதுமே பழமையாகவே இருக்க வேண்டுமென்று நினைத்தால், அது கஷ்டமாகத்தான் இருக்கும். நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் இன்று பல இலாக்காக்கள் சிறந்த முறையிலே அபிவிருத்தி அடைந்துள்ள நிலையில் இருக்கின்றன. இந்த பதிவுத் துறை இலாகாவில் ஓரளவுக்கு அபிவிருத்தி ஏற்பட்டிருந்த போதிலும், இன்னும் பல வகைகளிலே அது விருத்தி அடைய வேண்டிய நிலையில் இருக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால், இந்தத் துறையிலே பணிபுரிகின்ற அனைவரும், பொதுமக்களுடைய துன்பங்களை நிவர்த்திக்கும் வகையில் காலதாமதம் இல்லாது தொண்டு புரிய வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால், இந்த இலாகாவிற்கு வருகின்ற வருவாயை, மற்ற இலாகாக்கள் பயன்படுத்திக் கொண்டாலும், மற்ற இலாகாக்களின் நிலையை அபிவிருத்தி செய்வதற்கு இந்த இலாகா மூல காரணமாக இருந்த போதிலும், மற்ற இலாகாக்கள் அபிவிருத்தி அடைந்த அளவுக்கு இந்த இலாகா அபிவிருத்தி அடையவில்லை என்பது கண்கூடு. இதைப் பார்க்கும்பொழுது, அரசாங்கத்தில் இருக்கும் ஒருசில இலாகாக்கள்தான் பெரியவை, மற்றவை சின்னவை என்ற

கிறது. ஏனென்றால், இப்பொழுது பல அதிகாரிகளுக்கு பல சௌகரியங்கள் செய்து கொடுக்கப்படுகின்றன. சப்-ரெஜிஸ்டிரார்களைப் பொறுத்தவரையில் தாலூகா அளவிலே எடுத்துக் கொண்டாலும் சரி, ஜில்லா அளவிலே எடுத்துக் கொண்டாலும் சரி, மற்ற அதிகாரிகளைவிட இவர்களுக்கு கொடுக்கப்படுகிற வசதிகள், சம்பள அடிப்படை, எல்லாம் ஓரளவுக்கு குறைந்ததாகத்தான் இருக்கிறது என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பொதுமக்களுடைய அன்றாட வாழ்க்கையில் தொடர்பு கொண்டிருக்கும் ஒரு பெரிய அதிகாரி இருக்கிறார் என்று சொன்னால், அது சப்-ரெஜிஸ்டிரார்தான். அவருக்கு கொடுக்கப்படும் சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது. சாதாரணமாக, ஒரு தாசில்தார் அளவுக்குக்கூட அவருடைய நிலைமை இல்லை. ஆகவே அவருடைய சம்பளத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்ளுகிறேன். அவருடைய வேலை சாதாரண வேலையா, அல்லது பொறுப்பு இல்லாத வேலையா? அவர்களுக்குக் கொடுக்கப்படாத வேலையே கிடையாது. அவர்கள் சில ஜெயில்களுக்கு சூப்பிரண்டெண்டாக இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. சில இடங்களில் மாஜிஸ்டிரேட் ஆகவும் இருக்கிறார்கள். மறையளக்கும் அதிகாரிகளாகவும் இருக்கிறார்கள். இப்படி பல பொறுப்புள்ள வேலைகளை அவர்கள் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, குறைந்த பட்சம் ஒரு டெபுடி தாசில்தாருக்கு கொடுக்கிற சம்பளத்தையாவது இவர்களுக்குக் கொடுத்தால் ஓரளவுக்கு அவர்களுக்கு மரியாதை இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்பொழுது நாட்டில் பல திட்டங்களை நாம் நிறைவேற்றுவதால், இந்த சப்-ரெஜிஸ்டிரார்களுக்கு வேலை அதிகமாகிவிட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கடன் வாங்குவதாக இருந்தாலும், மற்றும் சர்க்கார் கடன் வசதி பெறுவதாக இருந்தாலும், வில்லங்க சர்டிபிகேட்டுகள் வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இந்த ஆபீஸ்களில் பணிபுரிகிறவர்கள் அதிகமான வேலையைச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள். சுமார் 10 அல்லது 15 வருடங்களுக்கு முன்பு அவர்களுக்கு இருந்த வேலையைவிட இப்பொழுது 7 அல்லது 8 மடங்கு வேலை உயர்ந்திருக்கிறது. சில இடங்களில் 10 மடங்கு உயர்ந்திருக்கிறது என்று கூட சொல்லலாம். இதையெல்லாம் உணர்ந்து, சப்-ரெஜிஸ்டிரார்களுக்கு தாசில்தார் அல்லது டெபுடி தாசில்தாருக்கான சம்பளத்தை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நில உச்ச வரம்பு சட்டம் வந்த பிறகு இவர்களுக்கு வேலை இன்னும் அதிகமாகி விட்டது. இப்பொழுது நிலம் உள்ளவர்கள் எல்லோரும் டிக்ளரேஷன் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஒருவர் டிக்ளரேஷன் கொடுப்பதாக இருந்தாலும், அவருக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது, என்ன சர்வே நம்பர் என்றெல்லாம் கணக்குக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் காரியங்களைச் செய்வதிலே சப்-ரெஜிஸ்டிரார்களுக்கு பல தொந்தரவுகள் இருக்கின்றன விவரங்கள் சரியாக இருக்கின்றனவா, இல்லையா



என்று பரிசீலித்துப் பார்ப்பதற்கு இவர்கள் நேரத்தை செலவிட வேண்டியிருக்கிறது. இதற்கு முன்னர் 10 அல்லது 20 டாக்குமெண்டுகள் பதிவு செய்த சப்-ரெஜிஸ்டிரார் இப்பொழுது குறைந்த **10-30 a.m.** அளவு எண்ணிக்கையில் பத்திரங்களை பதிவு செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனால் பொதுமக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே இதில் இருக்கக்கூடிய சில சிக்கல்களைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். குறிப்பாக எங்கள் வட ஆற்காடு ஜில்லா திருவண்ணாமலை, செங்கம் தாலூகாக்களை எடுத்துக்கொண்டால் அங்கே முப்பது ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்கள்தான் அதிகமாக இருப்பார்கள். அவர்கள் எல்லோரும் தங்களுடைய நிலங்களைப் பற்றி எழுதிக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இப்படி எல்லோரும் எழுதிக் கொடுக்க வேண்டியதாக இருந்தால் அங்குள்ள சப்-ரிஜிஸ்டிராருக்கு அதிகமாக வேலை ஏற்படுகிறது.

அடுத்தபடியாக சப்-ரிஜிஸ்தரார் ஆபீஸ்களுக்கு புத்தகங்களும் பாரம்களும் வருவதாக இருந்தால் கால தாமதம் ஏற்படுகிறது. அப்படி இல்லாமல் அவர்களுக்கு புத்தகங்களையும் பாரங்களையும் கொடுப்பதாக இருந்தால் கொஞ்சம் தாராளமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுதுள்ள அமைச்சர் அவர்கள் இந்த இலாகாவின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பதால் இந்த இலாகாவிற்கு அதிகப்படியாக புத்தகங்களையும் பாரங்களையும் உடனடியாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய முயற்சியையும் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பாரங்கள் குறைவாக இருக்கிற காரணத்தால் பொது மக்கள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே பாரங்களை அதிகப்படியாக அனுப்பும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். இதனால் கையினால் எழுதிய ரசீதும் பாரங்களும் கொடுப்பதால் பொதுமக்களிடத்தில் சர்க்கார் மீது மரியாதைக் குறைவாக நினைக்கின்றார்கள்.

இப்பொழுது சப்-ரிஜிஸ்தரார் ஆபீஸ்கள் எல்லாம் 60 அல்லது 70 வருடங்களுக்கு முன் கட்டிய கட்டிடங்களில் இருக்கின்றன. அவைகள் எல்லாம் பழுதடைந்திருக்கின்றன. அவைகளை நல்ல கட்டிடங்களில் அமைக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட சௌகரியங்களையெல்லாம் செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பல அலுவலகங்கள் எல்லாம் குறிப்பிட்ட இடங்களில் சர்க்காருடைய கட்டிடங்களில் தான் இருக்கின்றன. பல இடங்களில் தனியாருடைய கட்டிடங்களில் இருக்கின்றன. தனியார் கட்டிடங்களில் இருப்பதன் காரணத்தால் அவைகளுக்கு பல சௌகரியங்கள் இல்லாத நிலையில் இருக்கின்றன. ஆகவே பதிவு துறை அலுவலகங்களையெல்லாம், சர்க்கார் கட்டிடங்களிலேயே அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அலுவலகங்களில் இருக்கும் மேஜை, நாற்காலி போன்றவை மிகவும் பழமையானவை. புதியதாக சப்ளை செய்ய சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்

போட்டுக்கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். மற்றப்படி அவர்களுக்கு நிழல் கொடுக்கும்படியான வேறு ஏதாவது ஏற்பாட்டைச் செய்யும்படியாகவும் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது நிழல் கொடுக்கக்கூடிய அளவில் அங்கு ஒன்றுமே இல்லை. சப்-ரிஜிஸ்தரார் ஆபீஸ்கள் நம் மாகாணம் பூராவும் பரவலாக இருப்பதால் அங்கு வேலை அதிகமாக ஆகிக்கொண்டிருக்கிறது. இந்த அரசாங்கம் கடன் நிவாரணச் சட்டம், நில உச்ச வரம்புச் சட்டம் இப்படிப்பட்ட பல சட்டங்களை இயற்றியதன் காரணமாக அவர்களுக்கு வேலை அதிகமாக ஆகி இருக்கிறது. அநேகம் பேர்கள் பத்திரங்களை சப்-ரிஜிஸ்தரார் ஆபீசில் போய் பதிவு செய்ய வேண்டியதாக இருப்பதால் அங்கு அதிகப்படியான வேலை உயர்ந்திருக்கிறது. அப்படி பத்திரங்களை பதிவு செய்ய வேண்டும் என்று அங்கு பொது மக்கள் சென்றால் அவர்கள் தங்குவதற்கு வசதியான இடம் கிடையாது. அதனால் அவர்களுக்கு தங்குவதற்கு என்று நிச்சயமாக வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். நல்ல கட்டிடங்களைக் கட்டிக்கொடுக்க வேண்டும்.

அடுத்தாற்போல் இப்பொழுது நாம் லாண்ட் லீலிங் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதற்காக சில விதிகளையும் அமைத்திருக்கிறோம். அப்படி நிலத்தைப்பற்றி பதிவு செய்யப் போகும்போது நிலத்தின் சொந்தக்காரரும் போக வேண்டியதாக இருக்கிறது. அதைப்போலவே யாராவது நிலத்தை விற்க வேண்டுமானாலும் அப்பொழுது நிலத்தின் சொந்தக்காரரும் இப்பொழுதுள்ள விதியின்படி பதிவு செய்ய ரிஜிஸ்தரார் ஆபீசுக்குப் போக வேண்டியதாக இருக்கிறது. அதாவது ட்ரான்பரி போக வேண்டியதாக இருக்கிறது, இப்பொழுதுள்ள விதியின்படி, அப்படி இல்லாமல் விதிகளை மாற்றி அமைக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதைப் போலவே லாண்ட் லீலிங் கணக்குக் கொடுக்கப் போகும்போதும் நிலச் சொந்தக்காரர் சப்-ரிஜிஸ்தரார் ஆபீசுக்குப் போகவேண்டியதாக இருக்கிறது. இதனால் நிலச் சொந்தக்காரர்களுக்கு பலவிதமான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆகவே இப்படிப்பட்ட விதிகளை மாற்றி அமைக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட விதிகள் அந்தந்த பாரங்களில் இருக்கின்றன. அப்படி இல்லாமல் அந்தந்த பாரங்களை மாற்றி அமைக்கும்படியாக கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி மாற்றி அமைந்தால்தான் நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்வதுடன், பதிவுத் துறையிலிருக்கும் அலுவலர்கள் மிகக் குறைந்த சம்பளம் பெறுகிறார்கள். அவர்களுடைய சம்பளங்கள் அதிகரிக்கப்படவேண்டுமென்று இங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. பதிவுத் துறையிலிருப்பவர்களுக்குச் சம்பளத்தை விடக் கிம்பளம் அதிகமாக இருக்கிறது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் அனைவரும் அறிவார்கள். அதை மூடி மறைத்துக் கொள்வதிலே யாதொரு பயனும் இல்லை. அவர்களுடைய சம்பளம் அதிகரிக்கப்பட்டால், அவர்களைத் தவறான பாதையிலிருந்து நாம் காப்பாற்றியவர்களாவோம், அவர்களை ஒழுக்கமுடையவர்களாக ஆக்கியவர்களாவோம். ஆகவே, சம்பளத்தை உயர்த்துவது மிக மிக அவசியம். அது கவனிக்கப்படவேண்டிய விஷயமாகும்.



இந்த மானியக் கோரிக்கையின் மீது கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரணையின் பேரில் இன்னும் பல கனம் அங்கத்தினர்கள் பேச இருக்கிற காரணத்தால் என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திரு. செ. சதாசிவம்:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, பத்திரப் பதிவுத் துறை மானியக் கோரிக்கையை ஆதரித்தும், அதில் ஒரு சில சீர்திருத்தங்களைச் செய்யவேண்டும் என்கிற என்னுடைய கருத்தையும் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்பொழுது நில உச்ச வரம்புச் சட்டம் வந்த பிறகு நிலம் வாங்குபவர்களும், நிலம் விற்பவர்களும் ரிஜிஸ்ட்ரார் ஆபீசுக்குச் சென்று டிக்ளரேஷன் ஃபாரம் எழுதிக் கொடுக்கும் முறை இருப்பது வரவேற்கத்தக்கதாகும். நிலம் விற்பவர், வாங்குபவருக்கு மாற்றிக்கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆனால், அடமானம் வைப்பவர், நிலத்தை அடமானம் வாங்குபவருக்கு அதன் பேரில் வாங்கக்கூடிய தொகைக்கு வட்டிதான் கட்டிவருகிறதே தவிர, அவர்கள் நிலத்தை மாற்ற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்த போக்கியம் வைப்பவர்களும் வாங்குபவர்களும் சென்று டிக்ளரேஷன் ஃபாரம் எழுதிக் கொடுக்கவேண்டும் என்பதைத் தயவு செய்து நீக்கிவிடவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இதன்மூலம் கிராமத்தில் உள்ள நாணயச் சங்கத்தலைவர்கள் எல்லோரும் ரிஜிஸ்ட்ரார் ஆபீசுக்குச் சென்று, கூட்டுறவு நாணயச் சங்கங்களிலே வாங்கும் கடனுக்கு அடமானம் எழுதிக்கொடுக்கும்போது, தலைவர்கள் எந்த சொத்தை வைத்து, டிக்ளரேஷன் ஃபாரம் எழுதிக்கொடுக்க முடியும் என்று பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். தலைவர் ஒவ்வொரு அடமான கடனுக்கும் செல்வது என்பது மிக சிரமமான காரியம்.

முன்பிருந்த நிலைமையில் பத்திரங்கள் விற்கும் ஸ்டாம்ப் வெண்டர்கள் ஒன்றரை ரூபாய் ஸ்டாம்ப் இருந்த காலத்தில், தனி நபருக்கு 400 ரூபாய் ஸ்டாம்ப் பத்திரம் கொடுக்கலாம் என்ற விதி இருந்தது. இப்பொழுது 9½ ரூபாய் வரையில் அதிகப்படுத்திய காலத்தில்கூட, ஒரு தனி நபருக்கு 400 ரூபாய் பத்திரம்தான் கொடுக்கலாம் என்று இருப்பது மிகக் குறைந்ததாக இருப்பதால், அதை மாற்றி, அதிகப்படியாக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கரூர் தாலுகாவில், என்னுடைய தொகுதியில் சின்னதாராபுரத்தில் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் ஒன்று அமைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் குறிப்பிட்ட குறைகளை அனுதாபத்துடன் கவனிக்கவேண்டுமென்று கேட்டு, உரையை முடிக்கின்றேன்.

* **திரு. எஸ். முருகையன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் பத்திரப் பதிவுத் துறை, எழுதுபொருள்-அச்சுத் துறை

நமது கனம் அமைச்சர் அவர்கள் 1961, 1962-ல் சுமார் 10 அலுவலகங்களைத் திறந்திருக்கிறார்கள். 1963-64-ல் இன்னும் ஐந்து அலுவலகங்களைத் திறக்க இருக்கிறார்கள். என்னுடைய செங்கம் தாலுகாவில் தாளிப்பாடி, தண்டராம்பட்டு அல்லது சாத்தனூர் அணையில் ஓர் பத்திரப்பதிவு அலுவலகம் ஒன்று திறக்க வேண்டு கிறேன். மதிப்பிற்குரிய காலஞ்சென்ற பழனிப் பிள்ளை அவர்கள் திருவண்ணாமலை தொகுதியில் அவர் இந்தச் சபையின் மெம்பராக இருந்து, காலஞ்சென்றிருக்கிறார். அவர் இங்கு இருக்கும்போது அவருடைய தொகுதியில் வேட்டவலம் என்ற இடத்தில் ஒரு சப்-ரிஜிஸ்டிரார் ஆபீசை திறக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்தார். அதை மறுபடியும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வேட்டவலம் என்ற இடத்தில் ஒரு சப்-ரிஜிஸ்டிரார் ஆபீசைச் திறக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது, என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய சர்க்காருடைய சப்-ரிஜிஸ்டிரார் அலுவலகங்களில் எல்லாம் மின்சார வசதி கிடையாது. மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நல்ல காற்று வேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. அங்கு அருமையான, முக்கியமானப் பத்திரங்களை எழுதுகிறார்கள். அப்படி எழுதக் கூடிய காலங்களில் கையில் ஏற்படுகின்ற வியர்வையால் அந்தப் பத்திரங்கள் பழுதடைகின்றன. ஆகவே, அப்படி பழுதடையாமல் இருக்க அங்கு காற்று வசதி இருக்க வேண்டியதாக இருக்கிறது. அதனால் சப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸ்களில், அவசியம் மின்சார வசதி செய்து கொடுத்து, மின்சார விசிறிகளைப் போடும்படியாகவும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, வட ஆற்காடு ஜில்லாவில் சுமார் முப்பது சப்-ரிஜிஸ்டிரார் ஆபீஸ்கள் இருக்கின்றன. விசாரணை நடத்த வேண்டியதாக இருக்கிறது. அப்படி விசாரணை நடத்தும்போது ஜில்லா ரிஜிஸ்டிரார்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இப்பொழுது ஜில்லாக்களை பல இலாகாக்களைப் பொறுத்து இரண்டாகப் பிரிப்பது போன்று, இந்த பதிவுத் துறை இலாகாவையும் இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஜில்லா அபிவிருத்தி கவுன்சில் சம்பந்தமாக இரண்டாகப் பிரிப்பது போல இதையும் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயத் துறை, கூட்டுறவுத் துறை போன்றவைகளை இரண்டாகப் பிரித்திருப்பது போன்று பதிவுத் துறையையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

டிஸ்ட்ரிக்ட் ரிஜிஸ்தரார் ஒரு ஜில்லா அதிகாரியாக இருந்தாலும் அவருக்கு ஜில்லா உத்தியோக பதவி இருந்தாலும் அவருக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் மற்ற இலாகாக்களில் கொடுப்பது போல் ஜில்லா ரிஜிஸ்தராருக்கு கொடுக்கக்கூடியதாக இல்லை. குறைவாகக் கொடுக்கப்படுகிறது. பல ஜில்லா அதிகாரிகள் சம்பளம் வாங்குவது போன்று இவர்கள் வாங்குவதாக இல்லை. அப்படி இல்லாமல் இவர்களும் மற்றவர்களைப்போல் சம்பளம் வாங்குவதற்கு அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக்கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதைப் போலவே பல ஜில்லா அதிகாரிகளுக்கு ஜீப் கார்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஜில்லா பதிவு அதிகாரிகளுக்கு ஜீப் கொடுக்கவில்லை. இவர்களுக்கும் ஜீப் வசதி செய்து கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.



இப்பொழுது டாகுமெண்ட் யார் வேண்டுமானாலும் எழுதுவதாக இருக்கிறது. அப்படி இல்லாமல் லைசென்சு பெற்றவர்கள் தான் டாகுமெண்ட் எழுத வேண்டும் என்ற முறையில் இருக்க வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தில் அந்த முறை இருப்பதாக தெரிய வருகிறது. அங்கு இருப்பது போன்று இங்கும் அந்த முறையைக் கொண்டு வரவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். சாதாரணமானவர்கள் டாகுமெண்டுகளை எழுதி அதைக் கொண்டு போனால் சப்-ரிஜிஸ்தாரர்கள் அது சரியில்லை இது சரியில்லை என்று திருப்பி விடுகிறார்கள். அதனால் மக்களுக்கு எவ்வளவோ கஷ்ட நஷ்டம் ஏற்படுகிறது. அதனால் லைசென்சு வாங்கியவர்கள் தான் டாகுமெண்டுகளை எழுதலாம் என்ற முறையைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவே இந்த ஆலோசனையையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கனம் அமைச்சரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். மதிப்பிற்குரிய கனம் அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட்டிருக்கிறார். "அரசாங்கத்தின் பல்வேறு அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாய்க் கடன்கள் முதலியவை கொடுப்பதனால், வில்லங்கச் சான்றுகள் எடுப்பது அல்லது பத்திரங்களுக்கு நகல்கள் எடுப்பது அல்லது தஸ்தாவேஜுகளைப் பதிவு செய்வது பொதுமக்களுக்கு அவசியமாகி விட்டது. இதன் விளைவாக, இத்துறையின் வேலையும் அதிகரித்து வருகிறது. இதனால் மேலும் பல பதிவு அலுவலகங்களைத் திறக்க வேண்டியுள்ளது. அவற்றை நிர்வகிப்பதற்கு மேலும் பல பணியாளர்களை நியமிப்பதும் அவசியமாகி விட்டது" என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்த முறையில் அந்த இலாகாவில் பணிகள் நிறைந்திருக்கிறது. அதனால் கனம் அமைச்சர் அவர்கள் கூடுதலான பணியாளர்களை சப்-ரிஜிஸ்தாரார் ஆபீசுக்கு அதிகமாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அத்துடன் சப்-ரிஜிஸ்தாரார்களுக்கு தாசில்தார் அல்லது டெபுடி தாசில்தார் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை முழு மனதுடன் ஆதரித்து என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** மதிப்பிற்குரிய சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது கொடுக்கப்பட்ட வெட்டுப் பிரேரபணைமீது ஒரு சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். பத்திரப் பதிவு அலுவலகங்களில் பலர் பத்திரம் பதிவு செய்வதற்கு வந்தால் ஏராளமான பேர்கள் கடுமையான வெய்யிலில் நின்று கொண்டிருக்க வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் தங்குவதற்கு வேண்டிய நிழல் கிடையாது. அதனால் அவர்களுக்கு அங்கு ஷெட்டுகளையோ அல்லது குடிசைகளையோ

[திரு. எஸ். முருகையன்] [19th March 1963

ஆகியவற்றின் மானியக் கோரிக்கைகளின் பேரில் பிரேரிக்கப்பட்ட வெட்டுப் பிரேரணையையொட்டி என்னுடைய கருத்துக்கள் சில வற்றை நான் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, இன்றையதினம் சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்களில் ஏராளமான மக்கள் வருகிறார்கள். அங்கே கூட்டம் கூடும் அள வுக்குச் சரியான இட வசதி கிடையாது. ஏனென்றால், நீண்ட நாட்களுக்கு முன்னால் கட்டப்பட்ட அந்த கட்டடங்கள் அபி விருத்தி செய்யப்படாமலே இருந்துகொண்டிருக்கின்றன. எனக்கு முன் பேசிய கனம் உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் கூடச் சொன் னார்கள். மற்ற சம்பந்தப்பட்ட இலாக்காக்களின் கட்டிடங்களை மாற்றியமைக்கிறார்களே தவிர, இதுவரை சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ் போன்ற கட்டிடங்கள் பல மாற்றியமைக்கப்படவே இல்லை. ஆகவே, இதை உடனடியாகச் செய்யவேண்டிய முக்கியமான காரியமாகக் கவனிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

சில சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்களில் பத்திரம் பதிவு செய்வதற் காக ஏராளமான கூட்டம் வரும் காரணத்தால், சப்-ரிஜிஸ்ட்ரார் கள் சில நேரத்தில் அதிகக் கோபமாகக்கூட மக்களிடத்தில் பேசி விடுகிறார்கள். அதிகக் கூட்டம் இருக்கும் நேரங்களில் எல்லோ ருக்குமே சில நேரங்களில் கோபம் வருவது இயற்கைதான் என்றா லும், கூடுமானவரை சப்-ரிஜிஸ்ட்ரார்கள் கோபப்படாமல் மக்களி டம் நடந்துகொள்ளக்கூடிய அளவுக்கு அவர்களுக்கு சர்க்குலர் அனுப்பும்படியாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஒரு நாளைக்கு இருபது பத்திரங்கள்தான் அங்கே ரிஜிஸ்டர் செய்யும் அளவுக்கு வசதிகளை வைத்துவிட்டு, 100 பத்திரங்கள் வந் தால் நிச்சயமாக அந்த நிலை இருந்துதானே தீரும் ஆகவே, ஒன்று வரக்கூடிய பத்திரங்களை பதிவு செய்ய வேண்டிய வசதி களைச் செய்து தரவேண்டும், அல்லது இவ்வளவு பத்திரங்கள்தான் ரிஜிஸ்டர் செய்யவேண்டும் என்ற ஒரு குறிப்பிட்ட அளவை நிர்ண யித்துவிடவேண்டும். வசதி இல்லாத அளவுக்குச் செய்தால் இந்தக் குறை நிச்சயமாக இருக்கத்தான் செய்யும். ஆகவே, அங்கு வசதிகளை அதிகரிக்கவோ, அல்லது அளவை நிர்ணயம் செய்யவோ வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

இப்பொழுது வந்திருக்கும் நில உச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படையில், அவர்களுக்கு எந்த எந்த இடங்களில் நிலங்கள் இருக்கின்றன என்பதற்கு ஒரு சர்ட்டிபிகேட் வாங்கிக்கொடுக்க வேண்டிய சூழ்நிலையில் மக்கள் இருக்கிறார்கள். கிராமக் கர்ணங் களிடமிருந்து அந்த சர்ட்டிபிகேட்டை வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. அந்த சர்ட்டிபிகேட்டை அவர்கள் அவ்வளவு எளி தாகச் சில கிராமங்களில் பெற முடிவதில்லை. உடனடியாக வாங்க வேண்டுமானால், ஓரளவுக்குப் பணம் கொடுத்தால்தான் வாங்க முடியும் என்ற நிலையில் கிராம மக்கள் இருந்து வருகிறார்கள். ஆகையால், கிராமக் கர்ணங்களுக்கும் பத்திரங்கள் எழுதக்கூடிய வேலையைக் கொடுத்துவிட்டால், இந்த சிரமம் ஓரளவுக்குத் தீரும்



19th March 1963] [திரு. எஸ். முருகையன்]

என்று நான் கருதுகின்றேன். சர்ட்டிபிகேட் வாங்குவதற்கும் ஏதோ கொஞ்சம் பணம் கொடுக்கத்தான் வேண்டியிருக்கிறது என்ற நிலையில் பத்திரம் எழுதுபவர்களுக்கும் தனியாகப் பணம் கொடுப்பதென்பது எல்லோருக்குமே சாத்தியப்படாது. வசதி உள்ளவர்கள் கொடுத்துவிடலாமே தவிர, வசதி இல்லாத, கொஞ் சம் நிலம் வைத்திருப்பவர்கள், 100 ரூபாய் கிரயமுள்ள நிலத்தைப் பதிவு செய்வதற்காக 15 முதல் 20 ரூபாய் வரை இவற்றுக்கெல்லாம் செலவு செய்யவேண்டுமென்றால், இது முடியாத காரியம். இதிலே முக்கிய கவனம் செலுத்தப்படவேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். பொதுவாக, கிராமக் கர்ணங்களும் மற்றவர் களும் பத்திரம் எழுதத் தகுதியுடையவர்கள் எந்த அளவு கிரயப் பத்திரம் எழுதினால், எவ்வளவு தொகை வாங்கவேண்டும் என்று நிர்ணயம் செய்துவிட்டால், நிலம் வாங்குபவர்களுக்கு இப்படிப் பட்ட தொல்லை இருக்காது என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின் றேன்.

இந்த இலாகாவில் செலவைவிட வருவாய் அதிகம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியிருப்பதால், ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நிலத்தை வாங்குபவராகவோ, விற்பவராகவோ இருந்தால் அவர்களுக்கு ஒரு சலுகை கொடுத்து, பதிவுக் கட்டணம் இல்லாமல் செய்யவேண்டும், அல்லது பத்திரத் திற்கு வேண்டிய தொகையை குறைக்கலாம். இது குறிப்பாக ஹரிஜனங்களுக்கு நன்மை அளிக்கக்கூடும். அவர்கள் இருபது, முப்பது ஏக்கர் நிலம் கிரயம் வாங்கும் நிலையில் இல்லை. ஒரு ஏக்கருக்கு அதிகமாக அவர்கள் வாங்கும் நிலையில் பெரும்பாலும் இல்லை. விற்கும் நிலையில்தான் அவர்கள் ஒருக்கால் இருக்கக் கூடும். ஆகவே, ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நிலம் விற்பவர் களுக்கு கட்டணச் சலுகை அளித்து, அதைக் குறைத்தால் நலம் என்கிற யோசனையை நான் சொல்லிக்கொள்ளுகின்றேன்.

வில்லங்க சர்ட்டிபிகேட் வாங்குவதற்குக் கட்டண விகிதம் அதிகமாக இருக்கிறது. ஐந்து ஏக்கருக்குக் குறைவாக உள்ள நிலச்சொந்தக்காரர்களுக்கு கட்டண விகிதத்தை எப்படி கூட்டுறவு சங்கங்களுக்குப் பாதியாக வைத்திருக்கிறார்களோ, அது போல, ஐந்து ஏக்கருக்கு குறைவாக உள்ள நிலச் சொந்தக்காரர் களுக்கும் இந்தச் சலுகையை விஸ்தரிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

பத்திரம் காப்பி வாங்க சப்-ரிஜிஸ்ட்ராரிடம் மனுச் செய்யும் போது, காலையிலிருந்து மாலை வரை காத்திருக்கவேண்டியிருக் கிறது. சப்-ரிஜிஸ்ட்ரார் வந்தவுடன் பத்திரங்களை வாங்கவும், சரி பார்க்கவும், மீண்டும் ரிஜிஸ்தர் செய்வதற்கும் மூன்று மணி நேரம் ஆகிறது. ஆகையால், சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் பத்திரம் நகல் எடுப்பதற்கென்று தனிப் பிரிவு ஏற்படுத்தி, அல்லது தனிக் குமாஸ் தாக்கள் நியமித்து, காலையில் மனுவைப் பெற்றுக்கொள்ளவும், பிறகு ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு நகல்களைக் கொடுக்க

வும் வேண்டிய வசதியைச் செய்துகொடுத்தால் காலையிலிருந்து மாலை வரையில் காத்திருக்கும் நிலை ஏற்படாது என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

மூன்று மணிக்குக் கூப்பிட்டுப் பத்திரம் வாங்கிக்கொண்டு வரச் சொல்கிறார்கள். ஆனால் சில்லரை பத்திரங்கள் அங்கே கிடைப்பது கிடையாது. பத்திரம் வாங்கிவர நேரம் ஆகிறது. அதற்குப் பிறகு, காகிதம் கேட்கிறார்கள். அதை வாங்கிவர இன்னும் சற்று நேரம் பிடிக்கிறது. இப்படி காலை 11 மணியிலிருந்து மாலை ஐந்து மணி வரையில் பொதுமக்கள் காத்திருந்து தொல்லைப்படவேண்டியிருப்பதை உடனடியாகப் போக்க ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சுயமரியாதை திருமணம் பற்றி கனம் உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்னார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு கனம் அமைச்சர் அவர்களை ஒரு கேள்வி கேட்டபோது, 'இதுவரை நடந்த எல்லா சுயமரியாதைத் திருமணங்களையும் செல்லுபடியாக்கும் வகையில் சட்டம் கொண்டுவர முடியுமா?' என்று கேட்டதற்கு, 'சட்டம் கொண்டுவரவேண்டிய அவசியம் இல்லை, மீண்டும் பதிவு செய்து கொள்ளலாம்' என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நேரத்தில், பல இன்னல்கள் வருகின்றன. ஒருவருக்கொருவர் சொந்தக்காரராக இருந்தால் பதிவு செய்ய முடியாது என்று பதிவாளர் சொல்கிறார். சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டவர்கள் சொந்தக்காரர்களாக இருந்தால் நிலைமை என்ன ஆவது? அவர்களும் பதிவுசெய்வதற்குச் சென்று சுயமரியாதைத் திருமணங்களைப் பதிவு செய்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டும்.

இப்படி சொந்தக்காரர்களுக்குள் மணந்து கொண்டால் அந்தச் சட்டப்படி பதிவு செய்து கொள்வதற்கு இடமில்லை.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** ஸ்பெஷல் மாரியேஜ் ஆக்ட் செய்யப்பட்டது. சில சொந்தக்காரர்களை மணந்து கொண்டால் அந்தத் திருமணம் பதிவு செய்யப்படலாம் என்று சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. ஆகவே இப்போது பதிவு செய்துகொள்வதில் சங்கடம் இருக்காது.

**திரு. எஸ். முருகையன்:** சில உறவினர்கள் என்று மட்டும் இருக்கக் கூடாது. உறவினர்களுக்குள் முறையோடு இருக்கக் கூடிய எந்த உறவினரைக் கல்யாணம் செய்துகொண்டாலும் அந்தத் திருமணம் பதிவு செய்யப்படுவதற்கு வழி செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக உதவி சபாநாயகர் அவர்களுடைய தொகுதி, சங்கம் தாலுகாவில், நாராயண குப்பம் என்று எடுத்துக்கொண்டால் அங்கே மிக அதிகமாக சுயமரியாதைத் திருமணங்கள் நடந்திருக்கிறது. ஆகவே இத்தகைய திருமணங்கள் யாவும் பதிவு செய்யப்படுவதற்கு வழி செய்ய வேண்டும்.

DEMAND NO. V—REGISTRATION AND DEMAND NO. XXXIV—
STATIONERY AND PRINTING



இரண்டாவது, பத்திரப் பதிவு ஆபீசை எடுத்துக்கொண்டால் அங்கே இடவசதி இல்லை. இன்னும் மற்ற எவ்விதமான வசதியும் இல்லை. பத்திரம் வாங்க வருபவர்கள் கூட்டம் சேர்ந்து வேலை செய்கின்ற அதிகாரிகளுக்கும் சங்கடம் ஏற்படுகிறது. ஆகவே பொதுமக்களுக்கும், அதிகாரிகளுக்கும் மிக்க வசதியாக இருக்கும்படி அந்த இலாகா கட்டிடங்கள், பர்னிசர்கள் எல்லாம் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும், இன்னும் அதிக வசதி அங்கே அளிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. கி. இரா. சம்பந்தம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தப் பதிவுத்துறை, அச்சகம் போன்ற இலாகா மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சர்க்கார் அச்சகத்திலேயே பொதுமக்களுக்குத் தேவையான பாரங்கள் எல்லாவற்றையும் அச்சடித்துக்கொடுப்பதனால் கஷ்டம் ஏற்படுகிறது. இருந்தாலும் திறம்பட அந்தப் பணியைச் செய்து வருகிறார்கள் என்றால் நம்முடைய மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களுடைய எண்ணத்திற்கேற்ப அங்கே உள்ள தொழிலாளர்களும், அதிகாரிகளும் நடந்து கொண்டு வருவதன் காரணமாகத்தான் அது சாத்தியமாகிறது என்று சொல்வேன். கொஞ்சம் காலதாமதமாகிறது என்றால் அதற்குக் காரணம் நம்முடைய வேலைத்திட்டங்கள் எல்லாம் பெருகியிருக்கின்றன. அதற்குத் தகுந்தாற்போல அச்சகத்தில் வேலையும் அதிகப்பட்டிருக்கிறது. இன்னும் இந்த வேலையைத் துரிதப்படுத்தவேண்டுமென்றால் பத்தாம் பசலி இயந்திரங்களை எல்லாம் அகற்றிவிட்டு, நவீன புது மின்சார அச்சு இயந்திரங்களை ஏற்படுத்த முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு பேப்பர், மற்ற ஸ்டேஷனரி விஷயத்தில் கொஞ்சம் தாராளமாக இருக்கவேண்டும். இப்போது ஒன் ஸைட் பேப்பர்களில் சில இலாக்காக்களில் இருந்து கடிதம் வரும்போது அதைச் சரியாகப் படிக்க முடிவதேயில்லை. பின்னால் அச்சிடப்பட்டிருப்பதனால் அதன் இங்க் மறுபக்கம் ஊற, அதன்மேல் என்ன எழுதியிருக்கிறார்கள் என்று படிக்கவே முடிவதில்லை. இன்னும் ஒன்றும் சொல்வேன். சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோரும் பணக்காரர்கள் அல்ல. சோஷலிஸ்ட் பாடர்ன் ஆப் சொஸைடி அமைக்கும் திட்டத்திற்கேற்ப சட்டசபை உறுப்பினர்கள் பெரும்பாலோர் நடுத்தர குடும்பங்களில் இருந்தே வந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் என்.ஜி.ஓ.-க்கள் போலவே எல்லாவற்றிலும் கருதாவிட்டாலும், அவர்கள் சம்பளத்தைக் கூட்டும் கருத்தைக் கொள்ளாவிட்டாலும் இங்கே வந்த இடத்தில் அவர்களுக்குத் தேவைப்படுகிற ஸ்டேஷனரிகளையாவது தாராளமாக வழங்கவேண்டும். கேள்வி எழுதிக்கொடுப்பதாக இருந்தாலும், மற்றவற்றுக்கு நோட்டீஸ் கொடுப்பதாக இருந்தாலும் இன்னும் பல காரியங்களுக்கு லெட்டர் பேப்பர் முதலியன தேவைப்படுகிறது. அசெம்பளி ஆபீசில் அவை கொடுப்பதற்கு ரொம்பக் கஞ்சத்தனம்

பண்ணுகிறார்கள். ஆகவே ஓரளவு ஸ்டேஷனரி பொருள்களை சட்டசபை அங்கத்தினர்களுக்கும் சரி, மற்ற இலாக்காக்களுக்கும் சரி தேவைக்குத் தக்கபடி கூட்டிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் எம்பளம் **Emblem** சம்பந்தமாக அங்கத்தினர்களும் உபயோகப் படுத்தலாம் என்று வந்துவிட்டது. மூன்றுதான் இருக்கிறது என்று சொல்லாமல் அதை 50 ஆக உயர்த்தி, அந்த வசதி கிடைக்கும்படியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு அச்சகத்துறையில் வேலை அதிகரித்திருந்தாலும் சென்னை, புதுக்கோட்டை ஆகிய இரண்டு இடங்களில் தான் அச்சகசாலை இருக்கிறது. வேலை அதிகமாக இருப்பதனால் உள்ளூர் அச்சகசாலைகளில் கொடுத்துங்கூட வேலை செய்துகொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே மாவட்டவாரியாக அச்சகத்தை ஏற்படுத்த நல்லதொரு திட்டத்தை உருவாக்கி, துரிதமாகச் செயல்படுத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

பதிவுத் துறையில் அதிகாரிகள் குறைந்திருக்கிறதே தவிர வேலைகள் மிக அதிகமாக இருக்கின்றன. அதுவும் நிலச்சீர்திருத்தம் வந்ததன் காரணமாக சின்னச் சின்ன பட்டா ஏராளமாக பதிவு செய்யப்படவேண்டியிருக்கிறது. அவர்களுடைய காரியாலயங்களைப் பார்த்தால் குருவிக் கூடு போல இருக்கிறது. போதுமான நாற்காலி, பெஞ்சு வசதி கிடையாது. பொதுமக்கள், அதுவும் விவசாயிகள் நிற்பதற்குக்கூட இடமில்லாதபடி வெய்யிலிலும், மரத்தடியிலும் நிற்கிறார்கள். ஆகவே பொது மக்களுக்கு மிகவும் வசதி செய்து தரக்கூடிய இந்தக் காரியாலயங்களுக்கு நல்ல கட்டிட வசதி, பர்னிசர் வசதி எல்லாம் செய்துகொடுக்கவேண்டும். இன்னும் பத்திரம் எழுதுபவர்களுக்கு அங்கங்கே ஷெட்டாவது போட்டுக்கொடுக்க வேண்டும். மேலும் அந்தக் காரியாலய போர்டில் பத்திரமும் எவ்வளவு ரூபாய்க்கு எவ்வளவு வாங்கவேண்டும் என்கிற விவரம் கூட சரியாக எழுதப்படவில்லை. ஒன்றுக்கு மேல் ஒன்று ஒட்டிக்கொண்டே போகிறார்களே தவிர அதைப் பார்த்து ஒன்றைத் தெரிந்துகொள்ளக்கூடிய நிலையில் இல்லை. எழுத்துக்கள் ரொம்ப பெயின்ட்டாக ( **Faint** ) இருக்கிறது. இதனால் அதிகாரிகளிடமே கேட்கவேண்டியிருக்கிறது. அதனால் அவர்கள் வேலை தடைபடுகிறது. ஆகவே ஆண்டுக்கு ஒரு முறை அந்த நோட்டீஸ் போர்டு ஒழுங்கு செய்யப்பட்டு, அப்போதைக்கப்போது பொது மக்களுக்கு பொதுவாகத் தெரிந்திருக்கவேண்டிய விவரங்கள் அந்த நோட்டீஸ் போர்ட்டில் எழுதப்படுவதற்கு வழி செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

11–30 a.m. **திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே சேலம் ஜில்லாவில் ஏற்காடு தொகுதியில் சேர்வராயன் பகுதியில் மலைவாசிகள் வசிக்கக்கூடிய 64 கிராமங்கள் இருக்



கின்றன. அங்குள்ளவர்கள் ரிஜிஸ்டர் பண்ணவேண்டுமென்று சொன்னால் ரிஜிஸ்ட்ரார் ஆபீசுக்கு 20 மைல் தூரம் போகவேண்டியிருக்கிறது. ஆகவே, ஏற்காட்டில் ஒரு ரிஜிஸ்ட்ரார் ஆபீசை ஏற்படுத்திக் கொடுத்தால் வசதியாக இருக்குமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதி குறைகளையெல்லாம் கவனிக்கிறேன் என்று கனம் அமைச்சர் அவர்களும் நேற்று கூறினார்கள். ஆகவே, அங்கு ஒரு ரிஜிஸ்ட்ரார் ஆபீசை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. சா. கணேசன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று சமர்ப்பித்திருக்கிற இரு மானியங்களின் மீதும் நிறையப் பேசவேண்டிய அவசியம் இல்லை. பல அன்பர்கள் தங்கள் கருத்துக்களை எல்லாம் தெளிவாகப் புலப்படுத்தி இருக்கிறார்கள். பதிவு நிலையம் சம்பந்தப்பட்ட வரையிலே ஒன்றை நான் மிக அழுத்தமாகச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்களுக்குப் பெரும்பாலானவர்கள் வருகிறார்கள். அவர்கள் பத்திரத்தை ஆபீசில் கொடுத்துவிட்டு அதற்கான சடங்குகள் எல்லாம் முடியும் வரையிலே தெருவிலே நிற்கக்கூடிய நிலைமைதான் பெரும்பாலான சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்களில் காணப்படுகிறது. வருகின்றவர்கள் செலுத்தக்கூடிய கட்டணத்தின் மூலம் அந்தத் துறையிலே ஆண்டு ஒன்றுக்கு வரக்கூடிய வருமானம் சுமார் 111 லட்சம். சுமார் 45 லட்சம் செலவு போக நிகர வருமானம் ஆண்டு ஒன்றுக்கு 66 லட்சம் அளவுக்கு இருக்கிறது. அதற்கு மேலே, இந்த ஆண்டு கட்டணங்கள் கூட்டப்பெற்றிருப்பதன் காரணமாக இந்தத் தொகை சுமார் 20 அல்லது 25 லட்சம் அதிகப்படலாம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் துறை நஷ்டம் வருகிற துறை அல்ல, லாபம் வருகிற துறை என்பதற்காக நான் பணத்தை விரயம் செய்யவேண்டுமென்று கூறவில்லை. கட்டணம் கட்டிப் பதிய வருகிறவர்கள் தங்க, குஷன் சோபா வேண்டாம்; ஏர் கண்டிஷன் ரூம் வேண்டாம். ஒரு கீற்றுக் கொட்டகையும், மர நாற்காலிகளும் வேண்டாமா? "அந்தஸ்திலே உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் இருவருக்கும் ஒரே நிலைதான்" என்று கூறலாம். "அந்தஸ்திலே உயர்ந்தவர்களையும், தாழ்ந்தவர்களையும் சமநிலையில் வைக்கிறோம்" என்று சொல்லிக் கீழ் நிலையில்தான் வைக்கிறோம். 'சமநிலையில் வைக்கிறோம்' என்று சொல்லும்போது கீழே இருப்பவர்களையும் மேல் நிலையில் வைக்கவேண்டுமே தவிர, கீழ் நிலைக்குப் போவது பொருத்தம் இல்லாதது என்று கூற விரும்புகிறேன். சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்களுக்கு வருகிறவர்கள் மரியாதையாக உட்கார்ந்திருப்பதற்கு 10 நாற்காலிகளாவது போடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு அந்தத் துறை பற்றிய பிற விஷயங்களை விட்டு விடுகிறேன்.

இனி நமது அரசினர் அச்சகம் பற்றி எடுத்துக் கொள்கிறேன். அச்சுத் துறையிலே எனக்குக் கொஞ்சம் நீண்ட காலத் தொடர்பு இருக்கின்ற காரணத்தாலே, சென்ற ஆண்டு பல குறைபாடுகளை

எடுத்துச் சொன்னேன். ஆனால் ஒரு 'இன்ச்' கூட முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதை மிக மனப் புழுக்கத்தோடு சமர்ப்பித்துக் கொள்கிறேன். அச்சிடும் தரம் பெரும்பாலாக உயரவில்லை. ஏதோ கவர்னர் பெருமான் உரையும், கனம் மந்திரிகளின் பட்ஜட் உரையும் செம்மையாக இருக்கின்றன. அரசாங்க அச்சகத்திலே ஜாப் இங்க் உபயோகப்படுத்தப்படுவதில்லை. பெரும்பாலும் வண்டிக் கழிம்பு போன்ற டிரம்மில் வருகிற மைதான் பயன்படுத்தப்படுகிறது போலும். அதைப் போட்டு அச்சடிப்பதன் காரணமாக மை எல்லாம் கலைந்து படிப்பதற்குத் திண்டாடும் நிலைமைதான் நமக்கு ஏற்படுகிறது. இதை மாற்ற வேண்டும்.

கனம் உறுப்பினர் ஒருவர் 'ஆடோமாடிக் மெஷின்கள்' வைத்து வேலை செய்யவேண்டுமென்று சொன்னார்கள். இப்போது அச்சகங்கள் பெரும்பாலும் மின்சார இயக்கத்தின் மூலமாகத்தான் நடக்கிறது. டிரெடில் மெஷின் வைத்து காலால் மிதித்து இயக்கிய காலம் மலையேறிவிட்டது. அப்படி இருந்தும்கூட நிலை உயரவில்லை என்றால், எங்கோ தவறு இருக்கிறது. அந்தத் தவறு நிச்சயம் நிவர்த்தி செய்யப்பட வேண்டிய ஒன்று என்பது தெளிவாகப் புலப்படுகிறது. தரம் உயரவேண்டுமென்று சொன்னால் தவறுகள் நீக்கப்பட வேண்டும். சட்டசபை இலாகாவால் நம்மைப் பற்றிப் படங்களுடன் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய 'Who is Who' என்ற மொத்தைப் புஸ்தகம் வழங்கப்பட்டிருக்கிறது. நல்ல கனமான 'ஆர்ட் பேப்பரில்' அச்சடிக்கப்பட்டுள்ளது. ஒரு பிளாக் செய்யும்போது எந்தக் காகிதத்தில் அச்சடிக்கப் போகிறோம் என்பதை முதலிலேயே முடிவு செய்து அந்தக் காகிதத்தின் 'சர்பேசுக்கு'-த் தகுந்த மாதிரி கிரைன்களுடன்கூடிய பிளாக் செய்வதுதான் மரபு, நெறி, முறை, விதி. ஆனால் அந்தப் புத்தகத்திலுள்ள பல பிளாக்குகள் மையால் ஏதோ கறுப்புக் குறி போட்ட மாதிரியாகக் காணப்படுகின்றன. அந்தப் புத்தகத்தின் 'காப்பி' என்னிடத்தில் இருக்கிறது. அந்தப் புத்தகத்துக்கு உயர்ந்த காகிதம், தெளிவான காகிதம், விலை மிக்க காகிதம் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு புத்தகத்தின் விலை மதிப்பு சுமார் 10 ரூபாய்க்கு மேல் ஆகிறது என்று சொல்லப்படுகிறது. சரியான கணக்கு எனக்குத் தெரியாது. இந்தப் புத்தகத்தை வெளிநாட்டான் ஒருவன் கையில் கொடுத்துப் பார்ப்போமானால் அவன் நம்முடைய நாட்டுத் திறமையைப் பற்றி, அதிலும் நம்முடைய சர்க்கார் அச்சகத்தின் திறமையைப் பற்றி என்ன அளவிடுவான் என்பதை மனத்திலே கொண்டு காரியங்களைச் செய்யவேண்டும். அதே மாதிரிதான் 'லெஜிஸ்லேட்டார்ஸ் டயரி'-யும் அமைந்திருக்கிறது. அதைப் பார்த்தால் கண்ணைப் பறிக்கிற அளவில்—அழகில் அல்ல, வேறு முறையில்—அமைந்திருக்கிறது. மொத்தையாக தேவை இல்லாமல் 'வால் போஸ்டர்' மாதிரி டைப்கள் நடுவில் போட்டிருக்கும், மூன்று கோடுகள் கை பிடிச் சுவர் வைத்த மாதிரி இருக்கிறது. இந்த மாதிரி பிரிண்ட் செய்வது அழகல்ல, பொலிவல்ல என்று



அழுத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். வெளியிலே ஏராளமான டயரிகள் முக்கால் ரூபாய், ஒரு ரூபாய்க்கு மிக்க பொலிவுடன் விற்கப்படுகின்றன.

அதற்கு மேலே, 10,75,500 என்று வருவதிலே 'பங்சுவேஷன்' செய்வதில் யூனிபார்மிடி இல்லை. சில இடங்களில் ஆங்கில முறைப்படி 'பங்சுவேஷன்' பண்ணப்பட்டிருக்கிறது, சில இடங்களில் இந்திய முறைப்படி பண்ணப்பட்டிருக்கிறது. மிலியன் கணக்கு நமக்குக் கிடையாது. நூறு, ஆயிரம், லட்சம் என்பதுதான் நம்முடைய வரை முறை. ஆகவே, பத்து ஸ்தானம் வருகிறது என்று வைத்துக் கொண்டால், முன்புள்ள மூன்று ஸ்தானத்திற்கு அடுத்தாற்போல் ஒரு 'காமா' போட்டுவிட்டு, பிறகு இரண்டு இரண்டு ஸ்தானங்களுக்கு ஒரு 'காமா' போடவேண்டும். அந்நிய முறையில் மூன்று ஸ்தானங்களுக்கு ஒரு முறை 'காமா' போட்டுக் கொண்டே போகவேண்டும். பத்து லட்சத்து எழுபத்தையாயிரத்து ஐந்நூறு என்று சொல்வது மரபே தவிர, மிலியன் கணக்கில் சொல்வது மரபல்ல. மற்ற இலாகாக்களிலே இருக்கின்ற சிப்பந்திகள் தவறாக எழுதிவிட்டார்கள் என்று சொல்வது சரியல்ல. அச்சகத்திலே இருக்கிறவர்கள் அந்தத் துறையிலே நிபுணர்களாவார்கள். அதைச் செம்மைப்படுத்த வேண்டிய கடமையும் பொறுப்பும் அவர்களுக்கு உண்டு என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

அதற்கு மேலே, அச்சுப் பிழைகள் குறைவற்று இருக்கின்றன. ஒரு குறைவும் இல்லாமல் அச்சுப் பிழைகள் காணப்படுகின்றன. அதை வரிசையாக எடுத்துக் காட்டலாம். அசெம்பிளி சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுடைய விலாசப் புத்தகத்தில் பார்த்தாலும் கூட நிறையப் பிழைகள் காணப்படுகின்றன. இங்கே இருக்கின்றவர்களால் தவறு ஏற்பட்டிருக்கலாம் என்று சொல்லலாம். ஆனால் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு, கடமை அங்கே இருக்கின்ற 'ப்ரூப் ரீடர்' களுக்கே. அதை மேலே உள்ள மற்றவர்களும் பார்க்கவேண்டும். இப்போது கனம் உதவி சபாநாயகர் தலைமை வகிப்பதால் கூறுகிறேன். அவர்கள் பெயருக்குக் கீழே 'Deputy Speaker' என்று இருக்கிறது. அதிலே **'P'** என்னும் எழுத்தைக் காணோம். அமெரிக்காகாரன் உங்கள் அட்ரஸ் லிஸ்டைப் பார்த்தால் என்ன நினைப்பான்? அமெரிக்கன் கான்சலேட்டில் இருந்து வருவதிலே ஏதேனும் பிழைகள் இருக்கின்றனவா? நம்மிடம் எங்கேனும் அத்திப் பூத்தாற்போல் வேண்டுமானால் இருக்கலாம். ஆகவே, அந்த நிலை மேம்படுவதற்கான முயற்சிகளிலே ஈடுபடவேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

காலதாமதம் தவிர்க்கப்பட முடியாதது என்று பலர் கருதலாம். நான் அப்படிக் கருதவில்லை. இப்போது பல வருஷங்கள் கூடக் காலதாமதம் ஆகிறது. இதையெல்லாம் நிவர்த்திக்க வேண்டும். அங்கத்தினர்களுக்குக் கூடு காகிதம் தருவது பற்றிச் சொன்னார்

கள். அதிகம் வேண்டும் என்றார்கள். சர்க்கார் அச்சகத்தில் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படும் கூடு கூடாகவா இருக்கிறது? ' என்வலப்' பசையற்ற 'என்வலப்' ஆகத்தான் இருக்கிறது. கடிதத்தை எழுதி முடித்து விட்டவுடன் 'கருவைக் கோந்து' எங்காவது இருக்கிறதா என்று கேட்டு வாங்கித்தான் ஒட்டிப் போடவேண்டும். இல்லாவிட்டால் ' ஓப்பன் லெட்டர் ' ஆகத்தான் போடவேண்டும். கடைத் தெருவில் விலைக்கு வாங்கும் கவர்கூட பசை தடவைப்பட்டுக் காய வைத்த கவர்களாக இருக்கின்றன. ஆகவே, இந்த மாதிரி நிலைமை இருப்பது அந்தத் துறைக்குப் பெருமை அல்ல.

அதற்குமேலே விலை நிர்ணயம் அதிகமாகியிருக்கிறது. 'எம்ப்ளம் ப்ளாக் ஒன்றிரண்டை வைத்துக்கொண்டு உடனுக்குடன் ரிமைண்டர் அனுப்புவது தவறு. ஒரு 50 ப்ளாக்குகளாவது வைத்துக்கொண்டு அங்கத்தினர்களுக்குக் கொடுக்கவேண்டும்" என்று கனம் உறுப்பினர் ஒருவர் இங்கே சொன்னார்கள். ஏன் அங்கத்தினர்கள் எம்ப்ளம் ப்ளாக்கை கேட்கிறார்கள் என்பதை இத்துறையில் உள்ளவர்கள் அறிய வேண்டும் என்பதற்காக நான் தங்கள் மூலமாக அமைச்சர்களும் அவர்கள் மூலமாக அதிகாரிகளும் அறிவதற்காக தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு அதை அச்சிட 10 ரூபாய் சார்ஜ் செய்யப்படுமானால், அதே அளவில் அதேவித காகிதத்தில் வேறு அச்சகத்தில் அச்சிட 5 ரூபாய்தான் ஆகிறது. நான் அச்சடித்துக் கொண்டிருக்கிறேன். செகரட்டரி அவர்களிடம் சொல்லிவிட்டு இதைச் செய்து கொண்டிருக்கிறேன். ஏன் இந்த நிலை? யோசிக்க வேண்டும். ஆகவே இதை யோசித்து வழி முறைகளைத் திருத்தியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக ஒன்றைக் கூற எனக்கு வருத்தமாக இருக்கிறது. இதுவரை குறை மட்டும் சொல்லிக் கொண்டேன். இனி நான் சொல்லப்போவது மிக முக்கியமானது. கடுமையான பதப்பிரயோகத்தைச் செய்வது என் வழக்கம் இல்லாததினால் கடுமையான பதப்பிரயோகத்தைச் செய்யவில்லை. ஆனால் கண்டிக்கத்தக்க ஒன்றென்று கூறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிற நிலையில் கூறுகிறேன், அப்படிக் கூறித்தான் ஆக வேண்டும் என்றமுறையில் கூறுகிறேன். சென்னை மாநிலத்தின் இலச்சினை ஒன்று இருக்கிறது. ஸ்டேட் எம்ப்ளம். சென்ற ஆண்டே இதைப்பற்றி கூறியிருக்கிறேன். இந்த இலச்சினை ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு மாதிரியாக இருக்கிறது. ஒரு இடத்தில் ஐந்து ஸ்தூபி இருக்கிறது, ஒரு இடத்தில் ஏழு ஸ்தூபி இருக்கிறது, சிலவற்றில் நடுவில் உள்ள ஸ்தூபி ஒரு முழம் நீட்டிக் கொண்டிருக்கிறது, சிலவற்றில் நடுவில் உள்ள மாடம் வெள்ளையாக இருக்கிறது, சிலவற்றில் அது கறுப்பாக இருக்கிறது, இப்படி பல்வேறு கோலங்கள் இருக்கின்றன. கோவிலுக்குச் சென்று பாருங்கள், அல்லது சர்ச்சுக்கு சென்று பாருங்கள். அங்கு ஒரு சின்னம்தான் இருக்கும். பெருமாள் கோவில்களில் ஒரு பக்கத்தில் வடகலை நாமம், இன்னொரு பக்கத்தில் தென்கலை நாமம், இன்னொரு





பக்கத்தில் கோபி, இன்னொரு பக்கத்தில் விபூதி என்று போட்டிருக்க மாட்டார்கள். ஒரு கோவிலில் ஒரேமாதிரியாகத்தான் இருக்கும். வருகிற ஆசாமிகள் வேண்டுமானால் பலமாதிரியாக இருக்கலாம். ஆக நம் இலச்சினை இப்படி இருப்பது மிகவும் வருந்தத்தக்கதொன்றாகும். அதற்கு அடிப்படை இதுதான், ஒரு "கீ டிராயிங்" கை செம்மையாக வைத்துக் கொள்ளவேண்டும் என்றுணராமைதான் அது. ஐம்பது ரூபாய்க்குட்பட்ட செலவில் அதை அருமையாகச் செய்து வைத்துக்கொள்ளலாம். அதுவும் ஒரு வார கால அளவுக்குள். எந்த ப்ளாக்கை எடுத்தாலும் அவை அதன் பிரதிபலிப்பாக அமைய வேண்டும். தேவைக்கேற்ப செய்து கொண்டிருப்பது தவறு. சென்ற தடவையே இதுபற்றி நான் சொல்லியிருக்கிறேன். அது இதுவரை தொடங்கப் பெற்றிருக்கிறதா? அப்படி தொடங்கப் பெற்றிருந்தால் அது நிறைவேறியிருக்கிறதா? அப்படி அது நிறைவேறியிருந்தால் இன்று அமைச்சர் அவர்களின் பிரசங்கத்தில் கூட ஏன் இந்த இலச்சினை போடப்பட்டிருக்கிறது? என்று கேட்க ஆசைப்படுகிறேன். ஆக இந்த நிலை மாறவேண்டும். நான் கண்டிக்கவில்லை. யாரையும் புண்படுத்தவேண்டுமென்று இதைச் சொல்லவில்லை. இது நம் மாநில ஆட்சிக்கு, நம் முறைக்கு, நம் பெருமைக்கு, நம் சிறப்பிற்கு, இவ்வளவிற்கும் இழுக்கு. இதை நிவர்த்தி செய்ய வேண்டியது நம் எல்லோருடைய பொறுப்புமாகும். அதை நிறைவேற்ற வேண்டிய கடமை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களையும், அதிகாரிகளையும் சார்ந்தது என்பதை வற்புறுத்தி, வலியுறுத்தி—ஆனால் பணிவோடு—வேண்டிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

* திரு. எம். எஸ். மணி: சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பதிவுத்துறை எழுதுபொருள் அச்சுத்துறை மான்யத்தின் மீது எதிர்கட்சி அங்கத்தினர் கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என் கருத்தினை இம்மன்றத்தில் சொல்ல விரும்புகிறேன். பதிவுத் துறையைப் பற்றி குறிப்பிடுகிறபோது நீண்ட காலதாமதமாகிறது என்பதை எல்லா உறுப்பினர்களும் வற்புறுத்தினார்கள். ரெஜிஸ்டர் அலுவலகத்திற்குச் சென்று கேட்டால் ஒரு நாளைக்கு 10, 15 பத்திரங்கள்தான் நாங்கள் ரெஜிஸ்டர் செய்ய முடியும், ஆனால் 70, 80 பத்திரங்கள் வந்து விட்டால் எப்படி பதிவு செய்யமுடியும், ஆகவே காலதாமதமாகிறது என்று அவர்கள் கூறுகிறார்கள், அது ஒரு காரணம். மற்றொரு காரணத்தை, நான் நேரில் கண்டறிந்ததை சொல்ல விரும்புகிறேன். இன்றைய தினம் அவர்களுக்கு கொடுக்கப்படுகிற ஊதியம் பற்றாக்குறையாக இருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள், அந்தப் பற்றாக்குறை காரணமாக அவர்கள் நன்கொடை பெறுவதற்காக இந்த காலதாமதம் ஏற்படுகிறது. ஒரு ஐந்து அல்லது பத்து ரூபாய் அவர்களிடம் கொடுத்தால் கீழுள்ள பத்திரம் மேலே வந்து விடுகிறது. எனவே இந்த காலதாமதத்தைத் தவிர்க்கவேண்டுமென்று சொன்னால் ஒன்று அவர்களது ஊதியத்தை உயர்த்தவேண்டும் அல்லது அந்த இலாகாவை

இன்னும் சிறிது பெரிது படுத்தவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றையதினம் ரெஜிஸ்டர் செய்து அதன் நகலை எடுக்கச் சென்றால், அந்த நகலை எடுத்துப் படிக்கும்போது உள்ளபடியே அதை புரிந்து கொள்ள முடியவில்லை. ஏனெனில் எழுதுகிறவர்கள் இரண்டு பேர்களைத் தான் சில ரெஜிஸ்தர் அலுவலகங்களில் வைத்திருக்கிறார்கள். அவர்கள் தினசரி 10, 20 பத்திரங்கள் காப்பி எடுக்க முடியாமல் அவர்கள் கையெழுத்து கெட்டுப் போய் என்ன எழுதுகிறோம் என்று புரியாமல் அவர்கள் எழுதுகிறார்கள். ரெஜிஸ்டர் செய்யும் இரு தரப்பாரும் ஏதாவது தகாராறு ஏற்பட்டு சமரசம் செய்து கொள்ள நினைக்கும்போது அப்பத்திரத்தை படிக்க முடிவதில்லை. ரெஜிஸ்தர் செய்தவர் ஒரு அர்த்தம் சொல்கிறார், அதற்கு எதிராக இருப்பவர் ஒரு அர்த்தம் சொல்கிறார். ஆக ஒரிஜினல் டாக்குமென்டை பார்க்க வேண்டிய நிர்பந்த நிலை ஏற்படுகிறது. எனவே அத்தகைய நிலை இல்லாமல், அவற்றை தமிழ் அல்லது ஆங்கிலத்தில் டைப் செய்ய வேண்டுமென்ற நிலை உருவாகவேண்டும். அல்லது நன்கு எழுதத் தெரிந்தவர்களைக் கொண்டு, நல்ல அச்சு எழுத்தில் எழுதப்படும் முறை இருக்கவேண்டும். சில பகுதிகளில் ஒவ்வொரு ரெஜிஸ்டர் அலுவலகத்திலும் ஒரு ஸ்டாம்பு வெண்டர்தான் இருக்க அனுமதி கொடுக்கப்படுகிறது. ஒருவருக்கு மட்டும் அனுமதி கொடுத்திருப்பதால் பத்திரம் கேட்கப் போகிற நேரத்தில் அவர் அங்கு இருப்பது இல்லை. அப்படி இருந்தாலும், 40 ரூபாய் பத்திரம் வேண்டுமென்றால் அந்த அளவு உயர்ந்த பத்திரம் என்னிடம் இல்லை, ஐந்து ரூபாய்க்குள்ள எட்டு பத்திரங்கள் கொடுக்கிறோம்; இல்லை 40 ரூபாய் பத்திரம் வேண்டுமென்றால் திருச்சி போன்ற முக்கிய நகரத்திற்கு சென்று வாங்கி வருகிறேன். அதற்கு ஐந்து ரூபாய் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு தேவையான அளவு மூலதனம் இல்லாத காரணத்தினால் இந்நிலை ஏற்படுகிறது. ஆகவே ஒவ்வொரு பகுதியிலும் மூன்று பேர்களுக்காவது பத்திரம் விற்கும் அனுமதி கொடுக்கப்படவேண்டும். குறிப்பாக லால்குடி வட்டத்தைச் சேர்ந்த புள்ளம்பாடியில் அத்தகைய நிலை ஏற்பட்டு அடிக்கடி பத்திரம் விற்பவர் அங்கு காணப்படுவதில்லை. ஆகவே திருச்சிக்கு சென்று பத்திரம் வாங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆக இரட்டிப்பு செலவாகிறது. ஆகவே மேற்கொண்டு பத்திரம் விற்க யாராவது அனுமதி கேட்டால் அரசாங்கம் அதற்கு அனுமதி கொடுக்கவேண்டும். சில பிர்க்காக்களில் அந்தந்த எல்லையை விட்டு வேறு பகுதிகளுக்குச் சென்று பத்திரம் ரெஜிஸ்தர் செய்யவேண்டிய நிலை ஏற்படுகிறது. கோமாக்குடி, செம்பறை போன்ற ஊர்களில் இருப்பவர்கள் புள்ளம்பாடிக்குச் சென்று ரெஜிஸ்தர் செய்யவேண்டியிருக்கிறது. ஆனால், அவற்றிற்கு பக்கத்திலுள்ள நகரம் லால்குடி. ஆகவே அவர்கள் லால்குடியில் ரெஜிஸ்தர் செய்ய அனுமதி கொடுத்தால் அவர்களுக்கு போக்குவரத்து செலவு மிச்சப்படும். ஆகவே பக்கத்திலுள்ள நகரத்தில் பதிவு செய்கிற ஒரு நிலையை உருவாக்கிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே காலதாமதத்



தைப் போக்க நல்ல நிலைமையை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்கினால் அதில் ஏற்பட்டிருக்கிற ஊழல்களை தவிர்க்க முடியும். பத்திரம் ரெஜிஸ்தர் செய்கிறபோது அது சம்பந்தப்பட்ட இரண்டு பேர்கள் மட்டும் அங்கு போவதில்லை. ஏராளமாக சாட்சிகளை அழைத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு பத்திரமும் பதிவு செய்ய 10, 15 பேர்கள் செல்ல வேண்டியிருக்கிறது. அப்படி பத்து பத்திரங்கள் ரெஜிஸ்டர் செய்ய வேண்டுமென்றால் 100 பேர்கள் செல்லவேண்டியிருக்கிறது. இவர்கள் உட்காரவோ அல்லது தங்கவோ எந்தவித வசதியும் எங்கும் செய்து கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதையும் அரசாங்கம் கவனித்து பொது மக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து சர்க்கார் அச்சகம் பற்றி ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். நம் சர்க்கார் அச்சகம் 1831-ல் வெள்ளைக்காரன் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது, 1831 முதல் இன்று வரை அது நல்ல முறையில் விரிவடைந்து வந்திருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். 1958 வரை அங்கு வேலை செய்து வந்த தொழிலாளர்கள் எண்ணிக்கை 1,800. இவர்கள் ஒரே ஷிப்டில் வேலை செய்து வந்தார்கள். வேலைகள் விரிவடைய அடைய அரசாங்கம் இரண்டு ஷிப்டுகளாக உயர்த்தினார்கள். அதனால் பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு இன்றையதினம் வேலை கிடைக்கிறது. இன்றையதினம் அங்கு 3,600 பேர்கள் வேலை செய்து வரும் நிலையைக் காண்கிறோம்.

அப்படிப் பார்க்கின்ற போது, குறிப்பாக இந்தியாவிலேயே மிகப் பெரிய அச்சகமாக நம்முடைய சர்க்கார் அச்சகம் இயங்கி வருவதைக் கண்டு உள்ளபடியே நான் பாராட்டுகிறேன். நான் அப்படிப் பாராட்டுகிற நேரத்தில் இந்தத் தொழிலின் மேன்மையைப் பற்றிப் புரிந்துகொள்ளவேண்டும். உலகத்திலேயே இன்றைய தினம் அச்சுத் தொழில் தான் மிக இன்றியமையாத, சிறந்த தொழிலாக விளங்குகிறது. அமெரிக்காவில் ஒரு சம்பவம் நடைபெற்றது என்று சொன்னால், நேற்று நடைபெற்ற அந்தச் சம்பவத்தை இன்றைய தினம் சென்னையில் உள்ள நாம் தெரிந்துகொள்ள மிக இன்றியமையாதது இந்த அச்சுத் தொழில் என்பதை யாரும் மறுக்க முடியாது. அத்தகைய வேலை செய்கிற தொழிலாளர் நிலைமையைப்பற்றி எண்ணிப் பார்க்கவேண்டும். முன்பெல்லாம் திருமணம் என்றால் வெற்றிலை பாக்கு வைத்துக் அழைத்தது போக இன்றைய தினம் பத்திரிக்கை வைக்கிறோம். தொழிலாளர்கள் கூட தங்களுடைய பெயரோடு கூடிய லெட்டர் பேடு ( Letter Pad ) வைக்கும் நிலைமையையும் இன்றைய தினம் பார்க்கிறோம். அச்சுத் தொழில் என்பது இந்த முறையில் இன்றியமையாத தொழிலாக இருக்கிறது. அப்படிப்பட்ட தொழிலில் உள்ளவர்களுடைய நிலைமையையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அந்தத் தொழிலாளர்களுக்கு நம் சென்னை சர்க்கார் 1962-ம் ஆண்டிலே, எப்ரல் மாதத்திலே வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் நம்முடைய

இருக்கிறார்கள். முன்பு வேலை செய்தார்களே 1956, 1958-ம் ஆண்டுகளில் அவர்களுக்குக் கொடுக்கலாமா என்று அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதால் அவர்கள் வாங்காமல் இருக்கிறார்கள். கொடுக்கின்ற நேரத்தில் யாருக்கும் பாகுபாடு செய்ய வேண்டாம், அத்தனை பேர்களுக்கும் லிபரலைஸ்ட் பென்ஷன் திட்டத்தை உடனடியாக அமல் நடத்தவேண்டுமென்றுதான் இந்த சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நம்முடைய வேலைகளை நம் அச்சகத்தில் செய்ய முடியவில்லை என்ற காரணத்தினால் வெளியிலே நாம் இப்போது செய்கிறோம். அப்படிச் செய்கிற நேரத்தில் அதற்காக நாம் 5.21 லட்ச ரூபாய் கொடுத்திருக்கிறோம். இவ்வளவு பெரிய அச்சகத்தை வைத்துக்கொண்டு ஏன் அந்த வேலைகளைக்கூட நம்மால் செய்ய முடியவில்லை? அப்படிச் செய்ய முடியாவிட்டாலும் இன்னும் நம் அச்சகத்தை விரிவு படுத்தலாம். தனியாருக்குக் கொடுப்பதைத் தவிர்க்கவேண்டும் என்றுதான் சொல்லிக்கொள்கிறேன். தாற்காலிகமாகக் கொடுத்தாலும்கூட டெண்டர் முறையில் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்திற்கு என்னுடைய ஆலோசனையைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் குறிப்பிட்டது போல, அரசாங்கம் வெளியிடுகிற புத்தகங்களிலே ஏராளமான அச்சுப்பிழைகள் இருக்கின்றன. உள்ளபடியே அதைப் பார்க்கும் போது நமக்கு வேதனையாக இருக்கிறது. ஏன் இந்த அச்சுப் பிழை ஏற்பட்டது என்று பார்க்கும்போது, தமிழில் அச்சுத் திருத்துவதற்குச் சரியான ப்ரூப் ரீடர்கள் இல்லை. தமிழ் படித்த வித்வான்களைப் போடவேண்டும். எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களுக்கு நல்ல முறையில் தமிழ் தெரியும் என்று என்றால் ஒத்துக்கொள்ள முடியாது. தமிழில் அச்சிடப்படுபவைகளைத் திருத்த தமிழ் வித்வான்களைப் போடவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக, இந்த அச்சகம் உலகத்திலேயே பெரிய அச்சகமாக வரவேண்டுமென்று சொன்னால், வேலூர் சிறைச்சாலையில் ஒரு அச்சகத்தை நிறுவலாம். அங்கே நிறைய இடம் இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய கைதிகளுக்குப் பயிற்சி கொடுக்கலாம். வருகிற வருமானத்திலிருந்து ஊதியம் கொடுக்கிறோம் என்று சொன்னால் அவர்கள் நல்ல முறையில் வேலை செய்வார்கள். அதோடு அவர்கள் கைத்தொழிலையும் தெரிந்துகொண்டு பின்னால் வாழ்க்கை நடத்துவதற்கும் வழி ஏற்படும். அரசாங்கத்தின் சார்பில் புதுக்கோட்டையில் இருப்பது போல திருச்சி ஒரு பெரிய வியாபார ஸ்தலம், அங்கு ஒரு அச்சகம் நிறுவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு, ஆண்டுக்கு 2,000 ரூபாய் தொழிலாளர் நல நடவடிக்கைகளுக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். விளையாட்டு அபிவிருத்திக்கு 1,000 ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இருக்கக்



கூடிய தொழிலாளர்கள் 3,200. ஒதுக்கியிருப்பது தலைக்கு 1 ரூபாய் அளவில்கூட வரவில்லை. அதையும் அமைச்சர் கவனித்து ஆவன செய்வார் என்ற நம்பிக்கையோடு, தொழிலாளர் சுமுகமான உறவோடு வேலை செய்கிறார்கள் என்று அவர் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள், அந்தத் தொழிலாளர்கள் ஏமாறுகிற நிலையில் நடந்துகொள்ளவேண்டாம், அவர்கள் மீது கருணை காட்டுங்கள் என்று கூறி இந்த அளவோடு வெட்டுப் பிரேரணையை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

***கனம் திரு. கோ. பூவராகன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் நான் இந்த மன்றத்திலே கொண்டு வந்திருக்கிற இரண்டு மான்யக் கோரிக்கைகளின்மீது விவாதம் செய்யும்பொழுது, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டில் அதிக உற்சாகத்தோடு அதிக நபர்கள் பங்கு எடுத்துக்கொண்டார்கள். அவர்கள் இரண்டு மான்யங்களைப் பொறுத்தவரையிலும் நல்ல அரிய பெரிய கருத்துக்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

முதலாவதாக, பத்திரப் பதிவு மான்யக் கோரிக்கையை 11-30 a.m.
பொறுத்த அளவிலே, சில அங்கத்தினர்கள் அதிக அளவிலே குறிப்பிட்டது என்னவென்றால், இந்தப் பத்திரப் பதிவு அலுவலகங்களிலே பணியாற்றுகிற அத்தனை அலுவலாளருக்கும் சம்பள உயர்வு போதாதநிலை இருக்கிறது, அவர்களுக்கு உற்சாகம் இல்லை, உற்சாகம் இல்லாத காரணத்தினால் வேறு விதங்களிலே அவர்களுடைய கவனம் சென்றுவிடுகிறது என்பதுதான். இந்த அலுவலங்களில் பணியாற்றுகிறவர்கள் நல்ல தொண்டுள்ளம் படைத்தவர்கள். உண்மையிலே மக்களுக்குத் தொண்டு செய்கிற ஒரு இலாகா இருக்கிறது என்றால், அது பத்திரப் பதிவு இலாகா என்று நான் சொல்லாமலே அத்தனை பேர்களுக்கும் நன்றாகத் தெரியும். குறிப்பாக சில இடங்களிலே அதிகமாக பத்திரங்கள் பதிவு செய்வதற்குச் சமர்ப்பிக்கப்படுவதால், அந்தப் பத்திரப் பதிவு நிலையங்களிலுள்ள அதிகாரிகள் சிலர் கோபப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த நிலையங்களைப் பொறுத்தவரையிலே அங்கே இருக்கிற எழுத்தாளர் முதல் உயர் அதிகாரி வரையிலே அத்தனை பேர்களும் பொறுமைசாலிகளாக இருந்து, நல்ல தொண்டு உள்ளம் படைத்தவர்களாக இருந்தால்தான், அந்த அலுவலகங்களில் செம்மையாக பணியாற்ற முடியும். அந்த முறையில்தான் அநேகமாக பணியாற்றி வருகிறார்கள். ஒரு சில அங்கத்தினர்கள் அது சம்பந்தமாக புகார்கள் தெரிவித்தார்கள். அம்மாதிரி குறைபாடுகள் எந்தப் பத்திரப் பதிவு நிலையங்களில் காணப்படுகின்றன என்பதுபற்றி எழுதியனுப்பினால், பரிசீலனை செய்து அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்படும் என்று கனம் அங்கத்தினர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், பத்திரப் பதிவு அலுவலகங்களில் பல இடங்களில் அங்கு பத்திரம் பதிவு செய்வதற்கு வரும் மக்கள் தங்குவதற்கு போதிய இடவசதி இல்லை என்று குறிப்பிட்டார்கள். அந்தக்

முதல் அமைச்சர் காமராஜ் அவர்கள் பெயரை வைத்து 300 வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். நமது அச்சகத்தில் இருக்கிற தொழிலாளர்கள் 3,200; கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிற வீடுகள் 300. இருந்தாலும் அந்த அளவுக்கு 300 வீடுகள் கட்டியிருப்பதை வரவேற்கிறேன். கட்டிக் கொடுத்திருக்கிற வீடுகளுக்கான வாடகையை எண்ணிப் பார்க்கவேண்டும். 'ஏ' வகுப்பு வீடுகள் என்று சொல்லுகிற வீடுகளுக்கு 20 ரூபாய் மாத வாடகை பெறுகிறார்கள். அதே போல 'பி' வகுப்பு வீடுகளுக்கு 24 ரூபாய் மாத வாடகை பெறுகிறார்கள். அதே போல 'ஸி' வகுப்பு வீடுகளுக்கு 33 ரூபாய் மாத வாடகை பெறுகிறார்கள், அந்த வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு வீட்டு வாடகை அலவன்ஸ் எவ்வளவு கொடுக்கிறார்கள்? 10 ரூபாயும், 15 ரூபாயும் கொடுக்கிறார்கள். சம்பளம் 90 ரூபாய்க்குக் கீழே இருந்தால் 10 ரூபாயும், அதே நேரத்தில் 90 ரூபாய்க்கு மேற்பட்டவர்களுக்கு 15 ரூபாயும் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் 20 ரூபாய் 24 ரூபாய், 25 ரூபாய் வாடகை கொடுக்கவேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல. மின்சாரத்திற்கு தனியாகக் கட்டணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதற்காக 5 ரூபாயைச் சேர்த்தால், சாதாரணமாக 90 ரூபாய் சம்பாதிக்கக் கூடிய தொழிலாளி 25 ரூபாய் வாடகை வீட்டில் இருக்க வேண்டியிருக்கிறது. அவர்களுடைய வாழ்க்கைத் தரம் எப்படி உயரும்? அவர்கள் எப்படி முன்னேற முடியும்? எனவே தான் அமைச்சரவை கவனம் செலுத்தி அச்சகத் தொழிலில் உள்ளவர்களுக்கு நல்ல ஒரு நிலைமையை உண்டாக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல. அச்சகத்தில் வேலை செய்கிற தொழிலாளர்களைப் பற்றி அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் மிகவும் பாராட்டியிருக்கிறார்கள். நல்ல ஒத்துழைப்புத் தந்தார்கள், திறம்பட வேலை செய்கிறார்கள் என்று பாராட்டியிருக்கிறார். அப்படி திறம்பட வேலை செய்கிற தொழிலாளர்களுடைய காலனியில் காலையில் 5½ மணியிலிருந்து 6½ மணி வரையிலும், மாலையில் 5½ மணியிலிருந்து 6½ மணி வரையிலும் தண்ணீர் கொடுக்கிறார்கள். முதல் அமைச்சர் காமராஜ் அவர்கள் பேரில் ஏற்படுத்திய நகரிலாவது 4 மணி நேரம் தண்ணீர் கொடுக்கக் கூடாதா? அதையாவது செய்யக் கூடாதா? ஆகையால் அமைச்சரவை கவனம் செலுத்தி இன்னும் அங்கே பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நல்ல முறையில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அங்கு இருக்கிற ஸ்கேலைப் பற்றி எண்ணி பார்க்க வேண்டும். அச்சுக் கோர்க்கின்ற தொழிலாளர்களுக்கு இன்றைய தினம் 80 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. தனியாக, அச்சுக் கோர்க்கிற தொழிலாளி, தினசரிக் கூலி பெறுகிற கம்பாஸிட்டர் தனியார் நடத்துகிற அச்சகத்தில் வேலை செய்தால் 4 ரூபாயிலிருந்து 6 ரூபாய் வரையில் பெறுகிறார். ஆனால் அரசாங்க அச்சுத் துறையில் அவர் பெறுகிற 80 ரூபாய் சம்பளம்





போதுமா? இன்க்ரிமெண்ட் எவ்வளவு? ஆண்டுக்கு 3 ரூபாய் அதுவும் 110 ரூபாயிலே நின்று விடுகிறது. இன்றைய தினம் விலையேற்றம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் ஸ்கேலை உயர்த்த வேண்டும் என்பதுதான் எனது வேண்டுகோள். மெஷினில் வேலை செய்கிறவர்கள் தப்பித் தவறி கையைக் கொடுத்தால் கை மெஷினோடு போகிற நிலைமையைப் பார்க்கிறோம். பல இடங்களில் காம்பென்சேஷன் பெறுகிற நிலைமையையும் நாம் பார்க்கிறோம். அந்தத் தொழிலாளிக்கு 70 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு 2 ரூபாய் வீதம் உயர்த்தி, அதுவும் 90 ரூபாயோடு நின்று விடுகிறது. தனியார் துறையில் மெஷினில் வேலை செய்கிறவர்கள் 150 ரூபாய், 200 ரூபாய் சம்பளம் பெறுகிறார்கள் என்பதை நாம் பார்க்க முடிகிறது. ஓவர்டைம் செய்தால்கூட ஏராளமாகச் சம்பளம் கிடைக்கிறது. அரசாங்க அச்சகத்தில் வேலை செய்கிறவர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டாமா? பைண்டிங்கில் வேலை செய்கிறவர்களை எடுத்துக்கொண்டாலும் 70 ரூபாயிலிருந்து, ஆண்டுக்கு 2 ரூபாய்கூட, 90 ரூபாயில் நிற்கிறது. இந்த 90 ரூபாய் என்பதை 100 ரூபாயாக உயர்த்தலாம் என்ற ஆலோசனையையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அரசாங்கத்தில் நடைபெறுகிற அச்சகத்தில், தொழிலாளர் திறமையைப் பார்த்து, அவர்களுடைய சர்வீஸைப் பார்த்து வேலை உயர்வு கொடுக்கப்படவில்லை. அதற்கு மாறாக அதிகாரிகளுக்குச் சலுகையானவர்களை உயர்ந்த வேலைக்கு உயர்த்தி விடுகிறார்கள். இந்த முறை மாறவேண்டும். நல்ல முறையில் யார் பணியாற்றுகிறார்களோ, நீண்ட நாள் யார் வேலை பார்த்திருக்கிறார்களோ அவர்களுக்கு மேல் பதவிகளைக் கொடுத்து உயர்த்தவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

காலையில் முதல் ஷிஃப்டில் வேலை செய்கிறவர்களுக்கு பாலும், பன்னும் கொடுக்கப்படுகிறது. அதேபோல இரண்டாவது ஷிஃப்டிலும் கொடுக்கப்படுகிறது. ஆனால் கொடுக்கப்படுகிற பால் சுத்தமான பாலாக கொடுக்கப்படுகிறதா என்றால் இல்லை. தண்ணீர் கலந்த பாலாக, கலப்படமான பாலைக் கொடுக்கிறார்கள். ம. கொடுக்கிறார்கள் என்று சொன்னால் ஆற வைத்துக் கொடுக்கக் கூடிய நிலை இருக்கிறது. இந்த நிலையை மாற்றி அமைக்க வேண்டும். இதில் அரசாங்கம் கவனமாக இருக்கவேண்டும். கூட்டுறவு முறையில் காண்டீன் வைத்திருந்தாலும்கூட, நம் தொழிலாளர் அதில் அங்கத்தினர்களாக இருந்தாலும்கூட, அரசாங்கக் கண்காணிப்பும் அதில் இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் சுத்தமான சரக்காக அம்மாதிரியான தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, தாராளப் பென்ஷன் திட்டத்தை இன்றைய தினம் அந்தத் தொழிலாளர்களுக்கு அமல் நடத்துவதாக இருக்கிறது. இன்னும் பல பேர்கள் ரிட்டயர் ஆனவர்கள் பென்ஷன் வாங்காமல்

கணக்கில் எடுத்துக்கொண்டு பத்திரப் பதிவு நிலையங்கள் ஆங்காங்கு அமைக்கப்படுமானால், இப்பொழுது பெருமைபடக் கூடிய அளவிலே வருவாய் தரக்கூடிய இலாகா என்று எல்லோரும் பாராட்டக்கூடிய இந்த இலாகாவிற்கு அது இழுக்குத் தேடித் தரும் என்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது. மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து பத்திரப் பதிவு நிலையங்கள் ஆரம்பிப்பது என்பது முடியாத காரியம். நான் முன்பு சொல்லியது போல், ஏற்கனவே உள்ள பத்திரப் பதிவு நிலையங்களில் வேலை அதிகமாக இருக்கிறதா, புதியதாக நிலையங்கள் ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லப்படுகிற இடங்களில் போதிய வசதிகள் இருக்கின்றனவா என்பதையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்தால்தான் புதிய நிலையங்கள் அமைக்கப்படவேண்டும்.

மற்றும், பத்திரப் பதிவு நிலையங்களிலே நகல்கள் கொடுக்கப் படும்பொழுது அதிலே எழுதப்படுகிற எழுத்துக்கள் தெளிவாக இல்லை, நல்ல விளக்கமாக இல்லை என்றும் குறிப்பிட்டார்கள். நான் திடீரென்று 2, 3 இடங்களில் உள்ள பத்திரப் பதிவு நிலையங்களுக்குச் சென்று பார்த்தேன். அவர்கள் எழுதுகிற எழுத்தைப் பார்க்கிறபொழுது ஒரு சிலர் நல்ல முறையில் எழுதுகிறார்கள், எழுத்துக்கள் அழகாக அமைந்திருக்கின்றன. ஒரு சிலர் எழுதும் எழுத்துக்கள் கொஞ்சம் அழகு குறைவாகத்தான் காணப்படுகின்றன. அவர்கள் நல்ல முறையிலே அழகான முறையிலே எழுதித்தரவேண்டும் என்று அவ்வப்பொழுது அவர்களுக்கு அறிக்கை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். பெண்கள் நல்ல முறையில் அழகாக எழுதுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள் திரு. மணி அவர்கள். நான் சென்ற இடங்களில் பார்த்தபொழுது கூட பெண்களில் ஒரு சிலர் அந்த முறையிலே அழகாக எழுதுகிறார்கள் என்று சொல்லுவதற்கில்லை. இருந்தாலும், பெண்கள் இந்த இலாகாவிலே அதிக அளவில் பணியாற்றிவருகிறார்கள். பத்திரங்களை காபி எடுப்பதற்குப் பதிலாக, அவற்றை புகைப்படம் எடுக்கலாம் அல்லது டைப் செய்து கொடுக்கலாம் என்ற யோசனையைத் தெரிவித்தார்கள். இப்பொழுதிருக்கிற நெருக்கடி நிலையை உத்தேசித்து இதையெல்லாம் பரிசீலனை செய்வதற்கு இப்பொழுது முடியாத நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் வட ஆற்காடு மாவட்டம் பெரிய மாவட்டமாக இருக்கிறது, ஆகவே அங்கு பத்திரப் பதிவு நிலையம் பிரித்து அமைக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். பத்திரப் பதிவு நிலையத்தையும், மற்ற இலாக்காக்களையும் ஒப்பிட்டு சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இப்பொழுது விஸ்தரிப்பு மாவட்டம் இரண்டாக இருக்கிறதே, அதே மாதிரி இன்னும் பகுதி பகுதியாகப் பிரிப்பது நல்லது என்று குறிப்பிட்டார்கள். இப்பொழுதுகூட ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்திரப் பதிவு மாவட்டப் பிரிவுகள் இருக்கின்றன. எங்கெங்கே பிரிக்க வேண்டுமோ, அதற்குக் கணக்கெடுத்து விவரங்கள் சேகரித்து வைத்திருக்கிறோம். மற்றும் பத்திரம் பதிவு மாவட்டங்களை எங்





கெங்கே வைக்க வேண்டுமென்பதற்கும் விவரங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நெருக்கடி நிலைமையை ஒட்டி தள்ளிப் போடப்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடி நிலைமை தீர்ந்த பிறகு பத்திரப் பதிவு மாவட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பத்திரங்கள் எழுதுவது சம்பந்தமாக ஒவ்வொருவருக்கும் லைசென்ஸ் வழங்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இது விஷயமாக மத்திய அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. இது சம்பந்தமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வர முடியுமா என்று அவர்கள் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு முடிவு எடுத்தவுடன், அதற்குத் தகுந்தவாறு இங்கேயும் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. முருகையன் அவர்கள், அந்தந்த வட்டங்களிலே இருக்கிற கிராமக் கர்ணங்களே பத்திரங்களை எழுத வேண்டுமென்று ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது சட்டம் இல்லாமலேயே, ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள கணக்குப்பிள்ளைகள் பத்திரம் எழுதிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எழுதக் கூடாது என்று சட்டம் இல்லை. நல்ல முறையில் அவர்கள் எழுதிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தனியாக ஒரு விதியை ஏற்படுத்த வேண்டுமென்ற அவசியமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

ஹரிஜனங்களைப் பொறுத்தவரையில், ஐந்து ஏக்கருக்கு உட்பட்டவர்களுக்கு கட்டணச் சலுகை அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இப்பொழுது இருக்கிற நெருக்கடி நிலையிலும், ரூ. 5,000-க்கு மேற்படாத பத்திரங்களை பதிவு செய்வதற்கும் ரூ. 5,000 உட்பட்ட கடன்களுக்கு வில்லங்க சான்றுகள் வாங்க, கூட்டுறவு சங்கங்களுக்கு பாதி சலுகை கொடுக்கப்படுகிறது. ஹரிஜனங்களுக்கும் பதிவுக்கட்டணமே வசூலிப்பதில்லை. தனிப்பட்ட நபர்கள் பத்திரங்கள் எழுதுவதற்கு சலுகை வழங்கும் விஷயமாக பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது.

நகல் எடுத்துக் கொடுப்பதிலே தாமதம் ஏற்படுகிறது. அதிக நாட்கள் கழித்துக் கொடுக்கப்படுகின்றன, காலதாமதம் இல்லாமல் உடனடியாகக் கொடுப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தெரிவித்தார்கள். இப்படி பத்திரம் எழுதுகின்றபொழுது, நன்றாகக் கவனித்துப் பார்த்து, ஒரு சிறிய தவறுகூட ஏற்படாத நிலையிலே—கனம் அங்கத்தினர் திரு. நாராயணசாமி பிள்ளை அவர்கள் "ஈ அடிச்சான் காப்பி" என்று குறிப்பிட்டார்கள்—அப்படியே எழுதினால்தான் அது உண்மையான பிரதியாக, தகுந்த பிரதியாக இருக்கும். ஆகவே, அதை நல்ல முறையில் எழுதி, மறுபடியும் பரிசீலனை செய்து கொடுப்பதனால்தான் கால தாமதம் ஏற்படுகிறது. வேண்டுமென்றே கால தாமதம் ஏற்

[திரு. கோ. பூவராகன்] [19th March 1963

கட்டிடங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமானவையாக இருந்தால், அத்தனை இடங்களிலும் மக்கள் தங்குவதற்கு வசதி செய்ய என்ன ஏற்பாடு செய்யவேண்டும் என்று திட்டம் தயாரித்து, அதன்படி செய்துவருகிறார்கள். சில அலுவலகங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமில்லாத கட்டிடங்களில், அதாவது வாடகை கட்டிடங் களிலே இயங்கி வருகின்றன. அந்த இடங்களில் அந்த அலுவலகத் திற்கு வருகிற மக்களுக்கு தங்குவதற்கு வேண்டிய வசதி செய்து கொடுத்தால் கட்டிடச் சொந்தக்காரர்களுக்கு அதற்கும் சேர்த்து வாடகை கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. எங் கெங்கு உடனடியாக இப்படிப்பட்ட வசதிகள் செய்துகொடுக்க முடியுமோ அங்கெல்லாம் செய்து கொடுப்பதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், பத்திரப் பதிவு அலுவலங்களிலே மின்சார வசதி இல்லை, பழைய கட்டிடங்களாக இருக்கின்றன, மின்சார விசிறி பொருத்தப்படவேண்டும் என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். பத்திரப் பதிவு இலாகா மிகவும் பழமையான இலாகா. பழைய கட்டிடங்களில் சில அலுவலகங்கள் இருந்தாலும், அவ்வப் பொழுது சிறந்த முறையில் அவைகள் பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன. எல்லா இடங்களிலும் அரசாங்கக் கட்டிடங்களில் மின்சார விளக்குகள் அமைத்து மின்சார விசிறிகளுடன் போது மான வசதி செய்து கொடுப்பதற்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, அந்தத் திட்டத்தை ஆண்டுதோறும் சிறுகச் சிறுக நிறைவேற்றிக் கொண்டுவருகிறார்கள்.

மற்றும் ஆங்காங்கு இருக்கும் பத்திரப் பதிவு நிலையங்களிலே எழுதுவதற்கு போதுமான பெஞ்சு, நாற்காலி வசதிகள் இல்லை என்று குறிப்பிட்டார்கள். நம்முடைய மாநிலத்தில் இருக்கிற அத்தனை பத்திரப் பதிவு நிலையங்களுக்கும் மொத்தமாக எவ்வளவு நாற்காலிகள், பெஞ்சுகள் தேவைப்படும் என்று கணக்குப்போட்டுப் பார்த்து, அதற்காக கிட்டத்தட்ட ரூ. 60,000 செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது போன்று பெஞ்சு, நாற்காலிகள் வாங்குவதற்கு ஒரு ஏற்பாடு செய்து, ஆண்டுதோரும் ரூ. 15,000-க்கு நாற்காலிகள், பெஞ்சுகள் வழங்குவது என்று முடிவு செய்து, அந்த முறையில் இப்பொழுது கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

மேலும் பல அங்கத்தினர்கள் அவரவர்கள் தொகுதியிலே, அவரவர்கள் இருக்கிற பகுதிகளிலே பத்திரப் பதிவு நிலையங்கள் ஏற்படுத்தப்படவேண்டும், குறைந்தபட்சம் 2 மைலுக்கு ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் இருக்கவேண்டும் என்றும் தெரிவித் தார்கள். இந்தப் பத்திரப் பதிவு அலுவலகம் தினந்தோறும் மக்களுக்கு அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான ஒரு அலுவலகமாக இல்லாவிட்டாலும், மக்களுடைய கஷ்டம் அதிக அளவிலே இருக்கும் இடங்களிலெல்லாம் பொது மக்கள் விரும்பி னாலும், விரும்பாவிட்டாலும், எங்கு மக்களுக்கு அதிகக் கஷ்டங்கள் இருக்கின்றனவோ அந்த இடங்களையெல்லாம் கணக் கெடுத்து, அந்தப் பகுதிகளில் பத்திரப் பதிவு நிலையங்கள் புதிய



19th March 1963] [திரு. கோ. பூவராகன்]

தாக அமைக்கும் முறையில் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். மேலும், பத்திரப் பதிவு நிலையங்கள் எங்கெங்கே வைக்கவேண்டும் என்று மக்கள் விரும்பி வேண்டிக் கேட்கிறார்களோ அந்தப் பகுதிகளையெல்லாம் பரிசீலனை செய்து, குறிப்பாக அந்தப் பகுதி களில் மக்கள் தங்குவதற்கு வசதி, போக்குவரத்து வசதி, அங்கு வருபவர்கள் உணவு அருந்துவதற்கு உணவு விடுதி வசதி, போலீஸ் நிலைய வசதி, இதுபோன்ற வசதிகளெல்லாம் இருக்கின்றவா என்று பரிசீலனை செய்து பார்க்கப்படுகிறது. அதோடுகூட அந்த இடங் களில் பத்திரப் பதிவு நிலையங்கள் திறக்கப்பட்டால் அந்த அலுவலகங்கள் ஏற்படுத்துவதினால் நஷ்டம் வராமல் அதிக அளவுக்கு பத்திரங்கள் பதிவு செய்யப்படுவதற்கு இருக்குமா, ஏற்கெனவே, அந்தப்பகுதிகளில் இருக்கிற பத்திரப் பதிவு நிலையங் களுக்கு அதிக வேலை இருக்கிறதா என்பவைகளையெல்லாம் பரிசீலனை செய்து பார்த்து, பிறகு அவசியம் இருந்தால் அந்த இடங்களில் பத்திரப் பதிவு நிலையங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. தங்கள் தங்கள் பகுதிகளில் பத்திரப் பதிவு நிலையங்கள் ஏற்படுத்தப் படவேண்டும் என்று பல அங்கத்தினர்கள் கூறினார்கள். அவை களைப்பற்றியெல்லாம் பரிசீலனை செய்து, ஆரம்பிக்க வேண்டிய இடங்களாக இருந்தால் அங்கே ஆரம்பிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றும், புதிய நிலச் சீர்திருத்தச் சட்டம் வந்தபிறகு, நிலம் வாங்குகிறவர்களுக்கும், விற்பவர்களுக்கும் பெரிய கஷ்டம் ஏற்படுகிறது. அதற்கான பாரங்களை பத்திரப் பதிவு நிலையங் களிலே எழுதித்தருவது மிக்க சங்கடமாக இருக்கிறது, அதை ஏதாவது சுலபமான முறையில் அமைத்துத் தருவது நல்லது என்று தெரிவித்தார்கள். இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கிற பாரங்களை பரிசீலனை செய்து பார்த்துத்தான் அமைத்திருக்கிறார் கள். அந்தந்த வட்டாரத்தில் இருக்கக்கூடிய மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய அளவிலே, அந்தந்த வட்டாரத்தில் என்னென்ன மொழி பேசப்படுகிறதோ அந்த மொழியில் பாரங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. அத்தனை விவரங்களும் தேவைப்படுகின்றன என்ற காரணத்தினால்தான், அவைகள் அவசியம் இருக்கவேண்டு மென்ற காரணத்தினால்தான், அந்த விவரங்கள் கோரப்படுகின்றன. அவைகளில் ஏதாவது ஒரு பகுதியை எடுத்துவிடவேண்டு மென்றால், நாம் அறியவேண்டியிருக்கிற அத்தனை முழு விவரங் களும் குறிப்பிடப்படாமல், அதனால் பல சங்கடங்கள் ஏற்படும். அதையெல்லாம் உணர்ந்துதான் இந்த பாரங்களை விபரமான முறையில் அமைத்திருக்கிறார்கள். அதனால் மேலும் பல சங்கடங் கள் ஏற்படும் என்பதைப் பார்க்கும்பொழுது, இப்பொழுது உடனே இந்த பாரங்களை திருத்தவேண்டிய அவசியம் இல்லை என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் மணி அவர்கள் மக்கள் தொகையை கணக் கொடுத்து அதன் அடிப்படையில் ஏன் பத்திரப் பதிவு நிலையங்களை அமைக்கக்கூடாது என்று குறிப்பிட்டார்கள். மக்கள் தொகையை

இருக்கிற குறைபாட்டை நீக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கேற்ப, தனிப்பட்ட முறையிலே வேலை ஆட்களை வைத்து திறமையாகச் செய்வதற்கும், அவர்களை உற்சாகப் படுத்துவதற்கும் ஒரு ஏற்பாடு செய்துகொண்டு வருகிறோம்.

மேலும், பல அரசாங்க வேலைகள் வெளியிலே கொடுக்கப்படு கின்றன, அதையும் இந்த அச்சகத்திலேயே செய்யவேண்டும், அப்படி ஏன் செய்யக்கூடாது என்றும் கேட்டார்கள். சென்ற ஆண்டைவிட, இந்த ஆண்டிலே வெளியிலே கொடுக்கும் வேலை குறைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது மூன்றாவது ஷிப்ட் முறையை ஆரம்பிப்பது பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக் கிறார்கள். இப்பொழுது அச்சு வேலைகள் பெரும் அளவிற்கு வெளி யார்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது—குறைக்கப்பட்டு வருகிறது. இன்னும் எவ்வளவு வேலைகள் குறைக்கப்பட முடியுமோ அவ்வளவும் குறைக்கப்படும். ஒவ்வொரு மாவட்டத் திலும் ஒரு அச்சகம் அமைக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித் தார்கள். இன்று இருக்கக்கூடிய நிலையில் அச்சு யந்திரங்கள் வாங்குவதில் சங்கடங்கள் இருக்கின்றன. அவைகள் வெளி நாடுகளிலிருந்து வரவேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய முயற்சிகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். இப் பொழுது ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவு முறையில் அச்ச கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் நல்ல முறையில் நடந்து வருகின்றன. அவைகளிடமும் அரசாங்க வேலைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. அங்கும் நல்ல முறையில் வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

அடுத்தபடியாக வேலூர் சிறையில் ஒரு அச்சகத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று தெரிவித்தார்கள். வேலூரில் ஒரு சமயத்தில் திடீரென்று எதிர் பாராத விதமாக கைதிகள் வந்த காரணமாக அங்கு அச்சுத் தொழிலை ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னால் அது அவ்வளவு லாபகரமாக இருக்காது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். சென்னை சிறையில் அரசாங்க அச்சக தொழிற் சாலை நடந்து வருகிறது. அது நல்ல முறையில் நடந்து வருகிறது. அச்சகத்தில் இருக்கக்கூடிய சில குறைபாடுகளை எடுத்து கனம் அங்கத்தினர் சா. கணேசன் அவர்கள் தெரிவித்தார். அதை தெரிவிக்கும்போது அதை வன்மையாகக் கண்டிக்கிறேன் என்றும் வற்புறுத்திக் கண்டித்தார். சென்ற ஆண்டில் சில குறைபாடுகள் சொல்லப்பட்டன, அவைகள் எல்லாம் அப்படியேதான் இருக்கின்றன என்றும் தெரிவித்தார். சென்ற ஆண்டு அவர் தெரிவித்த அத்தனை குறைபாடுகளும் நல்ல முறை யில் பரிசீலனை செய்யப்பட்டு அவற்றை நிவர்த்திக்கும் முறையில் முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப்பட்டுதான் வருகிறது. சில குறைபாடுகளை மேலும் பரிசீலனை செய்வதற்காக அது சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டு அவர்களும் அதை நிவர்த்திக்க வேண்டிய நடவடிக்கைகளும் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அவைகளை நல்ல முறையில் பரிசீலனை செய்து





அதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதை கனம் அங்கத் தினருக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மானியத்திற்கு அளிக்கப்பட்ட காலம் கடந்து விட்ட படியால் நான் அதிக நேரம் பேச விரும்பவில்லை. இந்த அச்சு சம்பந்தமானதும் ஸ்டேஷனரி சம்பந்தமானதுமான இந்த மானி யங்களுக்கு கனம் அங்கத்தினர்கள் தெரிவித்த கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எடுத்துக் கொண்டு, அவைகளைத் தெரிவித்த அத்தனை பேர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளு கிறேன். ஆகவே இந்த மானியங்கள் சம்பந்தமாகக் கொண்டு வந்த வெட்டுப் பிரேரேபணைகளை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு இந்த மானியங்களுக்கு அப்படியே அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்** : ஸார், ஏற்காடு சம்பந்த மாக அங்கு ஒரு பத்திரப் பதிவு ஆபீசை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன். அதற்கு கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை.

**கனம் திரு. கோ. பூவராகன்** : அதைப்பற்றி கனம் அங்கத்தினர் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறார். அதையெல்லாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டியதாக இருக்கிறது. பரிசீலனை செய்து எவ்வளவு சீக்கிரத்தில் அதை ஏற்படுத்த முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அதை அங்கு ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். கனம் குழந்தைசாமி கவுண்டர் அதைத் தனி யாகக் கேட்டுக்கொண்டதால் அதை அவசியம் எடுத்துப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 53,20,200 under Demand No. V—Registration be reduced by Rs. 100'.

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 53,20,200 under Demand No. V—Registration.'

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the allotment of Rs. 1,53,45,200 under Demand No. XXXIV—Stationery and Printing be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER : The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 1,53,45,200 under Demand No. XXXIV—Stationery and Printing.'

The Demand was put and carried and the Grant was made.

## DEMAND NO. XXIX—PUBLIC WORKS—GRANTS-IN-AID.

THE HON. SRI S. M. A. MAJID : Sir, on the recommendation of the Governor, I move—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,28,06,300 under Demand No. XXIX—Public works—Grants-in-aid.'

SRI T. P. ALAGAMUTHU : Sir, I move the following cut motion.

'That the allotment of Rs. 2,28,06,300 under Demand No. XXIX—Public Works—Grants-in-aid be reduced by Rs. 100.'

MR. DEPUTY SPEAKER : The Demand and the cut-motion are before the House for discussion.

* **திரு. காஞ்சி மணிமொழியார்** : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு பொதுப் பணிகள் என்ற மானியக் கோரிக்கையின் மீது கொண்டு வரப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரபணையை ஆதரித்து நான் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்ட மன்ற உறுப்பினர்களில் சென்னை நகரத்தைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு இருக்கின்ற கஷ்டங்களைப்பற்றி இந்தச் சட்ட மன்றத்திலேயே பல முறை மன்ற உறுப்பினர் கனம் அம்மையார் அவர்கள் எடுத்துக் காட்டி இருக்கிறார்கள். வெளி மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய குறைபாடுகளை அரசிடம் எடுத்துச் சொல்லி அவைகளைத் தீர்த்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்றும், அப்படிப்பட்ட சூழ்நிலை சென்னை நகரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இல்லை என்றும் கூறியிருக்கிறார். அது முற்றும் உண்மையாகும். நான் தேர்ந்தெடுக்கப்பட்ட என் தொகுதியில் எவ்வளவோ குறைபாடுகள் என்னிடம் கூறப்படுகின்றன. அவைகளை எல்லாம் தீர்த்து வைக்க முடிவதில்லை. காரணம் அவைகளெல்லாம் நகரமன்றத்தால் தீர்க்கப்பட வேண்டியவை. அங்கு குடி தண்ணீருக்கு வேண்டிய குழாய்கள் இல்லை. குழாய்கள் இருந்தாலும் அவற்றில் தண்ணீர் வருவதாக இல்லை. தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும். சாலைகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும். ரோடு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். போதிய அளவு பாதைகள் புதுப்பிக்கப்பட வேண்டும். பாதைகள் இல்லாத



இடங்களில் புதுப் பாதைகள் அமைக்கப்பட வேண்டும் என்று பல குறைகளை என் தொகுதியில் சொல்லுகிறார்கள். உண்மையிலேயே அந்தக் குறைகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட குறைகளையெல்லாம் நாங்கள் நகரமன்ற உறுப்பினர்களின் துணை கொண்டு தீர்க்க வேண்டியிருக்கிறது. இந்தக் குறைகளைத் தீர்த்து வைப்பதற்கு நகரசபைக்குச் சர்க்கார் நல்ல முறையில் அதிக உதவி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரைக்கும் குடி நீர்ப் பிரச்சினை பல ஆண்டுகளாக தீர்த்து வைக்கப்படாமல் இருந்து வருகிறது. நீர் இல்லாமல் மக்கள் எப்படி வாழ முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். என்னுடைய தொகுதியில் எந்த இடத்தில் கிணறு தோண்டினாலும் அந்தக் கிணற்றில் வருகிற நீர் உப்பு நீராகத்தான் இருக்கிறது. சமையல் பண்ணுவதற்குக்கூட பயன்படாத நிலையில் அது இருக்கிறது. ஆகவே குடி நீர் வசதி செய்து கொடுக்க வேண்டியது மிக அவசியமானது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சென்னை நகரத்தில் ஐந்து லட்சம் பேர்கள் இருந்த காலத்தில் இந்தக் குடி தண்ணீர்த் திட்டம் வகுக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது இருபது லட்சம் பேர்கள் வசிக்கிறார்கள். அப்பொழுது நிறைவேற்றிய திட்டத்தை வைத்துக்கொண்டு இப்பொழுது எப்படி வேண்டிய அளவு வழங்க முடியும்? பூண்டித் திட்டம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது என்றாலும் அதை வைத்துக்கொண்டு நகரம் பூராவுக்கும் நீர் வழங்க முடியாமல் இருக்கிறது. வீடுகளுக்குக் குழாய் அமைக்க முடியாவிட்டாலும் வீதிகளிலாவது குழாய்கள் அமைத்து குடி நீர் எல்லோருக்கும் கிடைக்கச் செய்ய வேண்டியது அவசியமாகும். கோடம்பாக்கம், கிண்டி, பெரம்பூர் ஆகிய பகுதிகள் புதிதாக விஸ்தரிக்கப்பட்ட பகுதிகளாகும். இந்தப் பகுதிகளுக்கு மற்றைய பகுதிகளைப்போல வசதிகளனைத்தும் செய்துதரவேண்டுமானால் சென்னை நகராட்சிக்கு அதிகமான நிதி உதவியை இந்த அரசு செய்துதர வேண்டியது இன்றியமையாத கடமையாகும்.

கிருஷ்ணை நதித் தண்ணீரை சென்னை நகரத்திற்குக் கொண்டு வரும் திட்டம் ஆந்திரா சர்க்காரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால், அது விரைவிலே நிறைவேறக்கூடியதல்ல. இன்றைக்கே தொடங்கினாலும், அது முடிய பத்தாண்டுக் காலமாவது ஆகக்கூடும். அதற்கிடையிலே, ஆங்காங்கு சில கிணறுகளைத் தோண்டி, டாங்கிகளைக் கட்டி பம்ப் செட்கள் வைத்து, அந்தந்த டிவிஷன்களிலுள்ள குடி நீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றும், அதற்காக இந்தச் சர்க்கார் வேண்டிய மானியத்தைச் சென்னை மாநகராட்சிக்கு வழங்க வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். 12-00 noon

சாலைகளைப்பற்றி எடுத்துக் கொள்வோம். சென்னை நகரத்தில் சிறு வீதிகளானாலும், அங்கெல்லாம் ஹெவி லோடு ஏற்றிக் கொண்டு லாரிகள் போய்க் கொண்டிருக்கின்றன. ஹெவி லோடு

படுத்துகிற நிலை பத்திரப் பதிவு நிலையங்களில் இல்லை. அவ்வாறு எங்கேயாவது வேண்டுமென்றே கால தாமதம் செய்கின்ற நிலைமை இருக்குமானால், அதைப் பற்றி கனம் அங்கத்தினர்கள் தெரிவித்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. மணி அவர்கள் லால்குடிக்குப் பக்கத்திலே இருக்கிற பத்திரப் பதிவு நிலையத்தில் பத்திரங்கள் பதிவு செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது, அதை நிவர்த்தி செய்து, பக்கத்திலே இருக்கிற பதிவு நிலையத்தில் பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கூறினார்கள். இதுபோன்று எங்கெங்கே மக்களுக்கு சங்கடம் இருக்கிறதோ, வெகு தூரம் செல்ல வேண்டியிருக்கிறதோ, அந்த இடங்களை பரிசீலனை செய்து அவர்களுக்கு வசதியாக இருக்கிற முறையில், பக்கத்திலே உள்ள பதிவு நிலையங்களில் பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்து கொண்டு வருகிறோம்.

எனவே, இந்த பத்திரப் பதிவுத் துறை சம்பந்தமாக கொண்டு வந்துள்ள . . .

**திரு. மு. கருணாநிதி:** பதிவுத் திருமணங்களில் எந்தெந்த சொந்தக்காரர்களை விலக்குவது என்ற பிரிவின்கீழ், உடன் பிறந்த சகோதரியின் மகளைத் திருமணம் செய்து கொண்டால், திருமணம் பதிவு செய்யப்பட மாட்டாது என்ற நிலை இருக்கிறதே, அதை மாற்ற முடியுமா?

**கனம் உதவி சபாநாயகர்:** இந்த விஷயம் கனம் அமைச்சருக்கு சம்பந்தம் இல்லையே.

**கனம் திரு. கோ. பூவராகன்:** வெகு நாட்களாக இதைப் பரிசீலனை செய்து, இடையிலே திருத்தங்கள் வேண்டுகிறபொழுது, அந்தத் திருத்தங்களை அமைத்து இப்பொழுது சரியான முறையிலே இந்தச் சட்டம் இயங்கி வருகிறது. மேலும் இதைத் திருத்த வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். இது விஷயமாக நமது நிதி அமைச்சர் அவர்களும் ஒரு கேள்விக்கு விடை அளிக்கும்பொழுது தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இந்த பத்திரப் பதிவு சம்பந்தமாக கொண்டு வரப்பட்டுள்ள இந்த மான்யத்தின்மீது நடந்த விவாதத்தில் அங்கத்தினர்கள் அனைவரும் நல்ல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களை எல்லாம் மனதில் கொண்டு, என்னென்ன செய்ய வேண்டுமோ, அதை அரசாங்கம் செய்யும் என்ற உறுதிப்பாட்டைச் சொல்ல விரும்புகிறேன். இது சம்பந்தமாக கொண்டு வந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை வற்புறுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, அரசாங்க பிரஸ், ஸ்டேஷனரி சம்பந்தமாக கொண்டு வரப்பட்ட மானியத்திலே அதிகமாக ஒருவரும் பங்கு எடுத்துக் கொள்ளவில்லை. இரண்டு மூன்று அங்கத்தினர்கள்தான் அதிக



மாகப் பேசியிருக்கிறார்கள். குறிப்பாக சுதந்திராக் கட்சித் தலைவர் சென்ற ஆண்டு இந்த மன்றத்திலே தெரிவிக்கப்பட்ட கருத்துக்களிலே ஒன்றுகூட நிறைவேற்றப்படவில்லை, அப்படியே இருக்கிறது என்று தெரிவித்தார்கள். இந்த எம்பிளத்தைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டிலே குறிப்பிட்டார்கள். இப்பொழுது இருக்கிற எம்பிளம் பலரால் பல இடங்களில் செய்யப்படுகிறது. அதனால் மாறுபட்ட நிலை இருக்கிறது. அவ்வாறு மாறுபட்ட நிலை இருக்கக்கூடாது, ஒரே இடத்தில் செய்ய வேண்டும் என்று கருதி, அரசாங்கம் ஸ்கூல் ஆப் ஆர்ட்ஸ் முதல்வருக்கு ஒரு எம்பிளம் தயாரித்து அனுப்ப வேண்டுமென்று எழுதியிருக்கிறது. அவர்களும் "மாஸ்டர் டிராயிங்" தயாரித்து அனுப்புவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

**திரு. மு. கருணாநிதி:** சென்னைக்கு தமிழ் நாடு என்று பெயரிட்ட பிறகும்கூட இந்த இலச்சினையில் "கவர்ன்மெண்ட் ஆப் மெட்ராஸ்" என்றுதான் போடுகிறார்களே தவிர, "கவர்ன்மெண்ட் ஆப் தமிழ் நாடு" என்று போடுவதில்லை. மேலும், "சத்தியமேவ ஜயதே" என்று ஹிந்தியிலே எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, சின்னத்தின் மேலே "உண்மை வெல்லும்" என்று தமிழிலே பொறிக்க ஏற்பாடு செய்வார்களா?

**கனம் திரு. கோ. பூவராகன்:** இது விஷயமாகப் பரிசீலனை செய்து, இப்பொழுது இருப்பதே நல்ல முறை என்று வைத்திருக்கிறோம்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** "தமிழ் நாடு" என்று பெயரை மாற்றும்பொழுது, தமிழிலேதான் தமிழ் நாடு என்று இருக்குமென்றும், ஆங்கிலத்திலே வரும்பொழுது "மெட்ராஸ்" என்றுதான் இருக்க வேண்டுமென்றும் அரசாங்கத்தின் முடிவு தெரிவிக்கப்பட்டது. அதன்படிதான் இப்பொழுது போடப்பட்டு வருகிறது. "சத்தியமேவ ஜயதே" என்று போட்டால் போதும். அது சமஸ்கிருதத்தில் இருக்கிறது. ஹிந்தியிலும் அப்படித்தான் எழுதுகிறார்கள். இரண்டு மொழிகளில் போடுவது என்றால் நன்றாக இருக்காது. இன்னும் அதை வட நாட்டிற்குக்கூட அனுப்பினால் அங்குள்ளவர்களுக்கும் தெரியும். ஆகவே, இப்பொழுது இருப்பது போலவே இருக்கலாம். மாற்ற வேண்டிய அவசியமில்லை.

**கனம் திரு. கோ. பூவராகன்:** ஆகவே, அந்த இலச்சினையின் மாஸ்டர் டிராயிங் வந்தவுடனே நல்ல முறையில் அமைந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மற்றும், அச்சுப் பிழைகள் அதிகமாக இருக்கின்றன, கால தாமதம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். நான்கு அல்லது ஆறு வாரங்களுக்குள்ளாக, எவ்வளவு சீக்கிரமாக அச்சிட்டுக் கொடுக்க முடியுமோ, அவ்வளவு சீக்கிரத்திலே செய்யப்பட்டு வருகிறது. அச்சுப் பிழைகளைப் பொறுத்தவரையில், இப்பொழுது

லாரி போகாத தெருவே இல்லை என்று சொல்லலாம், அதனால் சிறிய தெருக்கள்கூட, வெகு விரைவில் பாழாகின்றன. இந்த மாதம் வீதியைப் புதிதாக அமைத்தால், மூன்று நான்கு மாதங்கள் கூட அந்த வீதி நிற்பதில்லை. அதே மாதிரி சென்னையில் கிட்டத்தட்ட ஐம்பது ரூட்களுக்கு மேல் பஸ்கள் ஓடுகின்றன. இப்படி சென்னையிலிருக்கும் எல்லா வீதிகளும், பெரிய நெடுஞ்சாலைகளும் லாரிகளாலும் பஸ்களாலும் வெகு விரைவில் பாழாகின்றன. ஆகவே, சென்னை சர்க்கார் வீதிகளையும் சாலைகளையும் அமைக்க சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு நிறையப் பொருளுதவி செய்ய வேண்டும். மோட்டார் வாகனங்கள் மூலமாகச் சென்னை சர்க்காருக்கு லைசன்ஸ் கட்டணம் வசூலிக்கும் வகையில் 80 லட்சம் முதல் ஒரு கோடி ரூபாய் வரையில் கிடைக்கிறது. ஆனால், சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு அதிலிருந்து தரப்படும் பணம் ஏழு லட்சம் ரூபாய் அளவுக்குத்தான் இருக்கின்றதென்று நான் கருதுகிறேன். சாலைகளை அமைக்க ஏராளமாகப் பணம் அவர்களுக்குச் செலவாகிறது. இந்த லைசன்ஸ் கட்டணம் வசூலிக்கும் தொகையில் ஐம்பது சத விகித அளவுக்காவது சென்னை மாநகராட்சி மன்றத்திற்குத் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

சாலை அமைப்புக்காக இந்த நிதி ஆண்டில் கிட்டத்தட்ட 60 லட்சம் ரூபாய் சென்னை மாநகராட்சிக்குக் தரப்படுவதாகவும், அதில் 30 லட்சம் ரூபாய் கடனாகவும், 30 லட்சம் ரூபாய் மான்யமாகவும் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த 60 லட்சம் ரூபாய், ஏற்கனவே தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளுக்கும், தேசீய நெடுஞ் சாலை அமைப்புகளுக்கும், பெரிய தேசீய நெடுஞ்சாலைகளை அகலப்படுத்துவதற்கும், அதற்குத் தேவையான நிலங்களை வாங்குவதற்கும், சிறு பாலங்களை அமைப்பதற்குமான செலவுக்குப் பயன்படுத்தப்படுமென்று குறிப்பிட்டிருக்கிறது. ஆகவே, உள்ளே இருக்கும் சிறு பாதைகளைச் சீர்திருத்துவதற்கு இந்தப் பணம் போதாது. ஆகவே கிட்டத்தட்ட ஐம்பது சத விகிதமாவது மோட்டார் வாகன லைசன்ஸ் கட்டணப் பணத்திலிருந்து சென்னை மாநகராட்சிக்குத் தரவேண்டுமென்று நான் மீண்டும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்த சென்னையைப் பொறுத்த வரையில், எங்களுக்கிருக்கும் பிரச்சினையெல்லாம், குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் இருக்கும் பிரச்சினையெல்லாம் குடிசை வாழ் மக்களைப் பற்றிய பிரச்சினையாகும். சுகாதார வசதிக் குறைவான இடத்தில் இருக்கிறார்கள் என்ற காரணத்தால், சேரி ஒழிப்பு (ஸ்லம் க்ளியரன்ஸ்) என்ற பெயரால் குடிசை வாழ் மக்கள் வேறு இடங்களுக்கு அகற்றப்படுகிறார்கள். அப்படி அகற்றப்படும் போது அங்கு வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் அனைவருக்கும் இடம் தரப்படுவதில்லை. உதாரணமாக ஒன்றரை ஆண்டு காலத்துக்கு முன் கன்னியப்ப நகரிலிருந்து எல்லோரையும் புதூருக்குக் குடியேறும்படி செய்யப்பட்டது. அவர்களில் இருநூற்றைம்பது பேர்களுக்கு இன்றுவரை இடம் கிடைக்கவில்லை. இரண்டு





மாதங்கட்கு முன் சென்று எஞ்சினியரை விசாரித்தேன். 'விரைவில் 104 இடங்கள் ஒதுக்கப்பட இருக்கிறது' என்று சொன்னார். அது சொல்லி இவ்வளவு நாள் ஆகியும் அவர்கட்கு இடம் கிடைக்கவில்லை. 250 பேர்களுக்கு எந்தக் காலத்தில் கொடுக்கப் போகிறார்கள்? அவர்கள் கன்னியப்ப நகரில் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள். தங்கள் சொந்த இடம் என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். 300 ரூபாய், 400 ரூபாய் அங்குச் செலவழித்து, குடிசைகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருந்தவர்களுக்கு குடிசைகளைப் பிரித்துக்கொண்டு போகும் செலவுக்காக ரொக்கமாக 33 ரூபாயும், சாமான்களாக 177 ரூபாயும், ஆக 210 ரூபாய் வரை கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதை வைத்துக்கொண்டு எப்படிக் குடிசை போட்டுக்கொள்ள முடியும்? 300, 400 ரூபாய் செலவழித்திருக்கும்போது, அந்தத் தொகை அளவுக்கு அவர்களுக்கு நஷ்ட ஈடு தரவேண்டாமா? இரண்டு, மூன்று ஆண்டுகளாகியும் அவர்களில் பலருக்கு இடம் கொடுக்கவில்லை என்ற நிலை இருக்கலாமா? சீர்திருத்தம் செய்யப்படும் இடத்தில்கூட, அங்கு நிரந்தரமாக உள்ளவர்களுக்குக் கார்டு கிடைப்பதில்லை. சில நாட்களுக்கு முன் தொழிலமைச்சர் அவர்களிடத்தில் ராஜூப் பிள்ளை தோட்டம் பற்றி நான் சொல்லியிருக்கிறேன். அங்கே இருந்தவர்களுக்குக் கார்டு கிடைக்கவில்லை, வெளி மாவட்டங்களிருப்பவர்களும் வெளி வட்டங்களில் வசிப்பவர்களும் கார்டு பெற்றிருக்கிறார்கள். ஏற்கெனவே இருந்த 25 பேர்களுக்குக் கார்டு கிடைக்காமல் வெளி மாவட்டங்களிலிருந்து வந்தவர்களுக்குக் கார்டு கிடைத்திருக்கிறதே, அது எப்படிக் கிடைத்தது என்று கண்டறிய வேண்டும்.

பொதுவாக, ஹௌஸிங் போர்டு மிக நல்ல பணிகளைச் செய்து வருகிறது. அதைப் பாராட்ட வேண்டும். ஆனால், அங்குக் கீழ் நிலையில் பணியாற்றுகின்ற ஒருசிலர் தவறு செய்வதனால், ஹௌஸிங் போர்டுக்கே கெட்ட பெயர் உண்டாகிறது. ராஜூப் பிள்ளைத் தோட்டத்திலுள்ள 200 பேர்களையும் கூட்டி வைத்து விசாரித்தேன். கார்டு பெற்றவர்கள் 24 பேர்களில் ஐந்து பேர் மட்டுந்தான் இரண்டு ஆண்டு இருந்து வெளியிலே போய்விட்டவர்கள். மற்றவர்கள் அங்கு ஒரு நாள் கூட கால் எடுத்து வைத்தவர்கள் அல்ல. இனியும் வரப்போகிறவர் அல்ல என்று எல்லோரும் தெரிவித்தார்கள். ஆகவே, சரியான விசாரணை செய்து, கண்டுபிடித்து, கார்டு கொடுக்காதவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அப்பாவு நகர் என்பது சைதாப்பேட்டைக்கு அண்மையில் இருக்கிறது. அதையும் சீர்திருத்தம் செய்கிறார்கள். அங்குள்ள மக்களுக்கு இடம் இல்லை என்று சொல்லிவிட்டு, ஹௌஸிங் போர்டில் வேலை செய்கிறவர்களுக்கு அங்கே இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. அதையும் கவனிக்க வேண்டும். எங்கே சீர்திருத்தம் செய்தாலும், அங்கே வாழ்ந்து வருபவர்களுக்கு நிச்சயமாக கார்டு கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும். ராஜூப் பிள்ளைத் தோட்டத்தைப்பற்றி விசாரிப்பதாக மந்திரி அவர்கள் தெரிவித்

மறுக்க முடியாது. எல்லா மாநிலத்தையும் விட இந்த மாநிலம் சிறப்பாக பல துறைகளிலும் அடைந்து வருகிற முன்னேற்றத்தைப் பார்க்கிறபோது நம் அரசாங்கத்திற்கு மக்கள் நன்றி உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

தூத்துக்குடியை எடுத்துக் கொண்டால் அங்கே ஆழ்கடல் துறைமுக வேலை நடந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக 1963-64-ஆம் ஆண்டு ஏறக்குறைய 50 லட்சம் ரூபாய் செலவிட இருக்கிறோம். அது ஒரு க்ரோயிங் ஸிடியாகிவிட்டது. துறைமுகம் வந்தவுடன் வர்த்தகப் பெருக்கமும், தொழில் பெருக்கமும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இப்போதில் இருந்தே அதை ஒரு பெரிய நகரமாக விஸ்தரிப்பதற்கு வேண்டிய பல முயற்சிகளையும் நாம் மேற்கொண்டாக வேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆகவே தூத்துக்குடி நகரத்தைச் சுற்றி எட்டு, ஒன்பது மைல் அளவுக்கு உள்ள பகுதியை நகரத்தோடு இணைத்து தக்க அபிவிருத்தி வேலைகளைச் செய்தாகவேண்டும்.

குறிப்பாக அந்த நகரத்தைப் பொறுத்த வரையில் ஒரு பெருங்குறை இருக்கிறது. இன்பமும், துன்பமும் இரண்டு கண்கள் என்று சொன்னாலும்கூட, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரேயே அந் நகர சபைத் தலைவராக இருந்த ஒருவர் பிற்காலம் அந் நகரம் எவ்வாறு அமையும் என்பதை நன்கு உணர்ந்து, பல திட்டங்களை வகுத்தார். குறிப்பாக அந் நகர குடிதண்ணீர் பிரச்சினைக்கும், சுகாதார அபிவிருத்திக்குச் சாக்கடை அமைக்கும் பிரச்சினைக்கும் அவர் திட்டம் வகுத்தார். எத்தனையோ எதிர்ப்புகள் அவர்களுக்கு இருந்தாலும்கூட மிகத் தீவிரமாக நின்று குடிதண்ணீர் திட்டத்தை நிறைவேற்றினார். அன்றைக்கு அவரை எதிர்த்தவர்கள்கூட இன்றைக்கு அவர் சிலையை நகரத்தில் வைத்துப் பாராட்டி மகிழக்கூடிய நிலையில் இருக்கிறார்கள் என்றால் அவரது உறுதியையும், தீவிரமாகச் செயலாற்றும் தன்மையையும் உணர்ந்து இருக்கிறோம். அன்றைக்கே சாக்கடைத் திட்டமும் கொண்டுவரப்பட்டிருந்தால் இன்றைக்கு அந்நகரத்தில் குறையில்லை என்றுவிடலாம். அப்பொழுதில் இருந்தே அத்திட்டத்திற்குப் பணம் ஒதுக்கி வைத்திருந்தாலும் இன்னும் சாக்கடைத் திட்டம் வரவில்லை. அதை உடனடியாக அமுல் நடத்த தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தூத்துக்குடி நகரத்தைப் பொறுத்த வரையில் 17 லட்சம் காலன் குடிதண்ணீர் 27 மைலில் இருந்து கொண்டுவரப்படுகிறது. இன்னும் இடையில் உள்ள சில கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டியிருப்பதால் இப்போது நகரத்தை விஸ்தரிக்கும்போது இடையில் உள்ள பகுதிக்கும் குடிதண்ணீர் சப்ளை செய்ய உடனுக்குடன் வகை செய்துவிடவேண்டும். முக்காணியில் இருந்து ஹார்பருக்குத் தண்ணீர் சப்ளை செய்ய இருப்பதால் முக்காணியில் இருந்து ஹார்பருக்குத் தண்ணீர் கொண்டு வரும்போதே இடையில் உள்ள கிராமங்களுக்கும் குடிதண்ணீர் திட்டத்தை விஸ்தரித்துவிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்





அங்கே பக்கிள்சானல் என்ற ஓடை இருக்கிறது. அது சரியாகக் கவனிக்கப்படவில்லை. ஆகவே வெள்ளம் வரும் காலங்களில் அதிகப்படி தண்ணீர் வந்து அங்கங்கேயுள்ள குடிசைகளை அழித்து விடுகிறது. ஆகவே அதை மராமத்து செய்வதற்கான திட்டம் ஒன்றை நகராட்சி மன்றம் தயாரித்து அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. அந்தத் திட்டத்தையும் அங்கீகரித்து அந்த பக்கிள் சானல் ஓடையை மராமத்து செய்வதற்கு வேண்டிய உதவியை அளிக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று, இப்போது நகராட்சி மன்றங்கள் புதிதாகச் சிறிய சிறிய வியாபாரிகள் கூட லைசென்சு பெற வேண்டும் என்கிற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்திருப்பதாகத் தெரிகிறது. கலப்பு உணவுத் தடைச் சட்டத்தின் கீழ் உற்பத்தியாளர்களைக் கண்காணிக்கத் தக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டால் போதும். ஆனால் சோடா, கலர் விற்பனை செய்கின்ற வெற்றிலை பாக்குக் கடைக்காரர்களைக் கூட கலப்புத் தடை சட்டத்தின் கீழ் குற்றவாளியாக்கித் தண்டிப்பதற்கான வகையில் அவர்களும் லைசென்சு பெறவேண்டும் என்று செய்வது சரியாகாது. இது சிறு வியாபாரிகளை—ஹராஸ்—கொடுமை செய்வதாக ஆகும். ஆகவே இந்த உத்தரவை ஸ்டே செய்து, இந்தச் சட்டத்தில் இருந்தே இவர்களுக்கு விலங்கு அளிக்கும் திருத்தத்தையும் செய்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் நகராட்சி மன்றங்களில் வேலை செய்கின்ற தோட்டிகளுக்கு மிகக் குறைவாகச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. சம்பளம் உயர்த்த வேண்டுமென்றால் நகராட்சி மன்றங்களின் வருமானத்தைப் பொறுத்தே செய்ய முடியும் என்று சொல்வதாகத் தெரிகிறது. சர்க்கார், அவர்களுக்கு சம்பளத்தை காலத்திற்கு ஏற்றபடி கூட்டிக் கொடுக்க உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் அவர்கள் ரூபாய்க்கு நாலணா, எட்டணா வட்டிக்குக்கூட கஷ்டம் தாங்காமல் கடன் வாங்க வேண்டி ஏற்படுகிறது. எப்படி இப்போது கூட்டுறவு பண்டகசாலைகளை ஏற்படுத்துகிறோமோ அப்படி அந்த ஊழியர்களுக்குக் குறைந்த வட்டியில் தேவைப்படுகிற சொற்ப ரூபாய்களை அவ்வப்போது கடனாக வழங்க ஒரு சொஸைட்டியை ஏற்படுத்தவேண்டும். இதற்கு 50,000 ரூபாய் மூலதனம் இருந்தால் கூடப் போதும். ஆகவே இப்படி ஒரு பாங்கை முனிசிபல் நிர்வாகத்திலே ஏற்படுத்தி அவர்களுக்குச் சிறுசிறு கடன் உதவி அளித்து உதவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் தூத்துக்குடி நகரமானது பெரும் அளவு விரிவு அடைவதற்கான பல அபிவிருத்தித் திட்டங்களை—ஆழ்கடல் துறைமுகம் போன்றவற்றை —மேற்கொண்டிருப்பதனால் ரோடுகளைப் பராமரிக்கவும் தக்க வழி செய்யவேண்டும். முன்பு நல்ல முறையில் போடப்பட்ட சிமிண்டு ரோடுகள் இன்றையதினம் சரியாகப் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றை நல்ல நல்லமுறையில் கவனித்து செப்பனிட வேண்டும். குறிப்பாக திருநெல்வேலி மாவட்டத்திலேயே சிமிண்டு தொழிற்சாலை இருக்

[திரு. காஞ்சி மணிமொழியார்] [19th March 1963

திருக்கிறார்கள். கீழே இருப்பவர்கள் விசாரிக்காமல், அட்மினிஸ்ட்ரேஷன் ஆபீசரே விசாரித்தால்தான் உண்மை தெரியும். அப்படி விசாரிக்கும்போது அந்தத் தொகுதி எம்.எல்.ஏ.-யையும் உடன் வைத்துக்கொண்டு விசாரிக்கவேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கிண்டி ராஜ்பவனத்திலிருந்து சென்னை கோட்டைக்கு வருகிற வரை வழியில் இரு பக்கங்களிலும் நாம் ஏராளமான குடிசைகளைப் பார்க்கிறோம். சென்னையில் 310 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையில் 310 என்பது 400, 410 என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. புதிது புதிதாக திடீர் திடீர் என்று ஏராளமான குடிசைப் பகுதிகள் தோன்றுகின்றன. அப்படிப் புதிதாகக் குடிசைகள் அமையாமல் பார்த்துக் கொள்ளவும், உள்ள குடிசைப் பகுதிகட்கு வசதிகள் செய்து தரவும் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். குடிசைக்குப் பக்கத்தில் பெரிய பெரிய மாடி வீடுகள் காணப்படுகின்றன. சென்ற ஆண்டு 310 குடிசைப் பகுதிகள் என்றால் இப்பொழுது 400 ஆக வளர்ந்திருக்கின்றன. 'இப்படிக் குடிசைகள் மேலும் மேலும் வளர்வதையும் அதே சமயத்தில் இரண்டு அடுக்கு மாடி வீடுகள் மூன்றடுக்கு மாடி வீடுகளாகவும், மூன்று அடுக்கு மாடி வீடுகள் நான்கு அடுக்கு மாடி வீடுகளாகவும் வளர்ந்து கொண்டு போவதையும் பக்கத்தில் பக்கத்தில் வைத்துப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். இதிலிருந்து நமக்குத் தெரிவதெல்லாம் அடித்தளத்தில் இருக்கும் மக்கள் நாளுக்குநாள் தேய்ந்துகொண்டு போகிறார்கள் என்பது மேலே இருக்கிறவர்கள் மேலும் மேலும் உயர்ந்துகொண்டு போகிறார்கள் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. ஆகவே, இந்த இரண்டுக்கும் உள்ள இடைவெளியைக் குறைக்க வேண்டும். குடிசை வாழ் பகுதிகள் மேலும் மேலும் வளரக் கூடாது என்பதல்ல நான் கூறுவது, உள்ள குடிசைப் பகுதிகளை முதலில் சீர்திருத்த வேண்டும் என்பதுதான் ரோடுகளிலே குடிசைகள் போடப்பட்டு வருவதையும் நாம் சில இடங்களில் பார்க்க முடிகிறது. அதனால் வண்டிகள் போக்குவரத்து தடைப்படுகின்றன. எப்படியோ தெரியாமல் சிலர் போட்டு விடுகிறார்கள். என்னுடைய தொகுதியில் இரண்டு மூன்று இடங்களில் நான் சென்று பார்த்து 'இந்த இடத்தில் இருப்பது சரியல்ல, கூடியவரை சாலையில் குடிசை போடக் கூடாது' என்று எடுத்துச் சொன்னேன். 'எங்காவது இடம் வாங்கிக் கொடுங்கள், தெரியாமல் இங்கே போட்டுவிட்டோம்' என்று அந்த மக்கள் சொன்னார்கள். அதுபற்றி மனு எழுதிக் கையெழுத்து போட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மனுக்களை உடனே கவனித்து அவர்களுக்கு வேறு இடங்களைக் கொடுத்து, சாலைகளைச் சீர்திருத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். திறந்த மனைக்கட்டுகளை குடிசைவாழ் மக்களுக்கு அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். 'அப்படித்தான் கொடுத்துக் கொண்டும் வருகிறோம். எல்லோருக்கும் அப்படித் திறந்த மனைக்கட்டு கொடுக்க முடியவில்லை' என்று தொழில்



19th March 1963] [திரு. காஞ்சி மணிமொழியார்]

அமைச்சர் அவர்கள்கூட வருத்தப்பட்டார்கள். திறந்த மனைக் கட்டுதான் வேண்டுமென்றும், வீடு தேவை இல்லை என்றும் அவர்கள் கூறுகிறார்கள். டெனமன்ட்ஸ் தேவை இல்லை என்று கருதுகிறார்கள். தங்களுக்குச் சொந்தமான மனை, இருபது முப்பது ஆண்டுகளுக்குப் பிறகாவது தங்களுக்குச் சொந்தமாகக்கூடிய மனை எனகிற எண்ணம் அவர்களுக்கு இருந்தாலும், அதற்காகத் தரவேண்டிய மாதம் மூன்று ரூபாய் தொகையைக்கூட கொடுக்க முடியாமல், எட்டு மாதம், பத்து மாதத் தொகை பாக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் சென்ற சமயத்தில், 'நீங்கள் தொகையைக் கட்டிவிட வேண்டும்; மொத்தமாகக் கட்டாவிட்டாலும், கொஞ்சம் கொஞ்சமாகாவது கட்டிவிட வேண்டும்' என்று தெரிவித்திருக்கிறேன். மூன்று ரூபாய்கூடக் கட்ட முடியாத அளவுக்கு அவர்கள் இருக்கும்போது, அவர்களுக்கு டெனமன்ட்ஸ் கட்டிக்கொடுத்து, மாதம் பத்து, பன்னிரண்டு ரூபாய் கட்டவேண்டுமென்றால், நிச்சயமாக அவர்களால் கட்டமுடியாது. சில மாதங்களுக்குள் அவர்களைக் காலி செய்துவிட்டு, மத்திய தர, உயர் தர மக்களை அங்குக் குடியேற்றக்கூடிய நிலைமைதான் ஏற்படும். அதனால், குடிசை வாழ் மக்களுக்கு நன்மை ஏற்படாது. கூடியவரையில் அதிகமான பில் கலெக்டர்களைப் போட்டு பாக்கி நின்றுவிடாமல், மூன்று ரூபாயை மாதா மாதம் வற்புறுத்திப் பெறவேண்டும். கோர்ட்டுக்குப் போய் எவிக்ஷன் ஆர்டர் வாங்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கும் நிலை இல்லாமல், பில் கலெக்டர்களை அதிகமாகப் போட்டு, மாதா மாதம் தொகையை வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஆகவே, குடிசை வாழ் மக்களுக்கு எவ்வளவு தூரம் நன்மை செய்யவேண்டும் என்பதைக் கவனித்து, ராஜா பிள்ளைத் தோட்டம், அப்பாவு நகர், புதூர் ஆகியவைகளுக்கு நல்ல முறையில் பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

*திரு. சி. பொன்னுசாமி: கனம் தலைவர் அவர்களே, இப்போது நகராட்சி மன்றத் துறை சம்பந்தமாகக் கொண்டுவரப்பட்டிருக்கும் மானியத்தை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சுதந்திரம் அடைந்த பிறகு நம்முடைய தேசம்—குறிப்பாக நம்முடைய நாடு எல்லா வகையிலும் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் காண்கிறோம். ஒரு நாட்டின் வளத்தைப் பார்ப்பதற்கு அந்நாட்டில் உள்ள நகரங்களைப் பார்த்தால் போதும். சென்னை மாகாணத்திலுள்ள நகரங்களைப் பார்க்கிறபோது—இங்கு இருக்கிற ரோடு வசதி, குடிதண்ணீர் வசதி, மின்சார வசதி ஆகியவற்றை எல்லாம் கொண்டு நம் தமிழகம் எவ்வாறு முன்னேற்றம் அடைந்து வருகிறது என்பதைக் கண்டு பெருமைப்படலாம். மற்ற தேசங்கள் எல்லாம் நீண்டகாலத்திற்குப் பிறகு அடைந்திருக்கிற வளர்ச்சியை நாம் மிகக் குறுகிய காலத்திலேயே அடைந்திருக்கிறோம். இதை[illegible]

கிறது. அவர்கள் பணமாகக் கொடுக்காவிட்டாலும் சிமிண்டாகவாவது கொடுத்துதவ வழி செய்து அந்த ரோடுகளை நல்ல முறையில் செப்பனிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். "தென்னை மரத்தில் தேள் கொட்டினுல் பனை மரத்தில் நெறி கட்டும்" என்பார்களே அதுபோல, கலப்படச் சட்டம் பொருள்கள் உற்பத்தி செய்பவர்களை விட்டுவிட்டு, விற்கும் சில்லரைக் கடைக்காரர்களை பாதிப்பதாக இருக்கிறது. தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம் வருவதானுல் நகராட்சி மன்றத்தின் பொறுப்பு இன்றைக்கு அதிகரித்து விடுவதனுல் அவர்கள் வளருகிற அந்த நகரத்தின் தேவையை நல்ல முறையில் கவனிப்பதற்கு வேண்டிய உதவிகளை எல்லாம் இந்த அரசாங்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கே. பி. பழனி:** மதிப்பிற்குரிய மாமன்றத் தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து, வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நகாராட்சித் துறை வரலாற்றிலேயே இல்லாத புதிய ஒரு சிறப்பான அம்சம் இந்த ஆண்டு சேர்க்கப்பட்டிருப்பது உண்மையிலேயே பாராட்டத்தக்க ஒன்ருகும். பொது சுகாதாரம் இன்ஜினியரிங் என்று சொல்லக்கூடிய புதிய துறையும் இந்த ஆண்டுதான் சேர்க்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, குடிசை வாழ்வோர் சுகாதார வசதிக்காக, ஸ்லம் கிளியரன்ஸ் திட்டத்தின்கீழ் மத்திய அரசாங்கம் 37½ சதவிகிதம் கடனுகவும், 37½ சதவிகிதம் மானியமாகவும், மாநில அரசாங்கம் 25 சதவிகிதம் மானியமாகவும் கொடுக்கக்கூடிய நிலைமை உருவாகி இருப்பது உண்மையிலேயே பாராட்டத் தக்க ஒன்ருகும்.

முன்பு மாவட்ட கழக நிர்வாகத்தின் கீழ் இருந்த சாலைகள் இப்போது பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாற்றப்பட்டிருக்கின்றன. சாலை பராமரிப்புக்காகத் தனி நபர் ஒன்றுக்கு 16 புதிய காசுகள் விதம் இருந்த நிலைமை இப்போது மாற்றியமைக்கப்பட்டு தற்போது 40 புதிய காசுகளாக ஆக்கப்பட்டிருக்கிறது. நகராட்சி மன்றங்களின் நிர்வாகத்திலுள்ள சாலைகளுக்கு இந்த உயர்வு கொடுக்கப்படவில்லை. ஆகவே, அந்தச் சாலைகளுக்கும் அந்த உயர்வைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய சாலைகள் நன்ருகப் பாதுகாக்கப்படவும், பராமரிக்கப்படவும் வேண்டுமென்று சொன்னுல் முனிசிபல் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் சாலைகள் அத்தனையையும் அரசாங்கம் ஏற்று நடத்துவது சாலச் சிறந்தது என்பதையும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அடுத்து, இன்று நகராட்சியில் பணியாற்றுகின்ற ஹெல்த் இன்ஸ்பெக்டர்கள், சானிடரி இன்ஸ்பெக்டர்கள் வேலைகளை மாநில அரசாங்கம் அங்கீகாரம் செய்து கொண்டால் நன்ருக இருக்குமென்பதையும் சொல்ல ஆசைப்படுகிறேன்.





அடுத்தபடியாக, இன்று இருக்கக் கூடிய நிலைமையில், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், பில் கலெக்டர்கள், ரெவின்யூ ஆபீசர்கள் போன்றவர்கள் ஒரே ஆட்சியின் கீழ் பணியாற்ற வேண்டிய நிலைமை இருக்கிறது. அவர்கள் மாநிலம் முழுவதும் உள்ள நகராட்சிகளுக்கு இடையே மாற்றப்படும் நிலைமை இருந்தால் நன்ருக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைய சூழ்நிலையில் ஓய்வு பெற்றவர்களுக்கு அரசாங்கம் கொடுக்கக் கூடிய பென்ஷன் உதவித் தொகையானது நகராட்சி மன்ற ஆசிரியர்களுக்கு மட்டுந்தான் வழங்கப்படுகிறது. அந்தப் பென்ஷன் தொகை எல்லா நகராட்சி சிப்பந்திகளுக்கும் வழங்கப்பட்டால் நன்ருக இருக்கும்.

நகராட்சி மன்றங்களில் பணியாற்றுகின்ற சிப்பந்திகள் அத்தனை பேரும் வேலையில் சேருவதற்கான தகுதியும், தாமும் மாநில அரசாங்கச் சிப்பந்திகளுக்கு வேண்டிய ஒன்ருகவே இருந்த போதிலும் சம்பளத்தில் ஏற்றத்தாழ்வுகள் இருந்து வருகின்றன. இந்த ஏற்றத்தாழ்வை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய மாநகராட்சிக்கு தண்ணீர் வசதி கொடுப்பதற்காக 'ஹாப் கிராண்ட்' கொடுக்கப்பட்டு வருகிறது. அந்த 'ஹாப் கிராண்ட்' வழங்கும் முறையானது முனிசிபல் நிர்வாகத்திற்கு இல்லை. நகராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படும் சரிபாதி மானியத்தை முனிசிபாலிடிகளுக்கும் வழங்க வேண்டுமென்பதிலே இந்த அமைச்சரவை கவனம் செலுத்த வெண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தண்ணீர் வசதி எவ்வளவு இன்றியமையாத ஒன்ருே அதே போன்று வடிகால் வசதி என்று சொல்லக் கூடிய "டிரெயினேஜ் ஸ்கிம்" மிகமிக இன்றியமையாததாக இருக்கும் காரணத்தால் நம்முடைய மாநிலத்திலே உள்ள எல்லா நகராட்சி மன்றங்களுக்கும் கணிசமான அளவு தொகையை ஒதுக்கி வடிகால் வசதியை மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியிலாவது செய்து முடிக்கும் வகையில் நம்முடைய மதிப்புக்குரிய அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* **திரு. எஸ். முருகையன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நகராட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையின் மீதுள்ள வெட்டுப் பிரேரணையையொட்டி என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

நகராட்சிகளின் குடிதண்ணீர்த் திட்டத்திற்காகவும், வடிகால் திட்டத்திற்காகவும் 10 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிருர்கள். எங்களுடைய திருவண்ணுமலை நகரசபைக்கு இந்த இனத்திலே எந்த விதமான

பணமும் ஒதுக்கியிருப்பதாகத் தெரியவில்லை. நீண்ட நாட்களாக திருவண்ணாமலை நகரத்திலே குடிதண்ணீர்ப் பிரச்னையானது ஒரு பெரும் வேதனையை அளித்துக் கொண்டு வருகிறது. இந்த ஆண்டு தான் அந்தப் பஞ்சப் பிரச்னை தற்காலிகமாக இல்லையே தவிர, சென்ற ஏழெட்டு ஆண்டு காலமாக ஒவ்வொரு ஆண்டும் குடி-தண்ணீர் இல்லாமல் வெகு தொலைவிலிருந்து லாரிகள் மூலமாகத் தண்ணீர் கொண்டு வந்து சப்ளை செய்யக் கூடிய நிலைமை இருந்து வந்திருக்கிறது. இதற்காக நகரசபையில் தீர்மானம் போட்டு சர்க்கார் இதற்கு வேண்டிய தொகையை மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று அனுப்பினோம். சர்க்காரிடத்திலிருந்து வந்த பதிலில் 'ஒரு திட்டத்தைத் தயார் செய்து அதற்கு ஆகும் 47 லட்சம் ரூபாய் எஸ்டிமேட் போட்டு செலவையும் நீங்களே செலவு செய்யத் தயாராக இருந்தால் அதனைச் செயல்படுத்தலாம்' என்று கூறியிருக்கிறார்கள். எங்களுடைய திருவண்ணாமலை நகர சபைக்கு வரக்கூடிய வருமானம் வெளியில் இருந்து வரக்கூடிய யாத்திரிகர்களுக்குச் செலவு செய்வதற்குத்தான் சரியாக இருக்கிறதே தவிர, நகரத்திலுள்ள பொதுமக்களின் நன்மைக்காகக் கூடச் செலவழிக்க முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. மற்ற நகரசபைகளை விட திருவண்ணாமலை நகரசபை விசித்திரமானது. தற்போது திருவண்ணாமலை நகரசபை எல்லைக்குள் இருக்கக்கூடிய 10, 15 குடும்பங்களுக்குச் சொந்தமானதாக அந்தக் கட்டிடங்கள் கடைத்தெருவில் இருக்கிறது. அந்தக் குடும்பங்களிலுள்ள ஏழெட்டுப் பேர் தொடர்ந்து 30, 40 ஆண்டுகளாக அந்த நகரசபையில் அங்கத்தினர்களாக இருந்து வருகிறார்கள். ஆகவே, அங்கு வரிகள் அதிகப்படுத்தப்பட்டால் உடனே அந்த வரிகள் குறைக்கப்பட்டு விடுகின்றன. இதை நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், அங்கு வருவாய் வரவும் வசதி இல்லை, வருவாயைப் பெருக்குவதற்காக வரி போட்டாலும் கமிஷனர் சிறிது குறைக்கிறார்; அடுத்து அப்பீல் கமிட்டியில் வைத்து முழுவதையும் குறைத்து விடுகிறார்கள். நான் குறை சொல்ல வேண்டுமென்பதற்காக இதைச் சொல்லவில்லை. நிர்வாகத்தின் நிலைமையைப் பற்றிச் சொல்லவே கூறுகிறேன். நகரசபைக்குப் போதுமான வருமானம் இல்லாத காரணத்தால் நல்ல வசதிகளைச் செய்ய முடியாத நிலைமை தொடர்ந்து இருந்து வருகிறது. குடிதண்ணீர்த் திட்டத்திற்காகத் திருவண்ணாமலை நகரசபைக்கு வேண்டிய பணத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று சாக்கடைத் திட்டம் வேண்டுமென்று திருவண்ணாமலை நகரசபையில் தீர்மானம் போட்டு நீண்ட நாட்கள் ஆகியும் அது சர்க்காருடைய ஜாபிதாவில் பத்தாவது, பதினோராவது இடத்திலே இருந்து வருவதாகத் தெரிய வருகிறது. எங்களுடைய திருவண்ணாமலை நகரசபைக்கு முதல் சலுகை கொடுக்க வேண்டுமென்று நாங்கள் தீர்மானம் போட்டு அனுப்பினோம். திருவண்ணாமலைக்கு அடிக்கடி யாத்திரிகர்கள் வருகிறார்கள். ஒரு மாதம் தவறாமல் திருவிழா நடந்து கொண்டிருக்கிறது. மக்கள் கூட்டத்தின் காரணமாக சுகாதாரக்



கேடான நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே, சாக்கடைத் திட்டத்தை ஒரு பகுதிக்காவது முதலிலே அங்கு செயல்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நரகசபைக்குச் சொந்தமாக கட்டடம் ஏற்கனவே இருந்தது. அது பழைய கட்டடமாக இருந்த காரணத்தால் கடந்த பத்தாண்டுக் காலமாக நகரசபை வாடகைக் கட்டடத்தில் இருந்து வருகிறது நகரசபைக் கட்டடம் கட்டுவதற்காகப் பணம் கேட்டதற்கு இல்லையென்று பதில் வந்துவிட்டது. ஆபீஸ் கட்டடத்திற்குப் பணம் கேட்டதற்கு இல்லையென்று சொல்லி விட்டார்கள். அதற்கான பணத்தையும் கொடுத்து உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே உள்ள நகரசபை பஸ் ஸ்டாண்டு ஊருக்குச் சற்று வெளியே இருக்கிறது என்ற காரணத்தால் வேறு ஒரு இடத்தில் பஸ் ஸ்டாண்டு கட்ட வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பதவியேற்ற புதிதிலே 1954-ஆம் ஆண்டு அதற்கான கல்லை நட்டார்கள். கல்நாட்டு விழா நடந்ததே தவிர, பஸ் ஸ்டாண்டு இன்னும் உருப் பெறவில்லை. அந்தக் கல்லையும் அந்த இடத்தில் இருந்து எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். அந்த கல்லைத் தேடி மறுபடியும் அந்தயிடத்தில் வைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. முதலமைச்சர் கல் நாட்டிய பஸ் ஸ்டாண்டுக்கே இந்த நிலைமை என்றால் மற்றவற்றின் நிலைமையை என்னவென்று சொல்வது? இது போன்று கல் நடுவதைவிட, பேசாமல் இருப்பது நல்லது. 1954-ல் கல் நாட்டப்பட்டது. இதுவரை பஸ் ஸ்டாண்டை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பல நகரசபை பஸ் ஸ்டாண்டுகளில் நீண்டதூர பஸ் பிரயாணிகளுக்கான நல்ல வசதிகள் செய்யப்படுவது கிடையாது.

அதுவும் நீண்ட தூரம் பஸ்களில் பிரயாணம் செய்பவர்களுக்கு அந்தந்த நகாசபைகள் கட்டாயம் வேண்டிய வசதிகள் செய்து தரவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட வேண்டும். எமர் 12-30 p.m.
ஜென்ஸி முடிந்த பிறகு நகரசபைத் தேர்தல்கள் வரும் என்று முன்பு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எங்கள் ஊரை எடுத்துக் கொண்டால் ஒரு வார்டில் 600 வாக்காளர்கள், அடுத்த வார்டில் 2,000 வாக்காளர்கள் என்று இருக்கிறார்கள். மூன்று நான்கு தேர்தல்களாக இப்படிப்பட்ட நிலை இருந்து கொண்டு வருகிறது. இந்த முறை மாற்றப்படவேண்டும். எல்லா வார்ட்களிலும் சமமாக வோட்டர்கள் இருக்கும்படி செய்தல் வேண்டும். முன்பு நகர சபைத் தேர்தலுக்குத் தேதி குறிப்பிட்ட நாலு மாதங்களுக்கு முன்பு ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. வாக்காளர் ஜாபிதாவை திருத்தி, வார்டுகளைத் திருத்தியமைக்க வேண்டுமென்று உத்தரவு வந்தது. பின்னர் தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டதால் அந்த முடிவு அப்படியே இருக்கிறது. எங்கள் திருவண்ணாமலை நகர சபையில் ஒரு வார்டில் 600 என்றும், ஒரு வார்டில் 1,000 பேர்கள் என்றும் 2,000-க்கு மேற்பட்ட வாக்காளர்கள் கொண்ட வார்ட்கூட இருக்கிறது. ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுத்து

அப்படியில்லாது ஒவ்வொரு திட்டத்திற்கும் காலவரையறை வைத்திருப்பதுபோல் இதற்கும், இந்த ஸ்லம்மை இம்ப்ரூவ் செய்வதிலும் ஒரு டைம் லிமிட் இருக்க வேண்டும். அந்த டைம் லிமிட்டிற்குள் அந்த வேலைகளைச் செய்து முடிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் அறிக்கையில், 1954-ல் எடுத்த ஸ்டாடிஸ்டிக்ஸ்படி 57,346 ஸ்லம்ஸ் இருப்பதாகவும், அதில் குடியிருப்பவர்களின் எண்ணிக்கை 265,000 மக்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்று 86,000 குடும்பங்கள் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மொத்த ஜனத்தொகையில் ¼ பங்கு ஸ்லம்ஸில் இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கை பயங்கரமானதாக இருக்கிறது. அங்கு எல்லாவிதத் தொத்து நோய்களும் சீக்கிரம் பரவுகிறது. காரணம் அங்கு தண்ணீர் வசதி இல்லை, சாக்கடை வசதியில்லை, ஆகவே நான் மீண்டும் கூறுகிறேன், ஒரு டைம் லிமிட் பிக்ஸ் செய்து இந்த ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட் ஸ்கீமை முடிக்க வேண்டும். இந்த ஸ்லம்களை திரும்ப வர விட்டால் அதனால் மக்களுக்கு அதிகப்படியான தீமை ஏற்படும்.

இரண்டாவதாக, ஸ்லம்ஸ் ஒழிப்பை நாம் மேற்கொண்டாலும் கூட, திரும்ப பல ஸ்லம்ஸ் அங்கேயே வருவதைப் பார்த்திருக்கிறோம். இந்தத் தேதியிலிருந்து ஒரு ஸ்லம்மும் வர விடாதபடி தகுந்த ஒரு சட்டத்தை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது ஜார்ஜ் டவுனில் இருந்த சில ஸ்லம்ஸ் அருகாமையில் உள்ள வேறு இடத்திற்கு மாற்றப்பட்டன. அந்த இடத்தில் 15-20 நாட்கள் இருந்து விட்டு, அந்த இடத்தை வாடகைக்கு விட்டு விட்டு அவர்கள் இருந்த இடத்திற்கே வந்து விட்டார்கள். அம்மாதிரி ஏற்படாத வண்ணம் அரசாங்கம் கண்காணிப்பாகப் பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எங்கே அவர்களுக்கு இடத்தை ஏற்படுத்துகிறோமோ அங்கு அவர்களுக்கு உண்டான வசதிகளை ஏற்படுத்த வேண்டும். முக்கிய வசதிகளான தண்ணீர் வசதி, சானிடேஷன் வசதி, லைட் வசதி எல்லாம் ஏற்படுத்தி, குடியேற மனைகளும் கட்டிக் கொடுத்தால் அவர்கள் அவசியம் அங்கேயிருந்தால் வராமல் இருக்கக்கூடிய மன நிலை ஏற்படும். அப்படி இல்லாமல் அங்கே கொண்டு போய் விட்டு விட்டு எந்த விதமான வசதியும் ஏற்படுத்தாமல் இருந்தால், அவசியம் அங்கு இருப்பதில் சங்கடங்கள் ஏற்படும். அவர்கள் அங்கு இருக்க மாட்டார்கள். பழையபடி அவர்கள் இருந்த இடத்திற்கு வருவதற்கான மன நிலை தான் ஏற்படும். முக்கியமாகச் சென்னையில் இப்போது பலபெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதனால் மக்கள் இங்கே வருகிறார்கள். அப்படி அவர்கள் வந்து வேலை இருந்தாலும் இல்லாவிட்டாலும் இதை விட்டுப் போவதற்கு அவர்களுக்கு மனது வருவதில்லை. அப்போது ஸ்லம்ஸ் வருவதை இன்று நாம் சகஜமாகப் பார்க்கிறோம். இந்த மாதிரி நிலைமைகள் வராமல் இருக்க வேண்டும், அவைகளைத் தடுக்க வேண்டும் என்று கூறி எனது உரையை முடித்துக்கொள்கிறேன். இந்த மான்யத்தையும் ஆதரிக்கிறேன்.



*திரு. வி. எல்லம நாயுடு: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று நகராட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்த மான்யக கோரிகையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நல்ல முறையிலே நகரங்களும், கிராமங்களும் அமைய வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த மான்யத்தைக் கொண்டு வந்திருக்கிறார் அமைச்சர் அவர்கள். பஞ்சாயத்து யூனியன்களுக்கு, ஜில்லா போர்டுகளுக்கு இருந்த ரோடுகளையும் மற்ற வேலைகளையும் நாம் மாற்றிக் கொடுத்திருக்கிறோம். நபர் ஒன்றுக்கு 40 புதுக் காசுகள் விதம் ரோடுகள் அமைப்பதற்குக் கொடுக்கப்படுகிறது. பல யூனியன்களிலே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ரோடுகளுக்கும் செலவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகைக்கும் சம்பந்தமே இருப்பதில்லை. காரணம் 40-50 மைல் ரோடுகளை அவர்களுக்குக் கொடுத்து விட்டு, 10,000 ரூபாய் அல்லது 20,000 ரூபாய் அளவுக்குத் தொகை கொடுத்து அந்த ரோடுகளைப் பழுது பார்க்கச் சொல்லுகிறோம். குறிப்பாக எனது தொகுதியில் தொண்டாமுத்தூர் பஞ்சாயத்து யூனியன் பிரதேசத்தில் 30 மைலுக்கு மேலாக ரோடுகளை அந்த யூனியனுக்குக் கொடுத்திருக்கிறோம். ஆனால் அதற்கு வழங்கப்படும் மான்யம் சுமார் 24,000 ரூபாய். இதை வைத்துக்கொண்டு மாவட்டக் குழுவினால் பழுது பார்க்கப்பட்டு வந்த ரோடுகளைப் பழுது பார்க்க வேண்டும். புதிதாக கிராமங்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும். அதை வைத்துக்கொண்டு பார்க்கும்போது இந்தத் தொகை போதாது. ஜில்லா போர்டு இருந்த காலத்தில் ஜில்லா போர்டில் பல பெரிய சந்தைகள் இருந்தன. இந்தச் சந்தைகள் யூனியன்களுக்கு இப்போது மாற்றப்பட்டு விட்டன. அப்படி மாற்றப்பட்டுவிட்ட காரணத்தினால் பல பஞ்சாயத்து யூனியன்களுக்கு நிதி வசதிக் குறைவு ஏற்பட்டிருக்கின்றது அப்படிப்பட்ட யூனியன்களுக்கு 40 நயா பைசா என்று இருப்பதை ஒரு அளவுக்காவது அதிகப்படுத்தி பஞ்சாயத்து யூனியன்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாயத்து யூனியனுக்கு ஆகும் செலவில் 75 சதவீதம் மான்யமாகக் கொடுப்பது நலம். மேலும் பஞ்சாயத்து யூனியன்கள் ஜில்லா போர்டுகள் நிர்வகித்து வந்த ரோடுகளை மாத்திரம் தான் பழுது பார்க்கின்றது. இது மிகவும் கஷ்டமான நிலைமை. நிதி வசதி குறைவாக இருக்கிற இடங்களில் கஷ்டமாக இருக்கிறது. ஐந்து மைல், 10 மைல் தூர ரோடுகளை கிராமப் பஞ்சாயத்துக்களைப் பழுது பார்க்கும்படி சொன்னாலுமே அவர்களால் செய்ய முடியவில்லை. அவைகளைக் கூட பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைத்து செய்யச் சொல்வது நலமாக இருக்கும். தொண்டாமுத்தூர் பஞ்சாயத்து யூனியனில் இன்னும் ஒன்று. அங்கு ஜில்லா போர்டு ரோடாக இருந்தது வெள்ளியங்கிரி மலைச் சாரலுக்குப் போகும் ரோடு. அது சிறந்த சிவ ஸ்தலம். ஆண்டு தோறும் லட்சக்கணக்கான மக்கள் அங்கே வருகிறார்கள். அதிலே 3 மைல் தூரத்திற்கு ரோடே இல்லை. பாதை இருக்கக்கூடிய இடம் கூட நடு நடுவில் பட்டா பூமியாக இருக்கிறது. அவ்வளவு பெரிய ஸ்தலத்திற்குச் சென்று வரும் மக்களுக்குப் போக்குவரத்து வசதி

இம்முறையைத் திருத்தியமைக்க எல்லாவற்றையும் ஒரு சமமாக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று அரசினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நகரசபைகளில் பெண்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் அதிகப்படியான ஸ்தானங்கள் ஒதுக்கப்படவேண்டும். திருவண்ணாமலையில் 12 ஆண்டு காலமாக மூன்று பெண்கள் அங்கம் வகிக்கும் நிலையைச் செய்திருக்கிறோம். மூன்றில் ஒரு பங்காவது பெண் அங்கத்தினர்கள் இருக்க வேண்டும். ஹரிஜனங்களை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு ஒதுக்கியிருக்கும் ஸ்தானம் குறைவாக இருக்கிறது. திருவண்ணாமலையைப் பொறுத்த வரையில் அவர்கள் 9,000 பேர்கள் இருக்கிறார்கள். ஜனத்தொகை எவ்வளவு இருக்கிறதோ அதில் அவர்களுக்குள்ள விகிதாசாரமாவது ஒதுக்கப்படுதல் வேண்டும். இப்படி பல நன்மைகள் செய்ய முடியாத அளவிற்கு திருவண்ணாமலை நகரசபை இருந்து வருகிறது. சென்ற ஆண்டு திருவண்ணாமலை நகரசபை பட்ஜெட்டில் 90,000 ரூபாயாக இருந்தது, இந்த ஆண்டு 1 லட்சம் துண்டு விழுந்திருக்கிறது. இதை எப்படிச் சரிக்கட்டுவது என்று தெரியாத நிலை இருக்கிறது. அங்குள்ள கமிஷனர் நன்கு முயன்று எவ்வளவுதான் பணவசதிக்கு ஏற்பாடு செய்து கொடுத்தாலும் அதைச் செய்ய முடியாத நிலையில் தடுத்து வருகிறார்கள். சமீபத்தில் கூட நகரசபை மார்க்கட்டுக்கு சம்பந்தப்பட்ட நாலைந்து இடங்கள் காலியாக இருந்தது. அதை ஏலத்தில் விட்டால் நல்ல வாடகை வரும் என்று சொல்லி ஏலத்திற்கு விட வேண்டுமென்று கவுன்சில் தீர்மானம் செய்யப்பட்டது. ஆனால் நகரசபை மீண்டும் தீர்மானம் போட்டு வாடகைக்கு ஏலத்தில்விட வேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்ட சில நபர்களுக்கே வாடகைக்கு விடத் தீர்மானம் செய்து விட்டார்கள். ஆகவே அரசாங்கம் நகரசபைகளுக்கு நல்ல வருவாய் வருமளவிற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து சர்க்கார் அலுவலகங்கள் இருக்கக்கூடிய கட்டடங்கள், கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குள்ள கட்டடங்கள் இவற்றிற்குள்ள வாடகையின் அளவிற்குள்ள வரியை வசூலிப்பது கிடையாது. கமிஷனர் உத்தரவு போட்டும் கூட அவர்கள் ஒத்துக்கொண்ட வாடகைக்கு அப்பீல் கமிட்டியின் முடிவு படி குறைவாகவே வரி வசூல் செய்யப்படுகிறது. இதுபற்றி ஆடிட்டில் ஆட்சேபணை வருகிறது. ஆனால் அதைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம் என்று தள்ளி வைத்து விடுகிறார்கள். நன்கு தெரிந்துதான் அங்குள்ள குறைகளைப் பற்றி விளக்கிக் கூறுகிறேன் . . . .

* திரு. க. சே. கு. ஹாஜா ஷரீப்: கனம் உதவி சபாநாயகர்
a.m. அவர்களே, அமைச்சர் ஜனாப் மஜீத் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நகர்ப்புறங்களிலும், கிராமங்களிலும் ரோடுகள் போடுவதற்கும், பாலங்கள் கட்டுவதற்கும், ஸ்லம் இம்ப்ரூவ்மெண்ட் வசதிகள் செய்வதற்கும் சுமார் 2 கோடி 28 லட்சம் ரூபாய் கோரப்பட்டிருக்கிறது. அதற்குத் தகுந்த ஸ்கீம்களை அமைச்சர் அவர்கள் அவர்களது உரையில் கொடுத்





திருக்கிறார்கள். இது மிகவும் வரவேற்கத்தக்கது. திட்டங்களைக் கொடுத்திருந்தாலும் அந்தத் திட்டங்கள் சரிவர அமுல் படுத்தப்பட வேண்டும். அதனால் மக்கள் பலன் அடைய வேண்டும் என்ற முறையில் அரசாங்கம் திட்டங்களை கைக்கொள்ள வேண்டும். அவைகள் நல்லவிதமாக சூபர்விஷனும் நடைபெற செய்ய வேண்டும். இன்று சென்னை நகரை எடுத்துக் கொண்டால் ரோடு வசதிக்காக கார்ப்பரேஷனுக்கு ஆண்டுதோறும் பெரும் தொகை கொடுத்து வருகிறோம். அத் தொகை நல்லமுறையில் செலவு செய்யப்படுகிறதா, அதன்மூலம் ரோடுகள் அதி சீக்கிரத்தில் போடப்படுகிறதா என்பதை அரசாங்கம் கண்ணுங்கருத்துமாகக் கவனிக்க வேண்டும். இப்போது ரிப்பேருக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் ரோடுகளில் விரைவாக ரிப்பேர் ஆகி வருவதைக் கண்டு நாம் சந்தோஷமடையலாம். அதேபோல் இன்னும் உள்ள ரோடுகளையும் அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எல்லா ரோடுகளையும் முதலில் தோண்டி விட்டால் அவற்றை ரிப்பேர் செய்ய காலதாமதம் ஏற்படுகிறது. போக்குவரத்து அதிகம் ஏற்படுவதால் புழுதியால் மக்களுக்கு அதிகக் கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, கார்ப்பரேஷன் எடுத்துக்கொண்டிருக்கும் வேலையைத் துரிதமாகச் செய்து முடிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக சென்னையில் பிரிட்ஜஸ் கட்ட நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஹைக்கோர்ட்டுக்கு அருகில் உள்ள லெவல் கிராசிங்கில் ஒரு பிரிட்ஜ் வருகிறது என்று ஆறு ஆண்டுகளாகச் சொல்கிறார்களே தவிர இதுவரை அது வந்தபாடில்லை. ஏன் இவ்வளவு காலதாமதமாகிறது என்று எனக்கே தெரியவில்லை. இதுபற்றி சேம்பர் ஆப் காமர்ஸும், மற்றவர்களும் அரசாங்கத்தினிடம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நானும் இதே மன்றத்தில் ஹைக்கோர்ட் பக்கத்தில் உள்ள அந்த லெவல் கிராஸிங்கில் ஒரு பாலம் கட்டவேண்டுமென்று பல முறை வற்புறுத்தியிருக்கிறேன். அங்கு ஒரு பாலம் இல்லாததால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அங்கு மூன்று நான்கு பெரிய ஆபீஸ்கள் வந்து விட்டன. ரிசர்வ் பாங்க் பில்டிங்க்ஸ், போர்ட் டிரஸ்ட் அட்மினிஸ்ரேட்டிவ் ஆபீஸ், ஸீமென்ஸ் ஹாஸ்டல் போன்றவைகள் எல்லாம் அங்கிருக்கின்றன. அதனால் போக்குவரத்து அதிகப்பட்டிருக்கிறது. அப்படி போக்குவரத்து அதிகமாகியிருப்பதால் அங்கு ஒரு பாலம் இன்றி மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அப் பாலத்தை விரைவில் கட்டி முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஸ்லம் இம்ப்ரூவ்மென்ட்டுக்காக அதிகத் தொகை ஒதுக்கி ஸ்கீம்ஸ்-ம் கொடுத்திருக்கிறார்கள். அந்த வேலையை இப்போது ஹௌசிங் போர்ட்டுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் நல்லவிதமாக வேலை செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஹௌசிங் போர்ட் வேலைகளைத் துரிதமாகச் செய்து வருவதைக் கண்டு நாம் மகிழ்சி அடைய வேண்டும். ஸ்லம்ஸ் இம்ப்ரூவ் செய்வதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. ஒரு ஸ்லம்மை அப்புறப்படுத்த நினைத்தால் அதில் பல கட்சிகளுக்குள் பல அபிப்பிராயபேதங்கள் வருவதால் அவ் வேலைகள் தடைபடுகிறது.

குறைவாக இருப்பதால் செல்லுவதற்குக் கடினமாக இருக்கிறது. மூன்று மைல்களுக்கு இப்பால் பஸ் போக்குவரத்து நின்று விடுகிறது. மூன்று மைல்கள் கட்டை வண்டியிலும் அல்லது கால் நடையாகச் சென்று வரவேண்டிய நிலை இருக்கிறது. அதை உடனடியாக அரசாங்கம் கவனித்து யூனியனின் சார்பாகவோ அல்லது நமது போக்குவரத்து நெடுஞ்சாலை இலாகா சார்பாகவோ எடுத்துச் சீக்கிரமாகச் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, குடி தண்ணீர் வசதி. பெரிய நகரங்களுக்கும், நகரப் பஞ்சாயத்துகளுக்கும் இந்த ஆண்டு குடிதண்ணீர் வசதியை விஸ்தரிப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியுள்ளார்கள். அப்படி விஸ்தரிக்கும்போது பெரிய பஞ்சாயத்து என்று இருப்பதிலே, கிராமப் பஞ்சாயத்துக்களும் கூட ஒன்றிரண்டு இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் தெலுங்க பாளையம் என்ற கிராமத்தில் 15,000 ஜனத் தொகை இருக்கிறது. அங்கே என்ஜினியரிங் கல்லூரி, விவசாயக் கல்லூரி, கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை எல்லாம் இருக்கின்றன. அப்படி இருந்தும் அங்கே எந்த விதமான சுகாதார வசதியும் ஏற்படவில்லை. இந்த ஆண்டு வால்பாறை, மற்றும் சில பஞ்சாயத்துக்கள் அல்லது பெரிய கிராமங்களை டவுன்ஷிப்பாக மாற்றியது போல தெலுங்க பாளையம் கிராமத்தை டவுன்ஷிப்பாக அமைத்து நல்ல முறையில் சுகாதாரம், போக்குவரத்து, குடி தண்ணீர் ஆகிய வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு வரும் ஆண்டில் தெலுங்கபாளையம் கிராமத்தை டவுன்ஷிப்பாக மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நகரப்புறங்களில் பாலம் கட்டுகிறார்கள். கோவை நகரத்தில் அவனாசி ரோடு, பவர் ஹவுஸ் ரோடு மிகவும் ஜன நெருக்கமான போக்குவரத்து ரோடுகள், அவனாசி ரோடுக்கு லெவல் கிராஸிங்கிலே ஒரு மேம்பாலம் கட்ட வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதைப் பற்றி நகராட்சியும் அரசாங்கமும் யோசித்துக் கொண்டே இருக்கிறது. அங்கு இருக்கக் கூடிய பெரிய இடஞ்சலை போக்குவதற்கு அவனாசி ரோடுக்கு ஒரு மேம்பாலத்தை உடனடியாக அமைப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு தொண்டாமுத்தூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த பேரூர்செட்டிப்பாளையம், தீத்திபாளையம், மாதம்பட்டி, பூலுவப்பட்டி ஆகிய கிராமங்களை இணைக்கும் ஆறுமுக கவுண்டனூரிலிருந்து நாத கவுண்டன்புதூர் வரை உள்ள ரோடு மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அவைகளை பஞ்சாயத்து யூனியன் எடுத்துக் கொண்டு செய்யவேண்டும். அந்த ரோடு 4 பஞ்சாயத்துக்களைச் சேர்ப்பதாக இருக்கிறது. அந்த 4 பஞ்சாயத்துக்களுள் எந்த பஞ்சாயத்தும் அந்த வேலையைச் செய்யவில்லை. அதையும் யூனியனே எடுத்துக் கொண்டு அரசாங்க மான்யத்தைப் பெற்று அந்த வேலையை உடனடியாகச் செய்து முடிக்கவேண்டுமென்று உங்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.



அதே போல, குடி தண்ணீர் வசதியும்; நகரத்திற்கு மாத்திரம் குடி நீர் வசதி, சாக்கடை வசதி செய்து கொடுக்கப்படுகிறது. கோவையைச் சுற்றி உப்பிலிபாளையம், சிங்காநல்லூர், குறிச்சி, குனியமுத்தூர், தெலுங்கபாளையம் போன்ற கிராமங்களில் சுகாதார வசதிகளும் குடி நீர் வசதிகளும் இல்லாமல் மக்கள் கஷ்டப் படுகிறார்கள். கோவைக்குக் குடி நீர் வசதி செய்து கொடுப்பது போல அவர்களுக்கும் குடி நீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து எனது உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

**திரு. செ. கோ. விஸ்வநாதன் :** கனம் தலைவர் அவர்களே, கனம் நகராட்சி மன்றத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மான்யக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக பஞ்சாயத்து யூனியன்களுக்கு அளிக்கப்படுகிற பண உதவிகளும் கடன் உதவிகளும் நகர சபைகளைப் பொறுத்த வரையில் அளிக்கப்படவில்லை என்பது தான் என்னுடைய குறை. குறிப்பாக அரசாங்கம் கிராமப் புறங்களில் வளர்ச்சியை எந்த அளவுக்கு ஏற்படுத்துகிறதோ, நகரங்களும் அதே அளவுக்கு வளர வேண்டுமென்று ஆட்சியாளருக்குக் கவனம் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, கடன்களையும் மான்யங்களையும் ஓரளவுக்கு நகராட்சிகளுக்கு அளிப்பதன் மூலம் நகரங்களும் வளர்ச்சி பெறும், வளம் பெறும் என்று நான் நினைக்கிறேன்.

குறிப்பாக நகர சபைகளினுடைய வளர்ச்சியைக் குறித்து நகர சபைத் தலைவர்கள் அடங்கிய குழுவிலேகூட அமைச்சர் அவர்களை நேரிலேயே வைத்துக்கொண்டு பல யோசனைகளையும் தெரிவித்திருக்கிறார்கள். 'இன்னென்ன அதிகாரங்கள் எங்களுக்குத் தேவை, இன்னென்ன அதிகாரங்களை எங்களுக்கு அளிப்பதன் மூலம் நாங்கள் விரிவாக நகரசபைகளின் வளர்ச்சிக்குப் பாடுபட முடியும்' என்றெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். பல வருடங்களாக அந்தக் கோரிக்கைகளை அமைச்சர் அவர்களுடைய முன்னிலையில் எடுத்துத் தெரிவித்திருந்தபோதிலும், இதுவரையில் நகர சபை அதிகாரங்கள் பரவலாகக் கூடுவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ளும் அளவுக்குச் சர்க்கார் முன்வரவில்லை. குறிப்பாக, ஆணையாளர்கள் தங்களுடைய நகரசபை எல்லையில் இருக்கிற கல்வி நிலையங்களையும், சுகாதார நிலையங்களையும், மற்றும் வீட்டு வரி வசூல் போன்ற வேலைகளையும் கவனிக்க வேண்டிய நிலைமையிலே இருக்கிறார்கள். மூன்றாந்தர முனிசிபாலிடி என்று சொல்லப்படுகிற நகரசபைகளிலே ஹெல்த் ஆபீசர்கள் இல்லாத காரணத்தினால், அங்கு இருக்கிற சானிடரி இன்ஸ்பெக்டர்களையே ஹெல்த் ஆபீஸர் ராங்குக்குக் கொண்டுவந்து அவர்கள் சுகாதாரப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்ற புதிய உத்தரவுகூட வந்திருப்பதாக எனக்குத் தெரியவருகிறது. அந்த அளவுக்கு வருகிற நேரத்தில் சுகாதாரப் பணி செம்மையாக நடைபெற வேண்டுமென்றால், ஓய்வு பெற்ற வைத்தியப் படிப்புப் படித்த அதிகாரிகளைக் கொண்டு அந்தப் பதவிகளை

பூர்த்தி செய்யலாம் என்று நான் கருதுகிறேன். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், சுகாதார வைத்திய வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றால் ஓரளவுக்கு அந்தத் துறையில் திறமையுள்ளவர்களைக் கொண்டுதான் அந்தத் துறையின் நிர்வாகத்தை செம்மையாக நடத்த முடியும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, ஓய்வு பெறுபவர்களின் வயது உச்ச வரம்பை ஓரளவிற்கு உயர்த்துவதன் மூலம் அதிகமாக ஓய்வு பெறும் அதிகாரிகளை சுகாதாரத் துறையிலுள்ள பதவிகளுக்கு நியமிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நகரசபைகள் இப்பொழுது மூன்று தரங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன. முதல் தரம், இரண்டாவது தரம், மூன்றாவது தரம் என்று மக்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்தும், அந்தந்தப் பகுதியிலே வரக்கூடிய வருமானத்தைக் கொண்டும் பிரிக்கப்படுகிறது. குறிப்பாக, ஒரு சில ஆயிரங்கள் வித்தியாசம் காரணமாக, நகர சபையின் தரம் குறைக்கப்படுகிறது. அதனால் அரசாங்கம் கொடுக்கும் உதவித் தொகையும் குறைந்துவிடுகிறது. வளர்ந்து வரக்கூடிய நகரசபைகளிடையே இம்மாதிரி ஏற்றத் தாழ்வுகள் இருப்பதற்கு இடம் கொடுக்கக் கூடாது. நகர சபைகளை இரண்டு தரமாகப் பிரித்து, அதாவது முதல் தரம், இரண்டாம் தரம் என்று பிரித்து, நடுவிலே இருக்கிற ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து, அரசாங்கம் அவைகளுக்கு அதிகமான உதவித் தொகை அளிப்பதன் மூலம் நல்ல திட்டங்களை நகரசபைகள் நிறைவேற்ற முடியும் என்று நான் கருதுகிறேன்.

நகரசபைகள் இப்பொழுது நிச்சயம் நிறைவேற்ற வேண்டிய கட்டத்தில் இருக்கிற குடிதண்ணீர் பிரச்னையும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தையும் மொத்தமாக வைத்துப் பார்த்து, குடிதண்ணீர் திட்டத்தை எந்த நகரசபைகள் நிச்சயம் நிறைவேற்ற முடியுமோ அந்த நகரசபைகளுக்கு முழுத் தொகையையும் அரசாங்கம் கடனாக கொடுத்து அல்லது நீண்ட காலக் கடன் அளிப்பதில் ஓரளவுக்குச் சலுகை அளிப்பதின் மூலம் குடிதண்ணீர் பிரச்னையைத் தீர்க்கலாம். பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று என்னுடைய நகரசபையிலிருந்து அரசினருக்கு வேண்டுகோள் விடுத்து, அதற்காகக் கடன் தொகையையும் அளிக்க வேண்டுமென்று கேட்டிருந்தோம். 'உங்கள் நகரசபைக்குப் போதுமான வருமானம் இல்லை, உங்களுக்குக் கடனைத் திருப்பித் தருவதற்குச் சக்தி இல்லாத காரணத்தினால் அந்தத் திட்டத்தை நாங்கள் ஏற்றுக் கொள்வதற்கில்லை' என்று எங்கள் யோசனையைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். நகர சபைகளில் சுகாதாரம் செம்மையான முறையில் இருக்க வேண்டுமென்றால், இம்மாதிரித் திட்டங்களுக்கான தொகை முழுவதையும் அரசாங்கம் நகர சபைகளுக்குக் கடனாக அளிப்பதில் அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நகரசபைகளுக்கு ஒரு புதிய பொறுப்பையும் கொடுத்திருக்கிறார்கள். நகரசபைகள் பிச்சைக்கார விடுதிகளை ஏற்று நடத்த வேண்டியிருக்கிறது. ஏறக்குறைய ரூ. 20,000 செலவு



செய்து புதிய கட்டிடம் கட்டப்பட்டிருந்தாலும் 2, 3 பிச்சைக்காரர்கள்தான் இருக்கிறார்கள். ஏறக்குறைய ரூ. 10,000, 15,000 செலவு செய்துகொண்டு பிச்சைக்காரர்களுக்கான விடுதிகளை நடத்தவேண்டிய பொறுப்பு நகரசபைகளுக்கு இருக்கிறது. பிச்சைக்காரர்களுக்கான விடுதிகளை ஏற்று நடத்துவது என்பது கொள்கை அளவில் வரவேற்கத்தக்கது என்றாலும், இந்த நிலைமையிலே அவைகளை ஏற்று நடத்துவதில் லாபம் உண்டா என்று பார்த்தால், எந்தவிதமான லாபமும் இல்லை. அதற்காக ஒதுக்கப்பட்ட தொகையையும், செலவு செய்யப்பட்ட பணமும் வீணாகப் போகிறது என்று நான் கருதுகிறேன். அப்படி இந்த விடுதிகளில் அடைக்கப்பட்ட பிச்சைக்காரர்கள் தகுந்த பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் ஓடிவிடுகிறார்கள். இதனால் அங்கிருக்கும் கமிஷனருக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இப்பேர்ப்பட்ட அனாவசியமான பொறுப்புகளை நகரசபைகளிடம் கொடுக்க வேண்டாமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சாக்கடைக் கழிவு நீரைக் கொண்டு புல் வளர்க்கும் திட்டத்தை ஆட்சியாளர் அறிமுகப்படுத்தி வருகிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குக் கடன் தொகையைக் கொடுக்க ஆட்சியாளர் முன்வந்தாலும், இதற்காகத் தனிப்பட்டவர்களுடைய நிலத்தைப் பெறுவதில் சில சங்கடங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆட்சியாளர் தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி, புல் வளர்ச்சித் திட்டம் நல்ல முறையில் நிறைவேறுவதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகரசுத்திச் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பது பல ஆண்டுகளாகச் சர்க்கார் கொள்கையாக இருந்தாலும், காஞ்சிபுரத்தில் 12 வீடுகள்தான் கட்டிக்கொடுக்கப் பட்டிருக்கிறது. மற்ற பகுதிகளில் இருக்கிற தொழிலாளர்களுக்கு 10 சதவிகிதத்தினருக்குக்கூட வீடுகள் கட்டிக் கொடுக்காத நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. மத்திய சர்க்கார் உதவி கொண்டு ஓரளவுக்கு இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று கருதுகிறேன். நகரச்சுத்தித் தொழிலாளர்களின் அமைப்பைப் பரிசீலனை செய்ய கமிட்டி வந்தபொழுது 'நாங்கள் சிபார்சு செய்திருக்கிறோம். அதற்காகத் தொகை அளிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள்தான் செலவு செய்யவில்லை' என்று அவர்கள் சொல்லி விட்டுப் போனார்கள். அது எந்த அளவிற்கு உண்மை என்பதை அமைச்சர் அவர்கள் கவனித்து, நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தை துரிதப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டு நகரசபையில் ஒரு பஸ் நிலையம் இல்லாத குறை நீண்ட காலமாக இருந்துகொண்டு வருகிறது. அங்கே ஒரு புதிய பஸ் நிலையம் அமைப்பதற்கு, நாற்றம் எடுத்து குட்டையை தூர்த்து அங்கே பஸ் நிலையம் அமைப்பதற்குத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அந்தக் குட்டை ரூ. 70,000, ரூ. 80,000 செலவு செய்து தூர்க்

கப்பட்டு இப்பொழுது அங்க பஸ் நிலையம் அமைக்கப்பட வேண்டிய முடிவான கட்டத்தில் இருந்தாலும் பஸ் நிலையம் அமைப்பதற்குத் தடையாக சில கடைகள் இருக்கின்றன. அந்தக் கடைகள் நகரசபைக்குச் சொந்தமான இடத்தில் கட்டப்பட்ட கடைகளாகும். அந்தக் கடைகளை அப்புறப்படுத்துவதற்கு இப்பொழுது இடைஞ்சல் வந்துகொண்டிருக்கிறது. இதற்கு முன்பாக இது பற்றி நகரசபையிலே தீர்மானம் போடப்பட்டு, நடைமுறையிலே அந்தத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று வருகிற நேரத்திலே, புதியதாக மாற்றப்பட்ட தலைவர் காரணமாகவும், அங்கு இருக்கிற அங்கத்தினர்களின் மாற்று எண்ணத்தின் காரணமாகவும், பஸ்கள் வந்து போவதற்கான 'இன் அண்டு அவுட்' பகுதிகளை மாற்றி அமைக்கவேண்டுமென்று பல கருத்துக்கள் பல நேரங்களில் சர்க்காருக்குத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் பஸ் நிலையம் அமைக்கும் வேலைகள் தடைப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, லைசென்ஸ் இல்லாமல் சர்க்கார் இடத்திலே கட்டப்பட்ட கடைகளை அப்புறப்படுத்துவதற்கு தங்களுடைய அதிகாரங்களை பயன்படுத்தி, அந்தத் தடையை நீக்கி பஸ் நிலையத்தை கூடிய சீக்கிரத்தில் அமைத்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிற மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொதுப் பணிக்காக கேட்கிற மான்யத் தொகையிலே அதிகமான தொகை நகராண்மைக் கழகத்திற்குக் கொடுக்கப்படுகிறது என்ற காரணத்தினால், சற்று உரிமையோடு பேச என் போன்ற நகரப் பிரதிநிதிகள் ஆசைப்படுகிறார்கள். நான் பல முறை இங்கே சொல்லியிருக்கிறேன். நகராண்மைக் கழகத்தில் எம். எல். ஏ. 10 பேர்களுக்கு இடம் தர வேண்டும். கனம் அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் புனராலோசனை செய்து நாங்கள் நகர சபை நடவடிக்கைகளில் பங்கு எடுத்துக் கொள்ள இடம் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுது தான் எங்களுடைய தொகுதியில் உள்ள குறைகளை போக்கிக் கொள்ளுவதற்கு, எங்களுக்கு நகராண்மைக் கழகத்தினரோடு தொடர்பு கொள்வதற்கு அதிக வாய்ப்பு ஏற்படும். எங்களுக்கு பதவி தேவையில்லை. வோட்டு உரிமை வேண்டாம், நகராண்மைக் கழக நடவடிக்கைகளில் பங்கு கொள்ளக்கூடிய அளவுக்கு உரிமை கொடுத்தால் போதும். அப்படிச் செய்வது பாராட்டத் தக்கதாக இருக்கும். இதில் கட்சி வேறுபாடு இல்லாமல் அத்தனை பேர்களும் ஒற்றுமையாக இருக்கிறோம். இது தமிழகத்தின் தலை நகரமாகிய சென்னையின் குறை என்பதாக இதை ஏற்று, கனம் அமைச்சர் அவர்கள் இதை உடனடியாகத் தீர்ப்பதற்கு வழிகோலுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னை நகரத்திலுள்ள முக்கியமான சாலைகள் நன்றாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். வெளி நாடுகளிலிருந்து பலர் சென்னை நகரத்திற்கு





ஓடி, ஓடி வருகிறார்கள். வெளிநாட்டிலிருந்து வருகிறவர்களுக்கு தமிழகத்தைப்பற்றி ஒரு நல்லெண்ணம் பிறக்க வேண்டுமென்றால், அது சென்னையின் சீரமைப்பைச் சார்ந்துதான் இருக்கிறதே ஒழிய, வேறு முறையில் அல்ல . . . அவர்கள் வருகிற வழியை மாத்திரம் செம்மையாக வைத்துக் கொண்டு, பிற இடங்களை பராமரிக்காமல் இருக்க வேண்டுமென்று நான் கூறத் தயாராக இல்லை. இருப்பினும், கொடுக்கிற தொகை ஒழுங்காகச் செலவழிக்கப்படுகிறதா, காலா காலத்தில் செலவழிக்கப்படுகிறதா என்பதை அரசாங்கம் இன்னும் சற்று அக்கறையோடு கண்காணிக்க வேண்டும் என்று சமர்ப்பித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். முன்பு இங்கிலாந்து ராணி எலிஸபெத் இங்கே வந்தபொழுது அவசரக் கோலத்தை அள்ளித் தெளித்ததுபோல், அவசர அவசரமாக ரோடுகள் போட்டுக் கொண்டிருந்ததை பார்த்தோம். நாம் கொடுத்த மானியத்தை வைத்துக்கொண்டு, 10 மாதங்களாகியும் எந்த வேலையையும் எடுக்காமல், பின்னர் அவசரம் அவசரமாக வேலையைச் செய்கின்ற காரணத்தினால், கொடுக்கின்ற மானியத் தொகையைக் காலா காலத்தில் செலவழிக்கிறார்களா என்பதைக் கண்காணிப்பது மிகமிக அவசியம். 1-00 p.m.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஆன் எ. பாயின்ட் ஆப் ஆர்டர், ஸார்.

**Mr. DEPUTY SPEAKER :** The hon. Member is not yielding.

**திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உறுப்பினர் அவர்கள் பேசும் பொழுது, நெடுஞ்சாலைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணம் சரியாகச் செலவழிக்கப் படவில்லை என்றும், எலிசபெத் ராணி வந்த பொழுது, அவசரம் அவசரமாகச் சாலை போடப்பட்டது என்றும் தெரிவித்தார்கள். அரசாங்கத்தின் அனுமதி பெற்றுத்தான், பூந்தமல்லி நெடுஞ்சாலையும், மவுண்ட் ரோடும் . . . .

**Mr. DEPUTY SPEAKER :** It is not a point of order.

**திரு. கே. ஏ. மதியழகன் :** I am eliciting information on a point under Rule 65 of our Assembly Rules, Sir. சர்க்காருடைய அனுமதி பெற்று சீஃப் என்சீனியருக்கு அனுப்பித்து, ரிவைஸ்டு எஸ்டிமேட் போடப்பட்டு, எலிஸபெத் ராணிக்காகச் சாலை போடவேண்டுமென்று சர்க்காரால், உத்தரவு போடப்பட்டதே தவிர, நகர சபையாகச் செய்யவில்லை.

**Mr. DEPUTY SPEAKER :** That is not a point of order. The hon. Lady Member Srimathi T. N. Anandanayaki may continue.

**திருமதி டி. என். அனந்தநாயகி :** கனம் அங்கத்தினர் போன சட்டசபையில் இங்கே இல்லாததினால் இப்படிப் பேசுகிறார்கள். கொடுத்த மானியத்தை வைத்துக்கொண்டு, 10 மாதங்கள் ஆகியும் காலாகாலத்தில் இந்த வேலை செய்யப்படவில்லை என்று கனம் அமைச்சர் அவர்களே பதில் சொல்லக்கூடிய அளவுக்கு இங்கு

விவாதம் எழுப்பப்பட்டது. அவசரப்பட்டு நான் ஒன்றும் சொல்லவில்லை. கால தாமதம் ஏற்பட்டது ஏன் என்றுதான் கேட்கிறேன். அரசாங்கத்தின் 'கன்கரன்ஸ்' இருக்கலாம். கால தாமத்திற்கு ஏன் வழி இருந்தது என்பதை, நகரசபை நடவடிக்கைகளைப் பார்த்தாலே புரிந்துவிடும். ஆகவே ரோடுகளுக்காகக் கொடுக்கப்படுகிற மான்யம் காலா காலத்தில் செலவழிக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பது அவசியம்.

இதற்கு ஒரு நல்ல யோசனை சொல்ல விரும்புகிறேன். பூந்தமல்லி ஹைரோடுக்கும், மவுண்ட் ரோடுக்குமாக, நாம் கார்ப்பொரேஷனுக்கு ரூ. 15 லட்சம் கடனாகவும் ரூபாய் 15 லட்சம் மானியமாகவும் கொடுத்து வருகிறோம். இவ்வாறு ரூபாய் 30 லட்சம் கொடுத்து அவர்கள் அதை நல்ல முறையில் செலவழிக்கின்றார்களா என்று பார்ப்பதைக் காட்டிலும் இந்தப் பூந்தமல்லி ரோடையும், மவுண்ட் ரோடையும் அரசாங்கமே மராமத்து இலாகாவின் பொறுப்பில் வைத்துக் கொண்டு, குறைந்த செலவிலே இதைக் காட்டிலும் சீராக வைத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நெடுஞ்சாலைகளைப் பொறுத்த வரையில் அவற்றின் பராமரிப்பை அரசாங்கமே ஏற்றுக்கொண்டால், சாலச் சிறந்ததாகும். இப்பொழுது வால்டாக்ஸ் ரோடு அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்கிறது என்று நினைக்கிறேன். இந்த நெடுஞ்சாலைகளை எல்லாம் அரசாங்கமே நேரடிப் பொறுப்பில் எடுத்துக் கொண்டால், இப்படிக் கடனாகவும், மான்யமாகவும் கொடுத்து அவதிப்படாமல், நல்ல முறையில் பராமரிக்க முடியும். அதே நேரத்தில் கார்ப்பொரேஷன் வேறு ரோடுகளைப் போடுவதில் அக்கறை காட்டுவார்கள். இப்பொழுது எப்பொழுது பார்த்தாலும் மவுண்டு ரோடையும், பூந்தமல்லி ஹைரோடையும் பழுது பார்த்துக் கொண்டிருப்பதால், மற்ற ரோடுகள் எல்லாம் நகரத்தில் இருக்கக்கூடிய ரோடுகளா, அல்லது நரகத்தில் இருக்கக்கூடிய ரோடுகளா என்று சொல்லும் அளவுக்கு இருந்து கொண்டிருக்கின்றன. வெளி நாட்டு மக்கள் சென்னைக்கு வருகிறார்கள், அவர்கள் நகராண்மைக் கழகத்தைக் குறைகூறுவார்களே என்று நினைத்து, எப்பொழுதும் இந்த இரண்டு நெடுஞ்சாலைகளில் மட்டும் அக்கரை காட்டுகிறார்கள். பிற ரோடுகளிலே நகராண்மைக் கழகம் அக்கரை காட்ட வேண்டும் என்றால், பெருஞ்சாலைகளை அரசாங்கம் தனது நேரடிப் பொறுப்பில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதேபோன்று நகராண்மைக் கழகத்தைச் சேர்ந்த இரண்டு பஸ் ஸ்டாண்டுகள் வட சென்னையில் இருக்கின்றன. ஒன்று பூக்கடைக்குப் பின்னால் இருக்கிறது. மற்றொன்று இப்பொழுது திருவொற்றியூர் மேம்பால வேலையை எடுத்துக் கொண்டதால், அங்கு இருந்த பஸ் ஸ்டாண்டு இப்பொழுது வால்டாக்ஸ் ரோட்டில் இருக்கிறது. இந்த மேம்பாலத்தைப் பொறுத்த வரையில், சுவர்க்க வாசல் கதவாவது திறக்கப்படும், ஆனால் மணிக்கணக்காகக் காத்திருந்தாலும் இந்தக் கதவு திறக்கவே படாது. அந்த



அளவுக்கு அங்குள்ள மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த மேம்பால வேலையை எடுத்துக் கொண்டதற்காக, எனது தொகுதி மக்களின் சார்பாக அரசாங்கத்திற்கும், நகராண்மைக் கழகத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்பொழுது வால்டாக்ஸ் ரோடில் இருக்கும் பஸ் ஸ்டாண்டில் எந்த விதமான வசதியும் இல்லாமல் இருக்கிறது. நல்ல விளக்குகள்கூட இல்லாமல், அங்கே ஒரு பெரிய கலவரம் ஏற்பட்டது. அந்த பஸ் ஸ்டாண்டிலே நிற்கக்கூட முடியாது. அந்த இடத்தில் பக்கிங்காம் கால்வாய் வாசனையையும், கூவம் நதியின் வாசனையையும் ஒருங்கே பெறலாம். விளக்கு வசதியும் குறைவாக இருக்கிறது. ஒருவேளை இந்த மேம்பாலம் கட்டி முடிந்தபிறகு இந்த பஸ் ஸ்டான்டை அங்கே கொண்டுபோய் விடலாம், எதற்காக இப்பொழுது செலவு பண்ணவேண்டும் என்று நினைக்கிறார்களோ, என்னமோ தெரியவில்லை. இதைச் சீர்திருத்தி செம்மையாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பூக்கடைக்குப் பின்னால் இருக்கின்ற பஸ் ஸ்டாண்டைப் பார்த்தால், எவ்வளவு சுகாதாரக் குறைவாக இருக்க முடியுமோ, அவ்வளவு கேவலமாக அதை வைத்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் மானியம் கொடுப்பதைக் காட்டிலும், அதை நிறுத்தி விடுவதே மேல் என்று நான் நினைக்கிறேன். குறைந்தபட்ச சுகாதார வசதிகளையாவது செய்து கொடுக்க வேண்டும். அங்கே வருகிற பஸ்களிடமிருந்து கட்டணம் வேறு வாங்குகிறார்கள். கட்டணத்தை உயர்த்திக் கொண்டு போகிறார்களே தவிர, எந்தவிதமான வசதியும் செய்து கொடுப்பதில்லை. இந்த மாதிரி நிலை இருக்குமேயானால் இதையெல்லாம் கண்காணிப்பது மிக மிக அவசியம் என்பதை ஆத்திரத்துடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தின் தலைநகராகிய சென்னையிலே இருக்கிற பஸ் ஸ்டாண்ட் இப்படி இருக்கிறது என்றால், மொபஸிலில் இருக்கிற பஸ் ஸ்டாண்டுகள் எப்படி இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை. அதிக மானியம் பெறுகிற நகராண்மைக் கழகம் இதிலே அக்கறை எடுத்துக் கொண்டு, அந்த பஸ் ஸ்டாண்டை ஒரு சிறந்த பஸ் நிலையமாக மாற்றி அமைப்பது மிக மிகத் தேவை.

சென்னை நகரிலே மூடு சாக்கடை வெட்டிக் கொடுக்கும் வேலை இன்னும் பல இடங்களிலே செய்யப்படவில்லை. குறிப்பாக, நகரத்திலுள்ள ஜெனரல் ஆஸ்பத்திரி மூடு சாக்கடையோடு இணைக்கப்படவில்லை. அங்கிருந்து வரும் கழிவு நீரையெல்லாம் பாக்வாட்டரிலே விட்டுவிடுகிறார்கள். கோட்டைக்கு வருவதற்குள்ளேயே துர்நாற்றம் குடலைப் பிடுங்கி வெளியே கொண்டு வந்துவிடும்போல் இருக்கிறது. பீச் மார்க்கமாக வரும் அமைச்சர்கள் ரூட்டை மாற்றிக்கொண்டு இந்த ரோடு வழியாக வந்தால் இது நன்கு விளங்கும். தனிப்பட்ட நபராக இருந்தால், இதற்குள்ளே நோட்டீஸ் விட்டிருப்பார்கள். அரசாங்கம் நடத்துகிற நகரி இள்ள ஒரு பெரிய ஆஸ்பத்திரிக்கே இந்த வசதி இல்லை. ஒன்று அரசாங்கம் நகராண்மைக்கழகத்தைக் கொண்டு இதைச் செய்யச் சொல்ல வேண்டும், அல்லது நகராண்மைக் கழகம் அரசாங்கத்தின் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும். நானும் சென்ற ஐந்தாண்டு

காலமாக கதறிக் கதறிப் பார்த்துவிட்டேன். இந்த ஆண்டிலாவது கனம் அமைச்சர் அம்மையார் அவர்கள் உடனடியாக இதைக் கவனித்து அவர்களுடைய ஆட்சியிலே ஏதாவது வழிவகை செய்தால், பாதி துர்நாற்றத்தை ஒழிக்க முடியும்.

பக்கிங்ஹாம் கால்வாயையும், கூவத்தையும் செம்மைப்படுத்துவதற்கு என்று ஒரு கமிட்டி போட்டு, ரிப்போர்ட் தயாரிக்கப்பட்டது. அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. கனம் மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் போட்டிலே சென்றதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன். எப்படித்தான் சென்ருர்களோ? சென்ட் போட்டுக்கொண்டு போனுர்களோ ..........

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் நான் பக்கிங்ஹாம் கால்வாயில் ஒரு பகுதியைப் பார்வையிட்டதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மற்ருெரு பகுதிக்குப் போகாமல் வைத்திருக்கிறேன். நகரத்தில் இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் அனைவரும் வருவதற்கு முடிவு செய்தவுடனே, மற்ற பகுதியையும் பார்க்க வேண்டுமென்று நினைக்கிறேன். அதில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்று கனம் அங்கத்தினரைக் கேட்டுக் கொள்ளுகிறேன் (சிரிப்பு).

**திருமதி டி. என். அனந்தநாயகி :** அமைச்சர் அவர்களே இந்த துர்நாற்றத்திற்கு ஆளாகியிருக்கிருர்கள். இதை உடனடியாக செம்மைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால் ஆந்திராவுக்கும் நமக்கும் இருக்கிற போக்குவரத்து வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முடியும். இப்பொழுது எவ்வளவோ உணவுப் பொருள்கள் இந்தக் கால்வாய் மூலம் வருகின்றன. இதை நன்கு செப்பனிட்டால், சென்னை நகரத்திலுள்ளவர்கள் மாலை நேரங்களில் தோணி விட்டுக் கூட விளையாட முடியும். அதன் மூலம் போதிய வருமானம் கிடைக்கும். ஆகவே, மராமத்து அமைச்சர் அவர்களும், சுகாதார அமைச்சர் அவர்களும் இன்னும் போகாத இடத்திற்கெல்லாம் போய், இந்தக் கால்வாயை உடனடியாக சீரமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, ஸ்லம் கிளியரன்ஸ் வேலை ஹவுஸிங் யூனிட்டில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதிலே சில சங்கடங்கள் இருக்கின்றன. குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே உள்ள தோட்டங்களில் பழைய காலத்தில் நிறைய தென்னை மரங்கள் வைத்து கள் இறக்கப்பட்டு, அந்தக் கள் விற்பனை செய்வதற்காக அந்த இடங்கள் பயன்படுத்தப்பட்டதினுல், அந்தத் தோட்டங்கள் அப்படியே இருந்து, ஆயிரக் கணக்கான குடிசைகள் அங்கு வந்து விட்டன. தோட்டத்தின் சொந்தக்காரர்களும் ஆயிரம், இரண்டாயிரம் என்று வருமானம் பெறுகிருர்கள். தங்களுடைய வருமானத்தைத்தான் பெருக்கிக் கொள்கிருர்களே ஒழிய, குடிசை மக்களுக்கு எந்தவிதமான வசதியும் செய்து கொடுக்கவில்லை. ஆகவே தனி நபரிடத்தில் இருக்கக்கூடிய தோப்புகளில் சேரிகள் இருந்தால் அதை சீர்திருத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட தோட்டங்களில், அதிலும் தனியார் தோட்டங்களில் குடிசைகளைப் போட்டுக்கொண்டு வாழ்



கிற இடத்தில் தான் தொத்து வியாதிகள் பரவுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இப்படி பல தோட்டங்கள் இருக்கின்றன. அங்கிருந்து தான் தொத்து வியாதிகள் பரவுகின்றன. அதற்கு இடம் கொடுக்காமல் அந்த இடங்களிலிருந்து குடிசைகளை அப்புறப்படுத்த கார்ப்பொரேஷன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி சொல்ல வேண்டும். அவர்களுக்கு நல்ல முறையில் வேறு இடங்களில் வீடுகளைக் கட்டிக் கொடுத்து அங்கு போகச் சொல்லலாம். தனிநபர் இடங்களில் தான் அதிகப்படியான சேரிகள் ஏற்படுகின்றன. அந்த இடங்களில் எல்லாம் ட்ரெயினேஜ் வசதிகள் கிடையாது. அப்படி சேரிகளை அமைத்துக்கொண்டு வாழ்ந்து வருகிறவர்களுக்கு நல்ல சுகாதார வசதி செய்து கொடுக்க வேண்டும்—அந்தத் தோட்டத்தின் சொந்தக்காரர்கள் அந்தத் தோட்டத்தை விட்டு அவர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளச் சொல்ல வேண்டும். 1956-ம் ஆண்டு திரு. டி.டி.கே. அவர்கள் நாட்டிய கல் இன்னும் அப்படியே தான் இருக்கிறது. எந்தவிதமான கட்டிடமும் இன்னும் அங்கே ஏற்படவில்லை. நாட்டிய கல் அப்படியே அழகாக இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் துரிதமாக கட்டிடங்களைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். சென்னை நகரத்தில் இப்படி சேரிகளை அகற்றி நல்ல முறையில் நகரத்தை உருவாக்க வேண்டும். சென்னை நகரத்தை ஒரு சிங்கார நகரமாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கொடுக்கக்கூடிய பணத்தை நல்ல முறையில் செலவு செய்து சிங்கார நகரமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சென்னை நகரசபை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தைகளை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

***திரு. ஆ. தங்கவேலு :** சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, கனம் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையின் மீது எதிர்க் கட்சி அங்கத்தினர் கொண்டு வந்துள்ள வெட்டுப் பிரேரேபணையை ஆதரித்து சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். நகராட்சிகளில் குடி தண்ணீர் திட்டத்திற்காக அனேக இடங்களில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. குடி தண்ணீர் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நிதியை முழுவதும் கடனைப் பெற்று செய்வதற்கு முடியாமல் பல நகராட்சிகள் கஷ்ட நிலையில் இருந்து கொண்டிருக்கிருர்கள். என்னுடைய பகுதியாகிய திண்டிவனம் மிகவும் வறண்ட பகுதி. அங்கு குடி தண்ணீர் வசதி கிடையாது. குளிப்பதற்கும் தண்ணீர் கிடையாது. இந்தக் குறையை நீக்குவதற்கு மூன்று வருடங்களுக்கு முன்னதாக 17 லட்சம் ரூபாய் முழுவதையும் கடனைப் பெற்று அந்த திட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனல் இந்த மன்றத்திற்கு வரக்கூடிய ஆண்டு வருமானம் மூன்று லட்சம் ரூபாய் தான். இந்த வருமானத்தை கொண்டு குடி தண்ணீர் வழங்குவதற்கு வாங்கிய கடனுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபாய் கட்ட வேண்டியதாக இருக்கிறது. சுமார் 1½ லட்சம் ரூபாய் அங்கே [illegible]

வேண்டிய அவசியத்தினை எனக்கு நமது நகராட்சி அமைச்சர் வைக்கவில்லை. கடந்த ஆண்டு இந்த மான்யக் கோரிக்கைக்கு பதில் சொல்லும்போது நகராட்சி அமைச்சரே, அதுவும் கடந்த ஆண்டிலேயே, அவர்களுக்கு பதில் சொல்லி இருக்கிறார். கனம் சபா நாயகருடைய அனுமதியின் பேரில் அவர் சொன்ன பதிலை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

"மதிப்பிற்குரிய அங்கத்தினர் அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சென்னை நகராட்சிக்கு சர்க்கார் ஏராளமான பணத்தைக் கடனாகவும், மானியமாகவும் அளித்திருக்கிறது என்றும், ஆனால் ஒரு குறிப்பிட்ட பூந்தமல்லி ஹைரோடு, மவுண்ட் ரோடு போன்ற சாலைகளில் மட்டும் தான் வேலைகள் நடந்துகொண்டிருக்கிறது என்றும் குறை கூறினார்கள். ஆனால் நிலைமை அவ்வாறு இல்லை என்று சொல்லிக்கொள்ளுகிறேன். 1960-61-லேயும் 1961-62-லேயும் அதிகமான அளவிலே கார்போரேஷனுக்கு, பணம் ஒதுக்கப் பட்டாலும், இந்த இரண்டு ரோடுகள் நீங்கலாக அவர்கள் சென்னை நகரில் 49, 50 பஸ் ரூட்டுகள் விஸ்தரிப்பதற்கான பல சாலைகளையும், ரோடு சீர்திருத்த திட்டத்தில் எடுத்துக் கொண்டிருக் கிறார்கள். அதைப்போல் பல ஓவர் ப்ரிட்ஜ்கள், அதாவது சின்னப் பாலங்கள் கட்டப்படுவதற்கும் இன்னும் பல திட்டங் களுக்கும் இந்த பணத்திலே உள்ளிட்டு, நல்ல வேலைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்."

என்று கனம் அமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டில் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

இன்றைய தினம் நம்முடைய மாநகராட்சி மன்றம் எவ்வளவு பொறுப்புக்களையும் எவ்வளவு பணிகளையும் எடுத்துக்கொண்டு நிறைவேற்றி வருகிறது என்பதை நம்முடைய அமைச்சர் குழு நன்றாக அறியும். பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலைமை இன்றையதினம் இல்லை. இன்றையதினம் அது செய்யவேண்டிய பணிகள் வளர்ந்திருக்கின்றன. அதற்கான தேவைகளும் அதிக மாக வளர்ந்திருக்கின்றன. அந்த அளவுக்கு அதற்கு வருமானம் வருகிறதா என்று பார்த்தால் மாநகராட்சி மன்றத்திற்குப் போதிய வருமானம் இல்லை. சர்க்காரிடத்தில் கை ஏந்தி, கை ஏந்தி, கெஞ்சிக் கேட்டு வாங்க வேண்டிய நிலைமையில்தான் அது இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலைமை போகும் அளவுக்கு, கார்ப்ப ரேஷனுக்கு வருமானம் கிடைக்கக்கூடிய அளவுக்குச் சில நல்ல திட்டங்களை நாம் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். அந்த வகை யிலே நான் முன்பு ஒரு தடவை குறிப்பிட்டது போல, சென்னை மாநகரத்திலுள்ள பெட்ரோல் பங்குகளையெல்லாம் கார்ப்பரே ஷனே நிர்வகிக்கும்படி வைத்தால், கிட்டத்தட்ட ஒன்றரை கோடி ரூபாய் கார்ப்பரேஷனுக்கு வருமானம் வரும். அதேபோல், அர சாங்கம் பெற்றுக்கொண்டிருக்கிற மோட்டார் வாகன வரித்தொகை யில் ஐம்பது சத விகிதம் அளவுக்காவது கார்ப்பரேஷனுக்குக் கொடுத்தால், அவர்கள் இன்னும் நல்ல முறையில் பணியாற்றி வர முடியும். ஆகவே, அந்த உதவிகளையும் மாற்றுந்தாய் மனப்



பான்மை காட்டாமல், யாராக இருந்தாலும், நல்ல காரியங்கள் நடக்கவேண்டும் என்பதிலே அக்கறை காட்டி நம்முடைய அமைச் சரவை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சென்னையை சிங்காரமான நகரம் என்று வருணிக்கின்றோம். அதனுடைய பெருமைகளைப் பற்றிப் பேசுகின்றோம். அது பற்றி எனக்கு முன் பேசிய ஆளுங்கட்சியைச் சார்ந்த கனம் உறுப்பினர் ஹாஜா ஷரீப் அவர்கள் சொன்னார்கள். சென்னை சிங்காரமான நகரமாக இன்றையதினம் இல்லை. நாம் எழுதினாலும் பேசினாலும், பெருமைப் பட்டுக்கொண்டாலும், இருதயத்திலே ஆங்காங்கே ஓட்டைகள் இருப்பது போல, சென்னை மாநகரம் பல இடங்களில் சீரழிந்து புண்ணாகிக் கிடக்கிறது. வெளிநாட்டிலிருந்து பலரை அழைத்துவந்து காட்டுகிறோம். அவர்கள் வரும் வழியினில் இரு பக்கமும் திரும்பிப் பார்த்தால், அத்தனை பேரும் நம்மைப் பார்த்து ஏளனப்படுத்தத்தக்க அளவுக்கு சேரி வாழ் மக்கள் பிரச்சினை இருந்துகொண்டே இருக்கிறது. பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக, இந்த நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த கட்சியினரே ஆட்சியிலிருந்தும்கூட, பல திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னாலுங் கூட, குடிசைவாழ்ப்பகுதி மக்களுடைய பிரச்சினைகள் அத்தனை யும் தீர்க்கப்பட்டுவிட்டனவா என்று பார்த்தால், அந்தப் பிரச்சினைகள் அத்தனையும் தீர்க்கப்படவில்லை. நம்முடைய சென்னை மாநகரத்தில் வளர்ந்துள்ள மக்கள் தொகையை மொத்தமாகப் பார்ப்போம். சுமார் 18 லட்சம் பேர்களுக்கு மேல் இன்றையதினம் இருக்கிறார்கள். ஆனால், அத்தனை மக்களுக்கும் போதுமான வீட்டு வசதி இருக்கிறதா என்று பார்த் தால், ஜார்ஜ்டவுனில் ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு Slum என்று சொல்லும் அளவுக்கு கூட்டம் நிரம்பிக்கிடக்கிறது. ஒரு வீட்டுக்குள் பல வீடுகள்—குடித்தனக்காரர்கள்—உள்ளனர். அந்த அளவுக்கு வீட்டின் தேவைகள் ஏராளமாகப் பெருகியிருக்கின்றன. சென்னை மாநகர மக்கள் தொகை 18 லட்சம் என்று வைத்துக் கொண்டால், நம்முடைய சென்னையில் இருக்கும் வீடுகள் 1,13,273 தான் இருக் கின்றன. 1954-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்குப்படி, நம் முடைய சென்னை மாநகரத்திற்குத் தேவைப்படுகிற வீடுகள் 2,38,229 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே, புதிதாக நாம் 1,24,956-க்கு மேற்பட்ட வீடுகளைக் கட்டிக்கொடுத்தால்தான் சென்னை மாநகரத்திலே தங்கும் மனிதன் மனிதனாக வசிக்க முடி யும் என்ற கணக்கு நமக்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. இந்தச் சிங்காரச் சென்னையில் சீமான்கள் மட்டுமா வாழ்கிறார்கள்? மத்தியதர மக்களும், ஏழை மக்களும், அன்றாடம் உழைத்துப் பிழைக்கும் தொழிலாளர் தோழர்களும் ஏராளமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கணக்கு விவரத்தைப் பார்த்தால், 100 ரூபாய்க்குக் குறைந்த மாத வருமானம் பெறுகிற வர்கள் 86 சத விகிதத்தினர் சென்னை மாநகரத்திலே இருக்கிறார் கள். நூற்றுக்கு மேல் 500 ரூபாய் மாத வருமானம் பெறுகின்றவர் கள் 12 சத விகிதத்தினர் இருக்கிறார்கள். ஐநூறு ரூபாய்க்கு

காரிகளுடைய சம்பளத்திற்குப் போய் விடுகிறது. மீதமுள்ள ஐம்பதாயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு தான் நகரசபையின் மற்ற வேலைகளைச் செய்ய வேண்டியதாக இருக்கிறது. மற்ற திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. அதனால் நான் வேண்டிக்கொள்வது என்னவென்றால் பொதுவாக வசதி இல்லாது வருமானம் குறைவாக இருக்கக்கூடிய திண்டிவனம் போன்ற நகரசபைகளுக்கு தண்ணீர் திட்டத்திற்கு செலவாகக் கூடிய தொகையில் ஒரு பகுதியை கடனாகவும் மானியமாகவும் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டும். பஞ்சாயத்து யூனியன்களுக்கு மானியமாகக் கொடுப்பது போன்று நகரசபைகளுக்கும் கொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது வீடுகளுக்கு தண்ணீர் குழாய் கனெக்ஷன் கொடுப்பது தண்ணீர் வசதி கொடுப்பது போன்றவைகளுக்கு கட்டணம் வசூலிப்பதின் மூலம் மான்யத்தை நிறுத்திவிடலாம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் ஆரம்பக் கட்டத்தில் வசதி இல்லாத, வேண்டிய வருமானம் இல்லாத திண்டிவனம் நகரசபை போன்றவைகள் இப்படிப்பட்ட திட்டங்களை நிறை வேற்ற முடியாமல் திண்டாடுகிறார்கள். நிறைவேற்றமுடியாத கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு கனம் அமைச்சர் அவர்கள் ஒரு பகுதி மானியம் கொடுக்க வேண்டும். அந்த முறையில் இப்பொழுதுள்ள விதியை மாற்றி அமைக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக நகரசபைகளில் உள்ள மக்கள் வடிகால் திட்டம் ட்ரெயினேஜ் திட்டம் இல்லாமல் கழிவு தண்ணீர் தேங்கி கொசு உற்பத்தி பெருகி கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நகரசபைகளுக்கு டிரெயினேஜ் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய உதவி செய்யும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். சில நகரசபைகளில் பணியாற்றி வருகின்ற மானேஜர், ஹெட் அக்கௌண்டண்ட் மற்ற சிப்பந்திகள் எல்லோரும் பல ஆண்டுகளாக ஒரே இடத்தில் இருந்து பணியாற்றி வருகிறார்கள். அவர்களை மாற்றுவதாக இல்லை. சில இடங்களில் பத்து அல்லது பதினைந்து இருபது ஆண்டுகள்கூட தொடர்ந்து வேலைசெய்து வருகிறார்கள். ஆதனால் பல ஊழல்கள் நடைபெறுகின்றன. நகரசபை ஊழல்களுக்கு இது ஒரு காரணமாக இருக்கிறது. மற்ற துறைகளில் மூன்று அல்லது ஐந்து வருடங்கள் பணியாற்றியவுடன் வேறு இடங்களுக்கு மாற்றுவது போன்று இங்கேயும் மாற்றி அமைக்கும்படியாக இருக்க வேண்டும். இப்படி ஒரே இடத்தில் தொடர்ந்து பணியாற்றுவதால் பல குறைபாடுகள், ஊழல்கள் முதலியவைகள் ஏற்படுகின்றன. ஆகவே மற்ற துறைகளில் இருப்பது போன்று நகரசபையிலும் ஐந்தாறு ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிக் கொண்டிருந்தால் அவர்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்படி பல ஊழல்களை குறைக்கலாம்.

வீட்டு வரியை வசூலிப்பதைப் பற்றி கொஞ்ச நாட்களுக்கு முன்னால் நான் பணக்காரர்களிடம் அதிக பாக்கி இருக்கிறது என்று சொன்னதற்கு கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்





போது வீட்டு வரி பாக்கியெல்லாம் ஏழைகளிடத்தில் தான் இருக்கிறது என்று சொன்னார். ஆனால் வீட்டு வரி வசூலிக்கும்போது பணக்காரர்களைக் கேட்பது இல்லை. ஏழைகளைத்தான் கேட்டு வாங்குகின்றார்கள். பில் கலெக்டர்கள், அதிகாரிகள் பணக்காரர்களைக் கேட்பது இல்லை. பயந்து கொண்டு ஏழைகள் கொடுத்து விடுகிறார்கள். பணக்காரர்கள் தான் கொடுக்காமல் பாக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே பணக்காரர்களிடமிருந்து வீட்டு வரிகளை அவ்வப்போது வசூலிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். வசதியுள்ளவர்களும் பணக்காரர்களும் தான் அதிகப்படியான வீட்டு வரி கொடுக்காமல் இருக்கிறார்கள். ஆகவே அவர்களிடமிருந்து வசூல் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். பள்ளிக்கூடங்களுக்கு குடி தண்ணீர் வழங்கும் போது கட்டணம் இல்லாமல் வழங்க வேண்டும். அதற்கு வேண்டிய வழி செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். பல பள்ளிக்கூடங்களில் குடி தண்ணீர் கட்டணம் கட்ட முடியாமல் தண்ணீர் நிறுத்தப்படுகிறது. தனியார் தர்ம பள்ளிக்கூடங்களுக்கு கட்டணம் இல்லாமல் குடி தண்ணீர் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

* **திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் உதவித் தலைவர் அவர்களே, பொதுப்பணிகள்---உதவி மானியக் கோரிக்கையின் மீது கொண்டுவரப்பட்டிருக்கிற வெட்டுப் பிரேரபணையை ஆதரித்து என்னுடைய ஒரு சில கருத்துக்களை சொல்ல ஆசைப்படுகிறேன். கனம் சுகாதார அமைச்சர், கனம் தொழில் அமைச்சர் ஆகியோருடைய நிர்வாகத் துறைகளுக்குச் செலவாகும் தொகைகள் அடங்கிய கூட்டு மான்யக் கோரிக்கை இது. அதனால் நாங்கள் பேசுகின்ற கருத்துக்களுக்கு பதில் பெறவேண்டியவர்களிடமிருந்து பதில் பெறுவதற்கு வசதியாக இருக்கும் என்பதைச் சொல்க் கொள்ள விரும்புகிறேன். சம்பந்தப்பட இலாகாவும் அதிகாரிகளும், கவனம் செலுத்தி, அடுத்த ஆண்டிலாவது இக்குறையை நீக்க வேண்டுமென்று மிகப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட விபரங்களுக்குப் பதில் சொல்ல வாய்ப்புக் கிடைக்கும். நிதியிலாகாவையும், சட்டமன்ற இலாகாவையும் இதைக் கவனிக்கக் கோருகிறேன்.

அடுத்தபடியாக, நமது சென்னை மாநகராட்சியின் பிரச்னைகள் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகின்றன. தேவைகளைப் பற்றி இதற்கு முன்பு பேசிய பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக சகோதரி திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்கு சென்னை மாநகராட்சி என்றாலேயே—அதுவும் சென்ற மூன்று நான்கு ஆண்டுகளாகவே கொஞ்சம் எரிச்சலும் வெறுப்புமாக இருக்கிறது. அதுவும் கொஞ்ச நாட்களாக மிக அதிகமாக ஆகிவருகிறது. அதன் காரணமாகவோ என்னவோ எந்தக் காரியமும் சரியாகச் செய்யப்படவில்லை என்று ஒரேயடியாக எடுத்துச் சொல்லி வருகிறார்கள். அதற்கு பதில் சொல்

கனம் அங்கத்தினர் திரு ஹாஜா ஷெரிப் சொன்னது போல சேரி ஒழிப்புத் திட்டத்தை ஒரு தேசிய பிரச்சனைத் திட்டமாகக் கருதி இதற்கென்றே ஒரு மூன்றாண்டுத்திட்டம், நான்காண்டுத் திட்டம் போட்டால் கூட நல்லது என்று சொல்லிக் கொள்வேன். இத்துறையில் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் காட்டுகின்ற உற்சாகத்தை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சேரி வாழ் மக்களுடைய பிரச்சனையை அவர் அறியாமல் இல்லை. பக்கிங்ஹாம் கானல் வழியாகச் சென்றால் அங்கங்கேயுள்ள சேரிகளை மட்டுமே சொன்னேன். இன்னும் கடல் ஓரத்தில் இருக்கிற குப்பங்கள் பற்றி முன்பே சொல்லியுள்ளேன். என் தொகுதியின் ஒரு பக்கமான அடையாறிலிருந்து ஆரம்பித்தால், அருணாசலபுரம், தாமோதரபுரம், பாப்பார் சாவடி, கானல் பாங்க் ரோடு, காரைகுட்டை, ஆண்டிமான்யம், அல்லீஸ்வரன் தோட்டம், ஆங்கான் தோட்டம், மாங்கொல்லை, கன்னிக்கோயில், காட்டுக் கோயில், பெரியார் சாலை, நல்லான் சாலை, நாட்டார் தோட்டம் போன்ற பல குடிசைவாழ் பகுதிகள் உள்ளன. எல்லாவற்றையும் எடுத்துச் சொல்ல நேரம் போதாது என்கிற காரணத்தினால்—இவ்விஷயத்தில் கனம் அமைச்சர் அவர்கள் தக்க கவனம் மேலும் செலுத்த வேண்டுமென்று மட்டும், வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். டெனமென்ட்ஸ் கட்டப் போகிறோம் என்று சொல்கிறார்கள். எத்தனை பேர்களுக்கு இவ்வாறு கட்டிக் கொடுக்க முடியும்? இன்றைக்கு சென்னை நகரத்தில் கிட்டத்தட்ட 360 க்கும் மேற்பட்ட குடிசைவாழ் பகுதிகள் இருக்கின்றன. இவற்றில் மொத்தம் ஏழு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். அத்தனைபேர்களுக்கும் டெனமென்ட்ஸ் கட்டிக் கொடுக்க முடியுமா? அதற்கான திட்டம் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. இருக்கிற இடமாவது நல்ல முறையில் விநியோகிக்கப்படுகிறதா என்றால் இல்லை. குறிப்பாக நந்தனம் காலனிக்குப் பக்கத்தில் பித்தாபுரம் மகாராஜாவுக்குச் சொந்தமான பெரியதொரு இடத்தில் திட்டம் வகுக்கப்பட்டது. அந்தத் திட்டப்படி பகிர்ந்தளிக்கப்பட்ட நிலம் நடுத்தர, மேல் வகுப்புக்குப் போயிற்றே தவிர குடிசை வாழ் பகுதியினருக்கு கிடைக்கவில்லை. மவுண்டு ரோடுக்கு அருகில் (tank bed) ஏரிக்கரை இருக்கிறது. அங்கே 2,800 குடிசைகள் உள்ளன. அதற்குப் பக்கத்தில் உள்ள 'கிரீன் பெல்டி'-ல் இடம் தாலாம் செய்தார்களா? இல்லை! அது மட்டுமல்ல, அந்த இடத்தில் தனியார் ஒருவருக்கு பள்ளிக்கூடம் நடத்த இடம் தந்திருக்கிறார்கள். அரசுக்கு வேண்டியவர்களுக்காக அங்கே இப்படி நிலம் ஒதுக்கப்பட்டதே தவிர குடிசை வாழ் பகுதி மக்களுக்கு என்று ஒதுக்கப்படவில்லை. இப்படி எந்தத் திட்டத்தை எடுத்தாலும் குடிசைவாழ் பகுதியினருக்கு வசதி செய்ய, கவனிக்கப்படாதிருக்கிற நிலைமை மாறி கண்டிப்பாக எந்தத் திட்டத்தைப் போட்டாலும் அதில் மூன்றில் இரண்டு பாகம் அவர்களுக்கு என்று ஒதுக்க வேண்டும்.

இன்றைக்கு சென்னை நகரத்தில் கோயிலுக்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. சர்க்காருக்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன— தனியாருக்கும் ஒரு சில இடங்களில் நிலம்





சொந்தமாக இருக்கின்றது. கோயில், சர்க்கார் நிலங்களையெல்லாம் விலை கொடுத்தே வாங்க முடியாவிட்டாலும், வேறு ஒரு சந்தர்ப்பத்தில் கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல நீண்டகால குத்தகைக்காவது இந்த நிலங்களை எடுத்துக்கொண்டு குடிசைவாழ் மக்களுக்கு குடியிருப்புக்கான வசதியைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால் அதிகப்பணச் செலவு வராது.

மனிதர்களுக்குக் காற்று இலவசமாகக் கிடைக்கிறது. வெளிச்சம் இலவசமாகக் கிடைக்கிறது. ஆனால் நம்முடைய குடிசைவாழ் மக்களோ காற்றுக்கும், வெளிச்சத்திற்கும் வழியின்றி இருட்டில் கிடந்து நெளிந்து கொண்டிருக்கிறார்கள். இது நியாயமா! நல்லதா! நாம் கவனிக்காமலிருக்கலாமா?

பத்து ரூபாய் வாடகை கொடுத்துவிட்டு டெனமென்ட்டில் இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. கன்னியப்ப நகரிலிருந்து ஆயிரக்கணக்கானவர்களை புதூரில் கொண்டுபோய் வைத்தோம். மாதாமாதம் கொடுக்க வேண்டிய 3 ரூபாய் வாடகையை இன்றைக்கு கொடுக்கக்கூடிய நிலைமையில் கூட அவர்கள் இல்லாததைப் பார்க்கிறோம்! பத்து ரூபாய் என்பது மிக மிக அதிகமாகும்! சரி அப்படியே பத்து ரூபாய் கொடுக்கத் தயாராக இருந்தாலும் ஆயிரம் பேர் வாழக்கூடிய இடத்தில் 80 பேர்களுக்குத்தானே டெனமென்ட்ஸ் கட்டப்போகிறது சர்க்கார்? மற்றவர்களுடைய நிலைமை என்ன ஆவது? அவர்களுக்கு டெனமென்ட்ஸ் கட்டிக் கொடுக்க எத்தனை ஆண்டுகளைத் தள்ளி வைப்பது? இன்னும் எத்தனை வருடங்கள் காப்பது? இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனித்து—அவர் பல வெளிநாடுகளுக்குச் சென்று வந்திருப்பதனால்—அங்கேயுள்ளவர்கள் சேரி ஒழிப்புப் பிரச்சனையை எவ்வாறு சமாளித்தார்கள் என்பதைக் கண்டு—அந்த அநுபவத்தின் பேரில் இங்கும் அந்தப் பிரச்சனையை வெற்றிகரமாகச் சமாளிக்க—குடிசைவாழ் மக்கள் வசிப்பதற்கு நல்ல ஆரோக்கியமான, சுகாதாரவசதி நிரம்பிய இடத்தை அளிப்பதற்கு தக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இது சம்பந்தமாக எடுக்கப்படுகிற முயற்சியில் நானும், எங்கள் கட்சியினர்களும் அவர்களுக்கு எல்லாவிதமான உதவியையும் அளிக்கத் தயாராக இருக்கிறோம் என்கிற உறுதியை அளித்துக்கொள்வதோடு முடித்துக்கொள்கிறேன்.

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் ஐந்தாறு நிமிடங்களுக்குமேல் பதில் சொல்வதற்கு நேரம் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. காரணம் பிரசங்கத்தின் மூலம் இந்த சேரி ஒழிப்புப் பிரச்சனையைத் தீர்க்க முடியாது. பிரசங்கத்தின் மூலம் தீர்க்க முடியும் என்றால் மணிக்கணக்காகப் பேசலாம். ஆனால் இப்பிரச்சனை பேசித் தீர்ப்பதற்குரியது அன்று. திட்டமிட்டு உறுதியாக எல்லோருடைய ஒத்துழைப்பின் பேரிலும் செயல்படுவது ஒன்றினால்தான் தீர்க்க முடியும் என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

அதிகமான வருமானத்தைப் பெறக்கூடியவர்களின் சத விகிதம் இரண்டு தான். இந்தஅளவில்,அதிகம ானஅளவுக்கு, இருக்கும் ஏழை, நடுத்தர மக்களுக்கான நல்ல வீட்டு வசதித் திட்டங்களை நாம் நிறைவேற்றியிருக்கிறோமா என்று பார்த்தால், நம்முடைய ஆசைகள் அதிகமிருந்தாலும், இந்தத் துறையில் அக்கறை காட்டும் அருமையான அமைச்சரை நாம் பெற்றிருந்தாலும், அந்தத் திட்டங்களை நாம் நிறைவேற்றவில்லை என்று தான் சொல்ல முடியும். அந்த அளவுக்கு இன்றையதினம் நம்முடைய சென்னை மாநகரத்தில் வீட்டுப் பிரச்சினைகள் ஓங்கியிருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளையெல்லாம் நாம் எப்படித் தீர்க்கப்போகிறோம்?

எனது தொகுதியை எடுத்துக்கொண்டால், மயிலாப்பூர் என்று சொன்னால், தமிழ்நாட்டிலிருக்கும் அத்தனை பேரும், அது ஒரு அழகு நகரம், நல்ல மேதைகள் வாழும் இடம் என்று எண்ணு வார்கள். அந்த மயிலாப்பூரை நாயன்மார்கள் பாராட்டியிருக் கிறார்கள். ஆழ்வார்கள் பாராட்டியிருக்கிறார்கள். ஆனால், அந்த மயிலாப்பூரில் இன்றையதினம் நுழைந்து பார்த்தால், உள்ளே சென்று பார்த்தால், அங்கே அழகைக் காண முடியவில்லை. ஏராள மான குடிசை வாழ் பகுதிகள், நாமெல்லாம் கண்ணீர் வடிக்க வேண்டிய அளவுக்கு இருக்கின்றன. நம்முடைய அமைச்சர் அவர் களுக்கு இந்த உண்மை நன்றாகத் தெரியும்!

எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் திருமதி அனந்த நாயகி அவர்கள் பக்கிங்காம் கால்வாயைப் பற்றிப் பேசினார்கள். கால்வாயில் நம்முடைய கனம் அமைச்சர் இராமையா அவர்களும் அண்மையில் ஓடத்தில் சென்றதாகக் குறிப்பிட்டார்கள். அப்படி அவர் சென்ற நேரத்தில் கண்டிருக்கக்கூடும் (கனம் திரு. வெ. இராமையா குறுக்கிடு) கனம் திரு. இராமையா அவர்கள் அந்தக் கால்வாயைப் பார்க்கப்போவதாக என்னிடம் சிலர் வந்து தெரிவித் தார்கள்; இன்னும் போகவில்லையாம் அமைச்சர்! அப்படிப் போனால், விசாலாட்சிபுரம், லாலாத்தோட்டம், பதினாறு குடிசை, கணேசபுரம், கபாலித் தோட்டம், பல்லக்குமான்யம், ஸ்லேட்டர்-புரம், ரூதர்போர்டு மீனும்பாள்புரம், கயிலாசபுரம் என்று இப்படி பக்கிங்காம் கால்வாயின் இரண்டு பக்கங்களிலும் என்னுடைய மயிலைத் தொகுதியில் ஏராளமான குடிசைவாழ் பகுதிகள் இருக் கின்றன. 'லஸ்' என்று சொல்லப்படுகிற பளபளப்பான இடத் துக்கு பக்கத்தில் தான் கபாலித் தோட்டம், பல்லக்குமானியம் என்ற இடம் இருக்கிறது. தயவு செய்து ஆளுங் கட்சி உறுப்பினர் களைக் கூடப் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்—உங்க ளுக்கு நேரம் இருக்குமானால், தயவுசெய்து அந்த இடங்களுக்கு வாருங்கள்! நானே அழைத்துச் செல்கிறேன். குடிசைப் பகுதிகளில், கார்ப்பரேஷன் பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று எண்ணினாலும், அந்த இடங்கள் கோயிலுக்குச் சொந்தமான இடங்களாக இருப்பதால், தனியார் இடங்களைப் போலப் போதிய வசதிகளைச் செய்ய முடியாத காரணத்தால், அந்த இடங்கள் நாறும் இடங்களாக—நாம் அத்தனை பேரும் காந்தியார் வாழ்ந்த நாட்டில்தான் இருக்கிறோமா, நாகரீகம்





முதிர்ந்த நாட்டில்தான் இருக்கிறோமா என்று எண்ணிக் கண்ணீர் வடிக்கும் அளவுக்கு—மிக மிக மோசமாக இருக்கின்றன. பக்கிங்காம் கால்வாயின் பக்கத்தில் உள்ள ஸ்லேட்டர்புரம், மீனும் பாள்புரம், கைலாசபுரம், இன்னும் இதுபோல, எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய தொகுதியைச் சார்ந்த குடிசை வாழ் பகுதி கள், அனைத்தையும் பார்த்தால் நாம் பெருமை பேசிக்கொள்ளும் படியான அளவுக்கு நிலைமைகள் இல்லை. ஏன், இந்த அசிங்கத்தை நாம் திட்டம் போட்டு நீக்கக்கூடாது? இந்தக் கால்வாயைச் சுத்தப்படுத்தவேண்டும் என்பதற்காக முன்னமேயே திட்டம் போடப்பட்டது. இந்தக் கால்வாய் சென்னையிலே ஏற்பட்ட பஞ்ச நிவாரணத்திற்காக வெள்ளையர் காலத்தில் வெட்டப்பட்ட கால்வாயாகும். அதைச் சீர்திருத்தவேண்டும் என்ற பிரச்சினை பல்லாண்டுகளாக இருந்துகொண்டிருக்கிறது. அந்தக் கால்வா யைச் சீர்திருத்துவதற்காக நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் பல முறைகள் கூடிக் கூடிப் பேசப்பட்டன. பல திட்டங்கள் போடப்பட்டன. அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நாம் இப்போதே முயற்சி எடுத்துக்கொண்டால், எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர்கள் சிலர் கூறியதுபோல, நல்ல பல நன்மைகளை நாம் உருவாக்க முடியும்.

கூவம் ஆற்றுத் திட்டத்தை எடுத்துக்கொண்டால், சமுத்திரத் திலே கலக்கும் இடத்திலிருந்து நம்முடைய துறைமுகத்திற்கு அதைத் திருப்பிவிட்டால், துறைமுகத்திற்குப் பக்கத்தில் நல்ல வோர்ஹவுஸைக் கட்டினால், ஜார்ஜ் டவுனில் இருக்கும் ஜனப் பெருக்க நிலை குறையும். அதற்குப் பணம் இல்லையே என்று ஆலோ சிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால், கடற்கரையை நாம் போர்ட் ட்ரஸ்டுக்கு ஒப்படைத்த நேரத்தில் நஷ்ட ஈடாக ஒன்றேகால் கோடி ரூபாய் பெற்றிருக்கிறோம். அதை வைத்துக் கொண்டு கூவம் ஆற்றை நல்ல முறையில் ஆழப்படுத்தி, எட்டடி நீர் பாயும் அளவுக்கு ஆக்கி, கடல் நீர் போகும் அளவுக்குச் செய் தால் நல்ல முறையில் இருக்கும். கூவம் ஆறு எந்த இடத்தில் ஆரம்பிக்கிறதோ அந்த இடத்தில் ஒரு பஸ் ஸ்டாண்டு ஏற்படுத்தி, லாரிகளும் பஸ்களும் அந்த இடத்தில் தங்கும்படிச் செய்து, அங் கிருந்து வரும் பொருள்களைப் படகின் மூலம் நகரத்திற்கு வரும் படிச் செய்ய முடியும். பக்கிங்காம் கால்வாய்க் கரையில் கொரட்டூர்ப் பக்கத்தில் அத்தகைய பஸ் ஸ்டாண்டு, லாரி ஸ்டாண்டு வைக்க ஏற்பாடு செய்தால், லாரிகளும் பஸ்களும் நகரத்திற்கு வெளியே நின்றுவிடும். அங்கிருக்கும் பொருள்களையெல்லாம் கொண்டுவரக்கூடிய வகையில் போக்குவரத்திற்கு வசதி செய்தால் தேம்ஸ் நதியைப் படத்தில் பார்ப்பதுபோல், நல்ல அழகான 1-30 p.m.
படகுகள் ஓடவும், படகு ஓடும் நதிகளாக இரண்டு நதிகளும் விளங்குவதற்கும் நல்ல வாய்ப்புகள் ஏற்படும்.

அதே நேரத்தில் இந்த இரு கால்வாய்களையும் சீர்திருத்தினால், சேரிப் பிரச்சனையையும், தீர்க்க வாய்ப்பாக இருக்கும். அதற்கான திட்டங்களை உருவான வகையில் செய்வதற்கு முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் அரங்கண்ணல் அவர்கள், 'பித்தாபுரம் தோட்டத்தில் இடம் கொடுத்தார்களா?' என்று கேட்டார்கள். அங்குதான் கொடுக்க வேண்டுமென்ற அர்த்தம் இல்லை. பெரிய ஸ்கீம்களைப் போடும்போது 40 சதவிகிதம் ஸ்லம்களிலே இருக்கிறவர்களுக்காக ஒதுக்கி வைக்கிறோம். கோடம்பாக்கம் புதூரில் 1,800 குடிசை வாசிகளுக்கு வசதியான முறையிலே இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு இடத்தை ஸ்லம்களில் இருந்தவர்களுக்கு மாத்திரமே ஒதுக்கினால் அது மறுபடியும் ஸ்லம் களாகவே போய்விடும். நாங்கள் 'காம்போசிட் ஸ்கீம்' ஆகப் போடுகிறோம். ஒரு ஸ்கீமை எடுத்துக்கொண்டால், சில மிடில் இன்கம் குரூப் ஹவுஸ்களாகவும், சில 'லோ இன்கம் குரூப்' ஹவுஸ்களாகவும், சில இண்டஸ்ட்ரியல் ஹவுஸ்களாகவும், சில ஸ்லம்களில் இருப்பவர்களுக்காகவும் ஒதுக்கப்படுகிறது. அந்த மாதிரி ஒதுக்கும்போது 40 சத விகிதத்தை ஸ்லம்களில் இருப்பவர்களுக்காக ஒதுக்கியிருக்கிறோம். கோடம்பாக்கம்—புதூர் ஸ்கீமை எடுத்துக் கொண்டால் 40 சத விகிதம் ஸ்லம்களில் இருப்பவர்களுக்காக ஒதுக்கி இருக்கிறோம். வட சென்னையில் 40 சத விகிதம் ஒதுக்கப் போகிறோம். வெஸ்ட் மெட்ராஸ் ஸ்கீமில் 1,200 ஏக்கரில் பத்தாயிரம் பேர், 20,000 பேர் குடியிருக்க வசதி செய்தால், 40 சதவிகிதம் ஸ்லம்களில் இருப்பவர்களுக்காக ஒதுக்க இருக்கிறோம். அந்த அளவுக்கு ஸ்லம் டுவெல்லர்சுக்காக வசதிகள் செய்து கொடுக்கும்போது, அவர்களுக்காக ஒன்றும் செய்யவில்லை என்று சொன்னால் இந்தப் பிரச்சனையைத் தீர்க்க முடியாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் ஹாஜா ஷெரிப் அவர்கள், 'நடைபாதையில் இருப்பவர்களுக்காக வீடு கட்டிக் கொடுக்கப்பட்டவுடன் அங்கே சென்று குடியேறியவர்கள் மறுபடியும் நடைபாதைக்கே வந்து விட்டார்கள் என்று சொன்னார்கள். நாம் வீடுதான் கட்டிக் கொடுக்கலாமே தவிர, அவர்கள் மறுபடியும் திரும்பி வந்து விட்டால் என்ன செய்வது? அவர்கள் அந்த வீட்டைப் பத்து ரூபாய்க்கு வாடகைக்கு விட்டுவிட்டு, சர்க்காருக்கு மூன்று ரூபாய் கொடுத்துவிட்டு, தாங்கள் மாதம் 7 ரூபாய் சம்பாதித்துக்கொண்டு திரும்பவும் நடைபாதைக்கே வந்து உட்கார்ந்து விட்டார்கள். இதைத் தீர்க்கவேண்டுமென்றால் கடுமையான நடவடிக்கை எடுத்தால்தான் முடியும். அந்தமாதிரிக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க நாட்டு மக்களிடத்திலும் உறுதி இல்லை, சட்டசபையிலும் உறுதி இல்லை, சர்க்காரிடத்திலும் உறுதி இல்லை. இந்த நிலைமை மேல்நாடுகளில் எப்படித் தீர்க்கப் பட்டிருக்கிறது? மேல்நாடுகளில் இந்த மாதிரி யாராவது குடிசை போட்டால், அடுத்த நிமிஷத்திலேயே பிரித்து தேம்ஸ் நதியிலே போட்டு விடுவார்கள். அங்கு அனுமதி இல்லாமல் எந்த இடத்திலும் எதுவும் கட்ட முடியாது. நம்முடைய நீதி எங்கு வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் குடிசை கட்டிக் கொள்ளலாம் என்பது. அதைப் பற்றிப் பின்னால் அவர்களைக் கேட்டால் அவர்கள் 'ஐயா! அப்பா!' என்று சொல்வார்கள். 'பாவம், ஏழை' என்று சொன்னால் எல்லோரும் மனமிரங்கி விடுவோம். மேல் நாட்டு முறையைக் கையாண்டால் நம்முடைய மக்கள்



கஷ்டப்படுவார்கள் என்பது தெரியும். ஸ்லம் கிளீரன்ஸ் சம்பந்தமாக ஒன்றுதான் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எந்தப் பகுதியில் ஸ்லம் கிளீரன்ஸ் செய்யவேண்டுமென்று சொன்னாலும் என்னிடம் வந்து எழுதிக் கொடுங்கள். அந்த அங்கத்தினரையும் நான் உடன் அழைத்துக்கொண்டு போகிறேன். அவர் வந்து வேண்டிய உதவி செய்தாரானால் ஸ்லம் கிளீரன்ஸ் செய்தாகிவிடும். அதற்கு மாறாக அங்கிருப்பவர்கள் எல்லோருக்கும் அங்கேயே வீடு கட்டிக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அது முடியாத காரியம். ஒரு ஏக்கரை 25 பேருக்குப் பகிர்ந்து கொடுக்க முடியுமே தவிர, 250 பேருக்கு எப்படிப் பகிர்ந்து கொடுப்பது? இருந்தாலும் கடந்த ஐந்தாறு ஆண்டுகளில் ஸ்லம் கிளீரன்ஸ் திட்டத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. போதிய அளவில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்று சொல்லலாமேயொழிய, எந்தவிதமான முயற்சியும், நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்று சொல்ல முடியாது. கடந்த ஐந்தாண்டுகளிலே ஐம்பது அறுபதாயிரம் வீடுகள் அதிகரித்திருக்கின்றன. அதுமாத்திரமல்லாமல், கார்ப்பரேஷனுக்குக் கூட ஹவுஸ் டாக்ஸ் வருமானம் கூடியிருப்பதாகக் கேள்விப் பட்டேன். கார்ப்பரேஷனுக்கு வெளியிலே கூட, 'அவுட் ஸைட் தி டவுன்'—வருமானம் வருகிறது. இந்த வகையிலே சர்க்கார் எதுவுமே செய்யவில்லை என்று சொல்லிவிட முடியாது. இதைவிட அதிகமாகச் செய்வதற்கு முயற்சி செய்வோம் என்று கூறிக்கொள்கிறேன்.

* கனம் திரு. சே. ம. அ. மஜீத்: மதிப்புக்குரிய கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் கொண்டு வந்துள்ள இந்த மானியக் கோரிக்கையிலே பல அங்கத்தினர்கள் நல்ல முறையிலே தங்களுடைய உற்ற ஆலோசனைகளையும், சிறந்த அனுபவங்களையும் நகராட்சி சம்பந்தப்பட்ட வரையில் உதவி புரியக் கூடிய அளவில் கூறியதற்காக எனது மனப்பூர்வமான நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இது சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கையிலே, சேரி ஒழிப்பு, சேரி அபிவிருத்தி சம்பந்தப்பட்ட அளவில், சக அமைச்சர் கனம் வெங்கட்டராமன் அவர்கள் நல்ல முறையிலே பதில் அளித்தார்கள். நேற்று, சுகாதாரம் சம்பந்தப் பட்ட மானியக் கோரிக்கையின்போதும், இது சம்பந்தப்பட்ட சில பிரச்னைகளைப் பற்றி சுகாதார அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். கனம் அங்கத்தினர்களுடைய கருத்துக்கள் சிலவற்றுக்கு நானும் விளக்கம் தருகிறேன்.

காஞ்சி மணிமொழியார் அவர்கள் முதற்கண் இந்த விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசும்போது, நகராட்சி மன்றக் கூரியோ, சட்ட மன்ற உறுப்பினர்களும் மேல் சட்ட மன்ற உறுப்பினர்களும் 'எக்ஸ்-அபிஷியோ' மெம்பர்களாக இருக்க வழி செய்தால், தங்கள் தங்கள் தொகுதியிலுள்ள பிரச்னைகளைப் பற்றி வலியுறுத்திப் பேசச் சந்தர்ப்பம் இருக்கும்' என்ற கருத்தினைத் தெரிவித்தார்கள். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும் அந்தக் கருத்தினை எடுத்துக் கூறினார்கள். அவர்கள் முன்பே கார்ப்பரேஷனில் அங்கத்தினராக இருந்து முன்நின்று [illegible]

சேரிகள் அதிகமாக வருகின்றனவே என்றால் அதற்கு ஒரு காரணம் தொழில்கள் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. பல தொழிலாளர்கள் வருகிறார்கள். வந்தவர்கள் அங்கங்கே வீடு கட்டிக் கொண்டு தங்கிவிடுகிறார்கள் அதனால் சேரி அதிகமாகிக் கொண்டிருக்கிறது. சேரிகள் அதிகமாவதனால் பல தொல்லைகள் உண்டாகின்றனவே என்று நினைக்கலாமே தவிர இது ஒரு ஆபத்தான நிலைமை என்றோ, எல்லோரும் மிக்க கவலைப்படுவதற்குரிய பிரச்சனை என்றோ எண்ணவேண்டாம். இது நம்நாடு தொழில் துறையில் வளர்ந்து வருகிற வளர்ச்சியைத்தான் காட்டுகிறது. வளர்கின்ற வளர்ச்சியிலே நோய் போல இவை ஏற்படுகின்றன என்றால் இதை அவ்வப்போது தீர்ப்பதற்கும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக சேரிகளை ஒழிப்பதற்கு நாம் இரண்டு கொள்கை வைத்திருக்கிறோம். ஒன்று ஓப்பன் ப்ளாட் என்று சொல்லி ஒரு விஸ்தாரமான இடத்தை எடுத்து அதில் இவ்வளவு குடிசைகள் போடலாம் என்று நிர்ணயித்து, ரோடு வசதி, தண்ணீர் வசதி சுகாதார வசதி எல்லாம் செய்து கொடுத்து ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு ப்ளாட் வீதம் கொடுத்துவிடுகிறோம். அதற்கு மாதம் 3 ரூபாய் வீதம் வாடகை. அவர்களே குடிசை போட்டுக்கொள்ளுகிறார்கள். இந்த 3 ரூபாயைக் கொடுக்க சென்னையில் இருந்து தொழில் செய்கிற ஒருவரால் கொடுக்க முடியவில்லையென்றால் அதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. 3 ரூபாய் மாதம் கொடுக்கக்கூடிய வருமானம் இல்லாதவர் சென்னையில் இருந்து அவதிப்படவேண்டியதே இல்லை. காரணம் எனக்கே தெரியும். வேண்டுமென்றே அதைக் கொடுக்க பலர் மறுக்கிறார்களே தவிர அந்த 3 ரூபாயைக் கொடுக்க முடியாத நிலையில் அவர்கள் இருப்பதாக நான் எண்ணவில்லை.

அடுத்த திட்டம் டெனமெண்ட்ஸ் அமைத்துக் கொடுப்பது. இதற்கு 10 ரூபாய் வாடகை. எல்லோரும் இந்த டெனமெண்ட்சுக்குத்தான் போக வேண்டுமென்று நாம் வற்புறுத்தவில்லை. யாருக்கு அங்கே போய் வசிக்க வசதி உண்டோ அவர்களைத்தான் போய் வசிக்கும்படியாகச் சொல்லுகிறோம். இதில் எல்லோரும் ஒத்துழைத்தால் தான் சேரிப் பிரச்சனைக்கு நல்லதொரு தீர்வு காண முடியும். டெனமெண்ட்ஸ் கட்டிகொடுத்து 10 ரூபாய் வாடகை என்றால் யாரால் கொடுக்க முடியும் என்றால் வசதி வேண்டும், நல்ல இடத்தில் இருக்க வேண்டும், நகர பொதுசுகாதாரம் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்றெல்லாம் திட்டம் வருக்கிறபோது இது அதிகம் என்று சொல்வதற்கில்லை. காரணம் இன்றைக்கு அங்கே டிரைவர்கள், இன்னும் போர்ட் டிரஸ்டில் வேலை செய்யக்கூடியவர்கள் ஆகியவர்கள் எல்லாம் குடியிருக்கிறார்கள். இவர்களால் பத்து ரூபாய் மாதம் கொடுக்க முடியாது என்று சொன்னால் அதை ஒப்புக் கொள்ள முடியாது. நானே பலவிடங்களுக்குச் சென்று விசாரித்திருக்கிறேன். அவர்கள் கொடுக்கத் தயாராய் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் அதிகாரிகள் அப்புறம் வந்தவுடன், "பக்கத்து வீட்டுக்காரர்கள் இவர் பெரிய துரை, இவர் தருகிறாராம்? அடித்தால் சென்னையில்



. . . ." என்பதாக இவரோடு தகராறுக்குப் போகிறார்கள். ஆக அப்புறம் அதிகாரிகள் செல்கிறபோது பத்து ரூபாய் கொடுப்பது ரொம்ப சங்கடமாக இருக்கும். கொடுக்க முடியவில்லை என்கிறார்கள். இதுதான் இன்றுள்ள நிலைமை. ஒருவர் பத்து ரூபாய் கொடுத்து அங்கே வசிக்கத் தயாராக இருந்தாலும் அவரைப் பத்து ரூபாய் கொடுக்காதே என்று தடுக்கிறவர்கள் இருக்கிற காரணத்தினால் தான் இது ஒரு பிரச்சனையாக இருக்கிறது.

இன்னொன்று. இப்போது அவர்கள் எங்கங்கே குடியிருக்கிறார்களோ அங்கேயே குடிதண்ணீர் வசதி, கக்கூஸ் வசதி, விளக்கு வசதி செய்து கொடுத்துவிடுங்கள் என்றால் அது சேரி ஒழிப்பாக இருக்காது, நிரந்தரமாகச் சேரியை ஆக்குவதாகத்தான் முடியும். அது பர்ப்பச்சுவேஷன் ஆப் ஸ்லம்ஸ் என்ற முறையில் தான் இருக்கும். காரணம் இன்றைக்கு ஒரு சின்ன இடத்தில் நூறு நூற்றைம்பது பேர்கள் இருக்கிறார்கள் என்றால் அந்த நூற்று ஐம்பது பேர்களுக்கும் அங்கேயே என்ன வசதி செய்து கொடுப்பது? ஒரு ஏக்கரில் 50 குடிசைகள் போடலாம் என்றால் 250 பேர்கள் ஒரு ஏக்கரில் இருக்கும்போது அவர்கள் அத்தனை பேர்களையும் எப்படி அங்கேயே வசிக்கும்படி செய்வது?

ஆகவே உண்மையிலேயே சேரி ஒழிப்புத் திட்டம் நல்லமுறையில் நடைபெற வேண்டுமானால் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். பொதுவாக இதில் அரசியல் கட்சிகள் ஒத்துழைக்க முன் வர வேண்டும்—இரண்டு பக்கத்திற்கும் சொல்கிறேன். காஞ்சி மணிமொழியார் அவர்கள் ராஜு பிள்ளை தோட்டத்தில் யாருக்குக் கொடுக்கக்கூடாதோ அவர்களுக்குக் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். சர்க்கார் இவ்விஷயத்தில் பலரைக் கேட்டே செய்கிறார்கள். முன் பின்பார்த்து ஒருவர் பலகாலமாக அங்கேயே குடியிருந்தார் என்று அக்கம்பக்கத்தில் இருப்பவர் சொல்வதையும், அந்தத் தொகுதி அங்கத்தினர் சொல்வதையும் கேட்டே கொடுக்கிறார்கள். 1954-ஆம் வருஷ சென்சஸ் கார்டுபடி கொடுப்பது என்றால் அங்கே யாருக்குமே கொடுக்கப்பட்டிருக்க முடியாது. கார்டு வைத்திருந்தவர்களுக்கு எல்லாம் கொடுத்துவிட்டோம். சென்ற தடவை அங்கத்தினர் சொன்னவர்களுக்கும் கொடுத்துவிட்டோம். இந்த தடவை இவர் யாருக்காவது கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அவருக்கும் கொடுக்கிறோம். ஆகவே கார்டு இல்லாதவர்களுக்குக் கொடுத்து விட்டார்கள் என்று புகார் சொல்ல அவசியமில்லை. கார்டு உள்ளவர்களுக்குக் கொடுத்தது போக பாக்கியுள்ளதைத்தான் மற்றவர்களுக்கு அதுவும் அந்தத் தொகுதி உறுப்பினர்கள் யோசனைகள் பேரிலேயே கொடுத்திருக்கிறோம். அந்த மாதிரி ராஜு பிள்ளைத் தோட்டத்திலே முதலில் கார்டு கொடுத்தவர்கள் எல்லோருக்கும் கொடுத்தாகி விட்டது 'ஒரு சிலருக்குக் கார்டு கொடுக்க மறந்து விட்டார்கள்' என்று ஒரு கனம் அங்கத்தினர் கூறினர். அவர்களுக்கும் கொடுத்தாகிவிட்டது. 'இன்னும் சிலர் இருக்கிறார்கள்' என்று காஞ்சி மணிமொழியார் அவர்கள் சொன்னால், அவர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்கிறோம்.

யுடன் பணியாற்றி வந்தவர்கள். காங்கிரஸ் தரப்பு வாதம், எதிர்த் தரப்பு வாதம் இரண்டையும் நான் மிக மகிழ்வுடன் வரவேற்கிறேன். எதிர்ப்பும் வேகமும் இருந்தால்தான் சுறுசுறுப்பான நிலைமை உருவாவதோடு நியாயமும் கிடைக்கும். ஆகவே, இரண்டு பேர்களுக்கும் உளபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசும்போது, 'நகராட்சித் துறைக்கு வாரி வாரி மானியமாகவும், கடனாகவும் வழங்குகிறோம். அவர்கள் காரியங்களைச் செய்வதில் ரொம்பக் காலதாமதப்படுத்துகிறார்கள்' என்று சொன்னார்கள். 'வேலைகள் துரிதமாக நடைபெறவில்லை' என்று குற்றம் சாட்டினார்கள். அதிலே ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது.

"... காய்தல் உவத்தலகற்றி ஒரு பொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே ..."

என்பது போல், மனத்தில் விருப்பு வெறுப்பு இல்லாமல் பரிசீலிக்கக் கூடிய நிலைமையில்தான், காங்கிரஸ் சார்பில் சொல்லப்பட்ட கருத்துக்களாக இருந்தாலும் சரி, எதிர்த் தரப்பின் சார்பிலே சொல்லப்பட்ட கருத்துக்களாக இருந்தாலும் சரி, நல்ல கருத்துக்களை ஏற்றுக் கொள்ளுகிறோம். அந்த முறையில் பார்க்கும்போது கார்ப்பரேஷனுக்கு ஆண்டு ஒன்றுக்கு 40, 50 லட்சம் அளவுக்கு அரசாங்கம் மானியமாகவும், கடனாகவும் வழங்குகிறது. திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் கூறியபடி சில வேலைகள் குறிப்பிட்ட நேரத்தில் நிறைவேற்றப்படவில்லை. கனம் அரங்கண்ணல் அவர்கள் சில குறைகளை எடுத்துச் சொன்னார்கள், சில பிரச்னைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். எவ்வளவு கோடி வருமானம் வந்தாலும் பிரச்னைகள் வந்து கொண்டேதான் இருக்கின்றன. 'உலகத்தில் யாருமே முழுதும் வென்றதில்லை, வெற்றி பெறுமளவுக்குப் பணியாற்றலாம்' என்று சரோஜினி நாயுடு அவர்கள் ஒரு கவிதையிலே அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மக்கள் நன்மை பெறவேண்டுமென்பதற்காகப் பல முயற்சிகளைச் செய்து வருகிறோம். யாரும் உலகத்தில் நிம்மதியாக இருக்க முடியாது. இன்று இங்கிலாந்தில் பிரச்னை தீர்ந்துவிட்டதா என்றால் இல்லை. நாம் வெள்ளையன் ஆட்சியில் அடிமைப்பட்டுக்கொண்டிருந்த காலத்தில் எல்லாக் காரியங்களும் நிறைவேறிவிட்டனவா என்றால் இல்லை. ஆகவே, பாரபட்சமற்ற முறையிலே நல்ல கருத்துக்களை யார் சொன்னாலும் அவற்றை ஏற்று பணியாற்றத் தயாராக இருக்கிறோம்.

சென்னை நகரத்தைப் பொறுத்து லேட் ஹவுஸ் ரோடைப் போட்டுக் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அங்கு ஒரு கீழ் பாலத்தைக் கட்டவேண்டுமென்பது பரிசீலனையில் இருந்து வருகிறது. அதற்கு ரெயில்வே டிப்பார்ட்மெண்டை கேட்கவேண்டும். பின்னர் டெலிபோன் டிப்பார்ட்மெண்டோடு கலந்து செய்ய வேண்டும். அதற்கு பணம் சாங்ஷன் செய்யப்பட்டு விட்டது. அந்த வேலைகள் துரிதமாக செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸேஷன் ஆக்ட் சம்பந்தப்பட்டவரை, அச்சட்டம் 1931-ல் இயற்றப்பட்டது. அந்த



டோல் காம்பன்சேஷனை பஞ்சாயத்துக்களுக்கும், நகரசபைகளுக்கும், கார்ப்பரேஷனுக்கும் கொடுத்துவிட்டால் எப்படி சர்க்கார் தன் நிர்வாகத்தை நடத்த முடியும்? ஓரளவு கொடுக்கப்படுகிறது. ரோடு மெயின்டனன்ஸ் கிரானட் வழங்கப்படுகிறது. அது தலைக்கு 16-லிருந்து 40 நயா பைசாவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் சாலைகளுக்காக, அவற்றின் பராமரிப்பிற்காக ஒவ்வொருவருக்கும் 40 காசுகள் விதம் மான்யமாக வழங்கப்படுகிறது. ஏன் இது மாநகராட்சிகளுக்கு கொடுக்கப்படவில்லை என்று ஒரு அங்கத்தினர் கேட்டார்கள். அது பரிசீலனை செய்யப்படவேண்டிய பிரச்னை. ஆழ்ந்த அனுதாபத்துடன் அது பரிசீலிக்கப்படும். பின்னர் ஸ்லம்ஸ் பற்றி இங்கே குறிப்பிடப்பட்டது. அது பற்றிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டு விட்டன. திரு. பொன்னுசாமி நாடார் அவர்கள் தூத்துக்குடி ஆழ்கடல் திட்டம் பற்றிய வேலைகள் பற்றி குறிப்பிட்டார்கள். நானும் அந்தப் பகுதியில் இருந்துதான் வருகிறேன். எனக்கும் அதில் அக்கறை இருக்கிறது. இவ்விஷயம் மத்திய சர்க்காரைச் சார்ந்தது. நாம் செய்யவேண்டிய காரியங்கள் பற்றி, சட்டப்படி செய்யவேண்டியதை, இதுபோன்ற காரியங்கள் வந்தால் அவை பரிசீலிக்கப்படும். பக்கிங்ஹாம் கால் பற்றி சொன்னார்கள். அதிலும் வேண்டியதை செய்ய முயற்சி எடுக்கிறேன்.

அடுத்தபடியாக, அடல்ட்ரேஷன் பற்றி சொல்லப்பட்டது. அடல்ட்ரேஷன் ஆக்ட் பற்றி நேற்று கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார்கள். இப்போது கனம் அங்கத்தினர் அவர்கள் இங்கே பிரசன்னமாக இல்லை என்று நினைக்கிறேன். இந்த "ஃபுட் அடல்ட்ரேஷன் ஆக்ட்" கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா சட்டம். அது எதற்காக கொண்டு வரப்பட்டது? எல்லோரும் ஆரோக்கியமாக இருக்கவேண்டும், நன்கு சுகாதார வசதிகளோடு ஆரோக்கியமாக வாழவேண்டுமென்ற நோக்கத்துடன்தான் அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இந்த ஆக்டை திருத்தவேண்டிய அவசியம் இல்லை. ஐந்து ரூபாய்க்கு வாங்கி ரீட்டெய்லர்ஸ் பத்து ரூபாய்க்கு விற்கும்போது கலப்படம் என்று தெரிந்துதான் வாங்குகிறார்கள். ஆகவே அவர்களுக்காக ஒன்றும் செய்யவேண்டியதில்லை. தெரிந்து செய்யும் நிலை இருக்கும்போது எதற்காக இச்சட்டத்தை திருத்த வேண்டும்? இந்த கலப்படம் செய்பவர்களை தண்டிக்கும் வகையில் எல்லோரும் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, சைனாக்காரன் வந்து நம்மைத் தாக்கியிருக்கிறான், எல்லோரும் ஒன்றாக இருக்கவேண்டுமென்று சொல்லி வரும்போது தங்கள் சொந்த ஊர், தங்கள் நகராட்சி என்று வரும்போது எங்கள் இடத்தில் உற்பத்தி செய்யப்பட்ட சிமெண்ட் எல்லாம் எங்களுக்கு இல்லையே என்கிறார்கள். தாழையூத்தில் சிமெண்ட் செய்கிறார்கள். அதற்காக அங்கேயே எல்லாவற்றையும் கொடுத்து விடுவதா? தஞ்சாவூரில் நெல் விளைகிறது என்றால் அப்பகுதியில் உள்ளவர்கள் நெல் எங்களிடமே இருக்கவேண்டும் என்று சொன்னால் முடியுமா? எதுவானாலும் நாட்டின் தேவைக்கேற்ப பரவலாக விநியோகிக்கப்பட வேண்டும். திரு. பழனி

கொடுப்பது என்று ஏற்படுமானால், நகராட்சித் துறைக்கு மட்டும்தான் நம் ஸ்டேட் ஃபைனான்ஸ் போதுமானதாக இருக்கும். அவர்களுக்கு வருவாய் இருக்கிறது, எத்தனை பர்செண்ட் ஷோ டாக்ஸ் அண்டு பிளிமா சர்சார்ஜ் போட்டார்கள் என்று புரியவில்லை. மேலும் சர்க்கார் உத்தரவுகளின்படி எல்லா வித வரிகளையும் விதித்தும் சர்ப்ளஸ் பட்ஜெட் ஏற்படாது டெஃபிஸிட் இருந்தால் நல்ல முறையில் பரிசீலனை செய்து அந்த நகராட்சிக்கு கடன் வழங்க முன் வருவோம்.

நகராட்சி தண்ணீர் திட்டம் சம்பந்தப்பட்ட வரையில், கூடு மான வரையில் தண்ணீர் வழங்கக்கூடிய வீடுகளுக்கு மீட்டர் அளவு வைத்து, அல்லது வீட்டுக்கு இவ்வளவு என்ற அடிப் படையில், வர்த்தக ரீதியில் வசூலித்து இந்தத் தண்ணீர் திட்டத் தை கொண்டுவர வேண்டும் என்று முன் ஆண்டுகளில் அமலுக்குக் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இதிலிருந்து பல நகராட்சிகளில் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள முடியும். செலவுகளுக்குப் போதிய தொகை மாத்திரமல்லாமல் திருப்பிக் கொடுக்கும் கடனுக்கும் வழிவகை கிடைக்கும். இதுதான் திட்டம். இது சப்ஸிடி ஸ்கீம் அல்ல. சென்னை நகராட்சிக்கு மட்டும் 50 சதவிகிதம் சப்ஸிடி கொடுக்கிறோம். காரணம் என்ன என்பது பற்றி நான் முன்பே விளக்கிவிட்டேன்.

இன்னும் அதிகமாகப் பேசி நான் நேரத்தை வீணாக்கவில்லை. என்னுடைய மான்யக் கோரிக்கைப் பற்றிய பேச்சை முடித்துக் கொள்கிறேன். வெட்டுப் பிரேரணையைப் பிரேரேபித்த அங்கத் தினர்கள் மிகவும் திருப்தி அடைந்திருப்பார்கள் என்ற முழு மனதோடு நம்புதல் கொண்டு அவர் அந்த வெட்டுப் பிரேரணையை வாபஸ் வாங்கிக் கொள்வார் என்று எண்ணுகிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** ஆன் எ பாயிண்ட் ஆஃப் இன்ஃபர் மேஷன், ஸார், மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸுக்கு காம்பென் சேஷன் கொடுக்கிற விஷயத்தில் சரியாக இல்லை என்று நாங்கள் சொல்லிக்கொண்டு வந்தோம். மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸ் முதலிலே முனிஸிபாலிட்டிகளிடத்தில்தான் இருந்தது. அதை எடுத்துக்கொள்ளும்போது, ஈடு செய்ய காம்பென்சேஷன் கொடுப்பது என்று சர்க்கார் உத்திரவிலே, ஹோம் செக்ரட்டரி உத்தரவிலே இருக்கிறது. அந்த வகையில் பழைய 3 லட்சம் ரூபாய் அல்லது 4 லட்சம் ரூபாயை இப்போதும் கொடுத்துக் கொண்டு வருகிறது. 80 லட்சம், 90 லட்சம் ரூபாய் மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸ் மூலமாக வருமானம் வந்தாலும், அதை காம்பென்சேஷன் செய்யும் வகையில் இல்லை. இன்றைய தினம் சென்னையில் எடுத்துக்கொண்டால் 500 மைல்களுக்கு மேல் ரோடுகள் இருக்கின்றன. அதில்தான் மோட்டார்கள் ஓடுகின்றன . . . .

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸை மாத்திரம் கொடுத்தால் போதும், நகராட்சி மன்றத்தை நடத்திக்கொள்கிறோம் அதைக் கொண்டு செலவு செய்து கொள் கிறோம் என்று சொன்னால் அதைப்பற்றி யோசிக்கலாம். இன்றைய





தினம் எத்தனையோ உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. மோட்டார் வெகிக்கிள்ஸ் காம்பென்சேஷன் எவ்வளவு வேண்டு மென்று கனம் அங்கத்தினர் நினைக்கிறார்களோ அதற்கு மேல் உதவி அளிக்கப்பட்டு வருகிறது. ரோடுகள் நல்ல முறையில் இருக்கவேண்டுமென்று சில ரோடுகளை அரசாங்கமே எடுத்துக் கொண்டு பராமரிக்கலாம் என்று கூட யோசிக்கிறது. குறிப்பிட்ட ஒரு காம்பென்சேஷன், மோட்டார் வெகிக்கிள்ஸ் டாக்ஸ் காம்பென் சேஷன் என்று அதை மாத்திரம் கணக்குப் பார்த்து வாங்கிக் கொண்டு திருப்தி அடைவது நகர மன்றத்திற்கு நல்லதல்ல என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the allotment of Rs. 2,28,06,300 under Demand No. XXIX—Public Works—Grants-in-aid be reduced by Rs. 100.'

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the Government be granted a sum not exceeding Rs. 2,28,06,300 under Demand No. XXIX—Public Works—Grants-in-aid.'

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow. 2-08 p.m.

The House then adjourned.

## IX.—PAPERS PLACED ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

*Nil.*

### B. Reports, Notifications and ohter papers.

* 69. *Speech of the Hon. Minister for Public Health, while moving Demand No. XV—Public Health.*

* 70. *Speech of the Hon. Minister for Public Health, while moving Demand No. XXXVIII—Capital Outlay on Public Health.*

* 71. *A Review of working of the Stationery and Printing Department during 1962-63.*

* Circulated to Members on 16th March 1963.

No-628-629

INDEX TO
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## SECOND SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

**13th, 14th, 15th, 16th, 18th, and 19th March 1963.**

**Volume X (Nos. 1 to 6).**


PAGES

A

ACCIDENTS—
Traffic accidents, radio sets in private cars .. .. .. .. .. 95–96

ADMINISTRATION—
Economy in expenditure .. .. .. .. .. .. .. 5–6

AGRICULTURE—
Potato crops in Nilgiris District, 'Late Blight' attack (C.A.) .. 195–197
Power supply .. .. .. .. .. .. .. 192–195

ALAGAMUTHU, SRI T. P.—
Budget, 1963-64, Voting—
Motor Vehicles Acts—
Administration .. .. .. .. .. .. .. 45–46
Government Text-books, sales .. .. .. .. .. 173–174
Public Works—Grants-in-aid .. .. .. .. .. 582
Teachers, Panchayat Union Schools .. .. .. .. 375
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes 199, 258

AMBIKAPATHI, SRI C. M.—
Village Volunteer force, uniforms and rifle training .. .. .. 90–91

ANANDAN, SRI L.—
Irrigation facilities, Chinnasalem .. .. .. .. .. 91

ANANDANAYAKI, SRIMATHI T. N.—
Budget, 1963-64, voting—
Capital Outlay on Public Health, Medical, Public Health .. .. 456–458
Motor Vehicles Acts—
Administration .. .. .. .. .. .. .. 60–61
Public Works — Graints-in-aid .. .. .. .. .. 602–607
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes .. 216–218
257

## A—*cont.*


ANGAMUTHU NAICKER, Sri S.—

Budget, 1963-64, Voting—
Community Development Projects, etc., Khadi .. .. .. .. } 339–340

ANICUTS—
Suspension of Construction .. .. .. .. .. .. 98

ARANGANNAL, Sri RAMA—
Budget, 1963-64 Voting—
Public Works — Grants-in-aid .. .. .. .. .. .. 609–615
Registration, Stationery and Printing .. .. .. .. 546
Coal, Chingleput district .. .. .. .. .. .. 7–8
Colleges (Evening), opening .. .. .. .. .. 189–190
Slum Improvement Trust, Constitution .. .. .. .. 12–15
Small Savings Scheme .. .. .. .. .. .. 263–267

ARIYALUR—
Damage to Chillies Crops (C.A.) .. .. .. .. .. .. 100–101

ARUMUGAM, Sri A.—
Budget, 1963-64, voting—
Registration — Stationery and Printing .. .. .. .. 551–555
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 201–203
Public Service Commission, Harijan Member .. .. .. 91–92

ARUMUGHAM, Sri S.—
Budget, 1963-64, Voting—
Community Development Projects, etc.—
Khadi .. .. .. .. .. .. .. .. 307–309
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 209–210

ARUNACHALAM, Sri V. S.—
Budget, 1963-64, voting—
Capital Outlay on Public Health—Medical—Public Health .. 428–430
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 230–231


## B


BALAKRISHNAN, Sri A. G.—
Vellore Jail, Prisoners .. .. .. .. .. .. 92

BHAKTAVATSALAM, Sri M.—
B.O.H. Change in Order .. .. .. .. .. 532
Budget 1963-64, Voting—
Community Development Projects, etc.—
Khadi .. .. .. .. .. .. .. .. 275
358–372




## B—*cont.*


BHAKTAVATSALAM, Sri M.—*cont.*
Budget, 1963-64, Voting—*cont.*
Education .. .. .. .. .. .. .. .. 103
158–170
Labour including Factories .. .. .. .. .. 17–22
41–44
Motor Vehicles Acts—
Administration .. .. .. .. .. .. .. 44
63–67
Public Works—Grants-in-aid .. .. .. .. .. 624–5
Registration .. .. .. .. .. .. .. ..
Stationery and Printing .. .. .. .. .. .. ..
House Committee, election to (M) .. .. .. .. .. 546
Paddy, fall in price (Dis. S.D.) .. .. .. .. .. 102
Police firing in Urappanur near Tirumangalam (A.M.) .. .. 70–71
Valparai, Coimbatore district, Township .. .. .. .. 401
532–533

BHUVARAHAN, Sri G.—
Budget, 1963-64, Voting—
Registration — Stationery and Printing .. .. .. .. 545
573–581

BILL(S)—
General Sales Tax (Amendment) Bill, 1963—
Message from Governor .. .. .. .. .. .. 533
Consid. .. .. .. .. .. .. .. .. 542–545
Consid. .. .. .. .. .. .. .. .. 534–542
Motion to pass .. .. .. .. .. .. .. ..
Passed. } 545

BINNY ENGINEERING WORKS—
Meenambakkam, Government land allotted .. .. .. 518–519

BRIDGE—
Kodambakkam, Overbridge .. .. .. .. .. .. 384–387
Pathway across Vellar, Buvanagiri .. .. .. .. .. 97

BUSES—
Private Sector .. .. .. .. .. .. .. 526

BUS STAND—
Arantangi .. .. .. .. .. .. .. .. 274


## C


CALLING ATTENTION—
Ariyalur Constituency, damages in chilly crops .. .. .. 100–101
Dismantling of houses of Harijans at Tuticorin .. .. .. 531–532
Electrical wiremen, difficulties experienced by .. .. .. .. 401–403
Plague epidemic, out-break in Krishnagiri Town .. .. .. 15–17
Potato crops in Nilgiris district, 'Late Blight' attack .. .. 195–197

C—*cont.*


CAUSE-WAY—
Cheyyar river, North Arcot district .. .. .. .. . 516

CAUVERY—
Flood Control .. .. .. .. .. .. .. 89

CHAIR—

Announcements .. .. .. .. .. ..

General Sales Tax (Amendment) Bill .. .. .. .. 63

Rulings and observations—

Bills—

Members could speak on the clauses of a Bill when it is taken up for clause-by-clause consideration and not during the General discussion on the Bill .. .. .. .. .. .. .. 538

Debate—

If an hon. Member raised a certain point after the conclusion of the speech of the Hon. Minister, the Hon. Minister would necessarily have to reply to it and therefore the hon. Member could give notice of a short notice question .. .. .. 372–373

Members should not dilate upon the same point but should refer to new points .. .. .. .. .. .. .. 76

Members should not side track the issue but speak to the point. 72

Decorum—

A member belonging to the same party should be addressed as 'Honourable Friend' and a Member of the Opposition Party as 'Honourable Gentleman' or as 'Hon. Member belonging to the Opposition' .. .. .. .. .. .. .. 134

Reference to a Member as "நபர்" (person) should be avoided. 134

Reference to individual officers by their names should be avoided. 452

(Insinuating) reference to individual persons should be avoided. 116–117

When the Chair is on its legs, Members should resume their seats. 134

Objectionable expressions—The use of the expression 'கண்மூடித்தனம்' (reckless), deprecated .. .. .. .. .. .. 85

Point of Order—..

Ruled that the statement made by the Hon. the Deputy Leader of the Opposition that a few Harijans somehow managed to get elected as M.L.As. need not be objected to, as he meant that from a large community only a few Harijans were elected as M.L.As. .. .. .. .. .. .. .. .. 247

When an Hon. Member said that the Opposition Members are raising points of order only to give wide publicity to their own parties, the Chair ruled that clearing of doubts in the speech of an Hon. Minister need not be objected to .. .. 253

When two Lady Members objected to the remarks of a Male Member of the House when he quoted a stanza about women that 'when one woman speaks, the wide world will shake, when two women speak, the Heavenly objects will fall, when three women speak, the waves will tremble and if many women speak, what will happen to the world', the Chair ruled that it was not a derogatory statement and that it only enhanced prestige of the womenfolk .. .. .. .. .. .. .. 338–339

C—*cont.*

CHAIR—*cont.*

Procedure—

When a Member wants to raise a point *re* expunction of certain matters referred to in the House, he should first of all put it in writing under which rule he is raising the matter before the House .. .. .. .. .. .. .. .. 101–102

Questions and answers—

Supplementary questions—

A Minister can say that he cannot give a reply to a supplementary, if he thinks that it cannot be replied .. .. .. 394

It is not necessary for the Hon. Minister to answer a supplementary question relating to another State .. .. .. 181

Members should put supplementaries to the point .. .. 586

Supplementaries should not be in the form of a speech .. .. 522

Supplementary questions should be specific .. .. .. 386

Supplementary questions should not be long .. .. .. 393

Supplementaries should not be too general .. .. .. 396

There is no rule that simply because one is a Minister, he should give an account of his landholdings .. .. .. .. 379

CHANNEL—
Chothupulivathalai channel, repairs .. .. .. .. 527

CHINNAIYAN, SRI S.—

Budget, 1963-64, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes 227–229, 257

CHINNASAMY, SRI T.—

Budget, 1963-64, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 213–215

CHIRANJEEVULU NAIDU, SRI C.—

Budget, 1963-64, Voting—
Community Development Projects, etc.— .. 285–287
Khadi .. .. .. .. .. .. .. .. 140–142
Education .. .. .. .. .. .. .. ..

COAL—
Chingleput district .. .. .. .. .. .. .. 7–8

COLLEGES—
Engineering Colleges, reservation for girl students .. .. .. 181–184
Evening Colleges, opening .. .. .. .. .. .. 189–190
Medical College and Pre-University Course, admission age .. 6–7
Shift system .. .. .. .. .. .. .. .. 190–191
Veterinary and Agricultural Colleges (new), opening .. .. 1–2

COMMITTEE(S)— 515–516
Food Advisory Committee (All-Party) .. .. .. .. .. 162–163
House, election to— .. .. .. .. .. ..

PAGES

C—*cont.*

CONSTITUTION (INDIA)—
Sale .. 525

CO-OPERATIVE SOCIETIES—
Defalcations .. 380–383
Todas, Nilgiris district .. 516

D

DAKSHINAMOORTHI GOUNDER, SRI A. S.—
Budget, 1963-64, Voting—
Community Development Projects, etc.—
Khadi .. 337–339
Education .. 126–127

DAM—
Narasingha Cauvery, Aranthangi taluk .. 527–528
Vaniar, Pappireddipatty block .. 90

DEVELOPMENT COUNCILS—
Regional Transport Officers as Members .. 275

DHANDAYUTHAPANI, SRI M.—
Budget, 1963-64, Voting—
Community Development Projects, etc.—
Khadi .. 282–285
Paddy, fall in price (Dis. S.D.) .. 79–80
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes 215–216

DHARMALINGAM, SRI A. P.—
Budget, 1963-64, Voting—
Community Development Projects, etc.—
Khadi .. 314–317
Paddy, fall in price (Dis. S. D.) .. 75–78

DIRECTOR OF PUBLIC HEALTH—
Re-employment .. 270–271

DRUGS—
Drug Control Administration, tightening .. 94–95

DURAISWAMY, SRI A.—
Budget, 1963-64, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 222–223

DURAIYARASAN, SRI A.—
Budget, 1963-64, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 231–233
Bus stand, Aranthangi .. 274

PAGES

D—*cont.*

DURAIYARASAN, SRI A.—*cont.*
Budget, 1963-64—Voting—*cont.*
Buses, Private sector .. 526
Chothupulivathalai channel, repairs .. 527
Dam, Narasingha Cauvery, Aranthangi taluk .. 527–528
Forests, Aranthangi taluk .. 375–376
Tanks, Aranthangi taluk .. 267
Thanjavur Hospital, daily expenditure .. 509–511

E

EDUCATION—
Engineering Courses .. 400
Technical Education Instructors .. 4–5

ELECTRICITY—
Electrical wiremen, difficulties experienced by (C.A.) .. 401–403

ELLAMMA NAIDU, SRI V.—
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health
Medical
Public Health .. } 463–465
Public Works — Grants-in-aid .. 597–599

ENGLISH—
English Language Training Campaign, starting .. 8

EXPUNCTION—
Request for—of certain matter .. 101–102

F

FINANCIAL BUSINESS—
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health .. 403–500
Community Development Projects, etc.—
Khadi .. 276–373
Education .. 102–170
Labour including Factories .. 17–44
Medical .. 403–500
Motor Vehicles Acts—Administration .. 44–67
Public Heatlh .. 403–500
Public Works—Grants-in-aid .. 532–625
Registration—Stationery and Printing .. 548–582
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 197–258

FLOODS—
Cauvery .. 89

FOODGRAINS—
Paddy, fall in price (Dis. S. D.) .. 67–85

F—*cont.*

FOREST(S)—
Aranthangi taluk .. .. .. .. .. .. .. 375-376

G

GANESAN, SRI SAW.—
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health
Medical .. .. .. .. .. .. .. .. } 465-473
Public Health .. .. .. .. .. .. .. }
Education .. .. .. .. .. .. .. .. 103, 145-151, 170
Registration, Stationery and Printing .. .. .. .. 546
563-567
Paddy, fall in price (Dis. S. D.) .. .. .. .. .. 81-82

GOMATHI SANKARA DIKSHITHAR, SRI K.—
Budget, 1963-64, Voting—
Community Development Projects, etc. .. .. .. .. } 293-297
Khadi .. .. .. .. .. .. .. .. }

GOPALA GOUNDER, SRI K.—
Panchayat, Periyapur .. .. .. .. .. .. .. 267
Power Boring sets, Gingee Panchayat Union .. .. .. 511-515

GOVINDAN PULAVAR, G.—
Budget for 1963-64, Voting—
Education .. .. .. .. .. .. .. .. 103-107, 163
Coal, Chingleput district .. .. .. .. .. .. 7-8
North Indian Students, concession .. .. .. .. .. 268-269
Students from other States, selection .. .. .. .. .. 268
Tamil, development in Universities of other States .. .. 3-4

H

HAJA SHERIFF, SRI K. S. G.—
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health
Medical .. .. .. .. .. .. .. .. } 419-420
Public Health .. .. .. .. .. .. .. }
Education .. .. .. .. .. .. .. .. 139-140
Public Works—Grants-in-aid .. .. .. .. .. 594-596

HANDLOOMS—
Handloom Co-operative Productive Marketing Society, Saidapet 383-384

HARIJANS—
Tuticorin, dismantling of houses .. .. .. .. .. 531-532

HOSPITAL(S)—
Thanjavur .. .. .. .. .. .. .. .. 509-511



I

INTER-CASTE MARRIAGES—
Chingleput district .. .. .. .. .. .. .. 184-188

IRRIGATION—
Chinna Salem .. .. .. .. .. .. .. .. 91
Dam across Agniyar .. .. .. .. .. .. .. 388-389
Lower Bhavani Project, drainage schemes .. .. .. .. 389-396
Tirunelveli district .. .. .. .. .. .. .. 396

J

JAIL(S)—
Vellore, prisoners .. .. .. .. .. .. .. 92

JAYARAJ, SRI P.—
Budget, 1963-64, Voting—
Community Development Projects, etc. .. .. .. .. } 297-301
Khadi .. .. .. .. .. .. .. .. }
Motor Vehicles Acts—Administration .. .. .. .. .. 51-52

JEEVARATHNAM, SRI R.—
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health
Medical .. .. .. .. .. .. .. .. } 439-442
Public Health .. .. .. .. .. .. .. }

JOTHI VENKATACHELLAM, SRIMATHI—
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health
Medical .. .. .. .. .. .. .. .. } 403
Public Health .. .. .. .. .. .. .. } 484-499
Plague epidemic, outbreak in Krishnagiri town (C.A. St.) .. 16-17

K

KADAMBAVANASUNDARAM, SRI T.—
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health
Medical .. .. .. .. .. .. .. .. } 434-436
Public Health .. .. .. .. .. .. .. }

KAKKAN, THE HON. SRI P.—
Ariyalur Constituency—Damage to chilly crops (C.A. St.) .. 101
Budget, 1963-64, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 197-199
201, 208
238, 247-258
Paddy, fall in price, (Dis. S.D.) .. .. .. .. .. 82-84

KALYANASUNDARAM, SRI M.—
Colleges (evening), opening .. .. .. .. .. .. 189-190
Food Advisory Committee (All-Party) Constitution .. .. 515-516

K—*cont.*

KALYANASUNDARAM, Sri M.—*cont.*

Liquor, smuggling from Pondicherry .. .. .. .. 179–181
Panchayat (Town), Omalur, misuse of funds .. .. .. 191
Panchayat Union Schools, procedure for prescribing text-books .. 174–175
Police Research Centre (Madras), functioning .. .. .. .. 93
Tiruverambur temple .. .. .. .. .. .. .. 269
Veterinary and Agricultural Colleges (new), opening .. .. 1–3

KAMALANATHAN, Sri M.—

Budget, 1963-64, Voting—
Community Development Projects, etc., / Khadi .. .. .. .. } 332–335
Motor Vehicles Acts—Administration .. .. .. .. 55–57
Elementary school teachers, representation in Legislative Council 376–378
Plague epidemic, outbreak in Krishnagiri Town (C.A.), .. 15–16

KANCHI MANIMOZHIAR, Sri—

Budget for 1963-64, Voting—
Education .. .. .. .. .. .. .. .. 135–137
Public Works—Grants-in-aid .. .. .. .. .. 582–87

KARCHA GOWDER, Sri T.—

Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health / Medical / Public Health .. .. .. .. .. } 449–451
Co-operative Society for Todas, Nilgiris district .. .. .. 516

KARIAMANICKA AMBALAM, Sri Kr. RM.—

Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health / Medical / Public Health .. .. .. .. .. } 423–425
Education .. .. .. .. .. .. .. .. 120–121
Community Development Projects, etc. / Khadi .. .. .. .. } 325–327
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 205–206

KARIVENGADAM, Sri M. V.—

Budget, 1963-64, Voting—
Registration, / Stationery and Printing .. .. .. .. .. } 555-557
General Sales Tax (Amendment) Bill, 1963, Consid. .. .. 538–539, 543
Loans for Professional courses, Annamalai University .. .. 373



K—*cont.*

KARUNANITHI, Sri M.—

Budget, 1963-64, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes 240–247

KOLANDAI AMMAL, Srimathi C.—

Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health / Medical / Public Health .. .. .. .. } 408–412
Community Development Projects, etc. / Khadi .. .. .. .. } 317–321, 338, 339
Education .. .. .. .. .. .. .. .. .. 142–144
Paddy, fall in price (Dis. S. D.) .. .. .. .. 78–79
Training Schools for teachers, opening .. .. .. .. 175–179

KOSALRAM, Sri K. T.—

Budget, for 1963-64, Voting—
Education .. .. .. .. .. .. .. .. 115–118

KOTHANDARAMA BAGAVATHAR, Sri C.—

Budget, 1963-64, Voting—
Motor Vehicles Acts—Administration .. .. .. .. 46–47
Causeway, Cheyyar river in North Arcot district .. .. .. 516
Stage Carriages, Ramanathapuram, tax payable .. .. .. 526–527

KRISHNAMOORTHI, Sri V.—

Budget, 1963-64,— Voting—
Capital Outlay on Public Health / Medical / Public Health .. .. .. .. } 403, 436–439, 499
Education .. .. .. .. .. .. .. .. 112–115
Colleges, shift system .. .. .. .. .. .. 190–191
Dismantling of Houses of Harijans at Tuticorin (C.A.) .. .. 531
Engineering Colleges, reservation for girl students .. .. 181–184
Engineering Course, admissions .. .. .. .. .. .. 400
Information Ministers' Tour, December 1962 .. .. .. 9
Land Ceiling Act, implementation .. .. .. .. .. 378–379
Midday meals, Backward Class pupils .. .. .. .. .. 269–270
Nagercoil, Coastal Road .. .. .. .. .. .. 93
Sugarcane cess, Nellikuppam Sugar Factory .. .. .. .. 517–518
Sugarcane Cess, Sugar Factories .. .. .. .. .. 517
Sugarcane price .. .. .. .. .. .. .. 528–529
Technical Education, Instructors .. .. .. .. .. 4–5

K—*cont.*

KRISHNASWAMI NAIDU, SRI R.—
Budget, 1963-64, Voting—
Community Development Projects, etc., Khadi .. .. .. .. .. .. .. .. } 287–293

KRISHNAVENI, SRIMATHI A.—
Budget, 1963-64, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes 211–213

KULANDAISWAMY GOUNDER, SRI M.—
Budget, 1963-64, Voting—
Registration, Stationery and Printing .. .. .. .. .. .. .. } 562–563

KUNCHITHAPATHAM, SRIMATHI RAJATHI—
Budget for 1963-64, Voting—
Education .. .. .. .. .. .. .. .. 128–129

KUNJAN NADAR, SRI A.—
Budget for 1963-64, Voting—
Education .. .. .. .. .. .. .. .. 123–126

L

LAKSHMIKANTHAM, SRIMATHI P. K. R.—
Budget for 1963-64, Voting—
Education .. .. .. .. .. .. .. .. 137–139

LANDS—
Acquisition .. .. .. .. .. .. .. .. 271–274
Binny Engineering Works, Meenambakkam, Government land allotted .. .. .. .. .. .. .. .. 518–519
Land Ceiling Act, implementation .. .. .. .. .. 378–379
Vanian Eri, Tanjore taluk .. .. .. .. .. .. .. 396–397

LOANS—
Professional courses, Annamalai University .. .. .. .. 378

LOCAL BODIES—
Panchayat (Town), Omalur, misuse of funds .. .. .. 191

LOCAL DEVELOPMENT WORKS—
Deposits towards building works, delay in refund .. .. .. 189

M

MADHAVAN, SRI S.—
Administrative Expenditure, economy .. .. .. .. 6
Anicuts, suspension of construction .. .. .. .. .. 98

M—*cont.*

MADHAVAN, SRI S.—*cont.*
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health, Medical, Public Health .. .. .. .. .. .. .. } 403–408
Coal, Chingleput district .. .. .. .. .. .. 7–8
Labour including Factories .. .. .. .. .. .. 33–35
Motor Vehicles Acts—Administration .. .. .. .. .. 61–63
Panchayat Union Office Building, Tirupathur .. .. .. 270
Plan Projects, Central aid .. .. .. .. .. .. .. 11–12
Precious Stones, Vangipatti in Madurai district .. .. .. 274–275
Teachers, transfer .. .. .. .. .. .. .. 9–10

MAGISTRATE COURTS—
Mayuram, Buildings .. .. .. .. .. .. .. 94

MAJID, SRI S. M. A.—
Budget, 1963-64, Voting—
Public Works—Grants-in-aid .. .. .. .. .. .. 582, 619–624

MANAVALAN, SRI T.—
Budget, 1963-64, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes .. .. .. .. .. .. .. .. 210–211

MANI, SRI K. S.—
Magistrates' Courts at Mayuram, Building .. .. .. .. 94

MANI, SRI M. S.—
Budget, 1963-64, Voting—
Labour including Factories .. .. .. .. .. .. 22–27
Motor Vehicles Acts—Administration .. .. .. .. 58–59
Stationery and Printing, Registration .. .. .. .. .. .. } 567–573
Budget, 1963-64, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 229–230

MANI, SRI V. S. S.—
Budget, 1963-64, Voting—
Community Development Projects, etc., Khadi .. .. .. .. } 342–344
Motor Vehicles Acts — Administration, .. .. .. .. 52–53
Registration, Stationery and Printing .. .. .. .. .. } 546–549

MATHA GOWDER, SRI J.—
Budget, 1963-64, Voting—
Labour including Factories .. .. .. .. .. .. 35–37
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 219–221
General Sales Tax (Amendment) Bill, 1963 .. .. .. .. 539–540
Potato crops in Nilgiris district, 'Late Blight' attack (C.A.) .. 195–196

M—*cont.*


MATHIALAGAN, SRI K. A.—
B.A. History students, admission .. .. .. .. .. 270
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health, Medical, Public Health .. .. 460-463
Education .. .. .. .. .. .. .. .. 126, 129-133
Public Works — Grants-in-aid .. .. .. .. .. 624
Cauvery, flood control .. .. .. .. .. .. .. 89
Co-operative Societies, defalcations .. .. .. .. .. 380-383
Drug Control administration, tightening .. .. .. .. 94-95
Water-supply Scheme, North Madras .. .. .. .. 184

MEDICINES—
Supply, Panchayat Union dispensaries .. .. .. .. .. 98-100

MIDDAY MEALS—
Backward class pupils .. .. .. .. .. .. .. 269-270

MINISTERS—
Information Minister's tour, December 1962 .. .. .. .. 9
Travelling allowance .. .. .. .. .. .. .. 397-400

MOOKIAH THEVAR, SRI K.—
Director of Public Health, Re-employment .. .. .. .. 270-271
Paddy, fall in price (Dis. S.D.) .. .. .. .. .. 68-73
Police firing in Mela Urappanur (A.M.) .. .. .. .. 530-531

MOTION(S)—
Ad. Motions—
B.O.H., change in order .. .. .. .. .. .. 532
House Committee, election to .. .. .. .. .. .. 102-103
Police firing in Mela Urappanur .. .. .. .. .. 530-531
Police firing in Urappanur near Tirumangalam .. .. .. 401

MUNIRATHNAM, SRI K. R.—
Budget, 1963-64, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 234-235

MUNU ADHI, SRI—
Binny Engineering Works, Meenambakkam, Government land allotted .. .. .. .. .. .. .. .. .. 518-519
Budget, 1963-64, Voting—
Labour including Factories .. .. .. .. .. 38-41
Inter-caste marriages, Chingleput district .. .. .. .. 184-188
Kodambakkam, Overbridge .. .. .. .. .. .. 384-387
Minister's travelling allowance .. .. .. .. .. 397-400
Sanitary workers, houses .. .. .. .. .. .. 271
Traffic accidents, radio sets in private cars .. .. .. .. 95-96


M—*cont.*


MURUGAIYAN, SRI S.—
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health, Medical, Public Health .. .. 403, 430-432
Public Works—Grants-in-aid .. .. .. .. .. 591-594
Registration, Stationery and Printing .. .. .. .. 557-561
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes .. .. .. .. .. .. .. 218-219
Dam across Agniyar .. .. .. .. .. .. .. 388-389

N

NALLASENAPATHI SARKARAI MANRADIAR, SRI—
Muthu Chippi Parkal Fishing Rules, 1963 .. .. .. .. 533

NALLASIVAM, SRI K. R.—
Handloom Co-operative Productive Marketing Society, Saidapet .. 383-384
Lower Bhavani Project, drainage schemes .. .. .. .. .. 389-396

NANJUNDA RAO, SRI G.—
Budget, 1963-64, Voting—
Community Development Projects, etc., Khadi .. .. .. .. 336-337

NARAYANAN, SRI R.—
Ariyalur Constituency, damage to chilly crops (A) .. .. .. 100-101
Police Outpost at Mathur (Udayarpalayam taluk), opening .. 96-97

NARAYANASWAMI NAIDU, SRI G.—
Budget, 1963-64, Voting—
Community Development Projects, etc., Khadi .. .. .. .. 304-307
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes .. .. .. .. .. .. .. 225-227

NARAYANASWAMI PILLAI, SRI K.—
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health, Medical, Public Health .. .. 425-428
Registration, Stationery and Printing .. .. .. .. 549-551

NEDUNCHEZIAN, SRI V. R.—
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health, Medical, Public Health .. .. 473-484
Community Development Projects, etc., Khadi .. .. .. .. 348-358
Education .. .. .. .. .. .. .. .. 143, 151-158

## P

PALANI, Sri K. B.—
Budget, 1963-64, Voting—
Community Development Projects, etc., Khadi .. .. .. .. .. .. .. } 321–323
Education .. .. .. .. .. .. .. .. 144–145
Public Works—Grants-in-aid .. .. .. .. .. 590–591
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes .. .. .. .. .. .. .. .. 239–240

PALANISAMY, Sri K. P.—
Budget, 1963-64, Voting—
Labour including Factories .. .. .. .. .. 37–38
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes .. .. .. .. .. .. .. .. 235–236

PANCHAYAT(S)—
Panchayat Development Department, formation .. .. .. 11
Periamur .. .. .. .. .. .. .. .. 267
Valparai Township .. .. .. .. .. .. .. 532–533

PANCHAYAT UNION(S)—
Office Building .. .. .. .. .. .. .. 270

PAPERS LAID ON THE TABLE—
Cinemas (Regulation) Rules, 1957, Notification .. .. .. 500
Community and Panchayat Development, Policy Note .. .. 374, 500
District Municipalities Act, 1920, Notifications .. .. .. 171
Education, Note .. .. .. .. .. .. .. 258
Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, Notification .. .. .. .. .. .. .. .. 373
Harijan Welfare Department, Review of Progress for 1962-63 .. 374
Industries (Development and Regulation) Act, 1951, Applications for licences .. .. .. .. .. .. .. .. 500
Labour in Madras State for 1962–63 .. .. .. .. .. 85
Medical demand, speech of Minister for Public Health .. .. 500
Money Lenders Act, 1957, Notification .. .. .. .. 171
Motor Vehicles Taxation Act, 1931, Notification .. .. .. 170
Official Language Act, 1956, Notification .. .. .. .. 374
Persons retained in service after retirement, statement .. .. 85
Public Health Minister, speeches .. .. .. .. .. 625
Public Service Commission, Notification .. .. .. .. 171
State Electricity Board, Financial Statement for 1963–64 and Supplementary Financial Statement for 1962–63 .. .. .. 258
Stationery and Printing Department, Review of activities .. .. 374
Stationary and Printing Department 1962–63, review .. .. 625

PERIANNAN, Sri V. R.—
Budget, 1963–64, Voting—
Community Development Projects, etc., Khadi .. .. .. .. .. .. .. } 323–325



*—cont.*

PLAGUE—
Out-break, Krishnagiri Town, (C.A.) .. .. .. .. 15–17

PLAN PROJECTS—
Central aid .. .. .. .. .. .. .. .. 11–12

POLICE—
Police out-post at Mathur (Udayarpalayam taluk), opening .. 96–97
Tirunelveli district, arrests .. .. .. .. .. .. 519–520

POLICE RESEARCH CENTRE—
Functioning .. .. .. .. .. .. .. .. 93

PONNAMMAL, Srimathi A. S.—
Budget, 1963–64, Voting—
Community Development Projects, etc.—Khadi .. .. .. .. .. .. .. } 344–348
Education .. .. .. .. .. .. .. .. 134–135
Motor Vehicles Acts, Administration .. .. .. .. 53–55
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes .. .. .. .. .. .. .. .. 233–234

PONNAPPA NADAR, Sri R.—
Budget, 1963-64, Voting—
Motor Vehicles Acts, Administration .. .. .. .. 57–58

PONNIAH, Sri K.—
Budget, 1963-64, Voting—
Labour including Factories .. .. .. .. .. .. 29–31
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 206–207

PONNUSAMY, Sri S.—
Budget, 1963-64, Voting—
Public Works—Grants-in-aid .. .. .. .. .. 587–590
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 221–222

PROHIBITION—
Liquor, smuggling .. .. .. .. .. .. .. 179–181

PUBLIC HEALTH—
Elliot Beach area, rubbish and garbage .. .. .. .. 190

PUBLIC SERVICE COMMISSION—
Harijan Member .. .. .. .. .. .. .. 91–92

PUMP SETS—
Power Boring sets, Ginjee Panchayat Union .. .. .. .. 511–515

## R

RAJANGAM, Sri M.—
Budget, 1963-64, Voting—
Community Development Projects, etc.—Khadi .. .. .. .. .. .. .. .. 301–304
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 199–201

RAJARAM, SRI G.—

Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health—
Medical .. .. ..
Public Health .. .. } 453–455

RAJATHI KUNCHITHAPATHAM, SRIMATHI—

Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health .. .. .. ..
Medical .. .. .. .. .. .. ..
Public Health .. .. .. .. .. .. } 446–449
Medical College and Pre-University Course, admission age .. 6–7

RAMACHANDRA RAYAR, SRI A.—
Pathway across Vellar, Buvanagiri .. .. .. .. .. 97

RAMAIAH, SRI V.—
Dismantling of houses of Harijans at Tuticorin (C.A.) .. .. 531
Potato crops in Nilgiris district, 'Late Blight' attack (C.A. St.) .. 196–197

RAMALINGAM, SRI S.—

Budget, 1963-64, Voting—
Education .. .. .. .. .. .. .. .. 121–123

RAMANATHAN, SRI V.—

Budget, 1963-64, Voting—
Community Development Projects, etc. — Khadi .. .. .. 340–342

RAMASAMY, SRI S.—

Budget, 1963-64, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 223–225

RAMASWAMI UDAYAR, SRI N.—

Budget, 1963-64, Voting—

Capital Outlay on Public Health—
Medical — Public Health .. .. .. .. .. } 458–460
Education .. .. .. .. .. .. .. 118–120

RANGASWAMI, SRI R.—

Budget, 1963-64, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 207–209

RESOLUTION(S)—
Township, Valaparai, Coimbatore district .. .. .. .. 532-533

ROAD(S)—
Banares-Cape Comorin Road, dip .. .. .. .. .. 97-98
Coastal road, Nagercoil .. .. .. .. .. .. 93
Tirunelveli district .. .. .. .. .. .. .. 896

RULES—
**Muthu Chippi Parkal Fishing Rules, 1963, Motion to pass .. ..** **583**



SADASIVAM, SRI S.—

Budget, 1963-64, Voting—
Registration, Stationery and Printing .. .. .. .. 557

SAMBANDAM, SRI K. R.—

Budget, 1963-64, Voting—
Community Development Projects, etc. — Khadi .. .. .. 311–314
Motor Vehicles Acts, Administration .. .. .. .. 49–51
Registration — Stationery and Printing .. .. .. .. 561–562
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. 237–239

SANKARAN, SRI V.—
Administrative expenditure, economy .. .. .. .. .. .. 5–6

Budget, 1963-64, Voting—
Education .. .. .. .. .. .. .. .. .. 107–109
Motor Vehicles Acts, Administration .. .. .. .. .. .. 59–60

Coal, Chingleput district .. .. .. .. .. .. 7–8

Elliot Beach area, rubbish and garbage .. .. .. .. 190

Schools (Elementary), teacher-pupil ratio .. .. .. .. 188–189

Southern Zonal Council, decision .. .. .. .. .. 10–11

Whitley Councils, constitution .. .. .. .. .. .. 97

SASIVARNA THEVAR, SRI T. L.—
Expunction of remarks, request .. .. .. .. .. .. 101–102
Paddy, fall in price (Dis. S.D.) .. .. .. .. .. .. 80–81

SAVINGS SCHEME—
Small .. .. .. .. .. .. .. .. 263–267

SCHOOLS—
District Board High Schools, District Educational Officers .. .. 191
Elementary, English Schools .. .. .. .. .. .. 8–9
Elementary Schools, teacher-pupil ratio .. .. .. .. 188–189
Higher Grade Training Schools, abolition .. .. .. .. 12
Training Schools for teachers, opening .. .. .. .. 175–179

SELVARAJAN, SRI M. S.—

Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health — Medical — Public Health .. 412–415

Tirunelveli district, arrests .. .. .. .. .. .. 519–520

Tirunelveli district, road and irrigation facilities .. .. .. 396

SENGALIAPPAN, SRI R.—

Budget, 1963-64, Voting—
Labour including Factories .. .. .. .. .. .. 27–29

PAGES

S—*cont.*

SENGOTTUVELU, SRI N. P.—
Budget, 1963-64, Voting—
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes. .. 236–237
Suicide cases, 1961–62 .. .. .. .. .. .. 520–525

SLUMS—
Slum Improvement Trust, Constitution .. .. .. .. 12-15

SOUNTHARA PANDIAN, SRI N.—
Budget, 1963-64, Voting—
Community Development Projects, etc. — Khadi .. .. .... 309–311

SRIRAMULU, SRI P. V.—
General Sales Tax (Amendment) Bill, 1963 .. .. .. .. 536–538

STAGE CARRIAGES—
Ramanathapuram, tax payable .. .. .. .. .. 526–527

STONES—
Precious, Vangipatti .. .. .. .. .. .. .. 274–275

STUDENTS—
B.A. History .. .. .. .. .. .. .. .. 270
North India .. .. .. .. .. .. .. .. 268–269
Other States .. .. .. .. .. .. .. .. 268

SUARES, SRIMATHI A.—
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health, — Medical — Public Health .. 420–423
Education .. .. .. .. .. .. .. .. 109–112

SUBBIAH, SRI A. K.—
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health — Medical — Public Health. 415–417
Community Development Projects, etc. — Khadi .. .. .. 330–332
Thalidomide sale .. .. .. .. .. .. .. 400–401
Vanian Eri, Tanjore taluk .. .. .. .. .. .. 396–397
Welfare of Scheduled Tribes, Castes and other Backward Classes .. 203–205

SUBBIAH MUDALIAR, SRI A. R.—
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health — Medical — Public Health .. 432–434
Community Development Projects, etc. — Khadi .. .. .. 327–330
Paddy, fall in price (Dis. S.D.) .. .. .. .. .. 73–75

SUBRAMANIAM, SRI R.—
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health
Public Health
Medical .. .. .. .. .. .. .. .. } 442–444

PAGES

S—*cont.*

SUGARCANE—
Nellikuppam Sugar Factory .. .. .. .. .. .. 517–518
Price fixation .. .. .. .. .. .. .. .. 528–530
Sugar Factories Cess .. .. .. .. .. .. .. 517

SUICIDE—
Cases during 1961-62 .. .. .. .. .. .. .. 520–525

SWAMIDOSS, SRI A.—
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health
Medical
Public Heatlh .. .. .. .. .. .. .. } 417–419

T

TAMIL—
Development in Universities of other States .. .. .. .. 3–4

TANKS—
Aranthangi taluk .. .. .. .. .. .. .. .. 267

TEACHERS—
Elementary School teachers, Representation in Legislative Council .. 376–378
Panchayat Union Schools .. .. .. .. .. .. .. 375
Transfer .. .. .. .. .. .. .. .. 9–10

TEMPLE—
Tiruverambur .. .. .. .. .. .. .. .. 269

TEXT-BOOKS—
Government sales .. .. .. .. .. .. .. 173–174
Panchayat Union Schools, procedure prescribed .. .. .. 174–175
Thalidomide sale .. .. .. .. .. .. .. 400–401

THANGAVELU, SRI A.—
Budget, 1963-64, voting—
Motor Vehicles Act—Administration .. .. .. .. .. 47–49
Public Works—Grants-in-aid .. .. .. .. .. .. 607, 609

THANGAVELU, SRI R.—
Budget, 1963-64, voting—
Capital Outlay on Public Health
Medical
Public Health .. .. .. .. .. .. .. } 452–53

TODAS—
Co-operative Society, Nilgiris district .. .. .. .. 516

V

VADIVELU, SRI M. P.—
Budget, 1963-64, voting—
Community Development Projects, etc. — Khadi .. .. .. 276–282

PAGES

Y—*contd.*

VEERAPPA CHETTIAR, SRI R. S.—
Agriculture, power supply .. .. .. .. .. .. 192–195
Banares—Cape Comorin Road, dip .. .. .. .. .. 97–98
Budget, 1963-64, Voting—
Capital Outlay on Public Health .. .. .. } 444–446
Medical .. .. .. .. .. .. .. }
Public Health .. .. .. .. .. .. .. .. }
Dam across Vaniar, Pappireddipatty block .. .. .. .. 90
Development councils—Regional Transport Officers as Members .. 275
District Board High Schools, District Educational Officers .. 191
Electrical wiremen, difficulties experienced by (C.A.) .. .. 401–402
Elementary Schools, English Classes .. .. .. .. .. .. 8–9
English Language Training campaign, starting .. .. .. 8
Higher Grade Training Schools, abolition .. .. .. .. 12
India's Constitution, sale .. .. .. .. .. .. 525
Land Acquisition, road formation .. .. .. .. .. 271–274
Local Development Works, delay in refund of deposits towards building works .. .. .. .. .. .. .. .. 189
Medicines, supply to Panchayat Union dispensaries .. .. .. 98–100
Panchayat Development Department formation .. .. .. 11
VENKATARAMAN, SRI R.—
Budget, 1963-64, Voting—
Public Works—Grants-in-aid .. .. .. .. .. 615–619
Electrical wiremen, difficulties experienced by (C.A. St.) .. .. 402–403
General Sales Tax (Amendment) Bill, 1963 .. .. .. .. 534–536, 540–542, 542–543, 544–545
VILLAGE VOLUNTEER FORCE—
Uniforms and Rifle Training .. .. .. .. .. .. 90–91
VISWANATHAN, SRI C. G.—
Budget, 1963-64, Voting—
Public Works—Grants-in-aid .. .. .. .. .. 599–602

W

WATER-SUPPLY—
Water-supply Scheme, North Madras .. .. .. .. .. 184
WHITLEY COUNCILS—
Constitution .. .. .. .. .. .. .. .. 97
WILLIAM, SRI M.—
Budget, 1963–64, Voting—
Education .. .. .. .. .. .. .. .. 133–134
WORKERS—
Sanitary .. .. .. .. .. .. .. .. 271

Z

ZONAL COUNCILS—
Southern Zonal Council, decisions .. .. .. .. .. 10–11

137882

[திரு. சே. ம. அ. மஜீத்] 19th March 1963]

அவர்கள் சுருக்கமாகப் பேசினாலும் நகராட்சித் துறை சம்பந்தப் பட்டமட்டில் அவர்கள் நல்ல அனுபவம் படைத்தவர் போன்று பேசினார்கள். நான் இத்துறைக்கு அமைச்சராக வந்து ஒரு ஆண்டு ஆனபோதிலும் எல்லாவற்றையும் நான் பூரணமாக தெரிந்து கொண்டதாக கூறுவதற்கில்லை. ஆனால் திரு. பழனி அவர்கள் நன்கு விளக்கமாகக் கூறினார்கள். நகராட்சியில் வேலை பார்க்கிற சிப்பந்திகளை வேறு இடங்களுக்கு மாற்றவேண்டு மென்று சொன்னார்கள். செங்கல்பட்டில் இருப்பவரைக்கொண்டு திருநெல்வேலியில் போட்டால் அவர் என்ன செய்வார்? சம்பளம் குறைவாக இருந்தாலும், தான் இருக்கிற, தன் சொந்த இடத்திலே இருக்கலாம் என்றுதான் இந்த சர்விசுக்கு வந்தவர்கள்—அவர் களுக்கு இந்த ஊரில் இன்டரஸ்ட் இருப்பதால் சம்பளத்தைப் பற்றி கவலைப்படுவதில்லை அதிகமாக். எம்.டி.எம். ஆக்ட் திருத்துவது பற்றி பரிசீலனையில் இருக்கிறது. அப்போது இதிலும் கவனம் செலுத்தப்படும். பின்னர் கார்ப்பரேஷன் பற்றி கூறப்பட்டது. சென்னை நகரம் நம் மாநிலத்தின் தலைநகரம். தலைநகரில் அமைச்சர்கள் இருக்கிறார்கள் என்பதற்காக அல்ல, உறுப்பினர்கள் இங்கு வந்து மாதக் கணக்கில் உட்கார்ந்திருக் கிறார்கள் அல்லவா? மேலும் வெளி நாட்டினர் வருகிறார்கள். அப்படியிருக்க சென்னை நகரில் ஏதாவது சிறுமை காணப்பட்டால் அது மாநிலம் பூராவிற்கும் சாரும். ஆகவே கட்சி வேறுபாடின்றி சென்னை நகரை செம்மையாக வைத்துக்கொள்ள வேண்டியது அவசியம். பின்னர் கிராமங்களிலிருந்து மக்கள் தொழிலுக் காக சென்னை நோக்கி வருகிறார்கள். இப்போது 18 லட்சத் திற்கு மேல் மக்கள் தொகை இங்கு பெருகியிருக்கிறது. முன்பு 3½ லட்சம் தேவையாகயிருந்தது, இப்போது 35 லட்சம் காலன் தண்ணீர் வேண்டியிருக்கிறது. இதுவும் போதாது. கொற்றலை யாறிலிருந்து ரெட்ஹில்ஸ்க்கு திறந்தவழிக் கால்வாய் மூலம் (open line channel) தண்ணீர் கொண்டுவர 80 லட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

அடுத்தபடியாக, அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பக்கிங் காம் கனல் பற்றி குறிப்பிட்டார்கள். எப்போதும் அந்தக் கனல் வாசனையை அனுபவித்துக் கொண்டிருக்க அமைச்சர் திரு. மன்றாடியார் அவர்களை அங்கு வைத்திருக்கிறோம். அமைச்சர் ராமைய்யா அவர்களும் நானும் கூவம் நதியில் சென்றபோது சென்ட் பாட்டில் எடுத்துக்கொண்டு போனோமா என்று கேட்டார்கள். அம்மையார் அவர்களின் தலையிலாவது பூ இருக்கும், மணம் வரும். நாங்கள் அப்படி ஒன்றும் சென்ட் அல்லது மணம்தரும் மலரோ கொண்டுபோகவில்லை. அவர்கள் கூறிய பிரச்னை அலசி ஆராய வேண்டிய பிரச்னை. பக்கிங்காம், கூவம் பொறுத்தவரை, சேத்பட்டிலிருந்து கழிவு நீர் கலந்து இதில் ஓடுகிறது. இதை, ரீக்ளமேஷன் செய்ய கோடிக்கணக்கான ரூபாய் தேவை. மண்வெட்டியை வைத்துக்கொண்டு மண்ணை எடுத்து வெளியே போடமுடியுமா? ஒரு ட்ரெட்ஜர் வாங்க 35 லட்சம் ரூபாய் ஆகிறது. இதற்கு அன்னிய செலாவணி (பாரின் எக்ஸ்சேஞ்ச்) தேவை. திட்டம் நல்ல திட்டம். ஆனால்



19th March 1963] [திரு. சே. ம. அ. மஜீத்]

நிதி வசதியையும் பார்த்துத்தான் செய்யவேண்டியிருக்கிறது. நல்ல முறையில், செய்யக் கூடிய திட்டங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

மணி இரண்டு ஆகி விட்டது என்று பொதுத் துறை அமைச்சர் 2-00 p.m.
சொல்லுவதால் மற்றபடி எல்லா அங்கத்தினர்களுக்கும் தனித் தனியாக விடை அளிக்காவிட்டாலும் சம்பந்தப்பட்ட பிரச்னை களெல்லாம் நன்றாக, நியாயமான அளவில் பரிசீலிக்க முடியும் என்று கூறிக்கொள்கிறேன்.

பிச்சைக்காரர்கள் விடுதிபற்றிச் சொன்னார்கள். கண்டிப்பாக நான் அதற்கு பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். பிச்சைக் காரர்களுக்காக இவ்வளவு பரிந்து பேசுகிறோம். சேரிகளில் வாழ் வோருக்காக பரிந்து பேசுகிறபோது, பிச்சைக்காரர்களுக் காகப் பரிந்து பேசவேண்டியதுதான். அவர்களை நகராட்சித் துறையில் பாதுகாக்கும் பொறுப்பு இல்லாது இருந்தால் அந்த நகராட்சி அங்கத்தினர்கள் தங்கள் கடமையைச் செய்தவர்களா என்பது அவர்களே முடிவு செய்யவேண்டிய பிரச்னை.

நகர சுத்தித் தொழிலாளர் சம்பந்தப்பட்ட மட்டில் ஏற்கெனவே கவர்ன்மெண்ட் ஆஃப் இண்டியாவிலிருந்து ஸ்கீம் போட்டு, ஹரிஜன் வெல்ஃபேர் திட்டத்தின் கீழ், வீட்டுக்கு 1,000 ரூபாய் வீதம், 50 சதவிகிதம் சப்ஸிடி, 50 சதவிகிதம் லோன் கொடுத்து, நகரசுத்தித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். நகரமன்றத் தலைவர்களும், மெம்பர்களும் இது சம்பந்தப்பட்ட லோன், சப்ஸிடி ஆகியவை களைப் பெறுவதற்கு முன்வர வேண்டும். கனம் அங்கத்தினர்களும் அதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த மாதிரி சென்ற வருஷத்தில் இந்த தொகை பூராவும் லாப்ஸ் ஆகியிருக் கிறது என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும்.

சென்னையிலே வைசூரி, பெரிய அம்மை ஏற்பட்டது என்றும், அது சம்பந்தப்பட்ட முழு விளக்கத்தையும் சுகாதார அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கூறிவிட்டார்கள். நேற்று நமது சுதந்திரா கட்சித் தலைவர் அவர்களும் தங்களுடைய சொந்த அனுபவத்தைக் கொண்டு வைசூரி ஏற்பட்டால் பேதிக்குக் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். விளக்கெண்ணைதான் கொடுக்கவேண்டும். வேறு எந்த பேதி மருந்தும் கொடுக்கக்கூடாது; விளக்கெண்ணெய் தான் கொடுக்கவேண்டும். ஃப்ளோர் ஆஃப் தி அசெம்பிளியில் சொன்னால் நல்ல முறையில் மக்களுக்குத் தெரியும் என்பதற்காகச் சொல்லுகிறேன். 4 அவுன்ஸ் விளக்கெண்ணெய் கொடுத்தால் போதும். பேதி மருந்து கொடுத்தால் வேறு தகராறு வரும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திண்டிவனம் சம்பந்தப்பட்ட மட்டில் கனம் அங்கத்தினர் தங்கவேலு அவர்கள் ஏற்கெனவே உதவித் தலைவராக இருந்து பணியாற்றியதன் பேரில் அந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு கடன் வேண்டும், சப்ஸிடி வேண்டும் என்று கூறினார். கடன், சப்ஸிடி எல்லாம் வேண்டுமென்றால், நம் மாநிலத்தில் உள்ள எல்லா நகராட்சிகளுக்கும் சப்ஸிடியும், லோனும்

இறுதியாக நான் சொல்ல விரும்புவது அநேகமாக கிட்டதட்ட இங்குள்ள அங்கத்தினர்கள் எல்லோருடைய எண்ணமும் ஒன்றாகவே இருக்கிறது. ஆகவே என்னுடைய வேண்டுகோள்—அமைச்சர் அவைக்கு நான் விடுக்கும் வேண்டுகோள்–இரண்டே இரண்டுதான். இப்பொழுது இருக்கிற நிலைமைப் படி நெல் விலை மூட்டை 20 ரூபாய்க்குக் குறைய கட்டாயமாக விடக் கூடாது. இரண்டாவது இந்தமாதிரி விலை நியாயமான அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படுவதற்கு மாநில ஆட்சி மத்திய ஆட்சிக்கு வற்புறுத்த வேண்டும். நெல் விலை இப்படிக் குறைவதனால் ஏற்படக்கூடிய குறைபாடுகளை எடுத்துச் சொல்லி அதனால் மக்களுக்கு ஏற்படுகிற இடையூறுகளையும் எடுத்துச் சொல்லி நெல் விலை குறையாதிருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். முடியாவிட்டால் மற்ற உணவுப் பண்டங்களை, விவசாய சாதனப் பொருள்கள் ஆகியவற்றின் விலையைக் கட்டுப்பாடு செய்யவேண்டும். இது தான் என்னுடைய வேண்டுகோள்.

***கனம் திரு. பூ. கக்கன் :** கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய பல அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் நான் தனித்தனியாகப் பதில் உரைப்பது என்றால் நேரம் போதாது. நேரம் இல்லாத காரணத்தால் அவர்களுடைய கருத்துக்களுக்கு என்னுடைய பதிலை முதலில் பொதுப் படையாகக் கூற விரும்புகிறேன்.

வேளாண்மை நான்கு காரணங்களால் பாதிக்கப்பட்டிருப்பதாகக் கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிறார். முதலாவதாக, பருவம் தவறி பெய்த மழை பெய்ததனால், விளைந்துவரும் பயிர்களுக்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறதென்றும் அவர்கள் குறிப்பிடுகிறார். நம் மாநிலத்தில் சில பகுதிகளில் பருவம் தவறி மழை பெய்திருக்கிறதென்பது உண்மைதான். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் லால்குடியிலும், குளித்தலை பகுதிகளிலும், தஞ்சாவூர் மாவட்டத்திலும் பாபநாசம், நன்னிலம், சீர்காழி தாலூகாக்களின் பகுதிகளிலும் அக்டோபர் மாதம் பலத்த மழை பெய்தது. 1962 டிசம்பர் மாதம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஈரோடு தாலூகாவில் பலத்த மழை பெய்தது. 1963 ஜனவரியில் வட ஆர்க்காடு, தஞ்சாவூர் மாவட்டங்களில் வழக்கத்திற்கு மாறாக மழை பெய்ததாகத் தெரிவிக்கப் பட்டது. இவ்வாறு வழக்கத்திற்கு மாறாக மழை பெய்ததால், வேளாண்மைக்கு ஓரளவு தீங்கு ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலே லால்குடி தாலூகாவில் சில பகுதிகளில் குறுவைப் பயிரை வெள்ளம் அடித்தது. இன்னும் சில பகுதிகளில் நட்ட நெற்பயிர் நாற்றுக்கள் எல்லாம் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போய் விட்டன. தஞ்சாவூர் மாவட்டத்திலே ஜனவரி மாதம் பெய்த மழையினால் அறுவடை தாமதப்பட்டது. என்றாலும், பருவம் தவறி பெய்த மழையின் காரணமாக ஏற்பட்ட சேதம் அதிகமில்லையென்பது தெரிகிறது. அரிசி உற்பத்தியைப் பொறுத்தவரையில், 1961-62ல் கண்டுமுதலான மகசூலைக் காட்டிலும் 1962-63ல் 1.4 சதவிகிதம் உயர்ந்து இருப்பதாக மதிப்பிடப் பட்டிருக்கிறது.

எலிகளால் ஏற்படும் தொந்தரவு நமது மாநிலத்திற்குப் புதிதல்ல. எலிப்பொறிகளை வைத்து எலிகளைப் பிடித்தல், துத்துநாக பாஸ்பைடு பாஷாணம் வைத்து எலிகளைப் பிடித்தல் போன்ற முறைகளைக் கையாண்டு எலிகளை ஒழிக்க ஓரளவுக்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டாலும், இந்தப் பிரச்சனையை முற்றிலும் தீர்க்கப் முடியவில்லை. காட்டு எலிகளின் ஆயுள் சக்கரம் சம்பந்தமான ஆராய்ச்சித் திட்டம் இப்போது ஆடுதுறையில் அமலில் உள்ளது. எலிகளின் உற்பத்தியைத் குறைப்பதற்கான மிகப் பயன்தரும் முறையைக் கண்டு பிடிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். காட்டு எலிகளை அழிப்பதற்கான விசேஷ இயக்கம் ஒன்றையும் வருகிற கோடை மாதங்களில் ஏற்படுத்த விவசாயத் துறையினர் முயற்சிகள் எடுத்து வருகிறார்கள். வலை போட்டுப் பிடிப்பதன் மூலமாகவும், எலி வளைகளைத்தோண்டி எடுப்பதன் மூலமாகவும் எலிகளை அழிப்பதே இந்த இயக்கத்தின் நோக்கமாகும்.



இரண்டாவதாகச் சொல்லியிருக்கிற காரணம் நெல் விலையை நிச்சயிப்பதில் அரசாங்கம் பின்பற்றியுள்ள கொள்கையைப் பொறுத்த தாகும். இதனால் நெல் விலை பொதுவாக இறங்கிவிட்டது என்று அவர் சொல்கிறார்.

1363 ஜனவரியில் நெல் விலைகள் கொஞ்சம் இறங்குமுகமாக இருந்தது அனைவருக்கும் தெரியும். அறுவடைக் காலத்தில் சாதாரணமாக விலை வாசிகள் இறங்குமுகமாக இருப்பது இந்த விலை இறக்கத்திற்கு ஒரு காரணமாகும். மற்றும், கேரள மாநிலம் தனது அரிசி தேவைகளுக்கு ஆந்திர மார்க்கெட்டை ஓரளவுக்கு நாடியிருப்பதாகத் தெரிகிறது. என்றாலும், அறுவடை முடிந்தபிறகு, பின்வரும் மாதங்களில் இந்த விலைகள் உயரும் என்பது நிச்சயம்.

இந்திய அரசாங்கத்தின் சார்பில் இம் மாநிலத்தில் ஒரு லட்சம் டன் அரிசியை நாம் கொள்முதல் செய்து வருகிறோம். கொள்முதல் விலையை அகில இந்திய அடிப்படையில் நிச்சத்திருக்கிறார்கள். இந்த விலைவாசிகளின் நிலையை அரசாங்கம் கவனமாய் பரிசீலித்து வருகிறது. விலைவாசிகள் கொள்முதல் விலைக்கு குறைவாக இறங்கும் என்று தெரிந்தால், கொள் முதல் விலைகளுக்கு நெல் வாங்கும் பிரச்சனையை அரசாங்கம் யோசிக்கும்.

கனம் அங்கத்தினர் சொல்லியிருக்கிற மூன்றாவது பிரச்சனை விவசாயிகளுக்குத் தேவைப்படும் பொருள்களின் விலையேற்றத்தை பொருத்த தாகும்.

விவசாயிகளுக்குத் தேவைப்படும் பொருள்கள் இரண்டு வகைப்படும். அவையாவன, அவர்களுக்கு வேண்டிய வீட்டுத் தேவைப் பொருள்கள், அவர்களுடைய சாகுபடிக்குத் தேவைப்படும் பொருள்கள். இந்த இரண்டு வகைப் பொருள்களின் விலைகளும் ஓரளவுக்கு ஏறியிருப்பது உண்மைதான். விலைவாசிகளின் ஏற்றத்தை மட்டுப்படுத்துவதற்குச் சாத்தியமான ஒரே வழி உற்பத்தியை அதிகரிப்பதுதான்.

கனம் அங்கத்தினர் சொல்லியிருக்கும் நான்காவது பிரச்சனை தங்கக் கட்டுப்பாட்டு விதிகள் அமல் செய்திருப்பதன் விளைவாகக் கடன் வசதிகள் குறைந்துவிட்டன என்பதாகும்.

இந்தக் கட்டுப்பாடு அமல் செய்யப்பட்டிருப்பதனால் குடியானவர்களுக்குச் சுலபமாக கடன் வசதிகள் விரைவில் கிடைப்பது ஓரளவுக்குத் தடைப் பட்டிருக்கலாம். ஆனால், கடன் வசதி எந்த அளவுக்குக் குறைந்து போய் இருக்கிறதென்பதைக் குறித்துக் தகவல் எதுவும் இல்லை. வேளாண்மைக் காக விவசாயிகளுக்கு அரசாங்கமும் கூட்டுறவுச் சங்கங்களும் பலவகையான கடன்களைக் கொடுத்து வருகின்றன. அவைகளில் சில உர வகைகளை வாங்குவதற்கு, கிணறு வெட்டுவதற்கு, ஆயில் என்ஜின்கள், மின்சார மோட்டார்கள் முதலியவற்றை வாங்குவதற்காகக் கொடுக்கப்படும் கடன்கள். கூட்டுறவுச் சங்கத்தில் இன்னும் தாராளமாகக் கடன் வழங்குவதற்கான வாய்ப்புக்களை விரிவுப்படுத்தும் பிரச்சனையை இனிமேல் ஆராயவேண்டும்.

விலைவாசிப் போக்குகளையும், விவசாயிகளின் கடன் தேவைகளையும் அரசாங்கம் மிகவும் ஊன்றிக் கவனித்து வருகிறது. உற்பத்தியைப் பெருக்க வதில் விவசாயிகளுக்குப் போதிய தூண்டுகோல் கொடுக்க அரசாங்கம் எல்லாவித முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளும்.

அடுத்து மதிப்பிற்குறிய திரு. மூக்கையா தேவர் அவர்கள் விவசாயி களுக்கு அதிக இடையூறு ஏற்படுகிறது என்றும், இனிமேல் விவசாயிகள் தலையை வெட்டித் தட்டில்தான் வைக்கவேண்டும் என்று சொன்னார்கள். அது ஒத்துக்கொள்ளக்கூடிய வார்த்தையல்ல. விவசாய மக்களுக்குடைய நன்மைக்காகவே இந்தச் சர்க்கார் பல நன்மைகளைச் செய்து வருகிறார்கள். அப்படியிருக்கிறபோது அவர் பல திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள்.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, 15th March 1963.**

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### பாடப் புத்தகங்கள் (விற்பனை)

*238 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்காரால் வெளியிடப்படும் பள்ளிக்கூடங்களுக்கான பாடப் புத்தகங்கள் ஏஜெண்டுகள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றனவா?

(இ) 1962-63-ல் பாடப்புத்தகங்கள் விற்பனைக்காக ஏஜெண்டுகளுக்குக் கொடுக்கப்பட்ட கமிஷன் தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Rs. 91,128.48 nP. (upto 31st December 1962).

**திரு. து. ப. அழகமுத்து :** விற்பனைக்காக ஏஜெண்டுகளுக்கு அனுப்பப்படும் புத்தகங்களுக்கான பாக்கிங் அண்டு பார்வேர்டிங் சார்ஜஸ் சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறதா அல்லது ஏஜெண்டுகள் அதைக் கொடுக்கிறார்களா ? சர்க்கார் கொடுக்கிறது என்றால் அதற்கு ஆகும் செலவு என்ன ? மற்றச் செலவுகள் ஏதேனும் உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஏஜெண்டுகளுக்கு கமிஷன் கொடுக்கப்படுகிறது. வேறு எந்தச் செலவும் ஆவதாகத் தெரியவில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, புத்தகத்தில் குறித்திருக்கும் விலைக்கு மேல் ஏஜெண்டுகள் விற்கிறார்கள் என்ற குறை இருக்கிறது. ஆகவே, ஆங்காங்குள்ள பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர்கள் மூலம் புத்தகங்களை வழங்க அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இதைப்பற்றி நேற்றே நான் குறிப்பிட்டேன். இந்தப் புத்தகங்களை நேராக அரசாங்கமே வழங்கலாமா என்ற கருத்தும் இருந்தது. அது அவ்வளவு சுலபமல்ல என்று உணர்ந்த காரணத்தால், இந்த ஆண்டு ரிஜிஸ்டர்டு பப்ளிஷர்களிடமிருந்து டெண்டர்கள் கேட்டு விநியோகிப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட விலைக்கு மேல் ஏஜெண்டுகள் புத்தகங்களை விற்கிறார்கள் என்று எனக்குப் புகார் வரவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள், குறிப்பாக எந்த இடத்தில் எப்படி விற்கிறார்கள் என்று தெரிவித்தால், அதற்கு மேல் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளமுடியும்.

**திரு. கே. பொன்னையா :** சர்க்கார் அனுமதி கொடுத்தால், பெற்றோர்கள் சங்கத்தின் மூலமாக இந்தப் புத்தகங்களை விநியோகிக்கலாம் அல்லவா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** பெற்றோர்கள் சங்கம் என்று சாதாரணமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது ரிஜிஸ்டர்டு சங்கம் அல்ல. அவர்களால் சரியாக விநியோகிக்க முடியும் என்பதை [illegible]